184
12,2012

19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில்

ஐரோப்பா

இ. இலிப்சன்

அரசகருமமொழித் திணைக்கள வெளியீட்டுப் பிரிவுப் பிரசுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில்

ஐரோப்பா

1815 – 1939

இ. இலிப்சன்

எழுதிய நூலின்

தமிழாக்கம்

பன்னிரண்டு உருவப்படங்களையும் ஆறு தேசப்படங்களையும் கொண்ட

ஆறாம் பதிப்பு

1963

அரசகருமமொழித் திணைக்கள வெளியீட்டுப் பிரிவுப் பிரசுரம்.

அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.தற்பதிப்பு — 1962

பதிப்புரிமை அரசினர்க்கே

ஆதாம் சாள்சு பிளாக்கினரின் இசைவுடன்

மொழிபெயர்க்கப்பட்டது.

EUROPE IN THE 19th & 20th CENTURIES

1815-1939

by

E. LIPSON

Copyright

London Adam and Charles Black

Translated and Published in Ceylon

by arrangement with

Messrs. Adam & Charles Black Ltd.

2—R 2663—1508 (5/62)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

இந்நூல் ஆங்கிலத்தில் இ. இலிப்சன் என்பவர் எழுதிய "19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா" என்னும் நூலின் 6 ஆம் பதிப்பின் தமிழாக்கமாகும். ஐரோப்பிய வரலாறு பற்றி இத்திணைக்களம் மொழி பெயர்த்து வெளியிட்ட நூல்களுள் இது இரண்டாவதாகும். முதலில் வெளியிடப்பட்டது மரியற்று என்பவர் எழுதிய **"இக்கால ஐரோப்பாவின் மலர்ச்சி"** என்னும் நூலின் தமிழாக்கமாகும். ஏற்கெனவே, இலங்கை, இந்தியா, பிரித்தானியா ஆகிய தனித்தனி நாடுகளின் வரலாறுகளாகிய கொடிறிந்தனது **"இலங்கையின் சுருக்கவரலாறு"** (1960), உரோலின்சனது **"இந்தியாவின் பண்பாட்டு வரலாற்றுச் சுருக்கம்"** (1961), உவாணரும் மாட்டினும் மூரும் எழுதிய **"பிரித்தானியாவின் புதிய அடிப்படை வரலாறு"** என்னும் நூல்களை இத்திணைக்களம் வெளியிட்டுள்ளது. இவைகளும் இப்பொழுது மொழிபெயர்க்கப்பட்டுக்கொண்டிருக்கும் நூல்களும் உயர் பரீட்சைகளுக்கு வரலாற்றை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களது நீண்டகாலத் தேவையைப் பெருமளவு பூர்த்தி செய்யுமெனத் திடமாக நம்புகின்றேன்.

இந்நூலின் முதல் ஐந்து பதிப்புக்களும் 19 ஆம் நூற்றாண்டுச் சம்பவங்களைப் பற்றி மட்டுமே ஆராய்ந்தமையால் "19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா" என்ற பெயரோடு வெளிவந்தன. ஏறத்தாழ 200 பக்கங்கள் கொண்ட "கடந்த கால்நூற்றாண்டு" (1914—1939) என்னும் புது அத்தியாயம் ஒன்று இப்பதிப்பிற் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் நூலின் பெயரும் "19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா" என மாற்றப்படலாயிற்று. இந்த 25 ஆண்டுகளும் இரு பெரும் போர்களையும் இணைக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் நிறைந்த காலமாகும். ஆசிரியர் கூறுவதுபோல, ஐரோப்பாவின் மலர்ச்சியை உருவாக்கிய பல சிக்கலான பிரச்சினைகளை விளங்கிக்கொள்ள முயலுவோர் அனைவரும் இந்நிகழ்ச்சிகள் மீது அதிக கவனம் செலுத்துவது அவசியமாகின்றது.

ஐரோப்பாவின் சமீபகால வளர்ச்சியோடு சம்பந்தப்பட்டிருந்த அரசியல் பொருளாதார சத்திகள் எவ்வாறு ஒன்றிலொன்று தங்கியிருந்தனவென்பதைக் கடைசிப் பகுதியில் விளக்க முயன்றிருப்பதாகவும், சர்வதேச அரசியற் கண்ணோட்ட நிலையிலிருந்து ஐரோப்பிய சரித்திரத்தை நோக்கும் வழமையான முறையைக் கைவிட்டு அதற்குப் பதிலாக நெப்போலியனது வீழ்ச்சிக்குப் பின்னர் பிரதான ஐரோப்பிய நாடுகளடைந்த உள்நாட்டு வளர்ச்சி பற்றித் தொடர்பாகவும் சுருக்கமாகவும்—விவரமான கதையைப் போலன்றிப் பகுப்பாராய்வுடன்—கூறும் முறையைத் தாம் கையாண்டிருப்ப

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாகவும் இந்நூலாசிரியர் கூறுவது கவனித்தற்குரியது. இக்கூற்றுக்களி லேயே இந்நூலின் சிறப்பியல்புகள் அடங்கியுள்ளன எனக் கொள்ள லாம்.

இந்நூல் சிறப்பாக உயர் தராதரப் பத்திர வகுப்பிலும் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பிலும் பயிலும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படத்தக் கது. அவர்களது பாடநூலாக அமைவதற்கும் இது ஏற்றது.

இந்நூலைத் தமிழாக்கும் உரிமையை இத்திணைக்களத்திற்கு அளித்த ஆதாம் சாள்சு பிளேக்குக்கு இத்திணைக்களம் கடமைப்பட்டுள்ளது.

நந்ததேவ விசயசேகரா,
ஆணையாளர்.

அரசகருமமொழித் திணைக்களம்,
வெளியீட்டுப் பகுதி,
24.4.62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரும் பதிப்பிற்கு

முகவுரை

"பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஐரோப்பா" (1815-1914) என்னும் முந்திய நூலின் விரிவாக்கமே இந்நூல். "இறுதி இருபத்தைந்து ஆண்டுகள்" என ஏறத்தாழ இருநூறு பக்கங்கள் கொண்ட புதிய அத்தியாயம் ஒன்றை நான் சேர்த்திருப்பதன் காரணம், இரு உலகப் போர்களுக்கு மிடைப்பட்ட காலத்தில் நடந்தேறிய சரித்திர முக்கியத்துவம் மிகுந்த நிகழ்ச்சிகளை நோக்கின் புலப்படும். போர்களை ஒழிப்பதன் மூலம் நாடுகளுக்கிடையே ஒழுங்கொன்றை ஏற்படுத்த எடுக்கப்பட்ட முயற்சி, ஒரு நாட்டின் தேசிய வாழ்க்கை முழுவதையுமே தனது பிடிக்குள் அகப்படுத்திக்கொண்டிருக்கும் அரசியல் எட்டுக்காற்பூச்சி போன்ற தனிக்கட்சி ஒன்றின் ஆதிக்கத்தைத் துணையாகக் கொண்டு நிறுவப்பட்ட தனியாதிக்க அரசுகள், உலகப் பொருளாதார அமைப்பு எனும் கருத்துக்கு இக்காலத்தே தோன்றிய எதிர்ப்பு ஆகிய இவை யாவும் சேர்ந்து இந்தக் கால்நூற்றுண்டுப் பகுதிக்கு வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைத் தேடித் தந்துள்ளன. ஐரோப்பாவின் மலர்ச்சியை உருவாக்கிய பல சிக்கலான பிரச்சினைகளை விளங்கிக் கொள்ள முயல்வோரும், இதே காரணத்திற்காக இந்நிகழ்ச்சிகளின்மீது அதிக கவனம் செலுத்துதல் அவசியமாகிறது. நாம் வாழும் காலத்தை நாம் நன்றாக அறிந்து கொள்ளவேண்டியதின் அவசியத்தை இரண்டாவது உலகப்போர் அழுத்தமாக உணர்த்தியுள்ளதெனக் கூறலாம். ஐரோப்பிய நாட்டமைப்பு முறையை மிகவும் பாதிக்கக்கூடிய பல அரசியல் பொருளாதார பிரச்சினைகளை அது ஏற்படுத்திச் சென்றிருக்கிறது. பிரிவினைச் சக்திகளை மிகைப்படுத்தி அவற்றுக்கு வலுவூட்டவோ அல்லது முரண்பட்ட இச்சக்திகளை யாதேனும் ஒருவகை இணைப்பரசியல் அமைப்பினுட்படுத்தி ஒற்றுமைப்படுத்தவோ, இப்பிரச்சினைகள் ஏதுவாகலாம். போருக்குப்பின் நடைபெறும் முக்கிய புனருத்தாரண அலுவல்களுக்கிடையே, இரண்டாவது உலகப் போரினின்றும் தோன்றிய இப்பொருளாதார அரசியல் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பதிலேயே உலக சமாதானமும் இறுதியாகத் தங்கியிருக்கிறது என்றும் கூறலாம். "எமது சீவிய காலத்திற்குள் மனித இனத்திற்குச் சொல்லொணாத் துன்பத்தைக் கொணர்ந்துள்ள அழிவு மிக்க போர்களிலிருந்து எமது பிற்சந்ததிகளைக் காப்பாற்ற வேண்டும்" எனும் ஐ. நா. சபைப்பட்டய இலட்சியத்திற் கேற்ப பலமுள்ள ஓர் அமைப்பை நிறுவுவது முக்கியமாகிறது. இத்தகையதோர் அமைப்பின் அவசியம், இவ்விரு பெரும் போர்களுக்குக் காரணமாயிருந்த சத்திவாய்ந்த நிகழ்ச்சிகளின் மூலங்களை அறிந்து கொள்ளவும் எமக்கெதிரே தோன்றுவனவற்றின் விளைவுகளை மதிப்பிடவும், எமது ஆவலைப் பலமாகத் தூண்டுதல் வேண்டும். ஐரோப்பிய அரங்கில் நாளுக்கு நாள் நடப்பவற்றைப் பார்க்கும்போதும் இந்நிகழ்ச்சிகள் யாவும் தனிப்பட்ட மனிதர்களின் தீர்மானங்களின்படியோ அல்லது எதேச்சையாகவோதான் திருப்பம் பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன என்பதைக் கவனிக்கும்போதும், எதிர்காலத்தில் என்ன நடக கும் என இப்போதே கூற முற்படுவதில் பயனில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆயினும் உண்மையில் நிகழப்போகின்றவை ஏற்கனவே அறியக்கூடியவையாய் உள்ள நோக்கங்களுக்கும் திட்டங்களுக்கும் ஏற்பவே இருக்கும் என நாம் நம்பலாம். அத்துடன் மனிதர்களது வாழ்க்கையை மாற்றி அமைக்கும் சத்திகள் எவையோ அவையே வரலாற்றின் கடைசி அத்தியாயங்களையும் நிர்ணயிக்கும் என நாம் எண்ணலாம்.

ஐரோப்பாவின் சமீபகால வளர்ச்சியோடு சம்பந்தப்பட்டிருந்த அரசியல் பொருளாதார சத்திகள் எவ்வாறு ஒன்றிலொன்று தங்கியிருந்தன வென் பதைக் கடைசிப் பகுதியில் விளக்க முயன்றுள்ளேன். அரசியல் நாட்டின உணர்ச்சிக்கு ஏற்பவும் அதன் விளைவாகவும் பொருளாதார நாட்டின உணர்ச்சி வளர்ந்தமை ஐரோப்பிய நாடுகளுக்கிடையே உள்ள உறவைப் பாதித்தவோர் சத்தியாக அமைந்தது. அத்துடன் இவ்வுணர்ச்சி காரணமாக 1939 ஆம் ஆண்டில் மீண்டும் போர் துவங்குதல் தவிர்க்க முடியாதவோர் நிகழ்ச்சியாயிற்று. சோவியத்து இரசியாவிலிருந்து சமவுடைமை அரசும், பாசிச இத்தாலியின் தொகுதியரசும் பொருளாதார, அரசியற் பண் பாடுகளை ஒருங்கே கொண்டனவாகையால் இக்கால ஐரோப்பாவின் அர சியல் மலர்ச்சியில் பிரிக்க முடியாத அம்சங்களாய் அமைந்துள்ளன.

இப்புத்தகத்தின் அமைப்பு முறை, ஐரோப்பிய சரித்திரத்தை எழுது வதற்குச் சிறந்தமுறை எதுவென்பது பற்றிய பல வாதங்கள் எழுவதற்குக் காரணமாகியுள்ளது. சர்வதேச அரசியற் கண்ணோட்ட நிலையிலிருந்து ஐரோப்பிய சரித்திரத்தை நோக்கும் வழமையான முறை கைவிடப்பட்டு, அதற்குப் பதிலாக, நெப்போலியனது வீழ்ச்சிக்குப்பின்னர் பிரதான ஐரோப் பிய நாடுகளடைந்த உள்நாட்டு வளர்ச்சி பற்றித் தொடர்பாகவும், சுருக்க மாகவும்—விவரமான கதையைப் போலல்லாது பகுப்பாராய்வுடன்—கூறும் முறை கையாளப்பட்டிருக்கிறது. "ஐரோப்பிய சரித்திரத்திற் பிரதான நிகழ்ச்சி ஒழுங்குகள்" என்னும் தனது நூலில் பேராசியர் எவ். எச். சி. என்சோ, முதற்பதிப்பின் முன்னுரையை மேற்கோளாகத் தந்து, சரித்திரா சிரியர்களால் கையாளப்படும் பல்வேறு முறைகளையும் ஒப்பிட்டுள்ளார். எல்லா நாடுகளையும் பாதிக்கும் சத்திகளையும் போதிய அளவு ஆராய்ந்து விவரிக்க வேண்டியது அவசியமேயாயினும் இயன்றவரைக்கும் ஒவ்வொரு நாடும் தனித்தனியே விவரிக்கப்படுதல் மாணவர்களுக்கும், பொதுவில் வாசகர் களுக்கும் விடயத்தை நன்றாக விளங்கிக்கொள்ள உதவும் என நான் நம்புகிறேன். ஆனால் பிற முறைகள் கையாளப்படுவதற்கும் போதிய இடம் உண்டென்பதையும் பிறமுறைகளைக் கைவிட்டுக் குறிப்பிட்ட ஒரு முறையே கையாளப்படவேண்டுமென்பதற்கு எவ்வித அவசியமும் இல்லை என்பதையும் நான் நன்றாக உணர்கிறேன்.

இ. இலிப்சன்.

யூலை, 1954.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுறை

அத்தியாயம்		பக்கம்
I	பிரான்சில் பிற்போக்கும் புரட்சியும் (1815-1870)	1
II	சேர்மானியப் பேரரசின் வளர்ச்சி (1815-1870)	56
III	இரசியாவிற் சீர்திருத்த இயக்கம் (1815-1914)	107
IV	ஒசுற்றிய அங்கேரியின் இனப்பிரச்சினையும் யாப்புப் பிரச்சினையும் (1815-1867) ..	166
V	இத்தாலியின் ஐக்கியம் (1815-1870)	208
VI	போல்கன் அரசுகள்	239
VII	ஐரோப்பாவின் ஐக்கியம்	275
VIII	புதிய ஊழி (1877-1914)	318
IX	கடந்த கால்நூற்றாண்டு (1914-1939)	369
	i 1914-1918 போர்	370
	ii சமாதானப் பொருத்தனைகள் 1919-1923	388
	iii நாட்டுக் கூட்டவை	408
	iv சோவியத்து இரசியா	430
	v தேசியச் சமவுடைமைச் சேர்மனி	478
	vi பாசிச இத்தாலி	527
	vii ஏனைய ஐரோப்பிய அரசுகள்	558
	viii பொருளாதார நாட்டினவாதம்	596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவப் படங்களின் பெயர் வரிசை

	பக்கம்	பார்த்தபடி
மூன்ரும் நெப்போலியன்	38	,,
இளவரசன் வொன் பிசுமாக்கு	88	,,
இரண்டாம் அலச்சாந்தர்	122	,,
இளவரசன் மெற்றெணிக்கு	168	,,
மசினி	218	,,
பெருமகன் கவூர்	228	,,
கரிபோல்டி	236	,,
முதலாம் அலச்சாந்தர்	278	,,
குடிப்பதி உவில்சன்	410	,,
இலெனின்	440	,,
பிறயன்	564	,,
கமால் அததேக்கு	576	,,

தேசப் படங்களின் பெயர் வரிசை

1815 இல் சேர்மனி	106	,,
1878 இல் ஒசுற்றிய அங்கேரி	206	,,
1815 இல் இத்தாலி	238	,,
1912 இல் போல்கன் தீபகற்பம்	274	,,
1914–1918 போரின் முன்னர் ஐரோப்பா	368	,,
1914–1918 போரின் பின்னர் ஐரோப்பா	628	,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 ஆம் நூற்றுண்டில் ஐரோப்பா

அத்தியாயம் I

பிரான்சில் பிற்போக்கும் புரட்சியும்
(1815 — 1870)

1815 பிரான்சிய வரலாற்றுப் பிரச்சினைகள்.

ஒன்றுக்கொன்று முரணை இரண்டு நோக்கங்களை இணக்கஞ் செய்யும் பெரும் பிரச்சினையைத் தனக்குப் பின்னர் பதவிக்கு வந்தவர்களுக்கு நெப்போலியன் கையளித்துப் போயினன். அவையாவன, பிரான்சு ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல மைப்பை நிறுவலும் ஐரோப்பா ஏற்றுக்கொள்ளக்கூடிய பூட்கை யொன்றைப் பின்பற்றலும் ஆகும். அரை நூற்றுண்டிற்கு மேலாகப் பிரான்சின் அரசறிஞரின் திறமைக்கு இப்பிரச்சினை ஒரு சோதனையாகவே இருந்தது. 1815 ஆம் ஆண்டுப் பொருத்தனை இராச்சிய எல்லைகளைக் குறுக்கித் தமது நாட்டுக்கு அகௌரவத்தை விளைவித்ததாகக் கருதி எப்பாடு பட்டேனும் அதனை அழித்துவிடப் பிரான்சிய மக்கள் உறுதி கொண்டனர். இதற்கு நேர்மாறுக, இப்பொருத்தனையை எவ்வித மாயினும் பாதுகாப்பதற்கே வல்லரசுகள் யாவும் உறுதி பூண்டிருந்தன. இப்பொருத்தனை மீறப்பட்டால் முடிவில்லாக் குழப்பத்திற்கு மடையைத் திறந்துவிட்டது போலாகும் என்பதை வல்லரசுகள் உணர்ந்திருந்தன. இக்குழப்பத்தினுல் ஐரோப் பாவிலே போர் எனும் ஆபத்து ஏற்படுமென்பதும் வல்லரசு களுக்குத் தெரியும். இப்பிரச்சினையைத் திருத்திகரமாகத் தீர்ப் பதற்கு மூன்று முயற்சிகள் செய்யப்பெற்றன. அவை யாவுந் தோல்வியுற்றன. நட்பாளரின் பொதிவண்டியில் பிரான்சுக்கு வந்தவர்களென எளனஞ் செய்யப்பட்ட பூபோன் வமிசத் தினர் நட்பாளரையே அண்டியிருந்தமையால் தங்கள் பதவிக்கு அழிவு தேடிக்கொண்டனர். அவர்களுடைய மூடத்தனமான உள்நாட்டுப் பரிபாலனம் இவ்வழிவைத் துரிதப்படுத்தியது. எங் ஙனமாயினும் அவர்களின் வீழ்ச்சி விரைந்தோ, அன்றேல் காலம் தாழ்த்தியோ வருவது தவிர்க்க முடியாதது போலத் தோன்றியது. மக்களின் விருப்பத்திற்கு நேர்மாறுன பிற நாட்டுப் பூட்கையை ஒலியன்சு முடியாட்சி பின்பற்றியது. இம் முடியாட்சியின் இறுதி வீழ்ச்சியை மத்திய வகுப்பினர் தாமதப் படுத்தினரே தவிர முற்றுகத் தவிர்க்கவில்லை. சிறிது காலமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815

வது மக்களின் ஆதரவைப் பெறுவதில் மூன்றும் நெப் போலியன் அதிட்டம் உள்ளவனுயிருந்தான். ஆனல், இதில் அவன் அடைந்த வெற்றி ஐரோப்பாவிலுள்ள அரசுகளுக்கு உளத்தாங்கலே எற்படுத்தியது. முதலாவது பிரான்சியப் பேரர சின் புகழுக்குப் புத்துயிர் கொடுக்க அவன் செய்த முயற் சியினல் அச்சமடைந்த ஐரோப்பா வெறுப்புற்றது. இறுதியில் தம் முன்னேரின் கதியையே அவனுமடைந்தான். 1815 ஆம் ஆண்டு தொடக்கம் 1870 ஆம் ஆண்டுவரை பிரான்சியப் பேரரசின் புகழுக்குப் புத்துயிர் கொடுக்க ஒன்றன்பின் ஒன் ருகச் செய்த இம் முயற்சிகளே பிரான்சிய வரலாருக அமையும். இவையே இந்தக்காலப் பகுதிக்கு ஒற்றுமையும் இணைப்பும் கொடுப்பனவாகும்.

முடியாட்சியை ஆதரித்த தீவிரவாதிகள்.

பூபோன் வமிசத்தினரைப் பிரான்சிய அரசுகட்டிலுக்கு மீண் டும் கொண்டுவந்ததே அரசியற் குழப்பத்திற்கு ஒரு அறிகு றியாக இருந்தது. நாடு இரண்டு கூருகப் பிளவுற்றது. பதி னைந்து ஆண்டுகளாக நிகழ்ந்த ஒரு போராட்டம் வினேந்தது. இப்போராட்டம் 1789 ஆம் ஆண்டில் நடந்த மாபெரும் போராட் டத்தின் இறுதிக் கட்டமெனக் கருதத்தக்க எல்லா அம்சங்களே யும் கொண்டது போலத் தோன்றியது. விவாதத்திற்கு இட மாயிருந்த அக்காலப் பிரச்சினைகள் கவனிக்கவேண்டியவை. எனெனில், குழப்பமும் தொல்லையும் நிறைந்த இந்த நிகழ்ச் சிகளே இந்தப் பிரச்சினைகளைப் பின்னணியாகக் கொண்டே விளக் கலாம். இந்த நிகழ்ச்சிகள் இறுதியில் 1830 ஆம் ஆண்டுப் புயலைக் கிளப்பிவிட்டன. ஒருபுறம் மன்னராட்சியை ஆதரிக் கும் தீவிரவாதிகள் இருந்தனர். இவர்கள் அரசியலில் பொங்கி எழுகின்ற தாராளப் போக்கைத் தடுப்பதற்குக் கங்கணம் கட்டி நின்றனர். அதுமட்டுமல்லாமல் பிரான்சிய வரலாற்று அபிவிருத்தி என்னும் நீரோட்டத்தைப் பிற்போக்கு என்னும் கால்வாயிற் றிருப்பிவிடவும் எண்ணமிட்டிருந்தனர். புரட் சியின்போது நாட்டை விட்டோடிய பிரபுக்களின் பரம்பரைக் கொள்கையின் பிரதிநிதிகளாகவே இந்தத் தீவிரவாதிகளி ருந்தனர். நாட்டை விட்டோடிய பிரபுக்கள் புரட்சியும் புரட்சி சாதித்தவையும் செல்லுபடியாகாவென எப்பொழுதும் சொல் லினர். தனிமுதன்மையாலும் சிறப்புரிமையாலும் தங் களே அரண்செய்யும்வரை எவ்விதமாயினும் முயற்சி செய் வதே இவர்களின் திடமான நோக்கமாயிருந்தது. இவர்களின் மிதமிஞ்சிய போக்கு மனக்கசப்பு நிறைந்த பழைய நினைவு களால் ஏற்பட்டது. இது புதிய சந்ததியினருக்குப் புரியாதது. இப்புதிய சந்ததியினரோவெனில் புதிய சமூகச் சூழ்நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தவர். இப்புதிய சூழ்நிலை உலகில் உள்ள மாறுத 1815
நியதிகளினின்றும் பிரித்தெடுக்க முடியாத அம்சங்களாகவே இப்புதிய சந்ததியினர்க்குத் தோன்றின. மன்னராட்சியை ஆத ரிக்கின்ற மித போக்குள்ளவர்களுக்குக் கூட இது நன்கு புலனாகவில்லை. இதுபற்றி இரிசிலூ மேல்வருமாறு கூறினான் : "உங்களுடைய உணர்ச்சிப் பெருக்கும் தீராத வெறுப்பும் எனக்கு விளங்கவில்லை. என்னுடைய மூதாதையர்களுக்குச் சொந்தமா யிருந்த வீட்டினருகாக நான் ஒவ்வொரு நாளும் போகின்றேன். என்னுடைய மூதாதையர்களுடைய சொத்துக்கள் பிறர் கையில் இருப்பதைக் காண்கின்றேன். அவர்களுக்குச் சொந்தமான வீலையுயர்ந்த பொருள்கள் யாவும் பொருட்காட்சிச்சாலையில் இருப்பதைக் காண்கின்றேன். இதுவொரு துக்கமான காட்சியே. ஆனால், இக்காட்சி என்மனத்தில் எக்க உணர்ச்சியையோ, அல் லது பழிவாங்கும் உணர்ச்சியையோ இளப்பிவிடவில்லை. பிரான் சில் தங்கியிருந்த நீங்கள் சிலவேளைகளில் புத்திதடுமாறி நிற் கின்றீர்கள் போல் எனக்குத் தோன்றுகிறது." நிதானவழி பற்றி அவன் கூறிய அறிவுரைகள் செவிடன் காதில் ஊதிய சங்குபோலாயின. பழைய ஆட்சிமுறைக் கட்சியினர் இருபது ஆண்டுகளாக வெளிப்படையாகவோ, அல்லது ஒளிவுமறைவா கவோ பழிவாங்கும் உணர்ச்சியை உளத்தில் ஊட்டி வளர்த் தனர். அதிட்டச் சக்கரம் சுழல்வதால் பிரான்சிய அரசாங் கம் தம் கைக்கு வந்து அதன்மூலம் தங்கள் எதிரியைத் தாக்கும் நாளை அவர்கள் காத்திருந்தனர். அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. வெற்றி கிடைத்த வேளையில் உதாரகுண முடையவர்களே தயவாக நடந்து தங்கள் அதிகாரத்தைப் பிழையான முறையிற் பயன்படுத்தாமலிருக்க முடியும். தய வான உள்ளங்களே தங்கள் பொதுநன்மைக்காகத் தங்கள் சொந்த உணர்ச்சிகளைத் தியாகஞ்செய்ய முடியும். ஆனால், அதிட்டயீனமாக மன்னர் ஆட்சியை ஆதரித்த தீவிரவாதிகள், உதாரகுணம், நிதானமான போக்கு ஆகிய நல்வியல்புகளைப் பெற்றிருக்கவில்லை. மிதமிஞ்சிய போக்கு அவர்களுக்கு இறு தியில் அதற்கான பிரதிபலனை அளித்தது.

அவர்களின் முன்றிட்டம்.

மன்னராட்சியை ஆதரித்த தீவிரவாதிகளது முன்றிட்டத்தின் நோக்கம் பழைய ஆட்சியைப் புத்துயிர் பெறச் செய்வது தவிர வேறெதுவுமன்று. அத்துடன் விழுமியோரின் நன்மைக் காகவும் சில மாற்றங்களைச் செய்ய உளங் கொண்டிருந்தனர். இம்மாற்றங்கள் முடியாட்சியின் நன்மைக்காக மேற்கொள்ளப் பட்டவையல்ல. இந்த நோக்கத்தை அடைவதற்கு முதலாவ தாகக் கத்தோலிக்கத் திருச்சபையின் பழைய அதிகார முதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 மையை மீட்க விரும்பினர். திருச்சபையும் அரசும், பலி பீடமும் அரசுகட்டிலும் கொள்ளுகின்ற நட்புறவின் அத்தி வாரத்திலேயே தீவிரவாதிகள் தங்கள் திட்டங்களை நிலைநாட்ட எண்ணினர். புரட்சியின்போது திருச்சபையினிடமிருந்து பறி முதலாகி, இப்பொழுது அரசாங்கத்திடமுள்ள திருச்சபைக் குரிய சொத்துக்கள் யாவற்றையும் திருச்சபைக்கு நிரந்தர நிதியாக அளிக்க ஆலோசனை செய்தனர். நிலமுடைய திருச் சபையை வளரச் செய்வதன் கருவாகவே இம்முயற்சி இருந் தது. காணி நில உடைமையால் மாத்திரம் எழுகின்ற அதி காரத்தையும் கீர்த்தியையும் கொண்டே திருச்சபையை அரண் படுத்தலாம். அதே நேரத்திற் கல்வி புகட்டுவதற்கு வழிகாட் டுவதும், கல்வி பாலனத்தினால் ஏற்படும் செல்வாக்கும் திருச் சபையாரின் பொறுப்பில் விடப்பட்டன. பல்கலைக்கழகத்தின் தலைவராக விசுப்பாண்டவர் ஒருவர் நியமிக்கப்பெற்றார் (1822). பாடசாலைகளைக் கட்டுப்பாடு செய்யும் பரந்த அதிகாரமும் இவ ரிடம் ஒப்படைக்கப்பட்டது; இது கல்வியிற் சருவாதிகாரம் போலா யிற்று. பிரான்சிற்குத் திரும்பிச் சென்று அங்கு தங்கள் கல்விச்சாலைகளை நிறுவ இயேசுதருக்கு அனுமதியளிக்கப் பெற் றது. இந்தக் கல்விச்சாலைகளில் கல்வி, எவ்விதமான கைம் மாறும் எதிர்பாராது வழங்கப்பெற்றது. மதகுருக்களை ஆதரிக் கும் கட்சி அசைக்க முடியாதபடி நிறுவப்பெற்றவுடனே அது மக்களின் ஆத்மீக வாழ்க்கைக்கும் ஒழுக்க வாழ்க்கைக்கும் புத்துயிர் அளிக்கின்ற தலைக்கீட்டில் பிரான்சிய சமுதாய முறை மையையும் அரசியல் முறைமையையும் மாற்றியமைக்கும் வேலை யில் ஈடுபடலாம். சமயக்கல்வி என்கின்ற போர்வையிலே பிற் போக்கு வித்துக்கள் எங்கும் விதைக்கப்பட்டு இப்பொழுது இருக் கின்ற அரசியல் முறையை முற்றுக மாற்றுவதற்கு மக்கள் உள்ளம் பண்படுத்தப்படக்கூடும். கடவுளிடம் தன்னைத்தானே ஒப்படைத்தலும், கடவுளின் ஆணைக்குப் பணிதலும் பற்றித் திருச்சபை போதிக்கும் வேலைக்கு அனுசரணையாகப் பத்திரிகைத் தணிக்கை பலப்படுத்தப்பட்டது. அரசாங்கம் தனக்கு மாறுன குறிக்கோள்களை வெளியிடும் பத்திரிகைகளையும், வெளியீடுகளை யும் ஒடுக்குவதற்கு இத் தணிக்கை அதிகாரம் அளித்தது. பொதுசன அபிப்பிராயத்தை வாய்ப்பூட்டுப் போட்டுக் கட்டுப் படுத்தினர். அதனை அதிகாரிகள் தங்களுடைய அங்கீகாரத்திற் கேற்ற வழியில் வார்த்தெடுத்தார்கள். சுதந்திரத்தை எதிர் நோக்கி நிற்கின்ற பேராபத்துக்களை மக்கள் விழித்துணர்ந்து அறிந்து கொள்வார்கள் என்பதனால் பொதுமக்களுக்குப் பேச்சுச் சுதந்திரத்தை வழங்காது மறுத்துவிட்டனர். பிரான்சின் உண் ணாட்டு நிலையில் ஏற்பட்ட முழு மாற்றங்களைப் பிரான்சிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்யத்தக்க விதமாகப் பிரான் 1815
சின் பிறநாட்டுப் பூட்கையும் கையாளப்பட்டது. போர்க்களத்திற் புகழை ஈட்டிஞலன்றி மக்களின் உளத்தில் பூபோன் வமிசம் ஆழமாக இடம்பெறுது எனப் புகழ்பெற்ற எழுத்தாளனை சற்ரேபிறியன் வாதித்தனன். "எதிரியை எதிர்த்து நின்ற பின்னரே (மன்னரின்) வெள்ளைக் கொடி நிறுவப்படும்." எனினும், சம நிலையில் தளம்பாமல் நிற்கும் முடியாட்சியும், நிலமானிய முறையுள்ள திருச்சபையும் வேறெருரு முடிவைச் சாதிப்பதற்கான கருவிகள் மட்டுமேயாகும். முக்கியமாக தம் முடைய இனத்தினரின் சிறப்புரிமைகளுக்காகவே மன்னராட் சியை ஆதரித்த தீவிரவாதிகள் போராடினர். இத்தீவிர வாதிகள் தாங்கள் காட்டும் ஆதரவுக்கு இதைவிடக் குறைந்த கூலி எதையும் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. புரட்சிக்கு முன்னர் பழைய விழுமியோருக்குச் சொந்தமாயிருந்த உரி மைகளையும் உடைமைகளையும் இயன்றவரை திருப்பிப் பெறு தற்கு இவர்கள் கங்கணம் கட்டி நின்றனர். அதுமட்டுமன்றி, புரட்சிக்குப்பின்னர் அரசியலதிகாரத்திலிருந்து இதுவரையும் புறக்கணிக்கப்பட்டிருந்த இவர்கள் இப்பொழுது ஓரளவிற்கு அந்த அதிகாரத்தையும் கோரி நின்றனர்.

புரட்சியை ஆதரித்தோர்.

முடியாட்சியை ஆதரிக்கும் தீவிரவாதிகளை மிதவாதிகள் எதிர்த்து நின்றனர். இம் மிதவாதிகள் "உணர்ச்சி வசப்படாமல் புரட்சியைப் பாதுகாக்கவும் அதனைத் தொடர்ந்து நடத்தவும் உறுதிபூண்டு நின்றனர். இக்கட்சியினரின் கொள்கையை விளக்கு மிடத்து "ஒழுங்குக்கும் சுதந்திரத்திற்குமிடையிலும், புரட்சிக் கும் குலவழி உரிமைக்குமிடையிலும் ஓர் இணைப்பை ஏற்படுத்து வதே எம் கனவு" என இக்கட்சியின் தலைவர் மொழிந்தார். இவர்களது உளப்பாங்கு உண்மையில் பழைமைபேணும் தன் மையது. இவர்கள் பின்பற்றிய பூட்கை பெரும்பாலும் ஆக்க வியல்புடையதன்று. தீவிர கொள்கையுடையவர்கள்மேல் இக் கட்சிக்கு அனுதாபம் இல்லை. பிரான்சை எதிர்த்த நட்பாளர் படைப்பலம் கொண்டு தம்மேல் திணித்த முடியாட்சியையும் இவர் ஏற்றனர். மன்னன் அரசுகட்டில் ஏறும்போது அளித்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டவனுயிருக்கும் வரை இக்கட்சி யினரும் மன்னனிடம் விசுவாசமாக இருக்க உளங்கொண்டனர். பிரான்சியப் புரட்சி தமக்கு அளித்துப்போன உரிமைச் செல் வங்களைச் சிறிதும் வழுவவிடாது பாதுகாப்பதிலேயே இவர்கள் கண்ணும் கருத்துமாயிருந்தனர். புரட்சிக்கு முன்னர் நடந்த பழைய மன்னராட்சிமுறையையும், அந்த ஆட்சியில் நிலவிய அரசியல், சமுதாய, மத மரபுகளையும் மீட்டல், புரட்சிக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 பின்னர் ஒரு சந்ததியினர் அரும்பாடுபட்டு ஆக்கிய ஆக்கமனைத் தையும் அழித்துவிடுதலாகும். இச்செயல் அடிமைத்தனத்தில் பிரான்சின் உயிரை இரண்டாவது முறை சிறை வைப்பதாகும்.

பட்டயம். பதினெட்டாம் உலூயி பிரான்சிய அரசெய்திய பொழுது வெளியிட்ட பட்டயத்தை மிதவாதிகள் ஆதரித்து நின்றனர். இந்தப் பட்டயம் முக்கியமானது; ஏனெனில், புரட்சிக்கு முன்னர் இருந்த பழைய முடியாட்சி முறை மரபுகளை இப்பட்டயம் தள்ளிவிட்டது; பழைய முறைகளுக்குப் பதிலாகப் புரட்சியின் மரபுகளையும் பேரரசின் மரபுகளையும் புகுத்தியது. அரசியற் சகிப் புத்தன்மை, சட்டத்தின்படி எல்லோரும் சமம், அரசாங்க சேவையில் எல்லோரும் சேரலாம் ஆகிய கொள்கைகளை இப் பட்டயம் புரட்சியினின்றும் எடுத்துப் பிரான்சிய சட்டத்திலே சேர்த்துக்கொண்டது. ஒருமுகப்படுத்திய பாலனத்தையும் பேர ரசிடமிருந்து எடுத்துக்கொண்டது. பேரரசின் காலத்தில் இல் லாத உரிமையான அரசாங்கத்தைக் கட்டுப்பாடு செய்யும் உரிமை யையும் இது பிரான்சிய மக்களுக்கு அளித்தது. இரண்டு சபை களைக் கொண்ட சட்ட ஆக்க மன்றங்களையும் இப்பட்டயம் நிறு வியது. ஒரு சபையிற் பெருமகார் இருந்தனர். இவர்களுட் சிலருக்குப் பரம்பரை உரிமையிருந்தது. சிலரை மன்னன் ஆயுட் காலத்துக்கு நியமனஞ் செய்தான். மற்றச் சபையின் உறுப் பினர் மக்களாலே தெரிவுசெய்யப்படுவர். இதற்குரிய வாக் குரிமை குறுகிய அடிப்படையிலிருந்தது. அதாவது, ஆண்டு தோறும் நேரடியான வரியாகப் பதின்மூன்று பவுணைக் கொடுப் பவர்களே வாக்காளராவர். நிருவாக சபை மாத்திரமே சட்ட யாத்தலைத் தொடக்கி வைக்கலாம். ஆனால், பிரதிநிதிகள் சபைக்கு அந்தப் பிரேரணைகளையும் வரிச்சட்டங்களையும் நிராக ரிக்கும் உரிமை உண்டு. இந்தப் பட்டயத்திற் குறை குற்றங்கள் இருந்தபோதிலும் இது யாப்புறு முடியாட்சி, பிரதிநிதியாட்சி ஆகியவைகளுக்கு உறுதியளிப்பதாயிருந்தது என்பது உண்மை. இது மக்களும் மன்னனும் செய்துகொண்ட சமூக ஒப்பந்த மாகும். நாட்டின் கண்ணே இருந்த மிதவாதிகள் எல்லோரும் அரசியல் நம்பிக்கையை ஒப்புக்கொள்ளும் வழியில் இது அமைந்தது.

பதினெட்டாம் உலூயி. புரட்சிக்கு முன்னர் இருந்த பழைய ஆட்சியை ஆதரிக்கும் பழைமைவாதிகளையும் புதுமுறையை ஆதரிக்கும் கட்சியினரை யும் இணக்கஞ் செய்வது முடியாததாயிற்று. இருசாராரின் தத்து வங்களையும் இலக்குக்களையும் ஒற்றுமைப்படுத்துவது நேரத்தக்க தன்று. இருகட்சிகளுள் ஒருகட்சி தோல்வியடையவேண்டும். இவ்விரண்டு கட்சியினரும் தாந்தாம் மேலோங்குதற்கு நடத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்திலே கால எல்லையின்றிப் பிரான்சு பிளவுபட்டுச் 1815
செல்ல முடியாது. நாளடைவில் ஒரேயொரு பிரச்சினை மட்டுமே மோதுதல்களுக்குக் காரணமாயிருந்திருக்கலாம் என்பது இப் பொழுது எமக்குப் புலனாகின்றது. எனினும், உடனடியாக நடக்கவேண்டியவைகளை மன்னனின் மனப்போக்கே தீர்மானித்தது. பூபோன் வமிசத்தின் அதிட்டவசமாக உலூயி மக்களின் மனவேகம், தனது ஆபத்தான நிலை[1] ஆகியவைகளை நன்கு அறிந்திருந்தான். எனவே, தீவிரவாதிகளுடன் ஒன்றுசேர்ந்து உழைக்க மன்னன் உறுதியாக மறுத்துவிட்டான். அன்றியும் நாட்டிற் கலகத்தீயை விளைவிக்கக்கூடிய அவர்களின் தொடரி களுக்கும் இடங்கொடுக்காது விட்டான். 1660 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் மன்னராட்சியின் மீட்சிக்குப் பின்னர் இருந்த நிலையைப் போலவே இப்போது பிரான்சில் உள்ள நிலையும் இருந்தது. மன்னராட்சியை மன்னரே ஆதரித்த அளவைவிட அதிகமாக ஆதரித்த தீவிரவாதிகளின் கடும்போக்கே முடியாட் சிக்கு ஆபத்தை விளைத்தது. இத்தீவிரவாதிகளின் பிற்போக்கான பலாத்காரமும் பழிக்குப்பழி வாங்கும் உணர்ச்சியும் முடியாட் சிக்கு இழுக்கைத் தேடிக்கொடுத்தன. இங்கிலாந்திலும் பிரான் சிலும் உள்ள மன்னர்கள் நடுப்போக்கையே விழைந்து நின்ற னர். அரசியலைத் துறந்து அந்நிய நாட்டிலே பிரயாணஞ் செய்துகொண்டிருக்க அவர்கள் விரும்பவில்லை. மன்னன் இந்த மோதல்களுக்கிடையில் பாறைகளுக்கு நடுவில் சுக்கான் பிடிக்கும் மாலுமிபோல் கவனமாக அரசாங்கம் என்னும் கப்பலைச் செலுத்திப் போயினன். இதனால் அரசியல் நெருக் கடி அப்போதைக்குத் தவிர்க்கப்பட்டது. இங்கிலாந்தில் இரண் டாம் சார்ல்சின் பின்னர் அவனுடைய தம்பி இரண்டாம் சேமிசு அரசெய்தினன். பிரான்சில் பதினெட்டாம் உலூயிக்குப் பின்னர் அவனுடைய தம்பி பத்தாம் சார்சு அரசெய்தினன். பத்தாம் சார்சின் கொள்கைவெறி, எதிர்ப்பு என்னும் புயலை விரைந்து தூண்டிவிட்டது. அரசுகட்டிலில் இருந்து மன்னனைத் தலைதெறிக்க ஓட்டிய பின்னரே இப்புயல் அடங்கிற்று.

முடியாட்சி மீட்கப்பெற்ற கணந்தொடக்கம் அதனை ஆதரிக் கும் தீவிரவாதிகள் தங்கள் திட்டங்களை உருவாக்கவும் அரசியல் கொந்தளிப்பை உண்டாக்கவும் தொடங்கினர். நட்பாளர் படை

---

[1] "நட்பாளர் படைகளைப் பிரான்சிலிருந்து மீட்டால் மாட்சிமை தங்கிய மன்னன் ஒரு வாரத்துக்குக்கூட அரசுகட்டிலில் இருக்க முடியாது என்பதில் எவ்வித மான ஐயமும் இல்லை" எனக் காசில்றீ எழுதினன்.

Correspondence of Castlereagh (1853), third ser. iii. 32.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 கள் பாரிசு நகரத்துள்ளே புகுந்தபின் ஒரு பொதுத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் எதிரிகள் புரட்சிக்காரரை மிரட்டி மடக்கி வைத்திருந்தனர். அதன்பயனாகப் பிற்போக்குச் சத்திகள் அதிக பெரும்பான்மையைப் பெற்றன. தேர்தலில் பெரும் பான்மை பெற்ற புதிய பிரதியாளர்மன்றை உலூயி இந்திரௌ வேபிள் மன்றம் என அழைத்தான். இம்மன்றம் பழிவாங்குந் தன்மையுடையதாயும் தன்னடக்கமற்றதாயு மிருந்தது. இதன் சகிப்புணர்ச்சியற்ற வெறித்தன்மையை அடக்குவதிலே அரசாங் கம் பெரும்பாலும் தன் சத்தி முழுதையும் செலுத்த வேண் டியதாயிற்று. ஆயினும் இம்முயற்சியில் அரசாங்கம் வெற்றி பெறவில்லை. தாலிறனும் அவன் தாராள உளப்போக்குடைய அமைச்சரும் பதவி நீக்கஞ் செய்யுமாறு நிர்ப்பந்தஞ் செய்யப் பட்டுப் பதவியைத் துறந்தனர். அவர்கள் பதவியை இரிசிலூக் கோமகன் ஏற்றுக்கொண்டான். சாரினுடைய சேவையிலிருந்த இரிசிலூ சாரினுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். இவன் மதியூகமுடைய நிருவாகியுமாவான். நட்பாளருடன் அமைதியிணக்கப் பேச்சிலே சாதகமான நிபந்தனைகளைப் பெறு வதற்கு இவன் பதவியெய்தியமை உறுதியளித்தது. பூபோன் குடியாட்சி உறுதிப்படுவதற்கு இவனது நிதானமான போக்கு ஒரு நல்ல முன்னறிவிப்பாயிற்று. ஆனால் இப்போக்கு மக்கள் பிரதிநிதி சபையில் இவனுக்குப் பாராட்டைப் பெற்றுக்கொடுக்க வில்லை. மிகவும் வலுவந்தமானவையும் ஆட்சேபனைக்குரியவை யுமான திட்டங்களை மேற்கொள்ளும்படி சபை இவனை நெருக் கியது. ஒத்துமேவல் பற்றிய பேச்சை எடுப்பதைக்கூட இணங்க முடியாதோர் வெறுத்தனர். புரட்சியென்னும் கறையைத் தம் மீது படியச் செய்தவர்கள் எல்லோருக்கும் தடையுத்தரவு வேண் டுமென இவர்கள் கோரி நின்றனர். இவர்களின் கோரிக்கைகளை ஏற்று இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள் மேலும் பல சலுகைகளைக் கோரும்படி இவர்களைத் தூண்டின. நெப்போலி யனுக்குக் கடன் கொடுத்தவர்களின் கடனில் ஐந்தில் மூன்று பங்கை திருப்பிக் கொடுக்க வேண்டுமெனவும் இவர்கள் கோரினர். நெப்போலியனுக்குக் கடன் வழங்கியவர்கள் அரசாங்கப் பிணை யின் பெயரிலேயே கொடுத்திருந்தனர். இங்ஙனம் நம்பிக்கைக் குப் பங்கம் விளைவிப்பது அரசாங்கம் நிதிநிலையில் முறிந்து விட்டது என்பதற்குச் சமமாகும். எனவே, இந்தக் கோரிக்கை பிரான்சின் அரசாங்கத்தின்மீது நம்பிக்கையினத்தை ஏற் படுத்திப் போர் நட்ட ஈட்டைச் செலுத்துதற்குரிய பணத்தை அரசாங்கம் கடன்பத்திரம் மூலம் பெறுவதை இயலாததாக்கி விடும். நிதிநெருக்கடி எதிர்நோக்கி நிற்கவே மன்னன் தெக் காசின் அறிவுரையை ஏற்றுப் பிரதிநிதிகள் மன்றைத் திடீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெனக் குலைத்தான் (1816). இச்செயல் துணிகரமானது. பின் 1816–20
னர் கிடைத்த வெற்றி இச்செயல் சரியானது என்பதை நிரூ
பித்தது. முடியாட்சித் தீவிரவாதிகளின் திட்டத்தை நிராகரிக்
கும் முறையில் மக்கள் தங்கள் தீர்ப்பைத் தெளிவாகத் தெரி
வித்தனர். அரசாங்கத்தை ஆதரிக்கும் பெரும்பான்மையினர்
பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பெற்றனர். முடியாட்சியை
ஆதரிப்பவரான தீவிரவாதிகளின் பலாத்காரத்தால் வீழ்ச்சி
யென்னும் குழியின் விளிம்புவரை தள்ளப்பட்ட முடியாட்சி,
அதனுள் விழாது அருந்தப்புத் தப்பியது. ஆனால், பதினான்கு
ஆண்டுகளுக்குப் பின்னர் இக்கதியை முடியாட்சி அடையவேண்
டியிருந்தது. மன்னராட்சியை ஆதரிப்பவர் எனக் கூறிக்கொள்
ளும் தீவிரவாதிகள் சுயநலமற்ற அரசபத்தி என்னும் முக
மூடியின்கீழ் தங்களுடைய சொந்த நன்மையைப் பெருக்கும்
அரசியல் மீக்கொளலிலும் ஆள்புல மீக்கொளலிலுமே கருத்
தாக விருந்தனர்.

உண்ணாட்டு நிலை இப்போது முற்றுக மாறிவிட்டது. தீவிர இரிசிலூவின்
வாதிகளின் சூழ்ச்சி இப்போது கட்டுப்படுத்தப்பட்டு வீழ்ச்சி.
விட்டது. பிற்போக்கு ஆட்சிமுறையினால் ஏற்படும் ஆபத்துத்
தற்காலிகமாக விலகியது. சட்ட ஆக்கச் சபைக்கும் நிருவாக
சபைக்கு மிடையில் சுமுகமான உறவு ஏற்பட்டது. தேர்தல்
அமைப்பை மாற்றுதலிலும் நிதிச் சிக்கல்களைத் தீர்ப்பதிலும்
சட்டசபையும் நிருவாகமும் ஒத்துழைத்தன. வெளிநாட்டுக்
கொள்கையில் இரிசிலூவின் பாலனம் நட்பாளரின் நம்பிக்கை
யைப் பெற்றது. பிரான்சில் முகாமிட்டிருந்த பிறநாட்டுப் படை
களை வெளியேற்றுவதென 1818 ஆம் ஆண்டு ஏச்சிலாசப்
பலில் முடிவு செய்யப்பட்டமைக்கு நட்பாளர் கொண்ட இந்த
நம்பிக்கைதான் காரணம். இச்செயல் பிரான்சின் சுதந்திரத்
திற்கு அமைச்சன் ஈட்டிய பெரிய சூழியல் வெற்றியாகும்.
ஆனால், தாராள போக்குள்ள கட்சியினர் அரசியல் முன்ன
ணிக்கு வந்தனர். இவர்களுடைய பலம் வளர்ச்சியடைய
இரிசிலூ சட்டசபைப் பதவியிலிருந்து விலகவேண்டிய நிர்ப்பந்தம்
ஏற்பட்டது.

அரசாங்கத்தின் முதல்வர் பதவியில் தெக்காசு அமர்த்தப் தெக்காசு.
பட்டான். இந்த அரசாங்கம் தாராள கட்சியின் ஆதரவிலேயே
தங்கியிருந்தது. இப்புதிய அமைச்சு பத்திரிகைத் தணிக்
கையை நீக்கிப் பத்திரிகைச் சுதந்திரம் அளித்தது, புதிய
அமைச்சின் சாதனைகளில் முக்கியமானது. மதவிவாதச் சுதந்
திரம் என்னும் பொருள்பற்றிப் பிரதிநிதிகள் சபையில் பேசும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1816-20 போது நீதிமந்திரி தீசேர் கூறியவை மறக்க முடியாதவை : "மனிதன் வலிமையில்லாதவன் ; உணர்ச்சி வசத்தவன். இத் தகைய மனிதன் எல்லாம் வல்ல இறைவனுக்குத் தன் படைப்பலத்தை எங்ஙனம் வழங்க முடியும் ? இறைவனின் பலத்தைத் தான் அபகரிப்பதுபோலப் பாசாங்கு செய்கின்ற னனே ? அன்றேல் தன் பலவீனத்தைக் கொண்டு இறைவனைக் காக்க வந்துள்ளானே ? மனிதனது இத்தகைய பிழையான கருத்தில் காணப்படும் வீம்புத்தனம் பலமுறையும் அம்பல மாகிவிட்டது. கடந்த பல நூற்றுண்டுகள் இந்தப் பயங்கர விளைவினைச் செங்குருதி தோய்ந்த எழுத்தில் எடுத்து எங் களுக்கு விளம்புகின்றன.[1]" எல்லா அரசியற் சகுனங்களும் நன்மையைக் குறிப்பனவாகவே யிருந்தன ; அறிவாற்றல் மிகுந்த பாலனம் வரும் என நம்பிக்கை பிறந்தது. ஆனால், 1820 ஆம் ஆண்டு பெறி கோமகன் திடீரெனக் கொலை செய் யப்பட்டதும் நிகழ்ச்சிகளில் எதிர்பாராத புதியதொரு திருப்பம் ஏற்பட்டது. பெறி கோமகன், அரசுகட்டிலுக்கு உரித்தாளனை கொந்தி ஆட்டோவின் இளைய மகனுவான். இவனுடைய தம யனுக்குப் பிள்ளை இல்லை. எனவே இவனுடைய படுகொலை மூலம் பூபோன் மன்னரின் மூத்த பரம்பரை அழிந்து விடவும் கூடும். இக்கொலையைச் செய்தவன் ஒரு வெறியன். அவன் பெயர் உலுவல். ஆனால் தெக்காசின் தாராள அமைச்சுமீது பழிசுமத்துவதற்கு இந்நிகழ்ச்சி உடனே ஒரு தலைக்கீடாயிற்று. தெக்காசு பதவியிலிருந்து நீக்கப்பட்டான். அவனுடைய வீழ்ச் சியுடன் பிரான்சிய வரலாற்றிலே ஒரு திருப்பம் ஏற்பட்டது. பிற்போக்குவாதம் உருவாதற்கு இதுவே ஆரம்பம். இப் பிற்போக்குவாதம் வரவர வலுவுற்று வளர்ந்து 1830 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு புரட்சிக்கு ஏதுவாயிற்று.

முடியாட்சியை ஆதரிக்கும் தீவிரவாதிகள் அதிகாரபீடம் ஏறு தற்கு ஏற்ற காலநேரம் இன்னும் ஏற்படவில்லை. எனவே, பாலனம் இரிசிலுவிடம் ஒப்படைக்கப்பட்டது. பத்திரிகைத் தணிக்கை மீண்டும் புகுத்தப்பட்டது. தேர்வுச் சட்டம் புதிதாக நிறைவேறியது. இச்சட்டப்படி மறைக்குடவோலை முறை கைவிடப் பட்டது. வாக்குரிமை குறுகிய அடிப்படையில் வழங்கப்பட் டது ; நிலச் சொந்தக்காரருக்கு இரட்டை வாக்குச் சீட்டுக் கிடைத்தது. தேர்தலின் விளைவாக முடியாட்சிவாதிகள் பெரும் பான்மை பெற்றனர். இதனால் இரிசிலு பதவியிலிருந்து விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இப்பெரும்பான்மையின்

[1] Lady Blennerhassett, "The Doctrinaires" in Camb. Mod. Hist. x. 59.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனுக வில்லல் அதிகாரபீடத்தில் ஏறினன். இவன் முடி யாட்சித் தீவிரவாதிகளின் தலைவனுவான். 1821–1827 வரை இவன் பதவியில் இருந்தான். எனவே, தன்னுடைய திட் டத்தை நிறைவேற்ற இவனுக்கு வாய்ப்புக் கிடைத்தது. இவ னது பிற்போக்குவாதத் திட்டத்தின் முக்கியமான அம்சங்களை முன்னரே விரித்துக் கூறியுள்ளோம். வில்லலின் பூட்கை கலப் பிலாப் பிற்போக்குக் கொள்கையாகும். எனினும், இவன் கையாண்ட முறைகள் மிகவும் நுட்பமானவை ; தந்திரமானவை. 1816 ஆம் ஆண்டு தன்னுடைய கட்சியை அழித்த கொள் கைகளிலும் பார்க்கத் தந்திரமான கொள்கை முறைகளை இவன் கையாண்டான். தன்னுடைய பாரதூரமான திட்டங்களை வெளி ப்படையாகக் காட்டி நாட்டைப் பீதியுறச் செய்ய இவன் விரும் பவில்லை. தன் வழிப்பட்டோரின் முரட்டுத்தனமான பொறு மைக் குறைவை இவன் மட்டுப்படுத்தினன். இவன் வழிப் பட்டோர் புதிதாகக் கற்றதும் ஒன்றுமில்லை ; மறந்ததும் ஒன்றுமில்லை. புரட்சிக்குப் பின்னர் பிரான்சில் ஏற்பட்ட மாறு தல்கள் யாவற்றையும் புறக்கணிப்பது இப்பொழுதும் சாத்தி யம் என இவர்கள் நம்பினர். வில்லல் நிதான புத்தியுள்ள நிருவாகி. திறமையான அரசியல்வாதி. படுதோல்வி கிடை க்கும் எனச் செயலில் இறங்கு முன்னரே வெட்டவெளிச்சமாகத் தெரிந்த ஒரு வேலையை அவன் செய்ய முயன்றான் என்பதை நம்பவே முடியாமலிருக்கின்றது. பிரான்சிய மக்களின் உளப் போக்கைப் பிழையாக மட்டிட்டிருந்தானே என்னவோ தெரியவில்லை. எதுவந்தாலும் இந்த அரசியற் பரிசோதனை செய்யத்தக்கது என எண்ணினன். அவனுடைய தந்திரத் திறமை அவனது சூழ்ச்சிக்குப் பெரிதும் வெற்றியீட்டியது என் பதை ஒப்புக்கொள்ள வேண்டும். புரட்சி சாதித்தவைகளை அழிப்பதற்கு வில்லல் இரண்டு பலமான சத்திகளிலே தங்கியி ருந்தான். அவையாவன திருச்சபையும் பொருள் ஆர்வமும். திருச்சபையின் உதவியுடன் சமயக்கல்வியை அரசியற் பிரசாரக் கருவியாக உபயோகிக்கத் திட்டம் கோலினன். அதனால் புரட்சி யின் நினைவுகள் வேரோடு தகர்த்தெறியப்படுமென்பது அவனது எண்ணம். பழைய ஆட்சிமுறைக்குப் புத்துயிர் கொடுப்பதற் குச் சமாதானம் கூறும் வகையில் சமூக ஒழுக்க அடிப்படை களைத் திருச்சபை மூலம் மக்கள் உளத்தில் படிய வைக்கலாம் எனவும் வில்லல் நம்பினன். பொருள் ஆர்வத்தின் மூலம் நாட்டினர் கருத்தைத் தனது கொள்கைகளுக்கு இணக்க மாக்கும் நோக்கத்தோடு மக்களின் சத்திகளை அரசியலிலிருந்து பொருள்தேடும் வழிக்குத் திருப்பிவிடலாம் என்பதும் இவனது நம்பிக்கையாகும். பிற்போக்குவாதக்காரர்களைப் பொறுத்த

1820 வில்லல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1821-27

அளவில் இத்திட்டம் நன்கு அமைந்தது. அவர்கள் நிலையை நன்கு கிரகித்துக்கொண்டுள்ளனர் என்பதையும் காட்டியது. இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவழியில் கருமமாற்றுவ தையே தனது வழிகாட்டித் தத்துவமாக வில்லல் வைத்துக் கொண்டான். நன்கு ஆராயாமல் விரைந்து செய்கின்ற நட வடிக்கைகளுக்கு அவன் இடம் கொடுக்கவில்லை. வில்லல் நிதா னமாகவும் கவனமாகவும் செயலாற்றத் தொடங்கினான். தனது திட்டங்களைப் படிப்படியாகவே அவன் உருவாக்கத் தொடங் கினான். வில்லலின் பாலன காலத்தில் பிரான்சிய மக்களின் சுதந்திரத்தை எதிர்நோக்கி நின்ற ஆபத்து மிகப் பெரியது ; எனெனில், 1815 ஆம் ஆண்டை எதிர்நோக்கிய ஆபத்துக் களிலும் பார்க்க வில்லலின் காலத்தில் எற்பட்ட ஆபத்துக்கள் மிகப் பொல்லாதவை. தங்களைச் சுற்றி வளைத்துத் திறமை யுடன் இடப்பட்ட சூழ்ச்சி வலையிலிருந்து கடைசி நேரத்திலேயே பிரான்சிய மக்கள் தம்மைத் தாமே தப்பவைத்தனர். வில்லலின் தோல்விக்குக் காரணம் அவனது பகைவரின் மதி யூகமன்று. அவனுடைய கட்சியில் ஏற்பட்ட பிளவே அவன் தோல்விக்குக் காரணமாயிற்று. வெற்றி கைக்கு முற்றுக எட்டி விட்டது போலத் தோன்றிய வேளையில் வில்லலை ஆதரித்த வர்களின் மடமையாலேயே அவனுடைய கட்சி அழிவுற்றது.

முடியாட்சி வாதிகள் இழந்த தனியுரிமைகளை மெதுவாக எவருக்கும் வெளிப்படையாகத் தோன்றுத வழியிலே பற்றிக் கொள்வதே வில்லலுடைய அமைச்சின் பூட்கை என்பதை முன்னரே கூறியுள்ளோம். இப்பூட்கைக்கேற்பப் பிற்போக்கு வாதம் படிப்படியாகப் புகுந்தது. 1822 ஆம் ஆண்டில் பத்தி ரிகைத் தணிக்கை பலப்படுத்தப்பட்டது. பத்திரிகைத் தணிக்கைச் சட்டத்தை மீறுபவர்கள்மீது தொடரப்படும் வழக்கு விளக்கம் நடுவர்களின் பொறுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. இந்த நட வடிக்கை மக்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட முடி யாதவாறு செய்தது. கிறித்துவ திருச்சபைக்கு மாறுகவும் உயர்குடியினருக்கு எதிராகவும் வரும் வெளியீடுகளைக் கட்டுப் படுத்தும் அதிகாரத்தை இச்சட்டம் அரசாங்கத்துக்கு வழங்கியது. புரட்சி பற்றிய எண்ணங்களைத் தொடர்ந்து நிலைநிறுத்தக்கூடிய வகையில் வெளிவரும் எழுத்து எதையும் கட்டுப்படுத்த இச் சட்டம் அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கியது. அதே நேரத்தில் நிலச் சொந்தக்காரரையும் செல்வர்களான உற்பத்தியாளரையும் திருத்திப்படுத்தும்பொருட்டு இறக்குமதிப் பொருள்கள்மீது அதிக இறைமுறை விதிக்கப்பட்டது. கல்வித்துறைக்கு வழி

பிற்போக்குக் கட்டங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும் பொறுப்பு கிறித்துவத் திருச்சபைக்குக் கொடுக்கப்பட்டது. 1821-27
முடியாட்சியை ஆதரிக்கும் கட்சிக்கு அதிகாரம் கிடைத்தது வெறியன் ஒருவனின் முன்யோசனையற்ற செயலாலென்பது முன்னர் கூறப்பட்டுள்ளது. அந்த அதிகாரத்தை வில்லல் தன்னுடைய புத்திக்கூர்மையான நிதி பாலனத்திலும் பொருளாதார பாலனத்திலும் பலப்படுத்திக்கொண்டிருக்கும் வேளையில், தங்களுடைய நிலையை மற்றெவரும் தாக்கி வெல்லக் கூடாத முறையில் ஆக்குவதற்கு மேலும் எதோ தேவையென்பதைச் சற்றேபிறியன் வற்புறுத்திக் கூறினன். நெப்போலியன் காலத்திருந்த பேரரசின் புகழை மீண்டும் பெற முயல்வதும் பிரான்சின் மங்கிப்போன வாளுக்கு ஒளி கொடுக்கக் கூடிய வகையில் மாறெங்கோ, ஒசிற்றலிசு, யெனு ஆகிய களங்களில் ஏற்பட்டவை போன்ற வெற்றிகளை ஈட்டுவதும் அவசியமாயின. உண்ணாட்டில் ஏற்படும் அரசியல் அதிருத்தியை நீக்குவதற்கு வெளிநாடுகளில் படைகள் மூலம் வெற்றியீட்டுவதே சரியான முறையென்பதை நெப்போலியன்தானும் உணர்ந்திருந்தான். தன்னுடைய சருவாதிகாரத்தன்மை நிறைந்த உண்ணாட்டு ஆட்சியிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்பி விடுதலே நெப்போலியனுடைய போர்களின் நோக்கங்களுளொன்றாகும். புரட்சியின் பயனாக ஏற்பட்ட அரசியற் செல்வங்களான சமத்துவத்தையும் அரசியல் உரிமையையும் இழந்த பிரான்சிய மக்களுக்கு ஐரோப்பாக் கண்டத்தில் முதன்மை பெற்றுக் கொடுத்தல் மூலம் நட்ட ஈடு கொடுக்கப்பட வேண்டும். பேரரசுக்காகச் சுதந்திரத்தைப் பலிசெய்வதில் பழைய உரோமைப் போலப் புதிய பிரான்சும் திருத்திப்படும் என்னும் கருத்தைச் சற்றேபிறியன் கொண்டிருந்தான். இந்த உறுதியான நோக்கத்துடன் வில்லலே வற்புறுத்தி 1823 ஆம் ஆண்டு பிரான்சியப் படையொன்றைப் பிரினீசு மலையைக் கடந்து இசுப்பெயின் மன்னனுக்கு உதவுமாறு அனுப்பிவைத்தான். இசுப்பெயினில் உள்ள மக்கள் இசுப்பெயின் அரசனுக்கு எதிராக வெளியாகக் கலகஞ் செய்தனர். இக்கலகத்தில் மன்னனுக்கு உதவி அளிப்பதற்காகவே பிரான்சு தனது படையை அனுப்பிற்று. பிரான்சு செய்த இத் தீரச்செயல் அதன் முடியாட்சிக்குப் பெரும் செல்வாக்கைப் பெற்றுக் கொடுத்தது. இதனால் ஏற்பட்ட ஆர்வத்தில், பர்ந்த தாராண்மையை முறியடிப்பதற்காகவும் தனக்குத் தனி முதன்மை தேடுவதற்காகவுமே பிரான்சு போரிடுகின்றது என்பதை எவரும் கவனிக்கவில்லை.

சற்றேபிறியன் புதுப்புகழ் ஈட்டுவதாக இப்பொழுது கனவு காணத் தொடங்கினன். அவனுடைய எண்ணங்கள் இரைன் வில்லலின் தோல்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1821-27 பிரதேசத்தை நோக்கித் திரும்பின. இத்தருணத்தில் வில்லல் பின்வாங்கினன். இசுப்பெயின்மீது[1] தொடர்ந்த போருக்கும் மிகுந்த தயக்கத்தோடுதான் அவன் உடன்பட்டான். அதனல் ஏற்பட்ட வெற்றியை மக்கள் விரும்பக்கூடிய வகையில் வில்லல் பயன்படுத்திக்கொண்டானுயினும் புகழ்பெற்ற எழுத்தாளனுகிய சற்றேபிறியனின் கற்பனையிலே உதித்த அவா நிறைந்த திட்டங் களில் இறங்குவதற்கு அவன் மறுத்துவிட்டான். ஆங்கிலேய முதலமைச்சர் உவால்போலைப் போலவே இவனும் நிதான மான செயல்களாலும் திறமான நிதி முறைமையினுலுமே பிரான்சை ஆளுகின்ற வமிசத்தைத் தொடர்ந்து நிலைக்கச் செய்யலாமென நம்பினன். போரையும் வெளிநாட்டு முயற்சி களையும் வில்லல் அறவே வெறுத்தான். அவனுடைய பூட்கை போரை விரும்பும் கட்சியினது பூட்கை போன்ற ஆரவார முடையதன்று. ஆயினும் நிலைத்து நிற்கும் தன்மைகள அதிகமாகவுடையது. சற்றேபிறியன் நம்பிக்கை நிறைந்த குணமுள்ளவன். அரசியலில் புதிதாக எதையும் நடைமுறைக் குக் கொண்டுவரும்போது ஏற்படும் தடைகள அதிகம் பொருட் படுத்தாத இவன் மந்திரத்திலிருந்து அகற்றப்பட்டான். இவன அகற்றிய பின் எவ்வித ஆடம்பரமுமில்லாமல் அரசாங்கம் தன்னுடைய சமூக அரசியற் பிற்போக்கு நடவடிக்கையைத் தொடர்ந்து நடத்தியது. மேற்சபையிலுள்ள தாராள கட்சியின் பலத்தைக் குறைத்துச் சட்ட ஆக்கத்தில் தன்னுடைய பிடியைப் பலப்பிப்பதற்காக வில்லல் மேற்சபையில் இருபத்தேழு புதிய பெருமகாரை நியமித்தான். ஏழு ஆண்டுச் சட்டமொன்றை அமைத்துப் பாராளுமன்றம் ஏழு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நடக்கவேண்டுமெனவும் சட்டம் ஆக்குவித்தான். இதுவரையும் மக்கட் பிரதிநிதிகள் சபையில் ஒவ்வோர் ஆண்டும் ஐம்பது பிரதிநிதிகள் இளைப்பாறினர். தாராண்மை தன்னுடைய நலத் துக்காக உருவாக்கிய பாராளுமன்ற ஆட்சிமுறை இவ்விதம் அதற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமே பிரான்சு நாட்டினர் தங்க ளுடைய கழுத்திலே அரசியல் அடிமைச் சங்கிலியைக் கட்டுப வராயினர். சுதந்திரத்தின் தந்தையெனச் சொல்லக்கூடிய சட்டங் கள் பிற்போக்குக் கருவிகளாக மாற்றப்பட்டன. வில்லலின் பாராளுமன்றப் பலத்தின் பெரும்பான்மை தற்காலிகமாக அவனைப் பலப்படுத்திப் பாதுகாத்தது. 1824 இல் பத்தாம் சார்ள்சு மன்னன் அரசெய்தியதாலும் அவனுடைய நிலை

[1] கனிங்கு எழுதியவை : "இசுப்பெயின்மீது படையெடுத்தது அவனுடைய (சற்றேபிறியனின்) வேலை ; வில்லலுடையதன்று"— **A. G. Stapleton, George Canning and his Times (1859), 533.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலத்தது. இப்பொழுது இத்தகைய வாய்ப்புக்களால் முடி 1821-27
யாட்சித் தீவிரவாதிகளின் திட்டத்திலுள்ள நடவடிக்கைகளை யெல்லாம் வில்லல் நடைமுறைக்குக் கொண்டுவரத்தக்கதா யிருந்தது. நாட்டிற் புரட்சி பரவியபோது நாட்டை விட்டோடி அஞ்ஞாதவாசம் செய்து பிரான்சின் பகைவருடன் சேர்ந்து தாய்நாட்டுக் கெதிராகப் பொருதப் பிரபுக்களுக்கு நட்ட ஈடு வழங்குவதே இத்திட்டத்தில் முக்கியமானது. பிரான்சுப் புரட்சி நிலைத்தமைக்கு முக்கிய காரணம் அப்புரட்சியினால் ஏற்பட்ட பொருளாதார மாற்றம்—அதாவது, பெரிய நிலச் சொந்தக்கார ரிடமிருந்து காணிநிலங்களை ஏராளமான உழவர்களுக்கு மாற் றியதேயாகும். முப்பது ஆண்டு இடைக்காலத்துக்குப் பின்னர் இப்புதிய உடைமைக்காரர்களிடமிருந்த காணியைத் திருப்பிப் பெறுவது சிறிதும் இயலாத அலுவல். 1790 இல் நடைபெற்ற ஆள்புல உடன்படிக்கையைக் குழப்பாமல் அதேசமயம் நாட்டை விட்டோடிய பிரபுக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் பொருட்டுப் புதிய வழியொன்று பின்பற்றப்பட்டது. நாட்டிற் குரிய கடனின் வட்டி விகிதம் ஐந்திலிருந்து நாலாகக் குறைக் கப்பட்டது (1825). இந்தச் சிக்கனத்தினால் கிடைத்த பணத் தைக்கொண்டு தங்கள் உடைமைகள் பறிமுதல் செய்யப்பெற்ற பழைய விழுமியோருக்கு அரசாங்கம் தெறுபொருள் கொடுக்கக் கூடியதாக விருந்தது. மத நிலையங்களை நிறுவுதல் பிரான்சினுள் இயேசுதரைப் புகவிடுதல் ஆகியவற்றிற்குரிய நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. பலிபீடமும் அரசுகட்டிலும் இங்ஙனம் வெளிப்படையாக ஒன்றுபட்டிருத்தலும், குருமார் களின் கட்சி தன்னைத்தானே வலியுறுத்தப் பலவித உரிமை கொண்டாடுதலும் நாட்டினருக்கு அச்சத்தை உண்டாக்கியது. தாராண்மையின் கோட்டையாகிய பெருமகார் சபை முழு மூச் சாகத் தனது எதிர்ப்பைக் காட்டத் தொடங்கிற்று. தந்தை இறந்தபின் மூத்த மைந்தனுக்கே உரிமை சேரவேண்டுமெனச் சட்டத்தை மாற்றும் கோரிக்கையில் பழைய பிரபுக்களின் நிலை மையை மீண்டும் அபிவிருத்தி செய்யும் நோக்கம் காணப்பட்டது. இந்த யோசனை தோற்கடிக்கப்பட்டது. எல்லா வெளியீடுகளும் இனி அரசகட்டளையுடன் அச்சிடப்படவேண்டுமென்னும் கோரிக் கைக்கும் அதே கதியே நேர்ந்தது. அமைச்சுக்கு ஏற்பட்ட தோல்வி உவகையுடன் வரவேற்கப்பட்டது. மன்னன் நாட்டிற் குரிய பாதுகாவற் படையின் அணிவகுப்பைப் பார்வையிட்ட போது படையின் சாதாரணப் போர் வீரர் "அமைச்சர்கள் வீழ்க" எனப் பெருங்குரல் எழுப்பினர். "யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்பது போன்று எதிர்காலத்தை இக்குரல் உணர்த்தியது. ஆனால், அமைச்சு இச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1827-29 செயலின் கருத்தை உணராததுபோல வேண்டுமென்றே கண்ணை மூடிக்கொண்டிருந்தது. தன் பூட்கை கண்ட தோல்வியினால் வில்லல் தயங்கினனல்லன். இதற்கு அவன் அளித்த மாற்று பின்வருவன: பொதுமக்களைக் கொண்ட போர்ப் பட்டாளத்தைக் குலைத்தான். பத்திரிகைத் தணிக்கையை மீண்டும் நிறுவினன். பெருமகார் சபையில் உள்ள தாராளப் போக்கு எதிர்ப்பை அடக்குவதன் பொருட்டு எழுபத்தாறு புதிய உறுப்பினரை நியமனஞ் செய்தான். இதுவரையும் வில்லல் தான் பின்பற்றிய நிதானமான பிற்போக்கிலிருந்து விலகியுள்ளான் என்பதே இந்த நடவடிக்கைகளின் சாரம். உண்மையில் இவைகள் பலவீனத்தையும் மங்குகின்ற செல்வாக்கையுமே உணர்த்தின. சற்றேபிறியனின் தலைமையில் இயங்கிய தீவிரவாதிகளின் எதிர்ப்பை வெல்லற்கு இவைகள் தவறிவிட்டன. வில்லல் செய்பவை எல்லாவற்றையும் பாரபட்சமானவையாகவே சற்றேபிறியன் கருதினன். தீவிரவாதிகள் யாவரும் சொந்த நலன் கருதியே நடந்துகொண்டனர். அவர்கள் வில்லலை வெறுத்தனர்; அல்லது தாம் பதவியிலிருந்து விலக்கிவைக்கப் பெற்றதையிட்டுச் சினங்கொண்டனர். ஆனால், தங்கள் எதிர்ப்பை முக்கியமாகக் கருத்தளவிலேயே வைத்துக்கொண்டனர். வில்லல் கரந்துசெய்த சூழ்ச்சியையும் சமாதானப் பூட்கையையும் எதிர்க்கட்சியினர் ஆவேசத்துடன் கண்டித்தனர். பிற்போக்கு இயக்கம் விரைந்து முன்னேறுமைக்கு இதுவே காரணமென இவர்கள் கருதினர். கடுமையான முறைகள் கையாளப்பட வேண்டுமென இவர்கள் கூக்குரல் செய்தனர். இவர்களுக்கு எற்பட்ட ஆத்திரம் தாராளக் கட்சியோடு சேருவதற்குக்கூட இவர்களைத் தூண்டியது. தன்னுடைய கட்சியில் எற்பட்ட அதிருத்திகளை நீக்க வில்லல் உறுதி கொண்டான். தனது கட்சியில் எற்பட்ட பிளவுகளால் உண்டான தொல்லை, சிறுபான்மையினரான தாராளக் கட்சியினரின் தொல்லையைவிட அதிகமாயிருந்தது. மேலும், இவர்களின் எதிர்ப்பு நாட்டு மக்களைக் கவரக்கூடியதாக இருந்தது. அமைச்சிற்குப் பாதகமான பெரும்பான்மையொன்று 1827 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பெற்றது. தன்னுடைய எதிரிகளின் கூட்டு எதிர்ப்பினால் வில்லல் பதவியை விட்டு விலகினன்.

மாத்தினுக்கு. வில்லலுக்குப்பின் பதவியேற்றவன் மாத்தினுக்காவான். தருணத்துக் கேற்ற சலுகைகளை வழங்கிப் பொதுமக்களைத் திருத்திப் படுத்த இவன் முயன்றான். செய்தித்தாள்களின் தணிக்கையை இவன் நீக்கினன். பொதுக் கல்வி புகட்டும் அதிகாரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுதரிடமிருந்து பறித்தான். எனினும், இவனுடைய இணக் 1827-29
கப்பூட்கை தாராள கட்சியிடமிருந்தோ, முடியாட்சித் தீவிர வாதிகளிடமிருந்தோ ஆதரவைப் பெறவில்லை. உண்மையில் அது தீவிரமான போக்குள்ளவர்களுக்கே உரிய காலம். மித வாதிகளுக்கு அப்போது இடமேயில்லை. இரு கட்சிகளையும் திருத்தி செய்ய முயன்ற இவன் ஈற்றில் எவரையும் திருத்திசெய்ய வில்லை. இருதோணியிற் கால் வைத்தவன்போல இவன் வீழ்ச்சி யடைந்தான். சருவசன வாக்குரிமை அடிப்படை மேலும் விரிவு செய்யப்படல் வேண்டுமெனத் தாராள கட்சியினர் வற்புறுத் திக் கேட்டனர். 1827 இல் நடந்த பொதுத் தேர்தலில் தங்க ளுடைய கொடிய எதிரிகளாகிய முடியாட்சித் தீவிரவாதிகளின் உதவியுடன் வலியிழந்த தங்கள் கட்சியை மீண்டும் வலிமை யுடையதாக்க முயன்றனர். அமைச்சர்களாக இருந்து தேர் தலில் போட்டியிடும் அபேட்சகர்களைத் தடுப்பதே முடியாட்சித் தீவிரவாதிகளின் தனியெண்ணமாக அப்பொழுது இருந்தது. இவர்களுக்குக் கிடைத்த உதவி தற்செயலாய்க் கிடைத்த ஒரு அதிட்டமாகும். பிறருடைய உதவி இல்லாமல் சுதந்திரமாக நிற்கக்கூடிய நிலையை அடையும் வரையும் இவர்களால் அரசிய லில் உறுதியான நிலையைப் பெற்று அதன் பலனை அனுப விக்க முடியவில்லை. தாராள கட்சியின் வேண்டுகோள்களில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்வதாயும் மாகாணச் சபைகளில் வாக்குரிமையை அதிகரிக்கச் செய்து பாலனத்தில் தேசமக்க ளுக்கு ஏற்பட்ட ஆசைகளைப் பூர்த்தி செய்வதாயும் மாத்தி லுக்கு பகர்ந்தான். பிரதிநிதிகள் சபையில் இருபக்கத்திலிருந்த தீவிரவாதிகளும் இவனுடைய முன்மொழிவை ஏற்க மறுத் தனர். இவனுடைய முன்மொழிவு மிக முற்போக்குடையதாக ஒரு கட்சிக்குத் தோன்றியது. மற்றக் கட்சிக்கு அது போதிய அளவு முற்போக்குடையதாகத் தோன்றவில்லை. ஆகவே, ஆக்க பூர்வமான திட்டம் எதிலும் ஒற்றுமை காண முடியாமலிருந்த இரு கட்சிகளும் மீண்டும் ஒன்று சேர்ந்து அமைச்சைக் கவிழ்த் தன (1829).

நிலை இப்பொழுது மிகவும் நெருக்கடியாயிற்று. பதின்மூன்று சாள்சு X.
வருடங்களுக்கு முன்னர் பதினெட்டாம் லூயியை எதிர்நோக் கிய இக்கட்டான நிலையே தன்னை எதிர்நோக்கி நிற்பதாகப் பத்தாம் சாள்சு உணர்ந்தான்- அதாவது, புதுமுறையை விரும் பும் மக்களின் கோரிக்கையையும் பழைமையை விரும்பும் மக்களின் கோரிக்கையையும் பூர்த்தி செய்வதே. யாப்புறு இறையின் நிலையை அவன் ஏற்றுக்கொண்டு புரட்சியின் தத்து வங்களை நிராகரிக்கும் தன்னுடைய ஆதரவாளர்களின் கபட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1829 மான முயற்சியிலிருந்து தன்னுடைய தொடர்பை முற்றுக நீக்கி விடலாம்; அல்லது முடியாட்சித் தீவிரவாதிகளுடன் தன் முழுப் பலத்தையும் சேர்த்துத் தன்னைக் கட்டுப்படுத்தும் பட்ட யத்தினின்றும் தன்னை விடுவிக்க எத்தனிக்கலாம். புரட்சிக்குப் பின்பு முடியாட்சி மீண்டும் ஏற்பட்ட காலம் தொடங்கிப் பிரான்சி லுள்ள அரசியற் கட்சிகளின் வாதாட்டத்துக்கு இடமாயிருந்த பிரச்சினைகள் கடைசியாகத் தெளிவுற வரையறுக்கப்பட்டன. ஒரு புறத்தில் உயர்குடியோர் உரிமை கொண்டாடலும் சமய குருக்குழுவின் ஆதிக்கமும் இருந்தன. மறுபுறத்தில் சமத்துவ மும் உலகியலும் இருந்தன. தான் எதைத் தெரிந்தெடுக்க வேண்டுமென முடிவு செய்வதில் மன்னன் நீண்ட காலம் தயங்கவில்லை. எப்பொழுதும் அவன் பிற்போக்குக் கட்சியின் உறுதுணையாகவே இருந்தான். ஆனால், இதே கட்சி இவனுக்கு முன்னிருந்தவனும் காலத்துக்கேற்றபடி நடக்கும் மதித்திறமை யுள்ளவனுமாகிய மன்னனுக்கு உபத்திரவத்தைக் கொடுக்கும் கட்சியாக இருந்தது. 1821 இல் கொந்தேதி ஆத்துவா, பதி னெட்டாம் உலூயியை வற்புறுத்தி வில்லலே அமைச்சனுக ஏற்றுக் கொள்ளச் சொன்னபோது உலூயி கூறியவை பின் வருமாறு: "எதைத்தான் நீங்கள் எதிர்பார்க்கலாம்? அவன் பதினொரும் உலூயிக்கு எதிராகச் சதி செய்தான். எனக்கு எதிராகச் சதி செய்தான். முடிவில் தனக்கு எதிராகவும் சதி செய்வான்." மக்கள் நயக்கும் உரிமைக் கொள்கைக்கு எதி ராகப் பத்தாம் சார்ளு இப்போது தெய்விகவுரிமையால் மன்ன ராளும் கோட்பாட்டைக் கடைப்பிடித்தான். முற்போக்குக்குப் பதிலாகப் பிற்போக்கை ஆதரித்தான். புரட்சிச் சாதனத்துக்கு எதிராகப் பதினொன்காம் உலூயியின் தனிச்சிறப்புரிமையை ஆத ரித்தான். மாத்திரைக்கிடம் பேசும்பொழுது, "இந்த மனிதர் களுடன் நடந்துகொள்ள எந்தவிதமான வழியுமில்லையென நான் சொல்லியுள்ளேன். 'நிறுத்து', எனக் கட்டளை பிறப் பிக்க நேரமாகிவிட்டது" என்றான். நிதானமான அறிவுரை களுக்குரிய காலம் மலையேறிவிட்டது. பழைய அரசியல் முறையை விரும்பும் ஒருதலைச்சார்பான பொலிக்குழுக்கு என்பவனைப் பாலனத்திற்கு மன்னன் அழைத்தான். இச்செயலைச் செய்த போதே நாடு முழுவதற்கும் ஓர் அறைகூவலை விடுத்தான். இதனால் ஏற்பட்ட பங்கம் சீர்ப்படுத்தப்பட முடியாததாயிற்று. படகிலிருந்து இறங்கிக் கரையை அடைந்தவன் திரும்பக் கடலுக்குப் போவதில்லை என்ற உறுதியுடன் படகை எரித்தாற் போன்று மன்னன் ஒருபோதும் பின்வாங்கமாட்டான் என்னும் உண்மையை அவனுடைய செயல் உலகிற்குப் பிரசித்தஞ் செய் தது. அமைச்சுப் பொறுப்புப் பற்றிய உறுதிப்பாடுகள் முடிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு சோதனை காலம் என்னும் உண்மையை மறைக்க 1829
முடியவில்லை. இரண்டாம் சேமிசுக்கு நிகழ்ந்த கதியையே குறிப்பாக மக்கள் பேசிக்கொண்டனர். வெலிந்தன் பேசுமிடத்து "அரசியலில் அனுபவமென்று சொல்லக்கூடியது ஒன்று மில்லை. பத்தாம் சார்ளசு மன்னனுக்கு முன்னரே இரண்டாம் சேமிசுக்கு நடந்தது எச்சரிக்கையாக இருக்கின்றது. இருந்தும் குருமார்களால் குருமார்கள் மூலம் குருமார்களுக்கென ஓர் அரசாங்கத்தைச் சார்ளசு நிறுவினன்" எனக் குறிப்பிட்டார்.

சமுதாயத்தைச் சீர்திருத்தியமைத்தல், அரச விடயங்களில் பூபோன் முடியாட்சி கவிழ்க்கப்படல்
குருவாயத்துக்குரிய இடத்தை மீண்டும் வழங்குதல், பலமான உயர் குடியாட்சி யொன்றை நிறுவுதல், அந்த ஆட்சிக்குச் சிறப்பான உரிமைகள் பலவற்றை வழங்குதல் ஆகியவையே தன்னுடைய உறுதியான தீர்மானங்களெனப் பொலிக்குனுக்கு அறிவித்தான். இந்தத் தீர்மானங்கள் விவரிப்பதற்கு எளிய வையேயன்றிச் செயற்படுத்துவதற்கு எளியவையல்ல. அலு வல்களை நடத்துவதில் உளவுறுதியின்றி ஊசலாடும் இயல்பே அமைச்சனிடம் காணப்பட்டது. "அவன் முடிவொன்றைச் செய்துவிட்டான். ஆனால், தான் செய்த முடிவு என்ன என் பதே அவனுக்குத் தெரியாது" என நகைக்சுவையுடன் கூறப் பட்டது. பிரான்சிய நாட்டினர் கண்களைப் புகழ், பேரரசு ஆகிய தோற்றங்களினால் மறைப்பதற்காகப் பிறநாட்டு மீக்கொளலில் பழையபடி அவன் கைவைத்தான். அல்சியேசுக்கு ஒரு படை அனுப்பப்பட்டது. அதனைக் கைப்பற்றுவதுடன் வட ஆபிரிக் காவில் பிரான்சின் ஆதிக்கத்துக்கு அத்திவாரம் இடப்பட்டது. இந்தப் பூட்கை பயனை அளித்திருக்கக்கூடும். படைகளை அனுப்பி வெளிநாடுகளோடு விறுவிறுப்பாகப் போர் தொடுப் பதனால் உண்ணாட்டில் இருக்கின்ற தொல்லைகளை எதிர்த்து நின்று சமாளிக்கக் கூடிய வகையில் நிருவாகத்துக்குக் கைப் பலன் கூடுமென்பதற்கு வரலாற்றிலே பல சான்றுகள் உள. ஆனால், காற்று வரு முன்னரேயே தூற்றக் கூடாதென்பது முக்கி யமானது. செயலாற்றுவதற்குப் பிழையான தருணத்தைத் தேர்ந்தெடுத்தலாகிய, அழிவுக்குக் காரணமான தவற்றைச் சார்ளசு செய்தான். பாராளுமன்றுக்குரிய பெரும்பான்மையின் ஆதரவில்லாத ஓர் அமைச்சு அதிகாரத்திலிருப்பதை எதிர்த்து மக்கள் சபையின் தாராள கட்சிப் பிரதியாளர் முடிக்கு ஒரு மனுவைச் செய்தார்கள். இந்த எதிர்ப்பு முடியாட்சிக்கு விளைவித்த அவமரியாதையென மன்னன் பொருள் கொண்டு மக்கட் பிரதிநிதிகள் சபையைக் குலைத்தான் (1830). இதைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுத் தேர்தலில் அரசாங் கக் கட்சி ஐம்பதுக்கு மேற்பட்ட தொகுதிகளில் தோல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1830 கண்டது. பிரதிநிதிகள் சபையில் அது மிகச் சிறிய சிறுபான்மைக் கட்சியாகவே இருந்தது. இத்தருணத்திலேதான் ஆட்சிப் புரட்டொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பட்டயத்தில் மன்னனுக்கு அதிகாரம் வழங்கும் சட்டப்பகுதியொன்று இருந்தது. அது பின்வருமாறு: "சட்டங்களைச் செயலாற்றுவதற்கும் அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கும் பிரமாணங்களும் கட்டளைச் சட்டங்களும் ஆக்குதற்கு அரசனுக்கு உரிமையுண்டு." இந்தச் சட்டப்பகுதியைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு யூலை 25 ஆம் நாள் மூன்று கட்டளைச் சட்டங்களைச் சாள்சு பிறப்பித்தான். அவையாவன: (1) அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களைச் செல்லுபடியாகாவெனத் தள்ளிவைத்து விட்டுப் புதிய சபையொன்றை ஏற்படுத்துதல், (2) வாக்குரிமையைக் குறைத்தல், (3) பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடுதல். அடுத்த நாள் பத்திரிகைத் தொழிலாளர்களின் தூண்டுதலினாலே பாரிசு நகரத்தில் கலகம் விளைந்தது. வீதிகளைத் தடுத்துத் தடையரண்களும் கட்டப்பட்டன. எழுச்சிக்குச் சைகை செய்தவர்கள் பத்திரிகை எழுத்தாளர்கள். ஆயினும் இந்த இயக்கத்துக்குத் திட்டம் கோலியவர்கள் குடியரசுவாதிகள். பாரிசு நகரிலே வாழும் மக்களிடையே இரகசியக் கழகங்களை நிறுவிப் புரட்சிக்கு ஆயத்தஞ் செய்தவர்கள் இவர்களே. இந்தச் செயல் அமைச்சைத் திகைக்கச் செய்துவிட்டது. தலைநகரின் எழுச்சியை அடக்க அமைச்சால் இயலாமற் போயிற்று. புகழ்பெற்ற புரட்சித் தலைவர் இலாபெயிற்றின் தலைமையில் தற்காலிக அரசாங்கமொன்று ஓட்டல் தி வில் என்னுமிடத்தில் நிறுவப்பெற்றது. தான் பிறப்பித்த கட்டளைச் சட்டங்களைத் தள்ளிவிடுதற்கு மன்னன் இப்பொழுது முயற்சி செய்தான். ஆனால், காலம் தாழ்ந்துவிட்டது. தனது பேரப்பிள்ளையின் சார்பில் தன் முடியைத் துறப்பதன்மூலம் இவன் தன்னுடைய வமிசத்தைப் பாதுகாக்க முயன்றான். இம்முயற்சியும் பலிக்கவில்லை. இதன்பின்னர் இவன் தன் நாட்டை விட்டுச் சென்றான்.

1830 ஆம் ஆண்டுப் புரட்சியின் முக்கியத்துவம்

1830 ஆம் ஆண்டுப் புரட்சி பிரான்சின் வரலாற்றில் பெரும் முக்கியத்துவமுடைய ஒரு நிகழ்ச்சியாகும். ஆழ்ந்து நோக்காமல் மேலாக நோக்குமிடத்து இப்புரட்சி பல மாற்றங்களைத் தன்னுள்ளடக்கியதென்பது புலனாகாது. இந்த எழுச்சியைத் திட்டமிட்டுச் செய்து முடித்தவர்கள் குடியரசுவாதிகளாக இருந்த போதிலும் அவர்கள் எந்த இலக்கிற்காகப் பிரான்சின் வீதிகளிற் சண்டை செய்தனரோ அந்த இலக்குக்களை அடைவதற்குத் தமக்குத் தடையேற்பட்டதை அவர்கள் கண்டனர். பழைய பூபோன் வமிசத்தை ஒதுக்கிவிட்டு அஃதிருந்த இடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலியன்சு வமிசம் நிறுவப்பெற்றது. வமிசம் மாறியிருந்த 1830
போதும் முடியாட்சி கவிழ்க்கப்படவில்லை. அப்போதைய அர
சியல்வாதிகள் சூழ்ச்சித் திறனுடன் செயலாற்றியமைதான்
முடியாட்சி காப்பாற்றப்பட்டமைக்குக் காரணம். ஓட்டல் தி வில்
லில் நிறுவப்பெற்ற தற்காலிக அரசாங்கம் குடியரசுவாதிகளைக்
கொண்டது. பூபோன் வமிசத்தை எதிர்ப்பது மட்டுமன்றி 1815 இல்
தங்கள் நாட்டினத்துக்கு அவமரியாதை உண்டுபண்ணிய ஐரோப்
பிய வல்லரசுகளையும் எதிர்ப்பதே இந்தப் புரட்சியென அவர்
களுக்குத் தோன்றியது. பூபோன் வமிசம் ஈற்றில் வீழ்ச்சி
யடைவதற்கு எதுவாயிருந்த சந்தர்ப்பங்களே அந்த வமிசத்
திற்குப் பதிலாக ஒரு குடியரசை நிறுவ இயலாத நிலையை
உண்டுபண்ணிச் சிக்கலாக்கின. 1830 இல் பிரான்சியக் குடியரசு
ஒன்றை நிறுவினால் அஃது ஐரோப்பா முழுவதற்குமே ஓர்
அறைகூவலாகக் கருதப்படும். 1789 இல் நடந்தவைகளின்
நினைவு நட்பாளரின் மனதைவிட்டுச் சிறிதுகூட இன்னும் அகல
வில்லை. அதனால் அவர்கள் ஐரோப்பாவைப் பயமுறுத்துகின்ற
இந்த ஆபத்தை அணுகவிடாது தடுக்க உடன் நடவடிக்கை
களை எடுத்திருப்பர். ஆகவே குடியரசுவாதிகள் தங்கள்
எண்ணத்தை நிறைவேற்ற முடியாத நிலையிலிருந்தனர். குடி
யரசுவாதிகள் முடியாட்சி முறையைத் தாங்கள் எதிர்ப்பதைப்
பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தபோதும் மேலே குறிப்பிட்ட
காரணங்களால் நாட்டிலே போதிய ஆதரவைத் தேடிக்கொள்ள
அவர்களால் முடியாதிருந்தது. பிரான்சின் எதிர்காலத்தை
உருவாக்கும் அதிகாரம் தமக்குரியதெனத் தாராள கட்சியி
னர் வீம்புரிமை கொண்டாடக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இவர்
கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துக் குடியாட்சிவாதி
களுடன் ஓர் உடன்படிக்கைக்குத் திட்டமிட்டனர். இதற்கு
ஒரு மாறுவழி இல்லாதிருந்ததால் குடியாட்சிவாதிகளும்
இதற்கு உடன்பட்டனர். ஓலியன்சுக் கோமகனை உலாயி
பிலிப்பு என்பானுக்கு முடி வழங்கப்பட்டது. இவனும் பூபோன்
குலத்தவனே. ஆனால், இவன் செமாப்பெசில் புரட்சிவாதிகளு
டன் சேர்ந்து போர்புரிந்திருந்தான். இவனுக்கு முடிவழங்கப்
பட்டமை குடியாட்சிக் கொள்கைக்கு ஆதரவளித்தது. அன்
றியும் புதிய மன்னனும் குடியாட்சிவாதிகளின் விருப்பு
வெறுப்புக்களை வெளிப்படையாகவே மதித்து நடந்தமையும்
குடியாட்சிக் கொள்கைக்கு ஒரு கௌரவத்தை அளித்தது. அதே
நேரத்தில் இந்தச் செயல் ஐரோப்பிய வல்லரசுகளின் பீதி
யைத் தணிப்பதற்கும் உதவியது. மேலும், 1830 இல் நடந்த
எழுச்சி முடியாட்சியை அழிக்கத் தவறியது மட்டுமல்லாமல்
அரசியற் சட்டங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1830 தவும் தவறியது. மக்கள் நயக்கும் இறைமையை ஆதரித்துப் பேசுகின்ற அரசியல்வாதிகளின் வாய்ச் சொல்லுக்கு வெறும் உபசாரத்திற்குக்கூட மதிப்புக் கொடுக்கப்படவில்லை. பட்டயத்தின் பதினான்காம் சட்டப் பிரிவுப்படி விதிவிலக்கான அவசரத் தேவைக்குக் கட்டளைச்சட்டம் ஆக்க மன்னனுக்கு அதிகாரம் வழங்கும் உரிமை பறிமுதல் செய்யப்பட்டது. சட்டங்களை ஆக்கத் தொடங்கும் உரிமை பிரதிநிதிகள் சபையினிடம் பொறுப்பிக்கப் பட்டது. நன்கு தாபிக்கப்பட்ட நிலையில் இருந்த கத்தோலிக்க மதம் தொடர்ந்து அந்த நிலையில் இருக்கவிடாமல் நிறுத்தப் பட்டது. பத்திரிகைக் கட்டுப்பாடுகள் முற்றுக நீக்கப்பெற்றன. மொத்தமாகவுள்ள இருபத்தெட்டுக்கோடி மக்களில் 1,00,000 பேரே தேர்வாளர்களாக இருந்தனர். இவ்வாறு சனத்தொகையில் ஒரு சிறு பகுதிக்கு மாத்திரம் வாக்குரிமை இருப்பதை நீக்கி வாக்காளர் தொகையை அதிகரிக்கச் செய்ய வேண்டியதே முக்கியமான தேவை. இதற்குப் போதிய அளவு ஆதரவு கிடைக்கவில்லை. இதன் விளைவாக, மக்களின் முயற்சியினால் எற்பட்ட அரசாங்கத்திலே அம்மக்களுக்கு எவ்வித பங்கும் இல்லாது போயிற்று.

மக்களின் தைவிக உரிமை.

எஃதெங்ஙன மிருந்தபோதிலும், இந்தப் புரட்சி, மக்களால் பெரிதும் விரும்பப்படும் இயல்புகளையுடையதென மிகைப்படக் கூறலைத் தவிர்க்கலாம். ஆயினும் புரட்சியின் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கூறுவது பொருத்தமாகாது. இப்புரட்சி நேர்முகமான பயன்களை விளைவிக்காவிடினும் எதிர்மறைமுகத்தால் முதன்மை பெற்றுள்ளது. 1688 இல் நடந்த ஆங்கிலப் புரட்சியையே இது ஒத்திருந்தது. 1688 இலும் 1830 இலும் குடியாட்சி முறையில் உண்மையான முன்னேற்றமெதுவும் செய்யப்படவில்லை. எனெனில், அரசியல் மாற்றங்களைப் பின்பற்றிப் பாராளுமன்றச் சீர்திருத்தங்களும் பொருளாதாரச் சீர்திருத்தங்களும் எற்படவில்லை. இவை இல்லாவிடில் குடியாட்சி யென்பது வெறும் பொய்க் கதையாகவே இருக்கும். ஆனால், இங்கிலாந்திலும் பிரான்சிலும் புரட்சி நடந்த காலம் தொட்டு மன்னரின் தைவிகவுரிமைக்குப் பதிலாக நாட்டின் தைவிக வுரிமை இடம் பெற்றது. மூன்றுவது உவிலியத்தைப் போலவே உலூயி பிலிப்பும் மக்களின் விருப்பத்திற்கு இணங்கவே ஆண்டான் என்பதற்கு ஐயமில்லை. மன்னனுக்கும் மக்களுக்கும் எற்படுகின்ற போராட்டத்தில் மக்களின் எண்ணமே கண்டிப்பாக வெல்லும். "மன்னன் எங்களுரிமைகளுக்கு மதிப்புக் கொடுப்பான்; எனெனில் எங்களாலேயே அவன் இந்த நிலையிலிருக்கிறன்". வீயன்னு மாநாட்டில் நிறுவப்பெற்ற தத்துவத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சு அடியோடு நிராகரித்துவிட்டது. அதாவது, மன்ன 1830
ராட்சி முறைமையாக உள்ளதென்பதையே பிரான்சு நிராகரித்தது. பூபோன் குலத்தினரின் பாலனத்திலில் பிரான்சு அடைந்த பெரும் நன்மைகள் யாவற்றையும் பத்தாம் சார்ளின் மிதமிஞ்சிய போக்கு முற்றுக மறைத்துவிட்டது. இந்த நன்மைகளைத் தெக்காசு பின்வருமாறு குறிப்பிட்டான்: "யாப்புடைய ஆட்சியை நிறுவல்; (பிரான்சைப் பிடித்து வைத்திருந்த அன்னியப் படைகளிடமிருந்து) ஆள்புலங்களை விடுதலை செய்தல்; பெரும் புத்தியீனமான நூறு நாட் போரினால் பிரான்சின் மீது சுமத்தப்பெற்ற மாபெரும் கடனைத் தீர்த்தல்; அமைதியையும் பாதுகாப்பையும் மீண்டும் நிறுவுதல்." பூபோன் வமிசத்தின் வீழ்ச்சி முடியாட்சித் தீவிரவாதத் திட்டம் அடியோடு நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாயிற்று. குருத்துவத்தாரும் உயர் குடியினரும் அடங்கிய தன்னலக் கும்பல்கள் பெற்ற அரசியல் உரிமைகள் யாவும் இப்பொழுது அழிக்கப்பெற்றன. சுருங்கக் கூறின், 1789 ஆம் ஆண்டுப் புரட்சியை 1880 ஆம் ஆண்டுப் புரட்சி பூரணப்படுத்தியது. எதிர்காலத்தைப் பொறுத்தவரையில் புரட்சிப் போக்குச் சாதித்த சமத்துவம், உலகியல் யாப்புறுசுதந்திரம் ஆகியன உறுதியான இடம் பெற்றுவிட்டன. குறித்த பட்டயம் மன்னனின் பலவீனம் காரணமாக ஏற்பட்டதும் விரும்பிய நேரம் மாற்றத்தக்கதுமான ஒரு அரச சலுகையாக இருக்கவில்லை. இந்தப் பட்டயம் நாட்டின் மறுக்க முடியாத பிறப்புரிமையாகி விட்டது.

ஓலியன்சு வமிசம் பதினெட்டாண்டுகளாகப் பிரான்சை ஆண்டது. பிரான்சிய அரசியல் நிறுவனங்கள் அபிவிருத்தியடைவதற்கும் பிரதிநிதிகளின் ஆட்சிமுறை இயங்குதற்கும் இந்தக் காலம் முக்கியத்துவம் வாய்ந்தது. பாராளுமன்ற வாதங்களிலே அதிட்டம் நேரத்துக்கு நேரம் கட்சிக்குக் கட்சி மாறிக்கொண்டிருந்தபோதும் இப்போது வாதத்துக்கு இடமாயிருந்த பிரச்சினைகள் பூபோன் வமிசத்தினரின் ஆட்சிக் காலத்தில் நாட்டைச் சின்னபின்னப் படுத்துவதற்குக் காரணமாயிருந்த பிரச்சினைகளிலும் முற்றும் வேறுனவை. புரட்சியின் பயனாக ஏற்பட்ட அரசியல் அமைப்பிற்கும் சமுதாய அமைப்பிற்கும், வில்லல் அல்லது பொலிக்குனுக்கு போன்ற திறமையாளர்களினால் இப்போது ஆபத்து ஏற்படவில்லை. பிரதிநிதிகள் சபையிலுள்ள பல்வேறு கட்சியினர் கொள்கைகளுக்காகப் போராடாமல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே போராடினர். இந்தப் போராட்டத்தில் பழைமை பேண் கட்சிக்குக் கீசோவும் தாராள கட்சிக்குத் தியேசும் தலைவராயிருந்தனர். இருவரும் பூலை முடியாட்சியை ஓலியன்சு முடியாட்சி (1830–48).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1830. ஏற்றுக்கொண்டனர். அப்போதுள்ள அரசியல் முறைமையைப் பாதுகாப்பதற்கு இருவரும் வாக்குறுதி செய்துள்ளார்கள். ஒரு பக்கத்தில், சந்ததி சந்ததியாக வரும் முடியாட்சியை ஏற்கும் கட்சியினரின் தாக்குதலிலிருந்தும், மறுபக்கத்தில் குடியரசை ஆதரிக்கும் கட்சியின் தாக்குதலிலிருந்தும் யூலை முடியாட்சியைப் பாதுகாக்கக் கீசோவும் தியேசும் உறுதியளித்தனர். அவர்களுடைய நோக்கங்களைச் சரியாக வரையறை செய்வது எளிதன்று. எனெனில், இருவரும் பாராளுமன்றத்தில் ஏற்படும் அவசர நிலைமைகளுக்கு ஏற்றவாறு தங்கள் கொள்கைகளை மாற்றி அடிப்படைக் கருத்துக்களில் வேறுபடுபவர்களோடுகூட ஒத்துழைக்க வேண்டியதாகவும் இருந்தது. கீசோ குருத்துவ தனி நலங்கொண்ட சார்பினருக்கு ஆதரவு காட்ட வலிந்து முற்பட்டான். தியேசு பருமாற்றவாதக் கட்சியினருடன் கொள்கைகளில் விட்டுக்கொடுத்து நட்புக்கொண்டான். தங்களுடைய பொதுப் பகைவருடன் போலிநட்புக் கொள்வதனால் தங்களுடைய நிலைக்கு மாத்திரமன்றி முடியாட்சி முறைக்குமே அழிவு தேடுகிறார்கள் என்பதை இருவரும் உணரவில்லை. இவர்களுடைய பிறநாட்டுப் பூட்கையிலும் இதே மாதிரியாக உறுதியின்மையும் நேரத்துக்குத் தக நடக்கும் இயல்பும் குறிப்பாகக் காணப்பட்டன. கீசோவின் சூழியல் இங்கிலாந்தோடு செய்து கொண்ட கேண்மை உடன்பாட்டில் தங்கியிருந்தது. இந்த நட்புறவு மேற்கு ஐரோப்பாவிலுள்ள தாராளமான போக்குடைய வல்லரசுகள் இரண்டும் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பிற்போக்கு வல்லரசுகள் மூன்றிற்கு எதிராகச் செய்த ஒன்றுகும். இருந்த போதிலும் இசுப்பெயின் தீபகற்பத்தில் பிரான்சியச் செல்வாக்கை அதிகரிக்கச் செய்வதற்காக 1846 இல் இந்த நட்புறவைக் கீசோ வேண்டுமென்றே துண்டித்தான். வெளி நாட்டுப் பூட்கையில் கடும் எதிர்ப்பை விரும்பிய தியேசு இந்தக் கேண்மை உடன்பாட்டை எதிர்த்தான். அவன் பிரான்சியப் பேரரசின் மரபுகளுக்குப் புத்துயிரளித்த போதிலும் மக்களிடம் தன் செல்வாக்கை வளர்ப்பதிலும் அரசியலில் தன் எதிரிகளைப் பதவியிலிருந்து நீக்குவதிலும் கருத்துக் கொண்டிருப்பவனாகவே மிகுதியும் காணப்பட்டான். உலூயி பிலிப்பு ஈற்றில் வீழ்ச்சியடைந்ததற்குக் காரணம் கட்சிப் பிணக்குக்கள் அல்ல. அவனுடைய வீழ்ச்சிக்குரிய காரணங்களை அவனது பிறநாட்டுப் பூட்கையிலும் படிப்படியாக எற்பட்ட குடியாட்சி எழுச்சியிலுமே காணலாம். பாராளுமன்றக் கட்சித் தலைவர்களான தியேசுவுக்கும் கீசோவுக்கும், 1848 இல் நடந்த புரட்சி எதிர்பாராத ஒன்றுகவிருந்தது. அவர்கள் தங்களைப் பிரித்து வைத்திருந்த கருத்து வேற்றுமைகளிலே கவனத்தைச் செலுத்தியபடியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலின் அப்போதைய உண்மையான நிலையை அறியத் தவறிவிட்டார்கள். அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சியும் தம்மை அழிப்பதற்குப் பாராளுமன்றத்துக்கு வெளியே அமைதியாக உருவாகிக் கொண்டிருந்த சத்திகளை உணரவில்லை எனக் கொண்டாலன்றி இந்தப் புரட்சி இலகுவாக வெற்றிபெற்றதை விளக்கல் இயலாது. பிரான்சிய வரலாற்றில் நாம் இப்போது ஆராய்கின்ற கால அம்சங்களின் உட்கருத்தை நன்கு கிரகிப் பதற்கு இந்தச் சத்திகளைப்பற்றி ஓரளவுக்கு விரித்துக் கூறல் இன்றியமையாததாகும். 1830

உலாயி பிலிப்பின் செல்வாக்குக் குறைந்ததற்கு, பிரான்சிய மக்களின் விருப்பு வெறுப்பை உணர்ந்து அவைகளுக்கு இட மளித்துப் பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழியலை உரு வாக்க அவன் மறுத்தமையே அடிப்படைக் காரணமாகும். 1815 ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கை மக்களின் மனதில் அவர்களை எளனப்படுத்தும் நினைவுகளையே பதித்திருந்தது. எனவே, மக களின் நாட்டினப் பெருமையை மீண்டும் நிலைநாட்டும்பொருட்டு ஒலியன்சு வமிசத்தினர் வெளிநாடுகளில் மேற்கொள்ளும் செயல் களின் ஆற்றலிலேயே அவ்வமிசத்தினரின் பலம் இறுதியில் தங்கியிருந்தது. பிரான்சிய மக்கள் புகழுக்காகக் கொண்ட வேணவாவைத் திருத்தி செய்வதற்கு இரு சந்தர்ப்பங்களில் வாய்ப்புக் கிடைத்தது. நாட்டினர்களுடைய எண்ணங்கள் திருத் திப்படுவதற்குத் தடையாக மன்னன் இவ்விரு சந்தர்ப்பங் களிலும் குறுக்கே நின்றது மன்னிக்க முடியாத ஒரு குற்ற மாகும். முதலாவது வாய்ப்பு மன்னன் அரசெய்தியபோது கிட்டியது. 1789 ஐப் போல 1830 இலும் மீண்டு [1]848 இலும் அாசியற் கொந்தளிப்புக்குப் பாரிசு நகரமே மத்திய நிலைக்கள மாக இருந்தது. பிரான்சுத் தலைநகரில் ஏற்பட்ட புரட்சியின் அதிர்ச்சி ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஒவ்வோர் அரசுகட்டி லையும் ஆட்டி அசைத்தது. எனவே, பூபோன் வமிசத்தின் வீழ்ச்சி மற்ற நாடுகளில் நீண்டகாலமாக வளர்ந்துகொண் டிருந்த இயக்கங்கள் வலுவடைவதற்கு அறிகுறியாக இருந் தது. ஒல்லாந்தின் ஆட்சியிலிருந்த பெல்சியம் தன் சுதந்தி ரத்தைப் பிரகடனஞ் செய்தது. இரசியாவுக்கு எதிராகப் போல ந்து கலகம் விளைத்தது. சேர்மனியிலும் இத்தாலியிலும் கூட, நாட்டின உணர்ச்சித் துடிப்பு ஓரளவு காணப்பட்டது.[1] பிரான்சு நடந்துகொள்ளும் விதத்திலேயே இந்த இயக்கங் களின் கதி தங்கியுள்ளதுபோலத் தெரிந்தது. அமைதியாக இருப்பதா அன்றேல் அதிருத்தியினால் ஏற்பட்ட புரட்சிச் சத்தி

உலாயி செல்வாக்கை இழந்ததற்குக் காரணம்.

I, II, V, VII ஆகிய அத்தியாயங்களைப் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1830 கள் எல்லாவற்றிற்கும் வழிகாட்டுவதா என்று முடிவுசெய்ய வேண்டிய நிலை அரசனுக்கு ஏற்பட்டது. ஒலியன்சு வமிசத்தின் கதி யாதாகுமோ எனக் கூறமுடியாத நிலையினதாயிருந்தது. உலூயி பிலிப்பின் புத்தி சாதுரியமான பூட்கை அவனுடைய வமிசத்தைப் பதினெட்டு ஆண்டுகளுக்குப் பாதுகாத்திருக்கக் கூடும்; இருந்தபோதும் மக்களுக்கும் மன்னனுக்குமிடையில் சீர்செய்ய முடியாத ஒரு பிளவை அது உண்டாக்கியது. நாளடைவில் இந்தப்பிளவு அகன்று கொண்டே போயிற்று.

வெளிநாட்டுப் பூட்கை : (1) 1830.

துன்புறுத்தப்பட்ட நாட்டினங்களின் சார்பில் பிரான்சு மன்னன் தலையிடவேண்டுமெனப் பிரான்சிய மக்கள் கோரி நின்றனர். 1815 இல் ஏற்பட்ட உடன்படிக்கையை மக்கள் வெறுத்தனர். இந்த உடன்படிக்கை அவர்களின் நாட்டினப் பெருமைக்கு இழுக்கு ஏற்படுத்தியது. நெப்போலியன் நிறுவிய பேரரசு பற்றிய கிளர்ச்சியூட்டும் நினைவு பிரான்சிய மக்கள் மனதில் இன்னும் படிந்திருந்தது. மேலும், சிலகாலமாகக் கட்டுப்பாட்டுள் அமைந்திருந்த பாரிசுப் பொதுமக்கள் கூட்டத்தின் அரசியல் உணர்ச்சி திடீரென மீண்டும் கட்டுக்கடங்காமற் பெருகத் தொடங்கியது. மக்களுடைய தணிக்க முடியாத உளவுணர்ச்சி ஒரு வமிசத்தை அழித்துச் சென்றதுமல்லாமல், ஒரு தலைமுறை காலத்துக்கு முன் உலக மடங்களும் புரட்சியென்னும் கனலைக் கிளறிவிட முயன்ற பழைய இயக்கத்தையும் மீண்டும் தூண்டிவிட்டது. முன்னர் பகன்றதையே வரலாறு மீண்டும் பகர்கின்றது. முதலாவது புரட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட மன்ற ஆட்சிக் காலத்தைப் போலவே பிரான்சும் குடியரசுப் பிரசாரக் கனலைக் கக்கிக் கொண்டு ஏனைய நாடுகளிலுள்ள முடியாட்சி முறைமைக்கு அறைகூவலொன்றை விடுத்து மக்கள் எல்லோரும் வல்லாட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யவேண்டுமெனக் கூற ஆயத்தமாயிருந்தது. உலூயி பிலிப்பு மக்களின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாது சுதந்திரமாக விட்டிருந்தால் என்ன விளைவு ஏற்பட்டிருக்கும் என ஆழ்ந்து ஆராய்ச்சி செய்வதினாற் பயனெதுவும் ஏற்படாது. இப்படி மக்களுணர்ச்சியைச் சுதந்திரமாகச் செல்லவிட்டிருந்தால் அதனுடைய பலன் பெரும்பாலும் பேராபத்தை விளைத்துவிடும்; ஏனெனில், கிழக்கு ஐரோப்பிய வல்லரசுகளான இரசியாவும் பிரசியாவும் ஒசுற்றியாவும் உடனே பிரான்சுக்கு எதிராக ஒருங்கு திரண்டுவிடும். நெப்போலியன் காலத்தில் ஏற்பட்ட பெரும் போர்களினால் பிரான்சிய மக்கள் களைத்துப் போயிருந்தனர். மேலும், தங்கள் தாய்நாட்டின் மீது படையெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்களை விரட்டுதற்கான தூண்டுதல் அவர்களுக்கு 1793 இல் இருந்தது. அப்படியான தூண்டுதல் அவர்களுக்கு இப் போது இல்லை. எனவே, பலனளிக்கக்கூடிய வகையில் பிற நாட்டுப் படையெடுப்பை இவர்கள் எதிர்ப்பார்களென்பதும் நிகழ முடியாத ஒன்றாகும். எது எங்ஙனமிருந்தபோதிலும், ஐரோப் பிய வல்லரசுகளுக்குள் தன்னைக் கொண்டு போய்ச் சிக்கவைக்க வும் இப்படிச் சிக்கவைப்பதனால் பிரான்சின் உண்ணாட்டு அலு வல்களில் தலையிடுவதற்குப் பிற்போக்கு வல்லரசுகளுக்கு ஒரு தலைக்கீடு கொடுக்கவும் மன்னன் சிறிதும் இடங்கொடுக்கவில்லை. போரை எப்படியாயினும் தவிர்ப்பதற்கே அவன் உறுதிகொண் டிருந்தான். போர் ஏற்பட இடங் கொடுப்பதைக் குறிக்குமிடத்து, "பூட்டிவைத்த புலியைப் பூட்டுடைத்து விடுதல்" என அவன் கூறினான். பிரான்சு மக்களின் அனுதாபம் இருந்தபோதும் போலந்திலும் இத்தாலியிலும் ஏற்பட்ட புரட்சியெழுச்சிகளை அவன் ஆதரிக்கவில்லை. தன்னுடைய மகனுக்குப் பெல்சிய நாட்டு முடி வழங்கப்பட்டபோது அதனை ஏற்கவும் மறுத்து விட்டான். அவனுடைய சூழியல் நுட்பமானது. ஏனெனில், ஐரோப்பிய வல்லரசுகளையும் யூலை முடியாட்சியையும் இச்சூழி யல் இணைக்கிற்று. அத்துடன் ஐரோப்பிய போர் மூள்கின்ற ஆபத்தையும் இது தவிர்த்தது. ஆனால், இச் சூழியல் பிரான் சிய மக்கள் கவனத்தை ஈர்க்கவில்லை. தாங்கள் பட்ட ஏமாற் றத்தை மறந்து மக்கள் ஒருபோதும் மன்னனை மன்னிக்க வில்லை. 1840.

1840 இல் ஓலியன்சு முடியாட்சிக்கு இரண்டாம் முறையாகச் சருவதேச நிலைமை ஒரு வாய்ப்பை அளித்தது. இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி, ஓலியன்சு முடியாட்சி தனது சமாதானப் பூட் கையைக் கைவிட்டு நாட்டினரின் கோரிக்கைகளைத் தயக்கமின்றி ஆதரித்திருக்கலாம். எகித்து ஆட்சியாளன் மெகமெற்று ஆலியின் போர்ச்சாதனை பிரான்சிய மக்களிடம் மட்டில்லா உற்சாகத்தைக் கிளப்பியது. இவன் நெப்போலியனுக்கு நிகராவான் என்னும் எண்ணத்திலேலே பிரான்சிய மக்கள் உந்தப் பெற்றனர். சில கணப்பொழுதுகளாக மன்னனின் மனம் ஊசலாடியது. மக்களின் கூக்குரலை நிறுத்து வதற்காக அமைச்சின் முதல்வராகத் தியேசை நியமித்தான். மெகமெற்று ஆலியினை ஆதரிப்பதாகத் தியேசு சூள் உரைத் துள்ளான். இதுபற்றிக் கூறும்போது, "மெகமெற்று ஆலியின் அலுவல் பெருத்த தாயகப்பற்றுடைய அலு வல்; நாட்டிற்குரிய கௌரவம் பற்றிய பிரச்சினை இது" எனத் தியேசு கூறியுள்ளான். ஆனால், உலாயி பிலிப்பு பிற (2) 1840.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1830-48

நாட்டுப் பூட்கையில் தனக்கிருந்த அதிகாரத்தை ஒருபோதும் தளர்த்தவில்லை. தியேசின் போர் முயற்சிகளிலும் ஐரோப்பியப் போர் மூளும் என்பதைப் பிலிப்பு உணர்ந்திருந்தான். ஏனெனில், துருக்கி ஆள்புலத்தில் கொண்டுள்ள ஆசையைக் கைவிடும்படி ஐரோப்பிய வல்லரசுகள் எகித்து ஆட்சியாளருக்குக் கூறியுள்ளன. சிலமாதங்கள் சென்றதும் பொதுமக்களின் ஆர்வம் தணிய, தியேசு பதவியிலிருந்து விலக்கப்பட்டான். அதிகாரபீடத்திற்குக் கீசோ அழைக்கப்பட்டான். இவன் புரட்சி வரையும் அதிகாரத்திலிருந்தான். இவனுடைய சூழியல் நேரியதாயிராதமையால் பிரான்சிய மக்களுக்கு அதனையிட்டுத் திருத்திப்படவோ, பெருமை கொள்ளவோ சிறிதும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இந்தச் சூழ்நிலையை பிரான்சு சலித்துவிட்டது என்ற கருத்துமிக்க ஒரு சொற்றொடரிலே இலமாட்டின் அடக்கஞ் சுருக்கமாகத் தொகுத்துக் கூறினர். இந்தச் சலிப்பிலே புரட்சி பிறந்தது.

உண்ணாட்டுப் பூட்கை.

பிறநாட்டுப் பூட்கையில் உலூயி பிலிப்புத் தன்னந்தனியாகவே தன் குடிகளை எதிர்த்து நிற்கவேண்டியிருந்தது. புகழை விழைந்து நின்ற மக்கள்மீது அம் மக்களின் ஆதரவைப் பெறுத சமாதானக் கொள்கையைத் திணித்தான். அதே நேரத்தில் அவன் உண்ணாட்டு அலுவல்களை நடத்திய முறையும் பொது சன அபிப்பிராயத்தை இணக்கஞ் செய்யக்கூடிய முறையில் உருப்பெறவில்லை. மன்னனின் ஆட்சிக் காலத்திலேயே அவன் அறியாது முடியாட்சியின் அத்திவாரம் தகர்ந்தது. இறுதியாக அவன் அரசுகட்டிலிலிருந்து மிக இலகுவாகக் கவிழ்க்கப்பட்டபோது, அவனுடைய பகைவருக்குமே அச்செயல் அவ்வளவு இலகுவாயமைந்தமை விளங்காத விந்தையாக விருந்தது. உண்ணாட்டிலே அடக்குமுறையைக் கையாண்டதாலேற்பட்ட அமைதிக் குறைவைப் போக்குவதற்கு வெளிநாட்டுக் கொள்கையில் படைப் புகழ் இன்றியமையாதது என்பதைச் சற்றேபிறியனும் தியேசும் உணர்ந்திருந்தனர். ஆனால், பிரான்சிய நாட்டினரின் அரசியல் உரிமைகளைப் பறித்துவிட்டு அதற்கு நட்ட ஈடாக வேறு துறையில் ஒன்றுமே வழங்காதிருப்பது சாத்தியம் என உலூயி பிலிப்பும் அவனின் அமைச்சன் கீசோவும் எண்ணினர். தன்னுடைய ஆட்சி முறைமையை விரித்துக் கூறும்போது பின்வருவனவற்றைக் கீசோ கூறினன் : " உண்ணாட்டில் புரட்சி இயக்கத்தை எதிர்த்து நிற்றல் வேண்டும். இப்போதுள்ள பொருத்தனைகளுக்கு மரியாதை பிறக்கக் கூடிய வழியில் நிதானமாக நடந்து கொண்டு பிற அரசுகளின் அலுவல்களிலே தலையிடுதலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்த்தலும் வேண்டும்." புரட்சி இயக்கத்தை அடக்குமுறை யினால் தடுத்து விடலாமெனக் கருதுவது பெருந் தவறு. பொதுமக்களின் ஆதரவில்லாமல் அடக்குமுறைப் பூட்கை பொதுவாகப் பலனளிக்காது என்பது தெளிவு. பெரும்பாலும் இந்த அடக்குமுறை, அதனைத் தொடக்கிவைத்தவர்கள்மீதே திரும்பிப் பாயும். பிரான்சில் அரசாங்கத்துக்கு அதன் பிற நாட்டுப் பூட்கையினால் பொதுமக்களின் அங்கீகாரம் கிட்டவில்லை. அடக்கு முறை மேலும் மக்களின் எதிர்ப்பைப் பலப்படுத்தி யது. எனவே, முடியாட்சி முறையை நிலைக்கவிடாது தடுத்துக் கொண்டிருக்கும் "புரட்சி இயக்கம்" என்னும் சொற்றொட ரிலே அடங்கிய முற்போக்குத் தன்மையை நாம் ஆராய்தல் வேண்டும். 1830–48.

மத்தியவகுப்பு முடியாட்சி.

உலூயி பிலிப்பின் அரசுகட்டிலுரிமைக்கு நடு வகுப்பினர் அடிப்படையாக இருந்தனர். அரசியல் அதிகாரம் முழுதையும் இவர்கள் தமது தனியுரிமையாக்கியிருந்தனர். இவர்களின் ஆதரவுடன் 1830 தொடக்கம் 1848 வரை இவன் பிரான்சை ஆண்டான். போராட்டத்தின் உக்கிரம் முழுதையும் தம்மே லேற்றுப் போராடிய பொதுமக்கள் கூட்டத்தினரிடமிருந்து இந்த மத்திய வகுப்பினர் வெற்றியின் பலனை அபகரித்துக்கொண்ட னர். சமுதாயத்தில் ஆளும் வகுப்பினராகத் தங்கள் வகுப்பைப் பலப்படுத்துவதற்காக யூலை முடியாட்சியை இவர்கள் நிறுவினர். இவர்கள் மாத்திரம் அரசியலுரிமைகளைப் பெற்று இன்புற்றனர்; எனெனில், ஆண்டுதோறும் வரியாக 200 பிராங்கு காசைக் கட்டுபவர்களுக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. ஒருவர் பாராளு மன்றத்தில் உறுப்பினராக இருப்பதற்கு ஆண்டுதோறும் 500 பிராங்கு காசு வரி கட்டுபவராக இருக்கவேண்டும். எனவே, பாராளுமன்ற அங்கத்தினர்களை மத்திய வகுப்பினர் மாத்திரம் தெரிவு செய்தல் கூடும். அதன் மூலம் மத்திய வகுப்பினர் தங்கள் விருப்பத்தை நாட்டின்மேல் திணிக்கவும் முடியும். செல்வம் தேடும் முயற்சியிலே ஈடுபட்டிருந்த இவர்கள் அரசாங்க உத்தியோகங்களிலே கவனத்தைச் செலுத்திப் பொருள்தேடும் ஆர்வத்திலே புலனைச் செலுத்தினர். இந்தச் சூழ்நிலையில் நாட்டினரின் பிரதிநிதிச்சபை என்று பாராளுமன்றத்தைக் குறிப்பிடுவது பொருந்தாது. பயனில்லாக் கட்சிப் பூசல்கள் மூலம் தன்னுடைய பலவீனத்தை இந்த அரசாங்கம் வெளியாகக் காட்டியது. இந்தப் பூசல்கள், அரசாங்கத்தின் விவாதம் எவ்வித பயனுமளிக்காது என்பதை அம்பலமாக்கின. உண்மையிலே பாராளுமன்ற ஆட்சிமுறை பெயரளவில் மட்டுமே அங்கிருந்தது. சமுதாயப் பொருளாதாரப் பிரச்சினைகள் முன்னணிக்கு விரைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1830-48. கொண்டு வரும்போது மக்களின் எளனத்துக்கு இடமாக இவ்வரசாங்கம் நடந்து வந்தது. பொருளாதாரப் பிரச்சினைகளே சமுதாயத்தைக் கட்டுப்பாடு செய்கின்ற காரணிகள் என்னும் உண்மை மக்கள் மனத்தில் உதயமாகியது. உண்மையான குடியாட்சி அரசியல் அத்திவாரத்தில் மட்டுமன்றிப் பொருளாதார அத்திவாரத்திலும் தங்கியிருக்கவேண்டுமென்பதை மக்கள் உணர்ந்தமை உண்மையில் புதியதொரு காலவவதி உயதமாவதற்கு அறிகுறியாகிற்று. உண்ணாட்டுப் பூட்கையிலும் வெளி நாட்டுப் பூட்கையிலும் மாற்றங்களுக்குத் தனது பலவீனம் காரணமாக எதிர்ப்புக் காட்டுகின்ற அரசாங்கம் கவிழ்ந்து விழுவதை மக்களுக்கு ஏற்பட்ட இவ்வுணர்ச்சி விரைவு படுத்தியது. தொழிலாளர் வகுப்பினரின் குறைகள் குடியரசுவாதிகளின் கவனத்தைக் கவர்ந்தன. இதற்கு முன்னர் குடியரசுவாதிகள் அகால கிளர்ச்சிகளிலும் புரட்சி மரபுகளிலும் ஈடுபட்டுத் தங்கள் சத்திகளைச் செலவு செய்தனர். புதியதோர் அரசியல் முறைமையைக் கொண்டுவரும் தோற்றுவாயாகச் சமூகச் சீர்திருத்தங்களிலும் பாராளுமன்றச் சீர்திருத்தங்களிலும் குடியரசுவாதிகள் இப்போது கவனஞ் செலுத்தினர். முரட்டுத்தனமான பலாத்காரச் செயல்களில் முன்னைநாளில் ஈடுபட்டதனால் நாட்டினர் தங்களைவிட்டுப் பிரிந்து போகின்றனர் என்னும் உண்மையைக் குடியரசுவாதிகள் சிறிது சிறிதாக உணரத் தொடங்கினர். இந்த உணர்ச்சி குடியரசுக் கட்சியில் நிகழ்ந்துகொண்டிருந்த மாற்றத்தை விரைவுபடுத்தியது. இக்காலத்திலேயே சமவுடைமைவாதம் தொடங்கியது. சமவுடைமைபற்றி பிறவுதொன் என்பார் கூறிய "பொருள் எல்லாம் களவு வழி வந்தவை" என்னும் முதுமொழியை அப்போது ஒருசிலரே ஒப்புக்கொண்டிருக்கலாம். ஆனால், "தொழில் செய்ய எங்களுக்கு உரிமையுண்டு" என்னும் உலூயி பிளாங்கின் தத்துவத்தைப் பலர் ஏற்றுக்கொண்டனர். 1834 ஆம் ஆண்டுத் தொடக்கத்திலேயே இலேயன் நகரில் உள்ள தொழிலாளர்கள் தங்களுடைய தொழிற் சங்க உரிமைகளைப் பாதுகாக்கக் கிளர்ந்தெழுந்தனர். எனெனில், கைத்தொழிற் சங்கங்களுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட சட்டம் தொழிற் சங்கங்கள் இயங்குதற்குத் தடையாயிருந்தது. சில ஆண்டுகளுக்குப் பின்னர் (1842) வாழ்ந்தவர் ஒருவர் குறிப்பிட்டவை பின்வருமாறு: "கலப்பில்லா அரசியற் கிளர்ச்சிக்குரிய காலம் மலையேறிவிட்டது. இனி வரவேண்டிய புரட்சி சமூகப் புரட்சியாக வல்லாமல் வேறெதுவுமாக இருக்கமாட்டாது." இங்ஙனம் பொதுமக்கள் அரசியல், சமுதாய நிலைகளில் அமைதியின்றிக் கொதித்தெழுந்தனர். அரசாங்கமோ, பிற்போக்குவாதம், புரட்சி ஆகியவற்றுள் எதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் இடங்கொடாமல், அவையிரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் இராச்சியத்தை நடத்துவதில் திருத்தியுற்றிருந்தது. எவ்வித மான ஆக்கத்திட்டமும் அரசாங்கத்திடமில்லை. கொதித்தெழுந்த மக்களுக்கு அரசாங்கமானது தகர்க்க முடியாத அரண்போலப் பட்டது. எந்தவிதமான அரசியற் சலுகையைக் கொடுத்தாலும் அது அரசாங்கத்தின் பலவீனத்தைக் குறிப்பதாகக் கொள்ளப் படும் என அமைச்சன் கீசோ கருதினான். குடியாட்சிக்குரிய சீர்திருத்தக் கோரிக்கையை நிறைவேற்ற அவன் விரும்பி யிருந்தாலும் அதனைச் செய்திருக்க முடியாது. முதலாண் மையினரிலே அவன் தங்கியிருந்தமையே இதற்குக் காரணம். எனவே, பிரான்சிய நாட்டினரின் கருத்திலே முடியாட்சி இயங்குதற்கு நியாயம் எதுவும் இருப்பதாகத் தோன்ற வில்லை. இந்த முடியாட்சியிலுல் ஐரோப்பிய கழகங்களிற் பிரான்சு ஒதுக்கப்பெற்றிருப்பதைத் தடைசெய்ய முடியவில்லை ; சூழியற்குரிய உறவிலே பிரான்சு தாழ்வுற்றிருப்பதைத்தானும் விலக்க முடியவில்லை. உண்ணாட்டுக் கொள்கையைப் பொறுத்த வரையில் நாட்டிலுள்ள முற்போக்குச் சத்திகளுடன் முடியாட்சி யானது சேராமல் ஒதுங்கி நின்றது ; அதுமட்டுமல்லாமல் பாராளு மன்றப் பெரும்பான்மையுடனேயே முடியாட்சி ஒன்றுபட்டு நின் றது. இந்தப் பாராளுமன்றப் பெரும்பான்மை பொய்த் தோற் றமேயன்றி உண்மையானதன்று. ஏனெனில், இப்பாராளு மன்றம் மக்களின் உண்மையான பிரதிநிதிகளைக் கொண்டதன்று. 1848.

திடீரென்று முடியாட்சி பிரமிக்கத் தக்க முறையில் கவிழ்க்கப் பெற்ற விதமே அதனிடத்திருந்த பலவீனத்தைக் காட்டியது. மன்னருக்குரிய அதிகாரங்களில்லாமல் வெறுமனே அரசனு யிருப்பதிலும், உண்மையான அதிகாரமில்லாமல் அதிகாரத் தைப் போலிருக்கும் வெறும் தோற்றத்தை அனுபவிப்பதிலும் உலுயி பிலிப்புத் திருத்தியடையவில்லை. பழைமைபேணும் கட்சித் தலைவர்கள் பத்தாம் சார்ளை அரசுகட்டிலிலிருந்து நீக்கியதற்குக் கைம்மாறுக உண்மையில் ஒரு சருவாதிகார ஆட்சியை முடியாட்சிக்கு மேலாக வலிந்து நிறுத்துவதைத் தன்னுடைய ஆட்சித் தொடக்கத்திலிருந்தே, அவன் எதிர்த்து நின்றான். தனது ஆட்சி பாராளுமன்ற ஆட்சியெனவும், அது அமைச்சுப் பொறுப்பில் நடைபெறுகிறதெனவும் வெளியிற் காட்டிக்கொண்டானேயன்றித் தன்னுடைய அதிகாரத்தை மக் களின் பிரதிநிதிகளுக்கு விட்டுக்கொடுக்கும் நோக்கம் அவ னுக்கு இருக்கவில்லை. அந்தக் காலத்தில் வாழ்ந்த ஒருவர் கூறியதுபோல " மன்ற இளவரசர்களான " இந்தப் பிரதி நிதிகள் நாட்டின் அலுவல்களை நடத்துவதற்குத் தங்களுக்கு

அரசனுயிருக் கலாம், ஆளமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848. வழக்கமான உரிமையுண்டெனக் கருதிக்கொண்டிருந்தார்கள். மன்னனுக்கும் அமைச்சருக்கும் எற்பட்ட கருத்துவேற்றுமைகள் பல சமயங்களில் வெளிப்படையாகப் பிளவை யுண்டாக்கின. 1837 இல் கீசோவை நீக்கிவிட்டு அவனுடைய இடத்திலே, கொள்கையில் சந்தர்ப்பவாதியான மோல் என்பவனை மன்னன் அமர்த்திக்கொண்டான். பாராளுமன்ற எதிர்ப்பிருந்த போதி லும் தன்னுடைய எண்ணத்திற்கு இணங்கி வசைந்து கொடுக் கும் கருவியாகவிருந்த மோலை இரண்டாண்டுகள் பதவியில் வைத்திருந்தான். பிறநாட்டுப் பூட்கையில் தான் வைத்திருந்த இறுக்கமான பிடியைத் தளர்த்துவதற்கு மன்னன் மறுத்தான். போர் ஆர்வங்கொண்டு நின்ற மக்களினுணர்ச்சியை இவனுடைய உறுதியான பிடியே கட்டுப்படுத்திவைத்தது. "பன்னிரண்டு பாராளுமன்றச் சபைகளை அழித்தாலும் போர் தொடுக்க மாட் டேன்" என்பதே இவனின் உறுதியான தீர்மானம். நெப்போ லியனின் மரபுகளாற் பெரிதும் கவரப்பெற்ற தியேசு தன்னை அதிகாரத்திலிருந்து நீக்கிவைத்ததையிட்டுத் துன்புற்றமையால் மன்னன் செலுத்துகின்ற சொந்தச் செல்வாக்கு அரசியல் யாப்பின் நடைமுறைக்கு மீறிய செயல் எனக் கண்டித்தான். தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மன்னன் தடை யாயிருந்தமையாலும் பாராளுமன்றச் சபையில் தான் அதிகம் முன்னேறுதபடியாலும் தியேசு குடியரசுக் கட்சியுடன் சேரவும் பாராளுமன்றத் தேர்தற் சீர்திருத்தம் வேண்டுமென்னும் கோரிக்கையை ஆதரிக்கவுந் தொடங்கினன். பொதுமதத்தைத் தூண்டிவிட்டு அரசாங்கத்தை நெருக்குவதற்காக நாடு முழு வதிலும் பல விருந்துகள் தொடர்ந்து நடாத்தப்பட்டன. அரிய ணைப் பேச்சின்போது சீர்திருத்தக்காரர்களின் அறியாமை யாலேற்பட்ட எதிர்ப்பு உணர்ச்சிகளைக் கீசோ இழித்துரைத்தான். தங்களுடைய பிரசாரத்திற் குற்றம் சுமத்துவதை எதிர்க்கு முகமாக ஆர்ப்பாட்டம் செய்வதற்குச் சீர்திருத்தவாதிகள் முடிவு செய்திருந்தனர். எனினும், இறுதி நேரத்தில் நெருக்கடியை மேலும் மோசமடையச் செய்வதற்கு அஞ்சி எதிர்க்கட்சித் தலை வர்கள் இந்த ஆர்ப்பாட்டப் பிரகடனத்தைத் தள்ளுபடி செய்த னர். இங்ஙனம் அவர்கள் செய்தது மிகவும் காலம் கடந்த செயலாகும். ஆர்ப்பாட்டத்துக்குக் குறிப்பிட்ட நாளாகிய 1848 பெப்புருவரி 22 ஆம் நாள் பாரிசுக் குடியாட்சியை விழைந்து நின்றவர்கள் வீதிகளிற் கும்பல் கும்பலாகக் குவிந்தனர். அமைதியையும் ஒழுங்கையும் நிலவச் செய்வதற்காக அழைக்கப் பட்ட நாட்டினக் காவற்படை ஆர்ப்பாட்டக்காரர் மீது வெளி வெளியாகத் தம் அனுதாபத்தைக் காண்பித்தது. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் மன்னன் தனக்கு உதவியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்குமென நம்பியிருந்த படையின் துணை அற்றுப்போகவே, 1848.
யூலை முடியாட்சியின் உட்பலமற்ற நிலை வெட்ட வெளிச்சமாகக் குடியரசுத் தலைவர்களுக்குத் தெரிந்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, செல்வாக்கற்ற அமைச்சனை எதிர்த்துத் தொடங்கிய ஆர்ப்பாட்டத்தை முடியாட்சிக்கு எதிராகச் செய்யும் புரட்சியாகக் குடியரசுத் தலைவர்கள் மாற்றிவிட்டனர். புரட்சி எழுச்சியாளர்களை இணக்கஞ் செய்வதற்காகக் கீசோவைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு மன்னன் உலூயி பிலிப்பு தியேசை அதிகாரத்துக்கு அழைத்த முயற்சி வீணுயிற்று. அதன்பின் மன்னன் உலூயி பிலிப்பு முடிதுறந்தான். இலமாத்தீனின் தலைமையில் ஒரு தற்காலிக அரசாங்கம் நிறுவப்பெற்றது. பிரான்சில் இரண்டாம் முறையாகக் குடியரசு நிறுவப்பட்டது.

1848 இல் நடந்த புரட்சியைப் பதினெரும் உலூயிக்கு எதிராக வும் பத்தாம் சார்ளசுக்கு எதிராகவும் மக்கள் செய்த புரட்சிகளுடன் ஒப்பிடுவது இங்கு பொருத்தமாகும். பொதுவாகக் கூறுமிடத்து முதலாவது புரட்சி தன்னெண்ணப்படி நடக்கும் முடியாட்சிக்கு எதிராகவும் இரண்டாவது புரட்சி உயர்குடிக்குரிய தனியுரிமைக்கு எதிராகவும் மூன்ருவது புரட்சி மத்திய வகுப்பரசியற் கெதிராகவும் விளைவிக்கப்பெற்றனவென்க. இதனையே வேறுவகையில் மொழியுமிடத்து, 1789 இல் சட்டத்தின்படி எல்லோரும் சமன் என்கின்ற தத்துவமும், 1830 இல் சமுதாயச் சமத்துவமும், 1848 இல் அரசியற் சமத்துவமும் நிறுவப்பெற்றன எனலாம். பிரான்சிய அரசாங்கத்தில் நடு வகுப்பினர் தலைதூக்கிநின்றதைச் சருவசன வாக்குரிமையென்னும் அம்சம் அழித்துவிட்டது. அரசியல் அதிகாரம் இப்பொழுது மக்களுக்குப் பரந்த அடிப்படையில் வழங்கப்பட்டது. பிற்போக்கு, புரட்சி ஆகிய கடும் நிலைகளுக்குச் செல்லாது, அவற்றுக்கு இடைப்பட்ட நடுநிலையிலும், உயர்குடியாட்சியின் மிகைப்பட்ட போக்கு, குடியாட்சியின் வரம்புமீறிச் செல்லும் போக்கு ஆகிய கடும் நிலைகளுக்கும் செல்லாது, அவற்றுக்கும் இடைப்பட்ட நடுநிலையிலும் இருப்பதாகச் சொல்லி, யூலை முடியாட்சி பெருமை கொண்டாடியது. ஆனல், யூலை முடியாட்சி தடுமாறுகின்ற நிலையில் சமநிலை வகுத்து நின்றமையால் அது எப்போது கவிழும் என்பதே தொடக்கத்திலிருந்து கேள்வியாயிருந்தது. பல பக்கங்களிலிருந்து வரும் தாக்குதலுக்கு இந்த முடியாட்சி இலக்கானது. நாட்டிலுள்ள சத்திகள் அனைத்தும் முடியாட்சியை அழிப்பதற்கு முனைந்து நின்றன. குறித்த முடியாட்சிக்கு ஆதாரமாக இருந்தது மத்திய வகுப்பென்பதை முன்னரே கண்டுள்ளோம். இந்த மத்திய வகுப்பின் அதிகாரம் சட்ட அடிப்படையில்—

1848 ஆம் ஆண்டுப் புரட்சியின் முக்கியத்துவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848. அதாவது சருவசன வாக்குரிமையில்—தங்கியிருந்தது. ஆனால் இம்மத்திய வகுப்பினர் ஒழுக்கத்துறையிலும் அறிவாற்றலிலும் சமுதாயத்தின் ஏனைய பகுதியினரிலும் மேம்பாடுடையராயிருக்க வில்லை. ஆளும் வகுப்பாக இருப்பதற்கு அவர்களிடம் வர லாற்றுத் தொடர்புள்ள உரிமைகள் இல்லை. இந்த உரிமைகள் அவர்களுக்கு இருந்திருந்தால் அவர்கள் செய்த போலியாட் சிக்குப் பிரான்சு இணங்கியிருக்கும். செல்வத்தையும் உலகப் பொருள்களிலுற் பெறும் அதிகாரத்தையும் உள்ளவர்களின் பிரதிநிதிகளாக இம்மத்திய வகுப்பினர் இருந்தபடியால் சமுதாயப் பொருளாதார ஒழுங்குகள் அநீதியின் அடிப்படையில் அமைந்தன எனக் கருதுபவர்களின் வெறுப்பை இவர்கள் தேடிக்கொண்டனர். இங்ஙனம் நடு வகுப்பினரின் ஆதரவு முடியாட்சி பலமடைவதற்குக் காரணமாகாது நாளடைவில் பல வீனமடைவதற்குக் காரணமாயிற்று. தன் ஆட்சியின் அடிப் படையை விரிவாக்காத பெரும் கேடுவிளைக்கும் பிழையை உலூயி பிலிப்பு இழைத்தான். இப்பிழை பாரதூரமானது. ஏனெனில், இவனுக்கு நடுவகுப்பினரிடமிருந்து கிடைத்த ஆதரவு அரை குறை ஆர்வத்தாலேற்பட்டதாயும் உறுதியற்றதாயும் இருந்தது. முடியாட்சியின் நிலைபேற்றிலேயே தங்கள் நலன் தங்கியிருந்த போதும் மத்திய வகுப்பினர் அக்கறையோ உற்சாகமோ சிறிதும் இல்லாதவராயிருந்தனர். அரசாங்கத்தின் பூட்கைக்குத் தயக்கத் துடனேயே அவர்கள் இணங்கினர். பாராளுமன்றத்தில் தங்கள் பிரதிநிதிகள் நிகழ்த்தும் பயனில்லாத விவாதங்களில் ஆர்வம் காட்டுவதை நிறுத்தினர். நிலைமை இவ்வாருகவே இந்த இடர் களைத் தீர்ப்பதற்குப் பிரான்சிய மக்களின் எண்ணங்களை வேறு வழிகளிலே திருப்புவதைவிட வேறெதையும் உலூயி செய் திருக்க முடியாது. ஆனால் அவன் இதனைச் செய்யத் தவறி விட்டான். ஐரோப்பாவில் அமைதியைப் பேணுதலே அவனின் அடிப்படையான பூட்கை. நாட்டிற்குரிய பெருமையைத் தியாகம் செய்யாமல் இக்கொள்கையில் இலக்கை அவன் அடைந்து விட்டான் என்னும் உண்மை அவனுடைய குடிகளின் உணர்ச் சியைக் கட்டுப்படுத்தவில்லை. நாடு அவனை முற்றுக வெறுத்தது. ஏனெனில், நாட்டின் பேரவாவை நிறைவேற்ற அவன் தவறிய மையால் நாட்டுக்கு ஏமாற்றமேற்பட்டது. கௌரவத்துடன் கூடிய சமாதான வாழ்வை அனுபவிப்பதற்குப் பிரான்சு மீண்டும் தீயின்மூலம் தூய்மையாக்கப்படவேண்டியது அவசியமாயிற்று.

"தொழில் புரியும் உரிமை."

1848 ஆம் ஆண்டுப் புரட்சி, குடியாட்சி அரசியல் வரலாற்றில் புதியதொரு காலவவதியை ஆக்கியது. ஏனெனில், வாக்குரிமை பொது மக்கள் எல்லோருக்கும் வழங்கப்பெற்றதும் அரசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாதிக்கம் மத்திய வகுப்பினரிடமிருந்து பொதுமக்களெல்லோ 1848.
ருக்கும் கைமாறியது. பொருளாதாரக் குடியாட்சி முறை வர
லாற்றிலும் இது புதியதொரு காலவவதியாகும். ஏனெனில்
இந்தக் காலவவதியிலே சமவுடைமையை நடைமுறைக்குக்
கொண்டுவருவதிற் பரிசோதனை நடைபெற்றது. பாரிசு நகரத்தி
லுள்ள மக்கட்கூட்டம் முடியாட்சியைக் கவிழ்த்தது, குடியரசை
நிறுவுவதற்காக மட்டுமன்று.

"ஆட்சி முறைபற்றி அறிவிலார் ஆய்கவினை
மாட்சியுறின் அம்முறையே மேல்."

"சமுதாயத்தின் நலனுக்கெதிராகப் பயன்படுத்தப்பட முடி
யாத அரசியலமைப்பு முறை எதுவுமில்லை" யென உலூயி
பிளாங்கு கூறினன். அவன் தொடர்ந்து கூறியதாவது: "பாடு
பட்டுத் தொழில்புரிபவனை அதன் பலாபலனை அனுபவிக்கச்
செய்தல்; வறுமை மிகுதி காரணத்தால் நிலை தளர்ந்து
போயிருப்பவர்களை மனித இயல்பின் கௌரவமான நிலைக்கு
மீண்டும் கொணர்தல்; கல்வி வசதி இல்லாக் காரணத்தால்
அறியாமை இருளில் உழன்று கொண்டிருப்பவர்களுக்குக்
கல்வி வசதி அளித்தல்; சுருங்கக் கூறின் இரட்டையடிமைத்
தன்மைகளாகிய அறியாமையையும் துன்பத்தையும் போக்க
முயற்சி செய்து மக்களுக்கு வாக்குரிமை கொடுத்தல்[1] ஆகிய
வையே எம்மிலட்சியங்களாகும். புரட்சியின் குறிக்கோளுரை
"தொழில் புரிய உரிமையுண்டு," என்பதே. 1789 ஆம்
ஆண்டுப் புரட்சிக்கு ரூசோ இயற்றிய 'சமூக ஒப்பந்தம்' எனும்
நூல் எங்ஙனம் வேதவாக்குப்போல இருந்ததோ அதேபோல
உலூயி பிளாங்கு இயற்றி 1839 இல் வெளியிட்ட நூல்
1848 புரட்சிக்கு வேதவாக்குப்போல இருந்தது. உண்மையில்
உலூயி பிளாங்கு ஏற்றுக்கொள்ள மறுத்த செயல் முறை
யொன்று அவனின் பெயருடன் தொடர்புபடுத்தப்பெற்றது.
இது ஒரு விபரீதமேயாகும். நாட்டிற்குரிய வேலைச்சாலைகளை
ஆதரித்து அவன் பேசவில்லை. கூட்டுறவு வேலைச்சாலைகளையே
அவன் ஆதரித்தான். கூட்டுறவு வேலைச்சாலைகளுக்குத் தொடக்
கத்தில் தேவைப்படும் மூலதனத்தை அரசாங்கம் கொடுத்து
விட்டுத் தொழிலை நடத்துவதைத் தொழிலாளர்களிடம் விடுதல்
என்னும் முறையையே உலூயி பிளாங்கு ஆதரித்துப் பேசினன்.
இது அரசாங்கச் சமூகவுடைமை அன்று. ஆனால், இது ஒரு
வகையிற் கைத்தொழிற் 'சிந்திக்கலியமாகும்.' இந்தக் கோட்
பாட்டின்படி தம்மைத் தாமே ஒழுங்கு செய்யப்படும். இந்தத்
தொழிற்சாலைகள் தமக்கு வேண்டிய அலுவலர்களைத் தாமே

[1]Louis Blanc, Organisation du Travail, ed. J. A. R. Marriott 1913), p. lix.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848 நியமனம் செய்யும். ஏனைய கைத்தொழிற் குழாங்களுடன் இந்த வேலைச்சாலைகள் இணைக்கப்படும். குடியரசின் முதலாவது செயலாக இலட்சம்பேக்கு என்னுமிடத்தில் உலூயி பிளாங்கின் தலைமையில் "தொழிலாளர் பாராளுமன்றம்" ஒன்று நிறுவப் பட்டது. இதனை நிறுவுதற்குரிய ஆஞ்ஞை இங்கு கவனிக்கத் தக்கது.

"மக்களால் செய்யப்பட்ட புரட்சி அவர்களுக்காகவே செய்யப் பட வேண்டுமென்பதனாலும்,

"தொழிலாளர்கள் தொடர்ந்து படுகின்ற கொடிய இடர் களுக்கு முடிவு காணவேண்டிய காலம் வந்துவிட்டமை யாலும்,

"தொழிற் பிரச்சினை மிகவும் முக்கியமாய் இருக்கின்ற மையாலும்,

"இவற்றுக்குக் காரணமாகச் சமூகநிலையை ஆராய்வதற் கென்றே நிலையான ஆணைக்குழுவொன்று அமைக்கப்படும்."[1]

நாட்டின வேலைச்சாலை கள்.

தொழிலாளர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கும் நிலையம், நாட்டிற்குரிய காப்புறுதித்திட்டம், மாதிரிக் குடியிருப்பு வீடுகள், கமத்தொழிற் குடியேற்ற இடங்கள், நாளொன்றிற்குப் பத்து மணி நேரம் வேலை செய்தல் ஆகியவைபற்றி முடிவு செய்வதில் ஆணைக்குழு முனைந்திருக்கையில், தன்னிட்டப்படியாக அரசாங் கம் நாட்டிற்குரிய வேலைச்சாலைகள் பற்றிய ஆய்வு வேலைகளில் இறங்கியது. இந்த ஆய்வு வேலை மிக முக்கியமானது. ஆனால், அவசரமாக உருவாகியபடியாலும் பிழையாகக் கொண்டு நடத் தப்பட்டமையாலும் இந்த முயற்சி படுதோல்வியடைந்தது. பிரான் சின் பல பாகத்திலுமிருந்து வந்த 1,20,000 தொழிலாளர்களின் கவனத்தை இத்திட்டம் கவர்ந்தது. இத்தொழிலாளர்களை ஆக்க வேலைகளிலோ, அல்லது ஆக்கமற்ற வேலைகளிலோ அமர்த்திக் கொள்வதற்கு அரசாங்கத்தால் இயலாதிருந்தது. எனவே, அர சாங்கம் தொழிலில்லாத இவர்களுக்குச் சம்பளத்தைச் சிறு சிறு தொகையாகப் பகிர்ந்து நிவாரணமாகக் கொடுத்தது. நாட்டிற்குரிய இந்த வேலைச்சாலைகள் வறியவர்களின் வெறுங் கூட்டமன்றி வேறென்றுமன்று ; இவர்களை எங்ஙனம் வேலை யில் அமர்த்துவது என்று தெரியாதபடியால் இவர்களுக்கு

[1] Louis Blanc, Organisation du Travail, ed. J. A. R. Marriott (1913), p. lxii.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவளிப்பதே பெரிய வேலையாயிருந்தது. இந்தத் தொழிற் சாலைகளில் நடைபெற்ற தொழில்கள் ஆக்கபூர்வமற்றவையான மையாலும் பொருத்தமற்றவையா யிருந்தமையாலும் தொழிலாளருக்குப் பழக்கப்படாதனவா யிருந்தமையாலும் அரசாங்கத்தின் இந்தச் செயல் பொதுநிதியை வீண் செலவு செய்வதொன்றாகும். இந்தப் பணம் சோம்பலுக்கு வழங்கப்படும் கட்டுக்காசு. இவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் உருக்கரந்த பிச்சைப் பணமாகும்.[1] இங்ஙனம் நாட்டிற்குரிய குறித்த வேலைச் சாலைகளைப்பற்றி உலூயி பிளாங்கு எழுதியுள்ளார். பொது ஒழுங்குகளை இந்த நிலை விரைவில் சீர்கெடச் செய்தது. அதனால் இந்த வேலைச்சாலைகள் ஒழிக்கப்பட்டன. தொழிலாளர் அடைந்த ஏமாற்றம் அவர்களை ஆயுதம் தாங்கிக் கலகஞ் செய்யத் தூண்டியது (1848, யூன்). பாரிசு வீதிகளில் பயங்கரமான போராட்டம் நடந்தது. இரத்தக் கறை படிந்த இப் போராட்டம் நான்கு நாட்களுக்குப்பின் அரசாங்க அதிகாரத்தின் வெற்றியில் முடிந்தது. சமூகக் குடியாட்சிக் கனவும் இத்துடன் கலைந்தது. 1848-52

புரட்சிகள் செல்கின்ற வழியையோ, அல்லது அவைகளினால் ஏற்படும் பலாபலனையோ முன்கூட்டியே கூற முடியாமையே புரட்சிகளிடத்தேயுள்ள தீய அம்சமாகும். 1789 ஆம் ஆண்டைப் போலவே 1848 இலும் இந்த இயக்கத்தைத் திட்டமிட்டுக் கால்கொள்ளச் செய்தவர்கள் ஒன்றையெண்ணித் திட்டமிட்டார்கள். ஆனால், அவர்கள் கருதியது கைகூடவில்லை. சந்தர்ப்பம் வேறொரு பலனை விளைவித்தது. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மக்களின் அரசியலிறைமையை நிறுவுதற்கு முயற்சிகள் நடைபெற்றன. ஆனால், நெப்போலியப் பேரரசுக் கொள்கைக்கு உயிர் கொடுப்பனவாகவே ஒவ்வொரு முறையும் இம்முயற்சிகள் பலனைக் கொடுத்தன. சருவசன வாக்குரிமையின் அடிப்படையில் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலின் பலாபலன் ஐரோப்பாவையே அதிசயத்தில் மூழ்கடித்தது. ஏனெனில், குடியாட்சியின் பழைமைபேணும் கொள்கை அப்பொழுது யாவருமறிந்ததொன்றுகவில்லை. மிதமான கருத்தினையுடைய பிரதிநிதிகளே பெரும்பாலும் பாராளுமன்றத்துக்குத் தெரிவு பெற்றனர். இந்தப் பிரதிநிதிகளுள் பேரரசனை முதலாம் நெப்போலியனின் மருகனை உலூயி நெப்போலியன் ஒருவனுவான். 1848 திசெம்பர்த் திங்களில் ஐந்து கோடிக்கு மேற்பட்ட வாக்குக்களால் உலூயி நெப்போலி இரண்டாவது பேரரசு.

[1] Louis Blanc, Organisation du Travail. Ed. J. A. R. Marriott (1913), p. lxxxiii.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848-52.

யன் குடிப்பதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். மூன்று ஆண்டு களுக்குப் பின்னர் ஆட்சிப் புரட்சி ஒன்று குடியரசைக் கவிழ்த்து விட்டது. அடுத்த ஆண்டில் ஏறக்குறைய எட்டுக்கோடி வாக்குக் களைக் கொண்ட குடியொப்பத்திலில் மீண்டும் பேரரசு நிறுவப் பெற்றது. முதலாவது குடியரசின் கதியே இரண்டாவது குடி யரசுக்கும் நேர்ந்தது. அக்குடியரசை ஆதரித்தவர்கள் தம் மிடையே பிளவு கொண்டிருந்தனர். சமூக இயக்கத்தை இரக்க மற்ற முறையில் நசுக்கியபடியால் இக்குடியரசு குடியாட்சிவாதி களின் வெறுப்பைத் தேடிக்கொண்டது. முதலாவது பிரான் சியப் பேரரசு வீழ்ந்து ஒருதலைமுறைக்குப் பின்னர் குடியரசுத் தலைவர்களின் பயங்கரச் செயல்களாலும் தடையுத்தரவு முறை யாலும் அச்சுறுத்தப்பெற்ற பிரான்சு மக்கள் நெப்போலிய னுடைய புகழினாலே கவரப்பெற்று, மீண்டும் அரசியலிறை மையை ஒரு தனிமகனின் கையிற் கொடுத்துப் பேரரசாட்சியை மீண்டும் ஏற்படுத்தினர். உள்நாட்டில் உறுதியையும் பிறநாட் டில் புகழ் தேடுவதையும் கொண்ட ஓர் ஆட்சிமுறையை நிறுவு தற்கு மீண்டும் ஒரு முயற்சி நடந்தது. இரண்டாம் பேரரசின் திட்டத்தை ஆராய்ந்து நடைமுறையில் அது எங்ஙனம் இயங் கிற்று என்பதையும் நாங்கள் இப்போது நோக்குதல் வேண்டும். நெப்போலியனின் பேரரசைப் போலவே, குறித்த முன்றிட்டமும் நெப்போலியனைப் பற்றிய வரலாற்றுப் பழங்கதையினின்றும் வினைந்ததொன்றாகும்.

நெப்போலிய னைப் பற்றிய வரலாற்றுப் பழங்கதை.

ஒருவரின் தனிப்பண்பு வரலாற்றை எங்ஙனம் பாதிக்குமென் பதற்குச் சிறந்தவோர் எடுத்துக்காட்டாகவே உலாயி நெப்போலி யனை அரசுகட்டிலுக்குக் கொண்டுவந்த சந்தர்ப்பங்கள் விளங்கு கின்றன. முதலாம் நெப்போலியன் வாழ்ந்த காலத்திலேயே அவனுடைய தனிப்பண்பு பிரான்சு மக்களின் கற்பனையில் மேலோங்கி நின்றது. அவன் இறந்த பின்னரும் அவனது தனிப்பண்பு பிரான்சு மக்களின் கற்பனையில் தனியிடம் வகித்து வந்தது. அவனுடைய மருகனுக்குப் பிரான்சு மக்களின் பாராட்டைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் எதுவுமில்லை. புகழ் பெற்ற பெயரைத் தனது பெயராகக் கொண்டிருந்தமை மட்டுமே அவனுக்கிருந்த ஒரேயொரு வாய்ப்பு. நெப்போலியனின் குலத் தில் பிறந்த ஒன்றையே உலாயி நெப்போலியன் தன் நன்மைக் காகப் பயன்படுத்திக் கொண்டான். அலச்சாந்தர் வகித்த பதவியை அவருடைய படைத் தலைவர்கள் வகிப்பது ஒரு போதும் இயலாத செயலாயிருந்தது. நெப்போலியனுக்குப் பின் னர் அதிகாரத்துக்கு வந்தவர்கள் நெப்போலியனின் முன் மாதிரியைப் பார்த்து நடக்க முயற்சிக்கவில்லை. நெப்போலியனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூன்றும் நெப்போலியன்
பிரான்சியரின் பேரரசன் (1852–1870)
பான்பரேக் குன்றிலுள்ள சித்திரத்திலிருந்து: ஓவியனின் பெயர் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த பிரான்சிய மக்களின் உள்ளத்தில் நெப்போலியனது மறைவினாலேற்பட்ட வெற்றிடத்தை அவனுக்குப் பின்வந்தவர் களால் நிறைவு செய்ய இயலாது இருந்தது. பழைய நிலைக்குக் கொண்டுவரப்பெற்ற முடியாட்சி நாட்டினரிடை ஒரு இளர்ச்சியை யும் உண்டுபண்ணவில்லை. புரட்சிப் போரினால் உண்டாய அழி வைச் சீர்திருத்தியதனால் பிரான்சு நன்மை அடைந்தது. இரு ந்தும் மக்களின் எதிர்ப்பை நன்மை பயக்கும் இச்செயல்கள் குறைக்கவில்லை. சமாதானத்தை நிலைநாட்டுதற்கான சேவை களை நடுவகுப்பு அரசியற்றிட்டம் ஆற்றியபோதும் நாட்டு மக் களின் மனத்தில் இது நன்கு பதியத் தவறிவிட்டது. முதலாம் நெப்போலியனுடைய புகழ்பெற்ற சாதனைகள் நிறைந்த கடந்த காலத்தோடு ஒப்பிடும்பொழுது இக்காலம் ஒளியிழந்து காணப் பட்டது. இந்தக் காலம் எதிர்காலத்துக்கு வித்திடுவதாக இருந் தது. நெப்போலிய வழிபாட்டுக் காலமிது. உச்சநிலையிலிருந்து விழுந்து விதியின் கொடுமையால் தன்னந்தனியே சென் எலினு என்னும் தீவிலே இருக்கும் நெப்போலியன்மேல் பிரான்சிய மக்கள் தங்கள் கவனத்தைச் செலுத்துகின்ற காலமிது. நெப் போலியனின் பணிநெறியைப் பிரான்சிய மக்கள் நிதானமாக ஆராய்ந்து உணர்ச்சிவசமற்ற நிலையில் பகுத்தறிவுகொண்டு பொருள் கொள்ளவில்லை. அவர்களுடைய விளக்கத்தைத் தண் ணளி படர்ந்த அனுதாபம் மறைத்தது. பகுத்தறிவுக் கண் கொண்டு சரியென ஏற்றுக் கொள்ள முடியாததை அனுதாபங் காட்டி மக்கள் தம்மனத்திற் சரியெனப்படும் முறையில் தோற்றம் கொடுக்கச்செய்தனர். முதலாம் நெப்போலியன் அதிகாரபீடத்துக் கேறுவதற்குக் கொண்ட ஆட்சிப் புரட்சிகளை மக்கள் கவனிக்காது விட்டனர்; அன்றேல் மன்னித்துவிட்டனர். சுதந்திரம்பற்றி அவன் கூறிய வாய்ச்சொல்லுக்கும் அவன் உண்மையில் நடாத்திய தன் வயமான அடக்குமுறை அரசாட்சித் திட்டத்திற்குமுரிய வேறுபட்ட தன்மையையும் மறந்து போயினர். நெப்போலியன் நாட்டின வீரன் என்பதையும் 1815 இல் நடந்த பொருத்தனைகளையுமே அவர்கள் நினைவில் வைத்திருந்தனர். 1848-52

நெப்போலியனைப் பற்றிய வரலாற்றுப் பழங்கதைகள் அவனு டைய வரலாற்றுக்குப் புதியதொரு விளக்கந் தந்தன. அவன் உயிர்வாழ்ந்த காலத்திலேயே இக்கதைகள், அவன் தன்னைத் தாராளக் கருத்துக்களைப் பரப்புந் தூதனாகவும் புரட்சியின் உரிமையாளனாகவும் 1789 ஆம் ஆண்டுக்குரிய எண்ணக் கருத் துக்களே ஓர் உருவெடுத்தாற் போன்ற ஆளுமையுடையோனாக வும் கருதித் தருக்கி நடக்கத் துணைபுரிந்தன. நெப்போலியன் நெப்போலியனின் வரலாறு புது விளக்கம் பெற்றமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848-52

சமூகத்தை இரட்சிக்க வந்தவன், சுதந்திரம் சமாதானம் என் பவைகள் நிரம்பிய பொற்காலமொன்றின் தோற்றத்தை உரு வாக்கியவன் என நெப்போலியன் பெயரை இந்த வரலாற்றுப் பழங்கதை இலங்கச் செய்தது. தவிர்க்க முடியாத ஊழ் இந்தக் கருத்தை அடையவிடாது பிற்போடச் செய்து அவனின் திட்டங் களைப் பாழாக்கி அவனை இரத்தக் கடலில் மூழ்க இறக்கிவிட்டதென வும் குறித்த வரலாற்றுப் பழங்கதை காட்டிற்று. இந்த வரலாற் றுப் பழங்கதையை ஆவலுடன் மக்கள் ஏற்றுக் கொண்டது இலகு வாக அவர்கள் எதனையும் நம்பி ஏற்பதனால் ஏற்பட்டதன்று. தங் கள் நாட்டை ஆண்ட மாபெரும் ஆட்சியாளரின் நினைவுக்கு மரி யாதை செலுத்துவதற்கு நாட்டினர் பெரிதும் விழைந்து நின்ற னர். இந்த உண்மைக்கே இச்செயல் குறிப்பான சான்று பகர்ந்தது. நெப்போலியனின் மரபில் நம்பிக்கை கொண்ட எல்லாரிலும் பார்க்க உலாயி நெப்போலியனே அதை முற்றுக நம்பினான். உலாயி நெப்போலியன் நாடு புறம்போய் வாழ்ந்த போதும் நெப் போலியனின் எண்ணக் கருத்துக்கள் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்தான். இக்கருத்துக்களைத் தன் கட்டுரைகளிற் றெளிவாக ஆராய்ச்சி செய்து விளக்கினான். முதலாம் நெப்போலியனின் புகழங்கியை அடைவதற்கு விதி தன்னையே நியமித்துள்ள தெனவும் தன் உளத்திற் கண்டான். "நெப்போலியனுடைய பெயர் உண்ணாட்டுக் கொள்கையில் ஒழுங்கையும் மக்களின் நலத்தையும், வெளிநாட்டுக் கொள்கையில் நாட்டிற்குரிய பெரு மையையும் குறிக்கின்றது" என 1849 இல் குடியரசுக் குடிப்பதி பிரகடனஞ் செய்தார். இரண்டாம் பேரரசின் சுருக்கமான முன் றிட்டத்தை இந்தச் செய்தி தொகுத்துக் கூறியது.

இரண்டாம் பேரரசின் முன்றிட்டம்.

"ஒழுங்கையும் சுதந்திரத்தையும் இணக்கலே மூன்றும் நெப் போலியனின் உண்ணாட்டுப் பூட்கையின் திட்டமும் நோக்கமு மாகும்." இதனை வேறு வகையிற் கூறினால் மக்களை அரசி யலில் நன்கு அறிவுறச் செய்தலே இத்திட்டத்தின் விளக்க மென்க. நிலைபேறுடைய அரசாங்கத்தின் முதலாவது நிபந் தனை அந்த அரசாங்கத்தின் அதிகாரத்தை மக்கள் முற்றுக அறிந்துணர்தலாகும். சுதந்திரத்தைப் பெறுவதற்குமுன் கீழ்ப் படிந்து நடப்பதற்கு ஒரு நாடு கற்றல் வேண்டும். வரலாற் றுத் தொடர்ச்சி முறையில் நாடு ஒழுங்கடைந்த பின்னரே சுதந்திரம் இடம்பெறுமென்க. எனெனில், மனம்போனபடி நடத்தல் உண்மைச் சுதந்திரமாகாது ; சுதந்திரத்தின் எதிர் மறையாகும். இதை ஆதாரமாகக் கொண்டு நோக்கினால் அதி காரத்துக்குச் சமூகம் மரியாதை செய்யவும் கீழ்ப்படிவுக் குணத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப் பயிலவும், முதலாவது நெப்போலியன் செய்தது போலச் சுதந்திரமென்னும் செல்வத்தைப் பெறுவதைப் பிற்போட வேண்டுமெனவும் கொள்ளப் பெற்றது[1]. "பிரான்சு மாபெரும் குடியாட்சி நாடாகும். இந்த நாட்டுக்குத் தேவை ஒழுங்கு. இந்த ஒழுங்கை அளிப்பதற்கு நெப்போலியனின் தன்மைபோல வேறெ ன்றிற்கும் தகுதியில்லை" என அக்காலத்தில் வாழ்ந்த ஒருவர் குறிப்பிட்டார். இதனைத் தலைக்கீடாகக் கொண்டு நாட்டினரின் உரிமைகளை உலாயி நெப்போலியன் அழிக்கத் தொடங்கினான். தன்னுடைய அதிகாரத்தைப் படிப்படியாகக் குறைத்துவிட்டு ஆட்சியில் பங்காளராக மக்களை ஏற்றுக்கொள்வதாயும் அவன் வாக்குறுதியளித்தான். தான் கட்டியெழுப்புமிந்த அரசியல் மாளிகையின் கோபுர முடியாகச் சுதந்திரம் திகழுமெனவும் அவன் உறுதிமொழி அளித்தான்[2]. தன்னுடைய ஆட்சிக் காலத்தின் கடைசி ஆண்டுகளிலே மூன்றும் நெப்போலியன் விருப்பமில்லாமற் சில சலுகைகளைக் கொடுத்துத் தனியாட்சியை ஓரளவிற்குத் தளர்த்தினனென்பதில் ஐயமில்லை. அப்படிச் செய்தது அதற்குரிய காலம் வந்துவிட்டதென அவன் கருதியதனாலன்று. அரசியலிற் ருராளபோக்குள்ள அபிப்பிராயத்தை இணக்குதற்காக அவன் அங்ஙனஞ் செய்தான். தனியொருவனின் இறைமைக் காலத்துப் பேரரசின் யாப்பை ஓரளவுக்கு விரித்து விளக்குவதினாலும், பிற்காலத்தில் புகுத்தப்பட்ட மாற்றங்களைக் குறிப்பதினாலுமே பேரரசாட்சியின் தனியியல்புகளை எடுத்துக்காட்டலாம். 1852-70

பேரரசின் யாப்பு: (1) நிருவாகம்.

(1) தரைப்படை, கடற்படை ஆகியவற்றின்மீது பூரண அதிகாரம், போர் அல்லது சமாதானம் ஆகியவற்றை நிர்ணயித்தல், சட்ட ஆக்கங்களைத் தொடக்கி நிறைவேற்றல், அந்தச் சட்டங்களைப் பரிபாலனஞ் செய்தல் ஆகிய நிருவாக அதிகாரம் முழுவதும் மன்னன் கையிலேயே இருந்தது. ஒருமுகப்படுத்திய இந்தப் பரந்த பாலன முறைமையின் தலைவனாக மன்னனிருந்தான். இந்த நிருவாக முறைமை பிரான்சு முழுவதையும் தன் அதிகாரத்துக்குள் கொண்டுவந்து மன்னனுடைய கையில் மாபெரும் நிருவாக அதிகாரத்தை ஒருமித்து வழங்கியது. அமெரிக்காவில் இன்று இருக்கும் நிலையே அன்று பிரான்சில் இருந்தது. அதாவது, அமைச்சு மூலம் அரசாங்கம் அங்கு நடக்கவில்லை. சட்டத்தை ஆக்குகின்ற சபைகளில் அமைச்சர் அங்கத்துவம் வகிக்கவில்லை. எனவே, அவர்கள் சபையின்

1 Louis Napoleon Bonaparte, Des Idees Napoleoniennes (ed. 1860), 132, n. I.

2 Ibid. p. xi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1852–70

கருத்தைப் பிரதிபலிக்க முடியாமலிருந்தது. பிரான்சிய அமைச்சர் குழாம் கருத்தொற்றுமை நிறைந்த ஒரே கொள்கையுடைய சபையாக இருக்கவில்லை. அமைச்சர், ஒருவருக்கொருவர் ஆதரவு அளிப்பவர்களாகவும் கூட்டுப்பொறுப் பேற்பவர்களாகவும் இருக்கவில்லை. ஒவ்வொரு அமைச்சனும் பேரரசனுக்குப் பொறுப்புடையனாகவே இருந்தான். அவர்கள் அதிகாரத்திலிருப்பது பேரரசனிலேயே தங்கியிருந்தது. ஆகவே, அமைச்சர்கள் பேரரசன் காட்டும் வழியையே பின்பற்றினர். தன்னுட்சியின் அடையாளங்கள் மாகாணங்களிலும் முற்றுக அழிக்கப்பட்டுவிட்டன. பேரரசனால் நியமிக்கப்பெற்று அவனின் கட்டளையைச் செய்து முடிக்கும் மாகாண அதிபதிகளுக்கே அதிகாரம் கொடுபட்டிருந்தது. நகரப்பதி உட்பட ஏனைய நகராண்மை அலுவலர்களும் பேரரசனால் நியமிக்கப்பட்டனர். அவர்கள் தெரிவு செய்யப்படவில்லை. நியதியற்ற பொலிசு முறைமை பத்திரிகைகளையும் தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தியது. அரசாங்கத்தைக் கண்டிப்பது பேராபத்தாக இருந்தது. நீதிபரிபாலன முறைமை வல்லாட்சியின் கருவியாக மாறியது.

(2) சட்டத் துறை.

(2) சட்டத்துறை மூன்று பிரிவுகளைக் கொண்டது. அவையாவன : சட்ட ஆக்கச் சபை, கழகம், மேற் சபை. சட்ட ஆக்கச் சபையின் பிரதிநிதிகள் சருவசன வாக்குரிமையினாலே தெரிவு செய்யப்பட்டனர். ஆனால், பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதற்குரிய சுதந்திரத்துக்கு எல்லா வழியிலும் எல்லாவிதமான முட்டுக் கட்டைகளும் போடப்பட்டன. அமைச்சர்கள் விரும்பிய அபேட்சகர்களைத் தெரிவுசெய்வதற்குப் பலவிதத்திலும் நிர்ப்பந்தங்கள் வாக்காளர்மீது கொண்டுவரப்பட்டன. இப்படியான தேர்தல் முறை கேடுகளும் ஒழுங்கின்மைகளும் ஒருபுறமிருக்க, சபைக்கு அதிகாரமோ, அல்லது சுதந்திரமோ சற்றேனுமிருக்கவில்லை. அரசாங்கத்தால் கொண்டுவரப்பெறும் முறிகளைத் திருத்தவோ, அல்லது புதிய சட்டங்களை ஆக்கவோ அச்சபையால் முடியாது. முதல்வரைப் பேரரசன் தெரிந்தெடுப்பான். ஓராண்டில் மூன்று மாதங்களுக்கே பாராளுமன்ற வைகல் நீடிக்கும். சபை பாதீட்டை ஒவ்வொரு பந்தி பந்தியாக ஆராயாமல் மொத்தமாகவே நிறைவேற்றும். அரசுக் கழகத்தைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, "சொற்பொழிவாற்றற் றிறமையைக் கைவிட்டுவிட்டு நடைமுறையிற் செயல்களைச் செய்யக்கூடிய குழுவைக் கொண்டிருக்க வேண்டும்" என யாப்புக் குறிப்பாகக் கூறியது. இந்தச் சபைக்குச் சட்டவாக்கலில் பெரும்பங்கு கொடுபட்டது. சபைக்கு வேண்டிய நடவடிக்கைகளை இதுவே தயாரித்தது. ஆனால், அதன் தலைவர் பேரரசனாலே நியமனஞ் செய்யப்பட்டார். மூதவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுறுப்பினர் எல்லோரும் பேரரசனாலேயே நியமனம் பெறுவர். இவர்கள் பெரும்பாலும் உயர்ந்த உத்தியோகம் வகித்தவர் களாக இருப்பார்கள். சட்டவாக்க யோசனைகளை ஒழுங்குபடுத்தல், யாப்பைப் பொருள் விளக்கிக் கூறல், யாப்பை எவரும் மீறுமற் பாதுகாத்தல் ஆகியவைகளே மூதவையின் கடமைகள்[1]. எனவே, மூன்றும் நெப்போலியனே பிரான்சின் தனியாட்சியாளனென் பது தெளிவு. சட்டப்படி நோக்கின் இவனின் அதிகாரம் மக் களின் விருப்பிலேயே தங்கியுள்ளது ; ஏனெனில், இவனை அதி காரத்துக்குக் கொண்டுவந்தது குடியொப்பமே. ஆனால், இவ னின் அதிகாரம் உண்மையில் படைப்பலத்திலே தங்கிற்று. சுருங்கக் கூறுமிடத்து குடியாட்சிக்கு மாறான ஒரு ஆட்சியே– பொதுமக்களின் ஆதரவுடன் ஏற்படுத்தப்பட்ட சீசர் ஆட்சியே- நெப்போலியனின் அரசியற் சட்டதிட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். 1852-70

தன்னுடைய தனியாட்சியைப் படிப்படியாக மட்டுப்படுத்தித் தாராள உளப்பாங்குள்ள பேரரசை (1860–1870) நிர்ப்பந்தம் காரணமாக நெப்போலியன் நிறுவினன். மக்களிடமிருந்து தான் வலிந்து பெற்ற அரசியலுரிமைகளை மக்களுக்குத் திரும்ப வழங்குதலே பேரரசனின் வெளிப்படையான நோக்கமாகும். இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவது அவசியம் என்பதை மன்னன் உணர்ந்து கொண்டான். கத்தோலிக்கரைத் தன்பாற் றிருப்புவதற்கு முதலாம் நெப்போலியன் கொண்ட முன் மாதிரியையே தானும் பின்பற்றினன். கத்தோலிக்கர் தன் னிடங் கொண்டுள்ள விசுவாசத்திற்குக் கைம்மாறுகக் கல்விப் பொறுப்பை அவர்களுக்கு அளித்து அதிகாரத்துக்குக் கீழ்ப்பணி ந்து அடங்கி நடக்க வேணும் என்னும் கொள்கையை மதக்கல்வி மூலம் புகுத்தும் முறையைப் பயன்படுத்தினன். ஆனால், 1859 இல் பேரரசன் ஒசுற்றியாவுக்கெதிராக வினைந்த போரில் பீதுமன் சிற்றரசுடன் சேர்ந்து தன்னுடைய கத்தோலிக்க ஆதரவாளர் களுக்குப் பெருங்கோபமூட்டினன். இத்தாலிய இயக்கத்தின் வளர்ச்சி பிறிதோரிடத்தில் விரித்துக் கூறப்பெற்றிருக்கின்றது.[2] குறித்த இத்தாலிய வளர்ச்சி போப்பாட்சியின் இந்நிலவுலக அதிகாரத்தை அழித்துவிடுமெனத் தோன்றியது. எனவே, பிரான்சிலுள்ள கத்தோலிக்கக் குருத்துவத்தார் தங்களுடைய பேரரசனின் செயலை எதிர்த்துப் பெரும் கிளர்ச்சி செய்தது இயற்கையன்றிப் பிறிதொன்றன்று. அதே நேரத்தில் உற்பத்தி தாராளப் பேரரசு.

1 A. Thomas, "Napoleon" in Camb. Mod. Hist. xi. cc. 10 and 17.

2. V ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1852-70. யாளரின் வெறுப்பையும் பேரரசன் தூண்டினான். கட்டில்லா வியாபாரத்தையே நெப்போலியன் விரும்பினான். எனவே, 1860 இல் இங்கிலாந்துடன் இவன் ஒரு வர்த்தகப் பொருத்தனை செய்து கொண்டான். இந்தப் பொருத்தனையின்படி இறக்கு மதிப் பொருள்கள்மீது வரி குறைக்கப்பட்டது. இந்தப் பொருத் தனையினால் தொழிலாளர்களின் நலனைப் பெருக்க வேண்டு மென்ற எண்ணம் உண்மையாகவே அவனுக்கிருந்தது. மேலும் கட்டில்லா வர்த்தகம் பல்வேறு தேசங்களிடம் சமாதானத் தையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதற்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையும் அவனுக்கிருந்தது. ஆனால், இச்செயலி னால் அவனுக்கு வர்த்தகர்களுடைய பகைமை ஏற்பட்டது. தன்னுடைய பூட்கையினால் தான் இணக்கியுள்ள இரண்டு பலத்த சத்திகளான குருத்துவத்தாருடனும் உண்ணாட்டு வர்த் தகப் பாதுகாப்புக் கொள்கைக்காரருடனும் தான் மோதிக் கொள்வதைக் கண்டான். எனவே, ஆதரவு தேடிப் பிறிதொரு வழியை இவன் நோக்கவேண்டியதாயிற்று. ஒரு மன்னன் சுமக்கின்ற பொறுப்பின் பளுவைக் குறைப்பதற்காக அதிகா ரத்தை மற்றவர்களுடன் பகிரவேண்டிய யோசனையை மன்ன னின் ஆலோசகர்கள் வற்புறுத்திக் கூறினர். ஏனெனில், இங்கிலாந்தையாண்ட மூன்றாம் யோச்சு மன்னன் செய்தது போலத் 'தனக்குத் தானே பிறர் புத்திகேளா அமைச்சரா யிருந்து' பாரஞ் சுமப்பது பிழை எனச் சுட்டிக்காட்டப்பட்டது. அரியணைப் பேச்சின்போது வெளியிடப்படும் பூட்கையை ஆண்டி லொருமுறை விவாதித்து விமரிசனஞ் செய்தற்கு மூதவையும் சட்டவாக்கச் சபையும் முதன்முதலாக 1860 இல் அனுமதிக்கப் பட்டன. இச்சலுகை பாராளுமன்ற அரசாங்கத்தை நோக்கிச் செல்கின்ற முதலாவது படியாகும். பாராளுமன்ற விவாதங்க ளெல்லாம் பத்திரிகைகளில் விரிவாக வெளியிடப்பட வேண்டு மென்னும் ஆஞ்ஞையும் மேற்குறித்த சலுகையைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்டது. பாதீட்டிலுள்ள ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியே வாக்களிக்கும் அதிகாரத்தைச் சட்டவாக்கச் சபைக்கு 1867 இல் நெப்போலியன் வழங்கினான். அமைச்சரை இடைமறித்துக் கேள்வி கேட்கும் உரிமை 1867 இல் கொடுபட்டது. அடுத்த ஆண்டில் பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் கொடுபட்டது. அதே ஆண்டில் பொதுக் கூட்டங்கள் நடத்தவும் உத்தரவு வழங்கப்பட்டது. பேரரசுமீது, நாட்டுமக்கள் கொண்டுள்ள பகைமை வளர்ந்துவந்தபடியால் நெப்போலியனின் பலவீனத் தின் பயனாகவே மேற்குறித்த சலுகைகளை மக்கள் வலிந்து பெற்றுக்கொண்டனர். பொதுமக்களின் எண்ணங்களைப் பேரர சனால் இணக்கஞ் செய்ய முடியாதபடியால் அவனின் பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றிக்கொண்டு வந்தது. அரசாங்கத்தின் எதிரிகள் அரசாங் 1852-70
கத்தைக் கவிழ்ப்பதற்குரிய கருவிகளாக இந்த நடவடிக்கை களைக் கைப்பற்றிக் கொண்டனர். பழைய மன்னராட்சியை விரும்பியவர்கள், ஓலியன்சு வமிசத்தினர், தாராளர், கத் தோலிக்கர், வர்த்தகத்தை வரிவிதித்துப் பாதுகாக்க விரும்பிய வர்கள் ஆகியோர் நெப்போலியனின் ஆட்சியையிட்டு மனக் கசப்படைந்திருந்தனர். இந்தச் சத்திகளின் ஒருமுகமான எதிர்ப் பின் பயனல் நெப்போலியனின் தனியாட்சி தகர்ந்தது. மேலும் புதிய யாப்புப் பொறுப்புக்களைப் பேரரசனிடமிருந்து கைப் பற்றுவதற்கு இந்தச் சத்திகள் ஐக்கியம் பூண்டன.

இரண்டாவது பேரரசின் சமூகப் பூட்கையும் பொருளா தாரப் பூட்கையும்.

18 ஆம் நூற்றுண்டில் ஐரோப்பாவையாண்ட அறிவுத்திறம் நிரம்பிய வல்லாளரின் மரபுகளை, ஒரு நிருவாகி என்ற முறை யில் மூன்றாம் நெப்போலியன் மீண்டும் வழங்க வைத்தான். அவன் அரசாங்கத்தின் முதலாவது ஊழியனாக இருந்தான். மகா பிரதரிக்கை, அல்லது இரண்டாம் யோசெப்பைப் பின் பற்றியே இவன் நடந்தான். பதினொன்காம் உலூயியை இவன் பின்பற்றி நடக்கவில்லை. "நெப்போலியனின் கருத்துக்கள் போரைச் சார்ந்தவையல்ல. அவைகள் சமுதாயம், கைத் தொழில், வர்த்தகம், வள்ளன்மை[1] ஆகியவைகளையே சார்ந் தவை" என இவன் எழுதினன். பிரான்சிய மக்களிடமிருந்து வலிந்து கைப்பற்றப்பட்ட அரசியல் உரிமைகளுக்கு நட்ட ஈடு செய்யும் வகையில் இந்தப் பேரரசின் சமூகப் பொருளாதாரப் பூட்கை இருந்தது. பேரரசு நிறுவுதற்குரிய திட்டங்களிலும் பார்க்க நாட்டினத்தின் பொதுநலமே முதலிடம் பெற்றது. இறித்துமத வெற்றி அடிமைத்தன்மையை நீக்கிற்று. பிரான் சியப்புரட்சி அடிமையூழியத்தை நீக்கிற்று. குடியாட்சியின் வெற்றி வறுமைப்பிணியை நீக்கும். வறியவர்களிடம் உண்மை யான பரிவை நெப்போலியன் காட்டினன். வறியவர்களின் நிலையைச் சீர்திருத்துவதற்கு அவன் கொண்ட விருப்பு உண் மையானதாகும். அரசெய்துவதற்கு முன்னரே அவன் எழுதிய "வறுமைப்பிணியை அகற்றல்" என்னும் நூலிலேயே மக்கள் மேற்கொள்ளும் அன்பு நெறியின் அனுதாபம் பிரதிபலித் திருந்தது. அவனுடைய சத்திவாய்ந்த தலைமையில் பிரான்சு இத்துறையில் பெரிதும் முன்னேறியது. எல்லாவிதமான கைத் தொழில்களும் வர்த்தக முதற்சிகளும் பெருமளவில் ஊக்கப் பெற்றன. ஈட்டுக் கடன் வழங்கவும் பெரிய தொழில் முயற்சி களுக்கு ஈட்டுப்பணம் வழங்கவும் இரண்டு முக்கிய நிறுவகங்கள் நிறுவப்பெற்றன. பிரான்சிய வங்கி நாட்டின் பல்வேறு பாகங்

1 Des Idees Napoleoniennes, 151.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1852-70 களிலும் கிளைகளை நிறுவியது. அதே நேரத்திற் புகைவண்டிப் போக்குவரத்தும் பெரிதும் விருத்தியடைந்தது. தபாற் தந்திச் சேவையும் சரியான முறையில் நிறுவப்பட்டது. கைத்தொழிலின் உயிர்நாடி மூலதனம். வர்த்தகத்தின் உயிர்நாடி போக்குவரத்து வசதிகள். மூலதனப் பெருக்கமும் போக்குவரத்து வசதிகளும் ஒன்றிலொன்று தங்கியிருந்தன. இதன் விளைவாக உற்பத்தித் தொழில் விரைந்து முன்னேறியது. புத்தாக்கச் சாதனைகள் பெருகின. இருபது ஆண்டுகளுக்கிடையில் உற்பத்தி இரட்டித்தது. 1855 இல் மாபெரும் பொருட்காட்சியொன்று பிரான்சில் நடந்தது. அத்தேசத்தில், கைத்தொழில் வாழ்க்கையில் நடைபெறும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை இந்தப் பொருட்காட்சி உலகுக்கு எடுத்தியம்பியது. நாட்டினச் செழிப்பின் அளவுகோல், செல்வம் எங்ஙனம் மக்களுக்குப் பகிர்ந்து வழங்கப்படுகின்றது என்பதிலே தங்கியிருக்கின்றதேயொழியச் செல்வப் பெருக்கத்தில் தங்கியிருக்கவில்லை யென்பதை இங்கு நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும். ஒருசிலருடைய கையிற் செல்வம் குவிந்திருப்பது பொதுச் சமுதாயத்துக்குப் பாரதூரமான கேட்டை விளைவிப்பதற்கு ஏதுவாக இருக்கலாம். எனவே, பொருளாதார முன்னேற்றத்தின் உண்மையான உரைகல் தொழில்புரியும் மக்களின் நிலையென்க. தொழில்புரியும் இந்த மக்களின் உடல் உறுதியிலும் அவர் அடையும் பொருட்செல்வத்திலுமே சமுதாயத்தின் அத்திவாரம் இறுதியிற் பொறுத்திருக்கும். பத்து ஆண்டுகளில் (1850—1860) தொழிலாளர்களின் சம்பளம் பல்வேறு தொழில்களுக்கேற்பப் பத்து வீதத்திலிருந்து நாற்பது வீதத்திற்கு உயர்ந்தது என்பது உண்மையே. ஆனால், தொழிலாளர்கள் பெறும் சம்பளத்தின் உண்மையான பெறுமதி குன்றிவிட்டது. ஏனெனில், வாழ்க்கைச் செலவு ஐம்பது வீதம் உயர்ந்தது. இந்தச் சமுதாயப் பிரச்சினைகள் பற்றி அரசாங்கம் பாராமுகமாக இருக்கவில்லை யென்பதை அதன்சார்பிற் சொல்லல் வேண்டும். இருந்தும் இதனைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி புண்ணுக்குப் புனுகு பூசுவது போலவே இருந்தது. நோயை முற்றுக மாற்றக் கூடியதாக இம்முயற்சிகள் அமையவில்லை. பாரிசு நகரிலுள்ள இறைச்சிக் கடைக்காரர்களின் சங்கத்தின் தனியுரிமை பறிமுதலாக்கப்பட்டது. வறியவர்களுக்குக் கோதுமை யப்பத்தை மலிவாக விற்பனை செய்வதற்கெனக் கோதுமைத் தின்பண்டத் தயாரிப்பாளர்களுக்கு நட்ட ஈடு வழங்கும் நிதியொன்றும் அமைக்கப்பட்டது. தொழிலாளர் வாழ்கின்ற இல்லங்களைச் சீர்திருத்துவதற்கெனப் பொதுநிதியிலிருந்து பணம் ஒதுக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. தொழிற் சங்கங்களுக்கு ஊக்கமளியாதிருந்தபோதும் சேம 1852-70
லாபக் கழக வளர்ச்சிக்கு அரசாங்கம் உதவிற்று. தருமசத்தி
ரங்கள் நிறுவப்பெற்றன. நெருக்கடியான நேரங்களில் பண
உதவி அளிப்பதற்கென நிதியொன்று உத்தியோகபூர்வமாக
ஏற்படுத்தப்பட்டது. இதனைவிட அரசாங்கமே தொழிலாளர்களைப்
பெருமளவில் வேலைக்கமர்த்தியது. வேலையில்லாத் திண்டாட்
டத்தை நீக்குதற்கும் பெரிய நகரங்களின் வனப்பைப் பெருக்
குதற்குமான பொதுவேலைகள் பெருமளவிற் கால்கொண்டன.
அடையாளம் கண்டுகொள்ளமுடியாத அளவுக்குப் பாரிசு நகரம்
மாற்றமடைந்தது. இன்று பாரிசு நகரத்துக்குக் கண்களவர்
கவினைக் கொடுக்கும் இருமருங்கும் மரங்களடர்ந்த வீதியும்
கட்டிடங்களும் அக்காலத்தவரின் கைத்திறனே.

பேரரசின் பிறநாட்டுப் பூட்கை.

இப்பேரரசின் பிறநாட்டுப் பூட்கையைப் பற்றி இங்கு ஆராய
லாம். எனெனிற் பிரான்சின் உண்ணாட்டு விருத்தியைப் பற்றி
மாத்திரம் நாங்கள் ஆராய்ந்தாற் பிரான்சிய வரலாற்றை நன்கு
விளங்கிக் கொள்ள முடியாதென்னும் உண்மையை இங்கு
வற்புறுத்திக் கூறல் வேண்டும். வெளிநாட்டு அலுவல்களின்
நிலை உண்ணாட்டு நிலையைத் தாக்கிற்று. அரசாங்கத்தின் ஆற்
றலுக்குப் பெரும்பாலும் அப்பாற்பட்ட சக்திகளிலேயே அர
சாங்கத்தின் உறுதி தங்கியிருந்தது. சமாதானத்திலேயே இப்
பேரரசின் கொள்கை தங்கியுள்ளதென மூன்றாம் நெப்போலி
யன் பிரகடனஞ் செய்தபோதும் பிறநாடுகளுடன் வைத்திருந்த
தொடர்புகளில் திடமான கொள்கையைக் கையாண்டு நாட்டிற்
குரிய கௌரவத்திற்கு இடம் கொடுத்தல் வேண்டுமென்பதை
அவன் உணர்ந்திருந்தான். இருந்தும் அவனுடைய மனத்
திலே தெளிவான திட்டமெதுவும் இருந்ததென்பது ஐயத்திற்
குரியது. "யுத்தம் ஒன்று அவசியம் என்பதை அவன் அறிந்
திருந்தான்" என்று பிசுமாக்கு ஒருமுறை கூறினனன். எனெ
னில் மிதமிஞ்சிய சமாதானப் பூட்கையொன்றைக் கைவிடாது,
எதுவந்தபோதிலும் அதனைக் கடைப்பிடித்ததனால் உலாயி
பிலிப்பு அரசியலில் விழுக்காடடைந்ததை அவன் அறிந்திருந்
தான். அவனைப்போலத் தானும் விழுக்காடடையக் கூடாதென்
பதைத் தானே ஒப்புக் கொண்டுள்ளான். பிரான்சிய மக்களின்
உணர்ச்சிகள் போரை விழைவதையும் கர்வத்துடன் அதிகாரஞ்
செலுத்த விரும்புவதையும் தான் நன்கு அறிந்திருப்பதாகவும்
அந்த உணர்ச்சிகளைத் திருத்தி செய்யத் தான் உறுதி கொண்டுள்
ளதாகவும் அவன் ஆங்கிலேய தூதமைச்சருக்குச் சொல்லி
யுள்ளான். ஆனால், அவன் இதில் மிகவும் கவனமாகவே
நடந்து கொள்ள வேண்டியிருந்தது. எனெனில், காரணமில்

III ஆம் நெப்போலியனதுகுணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1852-70 லாமற் பிறரைத் தூண்டிவிடக் கூடிய மீச்செலவின் பயனாக ஐரோப்பாக் கண்டம் முழுவதும் இவனுக் கெதிராக ஒருமுகப் பட்டுவிடும். அதே சமயம் பல நாடுகள் பொருதி மோதும் ஆபத்திற்குத் திடீரென இட்டுச் சென்றால் பிரான்சிய மக்களும் பெரும் பீதி கொள்வர். முதலாவது பேரரசு ஏற்படுத்திய மரபின் நினைவுகள் மக்களின் நினைவில் மங்காதிருந்தன. ஐரோப்பாக் கண்டம் முழுவதையும் மீண்டும் ஒருமுறை இரத்த வெள்ளத்தில் மூழ்கச் செய்வது தனது நோக்கமல்ல வென்பதை உலகிற்கு உறுதியாகக் கூறும் முறையில் மூன்றாம் நெப் போலியன் பகருவது இன்றியமையாததாக இருந்தது. அவ னுடைய கொள்கைகள் ஒன்றுக்கொன்று முரணாக இருந்தன. இந்த முரண்பாடே அவனுடைய நிலையை அழிப்பதற்கு வித்தா கிற்று. அவனுடைய அந்தரங்கக் கருத்தெல்லாம் சமாதானத் தையே விழைந்து நின்றது. இதனாலேயே தன்னுடைய நிலை க்கு ஐரோப்பாக் கண்டத்தை இணங்கச் செய்யலாமென்பதை யும் அந்தச் சமாதானக் கொள்கை மூலமே தன்னுடைய பரந்த சமுதாயத்திட்டக் கனவுகளை நனவாக்கலாமென்பதையும் அவன் நன்கு அறிந்திருந்தான். ஆனால், தன்னுடைய வமிசத் தைப் பிரான்சிய அரசுகட்டிலில் நிலைத்து நிற்கச் செய்வதாக இருந்தாற் பிரான்சிய மக்கள் புகழ்மீது கொண்ட வேண வாவை அவன் திருத்தி செய்தல் வேண்டும். புகழை நாடுவது போரை நாடுவதாகும். இத்தகைய இக்கட்டான நிலையை எதிர் த்து நின்று சமாளிக்கக் கூடிய உளவலிமை பேரரசனிடம் இல்லை. தக்க அரசறிவும் அவனிடத்திருக்கவில்லை. செயலாற் றிய முறைகள் அவனுடைய நோக்கங்களுக்கு ஏற்றவாறு அமைந்திருக்கவில்லை. அவனிடம் இசைவான குணங்கள் சில காணப்பட்டன. பரந்த நோக்கங்களை ஏற்றுக் கொள்ளக் கூடிய வனாக இருந்தான். ஆனால், அவனுடைய ஊசலாடும் மனப் பான்மையும் கோழைத்தனமும் அரசியற் சூழ்ச்சிகளில் சிக்க வைத்துப் பார்ப்பவர்களுக்கு, அவன் இழிவான செயல்களிலீடு படுபவன் என்ற பிழையான கருத்தை ஏற்படுத்தின. தன் னுடைய காலத்தில் வாழ்ந்தவர்கள் எல்லாரிலும் பார்க்க தீர்க்கதரிசனமும் பரந்த அறிவாற்றலும் படைத்தவனாயிருந் தான். ஆனால், திட்டங்களை யுருவாக்கும் அவனுடைய ஆற்ற லுக்கேற்ப அவனுடைய செயலாற்றும் முறைகள் அமைய வில்லை. மக்களுடைய ஆசைகளைத் தூண்டிவிட்டான். ஆனால், அவற்றை நிறைவேற்றும் ஆற்றல் அவனிடமில்லை. அவன் விரும் பியவற்றிற்கு நேர்மாறானவையே நடந்தன. அதனால் அவன் வீழ்ச்சியடைந்தபோது ஐரோப்பாவில் ஒருவராவது அவனை ஆதரித்து உதவுவதற்கு வரவில்லை. எனினும், தொடக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றும் நெப்போலியன் குறிப்பிடக்கூடிய வெற்றிகளை ஈட்டி னன். அவனுடைய அரசியல் வாழ்க்கையை முற்றுகத் திருப்பிப் புதிய பாதையில் விடும் கட்டம் உண்மையில் 1859 இல் நிகழ்ந்தது. தாராளப் போரசின் தொடக்கமும் இந்தக் கட்ட மும் ஒரே காலத்தன. இந்தப் பொருத்தம் தற்செயலாக எற்பட்டதன்று. அவனுடைய தனியாட்சி எவராலும் தாக்க முடியாத நிலையிலிருந்தது. அதே நேரத்தில் மகத்தான போர்ச் சாதனைகளைச் சாதிப்பதில் பிரான்சு ஈடுபட்டிருந்தது. தனக்கிருந்த எதிர்ப்பு எல்லாவற்றையும் இதன்மூலம் இலகு வில் ஒழிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால், அவனுடைய பிறநாட்டு முயற்சியின் இயல்புகள் படிப்படியாகத் தலைகாட்டிய பொழுது மக்கள் தங்கள் அரசியலுணர்ச்சியை மீண்டும் பலமாக வெளிப்படுத்தினர். அதிருத்தி மீண்டும் தலைதூக்கியது. நெப் போலியன் பிடியிலிருந்த இறைமை படிப்படியாக நழுவியது. இவற்றின் விவரத்தை இங்கு தருவாம். இது அவனுடைய பிறநாட்டுப் பூட்கையின் நோக்கத்தையும் இயல்பையும் சுட்டிக் காட்ட உதவும். 1854–56.

நெப்போலியனுடைய முதலாவது சூழியல் முயற்சி கத்தோ லிக்க ஆர்வத்தை இணங்கச் செய்யும் தனி நோக்கத்துடன் திட்டமிடப்பட்டது. ஆனால், இதனைத் தொடர்ந்து அவன் சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஆற்றிய செயல்கள் அதே ஆர் வத்தை மீட்சியில்லாமற் பகைத்து நிற்கச் செய்தது. இதுவே நெப்போலியனுடைய செயல்முறையிலேற்பட்ட முரண்பாடாகும். பிரான்சிலுள்ள கத்தோலிக்கக் கட்சியின் சார்பில், யெரூசலத் திலுள்ள பரிசுத்த இடங்கள் தனக்குரியனவென நெப்போலி யன் உரிமை கோரினான். இதே உரிமையைக் கிரேக்க திருச் சபையின் (வைதீகத் திருச்சபையெனவும் அழைப்பர்) பிரதிநிதி என்ற முறையில் பெற இரசியாவும் போட்டியிட்டது. இந்த அற்ப வாக்குவாதம் 1850 தொடக்கம் 1854 வரை தொடர்ந்து நடைபெற்றது. இந்த வாதத்தின் நன்மைகளை ஒருவரும் தெளி வாக அறிந்துகொள்ளவில்லை. எனினும், இந்த வாதத்தி லிருந்து கிரைமியப் போர் மூண்டது. அரைக்கோடி மக்கள் இந்தப்போரில் உயிரிழந்தனர். இந்தச் சச்சரவின் சமய சம் பந்தமான நோக்கத்தைப் பற்றி நெப்போலியன் சிறிதேனும் கவனிக்கவில்லை. ஆயினும், தன்னுடைய கத்தோலிக்க ஆதர வாளர்களின் தொடர்பைத் துண்டிக்க அவனால் முடியாது. இரசிய சார் தன்னைப் பொறுத்த அளவில் சலுகைகள் ஒன்றும் கொடுக்கவில்லை. மேலும், புதிய பிரச்சினைகள் தோன்றின. அரசியல் வானத்தில் ஒரு சிறுகையளவிலிருந்த கிரைமியப் போர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1854-56 இச் சிக்கலென்னும் சிறுமுகில் விரைந்து வானம் முழுவதையும் பரந்து கறுக்கச் செய்தது. சூழ்வல்லோர் எதனையும் ஐயங்களுடன் பிழையாக விளங்கிக்கொள்ளும் இயல்புடையவர். இவ்வியல்பு பயங்கரமான போரென்னும் விளைச்சலின் தீப்பயனுக்கு வித்திட்டது. துருக்கரின் ஒற்றுமை பேரரசின் முழுமை இதனைற் பங்கமுறுமென நம்பிய இங்கிலாந்தும் இப் பூசலில் ஈடுபடவேண்டியதாயிற்று. துருக்கிப் பேரரசைத் துண்டாடிப் பங்கு போட வெண்டுமென்னும் முன்மொழிவை முதலாவது நிக்கலசு தெரிவித்தான். இந்த முன்மொழிவு பிரித்தனுக்குப் பீதியை உண்டுபண்ணியது. ஏனெனில், இரசியா தெற்கு நோக்கி முன்னேறுவதைத் தடுக்க வேண்டியது தன் வேலையென்கின்ற பரம்பரையாக வரும் பூட்கையில் இங்கிலாந்துக்கு நம்பிக்கையிருந்தது. துருக்கியப் பேரரசின் கீழிருந்த வைதீகத் திருச்சபையைப் பின்பற்றும் குடிகள் இரசியப் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட வேண்டுமென சார் ஒரு கோரிக்கை விடுத்தான். ஆங்கிலத் தூதமைச்சரின் தூண்டுதலினால் துருக்கிய அரசாங்கம் இந்தக் கோரிக்கையை நிராகரித்தது. இந்தக் கோரிக்கையை இரசியா இச்சந்தர்ப்பத்தில் செய்தது புத்தியான செயலன்று. ஆனால், இந்த விடயம் இருபக்கத்தினரையும் இணக்கஞ் செய்ய முடியாததொன்றன்று. எனினும் தன்னுடைய கௌரவத்துக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டதென நிக்கலசு எண்ணினான். அதனால் தானியூப்பிலுள்ள மொழ்தேவியா, உவாலாக்கியா ஆகிய சிற்றரசுகளை அவன் கைப்பற்றினான். இதே நேரத்தில் போரை ஆதரிக்கும் கட்சியொன்று இங்கிலாந்திலிருந்தது. அபதீன் அமைச்சைப் போர்தொடுக்க அது கட்டாயப்படுத்திற்று. இதன் விளைவாகப் போர் மூண்டது. போர் முறையை மேற்கொள்ளாமல் இந்தப் பிரச்சினையை இணக்கமான முறையிலே தீர்த்திருக்கலாமென்ற கருத்தை வரலாற்று ஆசிரியர்கள் இப்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளுகின்றனர். இந்தப் போரின் பயனை விளைந்த உயிர்ச் சேதம் பொருட் சேதங்களைப் பார்க்குமிடத்து இந்தப் போரினாலேற்பட்ட இறுதிப் பலாபலன்கள் அச்சேதங்களுக்குத் தக்க நட்ட ஈடாகா. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தது பாரிசுப் பொருத்தனை (1856). இந்தப் பொருத்தனையின் விளைவாக ஏற்பட்டவை பின்வருவன : கருங்கடல் நடுநிலைமைப் பிரதேசமாக்கப்பட்டது ; தானியூப்பில் மரக்கலம் செலுத்துமுரிமை எல்லோருக்கும் வழங்கப்பட்டது ; தானியூப்பிலுள்ள சிற்றரசுகள் துருக்கி ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றன ; ஐரோப்பாவின் பொதுச் சட்டங்களில் துருக்கிக்கு இடமும் கொடுக்கப்பட்டது ; துருக்கியின் பேரரசுப் பிரதேசத்தைத் தொடர்ந்து பாதுகாக்க ஐரோப்பிய வல்லரசுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதி அளித்தன ; இவைகளுக்குக் கைம்மாறுகத் துருக்கி 1856
ஆட்சியிலிருக்கும் கிறித்து சமயக் குடிகளுக்குச் சமய உரிமை யும் முசிலிம்களுடன் சம உரிமையும் வழங்குவதாகச் சுலுத்தான் வாக்குச் செய்தான். இந்தப் பொருத்தனை நீண்டகாலம் நிலைக்க வில்லை. பொருத்தனை நியதிகள் உடனேயே மீறப்பட்டன. தான் கொடுத்த வாக்குறுதியைத் துருக்கி நிறைவேற்றவில்லை. துருக் கியப் பேரரசின் பிரதேச உரிமை குலைந்தது. கருங்கடலின் பொதுநிலைமை 1870 வரையுமே நீடித்தது. எல்லாவற்றிற்கும் மேலாக நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நிலவிய ஐரோப்பிய அமைதியைக் கிரைமியப் போர் குலைத்தது ; இதன் விளைவால் ஒன்றன்பின் ஒன்றுகப் பல போர்கள் தொடர்ந்து நடந்தன. இந்தப் போர்கள் உலகத்தைப் போர்க்கோலம் கொண்ட ஒரு பாசறையாக மாற்றிவிட்டன. அதுமட்டுமன்றி அழிவையே மனித முயற்சி, நாட்டினது வேணவா ஆகியவற்றுக்கு இலக்காக்கின. எனினும், ஒப்பந்தம் நிறைவேறியபொழுது இந்தத் தொடரி களின் பலாபலனைப் பிரான்சிய மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் புகழ்ந்துரைத்தனர். பிரான்சியப் பேரரசனுக்கு இது ஒரு தனிப் பட்ட பெருமை என்பதில் ஐயமில்லை. அமைதி நியதிகளைப்பற்றி விவாதிப்பதற்குப் பாரிசு மாநகரிற் கூடிய பேரவைக்குப் பிரான் சியப் பேரரசனே தலைமை தாங்கினான். ஐரோப்பிய நாடுகளின் கதியை நடுநிலையாக நின்று தீர்த்து வைப்பவன் அவர்கள் பேரரசனே என மக்களுக்குத் தோன்றும் வகையில் நெப்போலி யன் நடந்து கொண்டான். போர் என்னும் கடுந்துன்பத்திலி ருந்து அவன் வெற்றிகரமாக வெளியேறினான். தலைமுறை தலை முறையாகப் பிரான்சின் நேச நாடாக இருந்த துருக்கியை அழி யாமல் பாதுகாத்தவன் இவனெனவும் பிரான்சிய மக்களுக்குத் தோன்றியது. 1815 இலும் 1840 இலும் பிரான்சிற்கு ஏற்பட்ட இழுக்கைப் போக்கிப் பிரான்சுக்குப் புகழளித்துப் பெருமையின் சிகரத்தை (நெப்போலியன்) அடைந்தான். அதன் பின் அவ னுடைய அதிட்டம் சென்று தேய்ந்திடலாயிற்று. இறுதியில் 1870 இல் நேர்ந்த பேராபத்து அவனை முற்றுக அழித்தது.

இரண்டாம் பேரரசுபற்றிய நாட்டிவைாத முன்றிட்டம்.

பாரிசுப் பொருத்தனையினால் நெப்போலியன் ஒரு குறித்த காலத்திற்கு அதிகாரம் செலுத்தும் உரிமையைப் பெற்றான். வெற்றியினால் ஊக்குவிக்கப்பட்ட நெப்போலியன் தன்னுடைய புகழை மிகுவிக்க வழிவகை தேடுவதற்குத் தொடங்கினான். புகழை விழைந்து நிற்கும் வேணவாவின் பயனாக எழுகின்ற மக்களின் மிதமிஞ்சிய பேராசையைத் தோல்வி, அல்லது துன்ப நுகர்ச்சியே தணிக்க வல்லது. இந்த உண்மையை முதலாம் நெப்போலியனின் பணிநெறி எடுத்தியம்புகின்றது. முதலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1856-63 நெப்போலியனின் மருகனாகிய உலூயி நெப்போலியனும் தனது காலத்தில் மட்டற்ற பேராசையுடையனாயிருந்தான். ஆதலால் முதலாம் நெப்போலியனின் பணிநெறி கற்பித்த பாடத்தையே மூன்றாம் நெப்போலியனின் பணிநெறியும் சுட்டிக்காட்டுவ தாயிற்று. நெப்போலியனின் உரிமைப் பயனாக முழுமைப் பொரு ளாக ஊழ் தனக்களித்த மகத்தான வேலையில் இறங்குதற்கு ஏற்ற காலநேரம் தனக்கு ஏற்பட்டுவிட்டதாக அவனுக்குத் தோன் றிற்று. நெப்போலியன் கையளித்துப் போன எண்ணக் கருத்து இதுவரையும் தெளிவாக வரையறுக்கப்படாதிருந்தது. ஆனால், இந்தக் கருத்து இப்பொழுது தெளிவாக அமையத் தொடங்கிற்று. ஐரோப்பிய தேசப்படத்தைப் புதியதோர் அச்சிற்போட்டு வார்த் தல், 1815 இல் செய்யப்பெற்ற பொருத்தனைகளைத் தகர்த் தெறிதல், இரையின் வரையும் பிரான்சின் எல்லைப்புறத்தைக் கூட்டுதல், நசுக்கப்படும் நாட்டினங்களுக்கு விடுதலையளித்தல் ஆகிய பாரதூரமான திட்டங்களுக்கு இது முன்னறிவிப்பாயிற்று. பிரான்சியப் பேரரசன் பேராபத்தை விளைக்கின்ற கலகக்காரனென ஐரோப்பாவிலுள்ள அமைச்சரவைகள் அஞ்சின. இந்தப் பேர ரசனுக்குள்ள ஓய்வின்றி உழைக்கும் திறமையும் எளிதில் மாறுகின்ற உளவெழுச்சியும் அளவிட முடியாத கோபதாபப் போக்கும் அப்போதுள்ள அரசியல் முறைமையின் நிலைபேற் றிற்குப் பேராபத்தை விளைக்குமெனவும் பயந்தன. அவனின் நாட்டினவாத முன்றிட்டத்தின் முதற்பெறுபேறாகத் தான்யூப்புச் சிற்றரசுகளை[1] ஒன்று சேர்த்து உரூமேனிய அரசாக்கும் செயல் தென்பட்டது. இவ்வரசு பாரிசுப் பேரவையின் பொழுது தன் ணுண்மையுடையதென ஒப்புக்கொள்ளப்பட்டது. பேரவாவுள்ள திட்டமொன்று இத்தாலிக்கு விடுதலை அளிக்கும் திட்டங்களின் உருவிலே விரைவிற் றோன்றிற்று. இதனைப் பற்றிப் பிறி தோரத்தியாயத்திற் கூறுவோம்[2]. எனினும், நெப்போலியனின் அரைமனமான இத்தாலிய பூட்கையின் நடவடிக்கைகள், எவரையும் திருத்தி செய்யாமல், பேரரசின் வீழ்ச்சியின் தொடக்கமாயமைந்தன என்பதை இவ்விடத்திற் குறிப் பிடலாம். நெப்போலியனின் இத்தாலிய பூட்கை உள் நாட்டிலுள்ள கட்சிப் பூசலென்னும் கனலைக் கிளறி அங்கே அவனுடைய நிலையை மீட்க முடியாத அளவிற்குத் தாக்கியது. தெய்வீகமான குருபீடத்திற்கு விளைவித்த துன்பத்தைக் கண்டு பிரான்சியக் குருத்துவத்தார் மனம் எரிந்தது; தெற்கு இத்தாலி யிலுள்ள நியோப்பொலிற்றுப் பூபோன் குலத்தினரை விரட்டி

1. VI ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.
2. V ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதை முடியாட்சியை ஆதரிப்போர் எதிர்த்தனர். போரிலிருந்து பேரரசன் திடீரென விலகியபடியால் இத்தாலிய மக்கள் திக்கற்ற நிலையிற் கைவிடப்பட்டனராதலால் பிரான்சியப் பருமாற்றவாதிகளின் நட்புக் கெட்டது. நெப்போலியன் இத்தாலியரின் நன்றியை இழந்தான். இத்தாலியிலுள்ள நீசையும் சவோயையும் நெப்போலியன் கைப்பற்றியதால் இங்கிலாந்தின் நட்பையும் இழந்தான். பீதுமனுடன் கூட்டுறவு நடத்தியதனால் நெப்போலியன் ஒசுற்றியாவின் வெறுப்பையும் தேடிக்கொண்டான்; இந்தக் கூட்டுறவே இத்தாலிய இயக்கத்துக்கு வழி கோலியது. தாக்குவதற்குத் தான் செய்த திட்டங்களை நெப்போலியன் வெளிப்படுத்தியதாற் பிரசியா திகிலடைந்தது. நெப்போலியன், 1863 இல் நடந்த கலகத்திற் போலந்தை ஆதரிக்கும் பொருட்டுத் தலையிட்டதனால் சிறிது காலத்துக்குள் இரசியாவிற்கும் அதிக கோபத்தை மூட்டினான்[1]. போலந்து மக்களின் சார்பில் அனுதாபம் தெரிவிக்கும் உணர்ச்சி பிரான்சில் பொங்கியெழுந்தது; பேரரசன் போலந்து மக்களின் சார்பில் தன்னுடைய ஆயுதபலத்தை உபயோகித்து எல்லாக் கட்சிகளையும் தன்னுடைய பக்கத்துக்குக் கொண்டுவந்திருக்கக் கூடும். போலிய நாட்டினத்தை ஊக்குவித்தல் நெப்போலியனின் கொள்கைக்கு முற்றிலும் இணைவானது. அதுமட்டுமன்றிப் பிரான்சிய மக்களின் பரம்பரை இயல்புணர்ச்சியையும் அது கவரக்கூடியதாயிருந்தது. ஆனால், இங்கிலாந்தும் ஒசுற்றியாவும் செயலற்றிருந்தன. சூழியல் எதிர்ப்பு ஒன்றைத் தெரிவிப்பதைவிட வேறெதையும் தான் செய்ய இயலாதிருப்பதை நெப்போலியன் கண்டான். இந்த எதிர்ப்புப் பிரான்சிய மக்களின் புகழ்ப் பசியைத் தணிக்கவில்லை. அத்துடன் இரசியாவையும் சினங்கொள்ளச் செய்தது. இரண்டாம் பேரரசின் புகழ் விரைந்து மங்கிற்று. மெச்சிக்கோவுக்குப் படையெடுத்துச் சென்றதாலேற்பட்ட பேரழிவுடன் அந்தப் புகழ் முற்றுக அழிந்தது. 1864–67

மெச்சிக்கோ நிகழ்ச்சி.

பேரரசனின் நிலையில்லாத கற்பனையையும் பகட்டான திட்டங்களையும் எண்ணிச் செயலாற்றும் தன்மையின்மையையும் அத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டிய உரமான உளவுறுதியின்மையையும் இந்த மெச்சிக்கன் நிகழ்ச்சி எடுத்துக்காட்டியது. தன்னுடைய ஐரோப்பிய முயற்சிகளில் தோல்வியுற்றபடியால் தென்னமெரிக்காவிற் கத்தோலிக்கப் பேரரசு ஒன்றை நிறுவி அதன் மூலம் ஆங்கிலேய–சக்சன் செல்வாக்கிற்கு மாற்றுத் தேடும் திட்டமொன்றைத் தன்னுடைய உளத்

1. VII ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1864-67 தில் நெப்போலியன் உருவாக்கினான். உட்பகையினால் குழப்ப முற்றுத் தாக்குதலை எதிர்க்கமுடியாமல் இருக்கின்ற மெச்சிக்கோ நாட்டில் தன்னெண்ணங்களை உருப்படுத்தும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த நாட்டின் அலுவல்களிற் றலையிடுவதற்கும் ஒரு காரணமும் ஏற்பட்டது. நிதி நெருக்கடி காரணமாக மெச்சிக்கோ நாட்டு அரசாங்கம் தன்னுடைய வெளிநாட்டுக் கடன் காரர்களுக்குப் பணம் கொடுப்பதை 1861 இல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திவைத்தது. இந்த நம்பிக்கை மோசடிபற்றி இங்கிலாந்தும் பிரான்சும் இசுப்பெயினும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தன. அந்த எதிர்ப்பு பலனளிக்கவில்லை. ஆதலால் தமக்கு வேண்டிய அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு மெச்சிக்கோ நாட்டினுள்ள மக்களுக்கிருந்த உரிமையைப் பாதிக்கும் வகையில் மெச்சிக்கோவின் உண்ணாட்டலுவல்களில் தாம் தமது செல்வாக்கைப் பயன்படுத்தப் போவதில்லை எனப் பிரித்தானியாவும், பிரான்சும், இசுப்பெயினும் மறுத்தனவெனினும் தமது குடிமக்களின் உரிமைகளை வற்புறுத்தத் தமது படைகளை அனுப்பின. இதற்கு நாடு கீழ்ப்படிந்தது. ஆனால், மெச்சிக்கின் குடியரசைக் கவிழ்த்துவிட்டு உரோமன் கத்தோலிக்க முடியாட்சியொன்றை ஒசுற்றிய பேரரசனின் தம்பி மாச்சிமிலியன் தலைமையில் நிறுவும் தன் திட்டமொன்றை நெப்போலியன் வெளியிட்டான் (1864). சிறிது காலத்துக்குப் பிரான்சியப் படைகள் வெற்றி கண்டன. ஆனால், அடுத்த ஆண்டில் ஐக்கிய அமெரிக்க அரசுகள் தம்முடைய எதிர்ப்பைக் காட்டின. இது வரையும் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்குத் தொல்லைகள் தீர்ந்துவிட்டன. அமெரிக்காக் கண்டத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் தலையிடக் கூடாதென்பது மொன்ரோத் திட்டத்தின் கொள்கையாகும். இந்த மொன்ரோக் கொள்கையைப் பிரான்சிய அரசாங்கம் மீறுவது பற்றி ஐக்கிய அமெரிக்கா தன் எதிர்ப்பைத் தெரிவித்தது. தன்னுடைய படைகளை மெச்சிக்கோவிலிருந்து திரும்ப அழைத்தல், அல்லது மெச்சிக்கோவிற்கும் ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்கும் எதிராக, முடிவு காணும்வரை போரைத் தொடர்ந்து நடத்துதல் ஆகிய இரண்டு வழிகளிலொன்றைப் பின்பற்ற வேண்டிய இக்கட்டான நிலை நெப்போலியனுக்கு ஏற்பட்டது. முதலாவது வழியையே அவன் விரும்பிப் பின்பற்றினான். 1867 இல் பிரான்சியப்படை மெச்சிக்கோவை விட்டுக் கப்பலேறியது. தன்னுடைய முடியைத் துறந்து தன் ஆதரவாளர்களைக் கைவிட விரும்பாத மாச்சிமிலியன் பிடிபட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டான். இந்த மெச்சிக்கோப் படையெடுப்பின் பேராபத்தான முடிவு பிரான்சிய மக்களின் உளத்தில் ஊன்றிப் பதிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. தொடக்கத்திலேயே இந்தப் படையெடுப்பின் முடிவு தோல்வியாகும் என்று தெரிந்திருந்த போதிலும், பேரரசு போர்வீரரின் உயிரைப் பலிகொடுத்தும் பொருளை வீண் விரயம் செய்தும் ஐக்கிய அமெரிக்க அரசுகளிடம் அவமானமுற்றது. அத்துடன், பிரான்சு பிறநாட்டு இளவரசனொருவனை ஆபத்தான முயற்சியொன்றில் தூண்டி விட்டபின்னர் அவனை தன் கதியை நிருணயிக்கட்டுமென அவனைக் கைவிட்டது. இந்தச் செயல் பிரான்சிய கௌரவத்துக்கு இழிவைத் தருவித்தது. 1867-70

நெப்போலியனின் நிலை இப்பொழுது பேராபத்தானதாகி விட்டது. யாப்பு முறைப்படி நடைபெறுமாட்சியே வேண்டுமென மன்றத்தில் தாராளர் கட்சியின் எதிர்த்திறம் செய்த முயற்சிகள் இரட்டித்தன. 1870 இல் நடந்த குடியொப்பத்தின் பயனாக நாட்டு மக்கள் நெப்போலியன்மீது வைத்திருந்த நம்பிக்கையை மீண்டும் உறுதி செய்தனர். இருந்தபோதிலும் பேரரசின் அதிட்டத்தை மீண்டும் பெறவும் பேரரசைக் கவிழ்ப்பதாக விரட்டிக் கொண்டிருக்கும் குடியாட்சிக்குரிய அபிப்பிராயத்தைத் தடுப்பதற்கும் வெற்றிகரமான போரொன்று தேவையென்பது தெளிவாயிற்று. பிரான்சுக்கும் பிரசியாவுக்குமிடையே நடந்த போருக்கு வழிவகுத்த நிகழ்ச்சிகள் அடுத்த அத்தியாயமொன்றில் விரித்து ஆராயப்படும்[1]. இந்தப் போர் பிரான்சியப் பேரரசுக்கு அபாயம் விளைப்பதாயிற்று. இப்பேரரசு, மக்களிடை அதற்கிருந்த ஆதரவை இழந்தது. வெளிநாட்டு முயற்சிகளில் மீண்டும் தோல்விகண்ட படியால் இப்பேரரசின் புகழும் குன்றியது. சூழியல் முயற்சிகளின் வெற்றியால் நீடித்திருக்க வேண்டிய ஓர் அரசாங்கத்தை விடுத்துப் பிறிதோர் அரசாங்கத்தை நிறுவவேண்டிய காலமாயிற்று. செடான் என்னுமிடத்தில் பிரான்சியப் படை (செத்தெம்பர் முதலாம் நாள், 1870) சரணாகதியடைந்த மூன்றாம் நாளன்று மன்றம் மூன்றாவது குடியரசைப் பிரசித்தஞ் செய்தது. இரண்டாம் பேரரசின் முடிவு.

1. பக்கம் 99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் II

சேர்மானியப் பேரரசின் வளர்ச்சி (1815—1870)

1815 நாட்டினங்களின் வளர்ச்சி.

19 ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய வரலாற்றின் சிறப்பான தன்மை நாட்டினங்களின் வளர்ச்சியென்க. எனைய அரசாங்கங்களின் சோம்பலும் அவற்றின் மாபெரும் பிழைகளுமே தன்னுடைய பெரும்பலமாக இருப்பதை முதலாம் நெப்போலியன் கண்டுள்ளானென்பதை அவனுடைய அமைச்சனொருவனே ஒப்புக்கொண்டுள்ளான். தீவிரமான நாட்டினவுணர்ச்சியினால் நெப்போலியன் வீழ்ச்சியுற்றான். உலகெங்கும் பேரரசு ஒன்றை நிறுவ வேண்டுமென அவன் கண்ட கனவையும் இந்த உணர்ச்சியே தகர்த்தெறிந்தது. அந்நிய நாட்டினால் வெற்றிகொள்ளப்பட்டதனால் நாடுகள் புத்துயிர் பெற்றன. இப்புத்துயிர்ப்பு ஐரோப்பிய தேசப்படத்தைப் புதுமுறைப்படியமைக்கவும் புதிய அரசியல் முறையொன்றை உண்டாக்கவும் வழிகோலியது. ஐரோப்பாவின் அபிவிருத்தியைப் பெரிதும் பாதித்தது இந்த நாட்டினத் தத்துவமாகும். இத்தத்துவம் மிக முக்கியமான பிரச்சினைகளை உண்டாக்கியது. எதிர்காலத்திலேயே இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியிருக்கும்.

பிரான்சியப் புரட்சிக்கு முன் சேர்மனி.

நெப்போலியனுக்குச் சேர்மனியில் இருந்த ஆதிக்கத்துக்கு நிகரான ஆதிக்கம் அவனுக்கு வேறு எங்கும் இருக்கவில்லை. பின்னர் அவனின் ஆதிக்கத்துக்கு, சேர்மனியில் ஏற்பட்டது போன்ற எதிர்ப்பும் வேறெங்கும் தோன்றவில்லை. அந்த எதிர்ப்பினாலேற்பட்ட விளைவுகள் மிகவும் பாரதூரமானவை. பிரான்சியப் புரட்சி தொடங்குகின்ற வேளையில் ஐரோப்பாக் கண்டத்தில் இருந்த நாடுகள் எல்லாவற்றிலும் பார்க்கச் சேர்மனியிலேயே அதிக பிரிவிருந்தது. சேர்மனியில் இருநூற்றுக்கு மேற்பட்ட அரசுகள் இருந்தன. இவ்வரசுகள் பேரரசனுக்குப் பெயரளவிலேயே கீழ்ப்படிந்தன. இவ்வரசுகளுக்குத் தங்களுடைய உள்நாட்டு அலுவல்களைக் கொண்டு நடத்துதற்கும், ஒன்றுக்கொன்று தொடர்பு வைத்திருத்தற்கும் சுதந்திரம் இருந்தது. ஒசுற்றியாவே இவ்வரசுகளில் முதன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்தது. ஆபிசுபேக்கு மன்னர் குலத்தினருக்கே பேரர 1815
சில் மேம்பட்ட நிலையுண்டு. ஆனால் ஒசுற்றியாவிலும் பார்க்கப் பிரசியா படைப்பலம் வாய்ந்ததாதலால் பிரசியா ஒசுற்றியாவின் வெல்லமுடியாப் பகைநாடாயிற்று. சேர்மனியில் எஞ்சியிருந்த சிற்றரசுகள் ஒசுற்றியாவை அல்லது பிரசியாவைச் சார்ந்து நின்றன. இப்படிச் சார்ந்து நின்ற போதிலும் இந்தச் சிற்றரசுகள் தங்கள் சுதந்திரத்தில் உறுதியான பற்றுடையனவாயும், தங்கள் இறை உரிமைகளை மீறுவதை உண்மையாக எதிர்ப்பனவாயுமிருந்தன. பேரரசனிடத்து இந்த அரசுகள் காட்டிய விசுவாசம் உண்மையான பிணிப்பாயிருக்கவில்லை. அதனைவிட இவ்வரசுகளை ஒன்றுசேர்த்துப் பிணித்தது இவ்வரசுகளுக்குரிய பொதுமன்றமொன்றுகும். சேர்மானியச் சிற்றரசர்களுடைய பிரதிநிதிகளும் பட்டினப் பிரதிநிதிகளும் இந்தப் பொதுமன்றத்திலிருந்தனர். முழு நாட்டினையும் பேணும் கருத்துடைய நாட்டினப் பிரதியாளராக இப்பிரதிநிதிகள் இருக்கவில்லை. இப்பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் குறிக்கப்பட்ட ஒவ்வொரு நோக்கத்தைக் கொண்டுள்ள ஒவ்வொரு தூதுவராவர். எனவே பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றம் போலல்லாது இந்தப் பொதுமன்றம் தூதமைச்சரின் பேரவையாக இருந்தது. இந்த மன்றத்திற்கு அதிகாரம் எதுவுமிருக்கவில்லை. அதனிடம் வருமானமோ அல்லது படைகளோ இல்லை. நன்மை பயக்கக்கூடிய எந்த அலுவலையும் செய்ததனாலேயே அது தொடர்ந்து இயங்கிற்று என்று கூறவும் முடியாது. இடைக்காலப் பேரரசின் தீங்கில்லாத ஒரு ஞாபகச் சின்னமாகவே இப்பொழுது மன்றம் இருந்துவந்தது. இதுவே 18 ஆம் நூற்றுண்டின் இறுதியில் சேர்மனியில் இருந்த அரசியல் நிலையாகும். இருந்தபோதிலும் வரலாற்றின் இடைக்காலம் உதயமாகின்றபோது இங்கிலாந்தையும் பிரான்சையும் விட சேர்மனியில் அதிக அரசியல் இணைப்புக் காணப்பட்டது. ஆனால் மேற்கு ஐரோப்பாவிலுள்ள இராச்சியங்களில் திறமையான ஆட்சியாளர்கள் தொடர்ந்து ஆட்சி செய்தனர். இவர்கள் தங்களதிகாரத்தை உறுதியாக்கும் தனி நோக்கத்திற்காகத் தளராது உழைத்தனர் அத்துடன் பலமான மத்திய அரசாங்கம் ஒன்றை நிறுவுதற்கும் தங்கள் பலம் முழுவதையும் பயன்படுத்தினர். இது ஒருபுறமிருக்கச் சேர்மனியிலிருந்த மன்னர் குலத்தினர் சாளிமெனிடமிருந்து பரம்பரை வழியில் பெற்ற பரிசுத்த உரோமப் பேரரசு அவர்களுடைய அரசியல் நல்வாய்ப்புக்களுக்கு உலைவைப்பதாக இருந்தது. உரோமப் பேரரசு அழிந்துவிட்டதென்பதை இடைக்காலத்தின் தொடக்கத்தில் மக்கள் நம்பமுடியாத நிலையிலிருந்தனர். பிராங்கு அரசன் கி. பி. 800 இல் பேரரசனாக முடிசூட்டப்பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 போது அவ்வரசன் சீசர் குல வழியில் வந்தவனெனக் கருதப்பட்டான். இப்படிக் கருதுதற்கு அவனுடைய ஆட்சிப் பகுதியின் எல்லைப்பரப்பும் காரணமாக இருந்தது. அவன் இறந்த பின்னர் அவனுடைய பேரரசு சிதறியது. சேர்மானிய மன்னனை முதலாம் ஒற்றோ அதனை மீண்டும் புதுப்பிக்கும்வரையும் உரோமிலே பரிசுத்த உரோமப்பேரரசின் பேரரசனாக முடிசூட்டப்பட வேண்டுமெனச் சேர்மானிய மன்னரொவ்வொருவரும் கனவு கண்டனர். உவொற்றயர் கூறியதுபோல பரிசுத்த உரோமப் பேரரசு உண்மையில் பரிசுத்தமாகவு மிருக்கவில்லை; உரோம மயமாகவு மிருக்கவில்லை ; பேரரசாகவு மிருக்கவில்லை. உலகம் முழுவதையும் ஆளவேண்டுமெனச் சேர்மனி கொண்டிருந்த பேரவாவிற்குத் தக்க தண்டனை கிடைத்தது. இங்கிலாந்து, பிரான்சு, இசுப்பெயின் ஆகிய ஐரோப்பிய நாடுகளிடம் இந்தப் பேரரசிற்கு அதிகஞ் செல்வாக்கிருக்கவில்லை. ஆனால், அதனால் சேர்மனிக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டது. சேர்மானிய ஆட்சியாளர்கள் இத்தாலியில் தங்கள் ஆதிக்கத்தை நிறுவுவதற்கு எடுத்த முயற்சிகளின் பயனைப் போப்பாட்சியுடன் கடுமையாக மோதிக்கொண்டனர். இறுதியில் சேர்மனியை ஆண்ட மிகப் பலம் வாய்ந்த ஓபன்பெசுத்தேபன் வமிசமழிந்தது. இதனால் அவர்களுடைய சத்தி ஒருமுகப்படவில்லை ; அவர்களுடைய வருவாய்களும் குன்றின. மானியமுறையில் பிளவுண்டாக்கும் சத்திகளை எதிர்ப்பதற்கு அந்த மன்னர் குலமுறையினருக்கு ஆற்றலும் இல்லாது போயிற்று. சேர்மானிய மன்னன், இத்தாலியில் ஓயாத படையெடுப்பில் ஈடுபட்டிருந்தான். ஆதலால் அவன் சொந்தநாட்டில் இல்லாதபொழுது அங்குள்ள பாளையக்காரர்கள் தங்களுடைய நிலைமையை எவனும் தாக்க முடியாத வகையிற் பலப்படுத்திக் கொண்டனர். இறைத் தனியுரிமைகளைப் பிழையான முறையிலே தமவாக்கிக்கொண்டனர் ; மத்திய அரசாங்கத்தையும் நலிவுறுத்தினர். மாட்டின் உலூதரின் சமயச் சீர்திருத்தமும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட முப்பதாண்டுப் போரும், சேர்மனியை முற்றுக உருக்குலைத்தன. பரிசுத்த உரோமப் பேரரசிலிருந்த நம்பிக்கையை அது அழித்தது. உரோமன் கத்தோலிக்கர் பகுதி புரட்டெசுத்தாந்தர் பகுதி என ஒன்றுக்கொன்று விரோதமுள்ள பகுதிகளாகச் சேர்மனியைப் பிரித்தது ; சேர்மானியச் சிற்றரசர்கள் திருச்சபைக்குரிய வருமானங்களையும் உடைமைகளையும் கவர்ந்து அதன் மூலம் தங்கள அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்கும் அது ஏதுவாக இருந்தது. இந்தப் போரின் விளைவாற் சேர்மனி களைப்படைந்தது. இப்போர், அரசியல் முறைமைக்கு வேண்டிய இணைப்புத் தத்துவமெதுவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லாதது ; ஆனால், வீயன்னு அரண்மனைக்கும் பேளின் அரண்மனைக்குமிடையில் அமைதியற்ற நிலையில் ஊசலாடும் பல சிற்றரசுகளை உண்டுபண்ணிவிட்டது. 1815

சேர்மனியில் நெப்போலியனது பணிநெறியின் விளைவுகள்.

நெப்போலியனே இக்கால சேர்மனியைப் படைத்தானெனல் வரலாறு கண்ட வஞ்சப் புகழ்ச்சிகளில் ஒன்றாகும். ஐக்கிய சேர்மனி அமைவதற்கும் சேர்மானியப் பேரரசின் அத்திவாரத்துக்கும் அவன் இருவகையிலுதவினான். ஆக்கும் தன்மையுள்ள அவனுடைய அரசறிவினால் சேர்மனிக்கு ஏற்பட்ட ஒரு விளைவு நேரடியானது. மற்றது அவனுடைய ஆட்சிக்கேற்பட்ட எதிர்ப்பினின்றும் பிறந்த மறைமுகவிளைவாகும். நெப்போலியன், முதலாவதாக ஆணிலத்திற்குரிய அதிகாரத்தைப் பரந்த அடிப்படையில் பிரித்து வழங்கிச் சேர்மானிய அரசு முறைமையை மீண்டும் மாற்றியமைத்தான். இரண்டாவதாக, இருநூற்றுக்கு மேற்பட்டனவாகவிருந்த சுதந்திர அரசுகளை முப்பத்தொன்பதாகக் குறைத்தான். பேரரசின் பெருவீரர்களால் ஆளப்படும் சிற்றரசுகளை விலக்கினான். இவற்றுள் பல சிற்றரசுகள் அளவிற் சிறியனவாகும். ஆம்பேக்கு, பிராங்குபோட்டு, பிறமன், உலூபெக்கு ஆகிய மாநகரங்களைத் தவிர்த்து ஏனைய சுதந்திர நகரங்களை அழித்தான். இதுவரையும் அமுக்கிக் கொண்டிருந்த சிற்றிறைமைகளினின்றும் சேர்மனிக்கு விடுதலை கிடைத்தது. எனவே இச்செயல் சேர்மனியின் அரசியற் றேசப்பட அமைப்பை எளிதாக்கியது. கூட்டாட்சி ஐக்கியமானது ஏற்படக் கூடிய அளவிற்குச் சேர்மனியின் அரசியலை நெப்போலியனின் செயல்கள் பண்படுத்தின. இது ஒருபுறமிருக்க அழியாது எஞ்சியிருந்த சிற்றரசுகளின் வலிமை வளர்ந்தது. போட்டாபோட்டியும் சுதந்திர விருப்பமும் அதிகரித்தன. 1806 இல் பரிசுத்த உரோம இராச்சியம் அழிக்கப்பட்டு அதனிடத்தில் பிரான்சின் ஆதரவிலிருக்கும் அரசுகளது நாட்டுக் கூட்டிணைபபு நிறுவப்பட்டது. இவை இரண்டும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளாகும். பலகாலமாக இந்தப் பேரரசும் வழக்கொழிந்த கடந்தகால ஞாபகச் சின்னமாகவே இருந்தது. இருந்தபோதிலும் இந்தப் பேரரசு சூலக்கப்பெற்றதனால் திருத்தமுடியாத வகையில் பழமையின் தொடர்ச்சி துண்டிக்கப்பட்டதென்பது உள்ளடங்கிய கருத்தாயிற்று. உண்மையில் புதிய சேர்மானிய இராச்சிய மொன்றைக் களங்கமில்லாத புதிய அடிப்படையில் கட்ட வேண்டுமென்பதே இதன் கருத்து. சேர்மனியை ஆளவேண்டுமென்கின்ற வரலாற்றுப் பிரசித்தமான உரிமையை ஆபிசுபேக்குக் குலமுறை தானாகவே விட்டுக் கொடுத்தது. அற்றைநாள் தொட்டு ஒசுற்றியா தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 யிட இடமளியாத புதிய சேர்மனியொன்றை உருவாக்கலாம் என்ற எண்ணம் ஏற்படலாயிற்று. நெப்போலியனுடைய செயலால் ஏற்பட்ட மிகமுக்கியமான பலாபலன் நாட்டின வளர்ச்சியென்க. இதனை நெப்போலியன் சற்றேனும் எதிர்பார்க்கவில்லை. நெப்போலியனுக்கெதிராகச் சேர்மனி மீட்சிப் போரை நடத்தியது. சேர்மனி நடத்திய எல்லாப் போர்களையும் விட இந்தப் போர் அடிப்படையில் அதிகம் மாறுபட்டிருந்தது. இப்போர், உலக மீக் கொளகை நோக்கமாகக் கொண்டு தொடுக்கப்பட்ட தொன்றன்று. இந்நாட்டின வுணர்ச்சியானது அந்நியராட்சியிலிருந்த தம்மை விடுதலை செய்வதற்கு மக்கள் செய்த எழுச்சியாகும். யாது மூரேயென்ற உலகக் குடியுரிமைப் பற்றுள்ள தத்துவஞானியான கோதே என்பான் தன்னுடைய இக்கொள்கை பற்றிப் பெருமைப்பட்டான். ஆன்று என்பான் இயற்றிய "எங்கள் தந்தையர் நாடு யாது" என்னும் போர்க் கீதத்தில் நாட்டின் மனோநிலை விளக்கப்பட்டது. சேர்மனியில் வாழ்ந்த நன்மக்களின் தாராள ஆர்வத்திலை ஊக்கப்பட்ட சத்திக்கு நெப்போலியனுடைய தளையை நீக்குதற்கு வாய்ப்புக் கொடுத்திருந்தால் பத்தொன்பதாம் நூற்றாண்டிற் சேர்மானிய வரலாறு பிறிதோர் பாதையிற் சென்றிருக்கும். சேர்மனியிலிருந்த நாட்டினவாதியின் உணர்ச்சிமிக்க நம்பிக்கை எங்ஙனம் ஏமாற்றத்திலை தளர்ந்தது என்பதையும் சேர்மனியின் ஐக்கியத்தை மக்களல்லாமல் அரசாங்கங்களே ஏற்படுத்தின என்பதையும் இங்கு காட்டல் இன்றியமையாததாகும். பின்னர் ஏற்பட்ட ஐரோப்பிய அபிவிருத்திகளெல்லாம் இவற்றின் விளைவாற் பெரிதும் பாதிக்கப்பட்டன.

ஐக்கிய சேர்மனியின் வளர்ச்சியைத் தடுத்த காரணங்கள்.

நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஒரு சந்ததி காலத்துக்குச் சேர்மனி முன்னேற்றமடையாதிருந்தது. சுதந்திரத்துக்காக மக்கள் செய்த தியாகங்கள் மறக்கப்பட்டன; அன்றேல் அவை புறக்கணிக்கப்பட்டன. அந்த மக்களுடைய உரிமையான நாட்டின ஐக்கியமென்னும் உணர்ச்சியைத் திருத்திசெய்வதற்காக இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேற் செய்த முயற்சிகளெல்லாம் பலனளிக்கவில்லை எனும் உண்மையை விளக்குவதற்கு நான்கு முக்கிய காரணங்களுண்டு. பெரும் போரை அடுத்துவரும் காலத்தில் முக்கியமான சீர்திருத்தம் செய்வது உகந்ததன்று. போரினால் ஏற்பட்ட பாழ் நிலையைச் செப்பனிடுவதற்கும் அந்த நாட்டின் பொருள்வளத்தைப் பெருக்குதற்கும் நாட்டின் சத்திகள் இயல்பாகவே செலவாகும். நெப்போலியனுடன் செய்த போராட்டத்திலை ஏற்பட்ட களைப்பிலிருந்து முதலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்மனி தேறவேண்டும். அத்துடன் அது புதிய ஆணிலத்திற் குரிய சூழ்நிலைக்கும் ஏற்றதாக வேண்டும். இவற்றைச் செய் தற்கு முன்னர் சேர்மனியானது அரசியலே மீண்டும் அமைப் பதிற் கவனமாகத் தன் கருத்தைச் செலுத்த முடியாது. இந்தச் சுதந்திர வளர்ச்சி தடைப்பட்டதற்கு மற்றொரு கார ணம் சேர்மானியச் சீர்திருத்தவாதிகளிடம் நிலவிய ஐக்கிய மின்மையாகும். பொதுத் திட்டமொன்றில் தங்களுடைய கவ னம் முழுவதையும் செலுத்துவதற்குப் பல்வேறு வழிவகை களை அவர்கள் எடுத்து மொழிந்தனர். ஒசுற்றியாவை விலக்கி விட்டுப் பிரசியாவின் தலைமையிற் சேர்மனி ஒன்றுபட வேண்டு மெனச் சிலர் விழைந்தனர். "நிலமானிய முறையைப் பெரும் பாலும் ஆதரிக்கும் பிற்போக்கு வாதிகள்" ஆகிய வேறு சிலர் ஆபிசுபேக்குக் குலத்தின் அதிகார முதன்மையில் சேர்மானியப் பேரரசை மீண்டும் அமைக்க விரும்பினர். பிரிக்க முடியாத ஒரேயொரு சேர்மானியக் குடியரசையும் சிலர் ஆதரித்தனர். "சேர்மனியில் ஐக்கியத்திற்குள் இவ்வாறு வேற்றுமையும் ஒற் றுமைக்கேடும், சில வேளைகளில் உள்நாட்டுப் போர் ஏற் படக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது", எனக் காள் மாக்குசு எழுதினான்[1]. இந்தச் சீர்திருத்தவாதிகள் ஏனைய அலுவல்களிற் கொண்டுள்ள கருத்துக்களும் மேற்குறிப்பிட்டவைபோல் வேறு பட்டனவாயேயிருந்தன. உள்நாட்டுப் பாலனச் சிக்கல்கள் முன்னணிக்கு வந்தன. புரட்சியினாலேற்பட்ட சமுதாய அரசியல் மரபுகளை ஆதரித்துப் பேசுகிறவர்களுடன் பழையமுறையை ஆத ரிப்பவர்கள் பொருதவும் தொடங்கினர். மீட்சிப் போரானது, தாராள தத்துவங்கள் கொண்டவர்களினது வெற்றியோ அல்லது எதிர்த்தாக்க உணர்ச்சி உள்ளவர்களினது வெற்றியோ என நிச்சயிப்பது கடினம். நெப்போலியனின் ஆட்சிமுறையானது தனியாட்சி முறையானபடியால் முன்னையோரும், அது பிற்போக் கிலிருந்து தோன்றியமையாற் பின்னையோரும் அதனை வெறுத் தனர். இங்ஙனம், குழப்பமான கொள்கைகளும் முரண்பா டான பல்வேறுபட்ட கருத்துக்களும் பலனில்லாக் கட்சிப் பகைக் குக் காரணங்களாயின.

1815
(1) சோர்வு.
(2) கட்சிப் பகை.

சேர்மானிய வரலாற்றில் சிறப்புக்கூறுயமைந்தது அந்த நாட்டு வளர்ச்சிமீது கல்விமான்கள் செலுத்திய செல்வாக்காகும். நெப்போலியனை எதிர்த்து நடந்த எழுச்சியை அவர்கள் பெரி தும் தூண்டிவிட்டார்கள். சேர்மானிய நாட்டினவாதிகள் வீயன்னா மாநாட்டில் ஏமாற்றமடைந்தனர். அதன்பின்னர்

அறிவாற்ற லியக்கம்.

1 K. Marx, Revolution and Counter-Revolution(ed. 1904), 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815–19 சேர்மனியிலுள்ள பல்கலைக் கழகங்கள்–சிறப்பாக யெனா–அரசியலில் மக்களுக்கு ஏற்பட்டிருந்த அக்கறைக் குறைவைப் போக்குவதற்கும் அந்தக் காலத்துக்கு வேண்டிய அரசியற் றேவைகள்மீது பொதுமக்களினுடைய அபிப்பிராயத்தை ஒருமித்துச் செறியச் செலுத்துவதற்கும் வேண்டிய பணியைச் செய்தன. எலவே கல்வியூட்டப்பட்ட சந்ததியினரால் அத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வியலாது. ஆகவே, எதிர்காலத்திற் கல்விகற்பவர்கள்மீது அவைகள் தங்கள் கவனத்தைத் திருப்பின. பொறுமையற்றவர்களுக்கும் இந்தத் திட்டம் திருத்தியளிக்கும். ஏனெனில், ஆகக்கூடியது நான்கு வருட எல்லைக்குள் இந்த மாணவ சந்ததியினரும் குடிமக்களாகிவிடுவர் என மெற்றெணிக்கு எழுதினன். சேர்மானியப் பல்கலைக்கழகங்கள் சட்டப்படி நிறுவப்பெற்ற ஒழுங்குகளைப் புறக்கணிக்கவும், எதிர்க்கவும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இளைஞர்களைத் தூண்டி விடுகின்றன என அவன் முறையிட்டான். புரட்சிக்காக மக்களைப் பயிற்றுவது தவிர வேறு ஒன்றையும் அவை திட்டமிடவில்லை யெனவும் அவன் குறிப்பிட்டான். சேர்மனியின் மக்களெல்லோரும் ஒன்றுபட்ட சேர்மானிய நாட்டினமாக ஐக்கியப்படுவதை இகழ்ச்சியான ஒரு நோக்கமாகக் கருதிய மெற்றெணிக்கு சேர்மனியிலுள்ள இளைஞர்களிடம் புரட்சித் தத்துவம் பரவுவதைக் கண்டு பெரும் அச்சமடைந்தான். எதிர்காலத்தில் வரவிருக்கும் அரசாங்க அலுவலாளர்களும் பேராசிரியர்களும் முதன்மை வாய்ந்த இலக்கிய ஆசிரியர்களும் இங்கே புரட்சி செய்தற்காகப் பயிற்றப்பட்டுள்ளனர்.[1] சென் சாத்து என்னும் மாணவர்களினுடைய நாட்டினக் கழமொன்று ஆபத்து விளைவிக்கக் கூடிய புரட்சிகரமான ஒன்றெனக் கருதப்பட்டது. உவாற்றுபேக்கு விழாவுடனும் கொற்செபியூவின் கொலையுடனும் அரசியல் நெருக்கடி உச்ச நிலையை அடைந்தது. இந்த இரு நிகழ்ச்சிகளையும் நெருக்கடியானவையெனப் பெருப்பித்துக் காட்டியபடியினால் சேர்மானிய நாட்டுக் கூட்டமைப்பு குலையக்கூடிய தொன்றென்பது உட்செறிந்த கருத்தாயிற்று. உவாற்றுபேக்கு விழாவானது (1817) இலிச்சிக்குச் சமரினையும் மதச்சீர்திருத்தத்தின் முன்னூறும் ஆண்டினையும் கொண்டாடுதற்காக யெனாப் பல்கலைக் கழக மாணவர்கள் செய்த தாயகப்பற்றுடைய செயலாகும். ஆனால், இவர்கள் விழா முடிவிற் பெரியதொரு சொக்கப்பானையைக் கொளுத்திப் பிற்போக்கின் பல்வேறு சின்னங்களைத் தீக்கிரையாக்கினர். இது இளைஞர்களின் உணர்ச்சிப் பெருக்கால் எற்பட்ட நிகழ்ச்சியன்றி

[1] Metternich, Memoirs (ed. 1811), iii. 206, 300, 317.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறென்றுமன்று. இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அளவுக்கு மீறி மிகைப்படுத்திப் பெருப்பித்துக் காட்டப்பட்டது. இதனால் அதிகாரிகள் அச்சங்கொண்டனர். இவ்வச்சம் கொற்செபியூவின் கொலையினால் (1819) மேலும் அதிகரித்தது. பல்கலைக்கழகங்கள் அரசியற் கிளர்ச்சியின் மத்திய நிலையங்களெனக் கொற்செபியூ புகார் செய்து அவற்றைத் தாக்கியபடியால் அவன் அவமதிக்கப்பட்டான். சேர்மானியத் தாராளர் அவனை வெறுத்தனர். ஏனெனில், பேரரசன் அலச்சாந்தருடைய கொள்கை கைவிடப்பட்டதற்கு அவனின் செல்வாக்கே காரணமாகும். பேரரசன் அலச்சாந்தர் என்பவன் "தாங்கள் பெரும் பலனைப் பெற எதிர்பார்த்திருந்த காவலாளன்" எனத் தாராளர் கருதினர்.[1] 1819

(3) காள்சுபாது ஆஞ்ஞைகள்.

இதன் விளைவிலுற் சேர்மானிய அரசாங்கங்கள் ஆதாரமற்ற பயங் காரணமாக மிதமிஞ்சிய செயல்களில் ஈடுபட்டன. அவற்றின் பீதியை மெற்றெணிக்கு என்பான் நெய் சொரிந்து நெருப்பைத் தூண்டிவிடுவது போலத் தூண்டி விட்டான். "அரசாங்கங்கள் இப்பொழுது பயந்திருந்தமையால் செயலாற்றுவதற்கு அவைகள் இப்பொழுது இணங்கியுள்ளன," என அவன் எழுதினன். எங்கும் பிற்போக்குச் சத்திகள் கவிந்தன. கோதே இசிச்சிலர் ஆகியவர்களுடைய சகாயனும், சேர்மானியக் குழப்பத்திற்குக் காரணராயும் காப்பாளராயுமிருந்தோருள் ஒருவனுமாக ஒசுற்றிய அமைச்சர்களாற் கருதப்பட்டவனுமான சாட்சு – வைமாக் கோமகன் பயனற்ற எதிர்ப்புக் காட்டினன். அது பின்வருமாறு: "சிந்தனைச் சுதந்திரமும் கற்பிக்குஞ் சுதந்திரமும் பல்கலைக் கழகங்களில் இருத்தல் வேண்டும். ஏனெனில் தங்கள் அபிப்பிராய பேதங்களைப் பற்றிப் பகிரங்கமாக உரையாடுவதனால் மாணவர்கள் உண்மையை உணர்ந்து கொள்வர். அதிகாரிகளிடம் பத்தி செலுத்துவதிலிருந்து அங்குள்ள கல்விச்செல்வர்கள் பாதுகாக்கப்படுவர்." இவனுடைய எதிர்ப்புச் சிறுபிள்ளைத்தனமானது என எளனஞ் செய்யப்பட்டது. இவனுடைய எதிர்ப்பு "புரட்சிவாதக் கல்வியின் சாரம்"[2] எனக் கவனியாது விடப்பட்டது. 1819 இல் சேர்மானியக் கூட்டாட்சி மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட காள்சுபாது ஆஞ்ஞைகளினால் அடக்குமுறையாட்சியிற் புதிய தோர் ஊழிதொடங்கிற்று. அத்துடன் மூப்பது ஆண்டுகளுக்குச் சேர்மானிய மக்களுக்கு வல்லாட்சித் தளைகளும் பூட்டப்பட்டன. பல்கலைக் கழகங்களை மேற்பார்வை செய்யவும், வெளியீடுகள் எல்லாவற்றையும் கடுமையாகத் தணிக்கை செய்யவும் ஆணையாளர்களை எல்லா அரசுகளும் கட்டாயமாக நியமித்

[1] Ibid. iii. 254.
[2] Metternich, Memoirs (ed. 1881), iii. 271, 272.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 தல் வேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. இரகசியக் கழகங்களைப் பரிசீலனை செய்யவும் அவைகளைப் பற்றிய சான்றுகளை நீதிமுறை மன்றங்களுக்குச் சேகரித்துக் கொடுக்கவும் மத்திய ஆணைக் குழு ஒன்று மெயின்சு நகரத்தில் நிறுவப்பெற்றது. இங்ஙனம் மெற்றெணிச்கு தன்னுடைய பூட்கைக்குத் தனி வெற்றி ஒன்றைப் பெற்றான். நடந்த நிகழ்ச்சிகளெல்லாம் அவனுக்குச் சாதகமாகவே இருந்தன. அவன் அவைகளைத் தன்னுடைய நன்மைக்காகப் பயன்படுத்துவதிற் பெருந் திறமையைக் காண்பித்தான். இரசியச் சாரான முதலாம் அலச்சாந்தர் தாராளர் போல நடந்து பிற்போக்கான மனநிலையை இதுவரையும் சேர்மனியில் வளர்ச்சியடையச் செய்தான். மெற்றெணிக்கு, இப்பொழுது அலச்சாந்தரையும் தன்வசமாக்கினான். அதே நேரத்திற் பிரசிய அரசுக்கு ஆபத்தை உண்டுபண்ணக்கூடிய பெரும் சூழ்ச்சி ஒன்று நடைபெற்றுவிட்டது என்ற எண்ணத் திலுற் பிரசிய மன்னனும் அச்சுறுத்தப்பெற்றான். நெப் போலியனின் வீழ்ச்சியினால் ஏற்பட்ட சிறுபுகழின் பயனாக மூன்றாம் பிரதரிக்கு உவிலியம் என்பவன் தன்னுடைய பிரதேசத்துக்கு யாப்பு ஒன்றை வழங்குவதாக வாக்களித்துள் ளான். உவிலியம் இவ்வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குத் தாமதித்தான். அவனுடைய வாக்குறுதியை நிறைவேற்றும் எண்ணத்தைக் கைவிடும்படி மெற்றெணிக்குத் தன்னுடைய செல்வாக்கை அவனிடம் காட்டி வெற்றிபெற்றான். சேர்மா னியத் தாராளர் புரட்சிச் சத்திகளை இயக்குதற்குப் பிரசியாவை ஒரு கருவியாகக் கொள்ளுவதற்கு எண்ணியுள்ளன ரென்பதை ஒசுற்றிய அரசறிஞனை மெற்றெணிக்கு அறிவான். பிரசிய அரசாங்கத்தை மீண்டும் திருத்தியமைப்பதனாற் சேர்மனியி லும் ஒசுற்றியாவிலும் ஏற்படக்கூடிய அளவிடமுடியாத செல் வாக்குக்கு அவன் அஞ்சினான். ஒரேயடியில் புரட்சிக்குத் தாங்கள் சரணடைய வேண்டுமென்பதே அவன்கருத்து. இதற்கு இணங்க முதலிற் பிரசியாவிற்குச் சுதந்திரமான படைப்பலம் ஒன்று தேவையென்பதை அவன் வலியுறுத்தினான். இது கலப்பிலாப் பிரதிநிதிகளின் ஆட்சிமுறையாகாது; அப்படியா கவும் மாட்டாது எனவும் அவன் வற்புறுத்தினான். எனவே, மாகாண மன்றங்களை அமைப்பதைவிட மன்னன், தொடர்ந்து வேறொன்றுஞ் செய்யப்படாதென அவன் விதந்துரைத்தான். மாகாண மன்றங்கள்பற்றி நன்கு ஆலோசனை செய்யப்பட்ட பின்னர் அவை, எல்லை வரையறுக்கப்பட்ட அமைப்பில்[1] இயங்க வேண்டுமென அவன் கருதினான். தெற்குச் சேர்

1 Metternich, Memoirs (ed. 1881), iii. 198, 301.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனியில்[1] நடந்த யாப்புப் பரிசோதனைகள் குறிப்பிடத்தக்க வெற்றி அளிக்கவில்லையென்னும் பலரறிந்த உண்மையையே, தன்னுடைய வாதத்தினை வலியுறுத்துதற்கு அவன் காட்டினான். படைப்பலத்தைக் கொண்டுள்ள முடியரசுகளுக்கு எதிராகப் பொதுமக்களின் ஆதரவைப் பெறும் நோக்கமொன்றுடனே பவேரியா, பேடன், உவுத்தெம்பேர்க்கு ஆகிய தென் சேர்மானிய அரசுகளிலும் பாராளுமன்ற ஆட்சிமுறைமை நிறுவப்பட்டது. ஆனால், ஒழுங்கினமும் பிணக்குமே இதன் விளைவாயின. 1815

(4) நாட்டின் அரசியல் நிலையிற் பிற்போக்கு.

சேர்மனியில் ஏற்பட்ட புரட்சி இயக்கத்தை அழிப்பதற்கு மெற்றெணிக்கு வலிந்து முயற்சி செய்தான். அவனுடைய வெற்றிக்கு அவனுடைய திறமையான சூழ்ச்சி மட்டுமே காரணமன்று. மிகுந்த செலவை உண்டாக்கும் முன்மொழிவுகளாலும் அரசியலனுபவமின்மையாலும் தங்கள் குறிக்கோளைப் பாழாக்கிய எதிரிகளுடைய மடைமையால் அவன் நன்மையடைந்தான். எனினும் இங்கு எடுத்துக் கூறிய காரணங்கள் துணைக்காரணங்களென்க; முக்கிய காரணங்களல்ல. நெப்போலியனை எதிர்த்து நடத்திய மீட்சிப் போர்க்களத்தில் எழுந்த நாட்டினவுணர்ச்சி பொது மக்கள் உள்ளத்திற் போதிய அளவு ஆழமாக இடம் பெறவில்லை. அக்காலத்திற் சேர்மனியின் ஐக்கியத்தைப்பற்றி இருந்த நம்பிக்கை தோல்வியடைவதற்கு இறுதியில் இதுவே காரணமாக இருந்தது. சேர்மனி ஐக்கியப்படவேண்டுமெனப் பொதுமக்கள் கோரி நிற்கவில்லை. அறிவாற்றல் படைத்த கற்ற வகுப்பினரிடையே இந்த இயக்கம் முக்கியமாக இருந்தது. அறிவாற்றல் உடையவர்களுடைய உற்சாகமானது சமயமறிந்து அலுவல் செய்யும் அவர்களுடைய திறமையை விஞ்சியதாயிற்று.

சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்பு.

1815 இன் பின்னர் சேர்மனியில் நாட்டின அரசாங்கமொன்றை நிறுவுதற்கு எடுத்த முயற்சிகள் யாவும் ஏன் பயனளிக்கவில்லையென இதுவரையும் எடுத்துக் கூறினேம். இருந்தபோதிலும், பரிசுத்த உரோமப் பேரரசு குலைக்கப்பட்ட பின்னர் அதற்குப் பதிலாக ஏதாவது அரசியற் கூட்டிணைப்பு இருக்கவேண்டியது இன்றியமையாததாயிற்று. இக்காரணத்தையிட்டு வீயன்னா மாசபையானது சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்பொன்றை நிறுவியது. அதன் ஆட்சி அரை நூற்றாண்டிற்கு மேல் நிலைபெற்றது. நாட்டுக் கூட்டிணைப்பைப் பற்றிய விதிகளிலே இதன் நோக்கங்கள்[2] விரிவாகக் கூறப்பட்டன. சேர்மனி

[1] 72 பக்கம்.

[2] E. Hertslet. The Map of Europe by Treaty (1875), i. 244 seq.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 யின் உண்ணாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்பிற்கும் கூட்டு இணைப் பாட்சியில் உள்ள அரசுகளின் சுதந்திரத்திற்கும் அந்த அரசுகளை மீறுமைச்சும் பொறுப்பளித்தலே இதன் நோக்கங்களாகும். சேர்மனிக்கு உரியனவல்லாத ஒசுற்றியா, பிரசியா ஆகிய முக்கிய அரசுகளுக்கு இப்பொறுப்பு உரியதாகவில்லை. ஆனால் சேர்மானிய அரசுகள் எல்லாம் தேவையான நேரத்தில் ஒன்றுக்கொன்று உதவி அளிக்க வேண்டுமெனவும் ஓர் அரசின் மீது மற்றரசு போர் தொடுக்கக் கூடாதெனவும் இச்சட்டம் கட்டுப்பாடு செய்தது. மத்திய மன்றமே கூட்டரசின் சாதன மாயிருந்தது. கூட்டரசு உறுப்பினர்கள் பாலனத்திற்குரிய அலுவல்களிற் புறம்பாக இருந்தபோதும் இந்த மன்றத்தில் அவர்களின் பிரதிநிதிகளிருந்தனர். கூட்டரசுத் தொடர்புக ளெல்லாவற்றையும் இந்தப் பிரதிநிதிகளடங்கிய மன்றமே கட்டுப்படுத்தியது. இந்த மன்றத்தின் சாதாரண சபையிற் பதினேழு பிரதிநிதிகளிருந்தனர். கூட்டாட்சியிலுள்ள பதி னைரு பெரிய அரசுகளுக்கும் பதினைரு பிரதிநிதிகளிருந்தனர். எஞ்சிய ஆறு பிரதிநிதிகளும் ஏனை இருபத்தெட்டாசுகளது சார்பில் இருந்தனர். ஆனால், முக்கியமான வேலைகளெல்லாம் பொதுச் சபையிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தன. இந்தப் பொதுச் சபையில் ஒவ்வோர் அரசுக்கும் குறைந்தது ஒவ்வொரு பிரதி நிதி இருந்தான். பிரதானமான அரசுகள் ஒவ்வொன்றிற்கும் நான்கு பிரதிநிதிகளும் சிறிய இராச்சியங்கள் ஒவ்வொன் றிற்கும் இரண்டு, அல்லது மூன்று பிரதிநிதிகளுமிருந்தனர். இந்தப் பொதுச் சபையில் மொத்தமாக உள்ள பிரதிநிதிகளின் தொகை அறுபத்தொன்பதாகும். "அடிப்படையான சட்டங்கள், உறுப்பினருக்குரிய நிறுவகங்கள், தனிப்பட்டவர்களது உரிமை கள், அரசியலலுவல்கள்" ஆகியவற்றைப் பாதிக்கக்கூடிய எந்த மாற்றமும் நிறைவேறுவதற்கு இந்தப் பொதுச்சபை ஏகம னதாக வாக்களிக்க வேண்டுமென விதியிருந்தது. இப்படியான விதி இருந்ததலால் திருத்தங்களையோ மாற்றங்களையோ செய்ய முடியாதிருந்தது. இந்த மன்றத்தின் தலைமைப் பதவியை ஒசுற்றியப் பேராளருக்கு வழங்கி மேலும் பாதுகாப்புச் செய்திருந் தனர். சேர்மனியிலுள்ள பிற்போக்கிற்கு மெற்றெணிக்கின் தலைமையில் உள்ள ஒசுற்றியா ஓர் அரணையிற்று.

அதன் குறைகள். இந்த யாப்பு எட்டளவிற் பல நன்மைகளைக் கொண்டிருக்க லாம். ஆனால், நடைமுறையில் இது பேராபத்து விளைப்ப தாயிற்று. வெற்றியடைவதற்கு இதற்குத் தொடக்கத்திலிரு ருந்தே வாய்ப்பிருக்கவில்லை. மெற்றெணிக்கைவிடச் சேர் மனியிலுள்ள எவரும் இதுபற்றித் திருத்தியடையவில்லை. மெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெணிக்கு மாத்திரம் இந்த நாட்டுக் கூட்டிணைப்பு இயந்திரத் தைத் தன் நலனுக் கேற்றவாறு கையாண்டான். 18 ஆம் நூற்றாண்டில் சேர்மனிக்கு மிகவும் பாதகமாக இருந்த இரு முறையாட்சியையே இது மீண்டும் அமைத்தது. சேர்மானிய ஆட்சிமுறைமையில் ஒசுற்றியாவிற்கும் பிரசியாவிற்கும் இடம் இல்லையெனத் தெளிவாகத் தெரிந்தபொழுதும், படைப் பலத்தை அடிப்படையாகக் கொண்ட இரண்டு முடியாட்சிக்கும் அரசியற் சம நிலையை நிறுவுதற்கு இது வழிதேடிற்று. ஒசுற்றி யாவின் செல்வாக்கே மேலோங்கி நின்றது. மெற்றெணிக்கு தன்னுடைய திறமையான சூழ்ச்சியினால் சேர்மானியச் சிறு அரசுகளைத் தன்பாற் கவர்ந்து கொண்டான். கூட்டிணைப்பாட்சி மன்றத்தைக் கருவியாகக் கொண்டு சேர்மனியின் ஐக்கியமான இலக்கையடைய விரும்பியவர்களை மெற்றெணிக்கின் முதன்மை தோல்வியுறச் செய்தது. விவிலிய நூலை எங்ஙனம் மாற்ற முடியாதோ, அங்ஙனம் இந்தக் கூட்டிணைப்பு அரசியல் யாப் பின் அடிப்படைச் சட்டங்களை மாற்ற முடியாதென மன்றத் தலைவரான ஒசுற்றியக் குடிப்பதி பிரகடனஞ் செய்தான். எனவே, சீர்திருத்தங்களை நடைமுறைக்குக் கொண்டுவரும் நோக்கம் இந்தப் பிரகடனத்துக்குப்பின் எவ்வித பலனையும் அளிக்க மாட்டாதென்பது வெளிப்படை. இந்த மன்றம் வேறுசில வழி களிலும் தன்னுடைய பலவீனத்தையும் குறைபாட்டையும் சேர் மானிய மக்களுக்குக் காட்டிற்று. இரண்டு குறைபாடுகளினால் இந்த மன்றம் அல்லலுற்றது : (1) இந்த மன்றத்தின் உறுப் பினர்கள் சேர்மானிய சிற்றரசர்களுடைய பிரதிநிதிகளாவர். எனவே, இந்தப் பிரதிநிதிகள் தங்கள் சிற்றரசர்களது ஆணைக்கு உட்பட்டவர்களாதலால் அந்தக் கட்டளையில் ஒரு சொல்லையும் அவர்கள் மீறி நடக்கமாட்டார்கள். சேர்மானியச் சிற்றரசர்கள் தங் களுடைய இறைமை உரிமைகளில் உறுதியான பற்றுடையரா யிருந்தனர். தங்களுடைய உரிமைகளைக் கூட்டாட்சிக்குழு அபகரிப் பதை அவர்கள் மிகுந்த உணர்ச்சியுடன் எதிர்த்தனர். தங்க ளுடைய உரிமைகளுள் ஒன்றையாயினும் கூட்டாட்சி மன்றத் திற் குக் கையளிக்க அவர்கள் உடன்படவில்லை. இந்தச் சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்பினை அரசுகளின் சங்கமொன்றென அவர் கள் கருதினர்கள். இதனை ஒரு கூட்டாட்சியென அவர்கள் ஒருபோதுங் கருதவில்லை. எனவே, இந்தச் சூழ்நிலையில் உறுப் பினர்களுக்குச் செயலாற்றுஞ் சுதந்திரம் இருக்கவில்லை. அவர் கள் எந்த அரசின் பிரதிநிதிகளாக இருந்தார்களோ, அந்த அரசின் கட்டளைப்படி நடக்க வேண்டியவராயிருந்தனர். எனவே, சேர்மனியுடைய ஐக்கியத்திற்கு இந்த மன்றம் உண்மையில் வழிகோலுவதாகவில்லை. அந்நோக்கத்திற்கு எதிர்மாறுகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 சேர்மனியின் ஆள்புல ஐக்கியமின்மையை வற்புறுத்தவே இந்த மன்றம் பயன்பட்டது. தனிப்பற்றுடைமை–சிற்றரசர்களின் சுதந்திரம்–பல நூற்றுண்டுகளாகச் சேர்மானிய அபிவிருத்திக்குத் தடையாயிருந்தது. இப்பொழுது இந்தத் தனிப்பற்றுடைமை சேர்மானிய மத்திய அரசாங்கத்தையே கைப்பற்றிக்கொண்டது. (2) இந்த மன்றத்திற்கு, தான் இட்ட கட்டளைகளைக் கொண்டு நடத்துவதற்கு இன்றியமையாத நிருவாகச் சாதனமில்லை. இதுவே இதன் இரண்டாவது குறைபாடாகும். இந்த மன்றம் கால்கொண்ட பொழுதே இதனுடைய பலவீனம் வெளிப்படையாயிற்று. பிரான்சியர் சேர்மனியைக் கைப்பற்றியபொழுது, தன் ஆள்புலத்தில் செய்த செயலெதுவும் செல்லுபடியாகாதெனத் தேர்வாளர் செய்த தற்போக்கான முடிவிற்கு எதிராகக் கேசேக் குடிமக்கள் மேன்முறையீடு செய்தபோது இப் பலவீனம் வெளிப்படையாகத் தெரிந்தது. இதைச் செய்த தேர்வாளரை மன்றம் கண்டித்தது. ஆனால், மன்றம் செய்த முடிவு அதன் ஆட்சியெல்லையை மீறியதாகுமெனச் சொல்லிக் கீழ்ப்படிய மறுத்து, அந்த முடிவை ஏற்பதற்குத் தேர்வாளர் இணங்கவில்லை. மெற்றெணிக்கு தேர்வாளருடைய சார்பில் இந்தச் செயலிற் றலையிட்டான். இறைக்கும் மக்களுக்கும் ஏற்படுகின்ற இகலாட்டுக்களில் மன்றம் தலையிடுவதற்கு உரிமையுண்டென்னும் கொள்கையானது சரியானதென வாதாடிய வனை மன்றத்தின் ஒசுற்றிய முதல்வனை மெற்றெணிக்கு கண்டித்தான். கேசேத் தேர்வாளரைக் கீழ்ப்படியச் செய்யக் கூடிய அதிகாரம் மன்றத்திற்கு இல்லை. எனவே, மன்றம் வலியிழந்தது. இதனால் மன்றத்தின் மதிப்புக் குறைந்தது. அன்றியும், இந்த மன்றத்தின் ஆஞ்ஞைக்குக் கட்டாயமாகக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை என்ற உண்மையை ஒவ்வோர் அரசாங்கமும் நன்கறிந்திருந்தது. மத்திய அரசாங்கம் நன்கு இயங்குமென்ற நம்பிக்கைக்கு, இத்தொடக்கம் ஊக்கமளித்திலது. இந்த மத்திய அரசாங்க மன்றத்தின் மூலமே சேர்மனியின் விடுதலை கிடைக்குமெனத் தாராளர் நம்பிக்கை கொண்டிருந்தனர். சேர்மனியின் வரலாறும் இந்த மன்றத்தின் பொருத்தமில்லாத போக்கிலேயே சென்றது. கொடுங்கோன்மையாட்சியால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கவோ, அல்லது எந்தவிதமான அரசியல் யாப்புச் சிக்கல்களையும் தீர்க்கவோ இந்த மன்றம் மேற்கொண்டு முயன்றிலது. பொது அலுவல்களில் இதற்கிருந்த அக்கறைக்குறைவு எல்லோருக்கும் பிரசித்தமாயிற்று. வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்த வரையில் பிறநாடுகளுக்கு ஐக்கிய முன்னணி யெதிர்ப்பைக் காட்டுவதும் உண்ணாட்டுக் கொள்கையைப் பொறுத்தவளவில்

Digitized by Noolaham Foundation

கூட்டுநாட்டுறுப்பு அரசுகளைத் தாராள போக்குத் தாக்குதலி 1815
னின்று காப்பாற்றுவதுமே இந்த மன்றத்தின் கடமைகளென மெற்றெணிக்கு விதித்தான். சுருங்கக் கூறுமிடத்து இந்த மன்றம் அவன் வகுத்த எல்லைக்குள்ளேயே செயலாற்றியது. காள்சுபாது ஆஞ்ஞைகளை நிறைவேற்றி (இதுபற்றி முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது) பொறுப்பாட்சியானது சேர்மானிய யாப் பிற்கு முரணானது எனும் தத்துவத்தை விதித்ததே இம் மன்றம் செய்த மறக்கமுடியாத செயலாகும். 1828 இற்குப் பின்னர் கூட்டங்கள் நடத்துவதையும் இந்த மன்றம் முற்றுக நிறுத்திக் கொண்டது. இம்மன்றமானது சேர்மானிய ஐக் கியத்தை வளர்க்காமல் அதற்கு முட்டுக்கட்டையாயிற்று.

மெற்றெணிக் கின் அரசியற் கோட்பாடு.

மக்களின் விருப்பத்துடன் நடக்காத அரசாங்கங்கள் மக்க ளது மனவெழுச்சியென்னும் புயலின் முதலாவது தாக் குதலிலேயே வேர்பாறிச் சரிந்துவிடுவது அத்தகைய ஆட்சியி லுள்ள குறைபாடென்க. மெற்றெணிக்கு வாய்ப்புக் கிடைத்த பொழுது செயலாற்றுபவனுவான். இவன் சூழியற் சூழ்ச்சி யில் வல்லுநன். ஆலல் தன்னுடைய சூழ்ச்சியென்னும் கட்டி டத்தை ஈடாடுகின்ற மணற்படை அத்திவாரத்திலே கட்டியெழுப்பி னன். "மன்னர்கள் செய்து கொள்ளும் சோதர உறவிலும் உள்ளதைப் பேணிநடக்கும் தத்துவத்திலுமே அரசியலமைதி தங்கியிருக்கின்றது "என்ற கருத்துடையவனுயிருந்தான். இறை களின் சங்கம் நடைமுறையில் மக்களுக்கெதிராகத் திரண்டு நிற்கவேண்டுமென்றே இது பொருள்படும். இவன் இயல்பிலே முற்றிலும் பிற்போக்கு வாதியல்லன் எனினும் சேர்மானி யச் சிற்றரசர்கள் அதிகாரத்தை அதிகமாய்த் துர்ப்பிரயோகஞ் செய்த குற்றத்தை[1] இவன் கண்டித்தான். இருந்தும் இவனுடைய பூட்கையின் அடிப்படைக் கருத்து பிற்போக்கானதாகவே இருந் தது. அப்போதிருந்த முறையை எதிர்காலத்தில் எவை எவை அழித்துவிடக்கூடுமென அவன் கருதினனே அவைகளை எதிர்த் துப் போராடும் வேலையை அவன் மேற்கொண்டான். ஆலல், தொடங்கும்பொழுதே அடக்குமுறைமையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் முறைமையானது, தோல்வியடையும் என் பது தெளிவு. சேர்மனியில் உள்ள சமுதாயத்தின் பல்வேறு தன்மைகளைப்பற்றி நுணுக்கமாக ஆராய்ந்த காள் மாக்குசு பின்வருவனவற்றை எழுதியுள்ளான் : இளர்ச்சி செய்யும் ஒரு சிலருடைய தீய நோக்கத்தின் விளைவாலேயே புரட்சிகள் எற்படுகின்றன எனக் கருதும் மூட நம்பிக்கைக் காலம்

1 Metternich, Memoirs (ed. 1881), iii. 199, 202.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815–48

முன்னரேயே மலையேறிவிட்டது. எந்த ஓரிடத்திற் புரட்சி செய்யப்படுகிறதோ அங்கு பின்னணியில் ஏதோ சமுதாயத் தேவை இருக்கிறதென்பதை இற்றை நாளில் எல்லோருமறிவர். காலத்திற் கொவ்வாத அரசியல் நிறுவகங்கள் இந்தத் தேவைகள் பூர்த்தியாகாவண்ணம் தடுத்துக் கொண்டிருக்கின்றன.... பலவந்தமாக அடக்குவதற்குச் செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியினாலும் இது மேலும் மேலும் வலுப்பெற்று இறுதியில் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறியும் நிலைமை ஏற்படும்."[1] சேர்மானிய மக்கள் ஐக்கியத்தையும் யாப்பு முறைப்படி நடக்கும் ஆட்சியையும் ஒருங்கே அடைவதற்கு 1848 இல் முதன்முதலாக முயற்சியொன்றைச் செய்தனர். சேர்மனியிற் புரட்சிச் சத்திகள் நீண்ட காலமாக இதற்கு ஏற்றனவாயிருந்தபோதிலும் பிரான்சில் ஒலியன்சு மன்னர் குலம் கவிழ்க்கப்பட்டமையே சேர்மானியப் புரட்சிக்கு அறிகுறியாயிற்று. இந்தப் புரட்சி சேர்மனியின் நாலு பக்கங்களுக்கும் விரைவாகப் பரவிற்று. சேர்மனியிலுள்ள சமுதாயங்கள் யாவும் அதிருத்தியுடையனவாயிருந்தனவென்பதை இது காட்டிற்று. 1848 இல் நடந்த இயக்கத்திற்கு இரு நோக்கங்களுண்டு. ஒருபுறத்தில் ஒவ்வோர் அரசிலும் சுதந்திரமான அரசியல் நிறுவகங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. மற்றொரு புறத்தில் ஐக்கியத்திற்கும் பிரதிநிதித்துவ மத்தியவாட்சி முறைமைக்குமான கோரிக்கையுமிருந்தது. இந்த இரண்டு நோக்கங்களையும் வெவ்வேறான இரு நோக்கங்களாகக் கொள்ளுதலே பொருத்தமாகும். ஆனால், இப்படிக் கொள்ளினும் இந்த இரண்டும் ஒரேயியக்கத்தின் இரு பிரிவுகளென்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும்.

1848 புரட்சியின் இரு அம்சங்கள்.

(1) நெப்போலியனுக்கெதிராக நடந்த மீட்சிப் போரிற் சேர்மனியின் சார்பில் போர் செய்த பரம்பரையினர் இரட்டித்த ஏமாற்றம் அடைந்தனர். சிதையினைத் தலைவனைகக் கொண்ட சேர்மானிய ஐக்கியக் கட்சியானது, நாட்டினத்தின் பொது இலட்சியத்திற்காகத் தியாகங்கள் செய்வதற்கு இயலாதிருந்த இறைச் சிற்றரசர்களால் அதன் எண்ணங்கள் கைகூடாமல் தடைப்படுவதைக் கண்டது. சேர்மானியத் தாராளர் தங்கள் குறைபாடுகளைப்பற்றி முறையீடு செய்வதற்கு இன்னும் பல காரணங்களிருந்தன. கூட்டாட்சிக் கூறுகளின் 13 ஆம் பிரிவு கூட்டிணைப்பு ஆட்சியில் உறுப்பினராக இருந்த ஒவ்வொரு சிற்றரசனும் தன்னுடைய பிரசைகளுக்குப் பிரதிநிதிகளாட்சி வழங்கவேண்டு

(1) யாப்புறு இயக்கம்.

1. Marx, op. cit. 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெனக் கட்டாயப்படுத்தியது. யாப்புறு சுதந்திரம் சேர்மனியி 1815-48
லுள்ள மக்களுக்கு அளிக்கப்பெற்ற, முறைப்படியான உறுதி மொழியாகும். உவைமார் கோமகன் தன்னுடைய ஆள்புலத் திற்கு யாப்பு ஒன்றை அளித்து மற்றவர்களுக்கு முன்மாதிரி யாக இருந்தான். ஆனால், கூட்டு யாப்பிற்குப் பாதுகாப்பளித்த மன்றம், குறித்த கூறுகளின் 13 ஆம் பிரிவுக் கட்டளைப்படி கொண்டுநடத்தும் செயலை மேற்கொள்ள மறுத்தது. தனிப் பட்ட சிற்றரசனை அவனுடைய எண்ணத்திற்கு ஏற்றவாறு செயலாற்ற அனுமதித்தது. ஒவ்வோர் அரசிற்கும் அதனுடைய சொந்தக் கருத்துக்கேற்றபடி உண்ணூட்டு அலுவல்களைக் கட்டுப் பாடு செய்யுமுரிமையுண்டென மெற்றெணிக்கு ஆணை பிறப் பித்தான்.[1] இந்தக் கொள்கையை யொட்டி நடப்பதில் அவன் நிலையான போக்கைப் பின்பற்றவில்லை. எனெனில், காள்சு (அ) தென் சேர்மனியில்.
பாது ஆஞ்ஞையை எல்லாச் சிற்றரசர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவன் வற்புறுத்தியதை முன்னரே கண்டுள் ளோம். ஆகவே, சேர்மனியின் கூட்டு அரசாங்கங்கள் தாம் நினைத்தபடி செயலாற்றும் சுதந்திரமானது, நடைமுறையில் ஒசுற்றியா விரும்பியபடி நடக்க வேண்டும் என்பதாகும். ஒரே யொரு வழியில் மாத்திரம் சேர்மானிய அரசாங்கங்களுக்கு எந்த விதமான கட்டுப்பாடுமில்லை. அதாவது, தாங்கள் விரும்பிய அள விற்கு அவை பிற்போக்குடையனவாக இருக்கலாம். பெரும்பான் மையான அரசுகள் இவ்வனுமதியைத் தங்களுடைய நன்மைக் காகப் பயன்படுத்துவதற்குத் தயங்கவில்லை. கருத்தறிவு மிக்க உவைமார் கோமகன் முற்போக்குப் பாதையில் வழிகாட்டிச் சென்றான். அவன் காட்டிய வழியைப் பவேரியா, உவூத்தெம் பேக்கு, பேடன் ஆகிய அரசுகள் பின்பற்றின. தென் சேர்மனியில் பிரசியாவுக்கு இருந்த செல்வாக்கைத் தனதாக்கிக்கொள்ளப் பவேரியா ஆவல் கொண்டிருந்தது. எனவே, பவேரியா தன் னுடைய தலைமையில் முற்போக்குக் கருத்துள்ள அரசுகளைச் சேர்த்துக் கூட்டுறவொன்றை நிலைக்கச் செய்தது. பவேரி யாவுக்குப் பேடன் இராச்சியத்தைத் தனதாக்கிக் கொள்ளும் எண்ணம் இருந்தது. தாராளப் போக்கு அனுதாபங்களை வெளிக்காட்டி அதன் மூலம் பொது மக்களின் அபிப்பிராய யத்தை மட்டுப்படுத்துவது விரும்பத்தக்கது போலத் தோன் றிற்று. இந்த ஆபத்துத் தன்னை எதிர்நோக்கி நிற்பதைக் கண்ட பேடன் மன்னன் தன்னுடைய குலத்தினருடைய செல் வாக்கைப் பலப்படுத்தவும் பேரரசன் அலச்சாந்தருடைய ஆதர வைப் பெறவும் யாப்பொன்றை வழங்கினான். உவூத்தெம்பேக் கில் யாப்புறு அரசியலின் மரபுகள் இன்னும் நிலைத்து நின்றன.

1 Memoirs, iii. 312.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815-48

இக்காலப் போக்கிற்கு ஏற்ப அமைந்த யாப்பு கண்டிப்பாக வெற்றி பெற்றிருக்கக்கூடும்; உயர்குடியினதும் குருத்துவத்தினதும் தடையான சூளுகிலை இந்தப் பரிசோதனை தோல்வியடைந்தது. இந்த இரு கன்னையினரும் வரலாற்றின் இடைக்காலப் பகுதியில் தங்களுக்கிருந்த தனியுடைமைகள் இப்பொழுதும் இருந்தாலன்றித் திருத்தியடையமாட்டார். இக்காரணத்தால் இந்தத்திட்டம் சிதைந்ததென்க. சேர்மனியிலுள்ள ஏனைய சிறு அரசுகளில் இந்தத் தாராளக் கொள்கை உண்மையான முன்னேற்றமெதையும் அடையவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும், சேர்மனியில் எழுந்த அரசியல் யாப்பு இயக்கங்களின் கதி பிரசியாவின் போக்கிலேயே தங்கியிருந்தது. பிரசியாவின் ஆள்புலமும் படைவலியும் அதனை முதன்மையான சேர்மானிய வல்லரசாக்கின. ஒசுற்றியாவினதோ, பிரசியாவினதோ பூட்கையிலும் யாப்பிலும் அடிப்படை மாற்றங்கள் நிகழாவிடின் துணை முயற்சிகளும் வெற்றிகளும் எவ்வித பயனையும் அளிக்காவெனக் காள்மாக்குசு பின்னர் எழுதினன். பிரசிய மன்னன் மனவலிமையற்றவனாக இருந்தபோதிலும் பிடிவாத குணமுடையவன். பிற்போக்கு, முற்போக்கு ஆகிய ஈர் அந்தங்களுக்கிடையில் இவனுடைய உள்ளம் நெடுநாளாக ஊசலாடிற்று. தாழ்ந்த நிலையிலிருந்த பிரசியாவைச் சிதெயினின் உதவியுடன் மேல் நிலைக்கு உயர்த்தி அமைச்சனான ஆடன்பேக்கு தாராளருக்குச் சார்பாக வெற்றி பெறுவதுபோல் சிலவேளைகளில் தோன்றியது. ஆனால், ஒசுற்றியா தலையிட்டுப் பிரசியாவை முற்போக்குப் பாதையிற் செல்லவிடாது பிற்போக்குப் பாதைக்கு ஈர்த்தது. 1818 இற்குப் பின்னர் அச்சமயம் இயக்கோபிக்கட்சியினனல்லாத அலச்சாந்தர் தன்னுடைய புரட்சிப்போக்கைக் கைவிட்டான். இவனும் இப்பொழுது ஒசுற்றியாவிற்கும் பக்கபலமானான். ஒசுற்றிய இரசிய ஐக்கியம் எதிர்க்க முடியாததாயிருந்தது. மெற்றெணிக்கின் செல்வாக்கு வெற்றி பெற்றதென்பதை முன்னரேயே காட்டியுள்ளோம். பிரசியாவிலுள்ள யாப்பு, பிரச்சினை நிரம்பியதென்பதை இங்கு ஒப்புக் கொள்ள வேண்டும். கோட்பாட்டுத் தாராளருக்கு இப்பிரச்சினை இலகுவானதாகத் தோன்றலாம். எனினும், இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் அரசறிஞர் அதனால் எற்படக்கூடிய இன்னல்களை உணர்ந்தாகவேண்டும். பிரசியாவானது ஒன்று சேர்ந்த உறுதியான ஓர் இராச்சியமன்று. தனித்தனியாயிருந்த பல மாகாணங்கள் இணைக்கப்பெற்றதனால் பிரசியா பலநிற ஓவியம் போல உண்மையான ஒற்றுமையின்றி இருந்தது. மக்களிடையே தலத் தாயகப் பற்று இருந்ததெனினும், நாட்

(ஆ) பிரசியாவில்.

Digitized by Noolaham Foundation

டின உணர்ச்சி குறைவாகவே இருந்தது. பிரசியாவின் ஆள் 1848
புலங்கள் பல்வேறுபட்டு இரைனிலந்து, கிழக்குப் பிரசியா, மேற்குப் பிரசியா, போலந்து ஆகிய மாகாணங்களாக இருந்தன. பணிக்குழுவாட்சி யொன்றே இந்த ஆள்புலப் பரப்பின் ஒற்றுமைப் பிணிப்பாகிற்று. 1815 இல் நடந்த ஒப்பந்தத்தின்படி, பிரசியாவுக்கு, மேலும் பரந்த ஆள்புலங்கள் கிடைத்தன. இந்தப் பரந்த ஆள்புலங்களைத் தம்வயமாக்குதற்குப் பிரசிய அரசறிஞர் தங்கள் சத்தி முழுவதும் செலவழித்தனர். இதனால் குடித்தொகை திடீரென இரட்டித்தது. இந்த ஆள்புலத்தின் எல்லையை வகுக்க வேண்டிய தேவையும் உண்டாயிற்று. உண்ணாட்டுப் பாலனத்தின் பிரச்சினைகளைத் தவிர அரசியற் கட்சிகளால் ஏற்பட்ட குழப்பமும் இருந்தது. அத்துடன் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சமுதாய அமைப்பினால் ஏற்படும் கெடுதலான விளைவுகளும் இருந்தன. பிற்போக்குக் கொள்கையுள்ள பிரபுக்கள் குலவழி நிலக்கிழார்களுக்கும் படைவலியாட்சிக் கொள்கையினால் நிலவும் நிலைக்கும் ஓர் எடுத்துக் காட்டாகவே பிரசியா அன்றும் இன்றும் இருந்து வருகின்றது. ஊராண்மை வகுப்பினருடைய உரிமை கொண்டாடலும் போர்ப் படை மரபின் ஆதிக்கமும் ஒழுங்காக நடைபெறும் யாப்பு அபிவிருத்திக்குப் பாதகமாகவே இருந்தன. இறுதியாக, தாராளப் போக்குத் தத்துவங்கள் விரைவாக முன்னேறுததற்குப் பிரசிய மக்களுடைய உளப்போக்கும் காரணமென்க. அரசியலின் தாராண்மைத் தத்துவங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாயுள்ளது தனியாண்மை என்க. சுதந்திர நிறுவகங்களுக்காக எழுகின்ற கோரிக்கை—அதாவது, சிந்தனைச் சுதந்திரமும் செயல்புரிகின்ற சுதந்திரமும் வேண்டுமென்னும் கோரிக்கை—தனியொருவனின் உரிமையின் கோரிக்கையென்க. ஆனால், பிரசியாவில், தனியொருவன், அரசுக்குக் கீழ்ப்பட்ட வனாவான். இதற்குக் காரணம் வரலாற்று ரீதியானது. பிரசிய அரசின் அருஞ் செயல்களின் விளைவே அவ்வரசின் வளர்ச்சி என்பதே அக் காரணமாகும். பிதா முறை வல்லாட்சியின் திறமைக்காகச் சொந்தக் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்தையும் முன்வந்து செயல்புரியும் தன்மையையும் தியாகஞ் செய்வதற்குத் தனியொருவன் ஆயத்தமாகவிருந்தான். இப்படியான சூழ்நிலையில் தாராண்மை செழித்து வளர இயலாது. 1848 இல் பிரசியத் தாராளர் அரசியலதிகாரத்தைப் பெறுவதற்குச் செய்த முதல் முயற்சி இலகுவாகத் தோற்கடிக்கப்பட்டமையின் காரணத்தை மேலே குறிப்பிட்டவற்றைக் கொண்டு விளக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் பிரதரிக்கு உவிலியம் (1840–1861). 1848;

1830 இல் பிரான்சியப் புரட்சியின் வீளைவு சேர்மனியில் அதிக மாயிருக்கவில்லை. எனினும் ஒருசில அரசுகளில், நிலைமை சகிக்க முடியாததாயிருந்தது. இந்த அரசுகளுக்கு, சனுகைகள் கொடுக்க வேண்டிய வலுக்கட்டாய நிலை ஏற்பட்டது. இதுவரையும் குறைந் திருந்த அடக்குமுறைக்குப் புத்துயிர் அளிப்பதே இந்த அரசுக ளில் ஏற்பட்ட முக்கிய வீளைவாகும். மன்றம் மேலும் புதிய பிற்போ க்கு ஆஞ்ஞைகளை மன்றுபடுத்திற்று. ஆனல், 1840 இல் நான்காம் பிரதரிக்கு உவிலியம் பிரசிய அரசுகட்டிலேறினன். அத்துடன் ஒரு புதிய ஊழி அண்மையிலுள்ளது போலத் தோன்றிற்று. தனக்கு முன்னராண்ட மன்னனுடைய மிதமிஞ்சிய பணிக்குழுவாட்சிக்கும் படைப்பல முடியாட்சிக்கும் அவன் அனுதாபம் காட்டவில்லை யென்பது எல்லோருக்கும் தெரியும். பிரதிநிதித்துவ முறை மையை அவன் ஏற்று நடக்கும் உளப்பான்மையுள்ளவன் என்பதும் தெரிந்ததொன்றுகும். வணிகம், உற்பத்தி ஆகிய வற்றில் ஈடுபட்டிருந்த நடுவகுப்பினர் நாளடைவில் அரசாங் கத்தில் பங்குபற்றத் தங்களுக்கு அனுமதி கிடைக்கும் என்னும் பேரவாவை உடையராயிருந்தனர். இங்கிலாந்திலும் பிரான்சிலு மிருந்த நடு வகுப்பினரைப் போலல்லாமல், பிரசியாவிலுள்ள இவ்வகுப்பினர் எண்ணிக்கையிலும் செல்வத்திலும் குறைந் தவராவர். பணிக்குழுத் தன்னுட்சியினல் தங்கள் சத்திக ளெல்லாம் கட்டுப்பட்டிருப்பதை இவர்கள் உணர்ந்தனர். தங்க ளுடைய அரசியற் செயல்களுக்கு அதிக வாய்ப்பையும் இவர்கள் விழைந்து நின்றனர். இவர்கள் எதிர்பார்த்திருந்தவையெல் லாம் ஏமாற்றத்தை வீளைத்தன; ஏனெனில், இவர்கள் நம்பி யிருந்த அரசன் நிலமானிய முறைப்படி நடக்கும் நிறுவகங் களையும் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருடைய உரிமைகளையும் புதுப்பிப்பதிலேயே கூடிய கவனஞ் செலுத்தினன். சுருங்கக் கூறின், இதனை "விழுமியோருடைய மேம்பாடுள்ள சமுதாய நிலை" என்று சொல்லலாம். தாராளச் சத்திகள் தம் உரிமை களை வற்புறுத்துவதற்கு ஏற்றகாலம் கிடைத்தது போலத் தோன்றியது. பாரிசு நகரிற் கலாம் ஏற்பட்டதைச் செவிமடுத்ததும் பேளின் நகரவாசிகள் கலகம் வீளைத்து வீதிகளில் குறுக்கே சிற்றரண்களையமைத்தனர். இந்தக் கலக நாட்களை "மாச்சுத் தினங்கள்" எனக் குறிப்பிடுவர். இதன் வீளைவினல் நான்காம் பிரதரிக்கு உவிலியம் சேர்மானியப் பேரரசின் கொடிகளைப் பறக்க விட்டுக்கொண்டு தெருக்களிற் பவனி போகவேண்டிய கட்டாயமேற்பட்டது; தணிக்கையைக் குறைக்க வேண்டிய கட் டாயமும் ஏற்பட்டது. மாகாண மன்றங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட இணைப்பு மன்றத்தையும் கட்டாயம் கூட்டுவிக்க வேண்டியிருந்தது. சேர்மனியிலுள்ள சிறிய அரசுகளிலும்

மாச்சுத் தினங்கள்.

Digitized by Noolaham Foundation

இவைபோன்ற நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. "கடைசியாகப் புரட்சி 1848
நெறியில் ஈடுபடுவதற்குச் சேர்மானிய மக்கள் கால் கொண்டு விட்டனர்" என அக்காலத்தில் வாழ்ந்த ஒருவன் குறிப்பிட் டான். பொறுப்பாட்சி, மக்கணயக்கும் அமைச்சுக்கள், அச்சுலகுச் சுதந்திரம், நடுவர் விசாரணை, மத வழிபாட்டிற் சகிப்புத் தன்மை ஆகியவை வேண்டுமென்ற குரல்கள் எங்கணும் எழுந் தன. இங்ஙனம் எழுந்த அரசியற் பெருங்காற்றைக் கண்டு சேர்மானிய இறைகள் தலை சாய்த்துக்கொடுத்தன. எனினும், யாப்புறு ஆட்சியை விரும்பும் கட்சியின் வெற்றி நீடித்து நிற்க வில்லை. இக்கட்சியின் கதி பிரசியாவிலே தங்கியிருந்தது. தாங் கள் அடைந்த வெற்றியைக் கண்டு பிரசிய நடுவகுப்பு ஆச்சரிய மடைந்தது. பாரிசில் ஏற்பட்ட பெப்புருவரிப் புரட்சி ஒரு தூண்டு கோலை அளித்து உதவிற்று. இப்பொழுது இப்புரட்சி எச்சரிக்கை செய்தது. இது, அரசியலில் நடுவகுப்பினர் பெற்றுள்ள முதன் மையை எதிர்க்குமுகமாகத் தொழிலாளர் செய்யும் எதிர்ப்பு எனப் புலனுயிற்று. சுருங்கக்கூறின், பிரசியப் புரட்சி திட்ட மிட்டு எதை விளைவிக்க எண்ணிற்றே, அந்நோக்கத்திற்கு எதிராகவே இது அமைந்ததெனலாம். தொழிலாளர் வகுப்பு ஒன்று தோன்றுவதைப் பிரசிய நடுவகுப்பினர் சற்றேனும் விரும்பவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாகப் பேளினிலுள்ள பொதுமக்களது ஆதிக்கம் அதிகரிக்கும் எனவும் எண்ணி நடுவகுப்பினர் அஞ்சினர். நிகழ்ச்சிகள் இப்படி முன்னேறி யதனுல் சேர்மனியிலேற்பட்ட நிலைமை, 1830 இல் உலூயிபிலிப் பினுடைய உதவியை நடுவகுப்பினர் நாடவேண்டியபொழுது ஏற்பட்ட நிலைமையை ஒத்திருந்தது. தொழிலாளர் வகுப் பின் அரசியல் நாட்டங்களிலிருந்து தங்களைப் பாதுகாப்பதற்கு முடியாட்சியின் உதவி இன்றியமையாதது என்பதைப் பிரசிய நடுவகுப்பினர் கண்டு கொண்டனர். தாங்களே முன்மாதிரியாக இருந்து வளர்த்தற்குப் பெரிதும் உதவிய புரட்சிமனவெழுச் சியைத் தடுத்தற்கு, தோல்வியுற்ற கட்சியுடன் மறைமுகமான நட்புறவு ஒன்றைக் கொண்டனர். எனவே, அவர்கள் அரசாங் கத்திற்குக் காட்டிய எதிர்ப்பு துணிவற்றதும் உறுதியற்றதுமா யிருந்தது. பிற்போக்குச் சத்திகளின் பலம் வளர்ந்தது. நடு வகுப்பினருக்கு அஞ்சுவதற்கு உண்மையில் காரணம் எதுவு மில்லை எனும் முக்கியமான உண்மையை அவர்கள் கண்டு பிடித்துப் பொறுமையுடன் காலத்தைப் போக்கினர். ஆனுல், செயலாற்றுவதற்கு ஏற்ற நேரம் வந்ததும் உடனடியாக முடிவு காணக் கூடிய வழிவகைகளை அவர்கள் கையாண்டனர். யாப்பு ஒன்றை அமைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட மன்றைக் குலைத் தனர். அரண்மனை வட்டாரங்களின் கருத்திற்கேற்ப ஆக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848

பெற்ற ஓர் அரசியற் சட்டயாப்பை நாட்டின்மீது திணித்தனர். அப்படித் திணிக்கும்போது இந்த யாப்பு நாட்டின் உள்ளடங்கிய உரிமையின் பயனைக் கிடைத்ததன்று என்பதையும் மன்னனின் பரிசாக இது வழங்கப்பெற்ற தென்பதையும் வற்புறுத்திக் கூறினர். இங்ஙனம் நன்னிமித்தங்களுடன் தொடங்கிய யாப்புறு இயக்கம் அதனைத் தொடக்கியவர்களின் நலிவாலும் திடமற்ற தீர்மானத்தாலும் மதிப்பிழந்து அழிந்தது.

(2) நாட்டின வாதிகளின் இயக்கம்.

ஐக்கிய சேர்மனி உருவாதற்குக் காரணமாயிருந்த இயக்கத்தின் வரலாற்றை இப்பொழுது கூறுவாம். நாட்டினக் கட்சிக்கு அதிக செல்வாக்கிருந்த பகுதி தென்மேற்குப் பகுதியாகும். பிரிந்திருந்த சேர்மானியப் பகுதிகள் யாவற்றையும் ஒன்று சேர்க்கும் நோக்கமே இங்கு மேலோங்கி இருந்தது இயற்கையே. "சேர்மனியிலுள்ள சிறிய அரசுகளில் அரண்மனை வாழ்வு பெருஞ் செலவுக்குக் காலாக இருந்தது. இங்கு நிருவாகம், படை முதலியவைகளின் செலவும், சுருங்கச் சொன்னால் வரியின் பளுவும் நிறைந்திருந்தன. அரசுகளின் சிறு அளவிற்கும் வலியிழந்த தன்மைக்குமேற்ற விகித முறையில் வரிப்பளு ஏறியது"[1], என அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் குறிப்பிட்டார்கள். 1848 இல் நடந்த பிரான்சியப் புரட்சி சேர்மானிய நாட்டின இயக்கத்தினின்றும் தோன்றியதன்று என்பது இங்கு முக்கியமாகக் கவனித்தற்குரியது. இருந்தபோதிலும், இந்தப் புரட்சிக்குச் சேர்மானிய நாட்டின இயக்கம் சத்தி அளித்தது. அப்பொழுது ஒசுற்றியாவிலேற்பட்ட உண்ணாட்டுப் பிணக்குக்கள் அந்நாட்டைச் செயலற்றதாக்கின. 1847 இல் தாராளபோக்குப் பிரதிநிதிகள் ஒருங்குகூடி மக்கள் எல்லோருடைய பலத்தையும் ஒரே முனைக்குக் கொண்டுவரக்கூடிய நாட்டினப் பாராளுமன்றம் வேண்டுமெனக் கோரினர். பாரிசில் ஏற்பட்ட புரட்சி இந்த நாட்டினக் கட்சியினர் கண்டிப்பான நடைவடிக்கை எடுப்பதைத் தூண்டிற்று. மாச்சு ஐந்தாம் நாளன்று ஐதல்பேக்கில் தாராள போக்குத் தலைவர்கள் பலர் கூடினர். பூர்வாங்க சமவாயம் ஒன்றைக் கூட்டுவதற்குரிய பொறுப்பு எழுவரைக் கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. அரசாங்கச் சட்டவுரிமை இல்லாமலே இந்தப் பூர்வாங்க சமவாயம் மாச்சு 31 ஆம் நாள் பிராங்குபோட்டு நகரிற் கூடியது. ஐம்பதினாயிரம் வாக்காளர்களுக்கு ஒரு பிரதிநிதியென்ற அடிப்படையில் தேர்தல் நடக்க வேண்டுமென இந்தச் சமவாயம் கட்டளையிட்டது. பொதுமக்களினது அபிப்பிராயம் எல்லையின்றி மேலோங்கி நின்றதனால் இத்திட்டத்திற்கு மத்திய மன்றம் உடன்பாடு தெரிவித்தது. இதனையெதிர்க்கச் சேர்மானிய சிற்றரசர்கள் துணியவும் இல்லை.

1 Marx, op. cit. 30.

Digitized by Noolaham Foundation

பிரதானிக்கு உவிலியம் கூட "என்னுடைய மக்களுக்கும் சேர் மானிய நாட்டுக்கு" மென வெளியிட்ட பிரசித்தத்தில் "இன்று தொடக்கம் பிரசியாவின் ஆர்வம் சேர்மனியின் ஆர்வமாக இருக்கு" மென அறிவித்தான். பிரசியா தன்னைச் சேர்மனி கவர எவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்கத் தயாராகவுள்ள தென்பதை நிகழ்ச்சிகள் விரைவிற் காட்டின. 1848

பிராங்கு போட்டு மன்றம் (1848).

சேர்மானிய மக்கள் ஐக்கியப்படுவதிலே கொண்டிருந்த பேரார் வம் நாளடைவிலே திட்டவட்டமாக உருப்பெற்றது. பொது மக்களை மத்தியமன்றம் ஒருபோதும் திருத்தி செய்யவில்லை. தொடக்கத் திலிருந்தே இது அரசர்களின் சங்கமாக இருந்ததேயன்றி வேறெ ன்றுகவும் இருக்கவில்லை. நைந்துபோன இந்த நிறுவகம் முன் னரே எவ்வித பயனையும் அளிக்காத நிலைக்கு வந்துவிட்டது. ஆனால், இப்பொழுது சேர்மனிக்கு, தன்னுடைய வருங்காலக் கதியை ஆக்கவோ, அழிக்கவோ ஒப்பற்ற வாய்ப்புக் கிட்டிற்று. புரட்சிகளுக்கு எப்பொழுதுமே விரோதியாயிருந்த ஒசுற்றியாவே இப்பொழுது புரட்சிக்கு இடமாகிவிட்டது. வெளிவெளியாகப் பகை மூட்டாமற் கவனமாக இருப்பதிலேயே பிரதானிக்கு உவிலியமும் ஏனைய சேர்மானியச் சிற்றரசர்களும் கவனஞ் செலுத்தலாயினர். நாட்டினவாதிகளின் எதிரிகள் தற்காலிகமாகப் படைக்கலமற்றவர் களாயிருந்ததாலும், சேர்மானியப் பாராளுமன்றம் ஒன்று உண் மையில் வைகலில் இருந்ததாலும், நாட்டின வாதிகளுக்கு வெற்றி கிட்டுமெனத் தோன்றியது. நாட்டின இயக்கத்திற்கு உயி ரும் உருவமும் கொடுப்பதில் பிராங்குபோட்டு மன்றம் வெற்றி கண்டிருக்குமாயின், சேர்மானிய வரலாறு பிறிதொரு சாயலைப் பெற்றிருக்கும். அங்கு சடோவாப் போர் நிகழ்ந்திராது. செடான் போர் நிகழ்ந்திராதிருக்கக் கூடும். படைபூணலென்னும் நிலை யற்ற அத்திவாரத்திற் கட்டாமல் அறிவாற்றல் நிறைந்த குடி யாட்சி மதமாகிய அத்திவாரத்தில் கட்டியெழுப்பக் கூடிய சேர் மானியப் பேரரசு சமாதானத்துக்குப் பொறுப்பாக இருந்திருக் கக்கூடும். ஆனால், நாட்டின மன்றம் நிறைவேற்றியவை பெருந் தோல்வியடைந்தன. இந்தப் பேரவையில் அதற்கு ஏற்ற மக்க ளிருக்கவில்லை. அன்றேல், அதன் தலைவர்களுக்குச் சரியான வழியை உணரும் திருட்டி, தொடர்ந்து செயலாற்றும் தீரம், திறமை ஆகிய பண்புகள் இருக்கவில்லை. "மூதாட்டிகளின் இந்த மன்றத்தை"ப் பார்த்துக் கார்ள் மார்க்குசு பெரிதும் எளனஞ் செய்கிறான். இந்த மன்றத்தைப் பற்றி அவன் குறிப்பிடுபவை பின்வருவன: "இந்த மன்றத்திற் பெரும் பான்மையோர் தாராள போக்குள்ள வழக்கறிஞரும் கோட் பாடுகளையுடைய பேராசிரியர்களுமே. சேர்மானியின் தலைசிறந்த அறிஞரையும் விஞ்ஞானிகளையும் தன்னகத்தே கொண்டது இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848

மன்றம் எனப் பாசாங்கு செய்யப்பட்டபொழுதிலும், உண்மையில் முதிர்ந்த, நைந்து இற்றுப்போய அரசியற் கதாபாத்திரங்கள் நடமாடும் நாடக மேடையாகவே அது இருந்தது. இந்த மேடையில் நின்று இக்கதாபாத்திரங்கள் நகைப்புக்கிடமான தமது இயல்புகளையும் சிந்தனையிலும் செயலிலும் தமக்கிருந்த வல்லமைக் குறைவையும் சேர்மானிய மக்களுக்குக் காட்டின.[1] மாக்குசு இதனைப் பாரபட்சத்துடனேயே நோக்கினன். ஆனால், பேராளர் தங்களுக்கு உகந்த அரசியற் கொள்கைகளுக்கு விளக்கம் கொடுக்கும் நோக்கத்துடன், புலமை வாய்ந்த சமூகத்திற்குரிய நோக்குடனேயே தங்கள் கவனத்தைச் செலுத்தி நடந்து கொண்டனரென்பதை மறுப்பது எளிதன்று. இங்கிலாந்தில் நடந்த (ஒலிவர் குரொம்வெலின் தலைமையில்) புரட்சியின் பயனாக அதிகாரம் முடியாட்சியின் கையிலிருந்து சமாதான நீதிபதிகளின் கைக்கு மாறிற்றென்க. இந்தச் சமாதான நீதிபதிகள் தலவாட்சி முறையில் நன்கு பயிற்சி பெற்றவர்கள். எனவே, இந் நீதிபதிகள் தங்களுக்கு விதி பணித்த வேலையைச் செய்வதற்கு நன்கு பயிற்சி பெற்றவராக இருந்தனர். அரசாங்க வட்டாரத்துள் இடம் பெறுது அதற்கு வெளியேயிருந்தவர்களுக்கு "அரசியலின் மர்மம்" ஒரு மூடு மந்திரமாகவே இருந்தது. இதற்குரிய தண்டனையை 1789 இற் பிரான்சு பெற்றதுபோல, 1848 இற் சேர்மனியும் பெற்றது.

அதன் வரலாறு.

மே 13 ஆம் நாளன்று மன்றம் கூடியது. தற்காலிக அரசாங்கமொன்றை நிறுவுவதே அதன் முதல் வேலையாயிற்று. இவ்வரசாங்கம் பொறுப்புடைய அமைச்சின் மூலம் அரசாட்சி செய்யும் பொறுப்பில்லாப் பதிலாளியை உடையது. இளவரசன் யோன் என்பவன் பதிலாளியாக நியமனஞ் செய்யப்பட்டான். இவனுடைய அதிகாரத்தை ஏனைய சேர்மானியச் சிற்றரசர் ஏற்றுக்கொண்டனர். சேர்மனியின் கூட்டு யாப்பைச் சீர்திருத்தும் வேலை மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்காவிலும் பிரான்சிலும் நடந்த புரட்சிப் போக்கின் முன்மாதிரியைப் பின்பற்றிச் சேர்மானிய நாட்டின் "அடிப்படை உரிமை" பற்றிச் சொல்வளம் மிக்க விவாதம் நடத்தினர். இங்ஙனம் கொள்கையளவான உரையாடல் நடத்திப் பொன்னை நேரத்தைச் செலவு செய்வதிலும் பார்க்க, மன்றத்தின் அதிகாரத்தைப் படைபூண்ட அடிப்படையில் நிறுவ முயற்சி செய்திருந்தால் அது அதிக பலனைக் கொடுத்திருக்கும். மன்றத்திலுள்ள பேராளர் அரசியல் அறிவிலிகள். எனினும், ஒசுற்றியாவையும் பிரசியாவையும் தற்காலிகமாகப் பீடித்திருந்த அரசியற் சோர்வாதம் சேர்மனி

---

1 Marx, op. cit. 53.

Digitized by Noolaham Foundation

யின் புத்துயிர்ப்புக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கின்றது என்ற 1848-49
உண்மையை அனுபவமில்லாத அந்தப் பேராளர் கூட்டம் கூட உணர்ந்திருக்க வேண்டும். இந்தப் பேராளர் செய்து ஒப்பேற்றியவற்றைப் பிரசியாவும் ஒசுற்றியாவும் முடிந்த காரியம் எனக் கண்டிப்பாக மதித்தே தீர வேண்டும். படைப் பலத்தாற் புடைத்திருக்கும் இந்த முடியாட்சிகள் விளங்கக் கூடியவாதம் ஒன்றே யொன்று உண்டு; அது வலியாரின் சத்தியாகும். ஆனால், தொடக்கத்திலிருந்து பிராங்குபோட்டு மன்றம் தன்னுடைய நலிவைச் சேர்மானிய மக்களெல்லோருக்கும் அம்பலப்படுத்திற்று. இந்நலிவு செல்சுவிக்கு—ஒல்சுதைன் நெருக்கடியின்போது வெளியாயிற்று. செல்சுவிக்கு—ஒல்சுதைன் ஆகிய இரு கோமக உரிமைகள் தென்மாக்கிற்கு எதிராகக் கலகஞ் செய்து சேர்மனியுடன் ஐக்கியப்பட முயன்றன. அவைகளுடைய சார்பிற் பிரசியா தலையிட்டது. ஆனால், தென்மாக்கைப் பிரிவிடல் செய்வதற்கு ஐரோப்பிய வல்லரசுகள் மறுத்தன. மால்மோ மரபினைத் தீர்மானஞ் (ஒகத்து 1848) செய்யுமாறும் படைகளை வெளியேற்றும்படியும் வல்லரசுகள் பிரதரிக்கு உவிலியத்தை வற்புறுத்தின. அதன்பின்னர் இந்த இரு கோமக உரிமைகளும் நாட்டின மன்றத்திற்கு மேன்முறையீடு செய்தன. சேர்மனியின் குறிக்கோளைக் காட்டிக் கொடுக்கும் செயல் இதுவெனக் கருதிய மன்றம் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டு சமவாயத்தினை நிராகரித்தது. பிரதரிக்கு உவிலியத்தைக் கொண்டு வலிந்து செயலாற்றுவிக்க முடியாத அமைச்சு தானுகவே விலகிற்று. இறுதியில் இந்தப் போரோய்வை மன்றம் கட்டாயத்தின் பேரில் உறுதிப்படுத்திற்று. உடனே பிராங்குபோட்டு வீதிகளில் மக்கள் கலகஞ் செய்தனர். ஆத்திரமடைந்த கும்பலினால் இரு பிரதியாளர் கொல்லப்பட்டனர். ஒசுற்றியப் படைகளும் பிரசியப் படைகளும் இந்த எழுச்சியை நசித்தன. ஆனால், அன்றுதொட்டுச் சேர்மானியப் பாராளுமன்றத்தின் பெருந்தகைமையும் மதிப்பும் அழிந்தன. அந்தப் பாராளுமன்றத்தின் அதிகாரத்துக்கு உண்மையான அடிப்படையாகவுள்ளது மக்களின் ஆதரவு. ஆனால், பாராளுமன்றம் நிலையற்றிருந்தபடியால் இந்த அடிப்படை அழிந்துபோயிற்று. மக்களையக்கும் கலகத்தை அடக்குவதற்குப் பிரசியப் படைகளைப் பயன்படுத்தியமையால் அதனுடைய சுதந்திரமும் பறிபோயிற்று. இந்த நலிவினால் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தச் சேர்மானிய மன்னர்கள் தயங்கமாட்டார்கள் என்பதை நிகழ்ச்சியின் தொடர்ச்சி காட்டிற்று. இத்தொடக்கம் நல்ல பலனை அளிக்குமெனத் தோன்றுதபோதும், சேர்மனிக்கு ஒரு யாப்பை ஆக்குதற்கு மன்றம் தொடர்ந்து கடிது உழைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1849

தது. இதை இரண்டு சிக்கல்கள் எதிர்நோக்கி நின்றன. அவை யாவன : (1) ஒசுற்றியா வகித்த நிலையும் (2) புதிய கூட்டாட்சி யின் அமைப்பும் என்க.

சேர்மனியுடன் ஒசுற்றியாவின் தொடர்புகள்.

சேர்மனியுடன் ஒசுற்றியா கொண்டிருந்த தொடர்பு தொல்லை நிறைந்த ஒரு சிக்கலைக் கிளப்பிற்று. இந்தச் சிக்கலோவெனில் தாண்டுதற்கரிய பல தடைகளைத் தன்னுட் கொண்டதாயிருந் தது. ஆபிசுபேக்கு ஆட்சிப்பகுதி எல்லாவற்றையும் புதிய சேர்மானியப் பேரரசிற் சேர்த்துக்கொள்ளுதல் இத்தொல்லை தீருவதற்கு ஒரு வழியாகும். இது நடைமுறைக்கு ஒவ்வாதது. அதுவும் ஒசுற்றிய முடியாட்சியினது குலைவின் கடைசிக்கட்ட மெனத் தோன்றுகின்ற வேளையில் இதைச் செய்தல் ஒருபோதும் இயலாது. ஒசுற்றியாவை முற்றுகத் தவிர்த்தல் ஒரு மாற்று யோசனையாகும். இதற்குச் சேர்மானிய மக்களின் அபிப்பிராயம் சாதகமாயிருக்கவில்லை. இது பிரதரிக்கு உவிலியத்தின் வெறுப் பைத் தூண்டும். பிரசியாவின் பிரதிநிதியான தால்மான் என்பவன் நடுவழியொன்றைக் கையாள முயற்சித்தான். இவன் கொண்டுவந்த மூன்றுவது முன்மொழிவே பிராங்குபோட்டு யாப்பில் ஒரு கூறுக இணைக்கப்பெற்றது. "சேர்மானியப் பேரர சின் எந்தப் பகுதியாகிலும் சேர்மனியின் ஆள்புலமல்லாத பகுதியைத் தன்னுட் கொண்டதாக இருத்தல் கூடாது" என இது விளம்பிற்று. கலப்பான நாட்டினங்களைக் கொண்ட ஆள் புலத்தை ஓர் இறை ஆட்சிசெய்யின் அவ்விறையின் சேர்மானிய ஆட்சிப் பகுதிக்கும் ஏனைய பகுதிக்கும் உள்ள தொடர்பு இறையின் தனிப்பட்ட சொந்தத் தொடர்பாக இருக்கவேண்டிய தாயிற்று. அதாவது, சுதுவட்டு மன்னரின் கீழ் இங்கிலாந்தும் கொத்துலாந்தும் இருந்தது போல், புறம்பான அரசுகளாக இவை அமைவனவாயின. மன்னனுக்குக் காட்டும் பொது விசுவாசம் ஒன்றினாலேயே இவ்வரசுகள் ஐக்கியப்படும். இந்த யாப்புறுப்பு ஒசுற்றியாவை உருக்குலையச் செய்தது. இவ்வியாப்பு சேர்மானியப் பேரரசில் சேர்மானியப் பகுதியைச் சேர்த்துக் கொண்டு எஞ்சிய பகுதியைப் புறம்பாக விட்டது. ஆபிசுபேக்கு குடியரசை முற்றுகச் சேர்த்துக்கொள்ள ஒசுற்றிய அமைச்சனை சுவாரன்பேக்கு இணங்கிய போதும், ஒசுற்றிய இராச்சியம் உண்மையாகப் பிரிந்து போவதற்கு அவன் இணங்கமட்டான். இந்தப் பிரிவினால் ஒற்றிய இராச்சியத்தின் உள்ளமைப்பில் மிகவும் பாரதூரமான விளைவு ஏற்படும். நாட்டினமன்றம் அமைச்சனை சுவாரன்பேக்கு தெரிவித்த மறுப்புக்கு மறுப்பாகச் சேர்மானிய கூட்டாட்சியில் ஒசுற்றியாவைச் சேர்க்காதுவிட்டது.

Digitized by Noolaham Foundation

1849 சேர்மனியில் பிரசியாவின் நிலை.

(2) ஐக்கிய சேர்மனியிலிருந்து ஒசுற்றியாவை நீக்குவதன் மூலம் முதலாவது பிரச்சினை தீர்க்கப்பட்டது. இரண்டாவது பிரச்சினைக்கு முடிவு காண முயன்றதன் விளைவால் பிரசிய மன்னனுக்குப் பேரரசின் முடியைக் கொடுப்பதென்றுயிற்று. பிரசியாவிற்கு முடி வழங்குவதற்குரிய காரணத்தையும் அந்த முடியைப் பிரசியா ஏற்க மறுத்ததற்குரிய காரணத்தையும் இங்கு கவனமாக நோக்கல் வேண்டும். வேறு எந்த அரசும் அடைந்திராத தோல்விகளை நெப்போலியனிடம் பிரசியா அடைந்தது. இதனால் பிரசியா தனது குடித்தொகையில் அரைப் பங்கை இழந்தது. அதுவுமன்றி இடங்கோட்படையினாலும் பெருங் கடனாலும் பிரசியா இடருற்றது. சிதைன், ஆன்று, பித்தே, ஆடன்பேக்கு, சானேசுற்று போன்ற பிரசியரல்லாதவர்களுடைய உழைப்பாலேயே பிரசியா புத்துயிர் பெற்றது. நாட்டின எழுச்சிக்கு வேண்டிய பண்புகள் பிரசியாவிடம் மாத்திரமே காணப்பட்டமையால் மேலே குறிப்பிட்ட பிரசியரல்லாதவர்கள் பிரசியாவின் சேவையிலீடுபடத் தூண்டப்பட்டனர். பிரசியாவின் பேரரசனை இரண்டாம் பிரதரிக்கு சேர்மானியப் பண்பாட்டைக் கவனிக்காது பிரான்சியப் பண்பாட்டை மட்டுமே கவனித்தான். தன்னுடைய இராச்சியத்தின் மீக்கொளலைத் தன் தனிச் செயலாகக் கொண்டிருந்தபோதும் சேர்மானிய பூமியில் கால்வைத்த படையைத் தோற்கடித்து என்றும் மறக்க முடியாத வெற்றியை ஈட்டியதனால் அவன் ஒரு நாட்டின வீரனாயினன். சிதைனும் அவனுடைய இணைவரும் கொண்டு வந்த சீர்திருத்தங்களினால் புத்துயிரையும், பித்தேயும் ஆன்றும் செய்த தாயகப் பற்றுடைய போதனையினால் உணர்ச்சியையும் பெற்ற பிரசியா 1813 இல் விரைந்து போர்க்கோலம் கொண்டது. நெப்போலியனுக்கெதிராக நடந்த மீட்சிப் போராட்டத்திற் பிரசியா முக்கிய பங்கு பற்றிற்று. இந்தப் போராட்டத்தின் பயனாக இரையின் மாகாணம் பிரசியாவுக்குக் கிடைத்தது. இரண்டு வழியில் இது சிறப்புடையதாயிற்று. வேறெந்த அரசையும்விட பிரசியாவிடமே கலப்பிலாச் சேர்மானிய ஆள்புலப்பகுதி அதிகம் உண்டு. இதனால் ஒசுற்றியா இதுவரையும் வகித்த முதன்மையைப் பிரசியா பெற்றுக் கொண்டது. தவிர, பிரான்சின் தாக்குதலிலிருந்து இரைன் எல்லைப்புறத்தைக் காப்பதும் பிரசியாவின் கடமையாயிற்று. சேர்மனியின் பாதுகாவலன் என்ற முறையிற் சேர்மனியின் தலைமைப் பீடம் இறுதியிற் பிரசியாவுக்கே வந்து சேரும். இது இங்ஙனமிருக்க, மற்றொரு புறத்தில் சேர்மானியக் கடப்பாடுகளை உதறித் தள்ளுவதற்கு ஒசுற்றியா தயங்கவில்லை. ஒசுற்றியா நெப்போலியனுடன் நட்புறவு செய்து கொண்டபடியால் பொதுமக்களது நட்பை இழந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1849 தது. ஒசுற்றிய இளவரசியை நெப்போலியன் மணந்து கொண்டான். தன் ஆர்வம் முழுவதும் இரைன் பக்கத்திலன்றி தானியூப்புப் பக்கத்திலேயே இருக்கின்றதென்பதை ஒசுற்றியா எப்படியும் மறைக்கவில்லை. ஒசுற்றியா கிழக்கு நோக்கியே தன் கவனத்தைச் செலுத்தியது. 18 ஆம் நூற்றுண்டிலேயே தன் பொறுப்பிலிருந்த பெல்சியத்தை விட்டுவிட ஒசுற்றியா தீர்மானித்தது. 1815 இல் நடந்த வீயன்னு மாநாட்டிலே அதனை முழுமனத்தோடு நிறைவேற்றியது. ஒசுற்றிய, சேர்மானிய விடயங்களிலும் பார்க்கக் கலப்பிலா ஒசுற்றிய விடயங்களே தன் மனத்துக்கு உகந்தன என்பதை மெற்றெணிக்கு ஒப்புக்கொண்டான்[1]. சேர்மனியை ஐக்கியப்பட விடாது நலிந்த நிலையில் வைத்திருப்பதே மெற்றெணிக்கின் பூட்கை. முற்போக்கு இயக்கங்கள் யாவற்றையும் முடியறிப்பதையே தன்னுடைய அரசியல் தத்துவமாகக் கொண்ட மெற்றெணிக்கிடமிருந்து எந்தவிதமான ஆதரவையும் சேர்மானியத் தயாகப்பற்றுடையோர் எதிர்பார்க்க முடியாது. எனவே, ஆபிசுபேக்கு முடியாட்சியில் மக்களுக்கிருந்த பற்று படிப்படியாகக் குறைந்தது. அதே சமயம் பிரசிய வமிசத்திடம் பற்று வளர்ந்தது. இருந்தும் சேர்மனியில் ஒசுற்றியா பெற்றிருந்த அரசியற் கூட்டுத் தலைமையை எதிர்ப்பதற்கான திட்டத்தைப் பிரசியா அடைய அரைநூற்றுண்டு சென்றது. சேர்மானிய அலுவல்களில் ஒசுற்றியாவுக்கு முதன்மையைக் கொடுத்துவிட்டுப் பிரசியா தான் இரண்டாம் நிலையிலிருப்பதையிட்டுப் பல ஆண்டுகளாகத் திருத்தி கொண்டிருந்தது. "ஒசுற்றியாவிலிருந்து வரும் எல்லாவற்றிற்கும் பிரசியர் செலுத்துகின்ற மரியாதை பற்றி நான் உங்களுக்கு ஒரு நீண்ட ஓலை எழுதமுடியும்.... பிரசியர்களை மெற்றெணிக்கு நன்கு மயக்கிவிட்டான்," என 1818 இல் சென்சு என்பான் எழுதினன். மேலும், ஐந்து நூற்றுண்டுகளாகப் பேரரசினது மரபுகளின் பாதுகாவலராக இருந்த ஆபிசுபேக்கரிடம் மக்கள் காட்டிய பற்று இலகுவாக அற்றுப் போகவில்லை. 1818 இல் பேரரசனை பிரான்சிசு கொலோனிலுள்ள பெருந் தேவாலயத்திற்குச் சென்றிருந்தபோது நிகழ்ந்தவை பற்றி மெற்றெணிக்கு பின்வருவனவற்றை எழுதிப் போயினன். "பேரரசனைக் காண்பதற்குக் கதவுகளைத் தள்ளிக்கொண்டு மக்கள் வந்தனர். அவனைக் கண்டதும் முழங்காலில் மண்டியிட்டனர்." அப்பொழுது தனது குடிமக்கள் மத்தியிலே நிற்பது பிரசிய மன்னனுக்குச் 'சங்கடமாயிருந்தது.'[2] ஒசுற்றிய குலத்தினிடம் இங்ஙனம் இயல்பா

1 Memoirs, iii. 304.

2 Memoirs, iii. 143.

Digitized by Noolaham Foundation

கவே கொண்டிருந்த பற்று நாட்டின மன்றம் தனக்கு அளித்த மதிப்பைப் பிரதரிக்கு உவிலியம் ஏற்பதற்குத் தடையாயிற்று. இந்தப் பற்றினைப் பற்றிக் கூறுமிடத்து, "இடைக்கால அலங்காரம்" எனவும், "பேரரசு பற்றி அவன் கொண்டிருந்த இடைக்கால நினைவுகள்"[1] எனவும் பிசுமாக்குக் குறிப்பிட்டுள்ளான். சட்டப்படியான உரிமையாளனைத் தந்திரமாக விலக்கி அவ்வுரிமையைப் பெறும் பழிக்கு உவிலியம் அஞ்சினன். ஒசுற்றியாவுடனும், சிலவேளைகளில் இரசியாவுடனும்கூட, போர் செய்ய வேண்டிய ஆபத்துக்குள்ளாகவும் அவன் விரும்பவில்லை. பேரரசின் முடியை ஏற்றுக்கொள்ளாமல் விடுவதற்கு வேறு நோக்கங்களும் இருந்தன. அரசறிவில் தனக்கிருந்த குறை பாடுகளை அவன் நன்குணர்வான். தான் முடியை ஏற்றுக் கொள்வதனாலேற்படும் தொல்லைகளிலிருந்து விலகி நின்றான். "மகா பிரதரிக்கே இந்தச் சூழ்நிலைக்கேற்றவனுவான். என்னைப் பொறுத்த அளவில் நான் பெரிய ஆட்சியாளன் அல்லன்" என அவன் வெளிப்படையாகக் கூறினன். இந்தப் பேரவை வகுத்த யாப்புப்படி பேரரசனுக்கு அரசாங்கத்தின்மீது ஓர ளவு உரிமை மட்டுமே கொடுபட்டிருந்தது; பூரண உரிமை கொடுக்கப்படவில்லை. இதுவும் அவனுக்குத் தகுந்த காரண மாகத் தெரிந்திருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக மக்களு டைய பேரவை வழங்குவதாய "இழிவின் வழிவந்த" முடியை ஏற்றுக் கொள்ளக்கூடாதென அவன் தீர்மானித்தான். சேர் மானியச் சிற்றரசர்கள் அவனைக் கேட்டுக் கொண்டால் மட்டுமே அந்த உயர்நிலையை ஏற்றுக்கொள்வான். பிராங்குபோட்டிற் கூடிய பாராளுமன்றம் புரட்சிகரமானதாகவே அவனுக்குத் தோன்றியது. இந்தப் பேரவைக்குச் சட்டப்படி உரிமையில்லை. ஏனெனில், சேர்மனியை ஆளும் குலத்தினர் இதற்கு உடன்பட வில்லை.[2] இவன் முடியையேற்க மறுத்ததுமன்றிப் பிராங்கு போட்டு யாப்பிற்குத் தன்னுடைய இணக்கத்தையும் கொடாது விட்டான். இத்துடன், நாட்டின மன்றமானது, அடைய வேண்டிய முடிவைப் பெற்றது. சிறு அரசுகளான பவேரியா வும் சக்சனி, அனேவர், உவூத்தெம்பேக்கு ஆகிய நான்கும் ஒசுற்றியாவும் பிரசியாவைப் பின்பற்றின. ஒசுற்றியாவும் பிர சியாவும் தங்கள் பிரதிநிதிகளைத் திருப்பி அழைத்துக் கொண்ட தும், சேர்மானியப் பாராளுமன்றம் வீழ்ச்சியடைந்தது. உண் மையில் இருபத்தெட்டரசுகள் இந்த யாப்பை ஏற்றன. ஆனால், இவ்வரசுகள், தம்மிலும் பார்க்கக்கூடிய முக்கியத்துவமுடைய

1849

1 Bismarck, Reflections and Reminiscences (1889), i. 44, 47.

2 Bismarck, Reflcetions and Reminiscences (1898), i. 62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1849 தமது அயலவரின் செல்வாக்கை எதிர்த்தற்கு அத்துணை அரசியற் சிறப்புடையனவல்ல. சேர்மானிய மக்கள் தங்களுடைய விடுதலையின் பொருட்டுச் செய்த முயற்சி பெருந் தோல்வியடைந்தது.

பிரசியாவின் கூட்டாட்சித் திட்டம்.

சேர்மனி ஐக்கியமடைவதற்குப் பிராங்குபோட்டு மன்றம் செய்த முயற்சி தோல்வியடைந்ததற்குப் பிரசியா பொறுப்பு என்க. பிரசியா தொடங்குகின்ற திட்டத்திற்கு ஒசுற்றியா முட்டுக்கட்டை இடும் முறை வந்தது. பிரசியாவின் திட்டம் வேறோர் அடிப்படையில் அமைந்தது. பிராங்குபோட்டிற் கூடிய "புரட்சிகரமான" மன்றம் வகுத்த யாப்புக்குப் பதிலாகப் பிரசியாவின் கூட்டுத் தலைமையில் நிறுவும் கூட்டிணைப்பாட்சி ஒன்றுபற்றிப் பிரசியா முன்மொழிந்தது. இது தற்காலிகமான அரசியற் பரிசோதனை. எந்த அரசையும் இதிற் சேர்வதற்குக் கட்டாயப் படுத்துவதில்லை. கூட்டிணைப்பாட்சியில் இறைகளெல்லாம் தாமாகவே முன்வந்து ஐக்கியப்பட வேண்டும். பேளின் நகரில் ஒரு மாநாடு கூடியது. அனைவரும் சக்சனியும் மாத்திரம் இந்தக் கருத்தை விரும்புவனபோலத் தோன்றிற்று. இந்த ஈர் அரசுகளும் பிரசியாவுடன் கூடி, "மூவேந்தரின் சங்கம்", என்னும் கூட்டுறவை ஆக்கின. ஒசுற்றியாவும் பவேரியாவும் உவுத்தெம்பேக்கும் இதிற் சேராமல் விலகி நின்றன. ஆனால், யாப்பு ஒன்றைக் கொடுப்பதாக வாக்குறுதி செய்யப்பெற்றதும் நாட்டினக் கட்சித் தலைவர்கள் பிரசியாவின் வசமாயினர். எனவே, சிறிய அரசுகளும் பிரசியாவுடன் சேர்ந்தன. எனினும், அனைவரும் சக்சனியும் அளித்த ஆதரவு நம்பத்தகாததாயிருந்தது. தொடக்கத்திலிருந்தே இந்த ஈர் அரசாங்கங்களின் நடத்தையும் கபடமானதாயிருந்தது. முதலாவது வாய்ப்புக் கிடைத்தவுடனேயே மூவேந்தர் சங்கத்திலிருந்து வெளியேறுவது என்னும் திடமான நோக்கத்துடனேயே இந்த அரசுகளும் இந்த நட்புறவில் சேர்ந்து கொண்டன. இவ்வரசுகள் நெடுநாட்களாகப் பிரசியாவின் திட்டத்திற்குத் தங்கள் இரகசிய எதிர்ப்பை மறைமுகமாகக் காட்டின. புதிய நாட்டின மன்றம் ஒன்றைக் கூட்டுவிக்க வேண்டுமென்னும் பேச்சுத் தொடங்கியதும் இவ்வீர் அரசுகளின் முகமூடி விலகி உண்மை புலனுயிற்று. 1815 இல் நிறைவேறிய கூட்டாட்சியின் யாப்பில், செல்லுபடியாகக் கூடிய எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதற்குக் கூட்டாட்சியின் எல்லா அங்கத்தினரின் இசைவும் வேண்டுமென்ற காரணத்தைக்காட்டி இவ்வரசுகள் ஆட்சேபித்தன. இந்த இயக்கத்திலிருந்து தங்கள் தொடர்பைத் துண்டிப்பதற்கு ஒரு தலைக்கீடாக இருந்தது இந்த ஆட்சேபனை. எனெனில், புதிய ஒரு

Digitized by Noolaham Foundation

நாட்டினமன்றம் கூடுவதற்கு ஒசுற்றியா ஒருபோதும் ஒத்துக் கொள்ளாதென்பது இவ்வீர் அரசுகளுக்கும் நன்கு தெரியும். இந்தச் சூழ்நிலையில் இந்த எதிர்ப்புக்களைப் புறக்கணிப்பதல்லாமல் வேறெதையும் பிரசியா செய்ய முடியாது. இவ்விடயத்தில் பிரதரிக்கு உவிலியம் தன்னுடைய வழமையான உறுதியற்ற தன்மையைக் காட்டத் தொடங்கினன். பிசுமாக்கைப் போன்ற பழைமை பேணுவோர் இத்திட்டத்தைப் பலமாக எதிர்த்தனர். பிரசியா கூட்டு இணைப்பாட்சித் திட்டத்தைக் கைவிட முடியாத அளவுக்கு அதிலே ஈடுபட்டிருந்தது. அனேவர், சக்சனி ஆகிய ஈர் அரசுகளிலும் பிரசியாவின் செல்வாக்கு இருந்தபடியால் மூவேந்தர் கழகம் அழிந்தது. இவ்வீர் அரசுகளும் தங்கள் கடமையில் தவறிய போதும் தேர்தல் நடந்தது. எபோட்டுப் பாராளுமன்றம் மாச்சு 1850 இற் கூடியது. 1850

ஒசுற்றியாவின் வெற்றி.

கூட்டாட்சி நிறுவ வேண்டும் எனப் பிரசியா கொண்டிருந்த பேரவாவுக்கு மிகக் கடுமையான முறையில் எதிர்ப்புக் காட்டும் நடவடிக்கையை ஒசுற்றியா மேற்கொண்டது. அங்கேரியில் நடந்த கலகங்களை நிறுத்திய பின்னர் சேர்மனியில் உள்ள அலுவல்களிற் கவனம் செலுத்துதற்கும் 1815 இல் இருந்த அரசியல் நிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கும் ஒசுற்றியாவுக்கு அவகாசம் இருந்தது. நாட்டின இயக்க முன்னேற்றத்தின் பயனகச் சேர்மனியிலிருந்து ஒசுற்றியப் பேரரசு புறம்பாக்கப்படும் என்பதும் அதன் காரணமாகத் தன்னுடைய சேர்மானிய ஆள்புலங்களைப் புறம்பாக நடத்துவதற்கு ஒசுற்றியா இணங்காதென்பதும் நன்கு புலனுயின. நாட்டினப் பேரவையின் கோரிக்கையால் புகுத்தப்படக்கூடிய யாப்புறு மாற்றங்களை எதிர்ப்பது ஒசுற்றியாவின் வழமையான கொள்கை. இதற்கேற்பவே ஒசுற்றியா நடந்து கொண்டது. பிரதரிக்கு உவிலியம் சேர்மனியின் மேலாட்சியாளர் என்ற பாகத்தை ஏற்று நடப்பதைத் தொடக்கத்திலிருந்தே ஒசுற்றியா ஆட்சேபித்தது. அதே நேரத்தில் உண்மையான நாட்டின அடிப்படையிற் சேர்மனியை மாற்றியமைக்கும் திட்டங்களெல்லாவற்றையும் ஒசுற்றியா நிராகரித்தது. இத்தகைய தடைசெய்யும் தந்திரங்களைப் பின்பற்றிச் சுவோரன்பேக்கு நடந்து கொண்டான். எனவே, நால்வேந்தர் சங்கத்துடன் அவன் தொடர்பு கொண்டான். இந்த நால்வேந்தர் சங்கத்தில் பவேரியா, உவூத்தெம்பேக்கு, அனேவர், சக்சனி ஆகிய நான்கு அரசுகளுமிருந்தன. பழைய சேர்மானிய ஒருமுகக் கூட்டாட்சி சட்டமுறைப்படி இருந்து வந்தபோதும், உண்மையில் அது இறந்தொழிந்துவிட்டது. அந்த ஒருமுகக் கூட்டாட்சியை மாற்றியமைத்தல் அவனுடைய திட்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1850 ஆனால், கூட்டாட்சிச் சபை இருந்தவிடத்திலே ஏழு அரசுகளைக் கொண்ட இயக்குநர் குழுவொன்றை ஏற்படுத்துதலே அவனுடைய நோக்கமாகும். இந்த இயக்குநர் குழுவில் ஒசுற்றியா, பிரசியா, நான்கு சிறு அரசுகள், எசுவின் இருபாகங்கள் ஆகியவை இடம்பெறும். இந்த யோசனையைப் பல அரசுகள் ஏற்றன. புதுப்பித்த நாட்டுக் கூட்டிணைப்பிற்கு இந்த அரசுகள் உட்கருவாக இருந்தன. ஆனால், நாட்டுக் கூட்டிணைப்பிற் பங்கு பற்றப் பிரதரிக்கு உவிலியம் மறுத்து விட்டான். எனவே, சேர்மனி இருகூறுகப் பிரிந்தது. ஒரு பகுதியில் பிரசியாவும் சிற்றரசுகளின் கழகங்களுமிருந்தன. மற்றப் பகுதியில் ஒசுற்றியாவும் அபிவிருத்தியாகின்ற நாட்டுக் கூட்டிணைப்பும் இருந்தன. சூழ்நிலைகள் காரணமாக நெருக்கடியொன்று ஏற்பட்டது. போட்டியிட்டுக் கொண்டிருந்த இவ்விரு தரத்தாரும் இந்த நெருக்கடியின் பயனுகப் பலப்பரீட்சையில் இறங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. எசு–கசில் தேர்வுரிமையாளன் பிரசிய சங்கத்திலிருந்து பின்வாங்கினான். அதன் விளைவாக அவனுக்கும் அவனுடைய குடிகளுக்கும் பகையேற்பட்டது. அதுமட்டுமல்லாமற் பாராளுமன்ற உரிமைகளை அவன் தாக்கியபடியாலும் மக்களின் பகையை அவன் தேடிக்கொண்டான். ஒசுற்றியாவால் திருப்பியமைக்கப்பட்ட கூட்டாட்சி மன்றத்திற்கு அவன் விண்ணப்பம் செய்தான். இந்தக் கூட்டாட்சி மன்றத்தில் ஒசுற்றியாவின் செல்வாக்கு முதன்மை பெற்றிருந்தது. அவனுக்குச் சாதகமாகவே கூட்டாட்சி மன்றம் பிரகடனஞ் செய்தது. அந்தத் தேர்வுரிமையாளனைப் பதவியில் மீண்டும் அமர்த்துவதால் ஏற்படும் எதிர்ப்பை வெல்வதற்காக ஒசுற்றியாவும் பவேரியாவும் உவூத்தெம்பேக்கும் 2,00,000 போர்வீரரைக் கொண்ட படையைக் களத்திற் கனுப்பின. இருதலைக்கொள்ளியெறும்பின் நிலைபோன்ற நிலை தனக்கேற்பட்டிருப்பதைப் பிரசியத் தேர்வுரிமையாளன் உணர்ந்தான். அவனுடைய உதவியை நாடுவதற்கு எசு மக்களுக்கு உரிமை இருந்தது. ஏனெனில், எசு சேர்ந்துள்ள ஐக்கிய சங்கத்தின் தலைமைப் பீடத்திற் பிரசியா இருந்தது. எசுவின் யாப்பு உரிமைகளை ஆயுதம் தாங்கிய படைகள் நசுக்குவதற்கு விட்டுக் கொடுத்திருந்தால் நாட்டின இயக்கத்திற் பிரசியா வகுத்த தலைமைப் பதவி பறிபோய்விடும். இது ஒருபுறமிருக்க, ஒசுற்றியாவுடன் போராடுதற்கு அவன் தயங்கினான். கூட்டாட்சி ஆஞ்ஞையை நிறைவேற்றுவதிற் பிரசியா தலையிடக்கூடாதென ஒசுற்றியா கோரி நின்றது. ஆனால், பிரச்சினைக்குரிய விடயம் எசுவைச் சமாதானப்படுத்துவது அல்ல; அதைவிடப் பெரியது சேர்மானிய அரசுகளைக் கொண்ட ஐக்கிய சங்கத்தின் பூட்கை வெற்றி

Digitized by Noolaham Foundation

பெறுவதா ? அல்லது வெளிப்படையான பிற்போக்குக் கொள் 1850
கையுள்ளதும் ஒசுற்றிய எகாதிபத்தியம் முழுவதையும் தன் னுளடக்கியதுமான சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்பின் பூட்கை நிலைத்து நிற்பதா ? இந்த அடிப்படையான கேள்விகள் இரண் டையும் இப்போட்டி தன்னுளடக்கி நின்றது. தீர்க்க முடியாத இந்தச் சிக்கலைப் பிரசிய அமைச்சு குறுக்கு வழிமூலம் தீர்த் தது–அதாவது, ஒசுற்றியாவின் கோரிக்கைக்குப் பிரசியா சர ணடைந்தது. பலனளிக்கக்கூடிய எதிர்ப்புக் காட்டும் வகையிற் பிரசியப் படைகள் அமைந்திருக்கவில்லை. "படையைப் பொறு த்த அளவில் எங்களுக்குச் சுதந்திர மிருக்கவில்லை" எனப் பிசுமாக்கு பின்னர் எழுதினன். 1850 நவெம்பர்த் திங்களில் ஒலுமசில் நடந்த சமவாயத்திலே எசுவானது அதன் விதியை அனுபவிக்கட்டும் எனப் பிரசியா அதைக் கைவிட்டது. சேர் மானிய அரசுகளின் சங்கத்தைக் குலைப்பதற்கும் பிரசியா இணங் கியது. இதனைப் பின்தொடர்ந்து திரசுதன் மாநாடு நடந்தது. பழைய சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்பு மன்றமும் இந்த மாநாட்டின் போது மீண்டும் உயிர் பெற்றது. இங்ஙனம் மூன் றுண்டுகளாக நடைபெற்ற புரட்சியின் பயனுகவும் எதிர்ப்புரட்சி யின் பயனுகவும் ஒசுற்றியா வெற்றிபெற்றது. அதே நேரத்திற் பிரசியா பெரும் அவமானமடைந்தது. போர்ப் பிரகடனஞ் செய்வதற்குப் பிரசிய அமைச்சு மறுத்ததை ஆதரிக்குமுக மாகப் பிசுமாக்கு ஒரு பேச்சிற் கூறியவை இங்கு குறிப்பிடத் தக்கன : "நெருப்பின் அருகிலிருந்து கொண்டு ஆறுதலாகக் குளிர் காய்ந்தபடி போர் என்னும் பேரிகையில் மக்களின் உணர்ச்சியென்னும் கம்பைக் கொண்டு முரசொலியெழுப்புவது மந்திரத்திலும் சரி, பொதுச் சபையிலும் சரி இருக்கின்ற அரசறிஞனுக்கு இலகு ; அல்லது இந்தச் சபையிலிருந்து சொற் பொழிவு ஆற்றிவிட்டுத் தனது முறைமை புகழையும் வெற்றி யையும் ஈட்டுமா, அல்லது ஈட்டாதா என்பதை உறைபனியி லைப்பட்டு இரத்தம் சிந்தி இறக்கின்ற போர் வீரனிடம் ஒப் படைத்துவிடுவது இலகு. இதனைவிட இலகுவானது வேறெ ன்றுமில்லை. ஆனல் இந்த நாளில் போருக்குத் தகுந்த காரணம் உண்டோ என்பதை நன்கு ஆராயாத அரசறிஞர், அந்தோ ! பேரிடர்ப்படுவர்."[1]

பிரசியப் படைப்பலம் மாற்றியமைக் கப்பட்டமை.

ஒலுமசு சமவாயம், ஒருபோதும் அழிக்கமுடியாத நினைவை மக்கள் மனத்தில் பதியவிட்டுச் சென்றது. சேர்மனியில் பிர சியாவோ, ஒசுற்றியாவோ முதன்மையடைய வேண்டுமென்ற

[1] **Bismarck, Reflections, i. 79.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1857-62 போராட்டத்தில் பிரசியா தோல்வியடைந்தது. இதற்குக் காரணம் பிரசியாவின் படை முறைமையிலிருந்த பெருங் குறைபாடுகளாகும். இந்தத் தோல்வி கற்பித்த பாடத்தைப் பிரசிய மன்னர்கள் நன்கு கற்றனர். இது முதல் ஐரோப்பாவில் எந்த வல்லரசும் வெல்ல முடியாத நிலைக்குப் பிரசியாவைக் கொண்டுவரக் கூடிய ஆயுதமொன்றை உருவாக்கி அதனைத் தீட்டும் முயற்சியிலேயே பிரசிய மன்னர் தங்கள் சத்தியைச் செலவிட்டனர். பிரசியாவைச் சேர்ந்த ஆளுநர் வகுப்பின் அறிவும் மரபுகளும் படையைச் சார்ந்தவை. அது ஒருபுறமிருக்க ஒசுற்றிய மன்னர்கள் ஏனைய அரச குலத்தினர்களுடன் செய்து கொள்ளும் தங்கள் திருமணம் மூலம் தங்கள் வமிசத்தை வளர்த்தனர். ஆனால், பிரசிய முடியாட்சியை உண்டாக்கியது வாள்முனை. இக்கொள்கைக்கு இணங்கப் பிரசிய உண்ணாட்டுப் பூட்கையில் பிரசியப் படையை மாற்றியமைக்கும் நோக்கமே முதலிடம் பெற்றது. இந்த அடிப்படையான முதலாவது நோக்கத்தை அடைய விடாமல் தடுத்த யாப்பு முட்டுக்கட்டைகளும் நிதி முட்டுக்கட்டைகளும் ஒதுக்கித் தள்ளப்பெற்றன. பிரதரிக்கு உவிலியத்தின் சோதரனை முதலாவது உவிலியம் 1857 இல் பதிலாளியாயினன். அதன் பின்னர், 1861 இல் முதலாம் உவிலியமே அரசெய்தினன். இவனுடைய காலத்திலேயே படைகளை மாற்றியமைக்கும் வேலை மிகுந்த கவனத்துடன் மேற்கொள்ளப்பட்டது. கட்டாயப் படைச் சேவையைத் தொடக்கி அதன் மூலம் முப்பத்தொன்பது புதிய படைப்பிரிவுகளைத் திரட்டுதலே இவனுடைய திட்டம். இங்ஙனம், 2,00,000 வீரரைக் கொண்ட நிரந்தரப் படையை 5 இலட்சம் போர் வீரரைக் கொண்ட படையாக்கினன். மக்களின் படை 4,00,000 இலிருந்து 1,63,000 ஆகக் குறைக்கப்பட்டது. சேர்மனியை வாள் கொண்டு ஐக்கியப்படுத்தாது நாட்டின எண்ணங்களைப் பரப்பிப் பொது மக்களுடைய அபிப்பிராய பலத்தின் மூலம் ஐக்கியப்படுத்த விரும்பிய சேர்மானிய தாராள போக்குக் கட்சியினர் இத் திட்டத்தை யெதிர்த்தனர். சேர்மானியப் பாராளுமன்றத்தில் தாராளருக்கே பெரும்பான்மை இருந்தபடியால் படைக்கு வேண்டிய நிதியை அவர்கள் ஒதுக்க மறுத்துவிட்டனர். நிலைமை அவர்களுடைய ஆதிக்கத்திலேயே இருந்ததுபோலத் தோன்றிற்று. பிரசிய அரசன் தன்னுடைய கோரிக்கையை நாட்டு மக்களுக்குத் தெரிவித்தான். ஆனால் அதன் பின்னர் நடந்த பொதுத் தேர்தலில் மக்கள் முன்னிருந்ததிலும் பார்க்கக் கூடுதலான பெரும்பான்மையுடன் தாராளரைத் தெரிவு செய்தனர். யாப்புறு நெருக்கடி ஒன்று ஏற்பட்டது. புதிய படைப் பிரிவுகளைக் குலைப்பதிலும் பார்க்க முடி துறத்தல் நன்றென

Digitized by Noolaham Foundation



ஒற்றே எட்டுவேட்டு இலியோபோல், இளவரசன் வொன் பிசுமாக்கு (1815-1898)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation

உவிலியம் உறுதி பூண்டான். நிருவாகத்தைப் பாராளுமன் 1862-70
றமே கட்டுப்பாடு செய்ய வேண்டுமென்பதை வற்புறுத்துதற்கு மக்கள் கொண்டிருந்த உறுதி அவனது உறுதியிலும் பார்க்கக் குறைந்த தன்று. மன்னன் தன்னுடைய இறுதிச் செயலாக, பிசுமாக்கை அமைச்சரவையிலே தலைமை வகிக்குமாறு அழைத் தான். அவன் அறியாமற் செய்த இந்தச் செயல் பிரசியா விற்கும் சேர்மனிக்கும் புதியதொரு காலவவதியைத் தொடக்கு வதாக இருந்தது.

மன்னனுக்கும் பிரசியப் பாராளுமன்றத்துக்கும் நடந்த பிசுமாக்கு.
பெரும் போராட்டத்தின்போது 1848 இல் மந்திரவமைச்சரின் பட்டியலொன்று தயாராயிற்று. அந்தப் பட்டியலில் இருந்த பிசுமாக்கினுடைய பெயருக்குப் பக்கத்தில் நான்காம் பிரதரிக்கு உவிலியம் எழுதியவை பின்வருமாறு : "ஈட்டிமுனை ஆட்சி எல்லைகடந்து நடக்கும்போதேயே இவனைப் பணிக்கு அமர்த்தல் வேண்டும்."[1] பிசுமாக்குக்கு, தன்னுடைய புதிய பதவியி லிருந்து கொண்டு தன்னியல்புகளைக் காட்டுவதற்கும் முழு வாய்ப்புக் கிடைத்தது. இந்த இயல்புகளைப் பிசுமாக்கு முன்ன ரேயே வெளிக்காட்டியுள்ளான். முடியாட்சியை ஆதரிக்கும் கடும் உணர்ச்சிக்கு அவன் பேர்போனவன். "வரலாற்றைப் பொறுத் தவரையில் அதிகார வர்க்கத்தினரிடமே நான் பரிவுடையனு வேன். நீதிபற்றி நான் கொண்டுள்ள கருத்துக்கள் குழந்தைப் பிள்ளைத் தனமானவை. ஆமோதியசு, அரிச்சுத்தோதீத்தன், புருட்டசு ஆகியவர்கள் கொலைப் பாதகர்களாகவும் தெல் என் பான் கலகம் செய்பவனுகவும் கொலையாளியாகவுமே என் கருத்திற் பட்டனர். முப்பது ஆண்டுப் போருக்கு முன்னர் பேரரசினை எதிர்த்த ஒவ்வொரு சிற்றரசன் மீதும் எனக்கு அதிக கோபம் ஏற்பட்டது. ஆனல் மாபெருந் தேர்வாளர் ஆட்சி தொட்டு, பேரரசுக்கு எதிரான கருத்துக் கொள்வதில் நான் பெரிதும் பாராபட்சமுடையவனுகவே இருந்தேன்," என பிசுமாக்கு "சிந்தனைகளும் நினைவு அலைகளும்" என்னும் தன்னுடைய நூலிற் குறிப்பிட்டுள்ளான். 1847 இல் பிரதரிக்கு உவிலியம் கூட்டிய அரசியற் சட்டசபையில் இவன் பிற்போக்குக் கட்சியினருடைய கருத்துக்களை வெளியிடும் பிரதிநிதியாக இருந்தான். மார்ச்சுத் தினங்களின்போது எழுந்த கலகங்களை வாள் முனையினல் அடக்க வேண்டுமென இவன் மன்னனை வற் புறுத்தினன். சேர்மானிய நாட்டின ஐக்கியம் பற்றிய உணர்ச்சிக் குச் சாதகமாகவே இவனும் இருந்தான். ஆனல் இவன் பின்

[1] Bismarck, Reflections, i. 55.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1862-70

பற்றப்போகும் முறைகள் இவனுடைய காலத்தில் வாழ்ந்த பெருந்திரளான மக்களுடைய கருத்தினிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தன. "சேர்மனியில் இருந்த கூட்டுத்தலைமை, போரின்றியும் சட்டமுறைக் கொள்கைகளுக்கு இணங்கிய வகையிலும் பிரசியாவினதாகும்" என நாற்காம் பிரதரிக்கு உவிலியமும் பிராங்குபோட்டு மன்றமும் கொண்டிருந்த கருத்தை இவன் வன்மையாக மறுத்துவிட்டான். இரு பிழைகள் காரணமாகவே இக்கருத்து ஏற்பட்டது எனப் பின்னர் பிசுமாக்கு விளம்பினான். இந்த இரட்டைப் பிழையை அவன் பின்வருமாறு விரித்துக் கூறினான்: சேர்மானிய வமிசத்தினரதும் அவர்களுடைய அரசுகளினதும் பலத்தைக் குறைத்து மதித்ததும் வீதிகளை மறித்து அரணெழுப்பிச் சண்டை செய்யும் பலத்தைக் கூடுதலாக மதிப்பிட்டதுமே அவ்விரு பிழைகளும்[1]. நாட்டினப் பாராளுமன்றத்தை ஆதரித்துப் பேசியவர்கள் இரண்டு விடயங்களை உணரத் தவறினர் என்பதே இந்த மேற்கோளின் கருத்தாகும். முதலாவது, பாராளுமன்றத்தின் ஆஞ்ஞைகள் எல்லாம் வெறும் ஏட்டு வடிவம் என்பதேயாம். இரண்டாவது, "மிருக பலத்தைத்" தங்களுக்கு உதவியாகக் கையாளுபவர்களுக்கே சேர்மானிய அரசர்களுடன் ஏற்படும் மோதல்களின் விளைவால் உண்டாகும் இறுதி வெற்றி கிட்டுமென்பதேயாம். 1848 இல் நடந்த புரட்சியின் போது புரட்சிச் சத்திகளுக்கு ஏற்பட்ட தற்காலிக வெற்றி இந்தப்புரட்சி இயக்கத்தின் உண்மையான பலத்தால் ஏற்படவில்லை யெனவும் சேர்மானிய மன்னர்கள் எதிர்பாராத சமயத்தில் இது நிகழ்ந்ததனால் ஏற்பட்டதெனவும் இவர்கள் கொண்டனர். சேர்மானிய மன்னர்களின் அமைச்சர்கள் அந்தரங்கமாகப் புரட்சிக்காரரிடம் அனுதாபங்கொண்டிருந்ததனாலுமே ஏற்பட்டதெனவும் இவர்கள் கருதினர். எனவே, இளவரசன் பாராளுமன்றங்களின் தீர்மானங்களைக் கவனித்து மரியாதை செலுத்தாது அதிகாரத்தை ஆதரிக்கும் அமைச்சர்களை நியமித்ததும் எங்குமிருந்த ஆபத்து நீங்கியது. இதனால் புரட்சிச் சத்தியை முடியாட்சி எங்கும் வென்றது. இதுவே 1848 இல் நடந்த பெரும் நிகழ்ச்சிகளுக்குப் பிசுமாக்கு கொடுத்த விளக்கம். அவனுடைய திடமான கருத்துக்களையும் எண்ணங்களையும் உறுதி செய்ய இந்த முடிவுகள் அவனுக்கு உதவின. அவனுடைய உளப்போக்கில் ஒரேயொரு கருத்தின் சாயலே படர்ந்திருந்தது. இந்தக் கருத்தையே "இரத்தமும் இரும்பும்" என்னும் புகழ்பெற்ற சொற்றொடர் மூலம் புலப்படுத்தினான். பலங்கொண்டு செய்ய வேண்டியவற்

1 Reflcetions, i. 60.

Digitized by Noolaham Foundation

றுக்குப் பதிலாக வாதஞ் செய்வது பலனளிக்காது என்பதே இச்சொற்றொடரின் உட்கருத்து. பிரசியா நேர்மையான முறையில் அடைந்த வெற்றிபற்றி ஏளனமாகவே பிசுமாக்கு தன்னுடைய "நினைவு அலைகளிற்" குறிப்பிடுகின்றான். சேர்மானியப் பேரரசு கட்டியெழுப்பப்பட வேண்டியது வாளின் சாதனையினாலேயொழிய கருத்துக்கள் மக்களிடம் பரவுவதினால் அன்று. 1862-70

இருபத்தைந்து ஆண்டுகளாகச் சேர்மனியின் கதியைப் பிசுமாக்கே நிருணயித்தான். அந்த இருபத்தைந்து ஆண்டுகாலத்தில் ஐரோப்பாவிலுள்ள எல்லா நாடுகளிலும் பார்க்கச் சேர்மனியே படைப்பல வலிமையுடையதாயிருந்தது. அவனுடைய இருபத்தைந்து ஆண்டு வரலாற்றையும் நோக்கினால் அவன் ஒரேயொரு இலக்கை அடைதற்காகத் தன் அரசறிவு முழுவதையும் பயன்படுத்தினான் என்பது புலனாகும். ஒசுற்றியாவை நாட்டுக் கூட்டிணைப்பிலிருந்து விலக்கிச் சேர்மனிக்குக் கேடாக அந்நாட்டினரிடம் காணப்பட்ட இருநாட்டுப் பற்றுக்கு முடிவு காண்பதே இவனுடைய நோக்கமாகும். அவன் இந்த நோக்கத்தைச் சமாதான வழியில் அடைவதற்குப் பதிலாகப் போரினால் நிறைவேற்றுதற்குத் தளராது உழைத்தான். அவனுடைய முதற்றிட்டத்தில் பிரான்சுடன் ஏற்பட்ட போர் இடம்பெறவில்லை. பிரான்சுக் கெதிராகச் செய்த போரை அவன் தான் பெரிதும் உழைத்துக் கட்டியெழுப்பிய மாளிகையின் சிகரமாகவே கருதினான். அவனுடைய செயலாற்றும் முறைகளையும் பூட்கையையும் நன்கு விரித்துக் கூறுவதற்கு பின்வரும் பொருள்களைப் பற்றி ஆராய்தல் வேண்டும். (1) அவன் பிரசிய சட்டசபையுடன் கொண்ட தொடர்பு; (2) ஒசுற்றியாவுடன் கொண்ட தொடர்பு; (3) பிரான்சுடன் கொண்ட தொடர்பு. "சொல்வறையின்" பற்றி விரிவாகக் கூறிவிட்டுப் பிசுமாக்கையும் கலுரையும் ஒப்பிடுவதுடன் எமது ஆராய்ச்சியை முடித்துக் கொள்வோம். அவனுடைய குறிக்கோள்.

(1) பதினான்காம் உலூயி காட்டிய "கட்டுப்பாடில்லாத தனி முதன்மையை" பிசுமாக்கு விரும்பவில்லையென்பது அவனெழுதிய குறிப்பிலிருந்து தெரிய வருகிறது. பிரதிநிதிகள் சபையும் செய்தித் தாள்களும் அரசாங்கத்தைக் கண்டனம் செய்வதை அவன் விரும்பினான். அரண்மனை வட்டாரங்கள் பற்றி அவனுக்கு அனுபவம் இருந்தது. தனி முதன்மையான ஆட்சியாளரிடம் இருக்க வேண்டிய குணங்களை எந்த இறையிடமும் காணலாமென நம்பிவிட முடியாது என்பதை அவனுடைய (1) பிரசிய சட்டவாக்கச் சபையுடன் ஏற்பட்ட தொடர்புகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1862-70 அனுபவம் உறுதிப்படுத்திற்று. " நடுநிலைமை, நேர்மை, கடமை யிற் பற்று, சத்தி, உள்ளூர உள்ள பணிவு " ஆகியவையும், எல்லாவற்றையும் அறியும் தன்மையும், புகழ்ச்சியை வேண் டாத தன்மையுமே மன்னனுக்குரிய இயல்புகள் என்பது அவ னுடைய கருத்து. ஆனால் தான் செயலாற்றும் முறையில் கொள்கையளவினதான நோக்கங்களிலும் மாற்றம் ஏற்பட அவன் இடங்கொடான். தன்னுடைய இலக்கை அடைவதற்கு எவ்வித வழிவகைகளையும் கையாளுவதில் அவன் தயங்க வில்லை. சுதந்திர நிறுவகங்களும் சுதந்திரமான செய் தித் தாள்களும் அவனுடைய போக்குக்குத் தடைகளாக இருந்தால் முன்னவற்றை அடக்கியொடுக்கவும் பின்னவற்றைக் கடுமையாகக் கட்டுப்படுத்தவும் தயங்க மாட்டான். பிரசியப் பாரா ளுமன்றத்தை அவன் நடத்திய முறையிலிருந்து இது விரைவிலே தெளிவாயிற்று. தன்னுடைய படைத்திட்டங்களை ஏற்றுக்கொண் டால் எதிர்க்கட்சியினரைத் தன்னுடைய மந்திரத்திற் சேர்த்துக் கொள்ளும் விருப்பையும் அறிவித்தான். இந்தப் பிரேரணை நிராகரிக்கப்பட்டது. அவனுடைய படைத்திட்டங்களை நிராகரித்தது மல்லாமல் நிதியை வழங்கவும் பிரதிநிதிகள் சபை மறுத்தது. பிசுமாக்கு இப்பொழுது தன்னுடைய இரும்பனைய திட புத்தி யைக் காட்டத் தொடங்கினான். பிரதிநிதிகள் சபையை எதிர்த்து நின்றான். படையைச் சீர்திருத்துவதையும் பாதீட்டுத் திட்டம் இல்லாமல் செயல் புரிவதையும் அவன் மேற்கொண்டான். பாராளுமன்றப் பெரும்பான்மையினுடைய எதிர்ப்புடன் ஆட்சி நடத்துவதும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பைப் பொருட் படுத்தாது பாரதூரமான திட்டங்களை நிறைவேற்றுவதும் யாப்பை மீறும் செயல்களாகும். ஆனால், பிசுமாக்கு நிலையைச் சரியாகக் கணித்துள்ளான். ஆயுதம் தாங்கிய எதிர்ப்பை நசுக்கு தற்குப் படைப்பலத்தை நம்பியிருக்கலாமென்பதை அவன் அறிவான். மேலும், அவன் முடியாட்சிவாதியாவான். முடி யாட்சியின் நலனுக்காகப் பலாற்கார முறைகளைக் கையாள் வதற்கு அவன் தயாராகவும் இருந்தான். மேலும், தாராள ருடைய எதிர்ப்பு, பெரும்பாலும் மத்திய வகுப்பிலேயே அடங்கி யிருந்தது. யாப்பு உரிமைகளை மீறி நடப்பதை நாடு முழுதும் ஏற்றுள்ளது போலவும் தெரிந்தது. இவையெல்லாவற்றிற் கும் மேலாகத் தன்னுடைய பிறநாட்டுப் பூட்கை ஈட்டுகின்ற வெற்றியினால் தன்னுடைய பகைவருடைய வாயையடக்குத ற்கு நம்பியிருந்தான். வெற்றி ஈட்டுகின்றவர்களை மக்கள் மன்னித்து விடுவார்கள் என்பதையும் தோல்வியை மன்னிக்க மாட்டார்கள் என்பதையும் அவன் நன்கு அறிந்திருந்தான். பிசுமாக்கு கணித்தவை முற்றிலும் சரியென்பதை எதிர்கால

Digitized by Noolaham Foundation

நிகழ்ச்சிகள் காட்டின. சூழியலிலும் போரிலும் அவனுடைய 1863
சாதனைகளால் கவரப்பட்டு மக்கள் அவனை ஆதரித்தமையால் அவன் பெருமையின் சிகரத்தை அடைந்தான். படை வலியை அடிப்படையாகக் கொண்ட பிரசிய முடியாட்சியின் அதிகாரத்தை அவன் புத்துயிர்பெறச் செய்தான். 1914–18 வரை நடந்த உலகப் போரிற் பிரசிய முடியாட்சி வீழ்ச்சியடைந்ததும் அதன் அதிகாரமும் ஒழிந்தது. சுருங்கக் கூறின், இதேசெயலில் இங்கிலாந்திலிருந்த சித்திராபோத்தும் பிரான்சிலிருந்த வில்லலும் தோல்வியடைந்தனர். ஆனால், பிரசியாவில் பிசுமாக்கு வெற்றிகண்டான். ஏனெனில், நாட்டினரின் சுதந்திரத்தைக் கவர்ந்து கொண்டானெனினும் அதற்குப் பதிலாகப் பெரும்புகழைப் பெற்றுக் கொடுத்தான். "எங்கள் நாட்டினம் தற்பெருமை உடையது. எங்களுடைய உளம் நேராகப் புண்படுகின்றபடியால் எங்களால் வீறுப்புப் பேசமுடியாது. எங்களுக்குப் பிறநாட்டில் முக்கியத்துவம் ஏற்பட்டால் அது எல்லாக் குறைகளையும் ஈடு செய்வதாகும்" எனப் பிசுமாக்கு எழுதினான்.[1] 1866 இல் சடோவாப் போருக்குப் பின்னர் பிரசியாவிற்கு ஒசுற்றியா அடிபணிந்தது. ஐந்து ஆண்டுகளாக வரவுசெலவுத் திட்டமில்லாமல் நாட்டை ஆண்டதற்கு மக்கட் பிரதிநிதி சபை நட்ட ஈடு கொடுத்தது. குறித்த வெற்றியினூற் பெருமகிழ்ச்சியுற்ற நாடு யாப்பு முறையை மீறிநடந்த அமைச்சனை மன்னித்தது. பிசுமாக்குக்கு மக்கள் பிரதிநிதிசபையில் பிறநாட்டுப் பூட்கையைப் பொறுத்த எல்லா அலுவல்களிலும், இனிப் பெரும்பான்மை கிடைக்கும் என்பது உறுதியாயிற்று.

(2) தனது நோக்கமொன்றை அடைவதற்கு வழிசெய்வதன் பொருட்டே பிசுமாக்கு பிரசியப் பிரதிநிதிகள் சபையுடன் மோதினான். பிசுமாக்கு கலப்பற்ற பிற்போக்குவாதியாக இருக்கவில்லை. தன்னுடைய வெளிநாட்டுத் திட்டத்தை மக்கட் பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டால் அவர்களுடன் ஒத்துழைப்பதற்கு அவன் ஆயத்தமாகவிருந்தான். பத்தாம் சார்ல்சின் அமைச்சருக்கும் இவனுக்கும் இவ்விடத்தில் வேற்றுமையுண்டு. பிறநாட்டு முயற்சிகளைத் தங்களுடைய உள்நாட்டு அரசியல் முறைமைக்கு ஓர் ஊன்றுகோலெனவே பத்தாம் சார்ல்சின் அமைச்சர் கருதினர். பிறநாட்டு மீக்கொளலில் சேர்மனியின் நலத்தைப் பெருக்குவதே பிசுமாக்கு கண்ட கனவு. ஏனைய இரண்டாந்தர யோசனைகளெல்லாவற்றிற்கும் மேலாக இதற்கு அவன் முதன்மை கொடுத்தான். நாட்டுக் கூட்டிணைப்பிலிருந்து ஒசுற்றியாவை விலக்குவதற்குத் தன்னுடைய சத்தி முழுவ (2) ஒசுற்றியாவுடன் கொண்ட தொடர்புகள்.

1 Reflections, i. 177.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1863 தையும் பயன்படுத்தினன். அவன் அரசெய்தியபோது சேர்மனியிற் பிரசியாவிற்கு எதிர்காலத்தில் நன்மை ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. மூன்றும் நெப்போலியனும் இரசியாவும் கூட்டுறவொன்றைச் செய்யலாமெனத் தோன்றியது. பிரசியாவின் தலைமையில் ஐக்கிய சேர்மனி உருவாவதற்கு மூன்றும் நெப்போலியன் ஒருபோதும் இணங்கமாட்டான். எனவே, மூன்றும் நெப்போலியனும் இரசியாவும் செய்கிற கூட்டுறவு பிசுமாக்கினுடைய திட்டங்களை அழித்திருக்கும். தகுந்த வேளையில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றினால் இந்த ஆபத்துத் தவிர்க்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியைத் தன்னுடைய சொந்த நலனுக்காகப் பிசுமாக்கு திறமையுடன் பயன்படுத்திக் கொண்டான். 1863 ஆம் ஆண்டு முற்பகுதியில் போலந்திற் கலகமொன்று உண்டாயிற்று. போலந்து மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கின்ற உணர்ச்சி பிரான்சிலும் இங்கிலாந்திலும் பொதுமக்களிடை நன்கு பரவியது.[1] இரசிய அரசாங்கத்துக்குப் பிசுமாக்கு உடனே உதவி அளித்தான். பிசுமாக்கின் கட்டளைப் படி போர் முனைகளில் படைகள் வந்து குவிந்தன. இது ஒருபுறமிருக்க, பொது மக்களபிப்பிராயத்தால் பலவந்தப்படுத்தப்பட்ட மூன்றும் நெப்போலியன் போலந்து மக்களுடைய சார்பில் எதிர்த்தான். இவனுடைய செயல் போலந்து மக்களுக்கு எவ்வித நன்மையையும் பயக்கவில்லை. இதனால் பிரான்சிற்கும் இரசியாவிற்கும் ஏற்படவிருந்த நல்லுறவு ஒப்பந்தம் தகர்ந்தது. இந்த ஒப்பந்தத்திற்குப் பதிலாகப் பிரசியாவிற்கும் இரசியாவிற்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் விளைவால் பிரசியா நன்மையடைந்தது. ஒப்பந்தம் செய்யப்பட்ட நாள் தொட்டு ஒசுற்றியாவின் மீது எந்தவிதமான நடவடிக்கையையும் எதுவித தடையுமின்றி பிரசியா எடுக்கக்கூடிய தாயிற்று. பிசுமாக்கின் சூழியலைப் பார்க்குமிடத்துக் கண் மூடித்தனமான அளவிற்குத் துணிச்சலாக நடந்து கொண்டான் போலத் தெரிகிறது. எனெனில், பிரான்சும் ஒசுற்றியாவும் இங்கிலாந்தும் இரசியா மேற் போர் தொடர்ந்தால் முதலாவது தாக்குதலைப் பிரசியாவே எதிர்க்க வேண்டியிருந்திருக்கும். அப்படியொரு போர் நிகழாது எனக் கருத இடமில்லை. இரசியாவுடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டபடியால் பிரசியாவிலுள்ள தாராளருடைய கடும் பகைமையைப் பிசுமாக்கு தேடிக் கொண்டான். இருந்தபோதும், சேர்மனியில் ஒசுற்றியாவுக்கிருந்த ஆதிக்கத்தை ஒழிப்பதற்கெனப் பிசுமாக்கு கொண்டிருந்த எண்ணத்திற்கு இந்த ஒப்பந்தம் உதவியது.

1. VII ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

Digitized by Noolaham Foundation

ஒசுற்றியாவைக் கவிழ்ப்பதே அவனுடைய முதல் நோக்கமாகும். 1863
இந்த ஒரு நோக்கத்துக்கு முதன்மை கொடுத்து மற்ற நோக்கங் களெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தினன்.

செல்சுவிக்கு ஒல்சுதைன் பிரச்சினை.

செல்சுவிக்கு — ஒல்சுதைன் கோமகவாட்சிப் பிரிவுகள் மிக வும் சிக்கல் நிறைந்தவை. இந்தச் சிக்கலே சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்பிலுள்ள பிரதானமான வல்லரசுகளாகிய பிரசியாவையும் ஒசுற்றியாவையும் போருக்கிழுப்பதற்குக் காரண மாக இருந்தன. இக் கோமகவாட்சிப் பிரிவுகள் தென் மாக்கு முடியுரிமைகளாக இருந்தபோதும் நான்கு நூற்றாண்டு களாகச் சுதந்திரமாகவே இருந்தன. தென்மாக்கு அரசின் ஒரு பகுதியாக இவ்விரு பிரிவுகளும் அமையவேண்டுமெனத் தென்மாக்கு நாட்டினக்கட்சியினர் செய்த முயற்சிகளை இவ் விரு பிரிவுகளும் வன்மையாக எதிர்த்தன. தென்மாக்கு அரச குலத்தில் ஆண் சந்ததி அற்றுப்போய்விடுமெனத் தெரிந்தது. பெண் வழியினர் நடத்துகின்ற ஆட்சியைத் தடை செய்கின்ற சாலிக்குச் சட்டம் இரு கோமகப் பிரிவுகளிலும் நிலவியது. இதனால் நிலை இன்னும் சிக்கலானதாயிற்று. இவ்விரு பிரிவுகளின் தன்னுண்மையை நிறுத்தாவிடில் தென் மாக்குக்கும் இக்கோமகப் பிரிவுகளுக்கும் ஏற்பட்டுள்ள ஐக்கி யம் குலைந்துவிடும் என்பது புலனுயிற்று. 1848 இல் நிலை மிகவும் நெருக்கடியானதாயிற்று. ஒல்சுதைன் தென்மாக் குக்கெதிராகக் கலாம் விளைத்தது. அத்துடன் ஒல்சுதைன் சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்பின் உறுப்புரிமை பெற்றதனால் சேர்மானிய மக்களுடைய உதவியை நாடி மனுச் செய்தது. இதனைச் சேர்மானிய மக்கள் ஆவலுடன் வரவேற்றனர். சேர்மனியில் வீசுகின்ற நாட்டினப் பேருணர்ச்சியென்னும் புயலிற் செல்சுவிக்கும் ஒல்சுதைனும் அகப்பட்டன. சேர்மா னிய நாட்டினக் கதியிலிருந்து பிரித்தெடுக்க முடியாத அளவுக்கு அன்றுதொட்டு இவ்விரு பிரிவுகளுடைய விதி பிணைக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்தச் சிக்கல் கலப்பில்லாச் சேர்மானியப் பிரச்சினையன்று. இந்தச் சிக்கலுக்கு ஐரோப்பிய அம்சமும் இருந்தது. தென்மாக்கைக் கூறுபோட்டு அதன் மூலம் சேர்மானியக் கடற்படையாதிக்கத்தைப் போற்றிக்குக் கடலில் வளர்க்க முயன்றால் அதை ஐரோப்பிய வல்லரசுகள் பலமாக எதிர்க்கும். எனவே, செல்சுவிக்கு — ஒல்சுதைன் சார்பில் பிரசியா தலையிடுவது விரைவிற் றுண்டிக்கப் பெற்றது (மல்மோ மரபு).[1] "இலண்டன் இணக்கம்" என்ற இணக்கம் 1852 இல் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி தென்மாக்கு முடி-

1. பக்கம் 79

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1863-66 யாட்சியின் முழுமையான அமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்படியாகச் செய்யப்பட்ட இணக்கம் நிலைத்து இயங்க முடியாதென்பது வெளிப்படை. தென்மாக்கிற்கும் சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்புக்குமுள்ள தொடர்பு வரவர மிகவும் பாதிக்கப்படுவதாயிற்று. 1863 இல் சிக்கல் ஏற்பட்டது. போலந்திலேற்பட்ட கலகத்தினால் வல்லரசுகளின் கவனம் போலந்தின்மீது சென்றது. இந்த வாய்ப்பைத் தென்மாக்கு நாட்டினக் கட்சியினர் தங்களுடைய நன்மைக்காகப் பயன்படுத்தினர். இக்கட்சியினர் செல்சுவிக்கு—ஒல்சுதைன்மீது யாப்பு ஒன்றைத் திணித்தனர். இந்த யாப்பு செல்சுவிக்கின் சுதந்திரத்தைச் செயல் முறையில் அழித்தது மல்லாமல் இலண்டன் இணக்கத்தையும் முற்றுக ஒதுக்கியது. இதனால் ஏற்பட்ட வாய்ப்பைப் பிரசியாவின் நன்மைக்காகப் பயன்படுத்தற்குப் பிசுமாக்குக்கு நன்றுகத் தெரியும். "தொடக்கத்திலிருந்தே இந்தப் பிரிவுகளைப் பிரசிய இராச்சியத்துடன் வலிந்திணைத்துக் கொள்ளும் நோக்கம் எனக்கு இருந்தது", எனப் பிசுமாக்கு பின்னர் எழுதினன். ஆனால், தன்னுடைய செயலையோ, உட்கருத்தையோ வெளிக் காட்டாமற் கவனமாக இருந்தான். ஐரோப்பிய வல்லரசுகள் தலையிட்டால் பிரசியாவிற்கு உதவி தேவைப்படுமென்பதை 1848 இல் நடந்த நிகழ்ச்சிகள் காட்டின. இது இங்ஙனமிருக்க, ஒசுற்றியா மூன்றும் நெப்போலியனுடைய இத்தாலியப் பூட்கைக்கு அஞ்சிற்று.[1] இதனால் பிரசியாவின் நட்பை வளர்க்க ஒசுற்றியா ஆவல் கொண்டது. பிசுமாக்கு, ஒசுற்றியாவும் பிரசியாவும் சேர்ந்து தென்மாக்கிற் றலையிட வேண்டுமென்ற முன்னீட்டுக்கு ஒசுற்றியாவை இணங்க வைத்தான். இலண்டன் இணக்கத்தைத் தென்மாக்கு மீறி நடந்தபடியால் செல்சுவிக்கு ஒல்சுதைனில் தலையிடச் சட்டபூர்வமான ஒரு தலைக்கீடு கிடைத்தது. இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் இரசியாவுக்கும் சட்டபூர்வப்படி இதனை எதிர்க்கக் கூடிய காரணம் எதுவும் இல்லை. இதனைத் தொடர்ந்து எற்பட்ட போரில் தென்மாக்கு தோல்வி கண்டது. தென்மாக்கிடமிருந்து செல்சுவிக்கு—ஒல்சுதைன் பறிக்கப்பட்டது (1864). தொடக்கத்தில் இப்பிரதேசத்தின் பாலனப் பொறுப்பு ஒசுற்றியாவிடமும் பிரசியாவிடமும் இருந்தது. இந்த ஒழுங்கு பின்னர் காசுத்தின் (1865) மாநாட்டில் திருத்தியமைக்கப்பட்டது. இதையடுத்த காலத்தில் எற்பட்ட இடைவேளையில் பிசுமாக்கு நெப்போலியனுடைய நடுநிலையையும் இத்தாலியின் ஒத்துழைப்பையும் தனதாக்கிக் கொண்டான். செல்சுவிக்கு—ஒல்சுதைனைப் பிரசியா வலிந்திணைத்துக் கொள்வதை

1. V ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

Digitized by Noolaham Foundation

ஒசுற்றியா ஒருநாளும் ஏற்றுக் கொள்ளாதென்பதை அவன் உணர்ந்து கொண்டான். ஒசுற்றியாவுடன் போர்தொடுப்பதற்கு அவன் பெரும்பாடுபட்டான். ஒசுற்றியாவுடன் போர்தொடுப் பதற்கு அவன் தன்னந்தனியேதான் தளராது முயற்சி செய்தான். ஏனெனில், பிரசிய மக்கள் அமைதியை விரும்பி நின்றனர். அதே நேரத்தில் சேர்மனியில் ஏனைய பகுதியிலுள்ள மக்கள் ஒகத்தன்பேக்குக் கோமகனின் உரிமைகளை ஆதரித்தனர். செல்சுவிக்கு—ஒல்சுதைன் பரம்பரை உரிமை இக்கோமக னுடையதெனச் சேர்மானிய மக்கள் ஆதரவு காட்டினர். பிரசியா விடுக்கும் அறைகூவலை ஏற்றுக்கொள்வதன்றி ஒசுற் றியாவால் வேறொன்றும் செய்ய முடியாதிருந்தது. பிரசியா விற்கு 1866 யூலையில் சடோவாப் போரில் (கொனிகிரத்து) உறுதியான வெற்றிகிடைத்தது. இதனால் ஒசுற்றியப் படைக ளிலும் பார்க்கப் பிரசியப் படைகளே பலம் வாய்ந்தனவென்பது நிரூபிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சடோவாப் போரில் ஒசுற்றியாவை ஆதரித்த சேர்மானியச் சிற்றரசுகள் தோற்கடிக்கப் பட்டன. பிசுமாக்கு, சேர்மானிய அரசியல் முறைமையில் முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களைச் செய்தான். இம்மாற்றங் கள் பிரசியாவிற்குப் பல அதிகாரங்களை அளித்தன. அத்துடன் இக்காலச் சேர்மானியப் பேரரசுக்கு இம்மாற்றங்களே அத்திவா ரமாயமைந்தன. 1866

வெனிசியாவை இத்தாலிக்குக் கொடுத்தபோதும் ஒசுற்றிய ஆள்புலத்தைப் பிரசியா தனதாக்கிக் கொள்ள வேண்டுமென உவிலியம் தெரிவித்த யோசனையைப் பிசுமாக்கு எதிர்த்தான்.[1] பிரசியாவின் மீக்கொளலின் பொருட்டு சேர்மனியிலிருந்து ஒசுற் றியாவைத் துரத்த வேண்டுமெனப் பிசுமாக்குத் திடமான உறுதி கொண்டான். ஆனால், பிரசியாவிற்கும் ஒசுற்றியா விற்குமிடையில் நிலையான முட்டுக்கட்டை யொன்றை உண்டாக்க அவன் விரும்பவில்லை. இந்த முட்டுக்கட்டை இருந்தால் பிரான் சிற்கும் இரசியாவிற்கும் எதிராக ஒசுற்றியாவின் கூட்டுறவைப் பெற முடியாமலிருக்கும். இதுபற்றிப் பிசுமாக்கு ஓரளவு நிதானத்துடன் நடந்து கொண்டான். ஆனால், 1871 இல் பிரான்சிடமிருந்து அல்சேசையும் உலொரேனையும் வலிந்து பெற்ற அவனுடைய பூட்கைக்கும் மேலே குறிக்கப்பட்ட நிதானத் துக்கும் வியத்தகு வேறுபாடுகள் இருந்தன. அல்சேசும் உலொரேனும் தங்களிடமிருந்து வலிந்து எடுக்கப்பட்டதால் பிரான்சிய மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. பல ஆண்டு கள் கழிந்தும் இந்த வெறுப்புணர்ச்சி மிகுந்ததேயன்றிக் **வட சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்பு.**

1 v ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1866 குறையவில்லை. பிராக்கில் செய்துகொண்ட சமாதானத்தின்படி (1866, ஒகத்து) பிரசியாவானது செல்சுவிக்கு—ஒல்சுதைனையும், அனோவர் அரசையும், எசு அரசையும், (எசு-காசில்) எசு-தாமி தாற்றின் ஒரு பகுதியையும், பிராங்குபோட்டு நகரையும் தனதாக்கிக் கொண்டது. இதனால் பிரசியாவின் குடித்தொகை 40 இலட்சமாயிற்று. 1815 இல் நிறுவிய சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்பு குலைக்கப்பட்டது. சேர்மானிய அலுவல்களில் பங்குபற்றுதபடி ஒசுற்றியா வெளியேற்றப்பட்டது. அதே நேரத்தில் மெயினுக்கு வடக்கேயுள்ள அரசுகளெல்லாவற்றையும் கொண்ட நாட்டுக் கூட்டிணைப்பிற் பிரசியா முதன்மை பெற்றது. பிசுமாக்கினால் உண்டாக்கப்பட்ட இந்த நாட்டுக் கூட்டிணைப்பில் பாராளுமன்றொன்றுமிருந்தது. இதில் இரண்டு பிரிவுகள் இருந்தன. ஒன்று, மக்களது வாக்குரிமைப்படி தெரிவு செய்யப்படும் பாராளுமன்றம் (இறைச்சிதாக்கு). மற்றது, கூட்டாட்சிச் சபை (பண்டசிருத்து). இந்தக் கூட்டாட்சிச் சபையில் பல்வேறு அரசுகளிலுமிருந்து வரும் பிரதியாளர் இடம் பெறுவர். பண்டசிருத்தில் உள்ள நாற்பத்துமூன்று வாக்குக்களில் பதினேழே பிரசியாவின் கட்டுப்பாட்டிலிருந்தன.[1] பண்டசிருத்திற் பிரசியா பெயரளவில் சிறுபான்மையாக இருந்தமையால் அதன் உண்மையான பலம் மறைக்கப்பட்டது. அத்துடன் சிறு அரசுகளைச் சமன்செய்யவும் இது உதவியது. இப்பொழுது பிசுமாக்கினால் பொய்யான சலுகைகளை வழங்க முடியும். ஏனெனில் முக்கியத்துவம் வாய்ந்த அலுவல்களில் அதிகாரமெல்லாம் பிரசிய மன்னனினுடைய கையிலே இருந்தது. நாட்டுக் கூட்டிணைப்பின் உறுப்பாக அமைந்த நாடுகளின் படைகளுக்குப் பிரசிய மன்னனே அதிகாரியாகவும் பிறநாட்டுப் பூட்கையைப் பற்றி முடிவு செய்பவனுகவும் இருந்தனன். உண்ணாட்டு அலுவல்களைப் பொறுத்த அளவில் ஒவ்வோர் அரசுக்கும் பெருமளவு சுதந்திரம் இருந்தது. கூட்டாட்சி ஐக்கியம் ஏற்பட்டபோதும் தனியரசுகள் தங்கள் தனியியல்புகள் யாவற்றையும் ஒன்றுகக் கலக்கவிடாது தனித்தனியே இயங்கின. இது ஒருபுறமிருக்கப் பல சிக்கல்கள் தெளிவில்லாமலும் வரையறுக்கப்படாமலுமிருந்தன. ஏனெனில், மேற் றொடர்ந்து கவனமாகச் செயலாற்றுவதையே பிசுமாக்கு விரும்பினன். பெரும் பொருள்கள் சிறுபொருள்களைக் கவருதல் இயல்பாதலால் கூட்டாட்சி அரசாங்கம் தன்னுடைய

1. தெற்குச் சேர்மானிய அரசுகள் நாட்டுக்கூட்டிணைப்பிற் சேர்ந்த பின்னர் பண்டசிருத்தின் உறுப்பினர் தொகை 58 ஆகக் கூட்டுவிக்கப்பட்டது.

A. L. Lowell, The Governments of France, Italy, and Germany [1914], p. 192.

Digitized by Noolaham Foundation

டவாக்கக் கட்டுப்பாட்டை அதிகமாக்கியதுடன் சமூக அரசியற் 1886
பாலனத்திற் பல புதிய திணைக்களங்களைத் தனது அதிகாரத்தின் கீழ்க் கொணர்ந்தது. இதனால் பல அரசுகளுக்கு நட்டம் ஏற்பட்டது. மெயினுக்குத் தெற்கேயுள்ள பவேரியா, உவூத்தெம்பேக்கு, பேடன், எசு-தாமிதாற்று ஆகிய அரசுகள் சுதந்திரமுடையனவா யிருந்தன. ஆனால், மூன்றும் நெப்போலியன் தன்னுடைய இராச்சியத்துடன் தங்களைச் சேர்த்துவிடுவானென்ற பயமும் இவைகளுக்கிருந்தது. எனெனில், இரைனை இழந்ததற்கு நட்ட ஈடு வேண்டுமென நெப்போலியன் கோரியதைப் பிசுமாக்கு இந்த நான்கு அரசுகளுக்கும் தெரிவித்தான். எனவே, இந்த நான்கு அரசுகளும் தனித்து நிற்க முடியாது எதிர்ப்பு, பாதுகாப்பு ஆகியவை பற்றி ஒரு நட்புறவு செய்து கொண்டன. இந்த நான்கு அரசுகளின் படைப்பலத்தைக் கட்டுப்பாடு செய்யும் அதிகாரத்தைப் பிரசியா பெற்றுக் கொண்டது.

(3) சேர்மானியப் பேரரசின் வளர்ச்சியின் முதலாவது கட் (3) பிரான்சு.
டமே ஒசுற்றியாவுக்கும் பிரசியாவுக்கும் மூண்ட போராகும். இரண்டாவது கட்டம் பிரசியாவுக்கும் பிரான்சுக்கு மேற்பட்ட போராகும். இந்தப் போருக்கு உரிய அடிப்படையான காரணங்களையும் சந்தர்ப்பங்களையும் வரையறை செய்து தெளிவாக்குதல் இங்கு அவசியமாகும். செல்சுவிக்கு—ஒல்சுதைன் தகராறு ஒசுற்றிய-பிரசிய போருக்கு எங்ஙனம் இறுதியான காரணமாகாதிருந்ததோ அங்ஙனமே பிரான்சிய-பிரசியப் போருக்கு இசுப்பெயின் உரிமை வழிக்கொளற் போர் முடிவான காரணமாகவில்லை.

பிரான்சிற்கும் சேர்மனிக்கும் இடையிலுள்ள விவாதத்திற் மத்திய
குரிய பிரதேசத்தைச் சேர்த்து மத்திய இராச்சியமாக்கு இராச்சியம்.
மெண்ணம் ஒருபோதும் கைகூடவில்லையென்பது வரலாறு கண்ட துரதிட்டம். மகா சார்ள்சு இறந்தபின்னர் அவனுடைய பேரரசு மூன்று பிரிவாகப் பிரிந்தது. அவை பின்வருமாறு : மேற்குப் பிரிவே ஏறத்தாழ இப்போதைய பிரான்சு எனப்படுகின்றது ; கிழக்குப் பிரிவு இப்போதைய சேர்மனி யெனலாம் ; மத்திய பிரிவு ஆள்புலம் வளைந்து நெளிந்து சென்றது. இதனை உலொதறிங்கியா என்பர். இவ்வாள்புலம் ஐரோப்பாவினூடாகச் சென்று தியூதன் மக்களுடைய தலைநகரான அச்சனையும் இலத்தீன் மக்களுடைய தலைநகரான உரோமாபுரியையும் தன்னுளடக்கியது. நடுவே இருந்த உலொதறிங்கியாப் பிரதேசம் எனைய அரசுகளின் மோதல்களுக்குத் தாங்கு நாடாக நிற்கவில்லை. அதன் அயலிலிருந்த இராச்சியங்கள் அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1866-70

விரைந்து கைப்பற்றிக் கொண்டன. இந்த மத்திய இராச்சியத்தை யமைத்தற்குப் பேகண்டி மன்னனுன தீரமுள்ள சார்ள்சு 15 ஆம் நூற்றுண்டில் புதியதொரு முயற்சி செய்தான். அவனுடைய முயற்சி வெற்றிபெற்றிருந்தால் ஐரோப்பா வேறு வழியில் அபிவிருத்தியடைந்திருக்கும். ஆனல், அவனுடைய அகால மரணத்தினல் இத்திட்டம் குலேந்தது. அதனல் பிரான்சும் சேர்மனியும் நேருக்குநேர் நின்று போர் செயய வேண்டியதாயிற்று. நிற்க, ஐக்கிய சேர்மனியின் தலைமைப் பீடத்திற்குப் பிரசியாவைக் கொண்டுவருவதும் பிரசியாவைப் படைப்பலமுள்ள நாடாக மாற்றுவதும் ஆகிய முக்கியமான மாற்றங்கள் பிரான்சை வேண்டாவெறுப்பாக இருக்கவிடவில்லே. ஒன்றேடொன்று மாறுபட்ட ஆர்வங்களிலிருந்து 1870 இல் போர்த்தீ மூண்டது.

III ஆம் நெப்போலியனும் பிரசியாவும்.

யெனுப் போர்க்களத்தில் (1806) முதலாம் நெப்போலியன் பிரசியாவைத் தோற்கடித்தது முதல், பிரசியாவுக்கும் பிரான்சுக்குமிடையில் ஒற்றுமையீனம் ஏற்பட்டது. தலைமுறை தலைமுறையாக வந்த இப்பகைமை பிசுமாக்கைப் பாதிக்கவில்லே. இந்தப் பகைமையை, "தேங்கி நிற்கும் வெறுப்புணர்ச்சி" யென அவன் குறிப்பிட்டான். தான் ஊக்கத்துடன் பின் பற்றுகின்ற இலக்கிற்கு நேர்முகமாகவோ, அல்லது மறை முகமாகவோ சர்ந்தப்பத்திற்கேற்ற நன்மையளிக்கக்கூடிய எந்த வெளிநாட்டரசின் உதவியையும் தந்திரமாக உபயோகிப்பதற்கு அவன் தயங்கமாட்டான். 1857 ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்தே பிரசியாவும் பிரான்சும் தங்களுறவைத் திருத்திக் கொள்ளவேண்டுமென அவன் ஆதரித்துப் பேசினுன். அதற்கு ஐந்து ஆண்டுகளின் பின்னர் அவன் அரசெய்திய வேலே தொட்டு நெப்போலியனுடன் கொள்ள வேண்டிய உறவை நுணுக்கமாக, சூழ்ச்சித் திறத்துடன் கையாண்டு வந்தான். சூழியலிலும் பின்னர் போரிலும் மூன்றும் நெப்போலியனேப் பிசுமாக்கு ஏய்த்து வெற்றி கண்டான். போரில், பிரான்சு சேர்மனிக்கு நிகரான எதிரியாக இருக்கவில்லே. சேர்மனியில் உள்ள அரசியலில் ஏற்பட்ட மாற்றத்தைப் பிரான்சியப் பேரரசன் சரியாக விளங்கிக் கொள்ளவில்லே. இத்தாலிய இயக்கத்தின்மீது அனுதாபங்கொண்ட நெப்போலியன் ஒசுற்றியாவைப் பிரான்சின் எதிரியெனக் கருதினுன். ஆபிசுபேக்கு முடியாட்சிக்கு எதிராகப் பிரசியாவுடன் நட்புறவு செய்யும் அளவிற்குக் கூட இவன் பரிவுடையவனுயிருந்தான். ஒசுற்றிய அரசின் படை வலிமையை அளவுக்கு மீறி மதிப்பிட்டதனல் ஒசுற்றியாவுக்குத் தெற்குச் சேர்மனியிலிருந்த அதிகாரத்துக்கு

Digitized by Noolaham Foundation

மாற்று மருந்தாக வடக்குச் சேர்மனியிற் பிரசியாவின் செல் 1866-70
வாக்கைப் பரப்புவதையும் இவன் விரும்பினான். பிசுமாக் கினுடைய அந்தரங்கமான திட்டங்கள்பற்றி இவன் ஒன்றுமறியான். காலங்கடந்த பின்னரேயே பிரசியாவினால் ஏற்படும் ஆபத்தை உணர்ந்தான். இரைனே நோக்கிப் பிரான்சிய எல்லையைக்கூட்டி நட்ட ஈடு செய்வதுபற்றி இவன் தெளிவான கருத்துடையனாயிருக்கவில்லை. முதலாம் நெப்போலியன் செய்தது போலச் சேர்மனியிலே தனக்கென ஒரு தனியிடத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமெனவும் இவன் விரும்பினான். முதலாவது நெப்போலியனேவெனில் சேர்மானியச் சிற்றரசுகள் எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து இரைன் நாட்டுக் கூட்டினைப் பொன்றை யுண்டாக்கி அதனைப் பிரான்சிய அதிகாரத்தில் வைத்திருந்தான். சேர்மனியை ஒற்றுமையடையவிடாது பலவீனமாக்கி வைத்திருந்து, ஒசுற்றியா, அல்லது பிரசியா அதிகாரத்தை மிகுதியாகப் பெறுவதைத் தடுப்பதே மூன்றாம் நெப்போலியனுடைய பூட்கையின் நோக்கமாகும். அக்கொள்கைக்கு இணங்கவே ஒசுற்றிய—பிரசியப் போர் மூண்டபோது அவன் ஒரு பக்கமும் சாராதிருந்தான். ஆனால், சடோவா வெற்றி அவன் எண்ணியிருந்தவை எல்லாவற்றையும் விரைந்து தலைகீழாக்கிற்று. போர் நீடிக்குமெனவும் அதன் பயனாக இருதரப்பினரும் களைத்துப்போய்விடுவரெனவும் தான் பிரச்சினை தீர்ப்போனகத் தலையிட்டு நிபந்தனைகளை விதிக்கலாமெனவும் அவன் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தான். இருந்தும் அவன் கொண்டிருந்த பிழையான கருத்துக்கள் சடோவா வெற்றியினால் முற்றுக நீங்கவில்லை. பிரசிய இராச்சியம் விரிவடைதலை அவன் எதிர்க்கவில்லை. வடக்குச் சேர்மனியில் பிரசியாவின் மீக்கொளலில் அவன் எந்தவிதமான ஆபத்தையும் காணவில்லை. அதுமட்டுமன்றி, சேர்மனியின் நாட்டின அபிவிருத்தியும் ஐக்கியமும் பிரசியாவின் மீக்கொளலால் தடைப்பட்டுவிடுமெனவும் அவனுக்குத் தோன்றியது. பிரசியாவைச் சார்ந்த சேர்மனியினுள்ள பிரதேசங்களெல்லாம் பிரான்சிய ஆதரவை நாடும் என அவன் நம்பினான்.

நெப்போலியன் கொண்டுள்ள பிழையான கருத்துக்களைப் பிரான்சிய-பிரசிய அரசறிஞனான பிசுமாக்கு வரவேற்றான். ஏனெனில், தன்னுடைய படை ஆயத்தங்கள் நிறைவேறும் வரையும் போர் மூள்வதைப் பிற்போடுவதே அவனின் விருப்பம். அத்துடன் அவன் பிரான்சுடன் போரைத் திடீரெனத் தொடங்க விரும்பவில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அவன் காலந் தாழ்த்தியபொழுதிலும் தொடக்கத்திலிருந்து தான் நிறை

பிரான்சிய-பிரசியப் போரின் காரணங்கள் (1870).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1870-71 வேற்ற வேண்டிய செயல் அவனுடைய உளத்தில் தொடக் கத்திலிருந்தே தெளிவாக உருப்பெற்றிருந்தது. ஐக்கிய சேர் மனி உருவாவதற்குச் சிறிது காலம் தேவையென்பதையும், வடக்குச் சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்பே இச் சிக்கலைத் தீர்ப்பதற்குரிய முதற்படி யெனவும் அவன் நம்பினான். ஐக் கிய சேர்மனியின் அமைப்பை அடைவதற்கு முன்னரேயே பிரான்சிய-சேர்மானியப் போர் நிகழவேண்டு மென்பதையும் அவன் மேற்கூறியவற்றை நம்பியதுபோல் நம்பினான்[1]. "ஒசுற் றியப் போருக்குப் பின்னர் பிரான்சுடன் போர் ஏற்படுதல் வரலா ற்று நிகழ்ச்சி நெறி" என அவன் விளம்பினான். சேர்மானியப் பேரரசினை முற்றுக அமைப்பதற்குப் போர் செய்யவேண்டி யிருந்தது. அதற்கு இரண்டு காரணங்களிருந்தன. பிரசியாவின் தலைமையில் சேர்மனி ஐக்கியப்படுவதைப் பிரான்சு வன்மை யாக எதிர்க்குமென்பதை அவன் முன்னரேயே அறிவான். இதுவே முதலாவது காரணம். சடோவாப் போரின் பின்னர் நெப்போலியன் தலையிட்டமையாலேயே பிசுமாக்கு ஒசுற்றியா வுடன் கவனமாக நடந்துகொள்ள வேண்டியதாயிற்று. இரண் டாவதாக, சேர்மனியிலுள்ள மக்களெல்லோரும் புதிய நாட்டின உணர்ச்சியினால் உந்தப்பட்டால் மாத்திரமே தெற்குச் சேர் மானியச் சிற்றரசர்களுக்கு நாட்டுக் கூட்டிணைப்பிற் சேருதற்கு இருந்த தயக்கத்தைப்போக்கலாம். "1866 இல் எமது படைகள் ஈட்டிய வெற்றியினால் மெயினுக்குத் தெற்கேயுள்ள நாட்டின உணர்ச்சியும் எம்முடன் தெற்கு அரசுகள் கூட்டுறவு செய்வ தற்குக் காட்டிய விருப்பமும் மீண்டும் தணிந்துபோகும்"[2]. நாளடைவில் பழக்கவழக்கங்களில் வடக்குச் சேர்மானிய மக்க ளுக்கும் தெற்குச் சேர்மானிய மக்களுக்கும் வேற்றுமைகள் உண்டாகிவிட்டன. இந்த வேற்றுமைகளினாலும் வமிசச் செல்வாக் கினாலும் சேர்மானிய வரலாற்றின் போக்கிற் பெரிய பிளவுக ளேற்பட்டிருக்கின்றன. பல ஆண்டுகளாக "எங்களைத் தாக்கும் அயலவர்மீது ஒருமித்த நாட்டினப் போர் தொடுப்பதனாலேயே இந்தப் பிளவுகளை நீக்கும் செயலை நன்கு செய்து முடிக் கலா" மெனப் பிசுமாக்கு கருதினான். அரசியல் நிகழ்ச்சிக ளெல்லாம் அவனுக்குச் சாதகமாகவே இருந்தன. ஏனெ னில், பிரான்சிலிருந்த செல்வாக்குடைய சத்திகளும் போர் தொடுக்க வேண்டுமெனத் தூண்டின. பிரசியாவின் மீக் கொளலையிட்டுப் பிரான்சிலிருந்த எல்லாக் கட்சிகளும் வெஞ் சினம் கொண்டன. நெப்போலியனின் மங்கியிருந்த அதிட் டத்தைத் துலக்கவும் அவனுடைய வமிசத்தைப் பாதுகாக்க

1 Reflections, ii. 57.
2 Ibid. ii. 97.

Digitized by Noolaham Foundation

வும் வெற்றிகரமான ஒரு போர் தேவையென நெப்போலிய 1870-71
னுடைய ஆதரவாளர்கள் கருதினர். பிரான்சிலும் சேர்மனியி
லும் பொதுமக்களிடையே மனக் குழப்பம் வளர்ந்து வந்தது.
இந்த ஈர் இராச்சியங்களின் ஆட்சியாளர்கள் சமாதானஞ் செய்
தாலன்றி அந்த மனக் குழப்பத்தை அகற்ற முடியாது.
ஆனால், இந்தச் சமாதானம் ஏற்படக்கூடியதொன்றன்று. இரு
நாடுகளுக்கும் போர் மூளுவதற்கு ஒருசிறு காரணமே போதும்.
போர்க்கோலம் பூண்டிருக்கும் ஒரு நாடு போர்ப் பிரகடனத்துக்
குரிய தலைக்கீட்டைக் கண்டு பிடிப்பது கடினமான செயலன்று.
இசுப்பானிய அரசு உரிமை யாருக்குச் செல்லவேண்டுமென்
னும் தகராறு பிரான்சிய பிரசியப் போருக்கு உடனடியான
காரணமாயிற்று. இந்த அரசுரிமைத் தகராறு திருத்திகர
மாக இணக்கம் செய்யப்படும் அளவிற்கு வந்தபோதே
இரு நாடுகளுக்கும் போர் மூண்டது. 1870 செத்தெம்பர்
முதல் நாளன்று செடான் போர் நடந்தது. அதைத் தொடர்ந்து
ஒற்றேபர் 27 இல் மெற்சில் சரணடைந்தது. அங்கு ஒருலட்சத்து
எழுபதினாயிரம் போர் வீரர் சரணடைந்தனர். அதன்பின்னர்,
1871 சனவரி 28 ஆம் நாளன்று நான்கு மாத முற்றுகையின்
பின்னர் பாரிசு நகரம் வீழ்ந்தது. இந்தப் போரின் விளைவினால்
மெற்சு, சிராசுபேக்கு ஆகியவையுட்பட அல்சேசையும் கிழக்கு
உலொரேனையும் சேர்மனி பெற்றது.[1] அது மட்டுமல்லாமல்,
இப்போரினால் மெயினுக்குத் தெற்கேயுள்ள அரசுகளை வடக்குச்
சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்பிற் சேர்ப்பதற்குரிய வெற்றி
கிடைத்தது. மெயினுக்குத் தெற்கேயுள்ள அரசுகளை வடக்குச்
சேர்மானிய நாட்டுக் கூட்டிணைப்பிற் சேர்ப்பதற்காகவே பிசுமாக்கு
போர் தொடுத்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 1871
சனவரி 18 ஆம் நாளன்று வேர்சையிலிற் பிரசிய மன்னன்
சேர்மானியப் பேரரசனெனப் பட்டம் பெற்று முடிசூட்டப்பட்டான்.
இந்த முடிசூட்டு விழாவானது சேர்மானிய மக்களிடம் புதி
தாகப் பிறந்த ஐக்கியத்தின் சின்னமாகவே அமைந்தது.

சேர்மானியப் பேரரசின் அரசியல் அமைப்பைப் பிசுமாக்கு சொல்வறை
கட்டியெழுப்பினன். ஆனால், சொல்வறையின் எனும் சுங்க யின்.
வரிச் சங்கம் ஐக்கிய சேர்மனிக்கு வேண்டிய அத்திவாரத்தை
ஏற்கனவே கோலிவிட்டது. அரசியல் ஐக்கியத்திற்குப் பொரு
ளாதார ஐக்கியமே அடிகோலி வழிவகுத்ததென்க. பொருள்
பற்றி எழுகின்ற சமூக ஆர்வம் நாட்டின உணர்ச்சியை வளர்த்து
அதை ஆதரித்தது. ஆதம் சிமிது என்பானுடைய தத்துவப்

1. பிரான்சிய-பிரசியப் போரின் பயன்களைப் பற்றி VIII ஆம் அத்தியாயத்திற் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1818-70 படி, 1818 இல் மாசன் என்பான் தொடக்கிய நிதிச் சீர் திருத்தமே சொல்வறையினின் தொடக்கமாகும். தனித்தனி யாயிருந்த பிரசிய மாகாணங்களை ஐக்கியப்படுத்துதற்கு அவன் புதிய இறைமுறைமையை உண்டாக்கினான். உண்ணாட்டுச் சுங்க வரிகளை நீக்கிவிட்டுப் பிரசிய ஆள்புலமெங்கும் கட்டுப்பாடில்லாத வர்த்தகத்தை இப்புதிய முறைமை நிறுவியது. பிறநாட்டு இறக் குமதிப் பொருள்களைப் பொறுத்த அளவில் உற்பத்தி செய்யப் பட்ட பொருள்கள்மீது குறைவான இறைமுறை விதிக்கப் பட்டது. ஆனால், மூலப் பொருட்கள்மீது எவ்விதமான இறை முறையும் விதிக்கப்படவில்லை. இது ஒருபுறமிருக்க, மற்றொரு புறத்தில் வேனய அரசுகள் இந்தச் சுங்கவரிச் சங்கத்தில் சேருவதைக் கட்டாயப் படுத்துவதற்காகப் பிரசியாவினூடாக ஏற் றிச் செல்லும் பொருட்கள்மீது போக்குவரத்து வரி அதிக மாக்கப்பட்டது. சிறிய அரசுகளின் சுதந்திரத்துக்கு இப்பூட்கை பெரும் ஆபத்தை விளைத்தது. சிறிய அரசுகள் இந்தப் பிரசிய முறைமையிற் சேராது விலகி நிற்பின் பொருளாதார அழிவு அவற்றை எதிர்நோக்கி நிற்கும். ஏனெனில், தெறியகை இருந்த பிரசிய ஆள்புலங்கள் பல சேர்மானிய அரசுகளை முற்றுகச் சுற்றியிருந்தன. அது மட்டுமன்றி, சேர்மனியிலுள்ள பிரதான வர்த்தகப் பாதைகள் அவ்வாள்புலங்களுக் கூடாகவே சென்றன. சிறியவரசுகள் பிரசியாவிற் கெதிராகக் காட்டிய எதிர்ப்பை அது பொருட்படுத்தவில்லை. இந்தச் சுங்கவரி ஒப் பந்தத்தினால் ஏற்படுகின்ற பெரும் விளைவுகளை அறியத் தவறிய ஒசுற்றியாவும் வாளாவிருந்தது. போட்டாபோட்டியாக வர்த்தகச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. ஆனால், 1825 இன் பின்னர் நிதியமைச்சனாக இருந்தவனும் பின்வருபவற்றை முன்னறி யும் தன்மையுள்ளவனுமான மொற்சு காட்டிய வழியின் தாராளமான நிபந்தனைகளினால் எதிர்ப்புகளெல்லாம் படிப் படியாகக் குன்றிவிட்டன. ஒன்றன்பின் ஒன்றாக அரசுகள் இந் தச் சங்கத்திற் சேர்ந்தன. பவேரியா, சட்சனி, உவூத்தெம் பேக்கு ஆகிய முக்கியமான அரசுகள் 1834 இல் சொல்வறையி னிற் சேர்ந்து கொண்டன. நாளடைவில், குறித்த முறைமை சேர்மனி யெங்கும் பரவியது. ஒசுற்றியா வர்த்தகத்தை வரி மூலம் பாதுகாக்க வேண்டுமென்ற பூட்கையை உடையதாயிருந் தது. இக்காரணத்தினால் சேர்மனியின் வர்த்தகப் பூட்கை பற்றிப் பிரசியா தன் அபிப்பிராயத்தைக் கூறும் உரிமையை இழந் தது. பிரசியாவுடன் போட்டியிடக்கூடிய நாடொன்றுமில்லை. இங்ஙனம் பொருளாதாரச் சத்திகளின் அமைதியான ஆனால் தளராத நெருக்கத்தினாற் சேர்மனியைப் பிரித்திருந்த அரசி யற் றடைகளெல்லாம் அழிந்தன. சேர்மனியின் பிரிவினைக்குக்

Digitized by Noolaham Foundation

காரணமாக இருந்த ஆள்புலச் செல்வாக்கும் வமிசச் செல்வாக் 1852–70
கும் இந்தப் பொருளாதார சத்திகளினால் நீக்கப்பட்டன.

பிசுமாக்கும் கவூரும்.

சேர்மனியின் நாட்டின இயக்கத்தைப் பற்றி இதுவரையும் நாம் செய்த ஆராய்ச்சியை முடிக்கிறோம். இக்காலச் சேர்மனியை ஆக்கிய பிசுமாக்கையும் இக்கால இத்தாலியை ஆக்கியவனான கவூரையும் ஒப்பிடுதல் பொருத்தமாகும்.[1] இங்ஙனம் ஒப்பிட்டுப் பார்ப்பதால் இருவருக்குமுள்ள வியத்தகு ஒற்றுமையைக் காணலாம். அத்துடன் வியக்கத்தக்க வேறுபாடுகளையும் காண்பதற்கு இந்த ஒப்பீட்டு ஆராய்ச்சி உதவும். இருவருடைய இலக்கும் ஒன்றாயிருந்தது. ஒருவன் சேர்மனியின் ஐக்கியத்தை நாடினான். மற்றவன் இத்தாலியின் ஐக்கியத்தை நாடினான். இருவரும் ஒரே நாட்டையே எதிர்க்க வேண்டி இருந்தது. பிரசியாவினுடைய வளர்ச்சிக்கும் பீதுமனுடைய வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக இருந்தது ஒசுற்றியாவாகும். வெல்லமுடியாதவை போலத் தோன்றிய இடர்களை இருவரும் சிறந்த அரசோபாயத்தின் மூலம் வென்றார்கள். அவர்கள் வியக்கத்தக்க வெற்றி அடைந்தனர். இத்துடன் இருவருக்குமுள்ள ஒற்றுமைகள் முடிகின்றன. வேற்றுமைகள் முக்கியமாக இருதிறப்படும். முதலாவதாக, கவூர் ஒரு தாராளர். பிசுமாக்கு பிற்போக்குவாதி. முன்னவன் பீதுமனிலுள்ள யாப்புறு கட்டிசியின் தலைவனாவான். சுதந்திரமான நிறுவகங்கள் மீது அவனுக்கு அடிப்படையான நம்பிக்கை உண்டு. இத்தாலியத் தீபகற்பத்திலிருந்து ஒசுற்றியாவை அகற்றுதற்கு அவன் பலாற்காரத்தைக் கையாண்டிருந்தபோதும், இத்தாலிய ஐக்கியம் உண்மையில் மக்களாயக்கும் இயக்கமென்க. தொடர்ச்சியான குடியொப்பமே இத்தாலிய ஐக்கியத்தின் அடிப்படையாக இருந்தது. நாட்டின வேணவாவை அடைவதற்கு மன்னரும் மக்களும் ஒத்துழைத்தனர். இது ஒருபுறமிருக்க பிசுமாக்கு பிற்போக்குவாதி என்பது முன்னரே கூறப்பெற்றது. கருத்துக்களைவிடப் படைப்பலமே அரசாங்கத்தின் அடிப்படையாகும் என்ற நம்பிக்கை இவனுக்கிருந்ததுபோலத் தெரிகிறது. பாராளுமன்றத்துக்குரிய ஆட்சி முறைமை அழிந்த பின்னர் அதன் மேல் படைப்பலம் மிகுந்த உறுதியான முடியாட்சி ஒன்றை இவன் கட்டியெழுப்பினான். எனவே, இவன் நிறுவிய சேர்மானியப் பேரரசு வாள்முனையிலேயே தங்கி இருந்தது. பல்வேறு அரசாங்கங்களுடன் செய்து கொண்ட தொடர்ச்சியான ஒப்பந்தங்களிலேயே இந்தப் பேரரசின் அத்திவாரம் அமைந்தது. சுருங்கச்

1. கவூரைப்பற்றி அறிவதற்கு V ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1852-70

சொல்லின், அது ஒரு கூட்டாட்சியரசாக இருந்தது. இரண்டாவ தாக, பீதுமன் இத்தாலியுடன் ஒன்றுவதிற் கவூருக்குத் திருத்தி உண்டு. ஆனால், பிசுமாக்கு பிரசியாவின் தனிப்பண்பைச் சேர் மானிய நாட்டின அரசில் மறையவிடுவதற்கு ஒருப்படமாட்டான். இந்த வேற்றுமையை எடுத்தியம்புகையில், பீதுமனே இத் தாலியும், சேர்மனியைப் பிரசியாவும் கவர்ந்தன எனக் கூற லாம். சேர்மானிய அரசியல் முறைமையில் இது இன்னொரு குறைபாடாக இருந்தது. எனெனில், பிரசியாவின் ஆதிக்கத்தி னால் எனைய கூட்டாட்சி அரசுகளின் வெறுப்புத் தூண்டப் பட்டது. கவூர் இறக்கும்பொழுது அவன் தொடங்கிய வேலை ஓரளவு நிறைவேறியிருந்தது. தான் கட்டியெழுப்பிய அமைப் பின் எதிர்காலக் கதி எங்ஙனம் இருக்குமோவெனும் ஐயத்தை எழுப்புகின்ற பல சிக்கல்களைப் பிசுமாக்கு விட்டுப் போயினன். அவன் செயலாற்றிய மனநிலையும் கையாண்ட வழிவகைகளும் சேர்மானிய அரசியல் அபிவிருத்திக்கு முற்றிலும் பொய்யான தோற்றமொன்றை அளித்தன எனும் முடிவைப் பிசுமாக்கிற் குப் பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation



1815 இல் சேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் III

இரசியாவிற் சீர்திருத்த இயக்கம்

(1815—1914)

1815 இரசிய வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டு.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தின் போது இரசியா ஓரளவுக்கு ஆசிய வல்லரசாகவே இருந்தது. இரசியா மீது அலை அலையாக தாட்டர் எனும் மக்களின் கூட்டம் படையெடுத்துச் சென்றது. இந்தப் படையெடுப்பின் பயனாக மிலேச்ச நிலையொன்றை இக்கூட்டம் ஏற்படுத்திவிட்டுப் போயிற்று. இரசிய மக்களின் சாதாரணமான வளர்ச்சியை நூற்றாண்டுகளாக இம் மிலேச்ச நிலை தடுத்தது. மேல் நாட்டுப் பண்பாட்டின் நிலைக்கு இரசியாவை உயர்த்தும் மாபெரும் வேலையை மகா பீற்றர் மேற்கொண்டான். 1682 தொடக்கம் 1725 வரை ஆண்ட பீற்றருடைய பணியைத் தொடர்ந்து செய்வதற்கு அவனுடைய வழித் தோன்றியோர் ஒருவரும் இல்லாதது போதாத காலமென்க. மகா கதரின் (1762–1769) தன்னுடைய அரசிற்கு ஐரோப்பாவிலிருந்த மதிப்பை உயர்த்தினாள். இவள் பிறநாட்டு அரசியற் கொள்கைகளில் தன்னுடைய நாட்டிற்குப் பெரும் மதிப்பைப் பெற்றுக்கொடுத்தாள். ஆனால், உண்ணாட்டுச் சீர்திருத்தம் எனும் முக்கியமான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இவள் முயன்றிலள். பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் ஒரு பெரும் சாதனை நிகழ்ந்தது. அதாவது, ஊழியரின் விடுதலையாகும். அவர்களுக்கு விடுதலை அளித்த பெருமை இரண்டாம் அலச்சாந்தரைச் சாரும். இரசியச் சமுதாயத்திலிருந்த சிறந்த சத்திகள் எல்லாம் படிப்படியாக விழிப்படைந்தன. தங்கள் நாட்டில் சமுதாயம், அரசியல் ஆகியவற்றில் புதுவாழ்வு அவசியமென்பதை இச்சத்திகள் உணர்ந்தன. இவ்வத்தியாயத்திற் குறிப்பிடுகின்ற இரசிய வரலாற்றுக் காலத்தில் இந்த விழிப்புணர்ச்சியே முக்கியமானதென்க. யாப்பு முறைப்படி நிகழும் ஆட்சிமுறை பற்றிய கருத்துக்கள் சென்ற நூற்றாண்டில் சிறிது சிறிதாகப் பரவின. இங்ஙனம் பரவிய கருத்துக்களின் பலன் எதிர்காலத்திலேயே விளையும். முற்போக்குச் சத்திகளுக்கும் பிற்போக்குச் சத்திகளுக்கும் ஓய்விலாது விளைந்த போராட்டமே இரசிய வரலாற்றின் முக்கிய அம்சமாகும். பிற்போக்குச் சத்திகளே மீண்டும் மீண்டும் மேலோங்கி நின்றன. ஆனால், தாராண்மை இரகசியமாகச் செய்த செயல்களால் சார் மன்னனுடைய ஆட்சி வீழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 யுற்றது. வரலாற்றின் மத்திய காலப் பிணிப்பிலிருந்து இரசியா வேதனையுடன் மெல்ல மெல்லத் தன்னை விடுவித்துக்கொண்டது. 1914-18 உலகப் போர் தொடங்கியபோது இரசியாவும் ஒரு புது வாழ்வைத் தொடங்கும் நிலையிலிருந்தது. இந்தப் போரி னால் உண்ணாட்டு நிலையில் நன்மை ஏற்படும் எனவும் நம்பப் பட்டது.[1] எதிர்பாராத விதங்களில் வரலாற்று நிகழ்ச்சிகள் நிகழ்ந்தனவென்பது பின்வரும் அத்தியாயங்களிற் காட்டப் படும்.[2] ஆனால், 1815-1914 வரை உள்ள இரசியாவின் நிலை யைப் பற்றி ஆராய்தல் வேண்டும். இரசியாவின் பிரச்சினைகளை விளங்கிக்கொள்வதற்கு இந்த ஆராய்ச்சி இன்றியமையாதது.

1815 இல் இரசியாவின் நிலை. (அ) அடிமைத் தனம்.

இப்பிரச்சினைகளில் 1815 இல் மிகவும் நெருக்கடியாக இருந் தது இரசிய உழவோருடைய அடிமைப்பிணிப்பாகும். 1861 இல் இந்த ஊழியருக்கு விடுதலை கிடைத்தது. அப்பொழுது இரசியாவில் நாற்பத்தொன்பதரை இலட்சம் ஊழியர் இருந் தனர். அவர்களில் 23 இலட்சம் ஊழியர் முடிக்குரியோராவர். அதே தொகையினர் தனிப்பட்ட நிலக்கிழாருக்குரியவர். எஞ்சிய வர் கிறித்துவ திருச்சபையிலும் ஏனைய நிறுவகங்களிலும் வீட்டு வேலைகளிலும் இருந்தார்கள்.[3] தனிப்பட்ட உடைமைக் காரருக்கு ஊழியராயிருந்தோரது நிலையிலும் பார்க்க முடிக்குரிய உழவோரின் நிலை சகித்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது. முடிக்குரிய உழவோர் கிராமச் சமூகங்களில் கூட்டங் கூட்டமாகப் பிரித்து வைக்கப்பட்டிருந்தனர். இந்தக் கிராமச் சமூகங்களை மீர் என்றழைப்பர். இந்த மீரிலுள்ளவர்களுக்கு ஓரளவிற்குத் தன்னுட்சிச் சுதந்திரம் இருந்தது. மூப்பாளர் ஒருவர் மூலமும் தெரிவு செய்யப்பட்ட ஒரு கழகம் மூலமும் இவர்கள் தங்களு டைய அலுவல்களை நிர்வகித்தனர். இந்த மீரில் உள்ளவர் களுக்குத் தொல்லையான பல நிபந்தனைகள் இருந்தன. அவர் களுடைய நடமாட்டம், பொருள், சொத்து வாங்குமுரிமை, உடைமைகளை விற்றல் ஆகியவைமீது கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டன. சட்ட விரோதமான வரிகள், கைக்கூலி, ஊழிய வேலை ஆகியவை அவர்களுக்கிருந்த முக்கிய குறைகளாகும். தனிப் பட்ட நிலக்கிழார்களிடமிருந்த ஊழியரது நிலை மிகவும் கொடூ மாக இருந்தது. இரசிய தாயகப் பற்றுடைய இரசியனொருவன் 1826 இல் கூறியவைகளிலிருந்து தனிப்பட்ட நிலக்கிழார்களிட

---

1. ஐரோப்பிய குடியாட்சியின் பொதுக் கொள்கை அடையும் வெற்றி எமது வெற்றியுமாகும். **G. Alexinsky, Russia and the Great War (1915), 357.**

2. ஐரோப்பா 1914-39 ஐப் பார்க்க.

3 **A. Rambaud, Histoire de la Russie (ed. 1900), 677.**

Digitized by Noolaham Foundation

மிருந்த ஊழியருடைய நிலையை நன்கு அறியலாம். அமெரிக் 1815
கத் தோட்டங்களிலிருந்த நீகிரோவர் இரசியாவில் தனிப்பட்டோ
ரின் கீழிருந்த உழவோரிலும் பார்க்க மகிழ்ச்சியுடனிருந்
தனர் என அவன் கூறினான். ஊழியருடைய எசமான
ரான நிலக்கிழார்கள் பெரும்பாலும் கடனிறுக்க முடியாதவரா
யிருந்தனர். எனவே, இந்த நிலக்கிழார்கள் தங்கள் ஊழியர்
களை ஆடுமாடுகளை விற்பதுபோல விற்பார்கள். இதனால் ஊழிய
ருடைய குடும்பங்கள் குலைந்து போவதுமுண்டு. ஒரு பகுதி ஊழி
யரை விற்றுவிட்டால் நிலக்கிழார்களுடைய வேலைப்பளு எஞ்சி
யிருக்கின்ற ஊழியர்மீது திணிக்கப்படும். விற்கப்பட்ட ஊழியர்
களை விட எஞ்சியிருக்கும் ஊழியர்களிடமிருந்து வலுக்கட்டாய
மாக வரி வசூலிக்கப்பட்டது. "ஊழியருடைய எசமானருக்கு
ஊழியர்களிடமிருந்து எல்லா வகையான ஊழியங்களைப் பெற
வும் வரிகளைப் பெறவும் தனக்குரிய சொந்த வேலைகளைச்
செய்விக்கவும் உரிமையுண்டு என இரசிய அடிமை உரிமைச்
சட்டம் விதித்திருந்தது. ஊழியர்களுக்குக் கசையடி போன்ற
தேக தண்டனைகளை விதிக்கவும் உடைமையாளர்களுக்கு உரிமை
யுண்டு. அதனை விட, இவ்வூழியரைக் கட்டாயப் படைச் சேவைக்
காகக் கொடுக்கவும் சைபீரியாவுக்கு அனுப்பவும் படையதிகாரி
களுக்கு உரிமையுண்டு.[1] அண்மைக் காலத்து வரலாற்று ஆசிரிய
ரொருவன் இதுபற்றிப் பயங்கரமான சொற்சித்திரமொன்றைத்
தீட்டியுள்ளான். "சிறிய உடைமைக்காரர்களிடமிருந்த உழவோர்
தங்கள் எசமானர்களால் நேரடியாக அடக்கி நசுக்கப்பட்டனர்.
ஆனால், சென் பீற்றசுபேக்கு நகரில் வாழ்ந்த மாவிழுமி
யோருடைய உழவோர் அவர்கள் கண்காணிகளிடமும் பிரபுக்க
ளுடைய வாரக்காரரிடமும் அகப்பட்டு அல்லற்பட்டது முன்னதைக்
காட்டிலும் எவ்வகையிலும் குறைந்ததன்று. பெரும் நிலக்கிழார்
களுடைய வருமானத்தைப் பெருக்குவதற்காக அக்காலத்தில்
நிறுவப்பட்ட தொழிற்சாலைகளில் ஊழியர் நூற்றுக்கணக்காக
மடிந்தனர். ஊழியர்கள் அனுபவித்த தண்டனைகள் மனுடத்
தன்மையற்றவை. எசமானுடைய அல்லது அவனுடைய கண்
காணிகளுடைய கட்டளைப்படி ஊழியர் நிலவறைச் சிறையிலிடப்
பட்டும் சங்கிலியாற் பிணிக்கப்பட்டும் சாகும் வரை சவுக்கால் அடிக்
கப்பட்டும் கொடூரமான தண்டனைகளைப் பெற்றனர். இப்படியான
கொலைப் பாதகங்கள் பல அம்பலமாயின. இந்தக் கொலைப்பாத
கத்துக்கு உடந்தையாக இருந்தவர்கள் சென் பீற்றசுபேக்கு
நகரில் அரசாங்கத்தில் உன்னதமான பதவிகளில் இருந்தனர்.[2]
அவர்கள் அரசறிஞரெனவும் மக்களுடைய நன்மைகளை நாடும்

1. D. M. Wallace, Russia (ed. 1912) c. xxviii.
2. . . Askenazy, "Russia" in Camb. Mod. Hist. x. 426–7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815

பெருமக்களெனவும் புகழ்பெற்றிருந்தனர். சேர்மானியப் பூர்வீகத் தொடர்புள்ளவளும் பிரான்சிய அறிஞனை வொற்றய ருடனும் கலைக்களஞ்சிய ஆக்குநர்களுடனும் அரசியல் விடயங் களிலே தொடர்பு கொண்டிருந்தவளு மான மகா கதரின் ஊழியருடைய சட்ட பூர்வமான உரிமைகள் எல்லாவற்றையும் அபகரித்தாள். தங்களுடைய எசமானரை எதிர்த்து நீதி கோரத் துணிபவர்களெல்லோருக்கும் சவுக்கடித் தண்டனை கொடுத்து அவர்களை ஆயுட்கால ஊழியராகச் சுரங்கத்திற்கு அனுப்பும்படி யும் கட்டளையிட்டாள்.[1] இரசிய விடுதலை நல்லாணைக்கு 600 ஆண்டு களுக்கு முன்னர் ஆங்கில ஊழியரைப் பற்றிப் பிறற்றன் கூறிய கருத்தோடு ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளைக் காட்டுதல் பொருத்தமாகும். "ஊழியருக்கு விளைவிக்கப்படும் தீங்குகள் பற்றி எல்லார் மீதும் வழக்குத் தொடர ஊழியர்களுக்கு உரிமை யுண்டு," என இவ்வாங்கில நீதிநடுவர் குறிப்பிட்டார்.[2]

(ஆ) உண்ணாட்டுப் பாலனம்.

இங்கு நாங்கள் ஆராய்கின்ற காலத்திலிருந்த இரசியாவின் உண்ணாட்டுப் பாலனம் விவரிப்பதற்கரியது. எல்லாம் ஊழலாக வும் அநீதியாகவும் நேர்மையீனமாகவுமிருந்தன. அங்ஙன மல்லாது வேறு எங்ஙனமிருக்கக்கூடும்? அரசாங்கத்திலிருந்த ஒவ்வொரு பதவியையும் செல்வாக்கினாலோ, அன்றேல் பேரம் பேசிக் கூடிய விலைகொடுத்தோ பெறலாம். அபேட்சகனுடைய தகவுக்கு எவ்விதமான மதிப்பும் கொடுபடவில்லை. கிழக்கு நாட்டுப் பாலனங்களில் இயற்கையாயமைந்திருந்த கைக்கூலி ஊழலானது எங்கும் காணப்பட்டது. பேரரசில் இருந்த ஏறக் குறைய எல்லா அலுவலர்களுக்கும் குறைந்த சம்பளமே கொடுக் கப்பட்டது. இதனால் கைக்கூலி ஊழல் மேலும் அதிகரித்தது. மாகாணங்களில் இருந்த படையதிபதிகள், மக்களைச் சூறை யாடிப் பெருஞ் செல்வத்தைத் திரட்டினர்கள். அதற்கு அடுத்த பதவியிலிருந்த உதவி அலுவலர்களும் மேலதிகாரிகளுடைய முன்மாதிரியைப் பின்பற்றித் தங்களாலியன்ற பொருளை அப கரித்துச் சேர்த்தனர். சிசிலியை உரோமர் ஆண்ட காலத்தில் உரோம பதிற் காவலர்களால் அங்கு ஏற்பட்ட நிலையை சிசரோ என்பான் தன்னுடைய சொற்பொழிவிலே விவரித்துள்ளான். இரசியாவிற் காணப்பட்ட ஊழல் நிலை அக்காலத்திலிருந்த ஊழலை நிகர்த்தது. இரசிய அலுவலர்களுடைய மன்னிக்க முடியாத குற்றங்கள் எல்லோரும் அறிந்தவையே. இதுபற்றி முறையீடு செய்வதாற் பயனில்லை என்பதை மக்கள் கண்டனர். எனெனில், ஆள்பதிகள் மாறிப் போவதால் நிலை ஒரு விதத்தி

1. Wallace, op. cit. 473.
2. E. Lipson, Economic History (1915), i. 42.

Digitized by Noolaham Foundation

லும் மாறுது. கைக்கூலி இல்லாமல் உயர் நீதிமன்று முதல், 1815
கீழ் நீதிமன்று வரையும் உள்ள நீதிமன்று ஒன்றும் நீதி வழங்குவதில்லை. பொதுநிதிபற்றிய ஊழல்கள் பெருவழக்காகவே இருந்தன.

இரசிய விழுமியோரின் அதிருத்தி.

பிரான்சில் நிலவிய பொருளாதார ஊழல்கள் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளில் நிலவிய பொருளாதார ஊழல்களிலும் பார்க்கக் கூடியவையல்ல. அக்கால ஆட்சியில் அதிருத்தி கொண்டிருந்த அறிவாற்றல் மிக்க மத்திய வகுப்பினருடைய வளர்ச்சியே பிரான்சியப் புரட்சிக்குக் காரணமாயிருந்தது. பிரான்சிலிருந்த தத்துவஞானிகள் அப்போது பிரான்சிலிருந்த ஆட்சியை எதிர்த்து எழுதினர்கள். இதுவும் அவ்வகுப்பினர் அவ்வாட்சி பற்றி அதிருத்தி கொள்வதற்குக் காலாயிற்று. இது ஒரு புறமிருக்க, இரசியாவில் தாராண்மை நிரம்பிய மத்திய வகுப்பு இல்லை. எனவே, அரசாங்கத்திற் கெதிராகக் கிளர்ச்சி செய்ய எவரும் இல்லை. உழவோர் மத்தியிலிருந்து புரட்சித் தலைவர்கள் தோன்றியிருத்தலியலாது. ஏனெனில், உழவோர் அஞ்சி அடங்கியொடுங்கி இருந்தனர். ஆனால், நெப்போலியனுயை போர் முடிந்தபின்னர் இந்த உழவோருடைய நிலையை ஆதரித்துப் பேசுவதற்கு எதிர்பாராத திசையிலிருந்து பலர் முன்வந்தனர். அரசாங்கத்தைப் பற்றி விழுமியோர் அதிருத்தி கொள்வதற்குப் பல காரணங்கள் இருந்தன. இரசியாவில் நிலவிய நிலைமை பிரசியாவில் நிலவிய நிலைமையையே நிகர்த்திருந்தது. இரண்டு நாடுகளிலுமிருந்த விழுமியோரும் மையப்படுத்தப்பட்ட பணிக்குழு வாட்சியைப் பகைத்தனர். அலுவலர் கையிலேயே அரசாங்க அலுவல்களை நடத்துகின்ற முழுப்பொறுப்பும் இருந்தது. அலுவலாளருடைய மேலாதிக்கத்தை விழுமியோர் வெறுத்தனர். பிறப்பாற் சேர்மானியராகியோர் பொதுப் பதவிகளை வகிப்பதனால் இரசிய விழுமியோருடைய வெறுப்பு மேலும் அதிகரித்தது. எனவே இரசிய விழுமியோர் இரசிய முடியாட்சிக்குத் தங்கள் பற்றுறுதியைப் புறத்தோற்றத்தில் மட்டும் காட்டினர். ஆனால், அப்போது நிலவிய ஆட்சிமுறை தாக்கப்படுவதை விரும்பினர். மேலும் இரசிய விழுமியோர்களே படையின் எல்லா அலுவல்களுக்கும் நியமிக்கப்பட்டனர். இவர்கள் எல்லோரும் மேற்கு ஐரோப்பாவில் நடந்த தொடரிகலின் பின்னர் மூன்று ஆண்டு காலமாகப் பிரான்சில் வதிந்திருந்ததனால் பெற்ற பரந்ததும் அனுதாபம் மிக்கதுமான உளப்பான்மையுடன் இரசியாவிற்குத் திரும்பினர்கள். அமெரிக்கப் புரட்சியே பிரான்சியப் புரட்சிக்கு அடிகோலியது. அதுபோலவே பிரான்சியப் புரட்சி பல இரசிய மக்களுடைய உளத்தில் புரட்சியெனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815-25 வித்தை விதைத்தது. இரசியாவில் மக்கள் நிலைகுலைந்து தாழ்மையுற்று அடிமைகளாக வாழ்ந்தனர். அங்கு கட்டுப்பாடில்லா நிறுவகங்களில்லை. இரசியாவின் நிலையைப் பிரான்சினுடைய நிலையுடன் நோக்குமிடத்து அதன் வேற்றுமை புலனுயிற்று. புகழ் பெற்ற படைப்பிரிவு அதிகாரியான போல் பெசித்தல் என்பான் தன்னுடைய சுயசரிதையில் பின்வருமாறு கூறுகின்றன: "யாப்புறு முடியாட்சி பற்றிய கருத்துக்களும் புரட்சிபற்றிய கருத்துக்களும் என் உள்ளத்தில் எழுந்தன. புரட்சிபற்றிய கருத்துக்கள் என் உள்ளத்தில் குறைபாடுடையவையாகவும் தெளிவற்றவையாகவும் இருந்தன. இருந்தபோதும், புரட்சியெண்ணங்கள் படிப்படியாக என் உள்ளத்தில் தெளிவுபெற்று வலுவடைந்தன. யாப்புறு முடியாட்சியை விட்டு நான்குடியாட்சியை நாடிச் சென்றேன்."[1] குறிப்பாகத் தெற்கு ஐரோப்பாவில் வழக்கிலிருந்த முறையைப் பின்பற்றித் தங்களுடைய எண்ணங்களையும் பிரசாரத்தையும் பரவச் செய்வதற்கு இரகசியக் கழகங்களை நிறுவினர்கள். இத்தாலியிலிருந்த காபனரிக் கழகத்தையும் கிரேக்க நாட்டிலிருந்து எற்றைறீயா இரகசியக் கழகத்தையும் போன்ற கழகத்தை இரசியாவில் நிறுவினர்கள். அரசியல் முயற்சிக்குப் பெரும்பாலும் இந்த இரகசியக் கழகங்களே காலாக இருந்தன. தற்காலிகப் பரிசோதனையின் விளைவாக 1818 இல் பொது நன்மை ஐக்கியக் கழகமொன்று நிறுவப்பெற்றது. மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இக்கழகம் வடபகுதிக் கழகம், தென் பகுதிக் கழகம் எனப் பிரிந்தது. வடபகுதிக் கழகமானது பெற்றேகிராத்திலுள்ள படைவீரர்களைத் தன் உறுப்பினராகச் சேர்த்தது. யாப்புறு முடியாட்சியை நிறுவுவதே இக்கட்சியின் திட்டமாகும். தென்பகுதிக் கழகம் தென்பகுதியிலுள்ள படைவீரர்களை உறுப்பினராகக் கொண்டிருந்தது. குடியரசையே இக்கழகம் விரும்பியது. இவற்றைவிட மூன்றுவது கழகமொன்று தோன்றியது. இதன் பெயர், சிலாவு மக்களுடைய ஐக்கியக் கழகம் என்பதாகும். சிலாவு இன மக்களுடைய கூட்டாட்சியொன்றையே இக்கழகம் ஆதரித்தது. தென்பகுதிக் கழகத்துடன் இக்கழகம் இணைக்கப்பெற்றது. இந்தக் கழகத்து உறுப்பினரைப் பற்றிக் குறிப்பிடுகையில் அக்காலத்து எழுத்தாளன் ஒருவன் இச்சந்ததியினருக்குத் "தந்தையருமில்லை, மைந்தருமில்லை" என்றன். இவர்கள் கொண்டுள்ள கருத்துக்களோவெனில் இவர்கள் வாழ்ந்த காலத்திற்கேற்றவை அல்ல. இங்ஙனம் முன்னேடியாக வாழ்கின்றவர்களுக்கு வழமையாக ஏற்படும் கதியே இவர்களுக்கும் ஏற்பட்டது. மேல்நாட்டு வாழ்க்

[1] Cited in Lavisse et Rambaud, Histoire Generale, t. x. 147.

Digitized by Noolaham Foundation

கைமுறைச் சூழலால் உந்தப்பட்ட இவர்கள் சுதந்திரவேட்கை பெரிது முடையராயிருந்தனர். சமுதாயத்திலே தெறியன்க ளாக வாழ்ந்த இவர்களுடைய முற்போக்கான கருத்தை விளங் கிக் கொள்ளத்தக்க பக்குவத்தை இவர்கள் காலத்தில் வாழ்ந்த ஏனையோர் அடைந்திருக்கவில்லை. தாயகப் பற்றுடைய இவர்கள் அடைந்த தோல்வி தவிர்க்க முடியாததாகும். இவர்கள் இரசிய வரலாற்றில் என்றும் திகழக்கூடிய தன்னலத் தியாகத்தின் நினைவை விட்டுப் போயினர். 1825

திசெம்பர் இயக்கம் (1825).

முதலாம் அலச்சாந்தர் 1825 இல் இறந்தான். அவன் இறந்த பின்னர் அடுத்த பேரரசன் அரசெய்துவதற்குரிய ஆட்சியிடையற வுக் காலத்தில் மேற்குறித்த கழகங்கள் தங்களது கருத்தை வற் புறுத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அலச்சாந்தரோடு உடன் பிறந்தவர்கள் மூவர். அவர்களில் மூத்தவன் கொன்சதந்தைன் என்பவனுவான். எனவே, இவனே அடுத்து அரசெய்த வேண் டியவன். ஆனால், முதலாம் அலச்சாந்தர் தன்னுடைய இளைய தம்பி நிக்கலசின் சார்பில் கொன்சுதந்தைனை உரிமையைத் துறக்கத் தூண்டியிருந்தான். கொன்சுதந்தைன் செய்த தியா கத்தினுல் யாது நடக்கக்கூடுமோ என்ற ஐயம் எழுந்தது. எனெ னில், அவனுடைய பதவித் துறவு உண்மையிற் சட்டப்படி செல் லுபடியாகுமோ என்ற ஐயமும் எழுந்தது. இந்த இரண்டுங் கெட்டான் நிலை மூன்று வாரங்களாக நீடித்தது. அதன்பின்னர் கொன்சுதந்தைனுக்குப் பதிலாக நிக்கலசு அரசுகட்டிலேறினன். அதிருத்தி கொண்ட சத்திகளெல்லாம் அதற்கிடையில் வலிமை பெற்றன. இரகசியக் கழகங்கள் புரட்சி செய்வதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்தின. திசெம்பர் 20 ஆம் திகதி பெற்ரே கிராத்தில் கலாம் மூண்டது. அங்கிருந்த மொசுக்கோப் படைப் பிரிவானது அப்படை அலுவலாளர்களினது தூண்டுதலினலே புதிய பேரரசனுக்குச் சத்தியஞ் செய்து கொடுக்க மறுத்தது. இந்த எழுச்சி விரைவில் படுதோல்வியுற்றது. இவ்வெதிர்க் கிளர்ச்சி படைகளுடைய தனிக் கிளர்ச்சியாகும். படைப்பிரிவு களுள் ஒன்றேயொன்றுதான் இதிற் பங்குபற்றியது. அலுவலா ளர் வருக்கமோ, அன்றேல் தலைநகரில் வாழ்ந்த பொது மக்களோ இதிற் பங்குபற்றவில்லை. தென்பகுதிக் கழகம் செய்த படைக்கிளர்ச்சி இதைவிட மிக இலகுவாக அடக்கப் பட்டது. எங்கணும் புரட்சிக் கனல் விரைவில் அணைக்கப்பட்டது. இந்தச் சதியைப் பற்றி விசாரணை செய்வதற்கு ஆணைக்குழு ஒன்றிருந்தது. இவ்விசாரணை முடிவின் விளைவாக "புலமை, கலை, அரசியற்றத்துவ ஞானம்" ஆகியவற்றிற் சிறந்தவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1825-55

இரசியாவில் பண்பாடும் மேன்மையு முடையவர்களுமானோ சைபீரியாவிற்குக் கடத்தப்பட்டனர். சிலர் இகழ்ச்சியுற்று இறந் தொழிந்தனர். அங்ஙன மிறந்தோரில் போல் பெசித்தல் ஒருவனுவான். "விதைப்பதற்கு முன்னர் அறுவடை செய்ய நான் முயற்சித்தேன்; அதுவே என்பிழை" எனப் பெசித்தல் தூக்குமேடையிலிருந்து கூறினன். "எங்களுடைய முயற்சிக்கு வெற்றிதரும் வாய்ப்புக் கிட்டாது என்பதை நான் முன்னரேயே அறிவேன்; என்னுடைய உயிரைத் தியாகஞ் செய்யவேண்டு மென்பதையும் நானறிவேன்.... பலனெயளிக்கின்ற அறுவடை காலம் பின்னர் வரும்," என வேறொரு தயாகப்பற்றுளன் விளம்பினன். இவ்வெழுச்சியைத் திசெம்பர் இயக்கமென்பர். இந்த இயக்கம் இங்ஙனம் அகால முடிவு அடைந்தது. பல ஆண்டுகளாக ஆயத்தஞ் செய்து புரட்சி செய்யவேண்டும். ஆனல் இந்தப் புரட்சியானது தலைவர்களுடைய அரசியலனுபவமின்மை யால் கட்டுக்கோப்பின்றிக் கண்மூடித்தனமாகச் செய்யப்பட்டது. அவர்கள் எதற்காகப் பெரிதும் உழைத்தனரோ அது கைகூட வில்லை. சட்டத்தின்படி எல்லோரும் சமம் என்ற தத்துவம், ஊழியர்களுடைய விடுதலை, யாப்புறுவாட்சி ஆகியவைகளே அவர் கள் தீட்டிய திட்டங்களில் இடம் பெற்றன. உண்மையில் அவர் களுக்கேற்பட்ட கதியோ மோசமானது. ஆனல், அவர்கள் நல்ல கதியையடையத் தகுதியுடையவர். அவர்கள் செய்த தியாகம் முற்றுக வீண்போகவில்லை. சுதந்திரமென்னும் வித்து மூள கொள்வது உயிரிழந்த தாயகப்பற்றுடையோரது செங்குருதியினு லென்க. இரசிய மக்களது இன்னல்களையெல்லாம் கவனிப் பார் இல்லாமலில்லை என்பது திசெம்பர் இயக்கத்தினல் புலனு கியது. அது மட்டுமல்லாமல் தங்களுடைய நாடு புது வாழ் வெய்துவதற்கு இரத்தஞ் சிந்தக்கூடிய தாயகப்பற்றுடையோர் தோன்றுகின்றனர் என்பதையும் இந்த இயக்கம் காட்டிற்று.

1 ஆம் நிக்கலசு (1825-1855).

முதலாம் நிக்கலசு தனிமுதன்மையின் அவதாரமாவான். அவன் அரசெய்தியதும் புதியதொரு காலவவதி தொடங்கிற்று. அவனுடைய ஆட்சியானது இடையூற்றுடனே தொடங்கிற்று. இவ் விடையூறுனது அவனுடைய ஆட்சியின் தன்மைக்கு உருக் கொடுத்தது. ஈவிரக்கமற்ற கடூரமான ஆட்சியை அவன் முப்பது ஆண்டுகளாக நடத்தினன். யாப்புத் தத்துவங்களைத் தனி யாட்சி வென்றது. வெற்றியுற்ற தனியாட்சியை அசைக்கமுடி யாத நிலையில் அரண்படுத்திக் கொள்வதற்குப் பெரும் முயற்சி கள் செய்யப்பட்டன. மேற்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளில் தாளாண்மைக்கும் பிற்போக்குவாதத்துக்கும் பெரும் மோத லேற்பட்டது. இதனல் அந்த நாடுகளெல்லாம் அதிர்ந்தன. அதே நேரத்தில் இரசியாவின் நிலை வேறுவிதமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.

அரசியல் முன்னேற்றத்தில் இரசியா சிறிதேனும் இடம்பெய 1825-55
ராது என்று உலகிற்குத் தோன்றியது. நிக்கலசு பிறநாடு களில் தனியாட்சியை ஆதரிப்பவனுகவும் முற்போக்குக் கொள் கைகளுக்கு எவ்விதத்திலும் இடம் கொடுக்காத பெரும் பகை வனுகவும் இருந்தான். 1830 இல் பிரான்சிலேற்பட்ட புரட்சி யின் பயனுகப் பூபோன் மன்னன் நாட்டை விட்டோடினன். போலந்தில் எழுந்த கலகம் அவன் சார்பில் நிக்கலசு தலை யிட விருந்ததைத் தடுத்தது. 1848 இல் அங்கேரியப் புரட்சி நடந்தது. இந்தப் புரட்சியில் ஒசுற்றியப் பேரரசனுக்கு உதவி யளிக்க நிக்கலசு முன்வந்தான். அங்கேரியப் புரட்சியின் வீழ்ச் சிக்கும் இவனே பொறுப்பாயிருந்தான். உண்ணுட்டுக் கொள் கையில் தளராத அடக்குமுறைப் பூட்கையை இவன் பின்பற்றி னன். மக்களிடம் எழுகின்ற தெளிவான அறிவைக் கட்டுப்பாடு செய்ய இரும்பனைய கடும் போக்கைக் கையாண்டான். இவன் பின்பற்றிய பழைமைபேண் கொள்கை நெகிழாத் தன்மை யுடையது. சிந்தனை, செயல் ஆகியவைகளிற் சுதந்திரத்தைப் பெறுதற்குரிய வழிதுறைகளைக் கட்டுப்படுத்துதற்கு இவனு டைய வெறிபிடித்த ஆட்சிமுறைமை பலனளித்தது. இவனுக்கு முன்னிருந்தவனுன மனிதத்தன்மை நிறைந்த மன்னன் நீக்கி விட்ட இரகசியப் பொலிசுக்கு இவன் உடனே புத்துயிர் கொடுத்தான் (1826). சாரினுடைய தனிப்பட்ட மண்டிலத்தின் மூன்றும் பிரிவாய இரகசியப் பொலிசாரின் அபகீர்த்திமிக்க பதிவேடு இரசிய வரலாற்றில் இருள்கவிந்த ஏடாகும். இப் பிரிவின் தலைவரான பிரதம பொலிசு அதிகாரிக்குத் தான் விரும்பிய எவரையும் எவ்விதமான கட்டுப்பாடு மின்றிக் கைது செய்யவும், மறியலில் வைக்கவும், நாடு கடத்தவும், எல்லை யற்ற அதிகாரம் உண்டு. பயங்கரம் மிக்க இந்நிறுவகம் இசுப் பெயினிலிருந்த தனிப்பட்டவர்களின் கத்தோலிக்க மதவிசா ரணை மன்றுக்கு எவ்விதத்திலும் குறைந்ததன்று. இசுப் பெயினை ஆண்ட இரண்டாம் பிலிப்பு மன்னனையே இவன் ஒத்திருந்தான். தன்னுடைய குடிகள் ஐரோப்பாவுடன் தொடர்பு கொள்வதையும் மேற்கத்திய கருத்துக்களை அறிவதையும் தடுப்பதற்கு இரண்டாம் பிலிப்பைப் போல் இவன் தன்னல் இயன் றளவு முயற்சித்தான். இவை தன்னுடைய குடிகளின் அரசியல் ஓர்ப்பை நிலை குலைத்துக் கபடமற்ற மக்களிடைப் புரட்சி யெண் ணத்தைப் புகுத்தக்கூடும் என எண்ணினன். இக் கொள்கைக்கு இணங்கவே வெளிநாட்டுப் பிரயாணம் கட்டுப்பாடு செய்யப்பட்டி ருந்தது. இரசிய இளைஞர்கள் வெளிநாடுகளிற் படிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டது. தணிக்கையாளர் நுணுக்கமாக ஆராய்ந்த பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1825–55

னரே பிறநாட்டு நூல்கள், வெளியீடுகள் முதலியன இரசியாவுக்குட் செல்ல அனுமதிக்கப்பட்டன. இரசியப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் கல்வி கற்பதுகூட ஊக்குவிக்கப்படவில்லை. பல்கலைக் கழகப் பாடத்திட்டத்திலிருந்து தத்துவப் படிப்பு அகற்றப் பட்டு அப்படிப்பு திருச்சபையோருக்கு மட்டுமே அனுமதிக்கப் பட்டது. மனிதருடைய சிந்தனைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த வும் அரசாங்கத்துக் கெதிரான கண்டனங்கள் பரவுவதைத் தடுக்கவும் பத்திரிகைத் தணிக்கை இருந்தது. இத்தணிக்கை பரந்த அதிகாரங்களோடு கூடியதாயிருந்தது. "நிதானத்தை இழந்து ஒரு சொல்லுச் சொல்லுதலாலோ, அல்லது தடை செய்யப்பட்ட ஒரு புத்தகத்தை வைத்திருப்பதாலோ ஒருவர் தூரதேசத்துக்கோ, அல்லது சைபீரியாவுக்கோ நாடு கடத்தப்படக் கூடும். நீதி விளக்கமோ, உயர்தர நீதி மன்றத்துக்கு மனுச் செய்தலோ இன்றி இத்தண்டனை விதிக்கப்படும்." நிக்கலசின் பேரரச பாலனத்தின் அடிப்படைக் கொள்கையாக இருந்தது பிற்போக்குவாத மென்க. முற்போக்குச் சத்தியையும் அறி வொளிச் சத்தியையும் ஈன இரக்கமில்லாமல் அடக்குவதற்கு நிக்கலசு தன் ஆட்சிக்காலத்தில் ஒரு போதும் தயங்கவில்லை. மனிதப்பண்பின் தடுத்தற்கரிய போக்கை எதிர்ப்பதற்கு நிக்க லசு கங்கணங்கட்டி நின்றான்.

1 ஆம் நிக்கலசும் 11 ஆம் பிலிப்பும்.

முதலாம் நிக்கலசையும் இசுப்பானிய மன்னனான இரண்டாம் பிலிப்பையும் ஒப்பிடுங்கால் அவர்கள் இருவருக்குமிருந்த ஒரு மைப்பாடு தெற்றெனப் புலனாகும். அதுமட்டுமல்லாமல் இந்த ஒப்பீடு அவர்களுடைய ஆட்சி முறையிலிருந்த அடிப்படையான குறைபாடுகளை விளங்கிக் கொள்ளவும் உதவும். பிலிப்பைப் போல் நிக்கலசும் அவன் வாழ்ந்த தலைமுறைக்கு ஒவ்வாதவனா யிருந்தான். தனியாட்சியை வலுவுறச் செய்வதற்கு நிக்கலசு மனப்பால் குடித்துக் கொண்டிருந்தான். தான் வாழ்ந்த காலத்திருந்த போக்கை அவன் வெறி பிடித்தவன்போல எதிர்த்தான். நைந்துபோன இலட்சியமொன்றைப் பாதுகாப்ப தற்காகப் பிடிவாதத்துடன் அவன் போராடினான். 16 ஆம் நூற்றுண்டில் மாட்டின் உலூதர் கொணர்ந்த சமயச் சீர் திருத்தத்துக்கு இசுப்பானிய முடியாட்சி எங்ஙனம் பரம விரோதியாயிருந்ததோ அங்ஙனமே நிக்கலசு ஐரோப்பா முழு வதிலும் குடியாட்சிக்குப் பரமவிரோதியாக இருந்தான். இரு வரும் இந்த அடக்குமுறைக்குக் கையாண்ட சாதனங்கள் ஒரே தன்மையுடையன. பிலிப்பு தனிப்பட்டவர்களின் கத்தோலிக்க மதம் பற்றிய விசாரணை நடத்தினான். நிக்கலசு இரகசியப் பொலிசாரைக் கருவியாகக் கொண்டான். தொற்று நோயாளர் களை அப்புறப்படுத்தி மற்றவர்களுக்கு நோய் பரவாமற் செய்

Digitized by Noolaham Foundation

வது போல அறிவுக் கருத்துக்கள் தம் மண்டிலங்களிலே 1855
பரவுவதைத் தடுக்கும் வேலையில் இருவரும் முனைந்தனர். ஐரோப்பிய எண்ணங்கள் பரவுவதால் அரசு உருக்குலைந்து விடுமென இருவரும் கருதினர்; அதனாலேதான், அங்ஙனஞ் செய்தனர். ஆனால், இரசியாவிலும் இசுப்பெயினிலும் உள்ள மக்கள் மன்னனிடத்து விசுவாசம் செலுத்திஞர்கள் என்பதில் ஐயமில்லை. நாட்டில் நடக்கின்றவைகளைப் பற்றி மக்களுக்கு அதிக அக்கறை இருக்கவில்லை. இந்த விசுவாசமும் அக்கறையின்மையுமே இவ்விரு நாடுகளிலும் முடியாட்சிக்குப் பலத்தையளித்தன. ஆனால், இதே காரணங்களே முடியாட்சியின் பலவீனத்துக்கும் ஊற்றுக இருந்தன. ஏனெனில், மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றதும் முடியாட்சி முறை அழிந்தொழியும். ஆனால், இரசியாவில் இந்த விழிப்புணர்ச்சி பிந்தியே தோன்றியது (1885). இசுப்பானியரின் ஆமடா எனும் பெருங் கடற்படையானது ஆங்கிலேயரால் தோற்கடிக்கப் பட்டதனால் ஏற்பட்டது போன்ற விளைவே, இரசியாவில் கிரைமியப் போரினால் மக்களிடம் ஏற்பட்டது. இந்த விளைவோவெனின், அப்போது ஆட்சியில் இருந்த நம்பிக்கையையும் தங்களை எவரும் வெல்ல முடியாதென மக்கள் கொண்டிருந்த இறுமாப்பையும் தகர்த்தெறிந்தது. மொசுக்கோவை நோக்கிப் படையெடுத்த நெப்போலியன் அல்லற்பட்டு ஆற்றாது புறமுதுகு காட்டியதை, இரசிய மக்கள் அரை நூற்றாண்டுகளாகத் தம் நினைவில் வைத்து அகமகிழ்ந்தனர். வெளிநாடுகளில் இருந்த படைப்பலப் புகழைக் கொண்டு உள்நாட்டிலிருந்த அடக்குமுறையாட்சி நியாயமானதென இரசியாவின் தனியாட்சி காட்ட முயன்றது. நெப்போலியன் தோல்வியடைந்த அற்றைநாட்டொடக்கம் இரசிய மக்கள் தங்கள் படைப்பலம் பற்றிக் கொண்டிருந்த தவருன எண்ணத்தைக் கிரைமியப் போர் ஒரே நொடியிற் கலைத்தது. பாலனத்திலிருந்த ஊழல்களெல்லாம் அம்பலமாயின. இரசியா தன் பணிக்குழவாட்சியின் கேடு விளைக்கும் திறனின்மைக்குத் தகுந்த தண்டனையை அனுபவித்தது. கிரைமியப் போர் முடிந்த சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஆங்கிலேயனெருவன் இரசியாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்தான். அங்குள்ள கற்றவரின் மனங்களில் கிரைமியப் போரின் விளைவு ஏற்படுத்திய கருத்துக்களை அவன் விரித்துக் கூறியவை பின் வருமாறு :

இரசியாவும் கிரைமியப் போரும்.

" மக்கள் மனத்தை வருத்தும் செய்திகளைப் பரவவிடாமல் அடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிகள் செய்தது. இருந்தபோதிலும் குடியியற் பாலனத்தைப் போலவே படைகளின் கட்டுக்கோப்பும் இழிதக்க நிலையிலிருக்கின்ற தென்பதை எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1855 விரைவில் அறிந்தனர். போர் வீரர்களும் அலுவலவர்களும் தனிப்பட்ட முறையில் வீரதீரச் செயல்கள் செய்தனர். ஆனல், இந்த வீரம் எவ்வித பயனையும் அளியாததற்குத் தளபதி களின் திறமையின்மையும் அலுவலாளர்களின் பொருளாசை யும் படையுணவுத் தினைக்களத்தினரின் வெட்கமில்லாக் கள வுத் தன்மையும் காலாகவிருந்தன. படையிலுள்ள அலுவலா ளர்களின் சத்தி, தனிப்பட்ட இயல்பு, ஒழுக்கம் ஆகியவற் றைப் பேரரசன் முற்றுக அழித்துவிட்டான் எனவும் கூறப் பட்டது. நிதான புத்தியும் ஆய்ந்தறியும் திறனும் ஆற்றலும் உடையவர்களாக இருந்தவர்கள் கருங்கடற் கப்பற்படை அலு வலாளர் மட்டுமே. இரசியாவில் நடைபெற்ற முறைமைக்கு இக் கருங்கடற் கப்பற் படையானது அதிகம் கட்டுப்பட்டிருக்கவில்லை. போராட்டம் தொடர்ந்து நடந்தது. அப்பொழுதுதான் நாட்டின் நலிவு தெளிவாகத் தெரிந்தது. போரை நீண்டகாலம் தொடர்ந்து நடத்துவதற்குரிய இன்றியமையாத வளங்கள் இல்லையென் பதும் அப்பொழுதுதான் தெரிந்தது. 1855 இல் போரை நேர்முகமாகக் கண்ட ஒருவன், "இன்னும் ஓராண்டு வரை போர் நடந்தால் தெற்கு இரசியா முழுவதும் நாசமாகிவிடும்" என எழுதினன். நாட்டின் எல்லாப் பக்கங்களிலும் குடிப் படை திரட்டப்பட்டது. இங்ஙனம் முன்வந்த தொண்டர் படை களுக்குப் போர்க்கருவிகளுக்காகப் பொருள்வளம் மிக்கவர் கள் பெரும்பணம் செலவு செய்தனர். ஆனல், இந்த உற்சாக உணர்ச்சி குன்றியது. எனெனில், தாயகப்பற்றுப் பெருக்கால் தனிப்பட்டவர்கள் செய்த இந்த முயற்சி எதிரிக்கு நட்டமுண் டாக்க உதவவில்லை. எனெனில், இங்ஙனம் செலவு செய்யப் பெற்ற பணம் தவருன முறையில் பொருள் தேடிக் குவிக்கும் ஒரு சிலரைச் செல்வராக்க உதவியது. அதுவரை வாளாவிருந்த மேல் வகுப்பினர் நாட்டின அவமானத்தினல் ஏற்பட்ட வேதனை யினல் விழித்தெழுந்தனர். நாட்டுப் பாலனம் பெரும்பாலும் படைப் பாலனமாகவேயிருந்தது. அப்பாலனத்தை மேல் வகுப் பினர் பொறுமையுடன் சகித்துக் கொண்டனர். அங்ஙனம் அவர்கள் சகிப்பெல்லாம் கேவலம், இதற்குத்தானு! நிக்கலசி னுடைய ஆட்சிமுறைக்கு இது ஒரு பலத்த சோதனைக்காலம். இதனல் அந்த முறையிற் றிறமை இல்லையென்பதும் வெளி யாயிற்று. பேரரசினுடைய படைவலிமைப் பெருக்கத்திற்காக எல்லாவற்றையும் தியாகஞ் செய்த பூட்கையானது தவருன தாகக் காணப்பட்டது. படைகளின் அணிவகுப்பு ஒன்றிலேயே கவனம் செலுத்துகின்ற ஆட்சி உதவாது என்பதைக் கசந்து போன அனுபவம் காட்டிற்று. மக்கள் தாமாகவே மேற்

Digitized by Noolaham Foundation

கொள்ள விரும்பிய முயற்சிகளையெல்லாம் கால்நூற்றாண்டுக்கு மேலாகத் தடுத்துக் கொண்டிருந்த பாலன விலங்குகள் எந்தக் குறுகிய நோக்கத்திற்காக உருவாக்கப் பெற்றனவோ, அந்த நோக்கத்தை யடைவதிலும் தவறிவிட்டன. குறித்த பாலன விலங்குகள் புறத்தோற்றத்தில் ஓரளவிற்கு அமைதியை ஏற்படுத்தின. ஆனால், "இந்த அமைதியோவெனில் உடல் நலத்துடன் வாழ்கின்ற ஒருவனின் வழமையான அமைதியன்று. மரணத்திற்கு முன்னர் ஏற்படும் அமைதியை ஒத்திருந்தது. கீழே அந்தரங்கமாக விரைந்து பரவும் ஊழல் இருந்தது". இரசியப் போர்வீரர் வீரதீரச் செயல்களைக் காட்டியிருந்த போதும் வெற்றி கிடைக்கவில்லை. விடாமுயற்சியுடன் நீண்ட காலம் கையாளப்பட்ட முறைமையின் அடிப்படையான குறைபாடுகளே இத்தோல்விக்குக் காரணம். தோல்வியை இங்ஙனம் விளக்குவதல்லால் வேறு எங்ஙனம் விளக்கலாம்? தன்னுடைய சொந்தப் புத்தியையும் சத்தியையும் கொண்டு எல்லாவற்றையும் செய்யலாமென்று அரசாங்கம் கற்பனை செய்திருந்தது. ஆனால், உண்மையில் அரசாங்கம் எதனையும் செய்யவில்லை; அல்லது ஒன்றும் செய்யாமலிருத்தலைவிடக் கூடுதலான கெடுதியைச் செய்தது.[1] 1855

கற்ற வகுப்பினரின் அதிருத்தி.

முப்பது ஆண்டுகளாகக் கல்விகற்ற வகுப்பு முன்னேறுது தேங்கி நின்று பொறுமையுடன் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டிருந்தது. முப்பது ஆண்டுகட்குப் பின்னர் கல்வி கற்ற வகுப்பினரின் அதிருத்தி மீண்டும் தலைவிரித்தாடியது. அச்சிடப்பட்ட வெளியீடுகளுக்கு அச்சுலகத் தணிக்கை தடையாக இருந்தது. ஆனால், கையெழுத்துப் பிரதிகள் மக்கள் கைமாறி நாடெங்கும் பரவுவதை இத்தணிக்கை தடுக்க முடியாது. இங்ஙனம் கையெழுத்துப் பிரதி வடிவில் மக்கள் கைமாறிப் பரவிய நூல்களில் ஒன்றை மாதிரிக்காக சேர். தொனல் மக்கன்சி எவலசு என்பான் அச்சிட்டு இருக்கின்றான். நிக்கலசின் பாலனத்தைப் பற்றிய காரசாரமான வசையுரையே இந்தக் கையெழுத்துப் பிரதியாகும். இந்தப் பிரதியானது இரசிய மக்களின் அபிப்பிராயத்தில் ஏற்பட்ட பெரும் மாற்றங்களைத் தெளிவாகக் காட்டுகின்றது.

தனியாட்சி பற்றிய விமரிசம்.

'இரசியாவின் அதிகார பீடத்தில் ஆண்டவன் என்னை வைத்துள்ளான்; பொதுமக்களே! என் முன்பாக நீங்கள் தலை சாய்த்து மரியாதை செலுத்த வேண்டும். ஏனெனில், என்னுடைய அரசுகட்டிலே ஆண்டவனின் பீடம். பொது அலுவல்

---

[1] Wallace, Russia, 444–5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1855 களையிட்டு நீங்கள் தொல்லைப்படல் வேண்டாம். எனெனில் ஒவ்வொரு மணி நேரமும் உங்களைப் பற்றி யான் எண்ணு கின்றேன். உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கின்றேன். யான் மிகுந்த கவனத்துடன் இருப்பதனால் உண்ணாட்டுத் தீமைகளை யும் பிறநாட்டு எதிரிகளின் சூழ்ச்சிகளையும் கண்டுபிடித்து விடுகிறேன். எனக்கு அறிவுரை வேண்டியதில்லை. எனெனில், ஆண்டவன் எனக்கு இடைக்கிடை அறிவை அருளுகின்ற தாலால் என்க. இரசிய மக்களே, நீங்கள் என்னுடைய அடிமைகள் என்பதையிட்டுப் பெருமை கொள்ளுங்கள். நான் விரும்பி வைத்ததே உங்கள் சட்டமெனக் கருதுங்கள்'.

" ஆழ்ந்த பத்தி சிரத்தையுடன் இச் சொற்களை யாம் செவி மடுத்தனம். எவ்விதமான தடையுமின்றி மௌனிகளாகி எங்க ளின் இணக்கத்தைத் தெரிவித்தோம். இதன் பயன் யாது ? அலுவற் பத்திரங்கள் மலைபோற் குவிந்தன. உண்மையான நலன்கள் மறக்கப்பட்டன. சட்டத்தை எழுத்தளவில் பின் பற்றினர்கள். ஆனல், கவனமின்மையும் கொலைப்பாதக மும் தண்டிக்கப்படாது விடப்பட்டன. அமைச்சர்களின் முன்பாக மண்டியிட்டுத் தெண்டனிட்டு மெய்யிற் பொடிபடிய இருந்த அலுவலாளர்கள் வெட்கமின்றிப் பொருளைக் கவர்ந்தனர். பொருள் கவர்தல் பெருவழக்காகிவிட்டது. எனவே, எவன் பெருமளவிற் பொருளைக் களவாடுகின்றனே அவனுக்கே பெரு மளவில் மரியாதையும் செய்யப்பட்டது. படையின் அலுவலர்கள் தகுதி அணி வகுப்பைக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. தளபதி யென்கின்ற பதவியை ஒருவன் பெற்றல் உடனே அவன் ஓர் ஆள்பதியாகவோ, அல்லது திறமையான ஒரு பொறி யியல் வல்லுநனுகவோ, அல்லது அறிவுமிக்க மூதவை உறுப் பினனுகவோ ஆகிவிடக்கூடு மெனவும் கருதப்பட்டது. மாகா ணங்களில் ஆள்பதியாக அமர்த்தப்படுபவர்கள் பெரும்பாலும் மக்களை வருத்தி ஆட்சி செலுத்தி ஆடம்பரமாக வாழ்ந்தனர். தங்களுடைய பொறுப்பில் இருக்கின்ற மாகாணங்களை இவர்கள் கொள்ளைநோய் பீடிப்பது போலப் பீடித்திருந்தனர். வேண்டிய பதவிகளுக்கு அபேட்சகர்களை அமர்த்தும்போது அவர்களின் திறமையைப் பொருட்படுத்தவில்லை. குதிரையிலாயப் பையன் ஒருவன் அச்சுலகத் தணிக்கையாளன் ஆனன். பேரரசுக் கோமா ளியொருவன் கடற்படைத் தளபதியானன். .....

" இரசிய மக்களாகிய நாம் இன்றுவரை என்னதான் செய் தோம் ?

" இரசிய மக்களாகிய நாம் துயிலிலாழ்ந்திருந்தோம். ஆண்டு தோறும் வரியைச் செலுத்துகின்றபோது ஏழை உழவர் முனங்கி

Digitized by Noolaham Foundation

னர்கள். நிலபுலன்களையுடையவர்கள் தங்கள் தோட்டங்களின் எஞ்சிய பாதியை முனங்கிக்கொண்டே ஈடு வைத்தனர். அலுவலர் களுக்குக் கொடுக்க வேண்டிய திறையையும் முனங்கிக்கொண்டே கொடுத்தோம். நீதி மன்றுகளில் நீதி வழங்கவில்லை என்றும் பேரரசனின் சுற்றுப்பிரயாணத்திற்கும் கூடாரங்கள் கட்டுவதற்கும் இலட்சக்கணக்காக வீண் செலவு செய்யப்படுகின்றது என்றும் இவை அவமானமும் வெட்கமுமுடைய செயல்களென்றும் எல் லாம் தவருனவையென்றும் இரகசியமாக நாங்கள் குறிப்பிட் டோம். அதன்பின்னர் எந்தச் சேவையை நாங்கள் நிந்தனை செய்தோமோ, அந்தச் சேவையில் முன்னேறுவதற்காகத் தெளிவான மனச்சாட்சியுடன் நாங்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டோம். பொதுவாகக் காணப்படும் இந்தச் சோம்ப லினிடையே ஒருவன் முன்வந்து நாங்களெல்லோரும் விழித் தெழுந்து உண்மைக்கும் இரசியாவுக்குமாகப் போராட வேண்டு மென்று சொன்னால் அவன் ஓர் எளனப் பொருளாகவே தோன்றுவன்.....அங்ஙனம் கூறியவன் பொதுமக்களின் அவ மதிப்புக்கு ஆளாவான். அதன்பின்னர் தொலைவிலுள்ள சைபீரி யச் சுரங்கத்தில் இருக்கும்பொழுது உணர்ச்சியின்றி வாழ்கின்ற அடிமைகளின் ஆழ்ந்த துயிலைக் கலைப்பது மன்னிக்க முடி யாத பாவம் என்பதை அவன் உணர்வான்..... 1855

"இந்த இன்னல்களினிடையே எங்களுக்குத் தேறுதல் தரக்கூடியது ஒன்றிருந்தது. நாங்கள் பெருமைப்படக்கூடியது ஒன்றிருந்தது. அதுவே இரசியாவின் வலிமை.... அந்தோ! எங்கள் வீம்புப் பேச்சினைத்துக்கும் பின் ஆயத்தமில்லாதபொ ழுது அகப்பட்டுக்கொண்டோம்.....

"இரசிய மக்களே! விழித்தெழுங்கள். அந்நியப் பகைவ ரால் ஆக்கிரமிக்கப்பட்டீர்கள். அடிமை வாழ்வினுல் நசுக்கப் பட்டீர்கள். முட்டாட்டனமான அதிகாரிகளும் ஒற்றர்களும் உங்களை வெட்கக்கேடாக அடக்கி ஒடுக்குகின்றனர். நீங்கள் நீண்டகா லமாக, அறியாமை, வேண்டாவெறுப்பு ஆகிய துயிலில் ஆழ்ந் திருக்கிறீர்கள். இவற்றினின்றும் விழித்தெழுங்கள்....வல் லாட்சியாளனின் அரசுகட்டிலின் முன்னேபோய் அமைதி யாக நில்லுங்கள். அங்ஙனம் நின்றுகொண்டு நாட்டிற்கேற் பட்டுள்ள ஆபத்திற்கு விளக்கமளிக்குமாறு அவனைக் கேளுங் கள்."[1]

கிரைமியப் போரின்போது (1855) இரண்டாம் அலச்சாந்தர் அரசெய்தினன். அத்துடன் இரசிய வரலாற்றிற் சீர்திருத்தக் II ஆம் அலச்சாந்தர் (1855–1881).

[1] Wallace, op. cit. 446—8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் தொடங்குகின்றது. இவன் தன்னுடைய தந்தையைப் போன்றிருக்கவில்லை. இவனுடைய தந்தையோ முடிசூடிய "படையணி வகுப்புப் பயிற்சியாசிரியன்" போல இருந்தான். தொடக்கத்திலிருந்தே இவனுடைய பாலனம் மனுடத்தன்மையும் அறிவாற்றலும் உடையதாக விருந்தது. இரசிய மக்களிடையே சீர்திருத்த உணர்ச்சி ஒங்கியிருந்த காலத்திலேயே அவர்களுடைய கதி இரண்டாம் அலச்சாந்தரின் கையிலொப்படைக்கப் பட்டது. இவன் பிற்போக்குவாதியல்லன். ஆனால், ஆக்கவேலை செய்யவேண்டிய அரசறிவின் அடிப்படைத் தேவையை இவன் முற்றுக உணர்ந்திருந்தான். தன்னுடைய தகப்பனார் பின் பற்றிய பூட்கையை முற்றுக மாற்றுவதற்கு இவன் வழி வகுக்க எண்ணியுள்ளான் என்பதை இவன் தொடக்கத்தில் எடுத்த நடவடிக்கைகள் காட்டின. திசெம்பர் இயக்கத்திலீடுபட்டு முப்பது ஆண்டுகளாக நாடுகடத்தப்பட்டு வாழ்பவர்களும் ஏனைய அரசியற் குற்றவாளிகளும் மன்னிக்கப்பட்டு வீடுதிரும்ப அனுமதிக்கப்பட்டனர். அதே நேரத்தில் நிக்கலசினால் பல்கலைக்கழகங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளும் வெளிநாட்டுப் பிரயாணத்தை யொட்டிப் பிறப்பிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும் நீக்கப் பெற்றன. இந்தச் சலுகைகளை இரசிய மக்கள் மட்டிலா ஆர்வத்துடன் வரவேற்றனர். பழைய ஆட்சி குளிர்நிறைந்த மாரியைப்போன்று கொடூரமானது. அதன்பின்னர் வந்த புதிய ஆட்சியின் மட்டான போக்கு வசந்தகாலம் வருமென உறுதியளித்தது. மக்கள் அளவுகடந்த நம்பிக்கை யுடையராயிருந்தனர். முற்போக்கு என்னும் பாதையில் எப்பொழுதும் பரந்திருந்த கொடும் பாறைகளைப் பற்றி மக்கள் சற்றேனும் கவலைப்படவில்லை. அச்சுலகத் தணிக்கை தளர்த்தப்பட்டதும் இலட்சியபுரிக்குரிய கனவுத் திட்டங்களெல்லாம் பெருக்கெடுத்தன. இரசியாவை ஆளுகின்ற அறிவொளி பெற்ற தனியாட்சியாளன் பதினெட்டாம் நூற்றாண்டுச் சீர்திருத்தத் தத்துவக் கொள்கை நிரம்பியவன். அவன் கையை அசைத்ததும் இந்தத் திட்டங்கள் யாவும் நடைமுறைக்கு வருமெனவும் கருதினர். "கிரைமியப் போருக்கு நாங்கள் நன்றியுடையவர்களாக இருத்தல் வேண்டும். ஏனெனில், இந்தப்போரிலை எங்களுடைய அரசியல், சமூகம் ஆகியவற்றின் அமைப்பினை மூடியிருந்த இருளைக்கண்டு விழிப்படைந்தோமாதலால் என்க. கற்ற படிப்பினைகளால் நன்மையடைய வேண்டியது எங்கள் கடமை," எனக் கூறப்பட்டது. "ஐரோப்பாவில் பெருஞ் சீர்திருத்தங்கள் செய்வதற்குப் பல நூற்றாண்டுகளாகப் போராடி இரத்தம் சிந்த வேண்டியிருந்தது. இங்ஙனம் ஐரோப்பாவில் நடந்த சீர்திருத்தங்களை, அமைதியாகவும் பெரும் முயற்சியின்

Digitized by Noolaham Foundation



இரண்டாம் அலச்சாந்தர்
இரசியப் பேரரசன் (1855-1881)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றியும் இரசியா அடையும். அதுமட்டுமன்று; மேற்கிலுள்ள 1856
நாடுகள் இத்தகைய சீர்திருத்தங்களைச் செய்வதற்கு இயலாத நிலையில் இருக்கின்றன. அங்குள்ள நிலமானிய முறையும் சாதிக்கட்டுப்பாட்டு வெறுப்புணர்ச்சியுமே இதற்குக் காரணம்", என்கின்ற திடமான கருத்தை முன்னணியிலுள்ள இரசியச் செய்தித்தாளொன்று தெரிவித்தது. இரசியா எங்கும் இக் காலத்தில் நிலவிய அரசியல் உணர்ச்சி உண்மையில் முடியாட்சிக்குமாறுக இருக்கவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால், நிலை மாறுபட்டிருந்தது. தாங்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருக்கும் நன்மைகள் எல்லாம் சாரினால் ஏற்படுமென நம்பி இரசிய மக்கள் அவனை நோக்கினர். சூனியவாத இயக்கம் அப்பொழுது எழவில்லை. சமுதாயத்திலுள்ள எல்லா வகுப்பினரும் சமுதாயச் சீர்திருத்தங்களுக்காக விசுவாசத்துடன் ஒத்துழைக்கக் கூடும் என்கின்ற உண்மையான எண்ணம் அப்பொழுது பரவியிருந்தது. இந்த ஒத்துழைப்பில் எல்லா வகுப்பினரும் கண்ணியமாகப் போட்டியிட்டுத் தம்மைத்தாமே தியாகஞ் செய்வரெனவும் நம்பப்பட்டது. இந்த நம்பிக்கைகள் முற்றிலும் வீண்போகவில்லை. ஏனெனில், முக்கியத்துவத்தில் பிரான்சியப் புரட்சிக்கு மட்டும் அடுத்தபடியாகக் கொள்ளக் கூடிய நிகழ்ச்சியே இந்தப் புது ஊழியைத் தொடக்கிவைத்த தாதலால் என்க.

இரசியாவிலுள்ள உழவோரை விடுதலை செய்தமையே அலச் சாந்தரின் மறக்க முடியாத சாதனையாகும். நாட்டினப் புது வாழ்வைத் தொடக்குதற்கு அடிமை முறையை நீக்குதல் இன்றியமையாதது என்பதைச் சீர்திருத்தவாதிகள் எல்லோரும் ஒப்புக்கொண்டனர். நாட்டின் மொத்தக் குடித்தொகையில் எறத்தாழ அரைப்பங்கினர் அடிமைகளாவர். மனிதனுடைய கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் இந்தநிலை, உயர்ந்த உணர்ச்சிகளுக்குத் தடையாயிருந்தது. இந்த அடிமை வாழ்வே இரசியச் சமுதாயம் முன்னேற்றமடையாது சோம் பலுற்றிருப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது. அது மட்டுமல்லாமல் ஒழுக்கம், நுண்ணறிவு, பொருள் ஆகியவைக ளையும் முன்னர் கூறிய வகையிற் பாதித்தது. அடிமை வாழ்க்கை முறை நாட்டிலே ஒழுங்கு நிலைபெறுவதற்கும் தடையாகவிருந்தது. அடிமைகள் போர் தொடுக்கக்கூடும் என் னும் பயம் அரசாங்கத்தினரின் உளத்தில் எப்போதுமிருந்தது. இந்தப் பயம் பண்டைக் காலத்து உரோம ஆட்சியாளரின் உளத்திலிருந்த பயத்தை ஒத்திருந்தது. 1762 இல் மூன்றாம் பீற்றர் விழுமியோர் படையிற் சேவை செய்யும் கடப்பாட்டை நீக்கினன். உழவோரும் அந்தக் காலந்தொட்டுத் தங்கள்

ஊழியரின் விடுதலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1861 சுதந்திரத்தைக் கோருவதிற்றளராது நின்றனர். விழுமியோருக்குக் கிடைத்த விடுதலையைத் தொடர்ந்து தங்களுக்கும் விடுதலை கிடைத்திருக்கவேண்டுமென இவர்கள் கருதினர். ஏனெனில் தங்களுடைய எசமானர்களிடமிருந்து அரசாங்கம் கண்டிப்பான சேவையைய பெறும்வரையுமே தாங்களும் ஊழியராக இருக்கக் கடமைப்பட்டவர்களென இவர்கள் வாதாடினர். நிக்கலசின் ஆட்சிக்காலத்தில் தொடர்ச்சியாகப் பல கலகங்கள் எழுந்தன. மனிதாபிமானங் காரணமாக மட்டுமன்றி அரசாங்கம் அழியாது பாதுகாக்கப்படுவதன் பொருட்டும் ஊழியர்களை விடுதலை செய்வது முக்கியமாகும் என்னும் உண்மையை இக்கலகங்கள் சமுதாயத்திலுள்ள எல்லாப் பிரிவினர்களுக்கும் புலனாக்கின. 1856 இல் சமாதானம் நிறைவேறியதும் ஊழியரின் பிரச்சினையைக் கவனிக்கத் தான் எண்ணியுள்ளதாக அலச்சாந்தர் உடனடியாகத் தெரிவித்தான். "நாங்கள் வாழ்கின்ற காலம் அப்படியானது. அத்தகைய காலத்தில் இது நிகழாமல் இருக்க முடியாது. இந்த ஒன்றில் நீங்களும் என்னுடன் உடன்படுவீர்கள் என நான் எண்ணுகிறேன். கீழ்ப்படியில் இருப்பவர்கள் தாமாகவே வலிந்து தங்கள் நலனுக்காக இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் பார்க்க, மேற்படியில் இருப்பவர்கள் ஏற்படுத்துவதுதான் நல்லது," என அவன் விழுமியோருக்கு வெளிப்படையாக எச்சரிக்கை செய்தான். முரணான சுயநலக் கருத்துக்களை இணக்கும் வேலையாலும் எதிர்ப்பைச் சமாதானம் செய்வதாலும் முன்னேற்றம் தடைப்பட்டது. பேரரசன் தன்னுடைய நோக்கத்தை அடைவதற்கு உறுதிபூண்டிருந்தான். 1861 இல் அவன் ஊழியரின் விடுதலைக் கற்பனையைப் பிறப்பித்தான். அவனுடைய இச்செயலினால் நாலுகோடிக்கு மேற்பட்ட இரசிய மக்கள் விடுதலை பெற்றனர். இரசிய வரலாற்றில் இவ்விடுதலைக் கற்பனை முக்கியத்துவம் வாய்ந்தது. எனவே, இக்கற்பனையின் பிரதான கொள்கைகளையும் தத்துவங்களையும் அது இரசிய நாட்டுப்புறச் சமுதாயத்தில் ஏற்படுத்திய விளைவுகளையும் இங்கு ஆராய்தல் வேண்டற்பாலது. முதலாவதாக, பொருளாதாரச் சத்திகள் படிப்படியாகத் தொழிற்பட்டதனால் இங்கிலாந்தில் அடிமை முறை மறைந்தது என்பதையும், இரசியாவில் சட்டவாக்கத்தின் பயனாகவே அடிமைமுறை மறைந்தது என்பதையும் கருத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். மேற்குறித்த காரணத்தினால் விடுதலைக் கற்பனையின் விளைவுகளை மதிப்பிடுவது கடினமான செயலாகின்றது. ஏனெனில் சட்டங்களின் மூலம் ஒன்றைச் சாதிப்பது நாங்கள் பொதுவாகக் கருதுவதிலும் பார்க்கக் குறைந்த பலனையே தரும். பொருளாதார நிலையிலும் சிறித

Digitized by Noolaham Foundation

ளவு அபிவிருத்தியே ஏற்படும். சமுதாய ஒழுங்கைக் கொண்டு நோக்குமிடத்து, இரசியா பெருமளவில் நன்மையடைந்துள்ளது என்பதற்கு ஐயமில்லை. எனினும், இரசிய உழவன் தன்னுடைய பொருட் பெருக்க நிலையையே முக்கியமாகக் கவனித்தான் என்பதையும் சமூகத்தில் தன்னுடைய நிலைமையைப் பற்றி அதிகம் கவலை கொள்ளவில்லை யென்பதையும் இங்கு நினைவில் வைத்திருப்பாம். ஆனால், அடிமை விடுதலையின் பொருளாதார விளைவுகளை மட்டிட்டு அறிய முயலும்போது பெரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றபடியால், அவற்றைப் பற்றிப் பொதுவாகக் கூறுவது இலகுவான செயலன்று. 1861

அடிமை விடுதலையின் விளைவு.

மூன்று தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டது இந்த விடுதலைக் கற்பனை. முதலாவதாக, இக்கற்பனை இரசிய ஊழியருக்குக் குடியுரிமைகளை வழங்கிச் சுதந்திரமான உழவனென்னும் நிலையைக் கொடுத்து, எசமானனின் அடிமை விலங்கிலிருந்து விடுதலை அளித்தது. இரண்டாவதாக இக்கற்பனை விழுமியோருக்கும் உழவோருக்கும் காணி நிலத்தினுரிமையைப் பகிர்ந்து வழங்கியது. இதனால் உழவோருக்கு நிலமில்லாமற் போதலும் நிலமில்லாத பாட்டாளியர் வகுப்பொன்று வளர்வதும் தடுக்கப்பட்டது. மேல் நாட்டு நாகரிகத்தைப் பாராட்டிய இரசியச் சிந்தனையாளர்கள் அதன் குறைபாடுகள் பற்றிக் கண்மூடித் தனமாக இருக்கவில்லை. மேல்நாட்டு நாகரிகத்திலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்குத் தக்க பாதுகாப்புச் செய்யாமல் நாற்று நடுவது போல மேல்நாட்டு முறையை அப்படியே இரசியாவில் புகுத்துவதனால் உண்டாகும் அபாயத்தை இச் சிந்தனையாளர் உணர்ந்திருந்தார்கள். சட்டப்படியான அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பெற்ற இந்த ஊழியர்கள் வீடற்ற தொழிலாளிகளென்னும் பொருளாதாரத்தளையில் அகப்பட நேர்ந்தது. முந்திய நிலையிலும் பார்க்க வீடற்ற தொழிலாளி யென்னும் நிலை இழிந்ததாக இருந்தது. பெயரளவில் இந்த உழவன் சுதந்திரமாகவே இருந்தான். ஆனால், வறுமைப் பிணியின் பளு அவனைத் தலையெடுக்க விடாது அமிழ்த்தியது. அதனால் அவன் முதலாளித்துவத்துக்கு இரையாகிவிடுவான். "பொருளாதார முன்னேற்றம்" என்கின்ற சொற்றொடரும் "சமுதாய நலம்" என்கின்ற சொற்றொடரும் உணர்த்துகின்ற கருத்துக்கள் இன்றியமையாதபடி ஒன்றையொன்று தழுவி நிற்பன வென்றே பெரும்பாலும் கொள்ளப்படுகின்றது. ஆனால், சமுதாய நலனைப் பலியிடுவதாலேயே சிலவேளைகளில் பொருளாதார முன்னேற்றம் பெறப்படுகின்றது. ஏனெனில், சமுதாயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1861 தின் நலன் தனிப்பட்ட ஒரு வகுப்பினரின் நலனுக்குப் பெரும்பாலும் மாறுயிருக்குமாதலால் என்க. இதற்கு எடுத் துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் கூறுவாம். 18 ஆம் நூற்றுண்டில் ஆங்கிலக் கமத்தொழிலில் பெரும் அபிவிருத்தி ஏற்பட்டது. ஆனால், அந்த நூற்றுண்டிலேயே இங்கிலாந்தி லிருந்த மத்தியவகுப்பு உழவர்களும் அழிந்தனர். இங்கிலாந்தி லிருந்த விவசாயத் தொழிலாளர்களைப் போன்ற தொழிலா ளர்களை இரசியாவிற் ரேற்றுவித்தால் நிலக்கிழார்களுக்கு, குறைந்த சம்பளத்தில் ஏராளமான கூலியாட்கள் கிடைப்பர். இதனால் உற்பத்திப் பெருக்கம் ஊக்குவிக்கப்படலாம். ஆனால், இதன் சமுதாய விளைவு ஆபத்தானது என்க. எனவே, இரசிய ஊழியனுக்குச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே அவனுக்கிருந்த குறைகளை நீக்கியதே பிரதானமான அம்சமா காது. இவை முக்கியமானவை எனினும் ஊழியனைச் சுதந்திர முடைய உழவோனாக்கி அவனுக்கு நிலத்தை உடைமையாக் கியதும் கிராம சமுதாயத்தில் அவனை நிலச் சொந்தக்காரனாக் கியதுமே முக்கியமானவை. "உடைமையின் பரிசுத்த உரிமையை" இந்த மாற்றம் பாதித்தது. இரசிய விழுமியோர் தங்களுக்குச் சொந்தமாயிருந்த கட்டாய ஊழியத்தையும் தோட்டங்களின் பெரும்பகுதியையும் ஒரேயடியில் நீக்கிய நடவடிக்கையை எதிர்க் காதிருந்தமை அவர்களுடைய நற்பண்பாகும். நில உடைமை யாளர்கள் கையளிக்கவேண்டிய நிலத்தின் தொகை சட்ட பூர்வமாகக் குறிக்கப்படவில்லை. ஆனால், ஊழியர்களுக்கும் நில உடைமையாளர்களுக்கு மிடையில் நடுவர்களெனச் சிறப் பாக நியமிக்கப்படும் நீதிபதிகளே இதுபற்றி முடிவு செய்தனர். இந்த நீதிபதிகள் சமாதான நடுவர் என அழைக்கப்பட்டனர். இந்தச் சமாதான நடுவர்கள் உள்ளூரிலிருந்த நிலச் சொந்தக் காரர்களாவர். எனவே, பெருமளவிற்கு இவர்களுடைய நடு நிலையிலும் பொறுமையிலுமே நிலத்தைப் பங்கிடுவதில் இவர் கள் அடையும் வெற்றி தங்கியிருந்தது. கண்ணியமான நடத்தை யும் கடமையுணர்ச்சியும் நிரம்பிய பலர் இரசியாவில் இருந்தார் களென்பது இந்த நடுவர்கள் மூலம் புலனாயிற்று. தங்கள் நாட்டின் அரசாங்கத்திற் பங்குபற்றுவதற்கு இவர்கள் தகுந்த வர்களென்பதையும் இவர்களுடைய நடத்தை காட்டிற்று. கிராமச் சமுதாயமானது விடுதலைக் காலத்தின்பொழுது உண்மை யில் வைத்திருந்த அளவு காணியை வைத்துக்கொள்ளவேண் டும் என்பதே காணி பகிர்ந்து வழங்குவது பற்றி நிலவிய கருத்தாகும். காணியை இழந்த நிலக்கிழார்களுக்கு நட்ட ஈடாக ஆண்டு தோறும் பணம் கொடுக்கப்படும். பணங் கொடுக்கின்ற பொறுப்பைக் கிராமச்சமிதி ஏற்றுக் காசு திரட்டிக் கொடுத்தது.

Digitized by Noolaham Foundation

அடிமை விடுதலைக் கற்பனையின் மூன்றுவது தத்துவத்தைப் பின்வருமாறு விளக்கலாம். இதனால் நிலக்கிழார்களுக்கு ஏற்பட்ட நட்ட ஈட்டுப் பெறுமதியை அரசாங்கம் அவர்களுக்கு முற்பணமாகக் கொடுக்கும். கிராமச் சமுதாயம் ஆண்டுதோறும் கட்டவேண்டிய பணத்தை இங்ஙனம் அரசாங்கம் செலுத்தும். பின்னர், அரசாங்கம் செலுத்திய பணத்தைக் கிராமச் சமுதாயம் 6 சதவீத வட்டியுடன் நாற்பத்தொன்பது ஆண்டுகளுக்கிடையில் அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டும். நிலத்தையுடைமையாக வைத்திருக்கும் உரிமை நிலக்கிழார்களிடமிருந்து பெறப்பட்டுத் தனிப்பட்ட உழவோருக்குக் கொடுக்கப்படவில்லை. கிராமச் சமுதாயத்திற்கே நிலத்தினுரிமை கொடுக்கப்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேற்கு இரசியாவில் மாத்திரம் தனிப்பட்ட உழவோருக்கென நிலம் கொடுபட்டது. சுருங்கச் சொன்னால் அடிமை விடுதலைக்கு முன்னர் காணியினுரிமை பிரபுவின் அதிகாரத்திலிருந்தது. பின்னர், அது சமிதியின் கட்டுப்பாட்டிற் குள்ளாயிற்று. இந்த முறைமையிலே குறை பாடுகளிருக்கலாம். எனினும் கட்ட வேண்டிய பணத்தைச் சேர்த்துக் கொடுக்கும் பொறுப்பைக் கிராமச் சமுதாயத்தின் மீது சட்டபூர்வமாகத் திணித்தற்கு அரசாங்கமானது இந்தக் கற்பனையினால் அதிகாரம் பெற்றது. அத்துடன், தனிப்பட்ட உழவோரின் உரிமையைப் பணம்படைத்த நிலக்கிழார்கள் பறியாது பாதுகாத்தற்கும் இக்கற்பனை உதவியது. 1861

அடிமை விடுதலைக் கற்பனை பற்றிய கண்டனம்.

இரசிய உழவோருக்குச் சட்ட நிலையில் ஏற்பட்ட மாற்றங்களின் பரந்த தன்மையினால் அவற்றின் உடனடியான சமுதாய பொருளாதார முக்கியத்துவத்தை நாங்கள் தவறுக விளங்கிக் கொள்ளக் கூடும். பெரும்படியாக நோக்குமிடத்துக் கிராமச் சமுதாயத்தின் அமைப்பு முற்றுகப் புரட்சிகரமாக மாறிவிட்டது போலத் தோன்றிற்று. பழைய எல்லைக் கற்கள் முற்றுக அழிந்து போயின. பழைய தொடர்புகள் ஒழிந்தன. ஆனால், உழவோருடைய நிலை உண்மையில் முற்றுகத் திருந்தவில்லை. அவர்களின் நிலை திருத்தியற்றதாகவேயிருந்தது. விடுதலையின் நிபந்தனைகள் உழவோரிடை உற்சாகத்தை உண்டாக்குவதற்குப் பதிலாக ஆழ்ந்த அதிருத்தியை எழுப்பின. உழவோர் புதிய வரிகளின் பளுவை உணர்ந்தனர். பெரும் பாலும் இப்புதிய வரிகள் நிலத்தின் வழமையான குத்தகையிலும் பார்க்கக் கூடுதலாக இருந்தன. இப்புது வரிகள் அவர்களின் சிறிய மூலவளத்தைக் கரைத்தன. அதுமட்டுமல்லாமல், உழவோர் தங்களுக்கு ஒரு புது அநீதி செய்யப் பட்டுள்ளதெனக் கருதினர். தாங்கள் கமஞ் செய்துவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1861 நிலத்தைத் தங்களுடையதாகவே அவர்கள் கருதிவந்தனர். இக்கருத்து வரலாற்றை யொட்டி நோக்குமிடத்துச் சரி யென்க. பிரபுக்களின் தோட்டங்களில் அவர்கள் வேலை செய்தே ஆகவேண்டும். ஆனால், இதுபற்றிச் சட்டவாணர் விளக்கங் கூறுமிடத்து ஊழியர் நிலத்தின் குத்தகைக்காரர்க ளேயன்றி உண்மையில் உடைமைக்காரர்கள் அல்லர் எனக் கூறினர். பழைய காலத்திலோவெனிற் பிரபுக்களிடமிருந்தும் உழவோரிடமிருந்தும் அரசாங்கம் சமமாகவே ஊழியத்தைப் பெற்றது. அந்தப் பழைய காலத்தின் சின்னமாகவே உழவோர் ஊழியஞ் செய்யவேண்டுமென்ற கடப்பாடானது இங்கு குறிப் பிட்ட காலத்தில் இருந்ததென்பதையும் முன்னரே கண் டுள்ளோம். எனவே, பழையதான கட்டாய ஊழியவேலை யிலிருந்து தங்களுக்கு விடுதலை கிடைக்கும்போது அந்த ஊழியத்துக்குப் பதிலாகப் புதிய பளுக்கள் புகுத்தப்படா வெனவும் உழவோர் எதிர்பார்த்தனர். விழுமியோருக்கு நட்ட ஈடு கோருமுரிமை யெதுவும் இருக்கவில்லை. ஏனெனில், அவர்களுக்குக் கட்டாயப் படைச் சேவை ஊழியத்திலிருந்து முன்னரே விடுதலை கிடைத்துவிட்டமையால் அதற்கு மேல் விழுமியோருக்கு நட்ட ஈடு கோரும் உரிமையில்லை யென்பதே உழவோரின் வாதம். இந்த வாதத்தை ஏற்கலாம் அல்லது விடலாம். ஆனால், பழைய தொழில் வரியிலும் பார்க்கப் புதிய நில வரி உழவர்களுக்கு அதிக துன்பம் விளைவித்த தென்பது விவாதத்துக்குரியதொன்றன்று. அது உண்மையே. பொருளாதார அபிவிருத்தி தடைப்பட்டமைக்கு இப்புதிய வரியே முக்கியமான காரணமாகும். அடிமை விடுதலைச் சட்டத்தின் விளைவுகள் முக்கியமானவை. எனினும், இரசிய உழவோர் படுகின்ற தொல்லையைப் போதிய அளவிற் குறைப் பதில் இச்சட்டம் தோல்வி அடைந்தது. "முன்னரிலும் பார்க்க நன்றாகவுமிருக்கின்றது, இழிவானதாகவுமிருக்கின்றது" என உழவோர் இந்தப் புதிய நிலையைப் பற்றிக் கூறினர். உழவோ ருடைய சில குறைகள் நீங்கின. ஆனால், ஒருவிதத்தில் இல்லாவிடில் இன்னொருவிதத்தில் உழவர்களுக்கு ஏற்பட்ட பளுவினால், அவர்கள் புதியதொரு மனச்சஞ்சலமும் கடப்பாடும் உடையோராயினர். இவ்விடுதலைக் கற்பனையின் விளைவினால் இரசியாவின் பல பாகங்களிலும் வாழ்ந்த நிலக்கிழார்கள் வெவ்வேறு முறைகளில் பாதிக்கப்பட்டனர். ஆனால் நிலக் கிழார்கள் தங்களுடைய நிலையைத் தாங்களே ஒழுங்காக்கவும் சிக்கனமான வழிவகைகளைக் கையாளவும் தங்கள் தோட் டங்களின் நிருவாகத்தில் மிகுந்த கவனம் செலுத்தவும் கட்டா யப்படுத்தப்பட்டமை இதன் விளைவாகும். "முன்னை நாட்களில்

Digitized by Noolaham Foundation

நாங்கள் கணக்கு வழக்குப் பார்ப்பதில்லை. உயர்ந்த திராட்சரச மதுவை யருந்திணேம். இப்பொழுது நாங்கள் கணக்கு வழக்குப் பார்க்கிறேம்; சாராயவகையுடன் திருத்தியடைய வேண்டியவர்களாயுமிருக்கிறேம்" என விழுமியோர் ஒருவர் கூறினர்.[1] 1864

நீதிமன்றங்களிலும் தலவரசியலிலும் சீர்திருத்தங்கள்.

இரண்டாம் அலச்சாந்தர் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் நீதிமன்றங்களையும் தலபாலனத்தையும் சீர்திருத்திப் புகழ் பெற்றான். நீதிபரிபாலன முறைமையைப் பரிசீலனை செய்வதற்கு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. நீதிபரிபாலன முறைமையில் இருபத்தேழு அடிப்படைக் குறைபாடுகள் இருப்பதை இந்த ஆணைக்குழு கண்டது. எனவே, குறை நிறைந்த பழைய முறையை நீக்கிவிட்டு அந்த இடத்திற் புதிய நிறுவகங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவைகள் மேல்நாட்டுக் கருத்துக்கேற்ப அமைக்கப்பட்டன. ஆங்கில, பிரான்சிய சட்ட வியல் தத்துவங்கள் 1864 இல் புகுத்தப்பட்டன. அவை யாவன: நீதிபரிபாலன அதிகாரத்தையும் பாலன அதிகாரத்தையும் வெவ்வேறுகப் பிரித்தல், நீதிபதிகளின் சுதந்திரம், வாய்ச்சொல் மூலம் வழக்கு விளங்கும் முறை, நீதி நடுவர்களைக் கொண்டு நடக்கும் வழக்கு விளக்க முறை ஆகியனவாகும். பொதுமக்களால் தெரிந்தெடுக்கப்படும் சமாதான நீதிபதிகள் சிறிய வழக்குக்களே நடத்துதற்கு அமர்த்தப்பட்டனர். தனிப்பட்ட நீதியரசர்களின் தீர்ப்புப் பற்றி மாதாந்தம் நடைபெறும் மேன்முறையீட்டு மன்றத்துக்கு மனுச் செய்யலாம். இந்த மாதாந்த நீதிமன்றங்கள் இங்கிலாந்தில் மூன்று மாதத்துக்கொருமுறை ஒவ்வொருபகுதியிலும் கூடுகின்ற மேன்முறையீட்டு மன்றத்தை ஒத்திருந்தன. பெரும் பிரிவிலுள்ள நீதியரசர்களெல்லோரும் அதில் இடம் பெறுவர். ஒழுங்காக நடைபெறும் முறை மன்றுகளுக்கென முக்கியமான அலுவல்கள் யாவும் ஒதுக்கி வைக்கப்படும். இந்த மன்றுகளில் முடியிலால் நியமிக்கப்பட்ட சிறப்புப் பயிற்சிபெற்ற நீதிபதிகள் இருந்தனர். சாதாரண நீதிமன்றுகளிலிருந்து மேன்முறையீட்டு மன்றுக்கு வழக்குக்கள் பற்றி மேன்முறையீடு செய்யலாம். நீதி பற்றிய சீர்திருத்தங்கள் நடந்து கொண்டிருக்கையில், இரசியப் பேரரசின் மத்திய மாகாணங்களில் தலவாட்சியை உள்ளூர் மக்களே நடத்துகின்ற முறைமையொன்றை அலச்சாந்தர் நிறுவினன். இந்தத் தலவாட்சி முறைமையானது பன்முகப்படுத்தல், மாகாணத் தன்னண்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

---

[1] Wallace, op. cit. 520.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1864

இரசியாவில் எலவே பல்வேறு தலக்குழுக்கள் இருந்தன. அவையாவன : (1) விழுமியோருடைய மன்றங்கள் ; தம் குறைபாடுகளை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கும் உரிமை இம்மன்றங்களுக்கிருந்தது. (2) உழவோரின் மன்றங்கள் ; கிராமச் சமுதாயம் ; இதனை "மீர்" என்பர். மற்றது கோட்டங்கள். இதனை "வொலற்று" என்பர். விழுமியோர், உழவோர், நகர மக்கள் ஆகிய மூன்று பிரிவினரின் பிரதிநிதிகளும் புதிய கழகங்களில் ஒருங்கே கூடினர். மாவட்டக் கழகங்களை மக்கள் தெரிந்தெடுத்தனர். மாகாணக் கழகத்தை—இதனை "செமிசுவோ" என்பர்—மாவட்டக் கழகங்கள் தெரிவு செய்தன. சமாதான நீதிபதிகளைத் தெரிவு செய்தல், பாலங்களையும் வீதிகளையும் பழுது பார்த்தல், ஆரம்பக் கல்வியையும் சுகாதாரத்தையும் மேற்பார்வை செய்தல், பஞ்சத்தைத் தவிர்க்க நடவடிக்கை யெடுத்தல் ஆகியவைகளை இக்கழகங்களின் கடமைகள். இக்கழகங்கள் செய்கின்ற தீர்மானத்தை வீட்டும் அதிகாரம் மாகாண ஆள்பதிகளுக்கிருந்தபடியால் கழகங்களுக்குரிய முயற்சிகள் யாவும் கட்டுப்பாடு செய்யப்பட்டிருந்தன. இக்கழகங்களுடைய அதிகாரம் இங்ஙனம் குறைந்திருப்பதற்கு நிதி வழங்குதற்கு வசதியில்லாதிருந்தமை மற்றொரு காரணமாகும். அடிமை முறையை அகற்றுதல், நீதிபரிபாலனத்தைச் சீர்திருத்தல், தலத்தனியாட்சிக்குக் கட்டுப்பட்டுள்ள சுதந்திரம் வழங்குதல் ஆகிய நோக்கங்களில் அலச்சாந்தரின் ஆட்சிக்கால முதற்பகுதி செலவாயது. இக்காலம் புதியதொரு காலவவதியைத் தோற்றுவித்து மேற்கு ஐரோப்பாவிலுள்ள முறைகளை ஏற்றுப் பின்பற்றுதற்கு ஏதுவாக இருந்தது.

பிற்போக்கு.

பெரிய சாதனைகளை அலச்சாந்தர் சாதித்திருந்தபோதும் புரட்சிகரமான சூனியவாதம் பிறப்பதை அவன் தன்னுடைய காலத்திலேயே கண்டான். இதுவும் விதியின் விளையாட்டு என்க. அவனுடைய ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் உற்சாகம் நிலவியது. ஆனால், அதற்கு எதிர்மாறாக அவனுடைய ஆட்சி முடியும்போது எங்கணும் துக்கம் கவிந்திருந்தது. பத்து ஆண்டுகளாக விவசாயத்திலும், நீதியிலும், பாலனத்திலும் சீர்திருத்தங்கள் ஏற்பட்ட பின்னர் அரசாங்கம் மீண்டும் பிற்போக்கு வாதத்தில் மூழ்கியது. முதலாம் நிக்கலசின் பாலனத்தின் போது நிலவிய மிதமிஞ்சிய போக்கு மீண்டும் தோற்றமளிக்கத் தொடங்கிற்று. நம்பிக்கையும் ஏமாற்றமும் முறையே மாறி மாறி ஏற்பட்டதால் கல்விகற்ற வகுப்பினருடைய உள உறுதி குலைந்தது. இதனால் தனியாட்சியில் அவர்களுக்கிருந்த நம்பிக்கை தளர்ந்தது. தீவிர வாதிகளிடம் இந்த மத்திய வகுப்

Digitized by Noolaham Foundation

பினர் விழுந்தடித்துச் சென்றனர். இந்த ஏமாற்ற உணர்ச்சியே 1864
சூனியவாதம் பிறப்பதற்குக் காரணமாக இருந்ததெனக் கூற லாம். கீழ்ப்படியிலுள்ளவர்களே சீர்திருத்தங்களைத் தொடக்க வேண்டுமென்ற உறுதியான நம்பிக்கை வளரலாயிற்று. அர சாங்கமானது அடிப்படியான நெருக்கடியினாலும் தளராத கிளர்ச்சியினாலும் ஊக்குவிக்கப்பெற்றால் மட்டுமே செயலாற்று மெனவும் நம்பினர்.

பிற்போக்கின் காரணங்கள்.

முதலாவதாக, அலச்சாந்தரின் சீர்திருத்தங்கள் எட்டுவடிவில் மனங்கவர்வனவாயிருந்தன. ஆனால், உண்மையான செயன் முறையில் அவை அப்படி இருக்கவில்லை. அடிமை விடுதலை யின் கருத்து, பழைய பழக்கவிற்குப் பதிலாகப் புதிய பழக்கவைச் சமத்தல் என்பதைக் கண்டனர். அவர்களுக்குச் சட்ட பூர்வ மாகக் கிடைத்த நிலைமை பொருளாதார நிலையைச் சற்றேனும் மாற்றவில்லை. மேலும் அவர்களுடைய ஒழுக்கத் தத்துவங்களில் எந்தவிதமான மாற்றமுமில்லை. அடிமை வாழ்வு ஒழிக்கப் பட்டதும் சுதந்திரச் சூழ்நிலையும் சுறுசுறுப்புடன் முன்வந்து செயலாற்றும் உழவர்களின் வகுப்பும் உடனடியாக உண்டாகும் என இரசியச் சிந்தனையாளர்கள் நம்பிக்கையுடன் எதிர்வு கூறினர்கள். ஆனால், பல நூற்றாண்டுகளாக வந்த அடக்கு முறையாட்சியைக் காலந் தாமதித்து வந்த தனி விதியொன்று ஒழித்துவிடமாட்டாதென்பதை இந்தச் சிந்தனையாளர்கள் மறந்து விட்டார்கள். நீதிமுறைச் சீர்திருத்தமும் பாலனச் சீர்திருத்த மும் நல்லதோர் ஆட்சிமுறைக்கு அடிகோலின என்பதை ஒப் புக்கொள்ள வேண்டும். ஆனால், ஆவலுடன் எதிர்பார்த்தி ருந்த நன்மைகள் இந்தத்துறையிலும் தாமதமடைந்தன. ஒரு நிறுவகத்தின் வெற்றி முக்கியமாக அதனை இயக்குகின்றவர்க ளிலே தங்கியுள்ளதென்பது உண்மை. ஆனால், பயிற்சிபெற்ற நீதி நடுவர்களும் திறமையான நிருவாகிகளும் இரசியாவிற் குறைவாகவே இருந்தனர். மேலும், பிற்போக்குக்குரிய காரணங் களை உளதத்துவ அடிப்படையைக் கொண்டு நோக்கலாம். பெரி தும் ஆரவாரப்பட்ட மக்கள் பின்னர் ஏன் உளமொடிந்து இருந் தனரென்பதையும் உளதத்துவ அடிப்படையைக் கொண்டு விளக்கல் கூடும். முதலாம் நிக்கலசின் இரும்பனைய மன வுறுதி இரசிய மக்களிடம் ஏற்படக்கூடிய வழமையான அபி விருத்தியை ஒரு சந்ததி காலமாக ஒடுக்கிவைத்திருந்தது. அவன் ஆட்சியிலிருந்து விலகியதும் மக்கள் அது வரை தங்கள் சத்தி களை அடக்கிக் கொண்டும் முயற்சிகளைத் தடுத்துக் கொண்டு மிருந்த விலங்குகளைத் தகர்த்தெறிந்தனர். நடப்பவையெல்லாம் நன்மைக்கே என்கின்ற எண்ணம் மக்களிடம் நிறைந்திருந்தது. அதனால் இன்பம் பயக்கும் புதியதொரு சுவர்க்கத்தையும் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1864

தொரு மாநிலத்தையும் பற்றி மக்கள் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தனர். இரசியப் பேரரசின் புதுவாழ்வு அணுகி விட்டதுபோலத் தெரிந்தது. ஆனல், மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த குறிப்பிடத்தக்க பலனேயளிப்பதற்கு இரண் டாம் அலச்சாந்தரின் சீர்திருத்தங்கள் தவறிவிட்டன. எனவே, இதனேத் தொடர்ந்து மக்களின் உணர்ச்சி முற்றுகத் தடைப் பட்டுப் பின்னிடைந்தது. மனச்சோர்வும் அதற்கு முன்னரேற் படும் மட்டில்லாத உணர்ச்சிப் பெருக்கும் பகுத்தறிவின் அடிப் படையில் எழுவனவல்ல. இரசியாவில் இந்த இரண்டு நிலே களும் தோன்றின. மட்டில்லாத நம்பிக்கை அகன்றதும் இரசிய சமுதாயத்தில் நிலவியது மட்டில்லாத மனச்சோர் வென்க. அலச்சாந்தரின் ஆட்சியின் பிற்பகுதியில் பிற்போக்கு மனப்பான்மை வளர்ந்தது. இந்தப் பிற்போக்குக்கு அவனின் குணவியல்புகளே காரணமாகும். அரசியற்றராளப் போக்கின் அடிப்படையில் இயங்குகின்ற நிறுவகங்களில் அலச்சாந்த ருக்கு இயற்கையான நம்பிக்கை கிடையாது. அவனுடைய சீர் திருத்தங்களோ இலட்சிய அடிப்படையில் எழவில்லே. ஆனல், அரசியலில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவையெனவும் அம் மாற்றங்களே மன்னன் புகுத்த வேண்டுமேயொழிய, மக்கள் புகுத்தப்படாதெனவும் அவன் திடமாக நம்பியிருந்தான். அக் காரணங்களினுலேயே இச் சீர்திருத்தங்கள் எற்படுத்தப் பட்டன. தனக்குள்ள பெரும் பொறுப்புக்களே அவன் உணர்ந் திருந்தான். அதன் விளேவாக அவன் மிகவும் கவனமாக இருந்ததுமன்றித் தன்னுடைய சொந்தப் பகுத்தறிவிலும் நம் பிக்கை கொள்ளாதிருந்தான். அவனுல் தீர்க்கப்பட வேண்டிய வைகள் மிகவும் சிக்கலானவை. அவைகளே ஏற்றுச் செயல் புரிவதற்குரிய கற்பனே நிறைந்த பரந்த உள்ளமும் அரசறிவும் அவனிடமில்லே. எனவே, ஆயுரையாளரில் அவன் தங்கியிருக்க வேண்டியதாகவிருந்தது. மனம் மாறிக்கொண்டிருக்கும் தன் மையும் தீர்மானமில்லா நிலேயும் அவனேப் பொருந்தா ஆதிக் கத்திற்கு ஆளாக்கின. நிக்கலசின் கொள்கைக் கேற்றபடி பயிற்சி பெற்ற ஆயுரையாளர் அவனேச் சூழ்ந்திருந்தனர். இந்த ஆயுரையாளரின் உளத்திற் பிற்போக்குவாதம் கருக் கொண்டிருந்தது. தங்களுடைய கருத்துக்களே வெளிப்படை யாகக் காட்டாது இந்த ஆயுரையாளர் சிலகாலமாக அவைகளே உள்ளடக்கி வைத்திருந்தனர். எனினும், இந்த ஆயுரையாளர் படிப்படியாக அலச்சாந்தரின் மனத்தைப் பெருமளவிற்குத் தம் பால் ஈர்த்தனர். 1864 இற்குப் பின்னர் அலச்சாந்தரின் சீர்திருத்தப் பேரவா விரைவிற் றணிந்தது. அதற்கு ஒரு காரணமாகவிருந்தது போலந்திலேற்பட்ட கலாமாகும். மேலும்,

II ஆம் அலச்சாந்தரின் குணவியல்பு கள்.

Digitized by Noolaham Foundation

சலுகைகளைக் கொடுத்தால் தன் தனியாட்சி பலவீனப்பட்டு விடுமே என்பது இரண்டாவது காரணமாகும். அரைமனத்துடன் செயலாற்றும் நடவடிக்கைகள் மூலம் நாட்டினரைத் திருத்திசெய்ய அவன் முயன்றான். அடிமைகளுக்கு அவன் அளித்த விடுதலை அரைப்பங்குதான் நிறைவேறியது. விழுமியோருக்கு அவன் மாகாணச் சுதந்திரங்களை யளித்தான். பேரரசின் நிருவாகப் பொறுப்பு ஒருவருடைய கட்டுப்பாட்டிலேயே இருந்தால் உண்மையான முன்னேற்றமெதையும் சாதிக்க முடியாதென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. பேரரசின் பொறுப்பைத் தனிமனிதனொருவன் தானே கொண்டு நடத்தவியலாது. இரசியச் சமுதாயத்தைப் பீடித்திருந்த நோயைத் தீர்க்கக்கூடியது பொறுப்பாட்சியொன்றேயாகும். ஊழியருக்குக் கிடைத்த சட்டப்படியான விடுதலையைத் தொடர்ந்து தங்களுடைய அரசியல் விடுதலையும் கிடைக்குமென விழுமியோர் எதிர்பார்த்தனர். அப்படி நடக்கவேண்டியது தருக்கமுறைப்படி சரியென்க. தங்களுடைய காணி நிலங்கள் போன்றவைகளைச் சீர்திருத்தத்துக்குப் பலியாகக் கொடுத்தபடியால் அதற்கு வெகுமதியாக அரசியலதிகாரத்திலவர்களுக்கு ஒரு பங்குரிமையுண்டு. பிரதிநிதித்துவ நிறுவகங்களை நிறுவுமாறு 1865 இல் மொசுக்கோ விழுமியோர் பேரரசனுக்கு மனுச் செய்தனர். அப்போதுதான் உண்மை "எவ்வித தடையுமின்றி உங்களுடைய அரசுகட்டிலை அடையும்" என அவர்கள் அம்மனுவில் குறிப்பிட்டனர். தன்னுடைய வாழ்நாள் முழுதும் பேரரசன் யாப்புக் கோரிக்கையைப் பலமாக எதிர்த்தான். எனவே, சமுதாயத்திலிருந்த எல்லா வகுப்பினரும் அரசியல் முறை பற்றிப் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். அவர்கள் அடைந்த ஏமாற்றமே அதிகாரத்தை எதிர்க்கும் சூனியவாதம் தோன்றியதற்குக் காரணம் எனலாம். 1865

சூனியவாதம்.

இரசியப் புரட்சிக்காரர்களைக் குறிக்கின்ற "சூனியவாதி" என்னும் பதத்தைத் தேஞ்ஞேவு என்பான் தான் எழுதிய "தந்தையரும் தனயரும்"[1] என்னும் நவீனத்தில் புகுத்தினான். அந்த நவீனத்தின் பிரதான கதாபாத்திரம் பசரேவாவான். 1860 தொடக்கம் பத்து ஆண்டுகளாக இளம் சந்ததியினரிடம் செல்வாக்கடைகின்ற புதியதொரு போக்கை இந்தப் பிரதான கதாபாத்திரத்திற் சித்திரித்துக் காட்டும் நோக்கம் ஆசிரியனுக்குண்டு. அக் கதாபாத்திரம் மேலேகூறப்படும் அம்சங்களைச் சித்திரிக்கின்றது. "இவன் எவ்வித அதிகாரத்துக்கும் தலை வணங்கான். பத்திசிரத்தையைத் தன்னுளடக்கிய எந்தக்கொள்கையையும் வெறும் நம்பிக்கையின் பேரில் அவன் ஏற்றுக்

[1] மொழிபெயர்த்தவர், சி. காணற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1860-70

கொள்ள மாட்டான். கலை, பாராளுமன்ற ஆட்சி முறைமை, நடுவரைக் கொண்டுள்ள வழக்கு விளக்கம் ஆகியவைகளைப் பற்றி விழல் பேச மறுப்பான் .... எனெனில், உண்ண உணவு பெறுவதே எப்பொழுதும் பெரும் பிரச்சினையாகவிருந்தது." "குடும்பத்திலும் சமுதாய வாழ்க்கையிலும் எங்களுடைய இப் போதய வாழ்க்கை முறையிலுள்ள எல்லா மரபுகளையும் முற் றுக அழிக்க வேண்டும் என்பதில் அவனுக்குப் பூரண நம்பி பிக்கையுண்டு". பசறேவு எல்லாவற்றையும் மறுப்பவனும் பயனில்லாக் கண்டனஞ் செய்பவனுமாகக் கருதப்பட்டான். நிலை யங்களைக் கட்டுதலும் அழிப்பதும் இன்றியமையாதவை என்று அவனுக்குச் சொன்னால், "கட்டுவது எங்கள் வேலையல்ல, முதலில் எல்லாவற்றையும் அழித்து நிலத்தைத் துப்பரவாக்க வேண்டியிருக்கின்றது" என அவன் சொல்வான். இங்ஙனம் துர்கெனிவினுடைய பாகுபாட்டில் வரையறைகள் இருந்தன. எனினும் அப்பாகுபாடு சூனியவாத தத்துவத்தின் அடிப்படை யான அம்சமொன்றின்மேற் கவனத்தைச் செலுத்துவதற்கு உதவியது. அதாவது, உணர்ச்சி, மரபு ஆகியவைகளிலிருந்து சூனியவாதம் முற்றுகப் பிரிந்து சென்றது. அவைகளே முன்னேற்றத்தைத் தடைசெய்தவையும் மனித இனத்தை அடிமைப்படுத்தியவையுமாகும் என்பதே. எனவே, இந்தச் சூனியவாதமானது பேக்கு என்டானின் தத்துவத்திற்கு முற்றிலும் முரணாக இருந்தது. இவ்வாதத்திலுல் பழை மைக்கும் புதுமைக்குமிடையில் நிவிர்த்தி செய்ய முடியாத பிளவொன்று எற்பட்டது. புதிய அடிப்படையிற் சமுதாயத்தை மாற்றியமைக்க வேண்டுமென்றது இந்தச் சூனியவாதம். தம் காலத்தில் வாழ்ந்தவர்கள் நம்பிக்கையின் பேரால் எற்றுப் பரிசுத்தமென்று கருதியவைக ளெல்லாவற்றையும் சூனிய வாதிகள் எற்காது தள்ளிவிட்டனர். இவர்கள் பகுத்தறிவைக் கொண்டே எதையும் ஆராயத் தொடங்கினர். "தந்தையர்" ஒப்புக்கொண்ட உண்மைகளை ஒதுக்கித் தள்ளினர். சூனிய வாதமானது முக்கியமாக அழிவுச் சத்தியென்பது வெளியா யிற்று. ஆனால், செனிவிச்சி என்பான் "என்ன செய்தல் வேண்டும்" எனும் நவீனத்தில் இந்தச் சூனியவாத இயக் கத்துக்கு ஆக்கச் சத்தியுமுண்டெனக் காட்டினான்.

(1) சூனிய வாதத்தின் முதற்கட்டம் : தத்துவத் தன்மை.

சூனியவாதத்தின் முதலாவது கட்டம் பெரும்பாலும் எல்லா வற்றையும் மறுக்கும் தத்துவமாகவே இருந்தது. மூடநம் பிக்கை, அதிகார வணக்கம் ஆகியவைகளால் எழுந்த தடை களைத் தகர்த்தெறிவதே இதன் நோக்கம். இந்த அளவில் அது 18 ஆம் நூற்றுண்டுத் தத்துவத்தின் வளர்ச்சியாகும்.

Digitized by Noolaham Foundation

ஆனால், இரண்டிற்கும் முக்கியமான ஒரு வேறுபாடிருந்தது. 1871–75
சூனியவாதம் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டது. அதுவே இவ்வேற்றுமையாகும். "தரைக்கீழ் இரசியா" என்னும் நூலின் ஆசிரியன் இசுத்தெப்பினியக்கு என்னும் பெயரையுடையவன். இவனும் ஒரு சூனியவாதியாவன். இந்த இயக்கத்தை விவரிக்கும்போது இவன் பின்வருமாறு கூறினன்: "ஒன்றையும் சார்ந்திராது நுண்ணறிவுக்குச் சுதந்திரமளிக்கவே இந்தப் போராட்டம் தொடங்கியுள்ளது.....சரியாகக் கூறுமிடத்து முழுத்தனியாண்மையே சூனியவாதத்தின் அடிப்படைத் தத்துவமாயிருந்தது. சமுதாயத்தினாலும் குடும்பவாழ்க்கையினாலும் மதத்தினாலும் தனிப்பட்டவர்களின்மீது திணிக்கப்பெற்றுள்ள கடமைகளை அவர்களின் சுதந்திரத்தின் பெயரால் இல்லாமற் செய்தலே சூனியவாதமென்க. தனிப்பட்டவர்களின் தனிவாழ்வையும் அந்தரங்க வாழ்வையும் பாதிப்பதும் ஒழுக்கத்தை யொட்டி எழுந்ததுமாகிய வல்லாண்மையை எதிர்த்து ஏற்பட்ட பிற்போக்கே இது. அழகை நயத்தலையும் கலையை இரசித்தலையும் இந்த இயக்கத்தினர் துறந்தனர். எனெனில், கலைக்கு உற்சாகமளிப்பது கலப்பற்ற பகுத்தறிவன்று என்பதே சூனியவாதிகளின் கொள்கை. "ஓவியன் இரவல் என்பானினும் பார்க்கச் சப்பாத்துச் செய்பவன் மேம்பட்டவனாவான். ஏனெனில், ஓவியன் ஆக்குகின்ற பொருள்களால் எவ்வித பயனுமில்லை; பின்னவனுக்குகின்ற பொருள்கள் பயனுடையன" எனவும் கூறப்பட்டது.[1] எது எங்ஙனமிருந்த போதும், அதிகாரத்தை யெதிர்க்கின்ற இந்தச் சூனியவாதம் ஒரு துறையில் நடைமுறையிற் பயனளித்தது. பெண்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுப்பதில் வெற்றி கண்டு அவர்களுக்கு உயர்தரக் கல்வி கற்பதற்கும் தொழில்கள் புரிதற்கும் இந்த இயக்கம் சுதந்திரம் கொடுத்தது.

(2) இரண்டாவது கட்டம்: பிரசார இயக்கம்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் (1860—1870) சூனியவாதமானது, தத்துவம், இலக்கியம் ஆகியவற்றிற்குரிய இயக்கமாக இல்லாது எல்லாவற்றையும் எதிர்த்துப் போர்புரியும் புரட்சி இயக்கமாக மாறியது. இந்த இயக்கத்தின் இப்புதிய கட்டம் 1871 வரையிற்றொடங்கியது. பேரரசன் அலச்சாந்தரைப் படுகொலை செய்ய ஒரு முயற்சி நடந்ததனால் அவன் பிற்போக்கு வாதிகளிடம் சரணடைந்தான். அரசாங்கம் மிதமிஞ்சிய வெறியுடன் பிற்போக்குச் செயல்களில் ஈடுபட்டது. அரசாங்கம் இங்ஙனம் கொடூரமாக நடந்தமை புரட்சிக்கு வித்திடுவதாயிற்று. எனினும் புரட்சி இயக்கத்தைத் தூண்டிய

[1] Stepniak, Underground Russia (Eng. trans. 1883), 4, 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1871-75 ரம் வெளிநாட்டிலிருந்தே கிடைத்தது. தனிப்பட்ட வர்களின் சுதந்திரத்துக்கென எழுந்த வேணவா பிற நாடுகளின் செல்வாக்கின் விளைவால் ஒன்றுசேர்ந்து சமுதாய அரசியற் சுதந்திரமென்னும் பெரும் அவாவாக உருப்பெற்றது. சமூகக் குடியாட்சியொன்றை நிறுவுதற்கு முயற்சித்த[1] பாரிசுச் சமிதியின் எடுத்துக்காட்டினால் இரசியாவில் கல்விகற்ற மக்களின் உளத்தில் எழுந்த தெளிவில்லாத எண்ணங்கள் இப் பொழுது தெளிவான உருவைப் பெற்றன. இரசிய உழவோரின் கேவலமான நிலையைப் பற்றி இரக்கம் கொண்டுள்ளவர்களின் உள்ளங்களைப் பாரிசில் நடந்த நிகழ்ச்சி நெருப்பிற்கு நெய் சொரிவது போலத் தூண்டிவிட்டது. இரசிய உழவர்களின் வரிப்பளுவோ பெரும்பாலும் அவர்களின் தொழில் வருமானத்துக்கு மேலாகவே இருந்தது. சூனியவாதிகள் கூறியதுபோல் "உழவோர் பசியாற் றளர்ந்து உழைப்பால் உடைந்து, தனியுடைமைகள் உள்ள வகுப்பாரின் நிரந்தர அடிமைகளாகி, கணப்பொழுதேனும் ஓய்வின்றித் தொழில்புரிந்து, மீட்சியில் நம்பிக்கை இழந்திருக்கின்றனர்." சூரிக்கில் தலைமையலுவலகத்தைக் கொண்ட "சருவதேசமென்னும்" சமூகவுடைமைக் கழகமொன்று இருந்தது. இரசிய அரசியலெண்ணங்கள் உருவாவதற்கு இதுவும் உதவியாக இருந்தது. இரசியாவில் பல பாகங்களிலுமிருந்த ஆண்களும் பெண்களும் பெருந்தொகையாக இதை நாடிச் சென்றனர். இவர்கள் சூரிக்கை விட்டுச் செல்ல வேண்டுமென 1873 இல் இரசியப் பேரரசு அரசாங்கம் கட்டளை பிறப்பித்தது. தாயகம் திரும்பிய இவர்கள் தங்கள் ஊராரிடம் பாட்டாளியின் விடுதலை யென்னும் புதியதோர் உபதேசத்தைப் பரப்பத் தொடங்கினர். இங்ஙனம் அரசியற் கருத்துக்கள் பரவிய தன் விளைவால் இரண்டு விதமான அபிப்பிராயங்கள் வெளிப்பட்டன. ஒன்று, சமூகவுடைமை; மற்றது, ஆட்சியறு வாதம். இவ்விருவேறு சமூகவுடைமைவாதிகளின் பிரதிநிதியாக இருந்தான். சமாதானமாக உழவோரிடம் பிரசாரம் செய்வதே இவனுடைய திட்டம். சுருங்கக் கூறின், அத்திட்டம் பொதுமக்களுடைய அரசியலறிவை வளர்த்தலென்க. மசினியின்[2] சீடர்களைப் போல சமூகவுடைமை வாதிகளும் "மக்களிடம்" சென்று அவர்களுடைய வாழ்வில் பங்குபற்ற வேண்டும். ஆனால், அவர்கள் மக்களுக்குப் புகட்டவேண்டிய கருத்துக்கள், சமூகப் பொருளாதார சுதந்திரக் கருத்துக்களேயல்லாது நாட்டினக் கருத்துக்களல்ல. இது ஒருபுறமிருக்க, ஆட்சியறவுவாதிகள் அழிவின்

---

[1] VIII ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

[2] பக்கம் 218.

Digitized by Noolaham Foundation

மேதையாக இருந்த பக்கூனியைப் பின்பற்றினர். உடனடி 1871-75
யாக உழவர்களைப் புரட்சி செய்யத் தூண்டுவதே ஆட்சியறவு வாதிகளின் பூட்கை. தொடக்கத்தில் சமூகவுடைமைக் கட்சியின் நிதானமான அறிவுரைகளே பரவியிருந்தன. இரசியாவிலுள்ள இளம் ஆண்களும் பெண்களும் மக்களின் நலனுக்காகத் தங்கள் வாழ்நாளைக் கழிக்கத் தயாராக இருந்தனர். சமூக வுடமைக் கருத்துக்களைச் சமாதான முறையில் மக்களிடம் பரவச் செய்யும் இந்த இயக்கம் முக்கியமாக 1872 தொடக்கம் 1875 வரை நடந்தது. ஆனால், தொடக்கத்திலிருந்தே இந்தப் பிர சாரத்துக்கு மிகப் பெரிய தடைகளிருந்தன. பெற்றேஷி ராத்து நகரிலுள்ள தொழிலாளர் மத்தியிலே இளவரசன் குறைபோற்கின் என்பான் இரகசியமாகச் சொற்பொழிவாற்றி னான். எனையோர் கிராமங்களிலும் தொழிற்சாலைகளிலும் இருந்து பிரசாரஞ் செய்தனர். எனினும், இந்தப் பிரசாரத்தைப் பொலி சுக்குத் தெரியாமல் மறைமுகமாக வைத்திருப்பது இயலாத தொன்றாகும். பொலிசு பெருந்தொகையான இளர்ச்சியாளர் களைப் பிடித்து அவர்கள்மீது வழக்குத் தொடர்ந்தது. வழக் கிலிருந்து அவர்கள் விடுதலை பெற்றபோது வடக்குமாகாண எல்லைக்குள் வாழவேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. யாதோ காரணத்தைத் தலைக்கீடாகக் கொண்டு 1863 இற்கும் 1874 இற்குமிடையில் ஏறத்தாழ 1,50,000 ஆட்கள் சைபீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர்.

(3) மூன்றும் கட்டம் புரட்சிகரமான சூனியவாதம்.

பிரசார இயக்கத்தின் வீழ்ச்சி, புரட்சிவாதக் கட்சியின் பொது உறுப்பினரின் மனத்திற் பெரும் சோர்வையுண்டாக்கியது. ஆர்வம் மிக்க இளைஞர் சந்ததியொன்று ஆர்வமிழந்து செயலற்ற நிலையை எய்தியது. அவர்கள் செய்த தியாகத்துடன் அவர்களடைந்த குறைவான வெற்றிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவ் வெற்றிகள் மிகவும் அற்பமானவையாகவே தோன்றின. இந் தச் சூழ்நிலையில் சூனியவாதத்தின் அரசியற் பயங்கர முறை யெனப் பிரசித்திபெற்ற மூன்றும் கட்டம் தொடங்கியது. சொற் களின் ஆற்றலை உயர்ந்த முறையிற் பரிசோதிப்பதே பிரசார இயக்கமாகக் கருதப்பட்டது. பேச்சில் ஈடுபடுவதை விட்டு அதற் குப் பதிலாகச் செயலில் ஈடுபட வேண்டிய நிலை இப்போது ஏற்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன்னர் "மக்களின் மத்தி யிலே" என்ற குரல் எங்ஙனம் பொதுவாகக் கேட்டதோ, அங் ஙனமே "செயல் புரிவோர் வாரீர்" என்ற குரல் இப்பொழுது பொதுவாகக் கேட்கின்றது.[1] முள்ளை முள்ளால் எடுத்தல் வேண்டும். சீர்திருத்தத்தை ஏற்படுத்த அமைதியாகக் இளர்ச்சி

[1] Stepniak, op. cit. 33.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1876-78 செய்யும் முறை வலியற்றதாகத் தோன்றியமையால் அதைக் கைவிட்டு அதற்குப் பதிலாக ஆயுதங்களைக் கொண்டு எதிர்க்கத் தொடங்கினர். 1876 தொடக்கம் 1878 வரை தெருத்தெருவாகக் கலாங்கள் பல நடந்தன. ஆனால், மீண்டும் மீண்டும் தோல்வியே உண்டாயிற்று. இரசியாவின் மொத்தச் சனத்தொகையின் பத்தில் ஒன்பது பங்கு நாட்டுப் புறங்களில் வாழ்வதனால பாரிசிலேற்பட்டதுபோன்ற புரட்சி இங்கு நேரத்தக்கதன்று என்பதை இந்தத் தோல்விகள் புலப்படுத்தின. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலே படைகளிருந்தமையால் மக்களின் கலகங்களைச் சுலபமாக அடக்கக் கூடியதாக இருந்தது. தங்களுடைய முயற்சிகள் பலனளிக்காவென்பதைப் புரட்சிக் கட்சியினரே உணர்ந்தனர். பாலனம் தளர்ச்சியின்றித் தொடர்ந்து மிகுந்த கண்டிப்போடு நடைபெற்றபடியாற் புரட்சிவாதிகளினுளத்தில் இருந்த வெறுப்பும் எதிர்ப்பும் பெரிதும் வளர்ந்தன. அரசியல் சம்பந்தமான வழக்குகளைச் சாதாரண நீதிமன்றுகளில் விளங்கினர்கள். அற்ப குற்றங்களுக்கெல்லாம் கொடூரமான தண்டனைகள் விதிக்கப்பட்டன. பல்கலைக்கழகங்களிலிருந்து மாணவர்கள் ஒதுக்கப்பட்டனர். இதனாலே அரசாங்க சேவையில் உயர்ந்த பதவிகளைப் பெறுவதிலிருந்து அவர்கள் தடுக்கப்பட்டனர். மாவட்ட மன்றுகளும் (செமிசுவோ) சட்ட மன்றுகளும் கடுமையான கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. மில், இசுப்பென்சர், இலெக்கி ஆகியவர்களின் நூல்கள் இரசியாவுக்குள் கொண்டுவரப்படுவதைத் தடுத்தனர். அச்சுலகைப் பாதிக்கும் வழக்குகளெல்லாம் நீதிநடுவர்களின்றியே விளங்கப்பட்டன. பழைய அரசாங்கத்தின் ஊழல்கள் யாவும் மீண்டும் தோன்றின. கைக்கூலி, ஏனைய ஊழல்கள் யாவும் பெருவழக்காகின. சுருங்கச் சொன்னால் பொதுமக்களுடைய கருத்துடன் தொடர்பு வைத்து அக்கருத்து இன்னதென்றறியாமல் இருந்த அரசாங்கம் இரசியாவிலுள்ள புத்திக்கூர்மையுள்ளவர்களை எதிர்த்துக்கொண்டது. ஆளும்வருக்கத்தினர் வரவரப் பிற்போக்குவாதிகளாயினர். கல்விகற்ற வகுப்பினர் புரட்சிவாதிகளாயினர். இந்தத் தீவிரவாதிகளைச் சமன் செய்து நடுவழியை வகுக்கக்கூடிய செல்வாக்கு நிறைந்த சத்திகள் அப்போது இரசியாவில் இல்லை. அடக்குமுறையின் விளைவாற் சூனியவாதிகள் பிரசாரவாதத்தைக் கைவிட்டுப் புரட்சிவாதத்தைக் கைக்கொண்டனர். சமாதான முறைகளைக் கைவிட்ட சூனியவாதமானது மக்களுடைய அபிப்பிராயத்தைச் சார்ந்து நிற்காது இரகசிய சதிக்கூட்டமாக விருத்தியடைந்தது. இவர்கள் படுகொலை எனும் பயங்கர ஆயுதத்தைக் கையாண்டனர். இவ்விதமான தாக்குதல் மேல்நாட்டுக் கொள்கைகளுக்கு விரோதமானது. ஆனால், " ஐரோப்பாவிலேற்பட்ட கலாம்

Digitized by Noolaham Foundation

போன்ற கலாம் இரசியாவில் நேரத்தக்கதன்று" என்பதைத் தம் செய்கைக்கு ஒரு தக்க காரணமெனக் கொண்டனர். திட்டமிடப்பட்ட அநீதியைக் கொண்டதும் "காடுபோலடர்ந்த ஈட்டிகளுக்குப்"[1] பின்னல் பதுங்கிக் கொண்டிருப்பதுமான அரசாங்கத்திற்கெதிராக எதையும் செய்யலாமெனச் சூனியவாதிகள் கூறினர். தொடக்கத்திற் பயங்கரச் செயல்கள் இடையிடையே நிகழ்ந்தன. அத்துடன் பிரதானமாக ஒற்றர்களையெதிர்த்தே செய்யப்பட்டன. திட்டமிடப்பட்ட பயங்கரவாட்சிக்கு வெரு சசுலிக்கு என்னும் பெண்ணின் செயலே காரணமாயிற்று. சட்டத்துக்கு விரோதமாக அரசியற் கைதியொருவனுக்குச் சவுக்கடி கொடுத்ததற்குப் பழிவாங்குவதற்காக இப்பெண் தளபதி திறெப்போவின் மேல் சுழற்றுப்பாக்கியால் ஒரு முறை சுட்டாள் (பெப்புருவரி 1878). வழக்கு விளக்கத்தின்போது நீதிநடுவர்கள் இப்பெண்ணை விடுதலை செய்தனர். அவளை மீண்டும் கைது செய்யப் பொலிசு முயற்சித்தபோது அங்கு கூடியிருந்த மக்கள் அவளைத் தப்பச் செய்தனர். அதன்பின்னர், அப்பெண் இரசிய நாட்டெல்லையைக் கடந்து அப்பாலே தப்பி ஓடிவிட்டாள். ஐரோப்பா எங்கணும் இந்த நிகழ்ச்சி பெரும் பரபரப்பையுண்டாக்கியது. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியான நிலை மூன்றுண்டுகளாக நிலைத்தது. இரசியப் பேரரசனின் படுகொலையே இந்தப் பயங்கரவாதத்தின் உச்சமாயிற்று. இந்தப் பயங்கரவாட்சி பற்றிப் பொதுமக்களுக்கு அலச்சாந்தர் வேண்டுகோள் விடுத்தான். ஆனல், அவனுடைய வேண்டுகோளுக்குச் செமிசுவோ என்னும் பெரும் பிரிவுக் கழகம் மறுமொழி கூறும்போது, "பொதுமக்கள் தங்களுடைய ஆயுதங்களான பேச்சுச் சுதந்திரம், அச்சுலகுச் சுதந்திரம், அபிப்பிராயச் சுதந்திரம், கல்விச் சுதந்திரம் ஆகியவைகளைப் பெற்றிருந்தாற்றான் அழிவுக் கருத்துக்களை எதிர்த்துப் போராட முடியும்" எனக் கூறிற்று. இதுவே உண்மையான பரிகாரம். ஆனல், இரண்டாம் அலச்சாந்தரும், அவனுக்குப் பின் அரசெய்திய மூன்றும் அலச்சாந்தரும் தங்களுடைய அரச அதிகாரத்தை நாட்டவருடன் பகிர்ந்து கொள்ள இணங்கவில்லை.

1878-81

பயங்கரவாட்சி.

"நிலமும் சுதந்திரமும்" என்ற பெயருள்ள கழகமொன்றே புரட்சி இயக்கத்தைக் கையேற்று நடத்தியது. இதன் கிளைகள் இரசியாவின் பல்வேறு பாகங்களிலுமிருந்தன. ஆனல், இரசியப் புரட்சிவாதிகளைப் பிரித்து நின்ற பழைய வேற்றுமைகள் இன்னமும் நீடித்திருந்தன. புரட்சிவாதிகளின் ஒரு பகுதி "கரும்பிரிவு" எனப்படும். இப்பிரிவினைச் சேர்ந்தவர்கள் சமா

II ஆம் அலச்சாந்தர் படுகொலை செய்யப்படல் (1881).

[1] Stepniak, op. cit. 41, 271.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1881 தான முறையினையுடைய சமூகக் குடியாட்சிவாதிகளாயிருந்தனர். "மக்களின் சித்தம்" எனப்படும் மற்றப் பிரிவினர் பலாற்கார முறையை நம்பியிருந்தனர். சசுலிக்கு விடுதலை செய்யப்பெற்ற சில தினங்களுக்குப் பின்னர் இரகசியப் பொலிசின் தலைவன் — இந்தப் பொலிசுப் பகுதியே பேரரசனுடைய மூன்றும் பிரிவு — பட்டப் பகலிற் பெற்ரேகிராத்து வீதியிற் கொல்லப்பட்டான். அவனைக் கொன்றவன் தப்பியோடிவிட்டான். இரண்டாம் அலச்சாந்தரைக் கொல்வதற்கு நான்கு முறை முயற்சி செய்யப்பட்டது. முதலாவது முயற்சி முடிந்ததும் இரசியா படையாட்சி நடக்கும் ஆறு பிரிவாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவும் ஒவ்வோர் ஆள்பதியின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது. இவனுடைய அதிகாரம் முதன்மையானதாகும். மரணதண்டனை விதிக்கவும் அதனை நீக்கவும் இவனுக்கு அதிகாரமுண்டு. புரட்சிவாதிகளை மீண்டுந் தங்கள் முயற்சிகளில் ஈடுபடத் தூண்டியதே படையாட்சி பிரகடனப் படுத்தப்பட்டதன் பலனுகும். சூனியவாதிகளின் தொகை குறைவாகவே இருந்தது. எனினும், அவர்கள் சத்தி மிக்கவர்கள்; பயமற்றவர்கள். தங்களுடைய இலக்கில் மிகுந்த பற்றுக் கொண்டவர்கள். இக் காரணங்களினுல் அவர்களை வெல்வது மிகவும் கடினம். பேச்சுச் சுதந்திரம், அச்சுலகுச் சுதந்திரம், பிரதிநிதியாட்சி, எல்லாவற்றிற்கும் மேலாக, நீதி நியாயமின்றி ஒருவரைப் பிடித்து நாடுகடத்துதலை ஒழித்தல் ஆகிய இவ்வடிப்படை அரசியலுரிமைகளை மக்களுக்கு வழங்க மறுத்துச் சமுதாயத்தினைப் பகைத்த இரசிய அரசாங்கத்தின் தனி நிலையே, அவர்களுடைய வெற்றியின் இரகசியமாகும். கொடுஞ் செயல்களை ஏற்றுக்கொள்வதற்குப் பொதுமக்கள் இணங்காதிருந்த போதும் புரட்சிவாதத் திட்டத்தின் குறிக்கோளுடன் அனுதாபம் உடையராவர். சூனியவாதிகளுடைய தேவைக்குரிய நிதிகளுக்கு இரகசியமாக எல்லா வகுப்பு மக்களும் பணமுதவினர். இரண்டாம் அலச்சாந்தரைக் கொலை செய்வதற்காக அவன் வசித்த மாரிகால மாளிகையை வெடிவைத்துத் தவிடு பொடியாக்க முயற்சித்தனர். அதன் பின்னர், புதிய உபாயங்களைக் கையாண்டனர். சூனியவாதத்தைத் தடுப்பதில் அடக்குமுறை தோல்வியடைந்தது. எனவே, அலச்சாந்தர் சூனியவாதத்தை வலியிழக்கச் செய்வதற்கு இணக்கப் பூட்கையைப் பயன்படுத்த முயற்சித்தான். சருவாதிகாரிக்குரிய அதிகாரங்கள் உலோறிசு மெலிக்கோவு என்பானுக்கு வழங்கப்பட்டன. இவன் தனுடைய முதலாவது நடவடிக்கையின் திறமையால் பாரதூரமான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமென்ற பொய்க் கருத்தைப் பொதுமக்களிடை பரப்பினன். இதன் பயனுகப்

Digitized by Noolaham Foundation

பொதுமக்கள் அமைதியாயிருந்தனர். புரட்சிவாதிகள் கூடத் தங்களுடைய திட்டங்களைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தார்கள். ஆனால், பொதுமக்களிடை உண்டாய பொய்த்தோற்றம் நீடித்து நிற்கவில்லை. அரசாங்கத்தில் உண்மையான அடிப்படை மாற்ற மெதையும் கொண்டுவரும் நோக்கம் உலோறிசு மெலிக்கோவுக்கு இல்லையென்பதை மக்கள் கண்டு கொண்டனர். எனினும், பொது ஆணைக்குழு ஒன்றை நிறுவுவதற்குப் பேரரசனின் இசைவை இவன் ஒருவாறு பெற்றுக்கொண்டான். இந்தச் சபை ஓரளவு பிரதிநிதித்துவ நிறுவகமாக இருந்தது. இந்தச் சபையிலிருந்த பிரதிநிதிகளில் ஒரு தொகையினர் செமிசுவோக்களினாலும் பிரதம நகரங்களிலுள்ளோராலும் தெரிந்தெடுக்கப் படுவர். இந்த மட்டமான சலுகைகளை மக்கள் அங்கீகரிப்பார்களோ என்பது ஐயத்திற்குரியது. ஏனெனில், ஆலோசனை கூறுவதொன்றே இக்குழுவின் கடமையாயிற்று. ஆனால் இத் திட்டத்துக்குச் சம்மதம் கொடுத்த அன்றே அலச்சாந்தர் வெடிகுண்டினால் கொல்லப்பட்ட காரணத்தால் இதனைச் சோதனை செய்து பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை (1881). உடனே புரட்சிக்கட்சி ஒரு வெளிப்பகர்ப்பை வெளியிட்டது. பின்வரும் நிபந்தனைகளின் பேரில் தாங்கள் பலாற்காரச் செயலில் ஈடுபடவில்லையென அந்த வெளிப்பகர்ப்பிற் குறிக்கப்பட்டிருந்தது. முதலாவது நிபந்தனை, சருவசன வாக்கு முறையை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்படும் நாட்டின மன்றம் ஒன்று நிறுவவேண்டுமென்பதாகும். இரண்டாவது நிபந்தனை, செய்தித்தாள் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், பொதுக்கூட்டம் கூட உரிமை ஆகியவையாகும். "இந்த வழிவகைகளாலேயே இரசியா அமைதியானதும் ஒழுங்கானதுமான அபிவிருத்தியடைய முடியும்" எனவும் அந்த வெளிப்பகர்ப்பு பிரகடனஞ் செய்தது.[1] 1881-94.

இரண்டாம் அலச்சாந்தருக்குப் பின்னர் அரசுகட்டிலேறிய மூன்றும் அலச்சாந்தரின் ஆட்சி அபசகுனத்துடன் தொடங்கியதெனப் பிரான்சிய வரலாற்று ஆசிரியனை இரான்போ அக்காலத்திற் குறிப்பிட்டுள்ளான். அரை நூற்றாண்டாக நடந்த இவனுடைய ஆட்சி தொடங்கும்போது ஒரு பெண் பகிரங்கமாகத் தூக்குமேடையிலேற்றப்பட்டாள். தொடக்கத்திலிருந்தே மூன்றும் அலச்சாந்தர் உறுதியான பிற்போக்குப் பூட்கையைப் பின்பற்றி நடந்தான். பல வகைகளில் இவன் முதலாம் நிக்கலசை நிகர்த்தவன். முதலாம் நிக்கலசினுடைய காலத் III ஆம் அலச்சாந்தர் (1881-94).

1. இசுதெப்பினுக்கின் நூலின் பிற்சேர்க்கையில் (287-94) இந்த வெளிப்பகர்ப்பு அச்சிடப் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1886-94. திருந்த தன்னெண்ணப்படியான மரபிற்கு இவன் புத்துயிரளித்தான். இரண்டாம் அலச்சாந்தர் அரசெய்தியபோது விடுத்த பேரரசு வெளிப்பகர்ப்பில் இவனுடைய அடிப்படைப் பூட்கை தொனித்தது. இந்த வெளிப்பகர்ப்பு அறிவித்தவை பின்வருமாறு : "அரசாங்கத்தின் ஆட்சிப்பீடத்தில் உறுதியாக அமர்ந்து கொள்ளும்படி ஆண்டவன் எங்களைப் பணிக்கின்றான். . . . . அங்ஙனம் அமர்ந்திருக்கும்போது தனியாட்சி அதிகாரத்தினுடைய சிறப்பிலும் பலத்திலும் நம்பிக்கையுடையவராக வேண்டும். மக்களின் நன்மைக்காக எல்லாவிதத்திலும் தனியாட்சியைப் பலப்படுத்திப் பாதுகாக்கவேண்டிய பணி எங்களைச் சார்ந்திருக்கின்றது". பொது ஆணைக்குழு ஒன்று பற்றி மெலிக்கோபு என்பான் கொண்டிருந்த திட்டம் பலனளிக்கவில்லை. கல்வி கற்ற இரசிய மக்களுடைய எண்ணத்திற்கு எதிராக நாலா பக்கங்களிலும் அரசாங்கம் விடாப்பிடியாக நடவடிக்கை எடுத்தது. அச்சமயம் இரசியாவின் நாசசத்தி மனித வடிவமெடுத்தாற் போலப் பொலடொனுசவு என்பான் தோன்றினான். இவன் இரசிய திருச்சபையின் செயலாட்சியாளன். மூன்றாம் அலச்சாந்தர், இரண்டாம் நிக்கலசு ஆகியவர்களின். கல்விப் பொறுப்பு இவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமையால் அவர்களிருவரிடத்திலும் இவனுக்கு மிதமிஞ்சிய செல்வாக்கு இருந்தது. அரசியற் கருத்துப்பற்றி இவன் எழுதிய குறிப்புக்களில் தன்னுள்ளத்தைத் திறந்து பேசி இருக்கிறான். அக்குறிப்புக்களில் மேல்நாட்டு நிறுவகங்கள் எல்லாவற்றையும் கண்டனஞ் செய்துள்ளான். பிற்போக்குவாதத்துக்குத் தத்துவ அடிப்படையொன்று கோலுதற்குக்கூட இவன் முயற்சித்தான். பாப்பு முறைப்படி நடக்கும் ஆட்சியைப்பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் போது, "எங்களுடைய காலத்தில் மேலோங்கி நிற்கின்ற மிகப் பெரிய அரசியல் எமாற்றம் இது" எனவும் கூறினான். பாராளுமன்றத்துக்கு வரைவிலக்கணம் சொல்லும்போது, "பாராளுமன்ற உறுப்பினரின் சொந்த அவாவைத் திருத்தி செய்வதற்கும் அவர்களின் வீண் பெருமைக்கும் சொந்த நன்மைக்கும் பயன்படும் நிறுவகம்" எனக் குறிப்பிட்டான். "உண்மையில் மக்களின் எமாற்றத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டு" எனவும் "குடியாட்சி வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ள சிக்கலும் பளுவும் நிறைந்த ஆட்சிமுறை" எனவும் இவன் குறிப்பிட்டான்.[1] மேல்நாட்டு அரசியல் நிறுவகங்களில் தொண்டாற்றிய அனுபவமுள்ள எவரும் அவை சிறந்தவையெனத் தீர்ப்புக்கூறத் துணிய மாட்டார். அத்தகைய பரிபூரண நிலையை அவை

---

1. Pobedonostev, Reflections (Eng. trans. 1898), 34, 35, 43, 45.

Digitized by Noolaham Foundation

பெற்றிருக்கவில்லை. எனினும், சட்டத்தின் தூய்மைக்கும் அச் சட்டத்தின் தூய்மையினின்று ஊற்றெடுக்கும் ஒழுங்கான சுதந்திரத்துக்கும் இந்தக் குடியாட்சிக் கழகங்கள் உத்தரவாதமளிக்கின்றன. ஒரு நிறுவகத்தால் ஏற்படும் நன்மைகளைக் கொண்டே அந்த நிறுவகத்தினை நாம் மதிப்பிடல் வேண்டும். பொவடொனொசுத்தெவ்வின் முறைமையை இரசியப் பொதுமக்கள் ஏற்றுக் கொள்ளுவாகள் போலத் தெரியவில்லை. பத்திரிகைகள் மிகவும் கடுமையாக அதிகாரிகளால் அடக்கப்பட்டன. பல பத்திரிகைகள் நேரடியாகத் தடைசெய்யப்பட்டன; அல்லது மறைமுகமாக வெளியீட்டை ஒத்திவைக்கும்படி பலவந்தஞ் செய்யப்பட்டன.[1] அதிகாரிகள் பல்கலைக்கழகங்களையும் வெறுத்தனர். அதனால் பல்கலைக்கழகத்து உள் அலுவல்கள் சுதந்திரமாகப் பாலனஞ் செய்யும் உரிமையும் மறுக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், மாணவர்களைப் பல்கலைக்கழகத்தில் அனுமதிப்பதும் மாணவர்கள் கழகங்களை அமைக்கும் உரிமையும் கட்டுப்படுத்தப்பட்டன. இங்ஙனம் கல்வி புகட்டுவதற்குக் கட்டுப்பாடு விதிக்கும் வழக்கம் ஆரம்ப பாடசாலை தொடக்கம் உயர்தரப் பாடசாலை வரையும் இருந்தது. பாடசாலை ஆசிரியர்கள் பலர் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். இவைகள் எல்லாவற்றிலும் பார்க்கப் பெருங் கேடு விளைவிக்கக்கூடியது யாதெனில், நீதிமன்றங்கள் மீதும் "செமிசுவோ" எனப்படும் மாவட்டக் கழகங்கள் மீதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகும். ஏனெனில் இச்செயல் இரண்டாவது அலச்சாந்தர் செய்த மிக முக்கியமான சீர்திருத்தங்களை அடியோடு அழித்ததனாலென்க. 1886-89.

நிலத் தலைவர்கள்.

ஊழியரை விடுதலை செய்தமை 19 ஆம் நூற்றாண்டு இரசிய வரலாற்றில் மிகப்பெரியதொரு நிகழ்ச்சியென்பதை முன்னரே விளக்கியுள்ளோம். இந்த விடுதலை ஊழியருக்குச் சட்டச் சார்பான நன்மையையே கூடுதலாக அளித்தது. பொருளாதார நன்மையையளிக்கவில்லை. எடுத்துக்காட்டாக இரசிய உழவோர் வரிப்பளுவைச் சுமந்துநின்றனர் என்பதை நாம் முன்னரேயே கண்டுள்ளோம். வரி கொடுக்கக்கூடிய அளவுக்குப் பணம் உழைப்பதே[2] இரசிய உழவோர் பெரும்பாலாருடைய வாழ்க்கையின் நோக்கமாகும். குறைகளிருந்த போதிலும் ஊழியரின் விடுதலைக் கற்பனை அளப்பரிய பலனை அளித்தது. அதாவது உழவோரை நிலத்தின் சொந்தக்காரர்களான பெரும் பண்ணை

---

[1] உதாரணமாக, விளம்பரங்களை வெளியிடவும் தெருக்களிற் பத்திரிகைகளை விற்கவும் அனுமதி கொடுக்கப்படவில்லை.

[2] P. Vinogradoff in "Lectures on the History of the Nineteenth Century" (1902), 259.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1886-89. யாளர்கள் ஆட்சிப் பிடியிலிருந்து விடுதலை பெறச் செய்தமை யென்க. அந்தந்த ஊரிலுள்ள நிலக்கிழார்களின் மானிய முறை அதிகாரத்தை இந்த விடுதலைக் கற்பனை தகர்த்தெறிந் தது. அடிமை வாழ்விலிருந்து சுதந்திரத்தை நோக்கிச் சென்ற அபிவிருத்திப் போக்கை மாற்ற இப்போது முயற்சி செய்யப் பட்டது. முறைகேடான நிலமானிய முறையை மீண்டும் நிறுவு தற்கும் சட்டபூர்வமான அடிமை நிலைக்கு உழவோரை மீண்டும் கொணர்ந்து கீழ்நிலைப்படுத்தவும் முயற்சிகள் நடைபெற்றன. நாட்டு மக்களைப் பொலிசாரின் கட்டுப்பாட்டு முறைமையில் வைப்பதன் மூலம் அடிமையாக்கினர். தங்கள் தோட்டங்களி லிருக்கும் தொழிலாளர்மீதும் நிலச் சொந்தக்காரரான உழ வோர்மீதும் நிலக்கிழார்கள் இந்தக் கட்டுப்பாட்டு முறையைச் செலுத்தினர். இதற்கு 1886 ஆம் ஆண்டில் முதலாவது நட வடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி கூலிக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளன் ஒருவன் தன் ஒப்பந்தத்தை மீறினால் அது பாதகமான குற்றமாக்கப்பட்டது. இதற்கு மூன்று ஆண்டு களுக்குப் பின்னர் நீதிமன்றத்திலும் அடிப்படையான மாற்ற மொன்று செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட நீதிபதிகள் (சமாதான நீதிபதிகள்) இருந்த இடத்தில் நிலத்தலைவர்கள் என்னும் அலுவலாளரை அரசாங்கம் நியமனஞ் செய்தது. இந்நிறுவகம் பல குறைபாடுகளுடையதாயிருந்தது. இந்தச் சமாதான நீதிபதிகளைச் செமிசுவோ எனப்படும் மாவட்டக் கழகங்கள் தெரிவு செய்தன. இந்தச் சமாதான நீதிபதிகள் கடமையில் தங்கள் திறமையையும் தகுதியையும் நன்கு காட்டி னர். உள்ளூர்ப் பண்ணையாளர் வகுப்பிலிருந்து நிலத்தலைவர் களை அவ்வப்பகுதி ஆள்பதி தெரிவு செய்தான். எனவே இந்த நிலத் தலைவர்கள் மைய அரசாங்க அதிகாரத்தின் கருவிகளாகக் கடமையாற்றினர். அதுமட்டுமல்லாமல் நீதிமுறைக் கடமையும் பாலனத்திற்குரிய கடமையும் இவர்களுக்கு வழங் கப்பெற்றிருந்தன. நிருவாகி ஒருவன் தன்னுடைய செயலுக்குத் தானே நீதிபதியாக இருக்கக்கூடாது என்கின்ற சீரிய தத்து வத்திற்கு முரணாகவே இவ்விரு கடமைகளும் வழங்கப்பட்டிருந் தன. இந்த நிலத்தலைவர்கள் பெரும்பாலும் சட்டப்பயிற்சியுடைய வராக இருக்கவில்லை. சட்ட நடவடிக்கைபற்றிக்கூட இவர்க ளுக்கு அறிவிருக்கவில்லை. எனவே சமாதான நீதிபதிகளிலும் பார்க்க இவர்கள் திறமையுடையோராகவில்லை. அலச்சாந்தரின் சீர்திருத்தங்களினால் ஏற்பட்ட "சட்டமுறையாட்சி" திடீரென்று முடிவடைந்தது. பாலனத்திற்குரிய உத்தியோகத்தர்கள் என்ற முறையில் நிலத்தலைவர்களுக்குத் தம்மெண்ணப்படி வழங் கும் அதிகாரங்கள் மிகுந்திருந்தன. இவர்கள் நடைமுறையில்

Digitized by Noolaham Foundation

பெரும்பாலும் சருவாதிகாரிகளாகவே இருந்தனர். "உழவோரை வளர்க்கும் செவிலியர்" என்ற முறையில் இவர்களுக்கு உழவோரைப் பற்றிய எல்லாவற்றையும் கட்டுப்பாடு செய்யுமுரிமை இருந்தது. அவையாவன: சொந்தமான பொருள்களை விற்றல், சமுதாயத்திற்குரிய அலுவலாளரைத் தெரிவு செய்தல், சுகாதார நடவடிக்கை, ஏழைகளுக்கு உதவி அளித்தல் என்க. இவர்களுடைய அதிகாரம் ஏறக்குறைய எல்லையற்றிருந்தது. இதனைப் பலப்பிக்க மேலுமோர் அதிகாரம் இருந்தது. அதாவது, நீதி விசாரணையின்றி எவரையும் மறியலில் வைப்பதற்குரிய அதிகாரமாகும். "எங்களிடம் இப்பொழுது நீதிபதிகளில்லை. கட்டளையிடும் அதிகாரிகளே இருக்கின்றார்கள்," என ஒரு உழவன் கூறினான். "இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இரசிய உழவோருக்கு ஏற்படுத்தக் கூடியதுபோன்ற அகௌரவம் வேறு எங்குமில்லை" என இரசிய நீதிபதி ஒருவர் குறிப்பிட்டார். இந்த நிலத்தலைவர்களைப்போல வேறு எந்த அலுவலாளரும் மக்களின் அதிகமான வெறுப்பைப் பெற்றிருக்கவில்லை. தங்களுடைய அதிகாரத்தைப் பிழையான முறையில் உபயோகித்தமையே இதற்குக் காரணமாகும். இதுபற்றிப் பேராசிரியனை விஞ்சுகிரதேவு பின்வருமாறு எழுதியுள்ளான்: "இந்த நிலத்தலைவர்கள் நீதிவழங்கும் அதிகாரத்தையும் பொலிசு அதிகாரத்தையும் எந்த உளப்பான்மையுடன் செலுத்தினரென்பதைச் சில செய்திகளிலிருந்து நாம் அறியலாம். 1892 ஆம் ஆண்டில் கொடிய பஞ்சமொன்று ஏற்பட்டது. அப்பொழுது நிசினி என்னும் மாகாணத்திலுள்ள நிலத்தலைவர்கள் சிலர் பஞ்ச உதவிப் பூட்கையைத் திட்டமிட்டு எதிர்த்தனர். மக்களைக் குறைந்த சம்பளத்தில் வேலைக்கு வைத்திருப்பதற்காக அவர்கள் பசியால் வாடியபோதும் அவர்களுக்கு உணவு வழங்குவதைக் கட்டுப்படுத்தினர்.[1] 1839.

1881 ஆம் ஆண்டு தொடக்கம் 1904 ஆம் ஆண்டு வரை இரசியாவில் சீர்திருத்த இயக்கம் எங்ஙனம் பெருமளவில் பின்னிடைவுற்றது என்பதை இன்னுமொரு வழியாகவும் காட்டலாம். 1851 ஆம் ஆண்டு தொடக்கம் 19 ஆம் நூற்றாண்டு முடியும் வரையும் இரசிய சமுதாயத்தில் இருந்து நிறுவகங்களுள் இந்தச் செமிசுவோவைப் போன்று வேறெந்த நிலையமும் எங்களுடைய கூரிய கவனத்தைப் பெறுதற்குத் தகுதியுடையதன்று. இந்தச் செமிசுவோ என்பது மக்களால் தெரிவு செய்யப்பெற்ற உள்ளூராட்சிச் சபையாகும். சமூகத்தை மீண்டும் சீராக்கும் பெயரிதோர் பணியை இந்தச் சபைகள் செமிசுவோ.

[1] Vinogradoff, op. cit. 265.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 81-1904. செய்தன. அதுமட்டுமன்றி இந்தச் சபைகள் இரசிய மக்களுக்கு, தன்னுட்சி என்னும் கலையில் விலைமதிக்கமுடியாத பயிற்சியை அளித்தன. இரசியாவிலுள்ள புரட்சிக் கட்சி தன்னுடைய நோக்கம் நிறைவேறுவதற்குத் துரிதமான வழிவகைகளையே தேடி நின்றது. அந்தக் கட்சிகூட இந்தச் சபைகள் ஆற்றிய பணியைத் தயங்காது ஒப்புக்கொண்டமை இதற்குச் சான்றாகும். "இந்தச் சபைகள் செய்த பணி பாராட்டுக்குரியது என்பதை எவருமே மறுக்கமுடியாது. மக்களின் நன்மைக்காக இச்சபைகள் பற்றுடனும் ஆர்வத்துடனும் பெரிதும் உழைத்துள்ளன. இச்சபையிலுள்ளோர் தங்களுட் பெரும்பான்மையோருடைய இன நலனுக்காக உழையாது மக்களின் நன்மைக்காக உழைத்தனர்.... நிறைவான அறிவும், செய்முறையில் கொண்டு வரக்கூடிய கருத்தும் இவர்களுக்கு உண்டு என்பதை இவர்கள் எடுத்த நடவடிக்கைகள் நிரூபித்தன. பொதுமக்களுக்கு எழுத்தறிவு ஊட்டுவதே எல்லாவற்றிற்கும் மேலாயது. அதனிலேயே எல்லாம் தங்கியுள்ளது. அதன் மூலமே பொதுமக்கள் தங்களைத் தாமே மதிப்பிடவும் தாமாகச் செயலாற்றவும் தகுதியடைவர். இதனை இந்தச் சபையினர் உணர்ந்தனர். இதன் மூலம் நிறைவான அறிவும் செய்முறையிற் கொண்டுவரக் கூடிய கருத்தும், தங்களுக்குண்டென்பதைக் காட்டினர்",[1] என சிதெப்பினியக்கு எழுதினன். செமிசுவோ செயலாற்றத் தொடங்குவதற்கு முன்னர் இரசியாவில் ஆரம்ப பாடசாலைகள் இல்லையென்றே சொல்லவேண்டும். இச்சபைகள் வைத்திய சுகாதார ஒழுங்குகளிலும் நடைமுறையிற் பெரும் திருத்தத்தைக் கொண்டுவந்தன. இந்த வேலையில் மொசுக்கோ மாகாணத்திலுள்ள செமிசுவோ கௌரவத்துடன் முன்னணியிற் நிகழ்ந்தது. இந்தச் சபை சாதித்தவை பாராட்டுக்குரியன. பொதுவாகச் செமிசுவோ சபைகள் ஈடுபட்டுள்ள முயற்சிகளின் தன்மைக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். "மொசுக்கோ மாகாணத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு குடியானவன் வீட்டிலிருந்தும் இரண்டு மைல் தூரத்துள் ஒவ்வொரு பாடசாலையையும் ஐந்து மைல் தூரத்துள் ஒவ்வொரு வைத்திய நிலையத்தையும் இச்சபை நிறுவியது. எல்லைப் புறங்களில் போதிய வசதிகளுடன் சிறிய வைத்தியசாலைகள் நிறுவப்பட்டன. மனநோயாளரைப் பராமரிப்பதற்குப் போதிய வசதிகளும் செய்யப்பட்டன. இவ்விரண்டு முயற்சியும் பாராட்டுதற்குரியவை. உழவர்களின் கால்நடைகளுக்கு நல்ல புல் விநியோகம் செய்ததன் பயனைக் கால்நடைச் சீர்திருத்தம் குறிப்பிடக் கூடிய அளவுக்கு முன்னேறியது. விலங்கு மருத்துவர் நியமிக்கப்பட்டனர். இறக்குமதி

[1] S. Stepniak, "Russia under the Tzars" (1885), ii. 169.

Digitized by Noolaham Foundation

யான கால்நடைகளைச் சோதனை செய்தனர். தொழிற்சாலை 1881-1904.
களில் தேங்கி நிற்கும் அசுத்த நீரைச் சாக்கடைமூலம் வடிந் தோடவிடவேண்டும் எனவும் கட்டாயப்படுத்தினர். கிராமங்களுக் குத் தண்ணீர் வசதியளிக்கும் வேலையிலும் செமிசுவோ ஈடு பட்டது. எல்லாமாக 1000 மைல் நீளமுள்ள வீதிகள் அமைக்கப் பட்டன. கிராம நூல் நிலையங்களை நிறுவுதற்குப் பெரும் முயற்சி கள் நடந்தன. செமிசுவோ சபைகளில் அலுவலகப் பகுதிகளிருந் தன. ஒவ்வோர் பகுதிக்கும் பொறுப்பாக ஒருவன் இருப்பான். ஊதியம் பெறுமலே இந்தச் செமிசுவோ சபைகள் கடமை யாற்றின. சீர்திருத்தங்களைப் பிற்போடுவதிலும்பார்க்க நகர மக்கள் இறுக்கும் தீர்வையை உயர்த்துவதற்கே இந்தச் சபை கள் ஆயத்தமாக இருந்தன.... மொசுக்கோ மாகாணத்தின் புறத் தோற்றத்தையே இந்தச் செமிசுவோ சபை மாற்றிவிட் டது."[1] செமிசுவோ சபைகள் ஆற்றிய பணி வியக்கத்தக் கது. இந்தச் சபைகள்மீது அரசாங்கம் ஐயம் கொண்டது. இச்சபைகளின் பணி, இந்த ஐயத்தை நீக்குவதற்குப் பதிலாக மையப்பணிக்குழுவாட்சியின் பகைமையை வளரச்செய்தது. உள் ளூர்களிலுள்ள முற்போக்குவாதிகளை இச்சபைகளிற் சேராமல் தவிர்க்கும் நோக்கத்துடன் சபையில் உறுப்பினரைச் சேர்ப்பது கவனமாகக் கட்டுப்பாடு செய்யப்படலாயிற்று. செமிசுவோ வரு டாந்த வரவு செலவுத் திட்டத்தை முன்னரிலும் பார்க்க மூன்று வீதத்துக்குமேற் கூட்டப்படாது என்னும் தடை 1900 ஆம் ஆண்டு விதிக்கப்பட்டது. இங்ஙனம் பாதீட்டுக்கு எல்லை வகுப்பது இச்சபைகளின் நல்ல செயல்களைக் குறைப்பதற்காகவே செய்யப்பட்டது. மேலும் இதுபற்றி இரசிய தாராளர் ஒருவர் சுட்டிக் காட்டியவை பின்வருமாறு: "பிற்போக்குக் கட்சி யினர் சாதித்த சாதனைகளிலும் பார்க்க அவர்களின் நோக் கங்களே கூடுதலான கவனத்துடன் நோக்கத்தக்கவை. எப் பொழுதும் பிற்போக்குவாதத்தின் உண்மையான பகைவன் சட்டம்—ஒழுங்கீனமும் அதிகாரிகளின் பாதுகாப்பும் இல்லாத சட்டமென்க. அத்தகைய சட்டமானது அதிகாரிகளின் முன் பாகப் பெருமையுடன் தலைதூக்கி நிற்கும். அச்சட்டம் மக் களிடமுள்ள கௌரவ உணர்ச்சியை ஆதாரமாகவுடையது. குடிகளின் சமத்துவத்தைச் சட்டம் எடுத்தியம்பும்.... அரசாங் கம், நிலத்தலைவர்கள் பதவியை உண்டாக்கியது. தன்னுடைய ஆட்சியிலிருக்கும் கோடிக்கணக்கான யூதக்குடிகளின் பொது வான குடியுரிமைகளைப் பறிமுதல் செய்தது. யூதர்களின் பிள் ளைகளுக்குக் கல்வியூட்டும் உரிமையும் பறிமுதலாயிற்று. இத் தகைய செயல்களைச் செய்யுமரசாங்கம் சட்டத்திற்கும் நீதிபரி

[1] B. Pares, chapter on "Russia" in Camb. Mod. Hist. xii. 327.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1894-1904

பாலனத்திற்கும் தகுதியான சகாயமளிக்க முடியாது. அது தானிடும் கட்டளைகளுக்கே மக்களைக் கீழ்ப்படியச் செய்கின்றது; நீதியான சட்டங்களுக்கன்று. நீதியான சட்டங்களை இவ்வரசாங்கம் வெறுக்கின்றதென்பதற்கு எல்லா வழியிலும் சான்று இருக்கின்றது".[1]

II ஆம் நிக்கலசு (1894-1917).

மூன்றும் அலச்சாந்தரின் ஆட்சிக்காலம் முழுவதும் (1881-1894) இந்தப் பிற்போக்கு ஆட்சிமுறை வெற்றிகரமாக நிலைத்திருந்தது. மூன்றுவது அலச்சாந்தர் தன் குடிகளோடு தொடர்பு கொள்ளாது வாழ்ந்து வந்தான். தன்னுடைய சொந்த அமைச்சர்களோடுகூடத் தொடர்பு வைத்துக்கொள்ள மறுத்தான். தன்னுடைய தனிமையில் மூழ்கியிருந்தான். "கண் காணுத, ஆபத்து நிறைந்த பகைவர்களுக்கெதிராகத் தொடர்ந்து நடக்கின்ற யுத்தத்தின் வேதனையைப் பதின்மூன்று ஆண்டுகளாகக்", காவலர் புடைசூழ இரகசியப் பொலிசு பின்தொடரத் தாங்கிக் கொண்டிருந்தான்.[2] இரண்டாவது நிக்கலசு அரசெய்தியும் அரசியல் நிலையில் எவ்விதமான மாற்றமும் ஏற்படவில்லை. நாட்டின் சட்டங்களை யாக்குதலில் நாட்டினர் பங்குபற்ற வேண்டும் எனக் கல்வி கற்ற மக்கள் வேணவாக்கொண்டிருந்தனர். இந்த வேணவாவைக் "கருத்தற்ற கனவு" எனக் குறிப்பாகக் கூறி இவன், கல்வி கற்றோரிடையே பெரும் ஏமாற்றத்தை யுண்டாக்கினன். "நாட்டின் செல்வ விருத்திக்காகவே என் முயற்சி முழுவதையும் செலுத்திக்கொண்டு காலம் சென்ற என் தந்தையாரைப் போலவே தனியாட்சித் தத்துவத்தை விட்டுக் கொடுக்காமல் உறுதியோடு பாதுகாப்பேன்" என அறிவித்தான். இருந்த போதும் பத்து ஆண்டுகள் சென்றபின்னர் தனியாட்சிக்குரிய அதிகாரத்துக்கு முதலாவதாகப் பெரியதோர் பங்கம் ஏற்பட்டது. அதாவது பேரரசுப் பாராளுமன்றம் ஒன்று நிறுவியமையென்க. இரசிய அரசாங்கத்திற் புதியதோர் காலவவதியை ஆக்கிய நிகழ்ச்சிகளை நாம் இப்போது ஆராய்வாம்.

சூனியவாதத்தின் வீழ்ச்சி.

நாங்கள் முன்னர் கண்டுகொண்டபடி 19 ஆம் நூற்றுண்டின் போது இரசிய சீர்திருத்த இயக்கம் பல்வேறு கட்டங்களை அடைந்துள்ளது. சூனியவாதம் என்னும் பெயர் கொண்ட இவ்வியக்கம் 1860 ஆம் ஆண்டளவில் தொடங்கியது அதிகாரம்பற்றி மக்கள் கொண்டுள்ள மூடநம்பிக்கையையும் மதிப்புணர்ச்சியையும் தர்க்கமுறைப்படி எதிர்ப்பதற்காகவே இது தொடங்கிற்று. பின்னர் இவ்வியக்கம் செயற்படத் தொடங்கிற்று.

---

[1] Vinogradoff, op. cit. 266.

[2] J. H. Rose, "The Development of the European Nations" (ed. 1915), 302.

Digitized by Noolaham Foundation

இரசிய உழவோரைப் பொருளாதார இழிநிலையினின்றும் உயர்த்துவதற்கு முயற்சித்தது. இறுதியில் இது திட்டமிடப்பட்ட பயங்கர முறைமையாக மாறியது. இரண்டாம் அலச்சாந்தருடைய படுகொலை இந்தச் சூனியவாத இயக்கத்தின் உச்சமாக அமைந்தது. இதுவரையும் கல்வி கற்ற வகுப்பினரின் அனுதாபம் இவ்வியக்கத்துக்கிருந்தது. கல்வி கற்ற வகுப்பினர் இவ்வியக்கத்தினர் கையாண்ட வழிவகைகளை ஏற்றுக்கொள்ளாத போதும் அதன் நோக்கங்களை ஏற்றுக்கொண்டனர். ஆனால் "மீட்சியாளர்" இறந்தபின்னர், மக்கள் இவ்வியக்கத்தை வெறுத்தனர். இந்தப் பயங்கர இயக்கம், இரசிய சமுதாயத்திலுள்ள பல்வேறு திறப்பட்ட மக்களின் மதிப்பையும் முற்றுக இழந்தது. பயங்கரவாதிகள் ஈன இரக்கமின்றி மரணதண்டனை விதிக்கப்பட்டனர். பயங்கரவாத அமையங்களுக்குப் புத்துயிர் கொடுப்பதற்குச் செய்த முயற்சிகளெல்லாம் தோல்வியடைந்தன. பயங்கர முறைச் செயல்கள் மூலம் இந்த இரசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியாதென்பது எல்லோருக்கும் தெள்ளிதாகப் புலனுயிற்று. சில ஆண்களும் பெண்களும் சேர்ந்து அமைத்த சிறு கூட்டமொன்று எத்துணை வல்லமையுடையதாயிருந்தபோதிலும் எல்லையில்லா ஆற்றல்படைத்த அரசாங்கமொன்றைக் கவிழ்க்க முடியாது. புரட்சிவாதிகள் தனித்துத் தனியாட்சியை அழிக்கமுடியாதென்பதை 1892 ஆம் ஆண்டில் சிதெப்பினியக்கு ஒப்புக்கொண்டான். இந்தப் போராட்டம் சமனை இரு பகுதியினருக்கிடையே நடக்கவில்லை. ஆகவே இப்போராட்டமானது "ஒவ்வொருவரும் தம்மைத் தியாகம் செய்கின்ற கலையில் ஒரு பயிற்சியாகும்" என அவன் கூறினான். இரசிய உழவோர் அறியாமையில் மூழ்கியிருந்தனர். சாரின் ஆட்சிக்கு ஆட்சேபனை யெதுவுமின்றி அவர்கள் காட்டிய மரியாதை குறிப்பிடத்தக்கது. அவர்கள் தங்களுக்கு எதிர்காலத்தில் விடுதலையளிக்க விருப்போரை நம்பவில்லை. தமக்கு விடுதலையளிக்கக் கிளர்ச்சி செய்பவர்கள் தமக்காகப் பரிந்து பேசியது எல்லாவற்றிற்கும் உணர்ச்சியுடனும் அக்கறையுடனும் செவிசாய்க்கவில்லை. நேர்முகமாகப் பகைமை காட்டினர் என்றும் சொல்வதற்கில்லை. எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நெப்போலியன் கண்ட உண்மையைப் புரட்சிவாதிகள் உணர்ந்தனர். அதாவது இரசிய உழவோர் அரசியற் பிரசாரத்துக்குத் தேவையான பக்குவம் அடையவில்லையென்பதே என்க. சுருங்கச் சொன்னுல் 19 ஆம் நூற்றுண்டில் சீர்திருத்த இயக்கம் தோல்வி கண்டது. எனெனில் இந்தச் சீர்திருத்த இயக்கத்துக்குத் தலைவர்கள் மட்டும் இருந்தார்கள். அவர்களைப் பின்பற்றுவோர் இருக்கவில்லை. உளத்தில் இந்தச் சீர்திருத்த இயக்கம் ஆழ 1894-1904.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1894-1904

மாக வேரூன்ற முற்றிலும் தவறிவிட்டது. எனவே உழவுத் தொழிலையே நிலைக்களனாகக் கொண்டு இரசியா தொடர்ந்து இருந்திருந்தால் தனியாட்சி வெல்ல முடியாத நிலையில் இருந்திருக்கும். 1832 ஆம் ஆண்டில் இங்கிலாந்திலே உள்ள அரசியற் சத்திகளின் உயிர்ப்பு கைத்தொழிற் புரட்சியின் காரணமாக நிலக்கிழார்களின் கையிலிருந்து வணிகத் தொழிலாளர் கைக்கு மாறியது. அதைப் போன்ற இயக்கமொன்றே இரசியாவில் அப்போதுள்ள அரசியல் நிலையைப் பெரிதும் மாற்றியது. 19 ஆம் நூற்றாண்டு இறுதியிற் கைத்தொழிலானது அதற்கு முன்னர் ஒருபோதும் இல்லாத அளவுக்கு வளர்ச்சியுற்றது. எனவே பரந்து விரிந்து செல்கின்ற முதலாண்மை முறைமைக்கு இரசியாவும் ஈர்த்துக் கொள்ளப்பட்டதென்பதை இது காட்டியது. மூன்று திறப்பட்ட தனித்தனியான காரணங்கள் ஒத்து இயங்குவதன் மூலம் இந்தத் துரிதமான அபிவிருத்தி நிகழ்ந்தது. ஊழியருக்கு விடுதலை கிடைத்ததன் பயனாகக் குறைந்த சம்பளத்துக்குத் தொழிலாளர்கள் பெருமளவிற் கிடைத்தனர்; புகைவண்டிப்பாதைகளை யுண்டாக்கியதும் போக்குவரத்துச் சாதனங்கள் அதிகரித்தன; பிரமாண்டமான கைத்தொழில் முயற்சிகளுக்கு அத்திவாரமாக வெளிநாட்டு மூலதனம் இரசியாவிற்குக் கிடைத்தது. கனிப்பொருட் கைத்தொழிலுக்கும் பருத்திக் கைத்தொழிலுக்கும் மாபெரும் தூண்டுகோல் கிடைத்தது. இதனாலேற்பட்ட விளைவுகள் பிரமாண்டமானவை. கைத்தொழிற் சாலைகளை நிறுவியமையால் உற்பத்தி செய்யும் முறை துரிதமாக வளர்ச்சியுற்றது. 1917 ஆம் ஆண்டுப் புரட்சி தொடங்கும்போது சிறு கைத்தொழிலிலிருந்தவர்களை விட மூப்பது இலட்சம் கைத்தொழிற்சாலைப் பாட்டாளிகள் இருந்தனர். கைத்தொழிலில் வளர்ச்சியுற்ற நாடுகளுள் இரசியா ஐந்தாவது இடத்தைப் பெற்றிருந்தது எனவும் சொல்வர். இந்த மாற்றம் நிகழ்ந்தது எம். உவிற்றே (1892–1903) என்பவன் அமைச்சனாக இருந்து கடமையாற்றிய காலத்திலென்க. இரசியாவில் மூலவளத்தைப் பெருக்குவதற்குரிய ஒரே ஒரு வழி வெளிநாட்டு முதலாண்மைக்காரரை இரசியாவிற்கு வரவிடுதலே என்பதையுணர்ந்த இவன் அதற்கு வேண்டிய ஊக்கம் அளித்தான்.

கைத்தொழிற் புரட்சி.

இரசிய வரலாற்றிலே முதன்மை பெறுகின்ற நிகழ்ச்சி ஊழியருக்கு விடுதலை வழங்கப்பட்டமையாகும். அதற்கு அடுத்த முக்கிய மான நிகழ்ச்சி இரசியாவிற் கைத்தொழில் உற்பத்திமுறை தோன்றியமையாகும். இவ்விடத்தில் நாங்கள் கவனிக்க வேண்டியது அரசியற் சிறப்புக்களை மாத்திரமே. இரசியாவில் ஏற்பட்ட

Digitized by Noolaham Foundation

இந்தப் பொருளாதார மாற்றத்தில் மறைமுகமாகச் செறிந் 1894-1904.
துள்ள சத்தியைப் புள்ளி விவரங்களுடன் கூறினால் மாத்திரம் நாங்கள் அதனைச் சரியாக உணர்ந்து கொள்ள முடியாது. முதலாண்மையாளர் முறைமை தோன்றுவதனால் தொழில் புரியும் பாட்டாளியர் தோன்றுவர் என்பது மாறுத நியதியாகும். நாட்டுப்புறத் தொழிலாளரிலும் பார்க்கப் பாட்டாளிகள் எப்போதும் கூடிய புத்தியுடையராகவும் பழைமை பேணும் தன்மை, ஒரளவிற்குடையராகவுமே இருப்பர். பண்டைக் காலத்தில் முடியாட்சி குடியரசுவாதத்திற்கு மாறுவதற்குக் காரணம் நகரங்களின் வளர்ச்சி என்க. ஏனெனில் தன்நம்பிக்கை, எந்த முயற்சியையும் தொடக்கி வைக்குமார்வம், மாற்றங்களில் மோகம் ஆகியவற்றை நகரவாழ்க்கையே வளர்க்குமாதலால் என்க. இக் கால உலகிலுள்ள நாட்டின அரசில் அரசியல் நன்கு இணைக்கப்பட்டதாய் அமைந்திருக்கவில்லை. இவ்வரசில் தொழிற்சாலை உற்பத்தி முறைமை பாட்டாளிகள் தனித்து வாழும் தன்மையை நீக்கிவிட்டது. பெருந்தொகையான மக்கள் ஒருங்கு சேரும் நிலையைத் தொழிற்சாலைகள் ஏற்படுத்திவிட்டன. இதனால் பாட்டாளிகள் ஒருமித்துச் செயலாற்றக் கூடியதாகின்றது. அதே வேளையில் பாட்டாளிகள் பொருளாதாரச் சத்தியை உணரக் கூடியவராகின்றனர். ஏனெனில் தனிப்பட்ட தொழிலாளி யொருவன் தன்னுடைய முதலாளியின் தயவிலேயே தங்கியிருப்பான். ஆனால் தொழிலாளிகள், சங்கமாகச் சேர்ந்தால் அச்சங்கத்தின் மூலம் முதலாளிகளுக்கே நிபந்தனைகள் விதிக்கத்தக்க நிலையிலிருப்பார்கள். அரசியல் விழிப்புக்குப் பெரும்பாலும் காலாக இருப்பது பொருளாதார நிலையாகும். இரசியப் பாட்டாளி மக்கள் தம்முடைய பொருளாதார நிலைபற்றி அதிருத்தி கொண்டு வீழிப்படைவதற்கு எல்லா நிகழ்ச்சிகளும் காரணமாக இருந்தன. தொழிற்சாலையில் நீண்ட நேரமாகத் தொழில் புரிந்து பாட்டாளி துன்பமனுபவித்தான். குறைந்த சம்பளத்தால் அவன் அல்லலுற்றான். கைத்தொழில் மேற்பார்வையாளர் மிருகத்தனமாக அவனை வருத்தினர். குற்றப்பணம் அறவிடும் முறைமை அவனை வாட்டியது. தொழிற்சாலைச் சீர்திருத்தத்துக்கு மொசுக்கோ முதலாளிகள் தடையாயிருந்தனர். "மக்களின் தொழிற் சுதந்திரம்" என்னும காரணத்தையே இவர்கள் அதற்குக் காட்டினர். இவர்கள் காட்டிய காரணம் நடைமுறையிலே எளியோரை வலியோர் துன்புறுத்துவதையே காட்டியது. பொதுவாக நோக்குமிடத்து நாடு வளமுடையதாயிருந்தது. ஆனால் பொதுவான பொருளாதார நிலையைப்பற்றி அறிதற்கு இரசிய உழவோருடைய வாழ்க்கையையும், சேர்மானிய உழவோருடைய வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1894–1904. லாம். பொருள் கொள்வதற்குச் சேர்மானிய உழவோரிலும் பார்க்க இரசிய உழவோர் கூடுதலாகப் பணஞ் செலவு செய்தனர். சேர்மானிய உழவோரிலும் பார்க்க இரசிய உழவோர் பருத்தி ஆடைக்கும் சீனிக்கும் இரண்டரை மடங்கு பணமும் இரும்பிற்கு நாலரை மடங்கு பணமும் நிலக்கரிக்கு ஆறு மடங்கு பணமும் கொடுத்தனர்.[1] இந்தச் சிக்கலை மற்றொரு கோணத்தில் இருந்து நோக்கவேண்டும். கைத்தொழில் பெருகிவந்ததால் பாட்டாளியர் வருக்கம் ஒன்று தோன்றியது. அதுமட்டுமன்று; செல்வம் படைத்த உற்பத்தியாளர் வருக்கம் ஒன்றும் உருவாகிற்று. இரசியாவில் நிலவிய தன்வயமான தனியாட்சியையும் தொழிலாளர் வருக்கத்தையும் சற்றேனும் சமன்செய்ய முடியாமலிருந்தது. சுருங்கச் சொன்னால் தற்காலிகமாக இரசியா முதலாண்மைக் கட்டத்தை அடைந்தது. இரசியா மேற்கு நாடுகளில் உள்ள கைத்தொழில் முறைமையை ஏற்றுக்கொண்டது. ஆனால் இரசிய ஆட்சி முறை உழவோரைக்கொண்ட ஒரு பேரரசுக்கு ஏற்றதாயிருந்ததாயினும் அது காலத்துக்கு ஒவ்வாததாயிற்று.

சமூகக் குடியாட்சி வாதிகள்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நிலையை அரசியற் கட்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் பிரதிபலித்தன. முக்கியமான புரட்சிக் கட்சியின் பெயர் சமூகக் குடியாட்சிவாதிகள் கட்சி என்பதாகும். இதற்கு முன்னர் இருந்த அரசியற் கட்சிகளுடைய திட்டங்களிலும் பார்க்க இந்தக் கட்சியில் திட்டம் தெளிவாக முன்னேற்றமுடையதாயிருந்தமை குறிப்பிடத்தக்கது. முதலாவதாக, இக்கட்சியானது அரசியலாதிக்கம் நிலக்கிழார்களின் கையிலிருந்து நிரந்தரமாக வணிகத்தைத் தொழிலாகக் கொண்டவர்களின் கைக்கு மாறுகின்றது என்பதை—அதாவது புரட்சிப் பிரசாரத்திற்குக் கிராமங்கள் ஏற்றவையல்ல; தொழிற்சாலைகளும் பட்டறைகளுமே ஏற்ற இடங்களென்பதை உணர்ந்தது. புரட்சிவாதிகளும், பழமைபேணுவோரும் முதலாண்மையிலிருந்தும் அதன் வழிவரும் இடை வகுப்பிலிருந்தும் இரசியா தப்பமுடியும் என்னும் நம்பிக்கையுடையோராயிருந்தனர். கார்ல்மார்க்சு என்பானுடைய சமூகவுடைமைவாதத்திற்குரிய தத்துவங்களினால் உந்தப்பெற்ற இப்புதிய கொள்கையினர் காலப்போக்கை எதிர்த்து நிற்கவில்லை. ஆனால் "இழிதக்க அலுவல்கள் இப்பொழுது நடக்கின்றன. இவற்றால் ஏற்படப்போகும் அழிவு மிகப் பெரியதாகும் எனப் பகிரங்கமாகப் பிரசித்தஞ் செய்தனர். பழைய ஆட்சி முறை அழிவதைக்கண்டு பழைமையை விரும்பும் உணர்ச்சிவசப்பட்டோர் மனவருத்தப்படலாம். இருந்தபோதும், மறுமலர்ச்சியடைய வேண்டிய சாதாரண நியதிக்கு இரசியா விதிவிலக்கல்ல என்னும் கருத்து

[1] 1917 ஆம் ஆண்டுப் புரட்சிக்கு முன்னர் — **Pares. op. cit. xii. 325.**

Digitized by Noolaham Foundation

எங்கும் பரந்திருந்தது. இரண்டாவதாக, அரசியற் புரட்சி ஒன்று 1894-1904.
ஏற்பட்டாலொழியச் சமுதாயத்தை மாற்றியமைக்கும் கனவு பேய்த்தேராகிவிடும் எனவும் கருதப்பெற்றது. சமுதாய மாற்றங்களும் அரசியல் மாற்றங்களும் ஒருமித்து நிகழவேண்டும் என முந்திய புரட்சிவாதிகள் கருதினர். அத்துடன், பாராளுமன்ற ஆட்சிமுறைப்படி நடக்கும் அரசாங்கத்தினால் மக்களுடைய வாழ்க்கை நிலையைத் திருத்த முடியாதெனவும் இப்புரட்சி வாதிகள் கருதினர். மக்களுடைய வாழ்க்கையைத் திருத்துவதற்குப் பதிலாகப் பாராளுமன்ற ஆட்சியானது நைந்து தேய்ந்து திறமையற்றிருந்த டணிக்குழுவாட்சி இருந்த இடத்திற் பலம்பொருந்திய நடுவகுப்பினரையே அமர்த்தும். இந்த நடுவகுப்பினர் வறியவர்களை வருத்துவர். இங்ஙனம் இந்தப் புரட்சி வாதிகள் கருதியதில் பெரும் உண்மை உண்டு. எனினும் இரண்டு விடயங்களை இவர்கள் கவனிக்கவில்லையெனத் தோன்றிற்று. வல்லரசாட்சி நடக்கின்ற ஒரு நாட்டிலே முற்போக்கு இயக்கத்தின் சார்பிலே சமூகவுடைமைக் கருத்துக்களின் பிரசாரமும் அரசியற் கிளர்ச்சியும் செய்வது மிகவும் கடினம் என்னும் உண்மையை இந்தப் புரட்சிக்கட்சி புறக்கணித்தது. எவ்விதமான குறைகுற்றங்கள் இருந்தபோதும் பாராளுமன்றுக்குரிய நிறுவகங்கள் மூலம் நடக்கும் ஆட்சிமுறை தனி மனிதனின் சுதந்திரத்திற்கு உறுதியளிக்கும். இவ்வகையான உறுதி யாப்புறு ஆட்சியிலேயே கிடைக்கும். மேலும் பாட்டாளியர் வருக்கம் விரைந்து அரசியல் விழிப்புணர்ச்சி பெறும் என்பதும் உண்மை. இங்ஙனம் விழிப்புற்ற பாட்டாளியர் வகுப்பு அரசியல் அதிகாரத்தை நடுவகுப்பினரிடமிருந்து கைப்பற்றிக் கொள்ளும். தொழிலாளர் அதிகாரபீடத்திற் பலமாக அமர்ந்து கொண்டால் பின்னர் அரசாங்க வளத்தைக் கொண்டு சமூகப் புரட்சியை உண்டாக்கலாம். உற்பத்தி, காணிநிலம், தொழிற் சாலை, சுரங்கம் ஆகியவைகளை அரசாங்கம் தனதாக்கிக்கொண்டு தொழிலாளிக்கு வேண்டிய சரியான சமுதாய நிலையை உறுதி செய்வதுடன் தொழிலாளியின் உழைப்பிற்கேற்ற ஊதியத்தைச் சரியாகப் பகிர்ந்தும் கொடுக்கும். சமூகக் குடியாட்சிவாதிகளுக்குத் தனியாட்சி சமூகவுடைமையாக மாறுவது வெறும் கனவு போலத் தோன்றியது. எனவே இந்த முயற்சியைக் கைவிட்டு, வேறு சில உபாயங்களைப் பொறுமையோடு கையாளுவதில் திருத்தி கொண்டனர். யாப்புறு ஆட்சி ஒரு இடைநிலையாகப் பயன்படக்கூடும். இங்ஙனம் பல ஆலோசனைகளைச் செய்ததின் பயனாகப் பாட்டாளியர்மேற் கவனஞ் செலுத்த வேண்டும் என்னும் முடிவைப் புரட்சிவாதிகள் செய்தனர். பயங்கர முறைக்குப் பதிலாகச் சமாதான முறையிற் செய்யும் பிரசாரத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1904. கைத்தொழிற் கிளர்ச்சியையும் நடத்துவதில் இப்புரட்சிவாதிகள் நம்பிக்கை கொண்டனர். இதற்குப் புதியதோர் ஆயுதம் கையாளப்பட்டது. அதுவே தொழில் நிறுத்தம் என்க. பதினான்காம் நூற்றுண்டு தொடங்கி இங்கிலாந்தில் தொழில் நிறுத்தம் வழக்கிலிருந்துள்ளது. இரசியத் தொழிலாளி தன்னுடைய குறைகுற்றங்களை நிவிர்த்திசெய்வதற்குத் தொழில் நிறுத்தத்தைக் கருவியாக்கினன். தொழிலாளிக்கு இருந்த குறைபாடுகள் யாவும் முக்கியமாகப் பொருளாதாரத்தைச் சார்ந்தவையாகும். கைத்தொழிற் பிரச்சினைகள் யாவற்றிலும் பெரும்பாலும் சமூகக் குடியாட்சிவாதிகளே வழிகாட்டிகளாகவும் தலைவர்களாகவும் இருந்தனர். இவர்கள் இந்தக் கைத்தொழிற் பிரச்சினைகளில் வளமையாக அரசியல் அம்சத்தையும் புகுத்த முயற்சித்தனர். இந்த ஆபத்தை எதிர்ப்பதற்காக அரசாங்கம் தனிப்பட்ட ஒரு முறையைக் கையாண்டது. பொலிசார் இரசிய முகவர் மூலம் தொழிலாளரைத் தொழிற்சங்கங்களை நிறுவுமாறு ஊக்குவித்தனர். இதற்கு வேண்டிய நிதி உதவியையும் கொடுத்தனர். கலப்பில்லா அரசியற் பிரச்சினைகளில் தொழிலாளரின் கவனஞ் செல்வதைத் தடுப்பதற்காகத் தொழில் நிறுத்தங்களுக்கு வழிவகுத்தார்கள். துப்புத் துலக்கும் பகுதித்தலைவன் சேபற்றேவு என்பான் மொசுக் கோவில் இந்த முறைமையை வியத்தகு முறையில் கொண்டு நடத்தினன். ஆனால் தங்கள் தொழிற்சாலைகளில் பொலிசினர் ஒற்றுமையைக் குலைத்துப் பிளவைத் தூண்டுகின்றார்கள் எனத் தொழிற் சாலை முதலாளிகள் அரசாங்கத்திற்கு முறையிட்டார்கள். இது ஒருபுறமிருக்கப் பொலிசாரின் இரகசிய முகவர்கள் தொழிலாளிகளிடையே உள்ள "தீயநோக்கம் உள்ள" சிலரைக் கண்டு பிடித்து நீக்குவதற்கு இவ்வாய்ப்பைப் பயன்படுத்துகின்றனர் என்பதைத் தொழிலாளரும் கண்டுபிடித்தனர். சமூகக் குடியாட்சி வாதிகளைப் பலப்படுத்தி, புதிதாகத் தொடங்கிய தொழிலாளர் இயக்கத்தின் அரசியற் சிறப்பை அதிகமாக்குவதே இதன் இறுதி விளைவாகும்.

யப்பானியப் போரின் விளைவுகள் (1904).

1904 ஆம் ஆண்டு யப்பானோடு இரசியா செய்த போருடன் இரசிய வரலாற்றிலே புதியதோர் திருப்பம் ஏற்பட்டது. மக்கள் இப்போரை ஆதரிக்கவில்லை. மேலும் இரசிய அதிகாரிகள் திறமையுடன் போரை நடத்தாததனால் இரசியப் பொதுமக்கள் பெரும் ஏமாற்றமடைந்தனர். ஆதலால் பணிக்குழுவாட்சியில் பெரும் குறைபாடுகளை இரசியப் பொதுமக்கள் கண்டனர். இதனால் அரசாங்கம் பொதுமக்களுடைய மதிப்பை இழந்தது. அரசாங்கம் பெருமளவிலே பொதுமக்களின் கண்டனத்திற்கு இலக்காயது. உள்நாட்டு அமைச்சனை பிளகீவ் 1904 ஆம்

Digitized by Noolaham Foundation

ஆண்டு யூலை மாதம் படுகொலை செய்யப்பட்டான். இவனுடைய 1904-5.
பாலனம் மிகவும் பிற்போக்கானது. 1903 இல் 4867 இற்குக் குறையாத மக்கள் எவ்விதமான நீதி விசாரணையும் இன்றி மறியலில் இடப்பட்டனர்; அன்றேல் நாடுகடத்தப்பட்டனர்[1]. பிளகீவிற்குப் பின்னர், இளவரசனை மீர்க்கி உள்நாட்டு அமைச்சர் பதவியை ஏற்றான். மீர்க்கி அறிவு ஆற்றலும் மனிதத் தன்மையும் இரக்கமும் உள்ள அரசறிஞன். சீர்திருத்த வாதிகளை அவர்களுடைய குறைகளைச் சமர்ப்பிக்கும்படி கேட்டான். சீர்திருத்தவாதிகள் தமக்குக் கிடைத்த ஒப்பற்ற சந்தர்ப்பத்தை விரைவிற் பயன்படுத்தினர். செமிசுவோ கழகப் பிரதிநிதிகள் பெற்றேகிராத்தில் (1904, நவெம்பர்) மாநாடு ஒன்றைக் கூட்டுவித்துப் "பதினெரு அம்சக் கோரிக்கை" ஒன்றைத் தயாரித்தனர். இதனைத் தொழிலாளர் வகுப்பினர் பெரும் ஆர்வத்துடன் ஆதரித்தனர். அவர்களுடைய கோரிக்கை பின் வருமாறு :

(1) சுயாதீனமான நீதிபதிகளின் கட்டளை இன்றி எவரையும் பொலிசு தொல்லைப்படுத்தப்படாது; ஒழுங்கான நீதி மன்ற விளக்கம் இல்லாமல் எவரையும் தண்டிக்கப்படாது. இவ்வாறு மக்களின் குடிவாழ் உரிமையை அதிகாரிகள் மீறுவதைத் தடுக்கவேண்டும்.

(2) மனச்சாட்சிக்கு ஏற்றபடி நடக்கவும், பேசவும், பத்திரிகை நடத்தவும் சுதந்திரம்; பொதுக் கூட்டம் நடத்தவும் கழகங்களை நிறுவவும் உரிமை.

(3) நாட்டுப்புறம், நகரம் ஆகிய இடங்களில் தலவாட்சி மன்றங்களுக்குச் சுதந்திரமும், அவைகள் அதிக செயல்களைச் செய்தற்கு வாய்ப்புக்களும்.

(4) பூரண சுதந்திரத்துடன் மக்களாலே தெரிவுசெய்யப்பெற்ற மக்கட் பிரதிநிதிகள் மன்றம் வேண்டும். இந்தப் பிரதிநிதிகள் பாலனத்தின் எல்லாப் பிரிவுகளிலும் சட்ட ஆக்கத்திலும் பங்கு பற்றல் வேண்டும்.

(5) மேலே குறிப்பிட்ட முறையிலே யாப்பு ஒன்றைத் தயாரிக்க யாப்பமை மன்றம் ஒன்றை உடனே அமைத்தல் வேண்டும்[2].

இதனைவிட "தற்காலிகக்" கட்டளைச் சட்டங்களை ஒழிக்க வேண்டும் எனவும் கோரினர். இந்தத் "தற்காலிகக் கட்டளைச் சட்டங்

---

[1] Wallace, Russia, 691.

[2] Wallace, Russia, 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1905. கள்'' உண்மையிலே எனைய சட்டங்களைவிட நிலையானவை. ஆனால் நிலையான சட்டங்களை விளக்குவதன் பொருட்டே இந்த "தற்காலிகச் சட்டங்கள்" யாக்கப்பட்டன. இவற்றோடு அரசியற் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குவதையும், கல்விச் சுதந்திரத்தையும் கோரினர். இந்தக் கோரிக்கைகளை ஆதரிக்கும் முறையிற் பற்பல இடங்களில் தொடர்ச்சியாக விருந்து வைபவங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. பொது மக்களின் ஆர்வம் பொங்கியது. அரசியற் சூழ்நிலை எங்கும் காந்தம் கக்குவதுபோல இருந்தது. இந்நிலையில் பெருந்தீ ஒன்றை மூட்ட ஒரு சிறு பொறி போதும். இந்தப் பொறி 1905 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 22 ஆம் நாள் கிடைத்தது. இரசியர் இந்த நாளைச் "செஞ்ஞாயிறு" எனக் குறிப்பிட்டனர்.

"செஞ்ஞாயிறு" (சனவரி 22, 1905).

இதுவரையும் கற்றோரே இந்தச் சீர்திருத்த இயக்கத்தில் முக்கிய பங்குபற்றினர்; ஆனால் இப்பொழுது கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டாளியர்களும் இதிலே சேர்ந்தனர். இளைஞனை மதகுரு கேப்பன் என்பான் பெற்றோகிராத்தில் தொழிற்சாலை யாளருடைய தொழிற்சங்கம் ஒன்றை நிறுவியிருந்தான். மொசுக்கோவில் சூபற்றோவு நிறுவிய சங்கங்களுடைய அமைப்பைப் போலவே இச்சங்கத்தின் அமைப்புமிருந்தது. இச்சங்கத்திற்கும் பொலிசாரின் பாதுகாப்புண்டு. இரண்டு தொழிலாளர்களை வேலை நீக்கஞ் செய்ததற்காகச் சனவரி 15 ஆம் நாள் வேலை நிறுத்தம் பிரகடனஞ் செய்யப்பட்டது. வேலை நிறுத்தஞ் செய்தவர்கள் நாள் ஒன்றிற்கு எட்டு மணி நேர வேலை, கூடுதலான சம்பளம், திருத்தமான சுகாதார வசதிகள், தொழிலாளருக்கும் முதலாளிகளுக்கும் ஏற்படும் தகராறுகளைத் தீர்க்க நடுவர் சபை ஆகியவை வேண்டும் எனக் கோரினர். தொழிலாளர் தகராறுகளிலுல் தோன்றிய இவ்வியக்கமானது சமூகக் குடியாட்சிவாதிகள் தலையிட்டபடியால் அரசியற் சாயலைப் பெற்றது. தொழிலாளரிடம் தனக்கிருந்த செல்வாக்கு விரைந்து குறைகின்றது என்பதை யுணர்ந்த கேப்பன் அப்பொழுது நிலவிய பரபரப்பு உணர்ச்சியிலுல் உந்தப்பெற்றான் என்பர். எனவே புரட்சிவாதிகளின் திட்டத்தில் கேப்பன், தானும் ஈடுபட்டு குறைந்து கொண்டு போகும் தன் செல்வாக்கை மிகுவிக்க முயற்சித்தான். இரசியப் பேரரசனிடம் நேரிலே சென்று முறையீடுசெய்தான். பேரரசனின் மாரிகால அரண்மனைக்குச் சென்று மனு ஒன்றைச் சமர்ப்பிப்பதற்குச் சனவரி 22 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமையன்று பெரியதோர் ஊர்வலத்திற்கான ஒழுங்குகள் நடந்தன. தொழில் நிறுத்தஞ் செய்தோருடைய ஊர்வலத்தில், அவர்களுடைய மனைவியரும் மக்களும் பங்குபற்றி

Digitized by Noolaham Foundation

னர். இந்த மனு இரசிய மக்களுடைய அரசியற் குறைபாடுகளை 1905.
யும் கைத்தொழிற் குறைபாடுகளையும் எடுத்துரைத்தது. ஊர்வலத்தில் பங்குபற்றியோர் அமைதியாகவே சென்றனர். நகரின் சுற்றுப்புறங்களில் கூடிய மக்கட் கூட்டம் அமைதியாக ஊர்வலம் வந்தபோதும் அக்கூட்டத்தின்மீது படைகள் குண்டுகளை வீசின. கேப்பன் காயமின்றித் தப்பிக் கொண்டான். ஆனால் இதற்குப் பின்னர் அவனுடைய வாழ்க்கைநெறி மர்மம் நிறைந்ததாகவிருக்கின்றது[1]. உடனடியாக நோக்கத்தை அடைவதில் இந்த ஊர்வலம் தவறிவிட்டது. இருந்தபோதும் இந்த ஊர்வலத்தினால் இரசிய மக்களினுடைய உணர்ச்சி தூண்டப்பட்டது. தொழிலாளர் வகுப்பு அரசியல் விழிப்படைந்துவிட்டது என்பதற்கு இது ஒரு துலக்கமான அறிகுறியென்க. தொழிலாளர் வகுப்பு சீர்திருத்த இயக்கத்திலே புகுந்தபடியால், இந்த இயக்கம் குடியாட்சிக்குரிய பரந்த அடிப்படையைப் பெற்றது; வெற்றி கிட்டுவதற்குரிய வாய்ப்பும் கூடியது. இரசியாவிற் பல பகுதிகளிலும் அடுத்த சில வாரங்களாகத் தொழில் நிறுத்தம் தொற்றுநோய்போலப் பரவியது. பலர் படுகொலை செய்யப்பட்டனர். இந்தக் கொலைகளுக்குச் சிகரமாக இருந்தது மகா கோமகன் சேர்சியசின் கொலையாகும். மக்களின் பெரும் வெறுப்பைப் பெற்ற இவன் இரசியப் பேரரசனின் மாமனாவன். இரசியப் பேரரசு எங்கும் குழப்பம் மலிந்திருந்தது. பொது மக்களது தொல்லையைக் குறைப்பதற்காக நாட்டின மன்றம் வேண்டுமென அவர்கள் செய்த கோரிக்கைக்குப் பேரரசன் உடன்பட்டான். "மக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமுடையோராயும் அம்மக்களாலேயே தெரிவு செய்யப்பெற்றவராயுமுள்ளவர்களைச் சட்டவாக்க யோசனைகளிற் பங்கு பற்றுவதற்காக அழைக்கவிருக்கும்," தன்னுடைய எண்ணத்தை 1905 ஆம் ஆண்டு மாச்சு மாதம் மூன்றும் நாளன்று மன்னன் அறிவித்தான். அதே நேரத்தில் "அரசவமயங்களைச் சீர்திருத்துதற்கும் நாட்டினப் பொதுநலத்தை மேன்மையடையச் செய்தற்கும் உரிய" விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படியும் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த அழைப்பின் விளைவாகப் பல்வேறு தொழில் துறைகளிலும் உள்ளோர் தாங்களாகவே கழகங்களை நிறுவினர். இங்ஙனம் கழகங்களை நிறுவியவர்களுள் சட்டவாணர், வைத்தியர், ஆசிரியர், பொறியியல் வல்லுநர், புகைவண்டிப் பகுதி ஊழியர், எழுதுவினைஞர்கள் ஆகியவர்களைக் குறிப்பிடலாம். இப்படி நிறுவப்பெற்ற கழகங்

---

[1]. இரசியாவிற்கு இவன் திரும்பிய பின்னர் 1906 இல் புரட்சிவாதிகள் இவனை அரசாங்க ஒற்றர் என எண்ணிக் கொன்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1905. கள் தம்முள் இணைந்து மத்திய கழகம் ஒன்றையும் நிறுவின. இது கழகங்களுட் பெரும் கழகம் என்க. எல்லாக் கழகங்களின் திட்டமும் பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே யிருந்தது. பாராளுமன்றுக்குரிய நிறுவகங்கள், குடிகளின் அடிப்படையான உரிமைகள் ஆகியவற்றுக்காக மக்கள் எல்லோரும் கோரிக்கை செய்தனர். பசிபிக்குச் சமுத்திர ஆதிக்கத்தை யப்பானிடமிருந்து பறிப்பதற்காக இரசியப் போற்றிக்குக் கப்பற் படை தூரகிழக்கிற்கு அனுப்பப்பட்டது. யப்பானியக் கடற்படைத் தளபதியான புகழ்பெற்ற தோகோ இந்த இரசியப் படையை அழித்தான். சுசிமாச் சமரில் (மே, 27) நிகழ்ந்த இச்செய்தியும் மக்களின் முற்போக்குக் கருத்தைப் பலப்படுத்துவதாக இருந்தது. செமிசுவோச் சபைப் பிரதியாளர் குழு ஒன்று நாட்டினப் பிரதிநிதிகளை விரைவாகக் கூட்டும்படி இரசியப் பேரரசனை வற்புறுத்தியது. "நாட்டிற்குப் பயங்கரமான சோதனைக்காலமாகிய இக்காலத்தி கடவுளுக்கும் இரசியாவிற்கும் நீங்கள் காண்பிக்கவேண்டிய பொறுப்புப் பெரும் பொறுப்பு" என இக்குழு எடுத்தியம் பியது.

பொதுத் தொழில் நிறுத்தம் (ஒற். 1905).

இரண்டு மாதங்களுக்குப் பின்னர் ஓகத்து 19 ஆம் நாளன்று யாப்பு ஒன்று தோன்றியது. இதன் பெயர் "புல்லிகின் யாப்பு" என்பதாகும். இதனை மக்கள் மிகுந்த அதிருத்தியுடனேயே ஏற்றுக்கொண்டனர். புல்லிகின் யாப்பு பூரணமான சட்ட அதிகாரமுடைய பாராளுமன்றத்திற்குப் பதிலாக ஆலோசனை கூறுதற்கு மட்டுமே பயன்படுவதால் பேரரசு பாராளுமன்றம் ஒன்றை அமைத்தது. இந்தப் பாராளுமன்றம் மிகக் குறைந்த வாக்குரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும். இதன்படி தொழிற்சாலை மேற்பார்வையாளர், நாட்டுப் புறங்களில் உள்ள வைத்தியர், நாட்டுப்புற ஆசிரியர், நிலபுல உடைமையற்ற கிராம வாசிகள் ஆகியவர்களுக்கு வாக்குரிமை இல்லை. "புல்லிகின் யாப்பு" முந்திய ஆட்சி முறையில் இருந்த ஒருமுக மத்திய ஆட்சியை மாற்றித் தனியாட்சியைப் போக்கவில்லை. அமைச்சுப் பொறுப்பிலே நடக்கின்ற ஆட்சிமுறையையும் இந்த யாப்பு ஏற்றுக் கொள்ளாதபடியால் அரசியல் அடிப்படைத் தத்துவங்களில் எவ்விதமான மாற்றமும் ஏற்படவில்லை. இதன் விளைவாக நாடெங்கும் பொதுத் தொழில் நிறுத்தம் தொடங்கியது. திறமை வாய்ந்த சட்டவாணனை குறிசித்திலாவு என்பானுடைய தூண்டுதலினால் மத்திய அமயம் ஒன்றைத் தொழிலாளர் நிறுவினர். இதன் பெயர் தொழிற்பேராளர் கழகம் என்பதாகும். "தொழிலாளரின் இயக்கம்" என்னும் அதிகாரத்தையும் சிறப்பையும் இக்கழகம் விரைவிற் பெற்றது. இக்கழகம்

Digitized by Noolaham Foundation

வேறு தொழில் துறைகளில் உள்ளவர்கள் மீதும் தன் கட்டுப் பாட்டைச் செலுத்தவும் தொடங்கிற்று. ஒற்றேபர் முடிவிற் பொதுத் தொழில் நிறுத்தம் ஒன்றை இக்கழகம் பிரகடனஞ் செய்தது. செய்தித்தாள் வெளியிடுவது நிறுத்தப்பட்டது. மின் சாரம் வழங்குவதும் நின்றது. தொழிற்சாலைகளை மூடாது முத லாளிகள் அவற்றைத் திறந்துவைத்திருந்தால் அதற்குத் தண்ட மாகத் தொழிற்சாலைகள் தவிடுபொடியாக்கப்படும் என இக் கழகம் அறிவித்தது. இந்தத் தொழில் நிறுத்தத்தில் வைத் தியர், நீதிபதிகள் முதலியோர்களும் பங்குபற்றினர். புகை வண்டிப் போக்குவரத்து ஊழியர்கள் முன்னரே தொழில் நிறுத்தஞ் செய்யத் தொடங்கிவிட்டனர். அவர்கள் வேலைநிறுத் தியமைக்குக் காரணம் புகைவண்டி ஊழியருடைய தொழிற் சங்கப் பிரதிநிதிகளைக் கைது செய்ததாக விடுக்கப்பட்ட அறிக்கை என்க. இரசியப் பேரரசின் சமூக அமைப்பு செயலற்றிருந்தது. கோரிக்கைகளுக்கு இணங்குவதல்லால் வேறு வழி அரசாங் கத்திற்கு இல்லை. முற்போக்கு இயக்கத்தின் பெரும்பலத் தைக் கண்ட அரசாங்கம் அஞ்சி அடங்கி ஒற்றேபர் முப்பதாம் நாளன்று வெளிப்பகர்ப்பு ஒன்றை வெளியிட்டது. 1905.

ஒற்றேபர்க் கொள்கை வெளிப்பகர்ப்பானது சீர்திருத்த இயக் கத்தின் வரலாற்றிற் புதியதோர் காலவவதியைக் குறித்தது. தனிப்பட்டவரின் சொந்த உரிமை, மனச்சாட்சிச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், கழகம் நிறுவுஞ் சுதந்திரம், பொதுக் கூட்டம் கூடும் உரிமை ஆகிய அடிப்படையான குடிமை உரிமை களைக் கொடுப்பதாக ஐயக்கத்துக்கிடமில்லாத வகையில் இந்த அறிவிப்பு வாக்களித்தது. பாராளுமன்றத்திற்குச் சட்ட வாக் கத் தத்துவம் கொடுக்கப்பட்டது. அதன் ஒப்படலின்றி எந்தச் சட்டமும் செல்லுபடியாகாது. பரந்த அடிப்படையில் வாக் குரிமை வழங்குவது என உறுதிமொழியும் கொடுக்கப்பட்டது. திசெம்பர் 24 ஆம் நாள் ஆஞ்ஞையினால் வாக்குரிமை வழங்கு வதாகச் செய்த உறுதிமொழி நிறைவேற்றப்பட்டது. இவ்வாஞ் ஞைப்படி பல்வேறு தொழில் துறைகளில் உள்ளவர்களுக்கும், தொழிலாளர் வகுப்பிற்கும் வாக்குரிமை கிடைத்தது. இங் ஙனம் வழங்கப்பெற்ற சலுகைகள் பொலிசு, உள்ளூராட்சி அதிகாரிகள் ஆகியோரின் அதிகாரத்தை முற்றுக அகற்றின. இதுவரையும் தாங்கள் செலுத்திய அதிகாரத்தை மீண்டும் பெறு வதற்கு இவ்விருதிறத்தினரும் முழு மூச்சாக முயற்சித்தனர். இதனால் இவர்களை எதிர்த்தவர்கள் வதை செய்யப்பட்டனர். "உண்மையான இரசியர்கள்" என்ற பெயரிலே பிற்போக்குச் சத்திகளின் சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. பொதுமக்களிடம் ஒற்றேபர்க் கொள்கை வெளிப்பகர்ப்பு (1905).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1906. இப் பிற்போக்கு வாதிகளுக்குச் செல்வாக்கில்லை. இவர்களைப் பின்பற்றுபவர் இல்லை. எனினும், "கொலைபாதகக் குற்றத் தொடர்புள்ள வகுப்பினரின்" உதவியோடு கைகலப்புகளையும் குழப்பங்களையும் தொடர்ச்சியாக உண்டுபண்ணிய இவர்கள் பொலிசுடன் நெருங்கி ஒத்துழைப்பதினால் ஆபத்து ஏற்பட்டது. இந்தப் பிற்போக்குச் சீற்றம் தெற்கு, தென்கிழக்கு மாகாணங்களில் உள்ள நகரங்களில் வாழும் அமைதியான யூதமக்கள் மேல் மூக்கியமாகச் சென்றது. இந்த ஏழை மக்களைக் கொள்ளையடித்தும் கொடுமைப்படுத்தியும் பலநாட்களாகத் துன்புறுத்தினர். இங்ஙனம் இவர்கள் பட்டபாட்டைக் கண்டு மேற்கு ஐரோப்பா இரக்கம் கொண்டது. இந்தக் குழப்பங்கள் எல்லாவற்றையும் குறிப்பதற்குரிய இரசிய பதம் (பாழாக்குதல்) 'பொக்கிரும்' என்பதாகும். இது ஆங்கிலேய மக்களுக்குப் பழகிய பதமாகிவிட்டது.... இரசிய சமுதாயத்திற் குறைந்த தரத்தில் உள்ள மக்களினுடைய வெறுப்பை அவர்கள் உடன் குடிகளான யூதமக்களுக்கு எதிராகத் தூண்டியதனால் பழைமை பேணுவோருடைய நோக்கமோ அல்லது பிற்போக்குவாதிகளுடைய நோக்கமோ எங்ஙனம் முன்னேறும் என்பதைக் கற்பனை செய்வதானும் கடினம்."[1] கட்சியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் புரட்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தேவை எனக் கொள்வதன்மூலமே இந்த அட்டூழியங்களுக்குக் காரணங் கூறக்கூடும். இந்த அலுவலுக்கு அதிகாரிகள் உடந்தையாகியமை இகழ்ச்சிக்குரியது. பொலிசு தான் நினைத்த வேலையிலேயே இந்தப் "பாழாக்கும்" வேலையை எவ்விதத் தொல்லையுமின்றித் தடுத்திருக்கலாம். நசுக்குதற்கு அதிகாரம் இருந்தும் பொலிசு வாளா விருந்தது.

இரசியப் பொக்கிரும்.

முதலாவது தூமா (மே 10-யூலை 21, 1906).

இரசியாவின் முதற் பாராளுமன்றம் (தூமா) 1906 ஆம் ஆண்டு மே மாதம் பத்தாம் நாளிற் கூடியது. இதனை "நாட்டின வெறுப்புணர்ச்சி மன்றம்" என்பர். இப்பராளுமன்றில் நானூறுக்கு மேற்பட்ட உறுப்பினர் இருந்தனர். இவர்களில் எழுவர் மாத்திரமே பிற்போக்குவாதிகளாவர். பாராளுமன்ற உறுப்பினரில் மிகவும் முக்கியமான கூட்டத்தினர் யாப்புறு குடியாட்சிவாதிகளாவர். இவர்களுக்குப் "பயிற்சிப் படைஞர்" என்ற பெயர் விரைவிலே கிடைத்தது. தாராள போக்குக் கட்சியின் பிரதிநிதிகளாக இருந்த இவர்களுடைய தொகை 153 ஆகும். ஒற்றேபர் வெளிப்பகர்ப்பின்படி வரையறுக்கப்பட்ட யாப்பை ஆதரித்த "ஒற்றேபர் வாதிகள்" அல்லது "பழைமை பேணுவோரே" இவர்களுக்குப் போட்டியாக இருந்தவர்களாவர்.

[1]. Wallace, op. cit. 716–717. See also I. Zangwill, "The Melting pot" (ed. 1914), Appendix.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் முக்கியமாக நிலம் உடையோரது வகுப்பைச் சேர்ந்த வராவர். விவசாயக் குழப்பங்களை அரசாங்கம் அண்மையில் மிருகத்தனமாக அடக்கியபடியால் முதலாவது பாராளுமன்றத்தில் ஒரு சில தொகுதிகளில் மாத்திரம் இவர்கள் வெற்றி பெற்றனர். தொழிலாளர் கட்சியில் 107 உறுப்பினர் இருந்தனர். தன்னுட்சிக் கட்சியினர் நாட்டினச் சிறுபான்மையான போலந்து மக்களின் பிரதிநிதிகளாவர். இவர்கள் தன்னுட்சியை வேண்டி நின்றனர். இவர்களுடைய கட்சியில் 63 உறுப்பினர் இருந்தனர். இவர்களைவிடச் சுயேச்சையாளர் பலரும் இருந்தார்கள். இவர்கள் குறிப்பாகத் திட்டம் ஏதும் உடையோராகத் தெரியவில்லை. முதலாவது பாராளுமன்றம் எழுபத்திரண்டு நாள்கள் மாத்திரம் இயங்கிற்று. இந்த நாட்களில் அது அமைச்சுப் பொறுப்புப் பற்றி அரசாங்கத்துடன் வாதாடுவதில் ஈடுபட்டிருந்தது. பாராளுமன்ற அதிகாரம் யாப்பியற் குடியாட்சி வாதிகளிடமிருந்தது. மன்றத்தில் உள்ள ஏனைய பிரிவுகளின் ஆதரவினால் இவர்கள் பெரும்பாலும் பெரும்பான்மையுடையோராயிருந்தனர். இக்கட்சியினர் இங்கிலாந்திலுள்ளவை மாதிரிப் பாராளுமன்றுக்குரிய நிறுவகங்கள் அதாவது பேரரசனுக்கல்லாது பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக உள்ள அமைச்சு வேண்டும் எனக் கோரினர். பாராளுமன்றத்திற்குச் சட்ட ஆக்கம், நிதி ஆகியவற்றின் மீது பூரணமாக அதிகாரம் வேண்டும் எனவும் கோரினர். மாச்சுத் திங்கள் 5 ஆம் நாள் வெளியிடப்பட்ட வெளிப்பகர்ப்பும் ஏனைய விதிப்புக்களும் பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னரே அதன் அதிகாரத்தைப் பெரிதும் கட்டுப்படுத்தின. உதாரணமாக "அடிப்படைச் சட்டம்" எனப்படும் சட்டத்தைப் பாராளுமன்றம் மாற்றியமைக்க முடியாது. தரைப்படை, கடற்படை, பிறநாட்டுப் பூட்கை ஆகியன மூன்றும் இரசியப் பேரரசனின் தனி அதிகாரத்திலிருந்தன. பாதீடும் பாராளுமன்றத்தின் தலையீட்டிலிருந்து காப்பீடு செய்யப்பட்டிருந்தது. சுருங்கக் கூறின் ஒற்றேபர் வெளிப்பகர்ப்புப்படி உறுதி செய்யப்பெற்ற குடிச் சுதந்திரங்களும் உண்மையான யாப்புறு ஆட்சியும் வலியிழந்தன. அரசாங்கத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் எற்பட்ட இந்தப் போராட்டம் இரண்டு மாத காலமாக நீடித்தது. இறுதியிலே, குடியாட்சி வாதிகளின் அமைச்சு ஒன்றிற்கு அரண்மனை சம்மதம் தெரிவிக்கும் வேளை கிட்டிற்றுப் போலத் தோன்றிற்று. ஆனால் சிதொபிலின் என்பான் இதனைக் கடுமையாக எதிர்த்தான். இவனை முதலமைச்சனாக்கியதன் பின்னர் யூலை 21 ஆம் நாள் பாராளுமன்றம் கூலைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினரில் எறத்தாழ அரைப்பங்குக்கு மேற்பட்டவர்கள் பின்லாந்தில்

1906.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1906. உள்ள விபோக்கு நகருக்குத் திரும்பிச் சென்றனர். வரிகளைச் செலுத்த வேண்டாம் எனவும் படையிற் புதியவர்கள் சேரக் கூடாது எனவும் நாட்டினர்க்கு வெளிப்பகர்ப்பு ஒன்றை விடுத் தனர். அரசாங்கத்தின் செயலே நாட்டுமக்கள் நிராகரித்து நின்ற போதும், அவர்கள் ஒழுங்கான முறையில் எதிர்ப்பைக் காட்ட வழியின்றி இருந்தனர். பாராளுமன்றத் தலைவர்கள் காட்டிய எதிர்ப்புகள் யாவும் பலனிலவாயின. இதற்கு முன்னர் கண் டிராத அளவிலே மரண தண்டனை விதிக்கப்பட்டதனால் புதிய பாலனத்தின் கடும்போக்கு வெளியாயிற்று. சாதாரண கொள்ளை, அலுவலாளரை அவமதித்தல் ஆகியவற்றுக்குக்கூட மரணதண் டனை விதிக்கப்பட்டது. இந்தப் பிரமாணப்படி அறுநூறுக்கு மேற் பட்டவர்கள் தூக்குமேடையேறினர். விவசாயக் குழப்பங்களுக்கு உடந்தையாக இருந்தார்கள் எனக் கிடைத்த புகாரின்பேரில் விசாரணை இன்றி 35,000 இற்கு மேற்பட்டவர்கள் ஓராண்டிலே நாடுகடத்தப்பட்டனர்.

பொதுத் தேர்தல். இரசியாவினுடைய புதிய பாராளுமன்றத்தின் பொதுத் தேர்தலின்போது பிற்போக்குவாதிகளையும் ஒற்றுமைபர்வாதிகளை யும் ஆதரிக்கும் முறையில் எந்தெந்த அடக்குமுறைகளைக் கையாளமுடியுமோ அந்தந்த முறைகள் யாவும் கையாளப் பட்டன. "யாப்புறு குடியாட்சிவாதிகளுக்கு அரசியற் பிரசாரம் செய்வதற்கு இருந்த உரிமையைப் பறித்தனர். அந்தக் கட்சி யைச் சட்டபூர்வமாக அங்கீகரிக்க மறுத்தனர். அதனைச் சேர்ந்த அலுவலாளர் பதவியிலிருந்து அகற்றப்பட்டனர்.... வாக்காளரிற் பல வகுப்பினர்களுடைய வாக்குரிமையை நீக்குதற்கு அதிகாரத் தைத் தாராளமாகப் பயன்படுத்தினர்.... தகுதியற்ற அபேட்ச கரை இடாப்பிலிருந்து நீக்கினர்; அன்றேல் அவர்களை நாடு கடத்தினர். யூதர்கள் வாக்களித்தால் அவர்கள் நாடுகடத்தப் படுவர் எனவும் கூறினர். பிற்போக்குவாதிகளினதும், ஒற்றுமைபர் வாதிகளினதும் பட்டியல் உத்தியோக பூர்வமாகச் சுற்றுநிருபம் செய்யப்பட்டது. ஏனைய கட்சியினர், தங்கள் அபேட்சகரைக் குறிப் பிட்டால் அதற்காகத் தண்டிக்கப்பட்டனர். நகரங்களில் உள்ள வாக்காளர்களில் நான்கில் ஒரு பங்கினருக்கோ மூன்றில் ஒரு பங்கினருக்கோ வாக்குரிமைச் சீட்டைக் கொடாது பொலிசார் தடுத்தனர். வாக்களிக்கும் இடங்கள் குறைக்கப்பட்டன; வாக் களிப்புத் திகதிகள் அறிவிக்கப்படவில்லை; அன்றேல் வேண்டும் என்றே பிழையாக அறிவிக்கப் ட்டன. குற்றப்பணம் விதிக் கப்படும் என்ற மிரட்டலினாலே உழவோரும் சொற்ப நில உடைமைக்காரரும் வாக்களிக்கும் நாட்களில் சமிதிகளுக்கு அழைக்கப்பட்டனர். குருமார்கள் 'சுறுசுறுப்பாகப் பங்குபற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றித் தங்கள் 'மந்தைகளுக்கு' வழிகாட்ட வேண்டும்" என வும், தவறினால் 'ஆண்டவனின் சினத்துடன்' திருச்சபை நீக்கமும் அவர்களுக்குக் கிடைக்கும் எனவும் திருச்சபையி லிருந்து பிறப்பிக்கப்பட்ட சுற்றறிக்கை ஒன்று மிரட்டிப் பணித் தது. இயன்ற இடங்களில் எல்லாம் குருமார்கள் தேர்தல் அபேட்சகராக வேண்டியதாயிற்று. சில நகரங்களிலே பிற் போக்குவாதிகள் வாக்குரிமைச் சீட்டுகளை அபகரித்துச் சென்ற னர்; அல்லது சில வேளைகளில் தேர்தலில் தங்களை எதிர்த் துப் போட்டியிடுபவரைக் கைது செய்தனர்."[1] இந்த விதமான உபாயங்களைக் கையாண்ட போதும் எதிர்க்கட்சியினர் பெரும் பான்மையான தொகுதிகளில் வெற்றிபெற்றனர். அரசாங்கத் தால் விரும்பப்படாதவர்கள் என்று தங்களுக்குத் தெரிந்த அபேட்சகர்களை வேண்டுமென்றே பல தொகுதிகளில் மக்கள் தெரிவு செய்தனர். இருபத்தைந்து மாகாணங்களில் தெரிவு பெற்ற உறுப்பினரிலே மூன்றில் ஒரு பங்கினர் சிறைக்கு அனுப் பப்பட்டவர்கள்; அல்லது நாடுகடத்தப்பட்டவர்கள்; அல்லது பொதுச் சேவைப் பதவியிலிருந்து அகற்றப்பட்டவர்கள். பாரா ளுமன்ற உறுப்பினரின் மொத்தத் தொகையில் நாலில் ஒரு பங்கினருக்கு மேற்பட்டவர் "பாலனத்திற்குரிய தண்டனை" க்குள் ளானவர்கள். முதலாவது பொதுத்தேர்தலிற் பங்குபற்றாது ஒதுங்கிநின்ற சமூகக் குடியாட்சிவாதிகள் ஐம்பதிற்கும் அறு பதிற்கும் இடைப்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்றனர். 1907-12.

இரண்டாவது பாராளுமன்றம் (தூமா) 1907 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஐந்தாம் நாள் கூடியது. இதன் காலம் கொந்தளிப்பானது; குறுகியது. அரசுகட்டிலுக்கு விசுவாசஞ் செலுத்தாதோர் என்ற முறையிலே சமூகக் குடியாட்சிவாதி களைப் பாராளுமன்றத்திலிருந்து நீக்கவேண்டும் என அர சாங்கம் திடீரெனக் கோரியதால் நெருக்கடியான நிலை எற் பட்டது. இந்தக் குற்றச்சாட்டை விசாரணை செய்வதற்குப் பாரா ளுமன்றம் ஒரு குழுவை நியமித்தது. ஆனால் அக்குழு செய்ய வேண்டியவை பற்றி எலவே தீர்மானித்திருந்தது. யூன் 16 ஆம் நாள் பாராளுமன்றம் கூலைக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் சம்மதமின்றி யாதொரு மாற்றமும் சட்டப்படி செல்லுபடி யாகாது என இருந்தபோதிலும் புதிய தேர்தற் சட்டம் ஒன்றை மன்றுபடுத்தினர். எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தெரிவு செய்த தொகுதிகள் பல பெருமளவில் நீக்கப்பட்டன. சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளில் உள்ளவர்களின் வாக்கு ரிமை பறிபோயிற்று. நிலக்கிழார்கள் மாத்திரம் தேர்தலின் விளைவை நிருணயிக்கக் கூடிய முறையில் தேர்தல் முறை இரண்டாவது தூமா (மார்ச்சு 5–யூன் 16, 1907).

1 Pares, op. cit. xii. 370–371.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1912–17.

மையானது அமைக்கப்பட்டது. இதன் பலனை மூன்றாவது பாராளுமன்றம் (தூமா) பிரதிபலித்தது. இந்த மன்றம் 1907 ஆம் ஆண்டு நவெம்பர் 14 ஆம் நாள் கூடியது. ஒற்றேபர் வாதிகள் 153 தொகுதிகளைப் பெற்றனர். யாப்பியற் குடியாட்சி வாதிகளுடைய தொகை 54 ஆகக் குறைந்தது. இந்தப் பாராளுமன்றம் சமுதாய வாரியான உடைமையாகவிருந்த நிலத்தை உழவோருடைய உரிமையாக்கியதால் அவர்களைச் சமிதியின் பிடியிலிருந்து விடுவித்தது. இதுவே இப்பாராளுமன்றத்தின் மிக முக்கியமான செயலாகும். குறிக்கப்பட்ட ஐந்து ஆண்டுகள் முடிந்ததும் 1912 ஆம் ஆண்டில் இப்பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நடந்த பொதுத்தேர்தலில், நாட்டின வாதிகளையும் ஒற்றேபர் வாதிகளையும் கொண்ட மத்திய கட்சி தோல்வியடைந்தது. தேர்தலில் முக்கிய பங்குபற்றிய குருவாயத்தினர் சுறுசுறுப்பாயிருந்தபடியால் வலது சாரியினர் வெற்றிபெற்றனர். வலதுசாரியில் 155 இற்குக் குறையாத உறுப்பினர் இருந்தனர். ஒற்றேபர் வாதிகளில் 132 உறுப்பினரும் யாப்பியற் குடியாட்சிவாதிகளில் 52 உறுப்பினரும் மாத்திரம் இருந்தனர். ஆதலால் நான்காவது பாராளுமன்றம் பிற்போக்குச் சாயலைப் பெற்றது. இப்பொழுது ஒற்றேபர் வாதிகளுடைய போக்கில் மாற்றமொன்று தோன்றியது. இதுவரையும் ஒற்றேபர் வாதிகள் அரசாங்கத்தை ஆதரித்தனர். ஆனால் 1905 ஆம் ஆண்டு ஒற்றேபர்க் கொள்கை வெளிப்பகர்ப்பை அரசாங்கம் நடைமுறையில் கொண்டுவரத் தவறியபடியால் இவர்கள் அரசாங்கத்தை எதிர்ப்பதில் முனைந்து நின்றனர். நாங்கள் ஏலவே கண்டுகொண்டபடி. மக்களின் குடிவாழ் உரிமையை அதிகாரிகள் மீறுவதைத் தடுப்பதையும், மனச்சாட்சிச் சுதந்திரத்தையும், பேச்சுச் சுதந்திரத்தையும் பொதுக் கூட்டம் கூடும் உரிமையையும், கழகங்கள் நிறுவும் உரிமையையும், பாராளுமன்றிற்குரிய தேர்தற் சுதந்திரத்தையும், "புறநடையான" சட்டங்கள் மூலம் நடக்கும் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதையும் இந்த ஒற்றேபர் வெளிப்பகர்ப்பு உறுதி செய்தது. 1916 ஆம் ஆண்டில் முற்போக்குக் கோட்டியொன்று அமைக்கப்பட்டது. இக்கோட்டியானது மேல்நாட்டு வாழ்க்கையின் அத்திவாரமாகத் திகழ்கின்ற குடியாட்சிக்குரிய சுதந்திரக் கருத்துக்களை இரசிய அரசியலிற் புகுத்துதற்கு முயற்சிப்பவர்களின் வேலையைப் பலப்படுத்தும் நோக்கத்துடனேயே அமைக்கப்பட்டது.

மூன்றாவது தூமா (1907–1912).

நாலாவது தூமா (1912–1917).

சீர்திருத்த இயக்கம் புரட்சியில் முடிதல்.

நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் இரசியாவில் இருந்த சீர்திருத்த இயக்கத்தின் வரலாற்றை இதுவரையும் எடுத்துக் கூறி ஆராய்ந்தோம். பாராளுமன்றிற்குரிய சுந்திரமான நிறுவகங்கள் இரசிய நாட்டிலிருந்த முன்னேற்றச்சத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் உறுதிபெற வாய்ப்பளிக்குமென நம்பியிருந்தோர் எல் 1917.
லோரும் சீர்திருத்த இயக்கத்தின் முன்னேற்றத்தை அனுதா
பத்துடன் நோக்கினர். நாகரிகமுடைய மக்களுக்குரிய பொது
உரிமைகளை யூதமக்களுக்கு வழங்குவதற்கு இடையூறுயிருந்த
தடைகளை[1] அகற்றியமையாலும் போலந்திற்கும் பினிலாந்திற்
கும் மீண்டும் சுதந்திரத்தை வழங்கியமையாலும் இரசியா
நலிவுறுது பலம் பெற்றது. "இரசியாவினுடைய கௌரவமும்
பொதுநலமும் சுதந்திரத்தையும் அதிகாரத்தையும் வேண்டி
நிற்கின்றன என்பதும், அவை இரண்டையும் ஐக்கியப்படுத்
தக்கூடியது சட்டம் ஒன்றே என்பதும் எத்துணை விரைவாக
உணரப்படுகின்றனவோ அத்துணை எளிதாக, உலகத்தின்
கதியை நிருணயிப்பதில் பெரும் பொறுப்புடைய ஒரு நாட்டினை
எதிர்நோக்கி நிற்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்கலாம்,"[2] எனப்
புகழ்பெற்ற இரசிய அறிஞனொருவன் எழுதுமிடத்து தன்
னுடைய நாட்டில் உள்ள தாராளப் போக்குக் கட்சியினரின்
கருத்தை வெளியிட்டான். கிடைத்த வாய்ப்பை உடனே பயன்
படுத்த வேண்டிய இன்றியமையாமையை உணராத சாருடைய
ஆட்சியினால் சீர்திருத்த இயக்கமானது புரட்சி இயக்கமாக
விருத்தியடைந்தது (1917). இந்தப் புரட்சியானது முடியாட்
சியை மட்டுமன்றி இரசியச் சமூக அமைப்பையும் அழித்தது.

---

1 See L. Wolf, "The Legal Sufferings of the Jews in Russia" (with an Introduction by A. V. Dicey, 1912).

2 Vinogradoff, op. cit. 276.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் IV

ஒசுற்றிய -- அங்கேரியின் இன, யாப்புப் பிரச்சினைகள்

(1815–1867)

1815–48. ஆபிசுபேக்கு முடியாட்சியின் இயல்பு.

ஐரோப்பாவில் உள்ள வேறு எந்த நாட்டின் வரலாற்றிலும் பார்க்கஒசுற்றிய — அங்கேரியின் வரலாறு சிக்கல் நிறைந்தது. இத்தாலியின் வரலாற்றிலோ சேர்மனியின் வரலாற்றிலோ காணப்படும் தொடர்ச்சி இந்த நாட்டின் அபிவிருத்தியில் இல்லை. இந்த நாட்டின் வரலாற்றில் ஐக்கியமும் தொடர்ச்சியும் குன்றியிருந்தன. இதன் முக்கிய காரணம் யாதெனில் ஒசுற்றியா ஒரு நாடாகவில்லாது "முடியாட்சி இயந்திரமா"க இருந்தமையேயாகும். இந்த முடியாட்சியில் எத்தனை நாட்டினங்கள் இருந்தனவோ அத்தனை பிரச்சினைகளும் இருந்தன. ஒரு வகையில் இதன் வரலாறு ஒப்பற்றது. எனைய பேரரசுகள் வாள்முனைத் திறத்தினாலோ குடியேற்ற முறையினாலோ நிறுவப்பட்டன. ஆனால் ஒசுற்றியப் பேரரசு முக்கிய மாகத் திருமணங்களின் விளைவு என்க. இதன் அத்திவாரம் பதின்மூன்றும் நூற்றாண்டில் இடப்பட்டது. அப்பொழுது ஆபிசுபேக்குக் குலப்பெருமகனை முதலாம் இறுதொல்பு பரிசுத்த உரோமப் பேரரசின் பேரரசனாகத் தெரிவு செய்யப் பெற்றான். தன்னுடைய இராச்சியத்தில் ஒசுற்றியா, சிற்றைரியா, கரிந்தியா, கானியோலா ஆகிய நாடுகளைச் சேர்த்துக் கொண்டான். இவனுக்குப் பின்னர் அரசராயினோர் அங்கேரியையும் பொகீமியாவையும் சேர்த்துக் கொண்டனர். ஆபிசுபேக்கு மன்னர் குலத்தினர் மாறுபடும் தன்மையுடைய தங்களுடைய வரலாற்றுக் காலம் முழுவதும் தங்களுடைய பரம்பரையான ஆட்சிப் பகுதிகளைப் பெருப்பிப்பதற்குத் தங்களுக்கிருந்த பேரரசுக்குரிய மதிப்பைப் பயன்படுத்தித் தந்நலம் பேணும் பூட்கையைத் தளராது தந்திரமாகப் பின்பற்றினர். இந்த வமிசத்தினருடைய ஆட்சியில் நூற்றாண்டுகளாகச் சேர்மானிய நாட்டின அபிவிருத்தி தடைப்பட்டது. எனெனில், ஆபிசுபேக்கர் சேர்மனியின் அரசியல் ஐக்கியத்திற்காகத் தனித்துச் செய்யப்படும் முயற்சிகளை ஊக்குவிக்காது விடுத்தமையால் என்க. அவர்கள் சேர்மானிய அரசியல் முறைமை என்கின்ற ஒழுங்கிலிருந்து சேர்மானிய ஆள்புலத்தைப் பிரித்து வைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயன்றளவு முயன்றனர். இதற்கு அவர்கள் கையாண்ட கொள்கை பிரிப்புமுறை என்க. இந்தப் பிரிப்பு முறையே முன்னர் சேர்மானிய நாட்டை மானியத்திற்குரிய அரசுகளின் தொகுதியாக்கியது. 19 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தின்போது, ஆபிசுபேக்கு முடியாட்சிக்கு இரண்டு பிரச்சினைகள் ஏற்பட்டன. ஒரு புறத்தில் இந்த முடியாட்சியானது சேர்மானிய விவகாரங்களில் தான் பெற்ற செல்வாக்கை இழக்காது பாதுகாக்க முயற்சி செய்தது. இந்தச் செல்வாக்கிற்கு 500 ஆண்டுகளாக எவரும் போட்டியிடவில்லை. ஆனால் பிரசியாவின் படைவலிமைப் புகழ் வளர்ந்து வருவதினாலே இப்பொழுது போட்டி இளம் பியது. மற்றொரு புறத்தில், பல்வேறு அரசுகளைக் கொண்டு உருவான தன் பேரரசு எந்த நேரத்திலாவது உருக்குலைந்து போகக்கூடிய நிலையிலிருந்தமையால் அதனை நன்கு பலப் படுத்த வேண்டியதாக இருந்தது. "என்னுடைய அரசு பாழடைந்த வீட்டைப் போன்றது. ஒரு பகுதியைப் பிரித்து எடுத்தால் வீட்டிலே எந்தப் பாகம் விழும் என்று எவராலும் சொல்லமுடியாது", என இரண்டாம் பிரான்சிசு ஒருமுறை குறிப்பிட்டுள்ளான். சேர்மானிய நாட்டிலே முதன்மை பெறுதற்காக ஒசுற்றியாவும் பிரசியாவும் நடத்திய போராட்டத்தை முன்னரேயே நுணுகி ஆராய்ந்துள்ளோம்[1]. ஒசுற்றிய இராச்சியத்திலிருந்த பல்வேறு நாட்டினங்களின் உள்நாட்டு அபிவிருத்தியை இப்பொழுது ஆராய்வாம். 1815-48.

மெற்றெணிக் கின் உண்ணாட்டுப் பூட்கை.

ஒசுற்றிய மண்டில நாயகனை மெற்றெணிக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த புலவர் எசியெட்டு என்பார் போல் தான் இந்த உலகிலே பிறந்த காலம் ஒன்றில் மிகவும் முந்திவிட்டது, அல்லது மிகவும் பிந்திவிட்டது என மனம் நொந்தான். "முந்திப் பிறந்திருந்தால் அந்தக் காலத்தை நான் அனுபவித்து இன்புற்றிருப்பேன். பிந்திப் பிறந்திருந்தால் காலத்தை மாற்றியமைக்க உதவி செய்திருப்பேன். இன்று இடிந்து தூள் தூளாகும் நிலையிலுள்ள மாளிகையைப் பாதுகாப்பதற்கு என் வாழ்க்கையை மீண்டும் அர்ப்பணிக்க வேண்டியிருக்கின்றது" என எழுதினான்[2]. ஆகவே அவன் ஒப்புக்கொண்டபடி தடுப்பு முறை உண்ணாட்டுப் பாலனத்தின் முக்கிய அம்சமாகும். "ஆட்சி செய்; ஒன்றையும் மாற்றாதே" என்பதே அவனுடைய பேரரசுத் திட்டத்தின் தொடக்கமும் முடிவுமாகும். ஆங்கில அரசறிஞன் ஒருவனுக்கு அவன் பின்

1. II ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.
2 Memoirs, iii. 395.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815-48. வருமாறு கூறியுள்ளான் : " அடக்கு முறை ஒன்றைப் பின் பற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே நாங்கள் தடுப்பு முறைமையைப் பின்பற்றுகின்றோம்..... எந்த விதமான சலுகைகளையும் வழங்கும்படி ஒரு அரசாங்கத் தைத் தூண்டினால் அந்த விதமான சலுகை அந்த அரசாங் கத்தின் வாழ்க்கையின் அடிப்படையைத் தகர்த்து எறிகின்றது என்பதில் எங்களுக்குப் பூரணமான நம்பிக்கை உண்டு..... சலுகைகள் என்னுமிடத்து அவை இறையின் உரிமையோடு மட்டுமே தொடர்புடையவை எனக் கொள்ளல் வேண்டும். தன் னுடைய அரசுகட்டில் உரிமையை இழக்காமல் எந்தவிதமான சலுகையையும் எந்த இறையும் கொடுக்க முடியாது"[1]. உள் நாட்டு நிலையிலே பெரும் நெருக்கடியினால் ஐரோப்பாவில் உள்ள முற்போக்கு இயக்கங்கள் எல்லாவற்றிற்கும் ஒசுற்றியா தடையா யிருக்கும்படி செய்யவும் " யாக்கோபினம் " என்னும் புரட்சி வாதத்தைத் தன் வாழ்நாள் முழுவதும் எதிர்ப்பதற்காக ஒசுற்றிய முடியாட்சியின் வளம் முழுவதையும் அர்ப்பணிக்கவும் வேண்டிய வலுக்கட்டாயமான நிலை மெற்றெணிக்கிற்கு ஏற் பட்டது. உண்ணாட்டில் அடக்குமுறைப் பூட்கையைக் கையாண்டு கொண்டு நாளடைவிலே சேர்மனியிலோ வேறெங்கோ தாராண் மையைப் பின்பற்றுவது இயலாது என்பதை அறியும் ஆற்றல் இவனுக்கிருந்தது. இரசியப் பேரரசன் அலச்சாந்தரும் இதனையே செய்ய முயன்றான். அங்ஙனம் முயன்றதனால் அவனுடைய போலந்து மாகாணங்களில் ஏற்பட்ட விளைவு ஆபத்தானது.[2] இதே கொள்கையைத் தருக்க முறையான முடிவுவரை மெற் றெணிக்கு பின்பற்றினான். புரட்சிப் பரநெறி, தன்னுடைய கொள்கையைப் பாதிக்கவிடாது தடுத்தான். உண்ணாட்டுப் பூட் கையிற் போல் பிறநாட்டுப் பூட்கையிலும் ஐரோப்பாவிலும் ஒசுற்றியாவிலும் நிறுவப்பெற்றுள்ள ஆட்சி முறையைப் பாது காப்பதற்காக அவன் தான் பின்பற்றும் வழியைக் குறித்த பின்னர் அதிலிருந்து ஒருபொழுதும் பிறழவில்லை.

ஒசுற்றியாவில் மாற்றங்கள் ஏற்படாமை.

" ஆசியா இலாந்திரசியிலே[3] தொடங்குகின்றது " என்பது மெற்றெணிக்கின் புகழ்பெற்ற கூற்று. ஒசுற்றிய அரசின் ஆற்ற லின்மையை இக்கூற்று, பொழிப்பாக விளக்குகின்றது. யாப்புறு ஆட்சியின் தத்துவங்கள் ஆசியாவுக்கு முடியாட்சியில் அதிகம் பலனளிக்கவில்லை. குடித்திணைகள் எனக்கும் உண்டு. அவற்றின்

---

1 Cited, A. F. Pollard, "The Germanic Federation" in Camb. Mod Hist. x. 355 seq.

2. பக்கம். 309

3. வியன்னா நகர்ப்புற எல்லையில் உள்ள பிரதேசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளவரசன் மெற்றெனிக்கு (1773–1859)
சேர் தி உலோரன்சின் சித்திரங்களிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்பை நான் பாதுகாக்கின்றேன். அவற்றுக்கு நான் தொல்லை 1848.
கொடுப்பதில்லை. ஆனால் அவை அத்துமீறின் நான் சீற்றங் கொண்டு அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைப்பேன், என ஒசுற்றிய மன்னன் பிரான்சிசு கூறினான். சேர்மனியில் மீட்சியின் பொருட்டுப் பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்த அதே நேரத்தில் ஒசுற்றியாவில் அமைதி நிலவியது. பழைய முறையிலே ஒசுற்றிய வாழ்க்கை நடந்துகொண்டிருந்தது. பிரசியாவின் பூட்கையைப் போன்ற பூட்கையைத் தொடக்க எவ்வகையான முயற்சிகளும் செய்யப்படவில்லை. சத்திவாய்ந்த பாலன முயற்சியைக்காட்டி யாப்புச் சீர்திருத்தத் தேவையை நிறைவேற்ற ஊக்கம் காண்பிக்கப்படவில்லை. ஊழியர்கள் மேற்கொண்ட முயற்சியையும் காட்டிய ஊக்கத்தையும் முடியாட்சி கெடுத்தது. அரசின் தொல்லை நிறைந்த பாலன சாதனம் பெரும்பாலும் செயலற்ற நிலையிலிருந்தது. பணிக்குழுவாட்சிக்குரிய கெடுதல்கள் எல்லாம் ஒசுற்றியாவைப் பீடித்திருந்தன. பணிக்குழுவாட்சியை மக்களின் அறிவாற்றல் நிறைந்த கண்டனங்கள் தூண்டாவிடின் அவ்வாட்சியின் திறமை குறையும். இதனால் ஏற்படுகின்ற கெடுதல் ஒசுற்றியாவையும் பீடித்தது. அரசு மாநாடு, அரசுக்கழகம், பல்வேறு அரசாங்க அலுவற்பகுதிகள் ஒன்றுக இயங்குவதற்குப் பதிலாகத் தனித்துச் சுதந்திரமாக இயங்கின. உண்மையில் ஒசுற்றிய அரசாங்க முறையில் எல்லாத் திசையிலும் தேக்கம் ஏற்பட்டது. இந்த அரசாங்க முறை எதுவிதமாற்றத்துக்கும் சிறிதுகூட இடங்கொடுக்கவில்லை. கைத்தொழிலும் வணிகமும் விருத்தியடையவில்லை. கல்வி கீழ்மட்டத்திலிருந்தது. ஆரம்ப பாடசாலைகள் இருந்தபோதும் உயர்தரக் கல்வித்துறைகளுக்கு ஆதரவு கிடைக்கவில்லை. "எனக்கு ஊழியம் புரிபவர்கள் நான் இடுகின்ற கட்டளையை மற்றவருக்குக் கற்பிக்க வேண்டும்" எனப் பிரான்சிசு கூறினான். பல்கலைக்கழகக் கல்வி பொலிசாருடைய கடுமையான கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டது. பொதுமக்களின் அலுவல்கள் பற்றிக் கருத்துத் தெரிவிக்க எந்தவிதமான சந்தர்ப்பமும் கொடுபடவில்லை. "பத்திரிகைச் சுதந்திரம் என்பது எல்லாவற்றையும் அழிக்கின்ற நிரந்தரமான ஆபத்து. இந்த ஆபத்து நாள்தோறும் எதிர்நோக்கி நிற்கின்றபோது எந்த அரசாங்கமும் தன்னுடைய அலுவல்களை நெறி பிறழாமல் உறுதியுடன் நிறைவேற்ற முடியாது" என்னும் கருத்தை மெற்றெணிக்கு வற்புறுத்தினான்.

மெற்றெணிக்கு கையாண்ட புகழ்பெற்ற முறைமையிலே அடிப்படையான குறைபாடு இருந்தது. இறுதியாக வரும் ஆபத்தை மெற்றெணிக்கின் முறைமை பிற்போடக்கூடும். ஆனால் 1848 புரட்சிக்குக் காரணங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848. அதைத் தவிர்த்திருக்க முடியாது. ஐக்கியம் என்கின்ற பொய்யான வெளித் தோற்றத்தை இந்த முறைமை பெற்றுக் கொடுத்தது. ஆனால் இந்த ஐக்கியத்தை, அதிருத்திக்குரிய மூல காரணங்களை அறிந்து அவற்றை அறவே நீக்குவதன்மூலம் அவன் பெறவில்லை. அதற்குப் பதிலாக அதிருத்தியடைந்த சத்திகளைப் பலாற்காரமாக அடக்கினன். இதனால் எழுந்த போலித்தோற்றமே ஐக்கியம். புரட்சிச் சத்திகள் கண்ணுக்குத் தெரியாது திரை மறைவிலிருந்து தலைமறைவாகச் செயலாற்றத் தொடங்கின. இறுதியிலே, புரட்சி எரிமலை வெடிப்பது போல வெடித்தெழுந்தது. இதனை அடக்குவது இயலாத காரியம்; எனெனில் நீண்டகாலமாக அடக்கி வைத்திருந்த படியால் புரட்சி பலத்துடன் வெளிப்படலாயிற்று. இந்தப் புரட்சிச் சத்திகள் மிகவும் சிக்கலானவை. 1848 ஆம் ஆண்டு நிகழ்ந்த புரட்சியின் பல்வேறு காரணங்களைக் கவனமாக ஆராய்தல் அவசியம்.

(1) அறிவு மிக்கவரின் அமைதியின்மை.

(1) முதலாவதாக, தாராளபோக்குக் கொள்கைகளைப் பரவ விடாது தடுப்பதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சிகள் யாவும் ஓரளவிலேதான் வெற்றியளித்தன. "ஒசுற்றிய நாட்டின் எல்லைகள் எங்கெல்லாம் சீர்திருந்திய நாடுகளின் எல்லைகளோடு பொருந்தினவோ அங்கெல்லாம் சுங்க அதிகாரிகளோடு இலக்கியத் தணிக்கையாளரும் நியமிக்கப்பட்டனர். இதனால் எந்தப் புத்தகமும்[1] செய்தித்தாளும் ஒசுற்றிய எல்லைக்குள் புகமுடியாது. புத்தகங்களையுஞ் செய்தித்தாள்களையும் இரண்டு அல்லது மூன்று முறை வாசித்துப் பார்த்து, புரட்சி யுகத்தின் கெடுதல் விளைக்கும் அம்சம் சற்றேனும் இல்லையென்றறிந்த பின்னரே உட்புகு உத்தரவு கொடுத்தார்கள்", எனக் காள்மாக்குசு எழுதினன். எல்லா முற்போக்கு இலக்கிய நூல்களையும் தடுப்பது இயலாத காரியம். தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டபடியால் இந்த நூல்களின் கருத்துக்கள் கல்வி கற்றவர்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தன. கல்வி கற்றோரிடை நிலவிய அமைதியின்மையைப் பல்கலைக் கழகங்கள் ஒருமுகமாக எடுத்துக்காட்டின. நாட்டில் உள்ள பல்வேறு சத்திகளின் அதிருத்தியையும் பல்கலைக்கழக அமைதியின்மை தூண்டிற்று. பெரும்படியாக நோக்குமிடத்து மசினி கூறியதுபோல "இடம்விட்டு இடம் பெய

---

[1]. கலம் என்னும் ஆசிரியர் எழுதிய நூல்கள் கூட மிகவும் தாராளமான போக்குடையவை என்ற காரணத்தினால் தடுக்கப்பட்டன: **Seignobos, "Contemporary Europe" (Eng. ed. 1901), ii. 405.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராத சீனத்துத் தத்துவம்"[1] என ஒசுற்றியா காட்சியளித்தது. 1815-48.
ஆலை மசினியின் காலத்தில் வாழ்ந்த மாக்குசு ஒசுற்றியா பற்றித் தீட்டிய சித்திரம் வேறுவகையாக இருந்தது. அது பின்வருமாறு: "மெற்றெணிக்கின் முயற்சிகள் எல்லாவற்றையும் திணறடிக்கக் கூடிய தலைமறைவான இயக்கம் ஒன்று இருந்தது. உற்பத்தியாளர், வணிகஞ் செய்யும் மத்திய வகுப்பினர் ஆகியோரின் செல்வமும், செல்வாக்கும் கூடியது. இயந்திரங்களையும், நீராவிச் சத்தியையும் உற்பத்தித் தொழிலில் புகுத்தியதும், எனைய நாடுகளில் எற்பட்டதுபோல் ஒசுற்றியாவின் நிலையும் ஒசுற்றியாவின் சமூகத்தின் பல்வேறு வகுப்பினரின் பழைய தொடர்பும் வாழ்க்கை நிலையும் குலைந்தன. அடிமைகள் சுதந்திர மனிதராயினர். சிறிய கமக்காரர்கள் கைத்தொழில் உற்பத்தி மேற்பார்வையாளராகினர். நிலமானியமுறைக் காலத்திலிருந்த தொழில் நிலையங்களை இம்மாற்றம் அழித்தது. இந்நிலையங்கள் பல இயங்குவதற்கான வழிகளையும் அழித்தது. பழைய நிலமானியமுறைக்காலத்திலிருந்த நிலையங்களுக்கும் புதிய வர்த்தக உற்பத்தித் தொழிலில் ஈடுபட்ட மக்களுக்கும் மோதல் ஏற்பட்டது. புதிய மத்திய வகுப்பினர் தம் தொழில் நிமித்தமாகப் பிறநாடுகளுக்குப் பிரயாணஞ் செய்யும்படி தூண்டப்பட்டனர். ஒசுற்றியப் பேரரசின் சுங்க எல்லைக்கப்பாலிருக்கின்ற திருந்திய நாடுகளைப் பற்றிக் கட்டுக் கதைகளை இவ்வகுப்பினர் பரப்பினர். புகைவண்டிப் போக்குவரத்து ஏற்பட்டதும் கைத்தொழில் இயக்கமும் அறிவாற்றல் இயக்கமும் துரிதமடைந்தன. ஒசுற்றிய இராச்சிய அமைப்பிலும் ஆபத்து இருந்தது. இவ்வாபத்து பழைய நிலமானிய முறையை ஒட்டிய அங்கேரிய யாப்பினால் ஏற்பட்டது எனலாம். இந்த யாப்பு பாராளுமன்ற நடவடிக்கைகளையும், அரசாங்கத்தார், அவர்களின் நட்பாளராகிய தொழிலதிபர்கள் ஆகியோருக்கும் வலியிழந்த பெருந்தொகை விழுமியோருக்கு மிடையில் போராட்டத்தையும் கொண்டதாய் இருந்தது. அங்கேரியப் பாராளுமன்றத்தின் இருப்பிடமான பிரசுபேக்கு வீயன்னாவுக்கு வெகு அண்மையில் இருந்தது. இந்தச் சத்திகள் எல்லாம் ஒன்று சேர்ந்து நகரங்களில் உள்ள மத்திய வகுப்பினரிடை அதிருப்தியை உண்டாக்கின. ஏனெனில் இந்தச் சத்திகள் சரியாக எதிர்ப்பைத் தெரிவிக்க இயலாத நிலையிலிருந்தன. இந்தச் சத்திகள் யாப்புச் சீர்திருத்தத்திலும் பார்க்கப் பாலனத்திற்குரிய சீர்திருத்தத்தையே பொதுவாக விழைந்து நின்றன..... இச் சீர்திருத்தத் திட்டங்கள் அரசியல் அனுபவமின்மையைப் புலப்படுத்துவனவாக இருந்தன. ஒசுற்

1 J. Mazzini, "Italy, Austria and the Pope" (1845), 22.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1846-48. றியாவினல் யாப்பையும் பத்திரிகைச் சுதந்திரத்தையும் அடைய முடியாது எனக் கருதப்பட்டது. பாலனத்திற்குரிய சீர்திருத்தம், மாகாண மன்றங்களின் உரிமைகளைப் பெருப்பித்தல், வெளிநாட்டு நூல்களையுஞ் செய்தித் தாள்களையும் ஒசுற்றியாவுட் புகவிடல், செய்தித்தாள் தணிக்கையின் கடுமையைக் குறைத்தல் ஆகியவற்றையே பணிவும் பற்றுறுதியும் நிறைந்த ஒசுற்றிய மக்கள் விரும்பி நின்றனர். இதற்கு மேல் ஒன்றையும் அவர்கள் விரும்பவில்லை."[1]

(2) விவசாய அதிருத்தி. (2) ஆனல் அரசியற் சீர்திருத்தம் மட்டுமே இந்த நிலையில் மிக முக்கியமான தேவையாக இருக்கவில்லை. மறுமலர்ச்சி இல்லாது புரட்சி இருக்க முடியாது என்பது உண்மை; இதில் ஐயப்பாடில்லை. அடிமையாக, எதுவந்தாலும் வரட்டும் என வேண்டா வெறுப்பாக இருப்பவர்களைத் தட்டி எழுப்ப அறிவியல் சார்ந்த ஊக்குச் சத்தி தேவை என்பதும் ஐயத்திற்கப் பாற்பட்டது. இருந்தபோதும் பொருளாதார நெருக்கடி யின்றிப் புரட்சி செய்ய முடியாது என்பதும் உண்மையே; ஏனெனில் மக்கள் கூட்டம் ஏதாவது ஒருவகைப் பொருளாதார நெருக்கிடையின்றிப் புரட்சி செய்ய முற்படாதாதலால் என்க. மக்கள் இயல்பில் பழமை பேணுந் தன்மையுடையவர்கள். அரிதாகவே பொருளாதார நெருக்கிடையின்றி உணர்ச்சி வசத்தராகப் புரட்சி செய்யக் கிளம்புவர். 1848 ஆம் ஆண்டில் இந்த ஒசுற்றிய இயக்கத்திற்கு முதலில் உந்து சத்தியாக இருந்தது விவசாய அதிருத்தி. நிலமானிய முறை என்னும் அடிமை விலங்கிலிருந்து விடுதலை பெற உழவர்கள் விரும்பி நின்றனர். உழவர்களுடைய விடுதலை விருப்பத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவது புரட்சியின் நோக்கமாகும். உழவர்களுடைய குறைபாடுகள் நீக்கப்பட்டதும் புரட்சி கைவிடப்பட்டது. அரசாங்கம் வழக்கமான செயல்களிற் புலனைச் செலுத்தியிருந்தது. புதிய செயலெதையும் மேற்கொள்ளாத மனநிலையையுங் கொண்டிருந்தது. உழவர்களின் பொருளாதாரச் சோர்வை அகற்ற எவ்வகையான நடவடிக்கையும் எடுக்க அரசாங்கம் தவறியது. 1846 ஆம் ஆண்டில் போலந்தைச் சேர்ந்த கலிசியாவிலுள்ள போலியப் பிரபுக்கள் உள்நாட்டுக் கலகம் ஒன்றை ஒசுற்றியாவிற்கு எதிராக விளைவித்தனர். அப்போது கிராம மக்களின் நிலையைச் சீர்திருத்துதற்குக் கிடைத்த அருமையான வாய்ப்பை அரசாங்கம் இழந்தது. உழவர்களுடைய உதவியோடு கலகம் அடக்கப்பட்டது. தாங்கள் வெறுக்கின்ற எசமானரான பிரபுக்கள் மீது வஞ்சம் தீர்க்க இந்த வாய்ப்பை உழவர்கள் வரவேற்றனர்.

1 Marx, "Revolution and Counter-Revolution," 36–38.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமானியமுறைக் கப்பம் கட்டும் வழக்கத்தை ஒழிப்பதன்மூலம் தங்களுக்குக் கைம்மாறு கிடைக்கும் என உழவர் எதிர்பார்த்தனர். எதிலும் தலையிடாத வழமையான பூட்கையை அரசாங்கம் பின்பற்றியதும் உழவர் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். அரசாங்கத்தின் எதிரிகளுக்குக் கிராம மக்களின் அதிருத்தி பலமான ஆயுதமாயிற்று. இந்த ஆயுதத்தை அவர்கள் தங்களுக்கு நன்மை தரக்கூடிய வழியில் நன்கு பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. இங்ஙனம் அரசியற் காரணிகளும் பொருளாதாரக் காரணிகளும் கலந்து நின்றநிலை நீடிக்கும்வரையும் அதனை எவரும் வெல்லமுடியாது என்பது உறுதி. 1848.

மெற்றெணிக்கின் வீழ்ச்சி.

பிரான்சிலே ஒலியன்சுக் குலத்தினருடைய ஆட்சியின் வீழ்ச்சி வீயன்னாவிலே புரட்சி தொடங்குவதற்கு அறிகுறியாக விருந்தது. மார்ச்சுத் திங்கள் 12 ஆம் நாள் இரண்டு பேராசிரியர்கள், பேரரசனுக்கு விண்ணப்பம் ஒன்று சமர்ப்பித்ததுடன் பல்கலைக் கழகம் இதற்கு வழிகாட்டிற்று. யாப்புறு ஆட்சி ஒன்றை மக்களுக்காக அவர்களுடைய பிரதிநிதிகள் கோரி நின்றனர். தெருக்களிலெல்லாம் மக்கள் திரள் திரளாகக் கூடி நின்றனர். புரட்சி என்னும் பெரு நெருப்பை மூட்டுவதற்கு ஒரு சிறு பொறி போதும். இதற்குத் தாமதம் எதுவும் இருக்கவில்லை. வழமையாக நடப்பதுபோல மக்கட் கூட்டம் படைகளுடன் கைகலந்தது. இக் கைகலப்பில் பலர் உயிரிழந்தனர். இதன் விளைவாக மக்களின் பரபரப்பு உச்சநிலையை அடைந்தது. தலைநகரிலே அரசறவு தனி ஆதிக்கம் செலுத்தியது. தான் எந்தப் பேரரசுக்கு விசுவாசத்துடன் ஊழியம் செய்தானோ அந்தப் பேரரசே தன்னைக் கைவிட்டதை மெற்றெணிக்குக் கண்டான். அவன் தன்னுடைய பதவியை விட்டுப் பிறநாட்டிற் சரண் அடையவேண்டிய நிலை ஏற்பட்டது. அரசறிஞன் என்ற முறையிலே அவன் செய்த தவறுகள் பெருந்தவறுகளாகும். ஒருதலைமுறை காலமாக ஐரோப்பாவிலே அரசமைப்பு அபிவிருத்தியைத் தடைசெய்த பிற்போக்கு அரசியல் முறையுடன் இவன் தொடர்புடையவனாயிருந்தான். இதனால் இவனுடைய தகைமையைக் காய்தல் உவத்தலின்றிச் சீர்தூக்கிப் பார்ப்பது இப்போதும் கடினமாக இருக்கின்றது. எனினும் இவனினுடைய அருஞ் செயல் ஒன்று இவனுக்குச் சாதகமாகும். தான் பதவி வகித்த நீண்டகாலம் முழுவதும் ஐரோப்பிய அமைதியை நிலைநாட்டப் பெரிதும் உழைத்தான். நெப்போலியனின் போர்களினால் சின்னபின்னப்பட்டிருந்த ஐரோப்பாவிற்கு அமைதி தேவைப்பட்டது. இவ்வமைதியை அவன் ஐரோப்பாவிற்கு அளித்தான். புரட்சியின் முதலாவது வெற்றி, கிழவனாகிய மண்டிலநாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848. களை மெற்றெணிக்கின் வீழ்ச்சியாகும். இதனைத் தொடர்ந்து விரைந்து வெற்றிகள் கிடைத்தன. ஒசுற்றிய அரசியல் அமைப்பு முழுதும், எதிர்பாராத வகையில் இலகுவாகக் குலைவுற்றது. பேரரசு விடுத்த பொது அறிவிப்பு மட்டற்ற சலுகைகளைப் பற்றித் தெரிவித்தது. இப்பொழுது அறிவிப்பு யாப்பு ஒன்றைத் தருவதாக உறுதி செய்தது. அதுமட்டுமல்லாமல் தாராள போக்கின் முதற்படியாக உடனே செய்தித்தாட் சுதந்திரத் தையும் உள்ளூர்ப் பாதுகாப்புப் படையையும் நிறுவியது. அத்துடன் பேரரசின் பல்வேறு மாகாணங்களில் உள்ள உள்ளூ ராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட இணைப்பு மன் றம் ஒன்றையும் கூட்டுவித்தது. வீயன்னாவின் பாலன அலுவலை இருபத்து நான்கு குடிமக்களைக் கொண்ட ஒரு குழு நடத்தி யது. இதற்குச் சாதனமா யமைந்தவை உள்ளூர்ப் பாது காப்புப் படையும் கல்விக் கழகமுமாகும். கல்விக் கழகத்தில் பல்கலைக் கழக மாணவர் இருந்தனர். குறித்த பிரதிநிதித்துவ நிறுவகங்களின் இணைப்புக் கூட்டத்திற்காகக் காத்திராமல் எப்பிரில் 25 ஆம் நாள் புதிய யாப்பை அமைச்சு வழங்

புதிய யாப்பு. கிற்று. பிரமுகர்களைக் கொண்ட மன்றத்திடம் இந்தயாப்பு ஒப்படைக்கப்பட்டது. இம்மன்றம் இவ்வியாப்பை முதன்முறை பரிசீலனை செய்தபோது போதுமான அளவிற்கு நிபந் தனைகளைக் கொண்டதாகவே தோன்றியது. ஒசுற்றிய அரசின் பிரிக்கமுடியாத ஐக்கியத்தை இந்த யாப்பு பிரசித்தஞ் செய்தது. இந்த இராச்சியத்தில், திருன்சிலேத்தேனியன் ஆணிலங்கள்– அதாவது அங்கேரி, குரோசியா, திரான்சில்வேனியா–புற நீங்கலாக ஆபிசுபேக்குப் பேரரசுப் பிரதேசம் முழுதும் அடங்கும். இந்தப் பொது அறிவிப்பு தனியாட்சியை யாப்புறு முடி யாட்சியாக மாற்றியது. தனிப்பட்ட மனிதனின் முடியுரிமையும் மதச் சுதந்திரமும் இந்த முடியாட்சியின் அடிப்படையாக இருந் தன. மாகாண மன்றங்களை ஒழிக்காது பொதுப் பாராளுமன்றம் ஒன்றையும் இது நிறுவியது. இந்தப் பாராளுமன்றத்தில் இரு சபைகள் இருந்தன. அமைச்சுப் பொறுப்பு என்ற தத்து வத்தையும் இது ஏற்றுக்கொண்டது. இந்தப் புதிய யாப்பு சிறப்பான முன்னேற்றத்தைக் குறித்தது என்பதில் ஐயமில்லை. இருந்தும் இதனாலே அதிக அதிருத்தியும் ஏற்பட்டது. "பிர தானிகளின் இனம் வகை தெரியாத யாப்புடனும், பழைய முறைப்படி பாராளுமன்றத்தை இரு சபைகளாகப் பிரிக்கின்ற தேர்தற் சட்டத்துடனும்" வீயன்னைக் குடியாட்சி எவ்வகை யான தொடர்பும் வைத்திருக்கப்படாது என்ற கருத்துப் பிறந் தது. நிருவாக அதிகாரத்தைத் தகாத முறையிற் கைப்பற்றிக் கொண்டிருந்த குடியாட்சிக்குரிய நிலையமான மத்திய அரசியற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவைக் குலைப்பதற்காகச் செய்யப்பட்ட முயற்சி மீண்டும் மே 15 ஆம் நாள் புதிய கலகமொன்றை எற்படுத்தியது. இதனல் அடிபணிந்த அரசாங்கம் மத்திய அரசியற் குழுவைப் பழைய நிலைக்குக் கொண்டுவந்தது. அதுமட்டுமன்றி சருவசன வாக்குரிமையையும் வழங்கி, இருமன்றங்களைக் கொண்ட பாராளுமன்றத்திற்குப் பதிலாகத் தனிச் சபையைக் கொண்ட பாராளுமன்றத்தையும் நிறுவியது. இளர்ச்சி மூலம் தம்மை நெருக்கி, இந்தச் சலுகைகளைத் தம்மிடமிருந்து வலிந்து பெற்றுக்கொண்டதைப் பேரரசு மன்றம் பெரிதும் வெறுத்தது. பேரரசன் தனக்கு எதும் ஆபத்து எற்படக்கூடும் எனப் பயந்து வீயன்னவிலிருந்து இன்சுபுருக்குக்குத் தப்பியோடினன். இவனைப் பின்பற்றி உயர்குடியினரும் மத்திய வகுப்பினரும் ஓடினர். "இங்கு புரட்சிக்கு எதிரான இயக்கம் தஞ்சமடைந்தது. இங்கு இந்த இயக்கத்திற்கு எவ்வகையான கட்டுப்பாடும் இல்லை; எவரும் இதனைக் கவனிக்கவில்லை; இடையூறில்லாது இந்த இயக்கம் தொடர்ந்து வலுப்பெற்றது. அங்கும் இங்குமாகத் தனித்தனியாக இருந்த தன் சத்திகளை இந்த இயக்கம் திரட்டிக் கொண்டபின்னர் தன்னுடைய சூழ்ச்சி வலையை நாடெங்கும் தொடர்ந்து விரித்தது. இராடெக்கி, இயெலாசிக்கு, விண்டிசிக்கிரற்று ஆகியவர்களுடன் மீண்டும் தொடர்பு எற்படுத்தப் பெற்றது.... சிலாவு இனத் தலைவர்களுடன் மீண்டும் சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. புரட்சி எதிர் இயக்கத்தின் வசம் உண்மையான பலம் வாய்ந்த சத்தி இருந்தது. வீயன்னவில் உள்ள அமைச்சர் செயலற்று இருந்தனர். அவர்களுக்கு இருந்த குறைந்த செல்வாக்குத்தானும் புரட்சிக் கும்பலுடன் நாளுக்கு நாள் ஏற்பட்ட இடைவிடாத பூசல்களால் அருகிற்று. இவ்வாறுக, தலை நகரான வீயன்னவிலே ஏற்பட்ட புரட்சி இயக்கத்தை அப்போதைக்கு அதன் போக்கிற் செல்லவிடுகின்ற பூட்கை ஏற்பட்டது. இப்படியான பூட்கையோவெனில் ஒரே தன்மையான மையவாட்சி நிலவுகின்ற பிரான்சிலே பின்பற்றப்பட்டிருந்தாற் கண்டிப்பாகப் புரட்சி இயக்கத்தின் வலிமையை எங்கும் பெருக்கியிருக்கும். ஆனல் ஒசுற்றியா பல்வேறு தரப்பட்ட அரசியற் கொள்கைகளின் உறைவிடம். எனவே இங்ஙனம் விடுவதே பிற்போக்குவாதத்தின் பலத்தை ஒன்றுகத் திரட்டுவதற்குரிய இடையூறில்லாத வழிவகையில் ஒன்றுகும்."[1]

1848.
மே 15 கலகம்.

பேரரசன் சென்ற சில நாட்களுக்குப்பின், அமைச்சர் குழுவினர் தம் வலியின்மைக்கு எடுத்துக் காட்டாக ஒரு செயலில் இறங்கினர். அதாவது புரட்சியின் போது பல்கலைக்கழக

பொதுப் பாராளுமன்றம் கூடுதல்.

1 Marx, op. cit. 76–77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848. மாணவர் நிறுவிய கழகத்தைக் கலைக்க முயற்சி செய்தமையாகும். இந்தக் கழகமே புரட்சி இயக்கத்தின் மூலசத்தி. அம்முயற்சியில் அமைச்சர் குழு படுதோல்வியுற்றது. இதனால் அக்குழுவின் இறுதியான அதிகாரம் அழிந்தது. இதன் விளைவாக இராச்சிய அலுவலைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு, புதிய பொதுப்பாதுகாப்புக் குழுவினதாயிற்று. யூலை 22 ஆம் நாளன்று பொதுப் பாராளுமன்றம் திறக்கப்பட்டது. இது சருவசன வாக்குரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டது. ஆதலால் இப்பாராளுமன்றத்தில் சிலாவு இனத்தினர் பெரும்பான்மையினராகவும், சேர்மானியக் குடியாட்சிவாதிகள் சிறுபான்மையினராகவும் இருந்தனர். ஒசுற்றிய அரசறிஞருடைய திறமையைப் பரிசோதிக்கக் கூடியதாக அரசியல் நிலை மிகவும்நெருக்கடியாக விருந்தது. நாட்டின விடயங்கள் சிக்கல் நிரம்பியனவாக, நிலை மேலும் சிக்கல் நிறைந்ததாயிற்று. மகியார்மக்கள் வேனய சாதியினருடன் மோதியதால் அங்கேரிய இயக்கம்[1] எங்ஙனம் அழிந்தது என்பதைப் பின்னர் பார்க்கலாம். ஒசுற்றியாவில் உள்ள நிகழ்ச்சிகளின் போக்கும் அதேதன்மையைத்தான் தெளிவாகப் புலப்படுத்திற்று ; ஒசுற்றியப்பாராளுமன்ற அரங்கிலே எற்பட்ட போட்டி சேர்மானிய மக்களும் சிலாவு மக்களும் சந்து செய்ய முடியாத வளவிற்குப் பிளவுற்றிருந்தனர் என்பதைக் காட்டிற்று. இந்த நாட்டினவாதிகளிடை எற்பட்ட பிளவு பிற்போக்குச் சத்திகளுக்கு வாய்ப்பாக இருந்தது.

மாறுபட்ட நாட்டின ஆசைகள்.

சேர்மானியக் குடியாட்சிவாதிகள் நாட்டின இயக்கம் என்னும் மந்திரத்தாற் கட்டுண்டிருந்தனர். பிளவுற்றிருந்த சேர்மானியப் பிரதேசம் முழுவதையும் தனித்தலைமையில் ஒன்றுசேர்த்து ஐக்கியச் சேர்மனியை உருவாக்குவதே இந்த இயக்கத்தின் நோக்கம். ஒசுற்றியாவைச்சேர்மனியுடன் ஒன்று சேர்க்க இந்த இயக்கத்தினர் விரும்பினர். பிராங்குபோட்டுச் சபையில் ஒசுற்றியப் பிரதிநிதிகளுக்கு இடம் வேண்டுமென இவர்கள் கோரிநின்றனர். இப்பேரவாவினால் உந்தப்பெற்ற இவர்கள் பெரும்பாலும் தனித்தே இக்கோரிக்கையைச் செய்தனர். ஒசுற்றிய அரசில் இருந்த சேர்மானிய மாகாணங்கள் இவர்களுடன் சேரவில்லைப் போலும். இது ஒருபுறமிருக்க ஆபிசுபேக்குக் குலத்தினர் தங்களுடைய மேன்மையை இழக்க விரும்பவில்லை. ஆனால் முக்கியமான எதிர்ப்பு ஒசுற்றியாவில் உள்ள சிலாவு இனத்தினிடமிருந்து பிறந்தது. பொகீமியாவில் வாழ்ந்த செக்கோசிலவாக்கியர் சிசிலத்தெனிய

2. பக்கம் 189.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒசுற்றியாவானது சேர்மானியப் பேரரசுடன் இணைவதை விரும் பவில்லை ; எனெனில் இது அவர்களுடைய நாட்டினக் கன விற்குச் சாவுமணியடித்துவிடுமாதலால் என்க. தான் சுதந் திரமான அரசாக ஒரு காலத்தில் இருந்ததைப் பொகீமியா ஒருபோதும் மறக்கவில்லை. இற்றைவரைக்கும் தன்னுடைய பரம்பரையையிட்டுப் பொகீமியா பெருமைப்படுகின்றது. சேர்மா னிய அரசு மேலோங்குவதையிட்டுப் பொகீமியா அழுக்காறுற்றது. "சரித்திரப்படி தனக்குக் கிடைக்கும் உரிமை," என்ற காரணத் திலில் பாலனத்திற்குரிய தன்ஞண்மையை அடையப் பொகீமியா முயன்றது. "பொகீமியா சேர்மனியின் ஒரு பகுதியாகவே இருக்க முடியும். அங்கு வாழ்ந்த மக்களுள் ஒரு பிரிவினர் மேலும் வரப்போகின்ற பல நூற்றாண்டுகளாகச் சேர்மானிய மொழி யல்லாத ஒரு மொழியைத் தொடர்ந்து பேசினாலும் பேசட்டும். ஆனால் சேர்மனியின் ஒரு பகுதி பொகீமியா" எனச் சேர்மானிய எழுத்தாளர்கள் வாதித்தனர். பொகீமியாவின் புகழ்வாய்ந்த வரலாற்று ஆசிரியர் பலாக்கியின் தலைமையில் செக்கோசிலவாக் கிய மக்கள் ஒன்றுசேர்ந்து சர்வ சேர்மானிய அரசோடு தாம் இணைக்கப்படுவதை முழு மூச்சுடன் எதிர்த்தனர். 1848 ஆம் ஆண்டிற்கு முன்னரே, அடங்கியிருந்த நாட்டின உணர்ச்சி பொங்கியெழுந்தது. இதற்குக் காரணமாக இருந்தவை செக் கோசிலவாக்கிய மொழிக்குப் புத்துயிர் அளித்தமையும், சிலாவு மக்களின் பண்டைப் பெருமையைப் பற்றிய கல்வியுமென்க. ஒசுற்றியப் பேரரசிலே ஆதிக்கம் பெற்றிருந்த சேர்மானிய மக்களும், மகியார் மக்களும் முனைந்து நின்றமையும், பொகீமிய உணர்ச்சியானது வலுப்பெற்று எழுதற்குத் தூண்டு கோலாக இருந்தது. இந்த எழுச்சி தக்க பலனை அளித்தது. பிராங்குபோட்டிற் கூடிய சேர்மானியச் சபைக்கு மறுப்பாக, பிராக்கு நகரிலே 1848 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் சர்வசிலாவு மாநாடு ஒன்று கூடியது. பரந்துகிடக்கும் சிலாவு இனங்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துக் கூட்டாட்சி ஒன்றை நிறுவுதல் பற்றி நன்கு ஆலோசித்தார்களோ என்பது கேள்விக்கிடமான விடயமாகும். சிலாவு இன உணர்ச்சியினால் உந்தப்பெற்றவர் களின் புத்திக் குறைவான ஆராய்வில்லாத நடத்தையால் அவர் களுடைய எதிரிகளுக்கு வாய்ப்பு ஒன்று கிடைத்தது. சிலாவு இன உணர்ச்சியிலே இரசியத் தனியாட்சியின் சாயல் படர்ந்திருப் பதைக் கண்ட இவ்வெதிரிகள் நடுங்கினர். இவர்களுடைய பயம் காரணமற்றது. கலப்பிலாச் சேர்மனியுடன் ஐக்கியப் படுவதைப் பொகீமியா பலமாக எதிர்த்தது. பொகீமியா சுதந்திர நாடாக இருக்க விரும்பியபோதும், ஒசுற்றிய மன்னராட்சியிலே

1848. பொகீமியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848. ஒரு பகுதியாக இருப்பது பற்றி மனத்திருத்தி அடைந்தது. இது ஒருபுறமிருக்க ஒசுற்றியாவைச் சேர்மனியுடன் ஒன்று சேர்த்துவிடச் சேர்மானிய மக்கள் விரும்பினர்; அன்றேல் தங்கள் ஆட்சியில் உள்ள பொகீமிய செக்கோசிலவாக்கிய மக்களையும், இசித்தீரியாவிலும் கரிந்தியாவிலும் கானியோலாவிலும் உள்ள சிலவோனிய மக்களையும், தொடர்ந்து தாமே வைத்திருக்கச் சேர்மானியர் விரும்பினர். ஒசுற்றியப் பேரரசின் மாகாணங்களான அங்கேரி, குரோசியா, திரான்சில்வேனியா ஆகியவை மகியாருக்குப் பணிந்து நடக்க விரும்பின. இது ஒருபுறமிருக்க வெற்றியடைந்த பொழுது ஈட்டிய பொருள்களைச் சேர்மானியரும் மகியாரும் பங்கிடுவதைச் சிலாவு மக்கள் எதிர்த்தனர். பணிக்குழுவாட்சிக்குரிய அரசிற்குப் பதிலாக நாட்டினத்திற்குரிய அரசுகளின் நாட்டுக் கூட்டிணைப்பை நிறுவுவதே அவர்களுடைய திட்டம். இந்தக் கூட்டாட்சியில், அரசியலில் அபிவிருத்தியடைவதற்கு எல்லாச் சாதியினருக்கும் இனத்தினருக்கும் நல்ல வாய்ப்புக் கொடுப்பதும் இவர்களுடைய நோக்கமாக இருந்தது.

பொகீமிய இயக்கத்தின் தோல்வி.

செக்கோசிலவாக்கிய மக்கள் தங்களுடைய அவாவை ஓரளவிற்கு நிறைவேற்றிக் கொள்வர் என ஒரு கணம் தோன்றியது. பேரரசுமன்று ஒரு சாதியினரை மற்றச் சாதியினருக்கு எதிராகத் தூண்டிவிடும் தன் வழக்கமான பூட்கைக்கிணங்க மாகாணங்களைத் தலைநகருக்கு எதிராகத் திருப்புவதற்கு நாட்டின இலட்சியங்கள் ஒன்றையொன்று மோதுதல் வாய்ப்பளிப்பதைக் கண்டது. சேர்மானிய ஆதிக்கத்தை எதிர்க்கும்படி பொகீமியா தூண்டப்பட்டது. ஒசுற்றியப் படையின் தளபதியாகவிருந்த இளவரசர் விண்டிசிக்கிருற்றின் அனுமதியுடன், பிரதானியான துன் என்பவனின் தலைமையில் பொகீமிய பாலனம், ஒசுற்றிய அமைச்சின் அதிகாரத்தை நீக்கிச் சுதந்திர அரசாங்கத்தை நிறுவியது. இந்த நிகழ்ச்சிகள் யாவும் வீயன்னை மந்திரத்தினால் கண்டிக்கப்பட்டபோதும் ஒசுற்றியப் பேரரசனின் அனுமதியைப் பெற்றிருந்தன. ஆனால் பொகீமியாவிலிருந்த நாட்டினவாத இயக்கத்தின் ஆயுட்காலம் குறுகியதாகவே இருந்தது. பிராக்கில் உள்ள குடியாட்சிவாதிகள் அகால முயற்சி ஒன்றைத் தொடக்கி நாட்டின எழுச்சியை அடக்கினர். வீயன்னாவில் குடியாட்சிவாதிகள் செய்ததுபோலத் தாமும் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சித்தனர். இந்த எழுச்சியை விண்டிசிக்கிருற்று விரைந்து அடக்கினான். அவனுடைய தலைமையில் நகரம் குண்டுமாரிக்கிலக்கானது. கலகக்காரர் அடிபணிந்தனர். பிற்போக்குவாதம் புரட்சியை எதிர்த்து மூத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாவது வெற்றியைப் பெற்றுவிட்டது. இதனால் நல்ல பலன் 1848.
கிடைத்தது. படைகளின் உணர்ச்சியையும் உற்சாகத்தையும் தன்னம்பிக்கையையும் இவ்வெற்றி தூண்டிவிட்டது. ஏனெனில் வீதிகளில் முட்டுக்கட்டையைப் போட்டுச் சண்டை செய்யும் முடியாட்சியை ஒருபோதும் வெல்ல முடியாது என்பது பிழை என்ற உண்மையையும் இவ்வெற்றி படைகளுக்கு உணர்த்தி யதாதலால் என்க. பாரிசிலும், பேளினிலும், வீயன்னாவிலும் புரட்சி வாதிகள் சாதித்த சாதனைகளை ஐரோப்பிய மக்களின் உளத்திரையிலிருந்து இவ்வெற்றி அகற்றியது. அதே நேரத் தில் இவ்வெற்றி போட்டியாக இருந்த நாட்டினங்களின் பகை மையையும் நன்கு வளர்த்தது. பொகீமியாவில் எழுந்த பிரிவினை இயக்கத்தின் வீழ்ச்சியைச் சேர்மானியர் நாட்டின வெற்றியாகக் கருதினர். சிலாவு மக்களின் தோல்வியினால் ஒசுற்றியாவிற்கு எவ்விதமான கெடுதலும் ஏற்படவில்லை. நாட் டுக்கூட்டிணைப்பு நிறுவுவதில் சிலாவு இனத்தினர் தோல்வி யடையவே இத்தோல்வியை வீயன்னாவில் உள்ள குடியாட் சிக்கு மாறுன ஆயுதமாக ஒசுற்றிய அரசு உபயோகித்தது. சேர்மானிய நாட்டின இயக்கம் வெற்றி பெற்றால் தாங்கள் சுதந்திர மடைவதற்கான வாய்ப்பு நிரந்தரமாகக் கெட்டுப் போகும் என்பதைப் பொகீமியர் உணர்ந்தனர். எனவே பொகீமியர் எந்தக் கட்சியினால் தாங்கள் வீழ்ச்சியடைந்தனரோ அந்தக் கட்சியின் கையிலே இயங்கும் ஆயுதமாகினர். அர சாங்கத்தை அச்சுறுத்திப் பெறக் கருதியிருந்த சுதந்திரம் இப் போது தங்களுடைய செயலுக்குக் கைம்மாறுகக் கிடைக்கும் எனவும் பொகீமியர் நம்பினர் போலும். இதுவே அவர்கள் கொண்டிருந்த எண்ணமாயின் அவர்களுக்குப் பெரும் ஏமாற் றம் ஏற்படுவது உறுதியாயிற்று. எனினும் சிலாவு மக்களு டைய எதிரிகள் ஒசுற்றியப் பாராளுமன்றத்தில் வெறுப்புடன் கூறியதை இச்செயல் விளக்குகின்றது. சட்டம் ஆக்கும் இப்பாராளுமன்றம் வீயன்னாவில் யூலை 22 ஆம் நாள் கூடிற்று. இப்பாராளுமன்றத்தில் சேர்மானியப் பிரதியாளரிலும் பார்க்கச் சிலாவுப் பிரதியாளர்கள் ஆதிக்கமுடையராயிருந்தனர் என்பதை முன்னரே கண்டுள்ளோம். எனவே பாராளுமன்றத்தில் உள்ள "சேர்மானிய இனத்தினர் மீது முறையாகப் போர் தொ டுத்தனர்". இந்தச் சேர்மானியப் பிரதிநிதிகள் சிறுபான்மை இடதுசாரியினராகவே இருந்தனர். இந்த இடதுசாரியினர் உண் மையில், "புரட்சியினாலே ஏற்படும் முன்னேற்றத்தைப் பிர தானமாக ஆதரிப்பவர்" என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் 1848 இல் ஏற்பட்ட புரட்சியின்போது நாட்டினம் என்னும் சத்தியுடன் தாராண்மை மோதிய இட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848. மெல்லாம் பின்னது பெரும்பாலும் தோல்வியுற்றது. இன வேற்றுமைப் பிரிவினையினால் பிளவுபட்டிருந்த பாராளுமன்றம் தனக்குக் கிடைத்த ஒப்பற்ற வாய்ப்பைப் பயன்படுத்தத் தவறியது. முதன்முதல் ஒசுற்றியாவில் யாப்புத் தேர்வாராய்ச்சி முற்றுகத் தோல்வியடைந்தது. பாராளுமன்றம் நடத்திய நீண்ட விவாதத்தின் விளைவாக ஒரேயொரு சீர்திருத்தம் மாத்திரம் உருப் பெற்றது. புரட்சியின் ஏனைய விளைவுகள் எல்லாம் மறைந்து போக இது மாத்திரம் நிலைத்தது. அதாவது நிலமானிய முறைப்படி நடக்கும் அடிமை விலங்கிலிருந்து உழவர் விடுதலை பெற்றமையாகும். கட்டாய ஊழியத்தை ஒழிக்க வேண்டும் என்பதில் இறைசுதாக்கிலுள்ள எல்லாக் கட்சிகளுக்கும் இடை ஒற்றுமை ஏற்பட்டது; ஆனால் நட்டஈடு வழங்குவதில் கருத்து வேற்றுமை ஏற்படவே ஒற்றுமை குலைந்தது. உழவர்கள் செய்த ஊழியத்திற்குப் பதிலாக நிலச்சொந்தக் காரருக்கு நட்டஈடு வழங்கவேண்டுமென அரசாங்கம் வற்புறுத்தியது. குடியாட்சிக் கட்சியினர் எதிர்த்த போதும் நட்டஈடு வழங்கப்பெற்றது.

வீயன்னைப் புரட்சியின் முடிவு.

இங்ஙனமிருக்க ஒசுற்றியத் தலைநகரில் உள்ள மக்கள் அமைதியற்றவராகத் தோன்றினர். சிலாவுப் பெரும்பான்மையினர் பிற்போக்குவாதத்துடன் ஒத்துழைத்தபடியால் இறைசுதாக்கு மீது இம்மக்கட்கூட்டம் முதலில் வைத்திருந்த நம்பிக்கை தளர்ந்தது. மனக்குழப்பம் ஏற்பட்டது. எதிர்ப்புரட்சியின் தோற்றத்தினால் மக்கள் கூட்டம் அமைதியை இழந்தது. பிற்போக்குவாத எதிர்ப்புரட்சி எந்நேரமும் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆபத்து நிறைந்த இரண்டு கலம்பகங்களின் பின்னர் மக்களின் அதிருத்தியின் பயனாக ஒற்றேபர் மூன்றும் நாள் பேரரசு ஆஞ்ஞை பிறப்பிக்கப்பட்டது. இவ் வாஞ்ஞைப்படி அங்கேரியப் பாராளுமன்றம் குலைக்கப்பட்டு மகியார் நாட்டினவாதிகள் மீது போர் தொடுக்கப்பட்டது. மகிய மக்களுடைய கோரிக்கையை வீயன்னாவில் உள்ள குடியாட்சிவாதிகள் உணர்ச்சியுடன் ஆதரித்தனர். எனெனில் தங்களுடைய குடியாட்சிக் கருத்துப்போலவே மகிய மக்களுடைய கருத்தும் இருப்பதை வீயன்னா மக்கள் கண்டனராதலால் என்க. வீயன்னாவிலிருந்து படைகளை அங்கேரி மீது ஏவி விட்ட போர் அமைச்சனை இலத்தூரின் செயலை மக்கள் எதிர்த்துக் கலகஞ் செய்தனர். படைகள் செல்வதை வெறுத்த மக்கள் இலத்தூரைக் கொன்றனர். ஒற்றேபர் 3 ஆம் நாள் பிறப்பித்த பொது அறிவிப்பிற்கு மாற்றுத்தராவு பிறப்பிக்க வேண்டிய நிலை ஒசுற்றியப் பேரரசருக்கு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சியின் புதியதோர் திருப்பத்தை இச்செயல் குறித்தது. 1848.
இறைசுதாக்கின் விருப்பப்படி வீயன்னாவிற்கு முன்னரே திரும்பி வந்த பேரரசன் மீண்டும் தலைநகரை விட்டு ஓடி ஒல்முற் சிலே தன்னுடைய அரசவையை அமைத்து அங்கிருந்து புரட் சியைக் கண்டித்துப் பொது அறிவிப்புகளை வெளியிட்டான். அத்துடன் மாகாணங்களின் ஆதரவைக் கோரி நின்றான். அதே நேரத்தில் இறைசுதாக்கிலிருந்த சிலாவுப் பெரும் பான்மையினர் தங்களுடைய இருக்கையைப் புலன் நகருக்கு மாற்றவே வீயன்னாவிலிருந்த எஞ்சிய சேர்மானியர் தலக் குழுவின் நிலைமைக்கு இழிந்தனர். புரட்சி முடிவதற்கு அதிக கால தாமதம் எற்படவில்லை. விண்டிசிக்கிரூற்று எலவே பிராக்குக் கலகத்தை அடக்கியமையால் பெரும் புகழ் பெற்றி ருந்தான். அவன் வீயன்னாமீது தான் படை எடுப்பதாகச் செய்த முடிவை ஒற்றேபர் 11 ஆம் நாள் அறிவித்தான். ஒற்றேபர் 16 ஆம் நாள் அவனுடைய அதிகாரத்தைப் பேர ரசுக் கற்பனை உறுதியாக்கியது. சில நாட்களின் பின்னர் வீயன் னாவைச் சுற்றி ஒசுற்றியப் படை வியூகம் அமைத்தது. நெப் போலியனுடைய போரில் ஈடுபட்ட பெரும் அனுபவசாலியான யோசேப்பு பெம் வீயன்னாவின் எதிர்ப்பை முன்னின்று நடத்தி னான். வீயன்னாவில் உள்ள மக்கள் வீரதீரத்துடன் ஒசுற்றியப் படையை எதிர்த்தனர். எனினும் ஒற்றேபர் 31 ஆம் நாள் ஒசுற்றியப் படைகள் நகரைக் கைப்பற்றின. வீயன்னா முற் றுகையின் தொடக்கத்திலேயே மகிய மக்கள் தலையிட்டிருந் தால் மாத்திரமே அதன் வீழ்ச்சியைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் பாராளுமன்றம், "யாப்பு மரபு" என்னும் குறுகிய நோக்கத்துள் சிக்கியிருந்தபடியால் தன் உதவிக்கு அங்கே ரியப் படையை அழைப்பதை விரும்பவில்லை. அங்கேரிய அர சாங்கம் புரட்சியைக் கண்டிப்பாகச் சட்ட வழமைப்படி நடத்த ஆவல் கொண்டிருந்தபடியால், சேர்மானிய ஆள்புலத்தின் மீது படையெடுக்குமுன்னர் இறைசுதாக்கின் கட்டளைக்காகக் காத்திருந்தது. இங்ஙனம் எழுந்த அக்கறையில்லாத பூட்கை பிழையானது. ஏனெனில் புரட்சியை உண்டாக்குவதற்கு அத் தர், பன்னீர் வேண்டாம்; இரத்தம் தான் தேவை. மகியப் புரட்சியின் கதியும் வீயன்னாப் புரட்சியைப் பொறுத்திருந்த தென்பதை விரைவிலே நிகழ்ச்சிகள் காட்டின; ஏனெனில் வீயன்னாப் புரட்சியைக் கவிழ்த்தபின்னர், பிற்போக்குச் சத்திகள் யாவும் தம் பலம் முழுதையும் மகியார் புரட்சியை அடியோ டழிப்பதற்குக் கவனஞ் செலுத்தினவாதலால் என்க. வீயன்னா முற்றுகையில் அகப்பட்டிருந்த புரட்சிக்காரர்களுக்கு உதவிய ளிக்க இறுதி நேரத்திலேதான் முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1849-51. ஒசுற்றியர்கள் இந்தக் காலதாமதத்தைப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் ஆயத்தங்களைச் செய்து முடித்தனர். சுவிச்சாற்று என்னுமிடத்தில் ஏற்பட்ட போரிலே, உதவியளிக்க வந்த படையைப் புறமுதுகு காட்டி யோடச் செய்தனர்.

பாக்குமுறை. படையினரே நிலைமை முழுதிற்கும் பொறுப்பாகவே எல்லா விடயங்களிலும் நிலைமை முற்றுக மாறிற்று. குடியாட்சிக்குரிய கருத்துடையவர்களைச் சமாதானப்படுத்த வேண்டிய தேவை ஏற் படவில்லை. விண்டிசிக்கிறுற்றின் மைத்துனனை சுவாரன்பேக் கின் கையிலே பாலனம் முழுவதும் ஒப்படைக்கப்பட்டது. சுவா ரன்பேக்கு கலப்பற்ற பிற்போக்குவாதி. இவனுக்கு நன்மை தீமையைப் பகுத்துப் பார்த்துத் தீமைக்கு அஞ்சும் குணம் அறவே இல்லை. எடுத்ததைச் செய்து முடிக்கும் முரட்டு இயல் புடையவன் இவன். ஒசுற்றிய முடியாட்சியைத் தளராது பாது காக்கத் திடம் கொண்டிருந்தான். தமக்குச் சேரவேண்டிய சேர்மானிய ஒசுற்றியாவைப் பெறச் சேர்மானியர் பிராங்கு போட்டுச் சபையில் செய்த முயற்சியை எதிர்த்து அதில் வெற்றி கண்டான். அங்கேரியிடமிருந்து விடுதலை பெற மகி யார் செய்த முயற்சியையும் தோல்வியுறச் செய்தான். "அடிப் படை உரிமை" பற்றி விவரமாக விளக்கிக் கூட்டாட்சி விருப்பு வெறுப்புணர்ச்சிக்கும் சலுகை கொடுக்கப்பட்டது. இறைசுதாக்கு அமைத்த யாப்பு அலட்சியஞ் செய்யப்பட்டது. இப்போதைக்கு இந்தப் பாராளுமன்றம் கிரமிசீர் என்னும் இடத்திலிருந்து செயல்புரிந்தது; பேரரசின்மீது பேரரசு அதிகாரப்படி திணிக் கப்பட்ட புதிய யாப்பு (மார்ச்சு 4 ஆம் நாள், 1849) முடி யாட்சியை எவ்விதமாயும் பிரித்தல் இயலாது என்பதைப் பிரசித்தஞ் செய்தது. இச்சட்டப்படி ஒசுற்றிய முடிக்குரிய பல்வேறுபட்ட பிரதேசங்கள் யாவும் மையப் பணிக்குழுவாட்சிக் குரிய அரசோடு இணைக்கப்பட்டன. சில திங்களுக்குப் பின்னர் அங்கேரியப் புரட்சியும் வீழ்ச்சியடையவே அரசாங்கம் மிகவும் பலமடைந்தது. ஒலுமுற்சிலே[1] பிரசியா பட்ட அவமானத்தின்பின் இவ்வரசாங்கம் எவராலும் தாக்க முடியாதளவிற்குப் பல மடைந்தது. இத்துடன் சேர்மானிய நாட்டின இயக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இங்ஙனம் அரசியல் அமைப் பைக் குலைக்க எழுந்த மகியார் சத்திகளையும் சேர்மானிய நாட்டினவுணர்ச்சியையும் இறுதியிலே தோல்வியுறச் செய்த ஒசுற்றியப் பேரரசின் பிற்போக்குவாதம் என்னும் கட்டிடம் பூராணமாவதற்கு ஒன்றே ஒன்றுதான் தேவையாயிருந்தது. இது 1851 இல் திசெம்பர் 31 ஆம் நாள் பிறப்பிக்கப்பட்ட

1. பக்கம் 87.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையுடன் நிறைவேறியது. பேரரசனின் இக்கட்டளைப்படி மாச்சு 4 ஆம் நாள் உருவாகிய யாப்பு, தள்ளுபடியாயிற்று. இது முதற்கொண்டு யாப்புறுவாட்சி வெளிவேடமாகக்கூட இடம்பெறவில்லை. வெளிப்படையாகவே தனி முதன்மையை மன்னராட்சி பின்பற்றியது. இங்ஙனம் ஏற்பட்ட பிற்போக்கு வாதக் காலம் "பாக்குமுறை" எனவும் பெயர் பெறும். இதற்கு வழிகாட்டியாகச் சுவாரன்பேக்கு இருந்த போதும் இப்பெயரே இதற்கு ஏற்பட்டது. எனினும் இக்காலத்தைக் குருட்டுப் பிற்போக்குவாதத்தின் ஊழி என முடியாது. அரசியலின் யாப்புச் சீர்திருத்தம் அழிந்துவிட்டது; ஆனால் பாலனத்திற்குரிய சீர்திருத்தமும் பொருளாதாரச் சீர்திருத்தமும் ஊக்கமாக நடைபெற்றன. 1848 ஆம் ஆண்டு ஏற்பட்ட இயக்கத்திலே நம்பிக்கை என்னும் துறையிலிருந்து புறப்பட்ட புரட்சிக் கப்பல் பாறையில் மோதி உடைந்ததை முன்னரே கண்டுள்ளோம். சுக்கலாக உடைந்த கப்பலிலிருந்து ஒரே ஒரு பொருள் மட்டும் பாதுகாக்கப்பட்டது. அடிமை உழவோரை விடுதலை செய்தமையே புரட்சி நடைமுறையில் அளித்த தனிப்பலன். பழைய நிலமானிய முறைப்படி நடக்கும் நிறுவகங்களுக்குப் புத்துயிரளிக்கப்படவில்லை. ஊழிய வேலை, நிலத்தையுடைவர்களுக்குரிய உரிமை ஆகியவற்றை மீண்டும் இடம்பெறச் செய்ய முயற்சி நடைபெறவில்லை. ஒசுற்றியாவிலே புரட்சியின் போக்கு இவ்வாறிருந்தது. இதனை ஒத்த புரட்சி அங்கேரியிலே நடந்தது. அதன் போக்கை இங்கு ஆராய்வாம். 1848.

ஒசுற்றிய அங்கேரியில் 1848 ஆம் ஆண்டுப் புரட்சி தனிப்பட்ட இரு இயக்கங்களைக் கொண்டுள்ளது. இத்தாலியிலும் சேர்மனியிலும் இருந்த நிலையே ஒசுற்றிய அங்கேரியில் இருந்தது. முதலாவது இயக்கம் யாப்பிற்குரியது. இரண்டாவது நாட்டின இயக்கமாகும். முன்னது தனிப்பட்டவர்களுடைய விடுதலையைப் பெற விழைந்துநின்றது. பின்னது நாட்டினங்களை விடுதலை செய்ய வழிதேடியது. இம்மூன்று நாடுகளிலும் இவ்விரு இயக்கங்களும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையனவாயிருந்தன. எடுத்துக்காட்டாக, தாராண்மையும் நாட்டின வுணர்ச்சியும் அங்குள்ள அரசியல் நிலைமையின் காரணமாக முக்கிய தேவையாயின. ஒசுற்றியப் பேரரசின் ஆதரவு இருக்கும் வரையும் இத்தாலியில் உள்ள குறுநிலக் கடுங்கோலன்கூடத் தன் இத்தாலியக் குடிகள் மீது தான் எல்லாவித அதிகாரமும் செலுத்த முடியும் என்பதைக் காட்டி வந்தான்.[1] இங்ஙனம் இவ்விரு சத்திகளும் இணைந்திருப்பது

சேர்மானியப் புரட்சியுடனும் இத்தாலியப் புரட்சியுடனும் அங்கேரியப் புரட்சியை ஒப்பிடல்.

1. பக்கம் 216.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848 அங்கேரிக்கு இன்றியமையாததேயொழிய வீயன்னாவிற்கன்று. வீயன்னாவில் ஏற்பட்ட புரட்சி தனிப்பட்ட தாராளபோக்குக் கொள்கையுடையது. எனெனில் மேலோங்கி நின்ற சேர்மானிய இனத்திற்கு நாட்டினக் குறைகள் இருக்கவில்லையாதலால் என்க. அங்கேரியப் பிரபுக்கள் மட்டுமே அங்குள்ள பாராளுமன்றத்திற் பிரதிநிதிகளை யுடையோராயும் வரி செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளோராயும் இருந்தனர். இவர்களுடைய தனியுரிமைகள், யாப்பிற்குரிய முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாயிருந்தன. தாராளபோக்குச் சீர்திருத்தவாதிகள் கேட்டவுடனே இப்பிரபுக்கள் தங்களுடைய உரிமைகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. ஆனால் 1789 ஆம் ஆண்டில் ஓகத்துத் திங்கள் 4 ஆம் நாள் பிரான்சிய நாட்டின மன்றிலே, நடந்த நிகழ்ச்சிபோன்ற நிகழ்ச்சி இங்கு நடந்தாலன்றி அங்கேரியப் பிரபுக்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்கமாட்டார்கள். அதற்கு இப்பிரபுக்களுடைய எதிர்ப்பை நாட்டின வுணர்ச்சிப் புயல் தகர்த்தெறிய வேண்டும். இப்புயல் பிரான்சிலே வீசியதும் பிரபுக்கள் தாராளமாகத் தமக்குட் போட்டியிட்டுக்கொண்டு உரிமைகளைத் துறந்தனர். எனவே அங்கேரியிலே தாராண்மையும் மகியார் நாட்டின வுணர்ச்சியும் ஒன்று சேர வேண்டிய நிலை ஏற்பட்டது; எனெனில் எதிர்ப்பை வெல்வதற்கு இந்த ஒரு சத்திதான் உதவமுடியுமாதலால் என்க. ஆனால் அங்கேரியில் இவ்விரு சத்திகளும் ஒற்றுமைப்பட்டும் பலன் ஏற்படவில்லை. ஆனால் இத்தாலியில் இப்படியான ஒற்றுமை பலனளித்தது. அங்கேரியில் உள்ள ஏனைய இனத்தினரைப் புறக்கணித்துத் தாங்களே தனியுரிமைகளைப் பெறவேண்டுமென மகியார் முயற்சி செய்தனர். இதனால் இவர்களுடைய நாட்டின இயக்கம் மட்டுமல்லாமல் அதனோடு பிணைந்து நின்ற யாப்பு இயக்கமும் அழிந்தது. 1848 இல் ஏற்பட்ட அங்கேரியப் புரட்சியை இத்தாலியப் புரட்சியுடன் அல்லது சேர்மானியப் புரட்சியுடன் ஒப்பிட்டு ஆராயுமிடத்து மேலும் முக்கியமான வேற்றுமை ஒன்று வெளியாகின்றது. இத்தாலியிலும் சேர்மனியிலும் நாட்டின இயக்கம் என்பது பிரதேசங்கள் இணைவதைக் குறித்தது. ஆனால் அது ஒசுற்றிய அங்கேரியில் பிரதேசம் உருக்குலைந்து சிதறுவதைக் குறித்தது. ஆபிசுபேக்கு முடியாட்சியிலே சேர்மானியர், மகியார், செக்கோசிலவாக்கியர், சிலொவாக்கியர், உரூமேனியர், உறுதெனிசினர், குரோட்டர், சேபியர் எனத் தம்முள் வேறுபட்ட எட்டு இனத்தினர் அடங்கியிருந்தனர். இந்த எட்டு இனத்தினருள், "ஒவ்வொரு இனத்தினருக்கும் புறம்பான தனிப் பண்பாடும் சரித்திர மரபும் உண்டு. சேபியரும் குரோட்டரும் தவிர ஏனையோர் புறம்பான மொழிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசினர்", எனவும் அறிகின்றோம்.[1] இங்ஙனம் இங்குள்ள இரட்டை முடியாட்சியிலே இருந்த பிரச்சினைகள் எல்லாவற்றுள்ளும் இனப்பிரச்சினையே முக்கியமானதாயிருந்தது. நாட்டின அடிப்படையில் இதனைத் தீர்க்க எடுக்கும் வழிவகை ஒசுற்றியப் பேரரசினை உருக்குலைக்க வழிகோலும் என்பது உணரப்பட்டது. அங்கேரியப் புரட்சியின் போக்கை எடுத்துக் கூறுவதன் மூலம் இந்த இனப் பிரச்சினையின் பல்வேறுபட்ட அம்சங்களை நன்கு எடுத்துக் காட்டலாம். 1791.

அங்கேரியத் தனியுரிமைகளை மறுத்தல்.

பல நூற்றாண்டுகளாகத் தன்னுட்சி, யாப்புரிமை ஆகியவற்றின் மரபுகளை அங்கேரி பேணிற்று. அறிவாற்றல் மிக்க வல்லாளனான பெருமைமிக்க இரண்டாம் யோசேப்பு பிரான்சியப் புரட்சிக்குச் சற்று முன்னர் தன்னுடைய பல்வேறு தரப்பட்ட வேற்றுமைமிக்க ஆட்சிப்பகுதிகளை ஒன்றுக்கி ஒருமுக ஆட்சியை நிறுவ முயன்றான். அப்பொழுது மேலே குறிப்பிட்ட மரபுகள் அவனுக்குத் தடையாயிருந்தன. அவன் யாப்பை மீறி, அங்கேரியப் பாராளுமன்றத்தைக் கூட்டுவிக்காதிருந்தான். சேர்மன் மொழியை அரசகரும மொழியாக்கினன்; மாகாண மன்றங்களை ஒழித்தான்; பிரதேசத்தைப் பத்து வட்டாரமாகப் பிரித்து அவற்றைச் சேர்மானிய நிருவாகிகளின் தலைமையில் விடுத்தான். இந்தக் கடும் நடவடிக்கைகள் அவனுடைய ஆட்சிக் கால முடிவிலே மாற்றப்பெற்றன. ஆனால் இவைகளை எதிர்த்துக் கிளம்பிய எதிர்ப்புப் புயல், நாட்டின உணர்ச்சி புத்துயிர் பெற்ற பின்னரே நிலையான பலனளித்தது. யோசேப்பிற்குப் பின்னர் அரசுகட்டிலேறியவன் இரண்டாம் இலியப் போல் ஆவன். அவனை 1791 ஆம் ஆண்டு அங்கேரியப் பாராளுமன்றம் அங்கேரிய மக்களின் சுதந்திரத்தை ஏற்றுக் கொள்ளக் கட்டாயப் படுத்தியது. இது முதற்கொண்டு பாராளுமன்றம் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட்டப்படவிருந்தது. அதன் இணக்கமின்றி எவ்விதமான வரியும் அறவிட முடியாது. அங்கேரியை "அதன் சட்டங்களுக்கும் வழமைக்கும் ஏற்றபடியும், ஏனைய மாகாணங்களைப் போலல்லாமலும் ஆளவேண்டும்" எனவும் உறுதிமொழி கொடுக்கப்பட்டது. இங்ஙனம் 1791 இல் ஆபிசுபேக்கு மன்னர்களிடமிருந்து இவ்வுரிமைகள் வலிந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. அடுத்த முக்கால் நூற்றாண்டிற்கு மகிய மக்கள் வகுத்த திட்டத்தி

---

1. குரோட்டரும் சேபியரும் ஒரே மொழியைப் பேசுவர். See R. W. Seton-Watson, "Racial Problems in Hungary" (1908), 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1812-25.

லடங்கிய பெரும் உரிமைகளுட் பெரும்பாலானவை 1791 இல் கிடைத்த இந்தச் சலுகைகளுள் அடங்கின. ஆனல், இங்கிலாந் தில் ஏற்பட்ட நிலேதான் அங்கேரியில் ஏற்பட்டது. பிரான்சியப் புரட்சிக்குரிய போரும் நெப்போலியனின் போரும் மூண்டதும் ஒரு தலேமுறை காலமாக யாப்பு வளர்ச்சி தடைபெற்றது. மக்களின் சத்திகள் யாவும் வேறு வழிகளுக்குத் திருப்பி விடப்பட்டன. அங்கேரி தன்னுடைய பழைய நிலேயை அடைந் தது. அதுவரையும் உறங்கியிருந்த அங்கேரி "மகியாரின் மறு மலர்ச்சியினல்" மீண்டும் விழிப்படைந்தது.

மகியாரின் நாட்டின உணர்ச்சி புத்துயிர் பெற்றமை.

நாட்டினப் பந்தங்களுள் மிகவும் வலிமை வாய்ந்தது மொழி யாகும். நாட்டின உணர்ச்சிச் சிறு பொறிகள் பெருங் கொழுந்து விட்டெரியும் நெருப்பாக மூளும்வரை மொழியே பொதுவான இன நினேவுகளே அற்றுப் போகவிடாது தன்னுள் டதித்து வைத்திருக்கும். இதற்கு மாருக, எல்லோருக்கும் பொது வான ஒரு மொழி மக்களிடை பரவுவதனல் தனியின வுணர்ச்சி அழிந்துபோகும். இப்பொழுது, "பதினெட்டாம் நூற்றுண் டின் நடுப்பகுதியில் மகியார் மொழி அழிந்து போகும் நிலே ஏற்பட்டது. இலத்தீன் மொழியானது அரசகரும மொழியா யும், பாலன மொழியாயும், நீதிமன்ற மொழியாயும், கல்வி கற்ற மக்களின் மொழியாயும் இருந்தது. இராணியான மரியாதெரெசாவின் தந்திரமான பூட்கையினல் அங்கேரியில் இருந்த பெரும் பிரபுக்கள் எல்லோரும் சேர்மானிய பழக்க வழக்கங்களேயும் சிந்தனே முறைகளேயும் பின்பற்றினர். இவர் கள் இராச சபையின் உறவும் ஒசுற்றிய உயர் குடியில் மணஞ் செய்யும் தொடர்பும் உடையரானமையால் இவர்கள் சேர்மானியரிலும் பார்க்க விரைந்து சேர்மானியப் பழக்க வழக்கங்களேப் பின்பற்றினர். இங்ஙனம் இவர்கள் நடந்து காட்டிய முன்மாதிரி எனைய மக்களின் வாழ்க்கை முறையைக் கெடுக்கக் கூடியதாக இருந்தது; எனெனில் எனைய செல்வ ரும், கல்வி கற்றவரும் இவர்களேப் பின்பற்றி நடக்கத் தலேப் பட்டனராதலால் என்க. நகரங்களோவெனில் முன்னரேயே சேர்மானிய மயமாகிவிட்டன" எனக் கூறப்பட்டது.[1] சுருங்கக் கூறுமிடத்து ஒசுற்றியப் பேரரசின் இனப் பிரச்சினே இன உணர்ச்சி அற்றுப் போக, பெரும்பாலும் எதிர்ப்பில்லாது தீர்ந்துவிடு மெனத் தோன்றியது. இரண்டாம் யோசேப்பு முன்யோசனே யின்றிப் பின்பற்றிய கொள்கை மகியாருடைய பெருமைக்கு நேரடியான ஓர் அறைகூவலாக இருந்தது. இவன் எல்லா விதமான இணக்கமுறைகளேயும் கைவிட்டு மகியார் இனத்தைத்

1 Watson, op. cit. 38.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்வசமாக்கும் பூட்கையைப் பின்பற்றினன். இதனை விட முக்கியமானது பிரான்சியப் புரட்சி மகியாரிடை ஏற்படுத்திய விளைவாகும்; ஏனெனில் செயலற்றிருந்த நாட்டினச் சத்தியைப் பிரான்சியப் புரட்சி செயற்படுத்தியதனாலென்க. இப்புரட்சியானது மத்திய காலத்திலிருந்து தொடர்ந்து வந்த மிகப் பழைய சமுதாய அரசியல் ஆட்சியை அழித்தது. அதுமட்டுமன்றிப் பதினெட்டாம் நூற்றாண்டிலே சிறப்பாக இருந்த அம்சமான பல சாதியினர் ஒன்று கூடி இயங்கும் பொதுப் பற்றையும் கலைத்தது. இங்ஙனம் அங்கேரியில் இருந்த நாட்டினவுணர்ச்சியின் மறுமலர்ச்சியைப் பரந்த அடிப்படையில் நோக்குமிடத்து அது ஐரோப்பா எங்கணும் எழுந்த இயக்கத்தின் பகுதியேயாகும். இவ்வியக்கம் இத்தாலியிலும் சேர்மானியிலுமே மிகவுந் துலக்கமாயிருந்தது. பதின்மூன்று ஆண்டு காலமாக (1812–1825) அங்கேரியப் பாராளுமன்றம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. ஆனால் "சிறு பாராளுமன்றங்களான" பிரபுக்கள் கூடும் மாகாணசபைகள் சுதந்திரம், தன்னாட்சி ஆகிய பரம்பரை வழக்கங்களை அழியாமல் வளர்த்து வந்தன. இச்சபைகள் அரசாங்கத்தை எதிர்த்ததனால் 1825 இல் பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டியதாயிற்று. மகியார் மொழி அங்கேரியின் அரசகருமமொழியாக நிலைநாட்டப்படவேண்டும் என இப் பாராளுமன்றக் கூட்டத்திலே கோரிக்கை செய்யப்பெற்றது. இங்ஙனம் செய்யப்பட்ட கோரிக்கையே மொழிப் பிரச்சினையின் தொடக்கம். இப்பிரச்சினையினால் அங்கேரியச் சமவெளிகளில் இரத்தம் பெருக்கெடுத்தது. அத்துடன் இம்மொழிப் பிரச்சினை அங்கேரிய அரசியலில் இகலாட்டிற்குரிய பிரச்சினையாகவும் இருந்தது. அடுத்த சில ஆண்டுகளில் மகிய மொழி விரைந்து வளம் பெற்றது. இக்காலத்தை மகியார் இலக்கியத்தின் பொற்காலம் என்பர். 1840 இல் மகிய மொழி அரசகருமமொழியாயிற்று. கோயிற்பற்றுகளில் உள்ள பதிவேடுகள் எல்லாம் மகிய மொழியிலேயே எழுதவேண்டும் எனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. கிறித்து மதத்தில் உள்ள பல்வேறு பிரிவினருக்கும் இம்மொழி கட்டாய மொழியாயிற்று. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மகிய மொழி பொது அலுவல்கள் எல்லாவற்றிற்கும், பாராளுமன்ற விவாதத்திற்கும் உரிய அரசகருமமொழியாகியது. அதே வேளையில் பாடசாலைகளில் போதனா மொழியுமாகியது; அன்றேல் பாடத்திட்டத்தில் கட்டாய பாடமாகியது. 1825–48.

அங்கேரியில் வாழ்ந்து வந்த பல்வேறு இனங்களுள் அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருந்த மகியாருடைய நாட்டின அவா இருபது ஆண்டுகளுக்கிடையில் பன்மடங்கு அதிகரித்தது. ஆனால் மாச்சுச் சட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1825–4 . யாப்புச் சீர்திருத்தம் வேண்டும் என எழுந்த கோரிக்கை நிறைவேற்றப்படாமலே இருந்து வந்தது. மேற்கு ஐரோப்பியக் கருத்துக்கள் இங்கு செல்வாக்குப் பெற்றுப் பரவியமையால் தொடக்கத்திலே கலப்பிலாத நாட்டினப் போக்கும், பழைமை பேணும் போக்குமுடையதாக இருந்த இயக்கம் விரைவில் முன்னேற்றமடைந்து முடியாட்சிக்குரிய இயக்கமாக மாறிற்று. இந்தப் புதிய அபிவிருத்தியின் செல்வாக்கு 1844 இலும் 1847 இலும் கூடிய பாராளுமன்றத்திற் பிரேரிக்கப்பட்ட பிரேரணைகளிலே பிரதிபலித்தது. பாரிசிலும் வீயன்னாவிலும் புரட்சி ஏற்பட்டுவிட்டது எனக் கேள்விப்பட்டதும் இவ்வியக்கம் உச்சநிலையை அடைந்தது. இவ்விரு புரட்சிகளின் புதினம் அங்கேரியிலே இருந்த வெடிமருந்திற்கு நெருப்பு வைப்பது போன்ற தென்க. கொசுத்தின் தலைமையில் மன்னருக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பமொன்றிலே, நாட்டின அரசாங்கமும், பாராளுமன்றத்திற்குப் பொறுப்பான அமைச்சும் வேண்டுமெனக் கோரிக்கை செய்யப்பட்டது. பாராளுமன்றத்திலே புரட்சிவாதிகள் ஆதிக்கமுடையோராயிருந்தனர். நன்கு விலைப்பட்டதும் சிறந்த செல்வாக்குடையதுமான "பெசிற்றிக்கிரிலாப்பு" என்னும் அரசியல் இதழின் ஆசிரியராக இருந்து பெரும் புகழ் பெற்ற உலாயி கொசுத்து என்பவனே அவர்களுடைய தலைவனுவான். இது சீர்திருத்த இயக்கத் தீவிரவாதிகளுடைய வெளியீடாயிருந்தது. பழமை பேணும் கொள்கையை விரும்பும் சீர்திருத்தவாதிகள், மாநிலக் கிழானன சேச்செனியைத் தம் தலைவனுகக் கொண்டனர். கொசுத்தைப் பின்பற்றியவர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திப் பாரதூரமான மாற்றங்களை ஏற்படுத்தத் தலைப் பட்டனர். புகழ் பெற்ற மாச்சுச் சட்டங்கள் ஒரு மாதத் திற்குட்பட்ட குறுகிய காலத்திலேயே ஆக்கப்பெற்றவை. இக் குறுகிய காலத்திலே அங்கேரியின் சமூக, அரசியல் நிலை புரட்சிகரமாக மாறியது. மாச்சுச் சட்டங்களில் அடங்கியிருந்த வரையறையற்ற இச்சீர்திருத்தங்கள் யாவும் நாங்கள் ஏலவே கவனித்துள்ளதான அங்கேரிய இயக்கத்தின் இரட்டை அம்சங்களைக் காட்டின. பொறுப்புவாய்ந்த அங்கேரிய அமைச்சை நிறுவியதன் மூலம் தாராளபோக்குக் கொள்கைகளின் செல்வாக்குத் தெரியவந்தது. அடிமை ஊழியம், நிலமானிய முறை, வரிப்பணம், நில உரிமையாளருக்குரிய சிறப்பான நீதிமன்றங்கள் எல்லாம் ஒழிக்கப்பட்டன. வரியிலிருந்து விலக்கப்படவேண்டுமெனப் பிரபுக்களுக்கிருந்த உரிமையும் பறிபோயிற்று. இது வரைக்கும் வாக்குரிமை பிரபுக்களின் தனிப்பட்ட உடைமையாக இருந்தது. இப்போது முப்பது பவுணுக்கு மேற்பட்ட நிலபுலனுடைய அங்கேரிய மக்கள் எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டது. பாராளுமன்றத்தின் காலம் மூன்று ஆண்டு எனக் 1848
கட்டுப்படுத்தப்பட்டது. ஆண்டுக்கொருமுறை பாராளுமன்றம் கூட்டுவிக்கப்படவிருந்தது. முன்னர் இருந்த தேர்தல் முறைப் படி மக்கள் நேரடியாக வாக்களிப்பதில்லை. மாநகர சபைகளும் நகர சபைகளும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும். இப்போது பிரதிநிதிகளை மக்கள் நேரடியாகத் தெரிவு செய்யும் முறை ஏற்படுத்தப்பட்டது. இந்தப் புதிய திட்டப்படி, பத்திரிகைச் சுதந் திரம், மதச் சுதந்திரம், நாட்டைக் காக்கப் படை, நாட்டினப் பல்கலைக்கழகம் ஆகியவை கிடைத்தன. இது ஒருபுறமிருக்க ஒசுற்றியாவிலிருந்து அங்கேரி உண்மையாகப் பிரிக்கப்பட்டதி லிருந்து நாட்டினக் கருத்துக்களின் செல்வாக்கும் தெளிவாகப் புலனுயிற்று. அங்கேரிய மண்டில நாயகனின் அலுவலகம், பலற்றினல் கழகம் ஆகியவை மூலமே மைய அரசாங்கம் அங்கேரியை அடிமையாக்கி வைத்திருந்தது. அவற்றை, குறித்த பாராளுமன்றம் ஒழித்தது. அவற்றிற்குப் பதிலாகச் சுதந்திர மான அங்கேரிய மந்திரம் அமைக்கப்பட்டது. உள்நாட்டுப் பால னம் மட்டுமல்லாமல் வெளிநாட்டு அலுவல், போர், நிதி, கோட்டைகளையும் படைகளையும் கட்டுப்பாடு செய்தல் ஆகியவை யும் இம்மந்திரத்தின் அதிகாரத்திற்குள் அடங்கின. அத் துடன் திரான்சில்வேனியாவும் அங்கேரியுடன் இணைக்கப்பட்டது. அங்கேரியிலே எதிர்காலத்தில் மகியார் படைகள் அரண் செய்வ தாயிருந்தது. வீயன்னவில் இருந்த அரசாங்கம் தனக்கேற் பட்ட இவ்விடையூற்றினல் நலிவுற்றது. இதனல் புடாபெசுத் திலிருந்து வந்த கோரிக்கைகள் எல்லாவற்றிற்கும் வீயன்னு இடங் கொடுக்க வேண்டியதாயிற்று. இங்ஙனம் அங்கேரியானது ஒசுற்றியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. இது முதற்கொண்டு இவ்விரு அரசுகளும் ஆபிசுபேக்கு மன்னராட்சியினிடம் காட்டு கின்ற விசுவாசத்தினல் மட்டுமே இணைக்கப்பட்டன. இங்ஙனம் மகியார் இனம் பெரியதோர் வெற்றி அடைந்தது. ஆனல் இவ் வெற்றி நிலைத்தல், அதை அவர்கள் எங்ஙனம் பயன்படுத்து கிறார்கள் என்பதைப் பொறுத்திருந்தது. இந்தப் பிரச்சினை யிலேயே அங்கேரிய நாட்டின் கதி இப்போது தங்கியிருந்தது.

மகியார் இனத்தினர் நிதானமாக நடந்திருந்தால் அங்கேரி யப் புரட்சியின் போக்கு வேறு திசையில் சென்றிருக்கும். அவப்பேறுக எந்த நாட்டின உரிமையை மற்றவர்களுக்குக் கொடுக்க மறுத்தார்களோ அந்த நாட்டின உரிமைக்காக இவர் கள் போராடினர்கள். அங்கேரியில் வாழ்ந்த ஏழு இனத்தில் மகியார் இனமும் ஒன்று. மொத்தமாக உள்ள குடித்தொகை யில் மகியார் கூட்டம் அரைப்பங்கிலும் பார்க்கக் குறைந்த

கட்டாயமாக மகியார் மயமாக்கும் பூட்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848

தாகும். உதாரணமாக இந்த நூற்றுண்டுத் தொடக்கத்தில், அங்கேரிய வாசிகளின் தொகை 1,90,00,000 ஆக விருந்தது. இவர்களில் ஏறக்குறைய 85,00,000 மகியார் இனத்தவர். அங்கேரிய குடித் தொகையினருள் ஒருகோடி மக்களுக்கு மட்டுமே மகியார் மொழி யறிவிருந்தது. அங்கேரிய மக்களுள் மகியார் இனமே ஆற்றல் மிக்கது என்பது உண்மை. ஆனால் தங்கள் அயலவர்களுக்கு இனச் சமத்துவம் கொடுக்காது மறுப்பதற்கு இது தக்க காரணம் அன்று. மேலோங்கி நிற்கின்ற இனத்திற்குரிய ஆணவத்தினால் தொடக்கத்திலிருந்து மகியார் இனம் தங்கள் நடத்தையைக் கறைபடியச் செய்தது. இங்ஙனம் இவர்கள் பொறுமையின்றி நடந்தபடியால் இவர்களுடைய எதிரிகள் இதனையே ஆயுதமாகப் பயன்படுத்தி இவர்களை அழித்தனர். 1840 ஆம் ஆண்டுச் சட்டப்படி இலத்தீன் மொழிக்குப் பதிலாக மகியார் மொழியைப் பொதுப் பாலனத்துக்குரிய அரசகரும மொழியாக்கியமை அந்தச் சூழ்நிலையிலே நியாயமானதாக இருந்தது. காலகதியில் மேம்பாடான பண்பாட்டையுடைய மகியார் மொழி அங்கேரியப் பொது மொழியாகியிருக்கக்கூடும். ஆனால் மகியார் தாயகப் பற்றுடையவர். உணர்ச்சியால் உந்தப்பெற்று விரைந்து தங்கள் நாட்டை முற்றுக மகியார் மயமாக்க உறுதி கொண்டனர். இந்தப் பூட்கைப்படி மகியார் இனம் தவிர ஏனைய நாட்டினங்கள் அழிந்தொழியும். நாட்டின மொழி ஒன்று இல்லாது நாட்டின வாழ்க்கை நடத்துவது இயலாத காரியம் எனப் பிரசித்தஞ் செய்யப்பட்டது. மகியார் அல்லாதவர்களை "உண்மையான மகியார்களாக்க" பலாற்கார வழி வகைகளைக் கையாள மகியார் தவறவில்லை. சுருங்கச் சொன்னால், அங்கேரியில் இருந்த இனப்பிரிவுகள் எல்லாவற்றையும் அழித்தொழிப்பதே மகியாரின் இலட்சியமாகும். முன்னரே இவர்கள் பாலனத்தைக் கைப்பற்றிவிட்டனர். மகியார் மொழியைப் பலாற்காரமாகப் புகுத்தும் நோக்கத்துடன் கிறித்துவக் கோயில்களையும், பாடசாலைகளையும் கைப்பற்ற முயன்றனர். சேர் மானியப் பேரரசின் சில பகுதிகளிலும்[1] இரசியாவிலும்[2] பின் பற்றப்பட்ட கட்டாயமாக மகியார் மயமாக்கும் பூட்கை 19 ஆம் நூற்றுண்டிலே கிழக்கு ஐரோப்பாவில் நிலவிய பெரும் அமைதியின்மையின் தோற்றுவாய் என்க.

வடஅங்கேரிய சிலாவு மக்கள்

எனினும் அங்கேரியில் வாழ்ந்த ஏனைய இனத்தவர் தங்களுடைய நாட்டினம் பற்றி உணர்ந்திருந்தபடியால், தங்

1. பக்கம் 306.

2. பக்கம் 308.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மீது பிரயோகிக்கப்பட்ட அடக்குமுறையை எதிர்த்தனர். வடக்கு அங்கேரியில் வாழ்ந்த சிலாவு மக்கள் சிலோவாக்கர் என்னும் பெயர் பெறுவர். "எங்களைப் பொறுத்தவரையில் இரசியாவின் ஆதிக்கத்தை விட மகியார் ஆதிக்கம் பொல்லாதது. ஏனெனில் முன்னது எங்கள் உடலை மாத்திரம் அடிமையாகக் கொள்ள முடியும். ஆனால் பின்னது எங்கள் நேர்மையை அழித்து மரணமடையச் செய்யக் கூடிய அளவு மிரட்டுகின்றது", எனச் சிலோவாக்கர் கூறினர். மகியார் (மக்களின்) மனங்களில் பிரான்சியப் புரட்சிக் கருத்துகள் எங்ஙனம் படிந்தனவோ, அங்ஙனம் அவை சிலோவாக்கர் மனங்களிலும் படிந்தன. சிலோவாக்கரிடமும் சிலாவு மொழி புத்துயிர் பெற்றுத் தழைத்ததன் பயனாகச் சிலாவு இலக்கியம் வளர்ந்தது. இந்த மொழியின் மறுமலர்ச்சியில் இரு பெரியார்கள் முக்கியமானவர்கள். அவர்கள் சாபாரிக்கும், கொலாருமாவர். சாபாரிக்கு என்னும் பேராசிரியர் நாட்டுப் பாடல்களையும் பழைய நிகழ்ச்சிகளையும் திரட்டினர். தேசியப் புலவன் கொலாரின் "சிலாவின் மகள்" என்ற செய்யுள் 1824 இல் வெளியாயிற்று. புகழ்வாய்ந்த இச் செய்யுளில் ஓரளவிற்கு அரசியற் கருத்துப் பொதிந்திருந்தது; ஏனெனில் சிலாவு இனத்தை இது புகழ்ந்ததாதலால் என்க. சிலாவு உலகத்திற்கு, "சிலாவு இனத்தின் பண்டைப் பெருமையையும் அதன் அற்றுப்போன புகழையும்" இச்செய்யுள் எடுத்துக்காட்டிற்று. "அங்கேரியிலே, சிலாவுமக்கள் தங்களுடைய மொழியைக் குழிதோண்டிப் புதைக்க வைக்கும்", நீதியற்ற ஆஞ்ஞையைக் கொலார் எதிர்த்தார். "தந்தையர் பிறந்த நாடு என்னும் பரிசுத்த பெயரையுடைய எங்கள் நிலத்தை விட்டுக் கொடுக்காதீர்" என அவர் அறைந்தார். மேலும் அவர் கூறியவை: "எங்களுடைய உண்மையான தந்தையர் பிறந்த நாட்டை எவரும் தவறுகப் பயன்படுத்த முடியாது. இந்த நாட்டை எவரும் எம்மிடமிருந்து அபகரிக்கவும் முடியாது. . . . . நாங்கள் அதற்கு எங்கள் உளத்திலே மதிப்பான இடத்தைக் கொடுத்துள்ளோம். . . . . எங்கள் மூதாதையரிடமிருந்து வழி வழியாக எமக்கு வந்த அருவிகளும், காடுகளும், வீடுகளும் எமக்கு இனியன. அவமானம்—அவமதிப்பு முதலானவற்றை மறந்து வழமை, மொழி, மனநிலை ஆகிய ஒருமைப்பாடுகளைப் பேண நமது நாடென்ற பேரபிமானமே காரணமாயிருந்தது". "நாட்டிலே தனித் தனியாக வாழ்கின்ற சிலாவு மக்களே, ஒன்றுசேருவோம் வாரீர். பிரிந்திருக்க வேண்டாம்", என வேறிடத்தில் கூறியுள்ளான். ஆனால் சர்வ சிலாவுக் கொள்கையைப் பற்றிய தன் இலட்சியம் இலக்கியத்தைப் பொறுத்த தெனவும் அரசியற் றொடர்பற்றது எனவும்

1848.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848. அவர் விளக்கியுள்ளார். அக்கோட்பாட்டை இங்கு மேற்கோளாக எடுத்துக் காட்டுவது பொருத்தமுடைத்து. "எல்லாச் சிலாவு மக்களும் அரசியலில் ஒற்றுமைப்பட்டு நிற்பதை இது தன்னுள் அடக்கவில்லை; மக்களாட்சிக் கிளர்ச்சியை அரசாங்கத்திற்கும் வேறு ஆட்சியாளருக்கும் எதிராகத் தூண்டவும் இல்லை; எனெனில் இதன் விளைவால் துன்பமும் குழப்பமுமே வருமாதலால் என்க. பல அரசுகளாகப் பிரிந்துள்ள நாட்டிலோ பலவிதமான மதப் பிரிவுகளையும் கோட்பாடுகளையும், எழுத்து, காலநிலை, ஆள்புலம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் வேறுபாடுகளையுமுடைய நாட்டிலோ இலக்கியத் துறையில் அன்னியோன்னியமான பரிமாற்றம் இருக்கலாம். அது உலகியல் அதிகாரிகளுக்கும் ஆட்சியாளருக்கும் ஆபத்தை விளைவிக்காது. எனெனில் அது இராச்சிய எல்லைகள் யாவற்றையும் எவ்விதமான மாற்றமும் இன்றி விட்டுள்ளதாதலால் என்க. அத்துடன் இப்போதைய நிலையைத் திருத்திக் கொண்டு, எல்லாவகையான ஆட்சிமுறைக்கும் ஏற்றவாறு நடந்தும், குடியியல் வாழ்க்கையின் எல்லாத் தரங்களுக்கும் ஏற்பத் தானாக அமைந்தும் இருக்குமாதலால் என்க."[1] ஒரு நாடு ஒன்றுபட்டிருப்பதற்கு அங்குள்ள மக்கள் எல்லோரும் ஒரே மாதிரிச் சிந்தித்து, ஒரே சமயத்தைத் தழுவி, ஒரே மாதிரியான பழக்க வழக்கங்களை யுடையவராக இருத்தல் வேண்டும் என்பது கட்டாய நியதியன்று. ஒற்றுமை என்றால் எல்லோரும் ஒரு தரப்பட்டிருக்க வேண்டும் என்பதல்ல. வேற்றுமை பெரும்பாலும் பெலவீனத்தின் தோற்றுவாயாகாது வலிமையின் ஊற்றாக இருக்கும். 1842 ஆம் ஆண்டில் அரசருக்குச் சிலோவாக்கிய மக்கள் மனு ஒன்றை அனுப்பினர். அதில் அம்மக்களின் கோரிக்கை யாவும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருந்தன. அதிலே சிலாவு மக்கள், தாங்கள் "தனிப்பட்ட நாட்டினமாக அமைந்தபடியால் இவ்வினம் தன்னுடைய மொழியை வளர்ப்பதின் மூலமே மேலும் முன்னேறும் தகுதி உடையது. இந்த நாட்டினம் பல நூற்றாண்டுகளாகத் தன்னுடைய உயிரையும் பொருளையும் எல்லோருக்கும் பொதுவான தந்தையர் நாட்டிற்கு வழங்கியதற்குக் கைம்மாறாக, ஏனைய அங்கேரிய இனத்தினரைப்போலச் சம உரிமையைப் பெற்று இன்புற்று வாழ்ந்தது", எனக் கூறினர். இக்கோரிக்கை நியாயமானதாகும். ஆனால் இங்ஙனம் தங்கள் சொந்த மொழியையும் தங்கள் சாதிக்குரிய பண்பாட்டையும் வளர்ப்பதற்கு இவர்கள் செய்த கோரிக்கையை

1 Watson, op. cit. 56.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகியார் இனத்தினர் துரோகமானதெனக் கொண்டு, இது பிரி 1848.
வினையையும் சுதந்திரத்தையும் கருதுகின்றதெனவும் பொருள் கொண்டனர். இருந்தபோதிலும் மகியார்களிடையும் மிதவாதிகள் இருந்தனர். இவர்கள் குறுகிய இன அடிப்படையில் அமைந்த பூட்கையைக் கண்டித்தனர். அடக்கி ஆளப்படும் நாட்டினங்களின் சார்பிலே அனுதாபக் குரல்கள் எழுந்தன. அங்கேரியில் உள்ள பெரும் தாயகப்பற்றுடைய மாநிலக் கிழானனை இசுற்றீபன் சேச்செனி தன்னுடைய நாட்டு மக்களுக்கு, மகியார் அல்லாத மக்களை இணக்கமான முறையிலன்றி வலுக்கட்டாய முறையிலல் மகியார் மயமாக்குவதற்கு அவர்கள் செய்யும் முயற்சிகள் ஆபத்து நிறைந்தவை என எச்சரிக்கை செய்தான். இவன் தன்னுடைய நாட்டினிடம் காட்டிய பற்றில் சற்றேனும் ஐயப்பாடில்லை. ஏனெனில் பொருளாதாரம் பற்றி இவன் எழுதியவை அங்கேரி மீண்டும் தன்னிலை அடைதற்குப் பெரிதும் உதவின வாதலால் என்க. "அறிவுத்துறையில் எங்களுக்குள்ள உயர் நிலையே இந்த இனங்களை அங்கேரிய நாட்டினத்துடன் இணைந்திருக்கச் செய்யும்"[1] என இவன் குறிப்பிட்டான். மேலும் கொசுத்து என்பானை சிலோவாக்கிய மக்களை, "மகிய மக்களுக்கு எதிராகத் தூண்டுகின்றனர்" எனவும் இவன் குற்றஞ் சாட்டினன். ஆனால் இவன் இங்ஙனம் எதிர்த்து மொழிந்த உரையை எவரும் பொருட்படுத்தவில்லை. இன உணர்ச்சி என்னும் வெறியினால் அறிவுக் கண்குருடான மகிய அரசியல்வாதிகள் தொடர்ந்து செய்த செயலாலே அங்கேரி உள்நாட்டுக் கலகங்களினால் ஏற்பட்ட பயங்கரங்களுக்குள்ளாயிற்று.

தென் அங்கேரிய சிலாவு மக்கள்.

இங்ஙனம் மகிய மக்கள் கொண்டுவந்த மொழியின் தனியுரிமை அவர்களை வட அங்கேரியில் உள்ள சிலாவு மக்களுடன் மோதிக்கொள்ளச் செய்ததுமல்லாமல் தென் சிலாவு மக்களுடனும் மோதச் செய்தது. தென் சிலாவு மக்கள் குரோட்டரும் சேபியருமாவர். இவ்வினத்தினர் குரோசிய–சிலவோனியா எனப்படும் இராச்சியத்திலே குடியேறியிருந்தனர். இப்பகுதி வழமையாகக் குரோசியா என்னும் பெயர் பெறும். அங்கேரியுடன் அரசியல் இணைப்புடைய இப்பகுதி அங்கேரிக்குத் தென்மேற்கிலிருந்தது. குரோசியாவிற்குக் கிழக்கிலுள்ள சமவெளியிலும் சேபியர் வாழ்ந்தனர். இந்தச் சமவெளியின் பெயர் பானற்று. குரோசிய மக்கள், அங்கேரியப் பாராளுமன்றத்திலும் பிரதிநிதித்துவம் பெற்றனர். அத்துடன் தங்களுடைய சொந்த மாகாணச் சபையை ஆக்கிராம் என்னும் இடத்தில்

1 Francis Deak, A Memoir (1880), 57.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848. வைத்திருந்தனர். இங்கிருந்து கொண்டு, மகிய மொழியைப் பலாற்காரமாகத் திணிப்பதை எதிர்க்க முயற்சி செய்தனர். தேசப் படத்திலே குரோசியாவைக் காணவில்லை எனக் கொசுத்து விட்ட அறிக்கையிலிருந்து குரோட்டு மக்களுக்கும் மகிய மக் களுக்கும் இருந்த வெறுப்பு வெளிப்படையாயிற்று. இக் கூற் றினாலே குரோட்டு மக்களுடைய நாட்டினவுணர்ச்சி தூண்டப் பட்டது. தென்பகுதிச் சிலாவு மக்களுடைய நாட்டின இயக்கம் "இலிரிசிம்" எனப் பெயர்பெறும். தொடக்கத்தில் இவ்வியக் கம் இலக்கியத் தொடர்புள்ளதாக மட்டுமே இருந்தது. இத னுடைய பிரசாரக் கருவி "இலிரிய நாட்டினச் செய்திமடல்" என்பதாகும். இதன் ஆசிரியன் உலூயி காச்சு என்பவனாவான். மகியார் தங்கள் அரசியல் தலைமைக்கு இது ஆபத்து விளைக்கக் கூடும் எனக் கண்டனர். எனவே குரோட்டருக்கும், மகிய மக்களுக்கும் இருந்த உறவு கசந்தது. இங்ஙனம் அங்கேரியில் நிலவிய இனங்களின் நிலைமையைப் பற்றிக் கூறுவதை முடிப் பதற்கு முன்னர் உரூமேனியர், சட்சனியர் ஆகிய வேறும் இரண்டு நாட்டினங்களைப் பற்றிக் கூற வேண்டும். திரான்சில் வேனியாவில் உள்ள குடித்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் உரூமேனியர். இருந்தபோதும் உரூமேனியரை மகி யார் மிகவும் இகழ்ந்து தொதுக்கினர். அங்கேரிய இராச்சியத் திலே திரான்சில்வேனியாவைச் சேர்க்க வேண்டும் என மகி யார் விரும்பியதைச் சட்சனியர் எதிர்த்தனர். எனவே அங் கேரியில் உள்ள நிலை மிகவும் நெருக்கடியாக இருந்தது. மகிய நாட்டினரின் நிலைமை ஈடாடிக் கொண்டிருந்தது என் பதை முன்னரே கண்டுள்ளோம். மகியார் தங்களுடைய சுதந் திரத்தை வற்புறுத்தியதலால் ஆபிசுபேக்கு முடியாட்சியின் மீது போருக்குரிய அறைகூவலை விடுத்துள்ளனர். இந்த முடி யாட்சியின் பலவீனம் காரணமாக அவர்கள் சில உரிமைகளை வலிந்து பெற்றுக்கொண்டனர். எனினும் என்றோ ஒரு நாளைக்கு இந்த உரிமைகளை வாள்முனைகொண்டு பாதுகாக்க வேண்டி வரும். அதே நேரத்தில் இவர்களைச் சுற்றிப் பல நாட்டினங்கள் எதிரிகளாய் இருந்தன. இந்த எதிரிகளின் தொகை மகிய மக்களின் தொகையிலும் பார்க்க இருபது அல்லது முப்பது இலட்சம் கூடுதலாக இருந்தது. மகியார் இனக்கொள்கையைப் பொறுத்தவரையில் சகிப்புத்தன்மை யற்றவராயிருந்தமையால் இந்தப் பெரும்பான்மையினர் மகியாரின் எதிரிகளிடம் போய்த் தஞ்சமடைந்தனர். வெளிநாட்டிற் போரையும் உள்நாட்டிற் கல கத்தை அடக்கும் செயலையும் ஒரே நேரத்திற் கொண்டு நடத்த முடியாது என்பது தெளிவு. மகியார் தலைவர்கள் திருத்த முடியாத மாபெரும் பிழை ஒன்றைச் செய்தனர். அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைய சாதியினரை அந்த நேரத்திற்கு வேண்டிய சலுகை 1848.
களைக் கொடுத்துத் திருத்தி செய்ய மறுத்தமையாகும். தாராள மானதும் பெருந்தன்மையுடையதுமான பூட்கையை மேற் கொள்வது எவ்வளவு புத்திசாலித்தனமும் நீதியுமாகுமென் பதை உணரக் கொசுத்து தவறிவிட்டான். குறுகிய அடிப் படையில் உள்ள இனவாதத்தை ஆதரிப்பவனுகையால் தன் னிடம் உண்மையான அரசறிவு குறைவென்பதைக் காட்டி னன். 1848 எப்பிரிலில் சேபியரின் பிரதியாளர் குழு வொன்றிற்கு இவன் கூறியவை பின்வருமாறு : " சிலாவு மக் களுடைய மொழியையும் மகிய மொழியையும் சமமாகக் கருத வேண்டும் என்கின்ற கோரிக்கை எழுதற்கு முன்னர் வாள் கொண்டு முடிவு செய்ய வேண்டும்". இந்த அறை கூவலைச் சிலாவு நாட்டினங்கள் ஏற்றுக்கொண்டன ; ஏற்றுக் கொண்டு அங்கேரியை விட்டுப் பிரியவேண்டும் எனவும், தங்க ளுடைய பரம்பரையான சுதந்திரம் திருப்பிக் கொடுபடவேண்டும் எனவும், தென் சிலாவு அரசு ஒன்று நிறுவவேண்டும் என வும் கிளர்ச்சி செய்தன.

குரோட்டு மக்கள், மாநிலக்கிழானை இயெலாசிக்கு என் அங்கேரியில்
பானைத் தங்களுக்குத் தலைவனுகக் கொண்டனர். இவன் அங் உள்நாட்டுப்
குள்ள பிரபு ஒருவனுடைய மகன். இவன் பதிலரையனுக போர்.
நியமனம் பெற்றவன். இப்போது உறுதியான அரசியல் நோக் கமுடைய " இலிரிய " இயக்கத்திலே, அதாவது ஆபிசுபேக்கு மன்னராட்சியிலே சிலாவு இராச்சியம் ஒன்றை நிறுவுதலில் தனக்கு விருப்பம் உண்டு என இவன் கூறினன். இயெலா சிக்கு உண்மையிலே சிலாவு நாட்டின இலட்சியத்திலே அக்கறை கொண்டவனே என்பதும் ஒசுற்றியப் பேரரசின் நிலையைப் பழை மைக்குக் கொண்டுவர முதலிலிருந்து பாடுபட்டவனே என்பதும் ஐயத்திற்குரியவை. உண்மையில் இவனுடைய பூட்கையின் நோக்கம் என்னவென்றால் அங்கேரியை ஆயுதம் தாங்கிய இரண்டு கூறுகப் பிரித்து, மகியாரின் புரட்சியைத் தவிர்க்க முடியாத தோல்வியடையச் செய்வதேயாகும். தான் தெரிந் தெடுத்த இந்தவழியை இவன் தொடர்ந்து கைக்கொண்டான். அதன்படி மகியார் அலுவலர்களைப் பதவியிலிருந்து நீக்கினன். அதன் பின்னர் குரோசியப் பாராளுமன்றத்தை யூன் 5 ஆம் நாள் அகிராமிற் கூட்டுவித்தான். இப் பாராளுமன்றம் கூட்டப்பட்டதும் இது புடாபெசுத்தில் நிறுவிய அங்கேரிய அமைச்சின் அதிகா ரம் செல்லுபடியாகாது எனத் தள்ளியது. அங்கேரியிலிருந்து குரோசியா விலக வேண்டும் எனவும் ஆஞ்ஞை பிறப்பித்தது. பானற்றில் உள்ள சேபியர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848-49.

படுத்தி மகியாருக்கு எதிராகக் கலகஞ் செய்தனர். காளேவிற்சு என்னும் இடத்தில் சேபியரின் நாட்டின மாநாடு ஒன்று கூடியது. இந்த மாநாட்டின் மூலம் சேபியர் இடைக்கால அரசாங்கம் ஒன்றை நிறுவிக் கொள்கையில் குரோசியாவிலே வாழ்கின்ற தம் இனத்தவரைத் தழுவி நடந்தனர். வட அங்கேரியில் வாழ்கின்ற சிலோவாக்கிய மக்களும் இப்புரட்சி உணர்ச்சியினல் உந்தப்பட்டனர். ஆனல் "கொசுத்தின் தூக்குமேடை" யினற் பிறந்த பெரும் பீதியினல் சிலோவாக்கியத் தலைவர்கள் தங்கள் நாட்டு மக்களுடைய எதிர்ப்பைப் பயனளிக்கக் கூடிய முறையிலே அமைத்துக்கொள்ள முடியாதிருந்தது. எனவே மகியாருடைய நிலை இக்கட்டானதாயிற்று. அவர்கள் ஒருபுறத்திலே ஒசுற்றியாவை யெதிர்த்தும், மற்றொரு புறத்திலே அங்கேரிய சிலாவு மக்களை எதிர்த்தும் போராட வேண்டிய நிலையிலிருந்தனர். முன்னவரை எதிர்த்துப் போராடிச் சுதந்திரமாக நாட்டின அபிவிருத்தி உரிமை பெற முயற்சிக்கையில் அதே உரிமைகளைப் பின்னவருக்கு வழங்க மறுத்தனர்.

ஒசுற்றியாவுக்கும் அங்கேரிக்கும் ஏற்பட்ட பிளவு.

இன்சுபுருக்கில் இருந்த பேரரசு அரண்மனைக்கும், குரோசிய பதிலரையனுக்கும் இடையே விரோதத்தை வளர்வித்ததே மகியாருடைய முதல் நடவடிக்கையாகும். அங்கேரிய மந்திரத்தின் தலைவனை பத்தியானி, "இலிரிய இயக்கத்தின்" உண்மையான நோக்கம் சுதந்திரமான சிலாவு நாட்டுக் கூட்டிணைப்பை நிறுவுவதே என்று கூறிப் பேரரசனுக்குப் பீதியை உண்டு பண்ணி விட்டான். மகியாரின் உதவியைக் கொண்டு வீயன்னவில் ஒழுங்கை நிலைநாட்ட ஒசுற்றிய மன்னன் நம்பியிருந்தான் என்பதும் உண்மையாக இருக்கவும் கூடும். டத்தியானி என்பான் இன்சுபுருக்கிற்குப் போனதனல் ஆபிசுபேக்குப் பேரரசன் இயெலாசிக்கைப் பதவியிலிருந்து நீக்கும் பொதுவறிவிப்பைப் பிறப்பித்தான். அவ்வறிவிப்பின்படி திரான்சில் வேனியாவில் உள்ள உரூமேனியரும், சக்சனியரும், அங்கேரிய அரசாங்கத்திலிருந்து பிரிந்து சுதந்திரமான இராச்சியம் நிறுவும் முயற்சியும் கண்டிக்கப்பட்டது. எப்படியாயினும் பேரரசனுடைய மனதைத் தன்பால் திருப்பியபடியால் இயெலாசிக்கு பதவியிலிருந்து நீக்கப்படவில்லை. அங்கேரியப் பாராளுமன்றத்தில் கொசுத்திற்குப் பெருஞ் செல்வாக்கிருந்தது. எனவே குரோசியப் பிரச்சினையைப் படைப் பலத்தைக் கொண்டு தீர்மானிக்க அங்கேரியப் பாராளுமன்றம் உறுதி செய்தது. சில காலமாக, ஒசுற்றியப் பேரரசு மகியார் பக்கமாகவோ சிலாவு மக்கள் பக்கமாகவோ சாரமறுத்தது. ஆனல் இரண்டு காரணங்களினல் பேரரசு விரைந்து தீர்மானஞ் செய்யவேண்டியதாயிற்று. ஒசுற்றிய காசுத் தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குப் பதிலாக அங்கேரிய காசுத் தாள்களை அச்சடித்து விடும் நிதிப் பூட்கை, ஒசுற்றியாவிற்கும் அங்கேரிக்கும் பூரண பிளவை ஏற்படுத்தும் திட்டம் என்பது வெள்ளிடைமலை. இன்னும் ஒசுற்றிய அரசாங்கம் போர்க்களத்தில் மோதுவதினின்றும் பின்னிட்டிருக்கும். ஆனால் கூசுற்றேற்சாவில் இராடெக்கி வெற்றி பெற்று (யூலை 25) மிலானுட் பிரவேசித்துள்ளான் என்னும் செய்தி இந்த அச்சத்தை நீக்கியது.[1] இதுவே செயலாற்றுதற்கு ஏற்ற சமயமாகத் தோன்றியது. எனவே செத்தெம்பர் முற்பகுதியில் குரோசிய இராசப்பிரதிநிதி பேரசின் இணக்கத்துடன் திரேவைக் கடந்து சென்று, குரோசியச் சேனையுடன் அங்கேரி மீது படையெடுத்தான். 1848-49.

போர் தொடக்கத்திலே ஒசுற்றியப் படைகளுக்குச் சாதகமாயிருந்தது. வீயன்னாவிற்கு உதவியளிக்க அங்கேரியப் படைகள் முயற்சித்தன. ஆனால் சுவெச்சாற்று என்னுமிடத்தில் (ஒற்றோபர் 30) அங்கேரியப் படைகள் பலத்த சேதத்துடன் பின்வாங்கின ; அதன்பின்னர் சில மாதங்களாகத் தோல்வி மேற்றோல்வி அடைந்தன. வீயன்னாமீது வெற்றிகொண்ட ஒசுற்றியத் தளபதியான விண்டிசிக்கிரற்று என்பான் அங்கேரியத் தலைநகரைக் கைப்பற்றினான். இதற்கு முன்பே அரசாங்கம் இந்நகரை விட்டு விலகிவிட்டது. இதற்கு நான்கு கிழமைகளுக்குப் பின்னர் காபொறை என்னுமிடத்தில் மகியார் படைகள் படுதோல்வியடைந்தன. இதன் பின்னர் குறித்த தொடரிகல் முடிவிற்கு வந்துவிட்டது போலத் தோன்றியது. அன்றியும் ஒசுற்றியாவின் வெற்றியும் உறுதிபோற் றென்றியது. எப்படியாயினும் போரில் எதிர்பாராததே நடக்கும் என்பதை நிகழ்ச்சிகளின் போக்குக் காட்டிற்று. போர் உத்திப்படி மகிய மக்கள் படுதோல்வி அடைந்துவிட்டனர் எனக் கருதத்தக்க தாயிருந்த வேளையில் திடீரென அவர்கள் நம்பமுடியாதவளவிற்கு எதிர்க்கும் சத்தியுடையோராயினர். போரிலே படுதோல்வி கண்டபோது அவர்களுடைய உணர்ச்சிவேகம் குறைவதற்குப் பதிலாக அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களால் மேலும் அதிகரித்தது. புத்துயிர் பெற்ற தீவிர உணர்ச்சியினால் உந்தப்பெற்ற அவர்கள் பெரும்போர் புரிந்தனர். அவர்கள் தோற்றுவிட்டனர் எனக் கருதிய உலகம் அவர்களுடைய அருஞ்செயல்களைக் கண்டு வியப்புற்றது. வீயன்னாவின் பாதுகாப்பை முன்னர் ஒழுங்கு செய்த பழைய வீரனான பெம் என்பான் ஒசுற்றியரையும் இரசியரையும்[2] உவாலாக்கியாவின் எல்லையைத் ஒசுற்றியாவுக்கும் அங்கேரிக்கும் ஏற்பட்ட போரின் போக்கு.

1. பக்கம் 225.

2. ஒசுற்றியருக்கு இரசியப் படை உதவியளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1849 தாண்டி ஒடும்படி விரட்டிய பின்னர் திரான்சில்வேனியாவின் ஆட்சியாளனுயினன். தென் பகுதியில் பேர்சல் என்பான் சில வோனியாவிலும் பானூற்றிலும் உள்ள சேபிய மக்களை அடக்கி னன். இப்பொழுது எவுநர் முதல்வனுயுள்ள கோர்கியின் தலை மையில் பிரதான படைகள் ஒசுற்றியப் படைகளைத் தோல்வி மேற் றேல்வியடையச் செய்தன. அங்கேரியிலிருந்து ஒசுற்றியப் படை கள் பின்வாங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. இதுவே இப் போராட்டத்தின் உச்சமாகும். மகியார் அரசியற் சாதுரியத் தைப் பயன்படுத்தியிருப்பின் ஒசுற்றிய அரசாங்கத்தோடு கௌரவ மான உடன்படிக்கையைச் செய்திருக்கலாம். ஆனல் அங்கேரி யின் எதிர்காலம் இப்பொழுது உண்மையில் சருவாதிகாரியாக வுள்ள கொசுத்து என்பானுடைய கையிலிருந்தது. நிதான மாக நடக்கவேண்டுமெனக் கொசுத்து என்பானுக்குக் கொடுக் கப்பட்ட ஆயுரைகள் யாது பயனுமளித்தில. வெற்றி வெறி தலைக்கேறவே எப்பிரில் 14 ஆம் நாள், கொசுத்து தன் பணி நெறியிலேயே மேற்கொண்டிராத பெரும் ஆபத்தான நட வடிக்கையை மேற்கொண்டான். அதாவது ஆபிசுபேக்கு மன் னர் பரம்பரையை அரசுகட்டிலிலிருந்து நீக்கிவிட்டு அங்கேரி யைக் குடியரசாகப் பிரகடனஞ் செய்தமை என்க. இவனுடைய செயலானது, " மன்னராட்சி உரிமைத் தத்துவத்திற்கு " நேரடி யாக விடுக்கப்பட்ட அறைகூவலாகும் ; எனவே இச்செயல், இர சியா தலையிடுவதற்கு ஒரு தலைக்கீடாயிற்று. சார் முதலாம் நிக்கலசு முற்போக்கு இயக்கங்கள் எல்லாவற்றையும் இரக்க மில்லாது எதிர்ப்பவனுவான். 19 ஆம் நூற்றாண்டிலே வாழ் ந்த கோமாளி வீரனிவன். இன்னற்படும் தனியாட்சியாளருக்கு உதவியளிப்பதற்கே இறைவன் தன்னைப் படைத்துள்ளான் என் னும் கருத்து இச்சார் மன்னனுக்குண்டு. குரோசியாவிலிருந்து இயெலாசிக்கு மீண்டும் முன்னேறவும், ஒசுற்றியப் படைகள் மீண்டும் மேற்கிலிருந்து படையெடுக்கவும் இரசியப் படைகள் கிழக்கிலிருந்து காப்பேதியன் பிரதேசத்தினூடே வந்து குவிந் தன. அளவிலாப் படைகளின் தாக்குதலினல் மடக்கப்பட்ட மகி யாரினல் தோல்வி நிச்சயம் என்ற நிலைமை மாற்றமுடிய வில்லை. இந்த நிலையைச் சமாளிப்பதற்கு மகியார் அல்லா தவர்களின் குறையைத் தீர்ப்பதன் மூலமும் அவர்கள் தம் மொழியைத் தடையின்றி அபிவிருத்தி செய்யும் உரிமையை ஏற்பதன் மூலமும் அங்கேரியப் பாராளுமன்றம் இறுதி முயற்சி செய்தது. ஆனல் இச்சலுகைகள் காலம் தாழ்த்தி அளிக்கப் பட்டபடியால் நிகழ்ச்சிகளின் போக்கை மாற்ற முடியாது போயி ற்று. ஒகத்து 11 ஆம் நாளன்று கோர்கியின் சார்பிலே கொசுத்து பதவியைத் துறந்து துருக்கிய எல்லையைத் தாண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு சரணடைந்தான்.[1] இரண்டு நாட்களுக்குப் பின்னர் கோர் 1849
கியின் தலைமையில் அங்கேரியப் படைகள் விலாகோசில் இர
சியருக்கு அடிபணிந்தன. அத்துடன் அங்கேரியப் புரட்சி வீழ்ச்சி
யுற்றது.

புரட்சியினால் அங்கேரியில் ஏற்பட்ட விளைவுகள்.

ஒசுற்றிய அரசாங்கம் மிருகத்தனமாகத் தண்டனை விதிக்கத் தொடங்கிற்று ; புரட்சி இயக்கத்திலீடுபட்டவரிலே பெருந்தொகை யினருக்கு மரணதண்டனை விதித்தனர். இங்ஙனம் மரண தண்டனை விதிக்கப்பட்டோருள் பதின்மூன்று படைத்தலைவர் களும் போரைத் தடுக்க முயற்சித்த முன்னைநாள் பிரதமரான பத்தியானியும் சிலராவர். பலர் சிறையிலுமிடப்பட்டனர். வேறு விதங்களிலும் இப் போராட்டத்தின் விளைவாகப் பல கெடுதல் கள் நிகழ்ந்தன. இதனால் அங்கேரிய அரசியல் அபிவிருத்தி பின்னடைந்தது. உண்மையிலே, இந்தப் போர் அங்கேரிய நாட்டினங்களுக்குத் திருத்தியோ இலாபமோ அளிக்கவில்லை. பேரரசனின் முடியைக் காப்பதற்கு மதிப்பிடற்கரிய தொண் டாற்றிய குரோட்டு மக்களின் பாராளுமன்றம் பறிமுதலா கியது. தென் அங்கேரியில் வாழ்ந்த அங்கேரியரும், திரான் சில்வேனியாவில் வாழ்ந்த சக்சனியரும் உரூமேனியரும் எந்த அரசியல் உரிமைக்காகப் போராடினரோ அந்த அரசியல் தனி யுரிமையைப் பெறவில்லை. மகியார் மக்களோ தங்களுக்கு முன்னரே இருந்த யாப்புச் சுதந்திரத்தின் அடையாளத்தைக்கூட இழந்தனர். பொகீமியாவைப் போல அங்கேரியும் ஒசுற்றிய அரசின் ஒரு மாகாணமாகியது. அதோடு அது ஒரு சுதந்திர நாட்டின அரசாக இயங்குவது நிறுத்தப்பட்டது. அதன் யாப் பும் பாலனத் தன்னுண்மையும் முற்றுக அற்றுப்போயிற்று. குரோசியா, திரான்சில்வேனியா, தென் அங்கேரி ஆகியவை வெவ்வேறு மாகாணங்களாகின. அங்கேரியின் எஞ்சிய பகுதி பாலனத்திற்காக ஐந்து பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் யாவும் பழைய அங்கேரிய இராச்சியத் தின் அரசியல் ஐக்கியத்தை முற்றுக அழித்தன. உண்மையில் சுவாரன்பேக்கின் கொள்கை ஐக்கிய ஒசுற்றிய அரசை நிறுவு வதே. இந்த இலக்கைக் கொண்டிருந்த சுவாரன்பேக்கு அரசை ஒருமுகப் படுத்தும் பூட்கையைத் தீவிரமாகப் பின்பற்றினான். இங்ஙனம் செய்வது வெளிப்படையான ஒரு தனி முதன்மைப் பூட்கையுமாகும். "அங்கேரியில் முன்னைநாள் யாப்பு, புரட்சி யால் தள்ளுபடியாயிற்று", என உத்தியோக பூர்வமாக அறி விக்கப்பட்டது. மாகாணச் சபைகள் மூலம் நடக்கும் தல வாட்சிக்குப் பதிலாகப் பாலனத்திலும், நீதி பரிபாலனத்திலும்

1. 1895 ஆம் ஆண்டு அவன் தியூரினில் காலமானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1849-60

ஒசுற்றிய அரச அலுவலர் அமர்த்தப்பட்டனர். இவர்கள் சேர் மானியராயும் செக்கோசிலவாக்கியராயும் இருந்தனர். "அரச கருமமொழியாக" இருந்த மகிய மொழிக்குப் பதிலாகச் சேர்மானிய மொழி இடம் பெற்றது. அங்கேரியைச் சேர்மானிய மயமாக்கும் நடவடிக்கை மும்முரமாக நடந்தது. இது ஒரு புறமிருக்க 1848 இல் நடந்த புரட்சியின் பயனாக ஏற்பட்ட சமூக மாற்றங்கள்–இவை அங்கேரியப் புரட்சியின் நிலையான விளைவுகளாகும்—அழியாது நிலைத்துவிட்டன. ஆனால் புதிய ஆட்சிமுறையில் அம்மாற்றங்கள் விருத்தியடைந்தன. அரசியல் வட்டாரத்திலேயே புரட்சியினால் ஏற்பட்ட விளைவு முற்றாக அழிக்கப்பட்டது.

ஒற்றேபர் உரிமை உறுதி.

வெளித்தோற்றத்தில் ஒசுற்றியப் பிற்போக்கு இயக்கமான "பாக்கு முறை" பலம் கொண்டதுபோலத் தோன்றியது[1]. இருந்தபோதிலும் பிறீட்டியங்கு என்பான் சரியாகக் குறிப்பிட்டது போல, "ஒருமுகப்படுத்துவதும் சேர்மானிய மயமாக்குவதுமான தனிமுதன்மை பலமான அத்திவாரத்தில் அமையாத படியால் வெளியேயிருந்து வரும் தாக்குதல்களை அது எதிர்த்து நிற்கமாட்டாது". இத்தாலிய மீட்சிப் போரிலே அதன் பெலவீனம் வெளிப்படையாயிற்று. மசெந்தா, சொல்பெறீனோ ஆகிய இடங்களில் ஒசுற்றியா அடைந்த தோல்விகள்[2] உலொம்பாடியில் மட்டுமல்லாமல் அங்கேரியிலும் அதன் முதன்மை அழிவதற்குக் காரணமாயிருந்தன. "பாக்கு முறை" படுதோல்வி அடைந்தது. 1860 ஆம் ஆண்டில் அங்கேரியின் வரலாற்றிலே பிற்போக்கு முறை திடீரென முடிவுற்றது. அரசியல் மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியம் என்பதைப் பேரரசில் இருந்த எல்லாக் கட்சிகளும் ஒப்புக்கொண்டன. ஆனால், அதற்குச் சிறந்த முறை எது என்பதைப் பற்றிக் கருத்து வேற்றுமை நிலவியது. சேர்மானிய தாராளப் போக்கினர் ஒருமுகப் படுத்திய பாலன முறையைப் பரந்த அடிப்படையில் நிறுவ இணங்கினர் எனினும் சுவாரன்பேக்குத் தொடங்கிய அம்முறைமையைப் பாதுகாக்க விரும்பினர். அதாவது இவர்கள் பேரரசு முழுவதற்கும் மையப் பாராளுமன்றம் ஒன்றை நிறுவ முயற்சி செய்தனர் என்க. "பாக்கு முறையின்" அடிப்படைத் தத்துவமான பாலனத்திற்குரிய ஐக்கியம் சேர்மானிய முதன்மைக்கு உறுதி அளிப்பதாகக் கருதப்பட்டது; ஆனால் இந்தக் கருத்தை இச்சேர் மானியர், யாப்பு என்னும் போர்வையுள் மறைத்து வைத்திருந்தனர். ஒசுற்றியப் பேரரசில் உள்ள பல்வேறு நாட்டி

1. பக்கம் 182.
2. பக்கம் 233.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னங்கள், பிரிவினை இயக்கத்தைக் கைவிடுவதற்கு அரசியற் சுதந்திரத்தைச் சலுகையாக வழங்குதல் ஒரு தூண்டுகோலாக இருக்கும் எனவும் கருதப்பட்டது. இதனால் பிரிந்து புறம்பான நாட்டினமாக வாழ்வதன்பொருட்டு எழுகின்ற கோரிக்கைக்குப் பதிலாக யாப்பு உரிமைகளை இவ்வினத்தினர் விரும்புவர் என வும் கருதப்பட்டது. ஆனால், மகியாரும் சிலாவினரும், சேர் மானியப் பேரரசுடன் இணைந்து ஒன்றுபட ஒருப்படவில்லை. இவ்வினத்தினரின் பிடிவாதம் பலமாகியது. அதன்பயனாகத் தாங்கள் இழந்த தனியுரிமைகளை ஒசுற்றியப் பேரரசிடமிருந்து ஓரளவிற்கு மீட்டுக்கொண்டனர். ஒற்றேபர்ப் பட்டயம் அல்லது உரிமை உறுதி (1860) புரட்சிக்கு முன்னர் இருந்த நிலைமைக்கு அங்கேரியை மீட்டது. பாலனத்திற்குரிய ஐந்து பெரும்பிரிவு களும் நீக்கப்பட்டன. பாராளுமன்றமும், அங்கேரிய அலு வலரை நியமிக்கும் உரிமையை மீண்டும் பெற்ற மாகாண சபைகளினால் நடத்தப்படும் தன்னாட்சி முறைமையும் புத்துயிர் பெற்றன. இங்ஙனம், பாலன அதிகாரம் பதவியிலிருந்து நீக் கப்பெற்ற சேர்மானியரிடமிருந்து எடுக்கப்பட்டு மீண்டும் மகியா ருக்குக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு இப்பட்டயம் தனிமுத ன்மை ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து அங்கேரிய நாட்டினங் களை இணக்கஞ் செய்வதற்கு அடிகோலியதுபோலத் தெரிந்தது. 1848 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த நிலையங்களுக்குப் புத்துயிரளிக்கப்பட்டதுடன் மாத்திரம் அங்கேரிய மக்கள் திருத்தி யடையவில்லை. மார்ச்சு சட்டங்களை நடைமுறையிலே கொண்டு வரவேண்டுமென அவர்கள் தங்கள் மாகாண மன்றங்களில் கோரி நின்றனர். இங்ஙனம் இணங்காத மனப்பான்மையுடன் இம்மன்றங்கள் இருந்தபடியால் ஒசுற்றியாவிற்கும் அங்கேரிக்கும் இடை பெரும் பிளவு ஏற்பட்டது. அங்கேரியில் உள்ள நிலைமை யில் எவ்விதமான முக்கிய திருத்தமுஞ் செய்யாது தான் தன்னுடைய அதிகாரத்தைத் தியாகஞ் செய்துள்ளதை ஒசுற்றி யப் பேரரசன் கண்டான். ஒசுற்றியப் பேரரசிலிருந்து அங்கேரி பிரிவதைத் தடுப்பதற்குச் செமர்லிங்கின் தலைமையில் புதிய அமைச்சு ஒன்று உருவாகியது. இவன் சேர்மானியத் தாராள போக்கு இயக்கத்தின் நடுநிலைப் பூட்கையின் பிரதிநிதியாவான். பெப்புருவரித் தனியுரிமை உறுதி அங்கேரியின் மாகாணப் பாராளுமன்றம் உட்பட எல்லா மாகாண மன்றுகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட பேரரசு மன்றொன்றை நிறுவியதுடன் ஒசுற்றியப் பேரரசு முழுவதற்கும் யாப்பு ஒன்றை வரைந்தது. இந்தப் பெப்புருவரித் தனி உரிமை உறுதி (1861) ஒற்றேபர்ப் பட்டயத்திற்குத் துணையாயிற்று. ஒற்றேபர்ப் பட்டயத்தைப் போலவே பெப்புருவரித் தனி உரிமை உறுதியும் செயல்

1861.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1861. பெப்புருவரித் தனியுரிமை உறுதி.

முறைக்கு ஏற்றதாகவில்லை. இதனால் அங்கேரியானது ஒரு மாகாணத்தின் நிலைக்கு இழிந்தது. வீயன்னாவிலிருந்து இரீச் சிதிராத்திற்குப் பிரதியாளரை அனுப்ப மறுத்த அங்கேரியப் பாராளுமன்றம் பெரும் பரபரப்பிற்கிடையில் இந்தப் பெப்புருவரித் தனியுரிமை உறுதியை ஏற்க மறுத்தது. 19 ஆம் நூற்றுண்டிலே தோன்றிய கண்ணியமான அரசறிஞரில் ஒருவனை பிரான்சிசு தியாக்கு ஒசுற்றியாவை எதிர்த்த கட்சியின் நாட்டினத் தலைவனுவான். "1848 ஆம் ஆண்டுச் சட்டத்தை ஒப்புக் கொள்ளுதலே இவனுடைய குறிக்கோளாகும்". "எனெனில் இச்சட்டங்கள் மன்னன், மக்கள் என்போருடைய பொது இணக்கத்துடன் பிறப்பிக்கப்பட்டன. எனவே பொது இணக்கத்துடன் விலக்கப்படும்வரையும் இவை எல்லோரையும் கட்டுப்படுத்தும்".[1] 1861 ஆம் ஆண்டிலே தியாக்கு அங்கேரியப் பாராளுமன்றத்தில் நடத்திய புகழ்வாய்ந்த சொற்பொழிவில், அங்கேரிய அரசியல் விருத்தியின் சட்டபூர்வமான தொடர்ச்சியையும் குடிகள் தனிப்பட்ட மன்னனிடம் விசுவாசம் செலுத்துவதை அடிப்படையாகக் கொண்டதே ஒசுற்றியாவிற்கும் அங்கேரிக்கும் எற்பட்ட தொடர்பு என்பதையும் வற்புறுத்தினன். இத்தொடர்பு, தனிப்பட்டவரால் ஏற்பட்ட உறவு என்னும் வரலாறு கண்ட உண்மையாகும். இக்காரணங்களினாலே, "எமது அடிப்படையான சட்டங்களும், பாராளுமன்ற முறைப்படி நடக்கும் ஆட்சியும், பொறுப்புடையமைச்சும் பழைய நிலைக்குப் பூரணமாகக் கொண்டுவரப்பட வேண்டும்".[2]

தியாக்கும் கொசுத்தும்.

அங்கேரியில் அரசியல் உணர்ச்சி பெருகியது. அங்கேரி மீண்டும் புரட்சி தொடங்கும் நிலையிலிருப்பது போலத் தெரிந்தது. பாராளுமன்றத்தில் நடந்த விவாதங்கள் 1840–49 ஆண்டுக் காலத்தில் இருந்ததுபோன்ற எதிர்ப்புப் புயலை வீசின. ஆனால் தியாக்கு கொசுத்தைப் போன்ற தலைவன் அல்லன். தியாக்கு புத்திக்கூர்மை யுடையவன். அவன் அளவுமீறிக் கோரிக்கைகள் செய்யவில்லை. 1848 இல் நடந்த புரட்சிக்கும் 1867 இல் இரத்தஞ் சிந்தாது பெறப்பட்ட வெற்றியுடன் நிறைவேறிய இயக்கத்திற்கும் குறிப்பிடத்தக்க வேற்றுமை உண்டு. முதலாவதாக, கொசுத்து புரட்சிவாதி; தியாக்கு யாப்புறுவாதியாவான். "வெடிமருந்து கொண்டு பெரியதோர் கோட்டையைத் தகர்த்தெறியலாம். ஆனால் அதனைக் கொண்டு சிறு குடிலையும் கட்டமுடியாது", என்பது தியாக்கின் கூற்றில் ஒன்று.

---

1. **Francis Deak, 186 :** அங்கேரியப் பாராளுமன்றத்தில் நடத்திய இரண்டாவது சொற்பொழிவு.
2. **Ibid. 169.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய கருத்துக்களைச் சட்டபூர்வமான வழியிலே கவனத் 1861 – 67.
துடன் செலுத்தி, யாப்பின் அடிப்படைத் தத்துவங்களை ஐயந் திரிபறக் கிரகித்துள்ளான் தியாக்கு. அங்கேரிய மக்களின் இணக்கமின்றி அங்கேரியப் பாராளுமன்றத்திடமிருந்து அபகரிக்கப் பட்ட கடமைகளை உடைய பேரரசுப் பாராளுமன்றத்தின் சார் பிலே யாப்பை ஒதுக்கிவிட மன்னருக்கு உரிமை இல்லை, என்பதே இவனுடைய வாதமாகும். "வருங்காலத்திலே மாட் சிமை தங்கிய உங்களுக்குப் பின்வரும் மன்னன் ஒருவன் உங்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றி இதேமாதிரி எங் களுடைய ஏனைய சட்டங்களையும் உரிமைகளையும் ஒதுக்கித் தன் னுடைய அதிகாரப்படி அவைகளை எங்கள் மக்களின் இணக்க மின்றி ஒடுக்கினால், அங்கேரிக்கு அளிக்கப்பெற்ற யாப்புறு சுதந் திரம் என்னவாகும்?" என்ற கேள்வியை எழுப்பினான்[1]. யாப்புறு அரசில், "சட்டங்களை, அவற்றை உண்டுபண்ணிய சத்தி யொன்றே நீக்கமுடியும்". இம்மொழிகள் ஆங்கிலேய அரசறி ஞன் ஒருவனின் கூற்றுயிருக்கக் கூடும். 17 ஆம் நூற்றாண் டிலே ஆங்கிலேய மக்கள் செய்ததுபோல் வரலாறு என்னும் நீதிமன்றத்திலே மனுச்செய்து சட்டத்தின் பழைய எடுத்துக் காட்டைக் கோரி நின்றமை போலத் தியாக்கு சுதந்திரத்திற்காகச் சமர் புரிந்தான். இரண்டாவதாக, ஒசுற்றியாவுடன் நடத்திய சுதந் திரப் போராட்டக் காலம் முழுவதும், தியாக்கு ஆபிசுபேக்கு மன்னனிடம் விசுவாசமாகவே இருந்தான். 1849 இல் நடந்த சுதந்திரப் போரிலே இவன் பங்கு பற்றவில்லை. அங்கேரியப் பாராளுமன்றம் மன்னனுக்குச் சமர்ப்பிக்க ஆயத்தஞ் செய்த மனுவை "எங்களுக்கு ஆபிசுபேக்குப் பேரரசை ஆபத்துக் குள்ளாக்கும் நோக்கம் இல்லை. எங்களுடைய ஐக்கியத்தைக் கெடுக்க எங்களுக்கு விருப்பமில்லை", எனத் தியாக்கினால் வரையப்பட்ட பேச்சின் மூலம் அங்கேரியப் பாராளுமன்றம் பிரகட னஞ் செய்தது. முடியாட்சியின் "பொது அலுவல்களில்" இரு பகுதியினரும் சேர்ந்து செயலாற்ற வேண்டிய அவசியத்தை இம்மனு ஒப்புக்கொண்டது. ஆனால், "வலிந்து ஏற்படுத்தப் படும் ஒற்றுமை, பேரரசை ஒருபோதும் பலப்படுத்தமாட்டாது... படைவலிமையினால் மட்டுமே ஐக்கியப்படுத்தப்பட்டு அதிகாரம் வாய்ந்த நாடாக விளங்கும் ஒரு பேரரசின் நிலைமை உறுதி யற்றது".[2] மூன்றாவதாக அங்கேரியில் உள்ள பல்வேறு இனத்தினரது சுதந்திரமான அபிவிருத்தியையும் மகியாருக் கும் மகியாரல்லாதவருக்கும் சம உரிமை வழங்குவதையும்

1. Ibid. 168, 182.
2. Ibid. 189–191.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1867 அவை அங்கேரிய அரசியல் ஐக்கியத்தைப் பாதிக்காதவரையும் தியாக்கு ஆதரித்தான்.

இணக்கம் (1867).

சொல்பெரீனே 1860 இல் ஏற்பட்ட ஒற்றேபர்ப் பட்டயம் தோன்றக் காரணமாக இருந்தது. 1867 இல் ஏற்பட்ட இணக்கம் சடோவாவின் விளைவாகும்[1]. ஒசுற்றியப் பிரசியப் போரில் ஈடுபடாதிருந்த அங்கேரியக் குடிகளே இணக்கஞ் செய்யவேண்டிய இன்றியமையாமையை ஒசுற்றியப் பேரரசன் உணர்ந்திருந்தான். ஒசுற்றியா இன்னுமேதாவதொரு போரிலே தோற்றால் அங்கேரியர் மீண்டும் சுதந்திரக் கிளர்ச்சி செய்யத் தூண்டப்படக் கூடும். "அங்கேரியின் கோரிக்கை யாது?" எனத் தியாக்கைக் கேட்டபோது, அவன் "கொனிக்கிராற்சுப் போருக்கு முன்னர் கேட்டதையே இப்போதும் அங்கேரி கேட்கின்றது. அதற்கு மேலாக ஒன்றும் கேட்கவில்லை" எனும் புகழ்பெற்ற விடையிறுத்தான். போரின் பின்னர் அங்கேரியின் நிலை வாய்ப்பாக இருந்தது. இதன் பயனாக அங்கேரி ஒசுற்றிய இறையுடன் பேரம் பேசிக் கூடுதலான ஆதாயம் பெறுதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. பிசுமாக்கின் எதிரியான ஒசுற்றிய வெளிநாட்டு அமைச்சனான பரன் பியற்றும் அங்கேரியின் பலம் வாய்ந்த நட்பாளனானன். சேர்மானிய அலுவல்களில் ஒசுற்றியா இழந்த செல்வாக்கை எவ்விதமாகவேனும் திரும்பப் பெறவேண்டும் எனப் பரன் பியற்று தீர்மானித்திருந்தான். மகியாரின் கோரிக்கைக்கு இணங்குமாறு இவன் பிரான்சிசு யோசேப்பைத் தூண்டினான். இதனால் பிரசியாவிற்கு எதிராகப் பின்பற்றும் பூட்கைக்கு மகியாரின் ஆதரவைத் தேடிக் கொள்ளலாம் என்பதும் இவனுடைய கருத்து. இவன் தன் நோக்கத்தை நிறைவேற்றினான். 1867 இல் ஒசுற்றிய அங்கேரியத் தொடர்புகள் புதியதோர் கட்டத்தை அடைந்தன. புகழ்பெற்ற இணக்கத்தினால் இரட்டை முடியாட்சி ஏற்பட்டது. இவ்வினக்கம் புதிய தத்துவம் ஒன்றையும் உடையதாகவில்லை. எனெனில் அங்கேரிய இராச்சியத்தின் சுதந்திரம் எப்பொழுதுமே வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். ஆனால் நடைமுறையில் இதனை அடிக்கடி ஒசுற்றியா மீறியது. ஆனால் 1867 இல் ஏற்பட்ட இவ்வினக்கம் அங்கேரியின் நிலையைச் சிறிதும் தளர்த்த முடியாதபடி வலுப்படுத்தியது. இதன்பின்னர் ஒசுற்றியாவும் அங்கேரியும் சரிசமம் என்பது உறுதியாயிற்று. உண்ணூட்டு அலுவல்களிலே அங்கேரி முழு அதிகாரமும் பெற்றது. மாச்சுச் சட்டத்திற் கூறப்பட்டவாறு யாப்பு மீண்டும் அமைக்கப்பட்டது. புறம்பான அங்கேரிய அமைச்சு நிறுவப்

---

[1] பக்கம் 97.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. இது ஒருபுறமிருக்க அங்கேரிக்கும் ஒசுற்றியாவிற்கும் 1867
பொதுவான தனி நலன்கள் பல உண்டென்பதைத் தியாக்கு உணர்ந்துள்ளான் என்பதை முன்னரே கண்டுள்ளோம். மன்னன் ஒருவனின் தலைமையில் ஐக்கியப்பட்ட நாடுகள் பாதுகாப்பிற்காக ஒத்துழைக்க வேண்டியதும் பொதுவான சூழியற் சேவையையும் படையையும் வைத்திருக்கவேண்டியதும் ஏற்புடைத்து. ஒசுற்றிய அங்கேரிய குடியாட்சிக்கான பொது அமைச்சு ஒன்று–வெளிநாட்டு அலுவல்கள், போர், நிதி ஆகிய வற்றிற்குரிய அமைச்சர்கள் உட்பட–தாபிக்கப்பட்டது. பேரரசின் வருமானத்தை நிதி அமைச்சு பாலனஞ் செய்தது. அரசியலுபாயச் சேவை, படை ஆகியவைகளின் செலவை இந்த வரியிலிருந்து கொடுத்தனர். பொதுவான அமைச்சரைக் கட்டுப்பாடு செய்வதற்குப் பேராட்குழு முறை ஏற்பாடு செய்யப்பெற்றது. இவ்விதமான குழுக்கள் இரண்டிருந்தன. ஒன்று ஒசுற்றியாவிற்கும் மற்றது அங்கேரிக்கும் என வகுக்கப்பட்டது. ஒவ்வொன்றிலும் அறுபது உறுப்பினர் இருந்தனர். இக்குழுவினரை அந்தந்த நாட்டிற்குரிய சட்டவாக்கச் சபைகள் ஆண்டிற்கொருமுறை தெரிவு செய்யும். அன்றியும் வர்த்தக உறவு, இறைமுறை ஆகியவைகளைக் கட்டுப்படுத்தும் பொருளாதார மரபுகளையும் இரண்டு நாடுகளும் அமைத்துக் கொண்டன.

இனத்திற்குரிய பரந்த அடிப்படையைக் கொண்டு நோக்குமிடத்து இந்த இணக்கம் ஓரபட்சமானதாயிருந்தது. 1723 ஆம் ஆண்டிலே, அங்கேரியின் சட்டபூர்வமான சுதந்திரத்தை நிறுவிய, "பேரரசுச் சட்டவனுமதியிலே இருந்து தருக்க முறைப்படி ஏற்பட்ட விளைவே இவ்வினைக்கம் என்பது உண்மையாகும். ஆயினும் இதன்பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் இவ்வினைக்கம் வரலாற்றின் மலர்ச்சியிலும் பார்க்கக் குறைகாணும் அடிப்படையிலிருந்தே எழுந்தது என்பதைக் காட்டின. பலம்வாய்ந்த இரு இனத்தினரான சேர்மானியரதும் மகியாரினதும் ஒற்றுமையே இரட்டை ஆட்சி நிறுவுவதற்கு எதுவாயிருந்தது. இவ்விரு இனத்தினரும் முடியாட்சியைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர். இவ்வினத்தினருக்கு அடுத்தபடியாகப் பலம்வாய்ந்த இரு இனத்தினரான போலந்து மக்களுக்கும் குரோசியருக்கும் தன்னுண்மை கொடுத்தபடியால், இவ்விரு இனத்தினரும், சேர்ந்து எஞ்சியிருந்த ஏனைய எட்டு இனத்தினரை நசுக்குவதற்கு உடந்தையாக விருந்தனர்[1]. சிலாவு மக்கள் இரட்டை ஆட்சிக்குப் பதிலாகக் கூட்டாட்சியை அதாவது "வரலாற்று உரிமை" உடைய எல்லா நாட்டினங்களுக்கும் தன்னுண்மையு

இணக்க விமரிசம்.

[1] Watson, Racial "Problems in Hungary," 137.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1868 டைமையை ஆதரித்தனர். குறிப்பாக, பொகீமியா மரபுப்படி தான் கொண்டாடிய உரிமை இப்பொழுது மறுக்கப்பட்டுள்ளதைக் கண்டது. எனவே 1867 இல் ஏற்பட்ட இணக்கம் எதிர்காலத்தில் ஏற்படும் குழப்பம் என்னும் வித்தைத் தன்னுள்ளே கொண்டிருந்தது. அங்கேரியிலும், மகியார் காட்டிய இனப் பொறுதியின்மை புதிய நிலையங்கள் ஒழுங்காக இயங்குவதைப் பாதித்தது. மகியார் அல்லாதாரை இவ்வினைக்கத்திற்கு உடன்படச் செய்வதற்குத் தியாக்கு பல முறைகளைக் கையாண்டான். அவற்றிலிருந்து அவனுடைய அரசியலாற்றல் தெளிவாயிற்று. குரோசிய மக்கள் விரும்பியவாறு நடப்பதற்கு உரிமையை அவர்களுக்கு வழங்கினான். "பாலனம், நீதி, மதம், கல்வி ஆகியவைகளில் பூரணமான சுதந்திரமும், சட்டசபையிலும், நிருவாகசபையிலும் எங்கும் குரோசிய மொழியை வழங்கும் உரிமையும்" குரோசியருக்குக் கொடுக்கப்பட்டன. வெளிநாட்டு அலுவல் மாத்திரம் அங்கேரியப் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிலிருந்தது. இப்பாராளுமன்றிற்குக் குரோசியா நாற்பது உறுப்பினரை அனுப்பிற்று. அத்துடன் அகிராமில் அவர்களுடைய சொந்த மாகாண மன்றமும் இருந்தது. அதே நேரத்தில் அங்கேரியில் வாழ்ந்த மகியார் அல்லாத சாதியினரின் பெரும் பிரச்சினையைப் புகழ் பெற்ற "நாட்டினங்களின் சட்டத்திலை" (1868)[1] தீர்க்கவும் முயற்சி நடந்தது. நாட்டின் அரசியல் ஐக்கியத்திற்காக அங்கேரியப் பாராளுமன்றத்திலும், பாலனத்தில் எல்லாப் பகுதிகளிலும் அங்கேரிய மொழி அரசகருமமொழியாக்கப்பட்டது. ஆனால் மாகாண மன்றங்களிலும், நீதிமன்றங்களிலும், பாடசாலைகளிலும் எனைய மொழிகளை வழங்க அனுமதி அளிக்கப்பட்டது. வழக்கிலிருந்த சட்டத்தை நோக்குமிடத்து அதில் இருந்த ஏற்பாடுகள் எல்லாம் நியாயமுடையவை எனத் தோன்றின. அச்சட்டம் பொதுமொழியொன்றைப் பயன்படுத்துவதன் மூலம் அரசின் பாலன ஐக்கியத்தைப் பாதுகாத்தது. அத்துடன் வேறுபட்ட நாட்டினங்களுக்குத் தத்தம் இனப் பண்பாட்டை அபிவிருத்தி செய்தற்கான வாய்ப்பையும் அளித்தது. நாட்டினங்களின் சட்டத்தின் பீடிகையில் கூறப்பட்ட மகியாரின் முக்கிய நோக்கத்தை இச்சட்டம் நிறைவேற்றியது. அதாவது "அங்கேரியில் உள்ள குடிகள் எல்லோரும்....அரசியலைக் கொண்டு நோக்குமிடத்து ஒரு நாட்டினராகின்றனர்–இது பிரிக்க முடியாத ஒற்றையாட்சிக்குரிய அங்கேரிய நாடாகும். எந்த இனத்தினராயினும் அங்கேரியில் வாழும் ஒவ்வொருவரும் எங்கள் தந்தையர் நாட்டிலே சமமான உறுப்பினர்." அங்கேரிய அரசிலே உள்ள

1 Printed in Watson, op. cit. App. iii. இவ்விடயம் தெளிவாக அந்நூலில் 147 ஆம் பக்கம் முதல் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1878 இல் ஒசுற்றிய–அங்கேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு இனத்தினரின் "சட்ட உரிமையான நாட்டினக் கோரி 1868
க்கையையும்" இச்சட்டம் திருத்தி செய்தது. ஆனால் உண்மை யிலே நாட்டினங்களின் சட்டம் தொடக்கத்திலிருந்தே வழக் கொழிந்த சட்டமாகவே இருந்தது. 1914–18 போரிற்கு முன்னர் சிலோவாக்கிய மக்கள் இருந்த நிலையை நன்கறிந்த ஒருவன் பின்வருமாறு தொகுத்துக் கூறியுள்ளான்: "இடைநிலைப் பாடசாலைகள் எல்லாவற்றிலும் கல்லூரிகளிலும் கல்விச் சாலை களிலும் இருந்து அவர்களுடைய மொழி நீக்கப்பட்டது. ஆரம்ப பாடசாலைகளிலிருந்தே இவர்களுடைய மொழி நீக்கப்படுகின்றது. பாலனம், பொது அலுவலகம் எல்லாவற்றிலிருந்தும் இம் மொழி விலக்கப்பட்டுள்ளது. சிலோவாக்கிய எழுத்துக்களைப் புகைவண்டிப் பகுதியிலும் தபாற்கந்தோர்ப் பகுதியிலும்கூடக் காணச் சகிக்காமலிருக்கின்றனர். சிலோவாக்கியப் பத்திரிகைகள் பலவாண்டுகளாக மிருகத்தனமான அடக்கு முறைக்கு உட்படுத் தப்பட்டன. துன்பத்தில் மூழ்கியிருக்கும் சிலோவாக்கிய மக்க ளுக்குக் கூட்டம் கூடும் சுதந்திரமும், கழகங்களை நிறுவும் சுதந்திரமும் இல்லை. உண்மையில் அங்கேரியிலிருந்த மகியார் அல்லாதவர் எல்லோரும் இக்கதியையே அடைந்துள்ளனர். அறிவாற்றல் மிக்க ஒரு சிறு வகுப்பினரே அதிகார பூர்வ மான பலவித நெருக்கடிக்கும் இன்னலுக்கும் இலக்காகின் றனர். சிலோவாக்கிய மக்கள் தங்களுடைய உரிமைப்படி பிரதி நிதிகளைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்து அனுப்பு வதற்கு எதிராகக் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றன. தேர்வு ஊழல்கள், பலாற்காரம் ஆகிய அவதூறான முறைமை சிலோவாக்கிய மக்களைப் பாதித்ததுபோல வேறெவரை யும் பாதிக்கவில்லை.... 'அங்கேரியில் மகியார் எசமானர்; ஏனைய இனத்தினர் அடிமைகள்."[1] 1914–18 போர் தொடங்கும் பொழுது இருந்த ஒசுற்றியப் பேரரசின் இரட்டை ஆட்சியை இவ்வினைக்கம் உருவாக்கி ஒரு அரை நூற்றாண்டு கழிந்து போயிற்றெனினும் அங்கேரியின் பிரச்சினைகளோ ஒசுற்றியாவின் பிரச்சினைகளோ இக்காலப்போக்கில் தீர்க்கப்படவில்லை. இது மகி யாருடைய முதன்மையை உரூமேனியாவையோ, சேபியா வையோ சிலோவாக்கியாவையோ ஒப்புக்கொள்ளும்படி செய்ய வில்லை. தன்னுண்மையுடைய பொகீமிய அரசொன்றை நிறுவுவ தற்குச் செக்கியர் செய்த தீர்மானத்தையும் பாதிக்கவில்லை. தனது பிரச்சினைகள் போரினூலேயே தீர்க்கப்படவேண்டுமென ஒசுற் றியப் பேரரசு அவசரப்பட்டு முடிவு செய்தபொழுது அப்பேரரசு குலைவதற்கு இதுவரை குறிப்பிட்ட நிலைமைகள் காரணமாயின.

[1] R. W. Seton-Watson. "The Future of Bohemia" (1915), 26.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் V

இத்தாலியின் ஐக்கியம்

(1815–1870)

1815
இடையூழியில் இத்தாலி.

மெற்றெணிக்கு குறிப்பிட்டதுபோலப் பல நூற்றுண்டுகளாக இத்தாலி என்பது ஒரு புவியியற் பெயராயிருந்ததே யன்றி அதற்கு மேல் எதையும் குறிப்பதா யிருக்கவில்லை. இத்தாலித் தீபகற்பத்தை ஐக்கிய இராச்சியமாக்க மேற்கொண்ட முயற்சிகள் யாவும் தோல்வியுற்றன. உரோமப் பேரரசு வீழ்ச்சியுற்றபின்னர் மேற்கு ஐரோப்பாவை அழித்த மிலேச்சர் பிரித்தானியாவிலும், இசுப்பெயினிலும், கோலிலும் விரைந்து குடியேறினர். ஆனால் கவர்ச்சி மிகுந்த இத்தாலி குழப்பமின்றி ஒரேயொரு இனத்தினரின் பரிசாக இருப்பது முடியாததாயிற்று. இத்தாலி புகழ்பெற்ற மரபுகளை உடையதாகும். மண்ணுசை கொண்டு இராச்சியங்களைப் பிடிக்கத் தலைப்படுவோர் எல்லோரும் இத்தாலியை இலக்காகக் கொண்டனர். இந்தத் தீபகற்பத்தை ஆறும் நூற்றுண்டிலே ஒசுற்றெகொத்தர் ஆண்டனர். அவர்களுடைய பெரும் மன்னனை தியடோறிக்கு இறந்தபின்னர் அவ்வாட்சி நீடிக்கவில்லை. அவன் உருவாக்கிய இராச்சியமும் அழிந்தது. ஒசுற்றெகொத்து இனத்தினரின் பின்னர் உலொம்பாடியர் அடைந்த வெற்றியும் தற்காலிகமானது. இதன் பயனை முன்னரே இருந்த ஐக்கியமின்மை மேலும் ஒருபடி அதிகரித்தது. பிற்காலத்தில் பரிசுத்த உரோமப் பேரரசிற்கும், போப்பாட்சிக்கும் ஏற்பட்ட உரிமைப் போட்டியிலே இத்தாலி ஈடுபட்டது. இக்கட்சிகளை ஆதரித்தவர்கள்–கிபிலினிசினரும் குகல்பினரும்–இத்தாலியிலுள்ள ஒவ்வொரு பட்டினத்தையும், சூழ்ச்சியும், குழப்பமும் மலிந்த இடமாக்கினர். இடையூழி முடிவடையும்போது எட்டாம் சார்ள்சு மன்னன் அல்பிசு மலையைத் தாண்டி இத்தாலிமீது படையெடுத்தான். அத்துடன் இத்தாலியின் வரலாற்றில் இருள் கவிந்த புதியதோர் அத்தியாயம் தொடங்கியது. ஐரோப்பாவின் போர்க்களமாக இத்தாலி மாறிற்று. இங்கு அந்நிய வல்லரசுகள் தத்தம் முதன்மைக்காகப் போர் விளைத்தன. இத்தாலியில் உள்ள சுதேசச் சிற்றரசர்கள் யாவரும் மீக்கொளலின் பொருட்டு நாட்டினவுணர்ச்சியைக் கைவிட்டனர். தம் இனத்தை அழிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசல்களிலே துணை செய்வதற்குப் பிறநாட்டவரை அழைக்க இச்சிற்றரசர்கள் சற்றேனும் தயங்கவில்லை. இயல்பான ஆற்றலுடைய தலைவர்களில்லாதபடியால் இத்தாலி நிலைகுலைந்தது. இந்த நிலையிலிருந்து இத்தாலியை மீட்டெடுக்க மாக்கியாவெலி போன்ற தாயகப்பற்றுடையோர்கள் செய்த முயற்சிக்குப் பலம் போதாதிருந்தது. 1815.

இத்தாலியின் ஐக்கியத்திற்கு எற்பட்ட தடைகள்.

19 ஆம் நூற்றாண்டிலே இத்தாலியின் ஐக்கியத்துக்குப் பல தடைகள் எற்பட்டன. இவைகளில் முக்கியமானது யாதெனில், இத்தாலி பிறநாட்டவரின் ஆதிக்கத்திற் குள்ளானமை என்க. வடபகுதி ஒசுற்றியாவின் ஆதிக்கத்திலிருந்தது. ஒசுற்றியாவிலே பிறந்து ஒசுற்றியாவின் சார்பாளராக இருக்கும் சிற்றரசர்கள் தசுக்கனி, மொடெனா, பாமா ஆகிய இடங்களை ஆண்டனர். தென்பகுதியிலே பூபோன் குலத்தினர் இரண்டு சிசிலியையும் (நேப்பிள், சிசிலி) ஆண்டனர். இதனைவிடப் போப்பாட்சியின் உலகியல் அதிகாரமும் முக்கியத்துவத்திற் குறைந்ததல்ல. போப்பாட்சி இத்தாலியை இரண்டாகப் பிரித்தது. தீபகற்பம் ஐக்கியப்படுவதற்குப் பெரும் முட்டுக்கட்டையாகப் போப்பாட்சி நிலவியது. வரலாற்றின் இடைக்காலப் போப்பாட்சியை நிறுவியவனான முதலாம் கிரெகொரி திருச்சபையின் அரசுகளை உண்டாக்கினான். இக்காலத்தில் போப்பின் ஆத்மீக அதிகாரம் உலொம்பாட்டின் மீச்செலவிற்கு ஒரு தடையாகவிருந்தது. அந்தக் காலத்தில் நிறுவப்பெற்ற உலகியல் அதிகாரத்தை அவனுக்குப் பின்னர் வந்த போப்பாண்டவர் பெருப்பித்தனர். இத்தாலியின் நலனுக்காகக் கிரெகொரி உருவாக்கிய ஆயுதம் நாளடைவில் இத்தாலியின் நலனுக்கே ஆபத்தாக இருந்தது. போப்பாட்சிக்குரிய அரசுகள் காரணமாகப் பிளவுபட்டிருந்த இத்தாலியை ஐக்கியப்படுத்த இயலாதிருந்தது. போப்பாட்சிக்குரிய ஆத்மீக செல்வாக்கு அனைத்தாலும் ஆதரிக்கப்பட்டுள்ள போப்பாட்சியின் அதிகாரத்தை நீக்குவதும் முன்னர் கூறியதுபோலவே இயலாதிருந்தது. கடைசியாக, இத்தாலிய மக்களும் நாட்டின உணர்ச்சியை முழுமையாகப் பெறுதிருந்தனர். கிரேக்க நாட்டைப்போல இத்தாலியிலும் ஒவ்வொரு இடத்திலும் அவ்வவ்விடத்துக்குரிய மரபுக்களும் நலச்சிறப்புக்களும் இருந்தன. இச்சூழல் ஒவ்வொரு நகரத்துக்கும் கிராமத்துக்கும் உரிமைகள் பற்றிய பொறுமையைத் தூண்டுதற்குக் காலாக இருந்தது. எனவே நாட்டின வளர்ச்சி தடைப்பட்டது. "இத்தாலியில் ஒவ்வொரு மாகாணமும் மற்ற மாகாணத்துக் கெதிராக இருக்கின்றது. ஒவ்வொரு நகரமும் மற்ற நகரத்துக் கெதிராக இருக்கின்றது. குடும்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 மற்றைய குடும்பங்களுக்கெதிராக இருக்கின்றன. ஏன்! மனிதனே மனிதனுக்கெதிராக இருக்கின்றான்", என மெற்றெணிக்கு எழுதியுள்ளான்.[1]

இத்தாலியும் பிரான்சியப் புரட்சியும்.

நெப்போலியன் இத்தாலியை வெற்றிகொண்டதும் இத்தாலியிற் புதியதோர் காலவவதி பிறந்தது. ஒசுற்றியரும் பூபோன் குலத்தினரும் இத்தாலிய தீபகற்பத்திலிருந்து விரட்டப்பட்டனர். போப்பாட்சிக்குரிய அரசுகள் ஏனைய இராச்சியங்களுடன் வலிந்திணைக்கப்பட்டன. நாடு எங்கணும் சீரான சட்டமுறைமையும் பாலனமுறைமையும் நிறுவப்பட்டன. பிரான்சிய ஆட்சியினால் ஏற்பட்ட இந்த விளைவுகள் நிலையற்றவை. "எங்களுடைய எல்லா உரிமைகளையும் எல்லாச் சீர்திருத்தங்களையும் எல்லா நம்பிக்கைகளையும் இத்தாலி எங்கணும் ஆட்சியாளரின் எழுதுகோல் ஒரு நொடியில் அழித்தது. பழைய ஆட்சிமுறை முன்னர் போலவே கேடு விளைவிக்கும் முறையில் மீண்டும் தலைதூக்கியது. ஆனால் இந்தத் தடவை இவ்வாட்சியில் பழிவாங்கும் தன்மை மிகவும் செறிந்திருந்தது."[2] எனினும் இத்தாலி ஒரு தனி நாடு என்ற பாடத்தை ஒருமுறை கற்ற மக்கள் அதனை ஒருபோதும் மறக்கவில்லை. தங்கள் கற்பனையிலுள்ள இலட்சிய இத்தாலியை மக்கள் ஓரளவு கண்டு கொண்டனர். தங்கள் கனவு நனவாக வேண்டுமென்ற இலக்கிற்காகவே அவர்கள் அரைநூற்றுண்டிற்கு மேல் முயற்சி செய்து வந்தனர். இந்த நினைவு அவர்களுடைய மனதிலிருந்து ஒருபோதும் முற்றுக அகலாது. இது தவிர, பிரான்சியப் புரட்சியினால் ஏற்பட்ட சட்டத்தின்படி சம உரிமை, மதச் சுதந்திரம், அச்சுலகுச் சுதந்திரம், தன்னாட்சி ஆகிய சிறந்த மரபுரிமைகளையும் இத்தாலி பெற்றது. தற்காலிகமாக இத்தாலி ஐக்கியப்பட்டுள்ளது என்பதை முன்னரே கண்டுள்ளோம். நாட்டின பாலனத்தினால் ஏற்பட்ட பலனை அவர்கள் கைமேற் கண்டனர். இப்பலன் மக்களின் தாயகப்பற்றையும் உணர்ச்சி வேகத்தையும் மிகுவித்தது.

வீயன்னாப் பேரவையின் பின்னர் இத்தாலி.

வீயன்னாப் பேரவையிலே நாட்டின வாஞ்சைகள் யாவும் புறக்கணிக்கப்பட்டன. சூழியற் சதுரங்கப் பலகையில் இத்தாலி வெறும் பணயமாகவே பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக இத்தாலிய தீபகற்பத்தில் மேலோங்கி நிற்கும் வல்லரசாக ஒசுற்றியா வெளிப்பட்டது. அத்துடன் ஒசுற்றியா இத்தாலியின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் தனி நாடாயிற்று. உலொம்

---

[1] Memoirs, iii. 279.

[2] Mazzini, "Italy, Austria and the Papacy," 76.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடி, வெனீசியா ஆகிய அரசுகளை ஒசுற்றியா பெற்றதுமல் 1815.
லாமல், ஒசுற்றியாவின் செல்வாக்கே எனைய அரசுகளையும் கட்டுப்படுத்தியது. இத்துடன் இணைக்கப்பெற்றுள்ள தேசப் படத்தை நோக்கினால் நாம் இங்கு சுருக்கமாக விவரிக்கப் போகும் பல்வேறு அரசுகளின் புவியியல் நிலை விளங்கும். ஆபிசுபேக்கு மன்னராட்சியின் நேரடியான இராச்சியமாக உலொம்பாடியும் வெனீசியாவும் அமைந்தன. ஆனால் பாலன அலுவல்களுக்காக இவை இரு மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டன. இப்புறம்பான அரசாங்க பாலனத்திற்குரிய மத்திய நிலையங்கள் மிலானிலும் வெனிசிலும் இருந்தன. ஆரம்ப கல்வியும் நடுத்தரக் கல்வியும் புறக்கணிக்கப்படவில்லை. ஆனால் செயல்முறைப்படுதற்கு வாய்ப்பெதுவும் எற்படுத்தப்படாமையால் இக்கல்வி பெரும்பாலும் பலனளிக்கவில்லை. வாரியப்பளு மிகுதியாக இருந்தது. ஒசுற்றியப் பேரரசின் குடித்தொகையில் எட்டிலொன்றுக்கு மேலாக உலொம்பாடியிலும் வெனீசியாவி லும் இருக்கவில்லை. ஆனால் மொத்த வரியில் காற்பங்கிற்கு மேலாக இவ்விரு மாகாண மக்களும் இறுத்தனர். எல்லா வித மான அரசியல் முயற்சிகளும் ஈவு இரக்கமின்றிக் கடும் தணிக்கை முறையாலும் கடுங்கோன்மைப் பொலிசு முறைமையாலும் அடக்கப்பட்டன. "பொதுவான அதிருத்தி நிலவியது" என் பதை மெற்ரெணிக்கு ஒப்புக்கொண்டான். "அலுவல்கள் தொல்லையுடன் நடைபெறுவது; இத்தாலிய மாகாணங்களுக்கு முற்றிலும் சேர்மானிய இயல்பைக் கொடுப்பதற்கு மாட்சிமை தங்கிய நீங்கள் விரும்பித் திட்டம் வகுத்ததாக மக்கள் கருதுவது; சேர்மானிய நீதிபதிகள் நியமனம் பெறுவதைக் கவலையுடன் நோக்கும் இத்தாலியரையுடைய நீதிமன்ற அமைப்பு .... ஆகியவையே முக்கிய காரணங்களாகக் கருதப் படுகின்றன," என மெற்ரெணிக்கு எழுதினன்.[1] பாமா அரசை நெப்போலியனின் கைம்பெண் ஆண்டு வந்தாள். பாமாவின் நிலைமை உலொம்பாடி, வெனீசியா ஆகிய அரசுகளிலும் பார்க்க நல்லதாக இருந்தது. நெப்போலியனின் கைம்பெண் மேரி உலூயிசு நல்லெண்ணம் உடையாள். ஆனால் அவளுக்குப் பலம் இருக்கவில்லை. தசுக்கனி எனும் இத்தாலிய அரசில் மாத்திரம் வல்லாட்சியின் ஊழல் சிறிதளவு காணப்பட்டது. எனினும் "இத்தாலிய அரசின் எனைய பகுதிகளில் தலைதூக்கி நின்ற பயங்கர ஆட்சியிலும் பார்க்க இவ்வல்லாட்சி விரும்பத் தக்கது". இது ஒருபுறமிருக்க மொடினுவில் ஒசுற்றிய "ஆட்சிமுறைமையின்" தீங்குகள் யாவும் காணப்பட்டன.

[1] **Memoirs, iii. 103.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1845

பீதுமன் அரசுகட்டிலில் விற்றர் இமானுவேல் மீண்டும் அமர்த்தப்பட்டான். பிற்போக்கு ஆட்சித் தொடக்கத்துக்கு இது அறிகுறியாயிற்று. பிரான்சியப் புரட்சியின் பயனுகத் தன் குடிகள் பெற்ற நன்மைகளை அழிப்பதற்கே இவன் முதலில் முயற்சி செய்தான். "ஏனைய சட்டங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு இன்று தொடக்கம் எங்கள் குடிகள் 1770 ஆம் ஆண்டு ஏற்பட்ட மன்னனின் யாப்புக்கும் 1800 ஆம் ஆண்டு யூன் 23 ஆம் நாளுக்கு முன்னர் மன்னர் குலத்திலுள்ள எம் முன்னோர் பிறப்பித்த நியதிச் சட்டங்களுக்கும் பணிந்து நிற்பர்." இங் கிருந்த அரசியல் நிலை அரசாங்கத்தை அச்சுறுத்திய வண்ணம் இருந்தபோதும் சவோய் மன்னர் குலத்தில் மக்கள் பற்றுக் கொண்டிருந்தபடியால் வெற்றிகரமான எதிர்ப்பைத் தெரிவிக் கும் வாய்ப்பு உடனே ஏற்படவில்லை. நேப்பிளிலும் திருச்சபை யின் அரசுகளிலும் நிலவியது போன்ற மோசமான நிலைமை வேறெங்கும் நிலவவில்லை. கட்டுப்பாடற்ற கடுங்கோன்மையின் பெருந் தீங்குகள் யாவற்றையும் போப்பாட்சியின் பாலனம் உடையதாயிருந்தது. இது ஒருபுறமிருக்க பூபோன் குலத் தினருடைய ஆட்சி கொடுமையினால் உருக்குலைந்து நின்றது. இதனைப்பற்றிப் பின்னொரு வேளையில் உவிலியம் கிளாட்சன் கூறும்போது "கடவுள் இல்லை என்ற நிலை" என விவ ரித்தான்.

1845 ஆம் ஆண்டு இத்தாலியைப் பற்றி மசினியின் விவரணம்.

1845 ஆம் ஆண்டு மசினி பின்வருமாறு எழுதினன்: "எங்கள் நாட்டினம் இரண்டு கோடியே பத்து இலட்சத்திலிருந்து இரண்டு கோடியே பன்னிரண்டு இலட்சம் வரையுள்ள குடித் தொகையினரைக் கொண்டது. மிகப்பண்டைக் காலம் தொடக் கம் எங்கள் இனத்துக்கு ஒரே ஒரு பெயர் உண்டு—அதா வது இத்தாலியர் என்பதாகும். எங்கள் நாட்டின் எல்லையைக் கடவுள் இயற்கையான எல்லைகளாக் கொண்டு தெளிவாக வகுத்துள்ளார்—ஒருபுறத்தில் ஐரோப்பாவில் மிக உயர்ந்த மலைகளும் மற்றப் புறத்தில் கடல்களும் இருக்கின்றன. எங் கள் மக்கள் ஒரே மொழியையே பேசுகிறார்கள். அவர்களின் வழிமொழிகள் இங்கிலாந்திலுள்ள கொத்துலாந்து மொழியை யும் ஆங்கிலத்தையும் போன்ற அளவுகூட வேறுபடவில்லை. அவர்களின் பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் எல்லாம் ஒன்றே. ஐரோப்பிய வரலாற்றிலே மின்னென ஒளிரும் மேன்மையான அரசியல் மரபு, விஞ்ஞானம், கலைகள் ஆகி யவைபற்றி எம்மக்கள் பெருமைப்படுகின்றனர். மக்களின் வர லாற்றிலே இருமுறை எங்கள் நாடு மக்கள் இனத்தை இணைக் கும் குறிக்கோளை அளித்துள்ளது. முதலாவதாக இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு உரோமப் பேரரசர் காலத்திலேற்பட்டது. இரண்டாவது 1875.
முறையாக உரோமப் பேரரசர்கள் தங்கள் இலக்கை விட்டுத் தம்மைத் தாமே வஞ்சித்த பின்னர், உரோம் போப்பாண்டவரின் ஆணைக்குட்பட்டதுடன், தொடங்கியது. எங்கள் மக்கள் சுறுசுறுப்பும் ஒப்பற்ற திறமையும் இயல்பாகவே நிரம்பியவர்கள். எங்கள் நாடு பொருள் வளம் நிரம்பியது. இவ்வளத்தைச் சகோதர பான்மையுடன் தாராளமாகப் பெருக்கினால் நாங்கள் இன்புற்றிருக்கலாம். இதனால் எங்களுடைய சகோதர நாடுகளுக்கும் மிகவும் உன்னதமான எதிர்கால வாய்ப்பு உலகிற் கிடைக்கும்.

"எங்களுக்கு நாட்டினக்கொடி இல்லை. அரசியலில் பெயரில்லை. ஐரோப்பிய நாட்டினங்களிடை இடமில்லை. பொதுவான ஆதாரமில்லை. பொதுவான நோக்கமில்லை. பொதுவான சந்தையில்லை. எங்கள் நாடு எட்டு அரசுகளாகத் துண்டாடப் பட்டுள்ளது. அவையாவன உலொம்பாடி, பாமா, தசுக்கனி, மொடினு, உலூக்கா, போப்பரசு, பீதுமன், நேப்பிள் ஆகியவை என்க. இவை ஒன்றிலொன்று சாராது சுயேச்சையாக இருக்கின்றன. ஒன்றுக்கொன்று நட்புறவில்லை. குறிக்கோளைப்பற்றியும் ஒற்றுமையில்லை. ஒன்றோடொன்றுக்கு ஒழுங்கான தொடர்பில்லை. எட்டுவிதமான சுங்கவரியமைப்புகள் இருக்கின்றன. இவற்றால் ஒவ்வொரு அரசின் உண்ணாட்டுப் பாலனத்திற்கும் ஏற்படும் தடைகள் கவனிக்கப்படாமை மட்டுமன்றி, எங்கள் பொருள்வள நலன் பாதிக்கப்படுகின்றது. எங்கள் முன்னேற்றம் தடைப்படுகின்றது. பெருமளவில் உற்பத்தி, வர்த்தகம் ஆகியவற்றின் முயற்சிகள் தடைப்பட்டிருக்கின்றன. எங்கள் திறமைகளைப் பயன்படுத்துவதற்குரிய ஊக்கமும் அற்றுப்போயிற்று. மக்களுக்கு இன்றியமையாத பொருள்களை இத்தாலியின் ஒரு அரசிலிருந்து மற்றொரு அரசுக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு விலக்குகளும் பெரும் வரிகளும் தடையாகின்றன. ஒரு மாகாணத்தில் மிகுதியாக உள்ள விளைவுப் பொருள்களும் கைத்தொழிற் பொருள்களும் மற்ற மாகாணத்தில் குறைவாகவே காணப்படுகின்றன. மிதமிஞ்சிய பொருள்களைத் தடையின்றி விற்பனை செய்யவோ எமக்குள் பண்டமாற்றுச் செய்யவோ முடியாது. எட்டு விதமான நாணயத்தாள்கள், நிறைகள், அளவுகள், பொதுச் சட்டம், வர்த்தகச் சட்டம், குற்றச் சட்டம், பாலன அமையம், பொலிசுக் கட்டுப்பாடு ஆகியனவை எம்மைப் பிரித்து நிற்கின்றன. இதனால் ஒரு நாட்டினராகிய நாம் ஒருவருக்கொருவர் அந்நியராகி நிற்கின்றோம். எங்களைப் பிளவுபடுத்திநிற்கும் இந்த அரசுகள் எல்லாவற்றிலும் வல்லர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1820. சாங்கங்கள் நிலவுகின்றன. இந்த வல்லரசாங்கங்களுக்கும் நாட்டு மக்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இந்த அரசுகள் எதிலும், அச்சுலகுச் சுதந்திரம், ஒருமைப்பட்ட செயல், பேச்சுச் சுதந்திரம், பொதுமனுவைச் சமர்ப்பிக்கும் உரிமை, பிறநாட்டு நூல்களைக் கொண்டுவரச் சுதந்திரம், கல்விச் சுதந்திரம் ஆகியவற்றுள் ஒன்றுமில்லை. இந்த அரசுகளுள் ஒன்றில் எங்கள் மக்களில் காற்பங்குப் பேர் வசிக்கின்றனர். இருந்தும் இந்த அரசு அந்நிய நாடான ஒசுற்றியாவுக்கே உரிமையானது. எனைய அரசுகள் தங்களுடைய குடும்பத் தொடர்புகளாலும் தம் பலவீனத்தைத் தாமே உணர்ந்திருந்தபடியாலும் ஒசுற்றியாவின் செல்வாக்கிற்கு எவ்விதத் தடையுமின்றி அடிபணிகின்றன.”[1]

இரகசியக் கழகங்கள். இந்தச் சூழ்நிலையில் இத்தாலியை ஐக்கியப்படுத்தும் வாய்ப்பு இப்போதைக்கில்லையென்றே தோன்றிற்று. தம்மெண்ணப்படி நடப்பனவும் ஐயப்பாட்டிற்குரியனவுமான அரசாங்கங்களாலும், அரசியல் விவாதங்கள் தடை செய்யப்பட்டிருப்பதாலும், மக்கள் இயக்கங்கள் யாவும் ஆட்சியாளரின் நலத்துக்காகக் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தபடியாலும், இத்தாலிய தாயகப்பற்றுடையோர் தங்கள் சத்திகளை இரகசியக்கழகங்கள் மூலம் வெளிப்படுத்தினர். இத்தகைய கழகங்கள் எல்லாவிடங்களிலுந் தோன்றின. இக்கழகங்கள் குறிப்பாக நேப்பிளில் மிகுந்த பலம் வாய்ந்திருந்தன. வீயன்னாப் பேரவைக்குப் பின்னர் இருந்த சந்ததியாருடைய அரசியல் முயற்சியின் அம்சமாக இருந்த இக்கழகம் பற்றி நாம் எப்படியான அபிப்பிராயமும் கொள்ளலாம். ஆனால் அரசியல் இயக்கத்துக்குரிய எல்லா வழிகளையும் மூடியபடியாலேயே இக்கழகங்கள் எழுந்தன என்பதை நாம் ஒருபோதும் மறக்க முடியாது. “இத்தாலியராகிய எமக்குப் பாராளுமன்றமுமில்லை; பேச்சுச் சுதந்திரமுமில்லை; சட்டபூர்வமாகப் பொதுக் கூட்டம் கூடும் வாய்ப்புமில்லை; எங்கள் மனதில் குமுறும் கருத்துக்களை வெளியிட எந்தவிதமான வழிவகையும் இல்லை” என மசினி குரல் எழுப்பினான். அன்று மசினி கூறியவை இன்றும் எங்களுக்கு உணர்ச்சி யூட்டி ஊக்கப்படுத்தக்கூடியனவாக இருக்கின்றன. அவை பின்வருமாறு: “தார்மீக பலத்தை நியாயமான நோக்கமொன்றுக்குக் கையாளக்கூடிய ஒரு வழிக்கு இடமிருக்குமாயின் ஒருபோதும் பலாற்காரத்தை நாடாதே. ஆனால் தார்மீக பலம் குன்றியபோது நீ உண்மையெனக் கருதுகின்ற எவற்றையாவது வெளியிடும் உரிமையை

[1] Mazzini, op. cit. 71–73.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்குமளவிற்குக் கடுங்கோன்மையாட்சி பரந்திருந்தபோதும், 1820
எண்ணக்கருத்துக்களை ஈட்டி முனைகொண்டு ஒடுக்குகின்றபோதும், உனக்குள்ளே எண்ணிப்பார். நீதி உன்னுடைய பக்கமே உண்டு என்பதில் உனக்குத் திடமான நம்பிக்கையிருந்தும் நீ பலம் குறைந்த சிறுபான்மையிலுள்ளவனாக இருந்தால் உன் கையைக் கட்டிக்கொண்டு உன் நம்பிக்கை தளராமல் மறியற்சாலையிலோ தூக்குமேடையிலோ இடம்பெறத் தயாராக இரு. மோசமான உண்ணாட்டுக் கலகத்தில் உன் நாட்டை ஈடுபடுத்துவதற்கு உனக்கு உரிமையில்லை. ஆனால் நீ பெரும்பான்மையிலுள்ளவனையின், உன்னுடைய உணர்ச்சியே கோடிக்கணக்கான மக்களுடைய உணர்ச்சியாயின் விழித்தெழு. அடக்குமுறையைப் பலம் கொண்டு அழித்தொழி." "அமிடன், பிம், வேன் ஆகிய பல குடியரசுவாதிகளுக்கு அஞ்சலி செலுத்துகின்ற நாடு, பணியும் கொள்கையை எமக்கு எதிராக வெற்றிகரமாகப் பிரயோகிக்க முடியாது" என அவன் ஆங்கில மக்களுக்குக் கூறினான்[1]. இந்த இரகசியக் கழகங்களைக் "காபனரி" எனக் குறிப்பிடுவர். நேப்பிளில் முதலாம் பேடினந்தின் ஆட்சிபற்றி அதிருப்தி கொண்டவர்கள் எல்லோரும் இக்கழகங்களிற் சேர்ந்திருந்தனர். இவர்களுக்கிருந்த செல்வாக்கு 1820 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலகத்தின் போது வெளியாயிற்று. இசுப்பெயினில் நடந்த புரட்சியை முன் 1820 இல் மாதிரியாகக் கொண்டு உணர்ச்சியால் உந்தப்பெற்ற இக் இளர்ச் நடந்த கலகம் சிக்காரர் தங்கள் நியோபொலிற்றன் மன்னனைப் பணியவைத்து அவனிடமிருந்து யாப்பு ஒன்றை வலிந்து பெற்றனர். இலகுவிலே தாங்கள் பெற்ற வெற்றியினால் களிகொண்ட இவர்கள் தங்களுடைய உண்மையான எதிரியான ஒசுற்றியாவுக்கெதிராகப் போதுமான அளவு பாதுகாப்பைச் செய்துகொள்ளத் தவறினர். தன் குடிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறிப் பேடினந்து ஒசுற்றியப் படைகளைத் தன்னுதவிக்கழைத்தான். தங்கள் நிலைமையைக் கலகக்காரர் சரியாக மதிப்பிடாதமையால் அரிய வாய்ப்புக்களை வீணுக்கினர். இரயற்றி என்னும் இடத்தில் நடந்த போரிலே கலகக்காரர் தோல்வியடைந்தனர். அத்துடன் அவர்களுடைய கலாம் விரைந்து படுதோல்வியுற்றது. புரட்சிக் கனலின் பொறியொன்றை நேப்பிளிலே அணைக்கினறபோது பீதுமனிலே புதியதோர் பொறி மூண்டது. யாப்பு ஒன்றை நிறுவுவதே பீதுமன் கலாத்தின் இலக்காகும். மக்களுடைய விருப்பத்துக்கிணங்க நடப்பதே மன்னனுக்குரிய ஒரு வழியாகும். அதற்கு மாற்றுவழி புரட்சியைப் பலம் கொண்டு அடக்குவதாகும். மக்களின் விருப்பத்துக்கு இணங்கி மன்னன் நடந்தால் ஒசுற்றி

[1] **Mazzini, op. cit. 85–86.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1830. யாவுடன் கட்டாயம் போர் மூளும். ஆனல் மன்னன் விற்றர் இம்மானுவேல் இரண்டு வழியில் எதையும் பின்பற்றத தயங்கினன். தன்னுடைய அரசுகட்டிலைத் துறப்பதன் மூலம் இச்சிக்கலைத் தீர்த்துக்கொண்டான். இவனுக்குப் பின்னர் இவனுடைய தம்பியார் சார்ள்சு பெலிச்சு அரசெய்தினன். பெலிச்சு நாட்டிலே இல்லாதபோது சார்ள்சு அல்பேட்டு பதிலாண்மை ஏற்று நடத்தினன். எதிர்காலத்தில் இத்தாலிய விடுதலைப் போரில் முக்கிய பங்கெடுக்கவேண்டியது அல்பேட்டின் விதியாயிற்று. தாராளப் போக்குக் கொள்கையில் இவனுக்கு இருந்த அனுதாபம் எல்லோருக்கும் தெரியும். யாப்பு ஒன்றைப் பிரசித்தஞ் செய்யும்படி இளர்ச்சிக்காரர் இவனைத் தூண்டி வெற்றி கண்டனர். ஆனல் புதிய அரசனை பெலிச்சு இச்சனுகையை உடனடியாக நீக்கிவிட்டான். சார்ள்சு அல்பேட்டு அரச விசுவாசமுடையவன். ஆகவே இவ்வியக்கத்தைக் கைவிட்டான். உண்ணாட்டுப் போர் மூண்டது. நொவாரா என்னுமிடத்தில் நடந்த போரிலே ஒசுற்றிய உதவி, முடிவு காண்பதற்குக் காரணமாயிற்று. இதனல் தனிமுதன்மை மீண்டும் வெற்றி பெற்றது.

1830 இல் நடந்த கலகம்.

இங்ஙனம் நேப்பிளிலும் பீதுமனிலும் ஏற்பட்ட புரட்சிகள் பலனளிக்கவில்லை. இதற்குப் பின்னர் சில ஆண்டுகளாக இத்தாலிய மக்களிடையே துன்பமென்னும் கருமேகம் படர்ந்திருந்தது. பிற்போக்குவாதம் வெற்றிபெற்றது. இத்தாலிய மக்களை முழுமையாக அடிபணியச் செய்வதற்கு இப்பிற்போக்குவாதம் பெரிதும் முயன்றது. ஒசுற்றிய ஆட்சிமுறையின் கடுமை பன்மடங்காயிற்று. இதனல் உடனடியாக எழுந்த கலாங்கள் யாவும் இரக்கமின்றி அடக்கப்பட்டன. இந்த அடக்குமுறை, எங்கும் வெறுப்பைத் தேடிக்கொண்டது. நாளடைவில் இவ் வெறுப்பே இவ்வாட்சியின் வீழ்ச்சிக்கு அடிகோலிற்று. 1830 இல் பிரான்சிலே எற்பட்ட புரட்சியின் விளைவிலிருந்து இத்தாலி தப்பவில்லை. மொடினு, பாமா, போப்பரசுகள் ஆகிய இடங்களில் கலகங்கள் விளைந்தன. பிரான்சிய உதவி பேய்த்தேராயிற்று. உலாயி பிலிப்பிற்கு மெற்றெணிக்கு எச்சரிக்கை செய்யும்போது "உயர்தர வட்டாரங்களிலிருந்து வருகின்ற பாதுகாப்புக்குத் தடையாயிருக்கவேண்டாம்" எனக் குறிப்பிட்டான். இத்தாலியைப் பொறுத்த அளவில் ஒசுற்றியாவுக்கு எவ்வித கட்டுப்பாடும் இருக்கவில்லை. ஒசுற்றியா தலையிட்டபடியால் இத்தாலிய இயக்கம் தோல்வியடைந்தது.

ஒசுற்றியாவும் இத்தாலியும்.

இத்தாலியில் விளைந்த கலகங்களினல் இத்தாலி நல்ல அனுபவத்தைப் பெற்றதாயினும் அதனைப் பெறுவதில் எற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனை அதிகமாக இருந்தது. இவ்வனுபவத்திலால் எவ்வித மான பயனுமில்லை யென்று கூறுவதற்கில்லை. இத்தாலிய மக்களை எதிர்நோக்கி நின்ற உண்மையான பிரச்சினைமீது மக்களின் ஒருமித்த கவனத்தை இவ்வனுபவம் திருப்பியது— அதாவது பிறநாட்டவரை இத்தாலியிலிருந்து துரத்த வேண்டு மென்பதே என்க. ஒசுற்றிய ஆதிக்கத்தைக் கவிழ்ப்பதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யாவிட்டால் எவ்வித பயனும் எற்படாது என்னும் முக்கியமான பாடத்தை ஒவ்வொரு இத்தாலியனுடைய உள்ளத்திலும் இது பதியவைத்தது. இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இத்தாலியிலுள்ள எல்லாக் கட்சிகளும் ஒருமுகமாக இணங்கின. ஆபிசுபேக்கு குலத்தினரின் தளையிலகப்பட்டிருக்கும்போது இத்தாலி சுதந்திர வாழ்வை யடையமாட்டாதென்பதையும், தன் கதியை நிர்ணயிக்கமாட் டாதென்பதையும் அறிவுறுத்துதற்கு இத்தாலிய நாட் டினவாதிகளுக்கு எவ்விதமான விவாதமும் தேவையில்லை. ஆனால் யாப்புறு ஆட்சிவாதிகள் தங்களது தத்துவங்களின் அடிப்படையான "சுதந்திரம், சமத்துவம், மனித பண்பு" என்பவற்றுக்கு மெற்றெணிக்கு தடையாயிருக்கும்வரை தாரா ண்மை பலனளிக்காதென்பதையும் உணர்ந்தனர். இத்தாலியி லுள்ள மிகச் சிறிய கடுங்கோன்மையாட்சியாளன் ஒசுற்றியப் பேரரசின் உதவியோடு தன்குடிகளை எதிர்ப்பதில் வல்லவனாக இருப்பான் என்பதை 1821 இலும் 1830 இலும் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் காட்டின. "மன்னராட்சி உரிமை" என்னும் கோட்பாட்டிலே மீட்கமுடியாத அளவுக்கு ஈடுபட்டிருந்தமையால் மன்னனுக்கும் மக்களுக்கும் ஏற்படும் தகராறுகளின் தகுதியைப் பற்றிக் கவனியாது தன் படைகளை எந்த மன்னனுக்கும் உத விக்கு அனுப்ப ஒசுற்றியா ஆயத்தமாக இருந்தது. "1815 இல் நிறுவிய அரசியல் முறைப்படி ஒசுற்றியாவே இத்தாலியின் பொது அமைதியைப் பாதுகாக்கும் நாடாகும்," என மெற் றெணிக்குக் குறிப்பிட்டான்[1]. இதன்படி அரசாங்கத்தில் எவ் விதமான மாற்றங்கள் வந்தாலும் அவைகளை எதிர்ப்பதற்கு மெற்றெணிக்கு ஒய்வு உறக்கமின்றிக் கவனமாக இருந்தான். எனெனில் புரட்சி ஏற்படத் தொடங்கினால் அதற்குக் காரண மானவர்கள் எதிர்பாராதவளவு தூரத்துக்கு அது சென்றுவிடு மென்பதில் இவனுக்குத் திடமான நம்பிக்கையுண்டு. இது உண்மை. இதற்கு ஐயமில்லை. ஆனால் முற்போக்குச் சத்திகளைச் செயற்கைமுறையாகத் தடைசெய்தால் அவை பலாற்காரமான முறையில் மாற்றங்களைக் கொண்டுவரவும் கூடும் என்பதை 1815-30.

1 Memoirs, iii. 434.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1830-46

அறியாமலிருப்பது அடிப்படையான தவறு. 1815 ஆம் ஆண்டில் நேப்பிள் மன்னனை முதலாம் பேடினந்துடன் மெற்றெணிக்கு ஓர் இரகசியப் பொருத்தனை செய்து கொண்டான். அந்தப் பொருத்தனையில் உள்ள ஒரு கூறு மெற்றெணிக்கின் பூட்கையைக் குறிப்பாக வெளியிடுகிறது. "இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளும் இரண்டு உயர்தரப் பகுதியும் ஒப்புக்கொள்வது யாதெனில், இரண்டு சிசிலிகளதும் மாட்சிமைதங்கிய மன்னன் தன்னுடைய அரசாங்கத்தை மீண்டும் ஏற்படுத்தும் போது புராதன முடியாட்சிக்கும் இத்தாலிய மாகாணங்களின் உண்ணாட்டுப் பாலனத்தில் ஒசுற்றிய பேரரசன் பின்பற்றும் தத்துவங்களுக்கும் முரணுக எவ்விதமான மாற்றமும் அனுமதிக்கப்படமாட்டாதென்பதே."[1] சிசிலியை ஒசுற்றியா பாதுகாப்பதற்கு, சிசிலி கொடுக்கும் கூலி ஒசுற்றிய ஆட்சியை ஏற்றுக்கொள்ளுதலாகும். எனவே தன்னெண்ணப்படி மக்களை வாட்டி வதைக்கும் வல்லாண்மையினின்றும் விடுதலை பெற்றுச் சுதந்திரவாழ்வு என்னும் மேலான பயிரை அறுவடை செய்து அனுபவிப்பதற்கு முதற்படியாக இத்தாலியிலிருந்து அந்நியரைத் துரத்த வேண்டியது அத்தியாவசியமாகும்.

இத்தாலிய கட்சிகள்.

தாம் அடைய வேண்டிய இலக்கினைப் பற்றி இத்தாலிய மக்களிடம் ஒற்றுமையிருந்தது. ஆனால் அதனை எப்படி அடைய வேண்டுமென்பதில் பலவிதமான கருத்து வேற்றுமை நிலவியது. ஆனால் குறிக்கோள் ஒன்றுக இருக்க அதனையடையும் வழி பற்றிக் கருத்து வேற்றுமை நிலவுவது ஒன்றுக்கொன்று முரணனதன்று. ஒசுற்றியா பொதுவான பகைநாடாயிருந்தது. ஒசுற்றியாவின் அதிகாரத்தைக் கவிழ்ப்பதே எல்லா அரசியற் றிட்டங்களிலும் முதலிடம் பெற்றது. ஆனால் இத்தாலிய தாயகப் பற்றுடையோர் கருத்தொருமித்துச் செயலாற்றுதபடியால் அவர்கள் செய்த முயற்சிகள் வலியிழந்தன. தம்முடைய தாய் நாட்டின் கதியைச் சீராக்குவதற்கு அவர்கள் பல்வேறு வழியில் முயற்சி செய்தனர். ஒருவர் மேலொருவர் ஐயங் கொண்டிருந்ததனால் அவர்கள் உளப்பூர்வமாக ஒத்துழைப்பது தடைப்பட்டது. முக்கியமாக இருந்த மூன்று பிரிவினரை நாம் இங்கு குறிப்பிடலாம். குடியரசு வாதிகள், கூட்டாட்சி வாதிகள், சவோய்க் குலமுறையினரை ஆதரிப்பவர்கள் ஆகியோரே இம்மூன்று பிரிவினராவர்.

(1) மசினி.

இத்தாலிய இயக்கத்தின் தீர்க்கதரிசியான குசிப்பி மசினியைப் பின்பற்றுபவர்கள் குடியரசுவாதிகளாவர். சூழ்ச்சிக்காகக்

[1] C. Segre, "Italy" in Camb. Mod. Hist. x. 110.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மசினி (1805-1872)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றஞ் சாட்டப்பட்டு 1831 இல் மசினி நாடு கடத்தப்பட் 1830-46
டான். அதன் பின்னர் "இளைஞரின் இத்தாலி" என்னும் கழகத்தை நிறுவினான். எனெனில் இத்தாலிய இளைஞர் மூலமே இத்தாலியை ஈடேற்றலாம் என்பதை இவன் கண்டான். "பொங்கியெழும் மக்கள் கூட்டத்தின் தலைமை யிடத்தை இளைஞருக்குக் கொடுங்கள். இந்த இளம் உள்ளங்களில் மறைந்திருக்கும் சத்தியின் இரகசியத்தையோ இளம் குரல்களில் எழும் மந்திரத்தால் பொதுமக்கள் கட்டுப்படுவதையோ நீங்க ளறியமாட்டீர்கள். இந்த இளைஞருள் எங்கள் புதிய மதத்தின் தொண்டர்கள் பலரை நீங்கள் காண்பீர்கள்," என மசினி அறிவுரை கூறினான். தளராத தார்மீக பலத்தைத் தாயகப் பற்றுணர்ச்சி வேகத்தினால் தூண்டி அதனாலேற்படும் எந்த இன்னலையும் பொறுத்து நடக்கக் கூடிய இளைஞரைத் திரட்டினான். "தாயகப் பற்றுடையோரின் செங்குருதியை இறைத்து வளர்க்கின் இத்தகைய கருத்துக்கள் விரைந்து வளரும் என்பதில்" இவனுக்கு நம்பிக்கையுண்டு. இச்செயலைத் தொடர்ந்து நடாத்தும்பொருட்டு மசினியின் சீடர்களுக்குப் பின்வருமாறு கூறப்பட்டது. "மலைமீதேறுங்கள்; அங்கு தொழில்புரிபவர்களுடைய எளிய உணவை நீங்களும் பகிர்ந்து உண்ணுங்கள்; இதுவரையும் புறக்கணிக்கப்பட்டுள்ள தொழி லாளர்களின் ஆலைகளுக்குச் செல்லுங்கள். அவர்களுடைய உரிமை, பண்டைப்புகழ், பெருமை, பழைய வணிகம் ஆகிய வை பற்றிப் பேசுங்கள். அவர்களை வருத்துகின்ற கரைகாண அடக்கு முறைபற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. எனெ னில் அதுபற்றி அவர்களுடைய அறியாமையை நீக்கி அகக் கண்ணைத் திறக்கும் பொறுப்பை ஒருவரும் ஏற்கவில்லை."[1] ஐக்கிய இத்தாலியைத் தன் அகக் கண்ணுற் கண்டுகொண்டு மசினி புதிய மதத்தைப் போதிக்கின்ற ஒருவனின் உணர்ச்சி வேகத்துடன், தான் கண்ட காட்சியைத் தன் நாட்டு உடன் பிறந்தோருக்கும் காட்ட முற்பட்டான். வேறு எவரிலும் பார்க்க அதிகமாக இதனை மசினி விளங்கிக் கொண்டமையே அவனுடைய சிறப்புத்தன்மையாகும். "ஒரு நாடாவதற்கு இத்தாலி உறுதி கொண்டுள்ளது. எது வந்தாலும் வரட்டும். இத்தாலி ஒன்று பட்டே தீரும். இந்த ஊழி முடிவதற்கு முன்னர் இத்தாலியப் போர்வீரர் போர் தொடுப்பதற்கு—வீயன்னாவிற்குப் படையெடுத்துச் செல்வதற்கே—வீயன்னைப் பொருத்தனையில் உள்ள ஆசா ரங்கள் காரணமாகாமற் போகா. நான் கூறுவதற்கிணங்க இது நடந்தே தீரும்" என அவன் எழுதினான்.[2] இத்தாலி

[1] C. Segre, op. cit. 121–122.
[2] Mazzini, op. cit. 115.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1830-46 என்பதற்குப் புவியியற் சொல்லளவல்லாற் பொருளில்லை எனக் கொள்ளாது அது ஒரு நாடு என்பதை இத்தாலிய மக்கள் உணருமாறு போதிப்பதும் இத்தாலியத் தீபகற்பம் முழுவதும் செயற்கையரசியல் வரம்புகளால் பிளவுபட்டிருந்தபோதும் இத் தாலிய நாடு முழுவதும் பொதுவான பண்டைமரபையும் வர லாறுகண்ட பழைய பெருமைகளையும் கொண்டு வாழும் ஒரு மைப்பாடுடையது, என்னும் உண்மையை மக்களுக்கு உணர்த் துவதுமே அவனுடைய பணியாகும். "ஒரே மொழியைப் பேசும் மக்களுக்கும், ஒரே இடத்தில் வாழ்பவர்களுக்கும், சிறுவயது தொட்டு ஒரே தாலாட்டுப்பாட்டைக் கேட்டு வந்தவர்களுக்கும், ஒரே சூரியனுடைய ஒளியைப் பெற்றுப் பலமடைந்த இளை ருக்கும், பொதுவான பழைய நினைவுகளால் உந்தப்பெற்ற வர்களுக்கும், ஒரே இலக்கிய மேதாவிகளால் ஊக்குவிக்கப் பட்டவர்களுக்கும்"[1] மசினி தனது வேண்டுகோளை விடுத் தான். காபனரிக் கழகங்கள் தாயகப்பற்று என்னும் நெருப்பு அவிந்துபோகாது இருப்பதற்கு உபயோகமாக இருந்தன. ஆனால் இவ்வியக்கத்தைக் கொண்டு நடாத்தும் திறமை யில்லாதிருந்த மையே அவற்றின் குறைபாடாகும். "பிரபலியமான தலைவர் கள் இல்லாதபடியாலும் ஒற்றுமையாகச் செயல்புரியும் தன்மை இல்லாதபடியாலும் இந்த இரகசியக் கழகங்கள் நாங்கள் நினைக்குமளவு அபாயமானவையல்ல" என மெற்றெணிக்கு எழுதினன். உள்ளூர்களிற் கலகங்களை விளைவிப்பதில் இவற்றின் சத்தி செலவாயிற்று. இந்தக் கலகங்களினால் தற்காலிக வெற்றி யைப் பெறுவதல்லாது நிரந்தரமாக ஒன்றையும் சாதிக்கமுடி யாது. செயலாற்றும் முறைகளுக்கும் அடைய வேண்டிய இலக் கிற்கும் முரண்பாடு இருந்தால் தோல்வி கட்டாயம் என்பது முன்னரே கண்ட முடிவு. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒன்றோடொன்று தொடர்பில்லாத செயல்களிலே நம்பிக்கை வைத்திருக்கும்வரை புரட்சிவாதிகள் படுதோல்வியடைவர். வெற்றி உறுதியாகக் கிடைக்கவேண்டுமானால் இத்தாலியின் பல்வேறு பகுதிகள் ஒன்றுசேர்ந்து போர் விளைத்தல் வேண்டும். 1821 இல் நியோபொலிற்றன் கலகத்தைப் பெரும்பாலும் அடக்கும் வரையும், பீதுமன் புரட்சி செய்யவில்லை. 1830 இல் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு திட்டத்துக்கமையாமல் கலகங்கள் செய்யப்பட்டன. இந்தக் குறுகிய பூட்கையினால் எவ்வித பலனுமேற்படாது என்பது வரலாற்றைக் கொண்டு நோக்குமிடத்து எமக்குத் தெளிவாகின்றது. ஆனால் இந்த உண்மை இத்தாலிய மக்களின் மனதிலே பதிவதற்கு ஒன்றன்

[1] Ibid. 51.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் ஒன்றுகத் தோல்விகள் தேவையாயிருந்தன. மசினி 1846
சரியான பாடம் படிப்பிக்காவிட்டால் இதனை மக்கள் ஒருபோதும் உணர்ந்திருக்க மாட்டார்கள். எது எங்ஙனமிருப்பினும் இலட்சியம் ஒன்றிற்காகத் தன்வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்து மற்றவர்களுக்கு வழிகாட்டிய பெருமையும் மதிப்பும் மசினிக்கு உண்டு. அவன் செய்த பிரசாரம் இத்தாலிய அரசியல் வானை வரிவடையச் செய்து பொது மக்களுடைய மனதிலே நாட்டினைச் சுதந்திரத்திற்குச் சார்பான விறுவிறுப்பான கருத்தை யுண்டாக்கியது. எனவே இக்கால இத்தாலியை உருவாக்கிய சிற்பிகள் வரிசையில் மசினி அழியா இடம் பெறுகின்றான்.

ஐக்கிய இத்தாலி என்னும் இலட்சியத்தை இத்தாலிய மக்களிட (2) சவோய்
த்து மசினி எற்படுத்தினான். ஆனால் அவன் கண்டகனவை நன வமிசம்.
வாக்கும் பொறுப்பு மற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மசினி குடியரசுவாதி. புதிதாக உருவாக்கப்படும் இத்தாலி, குடியரசுக்குரிய அத்திவாரத்திலெழ வேண்டியிருந்தது. மக்கள் அந்நியராட்சித் தளையைத் தகர்த்தெறிய உளப்பூர்வமாகக் கிளர்ச்சி செய்வார்கள். அக்கிளர்ச்சியே மக்களை மன்னராட்சியென்னும் அடிமை விலங்கிலிருந்தும் விடுவிக்கும். ஆனால் மசினிகண்ட கனவின் பிற்பகுதி நனவாகாது இருந்தது. செயல்முறையை விரும்புவோர் சவோய்க் குலத்தினர்மீதும் கைமேற்பலனைத் தரக் கூடிய படைப்பலன்மீதுமே நம்பிக்கையுடையராக விருக்க விரும்பினர். இத்தாலியருடைய கவனம் பீதுமனை நோக்கித் திரும்பியது. ஏனெனில் இத்தாலியிலிருந்த பல அரசுகளிற் பீதுமனே போர்க்களத்திலே ஒசுற்றியாவை எதிர்க்கக்கூடிய படைப்பலம் உடையதாக இருந்தது. அன்றியும் நடக்கவிருக்கும் போராட்டத்தில் பீதுமனின் தலைமையை ஆதரிப்பதற்கு வேறு காரணங்களு முண்டு. அதாவது பீதுமனின் பிறநாட்டுக் கலப்பின்மையாகும். "தூரின் மந்திரம் பேரவாக கொண்டிருக்கின்றது. இந்த அவாவை நிறைவேற்று வதாக இருந்தால் ஒசுற்றியா பாதிக்கப்படும்," என 1817 ஆம் ஆண்டிலேயே மெற்றெணிக்குக் குறிப்பிட்டான்.[1] பீதுமனை இப்போது ஆட்சிசெய்தவன் சார்ள்சு அல்பேட்டாவான். இவன் 1831 இல் அரசெய்தினான். 1821 ஆம் ஆண்டு நடந்த குழப்பத்தின்போது இரண்டகமான இவனுடைய நடத்தை பற்றி முன்னரே குறிப்பிட்டோம். அதற்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் எழுந்த கலாமொன்றை மிதமிஞ்சிய கடூரத்துடன் இவனடக்கினான். ஆனால் "நான் இறக்கும் நாள்வரையும் 'தாயகப்பற்று', 'அந்நியராட்சியிலிருந்து விடுதலை' என்ற சொற்கள் என் இதயத்தைத் துடிக்கச் செய்யும்," என இவன்

[1] Memoirs, iii.98.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1846. வற்புறுத்திக் கூறியவற்றின் உண்மையைப் பின்வரும் நிகழ்ச்சி களே உறுதிப்படுத்த விருந்தன. " சரியான வாய்ப்புக் கிடைக்கும் போது என்னுடைய வாழ்க்கை, என் புதல்வரின் வாழ்க்கை, என் படைகள், என் செல்வம் யாவும் இத்தாலிக்கு அர்ப்பணிக்கப் படும்", என இவன் பிரகடனஞ் செய்தான். நிற்க, இவனுடைய மதியூகமான பாலனம் நன்கு நடைபெற்றது. இதனைக் கண்டு சவோய் மன்னர் குலம் மூலம் இத்தாலி ஈடேற முடியுமெனக் கருதியவர்களின் நம்பிக்கை வளர்ந்தது. " காலத்துக்கேற்ற வாறு நாங்களும் முன்னேறுவோம்," என இவன் சொன் னன். இவனுடைய இராச்சியத்தில் நற்பலனளிக்கக் கூடிய பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. பீதுமன் அரசைப் புதியதோர் அரசாக்கும் நோக்கத்துடனும் நாட்டினத்தை மீண்டும் அமைப் பதற்குப் பீதுமன ஆயத்தஞ் செய்யும் நோக்கத்துடனும் இச் சீர்திருத்தங்கள் திட்டமிடப்பட்டன.

(3) கூட்டாட்சி வாதிகள். இயொபேட்டி என்பான் கவர்ச்சிகரமான சில கருத்துக்களைப் புகழ்பெற்ற பிறைமேட்டோ என்னும் திட்டத்தில் தெரிவித்தான். இத்தாலிய தாய்கப்பற்றுடையோருள் ஒரு சாரார் இந்தக் கருத் துக்களைக் கண்டு ஆர்வங் கொண்டனர். இவனுடைய பிரேரணைகள் மிதமிஞ்சியவைபோற் றோன்றியபோதும் இத்தாலிய நிகழ்ச்சிகளை உருவாக்குவதிற் குறிப்பிடக்கூடிய அளவு செல்வாக்குப் பெற்றி ருந்தன. இவனுடைய திட்டத்தில் புதிது காணற்றல் மிளிர்ந்தது. எனெனில் அக்காலத்தில் காணப்பட்ட அரசியற் கருத்துக்கள் பல வற்றுள் இவனுடைய பிரேரணைகள் தொடக்கத்திலிருந்தே இணை யற்றனவாயிருந்தன. இத்தாலியிலுள்ள பல்வேறு சிற்றரசுக ளெல்லாவற்றையும் கூட்டாட்சி முறைப்படி சேர்த்து அக்கூட்டாட் சிக்குப் போப்பாண்டவரைத் தலைவராக்குவதே இத்திட்டம். இத் தாலி புத்துயிர் பெறுவதற்குப் போப்பாட்சியின் உலகியல் அதிகா ரமே முட்டுக்கட்டையாயிருந்ததெனப் பல நூற்றுண்டுகளாகக் கருதப்பட்டது. ஆனல் இப்பொழுது புத்துயிர் பெற்று ஐக்கியப்பட் டுள்ள இத்தாலியை உருவாக்குவதற்குப் போப்பாட்சி அதிகாரமே அத்திவாரமாக அமைய வேண்டும் எனத் திட்டஞ் செய்யப்பட்டது. இழிவான நிலையிலிருந்த போப்பாட்சியைச் சீர்திருத்தி நிலையை மாற்றிய பின்னர் அப்போப்பாட்சியே அந்நியர் காலெடுத்து வைப் பதைத் தடுத்து இத்தாலியின் நலன்களைப் பாதுகாப்பதன் பொ ருட்டு ஒசுற்றியாவுடன் போராட வேண்டியதாயிற்று.

தாராளப் போக்குள்ள போப்பாண்ட வர். இத்தாலிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய வழிகளுள் கூட் டாட்சிவாதிகளும் புதிய யூலப்சினரும் கைக்கொண்ட வழி கள் வரலாற்றை யொட்டி நோக்கும்போது பொருத்தமற்றன வெனத் தெரிகின்றது. எனினும் அப்போது நிகழ்ந்த சம்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கள் அந்த வழியையே முதன்முதற் கைக்கொள்ளும்படி 1846-48
செய்துவிட்டன. 1846 ஆம் ஆண்டில் ஒன்பதாம் பயசு போப்பாண்டவர் அரசெய்தினர். இந்தத் தேதியே இத்தாலியின் சுதந்திர இயக்கத்தின் தொடக்கமாகும். அப்பொழுது தொடங்கிய புரட்சி நாளடைவில் அந்நியரை வெளியேற்றி இத்தாலியை ஐக்கியப் படுத்திற்று. முப்பது ஆண்டுகளாக ஏமாற்றம் என்னும் திக்குத் தெரியாக் காட்டில் அலைந்து திரிந்த இத்தாலிய மக்கள் தம்கனவு நனவாகும் கட்டத்தையடைந்தனர். வீயன்னாப் பேரவையிலே நிறுவப் பெற்ற அரசியல் முறை அழிந்தொழியத் தொடங்கியது. புதிய போப்பாண்டவர் ஒசுற்றியாவின் எதிரி யெனவும் தாராளபோக்கு உள்ளவர் எனவும் நம்பப்பட்டது. இயொபேட்டி எழுதிய நூல்களை இவர் படித்தார். போலிங் புறூக்கு என்பான் எழுதிய 'தாயகப் பற்றுடைய மன்னன்' என்னும் நூல் மூன்றாம் யோச்சு மன்னனை எங்ஙனம் கவர்ந்ததோ அதேபோல இயொபேட்டியின் நூல் புதிய போப்பாண்டவரைக் கவர்ந்தது. போப்பு பயசு அரசெய்தியதை மக்கள் மட்டில்லாத உற்சாகத்துடன் வரவேற்றனர். தமக்கு ஒரு தலைவன் கிடைக்க வேண்டுமென இத்தாலி வேணவாக் கொண்டிருந்தபடியால் அந்த அவாவின் சின்னமாக அவர் களுடைய உற்சாகம் அமைந்தது. மக்கள் அவருடைய தெரிவின் பின் எதிர்பார்த்திருந்தது சரியென நிரூபிக்கும் முறையிலே அவருடைய முதலாவது செயலும் இருந்தது. அரசியல் குற்ற வாளிகளெல்லாருக்கும் மன்னிப்பு அளிப்பதாக அவர் பிரகடனஞ் செய்தார். கருதியோ, கருதாமலோ அவர் செய்த இச்செயல் ஒசுற்றிய அதிகாரத்தை எதிர்ப்பது போன்றதாயிற்று. திருச் சபையைப் பொறுத்தவரையில் தாயகப்பற்று என்பது குற்ற மெனக் கருதப்படமாட்டாது என்பதே இப்பிரகடனத்தின் பொருள். "தாராள போக்குள்ள போப்பாண்டவர் பதவிக்கு வருவதைத் தவிர்த்து நாங்கள் மற்ற எதையும் எற்க ஆயத்தமா யிருந்தோம். இப்பொழுது அத்தகைய ஒருவர் பதவிக்கு வந்து விட்டார். இனி எது நடப்பினும் வியப்படைய இடமில்லை" என்பதை மெற்றெணிக்கு ஒப்புக் கொண்டான். அரசியற் குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்ட மன்னிப்பைத் தொடர்ந்து பல நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. அவையாவன: பொது மக்கள் உறுப்பினராக இடம் பெறும் அரசுக் கழகமொன்றை நிறுவுதல்; உரோமில் நகரசபை யமைத்தல்; பொதுமக்கள் படையொன்றை நிறுவுதல் என்க. இத்தாலியின் பழமைபேண் அரசாங்கத்திடமிருந்து உளப்பூர்வமாக எழுந்த இச்சீர்திருத்தங்கள் சுதந்திரத்துக்காகப் படைகொண்டு எழவேண்டுமென்பதையே குறிக்கின்றன என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848 மக்கள் கருதினர். முதலில் கலகம் செய்தோர் சிசிலிய மக்களாவர். ஒருமாத காலத்திற்குள் மெசீனாவைத் தவிர ஏனைய இடங்களைக் கலகக்காரர் சரணாகதியடையச் செய்தனர். யாப்புறு ஆட்சி நிறுவப்பட்டது. பூபோன் குலத்தினர் நடத்திய நஞ்சையொத்த வல்லாட்சியின் அடிமைத்தளை களைந்தெறியப் பட்டது. சிசிலித் தீவிலே நடந்ததைக் கண்டு அச்சமுற்ற இரண்டாம் பேடினந்து இத்தாலியப் பெருநிலப்பகுதியிலுள்ள தன் இராச்சியத்தைக் காப்பாற்றுவதற்காக, யாப்பு ஒன்றை வழங்கி நேப்பிளில் ஏற்பட்ட புரட்சி இயக்கத்தைத் தடுக்க விரைந்தான். தாராளப் போக்கு இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்ததற்காகப் போப்பாண்டவரை இங்ஙனம் தண்டிக்கலாம் என்பதும் அவனின் எண்ணம்; எனெனில் யாப்புறு ஆட்சி வேண்டுமென இத்தாலிய மக்களனைவரும் குரலெழுப்புவர். இங்ஙனம் பேடினந்து எதிர்பார்த்தது விரைவில் நிறைவேறியது. பேடினந்தின் முன்மாதிரியைப் பின்பற்றி யாப்பு ஒன்றைப் பிரசித்தஞ் செய்யும் கட்டாயம் போப்பாண்டவருக்கேற்பட்டது. இது இங்ஙனமிருக்க, தசுக்கனியைச் சேர்ந்த இலியோபோலும் நேப்பிள் காட்டிய வழியைப் பின்பற்றி யாப்பு ஒன்றை வழங்கினன். சாள்சு அல்பேட்டு தவிர்க்க முடியாததெனத் தோன்றிய பெரும் போராட்டத்துக்குத் தாராள போக்கினரின் அனுமதியைப் பெற வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்து பீதுமன் அரசுக்கு யாப்பு ஒன்றை வழங்கும் கற்பனையொன்றைப் பிறப்பித்தான். இந்த யாப்பே பின் ஒருகாலத்தில் புதிய இத்தாலிய அரசாங்கத்தின் அத்திவாரமாக அமையவிருந்தது. அதே நேரத்தில் ஒசுற்றியாவில் நடந்த நிகழ்ச்சிகள் இத்தாலி விடுதலை பெறுங் காலம் அணுகிவிட்டதென்ற நம்பிக்கையை யுறுதியாக்கின. மெற்றெணிக்கின் அதிகாரத்தின் கோட்டையாக இருந்த வீயன்னவே அவனுடைய அதிகாரத்தை எதிர்த்துக் கலகஞ் செய்தது. கணப் பொழுதிலே அமைச்சனை மெற்றெணிக்கு அதிகாரத்திலிருந்து கவிழ்ந்து விட்டான். பகட்டுக்கள் யாவற்றையும் இழந்த ஆபிசு பேக்குப் பேரரசு கட்டுக்கோப்பான எதிர்ப்பெதையும் தாங்கவல்லதல்லவென்பது புலனுயிற்று. இதனை உணர்ந்த இத்தாலியிலுள்ள ஒசுற்றிய மாகாணங்கள் தம் அயலிலுள்ள அரசுகளைப் பின்பற்றி நாட்டினைச் சுதந்திரத்தைப் பெறுதற்குரிய சந்தர்ப்பத்தை உடனடியாகப் பயன்படுத்திக்கொண்டன. "புகழ்பெற்ற ஐந்து நாள் போரிலே மிலானிலுள்ள இராடற்கியின் தலைமையிலுள்ள ஒசுற்றியப் படைகள் நகரைவிட்டுப் பதியெழ வேண்டிய கட்டாயமேற்பட்டது. உடனே வெனிசும் இதனைப் பின்பற்றி ஒசுற்றியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவற்படைகளைத் துரத்திய பின்னர் தன்னரசைத் சென் மாக்கு குடியரசெனப் பிரசித்தஞ் செய்தது. 1848

பீதுமன் மன்னன் எவ்வழியைப் பின்பற்றத் தீர்மானிக் கின்றானே அதை நோக்கியே எல்லா நிகழ்ச்சிகளும் திரும் பின. "சாடீனியன் முடியாட்சியின் முடிவுகாலம் நெருங்கி விட்டது. ஒரேயொரு வழிதான் இருந்தது. அதுவே உடனடி யான போராகும்," என்று கவூர் புகழ்பெற்ற அறிவுரையைப் பகர்ந்தான். சாள்சு அல்பேட்டு திருச்சபை வழிப்படி ஒழுகும் ஒரு பத்தன். எனவே மதம் காரணமாகப் பெரும் கத்தோ லிக்க வல்லரசாகிய ஒசுற்றியாவுக்கெதிராக வாளை உறையி னின்றும் உருவ இதுவரையும் தயங்கினான். ஆனால் 1847 இல் சீர்திருத்தக் கட்சியினர் விடுத்த அறைகூவலை ஒசுற்றியா ஏற்றுக் கொண்டு போப்பின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பெறேறுப் பகுதியைக் கைப்பற்றியது. இச்செயல் பெரும் பிழையாகும். இதனால் திருச்சபையின் பாதுகாவலனாக நடிக்கவும், நாட்டினத் தின் பரிசுத்த உரிமைக்காகவும் மதத்தின் பரிசுத்த உரிமைக் காகவும் சமயப் போர் தொடுக்கவும் அல்பேட்டுக்கு வாய்ப்புக் கிடைத்தது. இதற்கிணங்கவே தன் சார்பிலே தலையிடுமாறு மிலான் விடுத்த அழைப்பையேற்று ஒசுற்றியாவுக்கெதிராக அவன் போர் தொடுக்கும் பொறுப்பை ஏற்றான். அவனுடைய விருதுக் கொடியைச் சுற்றி இத்தாலி முழுவதும் திரண்டது. ஏனெனில் பொதுமக்களுடைய ஆர்வத்தை யெதிர்ப்பதற்கு இத்தாலியிலுள்ள எந்த அரசும் துணியவில்லை. போப்பாண்ட வர், தசுக்கனிக் கோமகன் ஆகியோர் கூட இப்போராட்டத்திற் சேரவேண்டியதாயிற்று. நேப்பிளும் இப்போராட்டத்துள் வலிந்து இழுக்கப்பட்டது. ஒசுற்றிய தளபதி இராடற்கியைப் பீதுமன் படைகள் கோயிற்றே என்னுமிடத்தில் தோற்கடித்தன. ஆனால் பீதுமன் படைகள் தமக்குக் கிடைத்த வாய்ப்பைத் தொடர்ந்து பயன்படுத்தாது, விசன்சாவையும், பாதுவாவையும், வெனீசியா வினுள்ள ஏனைய இடங்களையும் எதிரி திரும்பப்பிடிக்க விட்டன. இறுதியில் வெனிசு மாத்திரம் எஞ்சியிருந்தது. பீதுமன் படை களின் சோம்பலை இங்கு விளக்குவது கடினம். ஏனெனில் இராடற்கி பலம் குறைந்த படைகளைக் கொண்டே போராடினான். பீதுமன் படைகள் வேகமாக எதிர்த்துத் தாக்கியிருந்தால் இராடற்கியின் போக்குவரத்துப் பாதைகள் துண்டிக்கப்பட்டுப் புதிய உதவிப் படை வருவதைத் தடுத்திருக்கலாம். இச் செயல் படையணுவலில் மட்டுமல்லாமல் அரசியலிலும் பேரா பத்தை விளைவித்தது. ஏனெனில் இந்தப் போராட்டத்தில் வேண்டா வெறுப்புடன் பங்குபற்றிய இத்தாலிய அரசுகளுக்கு இதுவே வாய்ப்பளித்தது. ஒன்பதாம் பயசின் கடப்பாடுகள் 1848 இல் நடந்த போர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848

ஒன்றுக்கொன்று முரணுக இருந்தன. முதலாவதாக இத்தாலிய பிரதேசத்தின் ஆட்சியாளர் என்ற முறையிலேயே இத்தாலியிலிருந்து அந்நியரை வெளியேற்றுவதற்கு அவர் உறுதிபூண்டுள்ளார். இரண்டாவதாக, கத்தோலிக்க திருச்சபையின் தலைவரென்ற முறையில் ஒசுற்றிய அரசும் அவருடைய ஆத்மீக அதிகாரத்தில் அடங்கியிருந்தது. ஒசுற்றிய முடியாட்சியே திருச்சபையின் முக்கிய ஊன்றுகோல். எனவே பயசுக்குக் கூறப்பட்ட அறிவுரைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாயிருந்தன. இங்ஙனம் ஒன்றுக்கொன்று பொருந்தாத பொறுப்பை இணக்கஞ் செய்வது இயலாது. எனவே பயசு இத்தாலியப் பிரதேச ஆட்சியாளராகத் தனக்கிருந்த அக்கறைகளைக் கைவிடத் தீர்மானஞ் செய்தார். 1848 ஆம் ஆண்டு ஏப்பிரில் திங்களில் விடுத்த புகழ்பெற்ற சுற்றறிக்கையின்படி ஒசுற்றியாவுடன் போர் தொடுப்பது போப்பாண்டவரின் அறிவுரைகளுக்கு முற்றும் மறுப்பானது என்று உலகறியப் பிரகடனஞ் செய்தார். இந்த அறிவிப்பு பலவழியில் முக்கியமானது. முதலாவதாக இயொபேட்டி கண்ட கனவு கலைந்துவிட்டதென்பது இதன் கருத்து. கூட்டாட்சி முறைத் திட்டம் ஐயந்திரிபின்றி ஒதுக்கப்பட்டது. ஏனெனில் அமைவான பிரச்சினையொன்று சாதகமாகத் தீரும் தறுவாயில் தன் பொறுப்பை உதறித் தள்ளிய போப் பாண்டவரிடம் இத்தாலியின் ஈடேற்றம் ஒருநாளும் ஒப்படைக்கப் படமாட்டாது. நேப்பிள் அரசன் தென்னரசின் யாப்பைக் கவிழ்த்துவிட்டுப் போர் அரங்கிலிருந்து தன் படைகளைத் திரும்ப அழைக்கத் தூண்டப்படுதலே இதன் உடனடியான விளைவாகும்.

போரின் போக்கு.

பீதுமனுடன் சேர்ந்த நட்புறவுடைய அரசுகள் கடமையிலே தவறியபடியால், ஒசுற்றியாவுடன் எற்பட்ட போராட்டத்திலே பீதுமன் தன்னந்தனியாக எதிர்த்து நிற்கவேண்டியதாயிற்று. ஆனல் சார்ளசு அல்பேட்டு தன்னுடைய உறுதியில்லா உளப் போக்கைக் கைவிட்டு, தன்னுடைய போரின் போக்கிற்கு எற்ற சத்தியைக் காட்டியிருந்தால் நிலைமை மோசமாகாது ஒருவாறு தடுத்திருக்கலாம். போப்பின் கட்டளையைப் பொருட்படுத்தாது மத்திய அரசுகளும், வட அரசுகளும்—வெனீசியா, பாமா, பியாசென்சா, மொடினு—ஒன்றுசேர்ந்து தங்களுடைய பகுதியைப் பீதுமன் அரசுடன் இணைப்பதற்குச் சாதகமான குடியொப்பங்களை நிறைவேற்றின. சாடீனிய மன்னனின் இரண்டாம் புதல்வனுக்குச் சிசிலி மக்கள் அரசுகட்டிலினுரிமையை வழங்கினர். ஆனல் குறுகிய காலத்தில், மன்னனின் படை கூசுற்றேசாவிலே படுதோல்வியடைந்தது. மிலானும் சரணுகதியடைந்த பின்னர் படைத்தகைவு சலாசுக்கோவில் செய்யப்பட்டது. கட்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தின் பெயரிலேயே மன்னன் இவ்வுடன்படிக்கையைச் செய் 1849
தான். இதன்படி இத்தாலியின் வடபாகத்தில் உள்ள ஆள்புல உரிமையை ஒசுற்றியா மீண்டும் பெற்றது. இதனை வெனிசு மாத்திரம் தொடர்ந்து எதிர்த்தது.

இத்தாலியின் மீட்சிக்காக நன்னிமித்தங்களுடன் தொடங்கிய அதன் குலைவு.
இவ்வியக்கம் இப்பொழுது ஏறத்தாழ வீழ்ச்சியடையும் நிலைக்கு வந்துவிட்டது. உண்ணாட்டுப் பலவீனத்தினால் பாதிக்கப்பட்டிருந்த போதும் ஒசுற்றியா எதிர்பாராதவளவிற்கு எதிர்ப்புச் சத்தியைக் காட்டிற்று. ஒசுற்றியாவை அதனுடைய தளபதிகள் தங்களுடைய தளரா முயற்சியினால் தோல்வியினின்றும் காப்பாற்றினர். மேலும் இத்தாலியின் வடபகுதியை ஒரு அரசாக நிறுவுவதற்குச் சாள்சு அல்பேட்டிற்கு இருந்த நீண்ட கால அவாவை அவன் நிறைவேற்றத் தவறியபடியால் முடியாட்சிக்கு இருந்த மதிப்புக் குறைந்தது. இந்தச் சந்தர்ப்பத்திலே குடியாட்சியை ஆதரிக்கும் நோக்கத்துடன் கலகங்கள் பல நடந்தன. உரோமில் உள்ள புரட்சிவாதிகள் குடியரசைப் பிரசித்தஞ் செய்தனர். போப்பாண்டவர் நாட்டினின்றும் போக மசினியே இவ்வியக்கத்தின் உண்மையான தலைவனானான். அத்துடன் தசுக்கனியில் தற்காலிக அரசு ஒன்றும் அமைக்கப்பட்டது. இத்தாலிய விடுதலைப் போரின் முதலாம் கட்டம் முடிவடைவதற்கான அறிகுறிகளைக் காட்டும் சம்பவங்கள் நிகழ்ந்தன. இக்கட்டமே இத்தாலியப் போராட்டத்தில் மிகுந்த ஆபத்து நிறைந்தது. ஒசுற்றியாவுடன் செய்துகொண்ட போரோய்வை மீறி எவ்விதமான எற்பாடுமின்றிப் பீதுமன் திடீரெனப் போரில் ஈடுபட்டது. படைத்தகைவை மீறிய பதினைந்து நாட்களுக்குள் இந்தப் போர் நொவாராப் போர்க்களத்திலே ஒசுற்றியாவுக்குச் சார்பாக முடிந்தது. சாள்சு அல்பேட்டு தன்னுடைய முயற்சிகளால் நைந்து இளைத்துப்போனதாலும் சமாதானப் பேச்சின் பொழுது பீதுமன் சாதகமான நிபந்தனைகளைப் பெறுதற்கான வாய்ப்பை எற்படுத்தும் பொருட்டும் தன்னுடைய மகன் இரண்டாம் விற்றர் இம்மானுவேலின் சார்பிலே முடிதுறந்து நாட்டை விட்டகன்றான். இத்தாலிய விடுதலைப் பணிக்கு இவன் ஆற்றிய தொண்டின் இறுதிக்கட்டம் இது. போப்பாண்டவரின் சார்பிலே பிரான்சு தலையிட்டு, கரிபால்டி தீவிரமான முயற்சிகள் செய்த போதும் உரோமன் குடியரசை வீழ்த்தியமையுடனும், அதே வேளையில் தசுக்கனிக் கோமகன் அவனுடைய கோமகவுரிமைக்கு மீண்டும் உரித்தாளாக்கப்பட்டமையுடனும், வெனிசின் வீரம் மிகுந்த எதிர்ப்பு இறுதியில் அடக்கப்பட்டமையுடனும் பிற்போக்கின் வெற்றி உச்சநிலையை யடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1852. கவூர்.

இத்தாலி மீண்டும் புவியியல் சொல்லளவல்லால் பொருளில்லாத பழைய நிலையை அடைந்தது. ஒசுற்றிய விலங்கை உதறி எறிதற்கு எடுத்த முயற்சி காரணமாக இத்தாலிக்குத் தண்டனை பலமாகக் கிடைத்தது. பிற்போக்குவாதிகள் தங்கள் அதிகாரத்தைக் கொண்டு மக்களை அச்சுறுத்தும் முறைகளைக் கையாண்டு கடும் போக்கிலே போனார்கள். இச்செயல் ஐரோப்பா முழுவதற்கும் ஆத்திரத்தை உண்டுபண்ணியது. இத்தாலிய விடுதலைப் போராட்டத்திற்கு யார் தகுந்தவர் என ஆராய்ந்து பார்த்தபோது ஒரேயொரு சிற்றரசன் தவிர எனையவர்கள் தகுதியற்றவர்கள் என்பது தெரியவந்தது. யாவரும் தகுதியில்லாமற் போகவே விதிவிலக்காக அமைந்தவன் பீதுமன் இளவரசனேயாவன். சார்ள்சு அல்பேட்டு இத்தாலிய விடுதலைப் போரிலே பட்ட இன்னல்களும் துன்பங்களும் வீண் போகவில்லை. ஏனெனில் இத்துன்பங்கள் யாவும் சவோய் மன்னர் குலத்தின் விசுவாசத்தை எடுத்து விளக்கியதோடு இத்தாலியின் எதிர்கால விருத்தியையும் சவோய்க் குலத்தையும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாது பிணைத்தன. இது இங்ஙனமிருக்கப் பீதுமனின் நல்ல காலமே உருவெடுத்தாற்போலக் கவூர் என்னும் அரசறிஞன் தோன்றினான். இத்தாலிய மீட்சிப் போரின் இரண்டாம் கட்டமாகவே இவனுடைய வாழ்க்கைத் தொண்டு அமைகின்றது. 1852 ஆம் ஆண்டிலே கவூர் அமைச்சுப் பொறுப்பை ஏற்றான். எட்டு ஆண்டு காலமாக அரசாங்கத்தில் தலைமைவகித்த கவூர் அக்காலத்திலே சில மாதங்கள் மட்டுமே அதிலிருந்து விலகியிருந்தான். உண்ணாட்டு அலுவல்களிலே இவன் சாதித்தவை எமது கவனத்தைப் பெறக் கூடியவை. தாராளபோக்குக் கொள்கை உள்ளவர்கள் இத்தாலிய அரசியலிலே முக்கியத்துவம் பெற்றிருந்தனர். இவர்கள் கவூரைத் தம் தலைவனாக ஏற்றுக் கொண்டனர். அதுமட்டுமன்றி, ஒழுங்கான முறையில் நன்கு உருவாக வேண்டிய அரசுக்கும் இவன் அடி கோலினான். திறமையான பிறநாட்டுப் பூட்கைக்கு வேண்டிய முன்னோடி அலுவல் இது. கவூர் நிதிநிலையைச் சீர்திருத்தினான். இருப்புப்பாதை முறைமையை விருத்தி செய்தான். வர்த்தக இறை முறைகளைக் குறைத்தான். முற்போக்குள்ள சமுதாய விவசாயப் பூட்கையைக் கையாண்டான். படைப்பாதுகாப்பைச் சீர்திருத்தினான். பிறநாட்டுப் பூட்கை உறுதியாக இருக்கவேண்டுமானால் அதனுடைய அசையாத அத்திவாரமாக உண்ணாட்டில் உள்ள மக்கள் செல்வம் பெற்றுத் திருத்தியுடன் இருக்கவேண்டும் என்னும் உண்மையைக் கவூர் உணர்ந்திருந்தான். இவனுடைய பொருளாதார பாலனம் மதியூகமானது. அதன் பலன் இவனுக்குக் கைமேற் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோமகன் கவூர் (1810–1861)

(புளோரன்சில் உபிசி சித்திரக் காட்சிச்சாலையில் உள்ள கான்வாலியினுடைய சித்திரங்களிலிருந்து.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனுடைய பிறநாட்டு முயற்சிகள் எல்லாவற்றையும் நாட்டு மக்கள் உளப்பூர்வமாக ஆதரித்தனர். பொருளாதார பாலனத்தின் பயனாகக் கவூருக்குக் கிடைத்த கைம்மாறு இதுவே. 1853-56.

கவூர் பதவி ஏற்றது முதல் ஒசுற்றியாவை எதிர்த்துப் போராட வேண்டிய தீரப் பணியை-சாள்சு அல்பேட்டுக்கு ஏற்பட்ட அபாயத்தினால் இப்பணி தற்காலிகமாகத் தடைப்பட்டது-மேற் கொண்டான். இப்பணியைக் கவூர் திறம்பட நிறைவேற்றியுள்ளான் என்பது நவீன இத்தாலியின் வரலாற்றிலே அழியாத இடம் பெற்றுள்ளது. இவனுடைய தொண்டிலே அழியாத சான்றாக இருப்பது இத்தாலியில் இன்னும் நிலவும் அரசியல் ஐக்கியமே. உண்மையான அரசறிஞன் ஒருவனுக்கு இருக்கவேண்டிய தீர்க்கதரிசனமும் எதனையும் மட்டிட்டுச் சீர் தூக்கி ஆராயும் திறமையும் கவூருக்கிருந்தன. இவை இருந்த படியால் ஒசுற்றியாவை ஐரோப்பிய வல்லரசுகளிடம் இருந்து தனிப்படுத்தலே இத்தாலி வெற்றி பெறுதற்குரிய முக்கியமான நிபந்தனை என்னும் உண்மையைக் கவூர் கிரகித்துள்ளான். ஒசுற்றியப் பேரரசுடன் தனித்து ஒருகைப்பாடாகப் போராடக் கூடிய திறமை பீதுமனுக்கில்லை. 1815 ஆம் ஆண்டுப் பொருத்தனைகள் மீறப்படுவதை ஐரோப்பிய வல்லரசுகள் சந்தேகத்தோடேயே நோக்கும். கட்டாயமாக அவை அதுபற்றி ஐயுறும். நட்பாளரின் துணையின்றி இத்தாலியின் எதிர்ப்பு வெற்றி பெறுதல் என்பது ஒருபோதுமியலாது. பொருத்தனையைப் பாதுகாக்க, ஐரோப்பிய வல்லரசுகள் யாவும் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி இத்தாலியை நெருக்கும் என்பதே காரணம். எனவே ஐரோப்பிய மந்திராலோசனைச் சபைகளிலே பீதுமனின் வழக்கை அனுதாபத்துடன் கேட்கக் கூடிய நிலையைப் பெறுவது இன்றியமையாததாயிற்று. அதன் பின்னர் படைப்பலம் மிகுந்த வல்லரசைத் தன்பக்கமாக்கிக் கொண்டு, போர் செய்யத் தூண்டப்பட்ட ஒசுற்றியா வேண்டுமென்றே தாக்கிய குற்றமுடையதாகத் தோன்றும்பொழுது பீதுமன் போருக்குத் தயாராகவேண்டும். சூழியல் என்னும் வலையை ஒசுற்றியாவைச் சுற்றி விரித்து அதனால் தன் திட்டத்தில் உள்ள நோக்கங்கள் எல்லாவற்றையும் அடைந்த திறமை கவூரின் சூழியலின் தலைசிறந்த ஆக்கமாகும். 1853 ஆம் ஆண்டிலே உலொம்பாடியிலும், வெனீசியாவிலும் இருந்து அரசியல் அகதிகளாக வந்தவர்களுடைய உடைமைகளை ஒசுற்றிய அரசாங்கம் கைப்பற்றியது. இவ்வகதிகளின் சார்பிலே கவூர் தலையிட்டமையே இவனுடைய திட்டத்தின் முதலாவது கட்டமாகும். இங்ஙனம் தலையிட்டபோதும் உடனடி

கவூருடைய நோக்கங்களும் அவன் கையாண்ட முறைகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1858 யான நோக்கத்தை இவன் அடையவில்லை. ஆனால் இங்ஙனம் தலையிட்டதை இங்கிலாந்தும் பிரான்சும் அங்கீகரித்தன. பீதுமன் அடக்கியாளப்படும் இத்தாலியர்களுடைய வழக்கை எடுத்துப்பேசவந்துள்ளது என்பது தெளிவாயிற்று. 1855 ஆம் ஆண்டிலே கிரைமியப் போரிலே பங்குபற்றக் கவூர் தீர்மானஞ் செய்தான். இத்தீர்மானம் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த முடிவின் பயனாகச் சாடீனிய மன்னர் குல மேன்மை, வளர்ந்தது. சாடீனிய மன்னர் நட்புறவாளருடைய நன் மதிப்பையும் பெற்றனர். அதே நேரத்திலே ஒசுற்றியாவைக் கவூர் தனிப்படுத்தும் செயல் நிறைவேறியது. ஒசுற்றியா நன்றி மறந்த படியால் இரசியாவின் நட்பையும் இழந்தது[1]. மேற்கத்திய வல்லரசுகளும் ஒசுற்றியாவின் நிலையற்ற கொள்கையைக் கண்டு மனம் கசந்து பிரிந்தன. 1856 ஆம் ஆண்டிலே நடந்த பாரிசுப் பேரவையிலே, இத்தாலியில் ஒசுற்றியா நடத்துகின்ற அடக்குமுறை ஆட்சியைக் கவூர் ஒறுத்துரைத்தான். இங்ஙனம் இவன் அம்பலப்படுத்திய கொடுமைகளை உணர்ந்த ஒசுற்றியா வெட்கித் தலைகுனிந்து தன் கொடுமைகளைக் குறைக்கத் தொடங்கியது. ஆனால் இணக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய காலம் தவறிவிட்டது. புகழ்பெற்ற தாயகப்பற்றுடைய தானியல் மனின் என்பான், "இத்தாலியிலே இருந்துகொண்டு ஒசுற்றியா தன் போக்கைச் சீர்திருத்தும் நிலை எங்களுக்கு வேண்டாம். ஒசுற்றியா வெளியேறுவதையே நாங்கள் விரும்புகிறோம்", எனக் குறிப்பிட்டான். இங்ஙனம் அவன் வெளியிட்டது இத்தாலியப் பொதுமக்களுடைய கருத்தேயாகும்.

மூன்றும் நெப்போலியனும் இத்தாலியும்.

இங்கிலாந்துப் பொதுமக்கள் நாட்டினவாதிகளிடம் அதிக அனுதாபங் கொண்டனர். ஆனால் ஆங்கில அரசறிஞர்கள் 1815 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட பொருத்தனைகளைக் காப்பாற்ற வேண்டும் எனும் கருத்துக் கொண்டிருந்தனர். எனவே இத்தாலிய விடுதலை இயக்கத்திற்கு இங்கிலாந்து பொருள் உதவி கொடுக்கும் என எதிர்பார்க்க முடியாது. எனவே கவூர் பிரான்சிடமிருந்து உதவியை எதிர்பார்த்தான். பேரரசனை மூன்றும் நெப்போலியன் தனக்கு உதவியாக இருப்பதைக் கவூர் கண்டான். அவனுடைய ஊக்கமும் படை உதவியும் கவூரின் திட்டங்கள் நிறைவேறுதற்கு இன்றியமையாதவையாகும். இத்தாலிய இயக்கத்திலே தீவிரமாகப் பங்கு பற்றும் படி பல காரணங்கள் நெப்போலியனைத் தூண்டின. இவன் ஒரு இத்தாலிய குலத்தைச் சேர்ந்தவன். தன்னுடைய இளமைக் காலத்திலே இத்தாலிய கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்து

---

[1]. பக்கம் 198.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் போர் செய்திருக்கிறான். இங்ஙனம் இத்தாலிய இயக்கத் 1858.
திலே இவனுடைய தனிப்பட்ட அனுதாபம் கலந்திருந்தது. இத்தாலிய விடுதலையிலே இவன் கொண்ட ஆர்வம் பாசாங் கானதல்ல. பேரரசு பற்றி இவன் கொண்டிருந்த அவாவும் இவற்றுடன் கலந்திருந்தது. இவன் நெப்போலியனுடைய காலத்தி லிருந்த மரபுகளுக்கு உரிமையாளனுவான். முதலாவது நெப்போலியனைப் போலத் தனக்கும், ஐரோப்பாவிலே அடக்கி ஆளப்படுபவரை மீட்கும் வீரப் பொறுப்புக் கிடைத்துள்ளது என இவன் கருதி அப்பொறுப்பைக் கையேற்றான். ஐரோப்பா விலே பொதுக் குழப்பம் ஒன்றை ஏற்படுத்தி அதைத் தன் சொந்த நன்மைக்காகப் பயன்படுத்தும் தாழ்ந்த எண்ணமும் இவனுக்குண்டு. இதனைவிட 1815 ஆம் ஆண்டிலே செய்யப் பெற்ற உடன்படிக்கையை அவமதிக்க வேண்டிய காரணமும் இவ னுக்குண்டு. 1855 ஆம் ஆண்டிலேயே தன்னுடைய நோக்கத் துக்கு அறிகுறியாக, புகழ்பெற்ற கேள்வியைக் கவூரிடம் கேட் டுள்ளான். அதாவது "இத்தாலிக்கு என்ன செய்யலாம்?" என்பதாகும். மூன்று ஆண்டுகளின் பின்னர் இத்தாலிய நிலைமை புளொம்பியரிலே மாநாடு ஒன்று கூடுவதற்கு ஏற்ற தாயிருந்தது. இம்மாநாட்டில் நெப்போலியன் இரகசியமாகக் கவூரைச் சந்தித்துச் சவோயைக் கைவிடுவதற்குக் கைம்மாறுகப் பிரான்சு உதவிபுரியுமென வாக்குறுதி அளித்தான். இந்த நேரத்திலே பீதுமன் அரசை வட பகுதி இத்தாலிய அரசாகப் பெருப்பிக்கும் நோக்கத்தைத் தவிரக் கவூருக்கு வேறு எதும் இருந்திருக்கவில்லைப்போலும். இங்ஙனம் பெருப்பிப்பதற்கு ஒசுற் றியாவின் ஆட்சியிலே உள்ள மாகாணங்களைப் பறித்துப் பீது மன் அரசுடன் இணைத்தல் வேண்டும். ஐக்கிய இத்தாலியை உருவாக்குவதைப் பற்றி இவன் இன்னும் யோசிக்கவில்லை; உரோமிலே எவ்வித மாற்றமுமின்றிப் போப்பாண்டவர் இருக்க வேண்டியிருந்தமையே இதற்குக் காரணமாகும். அன்றியும் பூபோன் குலத்தினரும் நேப்பிளைத் தமதாகவே வைத்திருக்க வேண்டியவராயினர். இரகசிய உடன்படிக்கை புளொம்பியர் எனுமிடத்தில் நடந்த ஆறு மாத காலத்தின் பின்னர் இவ்விரக சியம் உலகம் முழுவதிற்கும் பளிங்கு போலத் தெளிவாகத் தெரியவந்தது. ஒசுற்றியத் தூதமைச்சருடன் பேசும்போது பேரர சன் நெப்போலியனே இதனை அம்பலமாக்கினான். "முன்னர் இருந்தது போல எங்கள் உறவு திருத்தியாயில்லை என்பதையிட்டு நான் உள்ளம் கவல்கின்றேன்", என நெப்போலியன் ஒசுற்றி யத் தூதமைச்சருக்குக் குறிப்பிட்டான். இந்தக் கூற்று ஆழ மாகப் பதிந்தது. இதனை இன்னும் ஆழமாக்கும் முறையிலே சில நாட்களுக்குப் பின்னர் விற்றர் இம்மானுவேலின் பாராளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1859. மன்றத் திறப்பு விழாப்பேச்சு அமைந்தது. என்றும் நினைவிலிருக்கக் கூடியதான இம்மானுவேலின் இப்பேச்சு பின்வருமாறு: "பொருத்தனைகளுக்கு நாங்கள் எல்லாவிதமான மதிப்பும் அளிக்கின்றோம். இருந்தபோதிலும் இத்தாலியின் பல பாகங்களிலும் இருந்து மக்கள் நொந்து எழுப்பும் அழுகைக் குரலைக் கேட்டு நாங்கள் உணர்ச்சியற்று இருக்கவில்லை". எவரும் இந்த எச்சரிக்கையின் நோக்கத்தை உணர்ந்து கொள்வது கடினமன்று. பீதுமனில் தொண்டர்கள் ஆயிரம் ஆயிரமாக வந்து குவிந்தனர். இத்தாலியத் தாயகப்பற்றுடையோரின் நம்பிக்கை மலையென வளர்ந்தது. இத்தாலியை ஒன்றுபடுத்தும் பணியிலே பீதுமனின் கொடி மீண்டும் பறக்கும் என்று இத் தாயகப்பற்றுடையோர் நம்பியிருந்தனர்.

ஒசுற்றியாவுடன் போர். நிகழ்ச்சிகள் இப்பொழுது விரைந்து நிகழ்ந்தன. இதனால் நெருக்கடியை விரைவுபடுத்துவதே கவூரினுடைய பூட்கையாகும். சூழியல் வலையின் கயிறுகள் கவூரினுடைய கையிலே இருந்தன. ஆனால் எந்த நேரத்திலும் இக்கயிறுகள் தெறித்துப் போகக் கூடும். நெப்போலியனின், விரைவில் மாறும் குணத்தையும் மணிக்கு மணி மாறுகின்ற உளப் போக்கையும் பெரும் அரசறிஞனை கவூர் நன்கு மட்டிட்டு வைத்திருந்தான். பிரான்சில் உள்ள உண்ணாட்டுத் தொல்லைகள் நெப்போலியனுக்குச் சொந்தமான கணப்பித்தம் கணவாதம் என்னும் இயல்பை மேலும் திரப்படுத்தின என்பதையும் கவூர் அறிவான். பிரான்சிலே நெப்போலியனை மதகுருமார் எதிர்த்தனர். மேலும், பிரான்சு, இத்தாலிமேற் படையெடுத்துச் சென்றால் ஐரோப்பியப் போர்த் தீ மூளும் என்பதை எல்லா அரச தந்திர அமைச்சுக்களும் நன்கு அறிந்திருந்தன. எனவே ஐரோப்பிய வல்லரசுகளின் பேரவை ஒன்று கூட்டப்படவேண்டும். அதுவே சமாதானத்தைப் பாதுகாப்பதற்குச் சிறந்த வழி எனவும் யோசனை தெரிவிக்கப்பட்டது. ஆனால் பேரவை கூடுவதைக் கவூர் விரும்பவில்லை. ஏனெனில் இந்தப் பேரவையிலே தன்னுடைய நம்பிக்கை யனைத்தும் தகர்ந்துவிடும் என்பதைக் கவூர் அறிவான். சமன் செய்யும் வழிவகைகளைக் கண்டுபிடிப்பதிலேயே கவனஞ் செலுத்துவதுமல்லாமல், நாட்டின வாதத்தின் கோரிக்கைகளை உளப்பூர்வமாக மாநாடுகள் நிறைவேற்ற மாட்டா என்பதைக் கடந்த அரை நூற்றாண்டாக எற்பட்ட அனுபவங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. ஒசுற்றியாவின் சூழியல் கவூரினுடைய மதியூகம் வாய்ந்த சூழியலிலும் பார்க்கக் குறைந்த தரத்தது. ஆதலால் கவூர் விரித்த வலையிலே ஒசுற்றியா சிக்கிக் கொண்டதும் நிலை நெருக்கடியாயிற்று. ஐரோப்பிய வல்லரசுகள் தெரிவிக்கின்ற நிராகரிப்பிலே பீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுக்கும் பிரான்சிற்கும் எற்பட்ட நட்புறவு சுக்கலாகிவிடும் 1859.
எனப் பொறுமையுடன் காத்திருப்பதே ஒசுற்றியாவின் பூட்கை என்பது வெளிப்படை. சூழ்நிலைகள் தனக்குமாறுகச் செல் வதைக் கண்டு உள்ளம் நலிந்த பீதுமன் போர்க்கோலத்தைக் களைந்து தன் வாளை உறையிலே போடுமளவிற்கு வந்துவிட்டது. அப்பொழுது ஒசுற்றியாவிலே யுத்த வெறியர்களின் கை ஓங் கவே அவர்கள் இத்தாலிக்கு யுத்த இறுதிக் கூற்று விடுத்தனர். மகிழ்ச்சி தலைக்கேறிய கவூர், "செய்த முடிவை மாற்ற முடியாது. நாங்கள் செய்தது வரலாற்றில் இடம் பெறும்", எனக் கூறினான். மலைபோலத் தொல்லைகள் எதிர்நோக்கி நின்றபோதும், தான் நீண்ட காலமாக எந்த இலக்குக்காக உழைத்து வந்தானை அந்த இலக்கைக் கவூர் அடைந்து விட்டான். ஐரோப்பிய வல்லரசுகள், மாநாடு ஒன்றைக் கூட்டு வித்துச் சமாதானத்துக்காகப் பாடுபடும்போது ஒசுற்றியா போர்ப் பிரகடனஞ் செய்யும் மதியீனமான செயலில் ஈடுபட்டது. எனவே ஒசுற்றியா விடுத்த அறைகூவலை எற்பதற்குப் பீதுமனுக்குப் போதிய தலைக்கீடு கிடைத்தது.

நெப்போலியன் கடமையில் தவறுதல்.

பீதுமன் மீது ஒசுற்றியா படையெடுத்ததும் (ஏப்பிரில் 1854) போர் தொடங்கியது. போர்க்களத்தில் முன்னணியிலே தத்தம் படைகளுடன் விற்றர் இம்மானுவேலும் நெப்போலி யனும் நின்று போர் செய்தனர். பீதுமனுக்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. சொல்பெறீனோ என்னும் இடத்தில் ஈட்டிய வெற்றி அதன் உச்சநிலையாயிற்று. ஆனால் இத்தாலியின் கதியை மீண்டும் கெடுகாலம் தொடர்ந்து சின்னபின்னப் படுத் தியது. வெற்றி என்னும் வெண்ணெய் திரண்டு கைக்குக் கிட்டும் போது தாழி உடைந்த கதையாகிற்று. தாகம் தீரப் பருக முன்னர் கலம் உடைந்துவிட்டது. வெற்றி என்னும் ஏணியின் உச்சப் படியிலே நிற்கும்போது ஒசுற்றியாவை அழிக் கக் கூடிய உறுதி எற்பட்டிருந்ததுபோலத் தெரிந்தபோதும் நெப்போலியன் பின்வாங்கினான். பீதுமனுக்கு உலொம்பாடி யைக் கொடுக்கும் நிபந்தனையுடன் வில்லாபிராங்காவில் (யூன் 1859) நெப்போலியன் அமைதிப்பொருத்தனை செய்து கொண் டான். இவனுடைய இச் செயல் வன்மையாகக் கண்டிக்கப் பட்டது. தான் பெரும்பாடுபட்டு நன்கு வகுத்த திட்டங்கள் நொருங்குவதைக் கண்ட கவூர் பெரும் துன்பத்தில் ஆழ்ந்து செயலற்றிருந்தான். இப்பொருத்தனை முற்றிலும் திடுக்கிடும் விந்தைச் செயல் என்பதை இதனிலிருந்து அறியலாம். ஆனால், உண்மையில், கணத்திற்குக் கணம் மாறும் இயல்புடை மூன் றும் நெப்போலியனிடமிருந்து இதற்குமேல் ஒன்றுமே எதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1859 பார்த்திருக்க முடியாது. இவனுடைய உணர்ச்சி வேகம், அடிக்கின்ற காற்றிற்குப் பறக்கின்ற தூரும்பு போல மாறிக்கொண்டிருக்கும். எனினும் நெப்போலியனுடைய நிலைமையில் ஏற்பட்ட தொல்லைகள் அவனுக்கு ஆபத்தையுண்டாக்கின என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நெப்போலியன் அடைந்த வெற்றிகளையிட்டு, பிரசியா குறிப்பிடக் கூடிய அளவிற்கு அமைதியற்றிருந்தது. ஏனெனில் இந்த வெற்றி வெறி தலைக்கேறிய பேரரசன் இரைன் பிரதேசத்தை நோக்கிப் பிரான்சின் எல்லையைக் கூட்டிப் பிரான்சிய மக்கள் இடைவிடாது கொண்டிருந்த வேணவாவைப் பூர்த்தி செய்வான் என்ற பயம் பிரசியாவிற்கு உண்டு. இதனைத் தலைக்கீடாகக் கொண்டு பிரசியா தற்காப்பு என்ற சாட்டிலே போர்க்கோலம் கொண்டது. மேலும் மின்வேகத்திலே ஒசுற்றிய எதிர்ப்புக் குறைவதைக் கண்டு நெப்போலியன் பெரிதும் கவலை கொண்டான். ஏனெனில் நிலை தன்னுடைய பிடியிலிருந்து வழுவிக் கொண்டு வருவதாக அவன் கருதினான். தன்னுடைய குறிப்பிட்ட நன்மையை இலக்காகக் கொள்ளாமல் நிகழ்ச்சிகள் தம் போக்கிலே உருவாகிவிடும் என்பது நெப்போலியனின் பயம். இங்ஙனம் இவன் நம்பிக்கையிழந்தமைக்கு நியாயமான காரணங்கள் இருந்தன. வடக்கில் சாடினிய முடியாட்சியின் உரிமை அவாவைத் திருத்தி செய்யும் முறையிலும், தெற்கிலும் மத்தியிலும் இத்தாலியின் பழைய நிலையைப் பாதுகாக்கும் முறையிலும் இத்தாலியச் சிக்கலைத் தீர்க்க நெப்போலியன் தீர்மானஞ் செய்தான். இத்தாலியத் தீபகற்பத்தின் அரசியல் ஐக்கியம் பற்றிய எண்ணம் அவனுக்கு ஒருபோது மிருக்கவில்லை. ஏனெனில் அத்தகைய ஐக்கியத்தினாலே தன்னுடைய படைப்பலத்துக்கே ஆபத்து ஏற்படும் என்பது அவனுக்குத் தெரியும். மேலும் இத்தாலி ஒன்றுபடுவதால் போப்பாட்சிப் பகுதி அழியக் கூடிய ஆபத்தும் ஏற்படும். இதனையிட்டுப் பிரான்சில் உள்ள மத குருமாரும் கத்தோலிக்கரும் சீறிச் சினந்து நெப்போலியனுடன் மோதும் ஆபத்தும் ஏற்படும். எனினும், தசுக்கனி, போப்பினுடைய இராச்சியம் ஆகிய இடங்களில் ஏற்பட்ட எழுச்சிகள் காட்டியபடி இத்தாலியின் ஐக்கியத்தை நோக்கியே யாவும் தடையின்றி நடந்துகொண்டிருந்தன.

குடியொப்பம். கவூர் தன் பதவியிலிருந்து விலகிக்கொண்டான். அவனுடைய பணிக்கு இடமில்லை. எல்லாம் இணக்கப்பட்டுவிடுமெனத் தோன்றியது. ஆனால் தங்களுடைய வாழ்விலே ஏற்பட்டுள்ள நெருக்கடியான காலத்தில் தங்கள் கதியைத் தாங்களே நிர்ணயிக்கவேண்டும் என்னும் பொறுப்பை இத்தாலிய மக்கள் தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைமேற்கொண்டனர். ஒரு நாடு விடுதலையடையத் தன் சொந்த 1860.
முயற்சி வேண்டும் என்னும் உண்மையையும் இத்தாலிய மக்கள் உணர்ந்தனர். பிரான்சிய நாடு அளித்த உதவி மதிப்பிட முடியாதது. ஆனால் மற்றவர் தொடக்கிய பணியை இத்தாலிய மக்களே நிறைவேற்றலாம். ஒசுற்றியா தோல்வியுற்ற காலத்திலே பாமா, தசுக்கனி, மொடினு, உரோமானு ஆகிய இடங்களில் உள்ள ஆட்சியாளர் ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். இவர்களே மீண்டும் ஆட்சிப் பீடமேற்ற வேண்டும் என்னும் முடிவை மத்திய இத்தாலி துணிவுடன் எதிர்த்தது. இங்ஙனம் எங்கும் இருள் கவிந்து இருக்கின்ற வேளையிலே தலைவணங்காது நின்ற மத்திய இத்தாலிக்குப் புதியதோர் வழி தோன்றியது. போர்க் காலத்திலே தான் கையாண்ட இரண்டகப் பூட்கை தன் உளத்தை உறுத்தியதினால் இத்தாலியை ஒசுற்றியா மிரட்டுவதற்கு நெப்போலியன் விட்டுக் கொடுக்கவில்லைப் போலும். குடியொப்பம் ஒன்று நடத்தவேண்டுமென இங்கிலாந்து தெரிவித்த பிரேரணையை நெப்போலியன் ஏற்றுக் கொண்டான். சாடீனிய முடியாட்சியுடன் இப்பிரதேசம் இணைய வேண்டும் என்பதை ஆதரித்துப் பெரும்பான்மையினர் வாக்களித்தனர். இந்த மத்திய பிரதேசத்தை இணைப்பதற்குக் கைம்மாறுகச் சவோயையும் நீசையும் தனக்குக் கொடுக்க வேண்டும் என நெப்போலியன் கேட்டான். இத்தாலிய மத்திய அரசுகளைப் பீதுமனுடன் இணைப்பதற்கு நெப்போலியன் மிகவும் தயங்கினான். அதிக சிரமப்பட்டே அதற்கு அவனை உடன்படும்படி செய்யக்கூடியதாயிற்று. எனெனில் அவன் தான் கட்டவிழ்த்து விட்ட சத்திகளை இப்போது அடக்க முடியாது என்பதை உணர்ந்துள்ளான். சவோய், நீசு ஆகிய இத்தாலிய ஆள்புலங்களைப் பிரான்சினதாக்கி இணைப்பதினால் பிரான்சியப் பொது மக்களின் கருத்தை இணக்கஞ் செய்யலாம் என்பதே நெப்போலியனுடைய நோக்கம். ஆனால் இச்செயல் இத்தாலியின் பூரண விரோதத்தைத் தேடிக்கொடுத்தது. இத்தாலிய மீட்சிப் போராட்டத்தில் நெப்போலியன் கையாண்ட பூட்கை திருகல் முறுகலாக இருந்தபோதும் அவன் செய்த தொண்டு மிகப் பெரியது. அத்தொண்டைச் சவோயையும் நீசையும் பிரான்சு பெற்ற செயல் முற்றுக மறைத்து விட்டது.

இத்தாலிய மக்கள் அனைவரின் கண்களும் இப்பொழுது கரிபோல்டி.
சிசிலியின் மேற் சென்றன. வைத்த கண் வாங்காது சிசிலியை நோக்கியிருந்த மக்களுக்கு அதிசயமான பரந்த காட்சி ஒன்று அங்கு உருவாவது புலனாகிற்று. கரிபோல்டியின் வரலாறே சில அம்சங்களில் குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1860. எனெனில் அதுவே இத்தாலிய இயக்கத்தில் வியக்கத்தக்க தாதலால் என்க. சூழியல் என்னும் உவர் நீரைப் பருகி இத்தாலி சலிப்புற்றிருந்த பின்னர், இத்தாலிய நாட்டிலே வீர தீரம் நிறைந்த பல சாதனைகள் உருவாயின. இச்சாதனைகள் யாவும் நிதானமான வரலாற்று உண்மைகளை உணர்த்துவதிலும் பார்க்க மத்திய காலத்து வீரம் வாய்ந்த புதுமைக் கதைகளையே உணர்த்தியிருந்தன. நைந்து தேய்ந்துபோன பூபோன் முடியாட்சி ஈடாடிக்கொண்டு வீழ்ச்சியுறும் தறுவாயில் நீண்டகாலம் இருந்தது. சிசிலியப் புரட்சி அதனுடைய இறுதி வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. மசினியைப் பின்பற்றுபவர்கள் இந்தப் புரட்சி இயக்கத்துக்கு அடிகோலினர்கள். சவோய்க் குலத்தினிடம் விசுவாசமுடைய கரிபோல்டி இவ்வியக்கத்தின் தலைவனுனதும் அது புதியதோர் வழியிலே சென்றது. "ஆயிரம் பேர் கொண்ட தொண்டர் படை" யைத் தன் தலைமையிலே இட்டுக் கொண்டு 1860 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் நாள் கரிபோல்டி, மாசாலா என்னும் இடத்திலே வந்திறங்கினன். அன்று தொடக்கம் அவனுடைய படை வெற்றி மேல் வெற்றி கண்டது. ஒரு மாத காலத்துள் கரிபோல்டியின் "செஞ்சட்டை"த் தொண்டர் நியோபொலிற்றன் படைகளை உருக்குலைந்து பின் வாங்கச் செய்தனர். இத்தீவிலே இருந்த நியோபொலிற்றன் படையின் தொகை 20,000 இற்கு மேற்பட்டது என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் "செஞ்சட்டைத் தொண்டர்கள்" மெசினுத் தொடுகடலைக் கடந்து செத்தெம்பர் 7 ஆம் நாள் நேப்பிளிலே தங்கள் தலைமை அலுவலகத்தை நிறுவினர். இவர்களுடைய வருகையைப் பற்றிக் கேள்விப்பட்ட பூபோன் மன்னன் நேப்பிளினின்றும் வெளியேறினன். இது இங்ஙனமிருக்க, கவூர் மீண்டும் அதிகாரம் பெற்றான். கரிபோல்டி இங்ஙனம் முன்னேறி வருவதைக் கண்டு கவூர் அச்சமடைந்தான். மசினியைப் பின்பற்றுகிற குடியரசுவாதிகளுடைய செல்வாக்குச் சாலனிய முடியாட்சிக்குச் சாதகமானதன்று என்பது கவூருக்குத் தெரியும். இந்தக் குடியரசுவாதிகளுடைய செல்வாக்குத் தென்னாட்டு மக்களிடம் மேலோங்குவதில் ஆபத்து உண்டென்பது கவூருக்கு விளங்கும். இந்த ஆபத்தை விடச் சருவதேச நெருக்கடி ஏற்படக் கூடும் என்னும் பேராபத்தும் இருந்தது. இத்தாலியின் தலைநகராக உரோமை ஆக்கும் பொருட்டு அங்கு செல்லவேண்டுமென்பது கரிபோல்டியின் எண்ணம். இங்ஙனம் இவன் உரோம்மீது படையெடுத்துச் சென்றால் சருவதேச நெருக்கடியைத் தடுக்க முடியாது. சூழியற் சிக்கல் பற்றிக் கரிபோல்டி கவலைப்படவில்லை. உரோமில் உள்ள பிரான்சியப் படையைத் தாக்கினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கியூசிபி கரிபோல்டி (1807–1882)

(இறெடிசிதேல் பிரபுவிடமுள்ள பதிப்புரிமையுடைய படத்திலிருந்து
அச்சின்சன் கம்பனியின் அனுமதியுடன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சு போர்ப் பிரகடனஞ் செய்யும் என்பதையும் கரி 1860.
போல்டி சற்றேனும் பொருட்படுத்தவில்லை. ஆனால் இத்தாலி
யின் பகைவர்கள் வாய்ப்புக் கிடைத்ததும் இத்தாலிமீது பாய்
வதற்குக் காத்திருக்கின்றனர் என்பது கவூருக்குத் தெரியும்.
எனவே ஐரோப்பிய போர்த் தீ மூள்வதையிட்டுக் கவலை
கொள்ளாமல் கவூரால் இருக்க முடியவில்லை. ஆபத்து
நிறைந்த நிலையை அவன் தன்னுடைய திறமையினால் சமா
ளித்தான். செயல்புரிவதில் கரிபோல்டியை முந்திக்கொள்வ
தற்காக, போப்பின் அரசிற்குக் கவூர் தன்னுடைய படையை
அனுப்பினான். தன்னுடைய இச்செயலுக்குத் தலைக்கீடு கண்டு
பிடிப்பதில் அவனுக்குக் கடினம் எதுவும் இருக்கவில்லை.
போப்பின் அரண்மனையிலிருந்து கிடைத்த அழைப்பின் பெய
ரால் அயலாந்து, பெல்சியம், பிரான்சு ஆகிய இடங்களில்
இருந்து ஆயுதம் தாங்கி உரோமைப் பாதுகாத்துக் கொள்ளத்
தொண்டர்கள் தாமாக முன்வந்து குவிந்தனர். எனெனில்
கரிபோல்டியின் படைகள் பிரளயம் போல வந்து குவிந்த
தும் போப்பின் உலக ஆட்சி அதிகாரத்திலே போனதுபோக
எஞ்சி இருந்த பிரதேசம் போய்விடக் கூடும் எனும் அச்ச
மிருந்தது. உரிமைத் தத்துவம் மீண்டும் கையாளப்படும் என்
பதை எதிர்வு கூறியமையுடன் சென் பீற்றரின் வழி வந்த
உரிமைகளை உரோமிலே காத்துக் கொள்ளவேண்டிய உடனடி
யான இலக்கைக் கொண்ட பெரும் போர் ஒன்றும் தொடுக்கப்
பட்டது. மன்னனின் ''வழி வழி வந்த உரிமையைப்'' பிறிதோர்
வகையிலே கூறுவதாயின் அது நாட்டிலிருந்து கடத்தப்பட்ட
பழைய ஆட்சியாளரை மீட்டல் என்பதாகும். இங்ஙனம் செய்
தல் இத்தாலியிலும், பிரான்சிலும் உள்ள அரசியலாட்சி
முறையை ஒருங்கு அழிக்கும். இந்த இயக்கத்திலே ஒசுற்றியா
ஈடுபடுமுன்னர், இதனை நிறுத்துவது கவூருக்கும் நெப்போலி
யனுக்கும் நன்மை பயக்கும். இதற்கு இணங்கவே, போப்பின்
அரசிலே உள்ள அந்நியப் படைகளைக் குலைக்கும்படி இத்தாலிய
அரசாங்கம் கேட்டுக் கொண்டது. அங்ஙனம் செய்யப் போப்பின்
அரசு மறுக்கவே, இத்தாலிய அரசாங்கம் போர்ப் பிரகடனஞ்
செய்தது. இரண்டு கிழமைக்குள் எல்லாம் முடிந்தது. காசில்
பிதாரோ என்னும் இடத்தில் போப்பின் படைகள் நிர்மூல
மாக்கப்பட்டன. திருச்சபை அரசுகள் போப்பின் கையிலிருந்து
விலகின. இந்த வெற்றி கவூருக்குத் தனிப்பட்ட முறையிலே
எற்பட்ட பெரும் வெற்றி. நெருக்கடியான நிலைமையிலிருந்து
கவூர் வெற்றியுடன் வெளியேறிவிட்டான். நேப்பிளிலே உள்ள
நிலையைச் சமாளிப்பதற்குத் தக்க அளவு. அவனுடைய பலம்
அதிகரித்தது. கவூர் கரிபோல்டியின் திட்டங்களுக்குத் தடையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1860-70. இருந்தான். இதனால் அரசறிஞனை கவூர் போர் வீரனை கரிபோல்டியின் வெறுப்பையும் ஐயத்தையும் நன்கு சம்பாதித்துக் கொண்டான் என்பதும் உண்மை. ஆனால் நியோபொலிற்றன் கோட்டையை அடிபணியச் செய்யக் கரிபோல்டிக்குத் தன் உதவி வேண்டும் என்பதும் கவூருக்கு நன்கு தெரியும். மேலும், அமைச்சனை கவூருக்கு இத்தாலியப் பாராளுமன்றம் ஆதரவளித்தது. எனவே நியோபொலிற்றன் எல்லையைத் தாண்டிச் செல்வதற்குரிய காலநேரம் விற்றர் இம்மானுவேலுக்கு வந்துவிட்டது. இம்மானுவேலும் கரிபோல்டியும் நேரிலே சந்தித்தபோது தன் அதிகாரம் எல்லாவற்றையும் கரிபோல்டி இத்தாலிய மன்னனின் கையிலே ஒப்படைத்தான். இங்ஙனம் அதிகாரத்தைக் கரிபோல்டி தானாகவே, துறந்ததுமல்லாமல் தன்மீது சுமத்தப்படவிருக்கும் பட்டங்களை ஏற்கவும் மறுத்துவிட்டான். இச்செயல் மாபெரும் இத்தாலிய வீரன் கரிபோல்டியின் வீர தீரச் சாதனைகளுக்குத் தகுந்த சிகரமாக அமைந்தது.

இத்தாலியருடைய இத்தாலி. இத்தாலியின் அரசியல் ஐக்கியம் இப்பொழுது பெரும்பாலும் கைகூடிவிட்டது. நேப்பிளிலும் சிசிலியிலும் குடியொப்பங்கள் நடந்தன. இத்தாலி ஒன்றுபடுவதை ஆதரித்தே இவ்விரு பகுதியிலும் பெருமளவு வாக்குகள் கிடைத்தன. இதற்குச் சிறிது காலத்திற்குப் பின்னர் திருச்சபைக்குரிய அரசுகளான உம்பிரியாவிலும் மாச்சுவிலும் எடுக்கப்பட்ட வாக்குகளும் இதே முடிவையே ஆதரித்தன. இங்ஙனம் உருவான இத்தாலிய மாளிகையின் மேற்றளம் உருவாதற்கு உரோமும் வெனிசுமே தேவைப்பட்டன. 1866 ஆம் ஆண்டிலே வெனிசு கைப்பற்றப்பட்டது. இந்த ஆண்டிலே ஒசுற்றிய-பிரசியப் போர் மூண்டதும் தன்னுடைய பரம்பரைப் பகைவனைத் தாக்க இத்தாலிக்கு வாய்ப்புக் கிடைத்தது. 1870 இல் உரோம் இத்தாலியின் கைக்கெட்டியது. இவ்வாண்டிலே பிரான்சிய-பிரசியன் போர் நடக்கின்ற போது உரோமைக் காத்துநின்ற பிரான்சியக் காவற் படைகள் பிரான்சிற்குத் திரும்ப வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்பட்டன. தன்னுடைய வாழ்க்கைப் பணி நிறைவேறுவதைக் காணக் கவூர் கொடுத்து வைக்கவில்லை. எனெனில் அவன் 1861 ஆம் ஆண்டு யூன் திங்களில் இறந்தான். ஆனால் இத்தாலியரின் இத்தாலியை உருவாக்கும் வரையும் வாழ்ந்து, இத்தாலிய மக்களின் அழியாத நன்றியையும் பெற்றுள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1815 இல் இத்தாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் VI

போல்கன் அரசுகள்

போல்கன் அரசுகளின் வளர்ச்சியே ஒற்றுமேமன் பேரரசின் வீழ்ச்சியின் வரலாறுகும். ஒற்றுமேமன் பேரரசு படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. 18 ஆம் 19 ஆம் நூற்றுண்டுகளிலே துருக்கி நிலை குலையாது தப்பியதற்குக் காரணமாகவிருந்தது துருக்கியின் பலமன்று. துருக்கியின் அயல் நாடுகளின் பலவீனமும் பொறுமையுமே அதற்குக் காரணமாகும். தானியூப்பின் கீழ்ப்பகுதியில் ஒசுற்றியாவிற்கும் இரசியாவிற்கும் ஏற்பட்ட போட்டியிலும், பெரிய பிரித்தானியாவின் மத்தியதரைக்கடற் பிரதேசப் பற்றுக்களிலும் துருக்கியின் ஈடேற்றம் தங்கியிருந்தது. "ஐரோப்பாவின் நோயாளி" விடாப்பிடியாக உயிரிலே ஒட்டிக் கொண்டிருந்தான். இந்த நோயாளி விரைந்து உருக்குலைந்து போவான் என முன்னறிவித்தல் கொடுத்தவர்கள் எல்லோரும் ஏமாற்றமடைந்தனர். அண்மையில் நிகழ்ந்த அபிவிருத்திகளின் படிகள இந்தக் கிழக்கு ஐரோப்பிய பிரச்சினையிற் புதிய காரணிகள் புகுந்து இப்பிரச்சினை முழுவதற்கும் புதிய சாயலைக் கொடுத்துள்ளன என்பது வெளிப்படையே. 19 ஆம் நூற்றுண்டில் போல்கன் சூழியல் என்னும் சிக்கைக் குலைப்பதற்கான எந்த முயற்சியும் குறித்த பிரச்சினை 20 ஆம் நூற்றுண்டிலிருந்த நிலையைக்கொண்டு மேற்கொள்ளப்படாமல் 19 ஆம் நூற்றுண்டிலிருந்த நிலையைக் கொண்டே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1815 ஒற்றுமேமன் பேரரசின் வீழ்ச்சி.

குறித்த கிழக்கு ஐரோப்பியப் பிரச்சினை எப்பொழுதும் சருவதேசப் பிரச்சினையாகவே இருந்து வந்திருக்கின்றது. கடந்த 12 நூற்றுண்டுகளாக எதோ ஓர் உருவத்திலே ஐரோப்பிய அரசியலுக்கு இது பின்னணியை ஆக்கிவந்துளது. எட்டாம் நூற்றுண்டிலேயே ஐரோப்பா முகமதியரின் படையெடுப்பினால் பெரும்பாலும் பாதிக்கப்பட்டது. அப்படையெடுப்பின் பின்னரும் அதனாலெழுந்த ஆபத்து எப்போதும் இருந்து வந்திருக்கின்றது. ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் குறித்த கிழக்கு ஐரோப்பியப் பிரச்சினை இன்னும் தீவிரமாயிருந்தது. ஆனால், அதன் இயல்பு அடிப்படையான மாற்றமடைந்தது. ஒற்றுமேமன் பேரரசின் படர்ச்சியைப் பற்றி ஐரோப்பிய அரசறிஞர் இப்போது அச்சமுறவில்லை. ஆனால், இப்பேரரசு உருக்குலைவதைக் கண்டே

கிழக்கு ஐரோப்பிய பிரச்சினையின் கட்டங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815. அவர்கள் பெரும் பீதி கொண்டனர். துருக்கியை இரசியா விடமிருந்து காப்பாற்றும் அரணாக அமைவதற்காக, ஒசுற்றியா வரலாற்றுப் பிரசித்திபெற்ற தன் பொறுப்பைக் கைவிட்டது. அப்பொறுப்பாவது ஐரோப்பாவைத் துருக்கியிடமிருந்து காத் தற்குரிய அரணுயிருத்தலாகும். பொசுப்பரசுக் கடற்கரைப் பிர தேசத்தை நோக்கித் தெற்குப் பக்கமாக இரசிய இராச்சி யம் விரிதல் மகா பீற்றரினூலே தொடக்கப்பெற்று இராணி கதரினின் காலத்திலே உச்சநிலையை அடைந்தது. இராச்சிய எல்லைப் பெருக்கத்திற்குரிய மரபுப்படியான பூட்கையைக் கண்ட ஒசுற்றியா, இரசியாவுடன் போட்டிபோடும் நாடாக மாறிற்று. போல்கன் பிரதேசத்திலே இரசியச் செல்வாக்கு மேலோங்கி நின்றமை சிலாவுப் பேரரசு ஒன்று பெருமளவில் உருவாவதற்கு அறிகுறியாயிற்று. இச் சிலாவுப் பேரரசு ஒசுற்றியாவின் ஆட்சி யில் உள்ள சிலாவு இனத்தினரையும் ஒருகாலம் சேர்த்துக் கொள்ளுமென்ற பயம் ஒசுற்றியாவுக்குண்டு. ஒசுற்றியப் பேர ரசின் பகுதியான தென்கிழக்கு ஐரோப்பாவில் சிலாவு இனத் தினர் வாழ்ந்தனர் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். எனவே, துருக்கிய ஆட்சிப்பகுதியை நிலைகுலையாமல் வைத்துக் கொள்வதும் ஒசுற்றியப் பேரரசை உருக்குலையாமல் வைத்திருப் பதும் ஒன்றுக்கொன்று பற்றுக்கோடான அலுவலென்க. இந்தியாவில் உள்ள தனது பேரரசையும் மத்தியதரைக்கடற் பிரதேசத்தில் தன் நிலையையும் பாதுகாத்து இரசியாவை இப்பிரதேசத்தை நோக்கி வரவிடாமல் தடைசெய்வதற்கு ஐரோப்பாவில் துருக்கிய அரசு இருத்தல் இன்றியமையாதது என்பதில் பெரிய பிரித்தானியாவிற்கும் நம்பிக்கை உண்டு. எலவே 1760 இல் இரண்டாம் யோசேப்பும் மகா கதரினும் ஒற்றேமன் ஆள்புலத்தைப் பிரிவினை செய்வதைத் தடைசெய்யப் பிரித்தானியா தலையிட்டது. துருக்கி அரசு உருக்குலையும் என்ற ஆபத்து மீண்டும் எற்பட்டபோது கிரைமியப் போரில் இரண்டாம் முறையாகப் பிரித்தானியா தலையிட்டது. இன்னும், துருக்கிக்கு வெளிப்புறத்திலிருந்து வந்த ஆபத்தைத் தடுத்துக் காப்பதில் ஐரோப்பிய வல்லரசுகள் வெற்றி கண்டனவெனினும் துருக்கியின் உண்ணாட்டு நலிவினால் ஒற்றேமன் பேரரசின் அத்திவாரம் மெல்லமெல்ல அறைபோவதை வல்லரசுகளாலே தடுக்க முடியவில்லை. உண்ணாட்டு நலிவுக்கு முக்கியமாக இரண்டுவகைக் காரணங்கள் இருந்தன. முதலாவது, பாசா எனப்படும் துருக்கிய மாகாண ஆள்பதிகளினது பேரவா. இவர்கள் பெயரளவில் மட்டுமே துருக்கியின்கீழ் இருந்தனர்.

துருக்கியின் உண்ணாட்டு நிலைமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையிலே கட்டுப்பாடற்றவராயும் சுதந்திரமானவர்களா 1815.
யுமிருந்தனர். துருக்கியை ஆண்ட சுலுத்தான் வமிசம் பலங் குன்றி இவ்வாள்பதிகள் மீது பெயரளவில் மாத்திரமே அதிகாரஞ் செலுத்திற்று. சுலுத்தான்களிடம் தீர்மானமும் திறமையும் பெரும்பாலும் குறைவாகவே காணப்பட்டன. இவர்களின் தகவின்மை ஒற்ரேமன் பேரரசின் சூலவை விரைவுப்படுத்திற்று. 19 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலே வலிமையுடைய இரு மாகாண ஆள்பதிகள் இருந்தனர். இருவருள் ஒருவன் யனினுவைச் சேர்ந்த ஆலியாவான். மற்றவன் மெமெற்று ஆலியாவான். இருவரும் முறையே தத்தம் பிரதேசங்களான அல்பேனியாவையும் எகித்தையும் பலம் வாய்ந்தன வாக்கினர். ஆனால், ஒற்ரேமன் பேரரசு படிப்படியாக ஒடுங்கியமைக்கு அடிப்படையாக இருந்த காரணம் சாதி மத வேற்றுமையாகும். வாள் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட ஒற்ரேமன் பேரரசை வாள்கொண்டு மட்டுமே காப்பாற்ற முடிந்தது. வெற்றியாளரையும் வெற்றிகொள்ளப்பட்டோரையும் பிணிப்பதற்குப் பொதுவான உணர்ச்சியோ பொதுவான மதமோ இருக்கவில்லை. அடிப்படுத்தப்பட்ட குடிகளின் நடுவிலே துருக்கியர் தனிப்படுத்தப்பட்டே இருந்தனர். இசுலாமிய மதத்தைப் பின்பற்றும் முசல்மான்களையும் கிரேக்க வைதிகத்தைப் பின்பற்றும் சிலாவு இனத்தினரையும் பிரித்து நின்றது மதவேற்றுமை. மதவேற்றுமை, இனப்பகை ஆகிய இரு நெருப்பையும் ஒருவருக்கொருவர்கொண்ட வெறுப்பானது எரியச்செய்தது. போல்கன் இனங்களிடை புரட்சி உணர்ச்சி பரவியதும் கிழக்கு ஐரோப்பியப் பிரச்சினை சூழ்வல்லோரிடமிருந்து அகன்றது. போல்கன் பிரதேசத்தில் வாழ்ந்து எல்லோராலும் இகழப்பெற்ற உழவோன் தன் ஆண்மையை உலகறியச் செய்ய முற்பட்டான்.

கிரேக்கரே முதன்முதல் விடுதலையடைந்தனர். கிரேக்கரிட கிரேக்கரின்
மிருந்த சுதந்திர தாகத்தை இரு சூழ்நிலைகள் வளர்த்தன. நிலைமை.
இதன் விளைவாக 1774 ஆம் ஆண்டிலேயே கிரேக்கர் சுதந்திர வாஞ்சை கொண்டு மொரியாவில் கலகம் விளைத்தனர். முதலாவதாக, கிரேக்க மக்களைத் தாம் நடத்தும் வகையிலே துருக்கியர் பெரும்பாலும் மிக நிதானமாகவே நடந்தனர். அவர்கள் "கிரேக்க நாட்டிலே கிராமச் சமுதாயங்கள் நிலைத்து நிற்குமாறு செய்தனர். அச்சமுதாயங்களிற் கிரேக்கருடைய இயல்புக்குப் பொருத்தமான அடிப்படை அம்சங்கள் இருந்தன". கிரேக்க நாடு ஒன்றுண்டு என்னும் பொது உணர்ச்சியை வளர்ப்பதற்குக் கிரேக்க வைதிகத் திருச்சபையிருந்தது. கிரேக்க கலகம் தொடங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815. முன்னரே செல்வம் கொழிக்கும் தீவுச்சமுதாயங்களாகிய ஈசியனிலும் எத்திரியாற்றிக்கிலும் நடைமுறையிலே சுதந்திரம் நிலவியது. சுதந்திரத்தை அனுபவித்த இவ்விரு பிரதேசங்களும் பெயரளவிலேயே ஒற்றோமன் பேரரசின் ஒருபகுதியாக அமைந்தன. ஆனால், இச் சுதந்திரத்துக்கு ஒரு நிபந்தனை இருந்தது. இப் பிரதேசங்கள் ஆண்டுக்கொருமுறை திறைப் பணத்தையும் பேரரசின் கடற்படைக்குக் கப்பலோட்டிகளையும் கொன்சுதாந்திநோப்பிளுக்கு அனுப்ப வேண்டு மென்னும் கடப்பாட்டிற்குட்பட்டிருந்தன. இப் பிரதேசத்தில் வணிகத்தை நடத்திய மரக்கலங்கள் ஆயுதந்தாங்கியிருந்தன. சுதந்திரப் போராட்டத்திலே இவ்வாயுதந் தாங்கிய மரக்கலங்கள் முக்கியமான பங்கு பெற்றன. மொரியாவிலும் கிரேக்க நாட்டின் பெருநிலப் பகுதியிலும் இத் தீவுகளில் சாதனையிலிருந்த தன்ணண்மை போன்ற தன்ணண்மை இருக்கவில்லை. கிரேக்க நாட்டின் பெருநிலப் பகுதியிலும் ஒற்றோமன் பாலனம் வலுவிழந்தபடியால் இங்கும் சுதந்திர உணர்ச்சி மிகுந்தது. நாளடைவில் இச் சுதந்திரம் தனக்குரிய வழியிலே சென்று தலைதூக்கி நின்றது. சுதந்திரத்தை விரும்பியவர்கள் ஒற்றோமன் பேரரசைக் கொள்ளையடிக்கத் தொடங்கினர்.[1] துருக்கியர் விட்டுக் கொடுக்கின்ற உளப்பான்மையுடன் நடந்தது ஐரோப்பிய கண்டத்திற்கு முன் மாதிரியாயிற்று என்பதையும் அவர்கள் சார்பிலே கூறல் வேண்டும். இப்படியான உளப்பான்மை ஐரோப்பாவின் ஏனைய பகுதியில் நிலவாதது துன்பத்தைத் தரும் பெரும் குறைபாடென்க. கிறித்துவர்கள் "பெருமளவிலே அனுபவித்த சுதந்திரம்" ஐரோப்பாவில் எந்த நாட்டிலும் எதிர்ப்பைக் காட்டி இணங்க மறுத்த எவ்வினத்தாருக்கு மிருக்கவில்லை. அயலாந்தில் உள்ள கத்தோலிக்கரும் ஒசுற்றியாவிலுள்ள புரட்டெசுத்தாந்தரும் துருக்கியரின் ஆட்சியில் உள்ள கிரேக்கரைக்கண்டு பொறுமை கொள்ளவும் கூடும். கிரேக்கருக்கு வழிபாட்டுச் சுதந்திரம் இருந்தது. தாம் விரும்பியபடி கல்வி கற்கவும் பணஞ் சம்பாதிக்கவும் சுதந்திரமிருந்தது. பிறப்பிலே மிகவும் தாழ்ந்தவனாக இருந்தபோதிலும் பிறப்பால் வரும் உயர்வு தாழ்வைப் பொருட்படுத்தாத ஒரு சமூக அமைப்பில் கிரேக்கனொருவன் அரசாங்கத்திலே உயர்ந்த பதவியை வகிக்கலாம். பகைமை உணர்ச்சியைத் தூண்டிவிட்டு முகமது வழிப்பட்டோரை எதிர்ப்பதிலும், ஒழுங்காக அமைக்கப் பெற்றுள்ள எதிர்ப்புத் திட்டம் ஒன்றை

---

1 W. A. Phillips, "Greece", in Camb. Mod. Hist. x. 170, 172. Phillips, "The War of Greek Independence" (1897), Chap. i.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுவதிலும் கிரேக்க திருச்சபை முக்கிய பங்கு வகித்தது. 1821.
எனவே, துருக்கியர் தாமாகக் காட்டிய சகிப்புத்தன்மையே, கிரேக்க நாட்டின இயக்கம் வளர்ச்சியுற்று ஒற்றுமன் பேரரசை அழியச் செய்தது. இரண்டாவதாக, கிரேக்க மொழியில் உள்ள உயர் தனிச் செம்மைசேர் இலக்கியத்தை மீண்டும் கற்றபடியால் கிரேக்கர் தங்களுக்கு உரிமையான பண்டைப் பெருமையை உணர்ந்தனர்; சிறந்த மரபுகள் பலவும் தம் உரிமை என்பதை உணர்ந்தனர். அங்கேரியிலே ஏற்பட்ட நிலையை முன்னரே கண்டுள்ளோம். கிரேக்க நாட்டின் நிலையும் அதனை ஒத்திருந்தது. கொரூசு என்பவருடைய பெயரிலே மொழியும் இலக்கியமும் புத்துயிர் பெற்று மறுமலர்ச்சியடைந்தன. நாட்டின எழுச்சிக்கு இம் மறுமலர்ச்சி முன்னோடியாயிற்று. இது ஒரு புறமாக, கிரேக்க புரட்சிக்கு ஆற்றல் அளித்தது கிரேக்க நாகரிகமன்று; வைதிக மதமாகும். உயர்தனிச் செம்மைசேர் பண்பாட்டைத் தழுவி அதனைத் தம் உளத்திலே பதிய வைத்துள்ளவர்களுடைய அனுதாபத்தை வளரச் செய்தது கிரேக்க நாகரிகத்தின் மரபாகும். கிரேக்க கலாத்திலே பங்குபற்றிய ஆங்கிலப் புலவன் ஒருவன் தன் நாட்டு மக்களின் உணர்ச்சியைப் பின்வரும் செய்யுள்களில் வெளியிட்டான்:

"தீவுகள் சூழ்தரத் திகழ்ந்திடுங் கிரீசால்!
பாவள மோங்கிய பலர்புகழ் சப்போ
காதலித் தின்பக் கவிசெய்த நாடால்!
போர்க்கலை தம்மொடு பொருவிலா வமைதிச்
சீர்க்கலை யாவுஞ் சிறந்தன வாங்கே!
திரைகடல் நாப்பண் தீல செழுந்திட
உரைபெறு பீபசாங் குதித்தனர் பண்டே!
மன்னிய கோடை இன்னு மவற்றைப்
பொன்னெளி தன்னுற் போர்க்கு மாயினும்
செங்கதி ரன்றி யங்கதன் சீரெலாம்
மங்கின வந்தோ! மாலுமென் நெஞ்சே...!

"வரைக ணிமிர்ந்து மரதனை நோக்கும்,
திரைபொரு கடலை மரதனும் நோக்கும்;
தனிமையி லாங்கே ஒருமணி நேரம்
இனையசிந் தனையில் ஆழ்ந்திருக் கையிலே
சுந்தரக் கிரீசினும் சுதந்திரம் பெற்றுக்
கலித்திடு மெனயான் கனவுகண் டேனுல்;
பார சிகர்தம் படுகள நிற்பேன்
ஓரேன் யானோர் அடிமையென் றினியே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1821–24. கிரேக்க கலகம்.

கிரேக்கருடைய முதலாவது எழுச்சி 1821 இல் வட பகுதியிலே தொடங்கியது. இதன் தலைவன் இளவரசன் அலச்சாந்தர் இப்சிலந்தியாவான். இவன் துருக்கிய சுலுத்தானுக்கும் யனிஞைவைச் சேர்ந்த ஆலிக்குமிடையே நடந்த போரினால் ஏற்பட்ட வாய்ப்பை மொழ்தேவியா, உவாலாக்கியா ஆகிய சிற்றரசுகளிலே எதிர்க்கிளர்ச்சி செய்வதற்குப் பயன்படுத்தினவனுவான். இவன் இரசிய உதவியை எதிர்பார்த்தான். ஆனால், பேரரசன் அலச்சாந்தர் இப்பொழுது மெற்றெணிக்கின் செல்வாக்கின் ஆதிக்கத்தின் கீழிருந்தான். உதவி அளிக்காதிருக்கும்படி அலச்சாந்தரை மெற்றெணிக்கு வேண்டினன். குறித்த கிளர்ச்சி விரைவில் அடக்கப்பட்டு இப்சிலந்தி ஒசுற்றியாவிற்குத் தப்பிச்சென்றான். இதற்கிடையில் மொரியாவில் மற்றொரு கலாம் இடம் பெற்றது. அங்கு அது விரைந்து சுதந்திரப் போராக மாறியது. அது வடபகுதி எதிர்க் கிளர்ச்சியினின்றும் வேறுபட்டது. ஏனெனில், அவ்வெதிர்க்கிளர்ச்சி மிகுந்த கட்டுக் கோப்புடைய எற்றீறியா பிலிக்கே என்னும் குழுவின் செயலாகும். பலவிடங்களிலும் பரவியிருந்த இந்த இரகசியச் சங்கம் தென் இத்தாலியிலிருந்த காபனரிக் கழகம்போலே தாயகப் பற்றின் சுடர்கள் அணையாவண்ணம் காத்து வந்தது. இவ்வியக்கம் நாடு முழுவதும் கிளர்ந்தெழுந்த நாட்டின இயக்கமுமாகும். ஆனால், இப்சிலந்தின் கலகத்திற்கு மொழ்தேவியாவிலும் உவாலாக்கியாவிலும் உள்ள உரூமேனிய உழவோர் அனுதாபம் காட்டவில்லை. இந்த உழவோர் தங்கள் கிரேக்க எசமானராற் பெரிதுங் கொடுமைப்படுத்தப்பட்டனர். கிரேக்க புரட்சி எற்றீறியா இயக்கப் பிரசாரத்தின் பயனாக ஏற்பட்டது. ஆனால், மொரியாவில் எழுந்த கலாம், எவ்விதமான கட்டுக்கோப்புமின்றி மக்கள் உளத்திலே உணர்ச்சி மிகுந்த படியால் உண்டாகிற்று. அங்குமிங்குமாகப் பல கலகங்கள் தொடர்ந்து மூண்டன. இவை இறுதியில் முசல்மான் மக்கட்கூட்டம் முழுவதையும் வதை செய்வதற்கும் காரணமாயின. அதன்பின்னர் எதிர்க்கிளர்ச்சி, வட பகுதியாகக் கொரிந்துப் பூசந்திக்கு அப்பால்வரை பரவியது. ஈற்றிலே இப்புரட்சித் தீ தெசாலி, மசிடோனியா ஆகிய இடங்கள் உட்பட கிரீசெங்கும் பரந்து பெருந் தீயாகிற்று. ஆயினும் மிலேச்சத்தனமான கொடுமைகளால் சுதந்திரப் போரைக் கிரேக்கர் கறைப்படுத்தினர் என்பது கவலைக்குரியதாகும். சுதந்திரப் போர் தொடக்கத்திலிருந்தே அழிவுப் போராக மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த போராட்டம் எட்டாண்டு காலமாக (1821-1829) நீடித்தது. 1831 வரை இறுதிமுடிவை அடையவில்லை. தொடக்கத்திலே இரண்டு களத்திலே ஒரே நேரத்திற் போர் செய்ய வேண்டிய இக்கட்டான நிலை துருக்கியருக்கு ஏற்பட்டது. பல மாதங்களாக யனினு என்னும் தீவுக் கோட்டையைத் தாக்குவதற்காகத் துருக்கியரின் திறமான படைகள் போரிட்டன. இங்கு மலைபோல எதிர்ப்பு வந்த போதும் ஆலி பலமாக எதிர்த்துப் போர் செய்தான். மேலும், கிரேக்கருடைய ஆதிக்கம் வலிமை மிக்க கடற் படையின் பயனுகக் கடலில் மிகவும் அதிகரித்தது. இது மிகவும் முக்கியமானது. "கிரேக்கரின் கடற்பலம் எதிரிகளின் பலத்திலும் பார்க்கக் கூடியது. இத்தகைய வலிமை மிக்கவர்கள் வெற்றியைக் கட்டாயம் அடைவர்" என வெலிந்தன் கூறினுன். ஆனல், 1824 ஆம் ஆண்டில் அதிட்டம் என்னும் சகடை உருண்டது. போரிலே துருக்கியரின் பலம் அதிகரிக்கத் தொடங்கிற்று. துருக்கியரின் உதவிக்கு பாசா எனும் பட்டமுடைய எகித்திய மாகாண ஆள்பதி மெமெற்று ஆலி அழைக்கப்பட்டான். கிரேக்க இளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக உதவியளிப்பதற்குக் கைம்மாறுக மொரியா, சிரியா, தமாக்கசு ஆகிய இடங்களை ஆளும் பாசா எனும் மாகாண ஆள்பதிப் பட்டம் தருவதாக ஆலிக்குச் சுலுத்தான் வாக்குக் கொடுத்தான். "தன்னிலும், பலம்வாய்ந்த தன் குடிமக்களை"—அதாவது, மெமெற்று ஆலியை–பலவீனப்படுத்துவதே சுலுத்தான் மாமூடின் பூட்கையாகும். ஆனல், சூழல் வாய்ப்பாக இல்லாதபடியால் போர் முடிந்ததும் வெகுமதி நிறையத் தருவதாகச் சுலுத்தான், மெமெற்று ஆலிக்கு வாக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று. "நீரிலே அமிழ்ந்துபவன் பாம்பைக் கட்டிப்பிடிப்பான்" என்பதற்கிணங்க கிரேக்க நாட்டிலே சுலுத்தானுடைய அதிகாரத்தைப் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டுமானல், மெமெற்று ஆலியின் உதவி இன்றியமையாததாகும். எகித்திய பாசா தலையிட்டதும் போரின் பலன் உடனே தெரிய வந்தது. மேல் நாட்டுக் கருத்துக்கிணங்கப் பிரான்சிய அலுவலராலும் பொறியியல் வல்லுநராலும் திறம்பட அமைக்கப்பட்ட தரைப்படையும் கப்பற்படையும் இருந்தன. இந்தப் படைப்பலம் கொண்டு தரையிலும் கடலிலும் ஆலி பலமாகத் தாக்கினுன். இத்தாக்கல் விரைவிற் பலன் கொடுத்தது. கிரேக்கருடைய நிலை இப்பொழுது மிகவும் நெருக்கடியான தாயிற்று. சொந்த முயற்சியினல், தங்களைத் தாங்களே கிரேக்கர் காத்துக்கொள்ள மாட்டார்கள்—அதற்குரிய வலிமை அவருக்கில்லை—என்பது தெள்ளிதாகப் புலனுகிற்று. புலவர் பைரனைப் போன்றவர்கள் கிரேக்கருடைய விடுதலைப் போராட்டத்திற் பங்கு பற்றத் தாமாக உளமுவந்து முன்வந்தனர்; ஆனல், இவர்கள்

1821-22. மெமெற்று ஆலியின் தலையீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1821-22. எதிர்த்துப் போராடவேண்டிய படைகள் போர் முறையில் நன்கு பயிற்சி பெற்றிருந்தபடியால் இவர்களால் எதிர்த்து ஒன்றுமே செய்ய முடியவில்லை. கிரேக்கரின் புரட்சி முற்றுக வீணுகாமல் பாதுகாக்கப்படுவதாயின் ஐரோப்பிய தலையீடு ஒன்றுல் மட்டுமே அது கைகூடும். ஆனல், அப்படியான ஒருமுகமான ஐரோப்பிய தலையீட்டில் உள்ள அடிப்படையான தொல்லைகள் வெள்ளிடை மலை.

ஐரோப்பாவின் போக்கு. "இந்தச் செயல் நாகரிகத்திற்கு ஒவ்வாது எனக் கருத வேண்டும்" எனக் கிரேக்க எழுச்சியின் முதலாவது செய்தியைக் கேட்ட மெற்றெணிக்கு வியப்புடன் கூறினன்.[1] சட்டபூர்வமாக அரசாட்சியை நடத்தும் ஒற்றேமன் அரசிற்கு எதிராகக் கிரேக்கர் கலகம் விளைவிக்கின்றனர் என மெற்றெணிக்குக் கருதினன். முறைமை முறைமையாக நடக்கும் உரிமை வழி வந்த ஆட்சித் தத்துவத்தைக் குறிப்பிட்டு ஐரோப்பா தலையிடாமலிருப்பதற்கு அத்தத்துவத்தையே தலைக்கீடாகக் கொள்ளவும் அவன் முற்பட்டான். இதே கருத்தைக் கண்ட இரசிய சாரும் "இது சரி" என இலகுவில் இணங்கினன். "என்னுடைய கருத்திலே பேரரசன் அலச்சாந்தரின் உளம் ஊன்றிவிட்டது" என மெற்றெணிக்குப் பெருமையுடன் தம்பட்டமடித்தான். மேலும், அலச்சாந்தர் போரை விரும்பவில்லை. "எனக்கு அவா எதுவுமில்லை. என்னுடைய பேரரசோ பரந்துகிடக்கின்றது. எனக்குச் செங்குருதி வெறி இல்லை. இதனை எல்லோரும் அறிவர். இந்தப் போரினுல் இரசியாவிற்கு எந்த நன்மையும் ஏற்படாது" என அலச்சாந்தர் கூறியதாகச் சொல்லப்படுகின்றது. தலையிடுதல் ஒவ்வாது என்னும் கொள்கையையே பிரித்தானியா ஆதரித்தது. பொருத்தனையின் பெயராலே தலையிடவேண்டிய கடப்பாடு இருந்தாலன்றி ஏனைய அரசாங்கங்களின் உள்நாட்டு அலுவல்களில் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டுமென்றும், அதுவே கடமை என்றும் காசில்றீ நம்பினன். இவனுடைய நம்பிக்கையிலும் பார்க்க கனிங்கின் நம்பிக்கை இன்னும் கூடியதாக விருந்தது. அதே நேரத்தில் இங்கிலாந்தும் ஒசுற்றியாவும் அரசியல் அடிப்படை ஒன்றை ஆதாரமாகக் கொண்டே துருக்கிப் பேரரசு உருக்குலையாமல் இருக்க வேண்டுமெனக் கருதின என்பதை முன்னரே கண்டுள்ளோம். ஐரோப்பிய தேசப் படத்திலிருந்து துருக்கி மறைய நேரிட்டால் அதனுலே சருவதேசச் சிக்கல்கள் தொடர்ந்து வரும் என்பதைக் கண்டு இவ்விரு நாடுகளும் பயந்தது இயல்பென்க. கிரேக்கக் கலாம் வெற்றிபெற்றுல் அவ் வெற்றியே இறுதிமுடிவுக்கு அடிகோலிவரும் என்பதை

1 Memoirs, iii. 525.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு நாடுகளும் நன்கு உணர்ந்திருந்தன. எனவே, கிரேக்க 1821-22.
இளர்ச்சியில் ஏனைய நாடுகள் தலையிடாத வண்ணம் அதனைத் தனிப்படுத்தி ஐரோப்பியப் போர் மூளாவண்ணம் செய்வதில் இவ்விரு நாடுகளும் தங்கள் சத்தியைச் செலுத்தின "கிரேக்க நாட்டின் பண்டைப் புகழின்" நினைவினால் பொது அபிப்பிராயம் உந்தப் பெற்றது. பண்டைக் காலத்துக் கிரேக்க மக்களின் பெயரைக் கொண்ட சாதியினரை ஆதரிக்க வேண்டுமென்ற கருத்துப் பொதுமக்களிடையே மிகவும் தீவிரமாக இருந்தது. பண்டைக்காலக் கிரேக்க மக்களுடன் பிற்காலத்து வந்த பல் வேறு இனத்தினர் கலந்ததனால் கிரேக்க இனம் கலப்பற்ற இனமாக இராது கலப்புற்றிருந்ததைப் பொதுமக்கள் பொருட் படுத்தவில்லை. இது ஒருபுறமிருக்க, அரசியலில் மதியூகமான அறிவுரைக்கு ஏற்றபடிதான் ஐரோப்பிய அரசாங்கங்களின் கொள்கை சென்றது. கால நேரத்தை ஒட்டியே இக் கொள்கை உருவாயது. எனவே, அரசாங்கத்தின் கொள்கையைப் பொது மக்களுடைய உள எழுச்சியினால் மாற்ற முடியவில்லை.

கிரேக்கப் போராட்டம் தொடங்கிய சில ஆண்டுகளாக இந்த இரசியாவின் நிலை.
நிலை இருந்தது. இப் போராட்டத்தின் முதற்கட்டத்திற்கூட ஐரோப்பிய நாடுகள் தலையிடாமல் இருப்பது கடினமாகிற்று. இந்த நிலை மேன்மேலும் கடினமாகியது. அமைதியின்மையின் அறிகுறிகளை இரசியா குறிப்பாகக் காட்டியது. இரசிய சாரின் தனிப்பட்ட கருத்து எதுவாக இருந்தபோதிலும் கிரேக்க வைதிக திருச்சபையின் பாதுகாவலன் தான் என்பதை அவனால் மறக்கவே முடியவில்லை. புறமதத்தைச் சேர்ந்த அறிவிலிகள்மேல் பழமை நிரம்பிய தன் திருச்சபையின் சார்பிலே சிலுவைப் போரின் சாயல் உள்ள போர் தொடுப்பதில் ஒரு தனி ஆர்வம் அவனுக்கிருந்தது. மேலும், தெற்கு நோக்கி முன்னேறும் பூட்கை பழைய காலம் தொட்டே இரசியாவிடமிருந்தது. அதி வாய்ப்பு நிறைந்த இப்படியான சந்தர்ப்பம் ஒன்றைத் தவற விடுவது முட்டாள் தனம் எனவும் தோன்றிற்று. அதே நேரத் தில் துருக்கிய ஆட்சியாளரின் செயல்களும் இரசியா தலையிடு தற்கு வேண்டிய சந்தர்ப்பத்தை அளித்தன. கொன்சுதாந்தி நோப்பிளின் பிதாவாகவும் கிரேக்க வைதிகத் திருச்சபையின் ஆத்மீக முதல்வராகவும் இருந்தவர் மொரியாவிலே முசல்மான் களை மற்றவர்கள் கொன்று குவித்ததற்குக் கழுவாயாகத் தன் இரத்தத்தைக் கொடுக்க வேண்டியிருந்தது. முசல்மான்களைக் கொன்ற குற்றமும் இப்படி வஞ்சம் தீர்க்கத் துருக்கியர் முன் வந்ததும் மன்னிக்க முடியாத குற்றங்கள். இதனால் வாளா விருந்த இரசிய மக்களிடம் பெரும் மனக்கசப்பு ஏற்பட்டது. இதனைவிட இரசியரின் மனதில் வேறு தாங்கல்களும் இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]822-23

உடன்படிக்கைகளை மீறித் தானியூப்புச் சிற்றரசுகளைத் துருக்கி தன் பிடியில் வைத்திருந்தது. இரசியக் கொடிகளை உயர்த்திச் செல்லும் கிரேக்கக் கப்பல்களையும் துருக்கி கைப்பற்றியது. இதனால் இரசியாவிற்கும் துருக்கிக்கும் நிலவிய சூழியற்றொடர்பு சிதைவுற்றது. போர் மூள்வது தவிர்க்கமுடியாதது போலத் தோன்றியது. போர் மூள்வதைத் தடுக்க இங்கிலாந்தும் ஒசுற்றியாவும் ஆவனுற்றன. தன்னுடைய கௌரவத்திற்குப் பெரும் ஆபத்து வந்துவிட்டதாக உணர்ந்த சுலுத்தானை, சலுகைகளைக் கொடுத்து இணங்கும்படி இவ்விரு நாடுகளும் தூண்டின. இதன் பயனாக அப்போதைக்குச் சமாதானம் பாதுகாக்கப்பட்டது. ஆனால், அதன்பின்னர் இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் நிலைமையைப் பெரிதும் மாற்றின. அதுவரையுமே அமைதி நிலவியது.

கனிங்கின் கிரேக்க பூட்கை.

இந்த முக்கிய நிகழ்ச்சிகளில் முதலாவது, யோச்சு கனிங்கு வெளிநாட்டமைச்சனாக அமர்த்தப் பெற்றமையாகும் (1822). தன் பூட்கையைக் கனிங்கு இரத்தினச்சுருக்கமாக: "ஒவ்வொரு நாடும் தன் கருமத்தைப் பார்க்கவேண்டும், எங்கள் எல்லோருக்கும் ஆண்டவனிருக்கிறன்" எனத் தெரிவித்தான். ஏனைய ஆங்கிலேயரைப் போலவே கனிங்கும் கிரேக்கர் மேல் அனுதாபம் கொண்டிருந்தான். ஆனால், கிழக்கு ஐரோப்பியப் பிரச்சினையில் தன் நாட்டின் தேவைக்கேற்ற வகையில் தன் போக்கை அவன் அமைத்துக் கொண்டான். "ஐரோப்பா என்ற சொல்லுக்குப் பதிலாக இங்கிலாந்து என்ற சொல் இடம் பெறுவதை நான் பெரும்பாலும் விரும்புகிறேன் எனக் கூறும்போது எனது கருத்தை அறியக்கூடிய அளவிற்கு என் அரசியல் உங்களுக்குத் தெரியும்" எனக் கனிங்கு எழுதிப் போயினன்.[1] இதனை அவன் "ஐரோப்பிய அரசியலமைப்பில் நாங்கள் நெருங்கிப் பிணிக்கப்பட்டுள்ளோம். ஆனால், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் ஐரோப்பாவின் அலுவல்களிலே தலையிட வேண்டுமென்பது இதன் கருத்தன்று. எங்களைச் சூழ்ந்துள்ள ஏனைய நாடுகளின் அலுவல்களில் நிதானமின்றித் தலையிடும் முயற்சி என்பதும் இதன் கருத்தன்று" என மேலும் விளக்கியுள்ளான். ஏனைய நாட்டலுவல்களிலே தலையிடாமல் இருக்கும் கோட்பாட்டை அவன் முழு மனதுடனும் ஆதரித்து வந்தான். "எங்களுடைய நட்பாளர்களுடன் ஒன்றுசேர்ந்து சமாதானத்தை நிலவச் செய்வதே எங்கள் பொது நோக்கு. எந்தப் பக்கத்திலிருந்து போர்த் தீயைக் கிளறிவிட்டாலும் அது ஐரோப்பா எங்கும் தாவும்". "கிழக்கு ஐரோப்பாவிலே போர் மூண்டால் அதன் முடிவை முன்னுடியே சொல்லக்கூடிய தூரதிருட்டி

1 Stapleton, "Canning and his Times," 364–365.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவருக்கும் இல்லை" எனக் கூறினன். இதனைக் காரணமாக 1822-23
வைத்துக்கொண்டு கிரேக்கருக்கு உதவி வழங்காமலிருந்தான். எனினும், இரசியாவின் குறைகளைப் போக்கி இணக்கமாக்கும் படி சுலுத்தானுக்கு அறிவுரை கூறினன். அத்துடன் கலகக் காரர்களை நிதானமாக நடத்த வேண்டுமெனவும் அவன் புத்தி மதி கூறினன். ஆனால், நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றுக விரைந்து முன்னேறின. மலையின் உச்சிமீது ஏறி இருந்து கொண்டு சுற்றுமுற்றில் உள்ளவைகளுடன் எவ்வித தொடர்பு மில்லாமல் பற்றற்று இருப்பதைப்போல இருப்பது பிரித்தானிய நாட்டின் நன்மையைப் பாதுகாப்பதற்கு ஏற்றமுறையன்று என்பதை இந்த நிகழ்ச்சிகள் கனிங்கிற்கு நன்கு உணர்த்தின. கிரேக்கர் போர் நாட்டங்கொண்டுள்ளனர் என்பதை 1823 ஆம் ஆண்டு மாச்சுத் திங்கள் 25 ஆம் நாளன்று அவன் ஒப்புக்கொண் டான். "பத்து இலட்சம் பேரைக் கொண்ட கிரேக்கர்களைக் கடற் கொள்ளைக்காரர் போல நடத்துவது இயலாது. கலகம் தொடங் கிய காலம் தொட்டு இருபக்கங்களிலும் வெறுக்கக் கூடிய காட்டுமிராண்டிச் செயல்கள் நடந்துவிட்டன. எனவேதான் கிரேக் கர் போரில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாயிற்று" எனக் கனிங்கு விளங் கப்படுத்தினன்.[1] கிரேக்கரிடம் கடலாதிக்கம் இருந்தது. அவர்கள் செய்த கடற் கொள்ளைகளுக்குத் துருக்கியைப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளச் செய்வது இயலாத அலுவல்; எனெனில், துருக் கியின் கட்டுப்பாட்டில் கிரேக்கர் இருக்கவில்லை. இதற்கு ஒரே ஒரு மாற்றுவழிதான் இருந்தது. அதாவது, கிரேக்கரின் தற் காலிக அரசாங்கத்தைப் பிரித்தானியா ஏற்றுக்கொண்டு கிரேக் கக் கப்பற்படைகளின் செயல்கள் யாவற்றுக்கும் அவ்வரசாங் கமே பொறுப்பு எனக் கொள்வதாகும். இங்ஙனம் பிரித் தானியா செய்தமை சருவதேச நிலைமையைப் பெரிதும் தாக் கியது. வியன்னா அரண்மனையிலும் பெற்றேகிராத்து அரண் மனையிலும் பீதி உண்டாகியது. "நாகரிகத்திற்கு ஒவ்வாதன வற்றைச் செய்வோர்" என இவ்வீர் அரசாங்கமும் கிரேக்க கலகக்காரர்களை இனிமேலும் கருதமுடியாது; எனெனில், பெரிய பிரித்தானிய நாடு கலகக்காரர்களின் தற்காலிக அரசாங்கத்தை ஏற்று அவர்களுடன் நியமமான தொடர்பு கொண்டது. கிரேக்க சுதந்திரப் போர் எவ்வழிச் செல்லினும் செல்லட்டும் என விட்டு, கிரேக்கர் துருக்கியரைக் கொன்று குவிப்பதையும் துருக் கியர் கிரேக்கரைப் பலியாக்குவதையும் பார்த்துக் கொண்டு பராமுகமாக இருக்கமுடியாது. எப்பொழுதோ ஒரு நாளைக்கு

1 W. A. Phillips, "History of Europe," 143.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1823-25. இவ்வீர் அரசுகளும் தலையிட்டே ஆகவேண்டும். ஏனெனில்' கிரேக்கர் போர் நாட்டமுடையோர் எனக் கொண்டமை இப் போரில் ஒசுற்றியாவும் இரசியாவும் தலையிடுவதினால் அந்நாடு களுக்கு ஏற்படக்கூடிய புகழையும் பெருமையையும் பிரித் தானியா அபகரிக்கப் போகின்றது என்பதற்கு அறிகுறியாகவே கருதப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் ஒன்றுபட்டே தலையிட வேண்டுமென்னும் உண்மையைத் தயங்கிக்கொண்டே எல்லோ ரும் ஏற்றுக்கொண்டனர். அந்தத் தலையீட்டின் தன்மைபற்றி எவ்விதமான இணக்கமும் இருக்கவில்லை. துருக்கியருக்கு உதவி யளிப்பது பற்றிய பேச்சுக்கே இடமில்லை. இது உள்ளங்கை நெல்லிக்கனி. எனினும், கிரேக்கருக்கு உதவி செய்தால் புரட்சி இயக்கத்தை ஏற்பதாகிவிடும். இதனால் "வழிமுறைவந்த உரிமை ஆட்சியின்" அத்திவாரம் அறை போய்விடும். துருக் கியின் ஆதிக்கத்தில் தன்னுண்மையுடைய மூன்று கிரேக்க அரசுகளை அரைப்பங்கு சுதந்திர அடிப்படையில் நிறுவுவது பற்றி இரசியா ஆலோசனை கூறிற்று. இப்புது அரசுகள் இரசியாவைச் சார்ந்து, துருக்கியரின் சுரண்டலை எதிர்த்து மொசுக்கோ அரசின் உதவியை எதிர்பார்ப்பது தவிர்க்க முடியாததொன்றுகும் என இத்திட்டத்திற்கு மெற்றெணிக்கு ஆட்சேபனை தெரிவித்தான். கிரீசு சுதந்திர அரசாக வேண்டு மென்னும் மற்றொரு யோசனையையும் அவன் கொண்டுவந் தான். இதனை இரசியா ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடி யாது. ஏனெனில் கிரீசு சுதந்திரமாக வாழ்ந்து இரசிய ஆதிக் கத்தைக் களைந்து எறிந்துவிடுமென்னும் ஆபத்தை, சார் மன் னன் உணர்ந்தான். இதன் விளைவாகப் பெரும் சிக்கல் ஏற்பட் டது. இதற்கிடையில் சார் அலச்சாந்தர் இறந்தான் (1825).

இரசியப் பூட்கையில் மாற்றம்.

யோச்சு கனிங்கு அமைச்சனைதும் ஆங்கிலப் பூட்கையில் புதியதொரு திருப்பம் ஏற்பட்டதுபோல, இரசியப் பேரரசனை முதலாம் நிக்கலசு அரசெய்தியதும் இரசியப் பூட்கையிலே புதிய தொரு திருப்பம் ஏற்பட்டது. ஐரோப்பாவின் நன்மையை முக்கிய மாகக் கருதிய முதலாம் அலச்சாந்தர் அதற்குக் கொடுத்த அளவு முதன்மையை இரசியாவின் பழைய பூட்கைக்குக் கொடுக்கவில்லை. ஐரோப்பா ஒன்றுசேர்ந்து செயலாற்ற வேண்டு மென்னும்[1] கருத்திலே ஈடுபட்டிருந்தான் அலச்சாந்தர். இதனால் துருக்கியின் அலுவலில் இரசியா தனித்து ஈடுபடா திருப்பதற்கு மெற்றெணிக்கு அவனை இணங்கச் செய்தான். ஆனால், அலச்சாந்தருக்குப் பின் அரசெய்திய முதலாம் நிக்கலசு, இதனை நிராகரித்து மகா பீற்றர், கதரின் இராணி

1. VII ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவர்கள் பின்பற்றிய பூட்கையை மீண்டும் கைக்கொண்டான். துருக்கி மீது இரசியா தானுகவே போர்ப் பிரகடனஞ் செய்யும் எனக் கனிங்கு பீதியுற்றான். எனவே, இரு வல்லரசுகளும் சேர்ந்து தலையிடவேண்டும் எனக் கனிங்கு யோசனை கூறினான். "பெற்றேகிராத்து ஆசாரப்படி" (1826) கிரேக்க நாடு இறை செலுத்தும் அடிமை இராச்சியமாக இருக்க வேண்டும். இந்த யோசனை ஒற்றேமன் அரசிற்கு அறிவிக்கப்பட்டது. இரசியா தனித்துத் தலையிடுவதைத் தடுத்துவிடுதற்காக இங்கிலாந்து தன் பூட்கையைக் கைவிட்டு நேரடியாகச் செயலில் இறங்கியது. துருக்கி அரசாங்கம் இவ்வாசாரத்தை நிராகரிக்கவே கனிங்கு படைப் பலத்தை உபயோகிக்க வேண்டியதாயிற்று. ஏனெனில், பிரித்தானியா படைப்பலத்தை உபயோகிக்காவிட்டால் ஆசாரத் தத்துவத்தை மீறி இரசியா தானுகவே செயலில் இறங்கிவிடும். எனவே, பெற்றேகிராத்து ஆசாரம் இலண்டன் பொருத்தனை யாக மாறியது (1827). இந்த ஒப்பந்தத்தின்படி துருக்கியின் மேலாண்மையின்கீழ் கிரீசைத் தன்னுண்மையுடைய அரசாக்கு வதற்கும் துருக்கி அரசாங்கம் இதனை ஏற்று இணங்கிக் கொள் வதற்கு இன்றியமையாத கண்டிப்பான நடவடிக்கை எடுப்பதற் கும் பெரிய பிரித்தானியாவும் பிரான்சும் இரசியாவும் உடன் பட்டுப் பொறுப்பேற்றன. 1826-28

கிரேக்க கலகக்காரக் குடிகளின் பெயரால் துருக்கியைக் கட் டாயப்படுத்துவதை ஒசுற்றியாவும் பிரசியாவும் ஏற்க மறுத்து விட்டன. எனவே, பொருத்தனைக்கு இசைவளிக்க இவ்விரு நாடுகளும் மறுத்தன. நவாரினோவில் நிகழ்ந்த போரின் (ஒற்றேபர் 20, 1827) விளைவால் நெருக்கடி ஏற்பட்டதும் கொன்சுதாந்திநோப்பிளில் இணக்கப் பேச்சுவார்த்தைகளை நடுநின்று தொடக்குவதற்கு மெற்றெணிக்கு முன் வந்தான். துருக்கியருக்கும் கிரேக்கருக்குமிடையில் சமாதானத்தை ஏற் படுத்துவதற்கு முயன்ற இங்கிலாந்துக் கப்பற் படையும் பிரான்சுக் கப்பற் படையும் மெமெற்று ஆலியின் கப்பற்படையுடன் மோதி அதனை அழித்தன. இங்கிலாந்து அரசாங்கமும் பிரான்சு அர சாங்கமும் இட்ட கட்டளைப்படியே இவ்விரண்டு கப்பற் படைகளும் இங்ஙனம் நடந்து கொண்டன. நவாரினோவின் விளைவுகள் மிக முக்கியமானவை. கிறித்துவ வல்லரசுகள் மீது சுலுத்தான் மதப்போர் ஒன்றைப் பிரகடனஞ் செய்தான். அப்படிச் செய்யும் போது குறிப்பாக இரசியாவுடன் அண்மையிலே செய்து கொண்ட பொருத்தனையை நிராகரித்துவிட்டான் (ஆக்கமான் பொருத் தனை–1826). இப்பொருத்தனை தானியூப்புச் சிற்றரசுகள் பற்றியும் நீரிணையிற் கப்பற் போக்குவரத்துச் செய்வது பற்றியும் செய்யப் கிரீசின் சுதந்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1828-31. பட்டது. துருக்கியின் அலுவலிலே தலையிடுவதற்கு இரசியாவிற்கு நல்ல தொரு வாய்ப்புக் கிடைத்தது. இந்தத் தலையீட்டைப் பலனளிக்கக் கூடிய முறையில் ஆட்சேபிப்பது மேற்கு நாடு களுக்கு இயலாது. இது இங்ஙனமிருக்க, வெலிந்தன் (1828) முதலமைச்சனுகப் பொறுப்பேற்றான். துருக்கிய அரசாங்கத் தைக் கட்டாயப்படுத்துகின்ற நடவடிக்கைகளை இவன் விட்டுக் கொடுக்காமல் எதிர்த்தான். மத்தியதரைக் கடலில் இரசிய ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கு ஒற்றேமன் பேரரசை ஓர் அரணுக இன்னமும் உபயோகிக்கலாம் என்னும் நம்பிக்கை இவனுக் கிருந்தது. இரசியா தனித்து நடவடிக்கை எடுத்துத் துருக்கி மீது போர் தொடுத்தது (1828). ஆனல், போர் மூண்டதும் வெலிந்தனும் ஈடுபடவேண்டிய இக்கட்டு ஏற்பட்டது. இந்தப் போராட்டத்தில் ஈடுபடாமல் இங்கிலாந்து ஒதுங்கி நின்றுல் இறுதி யாகச் செய்கின்ற இணக்கத்திற் பங்குபற்றி அதனை நிருண யிக்க முடியாது. அல்லது எப்படியாயினும் இரசியப் படை களினுல் விடுதலைபெற்ற கிரீசு, இரசியாவின் சார்நாடாகிவிடும். இக்காரணங்களால், மொரியாவிற்கு உடனே படையொன்றை அனுப்பி மெமெற்று ஆலியை விரட்டுவது பற்றிப் பிரான்சு அரசாங்கம் தெரிவித்த யோசனையை வெலிந்தன் ஏற்றுக் கொண்டான். பிரான்சுக்காரரின் வருகைக்கு முன்னரே அலச் சாந்திரியா நகரத்துக்கு எதிரில் படைப்பலத்தைக் காட்டி ஆங்கில கடற்றளபதி கொடிறிந்தன் மொரியாவை விட்டு ஆலி யின் படைகளை வெளியேறச் செய்தனன். இரசியத் தளபதி தீபிச்சு மிகவும் துணிச்சலான யுத்த தந்திரத்தைக் கையாண்டு போருக்கு முடிவு கண்டான். 13,000 இற்கு மேற்படாத படை வீரருடன் இவன் கொன்சுதாந்திநோப்பிளைத் தாக்கித் துருக்கிய ருடன் எத்திரியாநோப்பிள் பொருத்தனை செய்து கொண்டான் (1828). தானியூப்புச் சிற்றரசுகள் பெயரளவில் துருக்கியின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தபோதும் நடைமுறையில் இரசியப் பேர ரசின் ஒருபகுதியாகவே இருந்து வந்தன. தாதனெலீசிலும் பொசுப்பரசிலும் இரசியக் கொடிக்கு இருந்த உரிமைகள் மீண் டும் உறுதிசெய்யப் பெற்றன. வல்லரசுகள் இங்ஙனம் கிரேக்கப் பிரச்சினைக்கு முடிவு கண்டன. கிரேக்க நாட்டைத் திறைசெலுத் தும் தனியாண்மையுள்ள நாடாக நிறுவுவதில் இரசியாவிற்குத் திருத்தி ஏற்பட்டிருக்கும். இந்த முடிவைப் பெரிய பிரித்தானியா ஏற்காது. எனெனில், திறை செலுத்தும் கிரேக்க அரசு ஒன்றை நிறுவினுல் போல்கன் நாடுகளில் இரசியாவின் சூழ்ச்சிகளுக்கு அது அடிகோலிவிடுமெனவும் அதனுல் துருக்கியின் அலுவல் களில் நிரந்தரமாகத் தலையிடுவதற்கு இரசியாவிற்குத் தலைக் கீடு கிடைத்துவிடுமெனவும் ஒசுற்றியா கொண்ட கருத்தையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய நாடும் கொண்டிருந்தது. ஒற்றுமேன் பேரரசு உருக்குலையாமல் இருக்க வேண்டுமென்னும் கருத்தை வலிந்து ஆதரித்து வந்த வெலிந்தனும் மெற்றெணிக்கும் சூழ்நிலை யின் நெருக்கடி காரணமாகக் கிரேக்க நாட்டைச் சுதந்திர நாடாக ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. மெரிய பிரித்தானியா, இரசியா, பிரான்சு ஆகிய மூன்று வல்லரசுகளின் பாதுகாப்பிலே புதிய கிரேக்க அரசு விடப்பட்டது. கிரேக்க நாட்டின் மறுமலர்ச்சிக்கு இம்மூன்று வல்லரசுகளும் ஒருங்கியைந்து செய்த முயற்சிகளே காரணமாகும். பவேரிய மன்னன் உலூயியின் மகன் ஒதோவிற்குப் புது அரசின் முடி வழங்கப்பட்டது. 1833 ஆம் ஆண்டு முற்பகுதியில் இவன் அரச பொறுப்பை ஏற்றான். இங்ஙனம் ஒற்றுமேன் பேரரசின் அத்தி வாரத்தில் முதலாவது பிளவு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து போல்கன் அரசுகள் உருவாயின. இவ்வரசுகள் தம்மிடையே கொண்டுள்ள தொடர்பும் ஏனைய வல்லரசுகளுடன் கொண் டுள்ள தொடர்பும் சமீப கிழக்கில் உள்ள அரசியல் நிலையைப் புரட்சிகரமாக மாறச் செய்தன.[1] 1833–1914.

1914 ஆம் ஆண்டில் போல்கன் அரசுகளில் உரூமேனியாவே பருமனிற் பெரியதாயிருந்தது. இதன் குடித்தொகை 70 இலட் சம். இதனைவிட அங்கேரியில் 35 இலட்சம் உரூமேனியர் வாழ்ந் துவந்தனர். இரசியாவின் மாகாணங்களில் ஒன்றான பெசரே பியாவில் 15 இலட்சம் உரூமேனியர் வாழ்ந்தனர். இப்பிரதே சங்கள் 'மீட்கப்படாத உரூமேனியா' என்னும் பெயரைப் பெற் றன; ஏனெனில், உரூமேனியாவின் ஒரு பகுதி வேற்றவனின் உரூமேனியா.

---

1. ஒதோ முப்பது ஆண்டு காலமாக ஆட்சி செய்து வந்தான். அவனுடைய காலத்தில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள் பின்வருமாறு: (1) 1843 ஆம் ஆண்டுப் புரட்சியின் விளைவாக அரசியற் சட்ட யாப்பு ஒன்றை மன்னன் மக்களுக்கு வழங்கவேண்டியதாயிற்று. அத்துடன் தன்னுடைய பவேரிய ஆயுரையாளரைப் பதவியிலிருந்து விலக்கவேண்டியுமிருந்தது. (2) கிரைமியப் போரின்போது கிரேக்கநாடு துருக்கியின் மீது போர் தொடுக்காமலிருப்பதற்காகப் பிரித்தானிய நாடும் பிரான்சும் பயரோசப் பிரதேசத்தைக் கைப்பற்றின. பட்டத் திற்கு உரிமையாளர் இல்லாதபடியாலும் ஒதோ மக்களிடம் செல்வாக்கிழந் திருந்தமையாலும் 1862 ஆம் ஆண்டில் இவன் பதவியிலிருந்து விலக்கப் பட்டான். இவனுக்குப்பின் தென்மாக்கு அரசன் ஒன்பதாம் கிறித்தியனின் மகன் முதலாவது யோச்சு என்பான் அரசெய்தினன். அவன் அரசெய்தியதும் தன் பிடியிலிருந்த ஐயோனியன் தீவுகளே இங்கிலாந்து கைவிட்டது. இரசிய துருக்கிப் போரின் பின்னர் கிரீசு தெசாலியையும் எப்பிரசின் ஒரு பகுதியை யும் பெற்றுக்கொண்டது (எப்பிரசு, அல்லது அட்டா). 1897 ஆம் ஆண்டில் கிறீற்றுத் தீவில் எழுந்த கலகம் காரணமாகக் கிரேக்க துருக்கிப்போர் மூண்டது. இதிலே கிரீசு தோல்வி கண்டது. வல்லரசுகள் தலையிட்டதன் காரணமாகக் கிரீசு ஆள்புலத்தை இழக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1856. பிடியிலேயே இருந்தது. இந்தக் குடித்தொகையின் முக்கியத் துவத்தை உணர்வதற்கு ஏனைய நாடுகளின் குடித்தொகையைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். மகியாரின் தொகை எண்பது அல்லது தொண்ணூறு இலட்சம்; தெற்குச் சிலாவினத்தினர் (சேபியர், குரோட்டர், சுலொவீனியர்) 110 இலட்சம்; செக்கியரும் சிலோவாக்கரும் 90 இலட்சம்; பல்கேரியர் ஐம்பது அல்லது 60 இலட்சம்; கிரேக்கரின் தொகை 70 இலட்சத்திலும் பார்க்கக் குறைவு. அல்பேனியரின் தொகை ஏறத்தாழப் 10 இலட்சம். சேபியா, மொன்றெநீகிரோ, பல்கேரியா, கிரீசு ஆகிய நாடுகளின் கூட்டு வணிகத்திலும் பார்க்க உரூமேனியாவின் வணிகம் கூடுதலானது. ஆறு வல்லரசுகளின் படைகளுக்கு அடுத்ததாக உரூமேனியாவின் படைப்பலம் இருந்தது. 'கீழைத்தேசப் பெல்சியம்' என உரூமேனியா பெயர் பெற்றிருந்தது. உரூமேனியாவின் பெரும் முன்னேற்றத்திற்கு இப்பெயர் சான்று பகர்கின்றது.[1]

பழைய வரலாறு. உரூமேனிய அரசு உருவாகி ஆண்டுகள் பலவாகவில்லை; ஆனால், உரூமேனிய மக்களின் வரலாறு பதினெறு நூற்றுண்டுகளுக்கு முற்பட்டது. கி. பி. இரண்டாம் நூற்றுண்டிலே தானியூப்பின் கீழ்ப்பகுதியில் (தேசியாவில்) திரேசன், உரோம குடியேற்றங்களை நிறுவினன். வட பகுதியிலிருந்து வரும் காட்டுமிராண்டிகளைத் தடுக்கும் புறக் காவலாக இக்குடியேற்றங்கள் காலகதியில் பயன்பட்டன. அதன் பின்னர் ஆயிரமாண்டுகளாக இவர்களின் வரலாற்றுத் தொடர்ச்சி அறுந்து விட்டது. அதன்பின்னர் 13 ஆம் நூற்றுண்டில் இவர்கள் மீண்டும் தோன்றுகின்றனர். இக்காலத்தில் மொழ்தேவியா, உவாலாக்கியா என்னும் இரு சிற்றரசுகளாக இவர்கள் பிரிந்தனர். பின்னர் இந்தச் சிற்றரசுகள் ஒற்றோமன் பேரரசின் மாகாணங்களாகின. ஆயினும் இச்சிற்றரசுகளை உரூமேனிய அரசர்கள் தொடர்ந்து ஆண்டு வந்தனர். துருக்கியை நோக்கித் தெற்குப் பக்கமாக இரசியா முன்னேறத் தொடங்கியபோது துருக்கிக்கும் இரசியாவிற்கும் இடையில் அகப்பட்ட உரூமேனியா மத்தளம்போல இருபுறத்திலும் தாக்குப்பட வேண்டியிருந்தது. இரசியாவிற்கும் துருக்கிக்கும் எல்லை புரூத்து ஆறு. இந்த ஆறே மொழ்தேவியாவின் வடக்கு எல்லைப்புறமாகவும் அமைந்தது. எனவே, இரசியா துருக்கி மீது போர் தொடரும்போது முதற்படியாக மொழ்தேவியாவையும் உவாலாக்கியாவையும் கைப்பற்றிவிடும். புகழ்பெற்ற குச்சுக்கைஞாச்சிப் பொருத்தனைப் படி (1774) இச் சிற்றரசுகளிலே தலையிடும் உரிமையை இரசியா

---

[1] R. W. Seton-Watson, Roumania and the Great War, (1915), 2, 5, 6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது. பியூக்கரெசுப் பொருத்தனைப்படி (1812) மொழ் 1856-66
தேவியாவின் கிழக்குப் பகுதியான பெசரேபியாவையும் இரசியா பெற்றுக்கொண்டது. முன்னர்[1] குறிப்பிட்ட எத்திரியாநோப்பிள் பொருத்தனைப்படி இரசியப் பேரரசின் பாதுகாப்பில் இச்சிற் றரசுகள் விடப்பட்டன. நடைமுறையில் இவ்விரு மாகாணங் களும் உண்மையில் இரசியாவுடன் வலிந்து இணைக்கப்பெற் றன. இரசியாவின் செல்வாக்கு இப்போது தலைதூக்கி நின்றது. இறுதியாகப் போலந்தைப் பிரிப்பதற்கு முன்னர் இருந்த நிலை யைப் போலவே இந்த நிலையும் இருந்தது. எனவே, ஒசுற் றியாவின் பீதி விரைந்து வளர்ந்தது. இச்சிற்றரசுகள் தானி யூப்பு ஆற்றங்கரையிலிருந்தன. ஆகவே இவற்றைத் தனது ஆட்சிக்குட்படுத்துவதன் மூலம் ஐரோப்பாவின் மிக முக்கிய மான இந்த ஆற்றின் கப்பற்போக்குவரத்தைக் கட்டுப்பாடு செய்யும் வாய்ப்பு இரசியாவிற்கு இருந்தது. இதனைத் தவிர்ப் பதன் பொருட்டே பாரிசுப் பேரவையின்போது (1856)[2] மொழ் தேவியாவும் உவாலாக்கியாவும் ஒற்றுமேமன் ஆதிக்கத்திலே தனித்தியங்கும் தன்னுண்மையுடைய அரசுகளாக மாற்றப்பட் டன. பெசரேபியாவைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென இரசியாவையும் மாநாடு கட்டாயப்படுத்தியது.

சிற்றரசுகளின் ஐக்கியம்.

உரூமேனியாவின் வரலாற்றின் அடுத்தபடியாக மொழ்தே வியாவினதும் உவாலாக்கியாவினதும் ஐக்கியம் அமைந் ளது. இவைகளை ஒரு நாட்டின அரசாக்க வேண்டிய இயக்கம் விரைந்து உருவாகியது. இதனை வலிமை மிக்க பிரான்சுப் பேரரசன் மூன்றும் நெப்போலியன் ஆதரித்தான். இதில் இவன் தன்னலங் கருதாது ஈடுபட்டான் என்று சொல்வதற் கில்லை. பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுவதிலும் பார்க்க மூன் றும் நெப்போலியன் நாட்டின இயக்கத்திற்கு அதிகமாகவே தொண்டாற்றியுள்ளான். எப்படியிருந்தாலும் இவனின் முயற்சி யினாலேயே நாட்டின உரூமேனியா உருவாகிற்று. இதற்கு உரூமேனியர் பிரான்சு ஆட்சியாளனுக்குக் கடமைப்பட்டுள்ளனர். கிரைமியப் போருக்குப் பாரிசுப் பொருத்தனை முற்றுப்புள்ளி யிட்டது. இப் பொருத்தனையில் மொழ்தேவியா, உவாலாக் கியா ஆகிய இடங்களில் அரசியல் அமைப்பு மன்றங்கள் ஒவ் வொன்று தெரிவு செய்யப்படவேண்டுமென விதிக்கப்பட்டது. இரு பிரிவையும் ஐக்கியப்படுத்துவது பற்றிய கருத்தை இவ்விரு மன்றங்களும் ஐரோப்பிய ஆணைக்குழு ஒன்றனிடம் சமர்ப் பிக்கும். இதற்குரிய தேர்தல் முறைகேடாகவே நடந்தது. துருக்

---

1. பக்கம் 252.
2. பக்கம் 51.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1856-66. கியும் ஒசுற்றியாவும் தகாத முறையிலே தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி மக்களை நெருக்கினர்; மிரட்டினர். தேர்தல்கள் செல்லுபடியாகாவெனத் தள்ளிவிட்டு, மக்கள் தங்கு தடையின்றித் தங் கருத்தைத் தெரிவிக்கக் கூடிய நடவடிக்கைகளை நெப்போலியன் எடுத்தான். அரசியல் அமைப்பு மன்றங்கள் கூடி ஐக்கிய உரூமேனியா வேண்டுமெனப் பிரகடனஞ் செய்தன. ஆனால், இங்கிலாந்தும் ஒசுற்றியாவும் காட்டிய எதிர்ப்பின் விளைவாக இத்திட்டம் அழிந்தது. இங்கிலாந்து இரசியாவையிட்டுப் பீதிகொண்டு ஒற்றோமன் பேரரசின் அதிகாரத்தை ஆதரித்தது. ஒசுற்றியாவிற்கும் பயம் ஏற்பட்டது. திரான்சில்வேனியாவில் உள்ள உரூமேனியக் குடிகள் ஐக்கிய உரூமேனிய அரசில் நாட்டங்கொள்வர். இதனால் ஆபத்து விளையுமென்பதை ஒசுற்றியா உணர்ந்தது. எனவே, ஒவ்வொரு சிற்றரசும் தத்தமக்கெனப் புறம்பான அரசரையும் சட்ட சபையையும் தெரிவு செய்யவேண்டுமென இணக்கஞ் செய்யப்பட்டது (1858). மொழ்தேவியாவும் உவாலாக்கியாவும் சேர்ந்து ஒரே அரசனை (அலச்சாந்தர் கசா) நியமித்தனர். இங்ஙனம் இவ்விரு சிற்றரசுகளும் பொதுவான ஓர் அரசனை நியமிக்கக் கூடுமென்பதை வல்லரசுகள் எதிர்பார்த்து நடக்கவில்லை. இதனால் வல்லரசுகளை இவ்விரு சிற்றரசுகளும் ஏமாற்றிவிட்டன. இத்தாலியுடன் போரிட வேண்டிய நிலையிலிருந்த ஒசுற்றியாவினால் இவ்விடயத்திலே தலையிட முடியவில்லை[1]. எனவே, இவ்விரு மாகாணங்களும் ஒரே ஆட்சியாளரின் கீழ் ஐக்கியப்பட்டன. 1861 ஆம் ஆண்டிலே இவ்விரு சட்ட சபைகளும் ஐக்கியப்படுவதைத் துருக்கி அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. உரூமேனியா மக்களுக்கு விடுத்துள்ள பிரகடனம் ஒன்றின்மூலம் "உரூமேனிய நாடு உருவாகிவிட்டது" என இவ்விரு மாகாணங்களையும் ஆண்ட இளவரசன் உலகுக்கு அறிவிக்கக் கூடியதாயிற்று.

இளவரசன் கசா (1859-1866). இளவரசனை கசாவின் ஆட்சிக்காலம் ஏழாண்டுகள் மாத்திரம் நிலைத்திருந்தது (1859–1866). இக்காலத்தில் உள்நாட்டுச் சீர்திருத்தம் நடந்தது. திருச்சபைக்குரிய பொருளுடைமை யாவும் பறிமுதல் செய்யப்பட்டன. இரண்டு உரூமேனியப் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன. கடுமையான நிலமானிய ஊழியங்களில் இருந்து உழவோர் விடுதலை செய்யப்பெற்றனர். இதனால் திருச்சபையின் வெறுப்பையும் நிலச் சொந்தக்காரரின் வெறுப்பையும் கசாவின் அரசாங்கம் தேடிக் கொண்டது. எனவே வலுக்காட்டாயத்தினால் அவன் பதவியைத் துறந்தான். அவனுக்குப் பின்னர் ஓகென்சொலேன் சீக்குமாறிஞ்சனைத் சேர்ந்த

1. பக்கம் 233.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1866–1914

இளவரசன் சார்ளசு அரசுகட்டிலேறினான். கிடைத்த கௌரவத்தை ஏற்றுக்கொள்ளும்படி இவனுக்குப் பிசுமாக்கு அறிவுரை கூறினான். "இதனை ஏற்றுக்கொள்ளுங்கள்; உங்களுடைய வயோதிபத்திற்கு ஏற்ற சின்னம் இது" எனப் பிசுமாக்குக் கூறினான். இவனுடைய ஆட்சிக்காலம் ஏறத்தாழ அரை நூற்றாண்டாக நீடித்தது (1866–1914). இவனுடைய ஆட்சிக் காலத்திலே தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உரூமேனியாவே படைப்பலம் மிகுந்த நாடாகிற்று. 1877 ஆம் ஆண்டு நடந்த இரசியத் துருக்கிப் போரின்போதே உரூமேனியப் படையின் வலிமையை முதன்முதலாக உலகமறிந்தது. புகழ் பெற்ற கிறிவிற்சாக் கோட்டையை உரூமேனியப் படைகள் கைப் பற்றின. இதுவே பிளவினுவிலுள்ள மிகப் பலம்வாய்ந்த கோட்டையாகும். கிரைமியப் போரின் பின்னர் மொழ்தேவியாவிடம் ஒப்படைக்கப்பட்ட பெசரேபியா உரூமேனியாவிடமிருந்தது. செய் நன்றி மறந்து இரசியா அதனை உரூமேனியாவிடமிருந்து பறித்தது. இதனால் உரூமேனிய மக்கள் சினங்கொண்டு வெறுப்புற்றனர். "பாழாகப்போன" புரூத்து நதிக்கு அப்பால் தம்மினத்தவர் பிரிந்து வாழ்வதை உரூமேனிய மக்கள் வெறுத்தனர். இப்போரின் விளைவாக உரூமேனிய சுதந்திரம் நியமப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1881 ஆம் ஆண்டிலே புதிய நிலைமைக்கு ஏற்றவாறு உரூமேனியா முடியுடை ஆட்சியுடைய ஒரு நாடாகிற்று.

இளவரசன் சார்ளசு (1866–1914)

உரூமேனிய அரசின் குறை நிறைகள்.

போல்கன் பிரதேசத்தில் உள்ள எனைய அயற்பிரதேசத்திலும் பார்க்க உரூமேனியா மதிப்பிடற்கரிய நன்மையொன்றை அனுபவித்தது. "ஒரு சந்ததி காலமாகப் போல்கன் நாடுகள் அல்லலுற்றன. சேபியாவில் மீண்டும் மீண்டும் திடீர் அரசியற் புரட்சிகள் ஏற்பட்டன. அங்கே அரசாங்க அவதூறுகள் மலிந்திருந்தன. பல்கேரியாவில் வியக்கத்தக்க முன்னேற்றமிருந்த போதும் பிரதிநிதித்துவக் கருத்துக்கள் யாவும் ஈவிரக்கமின்றி ஒதுக்கப்பட்டு மன்னனுடைய விருப்பங்களே முக்கிய இடம்பெற்றன. துருக்கியோவெனில் அமீதிய வல்லாட்சியில் அகப்பட்டு வேதனைப்பட்டது. அரசியல் ஆட்சியறுவாதத்திலிருந்து தன்னை விடுவிக்கவல்ல அரசறிஞன்[1] ஒருவனின் வருகையைக் கிரேக்க நாடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. இவை இங்ஙனமிருக்க. உரூமேனியா மாத்திரம் எவ்வித தடையுமின்றி யாப்பியல் முறைமையில் அபிவிருத்தி யடைந்தது. இதனையிட்டு உரூமேனியா பெருமைப்படலாம்[2]. ஆனால், முக்கியமான இரண்டு

[1]வெனிசிலசு.

[2]Seton-Watson, op. cit. 22.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1878 வகைகளில் உரூமேனியா தன்னுடைய அயல் நாடுகளிலும் பார்க்கப் பின் தங்கி நின்றது. இந்நிலை 1914 ஆம் ஆண்டு வரை நீடித்தது. விவசாயப் பிரச்சினை மிகவும் கடுமையா யிருந்தது. போல்கன் நாடுகளில் எங்கும் நிலமானிய முறைமை அற்றுப் போய்விட்டது. ஆனால், உரூமேனியாவில் மாத்திரம் அது நிலைத்து நின்றது. உழவோர் நிலத்தின் உடைமைக் காரராக இருக்கவில்லை ; விழுமியோரே உடைமைக்காரராக இருந் தார்கள். உரூமேனிய அரசு ஈடாடாமல் ஒருநிலையில் நிற்பதற் குப் பெரிதும் பாதகமாகவே விவசாயிகளின் அமைதியின்மை நிலவியது. 1907 ஆம் ஆண்டளவிலேயும் உழவோரின் அமைதி யின்மை அடக்குதற்கரிய கலாம் ஒன்றைத் தூண்டிவிட்டது. உரூமேனியாவின் மற்றைய குறைபாடு அங்குள்ள யூதக் குடி களை உரூமேனியர் துன்புறுத்தியமையாகும். குடிகளுக்குரிய உரிமை, அரசியல் உரிமை எவற்றையும் இந்த யூத மக்கள் பிரயோகிப்பது தடுக்கப்பட்டது. 1878 ஆம் ஆண்டு பேளின் பேரவை நடந்தது. உரூமேனிய சுதந்திரத்திற்கு முக்கிய நிபந் தனையாக மக்களுக்கு மதச் சுதந்திரம் வழங்காமலிருப்பதை நீக்கவேண்டுமென இந்த மாநாடு விதித்தது. நாட்டில் வாழும் எல்லோருக்கும் சமமான பூரண மதச் சுதந்திரம் வழங்குவதே பண்பாடடைந்த சமூகத்தின் முதற்கடப்பாடு எனவும் இப்பேரவை முடிவு செய்தது. இச் சருவதேச உத்தரவாதத்தையும் மீறி உரூமேனியா நடந்தது. குடிமையின் சிறப்புரிமைகள் யூதர் களுக்கு வழங்கப்படவில்லை. ஆனால், அவர்கள் அரசாங்கத் திற்குரிய கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டும். அந்தப் பொறு ப்பு அவர்களுக்கிருந்தது. யூதர்களுக்குக் காணி பூமியை வைத் திருக்கும் உரிமையில்லை. சில சில வர்த்தகங்களில் அவர்கள் பங்குபற்றப்படாது எனவும் தடையிருந்தது. "யூதர்கள் வேற் றவராகக் கருதப்பட்டபோதும், அவர்களுக்கு அரசியல் உரிமை மறுக்கப்பட்டபோதும், அவர்கள் படையிலே சேர்ந்து பணியாற்ற வேண்டுமென விதிக்கப்பட்டது. குடியாட்சி மரபிற்கும் யாப்புறு மரபிற்கும் இது முற்றிலும் முரணானது. மக்கள் ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்து நடக்கும் அடிப்படையான கருத் திற்கே இது விரோதமாகும். இது வெறுத்தற்குரிய செயல்" எனக் கலைநிதி சீற்றன் உவாட்சன் குறிப்பிட்டுள்ளான்[1].

பல்கேரியாவின் பழைய வரலாறு. பல்கேரிய இனத்தின் தோற்றுவாய் தெளிவாகத் தெரிய வில்லை. மிகப் பழைய காலத்தில் இந்நாட்டில் திரேசிய உம் பலரும் இலிறியன் உம்பலரும் வாழ்ந்து வந்தனர். இவ்வும் பலரை மசிடனைச் சேர்ந்த பிலிப்பும் மகா அலச்சாந்தரும்

[1] Seton-Watson, op. cit. 25.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தனர். பின்னர் இவ்வினத் 1876.
தினரை உரோமர் அடக்கினர். இந்தத் திரேசியரையும் இலிறி
யரையும் நாளடைவில் சிலாவியர் ஒதுக்கிவிட்டு, பல்கேரியப்
பரந்த வெளிகளில் சிறிது சிறிதாகக் குடியேறினர். இந்த
நிகழ்ச்சி நடந்த காலம் சரியாகத் தெரியவில்லை. ஏழாம்
நூற்றாண்டிலே சிலாவியரைப் பல்கேரியர் வென்று, இப்
பிரதேசத்திற் புகுந்தனர். இவ்வீர் இனமும் சிறிது சிறிதாகக்
கலந்து ஓரினமாக இணைந்தன. இப் புது இனம் சிலாவிய
மொழியையும் பல்கேரியப் பெயர்களையும் ஏற்றுப் பரப்பியது.
எனவே, இக்காலத்துப் பல்கேரியர் இவ்வீர் இனத்திலுமிருந்து
தோன்றிய புது இனத்தவராவர். வரலாற்றின் இடைக்காலத்
தின்போது பல்கேரியா இரண்டு முறை போல்கனில் உள்ள
மிகப் பெரிய அரசாக வலுப்பெற்றது. சிமியோனின் ஆட்சிக்
காலத்தில் (893–927) இவ்விராச்சியம் பெருத்தது. சிமியோன்
சார் என்னும் பட்டத்தைத் தாங்கினன். "உலகத்தில் உள்ள
சீர்திருந்திய வல்லரசுகளிடையே ஓரிடத்தை இது பெற்றது"[1]
என வரலாற்றுசிரியன் கிபன் எழுதியுள்ளான். இவனுடைய
பேரரசு பல்கேரியாவையும் இக்காலத்துச் சேபியாவையும் அல்
பேனியாவின் பெரும் பகுதியையும் தன்னுளடக்கிப் பரந்து
நின்றது. ஆனால், இவனின் வழித் தோன்றலர் வலிமை யற்
றிருந்தனர். இவ்வலிமையற்ற அரசர்கள், சிமியோன் விட்டுச்
சென்ற அரசை ஆட்சிசெய்ய முடியாதிருந்தனர். 1018 ஆம்
ஆண்டிலே கிரேக்கப் பேரரசன் போல்கன் தீபகற்பம் முழுவதை
யும் தன் அதிகாரத்துக்கு அடிபணிய வைத்தான். ஒரு நூற்
றாண்டிற்கு மேலாகப் பல்கேரியாவில் அரைவாசி, கிரேக்கத் தலை
யிலிருந்தது. 1186 ஆம் ஆண்டில் மீண்டும் பல்கேரியா தன்
சுதந்திரத்தைப் பெற்றது. இரண்டாம் யோன் அசன் என்பான்
(1218–1241) ஆட்சி செலுத்தியபோது பல்கேரியா மீண்டும்
படைவலிமை பெற்ற ஒரு பெரும் நாடாகிற்று. பல்கேரியாவை
மட்டுமல்லாமல் மசிடோனியா, அல்பேனியா, சேபியாவில் ஒரு
பகுதி ஆகியவைகளையும் அசனின் அரசு தன்னுளடக்கி நின்றது.
பல்கேரியாவின் பண்டைய தலைநகரான தேனோவோலில்
உள்ள நாற்பது உயிர்த்தியாகிகளின் தேவாலயத்திலே பாது
காக்கப்பட்டு வரும் கல்வெட்டு ஒன்றிலே அசன் தன் புகழ்
பாடியுள்ளான். அது பின்வருமாறு: "எத்திரியாநோப்பிளி
லிருந்து துராசோ வரையும் உள்ள எல்லா மாநிலத்தையும்
நான் கைப்பற்றியுள்ளேன். இதிற் கிரேக்க நாடும் அல்பேனியா
வும் சேபியாவும் அடங்கும். கொன்சுதாந்திநோப்பிளைச் சுற்றி

[1] E. Gibbon, "Decline and Fall of the Roman Empire" (ed. J. B. Bury, 1912), vi. 140.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1876

யுள்ள சில நகரங்களை மாத்திரம் பிராங்கு இனத்தவர் தம் ஆட்சியில் வைத்திருக்கின்றனர். ஆனால், அவர்கள்கூட என்னுடைய இறைமைக்கு அடிபணிந்திருக்கின்றனர். ஏனெனில், என்னைத் தவிர வேறு பேரரசர் யாரும் இலர்."[1] 1330 ஆம் ஆண்டில் சேபியா வெல்பசுட்டுப் போரிலே (கொசுத்தென்றில்) இப்பேரரசின் அதிகாரத்தை அழித்தபோதும் இரண்டாவது பல்கேரியப் பேரரசு 1186 தொடக்கம் 1398 வரை நீடித்திருந்தது. இந்தப் போரிலிடம் பெற்ற வீரதீரச் செயல்கள் பசுமரத்தாணி போல் மக்களின் உள்ளத்திற் பதிந்திருந்தன. 1885 ஆம் ஆண்டிலே சேபியாவிற்கும் பல்கேரியாவிற்கும் போர் தொடங்கியபோது சேபியப் படைகள் தங்களுடைய மன்னன் தசானின் பெயரை உச்சரித்துக்கொண்டு பெல்கிறேட்டின் ஊடாகச் சென்றன. தசான் என்பவன் "பல்கேரியரின் சார்" என்னும் பட்டத்தை ஏற்றான்.[2] இங்ஙனம் போல்கன் மக்களிடம் இனப்பகை வளர்ந்து நின்றமை துருக்கிக்குப் பெரிதும் சாதகமாக இருந்தது. பதினான்காம் நூற்றுண்டின் இறுதிக்காலத்தில் பல்கேரியாவும் சேபியாவும் ஒற்றுமை படையெடுத்தபோது மண்கவ்வின.

"பல்கேரிய அட்டூழியம்."

ஐந்து நூற்றுண்டுகளாகப் பல்கேரியா ஒற்றுமை பேரரசின் ஒரு பாகமாகவே இருந்தது. பல்கேரிய உழவோர்கள் யாவரும் தங்கள் போர்த்திறனை மறந்து வாழ்ந்தனர். அரசியல் உணர்ச்சியை அவர்கள் வளர்க்கவில்லை. அதனால் அவர்கள் உணர்ச்சிகுன்றி அக்கறையற்று எவர் ஆண்டாலுமென்னவென வாழ்ந்தனர். தங்களுடைய துருக்கி ஆட்சியாளரின் மேலாண்மையைச் செயலற்று ஏற்றனர். இந்த அடிமை விலங்கிலிருந்து விடுதலைபெறும் தறுவாயில் உழவோர்களுடைய பொருளாதார நிலையில் சீர்திருத்தம் ஏற்பட்டது. துருக்கிய அரசறிஞரில் ஆற்றலும் அறிவும் மிக்க மிதாத்து பாசா கொண்டுவந்த சீர்திருத்தம் பொருளாதார நிலையை மேம்படுத்தியது. 1877 ஆம் ஆண்டிலே இரசியப் படைத் தலைவர்கள் பல்கேரியாவை விடுதலை செய்ய அணிவகுத்துச் சென்றனர். துருக்கியின் அடிமை விலங்கிலகப்பட்ட தம் பல்கேரியச் "சோதரர்கள்" சாரின் தண்ணளிவல்லாட்சியில் உள்ள தங்களுடைய உழவோரைவிட நல்ல நிலையிலிருப்பதை அவர்கள் கண்டனர். இரசிய உழவோர் (மியூசிக்கு) தம் நாட்டை விட்டுப் பல்கேரிய உழவோரின் (இரயா) இடத்தைப் பெற்றால் நல்லது என்னும் கருத்தை நேரிலே கண்டவர் வாய்விட்டு "இது

[1] W. Miller, "The Balkans" (1896), 176.

[2] பக்கம் 267.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசிய உழவோருக்குப் பிழையில்லாத பேரம்" எனக் கூறியுள் 1870 – 78.
ளனர்.[1] மேலும், 1870 ஆம் ஆண்டு துருக்கிய அரசாங்கத் திடமிருந்து பல்கேரிய மக்கள் சுதந்திரமான நாட்டின திருச்சபை ஒன்றை நிறுவும் சலுகையைப் பெற்றனர். இதன் பெயர் பல்கேரியன் எச்சாற்சேற்று. இதனல் பல்கேரிய மக்கள் கிரேக்கத் திருச்சபைக்குரிய முறைமையின் கடுங்கோன்மையி லிருந்து விடுதலே பெற்றனர். எனவே, பல்கேரிய மக்கள் துருக்கியர் மீது வெறுப்புக் கொள்ளும் உளநிலையில் இருக் கவில்லே. பியூக்கரெசில் நிறுவப்பெற்ற புரட்சிக் குழுவின் முயற்சிகள் அந்நாட்டவரின் தாயகப்பற்று உணர்ச்சியைத் தூண்டவில்லே. இதற்கு மக்கள் போதிய ஆதரவு காட்டவு மில்லே. எனினும், 1875 ஆம் ஆண்டில் மின்வெட்டுப் போன்ற நிகழ்ச்சி ஒன்று தோன்றித் தென்கிழக்கு ஐரோப்பாவின் அரசியல் நிலே முழுவதையும் மாற்றிவிட்டது.[2] எசேகோவி னவில் கலாம் ஒன்று மூண்டது. இந்நிகழ்ச்சியின் எதி ரொலியாக போல்கன் தீபகற்பம் முழுவதும் புரட்சி பரவியது. எங்கும் நிலவிய அமைதியின்மை பல்கேரியாவை விட்டு வைக்கவில்லே. தாத்தர் பசார்க்கில் மக்கள் கிளர்ச்சி செய் தனர். இக்கிளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் இல்லே. இதனே இலகுவாக ஆட்சியாளர் அடக்கினர். ஆனல், இக்கலகத்தைத் தணிக்கத் துருக்கியப் போர்வீரர் வாய்விட்டுச் சொல்லமுடியாத கொடும் முறைகளேக் கையாண்டு பெரும் மாசைத் தேடிக் கொண்டனர். பாற்றுக்கு என்னுமிடத்தில் உள்ள மொத்த மான குடித்தொகை 7,000. இதில் 5,000 மக்களேத் துருக்கிய வீரர், பாலர், விருத்தர், பெண்கள் என ஈவிரக்கம் காட் டாது வாட்கிரையாக்கிக் குவித்தனர். இந்தக் கொடுந் தொழி லேப் பற்றிக் கூறும்போது பிரித்தானிய ஆணையாளர், "இந்த நூற்றாண்டைக் கறைப்படுத்திய குற்றங்களில் இதுவே மிகவும் கொடியதுபோலும்" எனக் குறிப்பிட்டார். "பல்கேரிய அட்டூ ழியம்" (1876) பண்பாடடைந்த உலகு முழுவதின் கண்டிப் பைச் சம்பாதித்தது. உவிலியம் கிளாசுதன் இதனை வரை யில்லாது ஒறுத்துரைத்தபடியால் மேற்கு ஐரோப்பாவில் உள் ளவர்களின் மனச்சாட்சியில் இக்கொடுஞ் செயலின் பாதகம் ஆழப்படிந்தது.

1877 ஆம் ஆண்டு எப்பிரில் திங்களில் நடந்த இரசியத் சான் துருக்கிப் போரைப் பற்றி இங்கு ஆராய்வாம்.[3] எல்லாப் பக்கத் சிதேபானேப் பொருத்தனே.

[1] Miller, op. cit. 206.
[2] பக்கம் 272.
[3] பக்கம் 272.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1878 திலும் அடக்கப்பட்டபடியால் துருக்கிய எதிர்ப்பு விரைந்து தரை சாய்ந்தது. 1878 ஆம் ஆண்டு மார்சுத் திங்களில் நடந்த சான் சிதேபாலேப் பொருத்தனையின்படி இப் போர் முடிவடைந்தது. இப்பொருத்தனை பல்கேரிய மக்களுக்கு மிகவும் சாதகமாக அமைந்தது. ஒன்றுபட்ட பரந்த பல்கேரியாவை உருவாக்கிப் பல்கேரியாவின் வீரதீரச் செயல்கள் நிறைந்த பழங் காலத்தை மீண்டும் புதுப்பிக்கும் இலட்சியத்தை இந்தப் பொருத்தனை உருவாக்கியது. தானியூப்பு நதி தொடக்கம் ஈசியன் வரையும், கருங்கடல் தொடக்கம் அல் பேனியா வரையும், தெற்கு வடக்குப் பல்கேரியாவையும் (தெற் குப் பல்கேரியா என்பது கிழக்கு உரூமீலியா) மசிடோனியாவிற் குறிப்பிடக்கூடிய ஒரு பகுதியையும் கொண்ட அடிமை அரசாகியது பல்கேரியா. கிரீசும் சேபியாவும் இந்த இணக் கத்தைப் பலமாக எதிர்த்தன; ஏனெனில், மசிடோனி யாவில் உள்ள தங்கள் உரிமையை இவ்வினக்கம் புறக் கணித்தது என்பதனால் என்க. பல்வேறு காரணங்களைக் கொண்டு வல்லரசுகளும் இதனை எதிர்த்தன. பல்கேரியா வின் மீக்கொளல் யோசனையைக் குறிப்பாக இங்கிலாந்து ஏற்க மறுத்தது. இப்புதிய அரசு இரசியாவின் ஒரு மாகா ணமாகிவிட இரசியா கொன்சுதாந்திநோப்பிளை நாளடைவில் கைப்பற்றுவதற்கு இது அடிகோலிவிடுமென்பது இங்கிலாந்தின் கருத்து. ஒசுற்றியாவும் அதிருத்திப்படக் காரணமிருந்தது. பொசினியாவும் எசேகோவினாவும் தன் பங்காகத் தனக்குக் கிடைக்கவேண்டுமென ஒசுற்றியா கோரிநின்றது. புயலையொத்த இந்நிலைகண்டு இரசியா அடிபணிந்தது. சான் சிதேபாலேப் பொருத்தனை நிராகரிக்கப்பட்டது. புகழ்பெற்ற பேளின் பேரவை 1878 ஆம் ஆண்டு யூன் திங்களிற் கூடிற்று. இப் பேரவையில் பிரித்தானிய பிரதிநிதிகளாக, பிரதமர் பீக்கன் பீல் பிரபுவும் பிறநாட்டுச் செயலாளர் சோல்சுபெரிப் பிரபுவும் கலந்தனர். இப் பேரவையின் பயனுகப் பேளின் பொருத்தனை உருவா கிற்று. ஒற்றுமைப்பட்ட பரந்த பல்கேரியாவைத் தோற்றுவிக் கும் கனவு பலிக்கவில்லை. இந்தப் பொருத்தனைப்படி புதிய பல்கேரியா உருவாகிற்று. "இது சுலுத்தானின் மேலாண் மையின் கீழ்த் தன்னுண்மையுடைய திறை செலுத்தும் சிற்றரசு" வடிவில் அமைந்தது. சான் சிதேபாலேப் பொருத் தனையின்படி மக்கள் கனவு கண்ட பல்கேரியாவின் ஒரு பகுதி மாத்திரம் இப்புதிய அரசில் அடங்கியது. தானியூப் பிலிருந்து போல்கன் வரையும் கருங்கடலில் இருந்து சேபியா வினதும் மசிடோனியாவினதும் எல்லைப்புறம் வரையும் உட்பட்ட பிரதேசமாகிய பல்கேரியா மட்டுமே இந்த அரசிற்குரியது எனப்

பேளின் பேரவை (1878).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தனை வரையறுத்தது. போல்கன் மலைப்பிரதேசத் 1878-86
திற்கப்பால் தெற்குப் பகுதியில் உள்ள பகுதியான கிழக்கு உரூமீலியா தன்னுண்மையுடைய மாகாணமாக அமைக்கப் பட்டது. இது "சுலுத்தானின் நேரடியான அரசியலுக்கும் படைக்குமுரிய அதிகாரத்தின் கீழ்" இயங்கும். ஆனால், இம் மாகாணத்தை "ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வல்லரசு களின் இசைவுடன் துருக்கிய அரசாங்கம் நியமிக்கும் கிறித் துவ ஆள்பதி நாயகம்" பரிபாலனஞ் செய்வான். இந்த இணக்கத்தின் விளைவாகக் கிழக்கு உரூமீலியாவிலும் மசிடோ னியாவிலும் உள்ள பல்கேரியர், ஏனைய பல்கேரியரிடமிருந்து பிரிக்கப்பட்டனர். இது ஒருபுறமிருக்க, "பீரோட்டுப் பெரும்பிரி வில் உள்ள பல்கேரிய மொழி பேசும் மக்கள்" சேபியாவுடன் இணைக்கப்பட்டனர். பல்கேரிய நாட்டினத்தின் சட்டப்படியான உரிமைகளை வெளிவெளியாகப் புறக்கணிக்கும் இணக்கம் நிரந்தரமாக நிற்கமுடியாதென்பது இயற்கையே. இருபது ஆண்டுகளுக்கு முன்னர் மொழ்தேவியாவையும் உவாலாக் கியாவையும் பிரித்து வைப்பதற்கு எங்ஙனம் தக்க காரணம் காட்ட முடியாதோ அங்ஙனம் வடக்குத் தெற்குப் பல் கேரியாவைப் பிரித்து வைத்ததற்கு இப்பொழுது காரணம் ஒன்றும் காட்ட முடியாது. சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஐக்கிய பல்கேரிய நாடு உருவாதற்குப் பிரித்தானிய நாட்டின் ஒப்பலும் இரசிய அரசாங்கத்தின் நிராகரிப்பும் கிடைத்தன. சூழியல் வல்லோரின் தொலைநோக்கிற்கும் ஆற்றலுக்கும் வழமையான சூழ்வினைத் திறனுக்கும் இந்த எதிர்ப்பும் ஆதரவும் குறிப் பிடக்கூடிய ஒரு விளக்கமாக இருந்தன.

"உழவோரின் அரசான" பல்கேரியாவின் முதலரசனுக வடக்குத் பற்றன்பேக்கைச் சேர்ந்த அலச்சாந்தர் பதவியேற்றான். தெற்குப் இவனுடைய ஆட்சிக்காலத்தில் கிழக்கு உரூமீலியாவின் பல்கேரிய தலைநகராகிய பிலிப்பொலிசில் நடந்த செங்குருதி சிந்தாத ஐக்கியம் புரட்சியின் விளைவாக வடக்கும் கிழக்கும் ஒன்றுபட்டன. (1885)
துருக்கிய ஆள்பதி கலவரமின்றித் துரத்தப்பட்டான். இளவரசன் அலச்சாந்தர் ஆட்சியாளனுகப் பிரகடனஞ் செய்யப்பட்டான். துருக்கி இதற்கு எவ்வித எதிர்ப்பும் காட்டவில்லை. ஆனால், இரசியச் சார் மூன்றும் அலச்சாந்தர் தன் வெறுப்பைத் தெரி விக்கு முகமாக இரசியப் படைத்தலைவர்களைப் பல்கேரியாவி லிருந்து திருப்பி அழைத்தான். இதனல் பல்கேரிய இளவரசனை அலச்சாந்தரின் புகழ் அவனுடைய குடிக ளிடம் மேலும் ஒருபடி உயர்ந்தது. பல்கேரியாவை விடு தலை செய்ய இரசியப் படைத் தலைவர்கள் உதவினர். ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1886-94

இரசிய முகவர்கள் புத்தியாக நடக்காமல் தாம் பெரியவர்கள் என நடந்தபடியால், பல்கேரிய மக்களின் நன்றியறிதல் உணர்ச்சி வரவரக் குன்றியது. போல்கன் நாடுகளான கிரீசும் சேபியாவும் தங்களுடன் போட்டி போடும் நாட்டின் மீக்கோளைக் கண்டு பீதிகொண்டு எதிர்த்தன. அந்தநேரத்தில் இந்த எதிர்ப்பே பாரதூரமாக இருந்தது. வல்லரசுகள் நடவடிக்கை எடுத்தபடியாலேயே கிரீசு போர்ப் பிரகடனஞ் செய்யாமல் தடுக்கப்பட்டது. கிரேக்க கடற்கரைகளை வல்லரசுகள் முற்றுகை யிட்டன. ஆனால், சேபியா தான் நினைத்தபடி செய்யக் கூடியதாக இருந்தது. இவ்விரு நாடுகளுக்கும் உள்ள தொடர்பு எல்லைத் தகராற்றாலும் இறைமுறைப் போட்டியாலும் வரவரக் குறைந்து கொண்டு வந்தது. போராட்டம் ஒன்றிற்குச் சேபியா வின் பொதுமக்களின் கருத்து ஆயத்தமாகிற்று. மங்கி வரும் தன் புகழைக் காப்பாற்ற இளவரசன் மிலான் ஆவலுற்றிருந் தனன். எனவே, நாட்டின விருப்பத்திற்கு அவனும் இலகுவில் இடமளித்தான். பல்கேரியப் படையில் அனுபவம் வாய்ந்த தலைவர்கள் இல்லை. இது பல்கேரியாவிற்கு ஒரு குறைபாடு. ஆனால், இந்த முட்டுக்கட்டைகளையெல்லாம் நாட்டின உணர்ச்சிப் பெருக்கும் இளவரசனின் உணர்ச்சிமிக்க தளபதித் தன்மையும் தகர்த்தெறிந்தன. சிலிவினிற்சா என்னும் இடத்தில் இரு படைகளும் பொருதின. மிகக் கொடூரமான மூன்றுநாட் போரின் பின்னர் போர்க்களத்தில் பல்கேரியர் வெற்றி கண்டனர். சேபியத் தலைநகரை நோக்கி அவர்களின் படைகள் முன் னேறுவதை ஒசுற்றியா தடுத்தது. பதினான்கு நாட்களாக நடந்த போர் இத்துடன் முடிவுற்றது. 1886 ஆம் ஆண்டு மாச்சுத் திங்களில் பியூக்கரெசுப் பொருத்தனை செய்யப்பட்டது. இதன்படி பல்கேரியருக்குப் போரிற்கான நட்ட ஈடோ, ஆள்புலப் பெருக்கமோ ஏற்படவில்லை. ஆனால், சிலிவினிற்சா வெற்றி, கருதிய பலனையளித்தது. அதாவது, பல்கேரியாவின் ஐக்கியம் வலுப்பெற்றது.

அலச்சாந்தர் முடிதுறத்தல் (1886)

இளவரசனை அலச்சாந்தரின் தீரச் செயல்களையும் அடக்க மான தன்மையையும் கண்ட உணர்ச்சிவசப்படாத குடிகள் அவன் மேல் அன்பு கொண்டனர். ஆனால், அவனுடைய நிலையை இரசியச் சூழ்ச்சிகள் நீடித்து நிற்கவிட வில்லை. அவனின் உறவினனான மூன்றாம் அலச்சாந்தர் தனிப் பட்ட முறையில் அவனை வெறுத்தான். மேலும், அலச்சாந்தர் சுதந்திரமான போக்கையைப் பின்பற்ற முயற்சி செய்தபடியால், அவனுடைய அழிவுக்கு அவனுடைய பகைவர் வழி தேடினர். இவ்விளவரசனைப் பிடித்து நாடு கடத்த எடுத்த இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகள் பயனளிக்கவில்லை. 1886 ஆம் ஆண்டு ஒகத்துத் திங்கள் 21 ஆம் நாளன்று பட்டத்தைத் துறக்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன்பின்னர் அவன் நாட்டினின்றும் கடத்தப்பட்டான். எனினும், அவனை ஆதரிக்க நாட்டினர் திரண்டெழுந்தனர். அஞ்ஞாதவாசத்திலிருந்து அவன் மீண்டும் அழைக்கப்பட்டான். இரசியாவின் வலிமையை எதிர்க்கக்கூடிய சத்தி தனக்கில்லை எனத் தன்னம்பிக்கை இழந்த அலச்சாந்தர் தானுகவே பதவியைத் துறந்தான். அதன்பின்னர் பட்டமேற்க வேண்டியவனைத் தெரிவு செய்வதைப் பிற்போட முகவர்கள் தங்களால் இயன்றவரை சூழ்ச்சி செய்தனர். இருந்தும் தங்கள் இலக்கைப் பெற இவர்கள் தவறிவிட்டனர். ஆனல், இரசியப் பாதுகாப்பாளர்களையும் பல்கேரியப் பொதுமக்களையும் இம் முகவர்கள் முற்றுகப் பிரித்துவிட்டனர்[1]. பல மாதங்களுக்குப் பின்னர், அரசிற்குத் தகுதியுடையவனுகச் சட்சகோபேக்கைச் சேர்ந்த பேடினந்து இளவரசனைக் கண்டுபிடித்தனர். இவன் மன்னன் உலூயி பிலிப்பின் வழித்தோன்றலாவன். 1887 ஆம் ஆண்டு யூலைத் திங்களில் இவன் பல்கேரிய இளவரசனுனன். இப்புதிய அரசனுக்கும் பழைய அரசனுக்கும் குணத்தில் வேற்றுமைகள் நிறைய இருந்தன. "இளவரசன் பேடினந்து தற்செயலாக நிகழ்ந்த நிகழ்ச்சியினல் இறையானன். இவன் இவ்வாறு ஆக வேண்டும் என்பது இயற்கையின் நியதியன்று". எனினும், அலச்சாந்தரிலும் பார்க்க இவன் சூழியலில் மிகுந்த ஆற்றலுடையவன். இவன் ஆண்டுவந்த ஏழு ஆண்டுக் காலத்திலே சிதீவன் சிதம்புலோபு என்பவனின் கையிலே தான் பொறுப்பேற்ற நாட்டின் கதியை ஒப்படைத்தான். தனது மதித்திறமையினுலேயே இவ்வாறு செய்தான். சிதம்புலோபு திறமைசாலியாவான். போல்கன் நாடுகளில் இற்றைவரையும் இருந்த சூழியல் வல்லோருள் இவனே தலை சிறந்தவன். "பல்கேரியப் பிசுமாக்கு" என்னும் பட்டத்தை இவன் சம்பாதித்துக் கொண்டான். துருக்கியரின் கட்டுப்பாட்டிலிருந்த பல்கேரியாவை விடுதலை செய்வதற்கு வந்த புரட்சி இயக்கத்தில் இவன் பிரபலமடைந்தான். இவனுடைய தாயகப்பற்று குறைவுறுத தன்மையுடையது. இதனுலேயே இளவரசன் அலச்சாந்தருக்கு எதிராக எற்பட்ட மோசமான சதிகளை இவன் தோல்வியுறச் செய்தான். முதலமைச்சனுகக் கடமையாற்றிய காலத்திலே, ஐரோப்பியரின் கருத்திலே, தன் உறுதியான மனத் திடத்தினலும் தன் நாட்டின் நலன் ஒன்றையே கருதிப் பின்பற்றும் பூட்கையினலும் பல்கேரியாவின் புகழை ஒருபடி உயர்த்திவிட்டான். எனினும், தன் பெரும் அமைச்சனின் அரச அவை

1886 – 94

சிதீவன் சிதம்புலோபு.

[1] W. Miller, "The Ottoman Empire" (1913), 424.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1895 க்கு ஒவ்வாத பழக்கவழக்கங்கள் சிலவற்றைக் கண்டு இளவரசன் பேடினந்து எதிர்ப்புக்காட்டினான். இச்செயல் இவர்களுடைய உறவைப் பாதித்தது. 1894 ஆம் ஆண்டிலே சேர்மானியப் பேரரசனின்[1] முன்மாதிரியைப் பின்பற்றி சிதம்பு லோபுவைப் பதவியிலிருந்து மன்னன் நீக்கிவிட்டான். இங்ஙனம் வீழ்ச்சியுற்ற இவனின் எதிரிகளின் கடும்பகை மீண்டும் இவனைத் தொடர்ந்தது. ஒய்வு பெற்றிருந்த இவன் அடுத்த ஆண்டிலே படுகொலை செய்யப்பட்டான். இக்கொலை வெட்கத்திற்குரியதொன்றாகும். இவனைத் தாக்கிக் கொன்றவர்கள்மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணை நடக்கவிடாமல் அரசாங்கம் தாமதஞ் செய்தமை பெரும் இரண்டகமாகும். போல்கன் உண்ணாட்டு அரசியலில் நிலவிய நிதானமில்லாத, பழிவாங்கும் தன்மையை இச்செயல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

சேபியரின் பழைய வரலாறு

போல்கன் தீபகற்பத்திலே சேபியர் ஏழாம் நூற்றாண்டிற் புகுந்தனர். இவர்கள் விரைந்து குடியேறி எத்திரியாற்றிக்குக் கடற்கரை ஓரத்திலும் தெற்கில் மசிடோனியா வரையும் இக் காலத்தில் மொன்றெநீகிரோ என அழைக்கப்படும் அரசு வரையும் பரந்திருந்தனர். சிலகாலஞ் சென்றபின்னர், அயல்நாடாகிய பல்கேரியாவுடன் இவர்கள் மோதிக் கொண்டனர். இவ்வீரினத்தாரின் பகை ஆயிரமாண்டுகளுக்கு மேல் நீடித்திருந்தது. போரிலே அதிட்டம் ஒரு பக்கத்திலேயே நில்லாது மாறி மாறி நின்றது. முதற் பல்கேரியப் பேரரசு பரந்திருந்தபோது சேபியா மூற்றுகச் சிதைவுற்று அல்லற்பட்டது.[2] சிமியோன் இறந்தபின்னர் சேபியர்கள் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றனர். சிலகாலமாகப் பைசாந்தியப் பேரரசரின் கீழ் இவர்கள் இருந்தார்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டின்போது சேபியாவின் வரலாற்றிலே புதியதொரு திருப்பம் ஏற்பட்டது. முந்திய காலத்தில் சேபியரின் அரசியல் அமைப்பே அவரின் போதாத காலத்திற்குப் பெருமளவிற் காலாக இருந்தது. சேபிய அரசு பலமற்ற கூட்டாட்சி முறையில் அமைந்தது. இந்தக் கூட்டாட்சியில் பல்வேறு இனத்தினரின் குறுநில மன்னரிருந்தனர். மத்திய அரசாங்கத்தில் ஆட்சி செலுத்திய சிற்றரசனுக்கு இக் குறுநில மன்னர்கள் பெயரளவில் மாத்திரமே கீழ்ப்படிந்திருந்தனர். பலம் நிறைந்த கூட்டாட்சி ஒன்றை நிறுவத் தவறியபடியால் சேபியரின் வலிமை யாவும் வீணுகிற்று. இதனால் பல நூற்றாண்டுகளாக அவர்களின் அரசியல் அபிவிருத்தி தடைப்பட்டது. இந்தக் குறைபாட்டை இசிற்றீபன் நெமஞ்சா (1143,

[1] VIII ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

[2] பக்கம் 259.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது 1159–1195) நீக்கினன். இவன் குறுநில மன்னர் களைத் தோற்றுவித்தான். அதே நேரத்தில் நெமஞ்சா தன் அரசை முன்னர் இருந்ததிலும் பார்க்க இருமடங்கு பரப் பளவிற் பெரிதாக்கினன். இதனல் தல்மேசியாவையும் பொசி னியாவையும் எனைய ஆள்புலங்களையும் இவன் தனதாக்கினன். மத்திய காலத்தில் சேபிய அரசு இசுற்றீபன் தசானின் ஆட்சிக் காலத்தின் போது (1336–1356) உச்சநிலையை அடைந்தது. இவனே சேபிய மன்னருள் அதி பராக்கிரமம் வாய்ந்தவன். இவன் கட்டி யெழுப்பிய பேரரசு ஏறத்தாழப் போல்கன் தீபகற்பம் முழுவதையும் தன்னுளடக்கி நின்றது. இப்பேரரசு தானியூப்பிலிருந்து கொரிந்து விரிகுடா வரையும் எத்திரி யாற்றிக்கிலிருந்து ஈசியன் வரையும் பரந்து பொசினியா, எசே கோவினு, மசிடோனிய அடிமைநாடு, பல்கேரியா ஆகிய நாடு களைக் கொண்டதாய்ப் பரந்து நின்றது. 1356 ஆம் ஆண்டிலே தசான் திடீரென இறந்தபடியாலேயே கொன்சுதாந்திநோப் பிள்கூடத் தப்பியது. தசானுக்குப் பின்னர் சேபியப் பேரரசு நீண்டகாலம் நிலைத்து நிற்க முடியவில்லை. விரைந்து இது துண்டு துண்டாகச் சிதறியது. தசான் இறந்து முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பேரரசு புகழ்பெற்ற கோசொவோ சமரிலே துருக்கியரால் மீட்சியின்றி இறுதியாக அழிக்கப்பட்டது. இந்தச் சமர் (1389) போல்கன் அரசுகளின் எதிர்வரும் ஐந்து நூற்றாண்டுகளின் போக்கை நிர்ணயித்தது. துருக்கியர் எழுபது ஆண்டு காலமாகச் சேபியாவைப் புறம்பாக வாழவிட்டனர். இருந்தபோதும் சேபியா நடைமுறையில் துருக்கியின் ஒரு மாகா ணமாகவே இருந்து வந்தது. ஆனல், 1459 ஆம் ஆண்டில் சேபியா துருக்கிப் பேரரசின் ஒரு பாகமாக இணைக்கப்பட்டது. 1790

விடுதலை முயற்சிகள்

துருக்கியரின் அடிமை ஆட்சியிலிருந்து விடுதலை பெறுதற்குப் பல்கேரியருக்குப் பிறநாட்டின் படைத்துணை தேவைப்பட்டது. ஆனல், சேபியர் தம்முடைய கையிற் பிடித்த வாட்பலம் மூலம் விடுதலை பெற்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னரே சேபிய இனத்தினர் தணியாத சுதந்திரப் பற்றினல் உந்தப்பெற்று ஒற்றோமன் அடிமைத் தளையை உதறி எறியப் போரிட்டனர். கோசொவோச் சமருக்குப் பின்னர் காலத்திற்குக் காலம் சேபிய மக்கள் பெருமளவில் தம்நாட்டை விட்டுத் தானி யூப்பைக் கடந்து தெற்கு அங்கேரியிற் புகலிடம் பெற்றனர். இற்றை வரையும் இவர்கள் இங்குதான் வாழ்கின்றனர். புதிய இடத்திற் குடியேறியிருந்தாலும் தங்களின் தாயகப் பற்றை இவர்கள் இழக்கவுமில்லை ; தம்மை அடக்கியாண்டவர்களிடங் கொண்ட வெறுப்பை மறக்கவுமில்லை. துருக்கி மீது அங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1804-6 கேரிய அரசர்கள் தொடுத்த போர்களில் இக் குடியேறிகள் அளித்த உதவி அளப்பரியது. சேபியாவின் விடுதலை கிடைத்து விட்டதுபோலப் பல சந்தர்ப்பங்களில் தோன்றியது. இப்படி யான சந்தர்ப்பத்திற்கு, பிரான்சியப் புரட்சிக்கு முன்னர் கூடுத லான வாய்ப்பிருந்தது. "சேபிய இனத்தைக் காப்பாற்றுங்கள்; உங்களின் மூதாதையருக்கு மிகவும் வேண்டியவர்களான சேபிய மக்கள் மீது உங்கள் திருமுகத்தைத் திருப்புங்கள். இன்பம் இழந்து கணக்கிலடங்கா துன்பப்பட்டுத் தவிக்கும் சேபியா வைப் பாருங்கள். எங்கள் பண்டை வீரர்களைத் திரும்பவும் தோற்றுவியுங்கள். எங்கள் பழைய நாட்டை எமக்கு ஈயுங்கள்".[1] சேபியப் புலவரில் ஒருவனான ஒபிரதொவிக்கு என்பான் பேரர சன் இரண்டாம் யோசேப்பைப் பார்த்து மேல்வருமாறு கூறி னான். ஐரோப்பிய வல்லரசுகள் 19 ஆம் நூற்றுண்டிலே ஒன்றன் மீதொன்று கொண்டிருந்த பொறுமையின் காரண மாக உருக்குலையாமலிருந்த ஒற்றுமை பேரரசு, அழிந்தொழி யும் தறுவாய்க்கு வந்துவிட்டதுபோலத் தெரிந்தது. ஒசுற்றி யாவும் இரசியாவும் கொண்டுள்ள நட்புறவில் பொல்லாத போட்டி பின்னிப்படர்ந்திருந்தது. இப்போட்டி போல்கன் தீபகற் பத்திலிருந்து துருக்கி துரத்தப்படுமென்பதற்கு முன்னறி குறியாயது. போல்கன் குடாநாட்டின் வரலாற்றிலே நெருக்கடி நிறைந்த இந்தக் காலத்தில் இரண்டாம் யோசேப்பு இறந்தான் (1790). அவனுடைய அகால மரணத்தினால் ஒசுற்றியப் பூட்கை யிலே பெரும் மாற்றம் எற்பட்டது. மீண்டும் துருக்கியராலே அடிமை விலங்கிடப்பட்ட சேபிய மக்கள் தம் நம்பிக்கை தடைப் பட்டிருப்பதைக் கண்டு உளம் உடைந்து அல்லற் பட்டனர். தன்கையே தனக்குதவும்; மற்றவர்களை நம்ப முடியாது என் னும் பாடத்தை வலிமைமிக்க அயல் நாடுகள் சேபியருக்குப் படிப்பித்து விட்டன. மீண்டும் மீண்டும் தோல்வி கண்ட சேபியர் இடச்சுக்காரரைப் போலப் பாடம் படித்துணர்ந்தனர். மூன்று நூற்றுண்டுகளுக்கு முன்னர் இசுப்பெயினை எதிர்த்து இடச்சுக் காரர் செய்த போராட்டத்தின் போது தனிப்பட்டவர்களைப்போலத் தேசமும் தன்னுடைய போராட்டத்தைத் தானேகவே நடத்த வேண்டுமென்பதைக் கற்றுணர்ந்தனர்.

கரா யோச்சு. இக்காலச் சேபிய அரசைக் கால்கொள்ளச் செய்தவன் கரா யோச்சாவான். இவன் உழவன் ஒருவனின் மகன். சேபியா வில் வாழ்ந்த துருக்கிய காலாட்படை வீரர்களான யானிசரி களின் தீச்செயலை எதிர்த்துத் தன் நாட்டவருடன் கூடி இவன் கலகம் விளைத்தான் (1804). இவன் மலைச்சாரலில்

[1] Cited, Miller, "The Balkans", 306.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளித்திருந்துகொண்டு ஒரு பெரும் கலகக் கூட்டத்தின் 1804 – 6
தலைவனைனன். யானிசரிகளின் தீச்செயல்கள் யாவும் சுலுத்தானுக்கும் நஞ்சாகவே இருந்தன; எனெனில், சுலுத்தானின் அதிகாரத்தை மீறிச் சுலுத்தானுக்கு எதிராகக் கலகம் விளைவித்த உவிட்டின் பாசாவுடன் அரச துரோகமான முறையில் இவர்கள் நட்புறவு கொண்டிருந்தனர். எனவே, சேபியருடன் சேர்ந்து பெல்கிறேட்டை யானிசரிகளின் கையிலிருந்து மீட்குமாறு பொசினியாவை ஆண்ட சாவிற்குத் துருக்கி அரசாங்கம் கட்டளையிட்டது. இரண்டு படைகளும் சேர்ந்து போர் நடத்தி வெற்றி கண்டன. முசல்மான்களின் கலகம் அடக்கப்பட்டது. கொடுங்கோன்மையினால் துன்புற்றுக்கொண்டிருந்த சேபியா அதினின்றும் இப்பொழுது விடுவிக்கப்பட்டது. குழப்பஞ் செய்த யானிசரிகளைப் புறமுதுகு காட்டச் செய்ததனால் சேபியர் இறுமாப்படைந்தனர். ஆயுத வசதிகள் இருந்த படியால் துருக்கிய அரசாங்கத்திற் கெதிராகச் சுதந்திரப் போர் தொடுக்கலாம் என்ற ஆசை சேபியர் உளத்தில் உருவாகியது. சேபியக் கோட்டைகளிலிருந்த துருக்கியப் படைகளை வெளியேற்ற வேண்டுமெனச் சேபியர் கோரினர். இந்தக் கோரிக்கைக்கு விட்டுக்கொடுக்கின்ற போக்குச் சுலுத்தானிடம் இல்லை; எனெனில், இப்படி விட்டுக்கொடுத்தால் பொதுமக்களிடம் சுலுத்தானின் அதிகாரம் அற்று அழிந்துவிடும். எனவே, யானிசரிகளின் கலகத்தை அடக்கியது போலச் சேபியரின் கலகத்தையும் அடக்கச் சுலுத்தான் முயற்சிகள் செய்தான். கிளர்ச்சிக்காரர்களை அடக்குவதற்காக அவன் படை மேல் படையை எவினன். ஆனால், இப்பிரதேசத்தில் மலைகள் நிறைந்திருந்தபடியால் கிளர்ச்சியாளருக்கு நிலைமை[1] கொரில்லாப் போர் முறைக்கு வாய்ப்பானதாக இருந்தது. மிசிச்சார் என்னுமிடத்தில் (1806) நடந்த போரிலே துருக்கியப் படைகள் படுதோல்வியடைந்தன. இத்துடன் போர் முடிந்தது. மிகவும் தாராளமான சமாதான உடன்படிக்கைகளுக்குச் சுலுத்தான் இடம் கொடுத்தான். அவையாவன: பூரண தனியாண்மை; பெல்கிறேட்டைத் தவிர எனைய கோட்டைகளில் இருந்து துருக்கியப் படைகள் வெளியேறல்; துருக்கிய நிலச்சொந்தக்காரரின் நிலபுலங்களைப் பறிமுதல் செய்தல். சேபியர்கள் இங்ஙனம் ஈட்டிய வெற்றி மறக்கமுடியாத தொன்றாகும்; எனெனில், வேற்றவர் உதவியின்றித் தங்கள் உழவன் ஒருவனது தலைமையில் இவர்கள் சுதந்திரப் போராடி வெற்றி கண்டனர். சில ஆண்டுகளாகச் சேபியாவில் அமைதி நிலவியது. துருக்கியின் நன்மைக்குச் சமாதானம் கட்டாயமாக

[1] **Lyde and Mockler-Ferryman, "A Military Geography of the Balkan Peninsula" (1905), 89.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1812–60

வேண்டும்; ஏனெனில், இரசியா தன் ஆக்கிரமிப்பைத் துருக்கி மீதும் செலுத்தத் தொடங்கிவிட்டது. 1812 ஆம் ஆண்டில் இந்த நிலை மாறியது. நெப்போலியன் தமது நாட்டை நோக்கிப் படையெடுத்தபடியால் அதிலேயே இரசியர் தங்கள் முழுக் கவனத்தையுஞ் செலுத்திவந்தனர். எனவே, சேபியாவை மீண்டும் துருக்கி கைப்பற்றுவதைத் தடுப்பதற்கு இரசியர் முயற்சிக்கவில்லை. இந்தப் போராட்டத்திலே துருக்கியின் பலம் அதிகமாகவும் சேபியாவின் படைப்பலம் குறைந்தும் இருந்தது. எனவே, உளம் நலிந்துபோன கரா யோச்சு போராட்டத்தைக் கைவிட்டான். ஆனால், புகழ்பெற்ற இந்தச் சேபியத் தலைவனின் வாகைமாலை வேறு ஒரு தலைவனுக்குக கிட்டியது. அவனும் உழவனே. அவனுடைய பெயர் மிலோசு ஒபிரெனெவிக்கு என்பதாகும். அவன் இக்காலச் சேபியாவின் இரண்டாவது சிற்பியாவான். சுதந்திரப் போராட்டம் தொடர்ந்து நடந்தது. இரசியா தலையிடக்கூடுமென்ற நிலை 1815 இல் ஏற்பட்டது. இந்த இக்கட்டான நிலையைக்கண்ட சுலுத்தான் சேபியருக்குத் தன்னுட்சி உரிமையை வழங்கினன். சில ஆண்டுகளுக்குப் பின்னர் எத்திரியாநோப்பிட் பொருத்தனை செய்யப்பட்டது (1829).[1] இந்தப் பொருத்தனையின்படி சேபியா செயலளவிற் சுதந்திர அரசாயிற்று. மிலோசு அரச பட்டத்தையும் பரம்பரையாக ஆளும் உரிமையையும் பெற்றான். இதனைத் துருக்கி அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

போட்டியிடும் சேபிய அரச வமிசங்கள்.

சேபியாவின் விடுதலை கராயோச்சுவிக்கு வமிசத்தினரிலும் ஒபிரெனெவிக்கு வமிசத்தினரிலும் தங்கியிருந்தது. இவ்விரு வமிசங்களுக்கும் ஏற்பட்டிருந்த போட்டி சேபியாவின் போதாக் காலம் என்க. இவ்விரு வமிசத்தினரும் தொடக்கத்திலிருந்தே ஒருவரை யொருவர் பழித்துத் தூற்றி வந்தனர். தன் போக்குக்குத் தடையாகித் தன்னுடன் போட்டியிட்டுக்கொண்டிருந்த ஆபத்தான கரா யோச்சு என்பவனை மிலோசு என்பவன் படுகொலை செய்வித்தான் (1817). இது கேட்டுக்கு அடிகோலியது. இதனால் பழிவாங்கும் உணர்ச்சி தலையோங்கி நின்றது. இங்ஙனம் படுகொலை செய்வித்தபடியினால் கரா யோச்சுவினுடைய இரண்டாம் மூன்றும் சந்ததியினரும் இரத்தக்கறை படியுஞ் செயலில் இறங்கிப் பழிவாங்கினர். மேலும் மிலோசுவினது கடுங்கோன்மை ஆட்சியும் நீதிநியாயமற்ற கோரிக்கைகளும் அவனுடைய நாட்டு மக்களுக்கு வெறுப்பையூட்டின. இதன் விளைவாக 1839 ஆம் ஆண்டில் அவன் பதவியைத் துறக்கவேண்டியதாயிற்று. அவனுக்குப் பின்னர் அவனுடைய இரு புதல்வர்களான இரண்டாம் மிலான்

[1] பக்கம் 252.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒபிரனெவிக்கும் மூன்றும் மைக்கல் ஒபிரனெவிக்கும் அரசெய் 1860-77
தினர். இவர்களில் முன்னவன் அரசெய்தியதும் இறந்துவிட் டான். பின்னவனெவெனில் குறுகிய காலமாகிய மூன்றுண்டு களே அரசு கட்டிலில் இருந்தான். அதன் பின்னர் பழைய தேசியத் தலைவனின் மகனை அலச்சாந்தர் காராயோச்சுவிக்கு என்பானைச் சேபிய மக்கள் தம் ஆட்சியாளனாகத் தெரிந்தெடுத் தனர். இவன் பதினாறு ஆண்டு காலமாக ஆட்சி செலுத்தினன் (1842–1858). அதன் பின்னர் இவன் பதவி பறிபோயிற்று. கிரைமியப் போரின்போது இவன் நடு நிலைமை வகித்தான். இதனால் நாட்டில் இவனது செல்வாக்குக் குன்றியது. ஏனெ னில், சேபிய மக்களின் அனுதாபம் இரசியாமீதே யிருந்தது. சேபிய மன்னரின் வமிசத்தில் இன்னுமொரு மாற்றம் ஏற் பட்டது. அஞ்ஞாதவாசத்திலிருந்த மிலோசு மீண்டும் தாய் நாட்டிற்கு வரவழைக்கப்பட்டான். அப்போது அவனுக்கு வயது எழுபத்தொன்பது. 1860 ஆம் ஆண்டு அவன் இறந் தான். அதுவரையும் அவனது தனியாட்சி தொடர்ந்து நடை பெற்றது. அவன் இறக்கும்போது ஆட்சியைத் தன் மகன் மூன்றும் மைக்கல் ஒபிரனெவிக்கிடம் ஒப்படைத்தான். 18 ஆண்டுகளுக்கு முன்னர் மைக்கல் மூன்றுண்டு காலம் ஆட்சி செய்தவனாவான். இதுவரையும் சேபியாவை ஆண்ட மன்னர்களுள் மைக்கலே மதியூகத்திற் சிறந்தவன். திறமை யிலும் அவன் அங்ஙனமே சிறந்து விளங்கினான். தன் நாட் டில் உள்ள பிற்போக்கு நிலையிலே தேங்கிய ஏழை உழவோ ருக்கு ஏற்ற பல அரசியல் பொருளாதாரச் சீர்திருத்தங்களை இவன் தொடக்கிவைத்தான். சேபியக் கோட்டைகளிலிருந்து துருக்கிப் படைகளை வெளியேற்றும்படி 1867 ஆம் ஆண்டிலே துருக்கிய ஆட்சியாளரை ஊக்குவித்து வெற்றி கண்டான். இச் செயல் பெரியதொரு சூழியல் வெற்றியாகும். இவ்வெற்றி யின் பயனாகவும், நிதான கொள்கையின் பயனாகவும் மைக் கல் தன் நாட்டிலே நன்மதிப்பைப் பெற்றான். ஆனால், கரா யோச்சுவிக்கின் வமிச அபிமானிகளை எவ்விதமாகவும் இணக்கம் செய்ய முடியாமலிருந்தது. 1868 ஆம் ஆண்டில் மைக்கல் மிருகத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டான். மைக்கலுக்கு அடுத்ததாகப் பீற்றர் காராயோச்சுவிக்கைப் பட்டத்திற்குக் கொண்டு வர முயற்சி யொன்று நடந்தது. ஆனால், அரசாங்கத்தின் சத்தி இம்முயற்சியை முறியடித்தது. குறித்த பீற்றர் நாடு கடத்தப்பட்ட அலச்சாந்தரின் மகனாவான். மைக்கலின் உற வினனை நான்காம் மிலான் ஒபிரனெவிக்கிற்கு முடியுரிமை கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1860 – 77. இரசிய துருக்கிப் போர். 1877

இளவரசன் மிலானின் ஆட்சிக்காலம் மறக்கமுடியாத காலம்; ஏனெனில், அப்பொழுது சேபியரின் இனம் (1875 ஆம் ஆண்டிலே) பெரியதொரு கிளர்ச்சி செய்து கலகம் விளைத்தது. உரூமேனியாவும் பல்கேரியாவும் இதனால் எங்ஙனம் பாதிக்கப் பெற்றுள்ளன என்பதை முன்னரே கண்டுள்ளோம். சேபியாவையும் மொன்றெநீகிரோவையும் இது எங்ஙனம் பாதித்தது என்பதை இப்போழுது நோக்குவாம். இந்த இயக்கம் எசேகோவினாவிலே தொடங்கியது. இங்குள்ள உழவோர் நிலச் சொந்தக்காரர்களின் பிடியிலும் வரி வசூலிப்போரின் பிடியிலும் சிக்கித் தவங்கொண்ட அல்லற்பட்டனர். நிலத்தை உழுது பயிர் செய்தோர் அறுவடையில் மூன்றிலிரண்டு பங்கிற்கு மேலாக வரியிறுத்தனர் என்று கூறப்பட்டது. இதனைவிட உழவோர் நிலமானியக் கடப்பாட்டினாலே பொருளாதாரத்திலும் அடிமைகளாயினர். இது உழவோருக்குப் பெரும் பாரமாயிற்று. இந்த இயக்கம் பொசினியாவிற்குப் பரவியது. பொதுமக்களின் அபிப்பிராயத்தினாலே தூண்டப்பெற்ற சேபியாவும் மொன்றெநீகிரோவும் அடக்கப்பட்ட தம்மின மக்களான சேபியருக்கு உதவ வேண்டியதாயிற்று. இந்தப் போரிலே துருக்கியர்வெற்றி பெற்றனர்; ஆனால், இரசியா தலையிட்டுச் சேபியாவை அழிவிலிருந்து மீட்டது. இரசியாவிற்கும் பெரிய பிரித்தானியாவிற்கும் போர் மூளக்கூடுமென்னும் ஆபத்திருந்தது. ஆனால், இந்த ஆபத்து விரைவில் நீங்கியது. ஏனெனில், பல்கேரியாவில் நடந்த அட்டூழியங்களின் விளைவாகப் பிரித்தானியா துருக்கியுடன் நட்புறவு செய்ய முடியாமலிருந்தது. இவ்விரு நாடுகளும் கிரைமியப் போரின்போது நேசநாடுகளாக இருந்தனவென்பதை முன்னரே கண்டுள்ளோம். "பல்கேரியாவில் நடந்த நிகழ்ச்சிகளினாலே துருக்கிமீது இருந்த அனுதாபம் முற்றுக அழிந்துவிட்டது. இந்த உணர்ச்சி பிரித்தானிய நாடெங்கும் பரவி வலுப் பெற்றது. எனவே, இரசியா துருக்கி அரசாங்கத்தின்மீது போர் தொடுத்தாலுங்கூட மேன்மை தங்கிய மகாராணியாரின் அரசாங்கம் தலையிடுவது இயலாத செயலாகிவிட்டது" எனப் பிரித்தானிய பிறநாட்டுச் செயலாளர் எழுதினர். சான் சிதேபாலே உடன்படிக்கைப்படி போர் முடிவடைந்து சமாதானம் நிலவியது. இந்தப் பொருத்தனை சேபிய நாடுகள் இரண்டிற்கும் வாய்ப்பாக இருந்தது. இந்த இரு நாடுகளும் பெரும்பாலும் ஒரே எல்லையை உடையனவாயின. தென்பகுதியில் சேபியாவிற்குப் பெருமளவில் ஆள்புலம் பரந்தது. மொன்றெநீகிரோவோவெனில் "பரப்பில் மூன்று பங்கு பருமனுகியது; குடித்தொகையில் இரட்டித்தது. இந்த நியதிகள் பின்னர் பேளின் பேரவையிலே திருத்தியமைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. பேளின் பேரவைப்படி தன் ஈட்டத்தில் அரைப் பங்கை மொன்றெநீகிரோ கைவிட வேண்டியதாயிற்று. தென்பகுதியில் சேபியா இழந்த பிரதேசத்திற்கு நட்ட ஈடாகப் பல்கேரியா வழங்கப்பட்டது. இதனைவிடப் பொசினியாவையும் எசேகோவினவையும் ஒசுற்றியப் படைகள் கைப்பற்றின. இந்த இணக்கம் சேபியா, மொன்றெநீகிரோ, பொசினியா, எசேகோவினா ஆகிய இடங்களில் வாழ்ந்த சேபிய இனத்துட் பிளவை உண்டுபடுத்தியது. எனவே, சேபியத் தாயகப் பற்றுடையோரின் நம்பிக்கை இதனால் தளர்வடைந்தது; ஏனெனில், தாயகப்பற்றுடைய இவர்கள் ஐக்கியமாக உருவாகும் சேபிய இனத்தாரை ஒரு குடைக்கீழ் ஒற்றுமையாக்க நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால், இந்த இணக்கம் சேபிய முடியாட்சிக்கும் ஒசுற்றிய, அங்கேரிய முடியாட்சிக்குமிடையே இணக்க முடியாத இனப் பகையை உண்டுபடுத்தியது. 1878 – 1903.

சேபிய முடியாட்சி.

இரசியத் துருக்கிப் போரின் விளைவாகச் சேபியாவின் ஆள் புலவெல்லை அகன்றது. அதுமட்டுமன்று. அதன் சுதந்திரம் நியமப்படி ஏற்கப்பட்டது. 1882 ஆம் ஆண்டில் இளவரசன் மிலான் அரசன் எனும் பட்டத்தை ஏற்றுக்கொண்டான். அடுத்த இருபதாண்டு காலம் சேபிய வரலாற்றிலே அரண்மனை அவதூறுகள், படுகொலைகள், மீண்டும் மீண்டும் கிளர்த்தெழும் திடீர் அரசியற் புரட்சிகள் ஆகியன மலிந்திருந்தன. மக்களிடம் செல்வாக்கை இழந்த மன்னனை மிலான் 1889 ஆம் ஆண்டிலே முடியைத் துறந்தான். அலச்சாந்தர் குற்றகவையனை படியால் அடுத்த நான்கு ஆண்டுகளாகப் பதிலாண்மை நடந்தது. 1893 ஆம் ஆண்டில் மன்னன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினன். தாராளப் போக்குள்ள அரசியல் யாப்பை நீக்கினன். இந்த யாப்பு இவனுக்கு முன்னர் இருந்த ஆட்சியாளராலே உருவாக்கப்பட்டது. இவனுடைய திருமணம் அதிட்டமற்றது. இதனால் இவனது நிலை அறைபோயிற்று. 1903 ஆம் ஆண்டில் (யூன் 10) இளவரசன் மைக்கல் இறந்த வருடாந்தத் தினத்தன்று இவனும் இவனின் இராணியும் இவர்களுடைய அலுவலாளராற் படுகொலை செய்யப்பட்டனர். இங்ஙனம் அலச்சாந்தர் கொல்லப்பட்டதும் ஒபிரனெவிக்கின் வமிசம் முடிந்தது. அலச்சாந்தருக்கு உரித்தாளியில்லை. எனவே, அரசு கட்டில் கராயோச்சுவிக்கின் வமிசத்திற்கு மீண்டும் உடைமையாகியது. இந்த வமிசத்தில் வந்தவனே மன்னன் பீற்றராவான். இவனுடைய தந்தை சேபிய இளவரசனைப் பதினறு ஆண்டுகாலம் இருந்தவனவன் (1842–1858). இரண்டு வழியிலே புதிய இறையான பீற்றர் தனக்கு முன்னர் இருந்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1878 – 1903

களிலும் பார்க்க வேறுபட்டிருந்தான். மன்னன் மிலானின் ஒசுற்றேபில் பூட்கையை இவன் கைவிட்டான். இச்செயல் இவனது போக்குக்குத் தகுந்தது. எனெனில், யோன் சுதுவட்டுமில் என்னும் ஆசிரியர் ஆங்கிலத்தில் யாத்த சுதந்திரத்தைப் பற்றிய கட்டுரையை இவன் மொழிபெயர்த்தான். சட்டவிணக்கமுடைய அரசனுகவே இவன் சேபியாவை ஆட்சி செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1912 இல் போல்கன் நிபகற்பம்

(புள்ளியிட்ட பகுதி ஐரோப்பாவிலுள்ள ஒறறுமன் பேரரசைக் காட்டுகின்றது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் VII

ஐரோப்பாவின் ஐக்கியம்

1815–23
உலகெங்கும் அமைதியை நிலைநாட்டும் கனவு.

ஆங்கிலேய அரசியலில் பிரான்சியப் புரட்சியினால் பல விளைவுகள் ஏற்பட்டன. உலகமெங்கும் அமைதியை நிலவச் செய்வதிலே ஆங்கிலச் சீர்திருத்தவாதிகள் கவனஞ் செலுத்தினர். இது பிரான்சியப் புரட்சியின் உடனடியான விளைவாகும். அத்துடன் இதுவே முக்கியமான விளைவாகவுங் கூடும். பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்த அரசாங்கங்கள், வமிசத்தையும் ஆள்புலத்தையும் பற்றி ஆட்சியாளருக்கிருந்த வாஞ்சைக்கு நாட்டின் நலனை இரையாக்கின. இதுவே இவ்வரசாங்கங்களுக்கு எதிரான முக்கிய குற்றச்சாட்டாகும். ஒவ்வொரு நாட்டிலும் "வயதானோர் தொழிற்சாலைக்கும் இளைஞர் தூக்குமரத்திற்குஞ் செல்வதைக் காண்கின்றோம்" எனத் தொமசு பெயின் என்பான் 'மனிதனின் உரிமை' என்னும் நூலில் எழுதியுள்ளான். தொடர்ந்து நடந்த போர்களினாலும் அப்போர்களுக்கென்றியமையா வரிப்பளுவினாலும் பெரும்பான்மையான மக்கள் வறியோராயிருந்தனர் எனவும் பெயின் கூறியுள்ளான். போருக்கும் அதற்கு ஏற்பாடு செய்வதற்கும் செலவான பணத்தினால் பண்பாடு குன்றிற்று. வறியோர் மேலும் வறுமையில் உழன்றனர். அமைதி கிட்டிவிட்ட தெனவும் குடியாட்சியானது நாட்டினங்களை அன்பினால் பிணிக்கும் எனவும் ஆங்கிலேய எழுத்தாளர் நம்பினர். இந்நம்பிக்கைக்குப் பிரான்சியப் புரட்சியே காரணமாகும். நம்பிக்கை சிறிதேனும் நிறைவேறவில்லை என்பதை 19 ஆம் நூற்றாண்டின் வரலாறு காட்டிப் போந்துள்ளது. ஆங்கிலேயர், சீர்திருத்தவாதிகள் கொண்டிருந்த நம்பிக்கை எதுவும் நிறைவேறவில்லை. பிரான்சியப் புரட்சியின் பின்னர் தோன்றவிருந்த பொற்காலம் தோன்றவில்லை. உரூசோவிற்கும் எழில்மிகு இயற்கைக்கும் பதிலாக நெப்போலியனோடு படைதாங்கிய ஐரோப்பா இடம் பெற்றது. இதனால் பிரான்சிற்கும் ஏனைய ஐரோப்பிய கூட்டு நாடுகளுக்கும் இருபது ஆண்டுகளுக்கு மேலாகக் கடுஞ் சமர் நடந்தது. புரட்சிக் காலவவதியின் முடிவில் ஐரோப்பாவில் இரத்தவெறி இருந்தது. எனவே எதிர்காலம் போர்த்தொல்லையிலிருந்தது. ஐரோப்பாவைப் பாதுகாப்பதற்குரிய சருவதேச ஆட்சி முறையை வகுப்பதற்கான ஆவலானது புரட்சிக் காலவவதியின் பின்னர் தோன்றியது. எட்டாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 – 23.

களாக ஐரோப்பாவை ஐக்கியப்படுத்தும் பரிசோதனை நடந்தது (1815–1823). அதன் வரலாறும் தோல்வியின் காரணமும் தெளிவான ஒரு படிப்பினையாகும். அப்போது நடந்த நிகழ்ச்சிகளின் போக்கு எறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிகழ்ச்சியின் போக்கை நிகர்த்தது.

ஐரோப்பிய அரசுகளின் நாட்டுக் கூட்டிணைப்பு.

நாடுகளின் பொதுநலவாயமொன்றை நிறுவும் கருத்து 19 ஆம் நூற்றுண்டிலே தோன்றியதொன்றன்று. இக்கருத்தானது மத்தியகாலத்தில் நிலவிய அரசியல் தத்துவத்திலும் அக்காலத்திலேயே எற்பட்டதாகும். பரிசுத்த உரோமப்பேரரசே ஐரோப்பிய அரசுகளின் நாட்டிணைப்பின் தோற்றமாகும். அமைதியால் ஒன்றுபட்ட உலகம் ஒன்றை உருவாக்கல் ஐசாயாவின் கனவாகும். பரிசுத்த உரோமப் பேரரசானது இக்கனவை நனவாக்குதற்குச் செய்த முதல் முயற்சியின் விளைவாகும். மதச் சீர்திருத்தத்தின் பின்னர் பரிசுத்த உரோமப் பேரரசானது ஐரோப்பிய அரசு முறைமையின் அச்சாகக் கொள்கையளவிற்றானும் இருக்கவில்லை. நாட்டினங்களைத் தனித் தலைவர் ஆட்சி செய்வது பழைய கருத்தாகும். இதனையே குரோட்டியசும் புகழ்பெற்ற மற்றும் சட்டவல்லுநர்களும் பண்டைய நூல்களிற் கூறினர். இதனை ஐரோப்பிய பொதுச்சட்டம் முற்றுகப் புறக்கணித்தது. எல்லா இறை அரசுகளும் பூரண சுதந்திரத்துடனும் சட்டப்படியான சமத்துவத்துடனும் இயங்கும் என்பதே சருவதேச உறவின் முக்கியமான கோட்பாடாகும். வல்லரசுகளாக இருந்தாலும் சரி, வலிமை குறைந்த அரசுகளாக இருந்தாலும் சரி எல்லாவற்றுக்கும் சமமாக உரிமைகளும், கடப்பாடுகளும் இருந்தன. இப்பொழுது மாற்றியமைக்கப்பெற்ற சருவதேசச் சட்டமானது தகராறுகளைத் தீர்ப்பதற்கும் சட்டப்பிரகாரம் கட்டளையிடுதற்கும் பூரணமான அதிகாரம் எவருக்கேனும் உண்டெனக் கொள்ளவில்லை. ஆனால் நடைமுறையிற் சட்டப்படி எல்லா அரசுகளும் சமத்துவமுடையன என்ற கோட்பாட்டிற்குப் பதிலாக வல்லரசுகளின் வலிமை இடம்பெற்றது. பத்தொன்பதாம் நூற்றுண்டிலே ஐரோப்பாவின் கதி ஐந்து அல்லது ஆறு அரசுகளின் கையிலேயே இருந்தது. பொது அலுவல்கள் எல்லாவற்றிலும் கூடுதலான செல்வாக்கை இந்த அரசுகள் அபகரித்தன. ஒல்லாந்தினதும் பெல்சியத்தினதும் பிரிவும்[1] கிழக்கு ஐரோப்பிய பிரச்சினையும்[2] இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். சிறு அரசுகள் நீக்கப்பட்டமையும் வல்லரசுகள் ஆதிக்

[1] பக்கம் 276.

[2] VI ஆம் அத்தியாயத்தைப் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் பெற்றமையும் ஐரோப்பா ஒன்றுபடுவதற்கு அனுகூல மாகக் கூடும் என நாம் கருதலாம். ஆனல் எஞ்சியிருந்த அரசுகளிடையே ஒற்றுமைக்குப் பதிலாகப் போட்டியே ஏற் பட்டது. இதன் விளைவாக ஐரோப்பா போர் செய்யும் இரு பகுதிகளாகப் பிரிந்தது. இங்ஙனம் பிரிபட்ட ஐரோப்பாவில் நீண்ட காலத்துக்கு இணக்கம் ஏற்படாதெனத் தோன்றியது. ஐரோப்பிய அரசுகள் ஒன்றுபட்டியங்குவதற்காக மேற்கொள்ளப் பட்ட முயற்சிகளும் தோல்வியுற்றன. இதற்கான காரணங்களை ஆராய்தலே இந்த அத்தியாயத்தின் நோக்கமாகும். 1815.

நெப்போலியனின் போர்கள் முடிவடைந்ததும் ஐரோப்பி யக் கூட்டாட்சி முறைமையை நிறுவுவதை யொட்டிப் பரிசோதனை யொன்றை நடத்துவதற்கு நிகரற்ற வாய்ப்புக் கிடைத்தது. புரட்சிப் பிரசாரத்தின் ஆபத்துக் காரணமாக ஒன்று சேர்ந்த வல்லரசுகள் தங்கள் செல்வாக்கைப் பிரான்சிய மக்கள் மீது செலுத்தின. ஆகவே பொதுவான உரிமைகளிலே பங்கு பற்று வதும் பொதுக் கடமைகளை ஒப்புக்கொள்ளுவதுமான ஐக்கிய ஐரோப்பாவை உருவாக்க இயலுமோ என்ற பிரச்சினை எழுந் தது. ஆனல் வீயன்னுப் பேரவை ஐக்கிய ஐரோப்பாவை உரு வாக்கலாம் என்ற நம்பிக்கைக்கு ஏமாற்றமளித்தது. "ஐரோப் பிய அரசியல் முறைமை யாவற்றையும் மாற்றியமைப்பதாக மக்கள் வாக்குச் செய்தனர். அமைதியை நிலைநாட்டும் பொறுப் பையும் அவர்கள் ஏற்றனர். சுருங்கக் கூறின் அவர்கள் பொற் காலம் ஒன்றினை உருவாக்குவதாக வாக்குறுதி செய்தனர். ஆனல் மாநாட்டின் பயனக மன்னராட்சியும் பழைமை முறை யும் மீண்டும் பழைமையான இடத்தை வாள்முனையிலேலே பெற்றன. இதுதவிர வேறெதையும் மாநாடு நிறைவேற்றவில்லை. ஐரோப்பிய அமைதி குலையாது எதிர்காலத்திலே அதனைப்பேணு வதற்கு ஏற்ற உடன்படிக்கை எதுவும் அம்மாநாட்டின் மூலம் ஏற்படவில்லை. அதிக முக்கியமற்ற அரசுகளின் உடைமைகளில் நீதி நியாயமற்ற மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனல் வீயன்னு மாநாட்டின் பயனக, உயர்ந்த இயல்புடைய செயலோ, பொது ஒழுங்கிற்கும் எல்லோருடைய நன்மைக்கும் உரிய செயலோ நிகழவில்லை. எதிர்காலத்தை உறுதிசெய்து மக்கள் குலம் இதுவரையும் பட்ட இன்னல்களுக்கு நட்ட ஈடாக ஒன்றுமே செய்யப்படவில்லை," என வீயன்னு மாநாட்டின் சாதனைபற்றி ஆராய்ந்த கென்சு எழுதிப்போந்தான். "வீயன்னு மாநாட்டின் ஆசாரத்திலே தற்காலிக உடன்படிக்கையின் முத்திரையே பதிந் திருந்தது. பல நூற்றாண்டுகளுக்கு நிலைத்து நிற்கக்கூடிய சாயல் ஒன்றும் அதில் இல்லை" எனவும் கென்சு குறிப்பிட் டான். வீயன்னுப் பேரவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815. ஐரோப்பிய ஐக்கியம் கைகூடாமைக்குக் காரணம்.

நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஐரோப்பிய வல்லரசுகள் இதமாக ஒத்துழைக்கத் தவறின. இதற்குரிய இறுதிக்காரணங்கள், வல்லரசுகளின் கருத்துக்களில் ஏற்பட்ட அடிப்படை வேற்றுமையும் நிறுவகங்களினிடையே உள்ள வேற்றுமையுமென்றே கொள்ளல் வேண்டும். ஓர் ஒழுங்குக்கு உட்பட்ட சமூகம் ஒன்றிலே எல்லா மக்களும், சமூகம், மதம், அரசியல் ஆகியவை பற்றி ஒரேகருத்துக் கொண்டிருக்கவேண்டிய தேவை இல்லை. எல்லா இலக்குகளிலும் நோக்கங்களிலும் ஒரேவிதமான உணர்ச்சியில்லாமலும், பொதுநன்மைக்காக மக்கள் செயலாற்ற முடியும். எல்லோரும் ஒரே தரப்பட்டு இருப்பது உண்மையில் பலத்தின் ஊற்றுக இருக்காது. அது பலவீனத்தின் ஊற்றுகவே இருக்கும்; ஏனெனில் மக்கள் பல்வேறுபட்டிருப்பதே எங்கள் மக்களினத்தின் முன்னேற்றத்திற்குரிய முதலாவது நிபந்தனையாகும். எனினும், குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காக ஏற்பட்ட எந்தச் சங்கமாயினும் ஒத்த மனப்போக்கையும், மற்றவற்றுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற உணர்ச்சியையும், செயற் சுதந்திரத்தைத் தியாகஞ் செய்யும் விருப்பத்தையும் கொண்டுள்ளதாகவே இருக்க வேண்டும். அரசானது பெரிய பிரித்தானியாவைப் போல ஒற்றையாட்சியாகவோ அல்லது ஐக்கிய அமெரிக்காவைப் போலக் கூட்டாட்சியாகவோ அமையும் என்பது இந்த முற்கோள்கள் எவ்வளவு தூரம் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதைப் பொறுத்தது. இந்த முற்கோள்களுள் ஒன்றும் நிறைவேறுத இடத்து ஒற்றையாட்சியோ கூட்டாட்சியோ எதுவுமே ஏற்பட முடியாது. இந்த நிபந்தனைகள் ஒன்றையாவது திருத்தி செய்யக்கூடிய அளவிற்கு 1815 ஆம் ஆண்டில் அப்போதைய ஐரோப்பா முன்னேறவில்லை. சருவதேச அமைப்பு அடிப்படையிற் பலம் குறைந்திருந்ததற்கும் அது ஈற்றிலே விரைந்து வீழ்ச்சியடைந்ததற்கும் இதுவே காரணம். (1) புனித நட்புறவினதும் (2) நான்கு நாடுகளின் நட்புறவினதும் வரலாறு இந்தச் சருவதேச நோக்கம் என் நிறைவேற முடியவில்லை என்பதை விளக்கும். இந்நோக்கத்தை "வெற்றிகொள்ளும் போர்களைத் தவிர்க்கின்ற அரசியல் அமைப்பு ஒன்று" எனக் கென்சு எழுதினன். ஆனால் அது ஏற்படக் கூடிய தொன்றன்று. போட்டியிடுகின்ற நாட்டினவாதக் கோரிக்கைகளை எல்லோரும் இணங்கத்தக்க விதமாக நிறைவேற்றுவது 19 ஆம் நூற்றாண்டு இருந்த நிலையிலே சிறிதும் இயலாத தொன்றுகவே இருந்தது.

ஐரோப்பிய கூட்டிணைப்புக்கு அலச்சாந்தர் வகுத்த திட்டம்.

(1) புனித நட்புறவை உருவாக்கியவன் முதலாம் அலச்சாந்தராவன். இரசிய பேரரசனுகிய இவன் கனவுலகிலே சஞ்சரிப்பவன். இவனுடைய உள்ளத்திலே சித்தர்களுக்குரிய போக்குக் கலந்திருந்தது. இவனுடைய மனம் உணர்ச்சிவசத்தாலே பெரிதும் உந்தப்பெற்றது. மனம்போனபடி யெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாம் அலச்சாந்தர்
இரசியப் பேரரசன் (1801–1825)
வேர்சையிலுள்ள கொராட்டின் படத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்திற்கு நேரம் செயல் ஆற்றுவான். இவனுடைய ஆட்சிக் 1804
காலத்து முதற் பகுதியில் தாராளபோக்குக்களைச் சார்ந்தே இவனின் உள்ளம் நின்றது. இதன்பயனைப் போலந்து நாட்டிற்கு யாப்பு ஒன்றை வழங்குமளவிற்குத் தாராளப்போக்கு உடையனாயிருந்தான். அதே நேரத்தில் இரசியாவிற்கும் யாப்பொன்றை வழங்குவது பற்றி இவன் சிந்தித்தான். இவனுடைய தாராளபோக்குக் கொள்கை உறுதியற்றதென்பது உண்மையே. "எல்லோரும் சுதந்திரமாக இருக்கவேண்டும் என்பதை எங்கள் பேரரசன் ஒப்புக்கொள்வான். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனையுண்டு. அதாவது எல்லோரும் பேரரசன் விரும்பியதையே செய்யவேண்டும்"[1] என அவனின் அமைச்சன் சாற்றோரிசுக்கி எழுதினன். இவனுடைய உறுதியற்ற உளத்திற்கு ஐரோப்பிய அரசுகள் கூடி இயங்கவேண்டும் என்ற திட்டமானது நன்கு உகந்ததாயிருந்தது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிரான்சைச் சேர்ந்த நான்காம் என்றி இதைப் போன்ற கருத்து ஒன்றைப் புனித நட்புறவிற்கு வெளியிட்டான். என்றி வெளியிட்ட கருத்தின் பெயர் "பெருந் திட்டம்" என்பதாகும். இத்திட்டம் இலிசபெத்தரசியினால் ஊக்கு விக்கப்பட்டது என்பர். என்றியின் திட்டப்படி பொதுக் கழகம் ஒன்றிருக்கும். இப்பொதுக் கழகம் படைக்காலக் கிரேக்க மூத வையைப் போல அமையும். பல்வேறு நாடுகளிலிருந்து வந்த 66 பேராளர் இச்சபையில் இடம் பெறுவர். தகராறுகளைத் தீர்ப்பதும், ஐரோப்பிய அமைதியை நிலைநாட்டுவதுமே இப் பேராளர்களின் கடமைகளாகும். இரத்த ஆறு பெருகுகின்ற பேராபத்து நிரம்பிய போர்களில் இருந்து விடுதலை பெறுவதே இதன் நோக்கம். எனெனில் இப்படியான போர் ஐரோப்பாவிலே பெருவழக்காகிவிட்டது. ஐரோப்பாவிலே நிலையான அமைதியையும் ஆறுதலையும் இது நிலவச் செய்யவேண்டும். எனவே இதன்பயனைச் சிற்றரசர்கள் எல்லோரும் உடன்பிறந்தவர்கள் போல வாழ்வார்கள்[2] எனச் சமுலி என்பான் இந்தப் பெருந் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டான். 1610 ஆம் ஆண்டில் என்றி இறந்ததும் இந்தத் திட்டம் சிதறியது. ஆனால் ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் இது அமைதியைப் பரப்பச் செய்யும் திட்டமாக 1713 ஆம் ஆண்டில் மீண்டும் தோன்றிற்று. இதிலே கூறப்பட்டபடி இந்தக் கூட்டவையில் உள்ள உறுப்பினர், ஒருவர் மீதொருவர் போர் தொடுக்கின்ற உரிமையைக் கைவிடு

[1] W. A. Phillips, "The Confederation of Europe" (1914), 57.
[2] Memoires de Sully (ed. 1745), ii. 81. iii. bk. xxx.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815. வர். நிலையான பேரவை[1] ஒன்றின் நடுத்தீர்ப்பிற்கு உறுப்பினர் தங்கள் வேற்றுமைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே இரசியப் பேரரசன் மீண்டும் இதனைத் தொடக்கி வைத்தான். "இரசியாவை நட்பு நாடாக வைத்திருப்பதில் ஒரு குறைபாடு இருக்கின்றது. போர் முனைக்கு இரசியா மிகப் பிந்தியே வந்து சேரும். அப்படி வரும்போதே அது மிகப் பலம்வாய்ந்ததாக இருக்கும்" என மொற்கு குறிப்பிட்டான். இதுவே நெப்போலியனை எதிர்த்துச் செய்த விடுதலைப் போராட்டத்தில் நடந்தது. இரசியப் படைகள் உருக் குலையாமல் இருந்தபடியால், நட்புநாடுகளின் கழகங்களில் இர சியப் பேரரசனை அலச்சாந்தரின் செல்வாக்கு மிதமிஞ்சியிருந் தது. இந்தச் செல்வாக்கைக் கையாண்டு தன் உளத்திற்குகந்த திட்டத்திலே அலச்சாந்தர் கவனஞ் செலுத்தினன். எலவே 1804 ஆம் ஆண்டில் புதிய சருவதேச முறைமை ஒன்று வேண் டும் என இங்கிலாந்திற்கு வலிந்து தெரிவித்தான். அதிகார முடையோரின் பகுத்தறிவைக் குடிபோகச் செய்கின்ற பேராசை, உணர்ச்சிப் பெருக்கு, மதியீனம் ஆகியவற்றுக்கு இடங்கொடாத முறையிலே "ஒவ்வொரு நாட்டிலும் உள்ள உண்ணாட்டு ஒழுங்கை மதியூகமான சுதந்திரம் என்னும் அடிப்படையில் நிறுவாவிடின் ஐரோப்பிய அமைதி ஒருபோதும் நிலைத்து நிற்காது" என்பதை இவனின் கோரிக்கை குறிப்பாக உணர்த்தி யது; இவன் இங்கு கூறியவை தத்துவஞானி கான்று கூறிய புகழ்பெற்ற கூற்றுக்களையே நினைவுறுத்துகின்றன. சருவதேச சமாதானத்தின் ஒரே ஒரு அடிப்படையாக அமைந்துள்ளது உண்மையான பிரதிநிதித்துவ ஆட்சி என்பதே கான்றின் தத்துவமாகும்.[2] அலச்சாந்தர் வலிந்து கோரி நின்றபடியால் பெரிய பிரித்தானியாவிற்கும் இரசியாவிற்கும் உரிய இராச்சிய பிரதேசங்களை உறுதிப்படுத்தல்வேண்டும் என்கின்ற உடன் படிக்கை எழுந்தது. இதனால் "பொதுச் சமாதானத்துக்குப் பங்கம் விளைக்கும் எதிர்கால முயற்சிகள்"[3] தடுக்கப்படும். பேரா சையும் மீக்கொளலும் உள்ள திட்டங்களினால் ஐரோப்பாவின் எதிர்கால உடன்படிக்கைகளைப் பிரான்சு குழப்பக்கூடாது என் பதையே ஆங்கிலேய அமைச்சனை பிற்று கருதினன் என்பது தெளிவு. இது ஒருபுறம் இருக்க, பெருந் திட்டத்தைப் பின் பற்றிய ஐரோப்பிய வல்லரசுகளின் கூட்டமைப்பு என்ற முறை யிலேயே தனது திட்டத்தை அலச்சாந்தர் கருதினன். நெப்

[1] The Provisions are given in Phillips, op. cit. 22.

[2] Kant, "Perpetual Peace" (ed. M. Campbell Smith, 1903), 120 seq. Cf. also 33 seq.

[3] Phillips, op. cit. 34, 38.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலியனை வீழ்த்துகின்ற உடனடியான நடைமுறைக்கொத்த நோக்கத்தைப் பற்றியே பிரித்தானியா அக்கறைகொண்டிருந்தது. ஆனால் இரசியப் பேரரசனே பேராசை பிடித்த ஒரு திட்டத்திலே தன் புலனைச் செலுத்தினன். இத்திட்டமாவது ஐரோப்பிய நலனுக்கான எல்லா அலுவல்களிலும் அதிகாரம் செலுத்தக்கூடிய உயர்தர நீதிமன்றம் ஒன்றை நிறுவுவதே யென்க. புனித நட்பு நாடுகளின் அமைப்பு என்கிற திட்டத்தை அலச்சாந்தர் உலகறிய வெளியிட்டான். அதன்பின்னர் பிரித்தானியாவிற்கும் இரசியாவிற்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பதை மறைக்க முடியாமற் போய்விட்டது. கைச்சாத்திட்ட மன்னர்கள் "எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லா விடங்களிலும் ஒருவருக்கொருவர் உதவியளிக்க வேண்டும்" எனக் கட்டுப்படுத்திய தெளிவற்ற ஒரு திட்டத்தில் பங்கு பற்றுவதனால், சுதந்திரத்தைக் கெடுக்க விரும்பாத ஆங்கில அரசாங்கம் இத்திட்டத்திற்குக் கைச்சாத்திட மறுத்தது. 1815.

பரிசுத்த நட்பு நாடுகளுக்குத் தவறான விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது. அதன் நோக்கமும் சரியாக அறிந்து கொள்ளப்பட வில்லை. நடைமுறையில் அதனால் ஏற்படக்கூடிய விளைவும் மிகைபடவே மதிப்பிடப்பட்டது. இந்தப் பரிசுத்த நட்பு நாடுகள் பிற்போக்குவாதத்தின் சின்னம், தாராள போக்குக் கொள்கைக்கு மாறுகச் செய்யப்படும் சூழ்ச்சி, மக்களுக்கு எதிராக அவர்களுடைய மன்னர் செய்துள்ள உடன்படிக்கை என்றெல்லாம் அக்காலத்திலே கருதப்பட்டன. பரிசுத்த நட்பு நாடுகளின் ஒப்பந்தத்திலிருந்து நேரடியாகச் சில பகுதிகளை இங்கு மேற்கோளாக எடுத்துக் காட்டல் இவ்விடத்துப் பொருத்தமுடைத்து. அப்படிக் காட்டுவதால் மேற்கூறியவை எத்தூரஞ் சரி என்பது புலனாகும். இந்த உடன்படிக்கையைச் செய்துள்ள நாடுகள் மிகவும் பத்திரத்தையுடன் பின்வருமாறு பிரகடனஞ் செய்தன. "இப்போதைய விதிக்குப் பின்வரும் நோக்கங்கள் தவிர வேறு நோக்கங்களில்லை. அவையாவன, உலகம் முழுவதும் அறியக்கூடிய வகையில் தங்களின் ஒரே நிலையான தீர்மானத்தை வெளியிடுதல். இத்தீர்மானம் தத்தம் அரசாங்கங்களின் பாலனம், இவ்வரசாங்கங்கள் ஒன்றோடு ஒன்று கொள்கின்ற அரசியல் உறவு ஆகிய இரண்டிலும் தம்முடைய ஒரே ஒரு வழிகாட்டியாகப் பரிசுத்த மதம் ஒன்றின் போதனைகளையே கைக்கொள்ளும். அவையாவன நீதி, கிறித்துவ அறம், சமாதானம் என்க. இவற்றைத் தனி மனிதன் மட்டுமன்றி இளவரசர்களின் அறிவுரையாளரும் கைக்கொள்ளவேண்டும். இவை அறிவுரையாளர்களின் செயல்களுக்கெல்லாம் வழிகாட்டி பரிசுத்த நட்பு நாடுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 மக்கள் நிறுவனங்களை உறுதியாக்குவதற்கும் குறை குற்றங்களைத் தீர்ப்பதற்கும் உரிய தனி வழிவகையாக அமைதல் வேண்டும்."[1] இங்கு குறிக்கப்பட்டவற்றுக்கு விளக்கங் கூறுங்கால், பரிசுத்த நட்பு நாடுகளில் உள்ள அரசர்கள் இன்று தொட்டு ஒருவரை யொருவர் சகோதரர்போலக் கருதவேண்டும் என்பது புலனாகும். இக்கருத்துத் தவிர வேறு ஒன்றையும் இவை உணர்த்தவில்லை. இந்த அரசர்கள் "உண்மையான, அழியாத சகோதரத்துவம் என்கின்ற பாசத்தினாலே பிணிக்கப்பட்டு"த் தங்கள் குடிகளைப் பிள்ளைகளைப் போலக் கருதி "அவர்களின் குடும்பத் தந்தை" என ஆளுதல் வேண்டும். இந்த முன்மாதிரியான கோட்பாடு நடைமுறையில் அனுசரிக்கப்படவில்லை; இக்கோட்பாட்டை மூன்று தனியாட்கள் மட்டுமே ஆதரித்தனர். ஐரோப்பாவின் சுதந்திரத்திற்குப் பங்கம் விளைக்கக் கூடிய பயங்கரமான ஒரு திட்டத்தைத் திரைக்குப் பின் இது உருவாக்குகின்றது என்ற ஐயப்பாடு எழுந்தது இயற்கையே. ஆனால் இதற்கு மாறுக, பரிசுத்த நட்பு நாட்டமைப்பை ஏற்றுக் கொள்வது அரசியல் யாப்புறு தத்துவங்களை ஏற்றுக்கொள்வ தாகும் என நட்பாளர் ஒப்புக்கொள்ளும்படி செய்ய அலச் சாந்தர் முயற்சித்தான்.

பரிசுத்த நட்புறவின் முக்கியத்துவம்.

பரிசுத்த நட்பு நாட்டமைப்பு என்பது பெயரளவிலே ஒழுக்க நியதிகளைச் சருவதேச அரச தந்திரத்தில் கையாள்வதாகவிருந்தது. ஐரோப்பாவில் அரசியல் நீதி ஒன்றை அமைப்பதாக இவ்வியக்கம் இருந்தது. எனவும் இதனை மாற்றுமொழியிற் கூறலாம். ஆனால் நடைமுறையிலோவெனில், தெளிவில்லாத இத்திட்டம் அக்காலத்து வாழ்ந்தவரின் கருத்திலே பெரிதாகத் தோற்றமளித்தபோதிலும், உருப்படுதற்கு முன்னரே இறந்தொழிந்தது. "பரிசுத்த நட்பு நாட்டமைப்பு என்கின்ற உடலுக்குக் களங்கமில்லாத உயிர் ஒன்றை அளிப்பதற்கு" அலச்சாந்தர் செய்த முயற்சிகள் யாவும் பலனற்றனவாயின. "பரிசுத்த பத்தர் சித்தர் கொள்கை" எனவும் "விழல்" எனவும் காசில்றீ இதனைக் கருதினன். மெற்றெணிக்கு, இரசியப் பேரரசரைப் பயங்கரவாதிகளைச் சேர்ந்த "யக்கோபின்" இயக்கத்தினர் என்றே கருதினன். எனவே மெற்றெணிக்கு, இத்திட்டம் சிலுசிலுப்பேயன்றிப் பலகாரம் அல்ல எனக் கருதினன். "பரிசுத்த நட்பு நாடுகளின் அமைப்பு என்பது மதப்போர்வையில் இயங்கும் சீவகாருணிய விழைவு. இது மக்களின் உரிமைகளை அடக்கி, தம்முனைப்பான ஆட்சியையோ அல்லது கொடுங்கோன்மையையோ தூண்டிவிடுகின்ற நிறுவனமன்று. பேரரசர் அலச்

[1] Hertslet, "The Map of Europe by Treaty," i. 317.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தரின் பத்தி உணர்ச்சிப் பெருக்கின் விளைவே இந்த நட்பு நாடுகளின் நிறுவனம். கிறித்துவக் கொள்கைகளை அரசியலின் பால் சேர்த்துக் கொள்வதுதான் இது"[1] என அவன் விளக்கினான். பரிசுத்த நட்புறவு உடன்படிக்கையின் முக்கியத்துவம் நடைமுறையிலே குறைவாக இருந்தபோதும், நமது கவனத்தைப் பெறுதற்குரிய தன்மைகள் அதனிடம் இருந்தன ; ஏனெனில் கிழக்கு வல்லரசுகளுக்கும் பிரித்தானியாவிற்கும் உள்ள அடிப்படைக் கருத்து வேற்றுமைகளை இது எடுத்துக் காட்டியது. 1815

மெற்றெணிக்கின் அமைப்பு முறை.

(2) தெளிவில்லாததும் வரையறுக்கப்படாததுமான பரிசுத்த நட்பு நாட்டமைப்பு இயக்கத்தில் சேர மறுத்த ஆங்கிலேய அரசியல் தலைவர்களின் செயலால், அலச்சாந்தரின் கனவாகிய பரிசுத்த நட்புநாட்டு இயக்கக் கனவின் முக்கிய நோக்கம் எங்ஙனம் கைகூடிற்றிலது என்பதை இதுவரையும் ஆராய்ந்துள்ளோம். அதே கதியே மெற்றெணிக்கின் அமைப்பு முறைக்கும் நேர்ந்தது எனக் கூறலாம். இதன் பிரகாரம் இறுதியில் இங்கிலாந்து, ஐரோப்பிய கூட்டுச் செயல் இயக்கத்திலிருந்து விலகவேண்டியதாயிற்று. இங்ஙனம் விலகிய இங்கிலாந்து "தளராது தான் வகுத்துக்கொண்ட பாதையிலே சென்றது."[2]

நாற்கூட்டு வல்லரசுகள் நட்புறவு.

பரிசுத்த நட்புறவில் சேராது ஒதுங்கியிருக்கும் தீர்மானத்தைப் பெரிய பிரித்தானியா அழுங்குப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருந்தது. எனினும் அதே நேரத்தில் நன்கு வரையறுக்கப் பெற்ற சில இலக்கிற்காக ஐரோப்பிய வல்லரசுகளுடன் ஒத்துழைக்கப் பெரிய பிரித்தானியா தயாராகவிருந்தது. இங்கு குறிப்பிடுகின்ற காலத்திற்கு முன்னரே **1791** ஆம் ஆண்டிலே ஒசுற்றிய அமைச்சர் கோனிற்சு என்பார் பின்வரும் கருத்தை வற்புறுத்தினர். "ஐரோப்பா என்பது பல நாட்டினங்கள் சேர்ந்த தோர் குடும்பம். ஆகையால் பொதுச்சமாதானத்தைப் பாதுகாத்தல், ஒவ்வொரு நாட்டுக்குமுரிய பிரதேசங்களைப் பாதுகாத்தல், பொருத்தனைகள்மேல் நம்பிக்கை வைத்தல் ஆகியவை எல்லோருக்குமுரிய கடமையாகும்".[3] கோனிற்சின் யோசனைகள் பிரான்சிற்கு எதிராகவே செலுத்தப்பட்டன. ஐரோப்பிய வல்லரசுகளின் கூட்டியக்கம் பிரான்சுப் புரட்சியின் நேரடியான விளைவேயாகும். இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஐரோப்பிய அரசாங்கங்கள் பிரான்சின் புரட்சிக் குடியாட்சியை

[1] Metternich, "Memoirs," i. 260, 262.

[2] Canning's words: A. G. Stapleton, "The Political Life of George Canning" (1831), i. 489.

[3] A. Sorel, "L'Europe et la Revolution Francaise" (1887), ii. 232–3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815. எதிர்த்துப் போராடி வந்தன. இங்ஙனம் போராடிப் பிரான்சியக் கருத்துக்களையும் பிரான்சியப் பலத்தையும் இந்த நாடுகள் எதிர்த்து வந்தன. இதற்காக ஐரோப்பிய வல்லரசுகளின் கூட்டுச்செயல் உடன்படிக்கை ஒன்றன்பின் ஒன்றுகப் பலப்படுத்தப்பட்டு வந்தது. இறுதியிலே இப்போராட்டத்திலில் சோர்வுற்ற நெப்போலியன் வாட்டலூப் போரிலே தோல்வியுற்றான். வீயன்னா மாநாட்டின் பின்னர், பெரிய பிரித்தானியா, ஒசுற்றியா, பிரசியா, இரசியா ஆகிய நான்கின் நட்புறவு உடனடியாகவே குலைந்து விடுமெனத் தோன்றிற்று. இந்தக் கூட்டு அமைப்பு ஆதியிலே எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது என்பதே இதற்குக் காரணம். உண்மையில் தொடக்கத்திலிருந்தே இந்த நட்புறவில் அற்பத்தனமான பொறுமைகளும் போட்டாபோட்டிகளும் நிலவி வந்து ஆபத்தை விளைவித்தன. இவைகள் யாவும் எல்பாத் தீவிலிருந்து நெப்போலியன் வந்திறங்கியபின்னர் நடந்த நூறு நாட் போரின்போது தற்காலிகமாக அடக்கப்பட்டன. உண்மையில் நாற்கூட்டு நாடுகளின் அமைப்புக்கள் தாம் மேற்கொண்ட வேலையை முற்றுகச் செய்து முடிக்கவில்லை. மேலும் எற்படக்கூடிய புரட்சி அதிர்ச்சியிலிருந்து ஐரோப்பாவில் உள்ள புதிய ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய வழிவகைகளை அமைத்தற்கு ஆவன செய்வதும் அவசியமாயிற்று. நெப்போலியன் மீண்டும் இரண்டாம் முறையாகப் பிரான்சிய மக்களின் நடுவிலே வந்து தோன்றியபோது தான், பிரான்சிய மக்களின் உளத்தை அவன் அசாதாரணமான முறையிலே கவர்ந்துள்ளான் என்பது அவனுக்குக் கிடைத்த வரவேற்பிலிருந்து தெரிந்தது. நேசநாடுகள் பலங்கொண்ட பிரான்சிய மக்கள் மீது திணித்த அரசாங்கத்தைப் பிரான்சு உளப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நெப்போலியனுக்குக் கிடைத்த வரவேற்பு எடுத்துக் காட்டியது. கிடைக்கக் கூடிய முதலாவது சந்தர்ப்பத்திலேயே பிரான்சில் பழைய புரட்சி உணர்ச்சி இழந்துபோன இரையின் பிரதேசத்தை மீட்கின்ற தேசிய முயற்சிக்கு வழிகோலும் என்பதையும் நெப்போலியனுக்குக் கிடைத்த ஆதரவு எடுத்தியம்பியது போலத் தெரிந்தது. பிரான்சியப் பிரசாரமாகிய பேராபத்திலில் ஐரோப்பா ஒன்றுபட்டியங்கும் போக்கு உருவாகியது. வாட்டலூத் தோல்விக்குப் பின்னரும் இதே பயம்தான் நாற்கூட்டு அமைப்பை உருக்குலைய விடாதபடி செய்தது. வீயன்னா மாநாட்டிலே பெரும் பிரயாசத்துடன் செய்து முடித்த பிரதேச அரசியல் உடன்படிக்கையைப் பாதுகாத்தற்பொருட்டு, அமைதியின்மையின் முதலாவது அறிகுறியைக் கண்டவுட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னேயே ஐரோப்பிய நேசநாடுகள் போரை மீண்டும் செய்வதற்குத் 1815
தயாராக இருக்கவேண்டும். இதன்பிரகாரம் 1815 ஆம் ஆண்டு நவெம்பரில் நான்கு வல்லரசுகளும் நேச ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டன. "ஐரோப்பாவை இன்னமும் துன்புறுத்து கின்ற ஆபத்திலிருந்து காப்பதே" இதன் நோக்கம். இந்த நேச ஒப்பந்தத்தின் நோக்கம் மிகவும் தெளிவாக ஐயம்திரிபிற் கிடமின்றிக் கூறப்பெற்றுள்ளது. "புரட்சிக் கொள்கை..... மீண்டும் பிரான்சில் கிளர்ச்சியை உண்டுபண்ண அதனால் ஐரோப்பிய நாடுகளின் சமாதானத்திற்குப் பங்கம் ஏற்படும்[1] என அந்த ஒப்பந்தம் கூறியதே இப்பயத்திற்குச் சான்று பகரும். இந்த நேச ஒப்பந்தம் குறிக்கப்பெற்ற ஒரு தேவைக் காகவும், நடைமுறையில் செய்து காட்டக்கூடிய ஒரு இலக்கிற் காகவும் வெளி வெளியாக உருவாக்கப்பெற்றது. ஆனால் அலச்சாந்தரின் பரிசுத்த நேச நாடுகளின் அமைப்புத் தெளி வில்லாக் கொள்கைகளின் உருவில் அமைந்தது. இவற்றின் மூலம் அலச்சாந்தரின் இலட்சியவாதத்துக்கும் காசில்ரீயின் நிதானமான அரசியல் ஞானத்துக்கும் உள்ள வேற்றுமைகள் நன்கு புலப்படுகின்றன.

நேசநாடுகளின் பொருத்தனை.

நட்புறவுப் பொருத்தனையானது நிதானமாகவும் கவனமாக வும் ஆக்கப்பெற்றது. எனினும் அந்தப் பொருத்தனையின் வாசக மொன்றிற்குப் பலவாறு பொருள் கொள்ள முடியும். அதுவே புகழ்பெற்ற ஆறுவது உறுப்புரையாகும். அது மிகவும் முக்கியமானதாகையால் அதை இவ்விடத்து மேற் கோளாக எடுத்துக்காட்டுவது பொருத்தமுடைத்தே. அது பின்வருமாறு: "நான்கு மன்னர்களையும் இப்பொழுது நெருங் கிப் பிணித்துள்ள உறவை உறுதிசெய்யவேண்டியிருந்தது; குறிக்கப்பட்ட தவணைகளில் இதற்காகக் கூட்டங்களைக் கூட்டு தற்குப் பொருத்தனையிற் கைச்சாத்திட்ட வல்லரசுகள் உடன் பட்டன. தங்கள் ஆதரவிலோ அல்லது பிரதிநிதிகள் மூலமோ இக்கூட்டங்களைக் கூட்ட உடன்பட்டன. இக்கூட்டங்கள் பெரும் பொது நோக்கங்களை உடையனவாயிருந்தன. அத்துடன் ஒவ்வொரு காலவவதிக்கும், நாட்டுச் சமாதானம், செல்வ விருத்தி ஆகியவைகளுக்கு உகந்த நடவடிக்கைகளையும் ஆராயும். ஐரோப்பிய சமாதானத்தினை நிலைநாட்டுதற்குத் தேவையான வற்றையும் செய்வார்கள்". இவ்வுறுப்புரையே ஐரோப்பிய கூட்டுச் செயல் இயக்கத்தின் அத்திவாரம். எட்டு ஆண்டுக்

[1] Hertslet, "The Map of Europe by Treaty," i. 372 seq.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1818

காலத்தை (1815—1923) இது மேவிச் செல்லும் நியதியுடைத்து என்பதைப் பின்னர் காணலாம். தம்முன் சமர்ப்பிக்கப்பெற்றுள்ள பல்வேறு சிக்கல்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கக் காலத்திற்குக் காலம் வல்லரசுகள் கூடும். இவ்வல்லரசுகள் கூட்டு நடவடிக்கை எடுப்பதற்கு இவ்வுறுப்புரை அடிப்படையாகிற்று. பெரும் இலக்குகளை அடைதற்கான இக்கூட்டங்கள் தங்கள் கவனத்தைப் பிரான்சில் நிலவும் நிலைமையிலே செலுத்துவதோடு மட்டும் நின்றுவிடா என்பது உடனே தெளிவாகிற்று. பலதரப்பட்ட அலுவல்களில் நட்புறவு நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் என்பதை இவ்வுறுப்புரை உறுதிப் படுத்திற்று. எனவே பரிசுத்த நட்புறவு நாடுகளின் கொள்கைகளை எவ்விதமாகவும் ஏற்க முடியாது எனப் பெரிய பிரித்தானியா கூறிற்று. அப்படிக் கூறிய பொழுதிலும் கூட்டுமாநாடுகளின் முறைமைப் பொறுப்பைப் பிரித்தானியா ஏற்கவேண்டியதாயிற்று. இந்த மாநாடுகளின் நோக்கத்தை அந்தவேளையில் பிரித்தானியா உணர முடியாதிருந்தது. சுருங்கக்கூறுமிடத்து நட்புநாடுகளின் அதிகாரத்திற்குப் பதிலாக, அலச்சாந்தர் எண்ணியபடி வல்லரசுகளின் கூட்டு ஐக்கியத்தை இடம்பெறச் செய்வதே இதன் விளைவாகும். ஐரோப்பாவில் உள்ள ஏனைய சிறு அரசுகள் இதனைக் கூர்ந்து நோக்கின. அவைகளின் நோக்கிலே நெப்போலியனின் சர்வாதிகாரம் இருந்த இடத்திலே இப்போது நான்கு வல்லரசுகளின் சர்வாதிகாரம் இருப்பதாகப் பட்டது. இது நியாயமற்றதென இவ்வரசுகள் கருதின. ஆனால் இவ்வரசுகள் இதனை வீணே எதிர்த்தன. நடைமுறையில் இந்தப் பேரவைகள் நான்கும்—அவையாவன எச்சிலாசப்பல், துறெப்போ, லேபா, வெரோனா—எங்ஙனம் இயங்கின என்பதை நோக்குவாம். இந்தப் பேரவைகளின் வரலாறு பிரித்தானிய பூட்கையானது இக்காலத்தில் எவ்விதமான அடிப்படையில் அமைந்திருந்தது என்பதையும் தெளிவுபடுத்தும்.

(1) எச்சிலாசப்பல் பேரவை (1818)

1818 ஆம் ஆண்டில் எச்சிலாசப்பல் என்னுமிடத்தில் முதலாவது பேரவை கூடியது. "இதுபோன்ற அழகிய சிறிய மாநாட்டை[1] ஒருபோதும் கண்டதில்லை" என அதன் வெற்றியையிட்டு மெற்றெணிக்கு தன்னைத் தானே பாராட்டிக் கொள்ளலாம்; எனெனில் நட்புறவு நாடுகள் ஐரோப்பிய அரசுகளின் அலுவல் மீது கூட்டுக் கட்டுப்பாட்டை நிறுவ எத்தனித்த முறையின் உச்சநிலையே இந்த மாநாடு. கிரேக்கநாட்டுக் கழகத்தைப்

[1] Memoirs, iii. 144.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே இந்தப் பேரவையை ஐரோப்பாவில் உள்ள மேல் 1818
அதிகார மன்றம் என எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். நாலுவிதமான விவகாரங்களைப் பற்றிய மனுக்களையும் மாநாடு ஏற்றது. சுவீடினுக்கு எதிராகத் தென்மாக்கு இந்த மாநாட்டின் உதவியைவேண்டி நின்றது. கெசெ தேர்வுரிமையாளன் மன்னன் என்ற பட்டம் வேண்டுமென மனுச்செய்தான். தங்கள் குறைபாடுகளைப் போக்க சேர்மானியச் சிற்றரசர்கள் உதவி தேடினர். தங்களின் ஆட்சியாளர் சரியில்லை என மொனுக்கோ மக்கள் முறையிட்டார்கள். பேடன் கோமகவுரிமைத் தகராறு பற்றியும், ஒசுற்றியாவிலும் பிரசியாவிலும் உள்ள யூதரின் நிலை பற்றியும் பேரவை நடவடிக்கை எடுத்தது. இங்ஙனம் பேரவை மேம்பட்டு நின்றபோதும் இந்தப் பேரவை எந்த முறைமையின் சின்னமாக விளங்கிற்றோ அந்த முறைமையின் இயல்பான நலிவு தெளிவாயிருந்தது. உண்மையில் எச்சிலாசப்பலின் பேரவையிலேயே முதற்பிளவு தோற்றமாகிற்று. பின்னர் கூடிய பேரவையில் இப்பிளவு பெரிதாயிற்று. அத்துடன் நட்புறவு தகர்த்தெறியப்பட்டது. பிரான்சிலிருந்து அந்நியப்படைகளைவெளியேற்றுவது பற்றி உடன்படிக்கை செய்யப்பட்டது. அதே நேரத்தில் பிரான்சும் நட்புறவு நாடுகளுள் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஐந்து அரசுகளைக் கொண்ட இந்த நட்புறவை "ஐந்தரசுகளின் தார்மீக ஆட்சி" என மெற்றெணிக்கு கூறினான். ஆனால் ஏனைய துறைகளில் அடிப்படையான கருத்து வேற்றுமை இருந்தமை விரைவிற் றெரிந்தது. முதலாவதாக மாநாட்டில் முக்கியமாக இருந்த இரண்டு சிக்கல்கள் தீர்க்கப் படவில்லை. இச்சிக்கல்கள் அடிமைகளைப் பிடித்து விற்றல், பாபரிக்கடற் கொள்ளைக்காரர் ஆகியவை பற்றியவை. ஒரு நாட்டின் நலனை ஒரு நடவடிக்கை பாரதூரமாகப் பாதிக்குமாயிருந்தால் அந்த நாடு தன் நலனை விட்டுக்கொடுத்தோ, அல்லது தியாகஞ் செய்தோ பொது நன்மையைப் பேணும் என்று சொல்லக்கூடியதாகவில்லை. இதற்கு எந்த நாடும் தயாராகவில்லை. அடிமை வியாபாரத்தை அடக்குவதற்காகப் பெரிய பிரித்தானியா யோசனை ஒன்று கூறியது. அதாவது ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றும் ஏனைய நாட்டுக் கப்பல்களைச் சோதிக்கும் உரிமையைக் கையாளவேண்டும் என்பதே அந்த யோசனை. ஆனால் அந்த யோசனை செயற்படவில்லை; ஏனெனில் இங்கிலாந்தின் கடற்படைப் பலம்பற்றி ஏனைய நாடுகள் பொறுமையுற்றன. தங்களுடைய வணிக உறவுகளிலே பெரிய பிரித்தானியா தலையிடுவதை ஏனைய நாடுகள் விரும்பவில்லை. பாபரிக்கடற் கொள்ளைக்காரர் ஐரோப்பிய கடற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1818 பிரதேசம் முழுவதிலும் தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தனர். இந்தப் பெரும் தொல்லையை அடியோடு ஒழிப்பதற்கு மத்தியதரைக் கடலில் கடற்படை ஒன்றைச் சர்வதேச அடிப்படையில் நிறுவ வேண்டுமென இரசியா யோசனை கூறிற்று. ஆனால் இந்தப் பாபரிக் கடற் கொள்ளைக்காரர் பெரிய பிரித்தானியக் கொடியைக் காணுமிடத்தெல்லாம் மிகவும் மரியாதையாக நடந்து கொள்வார்கள். மத்தியதரைக் கடலில் இரசியப் படை ஒன்றை அமர்த்துவது பற்றிப் பெரிய பிரித்தானியா பெரும் பீதி கொண்டது. எனவே இந்த யோசனையும் தரைமட்டமாயிற்று. இங்ஙனம் இந்த நாடுகளுக்கிடையில் தீர்க்க முடியாத அவநம்பிக்கை நிலவிற்று. இதனால் கூட்டுச் செயல், ஒத்துழைப்பு முயற்சிகள் யாவும் பலனளிக்கக் கூடிய முறையில் நடப்பது தடைப்பட்டது.

அதன் முக்கியத்துவம். எனினும் ஏச்சிலாசப்பல் மாநாட்டின் உண்மைக் கருத்து ஆழமானதாகும். ஐரோப்பிய ஐக்கியத்தின் அடிப்படைகளைப் பற்றிய உண்மையான தன்மைகள் பற்றி, இந்த மாநாடு, முதல் முறையாகப் பிரித்தானிய அரசியல் அறிஞர்களிடையே பயத்தை உண்டுபண்ணிற்று. அப்போதிருந்த பிரதேச பிரச்சினை பற்றிய தீர்ப்புகளையும், சுய ஆட்சியையுடைய மன்னர்களின் உரிமைகளையும் உத்தரவாதஞ் செய்கின்ற பிரகடனம் ஒன்றை வல்லரசுகள் கைச்சாத்திட்டு வெளியிடல் வேண்டுமென அலச்சாந்தர் யோசனை தெரிவித்தான். இந்த யோசனையை ஒசுற்றியாவும் பிரசியாவும் பெரிதும் வரவேற்றன. அப்போது நடைமுறையில் இருந்த நிலையை உலகொப்ப உத்தரவாதஞ் செய்தால் ஐரோப்பாவின் விருத்தியைக் குறுகிய உளப்போக்குடைய பழைமைபேண் பிணிப்பால் தடுத்துக் கொண்டிருந்த சுதந்திர நிலையங்களை முறையாக அடக்குதற்கு அது உதவலாம் என்பதை மெற்றெணிக்குத் தன்னைப் பொறுத்தவரையில் ஒப்புக் கொண்டான். இந்த யோசனைப்படி புரட்சிக்கு எதிராகக் கூட்டுச்செயல்முறையில் பொதுநடவடிக்கை எடுப்பதாகவும் தன் குடிகளை ஒழுங்காக வைத்திருக்க முடியாத எந்த அரசாங்கத்திற்கும் உதவியளிப்பதாகவும் ஐரோப்பிய அரசுகள் வாக்குறுதி செய்தன. உண்மையைக் கூறுவதாயின் இது புரட்சி என்னும் புதிய கோட்பாட்டிற்கு எதிராக அமைந்த சிலுவைப் போராகும். இந்த யோசனையானது யாப்புவழி முன்னேற்றத்தைக் காலவரையறையின்றித் தடுத்திருக்கும். மேலும் மன்னர் கூறிய யோசனை பத்தொன்பதாம் நூற்றுண்டின் இன்னுமொரு பெரும் புரட்சிச் சத்தியாக அமைந்த நாட்டினத் தத்துவத்திற்கும் சாவுமணியடித்திருக்கும். நாடுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்புலம் யாவும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்கு இந்த 1818
யோசனை உத்தரவாதமளித்தது. இதனால் சேர்மனியும் இத்தாலியும் ஐக்கியப்படுதல் தடைப்பட்டிருக்கும்; ஒல்லாந்து தேசமும், பெல்சியமும், நோவேயும், சுவீடினும் பிரிந்து செல்வதும் தடைப்பட்டிருக்கும். அத்துடன் போல்கன் நாடுகளின் விடுதலையும் தடைப்பட்டிருக்கும். சுருங்கக் கூறின் இந்த யோசனையால் இன்றைய ஐரோப்பிய தேசப்படமும் உருவாகியிராது. இரசியா, ஒசுற்றியா, பிரசியா ஆகிய மூன்று நாடுகளுமே ஐரோப்பிய கூட்டுச் செயல்முறைக் கருத்துடையவாயிருந்தன. இந்த முறை ஐரோப்பிய சமாதானத்தைப் பெற்றுக்கொடுத்திருக்கும்; ஆனால் யாப்புச் சுதந்திரத்தையும் நாட்டினச் சுதந்திரத்தையும் இழக்கவிடும். தீங்கு விளைக்கும் இந்தத்திட்டம் தோல்வி கண்டதற்குரிய புகழ் பிரித்தானிய அரசாங்கத்தைச் சாரும். பிரித்தானியாவின் உறுதியான போக்கினால் ஏனைய நாடுகள் இந்தத் திட்டத்தைக் கைவிடவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. ஒரு நாட்டலுவலில் தலையிடலாமோ என்னும் பிரச்சினையே தீர்க்கப்படவேண்டிய விடயமாயிருந்தது. தார்மீக ஐவர் மாநாடு வீண் உரிமை கொண்டாடி அதிகாரத்தைத் தனதாக்கி ஒரு நாட்டின் பழையநிலையைப் பாதுகாப்பதைத் தலைக்கீடாகக் கொண்டு எந்த நாட்டிலேனும் தலையிடலாமோ என்பதே அந்த முக்கியமான பிரச்சினையாகும். ஐரோப்பிய கூட்டியக்கத்தின் பெயரளவினதான நோக்கம் புரட்சிப் போர்கள் நிகழ்வதைத் தடுப்பதேயாகும். இந்தப் புரட்சிப் போர்கள் எலவே ஐரோப்பாக் கண்டத்தை இரத்தக் கடலில் அமிழ்த்தின. மேலும் அப்படிச் செய்யக்கூடிய போர்கள் நிகழ்வதைத் தடுக்கவேண்டுமாயின் வெவ்வேறு நாடுகளின் வெளிநாட்டு உறவை ஓர் அளவிற்குக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும். இதிலிருந்து மேலும் பெறப்படும் கருத்து யாதெனில் அந்தந்த நாடுகளின் உள்நாட்டு அலுவல்களையும் சீர்படுத்தும் உரிமையும் தேவைப்படும் என்பதே. கோனிற்சு என்பானின் கூற்றுக்கிணங்க ஐரோப்பா "பல நாட்டினங்களின் குடும்பமாக" அமைந்துள்ளது. எனவே ஒரு நாட்டின் கவலை ஏனைய நாடுகளின் கவலையாயுமிருந்தது. புரட்சி என்னும் தொற்றுநோயை அடியோடு போக்காவிட்டால், அது ஐரோப்பா முழுவதும் மின்னல் போல் விரைந்து பரவும். உண்மையில் 1830 ஆம் ஆண்டிலும் 1848 ஆம் ஆண்டிலும் இந்த நோய் பரவிற்று. இந்த ஆண்டுகளில் பாரிசு நகரக் குடியாட்சியை முன்மாதிரியாகக் கொண்டு, ஐரோப்பாவில் உள்ள ஏனைய தலைநகரங்களிலும் அதன் எதிரொலிகள் கிளம்பின. ஒரு நாட்டின் அலுவல்களிலே தலையிடும் கோட்பாடானது ஐரோப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1818. வில் உள்ள ஒவ்வொரு நாட்டின் தேசிய விடுதலையிலும் தலையிட்டுப் பேராபத்தை விளைவிக்கும் தன்மையைத் தன்னுள்ளே கொண்டிருந்தது. இக்கோட்பாட்டிற்கு இணங்க இங்கிலாந்து மறுத்தது. பிரான்சை எடுத்துக்காட்டாகக் காட்டித் தலையிடும் வாதத்தைக் கொண்டுவரலாம் என்பது உண்மையே; தனிப்பட்ட இவ்வெடுத்துக்காட்டைக் கொண்டு பொதுவ்தி ய மைக்க முடியாது. அந்தச் சூழ்நிலை புறநடை என்பது தெளிவு. 1815 ஆம் ஆண்டு செய்த ஒப்பந்தமே ஐரோப்பியக் கூட்டுச் செயலின் முதல் அத்திவாரம். இதிற்கூடக் காசில்றீ கவனமாக இருந்து, "பிரான்சின் உள்நாட்டு அலுவல்களில் பலமாகவும் ஒளிவுமறைவின்றியும் தலையிடுவதை"த் தடுத்தான். ஏனைய அரசுகளைப் பொறுத்தவரையில், சர்வதேசக்கட்டுப்பாடு என்கின்ற பொதுக் கொள்கைக்கு விட்டுக் கொடுக்கப் பெரிய பிரித்தானியா தயாராக இருக்கவில்லை. குறிக்கப்பெற்ற ஒவ்வொரு அவசர கால நெருக்கடியும் எற்படும்போது தனித்தனி ஆலோசனை செய்யப்பட்டது. அங்ஙனம் செய்வதால் வல்லரசுகள் இதைத்தான் செய்யவேண்டும் எனத் தேவை ஏற்பட முன்னரே கட்டுப்பட வேண்டிய அவசியமிராது. முன்னராகக் கட்டுப்படுத்தப்பட்டால் அக்கட்டுப்பாடு சிலவேளை குறிக்கப் பெற்ற ஒரு நாட்டின் நலனுக்குத்தீமை விளைவிக்கக் கூடியதாக அமைந்து விடவும் கூடும். நட்புறவு நாடுகள் த ம் அதிகாரத்தை எவ்வளவுதூரம் பிழையான வழிகளிலே செலுத்துகின்றன என்பதைக் கவனியாமல் நட்புறவுக் கூட்டுச்செயற்பலத்தை "ஐரோப்பாவில் இயங்கும் அரசுகளை ஆதரிப்பதற்காகத் துர்ப்பிரயோகம் செய்யும்" கருத்தைப் பிரித்தானியா எற்கமறுத்தது. இந்நட்புறவானது உலக அரசாங்கத்தின் ஐக்கியத்திற்காகவோ அல்லது அரசுகளின் உண்ணாட்டு அலுவல்களை மேற்பார்வை செய்வதற்காகவோ செய்யப்படவில்லை எனக் காசில்றீ ஆட்சேபனை தெரிவித்தான்.[1] ஐரோப்பாவிலே எந்தப்பகுதியிலும் புரட்சி இயக்கங்கள் எழக்கூடும். அவை எவ்வெக்காரணங்களால் எழுந்தன என்பதைக் கருதாமல் அவற்றை அடுக்குதல் நட்புறவின் நோக்கமன்று. காசில்றீ, வெலிந்தன்பிரபு, கனிங்கு ஆகியோருக்குப் பாராளுமன்றத்தைப் பற்றியபயம் இருந்தது. எனவே பாதை குறிக்கப்படாத கடலிலே ப்ரயாணஞ் செய்ய அவர்கள் துணியவில்லை. இப்படியான கடலிற் செல்லும் கப்பலிலே பிரயாணஞ் செய்யின் ஆபத்து நேரிடும்; ஏனெனில் பாதை குறிக்கப்படாத இக்கடலிலே பிற்போக்குவாதம் நிறைந்த ஒசுற்றியாவும் இரசியாவும் கப்பலின் முன்றளத்திலிருந்து வழிகாட்டின.

[1] Stapleton, "The Political Life of Canning," i. 139.-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1820–21 (2), (3) துறெப்போ மாநாடும் இலுபா மாநாடும் (1820–21).

ஐரோப்பியக் கூட்டுச் செயல் ஐரோப்பாவின் சுதந்திரச் சுடரை அவித்துவிடும் என்ற பயம் ஆங்கிலேய அமைச்சர்களின் உளத்தில் எச்சிலாசப்பல் மாநாட்டிலே தோன்றிற்று. இந்தப் பயம் சில ஆண்டுகளுக்குப் பின்னர் கூடிய மாநாடுகளிலே பெரிதும் உறுதியாயிற்று. இரண்டாம் மாநாடு துறெப்போ என்னுமிடத்தில் 1820 ஆம் ஆண்டிற் கூடிற்று. அதன் அலுவல்கள் இலுபா என்னுமிடத்தில் அடுத்த ஆண்டு தொடர்ந்து நடந்தன. நியோபொலிற்றன் கலகம் காரணமாக இந்த மாநாடு[1] கூட்டப்பட்டது. இதன் வரலாற்றை முன்னரே கண்டுள்ளோம். குடிகள் வற்புறுத்தியபடியால் நேப்பிள் அரசனை பேடினந்து யாப்பொன்றை அளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒசுற்றியா தலையிடுவதற்கு இது தலைக்கீடாயிற்று. காசில்றீயின் போக்கு தொடக்கத்திலிருந்தே வரையறுக்கப்பட்டிருந்தது. நேப்பிளில் ஒசுற்றியா தலையிட்டமை இரு காரணங்களினால் நியாயமானதாகும் எனக் காசில்றீ கருதினான். முதலாவதாக, இத்தீபகற்பத்தில் ஒசுற்றியாவுக்கு அதிக உரிமைகள் இருந்தன. இவை ஆபத்திற்குள்ளாயிருந்தன. அன்றியும் உலொம்பாடி, வெனீசியா, மத்திய அரசுகள் ஆகியவற்றில் ஒசுற்றியாவில் இருந்த ஆட்சியின் உறுதிக்குத் தெற்கிலேற்பட்ட புரட்சியினால் அபாயமேற்பட்டது. இரண்டாவதாக, ஒசுற்றியப் பேரரசனுடன் பேடினந்து ஐந்தாண்டுகளுக்கு முன்னர் நிறைவேற்றிய ஒரு பொருத்தனையினால் ஒசுற்றியப் பேரரசனுக்கு, ஒசுற்றியா தனது சொந்த இத்தாலிய மாகாணங்களில்[2] உபயோகித்த தத்துவங்களுக்கு ஒவ்வாத மாற்றங்களை நியோபொலிற்றன் அரசாங்கம் செய்வதை எதிர்க்கும் உரிமை கிடைத்தது. பேடினந்து உதவி கோரியமை, அவன் புதிய யாப்பை மதிப்பதாகச் செய்த சத்தியத்தை மீறியதாகும். எனினும் மேற் கூறியவற்றைக் காரணமாகக்கொண்டு நியோபொலிற்றன் எழுச்சியை அடக்குதற்கு ஒசுற்றியா தனது படைகளைக் கொடுத்தமையை வல்லரசுகள் எதிர்க்கவில்லை. மெற்றெணிக்கு இத்தாலிய அலுவல்களில் சுதந்திரமாகத் தான் விரும்பியவாறு எதையும் செய்யும் உரிமை ஏற்கப்பட்டது. ஆயினும், அவன் இவ்வுரிமையுடன் திருத்தியடையவில்லை. நட்புறவாளரினுடைய ஆதரவை வேண்டினான். நேப்பிளின் புரட்சிகரமான ஆட்சியை ஏற்கமறுப்பதன் மூலம் ஒசுற்றியப் பூட்கையை அவர்கள் ஆதரிக்க வேண்டும் எனவும் யோசனை கூறினான். அன்றியும்,

1. பக்கம் 215.
2. பக்கம் 218.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1820-21 அந்நிலைமையைத் தமக்குச் சாதகமாக்குதற்குத் தமது அமைச்சர்கள் மூலம் தமது செல்வாக்கைச் சூழியல் இரீதியில் பயன்படுத்த வேண்டும் எனவும் யோசனை கூறினன். காசில்ரீ இந்த யோசனைகளை ஏற்க மறுத்தான். பொருத்தனையினால் பெறப்பட்ட உரிமைகளைக் கொண்டல்லாது ஒரு அரசு இன்னொரு அரசின் உண்ணாட்டு அலுவல்களில் தலையிடுதல் நியாயமாகாது எனும் தத்துவத்தையே அவன் பின்பற்றினன். நியோபொலிற்றன் புரட்சி பெரிய பிரித்தானியாவின் எல்லைக்கப்பாற்பட்டதாகும். தான் தலையிடுதற்கு நியாயமான தலைக்கீடு இல்லாததனால் பெரிய பிரித்தானியா நடுநிலைமையையே கைக்கொள்ளும். ஒசுற்றியாவின் நிலைமையோ வேறுனதாகும். நேப்பிளுடன் செய்துகொண்ட பொருத்தனையினால் ஒசுற்றியா நேப்பிளிலுள்ள தனது நலன்கள் பாதிக்கப்படக் கூடும் எனக் கருதின், தலையிடுதற்கு அதற்கு நியாயமான தலைக்கீடிருந்தது. சட்ட அடிப்படையிலன்றி பொதுத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு தலையிடும் உரிமையை உறுதிப்படுத்துதற்காக ஐரோப்பிய மக்களிடமிருந்து ஒரு பொறுப்பாணையைப் பெறுதற்கு மெற்றெணிக்கு ஆவலுடையவனாயிருந்தான். இப்பொதுத் தத்துவமாவது, "பொதுக் கலாங்கள், வேலையாட்கள் செய்யும் புரட்சிகள் ஆகியவை முறைகேடானவை; அவை பொதுச் சட்டத்தை மீறுவதனால் ஐரோப்பாவில் தடைசெய்யப்பட வேண்டும்" என்பதேயாகும். ஒசுற்றிய அரசறிஞன் இத்தகைய நோக்கத்தோடு எற்படுத்திய பூட்கை அழிவிற்கு வித்திட்டது. நட்புறவில் இப்பொழுதோ பின்னரோ இப்பூட்கையினால் பிளவு எற்படுவது திண்ணம்.

அலச்சாந்தரின் மனமாற்றம். பேரரசனை அலச்சாந்தரின் சொந்தக் கருத்துக்களில் எற்பட்ட மாற்றத்தினால் இத்தறுவாயில் மெற்றெணிக்கு வலிமையடைந்தான். தாராளத் தத்துவங்களில் அவனுக்கிருந்த சொற்ப நம்பிக்கையும் கொற்சிபியூவின் கொலையினால்[1] ஈடாடிவிட்டது. பெற்றேகிராத்தில் பேரரசுக் காவலர்களின் கலகச் செய்தி அந்த நம்பிக்கையை அடியோடு அழித்தது. இக்கலகம் படைத் தொகுதியின் சேர்மானியக் கேணலின் கொடுமையினால் எற்பட்டது. அவன், பிரசியர் கையாண்ட ஒழுங்கு முறைகளைப் புகுத்தினன். அன்றியும் அவனால் அவனுடைய படையிலிருந்த எல்லோரும், இகழப்படுவோருக்கும் இகழ்வோருக்கும் கௌரவக் குறைவை உண்டாக்கக் கூடிய அவமானங்களுக்காளாயினர்.[2] ஆகவே இப்படைக்கிளர்ச்சி அரசியல் முக்கியத்துவமுடையதன்று.

---

1 பக்கம் 62.

2 **Phillips, "Confederation of Europe," 220, n. 38**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இப்படைக்கிளர்ச்சி அலச்சாந்தரை ஒளிவுமறைவின்றி 1820
ஒசுற்றிய அமைச்சனேடு சேரச் செய்தது. "இளவரசனே! நாம் இப்பொழுது ஒரே நோக்கமுள்ளவர்களாகிவிட்டோம். நீயே அதற்குக் காரணம். நீ இப்பொழுதுள்ள நிலைமையைச் சரியாகக் கிரகித்துள்ளாய். நாம் வீணே போக்கிய நேரத்தை யிட்டு வருந்துகின்றேன். இதற்கு நாம் ஈடுசெய்யவேண்டும். எனக்குக் குறிப்பிட்ட ஒரு கருத்தோ திட்டமோ இல்லை. ஆனால் உறுதியான தீர்மானமொன்றைக் கொண்டுவந்துள்ளேன். அதை விரும்பியவாறு பயன்படுத்துவது உங்களது பேரரசனுடைய பொறுப்பாகும். உங்களுடைய விருப்பத்தை எனக்குச் சொல்லுங்கள். நான் எதைச் செய்யவேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்களோ அதைச் சொல்லுங்கள். நான் அதைச் செய்வேன்"[1] எனத் துறெப்போவில் அவன் மெற்றெணிக்கிற்குக் கூறினன். சூழியலைப் பொறுத்தவரையில், அலச்சாந்தர் ஒசுற்றிய 'முறைமைக்கு' மாறியமையினால் ஏற்பட்ட விளைவுகள் குறிப்பிடத்தக்கவை. அலச்சாந்தர் தன்னை ஐரோப்பாவின் சர்வாதிகாரியாக்கும் இரகசியத் தீர்மானமுடைய னென்பதே அவன் செய்த சொற்பொழிவில் பொதிந்திருந்த கருத்தென நம்பிய ஒசுற்றியா இதுவரையும் இரசியப் பூட்கையை நம்பவில்லை. உதாரணமாகக் கண்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் இரசிய முகவர்கள் பரவியுள்ளனர் என்பது உலகமறிந்ததாகும். இம் முகவர்கள் புரட்சிகளுக்கு ஊக்கமளித்து முன்னேற்ற இயக்கங்களின் சார்பில் இரசியா தனது செல்வாக்கைப் பயன்படுத்தும் எனும் நம்பிக்கையைப் பரப்பினர். ஆகவே இரசியாவுக்கும், பிரான்சு, உவுத்தெம்பேக்கு போன்ற சிறிய சேர்மானிய அரசுகள் ஆகியவற்றிற்குமிடையே நட்புறவு செய்யப்படக்கூடும் என்ற அச்சத்தினால் ஐந்தாண்டுகள் வரை மெற்றெணிக்கின் ஆயுரைகள் கவனிக்கப்படவில்லை. அலச்சாந்தருடன் மீண்டும் செய்யப்பட்ட இணக்கத்தினால் நிலைமை பெரிதும் தெளிவாயிற்று. எனெனில் தாராண்மைக்கெதிராகச் செய்த பிரசாரத்துக்கு இது மூதற்கொண்டு ஒசுற்றியா இரசியாவின் ஆதரவை நம்பியிருக்கலாம் என்ற உறுதி ஏற்பட்டது. இங்ஙனம் இவ் விணக்கம் நட்பாயிருந்த ஐந்துநாடுகளும் ஒருபுறத்தில் பிற் போக்கு அரசுகளான ஒசுற்றியா, இரசியா, பிரசியா ஆகியவை யும் மறுபுறத்தில் யாப்பு அரசுகளான பிரான்சு, பெரியபிரித் தானியா ஆகியவையுமாகப் பிளவுபடுவதற்கு அறிகுறியாயிற்று.

புகழ்பெற்ற துறெப்போ உடன்படிக்கை இந்நிலைமை மாற்றத் துறெப்போ
தைப்பிரதிபலித்தது. இவ்வுடன்படிக்கை வரையறைக் குட்பட்டுத் உடன்படிக்கை

[1] Ibid. 219.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1820. தலையிடும் உரிமையைத் தன்னுள்ளடக்கியதாகும். "மற்ற அரசுகளை அச்சுறுத்தும் விளைவுகளை உண்டாக்கிய புரட்சியினால் அரசாங்கத்தில் மாற்றம் அடைந்த அரசுகள் ஐரோப்பிய நட்புறவின் உறுப்புரிமையை உடனே இழக்கும். சட்ட ஒழுங்கும் உறுதியும் அந்நாடுகளில் ஏற்படும்வரை அவை அந்நட்புறவினின்றும் விலக்கப்பட்டிருக்கும். இத்தகைய மாற்றங்களினால் மற்ற அரசுகளுக்கு உடனடியான அபாய மேற்படுமாயின் குற்றமுடைய அரசைப் பெரும் நட்புறவில் மீண்டும் சேர்ப்பதற்கு அமைதியான முறையிலோ அன்றித் தேவையேற்படின் படை பூண்டோ வல்லரசுகள் ஒன்று சேரும்." இப்பிரகடனத்திற்கு உடந்தையாயிருக்கப் பெரிய பிரித்தானியா மறுத்தது. சுதந்திரமான அரசுகளின் உண்ணாட்டு அலுவல்களில் தலையிடுவதைக் கருத்தளவில் மட்டுமேயுள்ள ஒரு கட்டளையாக்கச் செய்யப்பட்ட முயற்சிக்கு எதிராகக் காசில்றீ இரண்டாவது முறையாகத் தன் எதிர்ப்பைத் தெரிவித்தான். நிலைமையை நன்கு விளக்குவதற்கு அவன் கையாண்ட நியாயங்கள் மறுக்க முடியாதவை. இவ்வுடன்படிக்கை குடிமக்களுக்கெதிராகச்சேர்ந்த இறைகளின் சங்கமெனவும் அது எந்தப் புரட்சி நெருக்கடியைத் தாமதப்படுத்தும் நோக்கமுடையதாயிருந்ததோ அதைத் துரிதப்படுத்திற்றெனவும் கொள்ளப்படும். அன்றியும் நெருக்கடிகள் ஏற்படும் சமயங்களில் உதவி பெறும் நாடன்றி உதவி அளிக்கும் நாடே எப்பொழுதும் நடுவர் நிலையை வகித்தது. இத்தகைய நிலைமையில் நெருக்கடியோ அவசியமோ ஏற்பட்டுள்ளதெனக் கருதப்படும்போதெல்லாம் தம்முள் ஒருவருடைய தேசத்துள் மற்றவர் இட்டப்படி பிரவேசிக்கலாம் என்னும் கொள்கையை வல்லரசினர் ஒப்புக்கொள்ளச் சித்தமாயுள்ளனரா ?[1] இத்தத்துவத்தைப் பெரிய பிரித்தானியாவில் பிரயோகிப்பதற்கு உடன்படும் துணிவுடைய எந்த ஒரு ஆங்கில அமைச்சன்மேலும் பழி சுமத்தப்படும். இதனை ஐரோப்பாவின் பொதுச் சட்டமெனக் கொண்டு ஏனைய நாடுகளில் கையாள்வதற்கு அனுமதிக்கவும் இடமில்லை. பிரான்சியப் புரட்சியானது அதன் வீறுப்பானதும் அடக்கியாள்வதுமான தன்மையினால் விதிவிலக்காகும். புரட்சி ஏற்பட்டபொழுதெல்லாம் தலையிடுவதைப் பிரித்தானியா நியாயமானதாகக் கருதவில்லை. சுருங்கக் கூறின் பிரித்தானிய அரசாங்கம் பொலிசு முறைமையொன்றை ஏற்படுத்தும் பொறுப்பினின்றும் விலகிற்று. இப்பொலிசு முறைமை உண்ணாட்டு இறை அதிகாரத்தைப் பற்றிச் சரியான கருத்துக்களை அழிக்கக்கூடிய அதிகார குழுவையுடைய பொது அரசாங்கம் ஒன்றை ஐரோப்பாவில் உருவாக்கும்.

[1] See Camb. Mod. Hist. x. 28 seq., and Phillips, op. cit. 222 seq.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது பேரவை 1822 இல் வெரோனாவில் கூட்டப் பட்டது. இதுவே கடைசிப் பேரவையுமாயது. இப்பேரவையில் இசுப்பானியப் பிரச்சினையைப் பற்றி மட்டுமே பேசப்பட்டது. 1820 இல் ஏற்பட்ட ஒரு புரட்சியின் விளைவாக இசுப்பானிய அரசனை ஏழாம் பேடினந்து மதவழக்கு மன்றை ஒழித்து யாப்பு ஒன்றைப் பிரசித்தஞ் செய்ய வேண்டியதாயிற்று. ஆனால் அவன் தொடக்கத்திலிருந்தே கபடமாக வேலை செய்தான். தன்னுடைய சொந்தக் குடிமக்களுக்கு எதிராகப் பிறநாட்டு உதவியை வேண்டிய அவனுடைய வேண்டுகோளுக்கு சாற்றே பிறயினப் பின்பற்றிப் புகழ்ச்சிப் பூட்கையைக் கையாண்டவர் களும் பூபோன் அரசனுடைய[1] நன்மையை நாடும் அவாவுடைய வர்களுமான தீவிர முடியாட்சி வாதிகளிடமிருந்து சாதகமான மறுமொழி கிடைத்தது. தனி முடியாட்சியை மீட்பதற்காகத் தான் இசுப்பெயின் விடயத்திலே தலையிடப் போவதைப்பற்றி வெரோனா மாநாட்டில் பிரான்சு பிரசித்தஞ் செய்தது. அத் துடன் நட்புறவு வல்லரசுகளின் ஆதரவையும் கோரிற்று. பிரித் தானிய தானிகனை வெலிந்தன் உண்ணாட்டரசாங்கத்திற்கு அறிவித்தவாறு பிரான்சிற்குத் தேவையான எல்லா ஆதரவும் உதவியும் தாம் அளிப்பதாக ஒசுற்றியாவும் இரசியாவும் பிரசியாவும் மறுமொழி கொடுத்தன. மறுபக்கத்தில் பெரிய பிரித்தானியா தலையிடாக் கோட்பாட்டைத் தளராது அனுசரிப் பதில் பிடிவாதமாக இருந்தது. இசுப்பெயினின் உண்ணாட்ட லுவல்களில் தலையிடக்கூடாதென வெலிந்தன் கட்டளையிட் டான். ஆகவே கண்டத்திலுள்ள வல்லரசுகளுடன் ஏற்பட்ட பிணக்கே இதன் விளைவாகும். பிரான்சியப் படை இசுப்பானிய எல்லைப்புறத்தைக் கடந்ததும் ஒளிப்பு மறைப்பின்றி ஐரோப்பிய முறைமை முற்றுக அழிக்கப்பட்டது. வெரோனாப் பேரவை உருவாதற்கு முன்னர் வெளிநாட்டுச் செயலாளனுகக் காசில்றீ வகித்த பதவியை அடைந்த கனிங்கு ஐரோப்பிய ஐக்கியம் தோல்வியடைந்ததையிட்டு அஞ்சவில்லை. வெரோனாப் பேரவை யின் விளைவினல் பிரிக்கமுடியா நட்புறவொன்றில் பிளவு ஏற்பட்டதை அதாவது இங்கிலாந்தினதும் பிரான்சினதும் மசுக் கோவியினதும்[2] யாப்புக்களாகப் பிரிந்ததையிட்டு அவன் தான் அடைந்த மகிழ்ச்சியை மறைக்கவில்லை. "விடயங்கள் மீண்டும் நன்னிலையை அடைகின்றன" என எழுதினன். ஒவ்வொரு நாடும் தனது நன்மையை மட்டுமே கருதி வாழ்கின்றது.

1822. (4)வெரோனாப் பேரவை (1822)

---

[1] பக்கம் 13.

[2] Stapleton, "Canning and his Times," 369.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1823 உலகம் முழுவதின் நன்மையையும் கவனிப்பவர் கடவுள். அரோபகினதும் அவரைப் போன்றவரினதும் காலம் மலையேறி விட்டது.

ஐரோப்பிய ஐக்கியம் குலைதல்.

கூட்டு ஐரோப்பாவை நிறுவுதற்குச் செய்யப்பட்ட முயற்சி இங்ஙனம் பல்வேறுபட்ட நாட்டின அவாக்களாகிய பாறைகளிலே மோதுண்டு சுக்கலாயிற்று. வேறுபட்ட, பிரித்தானியாவின் நோக்கங்களையும் ஏனைய வல்லரசுகளின் கருத்துக்களையும் இணக்கஞ் செய்ய இயலாதிருந்தது. இறை அரசுகளினதும் சுதந்திர அரசுகளினதும் அலுவல்களில் தலையிடாத் தத்துவமே பிரித்தானியப் பூட்கையாயிருந்தது. காசில்றீ நட்புறவு நாட்டு அரசருடன் வெளிப்படையாகப் பொருதுவதைத் தவிர்க்கும் ஆவலுடையனாயிருந்தான் எனினும் அவனும் கனிங்கும் இத் தத்துவத்தைத் தளர்வின்றிப் பின்பற்றினர். காசில்றீ நட்புறவு நாடுகளிலிருந்து வெளிவெளியாகப் பிரிந்துபோக விரும்பவில்லை. கனிங்கோ அம்மாதிரித் தயக்கம் எதுவும் காட்டவில்லை. கோபம் கொண்ட தெய்வம் ஐரோப்பாமீது எறிந்த எரிநட்சத்திரமாக அவனை மெற்றெணிக்கு கருதினான்.[1] ஆங்கில அரசாங்கம் தொடக்கத்திலிருந்தே தளர்வின்றிப் பின்பற்றிய போக்கு, கனிங்கு வீயன்னாவிலிருந்த பிரித்தானியத் தூதுவனுக்கு 1823 ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. சுதந்திரமான நாடுகளின் உண்ணாட்டு அலுவல்களில் தலையிடவோ அன்றித் தலையிடுவதற்கு உதவியளிக்கவோ இங்கிலாந்து கடப்பாடு உடையதன்று. பிரான்சில் தலையிடுவதற்குச் செய்யப்பட்ட உடன்பாடு விதிவிலக்காகும். விதியை நிரூபிக்கும் நோக்கத்துடனேயே அது மிகவும் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டது. பொருத்தனையின் பொழுது நட்புறவின் ஆயுரைகள் மேல் எமக்கு யாது செல்வாக்கிருந்தது? நாம் இலேபாவில் எதிர்த்தோம். வெரோனாவில் எச்சரித்தோம். எமது எதிர்ப்பை அவர்கள் பொருட்படுத்தவில்லை. எமது எச்சரிப்புகள் காற்றுடன் பறந்தன. எமது செல்வாக்கினை வெளிநாட்டில் நிறுவுவதாயின் அது உண்ணாட்டிலும் பலமுடையதாகவிருத்தல் வேண்டும். எமது செல்வாக்கிற்குப் பலமளிப்பவை அரசினரும் மக்களும் ஒருவர்மீது ஒருவர் காட்டும் பரிவும், பொதுசன அபிப்பிராயமும்

---

[1] மெற்றெணிக்கைப்பற்றிக் கனிங்கு கொண்டிருந்த கருத்தும் இதுபோன்று புகழ்ச்சியற்ற தொன்றேயாகும். 1825 இல் கிரன்வில் பிரபுவுக்குக் கனிங்கு எழுதியதாவது: "மெற்றெணிக்கிடம் என்ன சொல்ல வேண்டுமென்று நீர் என்னைக் கேட்கின்றீர். முதன்முதலாவதாக நான் அவனைப்பற்றி என்ன நினைக்கின்றேன் என்பதை நீர் கேட்பீராக. ஐரோப்பாக் கண்டத்தில், என் இந்த நாகரிக உலகத்திலேயே அவன் மிகப்பெரிய-, கயவன்": **Stapleton, "Canning and his Times," 427.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது ஆலோசனைகளும் ஒருமைப்படலும், பொதுமக்கள் சபை 1823
யும் முடியும் ஒன்றுக்கொன்று காட்டும் நம்பிக்கையுமேயாகும்.[1] ஐரோப்பாவிலுள்ள புதிய முறையைப் புரட்சி நாடான பிரான்சினால் எற்படும் அபாயத்தினின்றும் பாதுகாக்கும் திடமான நோக்கத்துடன் இந்நட்புறவு செய்யப்பட்டது. ஆனால் தன்னுண்மையுடைய வல்லரசுகள் இந்நட்புறவைப் பழைமைபேணும் கொள்கையின் அரணுகவும் முன்னேற்றமுடைய இயக்கங்களுக்குத் தடையாகவும் பயன்படுத்த முயன்றன. ஆகவே இங்கிலாந்தின் போக்கு நியாயமானதாகும்.

நாட்டினங்கள் விழிப்படைதல்.

நாட்டினத்தின் உரிமைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் பெரிய பிரித்தானியா வலுவுடைச் சத்தியொன்றை விடுதலை செய்ய உதவிற்று. இச்சத்தியின் ஆற்றலைப் பெரிய பிரித்தானியா அறியாதிருந்தது. கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்துவதே பெரிய பிரித்தானியாவின் பூட்கையாக இருந்தது. கொள்கையளவினதான தத்துவங்களைத் தவிர்த்து, செயற்படுத்தக் கூடியனவும் நலமுடையனவுமாகக் காணப்பட்டவற்றை மட்டுமே கவனித்தது. 1815 ஆம் ஆண்டு வீயன்னைப் பேரவையினால் நிறுவப்பட்ட ஆள்புலமுறையைக் குலைத்து ஐரோப்பாவை மீண்டும் உருப்படுத்திய பெரும் நாட்டின இயக்கங்களுக்குப் பெரிய பிரித்தானியா உற்சாகத்துடன் உதவி யளிக்கவில்லை. இன்னும், பெரிய பிரித்தானியா ஐரோப்பிய ஐக்கியத்தினின்றும் விலகியமை நாட்டின உணர்ச்சியைத் தொடக்கத்திலேயே அழித்திருக்கவோ அன்றி கால வரையறையின்றிப் பிற்போடவோ கூடியதான அரசியல் முறைமைக்கு சாவுமணி அடித்தது. தவிர்க்கமுடியாத பிரித்தானியப் பூட்கை நீக்கமுடியாத முரண்பாடுகளை உடையதாயிருந்தது. "உலக அமைதியைப் பாதுகாப்பதே எங்களுடைய அலுவலாகும்" எனக் கனிங்கு பிரகடனஞ் செய்தான். இதற்காக நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தைப் பிரசித்தஞ் செய்தான். நாட்டினங்கள் விழிப்படைவதனால் சருவதேச அமைதி குலைவதுடன் இதுவரையும் உலகத்தவர் கண்டிராத பெருநெருப்பு இறுதியில் மூளும் என்பதை அவனால் எதிர்பார்க்க முடியவில்லை. வெறேனாப் பேரவையின் பின்னர் கூட்டாட்சி ஐரோப்பா பற்றிய கனவு கலைந்தது. பெரும் வல்லரசுகளின் கழகம் ஒன்றின் மூலம் ஐரோப்பாவை ஆட்சிசெய்யும் முயற்சி மீண்டும் எடுக்கப்படவில்லை. எனினும் இன்னும் சருவதேச அலுவல்களில் ஒன்றுபட்டுச் செயல் புரியும் மரபுகள் இருந்தன. இதுமுதற்கொண்டு ஐரோப்பா ஒரு புறத்தில் புரட்சியியக்கங்களை முற்றுக அழிக்கும் நோக்கத்துடன்

[1] Ibid. 374.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 நட்புறவு செய்துகொண்ட மூன்று கிழக்கு வல்லரசுகளையும் மறுபுறத்தில் நாட்டினத்தையும் அரசாங்கத்தின் யாப்புத் தத்துவங்களையும் ஆதரிக்கும் இரு மேற்கு வல்லரசுகளையும் உடைய இரு பிரிவுகளாகப் பிரிந்தது. ஆனால் இப்பிரிவிருந்தபொழுதும் கோனிற்சு வர்ணித்ததுபோல் ஐரோப்பா இன்னும் பல நாடுகள் சேர்ந்த ஒரு குடும்பமாகவே இருந்தது. இந்நாடுகள் தனிப்பட்ட முறையில் செயற்படமுடியாது. எனெனில் அவற்றிற்குப் பொதுவான அக்கறைகள் பல இருந்தன. எனவே 19 ஆம் நூற்றுண்டில் இடையிடையே ஐரோப்பா ஐக்கியப்பட்டது. அவ்வேளையில் ஏற்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தற்காலிகமாகப் பெரும் வல்லரசுகள் ஒன்றுசேர்ந்து ஐரோப்பா எங்கணும் தமது விருப்பைத் திணித்தன. அவை ஒன்றுபட்டுச் செயலாற்றுவதற்கு மூன்று முக்கிய பிரச்சினைகள் காரணமாயிருந்தன. அவையாவன: (1) ஏற்கனவே நாம் கவனித்த கீழைத்தேசப் பிரச்சினை, (2) பெல்சிய இராச்சியத்தை நிறுவுதல், (3) போலந்துப் பிரச்சினை.

1815 இல் ஒல்லாந்து, பெல்சிய ஐக்கியம்.

ஒல்லாந்தினதும் பெல்சியத்தினதும் ஐக்கியம் 1815 இல் நடந்த ஆள்புல உடன்படிக்கையின் ஒரு பகுதியாகும். இரு நூற்றுண்டுகளுக்கு மேலாக இவ்விரு நாடுகளும் பிரிந்திருந்தன. இரண்டாம் பிலிப்பினிடம் ஒல்லாந்து மக்கள் காட்டிய விசுவாசத்தை அவர்கள் நீத்தபொழுது, அவர்கள் தெற்கிலுள்ள தமது அயலவருடன் கொண்டிருந்த ஐக்கியத்தையும் துண்டித்தனர். தெற்கிலிருந்த அவர்களுடைய அயலவர்கள் ஒசுற்றியாவுக்குக் கீழும் பிரான்சியப் புரட்சியின்பொழுது பிரான்சுக்குக் கீழும் வரும்வரை இசுப்பானியருடைய ஆட்சியிலேயே இருந்தனர். நெப்போலியப் போரசின் வீழ்ச்சியினால் பெல்சியம் பிரான்சிய ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்றது. ஆனால் நட்புறவாளர், பெல்சியத்தைத் தாம் வெற்றிகொண்ட ஆள்புலமாகவே நடத்தினர். தாம் விரும்பியவாறு கிரயஞ் செய்யக் கூடிய தொன்றெனவும் கருதினர். பிரான்சியரால் இலகுவில் தாக்கப்[1] படக்கூடிய இத்தகைய மாகாணமொன்றை ஏற்க ஒசுற்றியா மறுத்து, வட இத்தாலியில் நட்ட ஈட்டைப் பெறும் நாட்டமுடையதாயிருந்தது. ஆகவே காசில்றீ பெல்சியம் நெதலந்துடன் ஒறேஞ்சுக் குலத்தின் இறைமையின்

---

1 "பிரான்சுடன் எம்தேசம் நேரடியாகக் கொண்டுள்ள தொடர்பை அறுக்கவும், அவ்வாறு செய்வதன் மூலம் அண்டையிலுள்ள இரு போரசுகளுக்குமிடையே இத்தொடர்பு காரணமாய் இடைவிடாது ஏற்பட்டுவந்த போர்களுக்கு முடிவு காணவும் நாங்கள் விரும்பினேம்." மெற்றெணிக்கு, **Memoirs, i.264.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் இணைக்கப்படவேண்டும் என யோசனை கூறினன். பிரான் 1815-30
சியர் தாக்கின் அதை அடக்கும் வலிமையுடைய புதிய அர
சொன்றைப் பிரான்சின் வடகிழக்கு எல்லைப்புறத்தில் நிறுவு
வதை இது குறிக்கும். புகழ்பெற்ற எட்டு உறுப்புக்கள் ஐக்
கியத்தின் நியதிகளை விதித்தன. இரு நாடுகளும் ஒரு அரசாக
இணைக்கப்படவிருந்தன. சமய சமத்துவம் அளிக்கப்பட்டது. வர்த்
தக உரிமைகளும் யாப்புச் சிறப்புரிமைகளும் பரசுபரம் வழங்கப்
பட்டன. இரு நாடுகளின் பொதுக் கடன்களைத் தீர்ப்பது இறைசே
ரியின் பொறுப்பாயது. இவையே மற்ற ஏற்பாடுகளாகும். வேறு
பட்ட இரு பிரதேசங்களைச் சூழியலினுல் ஐக்கியப்படுத்தக் கூடிய
அளவுக்குத் தாழ்ந்த பிரதேசங்களை ஒரு ஓரரசாக்குவதன்
பொருட்டு எல்லா முயற்சியும் செய்யப்பட்டது. வரலாற்றுசிரி
யர் வழமையாக மதிப்பதிலும் பார்க்க இவ்வைக்கியம் வெற்றி
பெறுவதற்குக் கூடுதலான வாய்ப்புகள் உடையதெனக் குறிப்
பிடுதல் நியாயமானதாகும். உண்மையில் இது நாட்டினத்
தத்துவத்தை எதிர்ப்பதாகும். வேறுபட்ட இரு இனங்களையும்
சமயங்களையும் மொழிகளையும் சிறப்பாக வேறுபட்ட மரபுகளையும்
இது பிணைத்தது. இதேசமயம் இதனுல் சில நன்மைகளும் ஏற்
பட்டன. இரு நாடுகளும் ஐக்கியப்பட்டதனுல் பெல்சியர் செல்து
நதியில் கட்டுப்பாடின்றிக் கப்பலோட்டக்கூடியதாயிற்று. இவ்
வுரிமையினுல் அவர்கள் இடச்சுக் குடியேற்றப் பிரதேசங்களை
அடையக் கூடியதாயிற்று. இதன் விளைவாகப் பெல்சியம் பொருள்
வளத்தைப் பொறுத்தவரையில் பெரிதும் முன்னேறிற்று.
வீதி, கால்வாய் ஆகியவற்றுல் செய்யப்படும் போக்குவரத்துப்
பெரிதும் திருந்திற்று. நாட்டின் கனிப்பொருள் வளம் அபி
விருத்தி செய்யப்பட்டது. இரும்பு, கம்பளி, பருத்தி ஆகிய
வற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன.
இலீசும், கெந்தும், வேவியரும், வேறு இடங்களும் சிறந்த கைத்
தொழில் மையங்களாயின. ஒல்லாந்தின் ஐக்கியத்தினுல் குடி
யேற்றநாட்டுச் சந்தைகளும் பிறநாட்டுச் சந்தைகளும் கிடைத்
தன. ஆதலால் பெல்சியருடைய வர்த்தகம் ஆண்டுதோறும்
வளர்ந்து கொண்டே யிருந்தது. பொருள்வளத்தைப் பொறுத்த
வரையில் ஐக்கியத்தின் விளைவையிட்டுத் தென்மாகாணங்கள்
திருத்தியடையக் காரணமுண்டு. வேறுபட்ட இரு இனத்தினரைக்
கட்டாயமாக ஒன்று சேர்ப்பதனுல் நிச்சயமாக ஏற்படும் சச்சரவை
அறிவுடைய இணக்கமான அரசறிவினுல் பெரிதும் குறைத்
திருக்கலாம் என்பதற்கு ஐயமில்லை. இதன் மூலம் காலப்
போக்கில் பெல்சியரும் ஒல்லாந்தரும் அவர்களிடமிருந்து வேண்
டப்பட்ட தியாகங்கள் ஐக்கியத்தினுல் பெறப்பட்ட அரசியல் வர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815-30

தக நன்மைகளுக்கு ஈடாகும் என்பதை அவர்கள் மதிக்குமாறு செய்திருக்கலாம். ஆனால் இது அப்படியாகவில்லை.[1]

பெல்சியருடைய அதிருத்திக்குக் காரணங்கள்.

1830 இல் புரட்சியை உண்டாக்குவதற்குப் பல காரணங்கள் ஒன்று சேர்ந்தன. 20 இலட்சம் குடித்தொகையைக் கொண்ட ஒல்லாந்திற்கும் இதனைவிட இருமடங்கு கூடிய குடித்தொகை யையுடைய பெல்சியத்திற்கும் குடித்தினை மன்றில் சமமான பிரதியாளரே பிரதிநிதிகளாயிருந்தனர். அரசாங்கத்தின் கீழ் பதவி வகித்த பெல்சியப் பிரதியாளர் இடச்சுக்காரருக்குச் சார் பாக வாக்களித்தனர். இதனால் அச்சபையில் ஒல்லாந்து பெரும் பான்மையுடையதாயிருந்தது. பெல்சியப் பிரதியாளர் இங்ஙனம் வாக்களித்தமையினால் பெல்சியர் தமது அரசியல் தாழ்வை உணர்ந்தனர். இரு நாடுகளுக்குமிடையேயிருந்த பாலனத்தில் ஏற்றத்தாழ்வு மேலும் அதிகரித்தது. பொதுத் தினைக்களங் களின் தலைமைப் பதவிகள், குடியியற்சேவை, சூழியற்றொழில், படையில் உயர்பதவிகள் ஆகியவற்றிற்கு இடச்சுக்காரரே தேர்ந் தெடுக்கப்பட்டனர். பெல்சியருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே காட் டப்பட்ட இத்தகைய வேற்றுமை நியாயமற்றதும் புத்தியீன மானதுமாகும். இவ்வேற்றுமை அவர்கள் முறையிடுவதற்கு நியாயமான தலைக்கீடாயிற்று. ஆனால் சமயச் சமவுடைமைத் தத்துவத்திற்கு மிதமான கத்தோலிக்க கட்சி காட்டிய எதிர்ப்பு அத்தினை மெச்சத்தக்கதன்று. சிக்கல் நிறைந்த மொழிப் பிரச் சினை பெரும் பிளவை ஏற்படுத்தியது. இது தவிர்க்க முடியாத தாயிருந்தது. பெல்சியர், பிளெமிங்கர் (பிளாண்டேசு பிர பான்று), உவாலுனர் (எயினேற்று, நாமூர், இலீசு) என இரு பிரிவினராவர். குடித்தொகையின் மூன்றில் இரண்டு பங்கினர் முன்னையோராவர். இடச்சு மொழியே இவர்கள் மொழியாகும். பிரான்சிய மொழியை ஒத்த மொழியே பின்னவரது மொழி யாகும். ஆகவே இடச்சு மொழிக்கே இறுதியில் புதிய நெத லந்து அரசின் நாட்டின மொழியாகும் முதல் உரிமை இருந் தது. ஆனால் கட்டாயத்தின் பேரில் அதைப் பெல்சியத்தின் நாட்டின மொழியாக்கச் செய்யப்பட்ட முயற்சி இனப்பகையை வளர்ப்பதாயிற்று. அச்சுலகு இட்டப்படி நடத்தப்பட்டதனால் வட மாகாணங்களுக்கும் தென் மாகாணங்களுக்கும் இடையே யிருந்த பிளவு பெரிதாயிற்று. யாப்பின் ஒரு கூற்றினால் சுதந்திரமாக உரையாடும் உரிமை உத்தரவாதஞ் செய்யப்பட்டது. ஆனால் செயலளவில் இது சிறிதே மதிக்கப்பட்டது. அரசாங் கத்தின் பூட்கையைக் கண்டனஞ் செய்வதில் ஈடுபடுவோர் மேல்

[1] G. Edmundson, " The Low Countries " in Camb. Mod. Hist.x.524–5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தண்டனைகள் விதிக்கப்பட்டன. இந்நடவடிக்கை பால 1830
னத்தைக் கண்டனஞ் செய்வோரது வாய்க்குப் பூட்டுப் போட்ட தோடமையாது அவர்களின் பிடியைக் கடுமையாக்கிற்று. ஆனால் அரசாங்கத்தின் நிதிப் பூட்கையைப் போல வேறெந்த நட வடிக்கையும் எதிர்க்கப்படவில்லை. ஒல்லாந்து பெருங் கடன் பட்டது. ஆனால் அதில் அரைப்பங்கைப் பெல்சியர் கட்டவேண்டு மெனக் கட்டாயப்படுத்தப்பட்டனர். பெல்சியர் இதை ஒப்புக்கொள்ள முடியாதெனக் கருதினர். நாட்டினக் குறைவைத் தீர்ப்பதற்கு விதிக்கப்பட்ட புதிய வரிகளின் தன்மை, நிலைமையைத் திருத்த வில்லை. ஒன்று மாவுக்கு (அதாவது உணவுக்கு) இறுக்கப்பட்ட வரியாகும். மற்றது இறைச்சிக்கு விதிக்கப்பட்ட வரியாகும். அதாவது இவ்வரிகள் வாழ்க்கைக்கு முக்கியமான இரு பொரு ள்களைப் பாதித்தன. இவற்றை விட நியாயமற்றவையும் கடுமை யானவையுமான வரியெதுவுமிருக்க முடியாது. முழுச் சமுதா யமும் இவ்வரிகளினால் பாதிக்கப்பட்டது. வறியோரே கூடு தலாகப் பாதிக்கப்பட்டவராவர். இவ்வரிகளினால் நாட்டின மக் கள் எல்லோரும் இடச்சு ஆதிக்கத்தை எதிர்த்தனர்.

பல்வேறு காரணங்களால் பெல்சியப் பொதுமக்களது அபிப் 1830 ஆம்
பிராயம் படிப்படியாக ஒல்லாந்திற்கு எதிராக மாறிற்று. வடக் ஆண்டுப்
கிற்கும் தெற்கிற்குமிடையே இருந்த பிளவு மேன்மேலும் அதி புரட்சி.
கரித்தது. பெல்சியத்தின் இருகட்சியினரான திருச்சபையினரும் தாராளரும் தற்சமயத்திற்கு ஒரு நாட்டினக் கட்சியினராக ஒன்றுசேர்ந்தனர். நாட்டினர் எல்லோருக்கும் ஏற்பட்ட பொது அபாயத்தினால் அவ்விரு கட்சியினருக்குமிடையே இருந்த சிறு வேற்றுமைகள் மறைந்தன. பெல்சியத்தின் கைத்தொழில் அபி விருத்திக்குப் பொருளுதவியளித்த இடச்சு நாட்டின் ஐக்கியத்தி னால் அடைந்த பொருளாதார நன்மைகளுக்காகப் பெல்சியர் இன்னும் இச்சங்கத்தில் விசுவாசமுடையோராயிருந்தனர். ஆகவே அவர்களுடைய திட்டம் இச்சங்கத்தைக் குலைப்பதன்று; ஆனால் பாலனத் தன்னுண்மையைப் பெறுவதாகும். எங்கும் பலமாகக் கிளர்ச்சி செய்யப்பட்டது. குடித்தினை மன்றிற்குச் சமர்ப்பிக்கப் பட்ட எண்ணிறந்த மனுக்களில் பொதுமக்கள் தமது அமைதி யின்மையைத் தெரிவித்தனர். நற்பண்புக்கள் உடையவனான உவிலியம் அவப்பேறாக பிடிவாத குணமுடையனாயிருந்தான். நன்நோக்கங்களையுடையனாயும் தனது குடிமக்களுடைய நலனை ஆதரிப்பதில் உண்மையான விருப்புடையனாகவுமிருந்த அவன் ஒழுங்கற்ற ஒருசில கிளர்ச்சியாளருடைய அம்மனுக்கள் நியாய மற்றவை எனவே கருதினான். ஆகையால் அவற்றை ஏற்க அவன் விரும்பவில்லை. இச்சூழ்நிலைகளில் பிரான்சியப் புரட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1830 பற்றி (யூலை 1830) செய்திகள் வெளிவந்தபொழுது பெல்சியர் புரட்சி செய்வதற்கு ஏற்ற மனோநிலை உடையவர்களாகக் காணப் பட்டனர். ஒகத்து மாதம் 25 ஆம் திகதி இரவு பிறசலில் நடந்த இசை நாடகம் கலாத்திற்கான குறிப்பாயிற்று. சுதந் திரத்திற்கு நியோபொலிற்றன் போராட்டமே இவ்விசை நாட கத்தின் விடயமாயிற்று. இவ்விசை நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சபையினர் புரட்சி உணர்ச்சியினால் உந்தப்பட்டனர். இதைத் தொடர்ந்து முன்யோசனையின்றிக் கலகம் ஏற்பட்டு விரைவிற் புரட்சியின் தன்மையைப் பெற்றது. ஒறேஞ்சு நாட்டுச் சிற்றரசனின் தலைமையில் படையெடுத்துச் சென்ற படை நாட்டுமக்களால் அரண் செய்யப்பட்ட பிறசலிற்குள் செல்ல முயன்றபொழுது துரத்தப்பட்டது. இத்தோல்வி மக்களின் உள்ளத்தைத் தாக்கிய விதம் குறிப்பிடத்தக்கது. இக் கலகம் மின்னல்போல் நாடெங்கும் பரவிற்று. நவெம்பர் 10 ஆம் திகதி நாட்டினர் கழகமொன்று கூட்டப்பட்டது. யாப்பு ஒன்றை வரையும் வேலை உடனடியாக மேற்கொள்ளப்பட்டது.

வல்லரசுகளின் போக்கு. இதுவரையும் செயலற்று வாளாவிருந்த வல்லரசுகள் இப் பொழுது செயலிலிறங்கின. அவைகளுடைய வேண்டுகோளிற் கிணங்கத் தாபிக்கப்பட்டதும் அவைகளுடைய ஆடம்பரமான பிரகடனங்களால் பலப்படுத்தப்பட்டதுமான ஐக்கியத்தை மீண் டும் ஏற்படுத்தும்படி உவிலியம் வேண்டினான். பத்தாண்டு களுக்கு முன்னர் இம்முறைப்பாட்டிற்கு உடனடியாகப் பதில் கிடைத்திருக்கும். ஆனால் சருவதேச நிலைமை 1820 இல் இருந்ததுபோல் இப்போதில்லை. ஐரோப்பிய நாட்டுக் கூட்டிணைப்பு முற்றுக அழிந்தது. ஆதலால் ஐரோப்பா இரு கட்சிகளாகப் பிரிந்தது. புரட்சியைத் தோற்கடிப்பதற்கு ஒல்லாந்து அரசனின் சார்பாகப் பிற்போக்கு வல்லரசுகள் மகிழ்ச்சியுடன் தலையிட்டிருக் கும். ஆனால் இரசியாவும் ஒசுற்றியாவும் போலந்தில் எழுந்த கலகத்தில் ஈடுபட்டிருந்தன. பிரசியாவிற்கு, பிரான்சையும் இங்கிலாந்தையும் தனியே எதிர்க்கும் வலுவில்லை. ஆகவே மேற்கு வல்லரசுகளிடம் மட்டுமே இப்பொறுப்பை ஒப்படைக்க வேண்டியதாயிற்று. இவைகள் பெல்சியர்பால் பரிவுடையராயிருந் தன. பிரான்சியப் பொதுமக்களுக்கு எதிராகப் பிரசியா புதிய பெல்சிய அரசை அடக்குவதை அனுமதித்தால் தான் அரசனுக இருக்கவியலாதென்பது உலாயி பிலிப்பிற்குத் தெரியும். ஆகவே பெல்சியருடைய பலவந்தத்தைப் படைகொண்டு எதிர்க்கும் தனது கருத்தினை வெளியிட்டான். ஐரோப்பியப் போரைத் தடுப்பதில் ஆர்வமுடைய பிரித்தானிய அரசாங்கம் இவ்வுறுதி யான பூட்கையை ஆதரித்தது. பெல்சியப் பிரச்சினையினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சிற்கும் பிரசியாவிற்கும் பகை ஏற்பட்டால் ஐரோப்பியப் 1831
போர் மூள்வது தவிர்க்க முடியாத தொன்றுகும். வல்லரசுகள் மாநாடொன்று இலண்டனில் கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் நடந்த ஆலோசனையினால் ஒல்லாந்தினதும் பெல்சியத்தினதும் ஐக்கியம் குலைக்கப்பட்டது. ஒறேஞ்சு அரசகுலத்தினருக்கு இலட்சம்பேக்கு மீண்டும் கொடுக்கப்பட்டது. நாட்டினக் கடனில் அரைப் பங்கினைப் பெல்சியம் தீர்க்க வேண்டுமெனக் குறிக்கப்பட்டது. சனவரி ஆசாரமென வழங்கப்பட்ட இவ்வுடன்படிக்கையை அரசனை உவிலியம் ஏற்றான். ஆனால் பெல்சிய நாட்டினக் கழகம் இதை நிராகரித்தது. கோமகப் பகுதியான இலட்சம்பேக்கு கொடுக்கப்பட்டதையிட்டே இகலாட்டு நடந்தது. ஒறேஞ்சு அரசகுலத்தினர் தமது பரம்பரை ஆள்புலங்களைப் பிரசியாவிற்குக் கொடுத்ததற்குக் கைம்மாறாக 1815 இல் அவர்களிடம் இலட்சம்பேக்குக் கோமகப் பகுதி ஒப்படைக்கப்பட்டது. இலட்சம்பேக்கு நாட்டினக் கழகத்திற்குத் தனது பிரதிநிதிகளை அனுப்பிற்று. இலட்சம்பேக்கின்மேல் தமக்கிருந்த பிடியைத் தளர்த்தப் பெல்சியர் விரும்பவில்லை. பெல்சிய மன்றமானது ஐரோப்பிய மண்டிலங்கள் அதன்மேற்றினித்த நியதிகளை ஏற்க மறுத்தது. அன்றியும் பிரான்சியச் சிற்றரசனுக்குப் பெல்சிய முடியின் உரிமையை அளிப்பதில்லை எனச் செய்யப்பட்ட அவர்களுடைய தீர்மானத்திற்கெதிராகப் பிரான்சிய அரசனின் இரண்டாவது மகனை நீமோசுக் கோமகனுக்கு முடி வழங்கப்பட்டது. கொடுக்கப்பட்ட ஈளரவத்தை மகனின் சார்பில் ஏற்க உலாயி பிலிப்பு மறுத்தமையைப் பிரான்சிய மக்கள் மன்னிக்க முடியாத குற்றமாகக் கருதினர். பெல்சியத்தைப் பிரான்சிய குலத்தினர் ஆட்சி செய்வதை ஐரோப்பா அனுமதிக்கமாட்டாதென்பது அவனுக்கு நன்கு தெரியும். ஆதலால் ஒரே ஒரு முடிவிற்கு மட்டும் வரக் கூடிய போரில் ஈடுபடுவதனின்றும் அவன் விலகினான். கடைசியில் வல்லரசுகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அபேட்சகன் ஒருவன் காணப்பட்டான். அவன் சட்சகோபேக்கின் சிற்றரசனை இலியோப் போலாவான். அவன் 1831 ஆம் ஆண்டு யூலை மாதம் பெல்சியருடைய அரசனானான்.

இலியோப்போல் தனது புதிய குடிமக்களை இணக்குதற்காக, சனவரி ஆசாரத்தில் விதிக்கப்பட்ட உடன்படிக்கை நியதிகளை மாற்றியமைக்குமாறு வல்லரசுகளை வற்புறுத்தினான். பதினெட்டு உறுப்புக்கள் என வழங்கப்பட்ட புதிய நியதிகள் பெல்சியத்தின் சார்பில் அரிய சலுகைகளை அளித்தன. இலட்சம்பேக்கு பெல்சியத்திடமேயிருந்தது. நாட்டினக் கடனைச் சமமாகப் பிரித்தற்குப் பதிலாக, ஐக்கியப்படுதற்கு முன்னர் ஒல்லாந்து பட்ட கடன்களை இணக்கத்துக்குத் தடைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1831 அது தீர்க்கவேண்டியிருந்தது. முக்கியமானதும் மாற்ற முடியாததும் எனப் பிரகடனஞ் செய்யப்பட்ட ஆசாரங்களைத் திருத்தியமை உவிலியத்திற்கு முழு உடன்படிக்கையையும் மறுத்தற்கு ஒரு தலைக்கீடாயிற்று. வல்லரசுகள் செய்யும் தீர்மானங்களை எதிர்க்காது அவற்றை மதிப்பதனால் தான், யாதொரு பலனுமடைய முடியாது என்பதை அவன் தெளிவாகக் கண்டான். முன்னைய ஆபத்துக்களினால் ஏற்பட்ட கறையை நீக்கும் ஆர்வமுடையோனு யிருந்தான். ஒறேஞ்சு நாட்டுச் சிற்றரசன் தனது தலைமையில் 36,000 பேரைக்கொண்ட ஒரு படையுடன் பெல்சியத்தின் மேற் படையெடுத்தான். பெல்சியருடைய ஒழுங்காக அமைக்கப்படாத படையானது, படையெடுத்தோருக்கு அடிபணியவேண்டிய கட்டாயமேற்பட்டது. இலியோப்போலின் அதிகாரம் நீடிக்காதெனத் தோன்றியது. பிரான்சியருடைய தலையீட்டினால் படையெடுத்தோருடைய முன்னேற்றம் தடைப்பட்டது. ஒல்லாந்தர், படையில் தாம் மேம்பட்டவர் என்பதை வெற்றிகரமாக நிறுவிய பின்னர் பெல்சியத்தினின்றும் வெளியேறினர். இப்பொழுது பெல்சியம் தோல்வியடைந்ததற்கான தண்டத்தைச் செலுத்திற்று. பதினெட்டு உறுப்புக்களைக் கொண்ட உடன்படிக்கைக்குப் பதிலாகப் புதிய உடன்படிக்கை ஒன்று (இருபத்து நான்கு உறுப்புக்கள் கொண்டது) இடம் பெற்றது. இவ்வுடன்படிக்கைப்படி இலட்சம்பேக்கின் வடபகுதியான உவாலுன் தவிர அதன் எஞ்சிய பகுதி முழுதும் ஒல்லாந்திற்கு நட்டஈடாகக் கொடுக்கப்பட்டது. இலட்சம்பேக்கு தனது உரிமையான ஆள்புலமெனக் கருதிய உவிலியம், அப் பகுதி முழுவதையும் மீண்டும் பெறுவதிலேயே கருத்துடையனு யிருந்தான். உவிலியம் தனக்குச் சார்பான நியதிகளை அளிக்குமாறு வற்புறுத்தினன். ஆகவே பலவந்தத்தைக் கையாள்வதன்றி வேறு வழியிருக்கவில்லை. இதுவரையும் இடச்சுக் காவற்சேனையின் ஆட்சியிலிருந்த அந்துவேப்பு எனும் இடத்தைப் பிரான்சிய படையொன்று கைப்பற்றியது. இங்கிலாந்தினதும் பிரான்சினதும் கப்பற்படைகள் இடச்சுக் கடற்கரையை முற்றுகையிட்டன. ஒல்லாந்து இந்நெருக்கத்திற்குத் தலைசாய்த்துத் தென் இராச்சியங்களுடன் (1833) தற்காலிகமாக நட்புப் பூண்டது. ஆனால் இடச்சு அரசன் பெல்சியத்தின் சுதந்திரத்தை ஏற்க மறுத்தான். ஆதலால் நிலைமையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. ஏனெனில் இலட்சம்பேக்கும் இலிம்பேக்கும் பெல்சியருடையனவாகவே இருந்தன. இத்தகைய நிலை ஐந்தாண்டுகள் வரை நீடித்தது. இருபத்துநான்கு உறுப்புக்களையும் தான் ஏற்றுள்ளதாக உவிலியம் திடீரெனப் பிரகடனஞ் செய்து இலட்சம்பேக்கையும் இலிம்பேக்கையும் தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிடம் ஒப்படைக்கும்படி கூறினன். இத்தகைய தியாகத்தைச் 1839.
செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுவதை அறவே வெறுத்தான். ஆனல் வல்லரசுகள் பெல்சியப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகாணத் தீர்மானித்தன. அன்றியும் இடச்சு அரசாங்கத்தின் கோரிக் கையையும் ஆதரித்தன. இதற்குக் கைம்மாருக ஒல்லாந்து பெல்சியத்தின் சுதந்திரத்தை மதித்தது. இதனல் தென் நெதலந்திற்கும் வட நெதலந்திற்கும் இடையே சினேகபான்மை யான தொடர்புகளை ஏற்படுத்தற்கான வழி கோலப்பட்டது. இவ்வகையில் ஐரோப்பாவின் அரசமுறைமைக்கு இன்னெரு புதிய இறை அரசு சேர்க்கப்பட்டது. அதன் நடுநிலைமை ஐம் பெரும் வல்லரசுகளின் பொறுப்பிலேயே விடப்பட்டது.[1]

பெல்சியரிடையே தூங்கிக்கிடந்த நாட்டின உணர்ச்சி எங்ஙனம் போலந்த அந்நியராட்சியால் விழிப்புற்றதென்பதை நாம் கண்டுள்ளோம். ருடைய நிலைமை.
19 ஆம் நூற்ருண்டில் இருந்த ஒடுக்கப்பட்ட நாட்டினங்களுள் போலந்தும் ஒன்ருகும். 1914 இல் 2 கோடி போலந்தர் இருந்தனர். இவர்களுள் 50 இலட்சத்தினரை ஒசுற்றியரும் 35 இலட்சத்தினரைச் சேர்மானியரும் எனையோரை இரசியரும் ஆட்சி செய்தனர். வெற்றிகரமாக நடத்தப்படாத போலந்துக் கலாத்தின் வரலாற்றைப் பற்றிக் கூறுதற்கு முன்னர் ஒசுற்றியப் போலந்து, பிரசியப் போலந்து, இரசியப் போலந்து ஆகிய இடங்களில் அக்காலத்திலிருந்த போலந்தருடைய நிலைமையைப் பற்றிக் கவ னிப்பாம்.

போலந்தருடைய நிலைவரம் கலீசியாவில் இருந்ததுபோல் ஒசுற்றியப்
கிழக்கு ஐரோப்பாவில் வேறெங்கும் சாதகமானதாக விருக்க[1] போலந்தில்.
வில்லை. இணக்கத்தின்போது[2] (1867) ஒசுற்றியப் போலந்தருக்கு யாப்பொன்று வழங்கப்பட்டது. இவ் யாப்பின்படி அவர்கள் சகலவிதத்திலும் தன்னுண்மை யுடையவர்களாயிருந்தனர். அவர்களுடைய மொழியே உத்தியோக பூர்வமான மொழியா யிற்று. அவர்களுடைய பாராளுமன்றமும் முழு அரசியல் ஆதிக் கத்தைப் பெற்றிருந்தது. இத்தாராளப் பூட்கை, ஒசுற்றியப் போலந்தரை ஆபிசுபேக்கு முடியாட்சிக்குட்பட்ட திருத்தியுடைய குடிமக்களாக மாற்றிற்று. இரசியாவிலும் பிரசியாவிலும் போலந்து நாட்டினங்களை ஒடுக்க முயன்ற பொருத்தமற்ற பூட்கை யினின்றும் இது பெரிதும் வேறுப்பட்டதாகும். கலீசியாவின் குடித்தொகை போலந்து மக்களை மட்டும் உடையதாகவிருக்க வில்லை. இக்குடித்தொகையில் உண்மையில் 35 சத விகிதம்

---

1 இலட்சம்பேக்கு 1867 இல் பெரும் வல்லரசுகளால் நடுநிலைமை அரசாக்கப்பட்டது.

2 பக்கம் 204.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1873–1914

போலந்தரும், 43 சத விகிதம் உரூதினியருமிருந்தனர். முக்கிய மான கிராகோ நகரமைக்கப்பட்டிருந்த மேற்குக் கலீசியாவில் போலந்தரே பெரும்பான்மையோராக விருந்தனர். இலெம்பேக்கு உட்பட்ட கிழக்குக் கலீசியாவில் உரூதினியரே பெரும்பான்மை யோராயிருந்தனர். கலீசியா இவ்வாறு இன அடிப்படையில் பிரிந்திருந்தமை இன்னெரு இனப் பிரச்சினை ஏற்படும் என்பதை முன்னரே குறித்தது. 1914 இல் 40 இலட்சத்திற்குக் குறையாத உரூதினியர் இருந்தனர். கல்வியறிவு பரவவே அவர்கள் படிப் படியாக நாட்டின விழிப்படையத் தொடங்கினர் எனக் கூறப் பட்டது.[1] பல மொழிகளைப் பேசும் இனங்களை ஒன்றுக்கொன்றை எதிராகத் தூண்டிவிட்டு வந்த ஒசுற்றியா பாடசாலைகளில் உரூதினிய மொழியைப் போதனை சுயமொழியாக மதித்ததுமன்றி உரூதினியப் பல்கலைக் கழக மொன்றை அமைப்பதற்கும் இணங்கிற்று. மொழி, இனம், சமயம் ஆகியவற்றில் உரூதினி யர், இரசிய எல்லைப்புறத்தின் அருகில் வாழ்ந்த சிறிய இரசியரை ஒத்திருந்தமை அவர்களிடையே நாட்டின உணர்ச்சி அபிவிருத்தியடைவதற்குத் தூண்டுதலாக விருந்தது. உரூதினிய இனத்தின் இருபகுதிகளான உரூதினியாவும் சிறிய இரசியாவும் தம்மைப் பிரித்த தடையையும் கடந்து ஒன்றேடொன்று ஐக்கியப்பட்டன. ஆதலால் யூக்கிரேன் எனும் பெயரும் வழங்குவதாயிற்று. தமது போலந்துத் தலைவர்களுடைய ஆட்சி யினின்றும் தம்மை விடுதலை செய்யக் கூடிய ஒரு பாராளுமன் றத்தை நிறுவுவதிலேயே உரூதினியர் கருத்து உடையராயிருந் தனர். ஆனால் மூன்று கோடி மக்களைக் கொண்ட உரூதினிய இனம், சுதந்திரமான யூக்கிரேன் அரசினுடைய பாதுகாப்பின் கீழ் ஒன்றுசேரும் நாளைப்பற்றியும் சிந்தித்தனர்.

(2) பிரசியப் போலந்தில்.

கிழக்கு மாச்சசில் கட்டாயமாக நாட்டின மயமாக்கும் பூட்கையைப் பிரசியா நாற்பது ஆண்டுகளாகப் (1914 வரை) பின்பற்றியது. அங்கேரிய மகியார் தமது அயலிலிருந்த இனத்தவர் எல்லோரை யும் மகியாராக்க முயன்றதுபோல் பிரசியரும் கிழக்கு மாச்சசி லிருந்த போலந்தரையும் வட செல்சுவிக்கிலிருந்த தேனியரை யும் அல்சேசு உலொரேனிலிருந்த பிரான்சியரையும் சேர்மா னியராக்க முயன்றனர். பிசுமாக்கு தொடக்கிவைத்த இப் பூட்கை, எல்லாவற்றையும் ஒரே தன்மைப்படுத்துவதே பேரரசி னைப் பலப்படுத்துவதற்கான சிறந்த முறையாகும் எனும் பிழை யான கருத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. முன்னைய போலந்து ஆட்சிப்பகுதிகளில் நாம் சேர்மானிய நாட்டினத்தைப் பாதுகாத்துப் பலப்படுத்துவதற்குப் போலந்து மக்கள்பாலுள்ள

[1] N. Hill, "Poland and the Polish Question" (1915), 186.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறை தடையாகக்கூடாது..... நாட்டினங்களிடையே நடக் 1873-1914
கும் போராட்டங்களில் ஒரு நாடு சம்மட்டியும் மற்றையது அடை கல்லுமாகும். ஒன்று வெற்றியடைந்த நாடும் மற்றது வெல்லப் பட்ட நாடுமாகும் என சிற்றரசனை உவொன்பூலோ எழுதினன். சேர்மானிய மொழி மட்டுமே பள்ளிக்கூடங்களில் போதனை மொழியாக இருக்க வேண்டுமென 1873 இல் பிசுமாக்கு கட்டளை யிட்டான். ஆனல் சமயப் போதனைக்கு மட்டும் வேறு எந்த மொழியையும் உபயோகிக்கலாம். போலந்து நிலச் சொந்தக்காரரிடமிருந்து அவர்களுடைய சொத்தைப் பறித்து அவ்விடங்களில் "சேர்மானியரைக் குடியேற்றும் முறைமை பதின்மூன்றாண்டுகளுக்குப் பின்னர் தொடங்கப்பட்டது. இதன் விளைவு சேர்மானிய அரசாங்கத்திற்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்தது. சேர்மானியருடைய தொகையைக் கூட்டுவதே பிசு மாக்கின் இலட்சியமாதலால் எங்கள் பூட்கை—சிறப்பாகக் குடி யேற்றும் செயல்—தோல்வியடைந்ததெனவே கருத வேண் டும்", என்று உவொன்பூலோ ஒப்புக்கொண்டான். கால் நூற்றாண்டுக்குள் (1886—1906) சேர்மானிய அரசாங்கம் போலந்தில் 90,000 சேர்மானியரைக் குடியேற்றியது. ஆனல் போலந்துக் குடித்தொகை 200,000 கூடிற்று. அரசாங்கம் சொத்துக்களை மிகுதியாக வாங்கியமையால் நிலத்தின் பெறுமதி கூடிற்று. ஆதலால் சுதேசச் சொந்தக்காரர் அதன் பலனை அனுபவித்தனர். அதே வேளையில் போலந்தர் தற்பாதுகாப்பின் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்களையும் சேமிப்பு வங்கிகளையும் கடன் கொடுக்கும் வங்கிகளையும் நிறுவினர். இச்செயல் எதிர்க்கும் பொருளாதாரச் சத்தியை வலுவுடையதாக்கிற்று. அன்றியும் அவர்களுடைய நாட்டின உணர்ச்சியையும் தூண்டியது. பின்னர் சொத்தைப் பறிமுதல் செய்யும் பூட்கை இன்னெரு கட்டத்தை அடைந்தது. சேர்மானிய உரித்தாளர் மட்டுமே தங்கள் நிலங் களைக் கொடுக்க உடன்பட்டனர். என்பதை அரசாங்கம் கண்டு பிடித்தது. 1909 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சொத்தைப் பறிமுதல் செய்யும் சட்டம் போலந்து நிலச் சொந்தக்காரரை அவர் களுடைய நிலங்களை விற்குமாறு வற்புறுத்தும் உரிமையை அரசாங்கத்துக்கு அளித்தது. இறுதியாக, சங்கங்களின் சட்டத் திருல் (1908) போலந்து மொழி மீண்டும் பாதிக்கப்பட்டது. தேர்தலின்பொழுது நடாத்தப்படும் பொதுக்கூட்டங்கள் தவிர வேனைய பொதுக்கூட்டங்களைச் சேர்மானிய மொழியிலேயே நடத்த வேண்டும். அக்கூட்டங்களில் 60 சத விகிதத்தினருக்குச் சேர்மானிய மொழி தெரியாதிருந்தாலே வேறு மொழியில் கூட்டம் நடாத்தலாம் எனக் கட்டளை பிறப்பித்தது. இச்சலுகையைத் தானும் இருபது ஆண்டுகளுக்கு மட்டுமே பயன்படுத்தலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 என்றிருந்தது. எப்படியாயினும், இப்புதிய ஏற்பாடுகள் கண்டிப் பானவையாயிருந்தபோதிலும் அவற்றின் நோக்கம் கைகூட வில்லை. "போலந்து மொழி நாட்டுப்புற மாவட்டங்களில் மாத்திர மன்றி நகரங்களிலும் போசன் தலைநகரத்திலும் கூடச் செல்வா க்குடையது. போலந்து மத்திய வகுப்பு வளர்ச்சியடைகின்றது. சேர் மானியர் குறைகின்றனர்[1]" என 1914 இல் சேர்மானியப் பேரா சிரியன் ஒருவன் குறிப்பிட்டுள்ளான். ஒரு அரசின் வேறுபட்ட நாட்டின அம்சங்களைக் கட்டாயமாக ஒழிப்பதால் அவ்வரசைப் பலப்படுத்தலாம் எனும் கருத்து புத்திக்குறைவான தென்பது பிரசியப் போலந்தில் சேர்மானியர் கையாண்ட பூட்கையின் விளைவுகளால் அறியக்கிடக்கின்றது.

(3) இரசியப் போலந்தில். இரசியாவிலிருந்த போலந்தருடைய நிலைமை சேர்மானியிலி ருந்தோருடைய நிலைமையையே பெரும்பான்மையும் ஒத் திருந்தது. அவர்கள் சேர்மானிய மயமாக்கலை எதிர்த்தது போலவே இவர்கள் இரசிய மயமாக்கலை எதிர்த்தனர். இப்பூட் கையே போலந்தின் அமைதியின்மைக்கு மூலகாரணமாகும். இர சிய மொழியிலேயே பொது அலுவல்களும் ஆட்சியும் நடாத்தப் பட்டன. பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் இரசிய மொழியே போதனை மொழியாயிருந்தது. இரசிய அலுவலரே நாட் டைப் பாலனஞ் செய்தனர். சுதந்திரத்திற்காகப் போலந்தர் ஒருமுறை கோரிக்கை செய்ததுடன் நின்று விடவில்லை. சுதந் திரத்திற்காக அவர்கள் செய்த போராட்டம் 19 ஆம் நூற்றுண்டு வரலாற்றில் முக்கிய இடம் பெறுகின்றது.

போலந்துப் பிரச்சினையும் வீயன்னாக் கழகமும். 1815 இல் போலந்துப் பிரச்சினை வீயன்னாக் கழகத்தின் கவனத்தை ஈர்த்தது. மூன்று பிரிவினைகளின் விளைவாகப் (1772—95) போலந்தின் முக்காற் பங்கு நிலப்பரப்பை இரசியா வலிந்திணைத்தது. அன்றியும் விடுதலைப் போரின்போது (1813–15) முன்னர் இரசியாவுக்கும் பிரசியாவுக்கும் கொடுக்கப் பட்ட போலந்து ஆள்புலத்தினின்றும் உருவாக்கப்பட்ட உவாசோ எனும் மாபெரும் கோமகப் பகுதியின் உரிமையையும் பறித்தது. பேரரசனை அலச்சாந்தர் அக்கோமகப் பகுதியைத் தான் வைத்திருக்க விரும்பினன். ஆதலால் போலந்து இராச்சியத்தை இரசிய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் பொறுப்பையும் ஏற்றான். இரசியாவின் மீச்செலவினைக் கண்டஞ்சிய காசில்றீ சக்கர வர்த்தியின் பூட்கையைக் கடுமையாகக் கண்டித்தான். ஆனால் பூட்கையின் தவறுகள் எவையாயிருப்பினும், அவை போலந்து

[1] E. Barker, "The Submerged Nationalities of the German Empire" (1915), 17.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டினங்களின்பாலுள்ள பரிவின்மையால் கைக்கொள்ளப் 1815
பட்டனவல்ல. பிரித்தானிய அரசாங்கம் போலந்து சுதந்திரமான நாடாதல் கண்டு திருத்தியுறும். ஆனல் போலந்தின் ஒரு பகுதியை இரசிய முடியுடன் ஒன்றுசேர்ந்த இராச்சியமாக நிறு வுவதற்கும் போலந்து முழுவதையும் வேறான ஒரு சுதந்திர அரசாக்குவதற்கும் வித்தியாசம் உள்ளதாகக் கொள்ளும். .....போலந்தை மீட்கும் பிரச்சினையை எழுப்புவதா யின் அதைப் பரந்த அடிப்படையில் நோக்கவேண்டும்[1] என்று காசில்ரீ அலச்சாந்தரைச் சந்தித்தபொழுது கூறினன். போலந் தைப் பொறுத்தவரையில் இப்பூட்கை தவறானதாகும். நெப்போலியன் ஆக்கியவற்றை அழித்துப் போலந்து நாட்டின ஐக்கியத்தை மீண்டும் கெடுப்பது பெரும் பிழையாகும். மேலும் ஒரே இயல்புள்ள போலந்து அரசு இரசிய ஆதிக்கத்தின் கீழிருப் பினும் இரசிய பணிக்குழுவாட்சியின் அடக்குமுறைக்கு எதி ராகத் தான் நினைத்தைச் சாதிக்கும் வாய்ப்பைக் கூடுதலாக உடையதாயிருந்திருக்கும். இப்படி யல்லாது உவாசோ கோமகப் பகுதி குலைக்கப்பட்டு போலந்து ஆள்புலம் மீண்டும் ஒருமுறை ஒசுற்றியாவுடனும் பிரசியாவுடனும் இணைக்கப்பட்டது.

I ஆம் அலச்சாந்தரும் போலந்தும்

அலச்சாந்தர் முன்னர் இருந்த போலந்து இராச்சியத்தை மீட்கும் நம்பிக்கையில் ஏமாற்றமடைந்தானெனினும் அவன் போலந்து இராச்சியத்தை நிறுவும் தனது நோக்கத்தை நிறை வேற்றுதற்கு முயன்றான். புதிய போலந்து யாப்பில் பெருங் குறைபாடுகள் இல்லாமலில்லை. ஆனல் சில தன்மைகளில் அது ஐரோப்பாவின் ஏனைய யாப்புக்களிலும் பார்க்க முன்னேறி யிருந்தது. இரசியப் பேரரசனே முடிக்குரியவனுயிருந்தான். மூதவையையும் பிரதியாளர் சபையையும் கொண்ட சட்டசபை யிருந்தது. முன்னையதில் பேரரசினல் நியமிக்கப்பட்டோர் இருந் தனர். பின்னையதில் விழுமியோருடைய பிரதிநிதிகளும் பிரான் சின் விசேட வாக்குரிமையிலும் பார்க்கக் கூடிய சுதந்திர முடைய வாக்குரிமையால் தெரிவுசெய்யப்பட்ட பிரதியாளரும் இருந்தனர். போலந்து மொழி உத்தியோக பூர்வமான மொழி யாயிற்று. போலந்து மக்களே குடியியற் சேவைக்கும் படைக்கும் நியமிக்கப்பட்டனர். இவ்வாறு போலந்து தன்னுண்மையுடைய அரசாக்கப்பட்டது. அத்துடன் போலந்து மக்களுடைய நாட்டின மும் நன்கு மதிக்கப்பட்டது. ஆனல் இப்பரிசோதனை பெருந் தோல்வியடைந்தது. இதற்கான காரணத்தைப் பொறுத்தவரை யில் அபிப்பிராய பேதமுண்டு. வரலாற்றுசிரியன் ஒருவன்

1 "Transaction of the Royal Historical Society", Third Series, vii. 70 seq. இல் காசில்ரீயின் உத்தியோகபூர்வமான கடிதங்கள் வெளியிடப்பட் டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 15-30 அது வெற்றி பெறுமைக்குப் போலந்தரே காரணமென்கின்றன். போலந்து நாட்டின இயக்கமானது மக்கள் எல்லோருடைய நலனையும் கவனியாமல் ஆதிக்கமுடைய சாதி ஒன்றின் நலனில் மட்டுமே அக்கறை கொண்டிருந்தது. இதுவே எப்பொழுதும் இவ்வியக்கத்திலுள்ள குறையாயிருந்தது..... போலந்து மக்கள் தமது சாதியின் நலனிலும் பார்க்கத் தமது நாட்டின நலனிற் கூடிய அக்கறையுடையோரா யிருந்திருப்பின் அந்நியர் ஆதிக்கஞ் செலுத்துங்காலை அவ்வாதிக்கத்தை எதிர்க்கும் தேவை ஏற்படின் பலமுடைய நாட்டினப் படையொன்றைத் திரட்டுவதற்கு அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட சுதந்திரங்களைப் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் கிடைத்த கொஞ்ச நஞ்ச வாய்ப்பையும் போலந்தின் பாராளுமன்றம் நன்கு பயன்படுத்துவதற்குப் பதிலாகத் தன் தடைசெய்யும் போக்கினால் இரசிய ஆட்சியை அழிப்பதற்குச் சூழ்ச்சியொன்று நடைபெற்றதென நிரூபித்தது. சார் விரைவில் நம்பிக்கை யிழந்தான். ஆதலால் பாதுகாப்பான நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கினன்.[1] மறுபக்கத்தில் போலந்து வரலாற்றுசிரியன்[2] ஒருவன் போலந்தரைக் குற்றமற்றவர்கள் என்கின்றன். போலந்தின் கெட்ட இரகமான நொவோசிதொவு என்பவன் தலையிட்டமையே நாட்டில் ஏற்பட்ட இடையூறுகளுக்குக் காரணம். இவனே அலச்சாந்தரின் மனதைப் புதிய அரசிற்கெதிராக மாற்றியவனவான். இரசியருக்கும் போலந்தருக்கு மிடையே தொல்லை விளைப்பதற்குக் காரணமாயிருந்தது சாரினுடைய நிறைவேற்ற முடியாத நம்பிக்கையாகும்–குறிப்பாக முன்னைய போலந்து இராச்சியத்தின் ஒரு பகுதியாயமைந்த இலிதுவேனிய மாகாணங்களைக் கையளிப்பதாகச் செய்யப்பட்ட வாக்குறுதியே இந்நம்பிக்கையாகும்.

"இருவர் கொட்கும் இசைபுணர் ஆடலும்
மருவலர் தமையடும் மண்டமர் ஆடலும்
வல்லவன் தனக்கிணை இல்லையிங் கென்னும்
செம்மாப் புடையோன் சாரெனு மன்னன்
தாராளக் கொள்கைக் கோரள விப்போ
திளகினன் உள்ளம் ; ஆயினும் காலைக்
குளிரினைக் கண்ட போதெலா மீண்டும்
வலித்தனன் கல்லாய் மனத்தினை ; நாடு
விடுதலை பெற்று விளங்குமே யென்னும்

[1] Phillips, "Modern Europe", 203.

[2] S. Askenazy, "Polland" in Camb. Mod. Hist. x. 448. Cf also Lord Eversley, "The Partitions of Poland" (1915), 281 seq.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 – 30

ஒன்றலால் உண்மைச் சுதந்திர மளிக்க
மற்றவன் றனக்கொரு மறுப்பிலை ; போலிய
மக்களுக் காளும் மன்ற மதனை
வழங்கின் மீண்டும் ; வண்மைதா னென்னே !
புழுங்கிய போலந் ததனை
அடங்குக வென்றங் கறைந்தனன் பின்னே.''

யாப்பை மீறல்

போலந்துருடைய அடங்காத்தன்மை என்றே அல்லது அலச் சாந்தர் தாராளக் கொள்கையை விடுத்து மெற்றெணிக்கின் கோட்பாட்டிற்கு மாறியமை என்றே எங்ஙனம் விளக்கம் கொடுத்தாலும் படிப்படியாகப் போலந்தின் சுதந்திரங்கள் கட்டுப் படுத்தப்பட்டன. இதன் விளைவாக இரசியாவுக்கும் போலந் திற்குமிடையே பகைமை வளர்ந்தது. பத்திரிகைகளும் புத்த கங்களும் (1819) தணிக்கை செய்யப்பட்டன. இதுவே யாப்பை மீறிய முதற் சந்தர்ப்பமாகும். அடுத்த நடவடிக்கையாக அர சாங்கத்தை வெளிப்படையாகக் கண்டனஞ் செய்தமைக்குத் தண்டனையாகப் பாராளுமன்றம் ஐந்தாண்டுகளுக்கு (1820—25) நிறுத்தி வைக்கப்பட்டது. அலச்சாந்தரின் காலத்திலேயே போலந்துச் சுதந்திரப் பட்டயம் அழியக் கூடுமெனத் தோன்றியது. சுதந்திர நிறுவகங்களின் கடும் எதிரியான மூதலாம் நிக்கலசு அரசெய்தியதுடன் அதன் அழிவு உறுதியாயிற்று. இரகசியக் கழகங்கள் தோன்றின. இரசியத் துருக்கியப் போரின்போது தொடரிகளின் எதிர்பாரா இடர்கள் இரசியாவின் சத்தியை உறந்தெடுத்தகாலை 1828 வரையில் படைப் புரட்சி தொடங்கும் தறுவாயிலிருந்தது. இதைத்தொடர்ந்து ஈராண்டுகளுக்குப் பின் னர் பிரான்சியப் புரட்சி தொடங்கிற்று. போலந்து மக்களிடையே அதனல் ஏற்பட்ட விளைவு குறிப்பிடத்தக்கது. பிரான்சிற் கெதி ராகத் தொடுக்கப்படும் போரில் போலந்துப் படையைப் பயன் படுத்த நிக்கலசு எண்ணியுள்ளான் என்பதை அறிந்த போலந் துச் சூழ்ச்சிக்காரர் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தீர் மானித்தனர். ஏனெனில் போலந்துப் படையின்றிக் கலாஞ் செய்ய முயற்சி செய்யின் அது தோல்வியடைவது நிச்சயம். 1830 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆம் திகதி இரவு தலைநகரில் கிளர்ச்சி செய்யப்பட்டது. இவ்வியக்கம் நன்கு திட்டமிடப்படவில்லையாதலால் இதை இலகுவில் அடக்கியிருக் கலாம். ஆனல் பதிலரையனை பெருங்கோமகன் கொன்சு தந்தயின் திகிலுற்று நகரை விட்டோடினன். உவாசோ கிளர்ச்சி க்காரருடைய கையில் விடப்பட்டது. ஆதலால் புரட்சி, போலந்து எங்கணும் பரவிற்று. தளபதியான கிளோபிக்கேயின் சர்வாதி காரத்தின்கீழ் தற்காலிக அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டது.

1830 ஆம் ஆண்டுப் போலந்துக் கலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1830 அவன் நெப்போலியனுடைய காலத்திலிருந்த படைவீரனுவான். அவன் புரட்சிக்காலத்தின் நிலைமைக்கு ஏற்றவனுகக் காணப் படவில்லை. அவன் நிக்கலசுடன் பயனற்ற நீண்டகாலப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுக் கலாத்தைப் பயன்விளைக்கத்தக்க முறையில் திட்டமிட்டு நடத்துதற்குக் கிடைத்த வாய்ப்பை இழந் தான். இரசியப் படை ஆயத்தமாயிருக்கவில்லை. இலிதுவேனியா படை திரட்டுதற்குச் சிறந்த இடமாக இருந்திருப்பதோடு தொடரிகலின் முடிவையே முற்றுக மாற்றியிருக்கும். எப்படி யாயினும் இப்புரட்சி தொடக்கத்திலிருந்தே நன்கு நிருவகிக்கப் படவில்லை. புரட்சித் தலைவர்கள் தகுதியற்றவர்களாயும் மன வுறுதியற்றவர்களாயும், தம்மிடையே பிரிவுடையவராயுமிருந் தனர். இதற்கிடையில் நிக்கலசு மிகுந்த உற்சாகத்துடன் தனது சொந்த ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தான். பெப்புரு வரித் தொடக்கத்தில் இரசிய எவுநனை தீபிற்சு போலந்து எல்லையைக் கடந்தான். இப்போதுதானும் நிலைமையைச் சீர் படுத்தியிருக்கலாம். ஆனல் போலந்துத் தளபதிகள் தமது தடு மாறும் தன்மையினலும் தாமதமான போக்குக்களாலும் வெற்றி பெறக் கூடிய ஒவ்வொரு வாய்ப்பையும் தவறவிட் டனர். செத்தெம்பரில் இரசியர் உவாசோவிற்குட் புகுந்தனர். அதற்குச் சில கிழமைகளுக்குப் பின்னர் இராச்சியத்தின் ஒவ் வொரு பகுதியிலும் புரட்சி அடக்கப்பட்டது.

ஐரோப்பிய வல்லரசுகளின் போக்கு. ஐரோப்பியர் தலையிடுவர் என நம்பியிருந்த போலந்தருக்குப் பெரும் ஏமாற்ற மேற்பட்டது. பிரசியா ஒளிவு மறைவின்றிப் பகைத்து நின்றது. பிரசியா மக்களுடைய இயல்பான உணர் வெழுச்சியால் மேம்பாடடைந்த நாடு. அத்தகைய நாட்டின அரசாங்கம் போலந்தைப் பொறுத்தமட்டில் தனது அரசியற் கொள்கைகளில் எதற்காக நாட்டு மக்களுக்கு மாறுய் நிற் கின்றது[1] என 1825 இல் கனிங்கு வினவினன். ஒசுற்றியாவின் போக்கு உறுதியற்றதாயிருந்தது. ஆனல் இரசியாவை வலு வற்றதாக்க ஒசுற்றியா பேராவல் கொண்டிருந்தது. தனது சொந்த எல்லைகளுக்குள்ளேயே போலந்தர் புரட்சி செய்யக் கூடும் எனும் பயத்தினல் அப்பேராவல் அற்றுப் போயிற்று. ஒசுற்றியா ஒசுற்றிய கோமகன் ஒருவனுக்காகப் போலந்தின் முடியை ஏற்பதோ விடுவதோ என ஆலோசித்துப் பின்னர் போரை அதன் போக்கிற் செல்ல விடுத்தது. இங்கிலாந்திலும் பிரான்சிலும் பொதுமக்கள் போலந்தரையே பெரிதும் ஆதரித் தனர். ஆனல் இரசியாவின் தன்ணண்மையான வலுவுக்கெதி ராகச் செய்யப்படும் மனேகற்பிதமான போரில் தன் முடியை

[1] Stepleton, "George Canning and his Times," 465.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழக்க உலாயி பிலிப்பு இணங்கவில்லை. ஆங்கில அரசாங்கம் 1831 – 55
தனது தலையிடாப் பூட்கையைக் கடைப்பிடித்தது. இரசியா போலந்து இராச்சியத்தை ஒழித்தமை 1815 இல் செய்யப்பட்ட பொதுப் பொறுப்புறுதியை மீறியதாகும் என புரட்சி அடக்கப் பட்ட பின்னர் இரசிய அரசாங்கத்தைப் பாமேசுதன் எச்சரித் தான் போலந்தரை வெற்றிகொண்டமையால் பெருமையடைந்த நிக்கலசு இங்கிலாந்தின் எதிர்ப்பிற்குச் செவிசாய்க்காது போலந்துச் சுதந்திரத்தை அதன் அடையாளமேயின்றி அழிப்பதில் ஈவிரக்க மின்றி ஈடுபட்டான். தனிப்பட்ட நாடெனும் நிலைமையை இழந்த போலந்து இது முதற் கொண்டு இரசியப் பேரரசின் ஒரு பகுதியாகச் சேர்ந்தது. அதன் சுதந்திர நிறுவகங்கள் அழிக்கப் பட்டன. பாலனஞ் செய்வதற்கு இரசிய அலுவலரே பெரும் பான்மையும் நியமிக்கப்பட்டனர். இரசிய மொழியே உத்தியோக பூர்வமான மொழியாக்கப்பட்டது. போலந்துப் படையும் இரசியப் படையுடன் இணைக்கப்பட்டது.

போலந்தி லிருந்த கட்சிகள்.

இருபத்தைந்து ஆண்டுகள்வரை இரசிய மயமாக்கும் பூட்கை தணியாத ஆர்வத்துடன் கையாளப்பட்டது. இரண்டாம் அலச் சாந்தர் அரசெய்தியமையுடன் புதிய காலம் தொடங்குமெனத் தோன்றிற்று. அரசாங்கத்தின் அடக்குமுறை உடனே தளர்த்தப் பட்டது. 1831 இல் நாடுகடத்தப்பட்டவர்கள் மீண்டும் அழைக்கப் பட்டனர். கிரைமியப் போரினால் தூண்டப்பட்ட நாட்டின இயக்கம் மீண்டும் தலையெடுத்தது. போலந்து மக்கள் செம்மையர், (செந் நிறத்தவர்), வெள்ளையர் எனும் இரு பிரிவினராகப் பிரித்தனர். செம்மையர்-போலந்துப் புரட்சிக் கட்சி—இரசியாவை வெறுத்த னர். ஏனெனில் இரசியாவே போலந்தின் துன்பங்கள் எல்லா வற்றிற்கும் காரணமாயிருந்ததாக அவர்களுக்குத் தோன்றியது. வெள்ளையர்-பழைமை பேண் கட்சி—1815 ஆம் ஆண்டு யாப்பை ஆதாரமாகக் கொண்டு இரசியாவுடன் இணக்கத்திற்கு வருவ தற்கு உடன்பட்டனர். இக்கட்சியினரை விட வேறு சில அரசியல் வாதிகளும் இருந்தனர். இவர்களுடைய திட்டம் மிதமான அம் சங்களைக் கொண்டதாயிருந்ததாயினும் அத்திட்டம் மிகுதியும் செயற்படுத்தக்கூடிய தொன்றுயிருந்தது. அவ்வரசியல் வாதிக ளுடைய பிரிதிநிதி மாக்குவிசு வியலொபசுக்கியாவான். இவனு டைய செல்வாக்கினால் இரண்டாம் அலச்சாந்தர் இணக்கப் பூட் கையை ஏற்க உடன்பட்டான். வியலொபசுக்கி குடியியற் பாலன த்தின் தலைவனாக அமர்த்தப்பட்டான். டேரரசனின் சகோதரனும் தாராளர்பாற் பரிவுடையவனும், போலந்துடன் நட்புடையவனு மான பெருங்கோமகனை கொன்சுதந்தயின் பதிலையாக்கப் பட்டான். போலந்தின் நாட்டினக் கௌரவத்தை மதித்துப் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1863 சலுகைகள் அளிக்கப்பட்டன. ஆனால் அவர்களை இணக்க முடியா திருந்தது. போலந்து ஊழியரின் நிலைமையைச் சீர்படுத்துதற் காகத் தாபிக்கப்பட்ட போலந்து விவசாயிகள் சங்கத்தை ஒடுக்கி யதனாலும், கோப மூட்டாது ஆர்ப்பாட்டஞ் செய்தோரைச் சுட்ட கொசக்குகளுடைய கோபமூட்டுஞ் செயலினாலும் போலந்தருடைய வெறுப்பு அதிகரித்தது. ஆகவே சமாதானத்தை ஏற்படுத்த வியலொபசுக்கி நன்னோக்கத்துடன் எடுத்த முயற்சிகள் அவனு டைய நாட்டு மக்களுடைய கடின மனதை இளக்கும் ஆற்றல் அற்றவையாயின. அவன்செய்த முன்னீடுகள் காரணமாக அவ னையும் கொன்சுதந்தயின் என்பானையும் கொலை செய்யச் செம் மையர் பலமுறை முயன்றனர். வெள்ளையரோ 1815 ஆம் ஆண்டு யாப்பை விட வேறெதையும் ஏற்க மறுத்தனர். வேறெந்த நிய திகள் அளிக்கப்பட்டபோதும் அரசாங்கத்தை ஆதரிக்க மறுத்த னர். வியலொபசுக்கி பெருங் கோபமடைந்து "நான் உங்களிட மிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி கேட்கவோ விரும்பவோ இல்லை. போலந்தருக்குச் சில வேளைகளில் நன்மை செய்ய முடியும். ஆனால் அவர்களுடைய உதவி கொண்டு அங்ஙனம் செய்ய முடியாது" என வெள்ளையர் பிரதிநிதியாளர் குழு வொன்றிற்குச் சொன்னன். இப்படிப் பேசினாலும் தோல்வி நெருங்குவதை உணர்ந்தான். எனினும் புரட்சித் தலைவர்கள் போலந்து எங்கணும் சூழ்ச்சிக்கு அடிகோலுவதைக் கண்டு பிடித்த அவன் அபாயகரமான நடவடிக்கையை எடுக்கத் தூண் டப்பட்டான். புரட்சி யொன்றைத் தொடங்குவதற்கு, அரசியற் கிளர்ச்சியில் பங்குபற்றியவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டோர் எல்லோரையும், இரசியப் படையில் கட்டாயமாகச் சேர்ப்பதற்கு அவன் கைதுசெய்ய முயற்சித்தான். தப்பியோரிற் பெரும் பாலோர் காட்டிற்குச் சென்றனர். அங்கு கூட்டம் கூட்டமாகத் தம்மை வகுத்துக் கொண்டனர். சில நாட்களுக்குப் பின்னர்

1863 ஆம் ஆண்டுக் கலாம் (1863 சனவரி, 2) புரட்சிக் கட்சியானது கலாத்திற்கான சைகை யைக் காட்டிற்று. அன்றியும் ஒரு சர்வாதிகாரியையும் அமர்த் திற்று. இதைத் தொடர்ந்து நடந்த போராட்டம் போலந்தின் வரலாற்றினாலும் முக்கியமானதாயிருந்தது. வெற்றி கிட்டுவது அரிது. 1830 இல் படையும் அரசாங்கமும் போலந்தருடைய கட்டுப்பாட்டிற்குட்பட்டிருந்தன. 1863 இல் இவ்விரண்டில் ஒன்று யினும் அவர்களுடைய கட்டுப்பாட்டிலிருக்கவில்லை. அவர்களிடம் படைதானும் இருக்கவில்லை. இங்ஙனம் பெரும் இடர்களிருந்த போதிலும் பல மாதங்களாகக் கொரில்லாப் போர் முறையைக் கையாண்டனர். 1864 ஆம் ஆண்டு மாச்சு மாதத்திற்றான் அவர்களுடைய வெற்றிகரமான எதிர்ப்பு இறுதியாக அழிக்கப் பட்டது. போலந்தர் மீண்டும் ஒருமுறை தமது மூர்க்கமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின இயல்புகளான ஆண்மையையும் பிடிவாதத்தையும் அடங்காமையையும் வெளிக்காட்டினர். ஐந்து உறுப்பினரைக் கொண்ட ஒரு இரகசியக் குழுவே இவ்வியக்கத்திற்கு வழி காட்டியது. இக்குழுவினருடைய கட்டளைகளைச் செய்து முடித் தோருக்குத்தானும் தமக்குக் கட்டளையிட்டோரைத் தெரியாது. இவ்விரகசிய அரசாங்கம் போலந்து எங்கணும் அதிகாரஞ் செலுத் தியது. வெற்றி கொண்ட படையினர் உதவியையுடைய பேரர சாங்கத்திற்கு மக்கள் கீழ்ப்படிந்ததிலும் பார்க்கக் கூடுதலாக இவ்விரகசிய அரசாங்கம் செலுத்திய அதிகாரத்திற்குப் பொது வாக எல்லோரும் கீழ்ப்படிந்தனர். 1863

1863 இல் இருந்த உண்ணாட்டு நிலைமை 1830 இல் இருந் ததை விடச் சாதகமானதாக விருக்கவில்லை. போலந்துப் பிரச்சினை பற்றி வல்லரசுகள் கொண்டிருந்த போக்கு மாறவில்லை. பிசு மாக்கின் புத்திமதியின்[1] பேரில் பிரசியா இரசியாவுடன் மர பொன்றை நிறைவேற்றுதற்கு இவ்வாய்ப்பைப் பயன்படுத்தியது. இம்மரபுப்படி மேற்கு எல்லைப்புறம் தாக்கப்படுவதினின்றும் பாதுகாக்கப்பட்டது. இங்ஙனம் தான் போலந்தின் எதிரி என்ப தைப் பிரசியா இரண்டாம் முறையாகக் காட்டிக் கொண்டது. தாக்குவதற்கு உடன்பட்டதெனினும் செயலில் இறங்குதற்குப் பயந்த ஒசுற்றியா தலையிடுதற்கும் தலையிடாது விடுதற்குமிடையே ஊசலாடிற்று. இங்கிலாந்தில் பொதுமக்கள் எப்பொழு தும் போலந்தர்பாற் பரிவுடையராகவிருந்தனர். பிரான்சில் குருமாரும் தாராளரும் கலாத்தை ஆதரிக்க ஒன்று சேர்ந் தனர். இக்கலாம் சமய அடக்குமுறைக் கெதிராகச் செய்யப் பட்ட கத்தோலிக்கப் புரட்சியெனக் குருத்துவத்தாருக்கும், நாட்டினப் புரட்சியெனத் தாராளருக்கும் கூறப்பட்டது. எனவே நெப்போலியனும் ஆங்கில அரசினரும் வீயன்னாப் பொருத் தனையை (1815) ஆதாரமாகக் கொண்டு தலையிடுதற்கு அரை மனதுடன் முயன்றனர். ஆனால் அவர்கள் படைதாங்கித் தமது எதிர்ப்பை வற்புறுத்த ஆயத்தமில்லாதிருந்தனர். ஆதலால் இணக்கப் பேச்சுக்கள் பலனளிக்கவில்லை. போலந்தர் பெரும் படைப் பேரரசு ஒன்றுடன் தனியே போர்செய்ய விடப்பட்டனர். இப்போராட்டத்தின் விளைவு தொடக்கத்திலிருந்தே தெரிந்த தொன்றாயிருந்தது. 1863 இல் ஐரோப்பிய உண்ணாட்டு நிலைமை.

விடுதலைக் கற்பனையின் முக்கிய கருத்தாக்களுள் ஒருவனான நிக்கலசு மிலியுதின் என்பானுடைய தூண்டுதலினால் இப்பொ ழுது இரசியா புதிய பூட்கையொன்றைக்கையாளத் தொடங்கியது.[2] போலந்து உழவோருடைய விடுதலை.

[1] பக்கம் 94.

[2] பக்கம் 124.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1864 விழுமியோர் எல்லையில்லாச் சுதந்திரத்தை ஒருகாலத்தில் அனுபவித்துப் பின்னர் இழந்தனர். இந்நிலையைச் சகித்துக் கொள்ள முடியாத இவ்விழுமியோரே போலந்தில் உண்டாய ஒவ்வொரு கலாத்திற்கும் காரணமாவர். நாடு இன்னும் மானிய முறைமையின் பிடியிலேயே இருந்தது. ஆதலால் நிலத்தைச் சொந்தமாகவுடைய விழுமியோர் தமது ஊழிய ரிடமிருந்து கட்டாயவேலை வாங்கும் உரிமை பெற்றிருந்தனர். போலந்து விழுமியோனெருவனுக்கு பெரிய நிலச் சொந்தக்கா ரனுக்குரிய கௌரவமும் பொருளாதாரச் சுதந்திரமும் இருந்தது. அன்றியும் அவன் பல அரசியற் கடமைகளையுஞ் செய்தான். நாட்டுப்புற மாவட்டங்கள் வரை இரசிய அதிகாரஞ் செலுத்தப்படவில்லை. ஆதலால் தனது சொந்தத் தோட்டத்திற்கு அவ்விழுமியோனே பாதுகாப்பும் நீதியும் வழங்கினன். அத்துடன் இரசிய வைதிகத் திருச்சபையுடன் பகைமை கொண்டிருந்த கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதரவையும் பெற்றிருந்தான். இவ்விழுமியோரின் ஊழியர் தமது எசமானரிடம் கொண்ட வெறுப்பே போலந்து இயக்கம் ஒவ்வொன்றையும் அழித்தது. போலந்துச் சமூகத்தில் ஏற்பட்ட பிளவைப் பெரிதாக்கித் தீராப் பகைமையை உண்டுபண்ணுவதே மிலியுதினின் திட்டமாகும். விடுதலைக் கற்பனை இரசியாவிற்கு அளித்ததையே 1864 ஆம் ஆண்டுச் சட்டமானது போலந்திற்கு அளித்தது. இச்சட்டத்தினால் ஊழியன் தான் வைத்திருந்த நிலத்தினைச் சொந்தமாக உடைய சுதந்திர உழவோன் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டான். பிரபுவினுடைய தோட்டத்தில் வேலை செய்யவேண்டிய கடப்பாட்டினின்றும் விலக்கப்பட்டான். நாட்டுப்புறச் சமுதாயத்தினிடையே தீராப் பூசல்களை உண்டாக்கும் நோக்கத்துடன் விழுமியோருடைய காடுகளையும் புற்றரைகளையும் பயன்படுத்தும் வரையறை செய்யப்படாத உரிமையை அவனுக்களித்தது. உழவோர் புதிதாகப் பெற்ற சுதந்திரத்திற்கு ஆதரவளித்து அதற்கு வெளியிலிருந்து ஏற்படும் ஆபத்தை எதிர்ப்பதற்காக அதே வேளையில் கிராமச் சமிதிகள் நிறுவப்பட்டன. இவ்வாறு போலந்து உயர் குடியாட்சியின் அதிகாரம் முற்றுக அழிந்தது. போலந்தில் இரசியருடைய அதிகாரத்திற்கு ஆதரவாகப் பயன்படக்கூடிய புதிய சத்தியொன்று எழுப்பப்பட்டது. கத்தோலிக்க திருச்சபையும் பெரும் அதிர்ச்சியடைந்தது. எனெனில் அதன் மடங்களுள் அனேகமானவை அழிக்கப்பட்டு அம்மடங்களின் நிலங்களும் பறிக்கப்பட்டன. இரசியாவின் இணக்கமுடியாத இரு எதிரிகளான உயர்குடியாட்சியும் கத்தோலிக்க மதமும் இங்ஙனம் அழிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1914 பின் உண்டான அபிவிருத்திகள்.

இச்சமூகப் புரட்சிக்குப்பின்னர் கைத்தொழிற்புரட்சி நிகழ்ந்தது. போலந்தின் வர்த்தகம் பெரிதும் அபிவிருத்தியடைந்தது. பெரு நகரங்களின் குடித்தொகை பெருகிற்று. அன்றியும் கணக்கற்ற தொழிற்சாலைகள் தோன்றின. எப்படியாயினும் போலந்து நாட்டின உணர்ச்சியின் சத்தி இன்னும் குறையவில்லை. போலந்து மொழியைத் தடைசெய்தல் பாலனத்தினின்றும் போலந்தரைத் தவிர்த்தல் ஆகியன, சுருங்கக் கூறின் இரசிய மயமாக்கும் பூட்கை முழுவதும், பணிக் குழுவின் அடக்கு முறையும் பெருந் தோல்வியடைந்தன. 1914 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தன்னுண்மையுடைய போலந்து அரசொன்றை அண்மைக் காலத்தில் நிறுவ முடியாதெனத் தோன்றியது. ஆனல் காலப்போக்கில் பழிக்குப் பழிவாங்கப்படும். போர் மூண்ட பொழுது போலந்தின் சுதந்திரத்தை மீட்பதாக இரசிய அரசாங்கம் வாக்குறுதியளித்தது. போலந்து மக்களுக்கு இரசிய அரசாங்கம் அளித்த வாக்குறுதி அடங்கிய பிரகடனத்தோடு இவ்வத்தியாயத்தை முடிப்பது பொருத்தமாகும்.

"போலந்து மக்களே: உங்களுடைய தந்தையரும் முன்னோரும் கண்ட கனவை நனவாக்கும் காலமாயிற்று.

"150 ஆண்டுகளுக்கு முன்னர் போலந்தின் உடல் அழிக்கப் பட்டது. ஆனல் அதன் ஆத்மா அழியவில்லை . . . . . .

"போலந்தைத் துண்டு துண்டாகப் பிரித்த எல்லைகள் ஒழிக. அந்தநாடு இரசியப் பேரரசனுடைய செங்கோலின் கீழ் ஐக்கியப் படுக: சமயம், மொழி, தன்னுட்சி ஆகியவற்றில் சுதந்திரத்துடன் போலந்து இரசியச் செங்கோலின் கீழ் மீண்டும் உயிர் பெறக் கடவது.

"இரசியா உங்களிடமிருந்து ஒன்றைமட்டுமே எதிர்பார்க்கின்றது : வரலாற்றினல் எந்த நாட்டினங்களுடன் தொடர்பு கொள்ளுகின்றீர்களோ அந்த நாட்டினங்களின் உரிமைக்கும் உரிய இடத்தை அளியுங்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் VIII

புதிய ஊழி

(1871–1914)

1871 அக்காலத்தின் பண்பு (1871–1914).

மேற்கு ஐரோப்பிய வரலாற்றில் 1870 ஆம் ஆண்டானது, சேர்மானியப் பேரரசு, இத்தாலிய இராச்சியம், மூன்றும் குடியரசு, இருமை முடியாட்சி ஆகியவற்றை உருவாக்கிய ஆக்க இயக்கங்களின் முடிவைக் குறிக்கின்றது. அடுத்த நாற்பது ஆண்டுகளிலும் முக்கியமான அரசியல் நிகழ்ச்சிகள் எவையும் நிகழவில்லை. அன்றியும் இந்நிகழ்ச்சிகள் தாறுமாறுகக் காட்சியளித்தமையினால் அவற்றின் அபிவிருத்தியைத் தெளிவாக விளக்குவது கடினமாகும். நாடுகள் தத்தம் நிலையைப் பலப்படுத்திக்கொண்டிருந்த காலமானது பார்ப்போரது கற்பனை சத்தியைத்தூண்டி அவர்களுடைய கவனத்தை ஈர்க்கும் வியத்தகு பண்புகள் அற்றதாகும். பல்வேறு ஐரோப்பிய அரசுகளது பாராளுமன்ற வரலாற்றுக் குறிப்புகள் கவர்ச்சியுடையனவாயில்லை. இந்த நாற்பது ஆண்டுகளிலும் ஐரோப்பிய வரலாற்றில் முக்கியத்துவமுடைய சில அம்சங்களையே-அதாவது பிரான்சிய குடியரசு ஏற்பட்டமை, சேர்மானியப் பேரரசின் ஈட்டம், மூவர் நட்புறவினதும் இருவர் நட்புறவினதும் ஆக்கம், சேர்மானிய உவெல்பொலிற்றிக்கு முதலியனவற்றையே இவ்வத்தியாயத்தில் கவனிப்பாம்.

III ஆம் நெப்போலியனின் பதவி நீக்கம் (1871).

1870 ஆம் ஆண்டில் பிரான்சியக் குடியரசு ஏற்பட்டதே பிரான்சிய பிரசியப் போரின் விளைவாகும். மூன்றும் நெப்போலியனே நாட்டின் அழிவு, படையெடுப்பு, கூறுபாடு ஆகியவற்றிற்குப் பொறுப்புடையன் எனக் கண்டிக்கப்பட்டான். பிரான்சிற்கு அவன் இழைத்த பெரும் இன்னலுக்குத் தண்டனையாக அவனுடைய வமிசம் கவிழ்க்கப்பட்டது. தன் பேரரசு, மக்கள் ஆதரவைக் கொண்டிருந்தது என நெப்போலியன் கூறிக் கொண்டிருந்த போதிலும், படையே அதற்கு ஆதரவளித்தது. ஆகவே பேரரசுப் படைகள் அழிக்கப்பட்டமையினால் புரட்சியினால் ஏற்பட்ட ஆபத்துக்களை இந்நாடு அனுபவிக்க வேண்டியதாயிற்று. 1792 இல் தாங்கள் படையெடுப்பினின்றும் எப்படிக் குடியரசினால் காப்பாற்றப்பட்டனர் என்பதைப் பிரான்சிய மக்கள் தாங்கள் அல்லலுற்ற வேளையில் நினைத்து, வரலாற்றில் முன் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் மீண்டும் நிகழும் எனும் நம்பிக்கையுடன் புரட்சி மரபுகளை மீண்டும் பின்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848 ஆம் ஆண்டுக் குடியரசைப் போலல்லாது 1870 ஆம் ஆண்டுக் குடியரசானது பாரிசுக் குடியாட்சியால் நாட்டின்மீது திணிக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிடுதல் முக்கியமாகும். தலைநகரில் நடந்த செய்தி வெளியாகு முன்னர் அச்செய்தி மாகாணங்களிற் பிரகடனம் செய்யப்பட்டது.[1] முன்னைய குடியாசைவிட மூன்றும் குடியரசு பரந்த அடிப்படையில் அமைக்கப்பட்டது. இதுவே அதன் உறுதிக்கும், அது நீண்டகாலம் நிலைத்திருந்ததற்கும் காரணமாகும். பேரரசு வீழ்ச்சியடைந்த பின்னர் நாட்டினப் பாதுகாப்பு அரசாங்கமொன்று சேர்மானியப் படையைப் பிரான்சு நாட்டினின்றும் துரத்தும் பணியை மேற் கொண்டது. "நாங்கள் எங்கள் ஆள்புலத்தில் ஒரு குழியையோ அன்றேல் எங்கள் அரணில் ஒரு கல்லையோ விடப்போவதில்லை", எனப் பிறநாட்டு அலுவல் அமைச்சனை யூலிசுபாவர் என் பவன் கூறினன். வீறுகொண்டு, தன் முழுவலிமையையும் செலுத்தி நாட்டை மீண்டும் சீர்படுத்துவதில் முனைந்து நின்ற இலியோன் கம்பெற்ற என்பான் போர் நடாத்தும் பொறுப்பை ஏற்றான். ஆனால் இவனுடைய துணிகரமான முயற்சிகள் தலைநகரைப் பாதுகாக்கப் பயன்படவில்லை. ஆதலால் அமைதி வேண்டுமோ போர் வேண்டுமோ எனும் பிரச்சினையைத் தீர்மானிக்க நாட்டின மன்றமொன்று போடோவிற் கூடிற்று. அது நாட்டின விருப்பங்களைத் தெரிவித்து ஆபத்து விளைக்கக் கூடிய பகைமையைத் தீர்ப்பதன் பொருட்டு, சேர்மனி விதித்த கடும் நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டது. சமாதானம் ஏற்பட்டதும் இரு தலைமுறைகளாகப் பிரான்சைச் சின்னபின்னப்படுத்திய பழைய கட்சிப் பகைமைகள் மீண்டும் தோற்றின. நாட்டில் பயங்கரமான குடியியற் சண்டை பரவிற்று.

(1871) பிரான்போட்டு அமைதி (1871).

பிரான்சிய வரலாறு முழுவதிலும் பாரிசு பிரான்சின் தலை நகரம் என்ற சிறப்பை மட்டுமே உடையதாயிருக்கவில்லை. பிரீமன் குறிப்பிட்டதுபோல் பாரிசைச் சுற்றியே பிரான்சு வளர்ந்தது. பாரிசு, தான் நினைத்தபடி பிரான்சிய மக்களை ஆட்டி வந்தது. பிரான்சிய மக்களும் பாரிசையே தங்கள் வழிகாட்டியாகவும் புதிய எண்ணங்களின் ஊற்றுகவும் நினைத்தொழுகி வந்தனர். இந் நிலைமையாலேயே 1789 இலிருந்து 1872 வரை பிரான்சிய யாப்பின் அபிவிருத்தியில் தடை ஏற்பட்டது. ஏனெனில் யார் தலைநகரின் தலைவனாகிறானோ அவனே உடனடியாக மாகாணங்களின் தலைவனுமாகிறான். இப்பொழுது நாம் ஆராயப்போகின்ற பாரிசுச் சமிதியின் சிறப்பு யாதெனில், அது பிரான்சு தனது தலைநகரின் கட்டளைகளுக்கு இனிமேலும் இணங்க

பிரான்சிய வரலாற்றில் பாரிசு.

[1] Seignobos, "Contemporary Europe," i. 187.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1871 வொருப்படாது என்பதை வெளிப்படுத்தியமையேயாகும். பாரிசுக் குடியரசிற்கும் நாட்டின மன்றிற்குமிடையில் நடந்த போராட்டத்தில் மன்றம் வெற்றியடைந்தது. இவ்வெற்றி, தனி நகரொன்று பிரான்சை ஆட்சி செய்யும் உரிமையைச் சிதறவடித்தது. நவீனவிஞ்ஞான வசதிகளின் காரணமாக நல்ல கட்டுக்கோப்புடைய தற்கால அரசிலும் பார்க்கக் கிளர்ச்சியாளரின் குடியரசு வலியற்ற தென்பதற்கு இது தெளிவான சான்றுகும்.

பாரிசுச் சமிதி (1871).

போர் தொடங்கியது முதல், பாரிசு, கலகத்திற்கு ஏற்ற இடமாகத் தோன்றிற்று. படையே மத்திய அதிகாரிகளின் பலத்திற்குக் காரணமாயிருந்தது. இப்படைப் பலத்தை இழந்த மத்திய அதிகாரிகள் நலிவுற்றிருந்தனர் ஆதலால் இருபது ஆண்டுகளாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்த புரட்சி உணர்ச்சிகள் பாரிசில் தலைதூக்கின. இக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதும் வெற்றியுடன் போரைத் தொடர்ந்து நடத்துவதனாலேயே பாலனத்திற் கெதிராகச் செய்யப்படும் கண்டனத்தைத் தடைசெய்யலாம் என்பதை நுணுகி நோக்குவோர் தெரிந்து கொண்டனர். எப்படியாயினும், வெற்றிக்குப் பதிலாக, மிகவும் விரைவாக இடையூறுகள் ஒன்றன்பின் ஒன்றுக ஏற்பட்டன. அன்றியும், பாரிசு மக்களுடைய அதிருத்தி மிகுதியாகத் தூண்டப் பெற்றது. அமைதி நியதிகளை நாட்டின மன்றம் ஏற்றபொழுது போர் வேண்டி நின்றேரடைந்த கோபம் கங்குகரையற்றதாயிருந்தது. இரு மாகாணங்களைக் கையளித்து, பிரான்சைத் துண்டமாக்கி, நாட்டை அழித்ததாகிய மன்றிலிருந்து, புரட்சிப் பிரதியாளர் விலகினர். அல்சேசு உலொரேன் கையளிக்கப்பட்டமை, நாட்டை வஞ்சிப்பதாகும் எனத் தீவிரப் போர்க் கட்சியினர் கருதினர். அன்றியும் குடியரசே அபாயத்திற்கு உள்ளாயிருக்கின்றது எனவும் நம்பப்பட்டது. நாட்டின மன்றில் முடியாட்சியாளரே பெரும்பான்மையோராயிருந்தனர். ஆதலால் இவர்களை முன்னேற்றமுடைய குடியரசுவாதிகள் நம்பவில்லை. எதிர்ப்பை இணக்கக் கூடிய திறமையைத் தானும் அம்மன்றம் காட்டவில்லை. நாட்டின மன்றின் வைகல்கள் வேர்சையில் கூட்டப்பட்டமை பாரிசியரின் பெருமைக்குப் பங்கம் விளைவித்தது. அன்றியும் அவர்களுடைய பொருள் நலன்களை வேண்டுமென அசட்டை செய்தது. இதனாலும் அவர்கள் கோபமடைந்தனர். வாடகை கட்டல், நிதிக்கடப்பாடுகள் ஆகியவை முற்றுகையின்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டன. பொருளாதார ஈடாட்டம் தலைநகரில் இன்னும் இருந்துவந்தது. எனினும் காலந்தாழ்த்திக் கடனைக் கொடுப்பதற்கு உள்ள சட்டபூர்வமான அனுமதியை நீடிக்க மன்றம் மறுத்தது. தாம் வழக்கமாகச் செய்யும் தொழில்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரினால் இழந்தோருக்கு நாட்டினக் காவலே முற்றுன ஆதார 1871
மாகவிருந்தது. எனினும் அவர்களுக்குப் பணம் கொடுப்பது தடுக்கப்பட்டது. சேர்மானியர் பாரிசிற் புகுந்த பின்னர் நாட்டினக் காவலர் தம் படைக் கருவிகளை வைத்திருக்க அனுமதி பெற் றனர். அவர்கள் கலகக்காரருடன் சேர்ந்து கொண்டனர். நாட் டினக் காவலரிடமிருந்த சில பீரங்கிகளைக் கைப்பற்ற அதிகாரிகள் முயற்சி செய்தனர். ஆதலால் உடனடியாகக் கலாம் தொடங் கிற்று. ஆனால் இது தோல்வியடைந்தது. ஆதலால் மார்ச்சு 8 ஆம் திகதியன்று நகரைத் தனது எதிரிகளிடம் விட்டுவிட்டு அரசாங்கம் வேர்சையை நோக்கிப் பின்வாங்கிற்று.

இப்பொழுது பாரிசை இரு குழுக்கள் ஆட்சி செய்தன. தலை பொதுவுடை
நகரவாசிகளாலே தெரிந்தெடுக்கப்பட்ட "சமிதிப் பொதுக் கழக மைத் திட்டம்.
மும்" நாட்டினக் காவலின் பிரதிநிதியாயும் குடிப்படைக்கும் கழகத்திற்கு மிடையே இணைப்பாகப் பயன்படுவதாயும் இருந்த மத்திய குழுவும் இவ்வாட்சிக் குழுக்களாகும். பழைய குடியர சின் நாட்காட்டியையும், சிவப்புக் கொடியையும், சமூகவுடை மைக் கட்சியின் சின்னத்தையும் பொதுவுடைமைக்கட்சி ஏற்றுக் கொண்டது. எனினும் அக்கட்சியிடம் சமூகவுடைமைத் திட்ட மேதும் இல்லைப்போலும். உண்மையில், கழகத்தின் சில உறுப் பினரே சமூகச் சீர்திருத்தம் பற்றி அக்கறையுடையோராயிருந் தனர். மறுபுறத்தில், 75 ஆண்டு காலமாகத் தலவாட்சித் தத்துவங்கள் பிரான்சில் வேரூன்றியிருந்தன. இவற்றைவிடப் பொதுவுடைமைக் கட்சியினருடைய நகரசபைத் திட்டங்கள் பெரும் முன்னேற்றமடைந்திருந்தன. பிரான்சியப் புரட்சித் தலைவர் கள் முற்றுன பன்முகப் படுத்தல் முறைமையை 1791 இல் தாபித்துத் தலச் சமிதிகளுக்குத் தன்னுட்சியில் பரந்த அதிகாரங் களை அளித்தனர். ஆனால், பிரசிய ஒசுற்றியப் படைகளைத் தமது நாட்டினின்றும் விரட்டுதற்காக, தலத்தன்னுண்மையை அடையா ளமே தெரியாமல் அழித்தும், இதுவரையும் பிரான்சு அறிந் திராத அளவு திறம்பட ஒருமுகப்படுத்திய அரசாங்கத்தை நிறு வியும், யக்கோபினர் பழைய ஆட்சியின் மரபுகளை மீண்டும் கடைப்பிடித்தனர். முதலாம் நெப்போலியன் ஒருமுகப்படுத்திய இப்பாலன முறைமையைப் பின்பற்றி விரிவுபடுத்தினன். சிற்சில மாற்றங்களுடன் இம்முறைமையே 19 ஆம் நூற்றாண்டு முழு வதும் தொடர்ந்து கையாளப்பட்டது. யக்கோபினரின் அடிப் படைத் தத்துவங்களைப் பொதுவுடைமை வாதியினர் புறக்கணித் தனர். அத்துடன் ஒவ்வொரு நகரும் பூரண தன்னுட்சியை யுடையதாயிருக்க உரிமையுண்டெனவும் இப்பொழுது அவர்கள் பிரசித்தஞ் செய்தார்கள். "பாரிசு கேட்பது யாது? அது கேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1871 பது குடியரசு அங்கீகரிக்கப்படுவதையும் தாபிக்கப்படுவதையுமா கும். பிரான்செங்கும் சமிதியின் தனித்தன்ணை வழக்கில் இருக்க வேண்டும்,'' என அவர்கள் தாம்செய்த பிரகடனத்திற் கூறினர். சமிதிக்கு "இயல்பாயுள்ள உரிமைகளை எல்லாச் சமிதி களும் பிரயோகிக்கலாம். சமிதிகளின் பாதீட்டிற்கு வாக்களித் தல்; வரிகளை நிச்சயித்தல்; பங்கிடுதல், தலச் சேவைகளைக் கட்டுப் படுத்தல்; நீதிமன்றம், உண்ணுட்டுப் பொலிசு, கல்வி ஆகியவற் றைச்சீர்படுத்தல்; சமிதியின் சொத்துக்களைப் பாலனஞ் செய்தல்; பொது அலுவலரைத் தேர்தலினூலோ போட்டியினூலோ தேர்ந் தெடுத்தல்; தன் சொந்த அலுவலரைத் தெரிவு செய்ய வேண்டி யதும் ஒழுங்கிற்குத் தனிக்காவலாயிருக்க வேண்டியதுமான நாட்டினக் காவலைக் கட்டுக்கோப்புடையதாக்கல் ஆகியவையே இவ்வுரிமைகள்." கூட்டவையத்தில் இத்தன்ணுட்சிச் சமிதிகள் ஐக்கியப்படவிருந்தன. இக்கூட்டவையின் பிரதியாளர்கள், மத் திய நிருவாகத்தை அமைப்பவராவர். ஆனல் சமிதிக் கூட் டாண்மையைத் தொடர்ந்து நடத்திப்பார்க்க ஒரு சந்தர்ப்பமும் ஏற்படவேயில்லை. சேர்மானியரால் விடுதலை செய்யப்பெற்ற கைதிகளையே பெரும்பான்மையுமுடைய நாட்டின அரசாங்கத் தின் படையானது பாரிசை முற்றுகையிட்டுப் படிப்படியாக நக ருக்குள் புகுந்தது. இதைத் தொடர்ந்து, குறித்த நூற்றுண் டின் பயங்கரக் குடிப்போர் என விவரிக்கப்பட்ட போர் நடந்தது. இதனை" இரத்தக்கிழமை" என அழைத்தனர் (மே 21–28). "மக்களுக்கும் இடம் விடுங்கள், கைகளே கருவியாகப் போரிடும் மனிதருக்கு இடம் விடுங்கள். புரட்சிப் போரின் நேரம் வந்து விட்டது. . . . . முதலில் தெருவரண்கள்; அவை வீழின் வீடுகள்; அவை வீழின் நமதுடல்கள்" என்று பொதுவுட மையாளரின் பிரகடனம் முழங்கிற்று. அடுத்து அரக்கத்தன மான போராட்டமொன்று ஏற்பட்டது. விசாரணையென்ற பேச் சேயின்றிக் கலகக்காரர் படுகொலை செய்யப்பட்டனர். குறைந் தது 20,000 பாரிசியராதல் அழிந்திருப்பார் எனக் கூறப்பட்டது. அத்துடன் ஐந்து ஆண்டுகள் வைகலிலிருந்த போர்க் கழகங்கள் 13,000 பேர்மீது தீர்ப்புக் கூறின. இவர்களுள் 7,500 பேர் புதிய கலிடோனியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஏனை யோர்மீது மரண தண்டனை அல்லது தண்டத் தொழும்பு விதிக் கப்பட்டது. பொதுச் சட்டத்தை மீறிய குற்றவாளிகளையும் அரசி யற் கலகக்காரரையும் ஒரேவிதமாகத் தண்டிக்காத பிரான்சிய வழமையை மீறிய ஒரு செயல் இது. வெற்றியாளர் கடுமையாக வஞ்சந் தீர்த்தனர். இதனல் நலிவடைந்த முன்னேற்றமுடைய குடியரசு வாதிகள் கட்சியும் சமூகவுடைமையாளர் கட்சியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்து போயின. உரோமில் குடியரசின் கடைசி நாட்களிலும் பிரான்சில் பயங்கர ஆட்சிக் காலத்திலும் அழிவை உண்டாக்கிய அதே குற்றத்தீர்ப்பு முறைகளினால் அக்கட்சியின் பகைவர்கள் அதனைச் சிதைத்தனர். 1871

பாரிசுச் சமிதிக்குச் சாதகமான எதுவும் மிக அரிதாகவே கூறப்பட்டது.

சமிதியைக் கண்டித்தல்.

பொதுவுடைமை இயக்கமானது பொதுவாக, தன்னையே அழிக்கும் ஒரு பைத்தியத்தனமான செய்கையாகவும் பிரான்சிற்குப் பெரும் துரோகஞ் செய்வதொன்றுகவும், நாடு பகைவரின் கையிலிருந்தமையால் மிகுந்த மதிப்புக் குறைவானதாகவும் கருதப்பட்டது. இன்னும் நாட்டின் அவப்பேறுகள் பொதுமக்கள் தமது சொந்த அதிகாரத்தைத் தாபித்தற்குப் பெருவாய்ப்பு அளித்தன.[1] எனினும் பொதுவுடைமை வாதிகள் வேர்சையிலிருந்த முடியரசு மன்றினால் ஆபத்து வருமெனக் கருதிக் குடியரசைப் பாதுகாக்கவே போராடினர் எனும் உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டும். "வேர்சையிலிருந்தோருக்கு எதிராகப் பாரிசியர் காட்டிய பெரும் அவ நம்பிக்கையே இத்தொல்லைக்கு மூலகாரணமாயிருந்தது. பெரும்படியாகப் பார்க்கும்பொழுது பாரிசுச் சமிதி முன்னெருபோதும் இல்லாத விதமாக நிகழ்ந்த பல குழப்பங்களினால் ஏற்பட்ட வினை வின் உச்சநிலையாகும். இக்குழப்பங்கள் நாட்டையே ஒரு உன்மத்த நிலையின் எல்லைக்குக் கொண்டு சென்றுவிட்டன. இது பிரான்சிய வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவாறு ஏற்பட்ட பொது மக்களின் கோபாவேசத்தின் அதிர்ச்சி தரும் வினை வாகும். போரினால் ஏற்பட்ட ஆபத்துக்கள், ஆள்புல இழப்பு, நீண்டகால முற்றுகை, சேர்மானியர் வெற்றியுடன் நாட்டினூடே நுழைந்தமை ஆகியவையே இவ்வதிர்ச்சிக்குக் காரணங்களாகும்.

போடோக்குக் கூட்டணி.

அடுத்த சில ஆண்டுகளாக குடியாட்சி நிறுவகங்களின் படிப்படியான, உறுதிப்பாட்டிலேயே பிரான்சிய உண்ணாட்டு அரசியல் அக்கறையுடையதாயிருந்தது. குடியரசை ஆதரித்தோருக்கும் முடியாட்சியை ஆதரித்தோருக்கு மிடையிலிருந்த போராட்டம் பாராளுமன்ற அரங்கிலேயே இடம்பெற்றது. எக்கட்சி வெல்லும் என்பது வெகுகாலம் வரை ஐயத்திற்குரியதாயிருந்தது. சமாதானம் செய்வதற்காக இம்மன்றம் தெரிவு செய்யப்பட்டது. இம்மன்றம் சமாதானஞ் செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டத

[1] Phillips, "Modern Europe." 483.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1871 னல் நாட்டு மாவட்டங்கள் முடியாட்சி வாதிகளுக்கு வாக்களித் தன. சேர்மானியப் படைகள் படையெடுத்த தென்கிழக்குப் பகுதியிலுள்ள மகாணங்கள் இம்முடியாட்சி வாதிகளுக்கு வாக் களிக்கவில்லை. குடியரசு மன்றம் போரையே வேண்டி நிற்கும் என்பதே பொதுவாக எல்லோருடைய அபிப்பிராயமுமாயிருந் தது. ஆகவே முடியரசுவாதிகள் அவர்களின் அரசியற்றுணிபு களில் உள்ள உறுதியினலன்றி, தீவிரப் போர்க் கட்சியின் எதிரி கள் என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்முறையினல் 750 பிரதியாளரைக் கொண்ட மன்றத்தில் 400 முடியாட்சிவாதி கள் இடம் பெற்றனர். பிரான்சு மீண்டும் முடியாட்சிக்குத் திரும் பும் எனக் கருத இடம் இருந்தது. ஆனல் பிரான்சிய அரசிய லில் எதிர்பாராததே நிகழும். முடியாட்சிக்குப் பரிவுகாட்டிய இம் மன்றமே குடியரசை ஆக்குதற்கான சாதனமாக அமைந்தது. இவ்வியத்தகு நிகழ்ச்சிக்கு, துணிந்து பல விளக்கங்கள் கொடுக் கலாம். சமாதானம் வேண்டுமோ, போர் வேண்டுமோ என்பது பற்றித் தீர்மானித்தற்காகவே இம்மன்றம் தெரிவு செய்யப்பட்டது. அது யாப்பு ஒன்றை அமைப்பதற்கு அதிகாரம் பெறவில்லை. ஆகவே பிரான்சைப் பகைவர் கைப்பற்றியிருக்கும் வரை, முடி யாட்சியைப் பிரசித்தஞ் செய்து கடுமையான கட்சிப் பிரிவுகளைத் தூண்டுதல் உன்மத்தமான செய்கையாக விருந்திருக்கும். நாட்டில் பேராபத்து ஏற்பட்டுள்ள இச்சமயம் எப்பாடுபட்டும் நாட்டின ஐக்கியத்தைக் காப்பாற்றுதல் இன்றியமையாததா கும். முடியாட்சிவாதிகள், மன்றில் பெரும்பான்மையோரா யிருந்தனர். ஆனல் இக்கட்டத்தில் வலிமையுடைய குடியரசு வாதிகளான சிறுபான்மையினருக்கு அவர்கள் கோபமூட்டத் துணியவில்லை. மேலும், நாட்டின ஆள்புலத்தைக் கையளித் துத் தன் பணிநெறியைத் தொடங்கிய ஒரு வமிசம் நீண்ட காலம் ஆட்சி செய்யமுடியாதெனும் படிப்பினையை, மீட்கப்பட்ட பூபோன் முடியாட்சியின் வரலாறு கற்பித்தது. ஆகவே பிரான்சிய மாகாணங்களைக் கையளிப்பதே புதிய ஆட்சியின் முதற் செயலாயமையுமிடத்து அமைதி உடன்படிக்கையை நிறை வேற்றும் வேலையைப் புதிய அரசன் மேற் கொள்ளாமல் குடி யரசிடம் விடுவதே ஏற்றது போற் காணப்பட்டது. இவற்றைக் காரணங்களாகக் கொண்டு "பிரான்சில் எம்மாதிரி அரசாங்கம் அமைக்க வேண்டும்" என்னும் விடயத்தைச் சிறிது காலத்திற் குப் பிற்போடுவதற்கு மன்றம் தீர்மானித்தது. போடோக்குக் கூட்டணி என்ற அரசியற் போரோய்வுக்கு எல்லாக் கட்சிகளும் உடன்பட்டன. இக்கூட்டணியினல் யாப்புறு பிரச்சினைகள் சிறிது காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1873–1883 பிரான்சிய குடியரசு தாபிக்கப் பட்டமை.

நல்ல வேளையாகப் பிரான்சிற்குத் தியேசு சிறந்த அரசறிஞனாக வாய்த்தான். அவனின் ஆண்மையும், குறிப்பிடத்தக்க திறனும் கூர்மையான அறிவும் நெருக்கடியான இந்நிலைமையில் அரசாங்கத்தை நடாத்துதற்கு அவனைத் தகைமையுடையவனாக்கின. அவனுடைய போக்கை நாடு முதலில் பெரிதும் வெறுத்த போதிலும், 1870 இல் போரை அவன் எதிர்த்ததன் விளைவாக மக்களின் நன்மதிப்பைப் பெற்றான். தியேசு ஒலியன்சு முடியாட்சியின் ஆதரவாளனாவான். ஆனால் அவன் தன் நாட்டைக் கட்சிக்கு மேலாக மதித்து அதிக பிரிவை உண்டாக்காத அரசாங்கமொன்றைத் தாபிக்க முயன்றான். "நிருவாகத் தலைவனாக" அமர்த்தப்பட்ட அவன், அமைதி ஏற்படுத்தல், புனருத்தாரணம், நாணய மீட்சி, கைத்தொழில் விருத்தி ஆகியவற்றுடன் தொடர்புடையதே தன் வேலை என வரையறை செய்தான். சேர்மனி கட்டாயப்படுத்திப் பெற்ற பெருந்தொகையான நட்டஈட்டை (இருபது கோடி பவுண்) ஈராண்டுகளில் கட்டி முடித்தான். இது, அவன் தன் வேலையில் எத்துணை வெற்றியடைந்தான் என்பதற்குச் சான்று பகரும். பிரான்சைச் சேர்மானியப் படைகளின் ஆட்சியினின்றும் விடுவித்துப் பிரான்சின் பொருளாதாரம் பழைய நிலையை மீண்டும் அடைந்தமையை உலகுக்குத் தெரிவித்தான். எனினும் தியேசினால் பிரதான நீதிபதிப் பதவியைத் தொடர்ந்து வகிக்க முடியவில்லை. எவ்வளவுக்கெவ்வளவு பிரான்சின் துன்பங்கள் தீர்ந்து அபிவிருத்திகள் ஏற்பட்டனவோ, அவ்வளவுக்கவ்வளவு முடியாட்சியை மீட்பதற்காக, குடியரசின் எதிரிகள் திரும்பவும் தீவிரமாக முயற்சி செய்தனர். மக்கு மாகோனை (1873) ஆதரித்து, தியேசை வீழ்த்துவதில் அவர்கள் வெற்றி பெற்றனர். எனினும், அது தமது குறிக்கோளையடையச் சிறிதும் பயன்படவில்லை என்பதைக் கண்டனர். பொது நிகழ்ச்சித் திட்டமொன்றை அமைக்க முடியரசுக் கட்சிகள் தவறியமையே அவர்கள் முடியாட்சியை மீட்க முடியாமைக்குக் காரணமாகும். மூவர் சிம்மாசன உரிமையைக் கோரினர். பத்தாம் சார்சின் பேரனை கொந்தே தி சாம்போடு, உலூயி பிலிப்பின் பேரனை கொந்தே தி பரிசு, மூன்றும் நெப்போலியனுடைய மகனை பேரரசு இளவரசன் ஆகியோரே இம்மூவராவர். எனினும், தியேசு தன் எதிர்க்கட்சியினருக்கு நினைவுறுத்தியதுபோல், ஒரு சிம்மாசனமே இருந்தது. அதில் மூவர் இருக்க முடியாது. உரிமையாளருக்கும், ஒலியன்சு முடியாட்சி வாதிகளுக்கும், பேரரசு வாதிகளுக்குமிடையே இருந்த போட்டி முடியாட்சியின் நோக்கத்தை அழித்தது. முடியாட்சிவாதிகள் தம் சிம்மாசனத்தில் அமருபவரைப் பற்றி ஒருமனப்பட்ட முடிபு கொள்ளாம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1870 லிருந்தமையால் சிம்மாசனம் வெறுமையாகவே இருந்தது. பிள்ளையில்லாத ஐந்தாம் என்றியின் (கொந்தே தி சாம்போடு) பின்னர் கொந்தே தி பரிசு சிம்மாசனம் ஏற வேண்டும் எனும் உடன்பாட்டிலில் உரிமையாளருக்கும் பேரரசு வாதி களுக்கும் இடையே இணக்கமேற்படுவதாயிற்று. ஆனால் புரட்சி யின் சின்னமாகக் கருதிய மூவர்ணக் கொடியைக் கொந்தே தி சாம்போடு என்பான் ஏற்க மறுத்தமையால் இத்திட்டம் தோல் வியடைந்தது. பழைய ஆட்சியின் வெள்ளைக் கொடியை இழப் பதிலும் பார்க்கச் சிம்மாசனத்தைத் துறப்பதற்கு அவன் சித்த மாயிருந்தான். கொடியை இழப்பது தெய்வீக உரிமையின் தத்துவங்களையும் கட்டுப்பாடற்ற இறைமையையும் துறப்பதாகப் பொருள்படும். இச்சூழ்நிலைகளில் முடியாட்சியை மீட்க முடியா தென்பது தெளிவாகத் தெரிந்தது. நிருவாகத் தலைவனைக் குடியரசின் குடிப்பதியாக மதித்ததன்மூலம் (சனவரி 30, 1875) மன்றம் உண்மையில் குடியரசின் இலட்சியத்தைக் கடைப் பிடித்தது எனலாம். சில ஆண்டுகளின் பின்னர் (1883) "குடியரசு முறையான அரசாங்கமானது, மீண்டும் மீண்டும் மாற்றங்களுக்கு இடந்தரக்கூடியதாக அமைய முடியாது" என வெளிப்படையாகச் சட்டமாக்கப்பட்டது. அது முதற்கொண்டு, குடியரசானது, அரசியற் கலக அரங்கிற்கு அப்பாற்பட்டதா யிற்று.

மூன்றும் குடியரசின் பண்பு. குடியரசிற்குரிய யாப்பானது ஒரு கட்சியின் செயலன்று. எல்லாக் கட்சிகளும் அதை உருவாக்குவதில் பங்குபற்றியிருந் தன. இது பெரும்பாலும் ஒரு உடன்பாடாகவே அமைந்தது. இதில் பிரான்சிய வரலாற்று அபிவிருத்தியின் பல விதமான கட்டங்களும் பிரதிபலித்தன. புரட்சி விட்டுச்சென்ற சமூகக் கட்டுக் கோப்பினையும் பேரரசினின்றும் மரபுரிமையாகப் பெற்று, ஒருமுகப்படுத்தப்பட்ட பாலன நிறுவகங்களையும் இது பேணிற்று. அரசியல் அதிகாரம் பங்கிடப்பட்டமையே, தன்னுண்மைக்கும் மக்கள் விரும்பும் இறைமைக்கும் இடையே உள்ள இணக்கத் திற்கு எடுத்துக்காட்டாகும். குடியரசு யாப்பின், இவ்விசேட அம்சமே அதன் உறுதிநிலைக்குப் பெரிதும் காரணமாயமைந்த தென்பதில் ஐயமில்லை. பிரான்சிய மக்கள் நீண்ட காலத்தின் பின்னர் தொடர்ச்சியான அரசியல் வாழ்க்கையை அனுபவிக்கக் கூடியதாயிருந்தது. இதற்கு இன்னொரு முக்கியமான விளக்க மூண்டு. பிரான்சிலேற்பட்ட புரட்சி ஒவ்வொன்றும் குடியரசு வாதிகளின் செயலாகவே இருந்தது. முதல் மூன்று சந்தர்ப் பங்களிலும்[1] அவர்களுடைய செல்வாக்கு, பாரிசிற்கும் பெரு

[1] அதாவது 1792, 1830, 1848.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரங்களிற்கும் அப்பாற் செல்லவில்லை. ஒவ்வொரு முறையும் புரட்சி ஆரம்பித்த உடனேயே முடியரசுவாதிகளின் எதிர்ப்பும் எற்பட்டது. நான்காம் முறைதான் (1870) நாடெங்கும் குடியரசு இலட்சியம் வேரூன்றியது தெரிந்தது. போடோ மன்றத்தில் முடியாட்சிக் கட்சிகளுக்குத் தற்செயலாகக் கிடைத்த பெரும் பான்மையினால் குடியரசினை உடனடியாகப் பிரசித்தஞ் செய்வதில் தாமதமேற்பட்டது. குடியரசைத் தாபிக்கும் ஒரே ஒரு குறிக்கோளுக்காக ஒரு கட்சியை எற்படுத்திய குடியரசு வாதிகள் தங்கள் குறிக்கோளை இறுதியாக அடைந்தவுடன் புரட்சிகள் தாமாகவே ஒழிந்தன[1]. 1870

பிரான்சில் நிகழ்ந்தது போல் சேர்மனியிலும் 1870 ஆம் ஆண்டுப் போரானது புதிய காலவவதி ஒன்றைக் குறித்தது. பிரான்சியக் குடியரசு எற்பட்ட அதே ஆண்டில் சேர்மானியப் பேரரசும் தோற்றிற்று. சேர்மனியின் ஐக்கியத்தைப் பிசுமாக்கு அடைந்த முறைகளையும் அவன் மத்திய ஐரோப்பாவில் படை முடியாட்சியை எற்படுத்திய முறைகளையும் பற்றி முன்னொரு அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் புதிய அரசு அதன் தொடக்க நிலையிலேயே இருந்தது. அது இன்னும் நன்கு உருவாகவில்லை. பேரரசிற்கு இன்றியமையாத நீதி, நிதி ஆகியவற்றிற்குரிய நிறுவகங்களை எற்படுத்துவதிலேயே, சேர்மானிய அரசறிஞர்களின் சத்திகள் ஒரு தலைமுறை முழுவதும் செலவழிந்தன. சேர்மானியப் பேரரசினை நிறுவியவனே இருபது ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அதை நிருவகிக்கக் கூடியதாயிருந்தமை, சேர்மானிய மக்களின் அதிட்டமேயாகும். அவனுடைய முறைகளை நாங்கள் கண்டிக்கக் கூடும். ஆனால் குறுகிய எட்டாண்டுக் காலத்தில் சேர்மனியின் கூட்டாட்சி ஐக்கியத்தை நிறைவேற்றிய அவனுடைய பேராற்றலை நாம் மறுக்க முடியாது. அன்றியும் பிசுமாக்கு மங்களகரமாகத் தொடங்கி வைத்த வேலையை முற்றுக்க அவனைவிட வேறெருவனும் தகுதியுடையனல்லன். சேர்மனியை ஆக்கியோன் என அவன் பெற்ற மதிப்பானது, அரசுக்கு எற்பட்ட பிரச்சினைகளை அவன் வெற்றிகரமாகத் தீர்க்கப் பெரும் உதவியாயிருந்தது. ஐக்கியத்திற்கு இடையூறுக விருந்தவற்றை வெல்லற்கும், அழிக்கும் சத்திகளை எதிர்த்துத் தாக்குதற்கும் எற்ற மனப்பண்புகளை இவன் பெற்றிருந்தான். மேலும் பிசுமாக்கு உருவாக்கிய அமைப்பின் குறைபாடுகளை அவனைவிட வேறெருவனும் நன்கறியவில்லை. கூட்டாட்சி அடிப்படையில் அவன் சேர்மானிய நாட்டின அரசொன்றை நிறுவ வேண்டியிருந்தது. இவ்வைக்கியத்தைப் சேர்மானியப் பேரரசைப் பலப்படுத்தல்.

[1] Cf. Seignobos, op. cit. i. 224.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1870. பவேரியாவும் உவூத்தெம்பேக்கும் பெரும் தயக்கத்துடனேயே ஏற்றன. இத் தென் அரசுகளை இணக்குவது கடினமான காரியமாயிருந்தது. பல்வேறு கூட்டாட்சி அரசாங்கங்கள் நேரடியான பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருக்கும் பண்டசிராத்தின் நடவடிக்கைகள் இரகசியமாக உள்ளன. ஆதலால் சேர்மானிய அலுவல்களை நடத்துவதில் பிரசியா உண்மையில் எத்துணை எதிர்ப்பைப் பெற்றதெனக் கூற இயலாது. ஆனால் பிரசியாவிற்கும் தென் அரசுகளுக்கும் இடையிலிருந்த உறவு இலகுவில் சீராக்கப்பட்டது என்று கொள்ளவியலாது.

சேர்மனியின் ஒடுக்கப்பட்ட நாட்டினங்கள்.

தனிப்பட்ட அரசுகளின் பிரிவினை எண்ணத்தை நீக்குவதிலும், கூட்டாட்சிக்குத் தேவையானவற்றுடன் அவற்றின் கோரிக்கைகளை இணக்குவதிலும் ஏற்பட்ட இடர்ப்பாட்டைவிடச் சேர்மானியப் பேரரசிற் சேர்மனிக்குப் புறம்பான அம்சங்கள் இருந்தமையும் உண்ணாட்டுப் பலத்துக்கு இன்னொரு இடையூறாயிற்று. கிழக்கு மாச்சசுப் போலந்தரும், வட செல்சுவிக்குத் தேனியரும், அல்சேசு உலொரேன் வாசிகளுமே, ஒடுக்கப்பட்ட நாட்டினங்களாகும். மொழி, மரபு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் தம்மோடொத்த அம்சம் எதுவும் இல்லாத அரசியற் சமுதாயமொன்றுடன் இவை தமது விருப்பத்திற்கு மாறுக இணைந்தன. 35 இலட்சம் போலந்தரும், 1,50,000 தேனியரும், 18,00,000 அல்சேசு உலொரேன் வாசிகளும் இருந்தனர். 1914 ஆம் ஆண்டில் சேர்மனியின் மொத்தக் குடித்தொகை ஆறு கோடியே ஐம்பது இலட்சமாகவிருந்தது. பிரசிய போலந்தின் நிலைமை பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.[1] கிழக்கு மாச்சசில் பின்பற்றப்பட்ட கட்டாயமாகத் தன் மயமாக்கும் பூட்கையை வடக்குச் செல்சுவிக்கு வாசிகளான தேனியரிடையேயும் கைக்கொள்ள முயற்சி செய்யப்பட்டது. மக்கள் குடியொப்பத்தின் மூலம் தென்மாக்குடன் ஐக்கியப்படுவதை விரும்பினால் வட செல்சுவிக்குக் குடித்தொகையைத் தென்மாக்கிற்கு மீட்டுக் கொடுத்தற்கு, பிராக்குப் பொருத்தனையில்,[2] மூன்றாம் நெப்போலியனின் தூண்டுதலினால் பிரசியா உடன்பட்டிருந்தது. பொருத்தனையின் இக்கூறு வழக்கொழிந்தவொன்றாயிருந்தது. அரை நூற்றாண்டு கழிந்தும் தேனியர் தங்கள் நிலைமைபற்றித் திருத்தியடைய முடியவில்லை. தேனிய மொழியை ஒழிக்கவும், தேனிய நிலச் சொந்தக்காரரிடமிருந்து

[1] பக்கம் 306.

[2] பக்கம் 98.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய நிலத்தைப் பறிக்கவும் பிரசியா முயன்றபோது அதிருத்தி எற்படுவது இயற்கையே. அல்சேசு உலொரேன் வேறு வகையில் நடத்தப்பட்டது. அல்சேசில் வாழ்ந்தோர் பெரும்பான்மையும் சேர்மானியராவர். உலொரேனில் வாழ்ந்தோர் பெரும்பான்மையும் பிரான்சியராவர். சேர்மனிக்கு வாயில்களாயமைந்த அல்சேசையும் சிராசுபேக்கையும் வலிந்திணைக்கப் பிசுமாக்கு தீர்மானித்தான். அப்பொழுது படைக்கட்சி நெருக்கியிராவிடின் அவன் பிரான்சின் வாயில்களான உலொரேனையும் மெற்சையும் கைவிடச் சம்மதித்திருப்பான். எது எப்படியிருந்த பொழுதும் தமது ஆள்புலங்களைத் தம்மயமாக்குவதில் சேர்மானியர் தோல்வியுற்றனர். அவர்களுடைய பூட்கை, இணக்கம் பலவந்தம் ஆகிய இரண்டிற்குமிடையே மாறிக்கொண்டிருந்தது.[1] 1870

எண்ணிக்கையில் குறைவாயிருந்தமையால் ஒடுக்கப்பட்ட நாட்டினங்கள் சேர்மானிய அரசாங்கத்துக்குப் பெரும் உபத்திரவம் விளைவிக்கக்கூடிய பலம் வாய்ந்தனவாயிருக்கவில்லை. எனினும் அவை சேர்மனி பலவீனமடைவதற்குக் காரணமாயிருந்தன என்பதை மறுக்க முடியாது. இவ்வரசின் உறுதிக்குப் பங்கமேற்படுத்திய உண்மையான அபாயங்கள் வேறு திசையிலிருந்து வந்தன. தியேசு தோற்றுவித்த சேர்மானியப் பேரரசும் பழைமை பேணும் குடியரசும், குருவாயத்தையும் சமூகவுடைமை வாதத்தையும் எதிர்க்க வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். முதலில் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையுடனும் பின்னர் சமூகக் குடியாட்சிவாதிகளுடனும் பிசுமாக்கு செய்த போராட்டத்தின் வரலாறுனது, புதிய அரசியற் கொள்கை உருவாவதற்குத் தடையாயிருந்த பிரச்சினைகளின் தன்மையை நாம் விளங்குதற்கு உதவும். உண்ணாட்டுப் பிரச்சினைகள்.

உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை சேர்மனியில் அதிக அதிகாரங்களை அனுபவித்தது. அது அரசின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கவில்லை. தலையீடு இன்றித் தன் சொந்த அலுவல்களைக் கொண்டு நடத்த அதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. பொது மக்களிடம், கத்தோலிக்க சபைக்கிருந்த பெரும் செல்வாக்கு, கத்தோலிக்கத் திருச்சபைக் கட்சி எனக் குறிப்பிடப்படும், திருச்சபையின் நலன்களில் ஈடுபாடுடைய, அரசியற் சங்கமாகப் பரிணமித்தது. 1871 இரீச்சிதாக்கில் திருச்சபைக்கட்சி உறுப்பினர் ஐம்பத்தெண்மர் இருந்தனர். மூன்றுண்டுகளின் பின்னர் இவர்களின் தொகை நூறு ஆகக் கூடிற்று. திருச்சபைக்கட்சி பிசுமாக்கின் பூட்கையை இணக்கத்துக்குச் சிறிதும் இடமில் கத்தோலிக்கத் திருச்சபைக் கட்சி.

[1] Barker, "The Submerged Nationalities of Germany", 23.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1871 லாத அளவிற்கு வெறுத்தது. ஆகையால், பாராளுமன்றில் கடுமையான எதிர்ப்பு அரசாங்கத்துக்கு எற்பட்டு அரசாங்கத்தின் அமைதியைக் குலைத்தது. சேர்மானிய அம்சங்கள் எல்லாவற்றையும் எல்லாச் சேர்மானியரையும் சேர்மானியப் பேரரசில் இணைப்பதற்கு விரும்பிய பெரிய சேர்மனியின் கட்சியான குரொசிடியுசென் என்பதையும் திருச்சபைக்கட்சி தன்னுள் ளடக்கியது. இதனுள் தமது உறவினரினின்றும் முற்றுகப் பிரிக்கப்பட்டவரும் ஒசுற்றியாவிலிருந்தவருமான எண்பது இலட்சம் சேர்மானியர் அடங்குவர். சேர்மனியை ஆட்சி செய்யும் கத்தோலிக்க அரச குடும்பத்தினரைத் தவிர்த்து புரட்டெசுத் தாந்த அரச குடும்பத்தினருக்கு ஆட்சியுரிமையை அளிப்பதைக் கத்தோலிக்கர் விரும்பவேயில்லை. பேரரசில் கத்தோலிக்கர் சிறு பான்மையினராயிருந்தனர். ஆதலால் தங்களைத் தாமே பாது காக்க வேண்டும் எனும் ஊக்கம் அவர்களிடமிருந்தது. அவ்வூக்கமானது அவர்களுக்கு உறுதியான அரசியல் ஒழுங் கின் இன்றியமையாமையை உணர்த்திற்று. போப்பாண்டவ ருக்குப் பழையபடி உலகியல் அதிகாரம் அளிப்பதும் குருத்து வக் கட்சியின் பூட்கையில் ஒரு அம்சமாக இருந்தது. இது பிசு மாக்கு இத்தாலிய இராச்சியத்துடன் தாபித்த நட்புத் தொடர் புகளுக்கு இடையூறுயிற்று. நாட்டினத்தை அல்லது அரச வமிசத்தை எதிர்க்கும் கட்சிகளுடன் திருச்சபைக் கட்சியானது நட்புறவு பூண்டது. போலந்துமொழி ஆரம்ப பள்ளிக்கூடங் களில் கற்பிக்கப்பட வேண்டுமெனப் போசன் கத்தோலிக்கர் (பிரசிய போலந்து) உரிமைக் கோரிக்கை செய்தனர். இக் கோரிக்கைக்குத் திருச்சபைக் கட்சி ஆதரவளித்தது. இக்கட்சி யானது "உரிமையாளரின்" அரசன் வெளியேற்றப்பட்டமை யையும் ஓகென்சொலேன் அரசுரிமை கைப்பற்றப்பட்டமையை யும் எதிர்த்த அனைவரைச் சேர்ந்த கெல்பிக்கு விழுமியோரை ஆதரித்தது. ஆகவே, பேரரசின் நலன்களுக்குப் பகையான பூட்கையையுடைய இக்கட்சியைக் குலைக்கப் பிசுமாக்கு உறுதி பூண்டான்.

பண்பாட்டுப் போராட்டம். உரோமன் கத்தோலிக்கக் கட்சியை அழித்தற்கு, அதன் வளர்ச்சிக்கு ஆதாரமாயிருந்த பதவணியைத் தாக்குதல் இன்றி யமையாததாகும். உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையை அரசை முற்றுக அண்டிப் பிழைக்கச் செய்யின் அதன் அரசியல் அதிகாரம் தானுகவே ஒழிந்து போகும். இச்சூழ்நிலையில் திருச் சபைக்கும் அரசிற்குமிடையே ஒரு போராட்டம் நடந்தேதீரும். இப்போரின் போக்குத் தற்செயலாக விளைந்த தொன்றுக இருக்கக் கூடுமே யொழியப் பூட்கையின் விளைவாகாது. 1870 இல் வற்றிக்கன் கழகத்தின் ஆஞ்ஞையான போப்பாண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் தவருரெனுஞ் சித்தாந்தமானது சேர்மானியக் கத்தோலிக் 1870-75
கரிடையே போரிற்குக் காரணமாயிற்று. பல கத்தோலிக்கப் பேராசிரியரும் ஆசிரியரும் இக்கோட்பாட்டை எதிர்த்தனர். இவர்கள் பல்கலைக் கழகங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் இதனைக் கற்பிக்கவும் மறுத்தனர். இந்த இணங்காதோர் "பழைய கத்தோலிக்கர்" என அழைக்கப்பட்டனர். இவர்களுக்கும் உரோமப் பதவணிக்குமிடையே விரைவிற் பிணக்கு ஏற்பட்டது. இப்பிணக்கு மேலும் வளர்ந்தமையால் அரசாங்கம் இதைப் பார்த்துக்கொண்டு வாளாவிருப்பது முடியாததாயிற்று. பண்பாட்டிற்காக நடந்த போராட்டம் பண்பாட்டுப் போராட்டம் என அழைக்கப்பட்டது. இப்பண்பாட்டுப் போராட்டம் இங்ஙனம் குருத்துவத்திற் கெதிராகத் தொடங்கியதாகும். தம்மை எதிர்ப்பவர்களை அடிபணியச் செய்வதற்காக உரோமன் கத்தோலிக்க விசுப்பாண்டவர் அவர்களைப் பல்கலைக்கழகத்தின் இறையியற் றுறைகளினின்றும், தமது கட்டுப்பாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களினின்றும் அகற்றினர். பழைய கத்தோலிக்கரை மதவிலக்கஞ் செய்தும் அவர்களுடைய திருமணச் சடங்குகளைச் செய்ய மறுத்தும் அவர்களைத் தண்டித்தனர். இந்நடவடிக்கைகள் அரசின் மேன்மையை எதிர்ப்பதாகும் எனப் பிசுமாக்கு கருதினான். போராட்டத்தின் சிறு பிரச்சினைகள் மறைந்து திருச்சபைக்கும் அரசாங்கத்துக்கு மிடையே பெரும் போராட்டமுண்டாயிற்று. பிசுமாக்கு உரோமுடன் இணக்கஞ் செய்வதில் தோல்வி கண்டான். அச்சமயம் மண்டிலநாயகன் கூறிய புகழ்பெற்ற வார்த்தைகளே இவை. "உள்ளத்தாலும் நாம் கனைசாவிற்குப் போக ஒப்பமாட்டோம்."[1] வற்றிக்கனுடன் அவனுக்கிருந்த சூழியற்றொடர்புகளை அவன் துண்டித்தான். பொது மக்களைப் பாடசாலைப் பரிசோதகராக நியமனஞ் செய்து கல்விப் பெறுப்பைத் திருச்சபையினிடமிருந்து பிடுங்கிக்கொண்டான். பேரரசு முழுவதிலும் மதத்தொடர்பற்ற திருமணத்தைக் கட்டாயப்படுத்தினான் (1874). அதே வேளையில் புகழ் பெற்ற "மே சட்டங்களை" (1873–75) அவன் நிறைவேற்றினான். இச்சட்டங்கள் குருத்துவத்தின் அதிகாரத்தைக் குறைத்து உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினை அரசிற்குக் கீழ்ப்படுத்தும் நோக்கத்துடன் ஆக்கப் பெற்றவையாகும். பகிரங்க மதவிலக்கலால், கத்தோலிக்கக் குருமார் மக்களைப் பலவந்தப்படுத்துவதை இச் சட்டம் தடுத்தது. சமய குருமாராவதற்கு விரும்பும் அபேட்சகர்கள் அரசாங்கம் நடாத்தும் பொது அறிவுச் சோதனையில்

---

[1] 1077 இல் நான்காம் என்றிப் பேரரசன் ஆறும் போப்பு ஐதெகரிக்குக் கீழ்ப்படிந்தமையைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1872–78 சித்தியடைய வேண்டுமெனவும் சேர்மானியப் பல்கலைக்கழக மொன்றில் மூன்றுண்டுகள் வரை இறையியலைக் கற்க வேண்டுமெனவும் கட்டாயப்படுத்திற்று. திருச்சபையின் கல்விச்சாலைகள் அரசின் மேற்பார்வையில் விடுத்தது; திருச்சபை செய்யும் நியமனங்கள் எல்லாம் கட்டாயமாக அரசினருக்கு அறிவிக்கப் படவேண்டும் எனக் கட்டளை பிறப்பித்தது. 1872 ஆம் ஆண்டு அளவிலேயே, யேசுதர், பேரரசினின்றும் விலக்கப்பட்டனர். 1875 இல் மதச்சபைகள் எல்லாம் குலைக்கப்பட்டன.

பண்பாட்டுப் போராட்டத்தின் முடிவு.

இப்பொழுது அரசாங்கத்திற்கும் கத்தோலிக்க பதவணிக்கு மிடையில் பகிரங்கமான போர் நடந்தது. "மே சட்டங்கள்" முழுவதையும் ஒன்பதாம் போப்பு பயசு நிந்தனை செய்தார். பிரசியாவிலிருந்த பத்தாயிரம் உரோமன் கத்தோலிக்கக் குருமாரில் முப்பது பேரே பணிந்தனர். எண்ணூறு கிறித்துவ மாவட்டங்களில் சமய வழிபாடுகள் நடாத்தப்படவேயில்லை. தன் நடவடிக்கைகளுக்குப் பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுத்துத் தனக்கு ஆதரவளித்த நாட்டினத் தாராளர்களுடன் இவ்வாண்டுகளில் பிசுமாக்கு நட்புப் பூண்டான். ஆனால் அவன் கட்டில்லா வியாபாரத்தைக் கைவிட்டான். ஆதலால் மண்டிலநாயகனுக்கும் அவனுடைய முன்னைநாள் நட்பினருக்கும் பிளவேற்பட்டது. பழைமைபேண் கட்சியுடன் பிசுமாக்கு நெருங்கிய தொடர்பு கொள்ளத் தொடங்கினன். கத்தோலிக்கருடன் நட்புக்கொள்வதன் அவசியத்தை உணர்ந்த பிசுமாக்கு, அவர்க்கெதிரான சட்டங்களை ஒவ்வொன்றுகக் கைவிடலாயினன். இவ்வாறே, கத்தோலிக்கரது அதிகாரங்களைப் பறிக்கப் பிசுமாக்கு எடுத்த முயற்சிகள் வீணாயின.

சமூகக் குடியாட்சி.

தான் பெரு முயற்சி செய்து ஆக்கிய அமைப்பின் அத்திவாரத்தையே அழிப்பதாய வஞ்சனை மிகுந்த புதியவோர் எதிரியோடு போராடுவதற்குப் பிசுமாக்கு தன் சத்தி முழுவதையும் திரட்டுவதற்காகவே உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையுடன் நடாத்திய போராட்டத்தை இடையிற் கைவிட்டான். பிரசிய அரசறிஞனை இவன் இராணுவ முடியரசொன்றின் அத்திவாரத்தைத் திறமையாகத் தாபித்துக் கொண்டிருந்த ஆண்டுகளிலேயே பெரும் முக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் புரட்சிச் சத்தியொன்று தோன்றியது. சேர்மானியத் தொழிலாளருக்குக் கோட்பாடொன்றை வகுத்துக் கொடுத்த காள்மாக்குசு என்பானும் அவர்களுக்கு நிறுவகம் ஒன்றை (அகில சேர்மானியத் தொழிலாளர் சங்கம்) அமைத்துக் கொடுத்த பேடினந்து இலசால் என்பானுமே சமூகக் குடியாட்சிக்கு அடிகோலியவராவர். இவ்வியக்கத்தின் முன்னேற்றமானது அதற்குச் சேர்மானிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடையிருந்த செல்வாக்கைக் காட்டிற்று. 1877 இல் சமூகக் குடியாட்சிக் கட்சிக்கு ஏறக்குறைய ஐம்பது இலட்சம் ஆதர வாளர் இருந்தனர். இக்கட்சியினுடைய பலத்தைப் பற்றிக் கிடைத்த திகைக்கச் செய்யும் இவ்விவரம் தவிர்க்க முடியாத நெருக்கடியை விரைவுபடுத்தியது. சமூகவுடைமைவாதிகளுடைய பொருளாதார இலட்சியங்களைத் தவிர அவர்களுடைய நிகழ்ச்சித் திட்டமானது, பிசுமாக்கு தன் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டவற்றை–பாராளுமன்றத்தின் அதிகாரம் மிக மிஞ் சிப் போவதைத் தடுக்க முடியரசுத் தாபனங்களை வலுப் படுத்தல், இராணுவ அடிப்படையிற் சேர்மானியப் பேரரசைத் தாபித்தல்—அழிக்கும் நோக்கத்தையும் கொண்டிருந்தது. பிசுமாக்கிற்குப் பின்னர் பதவியேற்றேருள் ஒருவனை புலோ இளவரசன் பின் ஒருகால் எழுதியதுபோல் சேர்மானியப் பேரரசில் பிரசிய அரசு முதன்மையானது. சமூகக் குடி யாட்சிக் கட்சியானது பிரசியாவிற்கு நேரெதிர்மாறுனது. முடி யரசு, இராணுவம் ஆகியவற்றுடன் சார்புள்ள சேர்மனியைப் பற்றிய தாயகப்பற்று நினைவுடையோருடன் இக்கட்சிக்கு ஒரு தொடர்பும் இல்லை.[1] இதற்கிணங்க, பிசுமாக்கு 1878 இல் வன்மையான அடக்கு முறைப் பூட்கையைக் கைக்கொண்டான். அத்துடன் சமூகக் குடியாட்சிவாதிகளை முற்றுக அழிக்கும் நோக்கமுடைய திட்டத்தை இரீச்சிதாக்கில் நிறைவேற்றினுன். சமூ கவுடைமைத் தத்துவங்களைப் பிரசாரஞ் செய்யவெழுந்த சங் கங்கள், கூட்டங்கள், பிரசுரங்கள் யாவற்றையும் இத்திட்டம் தடுத்தது. அத்துடன் ஐயத்திற்குரிய எவனையும் நாட்டினின்று கடத்துவதற்குப் பொலிசாருக்கு அதிகாரம் அளித்தது. இச் சட்டமியங்கிய பன்னிரு ஆண்டுகளில் 1,400 பிரசுரங்கள் தடைசெய்யப்பட்டன; 900 பேர் நாடு கடத்தப்பட்டனர்; 1,500 பேர் சிறைத்தண்டனை பெற்றனர். தொழிலாளர் வகுப்பினரு டைய அரசியற் பிறப்புரிமையைப் பறித்த இந்நடவடிக்கை களினுல் சமூகவுடைமைவாதம் பரவுவதைத் தடுக்க முடிய வில்லை. இக்கட்சி 1890 இல் 15 இலட்சம் வாக்குகளைப் பெற்றது. மேலும் 1914-18 ஆம் ஆண்டுப் போர் தொடங்கும்போது தேசகத்தில்—மூன்றிலொரு பங்கினர்-40 இலட்சம் சேர்மானிய சமூகவுடைமைவாதிகளிருந்தனர். எனினும் சேர்மானிய அமைச் சர் பாராளுமன்றிற்குப் பொறுப்பற்றேராதலால் இவர்களுடைய அரசியற் செல்வாக்கு அற்பமானதே. 1878-90

அரசுச்சமூகவுடைமைவாதம்.

சமூகவுடைமை இயக்கத்தை முற்றுக அழிப்பதற்குப் பிசுமாக்கு பலவந்தத்தை நம்புவதுடன்மட்டும் திருத்தியடைய

[1] "Imperial Germany", pp. 188, 190.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1872–89 வில்லை. கைத்தொழிலாளருக்கு ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிகளே சமூகக் குடியாட்சிக் கட்சியின் பலமென அவன் விரைவில் உணர்ந்தான். அந்நெருக்கடிகளை நிவிர்த்தி செய்யத் தக்க சட்டமியற்றும் பூட்கையால் இவ்வகுப்பினருடைய சமூக வுடைமைப் பற்றை மாற்ற முயற்சித்தான். எனவே சூழ்நிலை களின் விளைவாகப் பிசுமாக்கு அரசுச் சமூகவுடைமை முறை மையில் ஈடுபட்டான். தற்போக்குக் கொள்கை மரபுகள் எதிர்த்த போதும், இச்சமூகப் பரிசோதனைகளைச் செய்த இவனது திறமை இவனுடைய, ஓர்மத்திற்கும் ஆற்றலுக்கும் ஓர் எடுத்துக்காட்டா கும். சமூகத்தைக் காப்பதே அரசின் ஒரேயொரு கடமை என்னுங் கொள்கை போய் அரசின் கடமை அதைவிட விரிந்தது என்ற பரந்த நோக்கு எனக் கொள்ளப்பட்டது. 1872 வரையில் சேர்மானியப் பொருளியலறிஞர் சிலர்–இவர்கள் புலமைப் பீடச் சமூகவுடைமைவாதிகள் எனக் குறிப்பிடப்பட்டவர்கள்; பிரசித்திபெற்ற பொருளாதார வரலாற்றுசிரியனை சிமொலர் இவர்களில் ஒருவனுவான்–சமூக அரசியலுக்கான சங்கமொன் றைத் தாபித்தனர். பொருளாதார அலுவல்களில் அரசு தலை யிடுவதை இவர்கள் இச்சங்கத்தில் ஆதரித்துப் பேசினர். பொது மக்களிடையே ஒருவகையான அபிப்பிராயத்தை உண்டு பண்ண வும், மாஞ்செத்தர் கொள்கையினின்றும் விலகுவதன்மூலம் ஒரு காலவவதியைத் தொடக்குதற்கான வழிவகை வகுக்கவும் இவர்கள் உதவினர். இரிச்சட்டு கொபுடனுக்கு மோளிப் பிரபு அளித்த பெருமையைச் சமூகவுடைமைவாதி என்ற முறையில் பிசுமாக்குக்கு அளித்தல் குற்றமாகாது. "தங்களுக்கு நேரப் போவனவற்றைச் சரிவர அறிந்து கொள்ள முடியாத சமுதாயங் களைப் பொருளாதாரச் சத்திகளும் சமூகச் சத்திகளும் தாக்கு கின்றன. காலப் போக்கில் நிகழவிருப்பனவற்றை முன்னறிந்து மக்கள் அறியாது அவர்களைச் சூழ்ந்து ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நிறுவகங்களை அமைப்பவரும் மக்களின் கருத்தையும் நோக்கத்தையும் உருப்படுத்துபவருமே அறிவுடை அரசறிஞரா வர்.[1]" தொழிலாளி வகுப்பினருடைய நிலையைத் திருத்தவும் சமூகக் கொடுமைகளை அகற்றவும் மக்களுடைய-சிறப்பாக வலி யற்றோருடைய – நலனை அபிவிருத்தி செய்யவும் தக்க பரி காரம் மேற்கொள்வது அரசின் கடமை என்று 1881 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி நிகழ்ந்த சிம்மாசனப் பிரசங்கத்தில் மறக்கமுடியாத வகையில் பிரகடனஞ் செய்யப் பட்டது. இங்கே விளக்கிய கோட்பாட்டைத் தொடர்ந்து, பிணி (1883) விபத்து (1884) வயோதிகம், ஏலாமை (1889) ஆகிய வற்றின்பொழுது தொழிலாளருக்கு உதவக்கூடிய ஈட்டுறுதிக்

1 Morley, "The Life of Richard Cobden", ad fin.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான சட்டங்களைச் சேர்மானிய அரசாங்கம் இயற்றிற்று. 1914 இல் இச்சட்டங்கள் இருகோடி மக்களைப் பாதித்தன. மற்றைய நாடுகளும் இச்சட்டங்களின் அடிப்படைத் தத்துவங்களைக் கைக் கொண்டன. ஆனால், மக்களுடைய அதிருத்தியைக் குறைத்துச் சமூகக் குடியாட்சிக் கட்சியை அழிக்கும் நோக்கத்துடன் அவற் றைப் பிசுமாக்கு கையாண்டான். அதில் அவை குறிப்பிடத்தக்க வெற்றியடைந்ததாகச் சொல்ல முடியாது. சமூகக் குடியாட்சி யின் செல்வாக்கு, பன்மடங்கு அதிகமாக வளர்ந்தது. சேர் மானியப் பேரரசின் எதிர்கால அரசியல் மாற்றம் அதன் இறுதி வெற்றியில் தங்கியுள்ளதெனக் கருதப்பட்டது. 1871-79.

கட்டில்லா வியாபாரத் திலுல் ஏற்பட்ட பிற்போக்கு.

பிசுமாக்கினுடைய பொருளாதாரப் பூட்கையின் விளைவுகளும் முக்கியத்துவம் வாய்ந்தனவேயாகும். சேர்மனி கட்டில்லா வர்த்த கத் தத்துவங்களினின்று மாறியமை ஐரோப்பாவின் பிற்கால அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமான நிகழ்ச்சியாயிற்று. பிரான் சியப் பிரசியப் போர் நிகழ்ந்த காலத்தில், ஐரோப்பா முழு வதும் பொது வணிகமுறைமையினுல் ஐக்கியப்படும்போற் காணப்பட்டது. கட்டில்லாது பண்டமாற்றுச் செய்யப்படும் பண் டங்கள் பண்டைப் புவியியலிற் காணப்பட்ட ஒசியானசு எனும் பெருங்கடல் போன்று உலகத்தில் எங்கெங்கு மக்கள் வாழ்ந் தனரோ, அங்கெல்லாம் பரவின.[1] இங்கிலாந்தில் வெற்றி பெற்ற கட்டில்லா வர்த்தக இயக்கத்தைக் கண்ட அரசுகளிற் பல அதை விரைவிற் பின்பற்றின. 1870 இற்கும் 80 இற்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் சேர்மனி கட்டில்லா வர்த்தக நாடா யிற்று. படைக்கலப் போரினும் பார்க்க இறைமுறைப் போர் கொடிதெனப் பிசுமாக்குக் கருதினன். 1862 ஆம் ஆண்டு வர்த் தகப் பொருத்தனையில் விதிக்கப்பட்ட வர்த்தகத் தொடர்புகளைப் பிரான்சு மீண்டும் மேற்கொள்ள வேண்டுமென அவன் பிரான்சு டன் நடாத்திய அமைதிபற்றிய இணக்கப் பேச்சுக்களில் தெளி வாக வற்புறுத்தினன். எனினும், எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவன் முன்னர் கொண்டிருந்த கருத்துக்களை மாற்றி, வாரியத் திற்குரிய பெரும் மாற்றங்களை ஏற்படுத்தினன். பிறநாட்டுத் தானியம், பிறநாட்டுப் பண்டங்கள் ஆகியவற்றிற்கு 1879 இல் வரி விதித்தான். தொடக்கத்தில் சொற்பமாயிருந்த தானிய வரி பின்னர் கூட்டப்பட்டது. இதனுல் விவசாயம் நன்மை யடைந் தது. எனினும் அது தொழிலாளி வகுப்பினரை அதிருத்திப் படுத்திச் சமூகக் குடியாட்சியை வளர்ச்சியடையச் செய்தது.

பிற்போக்கிற் குக் காரணங்கள்.

பிசுமாக்கு தன்னுடைய கட்டில்லா வர்த்தகத் தத்துவங்களைக் கைவிட்டதற்கான நோக்கங்களுக்குக் காரணமறிதல் கடினம்.

[1] Morley, op. cit. (ed. 1910), 808.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1871–90. சேர்மானியப் பேரரசிற்கு வேறுக நிதியிருக்கவில்லை. கூட்டாட்சி அரசுகள் அளித்த தொகையிலேயே பெரிதும் தங்கியிருந்தது. பேரரசு அரசாங்கத்திற்குத் தனிப்பட்ட வருவாயை அளித்துக் கூட்டாட்சி அரசுகளிடத்தில் இருந்து பணம் பெறும் நிர்ப்பந் தத்திலிருந்து அதை விடுவித்தலே சுங்கவரிச் சீர்திருத்தத்தின் ஒரு நோக்கமாகும். 1874–1879 ஆம் ஆண்டுகளில் சேர்மனி யைத் தாக்கிய பொருளாதார நெருக்கடியின் விளைவாக உண் ணூட்டுக் கைத்தொழிற் பாதுகாப்பிற்கான கோரிக்கை பலம் பெற்றது. பிரான்சினிடமிருந்து வலிந்து பெறப்பட்ட போர்த் தெறு பொருளினால் வியாபாரமும் ஆக்கமும் மேலதிகமாயின. அன்றியும் பண வீக்கத்தினால் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. எப்படியாயினும் பரந்த அடிப்படை யில் நோக்குமிடத்து சேர்மனியின் கட்டில்லா வியாபாரத்தி னின்றும் எழுந்த பிற்போக்கானது சேர்மானிய மக்களிடை அப்பொழுது ஆதிக்கம் பெற்றிருந்த நாட்டினத்தைப் பற்றிய குறுகிய கருத்தின் தவிர்க்க முடியாத விளைவாகும். மசினி நாட்டினத்தைப் பற்றிய உண்மையான கருத்தை முறைப்படுத் திக் கூறியுள்ளான். அதாவது கொள்கையளவில், தொழிற் சாலையில் எங்ஙனம் தொழிற்பிரிவு இன்றியமையாததாகின் றதோ அதேபோல மனிதனுக்கு நாட்டினமிருக்க வேண்டும்– இது ஐக்கியத்தின் சின்னமாகும். மேலும் புவியியல் நிலைமை, மரபுகள், மொழி ஆகியவை காரணமாக ஐரோப்பிய நாகரி கத்தில் சிறப்பான கடமையொன்றை ஆற்றுமாறு வேண்டப் பட்ட மக்கள் குழுவொன்றின் தனித்தன்மை வற்புறுத்தப்படு தலுமாகும். நாட்டினங்களிடையே எற்படும் விரோதமானது, வாழ்க்கை நியதியும் வரலாற்று அபிவிருத்தியுமாகும் எனும் கொள்கையே இக்கருத்தின் முரண்கோளாகும்.[1] வலிமையைக் கொண்டு முன்னேற்றத்தை அளவிடுவதும் பிற அரசுகளின் முன்னேற்றத்தைப் பொறுமையுடன் எதிர்ப்பதுமான நாட் டினப் பூட்கையே வணிகவியல். இது நாட்டினம் பற்றிச் சேர் மானியர் கொண்டிருந்த கருத்தின் விளைவாகும். ஆனால் கார ணம் எதுவாயிருந்தபோதும், ஐரோப்பிய நாடுகளுக்கிடையே யிருந்த பிரிவைப் பெரிதாக்கி ஐரோப்பிய நாகரிகத்தை விருத்தி செய்வதில் நாட்டினங்கள் ஒத்துழையாது தடுத்தமையே சுதந் திரமான வணிகத்தைக் கைவிட்டமையால் ஏற்பட்ட விளைவாகும்.

ஐரோப்பாவில் பிரான்சிய பிரசியப் போரின் விளைவு.

நெப்போலியனுடைய பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் சருவ தேச நிலைமை முற்றிலும் மாறிற்று. ஐரோப்பாவில் பிரான்சிய ஆதிக்கம் போய் சேர்மானிய ஆதிக்கம் ஏற்பட்டது.[2] பாரிசு

[1] Bulow, "Imperial Germany", 240.
[2] Rose, "The Development of the European Nations", 153.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரே ஐரோப்பாவின் முக்கிய நகராயிருந்த காலம்போய் இப் பொழுது பேளின் முக்கிய நகராயது. பிசுமாக்கின் தலைமையில் சேர்மானியப் பேரரசானது கண்டத்தில் அரசியல் ஆதிக்கம் பெற்றிருக்கிறது. இது படைப்பலத்தின் ஆரவாரத்தினுல் ஏற் பட்ட விளைவன்று. சூழியற் பண்புகளைத் தந்திரமாகப் பயன் படுத்தியமையினுல் ஏற்பட்ட விளைவாகும். இத்தந்திரத்தில் பிசு மாக்கு ஈடிணையற்றவனுயிருந்தான். 1890 இல் அவன் வீழ்ச்சியடைந்ததும் சேர்மானியப் பிறநாட்டுப் பூட்கை புதிய வழியிற் சென்றது. இரண்டாம் உவிலியமும் அவனுடைய ஆயுரையாளரும் துணிகரமானதும் ஆபத்து நிரம்பியதுமான வெல்பொலிற்றிக்கு எனும் கொள்கையைக் கைக்கொண்டனர். பின்னர் ஏற்பட்ட வளர்ச்சிகளை நோக்கும்பொழுதே பிசுமாக்கி னுடைய பூட்கையின் சூழ்ச்சித்திறனும் நெடிது காணுற்றலும் வியக்கத்தக்கனவாயுள்ளன. 1871-90.

பிரான்சியப் பிரசியப் போரின் பின்னர் கசந்த நினைவுகள் நிலவின. செடானில் அடைந்த தோல்வியையும் இழந்த அல்சேசு உலொரேனை மீண்டும் அடைய முடியாதென்பதையும் பிரான்சிய மக்கள் ஏற்க மறுத்தனர். அவர்களுடைய எதிர்கால நம்பிக்கைகள் யாவும் பழிக்குப் பழிவாங்குதல் எனும் கருத் துடைய "இரிவாஞ்சு" எனும் சொல்லினுல் உணர்த்தப்பட்டன. ஆகவே சேர்மானிய வரலாற்றுசிரியன் ஒருவன் குறிப்பிட்டதுபோல் "தொடக்கத்திலிருந்தே சேர்மானியப் பேரரசுக்குப் பிரான்சு தாங்கமுடியாத ஒரு பாரமாகவே இருந்தது. சேர்மனியின் பிறநாட்டு எதிரி எவனும் பிரான்சிய ஆதரவை நிபந்தனை யின்றிப் பெறலாம்." பிரான்சைப் பொறுத்த வரையிற் பிசு மாக்கு கொண்டிருந்த போக்கு பாரிசிலிருந்த சேர்மானியத் தூதமைச்சனுக்கு எழுதப்பட்ட கடிதமொன்றில் கூறப்பட்டது. "பிரான்சு எம்மை நிம்மதியாக விருக்க விடுவதையே நாம் வேண்டுகின்றேம்". அண்மையில் உருவாய குடியரசின்பால் அவன் விரோத எண்ணங்களுடையனு யிருக்கவில்லை. பிரான்சி யரின் கருத்தைக் குரோதப் போரினின்றும், வோசுப் பிளவினி ன்றும் திருப்புவதற்கு அவர்களைக் குடியேற்ற முயற்சிகளில் ஊக்கினுன். ஆனல் இரு நாடுகளுக்குமேற்பட்ட பிளவு நீக்க முடியாத தென்பதை அவன் உணராமலில்லை. 1870 இல் அடைந்த தோல்விகளினின்றும் பிரான்சு விரைந்து முன்னேறிய மையும், அதன் இராணுவவமைப்பு விரைவாகச் சீராக்கப்பட்ட மையும், மொற்கு பகிரங்கமாகச் செய்த எச்சரிக்கைக்கு, அதிக முக்கியத்துவம் அளித்தன. "கடந்த போரில் நாம் மதிப் பைப் பெற்றேம். ஆனல் அன்பைப் பெறவில்லை. படைப்பலத்

1870 இன் பின்னர் பிசுமாக் கினுடைய பிறநாட்டுப் பூட்கையின் நோக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1871-90.

தால் ஆறு மாதங்களில் பெற்றவற்றைப் படைப்பலங்கொண்டு ஐம்பது ஆண்டுகளுக்குப் பாதுகாக்க வேண்டியிருக்கும்" என் பதே அவ்வெச்சரிக்கையாகும். இச்சூழ்நிலையில் ஐரோப்பாவில் பிரான்சைத் தனியனுக்கப் பிசுமாக்கு தன் ஆற்றல் யாவற்றை யும் பிரயோகித்தான். "பிரான்சு நட்பரசொன்றை அடையாது தடுக்க வேண்டும்; பிரான்சிற்கு நட்புறவாளர் இல்லாதவரை யில் அதனல் சேர்மனிக்கு ஆபத்தில்லை" என எழுதினன்.

ஒசுற்றியா வுடன் பிசுமாக்கிற் கிருந்த தொடர்புகள்.

இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியமையினலேயே சேர்மானிய மண்டிலநாயகனகிய பிசுமாக்கு, தன்னுடைய திறமையான அரசறிவை வெளிப்படுத்தினன். இப்பொழுது (1871—1890) சேர்மனி மன நிறைவுடனிருந்தது. பெருமளவில் படை வெற்றிகளையும் ஆள்புலங்களையும் ஈட்டியபொழுது சேர் மனி தான் அடைந்த வெற்றிவாகையுடன் திருத்தியடைந்தது. தாக்கும் பூட்கையின் நோக்கம் நிறைவேறியபடியால் அதைக் கைவிட்டுவிட்டு கொனிக்கிராத்து, சீடன் ஆகிய இடங்களில் அடைந்த பெரு வெற்றிகளால் ஐரோப்பாவில் எழுந்த திகிலைப் போக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த பிசுமாக்கு இது முதற்கொண்டு பேரரசை எதிர்த்தாக்கல்களினின்றும் காப்பதை யன்றி வேறெந்த நோக்கமுமுடையனுயிருக்கவில்லை. பிரான்சியப் பிரசியப் போர் நடந்து கொண்டிருக்கையில் தான் வெற்றியடை யும் தறுவாயில் அவ்வெற்றியை அபகரிப்பதற்கு இறுதித் தருணத்தில் ஐரோப்பிய கூட்டினைப் பொன்று தலையிடுமென்று பிசுமாக்கு பயந்து கொண்டிருந்தான். நன்றியுணர்ச்சி இத் தாலியரைப் பிரான்சிய மக்களொடு இணக்கியதை அவன் நன் குணர்ந்திருந்தான். சேர்மானிய நாட்டுக்கூட்டினைப்பிலிருந்து தன்னை விலக்கியதற்காக ஒசுற்றியா பழிக்குப் பழிவாங்கக் காத் திருந்தது. இரசிய நட்பே இந்த நெருக்கடியான தருணத்தில் சேர்மனியை ஒசுற்றியத் தலையீட்டினின்று காத்தது. இது தானும் தன் எல்லையில் திடீரென ஒரு பெரும் இராணுவ வல்லரசு உருவாவதைக் கண்டு பதறவாரம்பித்தது. அவ்வேளை யில் சூழ்நிலை பிரசியாவிற்குச் சாதகமாயிருந்தமையால் பிரான் சியரிடம் அது தான் எண்ணியவாறு நடக்க முடிந்தது. ஆனல் சேர்மனிக் கெதிராக ஒரு கூட்டினைப்பு உண்டாகலாமெனும் அபாயம் இன்னும் இருந்தது. பேரரசின் எதிரிகளாகக் கூடிய வர்களை நம்பகமான நண்பர்களாக்கி, பேரரசினைத் தகர்க்க முடி யாத நிலையை அடையச் செய்ய பிசுமாக்கு முயன்றன். அவன் தனது சாமர்த்தியமான உபாயங்களினல் தன் நோக்கத்தை அடைந்தான். ஒசுற்றியாவுடன் அவன் நடாத்திய பேச்சுக்க ளில், தான் முன்னர் ஒசுற்றியாவை முறியடித்த தருணத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிய அரச தந்திரத்தின் பயனை அடைந்தான். சேர்மனியில் முன்னிருந்த தனது ஆதிக்க நிலையை மீண்டும் பெறும் எண்ணத்தை ஆபிசுபேக்கு முடியாட்சி கைவிட்டது. அது விரைவில் ஒரு கிழக்கு வல்லரசாக மாறி, போல்கன் தீபகற்பமே தனது அவாக்களை நிறைவேற்றுதற்கு ஏற்ற இடமெனக் கண்டது. கிழக்குத் திசை நோக்கிச் செல்வதில் சிலாவு இனத்தினரை எதிர்ப்பதற்குச் சேர்மனியின் ஆதரவு அதற்குத் தேவையாயிற்று. ஏனெனில் இரசியா தன் செல்வாக்குக்குட்பட்ட பகுதியெனக் குறிக்கப்பட்ட வட்டாரத்திற்குள் ஒசுற்றியா தலையிடுவதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிராதாதலாலென்க. 1872.

இரசியாவுடன் ஒரு நல்ல உறவைப் பிசுமாக்கு ஆரம்பத்தில் உண்டாக்கியிருந்தான். பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்தே பிரசியாவும் இரசியாவும் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்தன. பேரரசனை முதலாம் உவிலியத்திற்கும் அவனுடைய மருகனை இரண்டாம் அலச்சாந்தருக்கும் இடையேயிருந்த நட்பு அரசியல் இணக்கத்திற்கு ஏதுவாயிற்று. வேறு காரியங்களில் அவர்களுடைய அக்கறைகள் வேறுபட்டுக் காணப்பட்டபோதும் ஒன்றைப் பொறுத்தவரையில் அவர்களுடைய அக்கறைகள் ஒத்திருந்தமையே நிலையான நட்புறவை உறுதிப்படுத்தியது. பாரிசுச் சமிதி வாயிலாக வெளிப்பட்ட புரட்சித் தன்மையான அமைதியின்மை, சேர்மானிய சமூகக் குடியாட்சிவாதம், இ சிய சூனியவாதம் ஆகியவை முடியாட்சி நாடுகளின் தனி வல்லாட்சி அமைப்பினுக்குப் பாதகமானவை என்னும் கருத்தைப் பிசுமாக்கு இரசியாவிற்கும் ஒசுற்றியாவிற்கும் விளக்குவது சுலபமானதாயிருந்தது. மீண்டும் ஒரு பரிசுத்த நட்புறவை உருவாக்குதற்கு அவன் பழைமை பேண் வல்லரசுகளைப் பயன்படுத்தினன். 1872 இல் பேரரசர் மூவரும் பேளினில் சந்தித்து ஓர் அரசியல் உடன்படிக்கைக்குச் சம்மதித்தனர். எனினும் இவ்வுடன்படிக்கை எழுத்தில் காணப்படவில்லை. "பேரரசர் மூவருடைய கூட்டவை" என இவ்வுடன்படிக்கை பொதுவாகக் குறிப்பிடப்பட்டதெனினும் இப்பெயர் தவறான கருத்துக்களை எழுப்பும் தன்மையுடையதாகும். உண்மையில் ஒரு பொருத்தனையும் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் அண்மையில் வகுக்கப்பட்ட எல்லைகளைப் பேணிக் காப்பாற்றுதல், கிழக்குப் பிரச்சினையால் எழுந்த சிக்கல்களைத் தீர்த்தல், ஐரோப்பாவில் புரட்சிவாத இயக்கங்களை நசுக்கி அடக்குதல் ஆகிய முயற்சியில் மூவரும் கூடிச் செயல்புரியச் சம்மதித்தனர். "சென் பீற்றசுபேக்கை இணைத்த பழைய பாலத்தைத் தகர்க்காது வீயன்னுவை இணைக்கும் பாலமொன்றை அமைத்தேன்", இரசியாவுடன் அவனுக்கிருந்த தொடர்புகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1872-79. என்னும் சேர்மானியப் பிரதமருடைய கூற்று உண்மையான தாகும். அடுத்த ஆண்டில் அரசனை விற்றர் இம்மானுவேல் பேளினிற்கு விசயம் செய்தமை இத்தாலியின் நட்பான போக்கிற்கு ஒரு அடையாளமாகும். பிரான்சைத் தனிமையாக்கும் சூழ்ச்சி நிறைவேற்றப்பட்டது.

ஒசுற்றிய-சேர்மானிய நட்புறவு (1879). 1875 இல் கிழக்குப் பிரச்சினை மீண்டும் எழும்பியதால் இந் நிலைமையில் புதிய அம்சமொன்று புகுத்தப்பட்டது. சிறிய நாட்டினங்களைக் கொண்ட போல்கன் தீபகற்பத்தையிட்டு, இரசியாவும் பிரசியாவும் போட்டியிடுவதைச் சேர்மானியப் பிரதமர் எதிர்த்துக் கூறியுள்ளார். ஆனால் எசேகோவினுவில் ஏற்பட்ட எழுச்சியினால் நலன்களைப் பற்றிய பழைய முரண்பாடுகள் யாவும் மீண்டும் தோன்றின. 1878 இல் கூடிய பேளின் பொதுமன்றத்தில் ஒசுற்றியாவுடன் சேர்மனி ஒத்துழைத்தது. பொசினியாவை ஒசுற்றியா ஆட்சி செய்வது ஒப்புக்கொள்ளப்பட்டது. 1870 இல், குறிப்பிடத்தக்க சேவைகள் இரசியாவிடமிருந்து பெற்ற வல்லரசின் நன்றியற்ற செயலைக் கண்டு இரசியா பெருங் கோபமடைந்தது. மூன்று பேரரசர்களுக்குமிடையே நிலவிய நட்புறவு சிதறுண்டது. பிசுமாக்கு ஒசுற்றியாவிற்கு ஆதரவளிப்பதினின்று பின்வாங்க வேண்டும், அல்லது இரசிய நட்பை இழக்கவேண்டும் என இரசிய அரசாங்கம் நிர்ப்பந்தஞ் செய்தது. இதன் விளைவு வல்லரசுகள் மீண்டும் ஒன்று சேர்க்கப்பட்டமையாகும். இரசிய அரசறிஞர் பிரான்சினைடு இணக்கப் பேச்சுக்களாரம்பித்தனர். பிசுமாக்கு ஒசுற்றிய பேரரசுடன் முறையான நட்புறவு செய்து கொண்டான் (1870). ஒசுற்றிய-சேர்மானியப் பொருத்தனையின் நியதிகள் 1887 வரையும் வெளிப்படுத்தப்படவில்லை. இப்பொருத்தனைப்படி சேர்மனி, ஒசுற்றியா ஆகிய இரு நாடுகளுள் ஒன்றினை இரசியா தாக்கினால் மற்றநாடு தனது சத்தி முழுவதையும் கொண்டு உதவுவதாக விருந்தது. ஆனால் வேறெந்த வல்லரசாயினும் தாக்கின், தாக்கும் அந்த நாட்டிற்கு இரசியா உதவினாலன்றி நட்புறவு நாடு நடுநிலைமை வகிப்பதென்றுயிற்று. இந்த வகையில் பிசுமாக்கு பிரசியாவின் பண்டைய வெளிநாட்டுப் பூட்கையை நேர்மாறுக மாற்றி இரசிய நட்பினுக்குப் பதில் ஓர் ஒசுற்றிய சேர்மானிய நட்புறவை ஏற்படுத்தினன். ஒசுற்றியாவுடன் இனத் தொடர்பால் பிணிக்கப்பட்ட நாட்டினருக்கு அவனுடைய பூட்கை உகந்ததாயிருந்தது. அன்றியும் தம்மவர்க்கெதிராய் சிலாவினத்தவருடன் ஒற்றுமைப்படுவதைத் தம்மியல்பிற்கு ஒவ்வாததெனச் சேர்மானியர் கருதியுமிருப்பர்.

ஒசுற்றிய சேர்மானிய நட்புறவில் இத்தாலியும் இணைய அது மூவர் நட்புறவாயிற்று. சேர்மானிய இணைப்பில் தென் இராச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியத்தைச் சேர்த்து, அதனால் மத்திய ஐரோப்பாவின் ஊடாகப் பிளவை ஏற்படுத்தி இருகோடியிலுமுள்ள அரசுகள் செயன் முறையில் ஐக்கியப்பட முடியாத தடையை ஏற்படுத்தியமை பிசுமாக்கின் ஓர் அரும் பெரும் செயலாகும். இத்தாலிய அரசுகளுக்கும் தியூதொனிக்கு வல்லரசுகளுக்குமிடையே யாதொரு பொது அம்சமுமில்லை. ஆதலால் இவ்வெற்றி குறிப்பிடத்தக்கதாகும். இத்தியூதொனிக்கு வல்லரசுகளுள் ஒன்று முழு இத்தாலிய இனமும் ஐக்கியப்படுவதற்குத் தடையாக நின்றது. ஒசுற்றியக் கொடுமையின் நினைவுகள் இத்தாலிய மக்கள் மனதிலே பசுமையாகவேயிருந்தன. ஒசுற்றியாபால் ஏற்பட்ட பகைமை இரடென்டிசுக் கிளர்ச்சியினால் அதிகரித்தது. தைரோலையும் இத்தாலிய மொழி பேசப்படும் ஏனைய மாகாணங்களையும் மீட்பதற்காக ஏற்பட்ட இத்தாலிய இரடென்டிசு எனும் இயக்கம் ஆபிசுபேக்கு முடியரசை அகற்றுவதனாலேயே தன் நோக்கத்தை அடையலாம். இக்காரணங்களினால் மூவருடன்படிக்கை நிரந்தரத் தன்மையற்றதாயிற்று. ஓர் பிரபல இத்தாலிய சரித்திராசிரியர் குறிப்பிட்டாற்போல் "இவ்வுடன்பாடு ஏற்கப்பட்டதேயன்றி விரும்பப்படவில்லை." அன்றியும் இது ஒரு ஐரோப்பியப் போரினால் ஏற்படும் இடர்களைத் தாங்கும் வலிமையுடையதுமன்று. பிசுமாக்கு இத்தாலியுடன் சந்துபாடு செய்வதற்கு எத்துணை முயற்சித்தாலும் அதில் வெற்றி காண்பதில் அவனுக்கே ஐயமிருந்தது. 'நாம் இத்தாலிக்குக் கொடுக்கக் கூடிய சலுகைகள் இல்லாமையால் அது நம்முடன் இணையும் என்ற நம்பிக்கை ஏற்படுவதை விட நம் எதிரிகளுடன் சேரலாம் என்ற பயமேற்படவே ஆதாரம் உண்டு" என்று 1880 இல் பிசுமாக்கு எழுதினன். எனினும் ஈராண்டுகளுக்குப் பின்னர் (1882 மே மாதத்தில்) இத்தாலி ஐந்தாண்டுகளுக்கான மூவர் நட்புறவிற் சேர்ந்தது. இவ்வுடன்படிக்கை காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்பட்டது. இத்தாலி மத்திய வல்லரசுகளுடன் கூடியதற்கு இரு காரணங்களுண்டு. முதலாவதாக உரோமைக் கைப்பற்றியதால் வத்திக்கனுக்கும் குருமாரிற்குமிடையே பகை மூண்டது. இப்பகை இத்தாலிய முடியாட்சியின் உறுதிக்குப் பங்கமேற்படுத்தியது. போப்பாட்சி தன் உலகியலதிகாரத்தை இழந்தமையை ஏற்றுக்கொள்ள மனமொருப்படவில்லை. மூன்றாங் குடியரசில் குருத்துவம் மீண்டும் தலையெடுத்தமையால், பிரான்சிய இராணுவ பலத்தால் உரோமில் போப்பாண்டவர் ஆட்சி மீண்டும் நிறுவப்படக்கூடும் என்ற பயம் நிலவியது. பிரான்சில் குருத்துவக் கட்சி வலிமை இழக்கவே இப்பயம் படிப்படியாக நீங்கியது. ஆனால் சகோதர இனத்தின் நாடுகளைப் பிரித்து வைக்க ஊழ்வினை சூழ்ச்சி

1882 மூவர் நட்புறவு உருவாக்கப் பட்டமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1882–90

செய்தது. பத்தாண்டுகளுக்கு (1860–70) உரோமில் பிரான்சியப் படைகள் இருந்தமையால் எங்ஙனம் இத்தாலியின் ஐக்கியம் தடைப்பட்டதோ அதேபோன்று வட ஆபிரிக்காவில் பிரான்சியர் தியூனிசைக் கைப்பற்றியதால் இத்தாலிய ஆதிக்கம் விரிவடைவதும் 1881 இல் தடுக்கப்பட்டது. பிரான்சிய சூழியல் வல்லுநர் தன்னை முந்திக்கொண்டமையாலும் தன் குடியேற்றப் பேரவாக்களில் ஏமாற்றமடைந்தமையாலும் இத்தாலி சேர்மனியிடம் தஞ்சமடைந்தது. இத்தாலி பிரான்சுக்கெதிராக வளர்த்து வந்த வெறுப்பு, வரிப்போரினால் அதிகரித்தது. நூற்றுண்டின் இறுதிக் காலத்தில் இந்நிலைமை சீராகிற்று. "இரு இலத்தீன் நாடுகளுக்குமிடையே வேற்றுமை இருக்க முடியாதென" உரோமிலிருந்த பிரான்சியத் தூதுவன் 1902 இல் பிரகடனஞ் செய்த பொழுது இரு நாடுகளினது உணர்ச்சிகளையும் வெளியிட்டான்.

பிசுமாக்கும் இரசியாவும்.

ஒசுற்றியாவுடன் நெருங்கிய தொடர்பிருப்பினும் பிசுமாக்கு இரசியாவுடன் கொண்ட நட்பைப் பேண முயன்றான். அவன் கையில் மூவர் நட்புறவு பிறவல்லரசுகளின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்கு இடந்தராத, எதிர்க்கும் கருவியாக அமையவில்லை. ஐரோப்பிய அரசியலிலே தன் பழைமை பேணும் போக்கைத் தளராது கடைப்பிடித்தான். பிரான்சினையும் இரசியாவையுஞ் சேரவிடாது பிரித்துவைத்தலே அவனுடைய பூட்கையின் அடிப்படையாகும். தில்சிற்றுப் பொருத்தனைப்படி நெப்போலியனும் முதலாம் அலச்சாந்தரும் உலகை ஆட்சி செய்ய ஒன்று சேர்ந்தனர். இப்பொருத்தனை நீடிக்கவில்லை. ஆனால் மெற்றெணிக்கு முதல் பிசுமாக்கு வரை இருந்த சேர்மானிய அரசறிஞர் எல்லோருடைய மனத்திலும் இவ்வுடன்பாடு மேலுந் திடமான வகையில் மீண்டும் அமையக்கூடும் எனும் அச்சம் இருந்தது. சேர்மனியின் எதிர்காலத்தைப் பிசுமாக்கு நிர்ணயித்தவரை, மேற்குக் குடியரசுக்கும் கிழக்குப் பேரரசுக்கும் இடையே இணக்க மேற்படுவதைத் தடைசெய்யக்கூடியதாயிருந்தது. 1884 இல் மூன்று பேரரசரும் சிகேணிவிசில் மீண்டும் ஒரு முறை சந்தித்தனர். இங்கே அவர்கள் தமது பழைய உடன்பாட்டைப் புதுப்பித்து, தம்முள் எவரேனும் பிறிதொரு நாட்டுடன் போர்தொடுத்தால் மற்றைய இருவரும் நேசபான்மையான நடுநிலைமையைப்பேண வேண்டும் என்று ஒப்புக்கொண்டனர். இவ்வுடன்படிக்கை மூன்று ஆண்டுகளில் அற்றுப்போனாலும் சேர்மனிக்கும் இரசியாவுக்குமிடையே இரகசியமானதொரு காப்பிணைப்பாகப் புதுப்பிக்கப்பட்டது.

இருமைக் கூட்டுறவு.

1890 இல் பிசுமாக்கு அடைந்த வீழ்ச்சி ஐரோப்பிய நிலைமையை மாற்றியது. இருபதாண்டுகளாக முதிய அரசறிஞனால் தனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையானதாக்கி வைக்கப்பட்டிருந்த பிரான்சு அந்நிலையிலிருந்து 1870-87
மீட்கப்பட்டதே அவன் வீழ்ச்சியின் உடன் விளைவாகும். காப் பிணைப்பு 1880 இல் முடிவுற 1888 இலே சேர்மனியின் அரசனை இரண்டாம் உவிலியம் அதைப் புதுப்பிக்க மறுத் தான். அச்செயல் பிசுமாக்கிய அரசவுபாயத்தின் ஒரு முக்கிய தத்துவத்தைப் புறக்கணித்ததாகும். ஆகவே இருமைக் கூட்டுறவு ஆக்கப்பட்டமையே அதன் நேரடியான விளைவாகும். 1870 ஆம் போரின் பின்னர் நிகழ்ச்சிகள், பிரான்சு இரசியாவொடு கூட்டுறவை நிலைநாட்டுவதற்கு ஏற்றனவாயமைந்தன. பூபோன் அரசர்களின் அமைச்சர்களான இரிசிலூவும் பொலிக்குஞக்கும் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இதை ஆதரித்தனர். ஆயினும் 1830 இலும், 1863 இலும் எழுந்த போலந்துக் கலாங் களிலில் இரசியாவுடன் இணக்கஞ் செய்தல் பிரான்சிய மக்களு டைய இயல்புக்கு விரோதமான செயலாகக் கருதப்பட்டது. மீற முடியாச் சூழ்நிலை வசத்திலேயே படிப்படியாகக் கிழக்குத் தனிவல்லாட்சியும் மேற்கு மக்களாட்சியும் ஒன்று கூடின. அல்சேசு உலொரேனை இழந்தமையாற் பிரான்சு சேர்மனியின் இணங்கமுடியாத எதிரியாயிற்று. மேலும் நாட்டுக்கு உற்ற அவமானமென்னும் வசையை அழிப்பதென்னுங் கருத்து மற்றைய கருத்துக்கள் யாவற்றிலும் மேலோங்கிற்று. இரசி யாவுடன் இணங்கிஞற் பிரான்சு தன் அபாயகரமான தனிமை நிலையினின்றும் அகல்வது மல்லாமல் அயலாரின் எச்சரிக்கை யில்லாத் தாக்குதலினின்று திடமான பாதுகாப்பாயும் அமை யுமென்பதையும் உணர்ந்தது. இரசியாவோ தன் சார்பில் பிரான்சொடு இணங்குவதை விரும்பக் காரணங்களிருந்தன. சேர்மானியப் பேரரசு வலுப்பெற்றமை இரசிய பெருமைக்குப் பேரிடியாயிற்று. ஏனெனில் சேர்மனியின் மறுக்கமுடியாத இராணுவ பலத்திலில் அது இதுமுதற்கொண்டு ஐரோப்பாவில் முதன்மையான அரசாயிற்று. "எமக்குப் பலம் பொருந்திய பிரான்சே தேவை" என்பது இரசிய பூட்கையின் குறிக்கோ ளாயிற்று. மேற்கு முனையிற் போரைத் தடுப்பதற்காக 1875 இல் இரசியாவும் இங்கிலாந்தும் தலையிட்டன. எனினும் எப்பொ ழுதும் போல அப்பொழுதும் கிழக்குப் பிரச்சினையே நிகழ்ச் சிகளின் போக்கை நிர்ணயித்தது. போல்கனில் எழுந்த இரசிய ஒசுற்றியப் போட்டியால் பிசுமாக்கு தன் சாதுரியத்தைக் காட்டவேண்டியதாயிற்று. ஆபிசுபேக்கு அரசிற்கு அவன் ஆதர வளித்தமையே பேளின், பெற்ரோகிராத்து ஆகிய இடங்களி லிருந்த மந்திரங்களுக்கிடையே பிளவு ஏற்பட்ட முதற் சந்தர்ப் பமாகும். அப்பொழுதிருந்து இரசியாவிற்கும் பிரான்சிற்கு மிடையே இணக்கம் ஏற்படுவது இன்றே நாளையோவென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1888-98

விருந்தது. "இதுமுதற்கொண்டு இரசியா இரைனில் நிகழ்வதைக் கவனிக்கும். இதனைக் கிழக்குப் பிரச்சினையைவிட முக்கியமானதாகக் கருதும். மீண்டுமொரு பிரான்சிய சேர்மானியப் போர் மூண்டால் முன்போல் நேசமனப்பான்மையான நடுநிலையை அத்தருணத்திலும் பேணுவதை இரசியாவின் நலன்கள் தடுக்கும்" என 1887 இல் வெளிப்படையாகக் கூறப்பட்டது. பிசுமாக்கின் சிறந்த அரசறிவும் மூன்றும் அலச்சாந்தருக்குப் பிரான்சிய குடியாட்சியில் இருந்த நம்பிக்கையீனமும் இரசிய பிரான்சிய நட்பைச் சிலவாண்டுகளுக்குத் தடுத்தன. ஆனல் சூழ்நிலைகள் இவ்வினைக்கம் இறுதியாகப் பூர்த்தியாவதைத் துரிதப்படுத்தின. 1888 இல் பிரான்சிய நிதியாளர் இரசிய அரசாங்கத்திற்கு உதவிசெய்தனர். ஆறு ஆண்டுகளுக்குள் இரசியா 16 கோடி பவுண்களைப் பாரிசில் கடனுகப் பெற்றது. 1890 இல் பிசுமாக்கு வீழ்ச்சியடைய அவனுக்குப் பின்னர் பதவியேற்றோர் பூட்கையைப் புதிய வகையில் மாற்றியமைத்தனர். இதற்கு அடுத்த ஆண்டிலே பிரான்சியக் கப்பற்படை குரொன்சிடாட்டுக்குச் சென்றபோது அப்படையைச் சார் உத்தியோக பூர்வமாக வரவேற்றன். 1893 இல் தூலோனுக்கு ஒரு இரசிய போர்க் கப்பற்கூட்டம் விசயஞ் செய்தபொழுது சாரும் குடிப்பதியும் தந்தி மூலம் உபசார வாழ்த்துக்கள் பரிமாறிக்கொண்டனர். சாரின் தந்தியில் "இரு நாடுகளையும் ஒன்றுக இணைக்கும் பிணைப்புகள்" பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் எதாகிலும் தெளிவான உடன்படிக்கை உருவானதோவெனச் சொல்ல முடியவில்லை. எனினும் இப்பொழுது பிரான்சிய இரசிய இணக்கம் உருவாகியது. தம் வாழ்நாள் முழுவதும் மேற்கத்திய நிறுவனங்கள்பால் அழியா வெறுப்புக்கொண்ட மூன்றும் அலச்சாந்தர் இறந்தபின் இரு நாடுகளினதும் தொடர்புகள் திடமான முறையில் அமைந்தன. 1895 ஆம் ஆண்டில் இருபுடை நட்புறவு முறைப்படி தொடங்கப்பட்டது.

"படைக் கலம் பூண்ட அமைதி".

1898 இல் ஏக்கு நகரத்தில் இரசியாவின் பேரரசர் சமாதான மாநாடு கூட்டும் பொருட்டு விடுத்த அறிக்கையில் அடங்கிய வாசகங்களினுலே 19 ஆம் நூற்றுண்டின் இறுதியிலிருந்த சருவதேசநிலையை நன்கு விளக்கலாம். சமாதானத்தைக் காப்பதே சருவதேசப் பூட்கையின் நோக்கமெனக் கூறப்பட்டுள்ளது. அதைக்கொண்டு பெரும் அரசுகள் தம்மிடையே திடமான நட்புறவுகளைச் செய்து கொண்டன. சமாதானத்தைச் சிறப்பாக உறுதிப்படுத்துவதற்காக அப்பேரரசுகள் இதுவரையும் கண்டறியப்படாதவளவிற்குத் தமது இராணுவ பலத்தை அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருந்தன. தம் படைப் பலத்தை மேலும் மிகுவிப்பதற்கு எவ்வித தியாகத்தைச் செய்யவும் தயங்கவில்லை. சமாதானத்தினின்றும் எதிர்பார்க்கப்பட்ட நல் விளைவுகளை இம்முயற்சிகள் எவையும் இன்னும் அளிக்கவில்லை. வல்லரசுகளின் ஆயுதபலம் எவ்வளவுக்குக் கூடுகின்றதோ அந்தளவுக்கு மேலும் மேலும் அரசாங்கங்கள் தாம் குறிக்கோளாகக் கொண்ட கருத்துக்களை நிறைவேற்ற இயலாது நின்றன. பெரும்படை திரட்டு முறையினால் பெரும்பாலும் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளும் யுத்த தளவாடங்களைச் சேகரிப்பதனால் நிரந்தரமாகவுள்ள அபாயமும் இப்படைக்கோலம் பூண்ட அமைதியை, மக்களால் தாங்க முடியாத, மேலும் மேலும் நசுக்கும் ஓர் சுமையாக மாற்றின. ஆகையினால் இந்நிலைமை நீடித்தால் அகற்ற விரும்பும் பேரழிவு நிச்சயமாக வந்துறும் என்பதும், அறிவுள்ள எவரும் நினைத்தாலே அச்சமுறும் பேரபாயங்களும் நிகழும் என்பதும் வெளிப்படை.[1] தமேகிளிச்சுவின் தலை மேல் தொங்கிய வாள்போல் ஐரோப்பிய மக்களை இவ்வழிவு அரை நூற்றாண்டாக அச்சுறுத்தியது. எல்லா நாடுகளையும் அமுக்கிய மிதமிஞ்சிய ஆயுதச் சுமையைக் குறைக்கும் பொருட்டு எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் வீண்போயின. 1899 இலும் 1907 இலும் கூடிய ஏக்கு மாநாடுகள் பயனுள்ளவற்றைச் சாதித்திருப்பினும் அவை எந்நோக்கத்திற்காகக் கூட்டப்பட்டனவோ அதை நிறைவேற்றவில்லை. தற்போதைய ஆயுத பலத்தின் துரிதமான அபிவிருத்தியைக் கட்டுப்படுத்த எதுவுஞ் செய்யப்படவில்லை. ஐரோப்பிய நாடுகள் வெளியேறவோ தப்பவோ முடியாத ஓர் பயங்கரச் சுழியின் கண்ணே சிக்கிக்கொண்டன. ஒவ்வோர் அரசும் தன் சமாதான அவாவைப் பறைசாற்றினாலும் போருக்கான ஆயத்தங்களை மேற்கொண்டது. அன்றியும் தம் பாதுகாப்புச் செயலுக்கு நியாயமாகத் தம் அயலவர் பகையானவகையில் மேற்கொண்ட ஆயத்தங்களைக் காரணமாகக் கொண்டனர். இராணுவ பலத்தால் ஏற்பட்ட அமைதியை இறுதியாகக் குலைத்து முதலாம் போரைத் (1914–1918) தொடக்கிய சிக்கலான நிகழ்ச்சிகளை இங்கு விரிவாகக் கூறமுடியாது. கிழக்குப் பிரச்சினையும் சேர்மானியப் பேரரசின் உலகாளும் கொள்கையுமே முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்ச்சிகளை விளக்குவதற்குப் பயன்படும்.

1898–1914

1914 ஆம் ஆண்டுப் போர் வரையும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள்.

I. பேளின் மாநாட்டின் பின்னர் (1878) முப்பதாண்டுகளாகக் கிழக்குப் பிரச்சினை எழாதிருந்தது. இரசியாவின் ஆற்றல் யாவும் தூர கிழக்கில் செலவாகியது. ஒசுற்றியா தனக்குப்

1. கீழைத் தேசப் பிரச்சினை.

[1] Holls, "The Peace Conference at the Hague," 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1908 பொசினியாவில் வாய்த்த ஆதிக்கத்தைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தது. இளம் போல்கன் அரசுகள் தம் நாட்டின வளர்ச்சியின் பொழுது தற்செயலாக எழுந்த உண்ணுட்டுச் சிக்கல்களைத் தீர்த்தற்குப் படிப்படியாகக் கற்றுக்கொண்டிருந்தன. இக்காலம் முழுவதுந் துருக்கியின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு இரண்டாவது அத்துல் அமீது (1876–1909) என்பவனின் கையிலேயே இருந்தது. அறிவுக் கூர்மையுள்ள இவன் தனது சூழியலால் ஐரோப்பிய வல்லரசுகளிடையே நிலவிய எரிச்சல்களை மேலுங் கிளறி அவையாவும் ஒன்று கூடித் தாக்கலாமெனும் அபாயத்தினின்றும் துருக்கியைக் காப்பாற்றினன். ஒற்றுமேமன் அரசின் உருப்படா ஆட்சி முறைகள் எப்படி வெகுகாலமாக பிரசித்தமாயிருந்தனவோ அவ்வாறே அதன் நலிவு ஐரோப்பிய அரசில் நன்கு தெரிந்த விடயமாயிற்று. 19 ஆம் நூற்றுண்டிலே மூன்று சந்தர்ப்பங்களில் துருக்கிய பேரரசு குலையும் தறுவாயிலிருந்தது.[1] ஒவ்வொரு முறையும் துருக்கி தப்பிக் கொண்டது. ஆனல் ஆள்புலத்தில் ஒரு பகுதியை இழந்தது. ஐரோப்பாவில் அதற்கிருந்த ஆட்சிப் பகுதிகள் படிப்படியாகக் குறைந்தன. நூற்றுண்டின் தொடக்கத்தில் இருந்தது போல் இறுதியிலும் துருக்கி வலியற்றதாகக் காணப்பட்டது. கூர்ந்து கவனித்தோருக்கு நாடு சீர்குலைவதற்கான அறிகுறிகள் செயற்படுவது தெரிந்தது. இந்நிலையைச் சீராக்குதற்கு மேலுட்டுக் கருத்துடைய துருக்கிய சீர்திருத்தக்காரர்கள் அடங்கிய கட்சி உருவாயிற்று. இளந் துருக்கியர் என அழைக்கப்பட்ட இக் கட்சி யாப்பிற்கும் நாட்டினத்திற்கும் சார்புடைய திட்டங்களை உடைத்தாயிருந்தது. வலுவற்றிருந்த துருக்கிய அரசிற்குப் புத்துயிர் கொடுத்து ஒற்றுமேமன் பேரரசின் முழுமையைக் காத்தலே இக்கட்சியின் நோக்கமாகும். இராணுவத்தில் இரகசியமாகப் பிரசாரஞ் செய்தனர். தன் வல்லாண்மையை ஆதரித்த ஒரே ஒரு சாதனத்தை இழந்தமையைச் சுலுத்தான் சடுதியில் உணர்ந்தான். 1908 யூலை 29 இல் கொன்சுதாந்திநோப்பிளிற் குருதி சிந்தப்படாத புரட்சி ஒன்று நிகழ்ந்தது. தன் பதவியைக் காக்கும் பொருட்டு அத்துல் அமீது 1876 இல் உறுதிப்படுத்தப்பட்டு, பின்னர் ஒதுக்கப்பெற்ற யாப்பை மீண்டும் நிலைக்கச் செய்தான். நரக தண்டத்திற்குள்ளான அத்துலின் கொடிய மரபுகளை விலக்கி யாப்புறு அரசுகளின் தரத்தைத் துருக்கி அடைந்துள்ளது என மேற்கு ஐரோப்பா கொண்டிருந்த எண்ணத்தைப் புதிய ஆட்சி விரைவில் தவிடுபொடியாக்கிற்று. யாப்பியற் சோதனை படுதோல்வியடைந்தது. "ஆரம்பத்திலிருந்தே யாப்பியல் அரசாங்கத்தின் அடிப்படைத் தத்துவங்களைத்தானும்

[1] 1829, 1856, 1878.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகிப்பதற்கு உண்மையான முயற்சியேதும் எடுக்கப்பட 1908.
வில்லை. ஐக்கியம், முன்னேற்றம் ஆகியவற்றிற்கான குழுவில் அடங்கிய இளந் துருக்கியர், அத்துல் அமீதின் வல்லாட்சியைத் தொடர்ந்து நடத்தினர். அப்படியாயினும் அவர்கள் பொறுப்பற்றவர்களாதலாலும் சாமர்த்தியமற்றவர்களாதலாலும் அத்துல் அமீதைவிடப் பன்மடங்கு கொடியவர்களாவர்" என்பது அக்காலத்து நிகழ்ச்சிகளை நேரிற் கண்ட ஒருவனுடைய கூற்றாகும்.[1] மிகத் தீவிரமான நாட்டினவாதப் பூட்கையை—அதாவது கிழக்கு ஐரோப்பாவின் அழிவிற்கான பூட்கையை—துருக்கியர் பின்பற்றியதே இத்தீங்கின் மூலகாரணம். "மனிதத் தன்மையை ஊட்டுவதாலன்றி, ஒற்றுமை மயமாக்குவதாலேயே பேரரசிற்குப் புனர்வாழ்வு அளிக்கப்படவிருந்தது."[2] துருக்கியப் புரட்சியானது ஒற்றுமை அரசிற்குட்பட்ட நாட்டினங்களின் எதிர்காலத்தைப் பாதித்ததுமன்றி ஐரோப்பாவில் முக்கியத்துவ முடையதெனவும் அதிவிரைவில் கருதப்பட்டது. கிழக்குப் பிரச்சினையானது ஒரு தீவிரமான புதிய நிலையை யடைந்தது. பிறகு நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் போக்கே 1914—1918 ஆம் ஆண்டுப் போரிற்கு நேரடியான காரணமாயிற்று.

பொசினியா எசேகோவினுவை வலிந்திணைத்தமை.

இளந் துருக்கியப் புரட்சியின் முதல் விளைவு 1908 ஆம் ஆண்டு ஒற்றுமைப் 7 இல் பொசினியா, எசேகோவினுவை வலிந்திணைத்தமையாகும். முப்பதாண்டுகளுக்கு மேலாக ஒசுற்றிய—அங்கேரி இவ்விரண்டு மாகாணங்களையும் ஆட்சி செய்தது போர் ஏற்படினன்றி வேறெந்த வகையிலும் ஒசுற்றிய—அங்கேரி விட்டுக்கொடாதென்பது எவருக்கும் புலனாகியிருக்கவேண்டும். அவைகளின் ஆக்கச் சார்பான பூட்கையினால் நல்லபிவிருத்திகள் ஏற்பட்டன என்பதை மறுக்க முடியாது. ஒசுற்றியா தெருக்கள், இருப்புப்பாதைகள், பொதுக் கூட்டங்கள் முதலானவற்றை ஆக்கியமைத்தது. கிழக்கில் செயற்றிறன் உள்ள அரசறிஞர் விரும்ப வேண்டியது அமைதியும் நல்லாட்சியுமேயன்றி நாட்டினக் கோட்பாட்டில் தம் கவனத்தை முற்றுகச் செலுத்துவதல்ல என்ற கருத்துடையவர்கள் ஒசுற்றிய அரசாங்கத்தின் சார்பிற் பலமாக வாதிக்கலாம். இறுமை முடியாட்சி, பொசினியாவில் ஒற்றுமை மன் பேரரசுரிமையைச் சட்டமுறைப்படி மறுக்காது தன் உண்மை ஆதிக்கத்தொடு திருத்தியடைந்திருக்கக்கூடும். ஆனால் துருக்கியின் புத்தூக்கமும், பேரரசிலுள்ள எல்லா இனங்கள் மேலும் தமது ஆதிக்கத்தைச் செலுத்தத் தீர்மானித்திருந்த இளந் துருக்கியரின் நாட்டினவுணர்ச்சியும், ஒசுற்றியாவை அதற்குப்

[1] H. A. Gibbons, "The New Map of Europe" (1914), 174–5.

[2] Forbes, Toynbee, Mitrany, Hogarth, "The Balkans" (1915), 366.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1908 போல்கனிலுள்ள உடைமைகளின் காப்புப்பற்றி அச்சமடையச் செய்தன. பொசினியாவின் நிலையை மாற்றியமைத்த ஒசுற்றியாவின் செயல், தாக்குந் தன்மையுடையதாகக் காணப்பட்டது. அச்செயல் மேலும் சருவதேசச் சட்டத்திற்கு மாறுனதாயும் சேபிய மக்களுக்கு நேரான அறைகூவலாயும் இருந்தது. தன் குடைக்கீழ் சேபிய மக்கள் எல்லோரையும் காக்கும் காலத்தைச் சேபியா எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. அதன் கடற்படர்ச்சிக்குச் சேபிய மாகாணங்கள் இன்றியமையாதவை எனும் காரணத்தால் அவற்றை உடைமையாகக் கொள்ளச் சேபியா விரும்பிற்று. ஒசுற்றிய—அங்கேரிய நடவடிக்கையானது ஒரு பெருஞ் சேபிய அரசை நிலைநாட்டும் எண்ணத்தை மண்ணுக்கியது. அன்றியும் சேபிய மக்களின் சினம் கட்டுக் கடங்காததாயிற்று. இங்ஙனம் எழுந்த நெருக்கடியில், இரசியாவும் எதிர்க்கும்படி சேபியருக்கு ஊக்கமூட்டியதனால் போர் மூள்வதுபோற்றோன்றிற்று. ஈற்றில் சேர்மானியப் பேரரசன் வெளிப்படையாக ஒசுற்றியாவின் சார்பில் இராணுவத்தைக் கொண்டு தலையிட்டான். பெற்றோகிராத்தில் சேர்மனி நெருக்கியதனால் இரசியா பின்வாங்க வேண்டியதாயிற்று. இவ்வாறு சேபியா தனித்தமையினால் அது தவிர்க்க முடியாத நிலைமைக்குத் தலை சாய்க்க வேண்டியதாயிற்று. அத்துடன் ஒசுற்றிய ஆணைக்குப் பணிந்தமையால் முறைப்படியான ஓர் பிரகடனமும் செய்ய வேண்டியதாயிற்று. பொசினியாவில் ஏற்பட்ட நிலைமையினால் தனது உரிமை பாதிக்கப்படவில்லை யெனவும், பொசினியாவை ஒசுற்றியா தன் ஆட்சிக்குட்படுத்தியதைக் கடந்த ஒற்றோபர் முதல் மறுத்தும் எதிர்த்தும் வந்ததை நிறுத்தி மேலும் ஒசுற்றிய—அங்கேரியின்பால் கொண்ட தற்போதைய கொள்கையை மாற்றி வருங்காலத்தில் நட்புடனும் அயலவருடன் இணக்கத்துடனும் வாழ்வதெனவும் சேபியா பிரகடனஞ் செய்தது. இதோடு நெருக்கடி ஒழிந்தது. அப்போதைக்கு இரசியா, சிலவோனிக்குக் கட்சியை ஆதரிப்பதைத் தவிர்த்தமையாலும் சேபியா அடைந்த அவமானத்தாலும், ஐரோப்பிய போரினால் ஏற்படும் அபாயம் தவிர்க்கப்பட்டது. ஆனால் மத்திய வல்லரசுகளின் கடும் நடவடிக்கை வருங்காலத்தில் நிகழப்போகும் தீங்கிற்கு ஒரு அறிகுறியாயிற்று.

"துருக்கியர் மாறுவ தில்லை".

பொசினியாவையும் எசேகோவினாவையும் இழந்த ஒற்றோமன் பேரரசிற்கு ஐரோப்பாவில் இன்னும் போதிய நிலப்பரப்பிருந்தது. அது மசிடோனியா, அல்பேனியா, திரேசு ஆகியவற்றையும் சேபியாவை மொன்றெநீகிரோவினின்றும் பிரித்த நோவிபாசாரின் சாண்டுசக்கையும் கொண்டதாகும். புதிய யாப்புறு ஆட்சியினால் பாலன முறைமையில் மாற்றமெதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படவில்லை. "துருக்கியன் மாறமாட்டான்; அயலார், எல்லை 1908
கள், சட்டத்தொகுப்பு ஆகியவை மாறினும் அவனுடைய கருத்துக்களும் நடைமுறையும் மாறு; பிறர்த லையீட்டை ஏற்க மாட்டான்; திருந்தவும் மாட்டான்" என்பதே நேரில் பார்த்த அரசறிஞர்தம் முடிபு. துருக்கிய யாப்புக்கள் பல இருந்தன. ஆனால் "எழுத்திலுள்ள சட்டங்களும் நிறுவகங்களும் தற்காலிகமானவையே; அவை துருக்கிய ஆட்சியின்[1] உண்மை நிலையை மறைப்பதற்கு ஒரு சில காலத்திற்கு உருமாறும் பொருட்டு அணியும் உடைகள் போன்றவை". துருக்கியின் ஆட்சிமுறைகளை முழு உலகமும் கண்டித்தும் துருக்கி நிலைத்து நின்றதன் காரணத்தைச் சேர் சார்ள்சு எலியற்றும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்.

ஐரோப்பாவில் துருக்கி நிலைத்தது ஏன்?

கிழக்குப் பிரச்சினையைப் பற்றிச் சிறிதாவது தெரிந்து கொள்வதற்கு, துருக்கி மற்றைய ஐரோப்பிய நாடுகள் போன்ற ஒன்றன்று என்பதை அறிந்துகொள்வது அவசியமாகும். துருக்கியில் இனங்கள் ஒன்று கலந்திருந்தன. அன்றியும் வெவ்வேறு வட்டாரங்களில் தனித்தனியாக அன்றி ஒரே வட்டாரத்தில் அவ்வினங்கள் வசித்தன. பத்து மைல் எல்லைக்குள் இருக்கும் மூன்று கிராமங்களுள் ஒன்றில் துருக்கியரும் மற்றொன்றில் கிரேக்கரும் மூன்றுவதில் சேபியரும் இருப்பர். ஒவ்வொன்றும் தன் மொழி, உடை, மதம் ஆகியவற்றை உடையனவாயிருக்கும். ஒரு பெரு நகரில் நல்ல சூழ்நிலையில் எட்டு வெவ்வேறு இனங்களையும் மொழிகளையும் — துருக்கியர், கிரேக்கர், யூதர், ஆமீனியர், பல்கேரியர், சேபியர், விலாச்சர், அல்பேனியர் — காணலாம்.

ஆராய்ச்சியாளரின் ஆராய்ச்சிக்குரிய இனக்கூட்டங்களாக வில்லாமல், கீழைத்தேச அரசியல் அனைத்துக்கும் காரணமான கோபதாபங்களையுடைய வாழும் மக்களாக உள்ள இவர்கள் என் தனித்தனியே தம் மொழி, வழமைகள், இலட்சியங்கள் ஆகியவற்றைப் பேணுகிறார்கள்? "துருக்கியர் அழிக்கும் குணமுடையவர் என்பதே பொதுவாக நிலவும் கருத்தாகும். இக் கருத்து பொருத்தமானதே. அவர்கள் பெருந்தொகையாக அழித்துள்ளனர். ஒன்றையும் ஆக்கவில்லை. எனினும் பிறிதொரு வகையில், அவர்கள் பழமை பேணும் சத்தியினராகக் காணப்பட்டனர். ஏனெனில் பைசந்தைன் பேரரசுக் காலத்தில் தென்கிழக்கு ஐரோப்பாவில் இருந்த விசித்திர இனக் கதம்பத்தைக் காட்சி மனையிற் போலக் காத்துப் பேணினர். கப்பம் பெறுவதும், ஒசுமானலியின் நிலையைப் பாதுகாப்பதுமே

[1] "Turkey in Europe," by 'Odysseus', (1900), 139.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1908. அவர்கள் அரசாங்கத்தைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தாகும். இது ஒரு முறை நன்கு மதிக்கப்படின் அவர்கள் தாம் ஆட்சி செய்யும் மக்களின் பழக்க வழக்கங்களிலே தலையிடாமல், தம் மதிப்புக்குத் தகுதியற்றவர்கள் என்ற வகையில் அவற்றைச் சகிப்பார்கள். ஐரோப்பாவிலே துருக்கியர் அடி வைத்ததற்கு ஐரோப்பியரிடையே நிலவிய ஒற்றுமையின்மையே இடங் கொடுத்தது. அவர்கள் எக்காலத்திலும் தம் ஆட்சிக்குட்பட்ட மக்கள் தொகையிலும் குறைந்தவர்களாயே இருந்தார்கள். ஆட்சிக்குட்பட்ட மக்கள் ஒன்றுபட்டிருப்பின் இவர்களுடைய ஆட்சி நிலைத்திருக்காது. பிரித்தாளும் தத்துவத்தைக் கசடறக் கற்று, தினமும் வியத்தகு சாதுரியத்தொடு கையாளுகின்றனர். ஆகையால் அவர்கள் என்றுமின்றும் தம்மாலியன்றவரை இனம், மொழி, மதம் ஆகிய பேதங்களை அழியவிடாமற்றடுக்கின்றனர்."[1]

மசிடோனியா. போல்கன் தீபகற்பத்தின் கொந்தளிப்பிற்கு மத்தியத் தானமாகிய மசிடோனியாவிலிருந்ததுபோல் வேறெங்கும் இத்தகைய இனக்குழப்பம் இருக்கவில்லை. பிரித்தாளுங் கொள்கையும் இவ்விடத்திற்போல் வெறெங்கும் சிறந்து வெற்றி பெறவில்லை. மசிடோனிய இனச்சிக்கல்கள் வெகு காலமாக ஐரோப்பிய சூழியல் வல்லுநருக்குப் பெரும் பிரச்சினையாயிருந்தது. சகல போல்கன் அரசுகளும் மசிடோனியத் தரைப்பரப்பின் உரிமையைக் கோரின. மேலும் அந்நாட்டின் இனம், மொழி ஆகியவற்றின் கலப்பு பகுக்கப்பட முடியாததாயிற்று. மசிடோனியா, பல்கேரியச் சார்புடைத்தோ சேபியச் சார்புடைத்தோ வென்று தீர்மானிக்க மனிதரியலோ, மொழியோ, வரலாறே பயன்படவில்லை. ஆனால் இவ்விரு நாடுகளும் மசிடோனிய இனங்களிடையே மொழி மதப் பிரசாரங்களைச் செய்தன.[2] துருக்கியர் சிறிதளவாயிருந்த நாட்டில், தம் ஆதிக்கத்தைக் காப்பதற்கு "போட்டே" இனவேற்றுமையை மேலும் வளர்த்தது. குற்சோவிலாக்கரை, தாங்கள் ஆதிகாலத்தில் இழந்த உறவினராகக் கருத உரூமேனியரை ஊக்கப்படுத்திற்று. விலாக்கர் நாடோடி இனத்தைச் சேர்ந்தவராவர். வரி சம்பந்தமான அலுவல்

[1] "Turkey in Europe," by 'Odysseus' (1900), 16–18.

[2] பிரசார இயக்கம் சோர்வடைந்ததும் அக்கறையுடைய மூன்று கட்சிகளுள் —பல்கேரியர், சேபியர் அல்லது கிரேக்கர்—ஒன்றின் கோபத்தை உண்டாக்கக் கூடிய முகவனொருவன் துருக்கிய அலுவலன் ஒருவன் மேல் குண்டை வீசக் கூடும். இதனால் பழிக்கஞ்சாத ஆனால் நிரபராதிகளான துருக்கரால் நிரபராதிகளான சிறித்துவர் வதைக்கப்பட்டு ஐரோப்பியப் பத்திரிகைகளில் இச்செயல் கண்டிக்கப்படும். **Forbes, Toynbee, Mitrany, Hogarth, "The Balkans," 66.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பொறுத்த வரையில் சிறந்த விளக்கமிருந்தபடியால் இவர் 1912
கள் துருக்கருடன் நட்புக் கொண்டிருந்தனர். "வரி சேர்ப்போர் வந்தபொழுது கிராம மக்கள் தமது மனையிலிருப்பதில்லை. இச்சாதாரண ஒழுங்கை இரு சார்பினரும் ஏற்றுக்கொண்டனர்."[1] இனக் கலப்பை மேலும் மிகுவிக்கும் முறையில் மசிடோனிய நகரங்களில் கிரேக்கச் சனத்தொகை பெருமளவிலிருந்தது. மசிடோனியாவின் பொதுநிலையை வருணிப்பதிலும் பார்க்க, கற்பனை செய்து பார்ப்பதே மேல். சீரற்ற ஆட்சி நிலவியதென்பது சொல்லாமலே விளங்கும். சீர்திருத்துவதற்கு எதுவும் செய்யப் படவில்லை. விசாரணைக்காக அரச ஆணைக்குழுக்கள் ஒன்றன்பின் ஒன்றாக நியமிக்கப்பட்டன. எனினும் அவைகள் யாவும் மடி நிறையக் காசைப் பெற்றுக் கொண்டு பாராட்டுகள் நிரம்பிய அறிக்கைகளை எழுதிவிட்டுச் சென்றன.[2]

முதலாம் போல்கன் போர் (1912–13).

போல்கன் அரசுகளின் முரண்பட்ட உரிமைக் கோரிக்கைகளினூற் கிழக்குப் பிரச்சினையில் மசிடோனியா புரியாப் பகுதியாயிற்று. ஆள்புலம் சகலருக்கும் உரிமையாக முடியாது. உரிமை கோருபவர் யாவரும் தமக்குத் திருத்தியளிக்கும் வகையில் சிக்கலைத் தீர்த்துக்கொள்ளும் காலம்வரை அது துருக்கியர் வசமே இருந்தது. ஆகவே பொதுவான எதிரிக்கு எதிராகப் போல்கன் அரசுகளிடையே நட்புறவு ஏற்படுவது அரிதாகக் காணப்பட்டது. எனினும், ஒரு கணப்பொழுது மட்டும் நடக்க முடியாத வொன்று நிறைவேறிற்று. உலகே வியக்கும்படி போல்கன் சங்கமொன்று உருவாயிற்று. இக்கூட்டவையின் வரலாறு இன்னும் தெளிவின்றியே உள்ளது. எனினும் பொசினியா வைப்போல் மசிடோனியாவும், தமது கையைவிட்டு நழுவிவிடுமோ என்று இளந்துருக்கியர் மசிடோனியாவில் தம் பிடியைத் பலப்படுத்துவதற்குப் பெருமுயற்சி செய்வதைக் கண்டு போல்கன் வல்லரசுகள் அச்சமடைந்திருக்கக்கூடும். அல்பேனிய எழுச்சியாலும் இத்தாலியர் துருக்கிக் கெதிராகத் திரிப்பொலியை 1911 இல் பெறும் பொருட்டுப் போர் தொடுத்தமையாலும் அவற்றுக்கு ஊக்கம் பிறந்தது. கிரீடன் பிரச்சினையைப் போரினால் மட்டுமே தீர்க்கலாம் என்று கிரீசுக்குத் தெரியும். பெரிய வல்லரசுகள் தலையிட்டு, போரின் இறுதியில் அன்று நிலவிய ஆள்புலத்தில் எவ்வகை மாறுதலையும் ஏற்று அனுமதிக்க முடியாதென்று போல்கன் அரசுகளை எச்சரித்தன. ஆனால் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ச்சிகள் விரைவாக நிகழ்ந்தமையால் அவ்வல்லரசுகளின் திட்டங்கள் குழம்பிப்போயின. அவர்கள் எதிர்த்த

[1] 'Odysseus', op. cit. 416.
[2] Ibid 358.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1912-13 பொழுதும் 1912 ஆம் ஆண்டு ஒற்றேபர் 12 இல் போர் தொடுக்கப்பட்டது. கூட்டரசுகளின் போர்த்திட்டப்படி துருக்கியப் படை பெரும்பாலும் தங்கியிருந்த இடமாகிய திரேசைப் பல்கேரியா தாக்குவதெனவும் மசிடோனியாமீது கிரீசும் சேபியாவும் போர் தொடுப்பதெனவும் இருந்தது. மசிடோனியாவிலும் திரேசிலும் துருக்கியர் படுதோல்வியுற்றனர். பல்கேரியர் கேர்க்கு கிலிசைக் கைப்பற்றி, உலூல் பொருகாசு எனும் பெருஞ் சமரில் வெற்றி யடைந்து (ஒற்றேபர் 28—நவெம்பர் 2) மொந்தாசீர், ஓக்கிடா (நவெம்பர் 18-23) ஆகிய நகரங்களைக் கைப்பற்றினர். போராட்டத்தை மேலும் நடத்துவது வீணென்று கண்டு, துருக்கி அரசாங்கம் சமாதான்ப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தான் ஆயத்த மென்பதைப் புலப்படுத்திற்று. திசெம்பர் 3 ஆம் திகதி போர் நிறுத்த உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டது. இரண்டுகிழமைகளுக்குப் பின்னர் சமாதான மாநாட்டின் கூட்டம் இலண்டனில் நடந்தது. ஆனால் போரை மேலும் நடத்த விரும்பிய கட்சி கொன்சுதாந் திநோப்பிளில் ஆதிக்கமடைந்தது. ஒரு சதித்திட்டத்தின் விளைவாக கியாமல் பாசாவின் அரசாங்கம் என்வர் பே என்பவனால் வீழ்த்தப்பட்டது. படைத் தளபதியான நாசிம் பாசா படுகொலை செய்யப்பட்டான். போர் மீண்டும் தொடர்ந்து நடந்தது. மூன்று பெரும் துருக்கிய கோட்டைகள் அடுத்தடுத்து வீழ்ச்சியடைந்தன. மாச்சு 5 இல் கிரேக்கர் யனினாவைக் கைப்பற்றினர். மாச்சு 26 இல் பல்கேரியர் எத்திரியாநோப்பிளிற்குள் நுழைந்தனர். ஏப்பிரில் 22 இல் மொன்றெநீகிரோவர் சுகுதாரியைக் கைப் பற்றினர். முதலாம் போல்கன் போரை முடிவுறச் செய்த இலண்டன் ஒப்பந்தத்தில் (மே 20, 1913) துருக்கி, ஈஜேசுமிதியா எல்லைக்கு மேற்கே ஐரோப்பாவில் இருந்த தனது ஆட்சிப் பகுதிகளையும் கிரீத்துத் தீவையும் கையளித்தது.

இரண்டாம் போல்கன் போர் (1913). சமாதானம் செய்யப்பட்டதும் நட்பாளர் தாம் கைப்பற்றிய வற்றைப் பங்கிட்டுக் கொள்வதில் சச்சரவேற்பட்டது. இரண்டாம் போல்கன் போருக்கு எந்நாடு பொறுப்பென இலகுவில் கண்டு கொள்ள முடியாது. ஆனால் பெரும் வல்லரசுகள் தாமே ஓரளவு குற்றத்தை ஏற்க வேண்டியவையாகும். ஒசுற்றியாவும் இத்தாலியும் தாமே அல்பேனியாவைக் கவர எண்ணியதால் எவ்வகையிலுஞ் சேபியரையும் மொன்றெநீகிரோவரையும் விலக்கத் தீர்மானித்தன. இந்நிலையிலே சமாதானத்தை நிலை நாட்ட ஐரோப்பிய வல்லரசுகள் இரு சேபிய அரசுகளையும் வற் புறுத்தியதால் இவ்விரு சேபிய அரசுகளும் அல்பேனிய ஆள் புலத்தையும் குறிப்பாக சுகுதாரியையும் விட்டுக் கொடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்தது. அல்பேனிய நாடு தனக்கே கேடான முறையிற் 1913
படுமோசமாகப் பிரிவுற்றிருந்தபோதிலும் அது ஒரு சுதந்திர அரசாக்கப்பட்டது. எத்திரியாற்றிக்குக் கடலில் ஒரு துறைமுகம் சேபியாவிற்கு வாய்ப்பது வல்லரசுகளின் எதிர்ப்பினால் தடுக்கப் பட்டது. இவ்வேமாற்றத்திற்கு மத்திய மசிடோனியாவில் ஈடு தேடுவதற்குச் சேபியா உறுதி பூண்டது. சேபிய அரசாங்கம் தன்னுடன் ஆதியிற் செய்து கொண்ட பாக உடன்படிக்கைப் பிரகாரம் கொடுக்கப்பட்ட பாகமாகிய வட மசிடோனியாவிலும் (பழைய சேபியா) பார்க்கக்கூடிய நட்ட ஈட்டைக் கோரியதாற் போரின் முன்பு (மாச்சு 1912) பல்கேரியாவுடன் நிறைவேற்றிய ஒப்பந்தத்தை நிராகரித்தது. மற்றப் புறத்தில் பல்கேரியா தானும் இச்சூழ்நிலையிற் றனக்கு வரவேண்டிய யாவும் கொடுக் கப்படவேண்டும் என வற்புறுத்தியமை அறிவுடைச் செயலன்று. ஆயினும் பல்கேரியாவின் சார்பில் துருக்கிக் கெதிராய் நடந்த போரில் மிகுதியான பொறுப்பைப் பல்கேரியா ஏற்றது என்பதை நினைவுறுத்துவது நியாயமே. ஆனால் காரணமில்லாது துரோக மான முறையில் நட்பு நாடுகளைத் தாக்கியதன் மூலம் பல்கேரியா பெரும் பிழையான வழியில் ஈடுபட்டது (யூன் 29, 1913). இச் செயலால் ஒருவேளை நட்பு நாடுகளைப் பயமுறுத்தித் தன் கருமத்தைச் சாதிக்க நினைத்திருக்கலாம். ஆனால் அதன் செய்கையின் விளைவோ எதிர்மாறாய் முடிந்தது. சேபியரும் கிரேக்கரும் தம்மைத் தாக்கியோரைச் சீற்றத்துடன் எதிர்த்தனர். இவர்களோடு உரூமேனியரும் சேர்ந்தனர். இவர்கள் பல் கேரியாவிலே தமக்கிருந்த உரிமையை உறுதிப்படுத்த இவ் வாய்ப்பைப் பயன்படுத்தினர். சகோதரரிடையே நடந்த இச் சண்டையில், கொன்று குவிப்பதில் தாம் துருக்கியரிடமிருந்து கற்க யாதொன்றுமில்லை எனக் கிறித்துவர் காட்டிக் கொண் டனர். பல்கேரியர் சமாதானங்கோரும் நிர்ப்பந்தத்துக்குள்ளா யினர். பியூக்கரெசு ஒப்பந்தத்தால் போல்கன் மக்கள்மேல் புதிய உடன்படிக்கை ஒன்று சுமத்தப்பட்டது (10 ஒகத்து, 1913). ஒரு வகையான நியாயமுமின்றி உரூமேனியா சிலிசித்திரியா மேட்டு நிலத்தைக் கைப்பற்றியது. அம்மேட்டு நிலத்திலுள்ள தோபிரிச்சு, சிலிசித்திரியா ஆகியவை பல்கேரியாவிற்குச் சொந்த மெனப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடங்கள். உரூ மேனியாவின் செய்கை காரணமற்றது. அன்றியும் பல ஆண்டுக ளாக ஓரளவு சுதந்திரமுடையவர்களாயிருந்த பல்கேரிய தூபுரு சாவின் யூதரையும் துருக்கரையும் உரூமேனிய ஆதிக்கத்திற்குட் பட்ட சமூகத் தாழ்விற்கும்[1] அரசியல் அடிமைத் தனத்திற்கும்

[1] L. W. Lyde, "Some Frontiers of To-morrow" (1915), 89.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1913-14

உள்ளாக்கியது ஒரு பெரும் பிழையுமாகும். உசுக்கு, ஒக்கிரிடா, மொனஸ்தீர் ஆகியவை உட்பட மசிடோனியாவில் வடக்கு, மத்திய பகுதிகள் ஆகிய இரண்டையுஞ் சேபியா கைப்பற்றியது. சலோனிக்கா, கவல்லா ஆகிய இரு துறைமுகங்களைக் கொண்ட தும் மெசுற்ரு நதிவரை பரந்திருந்ததுமான ஈசியன் கடற் கரைப் பகுதியொன்றையும் தென் மசிடோனியாவையும் கிரீசு கைப்பற்றியது. தெதகாக்குத் துறைமுகத்தொடு சேர்ந்த ஈசியன் கரையோரத்திற் சில மைல்களைக் கொண்ட ஆள்புலமும் கிழக்கு மசிடோனியாவுந் திரேசும் பல்கேரியாவிற்குக் கொடுக்கப்பட்டன. பியூக்கரெசுப் பொருத்தனையின் விளைவாக "பல்கேரிய மக்க ளென யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட, பத்து இலட்சம் பேர் தீபகற்பத்தில் மாற்றான் ஆட்சிக்குட்பட்டனரெனக்[1] கணக்கிடப் பட்டது. மேலும் கவல்லாத் துறைமுகத்தை இழந்தமையால் பல்கேரியாவின் கரையை அடுத்த உள்நாட்டுப் பொருளாதார விருத்தி தடைப்பட்டது. அதே வேளையிலே துருக்கியரும் இலண் டன் ஒப்பந்தத்தை நிராகரித்துப் பல்கேரியாவிடமிருந்து எத்திரியா நோப்பிள் நகரையும் திரேசிற் பெரும் பாகத்தையும் கைப்பற்றி னர். இவ்வாறுகப் போல்கன் போர்கள் முடிவடைந்தன. சரித் திரத்திலே இத்துணை முழுமையானவையும் துரிதமானவையு மான மாற்றங்களை எப்போரும் அடைந்ததில்லை. போல்கன் போரா னது விடுதலைப் போராகத் தொடங்கி, விரைவில் வல்லினைப்புப் போராக மாறி–எல்லாக் குற்றச்சாட்டுகளும் உண்மையாயின்— ஒரு அழிவுப் போராக இறுதியில் முடிந்தது"[2] எனக் குறிப் பிடப்பட்டது முற்றிலும் பொருத்தமே. இவ்விவரணத்திற்கு மேலதிகமாக நாம் ஏதும் கூற வேண்டியதில்லை.

ஒசுற்றியாவிற்கும் சேபியாவிற்கு மிடையிற் போரேற்படக் காரணங்கள்.

1913 ஆம் ஆண்டுப் போல்கன் உடன்படிக்கையானது 1914–18 ஆம் போருக்கு வித்திட்டது. ஏனெனில் சேபியாவிற்கு இறுதி எச்சரிக்கை[3] விடுத்தற்குக் காரணமாயிருந்தது பியூக்கரெசு ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய ஒசுற்றியா செய்த தீர்மானமாகும். இருமை முடியாட்சிக்கும் சேபிய அரசிற்குமிடையே நிகழ்ந்த பிணக்கிற்குக் காரணமாயிருந்தவற்றை நன்கு விளக்குதற்கு இரு முக்கிய உண்மைகளை மனதிற் கொள்ளல் அத்தியாவசிய

[1] L. W. Lyde, "Some Frontiers of To-morrow" (1915), 106.

[2] Sir Edward Grey, quoted in "Nationalism and War in the Near East," by a Diplomatist (1915), 280.

[3] 1913 ஒகத்து 9 ஆம் திகதி ஒசுற்றியா, சேபியாவிற்கெதிராகத் தொடுக்கப் படும் போரில் இத்தாலியைத் தன்னுடன் ஒத்துழைக்குமாறு அழைத்தது என்று 1914 ஆம் ஆண்டு திசெம்பர் 5 ஆம் திகதியன்று இத்தாலிய மன்றில் அறிவிக்கப்பட்டது. இத்தாலி அதற்கு இணங்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும். (1) கிழக்குப் பிரச்சினையின் அடிப்படையாகப் பொரு 1914
ளாதாரப் பிரச்சினை ஒன்றுண்டு. இத்தாலிய தீபகற்பத்தினின்று ஒசுற்றியாவை வெளியேற்றியவுடன் அதன் வணிகப் பாதைகள் மத்தியதரைக் கடலினின்று ஈசியன் கடலிற்கு மாறின. இதனால் ஒசுற்றியாவிற்கு எத்திரியாற்றிக்குக் கரையிலிருந்த திரீத்து என்ற ஒரேயொரு துறைமுகமே மிஞ்சியது. இது முதற் கொண்டு இலவாந்தை அடைவதே அதன் முக்கிய நோக்கமாயிற்று. ஒசுற்றிய-அங்கேரி சலோனிக்காத் துறைமுகத்தை அடைதற்கே முயற்சி செய்தது. அன்றியும் அதற்காகவே இடைவிடாது கிழக்கு நோக்கியும் சென்றது. பொசினியாவைக் கைப்பற்றியமை போல்கன் தீபகற்பத்திற்கூடாக இருமை முடியாட்சி பரவுவதற்கான முதற் கட்டமாகும். இதனாலே துருக்கிய பேரரசின் திடீர் வீழ்ச்சி ஒசுற்றியாவிற்கு ஏமாற்றத்தை அளித்தது. அன்றியும் கிழக்கு நோக்கிச் செல்வதற்குத் தடையாயிருந்திருக்கக் கூடிய போல்கன் சங்கத்தின் குலைவுக்கும் ஒசுற்றிய செல்வாக்கே காரணமாகும். போரின் விளைவோ வீயன்னாவிலும் புடாபெசுத்துவிலும் எதிர்பார்த்தாற்போல் நிகழவில்லை. இப்போர், கிரீசு, சலோனிக்காவைப் பெறுவதை உறுதிப்படுத்திற்று. அத்துடன் மத்திய மசிடோனியாவிற் சேபியாவின் நிலையை உறுதிப்படுத்திற்று. இவற்றால் சேர்மானியருடையவும் மகியாருடையவும் முன்னேற்றப் பூட்கைக்குத் தடையேற்பட்டது. ஆகையினால் இத்தடையைத் தகர்ப்பதே 1914-18 போரின் அடிப்படை நோக்கங்களுள் ஒன்றுயிற்று. (2) எனினும் இக்கருத்தானது குறித்த பிரச்சினையின் ஒரு அம்சமேயாகும். வீயன்னாவிற்கும் பெல்கிறேட்டிற்குமிடையே உண்டான இக்குழப்பத்திற்கான அடிப்படைக் காரணம் ஒசுற்றியா, சேபியாவைப் பீதுமனாக மதித்தமையாகும். ஒசுற்றியப் பேரரசிலிருந்த சிலாவு மாகாணங்களின் எதிர்காலமே உண்மையிற் சிக்கலானதாகும். ஆள்புலப் பெருக்கத்தை விடச் சேபியா தன் வெற்றிகளால் அடைந்த பெருமையே அதிமுக்கியத்துவமுடையதாகும். உழவோன் சமுதாயமென்ற நிலையிலிருந்து தென் சிலாவு நாட்டுக்[1] கூட்டிணைப்பின் தோற்றிடமாகச் சேபியா சடுதியாக மாறியது. ஏனெனில் அங்கேரியிலுள்ள சேபியர் போல்கனில் தமக்கு விடிவுள்ளதைக் கண்டனராதலாலென்க.[2] அதோடு ஒசுற்றிய-அங்கேரி தனது தவறான பூட்கையின் விளைவை அனுபவிக்கத்தொடங்கிற்று. ஒருபுறம் அங்கேரிய சிலாவினரிடையே நிலவிய அமைதியின்மைக்குக் காரணமாகிய மகியாரின்

[1] "Nationalism and War in the Near East", by a Diplomatist (1915), 347.

[2] R. W. Seton-Watson, "The War and Democracy" (1915), 152.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1890–1914

இனச்சார்புடைக் கொடுங்கோன்மை இருந்தது. இக்கொடுங்கோன்மையினுல் சேபியாவுடன் இணைவதை ஆதரிக்கும் பிரசாரத்திற்கு அவர்கள் செவிசாய்த்தனர். மறுபுறம் சேபியா அல்பேனியாவில் ஆக்கிரமித்தவைகளை வைத்திருக்க ஒசுற்றிய அரசாங்கம் மறுத்தமையாற் சேபியாவின் படர்ச்சி அதற்கேயுரிமையான சிலாவிய மாகாணங்கள்பாற் சென்றது. தடுத்திருக்கக் கூடிய போர் இங்ஙனம் துரிதப்படுத்தப்பட்டது.

II. சேர்மானிய வெல்பொலிற்றிக்கு.

II. அண்மைக் கிழக்குப் பிரச்சினை முக்கியமானதெனினும் அது 1914–18 ஆம் போரொடு சம்பந்தப்பட்ட அளவில் சேர்மானிய வெல்பொலிற்றிக்கு எனப்படும் பெரும் இயக்கத்தின் ஒரு கட்டமேயாகும். உலகப் போராக விருத்தியடைந்த ஒரு சச்சரவில் இருந்த சிக்கல்கள் போல்கன் தீபகற்பத்தின் எதிர்கால ஆட்சியை மட்டும் பற்றியனவா யிருக்கவில்லை. முழுப் பிரச்சினையும் நாளைய உலகில் சேர்மானியப் பேரரசு வகிக்க வேண்டிய நிலையைச் சார்ந்ததாயிருந்தது. இதுவே முதலாம் உலகப் போரின் வரலாற்று முக்கியத்துவமாகும். இதுவே இப்போரிலே சம்பந்தப்பட்டவர்களின் கடும் விடாப்பிடிக்கும் தளரா ஓர்மத்திற்கும் மூல காரணமாகும்.

பிசுமாக்கிற்குப் பினனர் சேர்மானிய பிறநாட்டுப் பூட்கை.

சமகாலத்தவர் தீர்ப்புக்கள் யாவும் ஒருதலைப் பற்றுடையன வென்ற குற்றச்சாட்டுக்குட்படுவன என்பதால் 1890 இலிருந்து 1914 வரை கைக்கொண்ட சேர்மானிய வெளிநாட்டுப் பூட்கை அறிவுடைச் செயலோ அல்லவோ என்று தீர்ப்புக் கூற முயலாது, இரு கருத்துக்களை ஏற்கலாம். முதலாவதாகச் சேர்மானியப் பேரரசினை ஆக்கியவன் பின்பற்றிய பூட்கை தவிர்க்கப்பட்டது. பிசுமாக்கிற்குப் பின்னர் பதவியேற்றவர்கள் சருவதேச அரசியலில் புது வழிகளிற் சென்றபொழுது அனேகர் அதை எதிர்த்தனர். "ஏனெனில் பிசுமாக்கு கையாண்ட கண்டத்திற்குரிய பூட்கையினின்று[1] விலகுவது பெரும் பிழையென அவர்கள் கருதினராகையால் என்க" என்று பூலோ இளவரசன் ஒப்புக்கொண்டுள்ளான். இரண்டாவதாக, இத்தகைய பூட்கையால் மற்றைய வல்லரசுகளுடன் சேர்மனி மோதுமென்பது திண்ணம். தற்காலத்துச் சூழியலின் மூலகாரணங்களை வெளியாக்கி விளக்குவதற்கும் சமகாலத்து நிகழ்ச்சிகளின் உண்மைக் கருத்தினை விளக்குவதற்கும் நம்பகமான சான்றுகள் இல்லாமையால் சரித்திர ஆசிரியன் உண்மையைத் தேடுவதில் இடர்ப்படுகின்றன். எனினும் சேர்மானிய அபிவிருத்தியின் (1890–1914) முக்கியமான போக்குகள் தெளிவாகக் காணப்படுகின்றன.

[1] Bulow, op. cit. 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1890–1919

பேரரசின் முதலிருபதாண்டு காலத்தில் பிசுமாக்கின் பூட்கையைப் பற்றி ஏலவே ஓரளவு விவரித்துள்ளோம். மிதவாதமே இப்பூட்கையின் ஆதார சுருதியாகும். இரும்பு மனிதனெனக் குறிப்பிடப்பட்ட மண்டிலநாயகன் தன் வாழ்நாள் முழுதும் எதிர்க்கூட்டமைப்புக்களுக்கு அஞ்சினன். இதனல் பேரரசினை, தாக்கப்படுவதினின்றும் காப்பதிற் கவனஞ் செலுத்தினன். மூவர் நட்புறவானது அவன் கையிலிருந்த பாதுகாப்புச் சாதனமாகும். இம்மூவர் நட்புறவு உருவாவதை ஆங்கில அரசறிஞர்தாமும் வரவேற்றனர். ஏனெனில் அது ஐரோப்பிய அமைதிக்குப் பொறுப்பளிக்குமாதலாலென்க. அதிகார பீடத்தினின்று பிசுமாக்கு வீழ்த்தப்பட்டது முதல் செயல்கள் நடைபெறும் முறைகளில் உடனடியான மாறுதல் காணப்பட்டது. அடுத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள் 1914–18 ஆம் ஆண்டுப் போர் மூள்வதற்குக் காரணமாயின. இவ்விடத்தில் XIV ஆம் உலுயி என்பானின் பிரான்சிற்கும் II ஆம் உவிலியத்தின் சேர்மனிக்கும் குறிப்பிடத்தக்க ஒற்றுமை இருந்ததை நாம் குறிப்பிடலாம். தன்னுடைய மாபெரும் அரசறிஞனை இரிசிலுவின் தலைமையிற் பிரான்சு 17 ஆம் நூற்றுண்டில் ஐரோப்பாவிலே ஐரோப்பிய வல்லரசுகளில் தலையாயதாக விளங்கிற்று. ஆபிசுபேக்கரின் படை ஆதிக்கத்தினின்றும் சிறிய அரசுகளைக் காத்தமையாற் பிரான்சு இந்நிலையை அடைந்தது. XIV ஆம் உலுயியோ இரிசிலுவின் பணியை மிதமிஞ்சிய வகையிற் கையாண்டதனல் அதனைக் கெடுத்தான். அன்றியும் அவனது மீச்செலவுப் பூட்கையினல் ஐரோப்பா முழுவதும் அவனுக்கு எதிராக எழுந்தது. அதேபோல, பிசுமாக்குக்குப் பின்னர் பதவி வகித்தவன் தனது உட்கருத்துக்கள் பற்றி உலகம் சந்தேகித்து அஞ்சும் நிலையை உண்டாக்கினன். சேர்மானிய நாட்டுணர்ச்சி, படைத்துறை சார்ந்த உருவத்தில் அப்பொழுதிருந்த அரசியற் குழப்பத்திற்கு[1] மிகுந்த இயக்க ஆற்றலளிக்கும் ஒரு வலுவாக அபிவிருத்தியடைந்திருந்தமை இவ்வச்சத்தை அதிகப்படுத்திற்று. ஆகையால் பிசுமாக்கு எது நிகழுமென அஞ்சினனோ அது நிகழ்ந்தது. இசுபாட்டாவை எதிர்க்க அகிலகிரீசையும், XIV ஆம் உலுயியையும் நெப்போலியனையும் எதிர்க்க ஐரோப்பாவினையும் தூண்டிய தற்பாதுகாப்புணர்ச்சியானது சேர்மனியின் இராணுவ ஆதிக்கத்தை எதிர்க்கத் தூண்டப்பட்டது.

XIV ஆம் உலுயியும் II. ஆம் உவிலியமும்.

வெல்பொலிற்றிக்கு என்பதன் பொருள்.

1890 இற்குப் பிந்திய சேர்மானிய வெளிநாட்டுப் பூட்கையின் வரலாறு இரு தெளிவான காலப்பகுதிகளில் அடங்கும். இரண்டு காலப்பகுதிகளின் நோக்கங்களும் அடிப்படையில் ஒன்றுகவே

[1] "Nationalism and War in the Near East", by a Diplomatist, 373.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1890–1914 யிருந்தன. ஆனால் செயல் முறையில், குறிப்பிடத்தக்க வேற்றுமை காணப்பட்டது. இரசிய–யப்பானியப் போர் (1904) இக்காலப்பகுதிகளைப் பிரிக்கும் எல்லையாகும். இப்போரில் ஒரு சிறு ஆசிய வல்லரசினை அடக்குவதற்கு இரசியாவிற்கு வன்மையில்லை யென்பதைக் கண்டதுமே சேர்மானிய அரசாங்கம் அதுவரை எச்சரிக்கையுடன் இருந்ததுபோல் இனி மேலும் இருக்க வேண்டிய அவசியம் குறைந்துவிட்டது. சேர்மானியப் பூட்கையின் நோக்கங்கள் வெல்பொலிற்றிக்கு அல்லது உலகப்பூட்கை எனக் குறிப்பிடப்படுவது வழக்கம். ஒரு சேர்மானிய வரலாற்றுசிரியனுடைய விளக்கத்தை நாம் ஏற்பதாயின் ஐரோப்பிய கண்டம் ஒன்றையே குறியாக வைத்துக் கொண்டு சேர்மனி தன் கொள்கையை வகுப்பதைப் படிப்படியாக விட்டொழித்தது என்பதே உலகப் பூட்கையின் கருத்தாகும். இப்புது அபிவிருத்திக்கு உலக முழுவதையும் வெற்றி கொள்ளும் திட்டங்கள் வகுத்த ஒரு அரசனின் ஆற்றலோ பேரவாக் கொண்ட அரசறிஞனின் அளவுகடந்த திறனே அரசியற் செல்வாக்கற்ற அகன்ற சேர்மனியைத் தாபிக்க விரும்பும் சிறு குழுக்களின் மிதமிஞ்சிய கற்பனையோ காரணமன்று. ஆனால் அது சேர்மானிய அரசினை அதன் முன்னைய பூட்கையின்[1] எல்லைகளை மீறி மேலே செல்லும்படி செய்த வலுவான மலர்ச்சியின் ஒரு பகுதியேயாம் எனச் சொல்லப்படுகின்றது. வெல்பொலிற்றிக்கு என்ற கொள்கையை நாம் எதிர்த்து வாதிப்பது பயனற்றது. எல்லா ஐரோப்பிய அரசுகளும் ஐரோப்பாவிற்கு வெளியே தமக்கு உரிமையாக நிலப்பரப்புகள் உடையன என்னும் அளவில் உலக அரசுகளானமை உண்மையே. அவைகளின் பூட்கை கலப்பிலா ஐரோப்பிய நலன்களைக் கொண்டு ஆக்கப்படவில்லை. "வெள்ளையன் பணிச்சுமையிலோ" "வெள்ளையன் கொள்ளையிலோ" சேர்மனிக்கு அதன் அயல் நாடுகளுக்கு உள்ளளவு உரிமையே இருந்தது. ஆபிரிக்காவைக் கைப்பற்றும் பொருட்டு நடந்த போட்டியில் சேர்மனி பிந்தியது அதன் துரதிட்டமே. ஆனால் இத்தவறு–இதை ஒரு தவறுகக் கருதின்–பிசுமாக்கினதே. இவன் குடியேற்றக் கருத்தை எதிர்த்தான். எனினும் தென்–மேற்காபிரிக்கா, தோகொலந்து, கமரூன் (1884) ஆகியவற்றோடு நியூகினியையும் பசிபிக்குத் தீவுகளையும் சேர்மனி பெற்றது. அன்றியும் அண்மையிற் சில பகுதிகளை ஈட்டிக் கொண்டது. பிசுமாக்கின் காலத்துக்குப் பின்னர் குடியேற்றப் பேரரசினை அடையுங் கருத்து சேர்மனியில் ஆர்வத்துடன் கைக்கொள்ளப்பட்டது. மற்றைய வல்லரசுகளைப் பின்பற்றி

[1] H. Oncken, "The German Empire" in Camb. Mod. Hist. xii. 168.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கொள்கையைப் பேணச் சேர்மனியைத் தூண்டியது பேர வாவினுல் ஏற்பட்ட அமைதியின்மை அன்று. ஆனல் அடிப் படையிலே தன் பொருளாதார நிலையினுல் எழுந்த உடனடி யான தேவைகளே சேர்மனியை அங்ஙனம் தூண்டின எனப் பூலோ இளவரசன் கூறினன். 1870 இற்கும் 1914 இற்கும் இடையே கைத்தொழில் வர்த்தகத்தொழில் ஆகிய துறைக ளிலே சேர்மனி அடைந்த முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாகும். அதன் சனத்தொகை நான்கு கோடியே பத்து இலட்சத்தி லிருந்து ஆறு கோடியே ஐம்பது இலட்சமாயிற்று. வெளி நாட்டு வணிகம் மும்மடங்கு பெருகிற்று. அதாவது 30 கோடியி லிருந்து 95 கோடியாயிற்று. அதன் வணிகக் கப்பற் பலம் மிக விரைவிற் பெருகிற்று. அது பயிர்ச்செய்கை நாடாகாது, கைத்தொழில் நாடாக மாறிற்று. சுருங்கக் கூறின் கைத் தொழில், வணிகம், கப்பற்றொழில் ஆகியவை சேர்மனியின் பழைய கைத்தொழில் வாழ்க்கையை மாற்றிச் சருவதேச கைத் தொழில் மயமாக்கிற்று. அன்றியும் இம்மாற்றம் அரசியற்றுறை யிலே[1] சேர்மானிய அரசோபாயத்தினுக்குப் பிசுமாக்கு குறித்த எல்லைகளுக்கு அப்பாற் பேரரசைக் கொண்டு சென்றது. சேர்மனி ஆக்கிய பொருட்களுக்குப் புதியதும் கட்டுப்பாடில்லாததுமான சந்தைகளைத் தேடுவதே சேர்மானிய அரசறிவின் நோக்க மாயிற்று. சகல சேர்மானிய அரசியற் கருத்திற்கும் அடிப்படை யான சேர்மானியக் குடியேற்றப் பேரரசு ஆக்குவதற்கும் இவ்வரசறிவே தூண்டுகோலாயிருந்தது. 1890-1940.

குடியேற்றத் துறையில் சேர்மனி தொடக்கத்தில் நடத்திய முயற்சிகளின் விளைவு அதற்குத் திருத்தி அளிக்கவில்லை. சேர்மானியக் குடியேற்ற நாடுகள் தாய் நாட்டிற்கு ஆதாரமா காது, சுமையாயிருந்தன. அவை பரப்பளவிலோ பெறுமதி யிலோ மற்றைய ஐரோப்பிய வல்லரசுகளின் குடியேற்ற நாடுகளுடன் ஒப்பிடத்தக்கவையுமல்ல. உலகத்துச் சிறந்த பகுதி ஏலவே பங்கிடப்பட்டுவிட்டது எனும் உண்மையையும் புதுக் குடி யேற்ற நாடுகளைப் போரினுலேயே பெறலாம் எனும் உண்மையை யும் அறிந்து கொண்டதும் சேர்மனி ஏனைய வழிகளில் ஒரு வணிகச் செல்வாக்கினை அமைப்பதிலே ஈடுபட்டது. அணித்தா யுள்ள கிழக்கு நாடுகளிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் ஆதிக்கஞ் செலுத்துவதே சேர்மனியின் முக்கிய நோக்கமா கும். பிசுமாக்கு கிழக்குப் பிரச்சினையை ஒரு பொமரேனி யப் போர் வீரனின் எலும்புக்கூட்டுக்குரிய பெறுமதி கூட இல்லாததொன்றுகவே மதித்தான். அன்றியும் நிறைவேறிய கிழக்கு நோக்கி முன்னேறு தல்.

[1] Bulow, op. cit. 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1890-1914. உடன்பாட்டில் தனக்கென எவ்வித நயமும் பெறாது பேளின் மாநாட்டிலே தான் உண்மைத் தரகனைப் பணியாற்றியமையுடன் திருத்தியடைந்தான். ஆனால் அவனுக்குப் பின்னர் பதவியேற் றவனுடைய மனத்தை இலவாந்து கவர்ந்தது. கிழக்கு நோக்கி முன்னேறும் பூட்கை சொல்லுக்கடங்காதவற்றை அடையக்கூடிய புதிய பாதையைத் திறந்தது. போட்டே எனுமிடத்திற் பிரித் தானியருடைய செல்வாக்கும் ஒடுங்க, சேர்மனி ஒற்றோமன் பேரரசினையும் மதத்தினையும் ஆதரிக்கும் நாடாயிற்று. "சேர் மானியப் பேரரசன் எக்காலத்தும் அவர்களுடைய நண்பனையிருப் பான் என உலகெங்குமுள்ள 30 கோடி முகமதியரும் திடமாக நம்பலாம்". இக்கூற்று (1898) II ஆம் உவிலியம் எதிர்காலத் தில் கிழக்கு நாட்டில், ஆதிக்கத்திற்காக நிகழவிருந்த போராட்டத்திலே இசுலாமியப் போர்ப்பலத்தை உபயோகிக்கும் எண்ணத்தை வெளியாக்குவதாகக் காணப்பட்டது. ஆசியத் துருக்கிக்குள் அமைதியாக நுழைவது சேர்மானிய வணிகப் படர்ச்சியின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். உலக வல்லாண்மைக் கருத்துக்கள் ஒரு புறத்திலிருக்க, பொருளாதார அடிப்படை யில் சின்ன ஆசியாவைப் பயன்படுத்துதற்குக் கூடிய ஆதர விருந்தது. பிரதரிக்கு இலிசிற்று எனும் புகழ்பெற்ற பொருளி யல் வல்லுநன் வெகுகாலத்திற்கு முன்பே கீழ்தானியூப்பு பள்ளத்தாக்கிலே குடியேறுவதை ஆதரித்துரைத்துள்ளான். சின்ன ஆசியா, மெசபொத்தேமியா ஆகிய நாடுகளின் வளஞ் செறிந்த பரந்த நிலப்பரப்புகள் சேர்மானிய முபற்சிக்குக் கவர்ச்சியான இடங்களாகக் காணப்பட்டன. நலிவுற்ற வல்லரசின் பேரளவினதான ஆதிக்கத்திற்குட்பட்ட பரந்த நிலப்பரப்பொ ன்று இவ்விடத்தில் இருந்தது. இதில் சனச்செறிவேயில்லை. நாடோடி உம்பல்களும் அரை குறையாக நாகரிகமடைந்தவரும் இதில் வசித்தனர். இந்நிலப்பரப்பைச் சேர்மனியின் அதிகப் படியான சனத்தொகையைக் குடியிருத்தும் நல்ல குடியேற்றப் பகுதிகளாக ஒழுங்கு செய்யலாம். இருப்புப்பாதை அமைப் பதற்கும், நீர்ப்பாசன வேலை செய்வதற்கும், சுரங்கவேலை செய்வதற்கும், விவசாயத்தொழில் செய்வதற்கும் சேர்மானிய மூலதனத்தை நன்மை தரும் வகையில் இங்கு செலவிடலாம். செல்வப் பெருக்கினால் சேர்மனியிலே உற்பத்தியாகும் பொருள் களுக்குச் சிறந்த சந்தைகள் கிடைக்கக்கூடும். உழவுத்தொழி லுக்கு ஏற்றதும் கனிப்பொருள் வளமுடையதுமான இக்குடி யேற்றநாடு உண்ணாட்டில் பாடுபட்டு உழைக்கும் கோடானுகோடி மக்களுக்குத் தொழில் உற்பத்தி செய்தற்கான மூலப்பொருள் களையும் உணவையும் அளிக்கும். இப்பொருளாதார நோக் கங்களொடு, துருக்கியுடன் ஐக்கியப்படுவதால் பெறக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் நன்மையும் மற்ற நன்மைகளும் சேர்ந்தன. ஐரோப் பிய துருக்கியினதும் ஆசிய துருக்கியினதும் நிதியையும் பொருளாதாரத்தையும் சேர்மனியின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவருவது சிறந்த படைக்குப் பயன்படக்கூடிய ஆட்பலம் கிடைத்தற்கான வாய்ப்பைக் குறிக்கும். அப்படை சேர்மானியப் பயிற்சியின் கீழ் முதற்றரப் படையாக்கப்படலாம். அன்றியும் அது தென் கிழக்கு ஐரோப்பா, கீழ் மத்தியதரைக் கடல் ஆகியவற்றின் மேல் உள்ள ஆதிக்கத்தையும், தானியூப்பு நதியின் தோற்றுவாயிலிருந்து கடலின் விழுவாய் வரையுள்ள பகுதியின் ஆட்சியையும் பகுதாது நகரையும் பாரசீகக் குடாவி னுக்குச் செல்லுமோர் பாதையையும் பெறுவதையும் குறித்தது. இங்கிருந்து பாரசீகத்தை மட்டுமன்றி கசுப்பியன் கடலுக்குக் கிழக்கேயுள்ள இரசிய ஆள்புலத்தையும் இந்தியாவையும்[1] சேர் மனியின் ஆட்சிக்குட்படுத்துவது இலகுவாகும். இறுதியில் பார சீகக் குடாவொடு பேளினை இணைத்தற்காக நிருமாணிக்கப்பட்ட பகுதாது இருப்புப் பாதைத் திட்டத்திற் கவர்ச்சி நிறைந்த இவ்வாய்ப்புக்கள் யாவும் முற்குறிப்பிடப்பட்டிருந்தன. 1888 இல் கொன்சுதாந்திநோப்பிளிற்குக் கிழக்கே உள்ள இசுமித்து என்னு மிடத்திலிருந்து அங்கோரா வரை, சேர்மானிய ஆதரவில் இருப்புப்பாதை அமைக்கத் துருக்கி அனுமதித்த பொழுது இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனல் பகுதாது வரைக்கும் பாரசீகக்குடா வரைக்கும் இப்பாதையை அமைக்கும் திட்டம் 1903 இலேயே பூரணமாக உருவாயது. 1890-1914.

உலகப் பூட்கை பற்றிய கருத்தின் விளைவே பலங்கொண்ட கடற்படையாக்கமாகும். போரே அரசின் நோய்களுக்கு மூல மருந்தாய்த் தம்[2] நாட்டினச் சிக்கல்கள் யாவற்றையும் தீர்க்க வல்லது எனும் தவருன எண்ணத்தைக் கொனிக்கிராற்சு, சேடன் ஆகிய வெற்றிகள் சேர்மானிய மக்களிடையே படிந்து நிலவச் செய்தது. போரினல் உருவானதே பிரசியா-மிரவோ வின் கூற்றுப்படி போரே அதன் ஒரேதொழில்-அது சேர்ம னியையும் போரினலேயே ஆக்கிற்று. ஆகையினல் சேர்மனி தன் புது நோக்கங்களைக் கைக்கொள்ளும்பொழுது ஒரு புதிய யுத்தக் கருவியை ஆக்கித் தன் குறிக்கோளை இரத்தத் துடனும் ஆயுதத்துடனும் அடைய விரும்புதல் அதன் பரம்பரை வழக்கத்திற்கு ஒத்ததாகும். சேர்மானியர் கடற்படையை ஆரம் சேர்மானிய கடற்படை.

[1] G .W. Prothero, "German Opinion and German Policy before the War" (1916), 31–2.

[2] Treitschke, "Political Thought", ed. Davis (1914), 148 seq.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1904. பத்தில் உருவாக்கிய நோக்கத்திலே நாம் எவ்வித பிழையுங் காணமுடியாது. சேர்மானிய மண்டிலநாயகன் ஒருவனுடைய கூற்றின்படி கடலிலே தாக்கப்படுவற்கு நாம் தற்பொழுது அஞ்சவேண்டிய நிலையிலே இருக்கின்றேம். கோடானுகோடி செல்வத்தினைக் கடலிலே முதலீடு செய்து அதனுடன் நம் நாட்டு மக்களின் சுக துக்கங்களையும் நம்பகமாக ஒப்படைத் துள்ளோம். அச்செல்வத்திற்குப் பாதுகாப்பைத் தகுந்த முறையிலே எலவே அமைக்காவிட்டால் ஒரு காலத்திலே அச்செல்வம் நம்மிடமிருந்து அபகரிக்கப்பட நேரிடின் நாம் அபாயத்திற்குள்ளாகலாம். அப்படி நேர்ந்தால் எம் நாட்டு வாசிகளிலே எத்தனையோ கோடி மக்களுக்குத் தொழில் கொடுத்து வாழ்வளிக்க முடியாது போகும். இதன் விளைவு நாட்டின் பேரழிவிற்கான பொருளாதார நெருக்கடி ஏற்பட லேயாகும்.[1] ஆயினும் கடற்படையின் துரித வளர்ச்சிக்கு உண்மையான நோக்கம் பெரிய பிரித்தானியாவின் கடலா திக்கத்தை எதிர்க்கு முகமானதே என்று கொள்வதற்குப் போதிய நியாயமிருந்தது. "மிகவும் பலம் பொருந்திய கடற்படையை யுடைய ஒரு எதிரிதானும் தாக்கினால் அவன் உலகில் தன் நிலையை இழக்கும்படி செய்யுமளவிற்குச் சேர்மனியின் கடற்படையைப் பலமாக்கவேண்டும்" என்று 1900 இல் வெளிப்படையாகக் கூறப்பட்ட பின் வேறெந்தக் கருத்துங் கொள்ள முடியாதாயிற்று. இதன் விளைவாகச் சேர்மனிக்கும் பெரிய பிரித்தானியாவிற்கும் இடையே கடுங் கடற் போட்டி எழுந்து இரு நாடுகளிடை உறவு சீர்கெட்டு முதலாம் உலகப் போரிற்கும் (1914–18), காரணமாயிற்று.

இரசிய யப்பானியப் போரின் விளைவு (1904). ஐரோப்பிய முறைமையின் ஆதாரமாகவிருந்த வல்லரசுக ளின் சம நிலையைத் தற்போதைக்கு அழித்தமையால் சருவ தேச அரசியலின் முழுப் போக்கையும் இரசிய–யப்பானியப் போர் (1904) பாதித்தது. சேர்மானியப் பேரரசனின் பூட்கை இதுவரை கவனமானதும் அடக்கமானதுமாயிருந்தது. ஆனல் வருங்காலத்தில் அவன் பெருந் தன்முனைப்பொடு நடந்து சேர்மா னிய மக்களின் உணர்ச்சிமிக்க போர் விருப்பத்தைத் தூண்டவிருந் தான். மூவர் நட்புறவு எதிர்க்கும் கருவியாக மாற்றப்பட்டு அடுத்த பத்தாண்டுகளில்—இக்காலம் முழுவதும் சருவதேசத் தொல்லைகள் இருந்தன—தொடர்ந்து பல நெருக்கடிகள் ஏற்பட்டன. இந்நெருக்கடிகளினுல் ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப் பங்களிற் போர் மூளும் நிலை ஏற்பட்டது. இரசியாவுக்கும் யப்பானுக்குமிடையே நிகழ்ந்த போராட்டத்தின் முக்கியத்

[1] Bulow, op. cit. 17.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவத்தை விளங்குதற்கு நெப்போலியனை வீழ்த்துவதில் எடுத்த முயற்சியின் காரணத்தாலே பெரும் இராணுவ மதிப்பொடு 9 ஆம் நூற்றாண்டிலே இரசியா விளங்கிற்று என்பதை மனதிற் கொள்ள வேண்டும். இரசியாவின் பலம் தோற்றத்தளவினதேயன்றி உண்மையன்று என்பது கிரைமியப் போரினாற் புலனாயிற்று. கிழக்கிலே இருந்த அயல் நாட்டுடன் நல்லிணக்கத்தைப் பேணுவதே பிசுமாக்கின் பூட்கையின் முக்கியமான தத்துவமாகும். மேலும் இரசியாவின் அச்சம் இரண்டாம் உவிலியத்தின் நடவடிக்கைகளுக்கு ஒரு நல்ல தடையாயிற்று. ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வில்லும் அம்புங் கொண்டு போர் செய்த மக்களைக் கொண்ட ஒரு இளம் ஆசிய அரசினாற் பரந்த தனிவல்லாட்சிப் பேரரசு முறியடிக்கப்பட்டதன் விளைவு ஐரோப்பிய நிலையையே தாக்கிற்று. இரசியா பெருந்தொகையான மக்களை இழந்தது. அத்துடன் வளம் மிக்க நிலப்பகுதியையும் ஆதர் துறைமுகத்தையும் இரு கப்பற் படைகளையும் இழந்தது. ஆனால் போரின் பிரதான விளைவுகளை விட இரசியாவின் மதிப்பிற்கு ஏற்பட்ட இழுக்கே துயர் நிரம்பியதாகும். உண்ணாட்டுக் குழப்பங்களினால் இரசியா மேலும் வலுவற்றதாயிற்று. மத்திய வல்லரசுகளின் மீச்செலவான சூழ்ச்சிகளை எதிர்ப்பதற்கு இப்போதைக்கு இரசியா வலியற்ற நிலையிலிருந்தது. 1904.

இங்கிலாந்தையும் பிரான்சையும் மிக நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்தமையும் இரசிய யப்பானியப் போரின் மற்றொரு விளைவாகும். இதுவரையும் பிரித்தானிய அரசாங்கம் கடைப்பிடித்த தன்கொள்கையின் அடித்தளமான 'சிறந்த தனிமை நிலை' யினின்று மாறுவதற்கு வாய்த்த தருணத்தை மகிழ்ச்சியொடு வரவேற்றது. பூவர்ப் போர்க் காலத்திலே எமக்கு எதிராய் ஐரோப்பிய கூட்டிணைப்பு உருவாகலாம் என்னும் அச்சமே பரம்பரைப் போக்கிலேற்பட்ட மாற்றத்திற்குக் காரணமாகும். அல்சேசு உலொரேனைச் சேர்மனி வைத்திருந்தவரை பெரிய பிரித்தானியாவிற்கு எதிராக ஐரோப்பிய கூட்டிணைப்பு உருவாக முடியாதென்பது தெளிவானதால், முன் சொல்லப்பட்ட அச்சத்திற்கு ஆதாரமில்லை. "எமது அரசியற்றிட்ட அமைப்பில், பிரான்சின் பகைமையை நாம் கருத்திற் கொள்ளல் வேண்டும். அல்சேசு உலொரேனை விட்டுக் கொடுக்கும் உத்தேசம் எமக்கு இல்லாதிருக்கும்வரை உண்மையாயும் நேர்மையாயும் பிரான்சு எம்மொடு இணக்கம் கொள்ளும் என்று எதிர்பார்ப்பது எமது வீணெண்ணம் என எனக்குத் தோன்றுகின்றது. மேலும் அல்சேசு உலொரேனை விட்டுக் கொடுக்கும் எண்ணம் சேர்மனிக்கு பூவர் நட்புறவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1904-5. இல்லை "[1] என்று பூலோ இளவரசன் குறிப்பிட்டுள்ளான். பெரிய பிரித்தானியா கண்டத்திலே தனக்கொரு நேச நாடொன்றினைப் பெறுவதெனத் தீர்மானித்ததோடு மூவர் நட்புறவையோ இருவர் நட்புறவையோ தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. எம் கருத்து மூவருடன்படிக்கை சார்பிற் திரும்புமோ என ஒரு சில காலத்திற்கு ஐயமிருந்ததாகச் சொல்லப்பட்டது. இனம், பண்பு ஆகிய ஒற்றுமையின் காரணம் சேர்மனி, ஒசுற்றியா ஆகிய நாடுகளுடன் சேர எம்மைத் தூண்டியது[2]. சேர்மனியுடனே இந்நாடு எக்காலத்திலும் போர் தொடுத்திருக்கவில்லை. ஆனால் இரண்டாம் உவிலியத்தின் போக்கினால் அவநம்பிக்கை ஏற்பட்டது. இதுவும் வேறு நோக்கங்களும் பிரித்தானிய அரசியல் வல்லுநரை இருமைக்கூட்டிணைப்பின் சார்பாகத் தீர்மானிக்கச் செய்தது. பிரான்சும் இங்கிலாந்துடன் இணக்கங்கொள்ள அதிக விருப்புடையதாயிருந்தது. யப்பானெடு நடத்திய அவப்பேருன போராட்டத்தின் விளைவாக இரசியா சத்தியற்றதாகி, பிரான்சியக் குடியரசு இருமைக் கூட்டுறவால் மீட்கப்படு முன்னே தான் இருந்த அபாயமான தனித்த நிலையை அடைந்தது. ஐரோப்பிய விவகாரங்களில் ஒன்று பட்டுச் செயலாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்தின் பேரினால் அன்று வரை மேற்கு வல்லரசுகள் இரண்டையும் பிரித்துவைத்த குடியேற்றப் பிணக்குகள் ஒத்துமேவித் தீர்க்கப்பட்டன. மொரொக்கோமீது பிரான்சு ஆதிக்கஞ் செலுத்துவதைப் பெரிய பிரித்தானியா ஒப்புக் கொண்டது. இதற்குக் கைம்மாறுக எகித்தை ஆங்கிலேயர் ஆட்சி செய்வதைப் பிரான்சு ஏற்றுக்கொண்டது. இவ்விரு நாடுகளின் மற்றைய பிணக்குகள் யாவும் மிகச் சார்துரியமாக இணக்கப்பட்டன. இவ்வகையிலே ஆங்கில பிரான்சிய நட்புறவு ஏற்றபடுத்தப்பட்டது (எப்பிரில் 1904)[3]. இடர்களைக் களைய வேண்டுமென நாடுகள் உண்மையில் விரும்பினால் அந்நாடுகள் எத்துணை இலகுவில் நட்பிணக்கத்தில் ஒன்றாய் ஒத்துவாழ வழி வகுக்கலாம் என்பதைக் காட்ட இக்கூட்டிணைப்பின் வரலாறு பயன்படுகின்றது. சரித்திரத்தில் நிகழ்ந்த போர்களில் அரைப்பங்கு, வேண்டுமென்று செய்யப்படும் தாக்குதலின் விளைவெனில், மற்ற அரைப்பங்கு சம்பந்தப்பட்ட நாடுகள் அமைதியை விரும்பியிருந்தால் போர் தொடுக்காமலே தீர்த்துக் கொள்ளக்கூடிய விளக்கக் குறைவுகளாலும் பொறுமைகளாலும் ஏற்பட்டன.

[1] Bulow, op. cit. 69.

[2] Rose, "Development of the European Nations", (ed. 1915), 590.

[1] இரசியாவின் உடன்பாட்டினால் (ஒகத்து 1907) அது மூவர் நட்புறவாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1905. மொரொக்கோப் பிரச்சினை முதற் கட்டம் (1905).

ஆங்கில பிரான்சிய நட்புறவு விரைவில் மொரொக்கோப் பிரச்சினையின் பொழுது சோதனைக்குள்ளாக விருந்தது. சில ஆண்டுகளாகப் பிரான்சு மொரொக்கோவிற்குள் "அமைதியாக நுழைவதில்" ஈடுபட்டிருந்தது—இது அதன் அரசியல் வல்லினைப்புக்கான முதல் நடவடிக்கையாகும். மொரொக்கோவின் அலுவல்களிற் சுதந்திரத்துடன் தலையிடுவதற்காகப் பிரான்சு 1900 இல் இத்தாலியுடனும் 1904 ஏப்பிரிலில் பெரிய பிரித்தானியாவுடனும் 1904 ஒற்றேபரில் இசுப்பெயினுடனும் ஒப்பந்தங்கள் செய்துகொண்டது. மொரொக்கோ, பிரான்சின் வட ஆபிரிக்க உடைமைகளுக்கு அண்மையிலிருந்தமையாலும், மொரொக்கோவொடு பிரான்சு நடத்திய வணிகம் அதனெடு இங்கிலாந்தோ சேர்மனியோ நடத்தியதைவிட அதிகமானதாலும், பிரான்சிற்கு மொரொக்கோ விவகாரங்களில் குறிப்பிடத்தக்க அக்கறை உண்டென்பது மறுக்கப்படவில்லை. எனினும் சேர்மனியுந் தனக்கு மொரொக்கோவிலே முக்கிய பொருளாதார நலன்கள் உண்டென நியாயத்துடன் உரிமை கொண்டாடலாம். மேலும் மதிரித்துப் பொருத்தனைப்படி (1880) மொரொக்கோவின் முழுமை நிலையினைத் தாக்கும் எந்த உடன்படிக்கையிலுஞ் சேர்மனியைப் புறக்கணிக்க முடியாது. குடியேற்றப் படர்ச்சி சேர்மனிக்கு இன்றியமையாததென்று வற்புறுத்தியதால் தலையிட வேண்டிய நியாயமும் உறுதியாகிற்று. ஆகவே ஒரு பரந்த புதிய மாகாணத்தைப் பங்கீடு செய்வதை மேற்கு வல்லரசுகள் தாமே தனிய நிர்ணயிக்க முடியாது. ஆனால் சேர்மனி தன் உரிமைகளை உறுதியாகக் கூறிய தோரணை பெரும் அச்சத்தை எழுப்பியது. முகத்தெண் போராட்டத்திலே (1–10 மாச்சு, 1905) இரசியா உற்ற படுதோல்வி சேர்மனி இவ்வகை அச்சுறுத்துந் தோரணையில் நடப்பதற்கு ஊக்கமளித்தது என்பது வெளிப்படை. மாச்சு 31 இல் தாஞ்சியரில் வந்திறங்கிய சேர்மானியப் பேரரசன் மொரொக்கோவின் சுதந்திரத்தையும் இறைமையையும் மிகத்தெளிவாகப் பிரகடனஞ் செய்தான். இச்செயல் பிரான்சிற்கு விடுத்த அறை கூவலாயிற்று. ஆனால் பிரான்சிய அரசாங்கம் போருக்கு ஆயத்தமாயில்லை. தன் வெளிவிவகார அமைச்சராகிய தெகிலாசின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது சேர்மனியின் சர்வதேச மாநாடு கூட்டுங் கோரிக்கைக்கு இணங்கிற்று. இது முடிவானதும் தெகிலாசு தமது பதவியினின்றும் விலகினான். மாநாடு அல்சிராசிற் கூடிற்று. போர் தொடரப்படலாம் என்ற அச்சம் ஏற்படுமளவுக்கு நீடித்த பேச்சு வார்த்தைகளுக்குப் பின் அல்சிராசு மாநாடு (1906, ஏப்பிரில் 7) ஒருவாறு ஓர் உடன்படிக்கைக்கு வந்தது. சுலுத்தானின் இறைமை முறையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1911. ஒப்புக் கொள்ளப்பட்டது. பொலிசு அமைப்பு, தேசிய வங்கி ஆகிய தாபனங்கள் சருவதேசக் கட்டுப்பாட்டுக்குட்பட்டன. சகல நாட்டுச் சமவுரிமைக் கொள்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது. எனினும் மொரொக்கோவிலே பிரான்சு அமைதியாகப் புகுதற்கு ஒரு தடையுமிருக்கவில்லை. "நாம் வெற்றியாளருமல்லர் தோற்றோருமல்லர்" என இந்நிலையைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது சேர்மானிய மண்டிலநாயகன் கூறினன். இங்கிலாந்தும் பிரான்சும் ஆக்கிய ஒருதலைப்பற்றுடையதெனக் கருதப்பட்ட ஒழுங்கினுக்குப் பதிலாக, சருவதேச உடன்படிக்கையொன்றைச் சேர்மனி மேற்கு வல்லரசுகளை ஏற்கச் செய்தது. மேலும் சருவதேச முக்கியத்துவம் வாய்ந்த விவகாரத்திலே சேர்மனி தன் கோரிக்கைகளையுங் கருத்திற் கொள்ளல்வேண்டும் எனவும் வற்புறுத்திற்று. ஆயினும் ஆங்கில பிரான்சிய நட்புறவின் உறுதியைச் சோதிப்பதற்கு மொரொக்கோ ஒரு பரிசோதனைக் கருவியென்றவகையில் சேர்மானிய அரசாங்கம் அவ்விரு நாடுகளிடையேயும் உள்ள ஐக்கியத்தைக் குலைத்துப் பிணக்கை உண்டாக்கச் செய்த முயற்சியில் தோல்வியடைந்தது. மொரொக்கோ நெருக்கடியின் சரித்திர முக்கியத்துவம், அது சேர்மனிக்கும் மேற்கு வல்லரசுகளுக்குமிடையே நிகழ்ந்த முதலாம் பலப் பரிசோதனையாகும் என்பதிலேயே தங்கியுள்ளது.

இரண்டாம் கட்டம் : அகதீர் நிகழ்ச்சி (1911).

1911 ஆம் ஆண்டுக் கோடை காலத்தில் மொரொக்கோப் பிரச்சினை மீண்டும் நெருக்கடியான நிலையை யடைந்தது. மொரொக்கோவில் நிலவிய அரசறவினால், பிரான்சியப் படை, தலைநகரைக் (பெச்சு) கைப்பற்றியது. பிரான்சு மொரொக்கோவை ஒரு புரப்பு நாடாகப் பிரகடனப்படுத்தும் கருத்துடையதென்பதற்கு இது ஒரு அறிகுறியாகும் என இந்த நடவடிக்கைக்குச் சேர்மனி பொருள் கொண்டது. சேர்மனி தன் நலன்களைக் கவனிப்பதைத் தலைக்கீடாகக் கொண்டு பன்தர் எனும் சேர்மானியக் காவற் கப்பலை அகதீருக்கு (யூலை 1911) அனுப்பிற்று. மொரொக்கோ ஆள்புலத்தை வலிந்திணைக்கும் கருத்து, சேர்மனிக்கு இருந்ததோ இல்லையோ என்பது விவாதத்திற்குரிய விடயமாகும். ஆனால் சேர்மனியின் நடவடிக்கை, அது அகதீரிலோ மொகடோவிலோ கடற்றளம் ஒன்றைக் கோருவதற்கான முன்னறிகுறிபோற் காணப்பட்டது. பெரிய பிரித்தானியா தனது நட்பாளரின் சார்பாகத் தலையிட்டது. ஏனெனில் இங்கிலாந்து பிரான்சிற்குக் கடமைப்பட்டிருந்ததாதலாலும் அத்திலாந்திக்குக் கரையோரத்திற் சேர்மானியத் துறைமுகம் ஒன்றிருப்பின் அது இங்கிலாந்தின் வணிகப் பாதைகளின் பாதுகாப்பிற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கம் விளைக்கக்கூடுமாதலாலும் என்க. எனவே பிரித்தானிய நலன்களை அசட்டை செய்யின் அது எம் நாட்டைப் போன்ற பெரிய நாடு சகிக்க முடியாத அவமானமாகும் எனப் பிரித்தானிய அரசாங்கம் அறிவித்தது. சில வாரங்களாகப் போர் நிகழக்கூடும் எனும் அச்சம் நிலவியது. சேர்மனியை அதன் கோரிக்கைகளைக் குறைக்கத் தூண்டிய காரணம் தெளிவில்லை. நிதி நெருக்கடியே[1] இதற்குக் காரணமெனப் பொதுவாகக் கூறப்பட்டது. ஆனால் எக்காலத்திலாவது சேர்மானிய அரசாங்கம், ஒரு தீர்மானத்தை மொரொக்கோ மீது பலாற்காரமாகத் திணிக்கும் கருத்துடையதாக விருந்ததோ என்பது ஐயத்திற்குரியது. சேர்மனியின் உண்மை நலன்கள் பிறிதோரிடத்தே இருந்தன. கிழக்குப் பிரச்சினை காரணமாகப்[2] போரில் ஈடுபடச் சேர்மனி ஆயத்தமாயிருந்ததெனினும் ஆபிரிக்காவைக் கைப்பற்றும் விடயம் பற்றி இணக்கத்திற்கு வர உடன்பட்டதென்பது தெளிவு. இவ்விணக்கப் பேச்சுக்களின் விளைவாக மொரொக்கோவைப் பிரான்சியப் புரப்பு நாடாகச் சேர்மனி மதித்தது. அன்றியும் பிரான்சிய கொங்கோவின் வடமேற்குப் பகுதியைப் பிரான்சு கையளித்தது. இரு நாடுகளிலும் இந்த நியதிகளிற்றெ பெரும் அதிருத்தியேற்பட்டதெனினும் நட்டஈட்டுத் தத்துவம் தன்னளவிலே நியாயமற்றதன்று. பரப்பளவில் உலகிலேயே இரண்டாவதாகக் கருதப்பட்ட குடியேற்றப் பேரரசு ஒன்றை இப்பொழுது பெற்றிருந்த பிரான்சு வட ஆபிரிக்காவிலே பரந்த நிலப்பரப்பை எய்திற்று. இதற்கு ஈடாக மற்ற நாடுகளுக்கு முக்கிய சலுகைகளை எலவே வழங்கியிருந்தது. அதாவது இங்கிலாந்திற்கு எகித்தையும், இத்தாலிக்குத் திரிப்பொலியையும், இசுப்பெயினுக்குத் தாஞ்சியரையும் தற்பொழுது சேர்மனிக்கு நட்டஈடும் கொடுத்தது என்க. 1911-14.

அகதீர் நிகழ்ச்சியைத் தொடர்ந்து சேர்மனியில் அதன் உண்மை எதிரிக்கு எதிராகப் பெருந் துவேச உணர்ச்சி பரந்தது. ஆனால் இந்த நிலைமை படிப்படியாகத் தளர்ந்தது. ஆங்கில சேர்மானியத் தொடர்புகளை விருத்தி செய்யும் பொருட்டும், இரு நாடுகளுக்கிடையே வளர்ந்த அவநம்பிக்கையை நட்பான பேச்சு வார்த்தைகளால் அகற்றும் பொருட்டும் பெரும் முயற்சி செய்யப்பட்டது. எந்த வல்லரசிற்காகவும் போர் தொடுக்கும் கடப்பாட்டிற்குத் தன்னை உட்படுத்தும் எவ்வகையான இரகசிய முதலாம் உலகப் போர் (1914–1918).

[1] Rose, op. cit. 623 ; G. Murray,, "The Foreign Policy of Sir Edward Grey" (1915), 76.

[2] 1909 இல் அது இரசியாவிற்களித்த இறுதிக் கூற்றுடன் ஒப்பிடுக. பக்கம் 348.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1911-14. உடன்படிக்கையும் இங்கிலாந்து செய்து கொள்ளவில்லை என அந்நாட்டுப் பிரதமர் கூறினர் (டிசெம்பர் 6, 1911). "உலகில் முக்கியமான இடம் பெற முயற்சி செய்யும் எந்த வல்லரசிற்கும் நாம் தடையாக விரும்பவில்லை. எப்பொழுதும் இருந்தது போல் உலக சமாதானமே பிரித்தானியரின் முக்கிய அக்கறையாகும். அதை அடைவதற்குப் பிரித்தானிய சூழியலும் பூட்கையும் பயன்படுத்தப்படும்" என அவர் மேலும் கூறினர். "எந்தச் சூழ்நிலையிலும் சேர்மனியைத் தாக்குவதற்கு நாம் எவ்வகையிலும் உடந்தையாக மாட்டோம்" எனச் சேர்மானிய அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் சேர்மனியுடன் நட்பான உடன்பாடு செய்தற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் மூன்னேற்றமடையவில்லை. பிரித்தானிய அரசாங்கம் (ஒற்றேபர் 2, 1914) இத் தோல்விக்கான காரணத்தைக் கூறிற்று. "சேர்மனி போரிலே ஈடுபடுங்காலத்தில் நாம் நடுநிலைமை பேணுவோம்" என்ற உறுதிமொழியை அளிக்குமாறு எம்மை வேண்டினர். சேர்மனி தன்னுடைய தாக்கும் சத்திகளையுந் தற்காப்புச் சத்திகளையும் வெகுவாகக் கூட்டிய தருணத்திலேயே–சிறப்பாகக் கடலில்–எம்மிடம் இவ்வுறுதியைக் கோரிற்று. இத்தகைய கோரிக்கைக்கு இறுக்கக் கூடிய விடை ஒன்றே ஒன்று. அதுவே நாம் அளித்த விடையாகும். இப்பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்தபோது புதுப் புயல் இளம்பிற்று. போல்கன் பிரச்சினை மீண்டும் மக்கள் கவனத்தை ஈர்த்தது. சேபியாவை ஆக்கிரமித்ததுடனும் கிரேக்கர் சலோனிக்காவைக் கைப்பற்றியமையுடனும் முடிவடைந்த நிகழ்ச்சிகளின் போக்கைப்பற்றி ஏலவே நாம் கவனித்துள்ளோம். நாம் கண்டு கொண்டபடி இந்நிகழ்ச்சிகள் ஒசுற்றிய–அங்கேரிய முடியரசையும் அதனோடு சேர்மானியப் பூட்கையின் அடிப்படை நோக்கத்தையும்–அதாவது கிழக்குநோக்கி முன்னேறுதல்–தகர்த்தெறிவதாக அச்சுறுத்தின. சேர்மனி, தன் கிழக்குத் திட்டங்களுக்காக 1909 இற் போல் 1914 இலும் போர் செய்ய ஆயத்தமாயிருந்தது. முன்னொரு சந்தர்ப்பத்தில் ஆதிக்கமுடைய வல்லரசுகளுக்கு இரசியா விட்டுக்கொடுத்தது. ஆனால் 1914 இல் சேபியாவுக்கு அதன் விதிப்படி எது வாயினும் ஏற்படட்டுமென விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. இதன் விளைவு முதலாம் உலகப் போர் (1914–18) என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1914–1918 போரின் முன்னர் ஐரோப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் IX

கடந்த கால் நூற்றுண்டு

(1914—1939)

இந்நூற்றுண்டின் கடந்த இருபத்தைந்து வருடங்களும் சமகால வரலாறு. (1914—1939) உலக வரலாற்றில் தனிப்பட்டவொரு காலப் பிரிவாக விளங்குகின்றன. இக்காலப்பிரிவினை "சமகாலவரலாறு" எனக் கொள்ளலாம். எம் கண்முன்னே எத்தனையோ சம்பவங்கள் நிகழ்கின்றன. எம்மிற் சிலர் இந்நிகழ்ச்சிகளை உருவாக்குகின்றனர். நாமெல்லோருமே இந்நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படுவதாலும் அவற்றினை அன்றுடம் அலசி ஆராய்வதாலும் இவ்வுலகநாடகத்தின் உறுப்பினராகவே விளங்குகின்றோம். அறுக்கமுடியாத இவ்வீடுபாட்டினால், குறிப்பேடுகளையும், பற்றுக் குறிப்புக்களையும் ஆதாரசுருதியாக வைத்து யாக்கப்பட்ட கடந்த கால வரலாற்றினை விட "இந்நிகழ் கால வரலாற்றினை" நாம் நன்கு அறிந்தவர்கள் எனக் கொள்ளுதற்கிடமுண்டு. ஆனால் உண்மை இதுவல்ல. மலையொன்றினது முழுத் தோற்றத்தையும் உய்த்தறியத் தூரவெளி எத்துணை அவசியமோ, காலநிகழ்ச்சிகளைப் பிழையற அறிவதற்குக் காலவெளி, அத்துணை அவசியமானதாகும். ஐரோப்பாக் கண்டத்தின் நிகழ்ச்சிச்சுழிகள், அந்நிகழ்ச்சி பற்றிய நம் மதிப்பீட்டினை மயக்கிவிடுகின்றன. சுற்றிச் சுழன்று சுழிவிட்டு மாறி ஓடும் சருவதேசிய நிகழ்ச்சிகளைப் பிழையறத் தெரிந்து கொள்ளவும், அவற்றைக் காலம் கடந்து நிற்கும் உண்மைகளுடன் தொடர்புறுத்திப் பார்க்கவும் முடியாத நிலையில் நாம் மயங்கி நிற்கின்றோம். கணத்திற்குக் கணம் மாறிவரும் நிகழ்ச்சிச் சுழல் எம்மனதைக் குழப்பிவிடுகின்றது. நாம் நினைவு தடுமாறி நிற்கின்றோம். வாழ்க்கையே ஒரு பெருந் தடுமாற்றமாகத் தோன்றுகின்றது. அழிந்துவிடும் பொருட்களையே அடித்தளமாகக்கொண்டு மனித சமூதாயம் தன் அழியாச் சின்னத்தை அமைக்க முனைந்து விட்டதோ என்ற எண்ணம் மேலோங்கி நிற்கின்றது. ஆனால் கலங்கிக் குழம்பியோடும் இவ்வியக்கங்கட்கு ஒரு முடிவு உண்டு. அம்முடிவின் பின்னர்தான் இந்நிகழ்ச்சிகளின் உண்மைத் தன்மையை–மெய்ப்பொருளை–நாம் அறிய முடியும். அப்பொழுதுதான் அவை ஒவ்வொன்றின் முக்கியத்துவத்தையும் அறியலாம். எனினும் 1914 ஆம் ஆண்டுப் போருக்கும், 1939 ஆம் ஆண்டுப் போருக்குமிடையில் ஓடி மறைந்துவிட்ட இருபத்தைந்து வருடங்களும் ஒரு முழுமை பெற்றுத் திகழ்கின்றன. திசைமாறியோடிய இக்காலச் சுழியில் கடந்தகாலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் நிகழ்காலத்தையும் இணைத்துப் பார்க்கக்கூடிய சில சிறப்புப் பண்புகளை நாம் காண்கின்றோம். குழம்பிக் கிடக்கும் இக் கால நிகழ்ச்சிகளினூடே இழைவிட்டோடும், உலக அரசியற் பொருளாதாரப் போக்குமுறையினை நாம் உணர முடிகின்றது. இந்நிகழ்ச்சி மயக்கத்தினூடே நாம் இரு தலை யாய பண்புகளைக் காணலாம். கட்டுக்காப்பு அடிப்படையிற் புதிய தொரு சருவதேச அமைப்பினை நிறுவுவதற்கான முயற்சியே முதற்பண்பாகும். அந்நிர்மாண முயற்சியிலேற்பட்ட தோல்வியி னால், வேர்சை உடன்படிக்கை அமைப்பிலிருந்து விடுபட்டுச் செல்லுதலும், மக்களாட்சி மரபும், சுதந்திரப் பண்பும் நன்கு வேரூன்ற ஐரோப்பிய நாடுகளில் மிதவாதம் (தாராண்மை) தோல்வியுறுதலும் இரண்டாவது பண்பாகும். எனவே இனிவரும் பகுதிகளில் நாம் புதியதொரு ஐரோப்பா பற்றியும், சருவதேச சபையின் வளர்ச்சி வீழ்ச்சி பற்றியும், சருவாதிகார ஆட்சியின் வீழ்ச்சிபற்றியும் திரித்துணரப்பட்ட நாட்டினவாதத் தால் பொருளாதாரத்துறையிற் றேன்றிய பலாபலன்கள் பற்றி யும்–அதாவது உலகப் பொருளாதார ஒட்டம் ஒரு துறையில் எவ்வாறு முடக்கப்பட்டது என்பது பற்றியும் ஆராய்வோம். இவை யாவும் இக்காலப்பிரிவிற்கு ஓர் உணர்ச்சிமூனைப்பினை யும் உணர்ச்சிச் செறிவினையும் தருபவையாக அமைந்துள்ளன. இன்றைய எம் வாழ்வில் காணப்படுபவற்றுள் நிரந்தரமானவை எவை, காலப்போக்கில் அழிந்தொழிந்து போவன எவை என் பதனை வருங்காலம் ஒன்றேதான் நிர்ணயிக்கும். இன்றைய நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும், அவற்றுல் ஏற்படும் சலசலப் பினைக் கொண்டல்லாது வரலாற்றுப் பாதையில் அவை பெறும் முக்கியத்துவத்தைக் கொண்டே மதிப்பீடு செய்வதும் எதிர் காலம் ஒன்றினுலேயே முடியும். ஆனல் தன் கடமையிலுள்ள கடினம், நிகழ்காலத்தைச் சிறிதளவாவது விளங்கக் கூடிய முறையில் விளக்கும் பணியிலிருந்து வரலாற்றுசிரியனைத் தடுத் துவிடல் கூடாது.

(I)

1914—1918 போர்

போரின் நோக்கங்கள்.

1914 ஆம் ஆண்டு ஆரம்பித்த முதலாம் உலகப் போர் நான்கு வருடங்கட்குச் சிறிது கூடிய காலம் நடைபெற்றது. ஒன்றன்பின்னென்றுகத் தொடர்ந்து வந்த முக்கிய நிகழ்ச்சி கள் பலவற்றின் பின்னர், ஒசுற்றிய – அங்கேரி சேபியாவிற்கெதி ராக 1914 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆம் திகதி போர்ப் பிரகடனஞ் செய்தது. தொடர்ந்து இரசியாவிற்கும், பிரான்சிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் எதிராகச் சேர்மானிய தேசம் முறையே ஒகத்து மூதலாம் மூன்றும் திகதிகளிலும் இங்கிலாந்து சேர்மானிய தேசத்திற் கெதிராக ஒகத்து நாலாம் திகதியும் போர் தொடங்கின. முடிவில் இந்தப் போர்க்களரிக்குள் உலகநாடுகள் இழுக்கப் பட்டுவிட்டன. வரலாற்றில் முன்னெப்பொழுதுமில்லாத வகை யில் ஐம்பத்தொரு மாதங்களாக நடைபெற்ற இப்போரின் முடிவில் பகைநாடுகள் வீழ்ந்தன. அதனுற் படையிகலொழிவு ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டன. 1918 ஆம் ஆண்டு செத் தெம்பர் மாதம் 29 ஆம் திகதி பல்கேரியாவும், ஒற்றேபர் 30 ஆம் திகதி துருக்கியும், நவெம்பர் 3 ஆம் திகதி ஒசுற் றிய–அங்கேரியும், நவெம்பர் 11 ம் திகதி சேர்மானிய தேசமும் படையிகலொழிவு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டு அடுபோரை நிறுத்தின. போரினுல் ஏற்பட்ட பல இன்னல்களுக்கிடையேயும் உறுதியுடனும் வைராக்கியத்துடனும் விடாது தொடர்ந்து போரிட்ட பண்பு ஒன்றினைக் கொண்டே, பொருத நாடுகளிடையே இருந்த சிக்கல்களின் தன்மையை நாம் உணரலாம். மத்திய பேரரசுகள் தம்படைப் பலத்தை நன்றுக நிறுவுவதோடல்லாது ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் அப்படைவலி ஆட்சியைப் பரப்பிப் போரிட் டன. ஆனுல் நேசநாடுகளும் அவற்றின் துணை நாடுகளும் மேம்பட்ட உண்மைகட்காக அவ்வுண்மையினை மற்ற நாடுக ளுக்கும் உணர்த்துவதற்காகப் போரிட்டன.[1] படை வலி ஆட்சி என்ற அரக்கனை ஓட்டி, தனிமனிதனுக்குச் சுதந்திரம் வழங் காத் தனியாட்சி முறையினை ஒழித்து, எல்லோரும் ஓர் இனம் எனக் கொள்ளும் சுதந்திர அரசினை நிறுவுவதுடன் போரினை முற்றுக ஒழிக்கும் போராக இவ்வுலகப் போர் இருத்தல் வேண்டும் என அறிஞர்கள் அபிப்பிராயப்பட்டனர். மக்களாட்சி ஓங்கிச் சிறக்கவும் நீதியும் நேர்மையும் நின்று நிலவவும் தக்கதோர் இடமாக இவ்வுலகம் விளங்க வேண்டுமென அவர் எண்ணினர். போரினைப் போலவே அதன் முடிவு தந்த பலன்களும் மிகப் பெரியனவாகவே இருந்தன. ஆபிசு பேக்கு, ஓகன்சொலேன், உரோமனோவு என்ற பேரரசுப் பரம் பரைகள் அரசியலுலகிலிருந்து அகற்றப்பட்டன. ஒசுற்றிய–அங் கேரியப் பேரரசு அழிந்தது. சேர்மானியப் பேரரசின் பிடியி

---

[1] அவைகளுக்கு எகாதிபத்திய நோக்கங்களிருந்தனவென்பது இரகசியப் பொருத்தனைகள் மூலம் தெளிவாகிற்று. இருந்தபோதிலும், "எம் எதிரிகள் சிறந்த நோக்கங்களுக்காகப் போரை நடத்துவிக்க வேண்டுமென்று குறிப்பாக உறுதிகொண்டிருந்தனர்" என்பதற்குச் சேர்மனிகூடச் சான்று பகர்ந்தமை குறிப்பிடற்பாலது. சஞ்திபதி உவில்சனின் பதினன்கு அம்சத்திட்டம், அமைதி உடன்பாட்டின் அடிப்படைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தத்துவங்களைக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து பல பாகங்கள் அகற்றப்பட்டன. அகன்ற ஒற்ரோமன் அரசு குறுகிச் சிறியதொரு துருக்கியக் குடியரசாக மாறிற்று. இப்பேரரசுகள் மூன்றினதும் சிதைவில் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தேசிய இயக்கத்தின் நோக்கங்கள் நிறைவேறின. இவையெல்லாவற்றிற்கும் மேலாக, உலகக் குடியரசு என அழைக்கப்படத்தக்கதோர் ஆட்சிமுறைக்கும் வித்திடப்பட்டது. சண்டைகளைச் சமாதானத்தின்மூலம் தடுக்கவும், அநியாயத் தாக்குதலிலிருந்து உலகினைக் காப்பாற்றவும் உலகம் முழுவதும் ஒன்று சேர்க்கப்பட்டது.

போரின் தன்மை.

முதலாம் உலகப்போர், வரலாற்றுப்பாதையில் பெரியதொரு மாற்றத்தைக் கொணர்ந்தது. ஐரோப்பா முழுவதையும் கொலைக் களமாக்கிய இப்போர், போர் என்பது வீரத்தின் சின்னம், மற உணர்வின் வெளிப்பாடு என்ற போர்பற்றிய பழைய கருத் தினை அறவே நீக்கிற்று. மனிதர் புழுவெனப் பூமிக்குள் கிடந்து துவண்டு சண்டையிட்ட அகழிப்போரும், யுத்தகளத் தினைச் சவச்சாலையாக்கிய குண்டுகளும், எதிரியின் தாக்குதலுக் கஞ்சி ஒளி நீக்கி இருட்போர்வையினுட் கிடந்த நகரங்களும், மாரியெனப் பொழிந்ததால் பாதுகாப்பற்றிருந்த மக்களை ஆயிரக் கணக்கில் அழித்த குண்டுகளும், யுத்தத்தின் கோரத்தினை, அதன் அரக்கப்பண்பினை, நன்கு விளக்கின. அட்டார், அடாதார் என்ற பண்டைய பகுப்புமுறை அற்றுப்போய் எல்லோரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ போரில் பங்குபற்றினர். அடு போர் வீரராகவும், போர்ப்பொருள் உற்பத்தியாளராயும் எல் லோருமே யுத்தத்தின் மரணப்பிடியுள் சிக்கினர். இங்கிலாந்து நெப்போலியனுடன் சீவமரணப் போர் நடத்திய காலத்து யேன் ஒசுத்தின் அம்மையார் எழுதிய நவீனங்களில் போரின் இத்தன்மையான பயங்கரத்தினை நாம் காணமுடியாது. ஆனால் 1914—18 ஆம் ஆண்டுகளில் நடந்த போரோ, மக்கள் வாழ்க்கை முழுவதும் வியாபித்து போரிற்குப் புறம்பானது எதுவும் இல்லை யெனும் வகையில் தன் அசுரத் தன்மையைக் காட்டிற்று. இந் நாட்களில் போரெனில் நாட்டின் மனுவலுவளம் முழுவ துமே ஒருங்கு திரட்டப்பட வேண்டியிருக்கிறது. கழனிகளிலும் கைத்தொழிற்சாலைகளிலும் ஆடவர் ஆற்றிய பணிகளை அரிவை யர் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட கால வெல்லைக்குட் போர் முடிந்துவிடுமென அறுதியிட்டுக் கூற முடியாது என்ற அனுபவ உண்மையை இப்போரினால் நாம் நன்குணர்ந்துள்ளோம். படைப்பலத்திலும் ஆயுதபலத்திலும ஏற்றத்தாழ்வு அதிகமிலாத இருநாடுகளிடையே நடக்கும் போர் எவ்வளவு காலத்திற்கு நடக்குமெனத் தோராயமான முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிற் கூடச் சொல்லிவிட முடியாது என்ற கசப்பான உண்மையை எமக்கு இப்போர் உணர்த்தியுள்ளது. போர் தொடங்கியபொழுது இதோ ஒருசில மாதங்களுக்குள், "நத்தாருக்கு முன்", முடிந்து விடும் எனப் பலர் நம்பினர். போர் நீடிக்கப்பட்டால் நொய்ந் திருக்கும் பொருளாதார அமைப்பு இற்று வீழ்ந்துவிடுமென்ற எண்ணக்கருத்து நிலவியது. ஆனால் வரலாறு இவற்றையெல் லாம் பொய்ப்பித்து விட்டது. அழியாப் பொருள்வலு உள்ள நாடுதான் முடிவில் வெற்றி பெறுமெனினும் அந்நாடு வெற்றி யடைவதனை வலுக்குறைந்தநாடு சிறிதுகாலத்திற்காவது தடுத்து நிறுத்த முடியுமென்பதைக் கண்முன்னே கண்டோம். "காலை போர் மாலை வெற்றி" என்ற தன்மை போய் ஓரடி நிலத்திற்கு ஓராயிரம் உயிரும் ஓயாத போரும் என்ற நியதி யாக மாறிவிட்டது. இன்னும் தற்காலப் போர் பண்டைய போர்களைப் போல் களத்தில் நிகழ்வதல்ல. போர்க்களத்திலும் நாட்டிலும் என இரு முனைகளில் இன்றைய போர் நடக் கின்றது. இம்முக்கிய உண்மையையும் முதலாம் உலக யுத்தம் எமக்கு உணர்த்தியுள்ளது. களத்தினிற் பெறும் வெற்றி யால் மாத்திரம் போரில் வென்றுவிட முடியாது. நாட்டு முன்னணியிலும் வெற்றியுணர்ச்சி திகழவேண்டும். பகைப்படை களை ஒழித்து வெற்றிபெற்ற பின்னரும், போர் ஏற்படுத்திய துன்பக்கோள்களினால் நாட்டு மக்கள் மனவலிமையை இழப் பாரேயாயின் அந்நாடு போரில் தோற்றதென்றே கொள்ள வேண்டும். இப்போரால் ஏற்பட்ட பலாபலன்களில் இறுதியாக ஒன்றுண்டு. பொருள்நூற்கண்கொண்டு பார்க்கும்பொழுது, இந் நாடுதான் போரில் வெற்றியுற்றது எனக் குறித்துச் சொல்ல வியலாது. எனெனில் போரினால் ஏற்பட்ட செல்வச் சிதைவு ஈடுசெய்ய முடியாதவொன்று. போரினாலேற்பட்ட அவ்வறுமை நிலையை இருநாடுகளுமே தாங்க வேண்டியிருக்கின்றது. வென்ற நாடு தோற்ற நாட்டிடமிருந்து பெறும் இழப்பீட்டினால் அப் பாரத்தைக் குறைத்துவிட முடியாது. மேலும் போர்க்கால இறுதியில் முடிபவையல்ல இப்பிரச்சினைகள். தோல்வியுற்ற நாடு தனது முழுப்பலத்தினையும் மீண்டும் பெற்றபின்னரும் அதன் எதிர்ப்பினைத் தாங்கத்தக்க சத்தி, வெற்றிபெற்ற நாட்டி டம் இருத்தல் வேண்டும். இதனால் போருக்குப் பின்னரும் படைபூண்ட சமாதானமே நிலவும்.

போரின் முதல் இரு ஆண்டுகள்.

பகை நாடுகளைத் துரிதமாய்த் தோற்கடித்துத் தாம் பெரு வெற்றியீட்டவேண்டுமெனச் சேர்மானியர் கொண்டிருந்த எண் ணம் மேற்குப் போர் முனையில் வெற்றிபெறவில்லை. அவர்கள் எண்ணஞ் சிதறுண்டு, அவர்களைப் பெரியதோர் ஏமாற்றத்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்த்தியது. 1914 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை நடந்த மாண் போரினால் பாரிசு நகரம் காப்பாற்றப்பட்டது. இதனால் மேற்குமுனையில் நடந்த போர் முற்றுகைப்போராக மாறிற்று. சேர்மானியப் படைகளும், நேசநாட்டுப் படைகளும் நூற்றுக்கணக்கான மைல் தூரத்திற்கு அகழிகள் வெட்டி அவற்றுள்ளிருந்து போரிட்டன. ஈற்றில் பெல்சிய நாட்டையும் பிரான்சு தேசத்தையும் கைப் பற்றிச் சேர்மானியர் முதலில் வெற்றிபெற்றனர். சேர்மானிய ரின் புறக்காவற்படைகள், பிரான்சுத் தலைநகரத்திற்கு ஐம் பத்தைந்து மைல் தூரத்திற்குள்ளும் ஆங்கிலத் துறைமுகமொன் றினுக்கு அறுபத்தைந்து மைல் தூரத்திற்குள்ளும் புகுந்து விட்டன. கிழக்கு முனையிலிருந்து தம் தாயகத்தை நோக்கி முன்னேறிய இரசியப் படையினைத் தளபதி வோன்கிண்டன் பேக்கின் தலைமையில் நடந்த சேர்மானியப்படை முறியடித்தது. கிழக்கு முனையிலிருந்து வரும் இப்படையெடுப்பினால் மேற்கு முனைப் போரில் சிறிது ஓய்வு ஏற்படுமென நம்பியிருந்த நேசநாட்டினர்க்கு இது பேரிடியாக விளங்கிற்று. சேர்மானியர் பக்கம் சேர்ந்து துருக்கியும் நேசநாட்டினர்க் கெதிராகப் போர் தொடுத்தது. ஆனால் பிரித்தானியா, சைப்பிரசைக் கைப்பற்றி யதுடன் மாத்திரமல்லாது, எகித்தினைத் தம் பாதுகாப்பு நாடு எனப் பிரகடனப்படுத்தியதன் மூலமும் துருக்கிமேல் பழிக்குப் பழி வாங்கிற்று. பல்கேரியாவும் துருக்கியைப் போலவே சேர் மானியர் பக்கஞ் சேர, இத்தாலியோ மூவர் நட்புறவு— ஒப்பந்தத்தினைக் கடிந்துரைத்து நேசநாடுகளுடன் சேர்ந்தது. முதலாம் உலகப் போரில் 1916 ஆம் வருடத்தில் மறக்கமுடி யாத பல சம்பவங்கள் நிகழ்ந்தன. அவ்வாண்டுதான் "இடா டினல்சுப் படையெடுப்பு" நடைபெற்றது. இடாடினல்சுக் கட லிடுக்குவழியை, மத்திய தரைக்கடலுக்கும் கருங்கடலுக்கும் ஊடாக விரித்து, கொன்சுதாந்திநோப்பிளைத் துருக்கியின் ஆதிக் கத்திலிருந்து விடுவித்து, இரசியாவையும் அதன் தனிப்பட்ட நிலையிலிருந்து விடுவித்து, மற்ற நாடுகளுடன் தொடர்புபடுத்தி இரசியா உட்பட எல்லா நாடுகளும், சேர்மானிய தேசத்தை ஒரே சமயத்தில் முற்றுகையிடச் செய்தல் வேண்டுமென்பதே இப்படையெடுப்பின் அடிப்படை நோக்கமாகும். இம்முயற்சி தோல் வியடைந்தது. எனினும், இது துருக்கியைப் பேரின்னலுக்குள் ளாக்கியது என்பதைப் படைத்தலைவர் உலோரன்சின் கூற்றி லிருந்து நாம் அறியலாம். "அந்தச் சாக்களத்தில் மிஞ்சி யிருந்த ஒற்றோமன் முதலணிப்படையினர் முற்றிலும் அழிக்கப் பட்டனர்" என அவர் கூறியுள்ளார். வோடன் கோட்டையைக் கைப்பற்றச் சேர்மானியர் அக்கோட்டையைச் சுற்றிப் பெப்புருவரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் யூலை வரை செய்த போரும் அதனை எதிர்த்து மறு பக்கத்தினர் யூலை தொடக்கம் நவெம்பர் வரை நடத்திய போரும் சோம் போரும் 1916 ஆம் வருடத்திய இரு பெரும் போர்க ளாகும். ஆனால் இப்போர்களினால் முக்கியமான முடிவு எதுவும் தோன்றவில்லை. 1916 ஆம் ஆண்டில் நேசநாடுகளுக்கு இன் னொரு தோல்வி ஏற்பட்டது. மத்தியப் பேரரசுகள் பல்கேரிய உதவியுடன் சேபியாவைக் கைப்பற்றியதை எதிர்த்து உரூமே னியா 1916 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் ஒசுற்றிய–அங்கேரி மீது போர் தொடுத்தது. ஆனால் அவ்வருட முடிவிற்குள் உரு மேனியா முறியடிக்கப்பட்டது. உரூமேனியத் தலைநகரம் பகை வர் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

போரின் மூன்றும் ஆண்டு.

1917 ஆம் வருடத்தில் நேசநாடுகளுக்குப் பல இன்னல்கள் ஏற்பட்டன. இவற்றினூடே இறுதிவெற்றிக்கான அறிகுறிகள் தென்பட்டானும், இவ்வருடத்தில் நேசநாடுகள் பேரழிவுகள் பலவற்றினைத் தாங்கவேண்டிய நிலையிலிருந்தன. ஒற்றேபர் மாதம் 1917 ஆம் ஆண்டு மேற்கு முனையில் "கபறெற்றே" எனுமிடத்தில் ஒசுற்றியப்படை இத்தாலியரைச் சின்னபின்னப் படுத்தியது. தோற்ற இத்தாலியப் படைக்கு உதவியளிக்க, ஆங்கில பிரான்சுப் பட்டாளங்கள் உடன் அனுப்பப்பட்டன. இரசியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் கிழக்குப் போர்முனை யில் பெரியதொரு மாற்றத்தினை ஏற்படுத்திவிட்டது. போரின் ஆரம்ப காலத்தில் இரசியா அடைந்த படுதோல்விகட்கு ஈடு செய்யும் வெற்றியீட்டப்படவில்லை. இதனால் இரசியப் படை யினரின் மனைதிடம் பாதிக்கப்பட்டு, அவர்கள் வலிமையும் ஆர்வமும் குன்றிநின்றனர். பின்னடியில் ஆயுதபலம் அதி கரிக்கப்பட்டிருந்துங்கூட முந்திய தோல்வி நினைவுகள் அவர் களைச் செயலற்றவர்களாக்கி விட்டன. புரட்சிக்குப் பின் நிறுவப் பட்ட காவலரசு, புதிய ஊக்கத்துடனும் உறுதியுடனும் போரை வெறுத்தும், நேசநாடுகளின் தூண்டுதலினால் கலீசி யாவைத் தாக்க ஆரம்பித்தது. இதுவும் தோல்வியாகவே முடிந் தது. 1917 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் நடந்தேறிய இரண் டாம் புரட்சியுடன் இரசியா முதலாம் உலகப் போரிலிருந்து விலகியது. படையிகலொழிவு ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்டபின் அதனைத் தொடர்ந்து சமாதானத்திற்கான இணக்கப் பேச்சுக் களை ஆரம்பித்தது. சேர்மானிய தேசம் இரசியாவை அடக்க நினைத்தது. பிறெத்து இலிதொசுக்கு ஒப்பந்தத்திற் கைச் சாத்திட மறுத்து, பிறநாட்டலுவலாளர் இலியோன் துரொசுக்கி தம் பதவியிலிருந்து விலகினர். ஆனால் இலெனின் இவ்வெதிர்ப் பினைப் புறங்கண்டார். 1918 ஆம் ஆண்டு மாச்சு மாதம் இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வொப்பந்தத்தினால் இரசியா தன் எல்லை மாகாணங்களையும், யூக்கிரேன் நாட்டையும் இழந்தது.[1] "பிரிவினை, அடிமைத்தனம், இழிவு என்ற அதளபாதாளத்துள் இரசியா தள்ளப்பட்டிருப்பதை" நினைந்து இலெனின் வருந்தினர். எனினும் இரசியாவிற்குச் சிறிது கால ஓய்வு அவசியமாகவிருந்தது. எனவேதான் பிறெத்து இலி தொசுக்கு ஒப்பந்தம் வழிகோலிய சரணாகதிக்கு அவர் உடன் பட்டார். ஆனால் இரசியாவிற்குத் தான் அளித்த இந்நிபந் தனைகளைச் சேர்மானிய தேசம் நினைவுகூரும் தருணத்தினை வேர்சை ஒப்பந்தம் அளித்தது. அந்நேரம் வேர்சை ஒப்பந் தத்தைச் சேர்மனி முழுமனத்துடன் எதிர்த்தது. சேர்மானி யர் சமாதானம் பற்றிக் கொண்டிருந்த எண்ணமும் அவ்வா றான அனுபவமொன்றும் இல்லாதிருந்தால் சேர்மானிய எதிர்ப் பிற்கு மற்ற நாடுகள் செவிசாய்த்திருக்கும். ஆனால் அமெரிக்கச் சனாதிபதி உவில்சன், "சேர்மானிய தேசத்தை ஆண்ட படைத் தலைவர்கள் விட்ட அதே பிழைக்கு நாமும் அடிமைகளாதல் கூடாது. நீதிக்கும் நேர்மைக்கும் சோதனைகாலம் வந்துவிட் டது. இதனைக் கொண்டே இனி வரவிருப்பனவற்றையும் நாம் மதிப்பீடுசெய்வோம்" என்று 1918 ஏப்பிரிலில் உலக அபிப்பிரா யத்தைத் தெளிவுறக் காட்டினன். இரசியா யுத்த அரங்கினின்று நீங்கியது போர்நிலையைப் பெரிதும் பாதித்தது. இரு முனைகளிலும் போரிடவேண்டிய அவசியம் சேர்மானிய தேசத்திற்கில்லாது போயி ற்று. எனவே தன் படையணிகள் பலவற்றினை மேற்கு முனைக்கு அனுப்பிற்று. அதனால் முதன்முறையாகச் சேர்மானியப்படை யின் எண்ணிக்கை நேசப்படைகளினது எண்ணிக்கையிலும் கூடியதாயிருந்தது.

---

[1] பிறெத்து—இலிதொசுக்கு ஒப்பந்தத்தில் (மார்சு 1918) போலந்தும் போற்றிக்கு மாகாணங்களும் "சோவியத்து இறைமையின்கீழ் இனியும் இருத்த லாகாது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் "சேர்மனியும் ஒசுற்றிய-அங்கேரியும், அவ்விரு ஆள்புலங்களின் வருங்கால நிலைமை பற்றி அந்தந்த நாட்டுக் குடித்தொகையினருடைய உடன்பாட்டுடனேயே நிச்சயிக்கவேண்டுமென்றி ருக்கின்றன" எனவும் இவ்வொப்பந்தத்திற் குறிக்கப்பட்டுள்ளது. இரசியாவும் யூக்கிரேன் நாடு விடுதலையடைவதை ஏற்றுக்கொண்டது. இரசியாவினின்று பிரித்தெடுக்கப்பட்ட ஆள்புலங்கள் தன்னுட்சியுரிமையுடையன போன்று தோற்றி னும், அவை சேர்மனியின் கூட்டுத் தலைமையின்கீழ் இயங்குவனவாகு மென்பது வெளிப்படையாயிற்று. வீலர் பெனெற்று என்பவரது நூலின் ஐந் தாம் பிற்சேர்க்கையில் இவ்வொப்பந்தத்தின் வாசகம் அச்சிடப்பட்டுள்ளது. அதே திங்களில், பியூக்கரெசுப் பொருத்தனை செய்யப்பட்டது. அதன் பிரகாரம், உரூமே னியாவுக்குரிய இருப்புப்பாதைகள், கோதுமைப்பயிர்கள் நிலஎண்ணெய்க் கிண றுகள் ஆகியவற்றைக் காலவரையறையின்றிச் சேர்மனியின் அதிகாரத்தின்கீழ் கொணர்ந்ததின் மூலம் உரூமேனியா சேர்மனியின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசியா ஐரோப்பியப் போரிலிருந்து விலகியதால் ஏற்பட்ட விளைவு, அதே காலத்தில் நடந்த இன்னொரு மூக்கிய நிகழ்ச்சி யொன்றினால் பெரிதும் ஈடுசெய்யப்பட்டது. போரினது தன் மையைப் பெரிதும் பாதித்த அந்நிகழ்ச்சி ஐக்கிய அமெரிக்கா போரில் நுழைந்தமையாகும். 1917 ஆம் ஆண்டில் சேர்மா னியர் நீர்மூழ்கிக்கப்பல் யுத்தமுறையைக் கடைப்பிடிப்பதெனத் தீர்மானித்ததன் விளைவாகவே ஐக்கிய அமெரிக்கா போரில் நுழைந்தது. பிரித்தானியக் கப்பற்படையினை நேர்முகமாக எதிர்க்கச் சேர்மானியக் கப்பற்படையினர் துணியவில்லை, ஒரே யொரு முறை மாத்திரம் அப்படிச் செய்தனர். அவ்வாறெதிர்த்த யத்துலந்துப் போரின் (1916, மே 31-1916, யூன் 1) விளைவாகச் சேர்மானியர் தம் துறைமுகத்தை விட்டு வெளிக்கிளம்ப முடி யாது போய்விட்டது. இதனால் அவர்கள் வேறுவழி முறைகளைக் கையாள முனைந்தனர். பிரித்தானியாவின் அச்சாணியான வணி கத்தைத் தகர்ப்பதற்கு அவர்கள் நீர்மூழ்கிக்கப்பல் யுத்தமுறை யினைக் கையாண்டனர். 1915 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் பிரித்தானியாவைச் சுற்றிக் கடற் கீழ் முற்றுகையிடுவதெனப் பிரகடனப்படுத்தினர். பிரித்தானியாவோ சேர்மானியரது இச் செயலைத் தகர்க்கும் எண்ணத்துடன் (1915 மாச்சு) தடுபொருள் கள் பற்றியிருந்த எல்லாக் கட்டுப்பாடுகளையும் தளர்த்திற்று. நீர்மூழ்கிக் கப்பல் யுத்தத்தின் பேய்நிழல் எங்கும் பரவியது. மே மாதம் அத்திலாந்திக்குப் பகுதியில் உலவிய உலூசித்தானிய கப்பல், சேர்மானிய நீர்மூழ்கிக் கப்பலொன்றினால் தாக்கப்பட் டது. அக்கப்பலுடன் ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரயாணிகளும் மூழ்கினர். பிரித்தானியத் துறைமுகத்தை விட்டுப்புறப்பட்ட ஒவ் வொரு நாலு கப்பல்களில் ஒன்று அமிழ்த்தப்பட்ட தென்றும் 90 இலட்சம் தொன்னிற்குக் கூடிய நிறையுடைய வணிகக் கப் பல்களும் இதற்குப் பலியாயின என்றும் கணக்கிடப்பட்டது. வணிகக் கப்பல்களைத் தகுந்த படையணிப்பாதுகாப்புடன் கொண்டு செல்வதன் மூலமும், இழந்த கப்பல்களைப் போலல்லாமற் பெரியனவாகக் கப்பல்களைச் செய்வதன் மூலமும், அமெரிக்கப் போர்க்கப்பல்களின் உதவியினாலும், பிரித்தானியர் இத்தொல் லையினுக்கொரு முடிவு கண்டனர். இதனால், ஆங்கிலேயரைச் சரண்புகச் செய்யவேண்டுமென்ற சேர்மானிய நோக்கம் நிறை வேற முடியாது போயிற்று. எனினும் நீர்மூழ்கிக் கப்பல் யுத்தமுறையின் தொடக்க நாட்களில் சேர்மானியர் எண்ணம் நிறைவேறுவதற்கான சாத்தியக் கூறுகள் சில இருந்தன என்பதை நாம் மறந்துவிடல் கூடாது. தம் நோக்கம் நிறை வேறும் என மனப்பால் குடித்திருந்ததால், சேர்மானியர், இன்னுமொரு பெருந் தவற்றினை இழைத்தனர். போரில்

ஐக்கிய அமெரிக்கத் தலையீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொதுமல் நிலை வகித்த நாடுகளினது கப்பல்களையும் தாக்க ஆரம்பித்தமையே அத்தவறுகும். சேர்மானிய தேசம், இதனால் வலி பொருந்திய நாடுகளின் பகைமையைப் பெற்றது. பெல்சிய நாட்டைத் தாக்கியதால் ஏற்பட்ட விளைவினுக்கு இதனை நாம் ஒப்பிடலாம். கட்டுப்பாடற்ற முறையில் நீர்மூழ்கிக் கப்பற் போர் முறைமையினைக் கையாளப்போவதாகச் சேர்மானியர் 1911 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதி முடங்கல் மூலம் ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கு அறிவித்தனர். "தமது நாட்டில் உணவின்மையை ஏற்படுத்தி அதன்மூலம் சேர்மானிய தேசத்தைச் சரண்புகுவிக்க விரும்பிய ஆங்கில முயற்சிகளினால் சேர்மானியர் ஒவ்வொருவரும் சின்னஞ்சிறு சிறார் தொடக்கம் வயதுவந்த பெரியோர் வரை எல்லோரும் தம் வாழ்க்கை வசதியினை இழந்து நின்றனர். சேர்மானிய மக்களைப் பட்டினிபோட்டு அவர்களை வெல்ல முயற்சி செய்யும் இப்போர்முறையை எதிர்க்கக் கடற்போரில் பிரயோகிக்கும் போர்க் கருவிகள் பற்றி நாம் கொண்டிருந்த வரையறையினையும் கட்டுப்பாட்டையும் உதறித் தள்ளவேண்டிய நிலையிலிருக்கின்றோம்" என அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது. பிரித்தானியாவின் முற்றுகை முறையினை எதிர்த்து வெல்வதற்கு, பிரித்தானியாவுடன் வணிகத் தொடர்பு கொண்டுள்ள நொதுமல் நிலை நாடுகளின் கப்பல்களையும் தாக்கலாம் என்ற சேர்மானிய வாதத்தினை ஐக்கிய அமெரிக்கா ஒதுக்கித் தள்ளியது. தான் சேர்மனியுடன் கொண்டிருந்த சூழியற் றொடர்பினைத் துண்டித்தது மாத்திரமன்றி, 1917 ஆம் ஆண்டு எப்பிரில் மாதம் 17 ஆம் திகதி சேர்மனிக் கெதிராகப் போரும் தொடுத்தது. அந்நாட்டின் படைத்தலைவர்கள் இழைத்துள்ள துன்பங்களும், செய்த அவமதிப்பும் தமது நாட்டையும் பாதித்ததனாற்றான் தாம் போர்க் கோலம் பூண்டனரென அமெரிக்கச் சனாதிபதி குறிப்பிட்டாரெனினும் சுய நன்மையை மட்டும் கருத்திற் கொண்டு அமெரிக்கா போர்க்களத்திற் புகவில்லை. "உலகில் மக்களாட்சி நின்று நிலவுவதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துதற்காகவும், மக்களாதரவு சிறிதுமில்லாத படைத்தலைவர்களது அடங்கா ஆசைக்கென இயங்கும் படைவலிபூண்ட தனியாட்சி நாடுகளினால் உலக சமாதானத்திற்கு ஊறு விளையாமல் தடுப்பதற்குமாகவே அமெரிக்கா போர்க்களத்திலிறங்கிற்று" எனச் சனாதிபதி உவில்சன் எடுத்தியம்பினர். அமெரிக்கப் போர்க் கோலத்தினால் நட்புறவு நாடுகளின் நிதிவலுவும் மனுவலுவும் அதிகரித்தன. இதனால் பெருமளவில் நிதி திரட்டப்பட்டது. போர்க் கப்பல்கள் கட்டப்பட்டன. படைகட்குக் கட்டாய ஆட்சேர்ப்பு நடந்தது. 1918 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது இலட்சம் அமெரிக்கப் போர் வீரர் ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டனர். அமெரிக்கா அளித்த இம்மனுவலு போரின் போக்கினை மாற்றுவதில் எத்துணை முக்கிய அங்கம் வகித்தது என்பதை நாம் சேர்மானியத் தளபதி உலூதென்தோவு அவர்களது கூற்றிலிருந்து அறியலாம். "அமைதிநிலவிய சில போர்முனைகளிலிருந்து ஆங்கில, பிரான்சுப் படைகளை விடுவித்து அவ்விடங்களில் அமெரிக்கப் படையினை நிறுவியதால் எமது நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் அமெரிக்கப்படைகள் போரின் போக்கினைப் பெரிதும் தீர்மானித்தன" என அவர் "எனது கதை" என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

போரின் நான்காம் ஆண்டு.

இந்நிகழ்ச்சிகளின் முனைப்பாகவே முதலாம் உலக யுத்தத்தின் கடைசிக் கட்டம் அமைந்திருந்தது. பிரான்சு முன்னணியில் சேர்மானியப் படைவீரர் அதிக தொகையினராக இருந்தமையாலும், ஐக்கிய அமெரிக்காவின் முழுப்பலமும் உபயோகிக்கப்படுவதன் முன்னர் போர் நிலைமையைத் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளவேண்டுமென்ற நிர்ப்பந்த நிலையினாலும் சேர்மானியப் படைத் தலைமைப் பீடத்தினர் 1918 ஆம் ஆண்டு மாச்சு மாதம் இறுதித் தாக்குதலை ஆரம்பித்தனர். இத் தாக்குதலை எதிர்க்க மாசல் வொக்கு என்பவர் நட்புறவு நாட்டுப்படைகளின் பெருந்தலைவராக நியமிக்கப்பட்டார். நட்புறவு நாடுகள் நடாத்திய எதிர்த்தாக்குதலின் வெற்றிக்கு, ஒருமைப்படுத்தப்பட்ட தலைமையில் நடந்த போராட்டமே காரணமாக விருந்தது. சேர்மானியத் தளபதி உலூதன்தோவு குறிப்பிட்டுள்ளதுபோல், இவ்வொருமைப்படுத்தப்பட்ட தலைமையில் சேர்மானிய அடுபோர் வலு பெரிதும் குறைக்கப்பட்டது. மாச்சு மாதத்தில் ஆரம்பித்த தாக்குதலின் பலனாகத் தம் சேம மூலங்களையும் சேமப்படைகளையும் இழந்துநின்ற சேர்மானியர் தோல்விமேற்றோல்வி கண்டனர். ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்த இத்தோல்விகளைத் தாங்கமுடியாது சேர்மானியப்படைகள் பின்வாங்கத் தொடங்கியதும் யுத்தம் முடிவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. பின்வாங்கும் தம்மை நிலைகுலைத்து முறியடித்து விடுவார்களென்ற பயத்தினாலும் சேர்மானிய தேசமே தாக்கப்படலாம் என்ற பயத்தினாலும் உடனே போரை நிறுத்திப் படையிகலொழிவு ஒப்பந்தம் கோரும்படி படைத்தலைவர்கள் சேர்மானிய அரசாங்கத்தை வேண்டினர். "சமாதானத்திற்கான எமது வேண்டுகோளை உடனே பிரகடனப்படுத்துக. எமது வீரர் இன்று எதிர்த்து நின்றாலும் நாளை நடப்பது நம் கையில் இல்லை" என்ற வாசகம் கொண்ட தந்தியொன்றினைத் தளபதி உலூதன்தோவு சேர்மானிய மண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலநாயகனுக்கு ஒற்றேபர் மாதம் முதலாம் திகதி அனுப்பினர். 1916 ஆம் ஆண்டு முதல் முப்படை முதல்வராகக் கடமையாற்றி வந்த மாசல் உவொன் கின்டன்பேக்குத் தாம் அனுப்பிய முடங்கலில் பின்வருமாறு குறிப்பிட்டார். "பகைநாடுகளுடன் சமாதானம் செய்யவேண்டுமென விடுத்த விருப்பத்தினைப் படைத்தலைமைப்பீடம் மீண்டும் வற்புறுத்துகின்றது. மசிடோனிய முன்னணியில் ஏற்பட்ட வீழ்ச்சியாலும், மேற்கு முனையில் உள்ள எமது சேமப்படைகள் தளர்வுற்றிருப்பதாலும், எமது படைவலியினால் அவர்களைப் பணியவைக்கும் நிலைமையில் நாம் இப்போது இல்லை. பகை நாடுகள் நாளுக்கு நாள் புதிய படைப்பலத்துடன் தாக்குகின்றன. எதிர்வரும் பகைவர் தாக்குதல்களைச் சேர்மானியர் நெஞ்சுரம் கொண்டு நெஞ்சுத்துணிவுடன் எதிர்த்து வெற்றியுடன் நிற்கின்றனர். எனினும் நிலைமை நாளுக்கு நாள் தளர்வுறுகின்றது."[1] போர் நிலைமை மேலும் மோசமாகலாம் என்பதனை நன்குணர்ந்த படைத் தலைமைப் பீடத்தினர் இவ்வாறு மென்மேலும் நெருக்கியமையால், சேர்மானிய அரசாங்கம் நட்புறவு நாடுகளிடம் படையிகலொழிவு வேண்டி நின்றது. இந்நிலையில் போரின் போக்கு படைத்தளபதிகளின் அதிகாரத்திலிருந்து விடுபட்டது. பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் தளபதி உலூதன்தோவு சமாதான நடவடிக்கைகளை நிறுத்தும்படி வேண்டியபொழுது அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

பதினான்கம்சத் திட்டம்.

நான்கு ஆண்டுகட்குப் பின் முதன் முறையாக மீண்டும் சூழியற்சாலைகள் அரசியல் அலுவல்களில் முக்கியத்துவம் பெற்றன. படைத்தளபதிகளால் தட்டிப் பறிக்கப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் சூழியல் வல்லோர் கைக்கு வந்தன. மத்திய அரசுகளுக்கும் அமெரிக்கச் சனுதிபதிக்குமிடையில் முடங்கல்கள் பரிமாறப்பட்டன. சமாதானத்திற்கு அச்சாணியாக விளங்கிய பதினான்கு அம்சத் திட்டத்தினை அமெரிக்கப் பேரவையில் 1918 ஆம் ஆண்டு சனவரி மாதம் 8 ஆம் திகதி தாம் நிகழ்த்திய பேருரையின்பொழுது சனுதிபதி உவில்சன் வெளியிட்டார். இப்பதினான்கு அம்சத் திட்டத்தின் அடிப்படையிற்றான் சேர்மானிய தேசம் சரண்புக ஒப்புக்கொண்டது. அதனால் இத்திட்டம் வரலாற்றுப் பெருமை கொண்டது.

(1) எல்லா நாட்டினரும் அறியும் வகையில் ஒளிவு மறைவின்றிச் சமாதான ஏற்பாடுகள் நிறைவேற்றப்படல். அதன் பின்னர் நாடுகளிடையே எவ்வித இரகசிய ஒப்பந்தங்களும்

[1] E. von Ludendorff, "Own Story."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றப்படலாகாது. எப்பிரச்சினையும் உலகறியச் சூழியல் வல்லுநரால் ஆராயப்படல் வேண்டும். (2) சருவதேச ஏற்பாடொன்றினைச் செயல்முறையில் நடத்துதற்காக ஒரு குறிப்பிட்ட நீர்ப்பரப்போ அன்றி அதன் பகுதியோ உலக நாடுகளால் உபயோகிக்கப்படலாகாது என்று சருவதேசத் தீர்மானமொன்றினுல் குறிக்கப்படாத அளவில் எல்லா நாடுகட்கும் தங்கள் ஆள்புல நீர்ப்பரப்பிற்கு வெளியேயும் கப்பல் விடும் உரிமையை வழங்கல். (3) உலக நாடுகளிடையே உள்ள பொருளாதாரத் தடைகள் யாவற்றினையும், இயன்ற அளவில் நீக்குதல் மாத்திரமன்றி உலக நாடுகளிடையே வணிகத்துறையில் சமநிலை நிறுவல். (4) ஒவ்வொரு நாடும் தனது உண்ணாட்டுப் பாதுகாப்பிற்குப் போதுமான அளவு படைக்கலங்களையே வைத்திருக்கவேண்டுமென உறுதியிடல்; உறுதி பெறல். (5) குடியேற்ற நாட்டுரிமைகோரல் பற்றிய பிரச்சினைகள் காய்தல் உவத்தலின்றி ஆராயப்படல். அப்பிரச்சினைகள் ஆராயப்படுங்காலை சம்பந்தப்பட்ட குடியேற்றநாட்டவரின் உரிமைகளையும் ஆதிக்க உரிமைகோரும் நாட்டினது நேர்மையான கோரிக்கைகளையும் நன்று சீர்தூக்கிப் பார்த்து முடிவுசெய்தல். (6) இரசிய நாட்டிலுள்ள அந்நியப்படைகள் அங்கிருந்து அகற்றப்படல். (7) பெல்சிய நாட்டிலுள்ள படைகள் அகற்றப்பட்டு அந்நாட்டினர்க்கு ஆட்சியுரிமை வழங்கப்படல். (8) கைப்பற்றப்பட்ட நாடுகள் எல்லாம் விடுவிக்கப்படுவதுடன் கைப்பற்றப்பட்ட பிரான்சுப் பகுதிகளைப் பிரான்சிற்கே மீண்டும் கொடுத்தல். கடந்த ஐம்பது வருடங்களாக உலக சமாதானத்தைப் பெரிதும் பாதித்த அல்சேசு உலொரேன் பிரச்சினையைத் தீர்த்தல், அதாவது 1871 ஆம் ஆண்டு பிரான்சிடமிருந்து பிரசியா கைப்பற்றிய இப்பிரதேசத்தைப் பிரான்சிற்கே திருப்பிக்கொடுத்துச் சமாதான நிலையினை வலியுறுத்தல். (9) "நாட்டினம்" என்ற அடிப்படை கொண்டே இத்தாலிய எல்லைப்புற நாடுகளை ஒழுங்குபடுத்தல். (10) உலக நாடுகளிடையே ஒசுற்றிய-அங்கேரி மக்கள் "சிறந்த பாதுகாப்புடன் விளங்க வேண்டுமென நாம் விரும்புவதால்" அம்மக்களினது ஆட்சியுரிமை வளர்ச்சிக்கான வசதிகளை ஏற்படுத்துதல். (11) உரூமேனியா, சேபியா, மொன்றெநீகிரோ ஆகிய நாடுகளிலிருந்து படைகள் அகற்றப்படல். (12) ஒற்றோமன் பேரரசின் கீழுள்ள துருக்கியப் பகுதிகட்கு ஆட்சி இறைமை வழங்கல்; துருக்கிய ஆட்சியின் கீழ் உள்ள பிற நாட்டினங்களினது நல் வாழ்விற்கும் ஆட்சியுரிமை வளர்ச்சிக்குமான வசதிகளை உண்டு பண்ணல்; ஒரு சருவதேச உறுதியீட்டின்படி இடாடினல்சுக் கடலிடுக்கினைக் கப்பற்போக்குவரத்திற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக அலுவல்கட்கும் உபயோகிக்க எல்லா நாடுகட்கும் உரிமை வழங்கல். (13) முற்றிலும் "போலிசு" இனத்தினரையே கொண்ட சுதந்திரப் போலந்து நாட்டினை நிறுவுதல். இந்நாட்டிற்குக் கடல் வாயில் அமைத்துக்கொடுத்தல். இந்நாட்டினது அரசியல் பொருளாதார, நிலப்பரப்பு உரிமைகள் சருவதேச ஏற்பாடொன்றினால் உறுதிப்படுத்தப்படல். (14) பெரிய நாடுகள், சிறிய நாடுகள் என்ற வித்தியாசமில்லாது எல்லா நாடுகளினது அரசியற் சுதந்திரமும், நிலப்பரப்பு உரிமைகளும் பாதுகாக்கப்படுவதற்காக, உலக நாடுகள் சங்கம் ஒன்று நிறுவப்படல் ஆகியவையே அப்பதினான்கு அம்சங்களுமாம். அமெரிக்கப் பேரவையிலாற்றிய பிறிதொரு சொற்பொழிவின்போது, இப்பதினான்கம்சத் திட்டத்தின் நோக்கத்தினை மிக்க அழகிய முறையில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார். "நீதியையும் நேர்மையையும் அடிப்படையாகக் கொண்ட புதியதோர் உலகமைக்க முயற்சிக்கின்றோம். அங்கொன்று இங்கொன்றுமாத் தோன்றும் சத்தியற்ற சமாதான உடன்படிக்கைகள் இனி எமக்கு வேண்டாம். வட்டாட்டத்தில் உருட்டப்படும் காய்கள் போல மக்களும் மாவட்டங்களும் இன்று ஒரு நாட்டின் அடிமையாகவும் நாளை இன்னொரு நாட்டின் உடமையாகவும் உருட்டப்படவேண்டாம்" என அவர் தம் சொற்பொழிவில் குறிப்பிட்டார். செக்கோசிலவாக்கியர்களும் யூகோசிலாவியர்களும் வேண்டி நின்ற உரிமைகட்கு ஐக்கிய அமெரிக்கா இணங்கியமையால், ஒசுற்றிய—அங்கேரி பற்றிப் பதினான்கம்சத் திட்டத்தில் முன் குறிப்பிட்டிருந்த கொள்கை திருத்தியமைக்கப்பட்டது. நட்புறவு நாடுகள் இப்பதினான்கம்சத் திட்டத்திற்குத் தம் இசைவினைத் தெரிவித்தன எனினும் இரு முக்கிய விடயங்கள் பற்றிக் கருத்தொதுக்கம் கொண்டிருந்தன. பதினான்கம்சத் திட்டத்தில் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பரப்புப் பாவனை பற்றிய வாசகத்திற்குப் பல விளக்கங்கள் கொடுக்கக்கூடியதாகவிருந்தது. அவ்விளக்கங்களில் சிலவற்றினை நட்புறவு நாடுகள் ஏற்க விரும்பவில்லை. மேலும் கைப்பற்றப்பட்ட நாடுகளை "மீட்டல்" எனும் வாசகத்திற்கு நட்புறவு நாடுகள் புதியதொரு விளக்கம் கொடுத்தன. கைப்பற்றப்பட்ட நாடுகளை மீட்கும் பொழுது, சேர்மானியத் தாக்குதல்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பொதுமக்கட்கு நட்ட ஈடு கொடுக்கப்படல் வேண்டுமெனத் தம் கருத்தினைத் தெரிவித்தன. பதினான்கம்சத் திட்டத்திற்கு மத்திய அரசுகள் ஒத்துக்கொண்டமையால் சேர்மானிய தேசம், அல்சேசு உலொரேன் பிரதேசத்தைப் பிரான்சிற்குத் திருப்பிக் கொடுப்பதற்கும், ஒசுற்றிய அங்கேரியப் பேரரசு தன் கீழிருந்து பல்வேறு நாட்டினங்களுக்கு விடுதலை வழங்குதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துக்கொண்டன என்பது சொல்லாமலே விளங்கும். மேலும் இதனால் நிபந்தனை எதுவுமற்ற முறையில் சேர்மனி சரண்புக வில்லை என்பதும் தெளிவாயிற்று. நடை முறையில் இத் திட்டம் செயலாற்றப்படும்பொழுது முரண்பட்ட விளக்கங்கள் தோன்றுவதைத் தவிர்க்க முடியாவிட்டாலும் இப்பதினான்கம் சத் திட்டத்தின் அடிப்படையிலேயே சமாதானம் நிறைவேற்றப் படல் வேண்டுமென எல்லாப் பொருதுநாடுகளும் ஒத்துக் கொண்டன. 1918 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஒசுற்றிய-அங்கேரியுடன் செய்துகொண்ட படையிக லொழிவொப்பந்தமும் நவெம்பர் மாதம் 11 ஆம் திகதி சேர்மனியுடன் செய்து கொண்ட ஒப்பந்தமும் போர் அரக்கனின் பயங்கரக் குரலை அடக்கின. முதலாம் உலகயுத்தம் முடிவுற்றது.

சமீப கிழக்கு நாடுகளில் நடந்த போர்.

மேற்கு முன்னணியே போரின் முக்கிய களமாக விளங் கியதெனினும் முக்கியத்துவம் நிறைந்த பல போர் நடவடிக்கை கள் பிற இடங்களிலும் நடத்தப்பெற்றன. உலக யுத்த நாடகத்தின் துணைக் காட்சிகளாக அமைந்த இப்போர்கள் பிரித்தானியாவினாலேயே நடத்தப்பெற்றன. இத்துணைக்காட்சி கள் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் நிலவின. சேர்மானியப் படைகளைத் தோற்கடித்தல் எனும் முக்கிய குறிக்கோளிலேயே நட்புறவு நாடுகளின் கவனம் முழுவதும் இருக்கவேண்டுமெனச் சிலர் எண்ணினர். தகர்க்க முடியாப் பலத்துடன் மேற்கு முன்னணியில் சேர்மானியர் நின்றனர். எனவே அவர்களைத் தோற்கடிப்பதற்குக் கிழக்குத் திசையிலிருந்து முன்னேறிச் சென்று தாக்குதலே சரியென வேறு சிலர் எண்ணினர். கிழக்கு முனையிலிருந்து தாக்குவதற்காகவே துணைக்காட்சிக ளெனக் குறிப்பிடப்பட்ட இத்தாக்குதல்கள் நடத்தப்பெற்றன. இந்நோக்கத்துடன் நடத்தப்பெற்ற இடாடினல்சுப் படையெடுப்பு துருக்கிப் படையினரைத் தோற்கடித்ததென்றாலும், இறுதியில் தோல்வியாகவே முடிந்தது. ஆனால் ஒற்றோமன் பேரரசின் கீழிருந்து அராபியரை விடுவிக்கப் பிரித்தானியா எடுத்துக் கொண்ட முயற்சி பெருவெற்றி பெற்றது. மக்கா நாட்டுத் தலைவரினது தலைமையின் கீழ் 1916 ஆம் ஆண்டு "எயாசில்" அராபியப் புரட்சி யொன்று தூண்டிவிடப்பட்டது. இவ்வெழுச் சிக்கு இன உணர்ச்சி தான் முக்கிய காரணம் என்று கூறிவிட முடியாது. போரின் பின் கிடைக்கவிருக்கும் பொருள் இலாபம் பற்றிய ஆசையே முதற் காரணமாகவும் முக்கிய காரணமாகவு மிருந்தது எனக் கொள்ளலாம். பிரித்தானிய உதவியுடன் அராபியர் ஆசை நிறைவேறியது. இப்புரட்சியில் முக்கிய பங்கெடுத்தவர் உலோரன்சு எனும் படைத்தலைவரொருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தாம் எழுதிய "அறிவின் ஆதாரங்கள்" எனும் நூலில் தமது போர் நடவடிக்கை முறையினை அழகுற விவரித்துள்ளார். எதிரிகளை நேரடியாகத் தாக்காது போக்குவரத்து முறைகளினைச் சேதம் செய்வதிலேயே தமது முழுக் கவனத்தையும் செலுத்தினர். பாலங்களும் புகையிரதப் பாதைகளும் அழிக்கப் பட்டமையால் போக்குவரத்து பெரும் பிரச்சினையாயிற்று. காய்தல் உவத்தலின்றி ஆராய்ந்து பார்ப்போமேயானால், இவ்வராபிய எழுச்சி முக்கியமற்ற சிறியதொரு நிகழ்ச்சியேயாம். ஆனால் இது பகை நாட்டின் கவனத்தை வேறு திசையில் இழுத்து முக்கிய முன்னணியில் முழுக் கவனத்தையும் செலுத்த விடாது தடுத்தது. பாலத்தீனம், சீரியா ஆகிய பகுதிகளின் படைப் பொறுப்பதிகாரியாகவிருந்த தளபதி அலெம்பி அராபியப் புரட்சியின் அடுபோர் வலுவில் அதிக நம்பிக்கை வைக்கவில்லை என்றும் அவர் ஈட்டிய வெற்றிக்கு அவரது அசாதாரண திறமையே காரணமென்றும் உலோரன்சு தமது நூலில் கூறியுள்ளார். 1917 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 9 ஆம் திகதியன்று எருசலேம், தளபதி அலெம்பியிடம் சரண்புகுந்தது. 1918 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி தமாக்கசு நாடு கைப்பற்றப்பட்டது. பாலத்தீனத்தையும் சீரியாவையும் துருக்கியின் பிடியிலிருந்து விடுவிப்பதில் பிரித்தானியா பெருவெற்றி பெற்றது. துருக்கிக் கெதிரான இப்போர் நடவடிக்கைகளில் பகுதாது நகரைக் கைப்பற்றியதும், மெசப்பொத்தேமியாவைத் துருக்கியர் பிடியிலிருந்து விடுவித்ததும் முக்கியமானவையாகும். சலோனிக்காவைத் தளமாகக் கொண்டு தாக்கிய நட்புறவுச் சேனைகட்காற்றுது செத்தெம்பர் மாதம் 29 ஆம் திகதி படையிகலொழிவிற்கு ஒத்துக்கொண்ட பல்கேரியாவைப்போலவே, துருக்கியும் 1918 ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி படையிகலொழிவு வேண்டி நின்றது.

சேர்மானியின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்.

சேர்மானியின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை? 1914 ஆம் ஆண்டில் யுத்தம் தொடங்கியபொழுது சேர்மானியரிடம் உலகம் முன்னெப்பொழுதும் கண்டிராத அளவிற்குப் பலம் பொருந்திய போர்க்கருவிகளும், உள்நாட்டுப் போரணியில் போரிட்டு வெல்வதற்கான நல்வாய்ப்புகளும் இருந்தன. இவ்வாரம்ப காலத்தில் சேர்மனிக் கெதிராகப் பொருள் வளம் மிகக் கொண்ட நட்புறவு நாடுகளும் அவற்றின் துணைநாடுகளும் நின்றன. எனவே போரில் சேர்மானியர் வெற்றியுறுவது அவர்கள் போர்க்களங்களில் மிகத்துரிதமாக வெற்றி ஈட்டும் திறமையிலேயே தங்கியிருந்தது. உடனடியாக வெற்றியீட்ட முடியாதுபோனமையால் யுத்தம் "பொறுமைக்கோர் சோதனை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக மாறிற்று. நீண்டு நிலைத்து நீடித்து நிற்கும் இப்போர் முறையில் சேர்மானியர் தோல்வியுறுவது முடிந்த முடிபாயிற்று. முன்னேறிவந்த சேர்மானியர் மாண் போரிலுற் றடுத்து நிறுத் தப்பட்டனர். முன்னேறவோ பின்வாங்கவோ முடியாது நின்ற இத்தேக்க நிலையைத் தாங்குவதற்கான படைப்பலமோ, பொருள் வளமோ சேர்மானியரிடம் இருக்கவில்லை. போரில் ஏற்பட்ட அழிவுகளினுல் மனுவலு குறைந்துகொண்டே வந்தது. "1918 ஆம் ஆண்டுப் பிற்பகுதியில் சேர்மானியப் படைகளின் திடீர் வீழ்ச்சிக்குச் சேர்மானியப் படைகளின் சேமவலு பெரிதும் குறைக்கப்பட்டமையே காரணமாக அமைந்தது" எனப் பிரித் தானிய எவுநர் முதல்வர் ஒருவர் தாமனுப்பிய செய்தியொன் றிற் குறிப்பிட்டுள்ளார். பிரித்தானியரது கடலாதிக்க வலுவினுல் சேர்மானியப் பொருள்வள வலு தகர்க்கப்பட்டது. இதனுல் கடலா திக்க வலுவின் முக்கியத்துவம் ஐயந்திரிபறத் தெளிவுறுத்தப் பட்டது. பிரித்தானியக் கடற்படையினர் சேர்மனியைச் சுற்றிப் போட்ட தடைகள் ஊமை அடிகளாகவிழுந்தன. காலப்போக்குச் சேர்மானிய நிலையை மென்மேலும் சீரழித்தது. "போர் நீடிக் குமானுல் நாம் தோல்வியுறுவது நிச்சயம். பகைநாட்டைக் களைப்புறச் செய்து வெற்றியீட்டுவதற்கான பொருள்வளம் எம்மிடம் இல்லை" எனத் தளபதி உலூதன்தோவு உண்மையை ஒப்புக்கொண்டமை இங்கு கவனிக்கற்பாலது. "தேய்ந்துகொண் டேவரும் எம்மக்களது மனோவலிமை உள்நாட்டு உணவு நிலையுடன் பெரிதும் தொடர்புள்ளது. மக்களிடையே மனோவலு வும் உடல்வலுவும் குறைந்து வருவதை நாம் பல இடங்களில் தெளிவாகக் காண முடிகின்றது" என அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார். போரின் இறுதி வருடத்தில், சேர்மானிய ஒசுற்றியத் தலைநகரங்களில் வாழ்ந்த மக்களது வறிய நிலையை விளக்க வார்த்தைகளும் வர்ணனைகளும் வேண்டா. அவர்களது உணவுப் பங்கீட்டு விவரங்களே போதுமானவை. பேளின் நகரமக்கட்கு வாரத்திற்கொருமுறை 4 இருத்தல் பாண், $7\frac{1}{2}$ இருத்தல் உருளைக்கிழங்கு, $\frac{1}{2}$ இருத்தல் இறைச்சி (எல்லா வேளைகளிலும் இவை கிடைப்பதில்லை), $\frac{1}{2}$ இருத்தல் சீனி ஆகியவற்றுடன் "மிகச் சிறிய அளவு மீன், வெண்ணெய், போலி வெண்ணெய், பாலாடைக்கட்டி, பழ ஊறல்" ஆகியன கொடுக்கப்பட்டன. வீயன்னாவிலோ நாளொன்றிற்கு ஒருவர்க்கு 3 அவுன்சு பாண், 1 அவுன்சு இறைச்சி, $\frac{1}{4}$ அவுன்சு கொழுப்புப் பண்டம், $2\frac{1}{2}$ அவுன்சு உருளைக்கிழங்கு, $\frac{3}{4}$ அவுன்சு பழ ஊறல் ஆகியனவே கொடுக்கப்பட்டன. ஊட்டக் குறைவினுல் இறப்போர் தொகை அதிகமாயிற்று. இளம் பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவற்று எலும்பும் தோலுமாய் நின்றனர். மாளா வறுமையினை மேலும் தாங்கமுடியாது தவித்த சேர்மானிய மக்களது எதிர்ப்புச் சத்தி இதனால் பெரிதுங் குறைந்தது. இப்பற்றாக்குறை நாட்டு மக்களை மாத்திரமல்லாது களங்களில் நின்று போரிட்ட படைவீரரையும் தாக்கிற்று.[1] உள்நாட்டு நிலைமை இவ்வளவு மோசமாக இருந்தாலும் சேர்மானியர் சரண்புகுந்தமைக்கு நட்புறவு நாட்டுப் படைகளின் தாக்குதலால் சேர்மானியப் படையமைப்பு முற்றிலும் முறிந்தமையே காரண மாகும். படைத் தலைமைப் பீடத்தினரே சமாதானம் கோரும். அளவிற்கு நிலைமை வந்துவிட்டது. நாட்டில் தோன்றிய மக்கள் இளர்ச்சிகளோ ஆட்சிமாற்றமோ சரணாகதிக்கு முன்னர் தோன் றவில்லை. இவை சரணாகதிக்கான நிமித்த காரணங்களாகவும் அமையவில்லை. பசிப்பிணியால் வாடி வதங்கிக் கிடந்த மக்களுக்கு, வெந்தபுண்ணில் வேலேற்றியது போன்றிருந்தது. படைத்தலைவர்களது சரணாகதிக்குப் பின்னரே மக்கள் இளர்ந் தெழுந்தனர் ; ஆட்சியைக் கவிழ்த்தனர்.

இரசியாவில் நடந்த போல்சிவிக்குப் புரட்சியும் சேர்மானிய வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது. கிழக்கு முன்னணிப்படை நிலைமையில் சிறிது ஒய்வினை விரும்பிய சேர்மானிய அரசாங்கம் இரசியாவிற்குள் குழப்பம் ஏற்படுவதற்குப் பெரிதும் உற் சாகமளித்தது. இரசியாவிலிருந்து விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதி களை மீண்டும் பொருது வீரராகச் சேர்த்தமையால் படையினரின் மனோவலிமை பெரிதும் குறைந்து விளங்கிற்று. அரசியற் கருத்துகட்கு என்றுமே அரண் போட முடியாது. போல்சி விக்குக் கொள்கையும் இரசியாவிலிருந்து பிற நாடுகளுக்குப் பரவத் தொடங்கிற்று. இவற்றுடன் ஐக்கிய அமெரிக்கா போரில் நுழைந்தமையும் பெரியதோர் மனமாற்றத்தைக் கொணர்ந் தது. போரில் என்றுவது வெற்றி பெறலாம் என்ற சேர்மா னிய நம்பிக்கையை அமெரிக்கத் தலையீடு தகர்த்தெறிந்தது. பிரான்சிய மக்களின் பொறுமையுணர்வும் இரசியர்களது தியாக மும் நட்புறவு நாடுகள் ஈட்டிய வெற்றிக்குக் காரணங்களாக அமைந்தன.

போர்ச் செலவு.

1914–1918 ஆம் ஆண்டுப் போரின் பிரமாண்டமான நட வடிக்கைகள் போலவே அப்போரினால் ஏற்பட்ட செலவும்

---

[1] தமது இல்லங்களிலிருந்து வந்த கடிதங்கள் போர்வீரரைப் பெரிதும் பாதித்தன. தங்கள் குடும்பங்களின் இன்னல்களை அறிந்த போர்வீரர் பெரிதும் அதிருத்தி அடைந்தனர்— (Hitler : "Mein Kampf")

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியதாக விருந்தது. வென்ற நாடுகள், தோற்ற நாடுகள் என்ற பாகுபாடற்ற வகையில் பங்கெடுத்த நாடுகள் யாவுமே பெருந்தொகைப் பணத்தையும் மனிதரையும் இழந்துநின்றன. யுத்தத்தினால் எட்டு இலட்சம் மக்கள் உயிரிழந்தனர். காயமடைந்தோர் தொகை இரண்டுகோடியை எட்டிப் பிடித்தது. பகை நாடுகள் கைப்பற்றிய பிரதேசங்களிலும், முற்றுகையிட்ட நாடுகளிலும் ஏற்பட்ட உயிர்ச் சேதத்தினையும் நாம் இத்தொகையுடன் சேர்த்தே பார்த்தல் வேண்டும். போர்ச்செலவுகள் பூதாகாரமாய் வளர்ந்து கொண்டேபோயின. இங்கிலாந்து மாத்திரம் 1915 ஆம் ஆண்டு பங்குனிவரை நாளொன்றிற்குச் சராசரி பதினைந்து இலட்சம் பவுணும், 1915–16 ஆம் ஆண்டுகளில் நாற்பது இலட்சம் பவுணும், 1916–17 ஆம் ஆண்டுகளில் ஐம்பத்தைந்து இலட்சம் பவுணும், 1917–18 ஆம் ஆண்டுகளில் அறுபத்தைந்து இலட்சம் பவுணும் செலவழித்தது. போரின் ஆரம்ப காலத்தில் எழுபது கோடியே என்பது இலட்சமாக இருந்த நாட்டுப்படுகடன், 1918 ஆம் ஆண்டில் எழுநூற்று நாற்பத்து மூன்று கோடியே ஐம்பது இலட்சம் பவுணுக ளாயிற்று. 1917 ஆம் ஆண்டு போரிலிறங்கிய ஐக்கிய அமெரிக்கா 1918 ஆம் ஆண்டு முடியுமுன்னர் ஆயிரத்து அறுநூறு கோடி பவுண் கடன்பட்டது. மூவாயிரத்து நானூற்றுப் பதினெட்டுக் கோடியே என்பது இலட்சம் பிராங்கு ஆகத்தொடக்க காலத்திலிருந்த பிரான்சு நாட்டுப்படுகடன், முடிவு காலத்தில் பதினான்காயிரத்து எழுநூற்று நாற்பத்தேழு கோடியே இருபது இலட்சமாகக் கூடிற்று. சேர்மனியின் நாட்டுப்படுகடன் ஐந்நூறு கோடி மாக்கிலிருந்து பதினாயிரத்து அறுபது கோடி மாக்காக உயர்ந்தது. 1918 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதிவரை பொருது நாடுகளது போர்ச்செலவு முப்பத்தையாயிரம் கோடி பவுணென மதிப்பிடப்பட்டது. அத்தொகை அவ்வருட முடிவிற்குள் நாற்பதினாயிரம் கோடியாக உயரலாமென்றும், அமெரிக்கக் கூட்டாட்சி ஒதுக்குச்சபை கணக்கிட்டது.[1] ஆனால் பொருதுநாடுகளது நாட்டுப்படுகடன்களே மாத்திரம் கொண்டு நாம் போரினால் ஏற்பட்ட முழுச்செலவுத் தொகையினையும் அறிந்துகொள்ள முடியாது. பகைநாடுகளின் பயங்கரப்பிடிக்குக் கீழ்வந்த பிரதேசங்கள் சற்றும் இரக்கமற்ற வகையில் அழிக்கப்பட்டன. வடபிரான்சிலும் பெல்சியத்திலும், வட இத்தாலியிலும் இரசியப் போலந்திலும் ஏற்பட்ட அழிவுகள் பற்றி வெளியிடப்பட்ட ஒரு கணக்கீட்டின்படி போரினால் அழிக்

[1] "A History of the Peace Conference of Paris" (ed. H. W. V. Temperley).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட கைத்தொழில்களை மீண்டும் முதலிலிருந்தே ஆரம்பிக்கவேண்டியிருக்கின்றதெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மூலப் பொருட்சேமங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டும் இயந்திரங்கள் தகர்க்கப்பட்டும் இடந்தனவென்று அக்கணக்கீட்டிலிருந்து நாம் அறிகின்றோம். வடபிரான்சில் ஏற்பட்ட அழிவோ சொல்லுந் தரமன்று. முன்னொருகாலம் வளம் பல மலிந்து விளங்கிய அப் பகுதி நகரங்களைத் திரும்பவும் முதலிலிருந்தே முழுவதையும் நிர்மாணிக்கவேண்டுமா என்ற கேள்வியே எல்லோர் மனதிலும் மேலோங்கி நின்றது. குருதி படிந்த களங்களாலும் குண்டு பட்டு அழிந்த நகரங்களாலும் வரட்சியும் வற்றாத சோகமும் நம்பிக்கையின்மையும் தேங்கி நின்ற அக்காலத்திற்றான் வலிவும் வளமுமுள்ள புதியதொரு ஐரோப்பாவைச் சமைக்க முன்வந்தனர் அரச அறிஞர். சமாதான மாநாடு 1919 ஆம் ஆண்டு பிரான்சுத் தலைநகரில் கூடிற்று.

(II)

சமாதானப் பொருத்தனைகள் (1919—1923)

வேர்சைப் பொருத்தனை.

முதலாம் உலக யுத்தத்திற்றானடைந்த தோல்வியின் பெறுமதியாகச் சேர்மனி வேர்சைப் பொருத்தனையைப் பெற்றுக்கொண்டது. இதன் பலனைச் சேர்மனி தனது நாடுகளில் பலவற்றை இழந்தது. ஐரோப்பாத் தேசப்படத்தில் பலவிதமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மத்திய அரசு நாலுதிசைகளிலும் மாற்றியமைக்கப்பட்டது. கிழக்குத் திசையில் நடந்த ஆள்நில மாற்றங்கள் மிகவும் முக்கியமானவை. 1871 ஆம் ஆண்டு பிரான்சிற்குச் சேர்மனி இழைத்த தவற்றிற்கு ஈடுசெய்யும் வகையில் மேற்குப்புறத்திலிருந்த அல்சேசு உலொரேன் மாவட்டம் பிரான்சிற்கே திருப்பிக் கொடுக்கப்பட்டது. வடபிரான்சிலிருந்த நிலக்கரிச் சுரங்கங்களை அழித்ததற்காகவும், பிரான்சிற்குக் கொடுக்கவேண்டியிருந்த இழப்பீட்டுத் தொகையில் ஒரு பகுதியினைக் கொடுப்பதற்காகவும், சார்வடிநிலப்பகுதி தற்காலிகமாகச் சேர்மானியப் பேரரசிலிருந்து துண்டிக்கப்பட்டுச் சருவதேச சபையினது ஆணைக்குழுவொன்றின் அதிகாரத்தின் கீழ்வந்தது. பதினைந்து வருடங்கட்குப் பின், குடியொப்பத் தேர்தல் நடத்தப்படவேண்டுமென்றும் அவ்வாறு நடத்தப்படும் தேர்தலில் மீண்டும் சேர்மனியுடன் தாம் இணைக்கப்படல் வேண்டுமென அப்பகுதி மக்கள் விரும்பினால் நிலக்கரிச் சுரங்க உரிமையைப் பிரான்சிடமிருந்து சேர்மனி பணங்கொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது.[1] வடக்கே செல்சு விக்கின் வடபகுதியினதும் மத்திய பகுதியினதும் எதிர்கா லம் குடியொப்பத் தேர்தல் மூலம் தீர்மானிக்கப்பட்டது. 1864 ஆம் ஆண்டு தென்மாக்குத் தேசத்திடமிருந்து பறிக்கப்பட்டவை இப்பகுதிகள். இவற்றில் வடபகுதி தென்மாக்குடன் இணைதல் வேண்டுமென்றும், மத்தியபகுதி சேர்மானிய ஆட்சியின் கீழேயே இருத்தல் வேண்டுமென்றும் அத்தேர்தல் மூலம் முடிவு செய்யப்பட்டது. பெல்சிய நாட்டுடனும் சிறுமாவட்டங்கள் இணைக் கப்பட்டன. ஆனல் கிழக்கு முனையிற்ருன் சேர்மனி பல பிர தேசங்களை இழந்து நின்றது. 18 ஆம் நூற்ருண்டுப் பிரசிய மன்னர் போலந்திற் கிழைத்த இன்னல்களெல்லாவற்றிற்கும் ஈடு செய்யும் வகையில் இப்பொழுது நிலப்பிரிவினை செய்யப் பட்டது. புனர் நிர்மாணம் செய்யப்பட்ட போலந்தின்கீழ் போசன் நாடும், எறத்தாழ மேற்குப் பிரசியாமுழுவதும் கொண்டு வரப்பட்டன. குடியொப்பத் தேர்வுத் தீர்ப்புக் கொண்டு மேல் சைலீசியா சேர்மனிக்கும் போலந்திற்குமிடையில் பிரிக்கப்பட்டது. போலந்திற்கெனத் துறைமுகம் ஒன்று இருக்க வேண்டுமென்ற மையால் சேர்மானியப் பட்டினமாகிய தான்சிக்கு சருவதேச சபையின் ஆட்சிக்குக் கீழ் உள்ள விடுதலை நகரம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. தான்சிக்குப் பட்டின மக்களில் பெரும் பாலானேர் சேர்மானிய இனத்தவர் என்பதை நட்புறவு நாடுகள் ஒப்புக்கொண்டாலும் "போலந்தும் தான்சிக்கும் பொருளியல் அமைப்பு முறை சம்பந்தப்பட்ட வகையில் ஒரே சார்பானவை என்றும்" தனக்குக் கடல்வாயில் ஒன்று வேண்டுமெனப் போல ந்து கோருவது நியாயமான தென்றும் அவை தீர்மானித்ததன் அடிப்படையிலேயே மேற்கூறப்பட்ட ஒழுங்குகள் செய்யப்பட்டன. போலந்திற்கும் தான்சிக்கிற்கும் உள்ள தொடர்பினைக் கிழக்குப் பிரசியாவை மற்றைய சேர்மானிய பிரதேசங்களிலிருந்து பிரிக் கும் "இடைவழி" யொன்றினை ஏற்படுத்துவதன் மூலம் பலப் படுத்தினர். மேற்கண்ட காரணங்களை மனதிற்கொண்டு மெமல் தேசத்தினைப் புதிதாக நிறுவப்பட்ட இலிதுவேனிய அரசுடன் இணைத்தனர். ஐரோப்பாவிற்கு வெளியேயுள்ள நாடுகளில் செய்யப்பட்ட ஆள்நிலமாற்றங்களினுல் சேர்மானியக் குடியேற்றப் பேரரசு பெரிதும் பாதிக்கப்பட்டது. தனது ஆட்சிக்குக் கீழிருந்த வெளிநாடுகள் எல்லாவற்றினது ஆட்சியையும் உரிமையையும் சேர்மனி இழக்கவேண்டுமெனக் கோரப்பட்டது. இதனல் சேர் மானிய தென்மேற்காபிரிக்கா தென்னுபிரிக்காவிடம் ஒப்படைக்

[1] 1935 ஆம் ஆண்டில் நடத்தப்பெற்ற குடியொப்பத் தேர்தலில், தாம் மீண்டும் சேர்மனியுடன் இணையவேண்டுமென மக்கள் தீர்மானித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டது. தோகொலந்தையும் கமரூன் சாதியினர் வாழ்ந்த பிரதேசத்தையும் தன்னுள் அடக்கிய சேர்மானிய மேற்காபிரிக்கா, பிரான்சிற்கும் பிரித்தானியாவுக்குமிடையில் துண்டாடப்பட்டது. சேர்மானியக் கிழக்காபிரிக்கா பெல்சியத்திற்கும் பிரித்தானியாவுக்குமிடையில் பிரிக்கப்பட்டது. தங்கனிக்காப் பிரதேசம் பிரித்தானியாவின் கைக்குள் வந்தது. யுத்த ஆரம்ப காலத்தில் சேர்மனியின் ஆபிரிக்கக் குடியேற்ற நாடுகளில் 23,500 சேர்மானியர் வசித்துவந்தனர். இவர்களில் அநேகர் அங்கு நிரந்தரமாகக் குடியேறியவர்களல்லர். சேர்மானியினது முழுப்பிறநாட்டு வணிகத்திலும் ஆக $\frac{1}{2}$ வீதத்திற்கே இவ்வாபிரிக்கக் குடியேற்ற நாடுகள் உதவின.[1] சேர்மானியக் குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த 12,50,000 ஆபிரிக்கச் சுதேசிகளில், 42 சதவீதத் தொகையினர் பிரித்தானிய குடியேற்றநாட்டுப் பகுதிகட்கும், 33 சதவீதத் தொகையினர் பிரான்சியப் பகுதிகட்கும், 25 சதவீதத் தொகையினர் பெல்சியப் பகுதிகட்கும் மாற்றப்பட்டனர். பசிபிக்குப் பகுதியிலிருந்த சேர்மானியக் குடியேற்றநாடுகள் யப்பான், அவுத்திரேலியா, நியூசீலாந்து ஆகிய நாடுகட்கிடையே பிரிக்கப்பட்டன. சருவதேச சபையின் ஆணையின் கீழ் வந்த பொறுப்பாட்சி முறையிலேயே இப்பிரிவினை நடைபெற்றது. அதாவது இந்நாடுகள் பிரித்தானியா முதலாம் நாடுகளினது பாதுகாப்பின் கீழ் வந்தனவேயன்றி அவற்றின் உடைமையாகக் கொடுக்கப்படவில்லை. தனக்குற்ற ஆள்நிலக் குறைவினைத் தீர்க்கும் வகையில் சேர்மனி, ஒசுற்றியாவிலோ செக்கோசிலாவாக்கியாவிலோ கைவைப்பதை முன்கூட்டியே தடுப்பதற்கென உடன்படிக்கையில் இருவாசகங்கள் சேர்க்கப்பட்டன. அவ்வாசகங்களின் பலனைச் சேர்மனி ஒசுற்றிய சுதந்திரத்தை மதிப்பதென ஒத்துக்கொண்டது மாத்திரமல்லாமல் சருவதேச சபையின் சம்மதமின்றி ஒசுற்றிய சுதந்திர உரிமை வேறெருவராலும் மாற்றமுடியாது என்பதற்கும் ஒத்துக்கொண்டது. மேலும் செக்கோசிலாவாக்கியாவின் பூரண சுதந்திர உரிமையை மதிப்பதென்றும் உடன்படிக்கையில் தீர்மானிக்கப்பட்ட அதன் புற எல்லைகளையும் மதிப்பதென்றும் ஒத்துக்கொண்டது.

பொருத்தனையின் பிறவாசகங்கள்.

ஆள்புலம் பற்றிய பிரச்சினைக்கு மாத்திரமல்லாது வேறு பல பிரச்சினைகட்கும் வேர்சை உடன்படிக்கையில் தீர்வு காணப்பட்டது. இரைனிலந்துப் பிரதேசத்தில் படையொழிப்பு படைக

---

[1] "மிகக் குறைந்த அளவு அயனமண்டல மூலப்பொருள்களும் உணவுப்பண்டங்களுமே இக்குடியேற்றநாடுகளிலிருந்து சேர்மனிக்குச் சென்றன. சேர்மானியப் பொருட்கள் விற்பனையாகும் இடங்களாகக்கூட இக்குடியேற்றநாடுகள் நன்கமைய வில்லை". W. O. Henderson, in "The Economic History Review" (November 1938).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைதல் உடன்படிக்கையில் காணப்பட்ட கடப்பாடுகள் நிறை வேற்றப்படுமெனச் சேர்மனியிடமிருந்து போதுமான உறுதிகள் பெறல் என்பவையே இப்பிரச்சினைகளாம். நட்புறவு நாடுகளி லும் அவற்றின் துணை நாடுகளிலும் வாழ்ந்த மக்கட்குப் போரினால் ஏற்பட்ட சேதங்கட்கும் அழிவுகட்கும் தானே முழுப் பொறுப்பாளியெனச் சேர்மனி ஒத்துக்கொண்டது. இரைன் பிரதேசத்தின் இடதுபுறப் பகுதிகளிலோ, வலதுபுறப் பகுதி களிலோ முப்பதுமைல் தூரத்திற்குள், எவ்வித படைகளையும் சேர்மனி நிறுத்திவைக்கக்கூடாதெனச் சொல்லப்பட்டது. மற்ற நாடுகளும் படைக்குறைப்புப் பணியிலிறங்குவதற்கு ஓர் ஆரம் பமாகத் தனது படைகளைக் குறைக்கச் சேர்மனி ஒத்துக்கொண் டது. அப்படைக்குறைப்பின்படி படைக்குக் கட்டாய ஆட்சேர்ப்புத் தவிர்க்கப்பட்டதுடன் கடற்படையினையும் கட்டுப்படுத்துவதென்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் யாவற்றையும் கொடுத்துவிட வேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், முக்கிய தலைவர்கள் உட்பட ஒரு இலட்சம் தொகையினரைக் கொண்டதாகவே படைப் பலம் இருக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. சமாதானப் பொருத்தனையைச் செயல்முறைக்குக் கொண்டுவருதற்கு உறுதி யிடும் முகமாக இரைன்நதிக்கு மேற்குப்புறத்திலுள்ள பிரதேசங் களையும், மற்ற நாடுகளைத் தாக்க வசதியாகவிருக்கும் ஆற்று முனைகளையும் நட்புறவு நாடுகளினதும் துணை நாடுகளினதும் படைப்பொறுப்பின் கீழ்விடல் வேண்டுமெனவும் தீர்மானிக்கப் பட்டது.

பொருத்தனைக் குச் சேர்மனி யின் எதிர்ப்பு.

யுத்தத்தில் வெற்றிபெற்ற நாடுகள் சமாதான உடன்படிக்கை விவரங்கள் பற்றித் தீர்மானித்த பின்னரே சேர்மனி சமாதான மாநாட்டில் இடம்பெற்றது. பொருதுநாடுகள் தம்மிடையே சுமுகமாகச் செய்துகொண்ட உடன்படிக்கையே வேர்சை உடன் படிக்கை எனக் கொள்ள முடியாது. தாழ்வுற்று வறுமை மிஞ்சி தோல்வியால் துவண்டு, கெட்டுக் கிடந்த ஒரு நாட்டின்மீது வெற்றிபெற்ற நாடுகளால் திணிக்கப்பட்ட பிரகடனப் பத்திர மாகவே வேர்சை உடன்படிக்கை அமைந்திருந்தது. எனினும் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கைத் திட்டத்தைப் பற்றிய குறிப்புக் களைத் தெரிவிக்கும்படி சேர்மானியத் தூதுக்குழு வேண்டப் பட்டது. குறிப்புச் சொல்ல முனைந்த தூதுக் குழுவினர் தமது மனக்குமுறல்களெல்லாவற்றையும் எடுத்துக்காட்டி உடன்படிக் கைத் திட்டத்திற்குப் பெரிதும் ஆட்சேபம் தெரிவித்தனர்.[1]

[1] இனிவரும் மேற்கோள்கள் "உடன்படிக்கைத்திட்டம் பற்றிச் சேர்மானியத் தூதுக்குழுவின் குறிப்புக்கள்" "நட்புறவு நாடுகளும் துணை நாடுகளும் தந்த பதில்" அவற்றுடன் சம்பந்தப்பட்ட "பிற கடிதங்கள்" முதலியவற்றிலிருந்து எடுக்கப்பட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் எமக்குறுதியளித்த நீதியான சமாதானம் இது வல்ல. நின்று நிலவக்கூடிய நீதியான சமாதான அடிப் படைக்கு முரணாகி நிற்கின்றது, இவ்வுடன்படிக்கை. பொறுப் பற்று நடந்த எதேச்சாதிகாரச் சேர்மனியின்மீது அல்லது சேர் மானிய மக்கள் மீது நடத்தப்படும் போரல்ல இது என எமது எதிரிகள் எத்தனையோ தடவைகள் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளனர். முன்னொருபொழுதும் உலகம் கண்டிராத இப்போருக்குப் பின்னர் உலகில் முன்பு நடந்தது போன்ற வலு வழிச் சமாதானம் ஒழிந்து உரிமைவழிச் சமாதானம் நிலவவேண்டு மென எமது எதிரிகள் அடிக்கடி ஐயந்திரிபறச் சொல்லியுள் ளார்கள். இன்று சேர்மனியில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளும் தனியாட்சி நிலவவில்லை. இன்றைய சேர்மானிய அர சாங்கத்தின் ஆட்சித் திட்டமும் அமைப்பும் சனநாயகக் கொள்கை கட்குப் பேரிலக்கியமாக விளங்குபவை. இவ்வரசாட்சியில் படை வலி உணர்வு பொய்யாய் பழங்கதையாய் கனவாய்ப் போய் விட்டது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெளிவுறத் தெரிகின்றது. ஆனால் இவ்வுண்மைகள் சமாதான பொருத் தனைத்திட்டத்தில் கவனிக்கப்படவில்லை. சனநாயக அடிப்படை யில் மக்கள் நலத்திற்கென இயங்கும் இன்றைய சேர்மனியின் மீது உங்களது சமாதான உடன்படிக்கை இத்துணை இன்னல் களைச் சுமத்துமேயானால், பேரரசு அவாக்கொண்ட சேர்மனியின் மீது எத்துணை இன்னல்களைச் சுமத்தியிருக்குமென்பதைக் கற் பனை பண்ணிப் பார்க்கக்கூட முடியவில்லை. சேர்மனியைப் பேரிட ருள் விழுத்தும் இவ்வுடன்படிக்கையைச் சேர்மானியர் பெரிதும் கண்டித்துப் பேசினரெனினும் சமாதானத்தைப் பெறுவதற் காகச் சேர்மனி தன்னால் முடியுமளவிற்கு எவ்வித தியாகமுஞ் செய்ய வேண்டுமென்பதையும் ஒப்புக்கொண்டனர்.

குறிப்பிட்ட குறைகள்.

தாம் வெளியிட்ட உடன்படிக்கை பற்றிய குறிப்புக்களில் சேர்மானியத் தூதுக்குழுவினர் தமது முறையீட்டிற்குக் காரண மாக விருந்த குறிப்பிட்ட குறைகளை விவரமாக எடுத்துக் காட்டி னர். "நிலக்கரிவளம் அங்கு நிறைய உண்டு என்ற ஒரே காரணத்திற்காக 6,50,000 சேர்மானியர் வாழும் முற்றிலும் சேர்மானியப் பிரதேசமான சார் நதிப்பகுதி சேர்மானியப் பேரர சின் ஆட்சியின் கீழிருந்து குறைந்தது பதினைந்து வருட காலத் திற்குப் பிரிக்கப்படவிருக்கின்றது. கடந்த 750 வருடங்களாகப் போலந்துடன் எவ்வித அரசியற் றொடர்பும் கொண்டிராத மேற்சைலீசியா சேர்மனியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுப் போலந் திற்குக் கொடுபடவிருக்கின்றது. மேற்குப் பிரசியாவிலும் போசன் தேசத்திலும் வாழும் கோடிக்கணக்கான சேர்மானியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலந்தின் ஆட்சிக்குக் கீழ் தள்ளப்படவிருக்கின்றனர்.[1] கிழக்குப் பிரசியாவும், முற்றிலும் சேர்மானியப் பிரதேசமான மெமல் நாடும் சேர்மானியப் பேரரசின் ஆட்சியிலிருந்து பிரித்தெடுக்கப் படவிருக்கின்றன. எக்காலமும் சேர்மானியப் பண்பு கொண்டு விளங்கிய தான்சிக்கு போலந்தின் இறைமைக்குக் கீழ் விடு தலை அரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. போலந்தின் பொருளாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இதற்கு ஒரு கடல்வாயில் வேண்டுமென்றால் கட்டுப்பாடற்ற துறைமுகங்களை நிறுவி அவற்றில் போலந்துக்கெனச் சிறப்புரி மைகள் வழங்கலாம். "இவ்வாறுக ஓரிடத்தில் சட்டமுறையான வரலாற்றுரிமையை நிலைநாட்டியும், இன்னோரிடத்தில் மனித இனவரலாற்று அடிப்படையில் பிரதேசம் வகுத்தும், பிறிதோரி டத்தில் பொருளாதார அடிப்படையில் பிரித்துக் கொடுத்தும், ஒரு தலைப்பட்ட முடிவு செய்திருக்கின்றனர். ஆனால் எல்லாவிடங் களிலும் சேர்மனிக்கெதிராகவே பிரச்சினை தீர்மானிக்கப்பட்டிருக் கின்றது" எனச் சேர்மனி முறையிட்டது. முற்றிலும் போலந்து மக்கள் வாழும் போசன் தேசப்பகுதியையும் மேற்குப் பிரசிய மாவட்டங்களையும் போலந்திற்குக் கொடுப்பதற்குச் சேர்மனி இணங்கிற்று. ஆனால் உடன்படிக்கைத் திட்டத்திற்குச் சிறிதும் ஏற்புடைமை இல்லாவகையில் எவராலும் மறுத்துரைக்க முடி யாவண்ணம் சேர்மானியப் பிரதேசங்களாக உள்ள பகுதிகள் சேர்மானிய ஆட்சியிலிருந்து பிரிக்கப்படவிருக்கின்றன. தமக் கெதிராகப் பகைவர் கொண்டுவந்த அதே சுயநிருணய உரிமையை இங்கும் பிரயோகிக்கும்படி சேர்மானியர் வேண்டிநின்றனர். "இப்போரின் பலனகச் சுயநிர்ணய உரிமை எனும் புதிய தோர் அடிப்படைச் சட்டம் தோன்றியுள்ளது. ஆனால் இக் கொள்கை முற்றிலும் சேர்மனிக்கெதிராகவே பிரயோகிக்கப்படு கின்றது. இப்பொழுதுள்ள பிரயோக முறைக்கு முற்றிலும் மாறுக இது எல்லா நாடுகளிலும் சரி நிகர் சமானமாகப் பிரயோ கிக்கப்படல் வேண்டும். சேர்மனியுடன் சேர்ந்து வாழ விரும்பும் சேர்மானிய இனத்தவர் வாழும் நாடுகளுக்குச் சார்பாகவும் இக் கொள்கை பிரயோகிக்கப்படல் வேண்டும். சார்ப் பிரதேசம் அல்சேசு உலொரேன், தான்சிக்கு, மெமல் ஆகிய நாடுகள் சம்பந்தப்பட்டவரையிலும் போலந்திற்கும் பெல்சியத்திற்கும்

---

[1] 1910 ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற சேர்மானியச் சனத்தொகைக் கணக் கீட்டின்படி போலந்திற்கு அளிக்கப்பட்ட சேர்மானியப் பிரதேசத்தில் 10 இலட்சம் சேர்மானியரும் 20 இலட்சம் போலந்து வாசிகளும் இருந்தனர். குடியொப்பத் தேர்வுக்கு வரையறுக்கப்பட்ட பகுதியில் 10 இலட்சம் சேர்மானியரும் 15 இலட்சம் போலந்து வாசிகளும் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்பட்ட நாடுகள் சம்பந்தப்பட்டவரையிலும் இக்கொள்கை மீறப்பட்டுள்ளது எனச் சேர்மனி குற்றஞ் சாட்டியுள்ளது. இக் கொள்கைக்கு முற்றிலும் மாறுக ஒசுற்றியச் சேர்மனியர் சேர் மானிய தேசத்தின் ஆட்சிக்குட்பட விரும்பும் ஒசுற்றியச் சேர் மானிய தேசத்தில் வாழ்கின்ற சேர்மானியரது அடங்கா ஆசை தகர்த்தெறியப்பட்டது. மேலும் எமது நாட்டின் எல்லைப்புறங் களில் வாழும் எம் தேசீய இனத்தவர் புதிதாகத் தோற்று விக்கப்பட்டுள்ள செக்கோசிலவாக்கிய நாட்டிலேயே வாழப் பல வந்தப்படுத்தப்படுகின்றனர்". "அல்சேசு உலொரேன் பகுதி யில் வாழும் மக்களது விருப்பம் எதுவென்று இப்பொழுதே அறியப்படாவிடின், பின்னைப்பொழுதுமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது" என நேசநாடுகள் எச்சரிக்கப்பட்டன. குடி யேற்ற நாடுகள் பற்றிய உடன்படிக்கைத் தீர்ப்பினையும் சேர் மனி எதிர்த்தது. "குடியேற்ற நாடுகள் பற்றிய பிரச்சினை தீர்க்கப்பட்ட முறையும் நீதிவழிச் சமாதானத்திற்கு முரணானது". இக்குடியேற்றநாடுகள் சட்ட பூர்வமாகச் சேர்மனியால் இணைக்கப் பெற்றவை. இவற்றின் வளர்ச்சி இடையறு உழைப்பினால் ஏற்பட்டது. சேர்மனியின் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனை நிலையமாகவும் மிகுதிச் சனத் தொகையினர் சென்று குடியேறு வதற்கான நாடுகளாகவும் விளங்குவதால், இவை எமது முக்கிய தேசிய மூலதனங்களில் ஒன்று என வாதிக்கப்பட்டது. சருவதேச சபையின் கொள்கைக்கிணங்க — வேண்டுமானால் சபையினது பொறுப்பின் கீழ்—தனது குடியேற்ற நாடுகளை ஆவும் இணைக் கந் தெரிவித்தது.

பிற முறையீடுகள்.

சமாதானத்திட்டம் பற்றிய குறிப்பினில் இழப்பீடு பற்றியும் பேசப்பட்டிருந்தது. "போர்க்காலத்தில் சேர்மானியப் படையாட் சியின் கீழ் வந்த பெல்சியம், பிரான்சு ஆகிய தேசங்களில் வாழ்ந்த மக்கட்கு ஏற்பட்ட சேதங்கட்கு ஈடுசெய்ய வேண்டியது தான் சேர்மனியின் கடமை என்பது எல்லா நாடுகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டதோர் உண்மை". ஆனால் உடன்படிக்கைத் திட்டத்தில் காணப்படும் இழப்பீட்டுக் குறிப்போ இவ்வுடன்பாட் டினை மிஞ்சுவதாக இருக்கிறது என எடுத்துக் காட்டப்பட்டது. "சேர்மனியின் எதிர்காலத்தை முற்றிலும் இருண்ட கால மாக்கும் வகையில் வெற்றிபெற்ற நாடுகள் இழப்பீட்டினால் பெருங்கடனைச் சுமத்துவார்களேயானால் தாம் மீளா அடிமை களாக ஆக்கப்பட்டுவிட்டனர் என்றே சேர்மானிய மக்கள் கருதுவர்" என அக்குறிப்பில் எடுத்துச் சொல்லப்பட்டது. சேர் மனிக்குச் சருவதேசசபையில் அங்கத்துவம் கொடாததும் எதிர்க் கப்பட்டது. "ஆரம்ப காலத்திலிருந்தே மற்ற நாடுகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமமானதோர் அடிப்படையில் சேர்மனி சருவதேச சபையிற் சேர்க்கப்படவேண்டும்." சிறியதொரு சேர்மானியக் குடியரசாகக் குறைக்கப்பட்ட ஒசுற்றியா சம்பந்தமாகக் குறிக்கும்பொழுது "சேர்மனி தனது ஒசுற்றிய சேர்மானிய எல்லையைப் பலத்தால் அகட்டும் எண்ணம் என்றும் இருக்கவில்லை. இனியும் இருக்கப் போவதில்லை" என ஓர் உறுதிமொழி கூறப்பட்டது. ஆனால் இருபது வருட கால எல்லைக்குள் இவ்வுறுதி மீறப்பட்டது. மூந்திய காலங்களிலும் சேர்மனி தான் செய்த உறுதிமொழிகளை மீறியதால் அதன் மீது ஏற்பட்ட நம்பிக்கையின்மையினாலேயே சேர்மனியினது வேண்டுகோளையும், "எதிர்காலத்திலும் வேறுபாட்டினை உண்டாக்கும் உங்கள் நடவடிக்கை இன்னொரு புதிய போரை ஏற்படுத்தும் என்ற எச்சரிக்கையையும்" நேச நாடுகள் புறக்கணித்தன. உடன்படிக்கைத்திட்டம் பற்றிய தமது குறிப்பின் முடிவில் சேர்மானியர் காட்டிய வாதமே எல்லாவற்றையும் விட முக்கியமானது என்று சொல்லுமளவிற்கு அமைந்திருந்தது. "மனித ஐக்கியத்திற்கான சத்திகள் முன்னெருபொழுது மில்லாதவகையில் இப்பொழுதுதான் தொழிற்படுகின்றன. வேர்சை சமாதான மாநாட்டின் பணி இவ்வைக்கியத்தைப் பூரணப்படுத்துவதிலேயே தங்கியிருக்கின்றது. சுதந்திரம், உழைப்பின் உயர்வு ஆகியனவற்றின் அடிப்படையில் புதியதொரு பொது நல ஆட்சி நிறுவப்படவிருக்கும் இச்சமயத்தில் உலக மக்கள் எல்லார்க்கும் உடன்பாடாகும் வகையில் மனித இனம் அழிவற்று வாழும் முறையில் சமாதானம் இயற்றப்படல் வேண்டுமென—மனச்சாட்சிக்கு மாறுபடாத ஒரு சமாதானத்தை நிறுவுதல் வேண்டுமென இதுவரை தனது பகை நாடுகளாக இருந்த நாடுகளைச் சேர்மனி வேண்டி நிற்கின்றது. நடந்த இப்போரே உலகின் கடைசிப்போராகவும், இதுபோன்று வரும் இன்னொரு போரிலிருந்து மனித சமுதாயம் காப்பாற்றப்படுவதற்கான உறுதிகளை அளிப்பதே இச்சமாதானத்தின் முதனோக்கமாகவும், முக்கிய நோக்கமாகவும் இருத்தல் வேண்டும். தலைசிறந்தவொரு தேசிய இனத்தை அடக்கி அடிமையாக்குவதனால் உலகில் நிரந்தர சமாதானம் நிலவமுடியாது. புதிய சமாதான ஒப்பந்தம் நீதிவழி வருவதாகவும் ஆதலால் எல்லா நாடுகளும் தாமாகவே ஒப்புக்கொள்ளக்கூடியதாகவும் அமைதல் வேண்டும். சம்பந்தப்பட்ட நாடுகள் எல்லாவற்றாலும் ஒப்புக்கொள்ளப்பட்டதும் எல்லோருக்கும் நீதிவழங்குவதுமான உடன்படிக்கை ஒன்றே உலக சமாதானத்திற்குப் பலம் பொருந்திய உறுதியளிப்பதாக விருக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்மனிக்கு நேச நாடுகள் அளித்த பதில்.

சமர்ப்பிக்கப்பட்ட சமாதான உடன்படிக்கைத் திட்டம் படையிகலொழிவு ஒப்பந்தத்திற்கு முரண்பட்டு நிற்கின்றதென்றும், வலுவழிவந்த ஒப்பந்தமென்றும், சேர்மானியத் தூதுக்குழு எதிர்ப்புத் தெரிவித்தது. இக்குற்றச்சாட்டுகட்கு விடையிறுக்கும் முகமாக விடுக்கப்பட்ட "நேசநாடுகளினதும் அவற்றின் துணை நாடுகளினதும் பதில்" எனப்படும் குறிப்பில் "சமாதான உடன்படிக்கை சனுதிபதி உவில்சனின் பதினான்கு அம்சத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல்" வேண்டுமெனவும், அக்கொள்கைகளே இச்சமாதானத்திட்டத்தை வரைவதில் துணையாக நின்றன என்றும் அறிவிக்கப்பட்டது. சேர்மானியக் குறிப்பிற் காணப்பட்ட இரண்டாவது எதிர்ப்புக்குக் கொடுக்கப்பட்ட பதிலாவது "நீதிக்கும் மனித சமுதாயத்திற்கும் இழைக்கப்பட்ட மாபெருங் குற்றம் என்ற அடிப்படைக் கருத்துக்கொண்டு இப்போரினை நாம் நோக்கத்தவறினால், உலக சுதந்திரத்தினைக் காப்பாற்றுவதற்காகத் தம்மிடமிருந்த எல்லாவற்றையுமிழந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னர் நாம் பொய்யராக நிற்கவேண்டிவரும். எனவே, இப்போர் பற்றிய கணக்குவழக்கைத் தீர்ப்பதற்கு நீதியே சிறந்த அடிச்சரடு. முன்னர் வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்ட நீதி சேர்மனிக்கு வழங்கப்படும். நீதி என்பது எல்லோர்க்கும் பொதுவானதாக இருக்கவேண்டும். ஐரோப்பாவைப் பிரசியத் தனியாட்சி ஆதிக்கத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகக் குருதிக் களங்களில் உயிரிழந்தவர்க்கும், காயமுற்றுத் துன்பப்பட்டவர்க்கும், போரினால் அனைதகளாக்கப்பட்டவர்க்கும் அல்லலுக்குட்படுத்தப்பட்டவர்க்கும் நீதி நின்று நிலைக்கவேண்டுமென்பதற்காகப் போராடி இன்று முப்பதுகோடி பவுண் கடனில் அமிழ்ந்தியிருக்கும் மக்கட்கும் நீதி வழங்கப்படல் வேண்டும். சேர்மானியக் காட்டுமிராண்டித்தனத்தால் வீடிழந்து, பொருளிழந்து, நாடிழந்து நிற்கும் கோடிக்கணக்கான மக்கட்கு நீதி வழங்கப்படல்வேண்டும். இழைக்கப்பட்ட தவற்றிற்காக இழப்பீடு கொடுப்பதுதான் நீதி. எனவே சேர்மனி தன் சத்திக் கேற்றவகையில் இழப்பீட்டுத் தொகையை இறுக்கவேண்டுமென்பது சமாதான உடன்படிக்கையின் முக்கிய அம்சமாக விளங்கவேண்டும் என நேசநாடுகளும் அவற்றின் துணைநாடுகளும் வற்புறுத்தின. போரின் பலனை யாராவது சுமந்து தான் ஆகவேண்டும். அப்போர்ச் செலவின் சுமையைத் தாங்கவேண்டியது சேர்மனியா, அல்லது சேர்மனியால் இன்னலுக்குட்படுத்தப்பட்ட நாடுகள் மட்டுமா? இப்போரில் சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளுக்கும் நீதி வழங்கப்படல்வேண்டும். இல்லையேல் உலகில் புதிய குழப்பங்கட்கு இடம் கொடுப்பதாகி விடும். இக்காரணங்களால் தாம் தயாரித்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்படிக்கைத் திட்டம் நீதி வழிவந்த சமாதான உடன்படிக்கையே எனத்தாம் அவர்கள் திண்ணமாக நம்புவதாக அவர்கள் அறிவித்தனர். மேலும் இவ்வுடன்படிக்கை உரிமை வழி நிற்கின்றதென்றும் படையிகலொழிவொப்பந்தக் காலத்தில் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றுவதாக அமைந்திருக்கின்றதென்றும் தாம் நம்புவதாக அறிவித்தனர்.

பொருத்தனையை ஆதரித்துப் பேசியமை.

மறுமொழியில் சேர்மானியருடைய எதிர்ப்பினுல் எழுப்பப் பட்ட வேறுபட்ட அம்சங்கள் ஒன்றன்பின் ஒன்றுகக் கவனிக்கப் பட்டன. ஆள்புலக் குடியிருப்பில் சில சந்தர்ப்பங்களிற் செய்யப் பட்ட தீர்மானம் சேர்மனிக்கு எதிரான தெனின் அது சேர்மனிக்கு அநீதி இழைக்கும் நோக்க மெதனுலும் எற்பட்ட வினை வன்று. சேர்மானியப் பேரரசின் ஆள்புலத்திற் பெரும்பகுதி கடந்த காலத்தில் தவருன முறையில் பெற்ற மாவட்டங்களை யுடையதாயிருந்ததனுல் எற்பட்ட தவிர்க்க முடியாத விளைவாகும். ஒவ்வொரு நாட்டினதும் சமயம், இனம், மொழி ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்த பின்னரே அமைதிப் பொருந்தனையின் ஒவ்வொரு ஆள்புலக் குடியிருப்பும் நிர்ணயிக்கப்பட்டது. சார் பிரச்சினையைப் பொறுத்தவரை வட பிரான்சிலுள்ள சுரங்கங்களை அழித்தமைக்கு முன்மாதிரியாக அமையக்கூடிய வகையிற் பழிவாங்கப்படவேண்டும் என உணரப்பட்டதனுலேயே ஈடு பெறுதற்குக் குறித்த இம்முறையைத் தெரிந்தெடுத்தனர் என நட்பாளர் விளக்கங் கூறினர். சேர்மனி, 14 அம்சங்களையும் போர்நிறுத்த நியதிகளையும் (இதன்படியே அல்சேசு உலொரேனை விட்டு நீங்குவதாயிருந்தது) ஏற்றுக் கொண்டதனுல் அல்சேசு உலொரேனைப் பொறுத்த வரையில் அது குடியொப்பத்திற்காகச் செய்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. சேர்மனியின் கிழக்கு எல்லைப்புறங்களின் பிரச்சினையில் இரு முக்கிய அடிப்படைக் கொள்கைகள் அனுசரிக்கப்பட்டன. முதலாவது, நூற்றாண்டுகளுக்கு முன்னர் நியாயமின்றிப் பறிமுதல் செய்யப்பட்ட சுதந்திரத்தைப் போலந்து நாட்டுக்கு மீண்டும் அளித்தல் என்க. இரண்டாவது, போலந்தரே வசிக்கும் மாவட்டங்களை உட்படுத்தல் என்க. சேர்மானிய எல்லைப்புறங்களிலிருந்து தொலைவிலுள்ள சில பகுதிகளில் சேர்மானியரே பெரும்பான்மையாக உள்ளனர் என்பது உண்மை. ஆனுல் இப்பகுதிகள் சேர்மனியுடனும், இவற்றைச் சுற்றியுள்ள பகுதிகள் போலந்தினுடனும் சேரும்படி எல்லை வகுத்தல் இயலாது. சில மாவட்டங்களில் சேர்மானிய ஆதிக்கம் நிறுவப்பட்ட முறைகளை—அதாவது முன்னர் இருந்த குடித்தொகையிடமிருந்து கவர்ந்ததன் மூலமென்க—மீண்டும் நினைவுகூருதல் இன்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையாததாகும். இன்னும் எந்த விதமான அநீதியையும் தவிர்ப்பதன் பொருட்டுப் போலந்தின் மேற்கு எல்லைப்புறங்களை அதனோடொத்த இனப்பாகுபாட்டுப் பகுதிகளுடன் இணைப்பதற்கு வேண்டிய சில மாற்றங்களை நட்பாளர் செய்திருந்தனர். மேற்சைலீசியாவைப் பொறுத்தவரையில் கையளிக்கப்பட விருக்கும் மாவட்டத்தில் உள்ள குடித்தொகையில் பெரும்பான்மையோர் போலந்தரென்பது மறுக்க முடியாததாகும். எவ்வாறாயினும், சேர்மனியின் கோரிக்கைக்கு மதிப்புக் கொடுக்கும் பொருட்டுக் குடியொப்பம் ஒன்று எடுக்கப்படும். பல நூற்றாண்டுகளாகக் கிழக்குப் பிரசியா சேர்மனியிலிருந்து பிரிக்கப்பட்டு 1866 வரை சேர்மனியின் அரசியல் எல்லைப்புறங்களுட் சேர்க்கப்படவில்லை. மேலும் கிழக்குப் பிரசியாவிலுள்ள சேர்மானியருக்கு —இருபது இலட்சத்திற்குக் குறைந்த தொகையினரே இருந்தனர்—சேர்மனியுடன் தரைமூலம் தொடர்பு நிறுவுவதிலிருந்த அக்கறையிலும் பார்க்க, கடலினை நேராக அடைவதற்கு வழி காண்பதில் போலந்தருக்கிருந்த அக்கறை அதிக முக்கியத்துவமுடையதாகும். இலிதுவேனியா மெமல் மூலமும் போலந்து தான்சிக்கு மூலமும் மட்டுமே கடலை அடையமுடியும். சேர்மானியருடைய குடியேற்றப் பாலனத்தின் கீழ் நாட்டுமக்கள் துன்புற்றனர். அன்றியும் படைப் பேரரசுக்குரிய தளங்களை நிறுவுவதைத் தடுக்கப் பாதுகாப்பளிக்க வேண்டியிருந்தது. இவற்றை நோக்குமிடத்து, சேர்மனி அதன் குடியேற்ற நாடுகளை இழந்தமை பொருத்தமானதாகவே கருதப்பட்டது. இழப்பீட்டிற்காக வாதாடுமிடத்து வெற்றி கொள்ளப்பட்ட நாட்டுக்குக் கேடு எதுவும் ஏற்படவில்லை யெனவும் நட்புற வாளருடைய நாடுகளிலும் வீடுகளிலும் ஏற்பட்ட அழிவெதுவும் அதற்கு ஏற்படவில்லை யெனவும் கூறப்பட்டது. அன்றியும் நாட்டுக் கூட்டவையில் சேர்மனியை உடனே சேர்க்க முடியாது. எனெனில் உலகில் உள்ள சுதந்திர நாட்டினர் எவர் தமக்குத் தவறிழைத்தனரோ அவர்களுடன் சமமாகப் பழகுவர் என எதிர்பார்க்க முடியாதாதலாலென்க. கட்டாயமாகப் படைக்கலந் துறத்தலினால் ஏற்படும் மனக் கசப்பைக் குறைத்தற்குச் சேர்மனி தன்னுடைய படைக் கலங்களைத் துறத்தற்காக விதிக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்பதனால் பொதுவாகப் படைக்கலங்கள் குறையும் எனத் தாம் ஒப்புக்கொள்வதை நட்புறவு வல்லரசுகள் தெரிவித்தன. இறுதியில், உத்தரவாத மளிக்கும் பொறுப்பிற்கு எதிராகச் சேர்மானியர் செய்த ஆட்சேபம் ஐயத்துக்கிடமின்றி நிராகரிக்கப்பட்டது. குடிப்பதி உவில்சன் கூறியவற்றையே அவர்கள் மீண்டும் கூறலாம். "முன்னர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுத கட்சிகள் சில அமைதிப் பொருத்தனையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபற்றக் கூடும். ஆதலால் சமாதானத்திற்கு உத்தரவாத மளிக்கப்படவேண்டும்." இம்மறுமொழியின் போக்கு இணக்க மானதாகக் காணப்படவில்லை யெனினும், உண்மையில் பல சலுகைகள் அளிக்கப்பட்டன. சேர்மனியின் கிழக்கு எல்லைப் புறங்களை மாற்றியமைத்தமையும் மேற்சைலீசியாவில் குடி யொப்ப மெடுத்தமையும் குறிப்பிடத் தக்கவை. இத்திருத் தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமையால் 1817 இல் புதிய சேர் மானியப் பேரரசு பிரகடனஞ் செய்யப்பட்ட வேர்சை அரமனை யின் பெரிய மண்டபத்தில்—தோற்கடிக்கப்பட்ட எதிரிகளின் தலைநகரிலேயே —1919 யூன் 28 ஆம் திகதி சேர்மானியர் வேர்சைப் பொருத்தனைக்குக் கைச்சாத்திட்டனர். காலப்போக்கில் பழிவாங்கப்பட்டது. மனிதனுடைய செயல்களின் நிலையாமைக் குச் சரித்திரத்தில் மேலுமொரு சான்று கிடைத்தது.

சென் சேர்மன் பொருத்தனை.

வேர்சைப் பொருத்தனையைத் தொடர்ந்து ஐரோப்பாவில் குறிப்பிடத்தக்க ஆள்புல மாற்றங்களை ஏற்படுத்திய ஏனைய அமைதிப் பொருத்தனைகளும் நிறைவேறின. சென் சேர்மன் பொருத்தனையினால் (1919), ஏனைய ஐரோப்பிய இறைகளைவிடப் பல நூற்றாண்டுகளாகத் தலைமை இடத்தை அனுபவித்து வந்த ஆபிசுபேக்கு ஆட்சியாளரையுடைய ஒசுற்றியா 60 இலட்சம் மக்களைக் கொண்ட ஒரு சிறிய சேர்மானியக் குடியரசாக மாறிற்று. சேர்மானியர், மகியார், செக்கியர், சிலோவாக்கர், போலந் தர், உரூதினியர், சேபியர், குரோட்டர், உரூமேனியர், இத்தாலி யர் ஆகிய பல்வேறுபட்ட இனங்களின் வாழிடமாயிருந்த ஒசுற்றி யாவின் மாகாணங்களை அயலவர் பகிர்ந்தெடுத்தனர். கீழ்ப்பட்ட நாட்டினங்களின் விடுதலை சுய நிர்ணயக் கொள்கையோடும் இயைவதாயிருந்தது. இத்தத்துவத்தை, இத்தாலி தனது எல் லைப்புறங்களைக் கூட்டும் நோக்கத்துடன் இரண்டு இலட்சம் சேர் மானியரைக் கொண்ட தைரோலை பிறென்னர் கணவாயவரை வலிந்திணைத்தமைக்குத் தலைக்கீடாகக் கூறமுடியாது. இராணுவ நோக்கங்களுக்காகத் தென் தைரோல் அர்ப்பணஞ் செய்யப் படுகிறதென ஒசுற்றியா வீணை எதிர்த்தது. சேர்மனி மேற்கு அங்கேரிய ஈட்டமே, ஒசுற்றியா தனது பேரரசு குலைக்கப்பட்டதற் காகப் பெற்ற நட்ட ஈடாகும். திரியனன் பொருத்தனையே (1920) அங்கேரியின் விதியை நிருணயித்தது. அங்கேரி, ஒசுற்றி யாவினின்றும் பிரிக்கப்பட்டது. அன்றியும் திரான்சில்வேனியாவை உரூமேனியாவுக்கும், குரோசியாவைச் சேபியாவுக்கும் சிலோ வாக்கியாவைச் செக்கியருக்கும் கையளிக்க அது கட்டாயப்படுத்தப் பட்டது. ஆள்புலத்தை இழந்தமையால் அதன் குடித்தொகையும் 2 கோடியே 10 இலட்சத்திலிருந்து 75 இலட்சமாகக் குறைந்தது.

திரியனன் பொருத்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றியும் 30 இலட்சம் அங்கேரியர் தங்களால் வெறுக்கப் பட்ட நாட்டினங்களின் ஆட்சிக்குட்பட்டனர். அங்கேரி பெருங் கோபமடைந்தது. மகியார் வெளியிட்ட பிரசுரங்களில் நான்கு மூலைகளும் தீப்பற்றி எரியும் அங்கேரிப்படம் வரையப்பட்டிருந்தது. ஒசுற்றியாவின் எதிர்ப்பைப் போலவே அங்கேரியின் எதிர்ப்பும் பொருட்படுத்தப்படவில்லை. அங்கேரி அகம்பாவமுடையதாயிருந்த காலத்தில் அதன்கீழிருந்த இனத்தினரை அது எங்ஙனம் நடத்திற்றோ அவ்வாறே இப்பொழுது அது நடத்தப்படுகின்றது. ஆயிரமாண்டுகள் இருந்த அரசுதானும் தனது எல்லைப்புறங் களுக்குட்பட்ட இனங்களை ஆட்சி செய்யவேண்டும் எனும் பேரவா வுடன் அவற்றை நீண்டகாலம் ஒடுக்கிய வரலாற்றையுடைய தாயின் அது நிலைத்து நிற்காது. நியூலிப் பொருத்தனையினால் (1919) பல்கேரியா தனது ஆள்புலத்தில் ஒரு பகுதியைக் கட்டாயம் இழக்கவேண்டியதாயிற்று. செவசுப் பொருத்தனையி னால் (1920) துருக்கி திரேசை இழந்ததோடு ஐரோப்பாவினின்றும் அகற்றப்பட்டது. செவசுப் பொருத்தனைக்காகச் செய்யப்பட்ட உலோ சேன் பொருத்தனை (1923) நிறைவேற்றப்பட்ட அமைதிப் பொருத் தனைகளுள் குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் அமைதியை நாடி. னோர் சுதந்திரமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தி ஏற்படுத்தி யது அந்த ஒன்று மட்டுமேயாகும். எகித்து, சூடான், சைப்பிரசு, பலத்தீன், சிரியா, மெசப்பொத்தேமியா, அரேபியா ஆகியவற்றின் மீது உரிமை கொண்டாடுவதைத் துருக்கி கைவிட்டது. ஆனால் கொன்சுதாந்திநோப்பிளையும் கிழக்குத் திரேசையும், சிமே னுவையும் அனத்தோலியாவையும் தன்னுட்சியில் வைத்திருந் தது. இவ்வாறுகப் பலரும் தமதாக்க அவாவும் பைசாந்திய நகரம் துருக்கியிடமே யிருந்தமையால் அதற்கு ஐரோப்பாவில் இன்னும் பிடியிருந்தது. நீரிணைகள் நடுநிலைப் பிரதேசங்களா யின. அவற்றினூடு சுதந்திரமாய்ப் போய்வர எல்லா நாட்டுக் கப்பல்களுக்கும் அனுமதியளிக்கப்பட்டது.

எனைய பொருத் தனைகள்.

போலந்து.

புதிய அல்லது பெரிய அரசுகளின் தோற்றமே 1919-39 இல் இருந்த ஐரோப்பாவை உருவாக்கிய அமைதி உடன் படிக்கைகளின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஒசுற்றிய—அங் கேரியப் பேரரசில் எற்பட்ட பிளவும், இரசியாவும் சேர்மனியும் கூறுபடுத்தப்பட்டமையும் ஒருங்கு சேர்ந்து புதிய அரசுகளை உருவாக்குதற்கும் பழைய அரசுகளைப் பெருப்பிப்பதற்கும் பயன் பட்டன. இப்பொழுது உருவாக்கப்பட்ட அரசுகளுள் முக்கிய மானது போலந்து. திட்டமாய்க் கூறுவதாயின் இது பழைய அரசின் மறுபிறப்பாகும். இப்பழைய அரசின் அயலவர் அதன் சுதந்திரத்தை நசுக்கினர். ஆனால் அதன் நினைவுகளை வேரொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிப்பதில் வெற்றிபெறவில்லை. 18 ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட போலந்தின் பிரிவினை ஒரு பெரும் தவறாகும். இத் தவறிழைக்கப்பட்ட காலந் தொட்டு அது ஐரோப்பிய அரசியலில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்திக்கொண்டேயிருந்தது. அதன் மீட்சி வரலாற்று நிகழ்ச்சிப் போக்கிலேயே தங்கியிருந்தது. இரசியா இரசிய போலந்தை விட்டுக்கொடுத்தது. சேர்மனி போசனையும் மேற்குப் பிரசியாவையும் ஒப்படைத்தது. ஒசுற்றியா கலீசியாவை விடுதலை செய்தது. "போலந்து இடைவெளி" கடலினைப் போலந்து அடைவதற்கு வழியாயமைந்தது. அன்றியும் தான்சிக்குச் சுதந்திர நகரை உருவாக்கியதனால் ஒரு துறைமுகம் கிடைத்தது. எல்லோருடைய நல்விழைவுகளுடனும்போலந்து 2கோடியே 80 இலட்சம் மக்களுடன் தன் புதிய வாழ்வைத் தொடங்கிற்று. எனினும் கடந்தகாலத்தில் அதன் அழிவிற்கு அதன் பேரவாவே காரணம் என்பதை மறவாதவர்களுக்கு அதன் எதிர்காலத்தைப் பற்றிய ஐயமில்லாதிருக்கவில்லை.

செக்கோசிலவாக்கியா.

புதிய குடியரசிலிருந்த செக்கியரும் சேர்மானியரும் ஒரு காலத்தில் சுதந்திர நாடொன்றை–பொகீமிய இராச்சியத்தை–(இவ் விராச்சியம் மூப்பதாண்டுப் போரின் பொழுதே அழிவுற்றது) உருவாக்கியிருந்தனர் என்ற அளவில் செக்கோசிலவாக்கியா போலந்தை ஒத்திருந்தது. அன்றியும் 19 ஆம் நூற்றாண்டில் போலந்தரிடையே நிலவியதுபோல் செக்கியரிடையேயும் நாட்டின உணர்ச்சி நிலவிற்று. "ஒசுற்றியா உருவாவதற்கு முன்னும் நாங்கள் இருந்தோம். ஒசுற்றியா இல்லாத பொழுதும் நாம் இன்னும் இருப்போம்" எனத் தாயகப்பற்றுடைய செக்கியனொருவன் கூறினன். ஆனல் விதி, பல ஊழிகளாகத் தம்முடன் சண்டைசெய்து கொண்டிருந்த அயலவருடன் செக்கியரைச் சேர்த்தது. பொகீமியாவில் வாழ்ந்து வந்த சேர்மானிய மக்களுக்குச் சுய நிர்ணய உரிமை அளிக்கப்படவேண்டுமென அமைதி மாநாட்டில் (1919) தெரிவிக்கப்பட்டது. இதற்கெதிராக, செக்கோ–சிலோவாக்கியப் படைப் பகுதிகள் நட்பு நாடுகளின் சார்பாகப் போர் புரிந்தமை காரணமாக, தங்களது கோரிக்கை அங்கீகரிக்கப்படுமென்று நம்பிய செக்கியத் தலைவர்கள், வரலாற்றுப் பெருமை பெற்ற பொகீமிய எல்லைப்புறங்களைத் தங்களுக்குத் தரும்படி கோரினர். இவ்வெல்லைப் புறங்கள் சிறந்த அரணுக அமைந்த ஒரு மலைத் தொடரைக் கொண்டனவாகும். அத்தலைவர்கள் விரும்பியவாறே அவர்களுக்கு அவ்வுரிமைகள் வழங்கப்பட்டன. மக்கட்பாகுபாட்டுத் தத்துவத்திற்கு இணங்காத விதத்தில் பல நூறுயிரம் சேர்மானியர்கள் சேர்க்கப்பட்டமைக்கு ஒசுற்றியா காட்டிய எதிர்ப்பு கவனிக்கப்படவில்லை. "பொகீமிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிக்குரிய எல்லைப்புற மாகாணங்களில் வாழ்ந்து வந்த சேர்மானிய மொழியைப் பேசும் மக்கள், வரலாறு விதித்ததின் பிரகாரம் நாட்டின ஒற்றுமையை வளரச் செய்வதற்காகச் செக்கிய மக்களோடு ஒத்துழைப்பான் வேண்டி., அவர்களோடு தொடர்பு கொண்டு அம்மாகாணங்களிலே வதிய வேண்டும்" என்று பதிலளிக்கப்பட்டது. இவ்வாதம் இவ்விரு இனத்தினருக்குமிருந்த வரலாற்றுத் தொடர்பை ஆதாரமாகக் கொண்டதாகும். ஆனல், சேர்மானிய மக்கள் செக்கியரோடும் சிலோவாக்கியரோடும் இரு இனங்கலந்த ஓர் அரசாக ஐக்கியப்படுவதைப் பிற காரணங்கள் ஊக்கின. இவ்வெல்லைப்புறப் பகுதிகளில் வாழ்ந்த செக்கிய இனச் சிறுபான்மையோரைப் புறக்கணித்து விடத் தீர்மானிக்கப்படினும், செக்கிய மக்களுக்கும் சேர்மானிய மக்களுக்கும் உள்ள எல்லையைப் போதியளவு வரையறுத்துக் கூறுவது முடியாததாயிருந்திருக்கும்; எனெனில் நாட்டின் மத்திய பாகங்களில் செக்கிய மக்கள் பெரும்பான்மையோராயும், எல்லையோரங்களில் சேர்மானியர் பெரும்பான்மையோராயும் இருந்தனரெனினும், இடைப் பகுதிகளில் இரு இனத்தினரும் வேறுபடுத்திக் கூற முடியாதவளவுக்கு ஒன்று சேர்ந்து வாழ்ந்து வந்தனர். ஐரோப்பாவில் வேறு எங்கேனும் காணக்கிடைக்காத முறையில் இயற்கையாக அமைக்கப்பெற்ற வரலாற்றுப் புகழ்வாய்ந்த இவ்வெல்லைப் புறங்களைக் கைவிடுவதாய செயல், மூன்று தீங்குகளை விளைவித்திருக்கும். அது செக்கோசிலவாக்கியாவை அதன் பாதுகாப்புகளை இழக்கச் செய்து, உண்மையில் அதன் சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியாத நிலையையடையச் செய்திருக்கும். இன்னும் அது பொகீமியாவின் செல்வ வளத்துக்கு அடிப்படையாக விருந்த அதன் கனிப் பொருட் செல்வத்தில் பெரும் பாகத்தை இழக்கச் செய்திருக்கும். அன்றியும் அது சேர்மானிய மாவட்டங்களைக்கூட அவற்றிற்கு இயற்கையாக அமைந்திருந்த சந்தையாகிய பொகீமிய மத்திய கமத்தொழில் பிரதேசத்திலிருந்து பிரித்து, அவற்றின் கைத்தொழில்களுக்கு ஆதாரமாக விருந்த செக்கிய நாட்டுத் தொழிலாளரை அவை இழக்குமாறு செய்து, மாபெருஞ் சேர்மானிய கைத்தொழில் வட்டாரங்களுடன் வலுவான போட்டியிட வேண்டிய நிலைக்குக் கொண்டு வந்திருக்கும். இவைகளே, (பாரிசு அமைதி மாநாட்டின்) தலைமைக் கழகத்தினை, பொகீமியாவிற்கும் சேர்மனிக்கும் இடைப்பட்ட பழைய வரலாறு சார்ந்த எல்லைப்புறத்தை யாதொரு மாற்றமுமின்றி ஏற்றுக் கொள்ளச் செய்ததற்கு முக்கியமான காரணங்களாயிருந்தன வெனத்தோன்றிற்று[1]. முதலாவது நாட்டுமன்றங் கூடியபொழுது,

[1] R. W. Seton-Watson, in "A History of the Peace Conference of Paris" (ed. Temperley).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத்தில் சேர்மானியர் இல்லாமலிருந்தமை செக்கோசிலவாக்கியா ஏறத்தாழ இருபதாண்டின் பின்னர், படிப்படியாகச் சிதறுண்டு போகுமென்பதை முன்னறிவிக்கும் ஓர் அவக்குறியாயிருந்தது ; எனினும் இத்தீய குறியின் விளைவு பிற்காலத்திலேயே வெளிப்படுவதாயிற்று ; தோமசு மசாறிக்கு என்பானின் தலைமையில் இவ்விளங் குடியரசு நன்னம்பிக்கை மனப்பான்மையுடன் தனது அலுவல்களை ஒழுங்குபடுத்தத் தொடங்கியது. அக் குடியரசின் இப்போதைய நிலப்பரப்பில், 1910 இல் ஏறத்தாழ எண்பத்திரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் செக்கியரும் சிலோவாக்கியரும், முப்பத்தேழு இலட்சத்து ஐம்பதினாயிரம் சேர்மானியரும், எட்டு இலட்சம் மகியார்களும், ஒரு இலட்சத்து ஐம்பத்தையாயிரம் போலந்து மக்களும், ஒரு இலட்சத்துப் பன்னீராயிரம் உரூதினியரும் வாழ்ந்தனரென்பதிலிருந்து அதனை எதிர்நோக்கியிருந்த பொறுப்பின் கடுமையை அளவிடலாம்.

புதிய அரசுகள்.

1918 இல் தோன்றிய எனைய புதிய அரசுகள் பினிலாந்து, இலிதுவேனியா, எசுத்தோனியா, இலாத்துவியா என்பனவாகும். போற்றிக்கு நாடுகளாகிய இவை இரசியப் பேரரசின் ஒரு பகுதியாயிருந்தன. இங்ஙனமாகப் புதிய அரசுகளமைக்கப் பட்டதுமன்றி, ஐரோப்பா திருப்பி அமைக்கப் பெற்றதனால் எலவே இருந்த நாடுகளும் கூடுதலான ஆள்புல எல்லைகளைப் பெற்றன. பிரான்சு, இத்தாலி, தென்மாக்கு, பெல்சியம் ஆகிய நாடுகளின் ஈட்டங்களைப் பற்றி முன்னரே கூறியுள்ளோம். சேபியாவுக்கு குரோசியா, மொன்றெநீகிரோ, சுலொவேனியா, தலுமேசியா, பொசினியா, எசேகோவினு ஆகிய நாடுகள் கிடைத்தன. அது யூகோசிலாவியா என்ற பெயர் பெற்று, ஐந்து இலட்சம் சேர்மானியரும், ஐந்து இலட்சம் மகியாரும் உட்பட ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சம் மக்களைக் கொண்ட நாடாகியது. அங்கேரியிடமிருந்து திரான்சில்வேனியாவையும், இரசியருக்குச் சொந்தமான பெசரேபியாவையும் உரூமேனியா பெற்றது. அதன் குடித்தொகை ஒரு கோடியே அறுபது இலட்சமாகியது. இத் தொகையில் பதினைந்து இலட்சம் மகியாரும் எழுபத்தையாயிரம் சேர்மானியரு மிருந்தனர்.

அமைதிப் பொருத்தனைகள் பற்றிய மதிப்பீடு.

1919—23 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலிருந்த அமைதிப் பொருத்தனைகளை முழுமையாக மீண்டும் ஆராயப் புகும் பொழுது, அவை அமைக்கப்பட்ட சூழ்நிலைகளை நாம் மனத்திற் கொள்ளல் வேண்டும். முதன் முதலாக, பாரிசு அமைதி மாநாட்டிற் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த நாடுகள் தங்கள் சொந்தக் கோரிக்கைகள் - அக்கோரிக்கைகள் தங்களுக்கு ஐரோப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற் கிடைக்க வேண்டிய ஆள்புலங்களுக்காயிருந்தாலும் சரி ஆபிரிக்காவிற் கிடைக்கவேண்டிய குடியேற்ற நாடுகளுக்காயிருந் தாலும் சரி–நிறைவேறுவதைப் பற்றி அக்கறை கொண்டிருந்த னவே தவிர பொது அமைதி பற்றி அக்கறை கொள்ளவில்லை. இர ண்டாவதாக, அதிகாரம் பெற்றிருந்த தலைமைக் கழக உறுப் பினர்கள், சொந்த நாடுகளில் மக்கள் விடுக்கும் கோரிக்கைகளுக் கிணங்கத் தயக்கங் காட்டும் தங்கள் கூட்டாளிகளை ஒரு குறித்த நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தவோ, ஒரு முகமான அங்கீகாரம் பெறவேண்டிய முடிவுகளைத் தடை செய் யவோ கட்டாயப்படுத்தக் கூடும். தங்களது வேறுபட்ட எண்ணங்க ளிடையே ஒற்றுமை காண்பதில் அவர்கள் அடிக்கடி பெரிதும் இடர்ப்படவேண்டியிருந்தமை இகழ்ச்சியானதாகும். மூன்ற வதாக, அமைதிப் பொருத்தனைகள் பலதிறப்பட்ட ஆக்குநர் களது முயற்சிகளின் பயனாக எழுந்தன. இவ்விதமாக (சம காலத்து நுண்ணுய்வாளர் காட்டியதுபோல்) வேர்சைப் பொருத் தனையானது பகுதிபகுதியாக–அதாவது அது அரசியல், பொரு ளாதாரம், நிதி, படை என்பனபற்றி—வரையப்பட்டதாகும். சேர் மனிமீது சுமத்தப்பட்ட கடப்பாடுகளின் முழு விளைவினை அவ்வேளை யில் உணர்ந்து கொள்வதை இது தடைப்படுத்தியது. இக்கார ணங்களினால், காலப்போக்கில் வேர்சைப் பொருத்தனையைப் பய னற்றதெனவும், குறிப்பாக அது படுமோசமானதெனவும் பலரும் கண்டித்தமை வியப்பன்று. வெற்றியெய்திய வல்லரசு கள் சேர்மனியை மிகவும் கடுமையாக நடத்தாதிருந்திருப்பின் அது மிகுந்த விருப்பத்துடன், தனது மாற்றியமைக்கப்பெற்ற நிலை யை ஏற்றிருக்கலாம்; அங்ஙனம் நிகழ்ந்திருக்கக்கூடுமே தவிர அது எவ்வாறேனும் மேற்கூறியவாறே நடைபெற்றிருக்குமென்று உறுதியாகச் சொல்ல முடியாது. தனது புகழை இழந்தும், தோல்வி என்ற மானக்கேட்டினால் வருந்திக்கொண்டும் இருந்த சேர்மானியப் படையினர், இதைவிடக் கடுமையற்ற பொருத்த னையைக் கூட நிராகரித்து, உடனடியாகவோ சிறிது காலத்திற்குப் பின்னரோ, சேர்மனி ஐரோப்பாவில் முன்னர் பெற்றிருந்த ஆதிக் கத்தை அடைவதற்கு முயற்சி செய்யாதிருந்திருப்பரோ என்பது ஐயத்திற்கிடமானதாகும். இது எவ்வாறுயினும், 1914–18 ஆம் போருக்குப் பின்னர் ஏற்பட்ட நிலை, நட்பு நாடுகள் சேர்மனியைப் பெருந்தன்மையுடன் நடத்துதற்கு இடமளிக்கவில்லை. வல்லமை வாய்ந்ததும் அஞ்சத்தக்கதுமான ஓர் அயல்நாடு தனது ஆள் புலத்தில் பெரும்பகுதியைக் கைப்பற்றியிருந்ததையும், அழித் திருந்ததையும் பிரான்சு கண்டது. பிரித்தானியப் பேரரசானது ஏறத்தாழ பத்து இலட்சம் மக்களைத் தான் இழந்ததை நினைத் துப் புலம்பிக் கொண்டிருந்தது. மாபெரும் போரைத் தடுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக்கூடியதும், அவ்வாறு செய்யாததன் காரணமாகப் போரில் மக்கள் இறந்தொழிந்ததற்குக் குற்றப்பொறுப்புடையதுமான ஒரே நாட்டை எளிதில் விட்டு விடப் பொதுமக்கள் ஆயத்தமா யிருக்கவில்லை. எனவே, இத்தகைய பெருங்கேடு திரும்பவும் வந்துருவண்ணந் தடுப்பதற்கு, படையாட்சியின் இழிவான வீழ்ச் சிச் சின்னமென ஊழி ஊழியாக விளங்கக் கூடிய ஒரு தண்டனையை, அரசியற் சூழ்ச்சித் திறமை இடமளிக்குமளவிற்கு விதிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கிணங்க, சேர்மனியின் படைக்கலம் அகற்றப்பட்டு, அதனது ஆள்புலம் பறிக்கப்பட்டது. அத்துடன் அக்காலவளவில் அது உலக நாடு களினின்றும் ஒதுக்கப்பட்ட நாடெனக் கொள்ளப்படுவதாயிற்று; பிறெத்து இலிதொசுக்கு, பியூக்கரெசு ஆகிய பொருத்தனை களின்படி இரசியாவின் மேலும், உரூமேனியாவின் மேலுஞ் சேர்மனி சுமத்திய கடுமையான நியதிகள் இப்பொழுது அதன் மேல் திணிக்கப்பட்டவற்றிற்கு ஒரு முன்மாதிரியாக விருந்தன. எனினும், பழிக்குப் பழி வாங்குதல், பீதி ஆகிய வேகமாய்த் தோன்றி மறைகின்ற மன வெழுச்சிகளை விட நெடுங்காலம் நிலைக்கக்கூடிய அடிப்படைகளில் ஐரோப்பாவின் புதிய நாடுகள் அமைக்கப்பெற்றன; ஏனெனில், அமைதிப் பொருத்தனைகள் முழு உரிமை பெற்ற ஒரு சில அரசியல் தூதர்களினது சட் டெனத் தோன்றும் எண்ணங்களையும் மனம்போன போக்குகளை யும் பிரதிபலிக்கும் ஒருதலை முடிவான கருவிகளாயிருக்கவில்லை. மக்கள் பாகுபாடே[1] ஆள்புலஞ்சார்ந்த தீர்ப்புக்களின் அடிப் படையான தத்துவமாயிருந்தது. ஒசுற்றிய-அங்கேரிய பேரரசும், ஒற்றேமன் பேரரசும் கலைந்துபோனமையும், பிரசியா, போலந் தினிடமிருந்து கொள்ளையடித்த பகுதிகளைத் திரும்பக் கொடுக்க வேண்டியிருந்தமையும் நாட்டினக்கோட்பாட்டினது தர்க்கரீதி யான விளைவுகளாயிருந்தன. போலந்துக்குக் கடலினை அடை வதற்கு வாய்ப்பளிப்பதற்காகத் தான்சிக்கு என்னும் சுயேச்சை யான நகரமொன்று ஆக்கப்பட்டமையும், சேர்மனியினதும் ஒசுற்றியாவினதும் ஐக்கியத்தைத் தடைசெய்தமையும், இழப் பீடுகளின் காரணமாக சார் நதிப் பள்ளத்தாக்கு சேர்மனியி லிருந்து தற்காலிகமாகப் பிரிக்கப்பட்டிருந்தமையும், சீராக்கி யமைக்கப் பெற்ற பொகீமிய நாட்டில் வாழ்ந்த சேர்மானிய மக் களுக்கும், செக்கிய மக்களுக்கும் ஏற்பட்டிருந்த வரலாற்றுத்தொ டர்பு காப்பாற்றப்பட்டமையும் சுய நிர்ணய உரிமைக்குரிய குறிப் பிடத்தக்க விதிவிலக்குகளாகும். இவற்றை முழுமையாக நோக்

[1] முக்கியமாக, ஏறக்குறைய அறுபது வல்லுனர் குழுக்களினது அறிக்கைகளி லிருந்து யாதொரு மாற்றமுமின்றி வாசகங்கள் எடுக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின், புதிய ஐரோப்பாவின் தேசப் படம் பழைய ஐரோப்பாவினைதைப் பார்க்கிலும் நீதியான முறையில் அமைந்துள்ளமையை மறுக்க முடியாது. நாட்டினவாதக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே ஆள்புல சம்பந்தமாகச் செய்யப்பட்ட பெரும்பகுதி மாற்றங்களுக்குச் சமாதானங் கூறமுடியும்; நாளடைவில், நாட்டினவாத உணர்ச்சிக்குச் சார்பாகச் செய்யப்பட்ட மூடிவே நெடுங்காலம் நிலைத்திருக்கக்கூடுமென்று நன்கு வாதிக்கப்படலாம். அமைதிப் பொருத்தனைகளிலுள்ள மிகப்பெரிய குறைபாடு யாதெனில், ஆள்புலங்கள் மீண்டும் மாற்றியமைக்கப் பட்டமையினால் எழுந்த பொருளாதாரத் தீங்கினை அகற்ற அவை தவறினமையாகும். இதற்கு முன் நிகழ்ந்திராதவளவில் ஏற்பட்ட மாபெரும் போரினால் சோர்வடைந்த கண்ட மொன்றில் பன்னீராயிரம் மைல்களுக்குக் குறையாத தூரம் முழுவதும் புதிய இறைமுறைத் தடைகள் இப்போது உண்டாயின. மீட்பையளிக்கும் இயற்கைச் சத்திகள், பழங்கால இனப்பகைமைகளை மீண்டும் எழுப்பிய பொருளாதாரச் சார்பான கடுமையான நாட்டின வாதத்தினால் தடைப்படுத்தப்பட்டன.

சிறுபான்மையோர் பிரச்சினை.

அடுத்த இருபதாண்டுகளிலும் (1919–39) ஐரோப்பாவில் அரசியல் நிலையின்மையிருந்தமைக்கு பொருளாதாரப் பிணி நீடித்தமையே முக்கியமான காரணமாகும். குழப்பமூட்டிய மற்றொரு நிகழ்ச்சி, பல இலட்சம் சேர்மானியரும், மகியாரும், தங்களது தாய் நாட்டிலிருந்து பிரிக்கப்பட்டமையாகும். 40 இலட்சம் சேர்மானிய மக்கள் ஒசுற்றியாவிலிருந்து நீக்கப்பெற்றனர். இத் தொகையில் அதிகப்படியானோர் செக்கோசிலவாக்கியாவுடன் இணைக்கப் பெற்றனர். சேர்மனி, நூறுயிரம் மக்களுக்கும் அதிகமானோரைப் போலந்துக்குக் கொடுத்ததுமன்றி, தான்சிக்கு, மெமல் என்ற இரு நகரங்களை இழக்க வேண்டியுமிருந்தது. அங்கேரி ஏறத்தாழ 30 இலட்சம் மகியார்களை இழக்க நேர்ந்தது. இவர்களில் 20 இலட்சம் பேர் அந்நாட்டு எல்லைப்புறத்திற் கருகிலேயே வாழ்ந்தனர். எனினும் மத்திய, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பல இனத்தவர் பிரிக்க முடியாத வகையில் கலந்து வாழ்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. சில சந்தர்ப்பங்களில் குறித்த மாகாணப் பிரிவுகளில், அவற்றின் மக்கட்பாகுபாட்டு அமைப்பை மாற்றுவதற்காக, ஆதிக்கமுள்ள இனத்தவரை வசிக்கச் செய்யும் பூட்கையும் கையாளப்பட்டது. பிரசியா தான் போலந்திலிருந்து கைப்பற்றிய ஆள்புலத்தில், சேர்மானியரைக் குடியேற்றியமை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தங்களது நாட்டு மக்கள் வேறு அரசுகளின் இறைமையின் கீழ்வாழ அனுப்பப்பட்டனர் என்று முறையிட்ட நாடுகளிலும் அந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிய இனத்தைச் சேர்ந்த சிறுபான்மையோர் வாழ்ந்தனர். அங்கேரியில் வாழ்ந்த 75 இலட்சம் மக்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் மகியாரல்லாதோரா யிருந்தனர். சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் நாட்டினவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், சிறுபான்மையோருடைய நலன்களைத் தியாகஞ் செய்ய வேண்டியது இன்றியமையாததாயிற்று. அங்கேரியினி மிருந்து உரூமேனியாவிற்கு மாற்றப்பட்ட திரான்சில்வேனியா வில், 15 இலட்சம் மகியார் இருந்தனர்; ஆனால் திரான்சில்வே னியாவிலிருந்த உரூமேனியக் குடித்தொகை 50 சதவிகிதங் கூடுதலாயிருந்தது. நாம் முன்னர் கண்டதுபோல், அமைதி மாநாடு மக்கட்பாகுபாட்டுத் தத்துவத்தை ஒரேவகையில் செயற் படுத்தவில்லை என்பது உண்மையே; சிலவேளைகளில் பொருளா தாரக் காரணிகள் அல்லது (பொகீமியாவில் நடைபெற்றதுபோல்) வரலாற்றிற்கும் போர்முறைத் திறத்திற்குமுரிய காரணிகள் அதன் முடிவுகளைப் பாதித்தன. எனினும், அம்மாநாடு மக்கட் பாகு பாட்டுத் தத்துவத்தைப் பொறுத்தமட்டில் பெரும் அநீதியை இழைப்பதினும் சிறிய அளவு அநீதியை இழைப்பதே மேலெனக் கொண்டு, பெரும்பான்மையோரது கோரிக்கைகளைச் சிறுபான்மை யோரது கோரிக்கைகளுக்கு மேலாகக் கருதியது. அதேசம யம் ஒவ்வொரு நாடும் தானே சம்மட்டியாகவும், ஏனையவை பட்டைக் கல்லாகவும் இருக்கவேண்டுமென்று முயற்சித்ததனால் நாட்டினங்களுக்கிடையே எழுந்த சச்சரவே 1914–18 ஆம் போருக்கு முக்கிய காரணமாயிருந்ததென ஏற்றுக்கொள்ளப் பட்டது. இனஞ்சார்ந்த அமைதியின்மையைத் தொடர்ந்து நிலவ விட்டிருப்பின் அது கட்டாயமாக மீண்டும் இன்னொரு போரை மூட்டியிருந்திருக்கும். இவ்விடரை நீக்கு முகமாக, சிறுபான்மை யினரது பாதுகாப்புக்காக, போலந்து, செக்கோசிலவாக்கியா, யூகோசிலாவியா, உரூமேனியா, கிரீசு ஆகிய நாடுகள் பொருத்த னைகள் செய்துகொண்டன. ஒவ்வொரு நாடும் "தனது குடித் தொகையில் பெரும்பான்மையோரது இனம், மொழி, சமயம் ஆகியவற்றிலிருந்து வேறுபட்ட சிறுபான்மையோரது நலங் களைப் பாதுகாப்பதற்கும், முக்கியமான நட்பு வல்லரசுகளுடனும் அவற்றுடன் கூட்டுச்சேர்ந்துள்ள வல்லரசுகளுடனும் அதற்கான முன்னேற்பாடுகளடங்கிய ஒரு பொருத்தனையைச் செய்துகொள் வதற்கும் உடன்படுவதாக"ப் பொறுப்பேற்றது. அவ்பேரு க, இப்பொருத்தனையில் கோரப்பட்டவை சரியாக நிறைவேற்றப்பட வில்லை; சென்ற காலப் படிப்பினைகள் மீண்டும் புறக்கணிக்கப் பட்டன; சிறுபான்மையோருக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள், இன வெறுப்புக்குரிய செயல்களுக்குத் தூண்டுகோலாயின.

Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

(III) நாட்டுக் கூட்டவை

கூட்டவையின் நோக்கம்.

1914–18 ஆம் போரின் வளர்ச்சிப்படிமுறை, அதனுலேற்பட்ட பெரும் நட்டங்கள், அழிக்கப்பட்டவையும் முற்றுகையிடப்பட்டவையுமான நாடுகளில் சாதாரணக் குடிகளடைந்த இன்னல்கள், வெற்றியடைந்தோர் மேலும் தோல்வியுற்றோர் மேலுஞ் சுமத்தப்பட்ட மிகப் பெரிய நிதிப்பளு, அனைத்துக்கும் மேலாக நாடுகளுக்கிடைமிலேற்படும் சிக்கல்களைத் தீர்க்கப் போர் பயனற்ற கருவியாகும் என்ற உணர்வு எற்பட்டமை ஆகிய இவ்வெல்லா அம்சங்களும் ஒன்று சேர்ந்து உலகெங்குமுள்ள மக்கள் மனத்தில் மனமாற்ற உணர்ச்சியொன்றை உருவாக்கின. மக்கட் சமுதாயத்தின் மலர்ச்சியில் இம்மனப்பான்மை ஒரு திருப்பமாகுமென்று நம்பப் பட்டது. நாட்டுக் கூட்டவையை ஆக்கியோர் மக்கள் மனத்திலுதித்த நிலையற்ற ஓர் உணர்ச்சியைத் தேடிப்பிடித்தெடுத்து, சிலந்தி வலையின் நூலினும் மெல்லிய இவ்விழையினுல், நுண்மையானதும் அதேவமயம் பெயர்ந்தெறியக்கூடாததுமான வலையொன்றைப் பின்ன முனைந்தனர். போரானது, வெடிமருந்து போல் அழிக்கக்கூடியதொரு பொருளேயன்றி, ஆக்கக் கூடியதன்றென்றும், நாட்டினப் பிரச்சினைகளை வலுக் கட்டாய முறையினுல் தீர்க்க முனைந்தால் புதிய பிரச்சினைகள் தோன்றுமென்றும் எண்ணற்ற தலைமுறைகளில் மக்கள் அனுபவ வாயிலாக அறிந்திருந்தனர் எனினும், எழுதப்பட்டுள்ள வரலாற்றுக் காலம் முழுவதிலும், அவர்கள் படையின் பலத்திற் குருட்டு நம்பிக்கையை யுடையராயிருந்தனர். எனவே தனியாக ஒரு நாடு செயலாற்றுவதற்குப் பதிலாக, பல நாடுகள் கூட்டாகச் செயலாற்றுவதனுல் கூட்டவையானது உலக மக்கள் எல்லோருக்கும் பாதுகாப்புக்கு இடமுண்டென்ற நம்பிக்கையை அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டது. இதனுல் மக்கள் கடந்த காலங்களில் போரிடுவதிற் காட்டிய மனப்பான்மையைக் கைவிட்டு சமாதான அடிப்படையில் சிந்திப்பர். இதுகாறும், ஒவ்வொருநாடும் போரே தனது மூலாதார ஒளடதமெனக் கொண்டிருந்தது. இது முதற்கொண்டு, ஆங்கில சக்சனிய நாடுகளில் இருவரிடை ஏற்பட்ட போராட்டமானது எங்ஙனம் மிலேச்ச காலத்திற்குரிய வழக்கொழிந்த சின்னமாகக் கருதப் பட்டதோ அதே போல் போரும் கருதப்பட்டது. இவ்விதமாக நாட்டுக்கூட்டவை மனித உள்ளத்தில் மாபெரும் புரட்சி ஒன்றை ஏற்படுத்த முயற்சித்தது. அதாவது மக்களது போர் சம்பந்தமான மனப்பான்மையை, அமைதியைநாடும் மனப்பான்மையாக மாற்ற முயற்சித்துள்ளது. சென்ற இருபதாண்டு அனுபவத்திலிருந்து இவ்வுணர்ச்சியானது நடைமுறைக்கு ஒவ்வாத தொன்முகவும் விசித்திரமான தொன்முகவுந் தோன்றலாம். ஆனுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுணர்ச்சி சம்பந்தமாய் நாம் ஓர் உண்மையை மனத்திற் கொள்ள வேண்டும். அதாவது மனிதன் தன்னுடைய மனே சத்தியை நன்மையெது தீமையெது எனப் பிரித்தறியும் தனது மெய்யுணர்வினுற் கட்டுப்படுத்தப் பயிலுவதே மனித நாகரிக வளர்ச்சிப் படிமுறையின் முக்கிய அம்சமாகும். அதுவே, அவன் நாகரிகத் தொடக்க காலத்திற் கொண்டிருந்த இயல் புணர்ச்சிகளை மட்டுப்படுத்தச் சத்தியளிப்பதாகும். அங்ஙனம் அடக்கப்படாவிடின் அவ்வுணர்ச்சிகள் அவனை நிச்சயம் நாசத் துக்குட்படுத்தக்கூடும்.

கூட்டவையின் ஏற்பாடு அவ்வவையில் உறுப்புரிமை பெற்றி கூட்டவையின் ருந்த நாடுகளுக்கிடையில் தனித்தனி கூட்டணி மூலம் ஆக்கப்பட ஏற்பாடு. வில்லை. அதன் நிபந்தனைகள் வேர்சைப் பொருத்தனையோடு இணைக்கப் பெற்றிருந்தன. சில அரசுகள் இக்கூட்டவையைக் கூட்டுவிப்பது சாத்தியமென்றே, தேவையென்றே கருதிப் போதிய அளவு நம்பிக்கை கொண்டிருக்கவில்லையாதலால், உற் சாகக் குறைவுடையனவா யிருந்தன. இவ்வுற்சாகக் குறைவானது புதிய சருவதேச ஒழுங்கைப் பாதிக்கா வண்ணமே, மேலே குறிப் பிட்ட முறை கைக்கொள்ளப்படலாயிற்று. இவ்வேற்பாடு வேர்சைப் பொருத்தனையில் இணைக்கப் பெற்றமை மேலுமொரு சிறந்த பயனையளித்தது. அமைதிப் பொருத்தனைகளை ஆக்கியோர், கோப தாபத்தில் எழுதப்பட்டனவாயும், போரிலேற்பட்ட பகைமை களின் அடையாளங்களை உடையனவாயுமிருந்த ஆவணங்களைக் குற்றமற்றவையென்று கூறத் துணிந்திலர். நாளடைவில் தங்கள் சினத்தைத் தணிக்கக் கூடிய சாதனங்களை அமைக்க முயன்றனர். எனவே, கூட்டவையானது, தோல்வியுற்ற நாடுகள், தங்களுக்குத் தயையான தீர்ப்பளிக்குமாறு குழுமியிருந்த அரசுகளை வேண்டக் கூடிய தொரு நீதிமன்றமாகத் திகழ வேண்டியதாயிருந்தது. "போர் செய்வதில்லை எனும் கடப்பாட்டை ஏற்பதனாலும், ஒழுங்காயமைந்த பல சமூகங்கள் ஒன்றோடொன்று கொள் ளுந் தொடர்புகளைப் பொறுத்தவரையில் பொருத்தனையின் கடப்பாடுகள் எல்லாவற்றையும் எச்சரிக்கையுடன் மதிப்பத னாலும் அவற்றின்மூலம் சருவதேச சமாதானத்தையும், பாது காப்பையும் அடைவதே கூட்டவையின் நோக்கம்" என்று ஏற் பாட்டின் பாயிரத்தில் கூறப்பட்டிருந்தது. ஏற்பாட்டின் உறுப்புக் களுட் சில பின்வருமாறு : பத்தாவது உறுப்பு ; "கூட்டவை யில் உறுப்புரிமையுடைய நாடுகள், கூட்டவையில் உறுப்புரிமை பெறும் நாடுகள் எல்லாவற்றினதும் ஆள்புல முழுமையையும் அவற்றிற்கிருந்த அரசியற் சுதந்திரத்தையும் வெளிநாட்டுத் தாக்குதலினின்றும் பாதுகாத்து அவற்றை மதிக்க உடன் படுகின்றன." பன்னிரண்டாவது உறுப்பு ; "உறுப்பினருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் ஏற்படும் அபிப்பிராயபேதங்களினாற் சச்சரவுகளுக்கு இடமுண்டாகுமென்று கண்டால், அவர்கள் அவ்விடயத்தைக் கூட்டவைக் கழகத்தின் நடுத்தீர்ப்புக்கோ விசாரணைக்கோ சமர்ப்பிப்பதோடு, கழகத்தின் தீர்ப்போ நடுத்தீர்ப்பாளரின் அறிக்கையோ வெளியிடப்பட்டு மூன்று மாதங்களான பின்னரே அவர்கள் எக் காரணத்தைக் கொண்டும் போரில் ஈடுபடலாம்." பதினாறுவது உறுப்பு ; " சட்டசபையில் உறுப்புரிமை பெற்ற நாடு எதுவாயினும் அவ்வவையின் ஏற்பாடுகளை மதிக்காது போரில் ஈடுபடின், அந்நாடு கூட்டவையில் உறுப்புரிமை பெற்ற ஏனைய நாடுகள் யாவற்றுடனும் போர்ப் பிரகடனஞ் செய்துள்ளதெனக் கொள்ளப்படுவதுடன், அந்நாடுகளுடன் ஏற்பட்டிருந்த வர்த்தகம், நிதி ஆகியவை சம்பந்தமான உறவுகளும் உடனடியாகத் துண்டிக்கப்படும். இத்தகைய சந்தர்ப்பங்களில் கூட்டவையின் ஏற்பாடுகளைப் பாதுகாக்கும் பொருட்டுத் திரட்டப்படும் படைகளுக்கு, உறுப்புரிமை பெற்ற நாடுகள் எவ்விதத்தில் திறமையான இராணுவ உதவி, கடற்படை உதவி, ஆகாய விமான உதவி ஆகியவற்றைக் கூட்டாக அளிக்கக்கூடுமென்பது பற்றி உறுப்புரிமை பெற்ற நாடுகளின் அரசாங்கங்களுக்கு எடுத்துரைப்பது கழகத்தின் கடப்பாடாகும்." இருபத்துமூன்றுவது உறுப்பு ; " கூட்டவையில் உறுப்புரிமை பெற்ற நாடுகள் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஆண்கள், பெண்கள், பிள்ளைகளாதியோருக்கு நியாயமானதும் மனிதத் தன்மையுள்ளதுமான சூழ்நிலையைப் பெறுவதற்கும் அதனை நிலைக்கச்செய்வதற்கும் முயற்சி செய்யும்."[1]

---

[1] தொழிலின் முக்கியத்துவத்திற்குச் சருவதேச அங்கீகாரம் அளிக்கப்பட்டமை, உரிமைப்பட்டயமொன்றில் தெளிவாக்கப்பட்டுள்ளது ; இப்பட்டயம், கூட்டவையின் ஏற்பாட்டைப்போன்று வேர்சைப் பொருத்தனையோடு இணைக்கப்பட்டுள்ளது. ஒருவிதத்தில் தொழிற் பட்டயம் கூட்டவை ஏற்பாட்டின் ஒரு பகுதியாகவே இருந்தது. அவ்வேற்பாடானது சருவதேச நாடுகளுக்கிடையில் உண்டாகும் வேற்றுமைகளைச் சமாதானப் படுத்துதற்காகவே திட்டமிடப்பட்டது ; தொழிற்பட்டயம் ஒரு நாட்டின் உண்ணாட்டு ஒற்றுமையை வளரச் செய்யும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. கூடியிருந்த உலக அரசுகள், தொழிலாளர் உரிமைகள் "சமூகநீதி "யின் அடிப்படையில் வைத்தெண்ணப்படவேண்டுமென்ற கொள்கைக்குச் சருவதேச அங்கீகாரத்தைத் தொழில்வரலாற்றிலே முதன்முறையாக அளித்தன.

தொழிற்பட்டயத்தில் விளக்கப்பட்டுள்ள கொள்கைகளைச் செயலில் அனுட்டிப்பதற்கான முறைகளைத் திட்டமிட்டு அவற்றைத் தகவுரைகளாகவோ, அன்றி மரபொழுங்குகளாகவோ அமைக்கச் சருவதேசத் தொழில் மாநாடு காலத்திற்குக் காலம் கூடுகின்றது. இப்புது ஏற்பாடுகள், நாட்டுக்கூட்டவை உறுப்பினர்கள் முறையேற்புச் செய்தபின்னரே செயலாக்கப்படுதற்கு உரிமை பெறுவனவாயின. சருவதேசத் தொழில் அலுவலகம் நிரந்தரமானதொரு குழுவாகும். உலகெங்கு முள்ள கைத்தொழிலாளர் வாழ்க்கை, கைத்தொழில் நிலைமை ஆகியவை சம்பந்தமான சகலவிடயங்களையும் பற்றிய தகவலைச் சேகரித்து அதனை யெங்கும் பரவச் செய்வது இவ்வலுவலகத்தின் கருமங்களிற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடிப்பதி உவில்சன் (1856–1924)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக் கூட்டவையின் உதயம் அமோகமாய் வரவேற்கப்பட்டது. சமகாலத்தவர்களின் நன்மைக்கோட்பாட்டைப் பிரதிபலிக்குமாப்போன்று, சுமற்சு தளபதி என்பவன், "மனிதவர்க்கம் மீண்டும் இயங்குகின்றது; சமுதாயத்தின் அடிப்படையே ஈடாடிற்று; அந்நிலைமாறி, மக்கள் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளனர். கூடாரங்களடித்துத் தங்கியிருந்த வழிப் போக்கர் கூட்டம் பயணத்தை ஆரம்பிப்பது போல, செயலற்றிருந்த மனிதவர்க்கமும் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது" என்று கூறினன். மேலும் அவன், கூட்டவையானது "மனித ஆட்சிமுறையில் புதியதோர் ஊழியைக் குறிப்பதாக விதிக்கப்பட்டிருக்கலாம். அஃது எல்லா நாடுகளுக்கும் சமாதானத்திற்குப் பொறுப்பாகவும், எல்லா இனங்களையும் சேர்ந்த தொழிலாளருக்கும் மாபெரும் சருவதேசத் தொழிலாளர் மாநாடாகவும், உலக மக்களனைவருக்கும் மனிதவர்க்கத்தின் ஒழுக்கமுறை, ஆன்மீகம் ஆகியவற்றின் ஐக்கியக் கோட்பாடுகளின் நிலைக்களனாகவும் வழிகாட்டியாகவும் விளங்குவதாகும்" எனக் கூறினன். "இப்போரின் விளைவாக உண்டான அழிவிலிருந்து ஐரோப்பா தப்புவதற்கேற்ற வழியைக் கூட்டவை காட்டுமென்ற திடநம்பிக்கை கொண்டுள்ளேன்" எனவும் கூறி முடித்தான். ஏறத்தாழ இருபதாண்டுகளாகக் கூட்டவையின் ஆதரவாளர் கொண்டிருந்த உயரிய நோக்கங்கள் நிறைவேறும் என்ற நம்பிக்கைக்கு இடமுண்டாயிற்று. 1924 ஆம் ஆண்டில் ஏழ தேசங்களினது (பெரிய பிரித்தானியாவினதும் பிரான்சினதும் உட்பட்ட) முதலமைச்சர்களும், பதினாறு பிற நாட்டுச் செயலாளர்களும் செனீவாவில் கூடியிருந்தமையே, சிறிதுகாலத்தில் நாடுகளின் சமுதாயங்களிடை அக்கூட்டவை அடைந்திருந்த செல்வாக்குக்குப் போதிய சான்றாகும். கூட்டவையின் முதல் மன்றத்திலேயே (1920) உறுப்புரிமை பெற்ற நாற்பத்தி நான்கு நாடுகளின் பிரதிநிதிகள் சமூகமளித்தனர். எனினும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இம்முதல் மன்றத்தில் பங்குபற்றாது போனமையினால் சபையின் நடவடிக்கைகள் சிறிதளவு உற்சாகமற்றனவாயின. குடிப்பதி உவில்சன் என்பானின் செல்வாக்கும் புகழுமே இருகோளங்களையும் சேர்ந்த வல்லரசுகளும் கூட்டவையின் ஏற்பாட்டை அங்கீகரிக்க உதவினவெனினும், அத்தீர்க்கதரிசி தன் சொந்தநாட்டில் மதிப்பற்றிருந்தான். பொருத்தனைகளை அங்கீகரிப்பதற்கு அமெரிக்க மூதவையின் ஒருப்பாட்டைப் பெற வேண்டியிருந்தது. அம்மூதவையானது கூட்டவையின் ஏற்பாட்டில் புகுத்த வேண்டுமென்று விரும்பிய மாற்றங்களை, அமெரிக்க நாட்டு நிருவாக முதல்வன் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான். அவனுடைய அரசியல் எதிரி

அமெரிக்க ஐக்கிய நாட்டின் போக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், அமெரிக்கக் குடியரசு வாதிகளின் மனத்தில் வேரூன்றி யிருந்த, "சிக்கலான நட்புறவுகள்" என்ற பிரச்சினையை அவனுக்கெதிராகக் கிளப்பினர். குடிப்பதி உவில்சன் "தனிப்பட்டவையும், வரையறுக்கப்பட்டவையுமான நட்புறவுகளே சிக்கலானவையென்றும்", கூட்டவையைப் போன்ற சகல நாடுகளும் பொதுவாக எற்படுத்தும் நட்புறவு, சிக்கல்களுக்கு இடமளிக்கமாட்டாதென்றும் வாதாடினன்; 1920 ஆம் ஆண்டில், நாட்டுப் பூட்கையை முதன்மையான பிரச்சினையாகக் கொண்டு நடந்தேறிய குடிப்பதித் தேர்தலில், குடியரசுக் கட்சி வெற்றியடைந்தது. அதன் விளைவாக வேர்சைப் பொருத்தனை அமெரிக்க மூதவையினால் அங்கீகரிக்கப்படவில்லை; அமெரிக்க ஐக்கிய நாடுகள் கூட்டவையில் உறுப்புரிமை பெறவில்லை. இவ்விதமாக, மிகுந்த வலியுடையதும் அக்கறையில்லாததுமான ஒரு நாடு, கூட்டேமத்தையும், இருவயினெத்த கடமையாற்றலையும் ஆதாரமாகக் கொண்டு உலக சமாதானம் நிலவச் செய்வதற்காக நிறுவப்பட்ட இணையற்ற பரிசோதனையில் பங்கு பற்றுததனால் கூட்டவையானது இடையூறுக்குள்ளாயது. முக்கியமான நாடுகளனைத்தும் கூட்டவையில் உறுப்புரிமையுடையவாயிருந்தன. கூட்டவையில் உறுப்புரிமை பெற்ற நாடுகளின் தொகை 1921 இல் ஐம்பத்தொன்றுகவும், 1932 இல் ஐம்பத்தேழாகவும், 1934 இல் அறுபதாகவும் அதிகரிக்கலாயிற்று.

கூட்டவையின் முயற்சிகள்.

கூட்டவை, ஆரம்பத்திலிருந்தே, சருவதேச அலுவல்களில் தனது அதிகாரம் சூனியமயமானதல்ல வென்பதை உறுதியாகக் காட்டியது. அது நிறுவப்பட்ட சில ஆண்டுகளுக்குள்ளாக, வெற்றிகரமாக நடுநின்று அநேக நாட்டுச் சிக்கல்களைத் தீர்த்ததனால் அதன் புகழ் விரைவிற் பெருகியது[1]. 1921 இல் நிலையான சருவதேச நீதிமன்று ஒன்று எக்கு என்றவிடத்தில் நிறுவப்பட்டது. அதேயாண்டில் அவையினது எற்பாட்டின் பதினேழாவது உறுப்புப்படி, பொருளாதார நடவடிக்கை சேபியாவுக்கு எதிராகக் கைக்கொள்ளப்படுமென்று அச்சுறுத்தி, அல்பேனியாவிலிருந்த சேபியப் படைகளைக் கூட்டவை வெளியேற்

---

[1] கூட்டவையின் பலதரப்பட்ட தொழினுட்பக்கருமங்கள், உரோபேட்டு செசில் பிரபு கூறியவாறு, "முதற்கடமையாக உலக சமாதானத்திற்காக உழைப்பது; அதன் பின் சருவதேச அலுவல்களில் சதா பங்கெடுத்துக் கொண்டிருக்கக் கூடிய நிலை எற்படச்செய்வது" ஆகியவை பற்றியனவாகும். பொதுநலம், ஒப்புரவாண்மைச்சேவை (எடுத்துக்காட்டு: அகதிகள்), பொருளாதாரச்சீர்திருத்தம் போக்குவரத்து ஆகியவற்றின் வாயிலாகச் சருவதேச ஒத்துழைப்பை விருத்தி செய்வதில் கூட்டவையின் சேவைகள் தங்கியுள. கூட்டவையின் தொண்டாற்று முறைபற்றி **F. Morley, "The Society of Nations"**, என்ற நூலிற் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றியது. கோபாத்தீவை இத்தாலியர் கைப்பற்றுதற்குத் தூண்டுத லாயிருந்ததும் போரை விளைவிக்கக்கூடியதாயிருந்ததுமான ஓர் இத்தாலிய கிரேக்க பிணக்கை 1923 இல் இம்மன்றம் தீர்த்தது. அதே ஆண்டில் கூட்டவை மூன்று பொரு ளாதாரச் செயல்களை ஆற்றியது; ஒசுற்றியா, அங்கேரி ஆகிய நாடுகளின் கடன் தீர்க்கும் பொறுப்பைத் தானே ஏற்றுக் கொண்டது; மேலும் சின்ஞசியாவிலும் கீழ் திரேசுவிலுமிரு ந்து வந்த பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட கிரேக்க அகதிகளைக் கிரீசில் குடியேற்றியதை மேற்பார்வை செய்தது. 1925 இல் பல்கேரிய நாட்டு ஆள்புலத்திலெருரு பாகத்தைக் கிரீசு ஆக்கிர மித்துக் கொண்டதனாலெழுந்த கிரேக்க–பல்கேரிய எல்லைத் தகராறொன்றையும் தீர்த்து வைத்தது. கூட்டவையில் உறுப் புரிமை பெற்ற நாடுகளாகிய பிறேசிலும் இசுப்பெயினும் அவை யில் உறுப்புரிமை பற்றி எற்பட்ட பிணக்கினால் தங்களது உறுப்புரிமையைக் கைவிடுவதாக முன்னறிவித்த அவச் செய் கையே, அடுத்த ஆண்டு நடைபெற்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி யாகும். அவ்விரு நாடுகளின் இச்செயல் ஒரு முற்கோளாகக் கொள்ளப்பெற்று, நாளடைவில் மூன்று மாபெரும் வல்லரசு கள் தங்களது உறுப்புரிமையைக் கைவிட இடமளித்தது. எப்படியாயினும், சேர்மனி ஒரு புது உறுப்புரிமையுள்ள நாடாகச் சேர்க்கப்பட்டு, கூட்டவையின் கழகத்தில் நிலையான இடம் பெற் றது. சேர்மனி பெற்ற உறுப்புரிமையானது அந்நாடு ஏனைய வல்லரசுகளுடன் முற்றுகச் சமத்துவமுடையதெனக் குறிக்கும் சின்னமாகியது. சேர்மனியின் மறுசீரமைப்பு, அதைத் திரும்ப வும் ஐரோப்பிய ஐக்கியத்திற் சேர்த்தது. இது வரவிருக் கும் புதிய ஓர் ஊழியை முன்னறிவிப்பது போலவும் தோன் றிற்று.[1]

பாரிசுக் கூட்டணி.

கூட்டவையின் முதற் பத்தாண்டுக்காலம் பிரசித்தி பெற்ற இரு நிகழ்ச்சிகளோடு முடிவுற்றது; இந்நிகழ்ச்சிகள் சமாதான ஆட்சியை உலகில் நிலைக்கச் செய்ய எற்பட்ட இயக்கத்தின் உச்சநிலையைக் குறிப்பனவாயின. இவற்றிலொன்று பாரிசுக் கூட்டணியாகும் (1928). இது பிரான்சிய வெளிநாட்டமைச்ச ரான திரு. பிறியன், அமெரிக்க அரசுச் செயலாளரான திரு. கெல்லோக்கு ஆகியவர்களாற் பிரேரிக்கப்பட்டது. இக் கூட்டணியின்படி ஒப்பமிட்ட வல்லரசுகள், தற்காப்புரிமையைத் தமக்கென ஒதுக்கிக்கொண்டு, போரை முற்றுகப் புறக்கணிப்ப தாக ஒப்புக்கொண்டன. மங்காப் புகழ்படைத்ததும், என்றுவது ஒருநாள் நாட்டுக்குரிய சமுதாயங்களின் கற்பனைத்தொகுதியில்

[1] 1934 இல் சோவியத்து இரசியா கூட்டவையிற் சேர்க்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற வேண்டியதுமான சொற்றொடர்களால் ஒப்பக் காரர், "சருவதேச இக்கட்டுக்களைத் தீர்க்கப் போரே மார்க்க மெனக் கொள்வதைக் கண்டனஞ் செய்வதாகவும் நாடுகளுக் குள்ள தொடர்புகளில் அதை நாட்டினப் பூட்கையின் சாதன மாகக் கொள்ளாது புறக்கணிப்பதாகவும் தங்களுக்கிடையில் சகல பிணக்குகளையும் அல்லது சச்சரவுகளையும் தீர்த்து வைப் பதில் அல்லது அவற்றுக்கு விடை காண்பதில் சமாதான முறைகளைக் கையாளுவதைத் தவிர வேறுமுறைகளை ஒருபொழு தும் தேடுவதில்லையென்று ஒத்துக் கொள்வதாகவும்", பிர கடனஞ் செய்தனர்.

ஐரோப்பிய கூட்டாட்சிச் சங்கம்.

கூட்டவையின் ஒழுங்குக்குட்பட்டதாக ஐரோப்பிய கூட்டாட் சிச் சங்கமொன்றை அமைக்கவேண்டுமென்று 1930 ஆம் ஆண் டில் திரு. பிறியன் சமர்ப்பித்த மனு மற்றொரு குறிப் பிடத்தக்க விடயமாகும். "சருவதேச சமாதான அமையத்துக் குரிய முதல் முயற்சிகளுக்கு அடிப்படையான அரசியல் அல்லது நீதி பரிபாலனம் சார்ந்த நிறுவகங்களின் வளர்ச்சிக்கும் திறமைக்கும் மிகப் பெரும் முட்டுக்கட்டையாயிருப்பது, ஐரோப் பிய பொருட் தார்மீக பலத்தையும் ஒழுக்க பலத்தையும் ஒன்றே டொன்று இணைப்பதற்கான குழுவமைப்பின்மையே என்பதில் எவருக்கும் ஐயமில்லை. இவ்வாறான இயைபாக்கமின்மை, பொருளாதாரச் சந்தைகளை விரிவாக்கக் கூடிய வாய்ப்புக்களை யும், கைத்தொழில் உற்பத்தியைப் பெருக்கவும் விருத்தி செய்யவும் எடுக்க வேண்டிய முயற்சிகளையும், அதுகாரணம் பற்றியே அரசியற்றுறையிலும் சமுதாயத்துறையிலும் உறுதி யின்மை ஏற்படுதற்கு ஏதுவான தொழில் நெருக்கடிகளை நீக்குவதற்காய உறுதியீடுகளையும் பெரிதும் பாதிக்கின்றது." ஐரோப்பாவில் முறையான அமையமொன்றை அமைக்கவும் நீண்டநாள் நிலையாக இருக்கக்கூடிய வேலைத்திட்டத்தையொட்டி ஐரோப்பிய ஒத்துழைப்பை ஏற்படுத்தவும் கூட்டாட்சி அமையம் ஒன்றை நிறுவுதல் அவசியமாயிற்று ; இவ்வமையம் ஐரோப்பிய அரசுகளுக்குத் திட்டமூட்டி, அவை "உடனடியாக ஒன்றுகூடித் தமக்குப் பொதுவான பிரச்சினைகளை அறிந்து, கலந்தாலோசி த்து அவற்றுக்கான பரிகாரத்தைக் கண்டுபிடிக்க உதவவேண்டு மெனக் கருதப்பட்டது." "ஐரோப்பிய கூட்டாட்சியை இயக்கும் திட்டமானது எல்லாத் தேவைகளையும் போதுமான அள வில் நிறைவேற்றிவைக்கக் கூடிய உயரியதோர் அமைப்பாகுமா என்பதல்ல பிரச்சினை ; ஆனால் அது ஐரோப்பிய அமைதியை யும் அதன் இன்றியமையாத சத்திகளையும் ஒழுங்காக அமைக் கும்பொழுது தோன்றுகின்ற எல்லாப் பிரச்சினைகளையும் தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான அளவில் தீர்த்து வைக்க, ஐரோப்பிய அரசுகளின் பற்றிணைப்புக்கும் மாறுத திட்பத்திற்கும் ஆதாரமான அமைப்பாகும்" என மனு விளக்கியது. மேலும் இவ்வைரோப்பியவமைப்பு நாட்டுக் கூட்டவைக்குப் புறம்பாக நிறுவப்படுவதன்று; அதற்கு மாறுய், ஐரோப்பிய நலன்களை ஒருங்கே திரட்டி உலகளாவியதொரு பெருமுறைமைக்குள் அதிக பயன் தரக் கூடிய வரையறுக்கப்பெற்ற முறைமையொன்றை இணைக்கக் கூடியதாய், அதைக் கூட்டவையின் கட்டுப்பாட்டுக்கும் நோக்கத்திற்குமிணங்க அமைப்பதே இதன் நோக்கமாகும். ஐரோப்பிய நன்னெறி பற்றிய தொடர்புகளையும் அதன் பண்பாட்டு ஒற்றுமையையும் பொறுத்த அளவிற் நீர்க்கப்படக்கூடிய சில தனித்தன்மையான பிரச்சினைகள்பற்றி ஐரோப்பியரே செயலாற்றுவது அவசியமாயிற்று. "ஐரோப்பிய அரசுகளுக்கிடையில் நிறுவப்பெறும் கூட்டாட்சி தனி அரசுகளின் இறையுரிமைகளை எவ்விதத்திலும் பாதிக்கமாட்டாது. ஒவ்வொரு நாட்டுக்கும் தனிமுழு இறையுரிமையும் பரிபூரண அரசியற் சுதந்திரவுரிமையுமுண்டு என்ற அடிப்படையிலேயே ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான தொடர்பு செயற்பட வேண்டும்" என்ற கொள்கையும் வற்புறுத்தப்பட்டது. இத்தகைய ஆக்கந் தரும் கருமத்தை ஐரோப்பா தொடக்கி வைக்க மிகவாய்ப்பானதும் மிக அவசியமானதுமான காலமிதுவே. கடந்தபோர் விளைவித்த வாழ்க்கை, ஒழுக்கமுறை ஆகியவை சம்பந்தமான முக்கிய சிக்கல்கள் தீர்க்கப்பட்டமையினால், புதிய ஐரோப்பா தனது உளப்பான்மையையும் பொருளாதாரத்தையும் பாதிக்குகும் ஒரு பெரும் பளுவிலிருந்து தன்னை விரைவில் விடுவித்துக் கொள்ளும். இக்காலந் தொடங்கிப் புதிய நிலைக்குப் பொருத்தமானதும் பயனளிப்பதுமான முயற்சியை ஆரம்பிக்க அது ஆர்வங்கொண்டுள்ளதாகத் தோன்றுகின்றது. விழிப்புற்றிருக்கிற ஐரோப்பா, தானே தனது பிற்கால நிலைபற்றித் தீர்மானித்து முடிவு காண்பதற்கான வேளை இதுவாகும். உயிர்வாழவும், வாழ்வை வளமாக்கவும் ஒன்று சேருவது என்ற திடமான இவ்வொற்றுமைத் தேவையே இனி எப்பொழுதும் ஐரோப்பிய நாடுகளை எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினையாகும். இதுபற்றி மக்களுக்கிருந்த உணர்ச்சி எலவே தெளிவுறப்பெற்றதெனக் காணப்படுகிறது. ஐரோப்பிய சமுதாயத்துக்கும் சருவதேச சமுதாயத்துக்கும் நன்மை பயக்குமாறு, அரசாங்கங்கள் தங்கள் திட்டமான கூட்டுப் பொறுப்பில் அமையவேண்டிய வாழ்க்கை, ஒழுக்கமுறை ஆகியவை சம்பந்தமான பலதிறப்பட்ட சத்திகளை, தனிப்பட்டாரது தொடக்க முயற்சிகளும் ஒழுங்கீனமான கருமங்களும் நடைபெறுவதற்காகச் சிதறடித்துவிட்டனவென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றத்திற்குட்படாமல், தங்கள் பொறுப்பை இன்றே ஏற்றுக் கொள்வது தகுதியுடைத்தாகும்." இவ்வாறுன தீர்க்கதரிசனமான வசனங்களோடு அம்மனு முடிகின்றது.

கூட்டவையின் மறைவு.

1932 இல் திரு. பிறியன் உயிர் துறந்தான். உலொக் காணேப் பொருத்தனை, பாரிசுக் கூட்டணி, ஐரோப்பிய ஐக்கிய நாடுகளின் திட்டம் ஆகியவற்றேடு அவனுக்கிருந்த தொடர்பு, அவன் மிகச் சிறந்ததோர் அரசியல் வாதியாகத் திகழ்ந்த பத்தாண்டுச் சரித்திரத்தில் அழியாதவாறு பொறிக்கப்பட்டுள்ளது. அவன் காலத்திற்குப்பின் அவ்விடத்தில் புதிய மனிதர் தோன்றினர்; நவீன முறைகளுந் தோன்றின. தொடர்ந்து பல தோல்விகளடைந்து, நாட்டுக் கூட்டவை நாளடைவில் முற்றுகத் தகர்ந்து போயிற்று. சருவதேசச் சட்டவாட்சி திடீரென முடிவுற்றது. பொருத்தனைகளே ஒரு புடையாக மறுதலிப்பதாய அன்றைய வழக்கம், ஏற்பாட்டு உடன்படிக்கைகளின் தூய்மையைச் சிதைத்துக் குலைத்தது. சருவதேச அமைதியைப்பற்றிக்கனவு கண்டுகொண்டிருந்த மக்கள், திடீரென, நாணமற்ற மீச்செலவின் பாற்பட்ட வெளிப்படையான உண்மைகளைக் கண்ணுற்று விழித்துக் கொண்டனர். ஐரோப்பிய அரசியலின் இயற்கைத் தோற்றம் ஓர் இரவிற்றனே உருமாறி, சரித்திரத்தில் புதியதோர் அத்தியாயத்தைத் தோற்றுவிப்பதற்கு ஏதுவாயிற்று. இதுவே வேர்சையிலிருந்து பின்வாங்கல் என்க. ஐரோப்பாவில் மாத்திரமன்றி ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் (அமெரிக்கத் தலைவர் உரூசுவெற்றுகூறியவாறு) "அந்நிய நாடுகளின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மதிக்க வேண்டுமென்ற எண்ணமுடைய நாகரிக நாடுகளின் உள்ளங்களிலிருந்து சுரந்த சருவதேச நல்லுணர்ச்சி, கொடுமை மிகுந்த பேராசைக்கும் மிருகபலத்திற்கும் இடமளித்துவிட்டது". உரூசுவெற்று 1939 இல் அமெரிக்கப் பேரவைக்கு விடுத்த ஆண்டுச் செய்தியில், முந்திய எட்டு ஆண்டுகளில் அடைந்த அனுபவங்களால் ஏற்பட்ட படிப்பினைகளைச் சுருங்கக் கூறியுள்ளார். "1931 இலிருந்து நாடுகள் நடுங்கச் செய்த முக்கியத்துவம் வாய்ந்த உலக நிகழ்ச்சிகள், மின்னல் வேகத்தில் நிகழ்ந்துள்ளன. கடந்த எட்டாண்டுகளாக மனித சமுதாயத்தில் தங்களுக்கிருந்த இயல்பான நம்பிக்கையினால், நம்மில் அநேகர், மனிதர் உள்ளங்களில் இயற்கையாக உறைந்துள்ள நேர்மை மனப்பான்மையானது போர் ஆயத்தமற்றிருந்தவருக்கு அபயமளிக்குமென்று எதிர்பார்த்தனர். இன்று நாம் அறிவு பெற்றுவிட்டோம், அதே சமயத்தில் வேதனை மிகுந்துள்ளவர்களாயும் இருக்கிறோம்." கூட்டவையின் மறைவுக்கு இரு காரணங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிருந்தன. முதலாவதாக, தெளிவான நோக்கமும் உறுதியு முடைய பூட்கையொன்றைக் கூட்டவை கையாண்டு அதன் உறுப்புரிமையுடைய நாடுகளிடையே பெரிதாகிக் கொண்டிருந்த பிளவை அது ஈடுசெய்யக் கூடியதாயிருந்தாலும், ஐக்கிய மாகாணங்கள் அவ்வவையில் இல்லாமை, ஆரம்பத்திலிருந்தே அவ்வவைக்குப் பெரும் முட்டுக்கட்டையாயிற்று. இரண்டா வதாக இதுவே அடிப்படையான காரணம் சிறிதளவின வான சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அது தன் முழுச் சத்தியை யும் செலுத்தியது. ஆனால் பெரும் விளைவுகளை உண்டாக்கும் சிக்கல்களைத் தீர்க்க அது தேவையான ஆன்மீக ஒற்றுமையற் றிருந்தது. சொல்லளவில், அவையின் எற்பாட்டுக்கு அமை வதாக இருந்துவந்த சில உறுப்பினரின் நேர்மையை நன்கு சோதிக்கக் கூடியமுறையில் சில முக்கியமான சிக் கல்களுக்குத் தீர்வுகாண்பதற்கான ஆற்றல் தனக்கில்லை யென்பதை அது வெளிப்படுத்திற்று. படைக்கலந்துறத்தல் பற் றிய ஒரு பிரச்சினையின்போது, தமது ஆயுதபலத்திற்குப் பதிலாக, கூட்டேமத்தில் அவையின் உறுப்பினர் நம்பிக்கை கொள்ள விரும்புவாரோ என அவ்வவை அவர்களைப் பரீட்சிக் கக் கூடியதாயிருந்தது; மஞ்சூறியாவையும், அபிசீனியா வையும் பொறுத்த மற்றப்பிரச்சினைகள், ஒரு கோட்பாட்டுக்காக இவ்வுறுப்பினர் போரிலீடுபடுவதற்கு முன்வரச் சம்மதப்படு வரோ என அன்னரைப் பரீட்சிப்பதாய் அமைந்தன.

"ஒரு நாட்டின் பாதுகாப்புத் தேவைக்குத் தகுந்தபடி, பெரிதளவில் அந்நாடு தனது படைக்கலங்களைக் குறைப்பதும், சருவதேசக் கடப்பாடுகளைக் கூட்டுச் செயல்வாயிலாக நிறைவேற் றுவதும், அமைதிப் பாதுகாப்புக்கு அவசியமானவை" என்று கூட்டவை எற்பாட்டின் எட்டாவது உறுப்பு எடுத்துரைத்தது. "அத்தகைய படைக்கலக் குறைப்புக்குரிய திட்டங்களை" ஒழுங்கு படுத்துவது கூட்டவைக் கழகத்தின் பொறுப்பெனவும் அது யுறுப்பு குறிப்பிட்டிருந்தது. பிரித்தானிய முதலமைச்சர் விடுத்த எச்சரிக்கையின்படி, "நாம் முழுமையான படைக்கலக் கட்டுப் பாட்டைத் திட்டமாக நிலைநாட்டாவிடில், நிலையான அமைதி யைப் பெறவோ, சேர்மானியப்படைக்கலங்களை நீடித்துக் கட்டுப் படுத்தவோ முடியாது" என்ற உண்மையும் எற்றுக் கொள்ளப் பட்டது. இவ்வுறுப்பின் எற்பாடுகளை நிறைவேற்றுமுகமாக, படைக்கலந் துறத்தல் பற்றிய பிரச்சினையைப் பரிசோதிக்கத் தொழினுட்பச் சிறப்புக் குழுக்கள் அமர்த்தப்பட்டன; ஆனால் நீடித்த வாதங்களால் உருப்படியான விளைவுகள் உண்டாக வில்லை. பிரான்சு தனது பாதுகாப்பு முறைகளை நலிவுறச் செய்யச் படைக்கலந் துறத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதும் விருப்பின்றியிருந்தமையே கூட்டவை அத்துறையில் முடிவுகாணுது காலம் போக்கியமைக்குக் காரணமாகும். அந் நாட்டின் அத்தகைய மனப்பான்மைக்குக் காரணமுமிருந்தது. "ஒரு காரணமுமின்றிச் சேர்மனி பிரான்சைத் தாக்குமாயின்" அமெரிக்க அரசாங்கமும் பிரித்தானிய அரசாங்கமும் பிரான் சுக்கு உடனடியாக உதவியளிப்பதாய், பிரான்சுடன் 1919 இல் பொருத்தனை செய்திருந்தன வென்பதை நினைவு படுத்திக் கொள்ளவேண்டும்.[1] அமெரிக்க மூதவை இப்பொருத்தனையை அங்கீகரிப்பதற்கு மறுக்கவே, பிரித்தானியாவும் தன் உறுதி மொழியினின்று—அது அமெரிக்க நடவடிக்கையைப் பொறுத்தி ருந்தமையால்—நழுவியது. இதனாலேற்பட்ட பெரும் ஏமாற்றம் பிரான்சினுடைய பூட்கையின் போக்கைக் குறிப்பாக வெளிப்படுத்து கிறது; அதன் குறிக்கோள், ஆதியிலிருந்து அந்தமளவும், அதன் ஏமம்பற்றியதாகவே யிருந்தது. இப்போது அவ்வேமம், பொருத்தனைகளை அங்கீகரிக்காமை காரணமாக, இடுக்கண் களுக்குள்ளாயிற்று. அதன் விளைவாக, பிரான்சு சேர்மனியின் பயமுறுத்தலைச் சமாளிக்கத் தனக்குச் சொந்தமான வழிவகை களை எதிர்பார்க்க வேண்டியதாயிற்று. மேலும் வேர்சைப் பொரு த்தனையில் காணப்பட்ட படைக்கலந் துறத்தல் சம்பந்தமான ஒழுங்குறுப்புக்களிலிருந்து சேர்மனி தந்திரமாகத் தப்பிக் கொண்டதென்று பிரான்சிய வட்டாரங்கள் குற்றஞ்சாட்டி தம் நம்பிக்கையை இழந்து, படைப்பலத்தை எவ்விதத்திலாகிலும் எதிர்த்தவர்களுடைய வலுவைப் பெருக்குதற்குத் துணை செய்தன.

படைக்கலங்கள் பற்றிய உலக மாநாடு.

உலொக்காணோப் பொருத்தனை (1925) நிறைவேற்றப்பட்ட வுடன் நிலைமை சிறிதளவு சீருற்றது. இதன்படி, சேர்மனி காரணமின்றிப் பிரான்சைத் தாக்கின், அதற்குப் பிரித்தானியா வின் உதவி கிடைக்குமென்ற உறுதியீடு கொடுக்கப்பட்டது. மேலும் பிரான்சுக்கும் சேர்மனிக்கு மிடையில் முன்னிருந்ததை விட நட்புறவு அதிகமாகியது. இதனால் தகுந்த ஏற்பாடு அதிக மில்லாமலே மீண்டும் படைக்கலந் துறத்தல் பற்றிய பிரச்சினை யைத் தீர்ப்பதற்கான வாய்ப்பு உண்டாயிற்றெனத் தோன்றி யது; படைக்கலந் துறத்தல் பற்றிய மாநாடு கூடுவதற்கான ஆயத்தங்களுஞ் செய்யப்பட்டன. எனினும் 1932 ஆம் ஆண்டிற் ருன் படைக்கலங்களைக் கட்டுப்படுத்தவும் குறைக்கவுமான முதல் சருவதேச மாநாடு கூட்டுவிக்கப்பட்டது. அங்கு இரசியா வும் (அது இதுகாறும் உறுப்புரிமை பெற்றிருக்கவில்லை)

[1]. பிரான்சு இரைன் நதியின் இடது கரையில் தனக்கும் சேர்மனிக்கு மிடையில் ஏமநாடொன்றை நிறுவுவதற்காகக் கொண்டுவந்த பிரேரணைக்குப் பதிலாக இச்செயல் மேற்கொள்ளப்படுவதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய மாகாணங்களுமுட்பட அறுபத்துநான்கு அரசுகள் கூடியிருந்தன. ஆக்கிரமிப்புச் செய்கை யொன்றுக்கு எதிராக உதவிக்கு அழைக்கப்படக் கூடியதான சருவதேசப் படையொன்றைக் கூட்டவை உருவாக்கவேண்டுமென்னும் நோக்கத்துடன் பிரான்சு ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தது. தேவையானால் இப்படைக்கு உதவியாக உறுப்புரிமையுடைய தனிப்பட்ட நாடுகளின் துணைப் படைகளும் அழைக்கப்படலாம் என்று அது கூறியது. இதைச் சாதிக்க முடியுமென்ற பாவனையில், இப்பேரார்வமுடைய திட்டமே, கூட்டவையின் செயல்களுக்கு வலிமையூட்டி, அவற்றின் மூலம் ஏமவுணர்ச்சியை உருவாக்குவதற்கான உண்மையான வாய்ப்பையளிக்கக் கூடியதாகவிருந்தது; ஆனால் இத்திட்டமும் ஒத்திவைக்கப்படலாயிற்று. இதற்குப் பதிலாக "மிகக் கொடிய ஆயுதங்களை ஒழித்தற்கென" ஓர் ஏற்பாட்டைச் செய்ய வல்லுநர் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டது. அக்குழுவினரோ "தாக்குதல் பற்றிய நுணுக்க ஆராய்ச்சியிலீடுபட்டு வழிதவறித் திண்டாடினர்" எனக் கூறப்பட்டது. அப்போதிருந்த படைக்கலங்களில் மூன்றிலொன்று குறைக்கப்பட வேண்டுமென்று ஐக்கிய மாகாணங்கள் பிரேரித்தன; பெரிய பீரங்கிப்படைகளின்தும், தாங்கிகளினதும், புகைப் பொருள்களினதும், குண்டு வீசும் வானூர்திகளினதும் உற்பத்தி நிறுத்தப்பட வேண்டுமென்பதை இதர பலநாடுகளும் ஆதரித்துப் பேசின. அதற்குள் முக்கியத்துவம் வாய்ந்த மாதங்கள் பல கழிந்தன. போர் என்னும் மாபெரும் ஆபத்தை ஐரோப்பா அணுகிக் கொண்டேயிருக்க, மாநாடு தனது பிரச்சினைகளை வாதித்துக் கொண்டே போயிற்று. ஏம ஏற்பாடின்றிப் படைக்கலத்துறப்பும், படைக்கலத்துறப்பின்றி ஏம ஏற்பாடும் நடைமுறையில் சாத்தியமானவையா அன்று என்பதே இவ்வாதத்தின் சிக்கலான பகுதியாகவிருந்தது. வேர்சைப் பொருத்தனையின்படி அதிகம் குறைந்த அளவு படைக்கலங்களையே வைத்துக்கொள்ளலாமென்று சேர்மனி வற்புறுத்தப் பட்டமையும், படைக்கலங்களைப் பொறுத்தமட்டில், கொள்கையளவில் மற்றைய பெரும் வல்லரசுகளுடன் அந்நாட்டுக்குச் சமமான மதிப்பு மீண்டும் அளிக்கப்பட்டமையுமே (1932) இம்மாநாடு சாதித்தவற்றுள் நன்றுகத் தெரியக் கூடிய விளைவுகள் என்க.[1] சேர்மனியின் ஒருபுடைச்சார்பான

---

1. "எல்லா நாடுகளுக்கும் ஏமம் அளிக்கக் கூடியதோர் ஒழுங்கமைப்பில்" சேர்மனிக்குச் சமத்துவம் அளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்கலத்துறப்பு, பொதுவான படைக்கலத்துறப்பின் முதற்கட்ட மாகக் கருதப்பட்டிருந்தமையால் இந்நடவடிக்கையைத் தாமதப்படுத்த முடியவில்லை. பிரான்சும் பெரிய பிரித்தானியாவும் ஐக்கிய மாகாணங்களும் சேர்ந்து, சேர்மனி சமத்துவம் எய்துமளவும் படிப்படியாகப் படைக்கலம் திரட்ட வேண்டுமென்று பிரேரித்தன. எனினும் இழப்பீட்டுச் சலுகை தாமதமாக அளிக்கப்பட்டது போல் இதுவும் தாமதமாயிற்று ; ஏனெனில் உள்நாட்டில் உண்டான மாறுதல்கள் காரணமாக சேர்மனியின் பூட்கையில் ஒரு புதிய போக்குக் காணப்பட்டது. தேசியச் சமூகவுடைமை வாதிகள் தமது வலுவின் வளர்ச்சியைக் குறிக்கு முகமாக (1933) படைக்கலத்துறப்பு மாநாட்டிலிருந்தும் கூட்டவையிலிருந்தும் விலகிக் கொண்டனர். அவர்கள் படைக்கலவுற்பத்திப் " பந்தய மொன்றை " ஆரம்பித்து, ஏனைய ஐரோப்பிய நாடுகளையுந் தங்களைப் பின்பற்றுமாறு வற்புறுத்துவாராயினர். இந்நெருக்கடியினுலேற்பட்ட இடர், இத்தாலிய தாக்குதலினின்று அபிசீனியாவை விடுவிக்கக் கூட்டவையெடுத்த முயற்சிகள் வீழ்ச்சியடைந்தமையால் மேலும் அதிகரித்தது. இத்தாக்குதலைப் பற்றி இப்போது கூறுவோம். அபாயத்துக்குரிய அறிகுறிகள் தோன்றின ; அவ்வறிகுறிகளின் எச்சரிக்கையை எவரேனும் அறிந்து கொள்ளாமலிருக்க முடியாது. பிரித்தானிய அரசாங்கம் பின்வருமாறு கூறியது (1936) : " உலகமிருக்கும் இன்றைய நிலையில், பிரித்தானியப் பாதுகாப்பு முறைகள் பற்றி ஆராய்வதையும், பிரித்தானியர் தாக்கப்படுவதினின்று அவர்களைத் தப்புவிக்கவும் சருவதேசக் கடமைகளை நிறைவேற்று முகமாகச் செய்யப்படும் பொது முயற்சிகளில் அவர்களைப் பங்கு பற்றச் செய்யவும் அவசியமான வழிவகைகளைத் தேடுவதும் தவிரப் பிரித்தானிய அரசாங்கத்திற்கு வழி வேறென்றுமில்லை "—இச்சொற்களுடன் சமாதான வாழ்க்கையாகிய சித்திரத்தினிடையே தோன்றியமைந்த நிராயுத முறைக்குரிய அரங்கில், ஐரோப்பிய நாடகத்தின் முதற் காட்சி முடிந்து திரைவிழுந்தது. பின்னர் அது உணர்ச்சிமிக்கதொரு சூழ் நிலையில் இரண்டாவது காட்சியாக மீண்டும் தோன்றியது. அக்காட்சியிற் காணப்பட்டதாய படைக்கல அடிப்படையிலமைந்த சமாதானம், மூன்றுவது காட்சியான பெருந்தீ மூள்வதற்குப் பீடிகையாக அமைந்தது.

யப்பானும் மஞ்சூரியாவும்.

கூட்டவைக்கு ஏற்பட்ட மூன்று முக்கிய பிரச்சினைகளுள் இரண்டாவதைப்பற்றி இங்கு ஆராய்வோம். யப்பானியர் சீன மாகாணமான மஞ்சூரியாவில் தங்களது உடன்படிக்கையினடியாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற வுரிமைகளின் விளைவாகப் பெரும் பணத்தை முதலீடு செய்து போதுமான பொருளாதார முயற்சிகளை அபிவிருத்தி செய்தனர். மஞ்சூறிய அதிகாரிகளினது எதிர்ப்பினாலும், சீன மக்களுக்குச் சொந்தமாக அமைக்கப்பட்ட புதிய இருப்புப்பாதை களினாலும் இம்முயற்சிகளுக்கு இடையூறு உண்டாகலாமென்று கருதப்பட்டது. மேலும் சீன-யப்பானிய பகைமையைத் தூண்டி விடுவதற்கு, தொடர்பான பல நிகழ்ச்சிகள் காரணமாயிருந்தன. யப்பானியப் படைகள் இச்சூழ்நிலையைத் தமக்கு வாய்ப்பாகக் கொண்டன. மஞ்சூறியாவில் யப்பானிய ஆதிக்கத்துக்குத் தீங் கிழைக்கக் கூடிய முறையில் சீனாவில் காணப்பட்ட விழிப்பான நாட்டின உணர்ச்சி, சீன அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பாதிக்கு முகமாக நன்கினுக்கும் கன்றனுக்குமிடையில் ஏற் பட்ட பிணக்கு, வேளாண்மைப் பொருள்களின் விலை வீழ்ச்சி யினாலும் வேலையின்மையாலும் பொதுவுடைமைவாதக் கிளர்ச்சி யினாலும் யப்பானில் ஏற்பட்ட அமைதியின்மை, ஐரோப்பா விலும் அமெரிக்காவிலும் நிலவிய பெரும் பொருளாதார மந்தத்தினால் அவை தூரகிழக்கு நாடுகளில் உற்சாகத்துடன் தலையிட விரும்பாதிருந்தமை ஆகிய பல சூழ்நிலைகள் இப் போது ஒன்று சேர்ந்தன. இதனால் முன்னேற்றமான பூட்கை யொன்றைத் தொடங்குதற்கு இக்காலம் ஏற்றதுபோல் தோன் றியது. இதற்கிணங்க, யப்பானிய உடன்படிக்கை உரிமைகளும், யப்பானிய நலன்களும் பாதிக்கப்பட்டனவென்ற காரணத் திற்காக, யப்பானியப் படைகள் 1931 இல் மஞ்சூறியாவின் தலைநகரமாகிய முக்டினைக் கைப்பற்றின. யப்பான், தனக்கு எதிராகச் சீனாவில் நடைபெற்ற ஒன்றியொதுக்கல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்றும், தன் நாட்டினருக்குப் பூரண ஏமத்துடன் மஞ்சூறியாவில் வர்த்தகஞ் செய்வதற்கும், குடி யேறுதற்கும் உரிமைகள் அளிக்கப்படுவதுடன், தனக்கு முன் னிருந்த தனிச் சலுகைகள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட வேண்டு மென்றும் கோரியது. இதனை எதிர்த்துச் சீன அரசாங்கம் கூட்டவையின் கழகத்துக்கு முறையிட்டது. அக்கழகம் யப்பானை மஞ்சூறியாவிலிருந்து வெளியேறக் கட்டளை விடுத்ததுடன், அங்கு ஒரு விசாரணை ஆணைக்குழுவையும் அனுப்பிவைத்தது. ஆணைக்குழுவினது அறிக்கை வெளியிடப்படுமளவும் காத்திராது யப்பான் தான் செய்து முடித்த கருமத்தைக் கூட்டவைக்குச் சமர்ப்பித்தது. வளம்நிறைந்த மஞ்சூறிய மாகாணம், அதன் நிலக்கருப் பொருட் செல்வத்துடனும், முன்னூறு இலட்சம் குடிகளுடனும் சீனத்திற்குக் கீழ்ப்படாத ஒரு சுதந்திர அர சாகப் பிரகடனஞ் செய்யப்பட்டு, முன்னைய சீனப் பேரரசி னுடைய தலைமையில் மஞ்சுக்கோ என்ற ஒருதனி அரசாக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. உண்மையான அதிகாரம் யப்பானியரது கையிலிருந்த மையால், மஞ்சுக்கோ ஒரு பொம்மையரசென்பது தெளிவாயிற்று. விசாரணை ஆணைக்குழு, "தற்போதமைந்துள்ள ஆட்சி முறை உண்மையானதும் தானே இயங்குவதுமானதோர் இயக்க முறையாகும் எனக் கருதுவதற்கிடமில்லை" என அறிக்கை செய்து, யப்பானியப் படைகளின் தலையீட்டை, நியாயமான முறையில் தற்பாதுகாப்புக்காகச் செய்யப்பட்ட நடவடிக்கையென நிரூபிக்க முடியாதெனவும் கூறியது. இதன் விளைவாக, கூட்டவை தனது உறுப்பினருக்கு மஞ்சுக்சோ அரசை ஏற்றுக்கொள்ளக் கூடாதென உத்தரவிட்டது; யப்பானுடைய பதிலுக்குக் கூட்டவையில் தனக்கிருந்த உறுப்புரிமையைக் கைவிட்டது. பயனளிக்கக் கூடிய நடவடிக்கை எதனையும் கூட்டவை மேற்கொள்ளவில்லை; யப்பானால் செய்யப்பட்ட இவ்வெதிர்பாராத மறுதலிப்பால் கூட்டவையின் கௌரவம் மிகவும் குறைந்தது.

கூட்டவையின் போக்கு.

கூட்டவையின் ஆதரவாளர் அதன் சார்பாக வாதித்தனர். யப்பான் தாக்கும் நாடாக ஒருபொழுதாவது பிரகடனஞ் செய்யப்பட்டதில்லையெனவும், சீனாவும் யப்பானும் தங்களது சச்சரவில் எக்கட்டத்திலேனும் "போரிட முனையவில்லை" யெனவும், சச்சர விலீடுபட்ட காலமுழுவதிலும், சீனா ஒருபொழுதாவது தான் யப்பானுடன் கொண்டிருந்த சூழியல் உறவுகளை நீக்கிக் கொள்ளவில்லை யெனவும், எற்பாட்டினது 16 ஆம் உறுப்பின் உதவியைச் சீனர் நாடவில்லையெனவும், அவ்வுறுப்பு "போருக்கு முனைந்த" காலத்தில் மட்டுமே சட்டமுறையாக கைக்கொள்ளப்படக்கூடுமெனவும், எனவே கூட்டவைக்கு எப்பொழுதேனும் சட்டவலுக்களைக் கையாள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவில்லையெனவும், சீனத்து ஆள்புலங்களில் யப்பானுக்குக் காவற்படை அமைக்கும் உரிமைகளுண்டெனவும், மேலும், (இவ்வாறான சட்டத்திற்குட்பட்ட அம்சங்கள் தவிர) பசிபிக்குச் சமுத்திரத்தைச் சார்ந்த பெரும் வல்லரசுகள் (ஐக்கிய மாகாணங்களும் இரசியாவும்) கூட்டவையில் உறுப்புரிமை பெறுதிருந்தமை கவனத்துக்குரியதெனவும், கூட்டு நடவடிக்கை எடுப்பதற்கு இவ்வல்லரசுகளது பயன்தரும் ஒத்துழைப்பு முன்கூட்டித் தேவைப்படுமெனவும் கூட்டவையின் ஆதரவாளர் உறுதிப்படுத்தினர். இவ்வாறான பல்வேறு வாதங்களுக்கு விடையிறுக்கப்பட்டது: யப்பான் கூட்டவையிலிருந்து நீங்கியமையே, அது தாக்கும் நாடென்பதைத் தெளிவாக்கிற்றென்பதும், உண்மையில், மஞ்சூறியாவிலும் சாங்காயிலும் போர் எற்படாவிடினும் ஒருவித "போர்முனைப்பொன்று" ஏற்பட்டிருந்த தென்பதுமே விடையளித்தோர் கூறியவை. மேலும் சீனர் தமது அமைச்சரைத் தோக்கியோவிலிருந்து திரும்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவழைக்காமையும், 16 ஆம் உறுப்பைப் பிரயோகப்படுத்துவதை வற்புறுத்தாமையும், "கூட்டவையினிடம் அவர்களுக்கிருந்த முழு விசுவாசமும், அவ்வவை எவ்வளவு நெருக்கடியான நிலைமையையும் சமாளித்துச் செயலாற்றக் கூடிய சத்தியுள்ளதென்பதில் அவர்களுக்கிருந்த நம்பிக்கையும், கூட்டவையின் தீர்ப்பில் விடுத்துள்ள வழக்குச்சம்பந்தமாய் மனவெறுப்புக் கிடமான கருமங்களிலீடுபடக் கூடாதென்பதில் அவர்களுக்கிருந்த அக்கறையும்" அவ்விடையிறுக்கும்பொழுது எடுத்துக் காட்டப்பட்டன. எப்படியாயினும், யப்பானியப் பொருத்தனையின்படி ஒப்புக் கொள்ளப்பட்ட உரிமைகள் நிராகரிக்கப்பட்டமை, சீன அரசாங்கம் கவனமாகக் கையாண்ட நுண்ணிய முறைகள், ஏற்பாட்டில் காணப்பட்ட சட்ட சம்பந்தமான பொருள் மயக்கந்தரும் சொல்லமைப்பு ஆகியவை, கூட்டவையானது பொருளாதார முறையிலோ போர்ப்படை முறையிலோ சட்டவலுவைக் கையாளமறுத்த குற்றத்தை ஓரளவில் குறைவாகக் காட்ட இடமளித்தன வென்பது தெளிவு. எனினும், கூட்டவை இச்சந்தர்ப்பத்தில் ஒழுக்கத்துறை சார்ந்தவற்றை வற்புறுத்துவதை மாத்திரமே கைக்கொள்ளுமாயின், இதைவிடப் பெரும் இக்கட்டான நிலையில், திட்டவட்டமானதொரு முடிவுக்கு வரவும், போரிட்டு அதனால் விளையும் இடர்களை அனுபவிக்கவும் வேண்டிய காலம் விரைவில் ஏற்படும்.

இத்தாலியும் அபிசீனியாவும்.

1935 இல் இத்தாலிய நாடு, அபிசீனியாவுக்குரிய ஆள்புலத்தில் பலவந்தமாக நுழைந்தது. அப்பொழுது, கூட்டவையில் உறுப்புரிமைபெற்ற நாடொன்று காரணமற்ற தாக்குதலுக்குட்படுமாயின், அவ்வவை அந்நாட்டைக் காப்பாற்றக் கூடிய வலுவுடையதா என்ற கடுந்தேர்வுக்குட்பட்டது. கூட்டவையில் ஆதியில் உறுப்புரிமைபெற்ற நாடுகளில் இத்தாலியும் ஒன்று. அவையின் ஏற்பாட்டை உருவாக்க நியமிக்கப்பட்ட அமைதி மாநாட்டின் தலைமைக் கழகத்தில் பிரதிநிதித்துவம் பெற்ற அரசுகளிலொன்றுகவும் அது இருந்தது. இன்னும், போரை ஒரு கருவியாகக் கருதுவதில்லை யென்பதைப் பாரிசுக் கூட்டணியின் சார்பாளர் தமது நாட்டினப் பூட்கையெனத் திட்டமாகக் கொண்டு அதற்குக் கட்டுப்பட்டிருந்தனர்; இப்பாரிசுக் கூட்டணியின் பொருத்தனையில் கையொப்பமிட்ட நாடுகளில் இத்தாலியும் ஒன்று. அன்றியும் ஐரோப்பாவின் மாபெரும் வல்லரசுகளிலொன்றுகவிருந்ததுடன், மேலைட்டு நாகரிகத்தின் ஓர் அரணுகவும் அந்நாடு திகழ்ந்தது. எனவே, இத்தாலி, கூட்டவை ஏற்பாட்டினாலும், பாரிசுக் கூட்டணியினாலும் தனக்கிருந்த கடப்பாடுகளை நிராகரித்து, நாட்டுக் கூட்டவையில் உறுப்புரிமை வழங்கப்பட வேண்டுமெனக் கூறித் தானே பிணையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று அதில் சேர்ப்பித்த ஒரு நாட்டைத் தாக்கியபொழுது, அச்செய்கையானது ஐரோப்பாவைக் குழப்பத்திற்குள்ளாக்கிற்று. தொலைவிலுள்ள ஆசியப் பிரச்சினைகூட இவ்விதமான குழப்பத்தை ஏற்படுத்தவில்லை. கூட்டவையின் ஒழுக்கம் பற்றிய தனிச் செல்வாக்கு, மஞ்சூரியப் பிரச்சினையின் போது ஏற்பட்டதைவிடப் பெரிய நெருக்கடியான நிலைக் குட்படுத்தப்பட்டதோடு, கூட்டேமம் என்ற இன்றியமையாத தத்துவமும் பேராபத்துக் குட்படுத்தப்பட்டதெனத் தோன்றியது. தம் செயல் நேர்மையானதென இத்தாலியர் எவ்வளவுதான் எடுத்துக் கூறினும், கூட்டவையில் நட்புறவுடைய உறுப்புரிமை நாடொன்றின் சுதந்திரத்தை அவர்கள் ஒழிக்க முனைந்தமை, கூட்டவையை நேரடியாகப் போருக்கு அறை கூவுவதாக அமைந்தது. அவ்வறைகூவலைக் கூட்டவை ஏற்றுக் கொள்ளத் தவறினால் புதிய சருவதேச ஒழுங்கின் பாதுகாவலனெனத் தான் ஏற்றுக் கொண்ட பொறுப்புக்களை அது முற்றுகத் துறந்து விட்டதாக முடியும். எனவே அது விரைவில் முக்கியமானதொரு முடிவுக்கு வரவேண்டிய கட்டாயமேற்பட்டது. 1935 இல் எல்லைப்புற மோதுதல்கள் காரணமாக இத்தாலிக்கும் அபிசீனியாவுக்கு மிடையில் சச்சரவு உண்டாகியது; கூட்டவையினது ஏற்பாட்டுக் கிணங்க, அபிசீனியா அவ்வவைக்கு முறையிட்டது; நடுநிலைத் தீர்ப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். தீர்ப்புரிமை மன்றத்தில் உறுப்பினராகவிருந்த இரு இத்தாலியருமூட்பட்ட அத்தீர்ப்பாளர்கள், இரு கட்சியினரும் நிரபராதிகளென ஒருமுகமான தீர்ப்பளித்தனர். எனினும், இத்தாலிய அரசாங்கத் தலைவன், இச் சூழ்நிலையிலிருந்து தான் தப்பித்துக் கொள்ளக்கூடிய வழிகளை நழுவவிட்டிருந்தான் எனலாம். "எங்களது முடிவு மாற்ற முடியாதது; இந்நிலையிலிருந்து நாங்கள் பின்வாங்கப் போவதில்லை; இத்தாலிய அரசாங்கமும் மக்களும் ஈடுபட்டுள்ள இப்போரில் இதனிறுதி முடிவைக் காணுமளவும் தொடர்ந்து இதை நடத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம்" என்று முசோலினி அறிவித்தான்.

பொருளாதார நடவடிக்கைகள்.

பிரித்தானிய வெளிநாட்டுச் செயலாளன் தனது சொற்பொழிவின் மூலம், செனீவாவில் கூடியிருந்த நாடுகளுக்கு ஒரு வழியைக் காட்டினான். "கூட்டவையானது நுட்பமானதும் தெளிவானதுமான தனது கடப்பாடுகளுக்கமைய, தனது ஏற்பாட்டின் முழுமையான கூட்டுப்பாதுகாப்புக்காகவும், குறிப்பாக காரணமற்ற தாக்குதற் செயல்கள் காரணமாக நிலையானதும், கூட்டுப் பொறுப்புள்ளதுமான எதிர்ப்பை ஏற்படுத்துவதற்காகவும், அவ்வவையும் அதனுடன் எனது நாடும் சேர்ந்து உறுதி செய்துள்ளன." மற்ற வல்லரசுகளும் பெரிய பிரித்தானியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட திடசித்தமான போக்குக்கு ஆதரவளித்தன. அச் செயலாளனுடைய சொற்பொழிவை வரவேற்று மக்கள் காட்டிய உற்சாகம், உலகெங்குமுள்ள பொதுமக்களது மனப்பூர்வமான ஆதரவை அதுபெற்றிருந்தது என்பதற்குச் சான்றுயது. கூட்ட வைக்கழகம், போர் உண்டாவதைத் தடுப்பதற்காக, அபிசீனியா விற் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்கெனப் பிறநாட்டு நிபுணர் களைக் கொண்ட தூதுக் குழுவொன்றை நியமிக்க முன்வந்தது. மேலும் அது எத்தியோப்பிய பேரரசில் இத்தாலிக்கெனப் பொருளாதாரச் சிறப்புரிமைகளை அளிக்கவும் உடன்பட்டது; அன்றியும், பெரிய பிரித்தானியாவும் பிரான்சும் இத்தாலிக்கு ஆள்புலச் சலுகைகளைக் கொடுக்கவும் ஒப்புக் கொண்டன. இப்புதுத் திட்டங்கள் முசோலினியின் பேரவாவிற்குத் திருத் தியளிக்கவில்லை. ஒற்றேபர் மாதத்தில் (1935) இத்தாலியப் படைகள் எல்லைப்புறத்தைக் கடந்து, அபிசீனிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்றன. அப்போது கூட்டவைக் கழகம், இத்தாலியே மீக்கொளும் நாடென அறிவித்தது. அதன் தீர்ப்பு, ஏற்பாட்டின் 16 ஆம் உறுப்பின்படி இப் பொழுது செயலாற்றப்பட்டது. அவ்வுறுப்பின்படி "கூட்ட வையில் உறுப்புரிமையுடைய எந்த நாடாயினும் அவ்வவையின் ஒப்பந்தங்களைப் புறக்கணித்துப் போர் தொடுப்பின், அது காரண மாகவே, அந்நாடு, கூட்டவையில் உறுப்புரிமைபெற்ற மற்ற நாடுகளுடனும் போர் தொடுத்ததாகக் கொள்ளப்படும். உறுப் புரிமை பெற்ற நாடுகளுடன் வணிகத்துறையிலேனும் நிதித் துறையிலேனும் அந்நாடு கொண்டிருந்த தொடர்புகள் உடனடி யாகத் துண்டிக்கப்பட்டுவிடும்". இத்தாலி போர் தொடுத்த வுடன் பொருளாதார நடவடிக்கைகள் சம்பந்தமான தண்டனை உடனடியாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் படைசம்பந்தமான நடவடிக்கைகளைப் பிறப்பிக்கும் பொறுப்பு கழகத்தினது முடி வுக்கு விடப்பட்டது. இத்தாலிக்குப் படைக் கலங்களையும், ஒரு சில "முக்கியமான" பொருள்களையும் விற்பனை செய்வதைத் தடைசெய்தல், இத்தாலியினின்று இறக்குமதியான பொருள் களை வாங்காது புறக்கணித்தல், அந்நாட்டுக்குக் கடன்களும் பற்று வசதிகளும் வழங்காமல் இருத்தல் ஆகியவை அடங்கிய நடவடிக்கைகளையே கூட்டவை உண்மையில் இத்தாலியின் மேற் றிணித்தது. மொத்தத்தில் ஐம்பத்திரண்டு நாடுகள் படைக் கலத் தடையையும் கடனளிப்புத் தடையையும், ஐம்பத்தொரு நாடுகள் முக்கியமான பொருள் விற்பனைத் தடையையும், ஐம்பது நாடுகள் இத்தாலியப் பொருள்களை வாங்காது புறக் கணித்தலையும் மேற்கொண்டன. உறுப்புரிமை நாடுகளது உள்ளக்கிளர்ச்சியூட்டும் இவ்வொற்றுமையின்பாற்பட்ட செயல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாலியின் எதிர்ப்பைத் தணித்திலது. இந்நாடுகள் செய் தவற்றிற்கு எதிராகக் கூட்டவையினது கட்டளைக்கு உடன்பட்ட நாடு களினின்று இறக்குமதி செய்வதை இத்தாலி நிறுத்திற்று. அன்றியும் போரின் முடிவைத் துரிதப்படுத்துவதற்கான முயற் சிகளையும் புதுப்பித்தது.

அபிசீனியாவை இத்தாலி இணைத்தல்.

அபிசீனியாவின் பெரும்பகுதியை, படையெடுப்புச் செய்த இத்தாலிக்குக் கொடுத்துவிடக்கூடிய ஒரு "சமாதான ஒழுங்கு" த்திட்டம் செய்யப்பட்டுள்ளதென்ற செய்தி அறிந்து 1935 ஆம் ஆண்டு திசெம்பரில் உலகம் திடுக்கிட்டது. தாக்கப்பட்ட நாட்டிற் குப் பாதகமான முறையில் படையெடுப்புச் செய்த நாட்டிற்கு நட்ட ஈடு கொடுப்பதை ஆதரிக்கும் சமாதான ஏற்பாடுகள், கூட்டவையின் ஏற்பாட்டுக்கு எதிரிடையாய் இருந்தமையால், அவ்வவையின் நேர்மைக்கு அவை பங்கம் விளைப்பவையா யிருந்தன. இதுபோன்றே, அவ்வேற்பாடுகள், கூட்டவையினது ஒற்றுமையையும் கூட்டேமத்தையும் கொண்ட வீறமைந்த தோற் றம் ஒரு போலித் தோற்றம் போன்றதொன்றே என்பதையும் குறிப்பாய் உணர்த்தின. இதனால் ஆர்வம் மிகுந்த மக்களின் உணர்ச்சி தூண்டப்பட்டது. பயனற்ற "சமாதான ஒழுங்கை" கூட்டவைக் கழகமும் இத்தாலியும் உடனடியாக நிராகரித்தன. பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டன; எனினும் படைசார்ந்த நடவடிக்கைகளையோ எண்ணெய் வணிகத் தடையையோ இத்தாலிமீது திணிக்க யாதாயினு மொரு முயற்சியும் செய்யப்படவில்லை. போயர் செய்தபோரில் நடைபெற்றதுபோல், அபிசீனியாவின் கடினமான இயற்கை யமைப்பின் காரணமாக, எத்தியோப்பியப் படைகள் நேருக்கு நேராகச் சமர் செய்வதைவிடுத்து, கொரிலாப் போர் முறை களைக் கையாண்டன. இப்போரும் சிலகாலத்துக்கு நீடிக்கலா மென எதிர்பார்க்கப்பட்டது; இந்நிலை ஏற்படுமாயின் தளர்ச் சியுற்ற இத்தாலி, பொருளாதார நடவடிக்கைகளின் கடுமை யாற் பாதிக்கப்பட்டுத் தோல்வியுறுமெனவும் கருதப்பட் டது. ஆனால் இத்தாலியப் படைகள் துரிதமாக முன்னேறி யமையால், முன்னர் செய்த திட்டங்களனைத்தும் நிலைகுலைந்தன. அபிசீனியப் படைகள் துணிந்து போரிட முன்வந்தன. ஆயி னும், இத்தாலியர் தமது இயந்திரப் போர்ப்படைக் கலங்களின் மேம்பாட்டால், அமோகமான வெற்றியீட்டினர். அவர்கள் அபி சீனியத் தலைநகரைக் (அடிசு அபாபா) கைப்பற்றியதும், பேரரசன் நாட்டிலிருந்து ஓட்டமெடுத்தான். அத்துடன் போரும் முடி வெய்தியது. அபிசீனியா இத்தாலிய அரசுடன் இணைக்கப் பட்டு, இத்தாலியப் பேரரசு பிரகடனஞ் செய்யப்பட்டது. இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகள் 1936 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்றன ; இரு மாதங்களுக்குப் பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை யெடுப்பது சம்பந்தமான திட்டங்கள் உத்தியோக பூர்வமாகக் கைவிடப்பட்டன.

கூட்டவையின் வீழ்ச்சிக்குக் காரணம்.

தன்னுடன், விரோத மனப்பான்மையுடனிருந்த ஐம்பது நாடுகளின் முன், தன்னந்தனியாக, உறுப்புரிமை பெற்ற ஒரு நாடு கூட்டவையின் அதிகாரச் செல்வாக்கை வெற்றியுடன் எதிர்த்து நின்றது. இது கூட்டவையின் புகழுக்கும் வலிமைக் கும் பெரும் பங்கத்தை ஏற்படுத்தியது ; இதற்குப் பின்னர் அவ்வவை ஒருபொழுதேனும் தானிழந்த நிலையை மீண்டும் பெறவில்லை. பல முக்கியத்துவம் வாய்ந்த விளைவுகள் அவ்வீழ்ச்சி யின் காரணமாக ஏற்பட்டன. ஆனால் உத்தியோகபூர்வமான விளக்கத்தைக் கொண்டு அவையின் தோல்விக்கான காரணங் களை நாம் முதலில் ஆராயவேண்டும். முதன்முதலாக, கூட் டவையில் எல்லா நாடுகளும் உறுப்புரிமை பெறுதிருந்தமை யால், அவ்வளவில் அதன் " பயன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது." சட்டத்தை மீறிய நாட்டின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் உறுதியற்றனவானால் பொருளாதார நடவடிக்கைகள் உடனடி யாகப் பயனளிப்பது அரிது. மேலும், ஒருவிடயத்தில் பங்கு பற்றிய நாடுகள், அதைக் கைவிடுவதனால் தமது மதிப்பைப் பெரிதளவு இழக்க நேரிடும் என்று அந்நாடுகள் கருதக்கூடிய நெருக்கடியான கட்டம் வருமளவும் கூட்டவை அவ்விடயத்தில் தலையிடாமலிருந்தது. இது தவிர, படை சம்பந்தமான சட்ட வனுமதிகளின் முறைமை, கூட்டேம முறைமையின் இன்றி யமையாத அம்சமாயிருந்தது. ஆனால் கூட்டவையின் உறுப் பினரனைவரும், அவ்வவை பிறப்பித்த ஏற்பாட்டிற்கேற்பத் தமது கடமைகளைச் செய்ய ஆயத்தமாகவில்லை யாதலால் இதில் சிக்கலேற்பட்டது. எண்ணெய் வணிகத்தைத் தடை செய்வதை யோ சுவெசுக் கால்வாய் மூடப்படுவதையோ, இத்தாலி தனக் கெதிராகப் போரிடுவதற்குச் செய்யப்பட்ட படை சம்பந்தமான சட்டவனுமதியெனக் கருதியிருக்கும். அதனால், பெரிய பிரித் தானியாவை இத்தாலி தாக்குதற்கான அபாயம் ஏற்பட்டு, அதன் காரணமாய் பெரிய பிரித்தானியா உறுப்புரிமை யுடைய மற்ற நாடுகளது உதவியைப் பெறுது, போரின் முழுப்பொறுப்பையும் தானே தாங்க வேண்டிய நிலை உண்டாகி யிருக்கும். பலர் கூடிப் படை சம்பந்தமான நடவடிக்கை எடுப்ப தாயின் அவர்கள் எல்லோரும் கருத்து ஒற்றுமையுடையரா யிருக்க வேண்டியது அவசியமானதாகும். ஆனால், வல்லரசு களுள் ஒன்றுயினும் கொள்கைக்காக இத்தாலியுடன் போர் தொடுக்க விருப்பமின்றியிருந்தமையால் இவ்வாறான ஒற்றுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட வழியில்லை. நான்காவதான—அப்போதிருந்த தாறு மாறுனதும் இக்கட்டானதுமான சூழ்நிலையில், ஒருவேளை, அதிக முக்கியத்துவமுள்ளதான—காரணம் பிரான்சிய அரசாங் கத்தின் பூட்கையாகும். கூட்டவையின் அதிகார உரிமைக்கு மற்றெல்லா நாடுகளையும் விடப் பிரான்சு அதிக ஆதரவு அளிக்க வேண்டிய நியாயமிருந்தும், சமாதானப் பொருத்தனைகளால் உண்டு பண்ணப்பட்ட புதிய ஐரோப்பாவின் அரண் என்று கூட்டவையைப் பிரான்சு கருதியிருந்தும், ஆபத்து வந்த வேளை, பிரான்சு தன் போக்குத் தணிந்து செயலற்றிருந்தது. அண் மைக்காலத்தில் இத்தாலியுடன் செய்யப்பட்ட பொருத்தனையின் படி, "இரு அரசாங்கங்களினதும் நோக்கம், இரு நாட்டினங் களையும் இணைக்கும் பரம்பரையான நட்பை விருத்தி பண்ணுவ தாகும்." இப்பொருத்தனை, வட ஆபிரிக்காவில் அண்டை நாடுகளாகவிருந்த இரு நாடுகளுக்குமிடையில் ஏற்பட்ட குடி யேற்ற நாட்டுச் சச்சரவுகளை நீக்கியதுமன்றி, பிரான்சுக்குரிய அல்பைன் எல்லைப்பிரதேசத் தகராறுகளிலும் அதற்கேற்பட்ட கவலையையும் நீக்கியது. இத்தாலியுடன் கொண்டிருந்த கேண்மைக்கு ஊறு விளைக்கப் பிரான்சிய அரசாங்கம் விருப்பப் படாததுடன், இத்தாலியைச் சேர்மனியின் படைக்கலங்களுக்கு இரையாகாதவாறு செய்யவும் விரும்பியது. அவ்வண்ணமே, இரைன் நதிக்கப்பால் பிரான்சுக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்த பேரிடரைச் சமாளிப்பதற்குப் பெரிய பிரித்தானியாவின் உதவி தேவையாயிருந்தமையால் அதன் பகையைத் தேடிக் கொள் ளவும் பிரான்சு விரும்பவில்லை. எப்படியாயினும், கூட்டவை யின் ஏற்பாட்டிற்கிணங்க பிரான்சு தான் கொண்டிருந்த கடமைகளைப் பகிரங்கமாக நிராகரிக்க முடியாமலிருந்தது. எனி னும் இந்நிலைமை நுண்மையாகவும் கவனிக்கப்பட வேண்டிய தென, அந்நாளைய பிரான்சிய அமைச்சு அபிப்பிராயப்பட் டது. இத்தாலியைச் சமாதானப்படுத்தும் முறையில் மிதமிஞ் சிய முறைகளைக் கையாளாமலிருப்பதையும், பெரிய பிரித் தானியாவின் நல்லெண்ணத்தை இழக்காமலிருப்பதற்காகச் சிறிதளவேனும அதனுடன் ஒத்துழைப்பதையும் நோக்கமா கக்கொண்டு சிசில்லா, சாறி பிடிசு என்ற இரு பாறைகளுக் கிடைப்பட்ட கொந்தளிப்பான கடலில் பிரான்சு தனது அரசாகிய கலத்தைச் சூழ்ச்சித் திறத்துடன் செலுத்தியது. பெரிய பிரித் தானியாவுக்கும் பிரான்சுக்குமிடையில் மனப்பூர்வமான ஒத்து ழைப்பு இல்லாதிருந்தமை, வலுவந்த முறையிலல்லாது சமா தானத்தைக் காட்டும் முறையில் அமைந்த அரைகுறை நடவடிக் கைகளுக்கு ஒரு புறம் தலைக்கீடாகவும் மறுபுறம் அந்நடவடிக் கைகள் பொருத்தமானவை எனக் காட்டுவதாகவும் அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டவை வீழ்ச்சியின் படிப்பினை.

கூட்டேமம் என்ற தத்துவம், சாதகமான சூழ்நிலையில் முதன் முறையாக உண்மையான சோதனைக்குட்படுத்தப்பட்டது. அபிசீனியப்படை யெடுப்பானது, அவையின் ஏற்பாட்டைப் புறக் கணித்ததொரு கீழ்த்தரமான வலுவந்தச் செயலென்பதில் எவ ருக்கும் எவ்வித ஐயமும் இருந்ததில்லை. அதுவுமன்றி, இத் தாலியினது போரறைகூவலைக் கூட்டவை ஏற்றுக் கொண்டமை யினால், அது தன் உயரிய மேலாண்மையுரிமை தொடர்ந்து நிலைநிற்பதற்காகத் தவிர்க்க முடியாத அவசியமானதொரு நடவடிக்கையை மேற்கொண்ட தென்பது தெளிவாயிற்று. பொருளாதாரச் சட்டவனுமதிகளைப் பயன்படுத்த ஐம்பது நாடு கள் ஆதரவளித்தன; அவற்றுள் பெரும்பாலானவை படை சம்பந்தமான சட்டவனுமதிகளைப் பயன்படுத்தவும் அநேகமாக உடன்பட்டிருக்கும். எனினும், போர் ஒன்று ஏற்பட்டிருக்கு மாகில், இந்நாடுகளின் பரப்பளவையும் புவியியல் பற்றிய நிலைமையையும் பொறுத்தளவில், கூட்டவையில் உறுப்புரிமை பெற்ற நாடுகளிற் பல, சிறிதளவே உதவியிருந்திருக்கக் கூடும். மாபெரும் வல்லரசுகளில் ஒன்று (ஐக்கிய மாகாணங்கள்) ஒரு பொழுதேனும் அவையில் உறுப்புரிமை பெற்றிருக்கவில்லை; இரு நாடுகள் (யப்பானும் சேர்மனியும்) தங்களது உறுப் புரிமையை நீக்கிக் கொண்டன; மற்றொன்று, (இத்தாலி) தாக்கும் நாடாயிற்று. பெரிய பிரித்தானியாவும் பிரான்சுமே மீதியாயிருந்தன என்று சொல்ல வேண்டும்; ஏனெனில் இரசியா பயன்றரு முறையில் உதவியளிக்கும் நிலைமையிலிருக்க வில்லை. இங்ஙனமாக, போரினால் விளைந்த இக்கட்டுக்கள் எல்லா நாடுகளுக்கும் ஒரேயளவினவாயிருக்கவில்லை. கொள்கையளவில் கூட்டேமம் அனைவருக்கும் உரியதான கூட்டு நடவடிக்கையை வற்புறுத்தியதெனினும், செயலளவில் அது ஒரு சிலருடைய தியாகங்களையே பொறுத்திருந்தது. சரியெனத் தோன்றுகிற இத் தகைய ஒரு வாதம், கூட்டவையின் ஏற்பாடானது எந்தப் போலிப்பகட்டான வாதாட்டமும் மீற முடியாத பெருமிதமான ஒரு சருவதேசப் பொறுப்பென்பதும், போர் எழுந்தகாலை பெரிய வல்லரசுகள் சிறிய வல்லரசுகளினைத்தினதும் தார்மீகசக்திசம்பந்த மான உதவியையும் பொருள் உதவியையும் மிகப் பெரியனவாகக் கருது மென்பதுமான உண்மைகளைப் புறக்கணித்த நாடுகளால் ஒப்புக்கொள்ளப்பட்டமை இயற்கையே. இறுதியாக ஆராய்ந்து பார்க்கின், நிலப்பரப்பிலோ படைக்கலப் பெருக்கத்திலோ ஒரு நாடு பெரிதாயினும், சிறிதாயினும், அந்நாட்டின் பாதுகாப்பே எல்லா நாடுகளினதும் பாதுகாப்பாகவிருந்தது. இம்முதுமொழி யிலடங்கிய ஆழ்ந்த உண்மை தொடர்ச்சியாக நடந்த நிகழ்ச்சிகளி னால் விரைவிற் புலப்படலாயிற்று. குறுகிய மூன்றாண்டுக் காலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில், அவையில் உறுப்புரிமையுடைய ஏனைய நாடுகளான ஒசுற்றியாவும், செக்கோசிலவாக்கியாவும் தம்மைத் தாக்கியவருக்கு அடி பணிந்தன. செக்கோசிலவாக்கியாவின் பேராளர், தனது நாடு அடுத்த எத்தியோப்பியாவாகலாமென்று சொல்லிய வேதனைக்குரிய முன்னறிகூற்றின் பிரகாரமே, இப்பொழுது சம்பவங்கள் நடைபெற்றன. இத்தாலிக்கு விரோதமாகக் கூட்டவையெடுத்த போர் நடவடிக்கையில் அடங்கியிருந்த முக்கிய அம்சங்களை ஒருசிலரே யுணர்ந்திருந்தனர்; எனினும் அனைவருமே, தாங்கள் சருவதேச சமாதானத்தைக் கூட்டேமமென்ற நம்பிக்கையான பாறையின் மேற் கட்டியிருந்தனர் என்பது பொய்த்துவிட்டது எனக் கண்டு மனமுடைந்து, தற்பொழுது அது மணலின் மேற் கட்டப்பட்ட கோட்டையைவிட நொய்மையானது எனத் தெளிந்து, கூட்டவையின் வீழ்ச்சி புலப்படுத்தும் உண்மைகளை உணரக் கூடியவராயிருந்தனர். கூட்டவையின் வரலாற்றிலிருந்து நாம் முடிவாகக் கற்றுக்கொள்ளக் கூடிய படிப்பினை யாதெனில், நமது ஊழியின் ஒழுக்க முறை பற்றிய முன்னேற்றம் இவ்வூழியின் பொறித்துறை பற்றிய முன்னேற்றத்திற்கு மிகவும் பின் தங்கியுள்ளது என்பதாகும்.

(IV)

சோவியத்து இரசியா

புரட்சியின் காரணங்கள்.

இரசியப் புரட்சியின் அடிப்படைக் காரணங்கள் இரசியாவின் வரலாற்றில் ஆழ்ந்து கிடக்கின்றன. ஆசியச் சூழலிலிருந்து மெதுவாக வெளிவந்து கொண்டிருந்த ஒரு நாட்டில், அந்நாடு மேலைட்டுக் கருத்துக்களால் பாதிக்கப்பட்டதின் விளைவாகக் காலங்கடந்து வந்த ஓரியக்கம் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோற்றியது. பல ஆண்டுகளாய் அவ்வியக்கம் பின்பற்றுவோரதிகமின்றி, தலைவர்களை மட்டுமே கொண்டதாக இருந்தது. 1914–18 இல் நடந்த போரின் நேரடியான விளைவாகத்தான் புரட்சி உற்சாகம் பொதுமக்களின் குமுறலாக வளர்ந்து, இரசிய சமுதாயத்தை அடியோடு சீர்குலைத்தது; அரசாங்க அமைப்பை மட்டுமன்றி, அது சமுதாய ஒழுங்கையும் ஆட்டங்கண்டு வீழ்ச்சியுறச் செய்தது. இதன்பயனாய் இரு புரட்சிகள் ஏற்பட்டன என்பதை விட, இரு பருவங்களாக உருவாகிய ஒரே புரட்சியே அது என்பதே பொருத்தமாகும். அரசியற் புரட்சி அல்லது மாச்சுப் புரட்சி, 1917 ஆம் ஆண்டில், மாச்சுத் திங்களில் ஏற்பட்டு, தனியாட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது; சமூகப் புரட்சி அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவெம்பர் (போல்சிவிக்கு) புரட்சி, 1917 ஆம் ஆண்டில், நவெம்பர்[1] திங்களில் எற்பட்டு, தொழிலாளர்களின் முதலாவது குடியரசை உருவாக்கியது.

மாச்சுப் புரட்சி நன்கு ஏற்பாடு செய்யப்பட்ட சூழ்ச்சியின் விளைவன்று. புரட்சிக் கூட்டத்தினர்கூட அதற்குத் தயாராக இருக்கவில்லை யென்பதிலிருந்து அது திடீரெனக் கிளர்ந்த தொன்று என்பது தெரியவரும்; ஏனெனில் (நேரிற் கண்ட ஒருவர் எழுதியது போல்) "புத்தியற்ற கன்னிகைகள் போன்று புரட்சிக்காரர் உறங்கிக் கொண்டிருந்தனர்". உணவுக் குறை பாடுபற்றி மக்கள் கொண்டிருந்த அதிருத்தியே அதற்கு உட னடியான காரணமாய் அமைந்தது. உணவு வாங்குவதற்காக மக்கள் வரிசையாகக் காத்து நின்றமை, தொழினிறுத்தங் களுக்கும் குழப்பங்களுக்கும் காரணமாக இருந்தது; இவைகள் விரைவாக எதிர்பாராதமுறையில் போரையும் குடியாட்சியையும் எதிர்க்கும் கலகமாக மாறின; ஏனெனில் பொருளாதார இக் கட்டுக்களால் ஏற்பட்ட துன்பமானது சேர்மனிக்கும் ஒசுற்றிய-அங்கேரிக்கும் எதிராக நடந்த போரைத் திறம்பட நடத்தாமற் போன தனியாட்சியினரின் இயலாத் தன்மையினால் அதிகரித் தது. 1917 மாச்சு 8 ஆம் திகதியன்று பெற்றேகிராத்திலிருந்த நெசவாலைப் பெண் தொழிலாளர்கள் "உணவு வேண்டும்" என்ற கோரிக்கையுடன் தொழினிறுத்தம் செய்ய ஆரம்பித்தனர். மறு நாள் மற்றத் தொழிலாளர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். "அப்பம்" என்ற அவர்களுடைய கூக்குரலுடன் "போர் ஒழிக"! "தனியாட்சி ஒழிக"! என்ற பெருங் கூக்குரல்களும் கலந்து கொண்டன. மூன்றும் நாள் இத் திடீர்க்கிளர்ச்சி ஒரு பொதுத் தொழினிறுத்தமாக மாறி, புரட்சி கரமான தன்மைகளை வெளிப்படுத்துவதாயிருந்தது. நசுக் கப்பட்டிருந்தவர்கள் முன்வந்து வெளிப்படையாகத் தங்கள் உரிமைகளை வற்புறுத்துவதற்கான சந்தர்ப்பத்தை இப்போது பெற்றனர். படையினரின் போக்கினால் பொதுமக்கள் ஊக்கு விக்கப்பட்டு, தங்களை இப்புரட்சி பாதிக்காது என்ற நிலையை அவர்கள் அடைந்திருந்ததாகப் பொலிசு அறிக்கையொன்று கூறியது. தொடக்கத்திற் காவற்சேனை நடுநிலைமை வகித்தது; ஆனால் விரைவில் அது குழப்பக்காரருடன் சோதர மனப் பான்மை கொண்டு உறவாடத் தொடங்கியது. படையினரிற் சிலர்

மாச்சுப் புரட்சி.

---

[1]. பழைய இரசியப் பஞ்சாங்கம், சருவதேச (இக்கால இரசியாவினதும் உட்பட்ட) பஞ்சாங்கத்தினின்றும் பதின்மூன்று நாட்கள் பிற்பட்டதாயிருந்தது. முன்னைய பஞ்சாங்கத்தின் பிரகாரம் முதற் புரட்சி பெப்புருவரியிலும், இரண்டாவது புரட்சி ஒற்றேபரிலும் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளர்ச்சி செய்து, குழப்பக்காரர் பக்கம் பிரங்கமாகச் சேர்ந்து கொண்டனர். ஐந்து நாட்களுக்குப் பின்னர், (மார்ச்சு 15 இல்) பொங்கி யெழுந்த புரட்சி உச்சநிலையடைந்தது. சாரான இரண்டாம் நிக்கலசைத் தொல்லைகள் சூழ்ந்து கொண்டன. அவற்றில் அவன் மாட்டிக்கொண்டு தவித்தான். அவனுடைய இந்நிலைமைக்கு ஒருபுறம் அவனல் தவிர்க்கப்பட முடியாத சந்தர்ப்பங்களும், மறுபுறம் அவனது வலுவற்ற நிருவாகமுமே காரணங்களாகும். இதனல் அவன் சிம்மாசனத்தைத் துறந்தான்.[1] முடியாட்சி ஒழிக்கப்பட்டது; அதற்குப் பதிலாகத் தற்காலிகமான அரசாங்க மொன்று அமைக்கப்பட்டது. பிரான்சுப் புரட்சியில் பாரிசு எடுத்துக்கொண்ட பங்கை இரசியப் புரட்சியில் பெற்ரோகிராத்து எடுத்துக் கொண்டது. தலைநகரில் நடந்த சம்பவங்களால் உருவான நிலைமையை நாடு தடையெதுவுமின்றி ஏற்றுக்கொண்டது. இரசிய, பிரான்சுப் புரட்சிகளிடையே மற்ரொரு குறிப்பிடத்தக்க ஒற்றுமை உண்டு. அது யாதெனில், இரசியப் புரட்சியின்போது அதிகாரம் தொழிலாளர்களால் கைப்பற்றப்பட்டது. ஆனல் அவர்கள் உடனே அதை மத்திய வகுப்பாரிடம் ஒப்படைத்து விட்டனர். பிரான்சுப் புரட்சியின்போதோ இவ்வாறு நடைபெறவில்லை. இம்முரண்பட்ட செய்கைக்குச் சந்தேகத்துக் கிடமற்ற காரணமாயிருந்தது யாதெனில், தொழிலாளர் அதிகாரத்தைச் செலுத்தக்கூடிய அளவுக்கு வலுவுடையவர்களாகத் தங்களைக் கருதவில்லை என்ற உண்மையாகும்; போர்க்களத்திலுள்ள படையினரின் மனப்பாங்கு இன்னும் தெளிவில்லாதிருந்தது. "தூமா" எனும் பாராளுமன்றம் ஏற்படுத்திய அரசாங்கம், எதிர்ப்புரட்சி ஏற்படாதவாறு உறுதியீடு அளிக்கக் கூடியதாகத் தோன்றியது.

சோவியத்துக்கள்.

மார்ச்சுப் புரட்சியானது அதிகாரத்தை "மத்திய வகுப்பினரிடமிருந்து" பரந்த கொள்கை யுடையோர் வசம் ஒப்படைத்த போதிலும், நடுத்தர சமூகவுடைமைவாதிகளின் உதவியும் ஆதரவும் பெற்றே அவ்வதிகாரத்தை அவர்கள் பாதுகாத்துக் கொள்ளக் கூடியவர்களாயிருந்தனர். நாட்டின் அரசாங்கத்தைத் தொழிலாளர் தாங்களே நிருவகிக்காத போதிலும், உண்மையில் அவர்கள் தங்களுடைய சோவியத்துக்கள் மூலம் அதைக் கட்டுப்படுத்தி வந்தனர். இந்த "சோவியத்து" எனும் நிறுவகம், 1905 ஆம் ஆண்டுப் புரட்சியின்பாற்பட்ட நிகழ்ச்சியின் விளைவாகும். அப்போது பொதுத் தொழினிறுத்தம் செய்த தலைவர்கள் தொழிலாளர்களது பிரதி

[1] அவன் 1918 ஆம் ஆண்டு யூலைத் திங்களில் எற்பட்ட புரட்சியில் தன் குடும்பத்தவருடன் கொலை செய்யப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர்களைக் கொண்ட "சோவியத்து" என்ற குழுவை ஏற் படுத்தினர். மாச்சுப் புரட்சியால் ஏற்பட்ட சோவியத்துக்களில் படையினரதும், தொழிலாளரினதும் பிரதியாளர் இருந்தனர். கிளர்ச்சிக்காரருக்கு வெற்றி கிடைக்கும் வகையில் அவர்கள் "நலந்தரும் நடுநிலைமை" வகித்த காரணத்தால், அவர்கள் சோவியத்துக்களில் இடம் பெற்றனர். தற்காலிகமான அரசாங்க மிருந்தபொழுதே, சோவியத்து முறை யாட்சியும் ஏற்பட்டமை யால் அரசாங்கத்திடமிருந்த விசுவாசம் ஒரு மனப்பட்டதாயிருக்க வில்லை. அது, பதவி வகித்தோருக்கும் அதிகாரம் செலுத்தி யோருக்குமிடையே அழிவுக்குரியதொரு பிளவை உண்டு பண்ணி யது. அதன் விளைவாக நடுத்தர வகுப்பாரைக் கொண்ட அமைச்சின் அதிகாரம் ஆரம்பத்திலேயே வலு விழந்தது. அவ் வரசாங்கம் அதன் குறுகியதும் இழிவானதுமான காலம் முழு வதும் துன்பப்பட்டதோர் அரசாங்கமாகவே இருக்கலாயிற்று. எனினும் அது சாதித்த ஒரு சாதனை அதற்குப் பெருமை தருவதாயுள்ளது. இரசியப் பேரரசின் சுற்றெல்லைக்குள் வாழ்ந்த சகல இனத்தினருக்கும், நாட்டினருக்கும் சமத்துவம் அளித்தது. முக்கியமாக, யூதர்களுக்குப் பாதகமாயிருத்த அறு நூற்றுக்கும் அதிகமான சட்டக்கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்த தாகச் சொல்லப்படுகின்ற சட்டக் கோவையில் காணப்பட்ட குறை பாடுகளை அது நீக்கியது. ஆனால் தனியாட்சி எலவே வீழ்ச்சி யடைவதற்குக் காரணமான பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு காண அது தவறிவிட்டது; மேலும் சில மாதங்களுக்குள்ளா கவே, அதனையடுத்து வந்த மத்திய வகுப்பாரது ஆட்சியையும் அது அழித்தது. இந்தப் பிரச்சினைகள் எல்லாம் போர் சம்பந்த மான நடவடிக்கையையும், குடியானவர்கள் காணி வேண்டு மென்று விடுத்தகோரிக்கையையும், தொழிற்சாலைத் தொழிலாள ருடைய புரட்சி மனப்பான்மையையும் பற்றி எழுந்தனவாகும்.

போர்ப் பிரச்சினை.

1914–18 ஆம் ஆண்டுப் போர், அதிலீடுபட்ட மற்றெந்த நாட்டையும் விட இரசியாவுக்கே அதிக நட்டத்தை ஏற்படுத்திற்று. ஈட்டிகளினாலும் இயந்திரத் துப்பாக்கிகளினாலும் இறந்தவர்களை விட, நோயினால் அனேகர் இறந்தனர். போர்க்களத்தில் பெற்ற வெற்றிகள், போரில் ஏற்பட்ட கணக்கற்ற ஆட் சேதத்தை ஈடு செய்யவுமில்லை. அதற்கு மாறுகப் பல தோல்விகளையடைந் தது. எனெனில்—ஓர் இரசியப்படைத் தலைவன் ஒப்புக்கொண் டது போல்—"இக்காலத்திற்குத் தேவையான படைத் தொழி னுட்பம் எமது ஆற்றலுக்கப்பாற்பட்டது" ஆதலால் என்க. மேற் கத்திய நாடுகள் படை உபகரணங்களில் இரசியாவுக்கிருந்த குறை பாடுகளைச் சீர்ப்படுத்த உதவி செய்தன; ஆனால் போக்கு வரத்து முறைமையிலிருந்த குறைபாட்டால், போர்க்களத்தின் எல்லாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளுக்கும் ஆட்களுடன், போர்த் தளவாடங்கள், உணவுப் பொருள்கள் ஆகியன விரைவாக எடுத்துச் செல்லப்படுவதற்குத் தடையேற்பட்டது. இரசியா ஆட் பலத்திலும் இயற்கை வளத்திலும் எதிரியைவிடச் சிறந்து விளங்கியது. ஆனால் பொருளாதாரத் துறையில் இரசியா அடைந்திருந்த பிற்போக்கு நிலை அந்நாடு பெற்றிருந்த ஆட்பலத்தையும் பொருள்வளத்தையும் பயனற்றதாக்கிற்று. எனவே, போர் வீரர்கள் போரிடுவதிற் சலிப்புக்கொண்டதிலும் பெரும்பாலான வீரர்கள் போர்க்கடமைகளைக் கைவிட்டதிலும் "படைப்பகுதிகள் போர் செய்ய மறுத்ததிலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை." "இதற்குமேல் எவருமே போர் செய்ய விரும்பிற்றிலர்; அவர்கள் எல்லோரும் அமைதியொன்றைப் பற்றியே எண்ணினர்" என்று ஓர் அலுவலன் எழுதினன். இத்தகைய போக்கு, அக்காலத்து வரலாறுகளனைத்தும் சான்று பகருவன போன்று, புரட்சியின் விளைவாக ஏற்பட வில்லை; ஆனால் புரட்சியை விரைவு படுத்துவதாக அமைந்திருந்த "தூமா"ப் பாராளுமன்றத்துத் தலைவனது கூற்றுப்படி, "புரட்சிக்கு நெடு நாட்களுக்கு முன்னரே, படையின் இறுதி அழிவிற்கு அடிகோலப்பட்டது". அரசியற் புரட்சி ஏற்பட்டிராது போனாலுங்கூட ஒரு தனியான உடன்படிக்கை ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற இரசியர் பலருடைய கருத்துக்கு இவனது கூற்று ஆதரவளிக்கின்றது. ஆட்சி செய்து வந்த கூட்டத்தினர் வீழ்ச்சியுற்றமையால் தளர்ச்சியடைந்து வந்த நாட்டின ஆர்வம் சிறிது காலத்திற்குத் தூண்டிவிடப்பட்டது; புதிய உற்சாகத்துடன் தற்காலிக அரசாங்கம் போரைத் தொடர்ந்து மேற்கொண்டது.[1] இருந்த போதிலும் நாடுகளை வலிந்திணைக்கும் பூட்கைக் கெதிராகப் பலத்த எதிர்ப்பொன்றிருந்தது; கொன்சுதாந்திநோப்பிளை ஈட்டிக்கொள்வதை ஆதரித்த வெளி நாட்டு விவகார அமைச்சனை மிலியுக்கோவு பதவியிலிருந்து விலகுமாறு வற்புறுத்தப்பட்டான். மித சமவுடைமைவாதிகள் அமைச்சரவையில் இடம்பெற்றனர். அவ்வவை இப்போது (மே 1917) ஒரு கூட்டு அமைச்சரவையாயிற்று. கெரென்சுகி போர் அமைச்சனாக அமர்த்தப்பட்டான்; மறுபடியும் போரைத் தொடங்

---

[1]. 1917 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் வெளியான புகழ்பெற்ற முதலாவது உத்தரவின்படி, படையின் அலுவலர்களுக்கும் வீரர்களுக்கும் குழுக்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஆனால் வீரர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வதில் படையின் ஒழுங்குகளைக் கண்டிப்புடன் அனுட்டிக்க வேண்டுமென்றும் அவ்வுத்தரவு வற்புறுத்தியது. அதன் கருத்தாக்கள், அவ்வுத்தரவு பெற்றேகிராத்து காவற்படைக்கு மட்டுமே உரியதெனக் கூறினர்; (A. F. Kerensky, "The Catastrophe") ஆனால் எவுநர் முதல்வன் "அது படையினரின் சவப்பெட்டியில் அறையப்பட்ட கடைசி ஆணி" என அபிப்பிராயப்பட்டான். (P. Miliukov, "Bolshevism").

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தாக்குதல் செய்யுமாறு வீரர்களைத் தூண்டுவதற்காக அவன் போர் முன்னணிக்குச் சென்றான். அத்தாக்குதல் யூலையில் திரும்பவும் தொடங்கப்பட்டது; ஆனால் அது படுதோல்வியடைந்தது; இதனால் கெரென்சுகியின் தலைமையில் அரசாங்கம் பெற்றிருந்த புகழ் அழிந்தது; மேலும் இதனால் புரட்சியின் இரண்டாவது கட்டம் தொடங்கிற்று. போர் தொடங்குவதை மக்கள் எதிர்த்தனர். போல்சிவிக்குகள் சமாதானத்தை ஆதரித்தமையினால் அவர்களுடைய திறமையான பிரசாரம் விரைவில் பெறவிருந்த வெற்றிக்கு ஓர் இன்றியமையாத காரணமாக வமைந்தது. அத்துடன் மக்களின் கவனத்தை அதிகம் ஈர்க்கின்ற மற்றொரு காரணியும் சேர்ந்து கொண்டது. அதுதான் உழவர்களுக்குக் காணி வழங்கும் கொள்கையைப் போல்சிவிக்குகள் ஏற்றுக்கொண்டமையாகும்.

காணிப் பிரச்சினை.

விடுதலை ஏற்பாட்டினால் அடிமைத்தனத்தினின்று குடியானவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் நிலக்கிழார் தங்கள் பண்ணையாட்களை இழந்ததற்காக அவர்களுக்கு நட்டஈடு அளிக்க வேண்டுமென்று அவ்வேற்பாடு கூறிற்று. இவ்வித விடுதலை ஏற்பாட்டின் வாசகங்கள் எவ்வாறு தமக்கு அநீதி இழைத்தன என்பதை இரசியக் குடியானவர்கள் உணர்ந்திருந்தார்கள் என்பது பற்றி முன்னொரு அத்தியாயத்தில் நாம் கூறியுள்ளோம். 18 ஆம் நூற்றாண்டில் நிலக்கிழார் தங்களுடைய படை சம்பந்தமான கடமைகளினின்றும் விடுதலை பெற்றபோதே, நிலத்தை உழுது வந்த உழவர்கள் தாங்களும் நிலவுடைமையாளருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளினின்றும் விடுதலை பெற்றுவிட்டதாகக் கூறினார்கள். ஆதலால் வேலைப் பளுவிற்குப் பதில் வரிப்பளுவை அவர்கள் மேற் சுமத்தியமையை, அவர்களுக்கிடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மீறுவதாகும் என்பதனால் அவ்வுழவர்கள் எதிர்த்தனர். "மீட்புப் பணங்கள்" என்று வழங்கப்பட்ட இத்தகைய வரி, 1907 ஆம் ஆண்டுவரை பெறப்பட்டது. மேலும் முன்னர் குடியானவர்களிடம் இருந்ததை விட இப்போது அநேகமாகக் குறைந்த அளவு நிலத்துக்கே அவர்கள் உரிமை பெற்றிருந்தனர். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பரப்பிற் சிறிய அளவான விளைநிலங்கள் தம்தம் அவல நிலைக்குக் காரணம் என அவர்கள் கூறினர். அவர்கள் தாம் பெற்ற நிலத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்த முடியாமற் போனமையினால் அவர்களது நிலைமை இன்னும் மோசமாகியது. இரசிய வேளாண்மை முறை பிற்போக்கானதாயிருந்தது; அன்றியும் ஆழ உழுது பயிர் செய்யும் வழிமுறைகளைப் பின்பற்றி அதிகமான விளைவைப் பெறுதற்கு வேண்டிய மூலதனமும் தொழில் நுட்ப அறிவும் அக்குடியானவர்கள் பெற்றிருக்கவில்லை. நில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுடைமை முறையின் விளைவாகத் தனிப்பட்டோருடைய முயற்சிக் கான வாய்ப்புக்களும் மட்டுப்படுத்தப்பட்டன. அன்றியும் நில வுரிமை "மிர்" என வழங்கப்பட்ட கிராம சமூகத்தினருடைய தாயிருந்தது. பிரிக்கப்படாத காணிச்சொத்துக்கள் துண்டு நிலங் களாகப் பிரிக்கப்பட்டிருந்தமையினாலும், முழுச் சொத்துக்களும் சம்பந்தப்பட்ட கருமங்களில் விவசாயக் குடும்பமே அதன் அங் கத்தினர்களின் சட்ட முறைமையான பிரதிநிதி என்ற நிலையேற்பட்டிருந்தமையினாலும் தனிப்பட்டோருடைய முயற்சி கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.[1] இருந்தபோதிலும், தங்களுடைய இக்கட்டுக்களுக் கெல்லாம் குறைந்த அளவில் நிலம் வழங்கப் பட்டிருப்பதே அடிப்படைக் காரணம் என்று குடியானவர்கள் எண்ணினர்; தங்கள் கைக்கெட்டுமாப் போன்றிருந்த பழுத்த பழத்தைப்போன்று தங்களுக்குக் கிடைக்க விருந்த பெரிய நிலக் கிழாரின் நிலங்களை, அவர்கள் பேரவாவுடன் நோக்கினர். புரட்சிக்கு நெடுநாட்களுக்கு முன்னரே நிலத்தைப் புதிய முறை யிற் பகிர்ந்து கொடுக்க வேண்டுமெனக் கோரினர்; அதன் விளைவாக ஏற்பட்டதே "கோட்பாடற்றதும் மறைவானதுமான சம வுடைமையாகும்." பேரவாக் கொண்ட குடியானவர்களின் ஆவலை நிறைவேற்றுவதற்காக, 1906 இல் இயற்றப்பட்ட சுடோ லிப்பினுடைய சீர்திருத்தத்தின்படி, சமுதாயத்திற்குப் பொது வாயிருந்த நிலத்தில் அக்குடியானவர்கள் தங்களுக்குரிய பங் கைச் சமுதாயக் கட்டுப்பாட்டினின்றும் நீக்கி, தனிப்பட்டவரு டைய உரிமைச் சொத்தாக்கிக் கொள்வதற்கு உரிமை கொடுக் கப்பட்டது; இதுவிடயமாய், எந்தவொரு கிராமச் சமுதாயத் தைச் சேர்ந்த சிறுபான்மையினரான குடியானவருக்கும் உரிமை கிடைத்தது. சுதந்திரமாகச் சொந்த நிலங்கள் வைத்திருந்தவர்களிடமிருந்து அந்த நிலச் சொத்துக்களை விலை க்கு வாங்கக் கூடிய முதலாளிகளான குடியானவர்களைக் கொண்ட ஒரு வகுப்பினரைச் சாதாரணக் குடியானவர்களிடையே தோற் றுவித்து அவ்வகுப்பினரை விருத்தியடையச் செய்ய வேண்டு மென்பதே இந்தச் சட்டத்தின் நோக்கமாகும். ஆனால் இதற்கு மாறுக அது வேறொரு விளைவை ஏற்படுத்தியது; எவ்வா றெனில் அது கிராமப்பகுதியிலுள்ள முதலாளி வகுப்பின ரைவிட தங்கள் நிலத்தை விற்றுவிட்டிருந்த தொழிலாளர் எனும் மற்றொரு வகுப்பினரை ஏற்படுத்தியது; மனநிறை

---

[1] குடியானவர்களிற் பெரும்பாலோர் பொதுவுடைமை முறையின் கீழ் வாழ்ந்தனர். விடுதலைச் சட்டத்தின்படி பங்கீடுசெய்யப்பட்ட நிலத்திற் பங்கொன்று பெறுவதற்கான உரிமை குடும்பத்திற்கே வழங்கப்பட்டிருந்தது; "தனக்குச் சொந்தமென்று ஓர் ஆண்மகன் கொள்ளக்கூடிய சொத்து எதுவும் இருக்கவில்லை". **M. T. Florinsky, "The End of the Russian Empire".**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின்மையைக் காட்டும் நிலைக்களமாக இக்கிராமத் தொழிலாளி வகுப்பினர் அமைந்தனர். நிலையூன்றிய பற்றுக்களின் நல உரிமைக்குக் காவலாக விளங்கிய முடியாட்சி வீழ்ச்சியடைந்தபோது இவ்வகுப்பினருக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

விவசாயிகளின் பயங்கர நடவடிக்கை.

ஒரு புரட்சி இயக்கத்தில், பொதுமக்களின் கிளர்ச்சியால் தூண்டப்பட்ட அனைவரும் தத்தம் ஆவல்கள், அவாக்கள் ஆகிய வற்றினடிப்படையைக் கொண்டே அவ்வியக்க நிகழ்ச்சிகளின் போக்கைப் புரிந்து கொள்வர். இரசியப் புரட்சியானது படை வீரர்களுக்குச் சமாதானத்தைக் குறிப்பதாக விளங்கியது; நகர்ப் புறத் தொழிலாளர்களுக்கு அப்புரட்சி முதலாளித்துவத்தின் அழிவைக் குறிக்கவில்லையாயினும், அதனைக் கட்டுப்படுத்துவதை யாவது குறிப்பதாயிற்று; குடியானவர்களுக்கோ அது நிலத்தை யொட்டிய பிரச்சினையைக் குறிப்பதாயிற்று. இவ்வாறு எதிர் பார்த்திருந்தவர்களுக்கெல்லாம் நடுத்தர வகுப்பினரின் அரசாங் கம் ஏமாற்றமளித்தது. சமாதானம் செய்யத் தூண்டுவதற்குப் பதிலாக, அது மீண்டும் தாக்குமாறு உத்தரவிட்டது; சமவுடைமை யுடனல்லாது அது முதலாளித்துவ வலுக்களுடன் கூட்டுச்சேர்ந் தது; குடியானவர்களுக்கு நிலங்களை வழங்குவதற்குப் பதிலாக, அது அவ்வாறு வழங்குவதைத் தாமதப்படுத்தும் பூட்கை யொன்றைப் பின்பற்றியது. குடியானவர்கள் அதிக துணி வுடன் வலுவந்தமான கருமங்களைத் தாங்களே செய்யத் தொடங் கினர்; அவர்கள் சில சமயங்களில் நிலக்கிழார்களுடைய நிலங் களைத் தாமே பறித்துக் கொண்டனர்; பண்ணை வீடுகளைத் தீக் கிரையாக்கினர்; நிலவுடைமையாளரையும் நில மேற்பார்வையா ளரையும் கொலை செய்யவுந் துணிந்தனர். போல்சிவிக்குத் தலைவன் ஒருவன் கூறியது போன்று குடியானவர்கள், "புரட் சிக் காலத்துக் காட்டுமிராண்டித்தனத்தைக்கொண்டு" "மத் திய காலத்துக் காட்டுமிராண்டித்தனத்தை" ஒழித்துக் கட்டினர். விவசாயிகள் உண்டுபண்ணிய திகில், இரசியா முழுவதும் ஓர் உறுதியற்ற நிலையை உண்டுபண்ணி, மற்றும் காரணிகளுடன் சேர்ந்து அரசாங்கத்தைப் பற்றி நிலவி வந்த அவநம்பிக்கையை மேலும் அதிகப்படுத்திற்று. தாம் கோரியபடி நிலத்தையொட்டிய பிரச்சினையை மாச்சுப் புரட்சியால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கம் தீர்க்கும் என்ற நம்பிக்கையை இரசியக் குடியானவர்கள் இழந் தனர். இதனால் போல்சிவிக்கு ஆதரவாளர் தமது வஞ்சகமான பிரசாரத்தைத் தொடங்குவதற்கான அடிப்படையை அமைத் துக் கொண்டனர். நிலம் பெறுவதற்காக, தொழிற்சாலைத் தொழிலாளர்களுடன் குடியானவர்கள் ஒன்றுசேர்ந்து, நடுத்தர வகுப்பினருடைய ஆட்சியைக் கவிழ்ப்பதில் ஒத்துழைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டாளியர் பிரச்சினை.

1905 ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தொழினிறுத்தத்தின் மூலம் ஏலவே வெளிப்படுத்தப்பட்டிருந்த நகரத் தொழிலாளர்களுடைய புரட்சி மனப்பான்மைக்குக் காரணம், பாட்டாளியருடைய தோற்றமும், தொழிற்சாலைத் தொழிலமைப்பின்[1] தன்மையுமேயாம் என்று ஓர் இரசிய எழுத்தாளன் கூறுகின்றான். பாட்டாளியருடைய தோற்றம் படிப்படியான மலர்ச்சியின் விளைவன்று. பிறநாட்டு மூலதனத்தைக் கொண்டு தொழில்கள் துரிதமாக முன்னேறியமையால் கிராமப் பகுதிகளில் வாழ்ந்த மக்களே தொழில்களை நடத்துவதற்காக வேலைக்கமர்த்தப்பட்டனர்; நிலத்துடன் தொழிற்சாலைக்கிருந்த "இணைப்பு", கிராமங்களில் அடிக்கடி தொழில் இயக்குநரின் குடும்பங்கள் தங்கியிருந்தமையினால் புலனாகின்றது. ஆதலால் இங்கிலாந்திலிருந்ததைப்போல் இரசியாவிலும் பாட்டாளியர் மத்தியகாலப் பயிற்சித் தொழிலாளர்களுக்கிருந்த சமூகக் கட்டுப்பாட்டிற்குட்பட்டிருக்கவில்லை; அன்றியும், மத்தியகாலத் தொழிற்சங்கங்களுக்குரிய உறுதிவாய்ந்த பாரம்பரியங்களை மரபுரிமையாக அவர்கள் பெற்றிருக்கவுமில்லை. "தொழிலாளி வகுப்பினர் கலப்பையினின்றுந் தூக்கப்பட்டுத் தொழிற்சாலைக் கொப்பரைக்குள் எறியப்பட்டனர்"; இரசியத் தொழிலாளர் நிலத்தினின்று திடீரெனப் பிரிக்கப்பட்டமை, கல்வியறிவுடைய வகுப்பினரினின்று பிரிந்து தனித்திருந்தமை ஆகிய இரண்டும் சேர்ந்து அவர்களைப் "புரட்சி எண்ணத்துக்கு ஆதரவு காட்டும் பண்புடையவராக்க" உதவின. அவர்கள் "புரட்சிகரமான புதுமைக் கருத்துடையவராயிருந்தமைக்கும்" தொழிலாளருடைய முதலாவது குடியரசை உருவாக்கும் திறனுடையவராய் இருந்தமைக்கும் அது விளக்கம் தந்தது; இருந்தும் இத்தகைமைகளால் படிப்பின்மை, பிற்போக்குத் தன்மை, ஒழுங்கமைப்புப் பழக்கமின்மை, தொழில் பற்றிய முறைமையின்மை, கலாசார தொழினுட்பக் கல்வியின்மை ஆகியவற்றால் ஏற்பட்ட குறைகளை ஈடு செய்ய முடியாது போயின. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வட இங்கிலாந்தில் தோறறத்திலும், நோக்கத்திலும் இவ்வகுப்பினரை ஒத்திருந்த ஒரு வகுப்பினர் காணப்பட்டனர்; இவர்களே போரார்வமுடைய மக்களரிமைப் பட்டய இயக்கத்திற்கு முதுகெலும்பாக அமைந்தனர். மேலும், "இரசியக் கைத்தொழில் அதன் தொழிற்றுறைப் பண்பிலும் முதலாளித்துவ அமைப்பிலும் முன்னேற்றமடைந்த நாடுகளின் நிலைக்குச் சமமாக மட்டுமன்றி, சில அம்சங்களில் அந்த நாடுகளை விட மேம்பட்டுமிருந்தது. நூற்றுக்குக் குறைந்த தொழிலாளர்களைக் கொண்ட சிறிய தொழிற்

1 L. Trotsky, "The History of the Russian Revolution" (translated by M. Eastman).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகள், (1914 இல்) அமெரிக்க ஐக்கிய நாடுகளிலே தொழிற் சாலை வேலையாளர்களில் 35 சத விகிதத்தினருக்கும், இரசியாவிலே 17·8 சத விகிதத்தினருக்கும் மட்டுமே வேலை கொடுத்தன. நூறிலிருந்து ஆயிரம் தொழிலாளர் வரையுள்ள தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்பட்டோரின் சத விகிதம் சற்றேறக்குறைய இதனையே ஒத்திருந்தது. ஆனால் ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்களைக் கொண்ட மாபெரும் தொழிற் சாலைகள் ஒவ்வொன்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலே தொழிலாளர்களில் 17·8 சத விகிதத்தினரையும், இரசியாவிலே 41·4 சத விகிதத்தினரையும் வேலைக்கமர்த்திக் கொண்டன. தொழிற்றுறை அளவுகடந்து ஒருமுகப்படுத்தப் பட்டமையினால், முதலாளிகளுக்கும் சாதாரண மக்களுக்குமிடையே நடுத்தர வகுப்பென எதுவுமில்லாது போய்விட்டது[1].

போல்சிவிக்குகள்.

இரசியச் சமுதாயத்தைப் பற்றிய இந்த ஆராய்ச்சி, ஒரு சமூகப் புரட்சிக்குத் தேவையான அம்சங்களையெல்லாம் அச் சமுதாயம் தன்னகத்தே கொண்டிருந்த தென்பதை எடுத்துக் காட்டுவதாயுள்ளது; போரில் சலிப்புற்ற படைவீரர்கள், கூப்பாடு போட்ட குடியானவர்கள், தங்கள் அடிமைத் தளைகளை விட இழப்பதற்கு வேறென்றுமில்லை என உணர்ந்த பாட்டாளிகள் ஆகியோரே அச்சமுதாயத்திற்குரிய கருப்பொருள்களாவர். இந்த ஒழுங்கற்ற கருப்பொருள்களான வகுப்பினரை ஒன்று சேர்த்து, அவர்களைத் தொழிலாளர் குடியரசொன்றை நிறுவுதற்குரிய கருவியாக்குவதை—கோட்பாட்டு வெறியெனும் எரியில் புடமிட்டு உருவாக்குவதை—போல்சிவிக்குக் கட்சி தனது கடமையாக ஏற்றுக்கொண்டது. மென்சிவிக்குகளிடமிருந்து போல்சிவிக்குகள் பிரிந்து விட்டனர். முன்னையவர் நடுத்தரமான கொள்கையைப் பின்பற்றும் சமவுடைமை வாதிகள்; அவர்கள், மக்களரிமை ஆட்சியொன்றை ஏற்படுத்துவதற்கு மத்திய வகுப்பினருடன் தொழிலாளி வகுப்பினரும்

---

[1]. Trotsky, op. cit. "இரசியப் பேரரசின் முடிவு" எனும் நூலில் M. T. Florinsky கொடுத்துள்ள புள்ளி விவரங்களின்படி, கைத்தொழில் சம்பந்தப்பட்ட நிலையங்கள் 25 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்தன—5 சத விகிதத் தொழில்நிலையங்கள் (ஒவ்வொன்றும் 500 தொழிலாளர்களுக்கும் அதிகமானவர்களைக் கொண்டது) அரைப் பங்குக்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்தன; 15 சத விகிதத் தொழில்நிலையங்கள் (ஒவ்வொன்றிலும் 101 முதல் 500 தொழிலாளர்கள் வரையிருந்தனர்) கால்பங்குக்கும் அதிகமானவர்களை வேலைக்கு அமர்த்தின; 80 சத விகிதத் தொழில்நிலையங்கள் (ஒவ்வொன்றிலும் 1 முதல் 100 தொழிலாளர்கள் வரையிருந்தனர்) ஐந்தில் ஒரு பங்குக்கும் குறைவாக ஆட்களை வேலைக்கமர்த்திக்கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுசேர வேண்டும் என்ற கொள்கை யுடையோர்; தனியாட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட மத்திய வகுப்பினருடைய ஆட்சியை அவர்கள் ஆதரித்தனர். போல்சிவிக்குகளோ மத்திய வகுப்பாருடன் இணக்கங்கொள்வதை எதிர்ப்பவர்களாவர்; மத்திய வகுப்பார் பின்பற்றிய பொருளாதார, சமுதாய அமைப்பு முறையை அவர்கள் முற்றுக ஒதுக்கித் தள்ளியவர்கள். அவர்கள், "தொழிலாளி வகுப்பினருடையவும், குடியான வகுப்பினருடையவும் வல்லாட்சியின்" அடிப்படையில் தொழிலாளர் குடியரசொன்றை ஏற்படுத்துவதற்காக ஏழைக் குடியானவர்களுடன் தொழிலாளி வகுப்பினரும் ஒன்றுசேர வேண்டுமெனப் பரிந்து பேசினர். மாச்சுப் புரட்சி தொடங்கியபோது, போல்சிவிக்குக் கட்சியின் தலைவனாகிய விளாடிமீர் இலெனின், சுவிற்சலாந்திலிருந்தான்; அவன் இரசியாவில் இல்லாத காலத்தில் அங்கிருந்த போல்சிவிக்குத் தலைவர்கள் தாம் மிதமிஞ்சிய கொள்கைகளை யுடையோரல்லரெனக் காட்டிக்கொண்டனர். "முதலாளிகளுடைய ஆட்சியின் வீழ்ச்சி பற்றி எமக்கு அக்கறையில்லை; ஆனால் தனி ஆட்சி, நிலமானிய முறை ஆட்சி ஆகியவை வீழ்ச்சியுற வேண்டும்" என அவர்களுடைய செய்தித்தாள் வெளியிட்டது. அதாவது சார், நிலக்கிழார் ஆகியோருடைய ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்பதாகும். இரகசியமாகப் புகைவண்டியில் சேர்மனி முழுதும் பிரயாணஞ் செய்தபின், 1917 ஏப்பிரிலில் இலெனின் இரசியா வந்தபோது நிலைமை மாறுதலடைந்தது; இரசிய சாரினுடைய ஆட்சியினால் ஏற்பட்ட பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அப்போது அருகிப்போய் விட்டன. தலைநகரின் சூழ்நிலை மேன்மேலும் நெருக்கடியானதாயிற்று; நெருங்கிக் கொண்டிருந்த புயலின் அறிகுறிகள் யாவும் அடிவானத்தை இருளச் செய்தன. "இலெனின் உலக வரலாற்றில் மிக்க புரட்சிகரமான கொள்கைகளை யுடைய கட்சியின் இணையில்லாத் தலைவனனான்; ஏனெனில் அவனது எண்ணமும் மன உறுதியும், நாட்டிலும் அவன் வாழ்ந்த ஊழியிலும் மாபெரும் புரட்சி ஏற்படுவதற்குத் தேவையான வாய்ப்புக்களை உண்டு பண்ணக் கூடியனவாக இருந்தன" என்று இலெனினைப் பற்றி திராட்சுகி கூறிப்போந்தான். "தனிமனிதனுடைய ஆளுமையின் ஆற்றல் இங்கு பெரும் அளவில் நம்முன் தோற்றுகின்றது. அந்தப் பங்கைச் சரியாக மதிப்பிட்டுணர்வது அவசியம்; அதில் தனி மனிதனைச் சரித்திரத் தொடர்பிலுள்ள ஓர் இணைப்பு எனக் கொள்ளவேண்டும்" என்று அவன் மேலும் கூறினான். அதனை வேறுவிதமாகக் கூறின், "இலெனின் இன்றேல், போல்சிவிக்குக் கட்சி அனேக ஆண்டுகளாகப் புரட்சிக்கான வாய்ப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலெனின் (1870-1924)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நழுவ விட்டிருக்கும்". மனிதனும், சந்தர்ப்பமும் ஏககாலத்தில் தொழிற்பட்டமை இரசியாவின் ஊழ்ப்பயன் என்க.

இலெனினின் தளராத உறுதியுடன் தனது கருத்துக்களை விரைவில் வெளியிட்டான். "பாராளுமன்ற முறைக் குடியரசு எமக்குத் தேவையில்லை. மத்திய வகுப்பாருடைய குடியாட்சியும் எமக்கு அவசியமன்று. தொழிலாளர்கள், படைவீரர்கள், உழவர்கள் ஆகியோருடைய பிரதியாளரடங்கிய சோவியத்துக் குடியரசு தவிர வேறு எவ்வித அரசாங்கமும் எமக்கு வேண்டாம்" என அவன் கூறினான். புரட்சியின் முதற் கட்டத்தில் மத்திய வகுப்பினர் அதிகாரம் பெற்றிருந்தனர்; ஆகையால் பாட்டாளியருக்கும் ஏழைக் குடியானவருக்கும் அதிகாரத்தைக் கட்டாயம் கொடுக்கவேண்டிய இரண்டாவது கட்டத்திற்கு உடனே தயார் செய்யப்படுவது அவசியமாயிற்று. "மத்திய வகுப்பினரைக் கொண்ட குடியாட்சிப் புரட்சி, நிலக்கிழார்களுடைய நிலமும் முதலாளிகளுடைய பணமும் பறிமுதல் செய்யப்பட வேண்டிய ஒரு 'சமவுடைமைப் புரட்சியாக' மாற்றப்பட வேண்டும்." இலெனினுடைய காலத்திலிருந்த எழுத்தாளன் ஒருவன் எழுதியதுபோன்று, அவ்வமயம் இலெனினுடைய திட்டம் "நகைப்பிற்கிடமானதாகவும் நம்பத்தகாததாகவும் காணப்பட்டது." அத்திட்டத்திற்கு அவனது சொந்தக் கட்சியிலுள்ள மற்றத் தலைவர்களிடையே போதுமான ஆதரவு கிடையாது போயிற்று. மாக்சு என்பான் வரலாற்றுக்குக் கொடுக்கும் விளக்கத்தால் தூண்டப்பெற்ற அத்தலைவர்களுடைய சிந்தனைகளில், சமுதாய வளர்ச்சி நோக்கி, பொருளாதார, அரசியல் துறைகளில் உறுதியாகப் பின்தொடரக்கூடிய விளைவுகள் இடம் பெற்றன. நிலமானியமுறைச் சமுதாயத்திலிருந்து சமவுடைமைச் சமுதாயமாகவும், தனியாட்சியினின்று பாட்டாளியருடைய சருவாதிகாரமாகவும் திடீர் மாற்றம் ஏற்பட வேண்டுமென்ற இலெனினுடைய பிரேரணையால் ஒரேயடியில் முதலாளித்துவ முறை, குடியாட்சிமுறை ஆகிய இரு வரலாற்று முறைமைகளும் அகற்றப்பட்டன; அவனைப் பின்பற்றியவர்கள் அத்திடீர் மாற்றமானது ஆழமறியாது காலை விடுவதாகும் எனக் கருதினர். என்றாலும் நிகழ்ச்சிகளின் போக்கு தடுக்க முடியாத வேகத்துடன் முன் கூட்டியே விதிக்கப்பட்ட திசையில் சென்றது; அவ் வேகத்தின் போக்கில் போல்சிவிக்குகள் சென்றுகொண்டிருந்தனர். நிலம், சமாதானம் ஆகிய அக்காலத்திய இரு முக்கிய பிரச்சினைகள் பற்றி போல்சிவிக்குகள் மாத்திரமே நுட்பத்துடனும் தெளிவுடனும் தங்களது பூட்கையை வரையறுத்துக் கூறினர். "குடியானவர்களுக்கு உடனே நிலம் கொடுக்கப்பட வேண்டும்

இலெனினின் கருத்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை நாம் ஆதரிக்கின்றோம்" என்று இலெனின் கூறினான்; அத்துடன் தானே போரை நிறுத்துவதாக வாக்குறுதியுஞ் செய்தான். பெரும்பாலோர் பயிர்த்தொழிலாளராகவுள்ள ஒரு நாட்டில், குடியானவர்களின் மனப்போக்கே புரட்சியின் நியதியை நிர்ணயித்து, இறுதித் தீர்ப்புக் கூறுவதாக இருந்தது; புரட்சியின் சிக்கலான பகுதி விவசாயப் பிரச்சினைதான் என்பதைப் போல்சிவிக்குகள் புரிந்து கொண்டமையே அவர்களுடைய வெற்றிக்கு முக்கிய காரணமாகும். நடுத்தர வகுப்பினர் நிலப்பிரச்சினையை வெற்றியுடன் சமாளித்திருப்பார்களானால், 1917 இல் பாட்டாளியர் அதிகாரத்திற்கு வந்திருக்க மாட்டார்கள் என்ற கருத்தைப் போல்சிவிக்குகளின் தலைவர்களுள் ஒருவன் அழுத்தமாகச் சொல்லியிருக்கின்றான். அதே போன்று மத்திய வகுப்பினருடைய எதிர்ப்பைக் குடியானவர்கள் தனிமையாக மடக்குவதற்கு வலுவற்றவர்களாயிருந்திருப்பர் என்பதும் உண்மையே. போல்சிவிக்குகள் மத்திய வகுப்பினருக்கு எதிராகக் குடியானவர்களையும் பாட்டாளியரையும் கொண்ட ஒரு பொது முன்னணியை அமைத்தனர். அத்தருணத்துக்காக உருவாக்கப்பட்ட இந்த ஐக்கியம்–இது தற்காலிக நலனை அடிப்படையாகக் கொண்டிருந்தது–கிராமப் பகுதி மக்களுக்கு நிலம் வழங்குவது, நகரப் பகுதித் தொழிலாளர்களுக்கு அரசியல் அதிகாரத்தைக் கொடுப்பது ஆகிய தனது இரு நோக்கங்களையும் நிறைவேற்றி வைத்தது. இரசிய பிரான்சியப் புரட்சிகளுக்கிடையேயுள்ள குறிப்பிடத்தக்க வேற்றுமையை இது நன்கு விளக்குவதாகும். பிரான்சில் குடியானவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் மத்திய வகுப்பினர் தமது செல்வாக்கைத் தொடர்ந்து செலுத்துவதை உறுதிப்படுத்தினர். இவ்வாறுகக் குடியானவர்கள் சமூக அமைப்பிலும், அரசியல் அமைப்பிலும் சிறிதும் மாறுதலை விரும்பாதவர்களாக்கப்பட்டனர். இரசியாவிற் பழைய முறை முற்றுக அழிந்து போவதினின்றும் காப்பாற்றியிருக்கக்கூடிய வாய்ப்புக்களைப் பின்போடும் அளவுக்கு நிலக்கிழார்களுடைய செல்வாக்கு வலிமையுடையதாய் இருந்தது. புரட்சியின் அடிப்படையை விரிவாக்கவும், தொழிற்சாலைத் தொழிலாளர்களுடன் நடத்தப்பெறும் போராட்டத்தில் பாட்டாளியருடைய உதவியைப் பெறவும் இரசிய மத்திய வகுப்பினர் விருப்பமின்றியிருந்தனர். அதன் தர்க்கரீதியான விளைவாக ஏற்பட்டதே, பாட்டாளியருடைய சருவாதிகாரம் என்க. பண்டைக்கால அரசாங்கம் பற்றியெழுந்த "பிரித்தாள" வேண்டுமென்ற கொள்கை சம்பந்தமான முதுமொழி அரசியல் அனுபவமின்மை காரணமாக நன்கு உணரப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல்சிவிக்குக் கட்சியின முக்கியத்துவத்தை அதற்கிருந்த வசதியீனங்களைக் கொண்டு மதிப்பிட்டவர்களுக்கு, மத்திய வகுப்பாரின் ஆட்சியானது அதன் எதிரிகளுக்கு எளிதாக அடி பணிந்தமை ஆச்சரியத்தை விளைத்தது. அதன் முக்கியமான செய்தித் தாளின் விற்பனை குறைவாயிருந்தது; அக்கட் சிக்கான நிதி சிறிதளவினதாகவேயிருந்தது; கற்றறிந்தோர் அனேகர் அக்கட்சியைச் சேரவில்லை. இந்தக் குறைபாடுகள் யாவும் திறமையான பிரசாரத்தினால் நன்கு ஈடுசெய்யப்பட்டன; எனெனில் "சமாதானம், நிலம், உணவு" என்ற அக்கட்சி யின் போர்க்குரல், பொதுமக்களது கோரிக்கைகளின் உட் கிடையை எடுத்துக் காட்டிற்று. தங்களுடைய அரசியற் கருத்துக் களைப் பரப்புவதில் போல்சிவிக்கு ஆதரவாளர்கள் அளவிலா ஊக்கம் காட்டினர். "அவர்கள் ஆர்வத்துடன் இடைவிடாது உழைத்தார்கள்; அவர்கள் மக்கள் மத்தியிலும் தொழிற் சாலைகளிலும் எந்நாளும், எந்நேரமும் காணப்பட்டார்கள்" என்று மென்சிவிக்குகளின் எதிரியொருவன் எழுதினன். அனைத் துக்கும் மேலாக, போல்சிவிக்குகள் தமக்கு எது வேண்டும் என்பதைத் தெரிந்திருந்தனர். "அவர்கள் எங்கு சென்று கொண்டிருந்தார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்; முடி வாகத் தெரிந்துகொண்ட திசையை நோக்கியே அவர்கள் சென் றார்கள்" என்று மிலியுக்கோவு கூறினன். போல்சிவிக்குகள் முன்னேறிக் கொண்டிருந்தகாலை, யாப்புறு முறைப்படி அதி காரம் பெற்றிருந்தவர்கள் நிச்சயமாகப் பின்தங்கிக் கிடந் தனர்; முயற்சியற்றுக் கிடந்தமையால் அவர்கள் ஆட்சி செய்யவில்லை; காலப் போக்கில் ஒதுக்கப்பட்டனர். மீண்டும் மிலியுக்கோவு சொன்னது போன்று, "மத்தியதர வகுப் பினருடைய குடியாட்சி நிதானமான போக்குகளையுடைய சம வுடைமை வாதிகளால் மட்டுமே ஆதரிக்கப்பட்டது; பொது மக்களுடைய ஆதரவு இதற்குமேல் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் இவ்வாட்சி நிலைநிற்க முடியாது போயிற்று". இதற்கிடையே, உள்நாட்டிலே, உணவுப் பொருள், தொழிற்சாலை களில் உற்பத்தி, போக்குவரவு ஆகியனவற்றின் நிலைமை மோச மாகிக்கொண்டே வந்தது. மக்கள் அரைப்பட்டினி கிடந்தமையால் அது அவர்களைக் கிளர்ச்சிக்கு ஆதரவு செய்யத் தூண்டிற்று; மூலப் பொருள்களின்மையால் கைத்தொழில் பாதிக்கப்பட்டது; போக்குவரத்து வசதி போதுமானதாயிருக்கவில்லை. இத் தகைய பொருளாதார வீழ்ச்சியால் போல்சிவிக்குகள் ஆட்சிப் பீடத்தில் தம்மை அமர்த்திக் கொள்ள வாய்ப்புக் கிடைக்காது என்பதைத் தெளிவாகக் கண்டனர். ஆட்சிக் கெதிரான கிளர்ச்சி செய்ய அவர்கள் இருமுறை முயன்றனர். பரிசோதனை என்ற

போல்சிவிக்குகளின் பிரசாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையிலமையக் கூடிய அவர்களுடைய முதல் முயற்சி பயனற்றுக் குழப்பத்தில் முடிந்தது. யூலைத் திங்களில் படைக் கலந் தாங்கியோர் ஆர்ப்பாட்டஞ் செய்தனர்; அதன் பயனற்ற தன்மை, போல்சிவிக்குகளால் விளையக்கூடிய ஆபத்து மிகைப் படுத்திக் கூறப்பட்டது என்ற எண்ணத்தை மக்களிடை வலுப் படுத்தியது. அடக்கு முறைப் பூட்கை யொன்றைக் கைக்கொள்ள அரசாங்கம் ஊக்குவிக்கப்பட்டது; எனவே போல்சிவிக்கு இயக்கம் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டது; அதன் தலைவர்கள் இலெனினைப் போன்று மறைந்து வாழ்ந்தனர்; அல்லது திராட்சுகியைப் போன்று கைது செய்யப்பட்டனர். போல்சிவிக்கு ஆபத்து அகற்றப் பட்டதுபோலக் காணப்பட்டது. எனினும் செத்தெம்பர் மாதத் தில் மற்றொரு கிளர்ச்சிக்கான வாய்ப்பை அது ஏற்படுத்தியது; அப்போது படைத் தலைவர்கள் தாங்களே ஆட்சியைக் கைப்பற்ற முயற்சித்தனர். ஏவுநர் தலைவனான படைத்தலைவன் கோனிலோவு செய்த திடீர்ப் புரட்சி, இரத்தஞ்சிந்தாமலே மட்டுப் படுத்தப்பட்டது; ஆனால் அது ஒரு பெரும் கலவரத்தை உண்டு பண்ணியது; மேலும் அக்கலவரம் எதிர்ப்புரட்சி செய்வதற்கான ஒரு முயற்சி என்று பொதுவாகக் கருதப்பட்டது. ஆதலால் படையினர் செய்த சதித் திட்டம் தோல்வியடைந்தமையால், ஓரளவில் சந்தேகத்திற்கிடமான முறையில் கருமமாற்றியதாகக் கருதப்பட்ட அமைச்சுக்கு ஆதரவுகிடைக்கும் என எதிர்பார்க்கப் பட்டது; ஆனால் அதற்கு மாறுக, மக்களுடைய அவநம்பிக்கை வலுவடைந்து, அவர்கள் மேலும் இடதுசாரிகளாயினர். கோனிலோவு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியின் விளைவுகள் இப்போது, வெளிப்படையாகத் தெரியவாரம்பித்தன. புரட்சி தொடங்கிய இரு மாதங்களுக்குப் பின் அமெரிக்காவிலிருந்து வந்து, போல்சிவிக்குக் கட்சியோடு சேர்ந்துகொண்ட இலியோன் திராட்சுகி, அரசாங்கத்தால் சிறையினின்று விடுதலைசெய்யப்பட்டான். இப் போது அரசாங்கம் இணக்கமுறையான ஒரு சைகைமூலம் இடது சாரியினரை அமைதிப்படுத்துவதின் அவசியத்தை உணர்ந் திருக்கலாம். அது எவ்வாறிருந்தபோதிலும், பெற்றேகிராத்தைச் சேர்ந்த சோவியத்தின் தலைவன் என்ற முறையில், அரசாங் கத்திற்கெதிரான நவெம்பர்க் கிளர்ச்சியை "ஏற்பாடு செய்து, அதனை முன்னின்று நடத்தியவன்" திராட்சுகிதான் என, உத்தியோகபூர்வமான ஒரு சோவியத்துப் பதிவேட்டில் காணக் கிடக்கின்றது. பெற்றேகிராத்திலும், மொசுக்கோவிலும் உள்ள சோவியத்துக்களில் போல்சிவிக்குகள் பெரும்பான்மைப் பலம் பெற்றமை, அவர்களுக்கு ஒரு சிறந்த வெற்றியாகும். ஆட்சியி லிருந்த அரசாங்கம் பொதுமக்களுடைய ஆதரவை இழந்து விட்டதென்பதற்கு அரசாங்கத்துடன் மக்கள் தொடர்பற்றிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமை தெளிவான அடையாளமாகவிருந்தது. "எமது காலம் வந்துள்ளது" என்பதற்கு இம்முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி அறிகுறியாகும் என்று இலெனின் மகிழ்ச்சியுடன் தெரிவித் தான்; போல்சிவிக்குகள் "அரசாங்க அதிகாரத்தைக் கைப் பற்றித் தமதாக்க வேண்டும்" என்று அவன் வற்புறுத்தினன். உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இலெனின் வற் புறுத்தியபோது, அவனைப் பின்பற்றியவர்கள் அதைப் பெரிதும் எதிர்த்தனர். போல்சிவிக்குக் கட்சியினர் இரு தலைநகரங்களில் மட்டும் "அதிகாரத்தைக் கைப்பற்றலாம்" என்பதை அவனைக் கண்டனஞ் செய்தோர் ஒப்புக்கொண்டார்கள்; ஆனால் அக்கட்சி யினரால் மாகாணங்களில் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ள முடியாது என்று நம்பினர்கள். அவர்களுடைய வாதத்திற்கு மறுமொழியாக "சருவாதிகாரம் குடியானவர்களுக்கு நிலம் கொடுக்கும்; சருவாதிகாரத்தைக் குடியானவர்கள் ஆதரிப் பார்களா என்று சந்தேகப்படுவது எதை?" என்று இலெனின் கூறினன். அரசாங்கத்திற்கெதிரான புரட்சிக்காரர்கள், முதலில் செய்யப்பட்ட முயற்சி போலவே இரண்டாவது முயற்சியும் பயனற்றதாகி விடுமோ என்று பயப்பட்டமையினால் கொண் டிருந்த சந்தேகங்களை இலெனினுடைய கொள்கைகள் அகற்றி விட்டன.

நவெம்பர்ப் புரட்சி.

ஏறக்குறைய இருபதுகோடி மக்களை இப்போது பெற்றுள்ள ஒரு நாட்டில் அளவிடமுடியாத விளைவுகளை எற்படுத்தும் ஆற் றலையுடைய ஒரு புரட்சியை உண்டாக்குவதற்குக் கையாளப் பட்ட வழிமுறைகளை நோக்கின், இவ்வளவு காலத்திற்குப் பின் னரும் அந்நிகழ்ச்சி பெருந் திகைப்பூட்டுவதாகவே இருக் கின்றது. போல்சிவிக்குத் தலைவர்களிடம் படைக்கலந்தரித்த ஏறக்குறைய இருபத்தையாயிரம் தொழிலாளரைக் கொண்ட "செஞ்சட்டைக் காவலர்" படையொன்றிருந்தது. குறைந்த பயிற்சி பெற்ற ஒரு படை நன்கு பயிற்சி பெற்ற கட்டுப்பாடான படைகளை எதிர்த்து நின்றிருக்க முடியாது; இந்நிலைமையில், தாங்கள் போர் முன்னணிக்கு அனுப்பப்படுவரெனப் பயந்தவர் களும், போல்சிவிக்குப் பிரசாரத்தால் மனமாற்றம் பெற்றவர்களு மான பெற்ரேகிராத்துக் காவற் படையினரிடை காணப்பட்ட மனப் போக்கே புரட்சியின் முடிவைத் தீர்மானிக்கக் கூடியதாயிருந் தது. மத்திய வகுப்பினருடைய ஆட்சி ஆதரவாளர்களின்றி ஈடாடியது; அது சிறிதளவுகூட எதிரிகளை எதிர்க்கவில்லை. அதன் வீழ்ச்சிக்கு அதன் எதிரிகளின் பலத்தைவிட அது ஒதுங்கித் தனித்து நின்றமையே காரணமாயிருந்தது. 1917 நவெம்பர் 7 ஆம் நாளன்று அதிகாலை 2 மணிக்கு, போல்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்குகள் புரட்சிக்கான முரசொலி எழுப்பினர். படைக்கலந் தாங்கிய சிறு படையினர் புகையிரத நிலையங்களையும், அரசு வங்கியையும், தொலைபேசி நிலையத்தையும், அஞ்சல் நிலையத்தை யும், மற்றும் அரசாங்கக் கட்டடங்களையும் கைப்பற்றிக்கொண்ட னர். அரசாங்கத்துக் கெதிரான கிளர்ச்சி மொத்தத்தில் ஓர் ஒழுங்கான முறையையே பின்பற்றிச் சென்றது. புரட்சியின் போது சாதாரணமாகக் காணக்கூடிய தெரு ஆர்ப்பாட்டங்கள், ஒழுங்கீனங்கள் போன்ற நிகழ்ச்சிகள் இல்லாதிருந்தமை குறிப் பிடற்பாலது. அரசாங்க அலுவலகங்களைக் கைப்பற்றும்போது பொதுவாக எதிர்ப்பேதும் இல்லாதிருந்ததே இதற்குக் காரண மாகவிருக்கலாம். திராட்சுசி, பெற்றோகிராத்து சோவியத்திற்கு (தொழிலாளர் குழுவிற்கு) தனது அறிக்கையைச் சமர்ப்பித்த போது "அரசாங்கத்திற்கெதிரான ஒரு கிளர்ச்சி எமது புரட்சியை இரத்தப் பெருவெள்ளத்தில் ஆழ்த்திவிடும் என்று எதிரிகள் சொன்னார்கள். எந்த உயிர்ச் சேதமும் ஏற்பட்டதை நாம் அறியோம். வரலாற்றில் இத்துணை மக்களைக் கொண்ட புரட்சி இரத்தஞ் சிந்தாமலே நடந்தது என்பதற்கு எடுத்துக்காட்டெதுவு மில்லை" என்று கூறினன். புரட்சிக்கு எற்பாடு செய்தவன் அது வெற்றியடைந்தகாலை இவ்வாறு கூறினன்; ஆனால் ஒரு புரட்சியின் மதிப்பை, அப்புரட்சி தன் போக்கில் சென்று முற்றுக முடியும்வரை நாம் கணித்திடமுடியாது; ஏனெ னில் அதைத் தொடர்ந்து உள்நாட்டுக் குழப்பம் ஏற்படுவதுண்டு. அநேக ஆண்டுகளுக்குப் பின்னர் திராட்சுகி இரசியப் புரட்சி வரலாற்றுசிரியன் என்ற முறையில், போல்சிவிக்கு வெற்றியின் விளைவைப் பின்வருமாறு விளக்கினன்: "நூறுயிரக் கணக் கான மக்கள் புதைக்கப்பட்டனர்; இரசியாவின் தெற்குப் பாக மும் கிழக்குப் பாகமும் கொள்ளையடிக்கப்பட்டு நாசமாக்கப்பட் டன; நாட்டின் தொழில்வளம் முற்றும் அழிக்கப்பட்டது; சிவப்புப் பயங்கரவாட்சி புரட்சிக்காரர்மீது திணிக்கப்பட்டது".

போல்சிவிக்கு அரசாங்கத்தின் திட்டங்கள்.

யாப்பமைப்பின்படி புதிதாக நிறுவப்பட்ட அரசாங்கத்திட் டம், இலெனினால் தொடர்பான பல கட்டளைகளின் மூலம் உடனே அறிவிக்கப்பட்டது. நாடுகளை இணைத்தல், இழப்பீடுகளை வழங்கல் ஆகிய எதுவுமின்றி, நியாயமானதும் மக்களுக்கேற்றது மானதொரு சமாதானத்திற்கு வழிவகுக்கும் உடன்படிக்கை யேற்பாடுகளை உடனே தொடங்குமாறு போரிலீடுபட்ட எல்லா மக்களுக்கும், அவர்களின் ஆட்சியாளர்களுக்கும் ஓர் ஆஞ்ஞை மூலம் யோசனை கூறப்பட்டது (நவெம்பர் 8, 1917). இந்த யோசனை நிராகரிக்கப்பட்டமையினால் இரசியா போரினின்று விலக வேண்டியதாயிற்று; மேலும் பிரெசுட்டு—இலிட்டோலிசு சர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணைடைந்தவமயம் சேர்மனிபெற்ற வெற்றியின் காரணமாகக் கோரப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளை இரசியா ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று (1918). "நிலத்தில் நிலக்கிழாருக்கிருந்த சொத்துரிமை, எவ்வித நட்டஈடும் கொடுக்கப்படாமலே உடனடியாக மறுக்கப்பட்டுள்ளது" என மற்றொரு கட்டளை கூறியது. பெரும் பண்ணைகள் பறிமுதல் செய்யப்பட்டமையினால் குடியானவர்கள் போல்சிவிக்குகளுடைய கட்சியைச் சார்ந்து நின்றனர்; மேலும் அதனால் எதிர்ப்புரட்சி நடக்காது என்பது உறுதியாயிற்று. இவ்வாறு பழைய முறை முற்றிலும் அழிவதற்கான வகையில் நிலைமை அமைக்கப்பட்டது. 1848 இல் சேர்மனியில் ஏற்பட்ட புரட்சி[1] தோல்வியடைந்தமைக்கு, கார்ள்மார்க்சு கொடுத்த விளக்கத்தைப் போல்சிவிக்குகள் கருத்திற் கொண்டனர். அப்புரட்சி அரசாங்க அமைச்சர்களை மாத்திரமே பதவியினின்று நீக்கியது; ஆனால் பாலனத்தைப் பழைய மரபுப்படி பயிற்சிபெற்றிருந்த பணிக்குழுவினர், நீதிபதிகள், படைத்தலைவர்கள் ஆகியோர் கையில் விட்டு வைத்திருந்தது. அதன்படி அவர்கள் (இரசிய நாட்டினர்) சாரின் ஆட்சியமைப்பை வேரோடு களைந்தெறிந்து, அதற்குப் பதிலாக, தொழிலாளர்களினதும் குடியானவர்களினதும் பிரதியாளர்களைக் கொண்ட கழகங்களாலான முற்றும் மாறுபட்ட ஓராட்சியை ஏற்படுத்தினர். இவ்வாருகத் "தொழிலாளர் குடியானவர் அரசொன்று" நிறுவப்பட்டது; அன்றியும் பாலனத்தை நடத்த ஒரு புதிய அலுவலர் குழுவும் ஏற்படுத்தப்பட்டது.

உண்ணாட்டுக் கலகம்.

சோவியத்து ஆட்சி அது நிலவிய முதல் மூன்றாண்டுகளில் மிகுந்த இடுக்கண்களுக்கிடையே நடைபெற்றது; ஏனெனில் போல்சிவிக்குகள் வலியிழந்திருந்த தங்களுடைய எதிரிகளிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் எளிதாகப் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, கோரச் செயல் நிறைந்த உள்நாட்டுக் குழப்பத்தில் நாட்டை ஆழ்த்திய போராட்டமொன்று எழுந்தது. நிலபுலச் சொத்துக்களை இழந்தவர்கள் நவெம்பர்ப் புரட்சி அளித்த தீர்ப்பை அமைதியான முறையில் ஏற்றுக் கொண்டாரல்லர். இவர்கள் நட்புறவு நாடுகளுடைய உதவியுடன், தெற்கில் படைத்தலைவன் தெனிக்கின், சைபீரியாவில் கடற்படைத்தலைவன் கோல்சாக்கு ஆகியோருடைய தலைமையில் படைக்கலந்தாங்கிய எதிர்ப்பை ஏற்பாடு செய்தனர். தன் நாட்டிலே உடன்பிறந்தாருக்கிடையே ஏற்பட்ட குழப்பத்தால் மனவேதனையடைந்த இரசியா, செஞ்சட்டைப் புரட்சியினருடைய பயங்கர ஆட்சிக்கும் வெள்ளையுடையணிந்த எதிர்ப்புரட்சியினருடைய பயங்கர ஆட்சிக்கும், புரட்சிக்காரர்களுடைய காட்டுமிராண்டித்

[1] பக்கம் 77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனமான பழிவாங்கலுக்கும் அட்டூழியங்களுக்கும் இரை யாயிற்று ; அதேசமயம் துன்பப்பட்டுக்கிடந்த இரசிய மக்களின் மனவெறுப்பு, பஞ்சத்தால் மிகுதியாயிற்று. அநேக தோல்வி களுக்குப் பின்னரும் சோவியத்து அரசாங்கம் பெற்ற இறுதி வெற்றிக்குப் பல காரணங்கள் இருந்தன. நிலக்கிழார்கள் மீண்டும் ஆதிக்கம் பெற்றுவிடுவார்கள் என்று பயந்த குடியான வர்கள் அரசாங்கத்திற்குச் செய்த உதவி அதற்கு ஒரு காரண மாகும். மற்றொன்று நாட்டின் பெரிய பரப்பளவாகும் ; இவ் வாறு நாடு பெரிய பரப்பளவுடையதாக இருந்தமையால் போல் சிவிக்குகள் தங்களுடைய முழுப்பலத்தையும் திரட்டும்வரை நீடித் துப் போர் செய்யமுடிந்தது. திராட்சுகியின் தலைமையில் செஞ் சேனை உருவாயிற்று ; ஆற்றல் மிக்க இப்படைக்கு அளிக் கப்பட்ட பயிற்சியை, குரும்வெலுடைய இரும்புக் கவச மணிந்த வீரர்கள், பிரான்சிய புரட்சிப் படைவீரர்கள் ஆகியோர் பெற்ற பயிற்சிக்கு ஒப்பிடலாம். போல்சிவிக்குகளுக்கெதிராக எற்பட்ட இயக்கம் தோல்வியுற்றமைக்கு மூன்றுவது காரணம், (அவர்களுடைய தலைவர்களுள் ஒருவன் ஒப்புக்கொண்டதுபோல்) வெள்ளைச்சட்டை வீரர்கள் கொள்ளை, வல்லந்தம், கொடுங் கோன்மை ஆகியவற்றின் கோரங்களுக்கு மக்களை வரம்புமீறி ஆட்படுத்தியமையாகும். நான்காவது காரணம், இரசிய நிலத்தில் பிறநாட்டுப் படைகளிருந்தமையினால், யாப்பினடியாக ஏற்படுத் தப்பட்ட அரசாங்கத்திற்குச் சார்பாக, நாட்டினுள்ள தாயகப் பற்றுடையோரெல்லாம் ஒன்று சேர்ந்தமையாகும். கடைசியான காரணம், மற்ற நாடுகளிலிருந்த தொழிலாளர்கள், இரசி யாவில் பிறநாடுகளின் தலையீட்டை ஒழித்துக் கட்டுமாறு வற் புறுத்தித் தூண்டியமையாகும். போலந்து தன்னைக் கொடு மைப்படுத்திய இரசியாவின் மீது போர் தொடுக்க, அந்நாட்டின் உள்நாட்டுக் குழப்பங்களை 1919 இல் பயன்படுத்திக் கொண்டது ; ஆனால் அது அவ்வாறு மடைத்தனமாகத் துணிந்தமை அதன் அழிவுக்குக் காரணமாயிற்று. இரசியா, தன் நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பத்தைச் செஞ்சேனை அடக்கியவுடன் சிறிதும் தாமதியாது, போலந்தின்மீது கவனஞ்செலுத்தி, உவா சோவின் எல்லைப் பகுதிகளை நோக்கிப் படையெடுத்தது. ஆனால் இங்கு அது முறியடிக்கப்பட்டது ; இரு நாடுகளுக்குமிடையே 1920 இல் இரீகா எனுமிடத்தில் செய்யப்பட்ட பொருத்தனை 1919 இல் பாரிசு சமாதான மாநாடு எண்ணியதைவிட, போலந் துக்கு அதிக சாதகமான கிழக்கெல்லைப் பகுதியை அளித்தது. போல்சிவிக்குகள் சுயநிர்ணய உரிமையில் நம்பிக்கை தெரி வித்து, அடிமைப்பட்ட நாட்டினங்கள் இரசியாவினின்று விலகிக் கொள்வதற்கு உடன்பட்டனர். புதிதாயெழுந்த போலந்துக் குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யரசுக்கு அவர்கள் இரசியப் போலந்தைக் கொடுத்தார்கள்; மேலும், எல்லைப்புற மாகாணங்களான பினிலாந்து, இலிது வேனியா, எசுத்தோனியா, இலாத்துவியா ஆகியவை சுதந்திர மான போற்றிக்குப் பிரதேச அரசுகளாக்கப்பட்டன.

இரசியப் புரட்சியைப் போல்சிவிக்குத் தலைவர்கள் தொடர்ந்து நிகழவிருந்த நாட்டின எழுச்சிகளின் தொடக்க நிகழ்ச்சியாகக் கருதினர். 1914–18 இல் நடைபெற்ற போர், மேற்றிசை நாடு களில் முதலாளித்துவ சமுதாயத்தின் அழிவை ஏற்படுத்தி விடும் என்று இலெனின் திடமாக நம்பினான். "ஐரோப் பாவில் சமவுடைமைப் புரட்சியொன்று நடைபெறும் என்பது முன்னறிந்து கொள்ளக் கூடியதொன்று" என்று அவன் 1918 இல் கூறினான். "உலகளாவிய பட்டாளியருடைய புரட்சி யின் ஆரம்பத்தில் நாம் நிற்கின்றோம்" என்று அவன் தனது திடநம்பிக்கையை வெளியிட்டான். உலகப் புரட்சிக்கு முன் னேற்பாடாக, கொமிந்தன் அல்லது மூன்றுவது சருவதேச (பொதுவுடைமையாளர்) அமையம், எல்லா நாடுகளிலுமுள்ள பொதுவுடைமைக் கட்சிகளினது சங்கமாக 1919 இல் ஏற்படுத் தப்பட்டது.[1] அந்த அமையத்தின் பட்டயத்திலிருந்த முதலாம் சட்டவாசகம் அதன் குறிக்கோள்களை வரையறுத்துக் கூறியது. "பல நாடுகளிலுமுள்ள பாட்டாளிகளுடைய கூட்டுச் செயலுக்காகத் தொழிலாளர்களின் புதிய சருவதேசச் சங்கம் ஏற்பட்டுள்ளது; அது, எல்லோரும் ஒன்றுசேர்ந்து முதலாளித்துவத்தைக் கவிழ்த்து, பாட்டாளியருடைய சருவாதிகாரத்தையும், வர்க்கப் பிரிவினையுடைய சமுதாயத்தை ஒழித்துச் சமவுடைமையைப் புகுத் துவதற்காகச் சருவதேசச் சோவியத்துக் குடியரசையும் ஏற் படுத்தும் நோக்கங் கொண்டுள்ளது. இதுவே பொதுவுடைமைச் சமுதாயத்தின் முதற் கட்டமாகும்". இதன் தலைவனாகிய சினோவி, "ஓராண்டுக்குள் முழு ஐரோப்பாவும் பொதுவுடை மைக்குட்பட்டுவிடும்" என்று 1919 இல் தெரிவித்தான். ஆனால் சருவதேசப்புரட்சி ஏற்படுமென்று நம்பியிருந்த மக்கள் ஏமாற்ற மடைந்தனர்; ஏனெனில் 1914–18 இல் நடைபெற்ற போரில் தோல்வியடைந்த நாடுகளிலுங்கூட, புரட்சிகரமான குழப்பத் திற்குப் பணிந்திடாத வகையில் அந்நாட்களிலிருந்து சமுதாய அமைப்பு மாறுதிருந்தது. அரசாங்க அதிகாரத்தை இரசியப் பாட்டாளியர் எளிதாகக் கைப்பற்றியமைக்கு இரசியாவில் மட்டுமே காணப்பட்ட பல சிக்கல்களே உண்மைக் காரண மாகும். அதாவது, எதிர்ப்பேதும் காட்டமுடியாத நிலை

உலகப் புரட்சி.

[1] சருவதேசத் தொழிலாளர்களின் முதலாவது சங்கம் 1864–76 ஆண்டுகளில் நிறுவப்பட்டிருந்தது. இரண்டாவது சங்கம் 1889 ல் ஏற்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலிருந்த மத்திய வகுப்பாருடைய குறிப்பிடத்தக்க பல வீனம், நிலம் பெறுதற்காகக் குடியானவர்கள் பாட்டாளியருடன் சேர்ந்து கொண்டமை, பலதரப்பட்ட சமுதாயப் பிரிவுகளுக்கிடையேயிருந்த இனவெறுப்பு, வெளிநாட்டவரின் தலையீட்டின்போதும் உண்ணாட்டுக் குழப்பங்களின்போதும் புரட்சி அரசாங்கம் அவற்றை எதிர்க்க வேண்டியிருந்த ஆள்புலத்துக்குரிய பெரும்பரப்பு ஆகியவை அச்சிக்கல்கள் என்க. என்றாலும், கொமிந்தனில் கூறப்பட்டுள்ள போல்சிவிக்குத் தலைவர்களுடைய பெருநோக்கங்கள் அச்சமயம் எனைய நாட்டரசுகளிலெல்லாம் ஒரு பீதியை ஏற்படுத்திவிட்டன. தொழிலாளர் குடியரசின் செய்கையால் இனவுணர்ச்சி கொண்ட மக்கள் நிலை குலையச் செய்யுமொரு விளைவு ஏற்படக்கூடாது என்று பலர் கவலைப்பட்டனர். உலகப் புரட்சித் தீயைப் பரப்புவதுதான் போல்சிவிக்கு ஆட்சியினுடைய உறுதியான எண்ணம் என்று தெரியவந்தபோது முன்பு கவலைப்பட்டவர்கள் பேரச்சம் கொண்டனர். எனினும் இந்த ஆபத்து மிகைப்படுத்தப்பட்டதாகக் காணப்பட்டது. சோவியத்து ஐக்கியத்தின் சத்திகள் உள்நாட்டைச் செம்மைப்படுத்தும் அலுவலில் பூரணமாக ஈடுபடுத்தப்படலாயின. அன்றியும், பஞ்சத்தாலும் எதிர்ப்புரட்சியாலும் அச்சமடைந்திருந்த சோவியத்து நாடு, அண்மையிலுள்ளோரைத் தாக்கும் ஆபத்தான வேலையிலிறங்கக்கூடிய நிலையிலிருக்கவில்லை.

திராட்சுகியின் கருத்துக்கள்.

உலகப் புரட்சியை உருவாக்குவதில் அடைந்த தோல்வி, போல்சிவிக்குக் கட்சியின் ஐக்கியத்தைச் சிதறடித்து, அக்கட்சித் தலைவர்களுக்கு ஒரு பிரச்சினையை ஏற்படுத்தியது. போல்சிவிக்கு இயக்கத்தின் தனிப்பெருந் தலைவனை இலெனினுடைய மரணத்துக்குப் பின்னர் கட்சியில் பிளவு ஏற்பட்டது. அவனைப் பின்பற்றியவர்களிடை ஏற்பட்ட பிளவிற்கு ஓரளவில் தனிப்பட்டோரின் போட்டிகளும் பொறுமைகளும் காரணங்களாகும். எனினும், கோட்பாடுகள் சம்பந்தமான பிரச்சினைகளே அப்பிளவு அடிப்படையாகக் கொண்டதாயிருந்தது. கட்சியின் பெரும்பான்மையோர் யோசேப்பு இசிதாலின் தலைமையில் இயங்கினர்; மற்றொரு பகுதியாரான (இடதுசாரியினரான) சிறுபான்மையோர், திராட்சுகியினால் ஊக்குவிக்கப் பெற்றனர். சோவியத்து ஐக்கியம் மற்ற நாடுகளில் குழப்பங்களைத் தூண்டுவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்வதா, அன்றி நாட்டினைத் தொடர்பானதொரு சமவுடைமைச் சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கு முழு முயற்சி எடுப்பதா என்பதுதான் இப்போது ஏற்பட்ட பிரச்சினையாயிற்று. உலகப் புரட்சி பற்றித் திராட்சுகி பரிந்து பேசியபோது, அவனுடைய மூன்று முன்னீடுகள் அதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகவிருந்தன. ஒரு முதலாளித்துவ சூழ்நிலையில் தனித்தியங்குமொரு சமவுடைமை அரசாங்கம் படைசம்பந்தமான தலையீட்டினால் அல்லது பொருளாதார ஒதுக்குதலினால் ஏற்படக் கூடிய ஆபத்தின் காரணமாக, நிரந்தரமானதாக இருக்க முடியா தென்பது முதற் கருத்து; சமவுடைமை ஏற்படுவதற்கு இரசியாவிலிருந்த நிலைமைகள் ஏற்றவையாகவில்லை என்பது இரண்டாவது கருத்து; நடுத்தர வகுப்பைச் சார்ந்த குடியானவர்கள் வெவ்வேறான நலன்களை நாடியமையும், இரசியாவில் பொருளாதாரப் பிற்போக்கு, தாழ்ந்த கல்விநிலை ஆகியன நிலவியமையும் அந்நிலைக்குக் காரணங்களாகும். "சமவுடைமைப் புரட்சி பற்றிய பிரச்சினை, சருவதேசத்தோடு சம்பந்தப்பட்டது" என்பது மூன்றாவது கருத்து. உலகச் சந்தை, உலகத் தொழிற் பாகுபாடு ஆகியவற்றின் மூலம் நாடுகள் ஒன்றையொன்று சார்ந்துள்ளன; ஆகையால் மற்றெல்லா நாட்டு முறைமைகளினின்றும் முற்றும் மாறுபட்ட ஓர் "அடைபட்ட" சமவுடைமைச் சமுதாயத்தை உண்டாக்கும் வாய்ப்பை அந்நிலை தோற்றுவிப்பது அரிது. இச் சந்தர்ப்பத்தில் திராட்சுகி, நிலையான புரட்சி எனும் புகழ் பெற்ற கொள்கைத் திட்டத்தை மக்களிடம் சமர்ப்பித்தான். அதன்படி, நாட்டினப் புரட்சிகளெனும் சங்கிலியில் இரசியப் புரட்சியானது முதற் கண்ணியாகக் கருதப்பட வேண்டும் என்றான். அவனது கொள்கை, வரலாற்றுக்குப் பொருளாதார அடிப்படையில் அவன் கொடுத்த விளக்கத்தின் தருக்கரீதியான விளைவாகும். நிலம் சம்பந்தமான தனியுரிமைகளை ஒழித்து, மாகாணத்துக்குரிய சந்தைகள் தனித்தியங்குதலை மாற்றியமைத்து, அவற்றுக்குப் பதில் நாடு முழுவதுமுள்ள உற்பத்திச் சத்திகளுக்குப் பயன்படும் தேசியச் சந்தை இடம்பெற வேண்டுமென்பதே மத்தியவகுப்பாருடைய புரட்சிகளுக்கான நோக்கமாகும் என அவன் நம்பினான். ஆனால் பாட்டாளியர் செய்த புரட்சியின் நோக்கமோ இதற்குமாறுகவிருந்தது. உற்பத்திச் சாதனங்கள் தனிப்பட்டவரது உடைமையாயிருப்பதை ஒழித்து, தேசியப் பொருளாதாரத்தை மாற்றி, அதற்குப் பதிலாக உலகப் பொருளாதாரத்தைப் புகுத்துவதே அந்நோக்கமாகும். இவ்வாறான உலகப் பொருளாதாரம் சருவதேசத் தொழிற் பாகுபாட்டின் அடிப்படையில் அமைந்ததாயும் மனித சமுதாயத்தின் உற்பத்திகளுக்குப் பயன்படுவதாயும் இருக்கவேண்டுமெனக் கருதப்பட்டது.

"நிலையான புரட்சி"த் தத்துவத்திற்கு எதிராக, "ஒரு தனி நாட்டின் சமவுடைமை"க் கோட்பாட்டைச் சிதாலின் கொண்டுவந்தான். உலகப் புரட்சியொன்று உண்டாகவில்லை

சிதாலினுடைய கருத்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெனின், சமவுடைமையின் தொழிற்பாட்டிற்கு எடுத்துக்காட்டாகச் சோவியத்து இரசியா பொதுநலவாயமொன்றை ஏற்படுத்த வேண்டுமென்பது அவனது தத்துவத்தின் உட்கருத்து. அப் பொதுநலவாயம் வெற்றி பெற்றால் அதுவே அது பின்பற்றப் படுவதற்குச் சிறந்த உத்தரவாதமாகும். சோவியத்து ஐக்கிய அரசின் சொந்த முயற்சிகளால் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்த முடியுமென்றும், பிறநாடுகளில் புரட்சிகளைத் தோற்றுவிக்காமலேயே ஒரு சுதந்திர சமவுடைமைச் சமுதாயம் வாழ முடியுமென்றும் அவன் கூறினான். இப்பூட்கையின் புதிய சீரமைப்பால் உண்மையில் கொமிந்தன் கைவிடப்படவேண்டிய தாயிருந்தது ; எனெனில் தொழிலாளர் குடியரசுக்கு இயந்திரங்கள், பதனிடாப் பொருள்கள், தொழினுட்ப நிபுணத்துவம் ஆகியவற்றைக் கொடுத்துதவக் கூடிய முதலாளித்துவ நாடுகளுடன் இரசிய அரசாங்கம் சுமுகமான தொடர்புகள் வைத்துக்கொள்வதை இப்புதிய பூட்கை தூண்டியது. மாறுபட்ட தத்துவங்களின் மோதுதலின் விளைவாகத் தோன்றிய போராட்டத்தில் சிதாலினுடைய பக்கத்துக்கே வெற்றி கிடைத்தது ; கட்சியின் நிருவாகத்தின்மீது அவனுக்கிருந்த ஆதிக்கத்தால் தன் வசமே அதிகாரத்தைக் கவர்ந்துகொள்ள அவனால் முடிந்தது. 1929 இல் திராட்சுகி நாடுகடத்தப்பட்டான் ; அவனது கொள்கைகளில் பற்றுக்கொண்டவர்கள் தடையுத்தரவிடப்பட்டு, இரக்கமின்றிக் கொல்லப்பட்டனர் ; "போல்சிவிக்கு வாதத்துடன் திராட்சுகியின் கோட்பாடு" ஒத்துப்போக முடியாததொன்றென உத்தியோகபூர்வமாகக் கண்டனஞ் செய்யப்பட்டது. தற்போது நடைபெறும் ஆட்சியைப் பலப்படுத்துவதிலும், புகைந்து கொண்டிருக்கும் பகைநெருப்பை நசுக்குவதிலும் பயங்கரமுறைகளைக் கையாள்வதால் வெற்றி கிடைக்குமா என்பதை எதிர்காலம் மட்டுமே வெளிப்படுத்தக் கூடும் ; ஆனால் சோவியத்து இரசியாவின்மீது ஒருவித அமைதியற்ற நிலை கவிந்து, அதனுடைய அரசியலில் அமைதியேற்படுவதைத் தாமதப்படுத்தியது. இருபது ஆண்டுகளுக்குப் பின்னரும், இரசியப் புரட்சி இன்னும் வளர்ந்துகொண்டிருக்கின்றது ; இரசிய மக்களை இன்னுமதிகமான வேகத்துடன் அது அழித்துக் கொண்டேயிருக்கின்றது. ஒலியூட்டும் செக்கா (பின்னர் ஒக்கியூ) என்று வழங்கப்பட்ட அரசியல் பொலிசுப்படையினரின் கொடுமைகளுக்குப் பலர் புதிது புதிதாக இடைவிடாது இரையாகிக் கொண்டிருந்த பயங்கர ஆட்சியொன்று இரசியாவில் உருவாகியது. இப்பொலிசுப் படையினருடன் ஒற்றர்படையினர், இரகசிய நீதி மன்றத்தார், விசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணையின்றிக் கொலைத் தீர்ப்பிடுவோர் ஆகியோர் ஒத்துழைத்தனர். உயர் அதிகாரிகள், படைத்தலைவர்கள், சூழ்வல்லோர்கள் ஆகியவர்களைச் சிரச்சேதம் செய்தலாகிய "வேண்டாதவரை யகற்றுஞ் செயல்" மீண்டும் நடைபெற்றமையினால், இரசியப் புரட்சியின் போக்கைக் கறைப்படுத்தியுள்ள கொடுமைகளை மறக்க முடியாமலிருக்கின்றது[1].

புதிய பொருளாதாரப் பூட்கை.

"போர்க்காலப் பொதுவுடைமை"ப் பரிசோதனையிலிருந்தும், அதன்பின்னர் பிந்திய ஆண்டுகளில் ஏற்பட்ட மாறுதல்களிலிருந்தும் உருவான சோவியத்து அரசாங்கத்தின் பொருளாதார வமைப்பை இப்போது வரலாற்றுக் கண்ணோட்டங்கொண்டு பார்க்கலாம். சமவுடைமையின் அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தைத் திருத்தியமைப்பது பற்றிய முதற் கட்டம், உண்ணாட்டுக் குழப்பம் சம்பந்தமான அவசரத் தேவைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டது. அந்தக் குழப்பம் "போர்க்காலப் பொதுவுடைமை"க்குரிய பருவத்தைத் தொடக்கி வைத்தது (1918–21). அது மேற்கைரோப்பாவிலிருந்த "போர்க்காலச் சமவுடைமைக்கு" ஒத்ததொன்றுகவிருந்தது. தொழில் உற்பத்தி, நாணயச் செலாவணி ஆகியவற்றை இயக்கும் அமையங்களை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது; தொழிற்சாலைகளைத் தேசியமயமாக்கியும், தனிப்பட்டோருடைய சில்லறை வியாபாரத்தைத் தடுத்தும் அது தனிப்பட்டோருடைய முயற்சியை அழித்துவிட்டது; வங்கிகள் மறைந்தொழிந்தன; அத்தியாவசியத் தேவைகளுக்கும், இலவசக்குடியிருப்பு, இலவசப் போக்கு வரத்து ஆகியவற்றிற்குமான பணம், பணமாகக் கொடுக்கப்படுவதற்குப் பதில் பொருள் சீட்டுக்கள் மூலம் கொடுக்கப்பட்டது; பயிர்ச் செய்கையானது சமூகத்திற்குச் சொந்தமாக்கப்படுவதினின்றும் விலக்கப்பட்டது; ஆனால் குடியானவர்களுடைய பயிர்கள் கட்டாயமாக அரசாங்கத்திற்குரியனவாக்கப்பட்டன. உற்பத்தியில் அதிக வீழ்ச்சி ஏற்பட்டமையினாலும், குடியானவர் கிளர்ச்சி செய்தமையினாலும், சோவியத்துக் கப்பற்படையில் மாலுமிகள் குழப்பம் செய்தமையினாலும் இலெனின் 1921 இல் "புதிய பொருளாதாரக் கோட்பாட்டை"க் கட்டாயமாகப் பின்பற்றவேண்டியதாயிற்று. "நாங்கள் எமது படைகளைத் திருத்தியமைத்து, மீண்டும் தாக்குதல் செய்யக்கூடும்" என்று அவன் கூறியதை நோக்கின், இது முதலாளித்துவத்தைப் பின்வாங்கும்படி செய்தது என்று சொல்லலாம். குடியானவர்

[1] கொடுமைப்படுத்தும் கட்டாயவேலை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன; இரசியாவில் எதிர்ப்புரட்சியினர் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள், மனிதத் தன்மையற்ற சூழலிலே கடினவேலை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தமது விளைபொருள்களைக் கட்டுப்பாடின்றி விற்க அனுமதிக்கப் பட்டனர்; சில்லறை வியாபாரிகள் இலாபத்திற்காக வாங்கவும் விற்கவும் தொடங்கினர்; சிற்றளவினவான கைத்தொழில்களில் தனிப்பட்டோருடைய முயற்சிக்கு இடமளிக்கப்பட்டது; பொருள் கொடுக்கல் வாங்கல் முறை திரும்பவும் ஏற்படுத்தப்பட்டது; வேலைக்குக் கூலிகள், வாடகைகள், புகைவண்டிக் கட்டணங்கள் முதலியவற்றிற்கு மீண்டும் பணமே உபயோகிக்கப்பட்டது; அரசாங்கப் பெருங்கைத்தொழில் நிறுவகங்கள், தாம் விரும்பியவாறு இயங்குவதற்கு அதிகமானவளவு தன்னுண்மை பெற்றன. பண அடிப்படையிலும், பணத்துறைக் கொள்கைகளையொட்டியும் தங்களின் வியாபாரத்தை அத்தொழில் நிறுவகங்கள் நடத்த வேண்டியிருந்தன. வெளிநாட்டு வியாபாரம், வங்கிகள், கனிப்பொருள் சுரங்கங்கள், காடுகள், புகைவண்டிகள், பாரப்பொருள் தொழில் நிலையங்கள் ஆகியவற்றை அர்சாங்கம் தன்வசம் வைத்திருந்தது; ஆனல் அரசியல் துறையில் தொழிலாளர் ஆதிக்கம் பெற்றிருந்தமை, தனிப்பட்டவர் முயற்சிக்குப் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருந்த வரையறைக்குட்பட்ட வட்டாரங்களுள் இனச்சுரண்டல் ஏற்படாதவாறு உறுதியீடளிக்கக் கூடியதாக இருந்ததெனக் கருதப்பட்டது. தனிப்பட்டவரின் முயற்சிக்கான சலுகைகள் ஒரு தற்காலிக நடவடிக்கையாக அமைய வேண்டும் எனும் நோக்கத்துடனேயே கொடுக்கப்பட்டன; 1921–31 ஆண்டுகளில் உற்பத்தி, பொருள்பரிமாற்றம் என்பவை சம்பந்தமான அரசாங்க சாதனங்கள் விருத்தியடைந்தமையினல், நாம் பின்னர் காணக் கூடியதுபோல், "நெப்மென்" (சில்லறை வியாபாரிகளும், சிறிய உற்பத்தியாளர்களும்), "குலாக்கிசு" (பணம்படைத்த குடியானவர்கள்) ஆகியோர் படிப்படியாக ஒழிக்கப்பட்டனர். இவ்வாறு கத் தேசியப் பொருளாதாரத்தின் எனைய துறைகளில் முதலாளிகளையும் முன்னரே ஒழித்துக்கட்டிய செயல் இப்போது பூரணமாக்கப்பட்டது. இப்போது நாம் இவ்வரலாற்றின போக்கைப்பற்றி நுணுக்கமாக ஆராய்வோம்.

முதல் விவசாயப் புரட்சி.

போல்சிவிக்குகள் அதிகாரத்தைக் கைப்பற்றியதால் விவசாயத் துறையிலேயே மிக முக்கியமான மாற்றம் காணப்பட்டது; எனெனில் அம்மாற்றம் குடித்தொகையில் பெரும்பகுதியினரைப் பாதித்தது. இங்கு இரு விவசாயப் புரட்சிகளையும் வேறுபடுத்தி நாம் அறிய வேண்டும். ஒரு புரட்சி நிலக்கிழாரிடமிருந்த நிலங்களைப் பறிமுதல் செய்தது; மற்றொன்று தனிப்பட்டவருடைய வேளாண்மை நிலங்களிருந்த இடத்தில் கூட்டுப்பண்ணைகளை நிறுவியது. முன்னையது ஒரு கட்டளையின் மூலம் செய்து முடிக்கப்பட்டது. அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட ஆஞ்ஞை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்று நிலத்தைத் தேசியவுடைமையாக்கியதுடன், அந்நிலத்தைப் பண்படுத்துவோருக்கிடையே அது பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும் என்ற தத்துவத்தையும் நிலைநாட்டியது. அக்கட்சியினது உட்கருத்தின் பிரகாரம், நிலத்தை வைத்திருத்தற்குத் தனிப்பட்டவருக்கிருந்த உரிமை ஒழிக்கப்பட்டது; ஆனால் நிலம் தனிப்பட்டோர் வசமே இருந்து வந்தது. நிலக்கிழாரின் நிலம் பறிமுதல் செய்யப்பட்டது என்றால், நிலம் முழுதும் பகிர்ந்து கொடுக்கப்படுவதற்காகக் கிடைத்துவிட்டது என்று பொருள் படாது; ஏனெனில் நிலத்தின் ஒரு பகுதிக்கு உழவர்கள் (பிரான்சில் 1789 ஆம் ஆண்டுப் புரட்சிக்கு முன் இருந்தது போல்) வாடகை கொடுத்து, அதனைத் தம்வசம் எலவே வைத்திருந்தனர்; நிலத்தின் மற்றொரு பகுதியோ சிலசமயங்களில் அரசாங்கப் பண்ணையாக மாற்றப்பட்டுவந்தது. அநேகமாகப் பெரிய நிலங்கள் பங்கிடப்பட்டமையினால் எறக்குறைய மொத்தத்தில் மூன்றிலொருபாகம் உழவர்கள் வசமாயிற்று. இருந்தபோதிலும் அவர்களுடைய பொருளாதார நிலைமையில் முன்னேற்றங் காணப்படவில்லை. குடித்தொகை பெருகியதனாலும், நிலமற்ற உழவர்களைச் சேர்த்துக்கொண்டமையினாலும், பத்தாண்டுகளுக்குள் (1918–1928) நிலப்பகுதிகளின் எண்ணிக்கை 160 இலட்சத்திலிருந்து 250 இலட்சமாக உயர்ந்தது; ஆகையால் மொத்த நிலப்பரப்பு கூடுதலாயிருந்தபோதிலும், தனிப்பட்டவர்களுடைய நிலங்கள் மிகச் சிறியனவாகவே யிருந்தன. பயிர் செய்யப்பட்ட பரப்பளவு, சராசரி ஒரு நிலப் பகுதிக்குப் பதினைரு ஏக்கர்களாக இருந்தபோதிலும், சில நிலங்கள் மூப்பது முதல் நாற்பது ஏக்கர்களைக் கொண்டிருந்தன என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. இவ்வாறுக முதலாவது விவசாயப்புரட்சி தனிப்பட்டவருடைய நிலங்களைப் பிரித்து, உழவர்களை நிலமிழந்த நிலவுடைமையாளர்களுக்கு வாடகை கொடுப்பதாகிய கடமையினின்று விடுவித்து, நிலமில்லாதோருக்கு நிலங்களைக் கொடுத்து உதவியது. ஆனால் பெரிய பண்ணைகளுக்காக எங்கி நின்றவர்களுடைய நிலப்பசியை அது தணிக்கவில்லை.

உழவரின் நிலைமை.

போல்சிவிக்குப் புரட்சிக்குப் பின்னர் உழவர்களுடைய நிலைமை மற்றத்தன்மைகளில் படுமோசமாகவிருந்தது. உண்ணாட்டுக்குழப்ப காலத்தில் அவர்களுடைய தானியங்கள் இருபக்கத்துப் படைகளுக்கும் உணவாகக் கொடுக்கப்படுவதற்குக் கட்டளை மூலம் பெறப்பட்டன. ஆகையால் உழவர்கள் தாம் பயிர் செய்த பரப்பளவைக் குறைப்பதின் மூலம் அதற்குப் பழிவாங்கினர்; வழக்கமாகக் கிடைக்கும் விளைவில் ஐந்தில் இரண்டு பங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரமே 1921 இல் அறுவடை மூலம் கிடைத்தது. இப்போது பஞ்சம் ஒன்று ஏற்பட்டது ; உழவருடைய உணவுக்கும், விதைக்குமாகத் தேவைப்பட்ட குறைந்த அளவை மட்டும் அவர்களிடம் விட்டு, மிகுதியான விளைபொருள் அனைத்தையும் தான் விரும்பிய விலைக்கு அவர்களிடமிருந்து இதுகாறும் அரசாங்கம் பெற்று வந்தது. இதை 1921 இல் கைவிடும்படியாயிற்று. நடைமுறையில் தம் விளைபொருள்கள் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படுவதற்குப் பதிலாக, தானியமாக ஒரு குறிப்பிட்டவரியை உழவர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தினர்கள் ; மேலும் மிகுதியாயிருந்ததைப் போட்டிமுறையில் சந்தையில் விற்றுக்கொள்ள அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது. உழவோர் பழமை பேணும் கொள்கையுடையவராவர். இத்தன்மை போல்சிவிக்கு வாதத்தின் சமவுடைமைத் தத்துவங்களைப் புறங்காணச் செய்தது. பத்தாண்டுகளுக்கு வேளாண்மையானது–சமூகவுடைமையாக்கப்பட்ட பெருங் கைத்தொழிலுக்கு முற்றும் மாறுபட்டவிதத்தில்—முதலாளித்துவ நாடுகளில் தனிப்பட்டவர்களுடைய முயற்சி ஊக்குவிக்கப்படும் முறையிலேயே நடத்தப்பட்டு வந்தது. "உழவர்களே எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து, தமது சொந்த வாழ்க்கையை அமைத்துக்கொள்ளட்டும்" என்று இலெனின் தீர்மானித்தான். இலெனினுக்குப் பின்வந்தவன் நிலத்தின் நிர்ப்பந்தக் கூட்டு முறையை உழவர்கள்மீது திணித்தபோது அவர்கள் தாம் அனுபவித்துவந்த சுதந்திரத்தைப் பத்தாண்டுகளுக்குள் இழப்பாராயினர். இதற்கிடையில் இரசியா பழைய பொருளாதார நிலைக்கு மீண்டும் திரும்பியதால் நிலைமை எளிதாகியது என்றாலும், உழவர்களுடைய மற்றொரு குறைபாட்டை அது நீக்கவில்லை ; அதாவது, வேளாண்மைப் பொருள்களின் விலைகளுக்கும், உற்பத்திப் பொருள்களின் விலைகளுக்குமிடையேயிருந்த வித்தியாசத்தின் காரணமாக ஏற்பட்ட பொருள் கொள்வனவுச் சத்திக் குறைவே அக்குறைபாடாகும். இது உலகெங்கும் காணப்பட்ட குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும் ; ஆனால் இரசியாவில் தலையாய நிருமாண வேலைக்காகத் தேசிய மூலவளங்களை ஒருமுகப்படுத்தியமையால் பொருட் தட்டுப்பாடு ஏற்பட்டு, அந்நிலைமை மேலும் சிக்கலாகியது. விவசாயப் பொருள்களுக்கும், கைத்தொழிற் பொருள்களுக்கும் விலை சம்பந்தமாயிருந்த வித்தியாசத்தினால் (அது கத்தரிக்கோல் எனக் கூறப்பட்டது), உழவர்கள் தங்களுடைய தானியங்களுக்கு மாற்றாகக் குறைந்த பொருள்களையே பெற்றார்கள். "சோவியத்துகள் எனக்கு நிலம் கொடுத்தன ; அதைக் கொண்டு நான் என்ன செய்வது ? நான் நிலத்தை உண்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமா? எனக்குக் குதிரை கிடையாது; குதிரையின்றி நான் நிலத்தில் என்ன செய்ய முடியும்? பண்டைக்காலத்தில் எம்மிடையே கொடியோனை இரசிய சார், நிலப்பிரபுக்கள், சுரண்டி வாழ்வோர் ஆகியோர் இருந்தார்கள்; இருந்தபோதி திலும் என் குதிரை இறந்துவிட்டால் வேறொன்றை நான் எப்போதும் வாங்கக்கூடியதாயிருந்தது; சப்பாத்துக்களும், 'தோல் துணியும்' நான் வாங்கக் கூடியதாயிருந்தது. இப்போ தோ சாரில்லை, நிலப்பிரபுக்களில்லை, சுரண்டுவோரில்லை; என்ற லும் குதிரையோ, சப்பாத்துக்களோ, தோல் துணியோ, அன்றி வேறெதுவுமோ நான் வாங்கமுடியவில்லை"[1] என்று ஒரு முசிக்கு (உழவன்) கூறியதாகச் சொல்லப்படுகின்றது. உற்பத்தியைக் குறைப்பதன் மூலம் உழவர்கள் நிலைமையைச் சமாளித்தனர்; அச் செய்கையினால் வறட்சிக்காலத்தில் பஞ்சம் ஏற்பட்டது.

இரண்டாம் விவசாயப் புரட்சி.

உழவர்கள் குடியிருப்பதற்கு நிலத்தைக் கொடுத்த முதலாவது விவசாயப் புரட்சியானது, சோவியத்து அரசிலுள்ள கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கு மிடையேயும், பண்ணைத் தொழிலாளர்களுக்கும் கைத்தொழிலாளர்களுக்கு மிடையேயும் ஒரு நெருக்கடியான நிலையை ஏற்படுத்திவிட்டது. பத்தாண்டுகளுக்குப் பின்னர் இரண்டாவது விவசாயப் புரட்சி ஏற்பட்டது. அது தனிப்பட்ட உழவனிடமிருந்து நிலத்தை எடுத்து ஒரு குழுவினர் கையில் ஒப்படைத்து, அதன்மூலம் அந்த நெருக்கடியைத் தீர்த்தது. இரு நோக்கங்களுக்காக இப்பூட்கையில் மாற்றம் செய்யப்பட்டது. முதலாளித்துவ சமுதாய முறை என்ற இலட்சியத்தைப் புதிதாக உருவாக்கியவர்களையும், முன்னையவர்களைவிடச் சிறிது நல்ல நிலையிலிருந்த உழவர்களையும் கொண்டதான ஒரு புது நடுத்தர வகுப்பினர் வளர்ச்சியுறுவதைக் கண்டும், பெரும்பான்மையோர் வேளாண்மைத் தொழிலாளர்களாகவுள்ள ஒரு நாட்டில் இந்நடுத்தர வகுப்பினரிருந்தால் அந்நாடு சமவுடைமைப் பொதுநலவாயம் என்ற பெயருக்கேற்றதாயிராது போய்விடுமென்று உணர்ந்தும் பொதுவுடைமைத் தலைவர் பலர் அஞ்சினர். தமது அயலவரைவிட, ஒரு சிறிதளவு நல்ல நிலைமையிலிருந்த உழவர்கள், சுரண்டிவாழ்வோர் எனக் கருதப்பட்டனர்; "கிராமங்களில் வாழ்ந்த முதலாளிகள்" என்று இழிபெயர் சூட்டப்பட்ட "பணக்கார உழவர்" (குலாக்குகள்)களை ஒழிப்பதற்கென ஈவிரக்கமற்ற ஓர் இனப் போராட்டம் தொடங்கப்பட்டது. சிதாலினுடைய கட்சிக்கும், திராட்சுகியினுடைய கட்சிக்குமிடையே யிருந்த சச்சரவுக்கான முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று, தனிப்பட்டவர்களுடைய

[1] M. Hindus, "Humanity Uprooted"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மையை ஒழிக்க வேண்டுமெனத் திராட்சுகி கோரியதும், அது வேளாண்மை உற்பத்தியைக் குறைத்துவிடும் என்ற நம்பிக்கையில் சிதாலின் அதை முதலில் எதிர்த்ததுமாகும். என்றாலும், திராட்சுகியின் வீழ்ச்சிக்குப் பின்னர், பெரிதளவு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டபோது, 1928 இல் அரசாங்கம் தானியத்தை இறக்குமதி செய்யவும், உணவுப் பங்கீட்டைப் புகுத்தவும் வேண்டியதாயிற்று ; அச்சமயம் சிதாலின் தனது முந்திய கொள்கையைத் திடீரென மாற்றிக்கொண்டான். இரசிய நாட்டு உழவர்களுடைய வேளாண்மையைக் கொண்டு அந்நாட்டு நகர்ப்புறத்தவர்க்கு உணவளிக்கவும், தானியத்திற்கு மாற்றாக இயந்திரங்களையும் மூலப்பொருள்களையும் இறக்குமதி செய்வதற்கான வழிவகைகளைச் செய்யவும் இயலாது என்ற கருத்து, உற்பத்தியில் குறைவு ஏற்பட்டமையினால் உண்டானது. விற்பனைக்காகப் பெரிதளவு தானியத்தை விளைவித்த பெரும் பண்ணை நிலங்கள் அங்கிருந்தமையால், இரசியா உலகத் தின் தானியக் களஞ்சியங்களி லொன்றாகவிருந்தது. நிலப் பரப்புக்கள் கூறுபடுத்தப்பட்டபோது இந்நிலையிருக்கவில்லை. இதனால், வேளாண்மையைப் பெருக்குவதற்கு இயந்திர உபயோ கம், உரமிடுதல், மாற்றுப் பயிர்ச்செய்கை, உயர்ந்த தொழினுட் பத்திறன் என்பனவற்றை மீண்டும் கையாளவேண்டியது அவசிய மாயிற்று ; இவையாவும் சிறுநில உழவரது வருவாய்களுக்கு அப்பாற்பட்டவையாயிருந்தன. இந்த நிலங்கள் பரப்பில் மிகச் சிறியனவாகவும், திறமையாக வேளாண்மை செய்வதற்கு முடி யாத சிதறிய துண்டுகளாகவுமிருந்தன ; மூன்றிலொரு பங்கு நிலங்களில் இரும்புக் கலப்பை கிடையாது ; ஆனால் மரத்தாலான உழுபடைமட்டுமே இருந்தது ; நான்கிலொரு பங்கு நிலங் களில் உழுவதற்குக் குதிரையோ, எருதோ கிடையாது. ஆதலால் உற்பத்தியைப் பெருக்குவதற்கானதொரு சாத்தியமான நட வடிக்கையாகத் துண்டு நிலங்களை அரசாங்கம் ஒன்றுசேர்த்து பெருநிலங்களாக்கும் கொள்கையைக் கையாண்டது ; ஆனால் அது தனிப்பட்டவரின் முயற்சியை ஒழித்து, அப்போதிருந்து வந்த சமவுடைமை இலட்சியத்திற் கேற்ற வகையில், கிராமப் பொருளாதாரத்தை அமைத்திருக்கலாம் ; அதன் மூலம் அதிக உற்பத்தி செய்திருக்கலாமென்று வாதாடப்பட்டது சுருங்கக் கூறின், கூட்டுவேளாண்மையின் இரு நோக்கங்கள் எவையெனில், முதலாவதாக, வேளாண்மைக்கு இயந்திரங்களை உபயோகிப்பதாலும், நவீன முறைகளைக் கடைப்பிடிப்பதாலும் இரசிய நாட்டு உழவனின் பிற்போக்கான நிலையை உயர்த் துவதாகும் ; இரண்டாவதாக, சொத்துரிமை சம்பந்தமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுத் தொடர்புகள் மூலம் சமுதாய அமைப்பை மாற்றுவ தாகும்.

கூட்டு வேளாண்மை இயக்கம்.

உழவர்களுடைய நிலங்களைக் கூட்டாகச் சேர்க்கும் கொள்கை 1929 இல் முடிவுசெய்யப்பட்ட காலந்தொட்டு உறுதியுடன் செயற்படுத்தப்பட்டது. கூடுதலான உற்பத்தியின் பொருட்டுச் சிறு நிலங்களை ஒன்று சேர்ப்பதற்குச் சாதகமாக என்ன சொல்லப்பட்டபோதிலும், இம்மாற்றம் செயற்படுத்தப்பட்டமுறை யோ, அபாக்கியசாலிகளான உழவருக்கு வேண்டுமென்று இழைக்கப்பட்ட கொடுமையோ நியாயம் என்று சொல்ல இட மில்லை. "குலாக்கு" களின் நிலங்கள், வீடுகள், கால் நடை கள், உழவுக் கருவிகள், சொந்த உடைமைகள் ஆகியவற் றைப் பறிமுதல் செய்வதன்மூலம் அவர்களை ஒழிக்குங்கருமம் வெற்றியுடன் செய்து முடிக்கப்பட்டது; அவர்களில் அநேகர் சுடப்பட்டனர்; மற்றவர்கள் கிராமங்களிலிருந்து வெளியேற்றப் பட்டனர். "இவ்வித நிர்ப்பந்தமான முறையில் நூறுயிரக் கணக்கான மக்கள் எங்ஙனம் ஒழிக்கப்பட்டனரென்பது பற் றிப் புள்ளி விபரங்கள் கிடைத்தில; மக்கள் அனுபவித்த துன்பங்கள் சணக்கிலடங்கா." கூடுப்பண்ணைகளிற் சேருமாறு வனைய உழுதொழிலாளரும் மிகவும் வற்புறுத்தப்பட்டனர்; ஓராண்டுக்குள்ளாக (1929–30) உழவர்களின் நிலங்களில் பாதிக் குமேல் ஒன்று சேர்க்கப்பட்டது. இத்துணை வேகமாக இந் தக் கட்டாயக் கூட்டுமுறை செயற்படுத்தப்பட்டது. இதனை நிறைவேற்றியவர்கள் தம் நிதானத்தை யிழந்து மூர்க்கத் தனமான ஆர்வத்துடன் நடந்துகொண்டனர்; எனென்றால் கூட்டுவேளாண்மைக்குப் போதிய இயந்திரங்கள் கிடைக்க வில்லை; உழவர்களும் அதனை எதிர்த்துக் கிளர்ச்சி செய் தனர். எனவே கூட்டுநிலவேளாண்மைஇயக்கத்தின் வேகம் குறைந்தது; என்றாலும் 1937 ஆம் ஆண்டளவில் 220 இலட் சம் உழவோர் குடும்பங்கள் வசித்துவந்த நிலங்களில் 92 சத விகிதத்திற்குக் குறையாத நிலங்கள் ஏறக்குறைய $2\frac{1}{2}$ இலட்சம் கூட்டுப்பண்ணைகளாக ஒன்றுசேர்க்கப்பட்டன; தொகையில் 20 இலட்சம் உழவோர் குடும்பங்களுக்கும் குறைவானவர்களே தமது நிலங்களைத் தம் சொந்த உபயோகத்தில் வைத்திருந் தனர்.

கூட்டுப் பண்ணைகளின் வகைகள்.

கூட்டுப் பொருளாதாரத்தின் வெவ்வேறு தரங்களைக் குறிக் கின்ற மூவிதக் கூட்டுப்பண்ணைகள் (கொல்கோசி)[1] இரசியாவில் இருந்தன. முதலாவது வகை, மிருகங்களைத் தனிப்பட்டவர்

1 J. Stalin, "Building Collective Farms".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தமாக வைத்திருந்தபோதிலும், நிலத்தைத் தானிய உற்பத்திக்காகப் பொதுவில் பயிர்செய்துவந்த உறுப்பினர்களைக் கொண்ட இணைப்பாகும். இரண்டாவது வகை, வேளாண்மை "ஆட்டெல்" என்றழைக்கப்பட்டது; அதாவது நிலத்தைக் கூட்டாகப் பண்படுத்தும் தொழிலைப் பங்கிட்டுச் செய்வதற்கும், அத் தொழிலின் பொருட்டுக் கால்நடைகளையும், கருவிகளையும், பண்ணைக் கட்டடங்களையும் மூலதனமாகக் கொடுப்பதற்குமாக ஒன்று சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட இணைப்பே இரண்டாவது வகையென்க. இவ்வாறு நிலம், உழைப்பு, மூலதனம் ஆகியவை ஒன்று கூட்டப்பட்டன; ஆலை வசிப்பிடங்கள், தோட்டநிலங்கள், கறவையாடுகள், கால்நடைகள், கோழிப்பண்ணைகள் ஆகியவை தனிப்பட்டோர் வசமேயிருந்தன. மூன்றுவது வகை, தானியத்தை மட்டுமன்றி, கிராமப்பொருளாதாரத்தின் எல்லா அம்சங்களையும் கூட்டுச் சேர்ப்பதாய் அமைந்தது; வீடுகள் சமுதாயத்திற்குச் சொந்தமாயிருந்தன. உற்பத்தியும், பங்கீடும் சமூகவுடைமையாக்கப்பட்ட அளவில் இந்த மூன்றுவது வகை மிகுந்த முன்னேற்றத்தைக் குறிப்பதாகும். இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட "ஆட்டெல்" மிக முக்கியமான வகையாகும். அது உறுப்பினர்களும், நிருவாகக் குழுவினரும் சேர்ந்த ஒரு பொதுக்கூட்டத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. அரசாங்கத்தால் எலவே நிருணயிக்கப்பட்ட பிரகாரம், விளைவில் குறிக்கப்பட்ட அளவை அரசாங்கத்திற்குக் கொடுப்பது கூட்டுப்பண்ணையின் கடமையாய் இருக்கின்றது. அதன்பின்னரே மிகுந்திருக்கும் விளைபொருளை அது சந்தையில் விற்கின்றது. வருமானம் சமமாகப் பங்கிடப்படாமல் ஒவ்வொருவரும் செய்த வேலையையொட்டி அவர்களிடையே பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. கொள்கையளவில், ஒன்று சேர்க்கப்பட்ட பண்ணைகளின் நன்மைகள் பற்றி எதிர்வாதஞ் செய்வதற்கில்லை. ஏனெனில் வேளாண்மை உற்பத்தியைத் தனிப்பட்டோர் முயற்சியில் விட்டுவிடாது, நாடு முழுமைக்குமாகத் திட்டமிடுவதற்கு இதனால் வழியேற்படுமென்பதுறுதி; திட்டத்தின்படி ஒவ்வொரு பண்ணைக்குமுரிய பங்கு குறிக்கப் பெறுகிறது; இந்த முறைப்படி சமூகத்தின் உண்மையான தேவைகளுக்கேற்ப, தடையெதுவுமின்றிப் பொருள்கள் விளைவித்துக் கொடுக்கப்படக்கூடும். அன்றியும், பிரிக்கப்பட்ட துண்டு நிலங்கள் இயந்திரங்கள் உபயோகிக்கப்படுத்தப்படக்கூடிய அளவினவாயமைந்தமை, இந்த முறையினாலேற்பட்ட மற்றொரு நன்மையாகும். இயந்திரக்கலப்பை அதிக ஆழத்திற்கு நிலத்தை உழுகின்றது; அத்துடன் கூட்டு அறுவடைக்கான இயந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரத்தைப் பிரயோகிப்பதனால் மக்கள் சிரமப்படத்தேவையில்லை. மேலும் சிறந்த ஆலோசனை பெறப்படக் கூடியதாயும், சிறப்புத் திறமைபெற்ற தொழிலாளர் வேலைக்கமர்த்தப்படக்கூடியதாயும், உரங்களும் விஞ்ஞானம் பற்றிய முறைகளும் பயன்படுத்தக்கூடியதாயும் கூட்டுப்பண்ணைகள் விளங்குகின்றன. ஆதலால் குறைந்த தொகைத் தொழிலாளர்களைக் கொண்டு மிக அதிக உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் (நிலையற்ற கால நிலை அனுமதிக்குமளவுக்கு) நடைபெறும் கைத்தொழில் முறைபோன்று விவசாயஞ் செய்யலாம். தனிப்பட்ட உழவர்களுடைய நிலங்களை விடக் கூட்டுப்பண்ணைகளை பொருளாதாரச் சிறப்புடையவை என்று சொல்லப்பட்ட போதிலும், செயல்முறையில் அவைகள் தம் இலட்சியத்தில் வெற்றியடையவில்லை. எவ்வாறெனினும் கூட்டுப்பண்ணைகள் சமவுடைமை நிறுவனங்களாகமாட்டா; ஏனெனில் அவை அரசாங்கத்தாலன்றி, கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்ட தாபனங்கள்; சட்டமுறைப்படி நிலம் அரசாங்கத்தின் உடைமை என்றாலும், அந்நிலமானது அதிலிருந்து கிடைக்கின்ற இலாபங்களை அனுபவிக்கும் கூட்டுறவு உற்பத்தியாளர் குழுவிற்குச் சொந்தமாயிருக்கின்றது. (சொவுகோசி என்ற) அரசாங்கப் பண்ணைகள்—கூலிக்கமர்த்தப்பட்ட வேலையாட்களால் பயிரிடப்படுபவை—சோவியத்து இரசியாவில் இருக்கின்றன; ஆனால் விவசாயத்தைச் சமூகவுடைமையாக்குவதில் அப்பண்ணைகள் வெற்றிகாணவில்லை; ஏனெனில் அவைகள் இதுவரை உழுது பயிர் செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 10 சதவீதத்திற்கும் குறைவாகவேயுள்ளன; அன்றியும் இந்தக் கூட்டுப்பண்ணைகள் பொதுவுடைமை நிறுவனங்களுமன்று; ஏனெனில் உழைப்பாளியின் தேவைகளைக் கொண்டன்றி அவனுடைய உழைப்பை அடிப்படையாகக் கொண்டே இப்பண்ணைகளில் அவனுக்குக்கூலி கொடுக்கப்படுகின்றது. உண்மையில், கூட்டுப்பண்ணை முறை "நிலப்பொருளாதார வருமான வேறுபாட்டை" நீக்குவதிற்கூட வெற்றிபெறவில்லை; காலநிலை, நிலம், நகர்ப்புறச் சந்தைகளை எளிதில் அடைதல், மற்றும் கூட்டுப்பண்ணைகளிடையே சமத்துவ மின்மையை ஏற்படுத்துகின்ற காரணிகள் ஆகியவற்றால் கூட்டுப்பண்ணைக்காரரது தராதரத்தில் ஏற்படுகின்ற வித்தியாசங்களே "நிலப்பொருளாதார வருமான வேறுபாடு" எனப்படும். இதன் விளைவாக அந்தக் கூட்டுப்பண்ணைகளுக்கிடையே ஒரு பெரும் வேற்றுமை இருக்கின்றது. அவற்றுட் சில செழிப்பானவையாக மாறியுள்ளன; மற்றவை செழிப்பற்ற நிலையிலேயே யிருக்கின்றன; இந்நிலையால் "கோடீசுவரன் கோல்கோசி" என்று வழங்கப்பட்ட ஒரு வகுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினர் உருவாகிவிட்டனர். குலாக்குகள் ஒழிக்கப்பட்டபோதிலும், சுதந்திரமுடைய உழுதொழிலாளர் மிகக் குறைந்த சதவிகித மாகவேயிருந்தபோதிலும், சோவியத்து இரசியாவின் வேளாண்மைச் சமூகமானது செல்வநிலை, சமுதாயநிலை யென்பவை சம்பந்தமான வேறுபாடுகளிலிருந்து விடுதலை பெறவில்லை என்பது தெளிவாகின்றது.

கைத் தொழில்கள் தேசிய வுடைமை யாக்கப்படல்.

பெரிதளவில் செய்யப்படும் கைத்தொழில்கள், கனிப்பொருட் சுரங்கங்கள், வனங்கள், புகையிரதங்கள் ஆகியவை சம்பந்தமான துறைகளில் தனியார் முயற்சிகளுக்குப் பதிலாகச் சமவுடைமைக்கு இடமளிக்கப்பட்டது; இப்போது அத்துறைகள் அரசாங்க முகவர்களின் சொந்தமாக்கப்பட்டு அவர்களால் நடத்தப்படுகின்றன. போல்சிவிக்குப் புரட்சியின் பின்னர் தொழிற் சாலைகளை அவற்றின் முன்னைய சொந்தக்காரர்களிடமிருந்து தாங்களே எடுத்துக்கொள்வது என்று தொழிலாளர்கள் எண்ணியிருந்தார்கள். "கூலிவேலைக்காரர்கள் அமர்த்தப்பட்டுள்ள எல்லாத் தொழில்களிலும் உற்பத்திப்பொருள்கள், மூலப் பொருள்கள் ஆகியவற்றின் கொள்வனவும், விற்பனவும் அப்பொருள்கள் சேமிக்கப்பட்டுள்ள பண்டசாலை, தொழில்களின் நிதி நிருவாகம் ஆகியனவும் தொழிலாளர்களுக்குப் புதிதாக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றன" என்று 1917 நவெம்பரில் வெளியான கட்டளையொன்று கூறியது. கணக்காயர், தொழிலுட்பமுடையார் ஆகியோருடைய பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களின் மூலம் தொழிலாளர் தங்கள் அதிகாரத்தைச் செலுத்த வேண்டியதாகவிருந்தது. வேலை நிலையங்களுக்குத் தன்னுட்சியுரிமை வழங்கப்படவேண்டுமென்பது பற்றிச் செய்யப்பட்ட பரிசோதனை தோல்வியடைந்தது. ஒருசில மாதங்களில் (யூன் 1918) ஒரு புதிய உத்தரவின்மூலம் அரசாங்கக் குழுவொன்றினால் நியமிக்கப்பட்ட மேலாளரொருவனுடைய அதிகாரத்தின்கீழ் ஒவ்வொரு தொழிற்சாலையும் கொண்டுவரப்பட்டது. அதேசமயத்தில் ஒரு குறிப்பிட்ட தொகைக்கும் அதிகமான மூலதனத்தைக்கொண்ட எல்லாத் தொழில்களும் ஒழுங்கு முறைப்படி பறிமுதல் செய்யப்பட்டு, சோவியத்து அரசாங்கத்தின் சொத்து எனப் பிரகடனஞ் செய்யப்பட்டது. முதலாளிகள் தவிர்க்கப்பட்டபடியால், தேசிய வுடைமையாக்கப்பட்ட கைத்தொழில்களுக்கென ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. தரவாரியாகவோ பிரதேச வாரியாகவோ தொழிற்சாலைகள் ஒன்று சேர்க்கப்பட்டு, அத்தொழிற்சாலைகளுக்குரிய சங்கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களான பொறுப்புறுதிக் குழுக்களை அடிப்படையாகக் கொண்டு தொழில்கள் அமைக்கப்பட்டன. அரசாங்கத் தலைமைப் பொருளாதாரக் கழகத்தின் அதிகாரத்திற்குட்பட்டு, வியாபார, பொருளாதாரத் துறைகளில் இப்பொறுப்புறுதிக் குழுக்கள் போதுமான அளவில் தன்னுரிமை அனுபவிக்கலாயின. உறுப்பினர்களின் பொருள்களை விற்பதற்குப் பொறுப்புடைய பொதுவான விற்பனை அமையங்களை ஏற்படுத்துவதற்காகப் பொறுப்புறுதிக் குழுக்களில் அநேகமானவை ஒன்று சேர்ந்தன. இப்பொதுவான விற்பனை அமையங்கள், சிந்திக்கேற்றுக்கள் என்று வழங்கப்பட்டன. பின்னர் அரசாங்கத்தினது உற்பத்தித் திட்டத்தின் தெளிவான விவரங்களைக் கணக்கிடும் வேலை சிந்திக்கேற்றுக்களுக்குக் கொடுக்கப்பட்டது. அப்போது அவைகள் விற்பனைக்கூட்டுக்கள் என்று குறிக்கப்பட்டன. திட்டத்தை நிறைவேற்றவேண்டியது, பொறுப்புறுதிக் குழுக்களுடைய மேற்பார்வையில் தொழிற்சாலைகளின் கடமையாயிற்று. ஒவ்வொரு தொழிற்சாலையும் தான் பெறும் மூலப்பொருள்களின் தன்மை, விலைகள் ஆகியவை பற்றியும், தான் கொடுக்க வேண்டிய கூலி விகிதம் பற்றியும் கட்டளைகளைப் பெறும்; குறிப்பிட்ட விலையில், குறிப்பிட்ட அளவு பொருள்களைக் கொடுப்பதற்கும் அது ஒப்புக்கொள்ளும். மூன்று வழிகளில் தொழிலுக்கு மூலதனம் கிடைக்கின்றது. பொறுப்புறுதிக் குழு தனது இலாபத்தினின்று சேர்த்து வைக்கும் சேமநிதிகள், நிதியகங்கள் கொடுக்கும் முற்பணங்கள், அரசாங்கம் வழங்கும் பெரும் பண உதவிகள் ஆகியவை அவ்வழிகளாகும். இலாபத்தில் ஒருபகுதியை அரசாங்கம் எடுத்துக் கொள்கின்றது; மீதியானது பொறுப்புறுதிக் குழுவின் சேமநிதிக்கும், சமுதாயநல கல்விக் கருமங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு ஒரு தொழிலின் இலாபத்தை மற்றொரு தொழிலை நடத்துவதற்கான மூலதனமாக அரசாங்கம் உபயோகப்படுத்த முடிகின்றது; ஒரு பொறுப்புறுதிக் குழுவிற்கு ஒதுக்கப்பட்ட அரசாங்கப் பணவுதவி, அதன் இலாபத்தின்மீது விதிக்கப்பட்ட வரியினும் அதிகமாகலாம். அரசாங்கத்திலை விலைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன; பொதுநலன்களுக்குப் பயன்படுவதாயிருந்தால் உற்பத்தி விலையினும் குறைவாகவே பொருள்கள் விற்கப்படலாம். இலாபம் பெறுதல் இரண்டாவதாகக் கவனிக்கப்பட வேண்டிய தொன்றே; எனெனில் திறமையை இலாபத்தைக் கொண்டு அளவிடாமல், உற்பத்தி, அதற்கான செலவு, அதன் தரம் ஆகியவற்றைக் கொண்டே அளவிடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடப்பட்ட பொருளாதாரம்.

அரசாங்கத்தின் உற்பத்தித் திட்டத்தைப்பற்றி முன்னர் சுட்டிக் காட்டப்பட்டது. ஆயிரக்கணக்கான முதலாளிகள் நீக்கப்பட்டமையால் ஒரு திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தைப் பின்பற்றுவது அவசியமாயிற்று. அம்முதலாளிகளுடைய செயல்கள்—போட்டியின் அடிப்படையில் விலைவாசிகளை முடிவுசெய்யும் சந்தையில் இலாபத்தை நோக்கமாகக் கொண்டு—பொருளை உற்பத்தி செய்தற்கும் அப்பொருளை நுகர்தற்கும் இடையே சமமான பொருளாதார ஒத்துழைப்பைப் பெற்றுத்தரும் எனக் கருதப் பட்டது. அவர்களின் கடமை (கோசுப்பிளான் எனப்பட்ட) அரசாங்கத் திட்டக்குழு வொன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அக்குழு நாட்டின் பொருளாதார முயற்சிகளை இயக்கி, உற்பத்தி முறைகளின் அளவையும் தன்மையையும் தீர்மானிக்கின்றது. "தேசியப் பொருளாதாரம் பற்றிய அரசாங்கத் திட்டத்தின்" குறிக்கோள்கள் யாப்பமைப்பில் தெளிவாக்கப் பட்டுள்ளன. இத்திட்டத்தின் முதலாவது குறிக்கோள், தொழில் மயமாக்குவது சம்பந்தமான உணர்ச்சி வேகத்தை அதிகப் படுத்துவதன் மூலம், நாட்டின் "சுதந்திரத்தை வலுப்படுத்துவதாகும்." "தனி அதிகாரக் கொள்கையைப் பின்பற்றுவதில் பொருளாதாரத் தன்னிறைவை நோக்கமாகக் கொண்டுள்ள ஏனைய அனைத்தாண்மை நாடுகள் வரிசையில் சோவியத்து இரசியா இருக்கின்றது. இரண்டாவது குறிக்கோளாவது, வயல்கள், கனிப்பொருட் சுரங்கங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் உற்பத்தியாகும் செல்வங்களைப் பெருக்கிச் செழிப்புண்டாக்குவதனால் "உழைப்பாளிகளுடைய பொருளாதார, கலாசார நிலையை உயர்த்துவதாகும்". அதற்காகவே "முதலீட்டுப் பொருள்களின் (தொழிற்சாலைகள், இயந்திரங்கள், சத்திநிலையங்கள் முதலியன) முறையான உற்பத்தியையும், அதனையடுத்து நுகர்வுக்கான பொருள்களின் (சொந்த உபயோகத்திற்கானவை) உற்பத்தியையும் பெருக்கும் எண்ணங் கொண்டுள்ள "ஐந்தாண்டுத்திட்டங்கள்" பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. "எமது மக்களின் பலவீனம் தொழினுட்பப் பிற்போக்காகும், அதனை நீக்குதற்குத் 'தொழினுட்பத்தேர்ச்சி' பெறுவதே எம் கட்சியின் இலட்சியமாகும்"[1] என்று சிதாலினுடைய அறிக்கையொன்று எடுத்துக் கூறிற்று; "உலகப் புரட்சி" இலட்சியத்தை இந்தப் புதிய இலட்சியம் மறைத்துவிட்டது; அல்லது அதன் முக்கியத்துவத்தையாவது இழக்கச் செய்து விட்டது. முன்னைய தற்காகப் போரிட்டவர்கள் தங்களுடைய வாள்களை இயந்திரக் கருவிகளுக்காக[2] மாற்றிக்கொண்டனரென்று பொருத்தமாகச்

[1] J. Stalin, "Mastering Bolshevism",
[2] M. T. Florinsky, "World Revolution."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்டிருக்கின்றது. பொருளாதாரச் சுதந்திரத்துடன் செல்வ உற்பத்தியையும் பெருக்கவேண்டுமென்ற நோக்கங்களுடன், தொழில் மயமான அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தைத் திருத்தி அமைத்தலே சோவியத்து அரசாங்கத்தின் இலக்காக இப்போது இருக்கின்றது. எலவே "ஐந்தாண்டுத் திட்டங்கள்" கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கும், அதற்கேற்றுப்போல் தொழிற்சாலைத் தொழிலாளர்களது எண்ணிக்கை அதிகரிப்புக்கும் காரணமாகவிருந்து வந்துள்ளன. அன்றியும், கைத்தொழில் முறைமையின் முக்கியமான தீங்குகளிலொன்றுகிய வியாபார மந்தங்கள் பருவந் தவறுது அடிக்கடி ஏற்படுதல், பெரும்பாலோர் வேலையற்றிருத்தல் ஆகிய வற்றை ஒரு திட்டமிடப்பட்டுள்ள பொருளாதாரம் ஒழித்துவிடும் என்றும் நம்பப்பட்டது.

கூலி பெறுவோரின் படித்தரம்.

சமவுடைமைக் கைத்தொழில் முறையொன்றில் கூலி பெறுபவனுடைய படித்தரம் "தொழிற்சாலையைக் கட்டுப்படுத்தும் மூக்கோணத்தின் மூலம்" (அது அவ்வாறு அழைக்கப்பெற்றது) புலப்படுகின்றது. தொழிலை இயக்குதற்குப் பொறுப்பாயுள்ள மேலாளர், பொதுவுடைமைக் கட்சியின் உறுப்பினர்களடங்கிய கட்சிக்குழுவினர், தொழிற்சங்கத்தின் பிரதியாளர்களான தொழிற்சாலைக் குழுவினர் ஆகியோரே இம்மூக்கோணத்தில் உள்ள உறுப்பினராவர். தொழிற்சங்கம் மேலாளர்மீது எவ்விதக் கட்டுப்பாட்டையும் செலுத்தமுடியாது ; எனவே சோவியத்துத் தொழிற்சாலை ஒரு கைத்தொழிற் குடியரசாகும் என்பது மறுக்கப்படுகின்றது. தொழிலாளர் நேரடியாகத் தொழிலைக் கட்டுப்பாடு செய்கிறதில்லை யென்றாலும், அவர்களுடைய நலனைக் கருதியே அது நடத்தப்படுகின்றது. முதலாளித்துவ நாடுகளிலுள்ளதைப்போன்று சோவியத்து இரசியாவிலுள்ள தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களுடைய நிலைமையை மேம்படுத்துவதற்குமான கருவிகளாக அமைந்தில. அவைகளின் முதன்மையான நோக்கம், உற்பத்தியைத் துரிதப்படுத்துவதற்கான வழிவகைகளை அமைப்பதாகும். பொதுவுடைமைக் கட்சியிலுள்ள சண்டிப்பான கட்டுப்பாடு தொழிற்சாலையிலிருக்க வேண்டிய ஒழுங்குக்கு ஓர் உறுதியீடாக விருப்பதுடன், உற்பத்தியைத் தூண்டுவதற்கான முயற்சிகளைப் பெரும்பாலும் தடை ஏற்படாதவாறு பாதுகாப்பதுமாகும். இரசிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமாயின், உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்படுகின்றது ; "ஒவ்வொருவனுக்கும் அவனவனது தேவைகளுக்கேற்றுப்போல்" என்ற பொதுவுடைமைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவம், "ஒவ்வொருவனுக்கும் அவனவனது வேலைக் கேற்றுப்போல்" என்ற சமவுடைமைத் தத்துவத்தின் (யாப் பமைப்பில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது) பொருட்டு நிராகரிக் கப்படுகின்றது.

தனிப்பட்டவர் முயற்சிகள் நிலைத்தமை.

பொறுப்புறுதிக் குழுக்களாலோ மாநகர சபைகளாலோ அல் லது நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களாலோ நடத்தப்படுகின்ற பரும்படி முயற்சிகளில் ஈடுபட்டுக் கூலி பெறுவோரெல்லோரும் கைத்தொழிலாளரல்லர். சமவுடைமைப் பொருளாதாரத் திட்டத் தோடு, "மற்றவர்களது உழைப்பைச் சுரண்டிப் பெறுவதை விடுத்து, தனது சொந்த உழைப்பையே அடிப்படையாகக் கொண் டிருக்கும் தனிப்பட்ட கைத்தொழிலாளர்களுடைய சிறிய தனிப் பொருளாதாரம்" தழைப்பதையும் யாப்பமைப்புத் தெளிவாக அனுமதிக்கின்றது. வீட்டு உபயோகத்திற்கான பொருள்களை உற்பத்தி செய்வோரும், உற்பத்திக் கருவிகளையும் தங்கள் உழைப்பால் உற்பத்தி செய்த பொருள்களையும் சொந்தமாகக் கொண்டிருப்போருமான பல நூறுயிரக்கணக்கான கைத்தொழி லாளர்கள் இரசியாவில் இருக்கின்றார்கள். அவர்களில் அநேகர், சொந்தமாக உற்பத்தி செய்வோருக்கான சங்கங்களாக விளங்கு கின்ற உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துள்ளனர். அதன் விளைவாக, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்படாத கைத் தொழில்கள் சம்பந்தமான சிற்றளவு முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றுள்ளன. இவ்வாறுகச் சோவியத்து இரசியாவில் "தொழில் உலகம்" பலதரப்பட்டதாயிருக்கின்றது. அவ்வுலகின் ஒரு பகுதியினர் தொழிற்சாலைகள், புகையிரதங்கள், கனிப் பொருட் சுரங்கங்கள், காடுகள், அரசாங்கப் பண்ணைகள் ஆகிய சமூகவுடைமையாக்கப்பட்ட தொழில்களில் கூலிக்கமர்த்தப்பட்டி ருக்கின்றனர். மற்றொரு பகுதியினர் கைத்தொழிற் குழு, விவசா யக் குழு ஆகியவற்றுல் உருவாக்கப்பெற்ற கூட்டு உற்பத்தியாளரா வர்; மூன்றுவது பகுதியினர், உழவர், மீன்வலைஞர், இயந்திர மியக்குநர், ஆடை நெய்வோர், பத்திரிகையாளர் ஆகியோ ரடங்கிய சுதந்திர உற்பத்தியாளராவர். கூலி வேலை செய்யாமலே ஒரு தொழிலாளி வயிறு வளர்க்க முடியும் என்பதை, அரசினரே உற்பத்திக் கருவிகளின் ஏக சொந்தக்காரரல்ல என்ற உண்மை யிலிருந்து அறியலாம். மேலும் சமூகத்திற்குச் சொந்தமான "பலவகைத் தொழில்கள்" அநேகமிருந்தமையால், ஒரு முத லாளியைத் தன் விருப்பம்போல் தெரிவுசெய்துகொள்ளக்கூட ஒரு கூலியாளுக்கு வாய்ப்பிருந்தது. சோவியத்து இரசியாவில் உற்பத்தி சம்பந்தமான கருமங்கள் பெரும்பாலும் சமூகவுடைமையாக் கப்பட்டிருந்தபோதிலும், அவை ஒரே மாதிரியாயிருக்கவில்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புறுதிக் குழுக்கள், மாநகர கிராமப்புற நிறுவகங்கள், உற்பத்தி முறைமைகளை மேற்கொண்டிருக்கும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவையெல்லாம் பல்வேறு அமையவமைப்புகளைக் கொண்டவையாகவும், பல்வேறு வேலைவாய்ப்புகளைக் கொடுக்கக்கூடியவையாகவும் இருக்கின்றன. இந்தவிதமான பல்வகைத் தொழிற்பெருக்கம், உள்நாட்டு வியாபாரத்திலும் பரவுகின்றது ; எவ்வாறெனில், பலவழிதுறைகள் வாயிலாகப் பொருள்கள் விற்கப்படுகின்றன—அரசாங்க வியாபாரம், கூட்டுறவு வியாபாரம், கூட்டுப்பண்ணை வியாபாரம், (உழவர்கள், கைத்தொழில் வினைஞர், மீன்வலைஞர் போன்ற அன்றாட வேலைசெய்யும் உற்பத்தியாளர்கள், தம்பொருட்களை விற்பனைக்காகச் சந்தைகளுக்குத் தடையின்றி எடுத்துச் சென்றுநடத்தும்) "கடை" வியாபாரம் முதலியன பொருட்களை விற்பதற்கான வழிதுறைகளாகும். முன்னர் சில்லறை வியாபாரத்தின் பெரும்பகுதி, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் வசமிருந்தது. அவற்றின் தனியுரிமையை ஒழிக்கவும், போட்டியின்மூலம் சில்லறை வியாபாரத்திற் கையாளப்படும் முறைகளை விருத்தி செய்யவும் மத்தியவரசாங்கத்தினதும், மாநகரசபையினதும் அதிகாரிகளால் நடாத்தப்படும் சில்லறை வியாபாரம் இப்போது தொடங்கப்பட்டது. இதன் விளைவாகப் பெரிய நகரங்களில் கூட்டுறவுக் கடைகளிருந்த விடத்தில் "அரசாங்கக் கடைகள்" இடம்பெற்றன. அன்றியும், கிராமங்களிலேயே கூட்டுறவுக்கடைகள் கவனத்தைச் செலுத்தின. "புதிய பொருளாதாரப் பூட்கை"யின் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்த (இலாபத்திற்காகப் பொருள்களை வாங்கி மீண்டும் விற்பது என்ற) முதலாளித்துவ வியாபாரம், நடைமுறையில் அழிக்கப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகின்றது ; ஏனெனில் இப்போது தனிப்பட்ட சில்லறை வியாபாரியின் இடத்திற்குப் புதிய அமையமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சோவியத்துப் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளாகிய நிதியகங்கள், வெளிநாட்டு வியாபாரம் ஆகியவை அரசாங்கத்தின் தனி உரிமைகளாகவே இருந்து வருகின்றன.

சோவியத்து யாப்பமைப்பு

நாம் இப்போது சோவியத்து இரசியாவின் பொருளாதார அமைப்பை விடுத்து அதன் அரசியலமைப்பை நோக்குவோம். 1936 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய யாப்பமைப்பு, சோவியத்துச் சமவுடைமைக் குடியரசுகளின் ஐக்கியத்துக்குத் "தொழிலாளர்களையும் உழவர்களையும் கொண்ட ஒரு சமவுடைமை அரசாங்கம்" என வரைவிலக்கணங் கூறியது. அதன் அரசியல் அடித்தளம் "உழைப்பாளிகளின் சோவியத்துக்களாகும்"; அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று அதன் பொருளாதார அடித்தளம் "சமவுடைமைப் பொருளாதார முறையாகும்". "நிலங்கள், கனிப்பொருள்கள், நீர்நிலைகள், காடுகள், ஆலைகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், இருப்புப் பாதைகள், கடல் விமானப் போக்குவரத்து முறைகள், வங்கிகள், போக்குவரத்துச் சாதனங்கள், அரசாங்கத்தின் பெரும் விவசாய முயற்சிகள், மாநகர சபையின் தொழில் முயற்சிகள், பட்டணங்களிலும் தொழிற்சாலைப் பிரதேசங்களிலுமுள்ள குடியிருப்புக்களுடன் தொடர்பான முக்கிய சொத்துக்கள் ஆகியவையெல்லாம் அரசாங்கச் சொத்துக்கள்; அதாவது, மக்கள் எல்லோரினதும் உடைமைகள்" என்று அந்த யாப்பமைப்பில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், மறுபுறம் அவர்களுக்கு வேலையிலிருந்து கிடைக்கும் வருமானங்கள், அவர்களின் சேமிப்புக்கள், அவர்கள் குடியிருக்கும் வீடுகள், அவர்கள் தம் சொந்த உபயோகத்திற்கும் வசதிக்குமாகப் பயன்படுத்தும் பொருள்கள் ஆகியவை சம்பந்தமாகக் குடிகளுக்கிருந்த தனிமனித உரிமையும், மரபுரிமை மூலம் வந்த சொத்துக்களைப் பெறுவதற்காகக் குடிகளுக்கிருந்த உரிமையும் சட்டத்தினால் பாதுகாக்கப்படுகின்றன. சோவியத்துச் சமவுடைமைக் குடியரசுகளின் ஐக்கியம் ஒரு கூட்டரசாங்கமாகும். "சம உரிமைகளையுடைய (பதினைந்து) சோவியத்துச் சமவுடைமைக் குடியரசுகள் தாமாக விரும்பி ஏற்படுத்தியுள்ள ஐக்கியம் என்ற அடிப்படையில் அக்கூட்டரசாங்கம் ஏற்பட்டிருக்கின்றது"; "அதைச் சேர்ந்த ஒவ்வொரு குடியரசுக்கும் இந்த ஐக்கியத்திலிருந்து பிரிந்து செல்லும் உரிமை தாராளமாக இருக்கின்றது". அரசாங்க அதிகாரத்தின் மிகவுயர்ந்த உறுப்பு மேலாண்மைச் சோவியத்தாகும். அது "சட்ட அதிகாரத்தைத் தனக்கென மட்டும்" கொண்டுள்ள ஓர் அதிகார நிறுவகமாகும். இந்தக் கூட்டரசுப் பாராளுமன்றம் சமவுரிமை கையுடைய இரு சபைகளைக் கொண்டுள்ளது. இப்பாராளுமன்றம் வைகலில் இல்லாத போது செயல்முறை மன்றமே அதிகாரஞ் செலுத்தும். இச்செயல்முறை மன்ற உறுப்பினர்கள் மேலாண்மைச் சோவியத்தால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சோவியத்திலுள்ள மிக உயர்ந்த நிருவாக உறுப்பு, மக்களின் செயலாளர்களைக் கொண்ட கழகமாகும். தனிப்பட்ட முறையில் பல திணைக்களங்களுக்கும் தலைமை தாங்கி வருகின்ற தனது உறுப்பினர்களின் வேலையை இது "இணைத்து இயக்குகின்றது". குடிகளின் "அடிப்படை உரிமைகள்" எவையெனில் வேலை செய்யும் உரிமை; ஓய்வு பெறும் உரிமை; இலவச மருத்துவ வசதி பெறும் உரிமை; முதுமை, நோய் அல்லது இயலாமை ஆகியவற்றின் போது பாதுகாப்புப் பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை ; கல்வி பெறும் உரிமை ; நாடு, இனம், பால் முதலிய வேற்றுமையின்றி எவ்வேலையிலும் சமத்துவ உரிமை ; மத வழிபாடு, மத எதிர்ப்பிரசாரம் ஆகியவை சம்பந்தமான உரிமை ; பேச்சுச் சுதந்திரம், அச்சுச் சுதந்திரம், கூட்டங்கள் கூட்டுவதற்கும் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்குமான சுதந்திரம், சங்கங்கள் அமைக்கும் சுதந்திரம், இறுதியாக, தனிப்பட்டவனும் அவன் குடும்பமும் பாதுகாக்கப்படும் உரிமை ஆகியவைகளாகும். குடிகளின் "அடிப்படைக் கடமைகள்" எவையெனில், வேலை செய்யும் கடமை, "தொழில் சம்பந்தமான ஒழுங்குடைமை", "சமவுடைமைச் சமுதாய உறவு பற்றிய பிரமாணங்களை மதித்தல்", படைச்சேவை ஆகியவைகளாம்.

"பாட்டாளியரின் சருவாதிகாரத்தை" முடிவுக்குக் கொண்டு வந்து, மக்கள் ஆட்சிக்கு வழி வகுக்க முயற்சிப்பதைப் புதிய சோவியத்து யாப்பமைப்பு எழுத்தளவில் செய்து வந்துள்ளதாக அறியக் கிடக்கின்றது ; ஏனெனில் வகுப்பு அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்குப் பதிலாக அந்த யாப்பமைப்பு "சகல ருக்கும் சமமான நேரடி வாக்குரிமை" யைக் கொண்டுவந்திருக்கின்றது. சமுதாயத்தின் சமூக, பொருளாதார அமைப்பை அழிப்பதற்காக "அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர்' பாட்டாளியர் செய்யவிருப்பது வகுப்புப் போராட்டமே" என்று கூறி "பாட்டாளிகளுடைய சருவாதிகாரத்திற்கு" இலெனின் வரைவிலக்கணம் தந்தான். இப்போது இக்குறிக்கோள் பெரும்பாலும் கைகூடிவிட்டதால், இதுவரை தடைசெய்யப்பட்டிருந்த வகுப்புக்களை இதற்கு மேலும் ஒதுக்காதிருக்கும் பொருட்டுச் சற்று விரிவான அடிப்படையில் சோவியத்து யாப்பமைப்பு திருத்தியமைக்கப் பட்டுள்ளது. நடைமுறைப்படி கூறின், சிதாலின் ஒப்புக்கொண்டதுபோல்[1], "பாட்டாளியரின் சருவாதிகாரம் எதுவெனில், அது உண்மையில் தொழிலாளி இனத்தவருக்கு வழிகாட்டும் விதமாக அமைந்துள்ள பொதுவுடைமைக் கட்சியினரின் சருவாதிகாரமேயாகும்" ; (அக்கட்சியின் சொற்களையே எடுத்தாள்வோமாயின்) "உழைப்பாளிகளின் முன்னணியாகவும் அவர்களது சங்கங்களுக்கு மையமாகவும்" இருக்கும் பொதுவுடைமைக் கட்சியின் ஆதிக்க நிலையை இப்போதைய யாப்பமைப்பு பங்கப்படுத்தாது விட்டு விடுகின்றது என்பதற்கு ஐயமில்லை. சோவியத்து ஐக்கியம் ஒரேயொரு அரசியல் கட்சிக்கு மாத்திரம் இடமளிக்கின்ற

"பாட்டாளியரின் சருவாதிகாரம்."

[1] J. Stalin, "Leninism", vol. i.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாதிக்கம் பொருந்தியதோர் அரசாங்கமாகும். அரசாங்க நிருவாகம், பொருளாதாரமுறை, கலாசார சாதனங்கள் என்பன வற்றைப் பொதுவுடைமைக்கட்சி கட்டுப்படுத்துகின்றது. "எந்த வொரு முக்கியமான அரசியல் அல்லது அமையம் சம்பந்தமான பிரச்சினைபற்றியும் கட்சியின் உத்தரவுகளின்றிச் சோவியத்துக் களாலும், மற்றும் மக்கள் சங்கங்களாலும் ஒரு போதும் தீர்மானிக்கப்படுகிறதில்லை" என்று சிதாலின் எழுதினன். கொள்கையளவிலும், செயல் முறையிலும் கட்சி உறுப்பினர் கள் கட்சியின் பொதுவான கொள்கைக்கு உடன்பாடுடை யோராயிருக்க வேண்டும் என்று கட்சிப் பிரமாணங்கள் விதிக் கின்றன; ஒரு முடிவு செய்யப்பட்டபின், அதைப்பற்றி உறுப் பினர் குற்றங் குறையோ எதிர்ப்போ கூறுவதை அவை தடை செய்கின்றன; ஏனெனில் "பாட்டாளியரின் இரும்பனைய உறுதி யான கட்டுப்பாடு" கட்சி அதிகாரத்திற்கு அவர்கள் முற்றிலும் அடங்கி நடக்க வேண்டுமென்பதை வற்புறுத்துகிறது. உறுப் பினர்கள், கட்சியின் உட்குழுவொன்றை அமைத்துள்ளதுடன், தல சோவியத்துக்கள், தொழிற் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங் கள், "ஆற்றெல்கள்" இன்னும் மற்றக் குழுக்கள் ஆகிய வைகளுக்கான கூட்டங்களில் முன்னோடிகளாகவுமுளர்; பரிபால னம், பொருளாதாரம் சம்பந்தமான எல்லாவமைப்புக்களிலும் அவர்கள் உயர்பதவிகளில் உள்ளனர்; சோவியத்து ஆற்றுவிக் கின்ற ஒவ்வொரு துறைக் கருமங்களிலும் அவ்வவற்றுக்குரிய பூட் கையை உருவாக்கி அதை நிறைவேற்றுவிக்கும் பொறுப்பையும் அவர்கள் தாமே எற்றுக்கொண்டுள்ளனர்.

சோவியத்துப் பொருளாதாரம் பற்றிய கண்டனங்கள்.

மேலே கூறப்பட்ட விவரம் இரசியப்புரட்சியானது அமெரிக்க, பிரான்சிய புரட்சிகளின் வரிசையில் வரலாற்றிலே இடம் பெறு கின்றது என்று காண்பிக்க உதவியாக இருந்திருக்கும். சமுதா யச் சிந்தனையாளர் சிலரால் ஆழ்ந்தாராயப்பட்ட சமுதாயம் பற்றிய ஒரு தத்துவத்தின் அடிப்படையில், ஒரு சமுதாயத்தின் அரசியல், சமுதாய, பொருளாதார முழு அமைப்பையும் மாற்றி அமைக்க இதற்கு முன்னர் இத்துணை முயற்சி எடுக்கப்பட்ட தில்லை. இந்தப் பரிசோதனையில், இரசியாவின் ஆதிக்க எல்லை, அதன் நோக்கம், அதன் செயற்கருவி ஆகியனவே ஒருவரது கவனத்தை ஈர்க்கின்ற அம்சங்களாகும். அதன் ஆதிக்க எல்லை உலகத்தின் நிலப்பரப்பில் எறக்குறைய ஆறில் ஒரு பாகத்தில் வசித்து வருவதும், இப்போது 20 கோடியை அடுத் துள்ளதுமான குடித்தொகை பற்றியதாகும்; அதன் நோக்கம், ஒரு பொதுவுடைமைச் சமுதாயத்தை எற்படுத்துவது பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும் ; அதன் செயற்கருவி, அரசாங்கத்தின் முழு நிருவாக அமைப்பையும் பற்றியதாகும். இரசியாவிலே இருபதாண்டுக் காலத்தில் நிலக்கிழாரும், முதலாளியும் முற்றுக ஒழிக்கப்பட்டுள்ளனர். அங்கு சொந்த உழைப்பை அடிப்படையாகக் கொண்ட உழுதொழிலாளர்கள், கைத்தொழில் வினைஞர்கள் ஆகியோருடைய சிற்றளவுத் தொழில்களைச் சார்ந்தே, தனிப்பட்டோருடைய முயற்சி இயங்கமுடியும் என வரையறை செய்யப்பட்டுள்ளது. பொருள்களில் வியாபாரம் செய்வதாலோ, கூலிவேலையாட்களைச் சுரண்டிவாழ்வதாலோ தனிப்பட்டவர் அடைந்த இலாபம் ஒழிக்கப்பட்டமை, சோவியத்துப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கொள்கையாகவும், முதலாளித்துவப் பொருளாதாரத்தினின்று வேறுபடும் அம்சமாகவும் கருதப்பட்டுள்ளது. இவ்வித மானதொரு சமுதாய அமைப்பையும், மேலுடுகளில் நிலவியிருக்கின்ற கருத்துக்களினின்றும் அடிப்படையான மாறுபாடுகளையுடையதொரு பொருளாதார வாழ்க்கை அமைப்பையும் மிகநுணுக்கமாக ஆராய வேண்டியது இயற்கையே. சோவியத்து அரசாங்கம் பற்றிய கருத்துக்களில் சமகாலத்தவர்கள் வேறுபாடுடையவர்களாயிருக்கின்றனர் ; ஆனால் எல்லாக் குற்றச்சாட்டுக்களும் முதலாளித்துவத்தை ஆதரிப்போரால் வெளியிடப்பட்டவையல்ல ; அதற்கு மாறுக, போல்சிவிக்குப் புரட்சியின்[1] முக்கிய தலைவர்களுள் ஒருவனிடமிருந்தே மிக நுணுக்கமான கண்டனங்கள் வெளிவந்துள்ளன. பழையன கழிந்து புதியன புகுங்கால் ஏற்படும் இன்னல்களுக்கு உரிய அளவில் இடமளிக்கப்பட்ட பின்னரும், இவ்வாருன குற்றங்காணும் கருத்துரைகளால், சோவியத்தின் புகழ்மிக்க ஆட்சியிலுள்ள குறைபாடுகளும் வெளியாகின்றன. அன்றியும் நிறுவகங்களின் அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றம், மக்களுடைய ஒழுக்கத்தின் பிறப்பிடங்களையும் நோக்கங்களையும் அடிப்படையில் மாற்றவில்லை என்ற எண்ணத்தை, குறைகூறும் அக்கருத்துரைகள் நம் மனத்தில் உண்டாக்குகின்றன.

சோவியத்து ஐக்கியம் "வகுப்புப் பாகுபாடற்றது" என்று.

முதலாவதாக, சோவியத்து ஐக்கிய அரசு "வகுப்புப் பாகுபாடற்றது" என்று கொள்ளப்படுவது மறுக்கப்படுகின்றது. நிலக்கிழார்களும், முதலாளிகளும் ஒழிக்கப்பட்டமையினால், உற்பத்திச் சாதனங்கள் தனியார் உரிமையிலிருத்தல் என்ற அடிப்படை காரணமாகச் சமுதாயத்தில் உருவாகியிருந்த

[1] L. Trotsky, "The Revolution Betrayed."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுரண்டுவோர்" "சுரண்டப்படுவோர்" என்ற முந்திய பிரிவினை ஒழிந்ததென்பது உண்மையே; ஆனால் "ஒரேயொரு சமுதாயவர்க்கம்" மட்டுமே அங்கிருக்கின்றது என்ற எண்ணம் புதிய சமுதாயத் தராதரங்கள் தோன்றியமையால் பொய்த்து விட்டதாகக் காணப்படுகின்றது. பாலன உயர் அலுவலர்கள் (அதிகார வர்க்கம்), தொழினுட்ப நிபுணர்கள், திறமை பெற்ற தொழிலாளர்களும் முன்னேற்றமடைந்த கூட்டுப்பண்ணையாளர் களுமடங்கிய உயர்குடியினர் ஆகியோர் புதிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாவர். பல நூறுயிரமாகக் கணிக்கப்பட்ட இச்சமு தாய வகுப்பினர், புதிதாக ஆதிக்கம் பெற்றுள்ள இனத்த வர்களான சமூக வட்டாரங்களைச் சேர்ந்தவர்களாவர்; இவர்கள் சாதாரணப் பொதுமக்களை விட அதிக வருமானம் பெற்றனுப விக்கின்றனர். இதன் விளைவாக, செல்வப் பங்கீட்டிலும் வாழ்க் கைத் தரங்களிலும் ஒரு குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வு உரு வாகியிருக்கின்றது. புதிதாக நிலம் படைத்த ஒரு வகுப்பினர் தோன்றியமை "சமவுடைமையாளரின் கொள்கைகளினின் றும் மத்திய வகுப்பாரின் கோட்பாடுகளுக்கு மாறிய ஒரு பிற் போக்கான நிகழ்ச்சி" எனக் கருதப்படுகின்றது; எனெனில் "ஒற்றுமையின் அடிப்படையிலும் எல்லாத் தேவைகளையும் பொருத்தமான வகையில் பூர்த்திசெய்யும் அடிப்படையிலும் அமைக்கப்படும் வர்க்கப்பாகுபாடில்லாத ஒரு சமுதாயம்" ஏற் படுதற்குப் பொருளாதார, கலாசார ஏற்றத்தாழ்வுகள் மாறுன வையாகும். இப்போது உருவாகிய சமுதாய வேறுபாடுகளின் போக்கு, உத்தியோக பூர்வமான சொற்றொடர்களால் எப்படித் தான் மறைக்கப்பட்டபோதிலும், உண்மையில் தொழிலாளி வகுப்பினரிடை தாழ்ந்த நிலையை மீண்டும் ஏற்படுத்தியது. இந்நிலையையே போல்சிவிக்குப் புரட்சி முன்னெருபோதுமில் லாத அளவுக்கு உயர்த்தத் திட்டமிட்டிருந்ததென்க. மேலெழுந்த வாரியாக நோக்கினால் "எமது நாட்டுத் தொழிலாளி கூலி பெறும் அடிமையல்லன்; அவனெரு சுதந்திரத் தொழி லாளி" என்று சொல்வது உண்மையாகத் தோன்றலாம். உண்மையில் "அரசாங்கம் தொழிற்சாலைகளை ஏற்றுக்கொண் டமை தொழிலாளியின் நிலைமையைச் சட்ட முறைமையாக மட்டும் மாற்றியது. உண்மையில் அவன் வறுமையில் வாழவும், ஒரு குறிப்பிட்ட கூலிக்காக, குறிப்பிட்ட நேரம் வேலை செய்யவும் கட் டாயப் படுத்தப்படுகின்றன்." அரசாங்கக் கைத்தொழில்களின் உள்ளமைப்பு, முக்கியமான அடிப்படைகளில் முதலாளித்துவ மாதிரியை ஒத்திருக்கின்றது. உயர்ந்த சமூகத் தரங்களைச் சேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களுக்குத் தாழ்ந்தநிலையிலுள்ளவர்கள் நேரடியான ஊழியம் செய்யும் முறையினால் "மனிதனை மனிதன் சுரண்டுவதுங்கூட" இரசியாவில் இன்னும் இருந்து வருகின்றது என்பது வெளிப்படை.

பொருளாதாரத் தனியாண்மை.

அடுத்த படியாக இலாபம் பெறும் நோக்கமானது உற்பத்தி, நாணயச் செலவாணி ஆகியவற்றின் முக்கிய அடிப்படையாக இருந்த நிலைமை ஒழிந்தபோதிலும்—முதலாளித்துவ உற்பத்தியும் தனியாரது சில்லறை வியாபாரமும் ஒழிக்கப்பட்டுவிட்ட காரணத்தால்—அந்நோக்கம் பங்கீட்டு முறையின் முக்கிய அடிப்படையாகத் தொடர்ந்து செயல்படுகிறது. தான்செய்த வேலைக்குப் பகுதி பகுதியாகக் கூலி பெறுவதன் மூலமும், தொழினுட்பத் திறமைக்காக அதிக ஊதியம் பெறுவதன் மூலமும், தொழிலாளி கூடுதலான அளவு சம்பாதிப்பதற்கு ஊக்குவிக்கப்படுவதன் வாயிலாக, பொருளாதாரத் தனியுரிமைப் பண்பு அவனிடம் வேண்டுமென்றே தூண்டப்படுகின்றது.[1] "ஐரோப்பியரதும், அமெரிக்கரதும் வாழ்க்கைத் தரங்களை அடைவதற்காக இரசியாவில் நடைபெறும் போராட்டத்தில், கூலி வேலைக்கு வேதனங் கொடுத்தல் போன்றவற்றில் பேர்போன சுரண்டல் முறைகளே கையாளப்படுகின்றன. உற்பத்திக் கருவிகள் சம்பந்தமாக அரசாங்கம் கொண்டிருக்கும் தனியுரிமையினால் உற்பத்திச் சத்திகளனைத்திலும் மிகப் பெரிய சத்தியான மனிதனை வியர்வை சொட்ட உழைக்க வைத்து, சத்தியற்றவனாகச் செய்கின்றமுறை புனிதமாக்கப்படுவதில்லை." மேலும் வருமானம், தனிச் சலுகைகள் ஆகியவை சம்பந்தமாக இரசியாவிலுள்ள ஏற்றத் தாழ்வு, குறைந்த கூலி பெறும் தொழிலாளர்களின் எதிர்ப்பைத் தூண்டி, புதிய தொழிற்சாலை முறையிலிருந்து ஒழிக்கப்பட்டு விட்டதாக உத்தியோகபூர்வமாகக் கருதப்பட்ட வகுப்புப் போராட்டத்தை மீண்டும் தோற்றுவிக்கின்றது. மேற்குத்திய நியமங்களுடன் ஒப்பிடும்போது இரசிய மக்களின் வாழ்க்கைத் தரம் நிச்சயமாகக் குறைவானதே. ஆனால், சோவியத்துப் பரிசோதனை இன்னும் தொடக்கத்திற்றான் இருக்கின்றது; சில ஆண்டுகளில் (இக்கால எல்லைக்குள் உள்நாட்டுக் கலகமொன்றும் உண்டானது) பின்தங்கிய நிலையிலுள்ள ஒரு நாடு மிக

---

1 "தொழிலாளிகள் தாங்கள் செய்த வேலையின் அளவுக்குத் தகுந்தவாறு வேதனம் பெறும் சமவுடைமைச் சமுதாயத்திற்கும், அவர்கள் தங்கள் தேவைகளுக்குத் தகுந்தவாறு வேதனம் பெறும் பொதுவுடைமைச் சமுதாயத்திற்குமுள்ள வேறுபாட்டை, சிதாலின் தனது சொற்பொழிவொன்றில் (1934) விளக்கியிருக்கின்றான்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றமடைந்த நாடுகளின் நிலையை அடைந்து விடும் என்று எதிர்பார்க்க முடியாது. மேலும் தொழிலடிப்படையில் அரசாங்க மொன்றை உருவாக்கும் நோக்கத்தில் பொருளாதார மூலவளங்களை விடுமுதலாக முதலீடு செய்யவேண்டுமென வேறு வழியிற் செலுத்துவது, மக்களின் சொந்த நுகர்வுக்கான பொருள்களில் ஒரு பற்றுக் குறையை ஏற்படுத்தியிருக்கின்றது. ஒவ்வொருவரும் குறைந்த அளவிலேயே உற்பத்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதொரு நிலையான காரணக் கூறாகும். சாதாரண மக்களிடையே காணப்படும் "தொழிற் றிறமையின்மை" அல்லது தொழிலை நடாத்தும் இயக்குநர் குழுவினரிடையே காணப்படும் திறமையின்மை இதற்குக் காரணம் என்று பலவிதமாகக் கூறப்படுகின்றது. தொழினுணுக்கம் முதலாளித்துவ மேலைநாடுகளிலிருந்து பெறப்பெற்றது. ஆனால் "தொழினுணுக்கம் தெரிந்ததின் பின் மனிதர் பின் தங்கி விடுகின்றார்கள்." காரணம் எதுவாயினும் — உள்ளத்தில் பதியத்தக்கதாகப் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்ட போதிலும் — உற்பத்தியினளவு ஏறக்குறைய இருபதுகோடி மக்களின் தேவைகளுக்குப் போதுமானதாக இருக்கவில்லை; ஆனால் உற்பத்திப் பொருள்கள் தரங்குறைந்தனவாயிருந்தனவென்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்றது. இக்குறைகள் நிவிர்த்தி செய்யப்படுமானால், சோவியத்துப் பொருளாதார முறையா, முதலாளித்துவப் பொருளாதார முறையா மக்களுக்குப் பொருளாதார, கலாசாரத் தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், தொடர்ந்து வேலை வாய்ப்புக்களை அளிப்பதற்கும் சிறப்பான முறையென்பதைத் தீர்மானிக்க முடியும். (தொழிலியல் மாற்றங் காரணமாகத் தொடக்க காலத்தில் ஏற்பட்டிருந்த இடையூறுகளைச் சோவியத்து இரசியா இப்போது நீக்கிக்கொண்டதாகத் தெரிகிறது).

மனிதனுடைய உரிமைகள்.

நன்னம்பிக்கையுடன் வழங்கப்பட்ட "புதிய பண்பாட்டு"க் கெதிராகக் கூறப்படும் மற்றக் கண்டனங்கள் தனிமனிதனின் அடிப்படை உரிமைகளையே மறுக்கின்றன. அவ்வுரிமைகளற்ற பொருளாதார ஏமம் அடிமைத்தனத்தின் சின்னமாக மட்டுமே இருக்கின்றது. புதிய யாப்பமைப்பில் "மனித உரிமைகளின் பிரகடனம்" அடங்கியுள்ளது என்பதை நாம் அறிந்திருக்கின்றோம்; ஆனால் அப்பிரகடனத்தில் அடங்கியுள்ள உறுதியீடுகளின் சரியான பொருள் தெளிவில்லாதிருக்கின்றது. இரசியாவில் வாக்குரிமைச் சுதந்திரம் உண்டு — ஆனால் உத்தியோக பூர்வமாக அமைக்கப்பட்ட "எதிர்க்கட்சி" யைச் சேராத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரடங்கிய பட்டியலிலுள்ளவர்களுக்கே அச்சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. பேச்சுச் சுதந்திரம் உண்டு — ஆனால் சோவியத்து அமைப்பின் அடிப்படைத் தத்துவங்களைப் பற்றிக் கேள்வி கேட்கமுடியாது. பாலனம் பற்றிக் கண்டனஞ் செய்வதை அரசாங்கம் உற்சாக மூட்டுகின்றது. எனெனில் அது குறைகளைத் திருத்த முயலுகின்றது ; திறந்த மனதுடன் திட்டங்களைப் பற்றிப் பொதுமக்கள் பேசுவதை வரவேற்கின்றது ; ஆனால், "எதிர்ப் புரட்சிச் செயலுக்காக"க் குற்றஞ்சாட்டப் படுவரென்ற பயத்தால், அரசாங்கப் பூட்கையொன்று அதிகார முறையாக வகுக்கப்பட்ட பின் அது பற்றிய குறைபாடுகளைப் பேசுவதற்கு மக்கள் அஞ்சுகின்றனர். "அச்சலகுச் சுதந்திரம்", இரசியாவிலிருப்பதற்கு மாறான வேறு எந்தவிதமான அரசியல் அல்லது சமுதாயம் சம்பந்தமான நிறுவகங்களை ஆதரித்துப் பேசவும் மக்களுக்கு உரிமை கொடுக்கிறதில்லை. சோவியத்துப் பரிசோதனையை மிகுந்த அனுதாபத்துடன் கவனித்த ஆராய்ச்சியாளனெருவன் "அடிப்படையான சமூகப் பிரச்சினைகளைப் பற்றி மக்கள் சுதந்திரமாக எண்ணுவதை அடக்குதல் முறையன்று" ; அது "வைதீகம்[1] என்னும் நோய்க்கு வழிகோலுகிறது" என எச்சரிக்கை விடுத்திருக்கின்றான். கடைசியாக, மனிதனின் சுயாதீனத்துக்கும் உயிருக்கும் ஆபத்துண்டாக்குங் கொடுஞ் செயல்களைப் புரியும் அரசியற் பொலிசுப் படையைப் பரந்த அளவில் இரசியாவில் நிறுவச் செய்தமையால் தனிமனிதனுடைய சுதந்திரத்தை அரசினர் பாழ்படுத்தினர். சுதந்திரத்திற்கு "கட்டுப்பாடின்மை" என்று எதிர் மறையில் அல்லாமல் "வாய்ப்புக் கிடைத்தல்" என்ற உடன்பாட்டு முறையில் வரைவிலக்கணம் செய்யப்படுமாயின், வேறெங்கு மிருப்பதைவிடச் சோவியத்து ஐக்கியத்தில் (அங்கு உரிமை கொண்டாடப்படுவதுபோல்) சமுதாய முழுவளர்ச்சிக்குமான வாய்ப்பு அதிகமிருக்கின்றது என்று சொல்லலாம்.

இரசியப் புரட்சி பற்றிய மதிப்பீடு.

இரசியப் புரட்சி ஏற்பட்டும், தொழிலாளர்களுடைய முதலாவது குடியரசு ஏற்பட்டும் இருபதாண்டுகள் கடந்து விட்டன. அப்புரட்சியின் உண்மையான சிறப்புத் தன்மை பற்றி மதிப்பிடவோ, அது தொடர்ந்து நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் பற்றிக் கணக்கிடவோ இன்னும் காலம் செல்லவேண்டும். மேலைத்தேய நிறுவகங்களுக் கெதிராக மக்கள் தீவிரமான கருத்துக்களையும் செயல்களையும் கொண்டுள்ளமையால் நிலைமை

[1] S. and B. Webb, "Soviet Communism."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவேளை மாறக்கூடும்; என்றாலும் அப்புரட்சி அரசியல் துறையிலும், சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் மாற்றம் ஏற்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட இணையற்ற ஒரு பரிசோதனையாகும். புதிய யாப்பமைப்பு வெறுங் கடதாசியில் காணப்படுவதாக விருக்கலாம்; ஆனால் அது சோவியத்து அரசாங்கத்தை உருவாக்கிய சிற்பிகளால் அவசரமவசரமாகப் புறக்கணிக்கப்பட்ட குடியாட்சிக் கருத்துக்களுக்கு இரசிய மக்கள் மதிப்பளிக்கத் தொடங்கிவிட்டனரென்பதைச் சுட்டிகாட்டுவதாகும். இரசியாவின் சமூக, பொருளாதாரத் துறைகளில் மாறுதல்களும் புகுத்தப்படலாம் என்பதில் சந்தேகத்திற் கிடமில்லை. அம்மாற்றங்கள் சோவியத்துப் பொருளாதாரத்திற்கும் அதற்கு முரணான பொருளாதாரத்துக்கு மிடையேயுள்ள பிளவை நீக்கி உதவலாம். ஒரு நாடு முன்னிலும் மேலான தொரு நிலையை யடையும்போது, அதன் கூடுதலான செல்வ சமூக வளர்ச்சி அடையும் புதிய கட்டங்களிலும் மக்களுடைய தேவைகளின் பெருக்கத்திலும் பிரதிபலிக்கும். கட்டற்ற பொருளாதார முயற்சிக்கு அதிக இடமளிப்பதால் மட்டுமே இப்புதிய சமூகத்துக்குமனநிறைவு அளிக்க முடியும். மிகக் கண்டிப்பான கூட்டுப்பண்ணை முறைகள் சிலவற்றிலிருந்து சோவியத்து ஐக்கியம் தன்னை விடுவித்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும், வேற்றிடங்களில் நிலவும் முதலாளித்துவ அமைப்பானது மாறுதலடையும் ஒரு கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கின்றமையால், அது சோவியத்தின் தன்மையைப் பாதிக்கக்கூடியதாயிருக்கின்றது. அதெப்படியெனினும் ஒன்றுமட்டும் நாம் தெளிவாகக் காணக் கூடியதாயுள்ளது. இன்றுவரை தொழிலாளரது அரசாங்கத்தின் மூலம் இரசிய மக்களின் பொருளாதார நிலை, மேலுடுகளில் மக்கள் அடைந்துள்ள பொருளாதார நிலையளவுக்கு உயரவில்லை. ஒரு நாட்டின் வாழ்க்கைத்தரம் அந்நாட்டின் உற்பத்தித் திறமையையும், நியாயமான பங்கீட்டு முறையையும் பொறுத்திருக்கின்றது; சமுதாய அமைப்பில் செய்யப்படும் எந்த மாறுதலும், போதுமான செல்வத்தை உற்பத்தி செய்யும் முயற்சியுடன் இணைந்தாலொழிய, தொழிலாளர்களின் நலத்தைத் தக்க அளவில் மேம்படச் செய்வதரிது. சோவியத்து ஐக்கியம் தன்னுடைய பொருளாதாரப் பிற்போக்குப் பிரச்சினையைத் தீர்க்கும்வரை, அது "இலட்சிய சமவுடைமை நாடாக" மாறுவதற்கு எண்ண முடியாது. இருந்தபோதிலும், சோவியத்துப் பொருளாதாரத்தின் உண்மையான அளவு கருவி, பூலோகப் பொன்னுலகு என்ற கற்பனை அளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவியுமல்ல, "சமவுடைமை முறைகளின் மாயசத்தியை அளவு மீறித் தொழுவதுமல்ல"; ஆனால் இரசியப் பேரரசர்களின் ஆட்சியிலும், போல்சிவிக்குக் கட்சியின் ஆட்சிலும் வாழ்ந்த சாதாரண மக்களின் நிலைமைகளை நம்பகமான முறையில் ஒப்பு நோக்குவதே அப்பொருளாதார அளவு கருவியென்க. மக்களின் பொருளாதார, கலாசார நிலையை உயர்த்தும் ஓர் இயக்கத்தில், சமுதாயத்தின் வளங்களனைத்தும் இப் பொழுது முழு ஊக்கத்துடன் உபயோகிக்கப்பட்டு வருகிறதாகத் தோன்றினும், மாற்றங்கள் ஏற்படுகின்ற இந்தக் கட்டத்தில் ஒரு பாரபட்சமற்ற முறையில் ஒப்புநோக்குதல் அருமை. இவ் வியக்கம் பின்தங்கிய ஏழ்மை நிலையிலுள்ள இரசிய நாட்டு மக்களுக்குப் பலதரப்பட்ட சமூக சேவைகளை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்கள் அவற்றில் வெற்றி காணுமளவுக்கு எலவே பலன் கண்டிருக்கின்றது. முதுமைக்காலம், நோய் அல்லது பல வீனம் ஆகியவற்றுக்கான பராமரிப்பு, இலவச மருத்துவ சேவை, குறைந்த நேரவேலை, வேதனத்துடன் ஆண்டுக்கான நீள்விடு முறை, வேலை உறுதியீடு, எழுத்தறியாமையை அநேகமாக அகற்றி விட்டதான கட்டாயத் தொடக்கக்கல்வி ஆகியனவெல்லாம் மக்களுடைய அபிவிருத்தியில் ஒருபெரும் முன்னேற்றத்தைக் காண்பிக்கின்றன. இவைபற்றி இறுதித் தீர்ப்பளித்தல் வருங் கால மக்களிடமே விடப்படவேண்டும். அத்தீர்ப்பின் மூலமே மக் களைச் சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாக்கிய இரசியப் புரட்சியானது நிலையாகச் சாதித்தனவற்றின் அளவை எடைபோட் டுப் பார்க்க முடியும். ஆனால் புரட்சி நடந்த காலத்திலிருந்த வர லாற்றுசிரியன், வருங்கால மக்களின் தீர்ப்பை ஓர் அம்சத்தில் மட் டும் ஒரு வேளை முன்கூட்டியறியத் துணியலாம். சோவியத்துப் பரிசோதனை பயனளிப்பதைக் கொண்டு மற்ற நாடுகளிலும் அவ் வாறான பரிசோதனை வெற்றி தரும் என்று நிச்சயிக்கவியலாது. சோவியத்து ஐக்கியத்தின் நிலைமைக்கென்று அமைந்துள்ள தனித்தன்மை வாய்ந்த காரணிகள் அங்கு காணப்படுவதே அதற் குக் காரணமாகும். முதலாவதாக, தியாகம், துன்பம், இலட் சியம் என்பனவற்றுக்குத் தயாராயுள்ள சிலாவு இனத்தவரின் இயல்பு; இரண்டாவதாக, நிலத்தைக் கூட்டாகச் சொந்தமாக் கிக் கொள்வதையும் விவசாயக் கருமங்களைக் கட்டுப்பாடு செய் வதையும் அடிப்படையாகவுடைய இனப்பாகுபாடு முறையில மைந்த இரசியக் கிராமத்தின் மரபுப்படியான அமைப்பு; மூன்றுவதாக, இரசியாவைப் பெரிதளவில் தன்னிறைவுள்ள தாக்குவதன் மூலம் உலகப் பொருளாதாரத்தின் அவசரத் தேவைகளாற் பாதிக்கப்படாமல், அதனைச் சுதந்திரமாக விளங் கச் செய்யும் அந்நாட்டின் பொருளாதார மூலவளங்கள் ஆகிய வைகளே அக்காரணிகள் என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(V)

தேசியச் சமவுடைமைச் சேர்மனி

சேர்மானியப் புரட்சி.

1918 ஆம் ஆண்டுக் கோடைக்காலத்தில் நிகழ்ந்த சேர்மானியப் போர்ப்படையினரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உள்நாட்டில் ஓர் அரசியற் புரட்சி ஏற்பட்டது. நான்காண்டுகளாக நிச்சயமாக வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையால் உந்தப்பட்ட சேர்மானிய மக்கள், கடற்படை முற்றுகையால் ஏற்பட்ட துன்பங்களைச் சகித்துக் கொள்ள உறுதிகொண்டிருந்தனர். ஐக்கிய நாடுகள் போரில் நுழைந்தமையினால் இந்த நம்பிக்கை சிறிது தளர்ந்திருந்தது. ஆனால் இப்போதோ சேர்மானியர் அந்நம்பிக்கையை முற்றிலும் இழந்துவிட்டனர். சேர்மானியரின் உள வலியும் உடல் வலியும் எலவே குறைந்து போவதற்குக் காரணமாயிருந்த ஊட்டக் குறை, இப்போது அவர்கள் அடைந்த ஏமாற்றத்தை இன்னும் அதிகப்படுத்தியது. மேலும் அவ்வூட்டக் குறை கிழக்கு நாடுகளினின்று போந்த புதிய எண்ணங்களைச் சேர்மானியர் ஏற்றுக் கொள்ளும்படி செய்தது. சேர்மானியப் போர்க் கைதிகள் தாங்கள் சிறைபட்டுக் கிடந்த இரசிய நாட்டிலிருந்து மீண்டு வந்தபோது, அந்நாட்டின் அரசியலே யொட்டிய தொற்றுநோயைத் தங்கள் நாட்டினரிடையே உடனடியாகப் பரப்பலாயினர். இரசியாவுக்குச் செல்லும் பாதையில் சேர்மானிய ஆள்புலத்தைத் கடந்து செல்ல இலெனினை அனுமதித்திருந்த படைத்தளபதி உலுடென்டோப்பு என்பவன் "இரசியப் புரட்சி ஒருநாள் எமது சொந்த பலத்துக்கே தீங்கிழைத்துவிடுமென்று நான் ஒருபோதும் எண்ணியதில்லை; நம் நாட்டில் புரட்சி ஏற்படுவதற்கு நம் எதிரிகள்தாம் வழிசெய்தார்கள்" என்று எழுதினன். சேர்மனியின் எதிரிகளால் மட்டும் அந்நாட்டில் புரட்சி ஏற்படவில்லை; ஆனால் இரசியக் கிளர்ச்சியும் அண்டை நாடுகளிற் புரட்சி வேகத்தை அதிகப்படுத்தியது. இவ்வாறுக எல்லாக் காரணிகளாலுமேற்பட்ட கூட்டு விளைவின் காரணமாக — சேர்மானிய போர்ப் படையமைப்பில் ஏற்பட்ட சீர்குலைவு, பொதுமக்கள் அனுபவித்த மிடிமைகள், இரசியப் புரட்சியின் போதை தரும் விளைவுகள் ஆகியவற்றினால்—தங்களை அநாவசியமானதும் கடுந்துன்பத்திற்குள்ளாக்கியதுமான போரொன்றிற்கு இழுத்துச் சென்ற அரசனுக்கெதிராகச் சேர்மானிய மக்கள் கிளர்ச்சி செய்தனர். கீலில் நடைபெற்ற கடற்படை சம்பந்தமான கிளர்ச்சிமூலம் ஒற்றேபர் (1918) இறுதியில் ஆட்சிக்கெதிராக எழுச்சி செய்ய அறிவித்தல் கொடுக்கப்பட்டது. விரைவில் அதைத் தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவேரியாவில் எழுச்சியொன்றும், பேளினிலுள்ள தொழிற் சாலைகளில் தொழினிறுத்தமொன்றும் ஏற்பட்டன. நவெம்பர் 9 ஆம் நாளன்று பேரரசன் இரண்டாம் உவிலியம் தனது அரசுரிமையைத் துறந்தான். ஆட்சி செய்துகொண்டிருந்த இரு பது இளவரசர்களுக்கு அதிகமானோர் பேரரசனின் முன்மாதிரி யைப் பின்பற்றி அரசுரிமையைத் துறந்தனர். சமவுடைமைக் குடி யாட்சிக் கட்சியின் தலைவனை கேர் இபெட்டு என்பவனை மண்டில நாயகனுகவும், பின்னர் குடிப்பதியாகவுங் கொண்டு சேர்மானியக் குடியரசு அமைக்கப்பட்டதெனப் பறைசாற்றப்பட் டது. சில வாரங்களாகப் புதிய அரசாங்கத்தினுடைய கதி யாதென உறுதியாகத் தெரியவில்லை. இரசியாவில் போல் சிவிக்குப் புரட்சியை வெற்றியுடன் தோற்றுவித்த அரசியற் சத்திகளே, இப்புதிய அரசாங்கம் நிலைப்பதற்குத் தடையாகவிருந் தன. தொழிலாளர்களுடைய கழகங்களும் படைவீரர்களுடைய கழகங்களும் நாடெங்கும் தோன்றின; இசுப்பாட்டாசிற்று அல்லது பொதுவுடைமைக் கட்சி தெருச்சண்டைக்கு ஏற்பாடு செய்தது. குடியாட்சிக்குப் பதில் பாட்டாளியின் வல்லாட்சி ஏற்பட வேண்டு மென விழைந்த இயக்கம் நிலைக்கவில்லை. கட்சியின் தலைவர்களாகிய உரோசா இலட்சம்பேக்கு, காள் இலிபினெட்டு ஆகியோர் கொலை செய்யப்பட்டபோது, சனவரி (1919) நடுப் பகுதியில் அவ்வியக்கம் மறைந்தே போயிற்று. சேர்மனிக்கு ஒரு புதிய யாப்பமைப்பு வரைவதற்காக வீமாரில் கூடும்படி ஒரு தேசியச் சபை அழைக்கப்பெற்றது. அதில் சமவுடைமையாளர் பெரும்பான்மை பெறத் தவறிவிட்டனர்; சமூகக் குடியாட்சி யினரும், மத்திய வகுப்புக் கட்சியினரும் சேர்ந்து ஒரு கூட் டமைச்சை அமைத்தனர். அடுத்த ஆண்டில் (1920) எதிர்ப் புரட்சிக்கான முயற்சியொன்று செய்யப்பட்டது; அப்போது அர சியலில் துணிகரச் செயலுடைய காபு என்ற பெயருடைய வீரனொருவன் பேளினில் ஆட்சிப் புரட்சியொன்றை நடாத்தி னன். தலைநகரினின்று அரசாங்கம் வெளியேறி, ஒரு பொதுத் தொழினிறுத்தத்தின் மூலம் காபு என்பானின் ஆட்சி நடை பெற முடியாமற் செய்யும்படி உழைப்பாளிகளைக் கேட்டுக் கொண்டது. தொழினிறுத்தம் வெற்றியடைந்தது. காபு நாட்டி னின்றும் ஓடினன்.

வீமாக் குடியரசின்—வீமாரில் உருவாக்கப்பட்ட யாப்பை அடிப் படையாகக் கொண்ட ஆட்சி—தொடக்க ஆண்டுகள் நாட்டினைத் தாழ்வு, பொருளாதார நெருக்கடி ஆகிய சிக்கல்கள் நிறைந் தவையாயிருந்தன. குருதி சிந்தக் காரணமாயிருந்தவர்கள் என்ற பெருங் குற்றம் சேர்மானிய மக்கள் மீது சுமத்தப் பட்டிருந்தது. ஏனெனில், போர் உண்டாவதைச் சேர்மனி வீமாக் குடியரசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்றே தடுக்கக் கூடியதாயிருந்தும் அது அவ்வாறு செய்யாததால் அந்நாடு துண்டாடப்பட்டமையும், அந்நாடு செலுத்த வேண்டிய இழப்பீடுகள் பளுவாயிருந்தமையும் அதற்குரிய கழுவாய்களாகும் என்று உலகின் ஏனைய நாடுகள் கருதின. இதனால் தான் ஓர் ஒதுக்கப்பட்ட நாடென இப்போது சேர்மனி உணர்ந்தது. அதன் விதியை நிர்ணயித்த மாநாடுகளில் அதன் பிரதிநிதிகள் தக்க இடம் பெறவில்லை. சனீவாக் கூட்டத்தில் அதற்கொரு இடம் அளிக்கப்படவில்லை. அதன் ஆள்புலம் பிற நாட்டுப் படைகளால் கைக்கொள்ளப்பட்டது ; வேர்சைப் பொருத்தனையால் ஏற்பட்ட கடப்பாடுகள் நிறைவேற்றப்படுவதை மேற் பார்வையிட்ட பிறநாட்டு ஆணைக்குழுக்கள் சேர்மனியின் இறைமையைப் பகிர்ந்து கொண்டன. சேர்மனியெங்கும் நிலவிய துயரம் விரைவில் படுமோசமாகிய பாதகமான பொருளாதார நிலைகளால் அதிகரித்தது. சேர்மனி இழப்பீடுகள் செலுத்த நேர்ந்தமை இந்நிலைக்கு ஓரளவு காரணமாக விருந்தது—ஆனால் அது ஓரளவுக்கு மட்டுந்தான் ; ஏனெனில் சேர்மனி தன்னுடைய மதிப்புக் குறைந்த நாணயப்பளுவை வெற்றிகரமாக மற்ற நாடுகளின்மீது திணித்ததின் மூலம், தன் பளுவிற் குறிப்பிடத் தக்க ஒரு பகுதியைக் குறைத்துக்கொண்டது. உரூர் பிரதேசத்தைப் பிரான்சியர் கைப்பற்றியிருந்தபோது, சேர்மானியர் "அமைதியாக எதிர்த்தமையால் உண்டான செலவின் காரண"மாக ஏற்பட்ட பெரும்பாதீட்டுப் பற்றுக் குறையும், மூலதனம் வெளியேறியமையும் சேர்மனியின் பொருளாதாரத் துன்பங்களுக்கு முக்கிய காரணங்களாகும். அளவின்றித் தாள் நாணயம் அச்சிடுவதன் மூலம் அரசாங்கம் எளிதாக நிவாரணந் தேட முனைந்தமை தேசிய நிதியறவு என்ற பாதாளத்தை நோக்கி சேர்மனியைத் துரிதவேகத்துடன் இழுத்துச் சென்றது. மாக்கு எனும் சேர்மானிய நாணயத்தின் மதிப்பு துரிதமாக இறங்கியமை பின்வரும் உண்மையால் காட்டப்படுகின்றது. நாணய மாற்றில் இருபது மாக்குகளுக்குச் சமமாகவிருந்த ஆங்கிலப் பவுண், 1921 திசெம்பரில் 770 மாக்குகளுக்கும், 1922 ஒகத்தில் ஏறக்குறைய 3,000 மாக்குகளுக்கும், 1922 திசெம்பரில் 3,400 மாக்குகளுக்கு மேற்பட்டும் மதிப்புடையதாக விருந்தது. 1923 ஆம் ஆண்டினிறுதியில் ஒரு பவுண் 19 பில்லியன் மாக்குகள் என்ற நம்ப முடியாத தொகைக்குச் சமமாயிற்று. அமெரிக்கக் குடிப்போரின்போது தென்னுடகளிலிருந்த நிலையை யொத்த ஒரு நிலை :—"போருக்கு முன்னர் எனது பையில் பணத்துடன் சென்று, நான் வாங்கியவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கூடையிலிட்டுக் கொண்டு வந்தேன்; இப்போது கூடையில் பணத்தை எடுத்துச் சென்று, எனது பையில் பொருள்களைப் போட்டு வீட்டிற்குக் கொண்டு வருகின்றேன்"—இப்போது சேர்மனியில் ஏற்பட்டது. மாக்கின் நாணய மாற்று விகிதங்களில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்குக் காரணம் ஓரளவு பணவீக்கம் ஏற்பட்டமையும், ஓரளவு மேலும் பணவீக்கம் ஏற்படுமென்ற பீதியால் மாக்கின்மதிப்பில் அளவுக்கு மீறிக் கழிமானம் செய்தமையுமாகும். இவ்வாறு ஒன்றுக் கொன்று காரணமாகிய நிலை ஏற்பட்டதற்குக் காரணம், பணவீக்கம் மாக்கினுடைய எதிர்காலத்தின் மீது நம்பிக்கையைக் குறைத்து, அதன் மதிப்பைப் பாழாக்கியமையே யென்க. அதன் விளைவாய் அதிகமான தாள்நாணயத்தை அச்சிடுதல் அவசியமாயிற்று. இறுதியாக 1923 ஆம் ஆண்டில் புதிய நாணயம் வெளியிடப்பட்டமை, மாக்கின் முந்திய மதிப்பை மீண்டும் ஏற்படுத்தி, நாணயத்தின் முழுவரலாற்றிலேயே மிக அதிசயிக்கத்தக்க நிகழ்ச்சிகளிலொன்றை முடிவுக்குக் கொண்டுவந்தது—ஆனால் மாறுத வருமானமுடையோருக்குத் துன்பத்தையும் அழிவையும் உண்டு பண்ணிய பின்னரே அம்முடிவு ஏற்பட்டதென்க. இப்பொழுது குடியரசு தன் பொருளாதாரத்தை நல்ல முறையில் அமைக்கத் தொடங்கியது; குடியரசின் கடன் சம்பந்தமான மொத்தப் பொறுப்புக்கள் படிப்படியாக மீண்டும் மீண்டும் குறைக்கப்பட்டதின் காரணமாக நாட்டின் பொருளாதார நிலை அதிகமாக முன்னேற்றமடைந்தது. இதுபற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் நாம் அவதானிக்கலாம். இவ்வாறுக் கருமேகங்கள் விலகத் தொடங்கின; மேலும், ஐரோப்பிய நாடுகளில் ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டதால், "போரொழிப்பு" வேலையை மேற்கொள்ளக்கூடியதாயிற்று.

உலோக்கார்னோப் பொருத்தனை.

சேர்மனிக்கும் அதனுடைய முன்னைய எதிரிகளுக்குமிடையே நட்புண்டாக்குவதற்கு முதலில் பெரிய பிரித்தானியாவே முயற்சி செய்தது. பெரிய பிரித்தானியா ஆரம்பத்திலிருந்தே தோற்கடிக்கப்பட்ட எதிரியிடம் ஓர் இணக்க மனப்பான்மையைக் காட்டி வந்துள்ளது. சேர்மனி அதன் கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டுமென்பதற்கு உறுதியீடாக, 1923 ஆம் ஆண்டில், பிரான்சு, பெல்சியம் ஆகிய நாடுகளின் படைகள், நிலக்கரி, இரும்புப் படிவுகள் ஆகியவை நிறைந்த உரூர் பிரதேசத்தைத் தமக்கு உறைவிடமாக்கியபோது, பிரித்தானிய அரசாங்கம் அச்செயலிற் பங்குபற்ற மறுத்தது. பிரான்சின் அமைச்சரவையில் மாற்றமேற்பட்டதும், உரூர் பிரதேசத்தினின்று பிரான்சுப்படைகள் திருப்பியழைக்கப்பட்டதன் மூலம் பிணக்குத் தீர்ந்தது. உரூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின்று பிறநாட்டினர் பதியெழுந்தமை சேர்மனியின் பூட்கையில் ஒரு புதிய போக்கையுண்டாக்குவதற்கு ஒரு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியது. இது சம்பந்தமாய் இரு அரசறிஞர்கள்—பிரான்சில் பிறியாண்டும் சேர்மனியில் கேர் சுரெட்சிமனும்—சமாதானஞ் செய்வதில் ஒத்துழைத்தனர். சேர்மனியின் தனித்து நிற்பதைத் தவிர்ப்பதற்கும் நாடுகளிடையே அதற்குச் சமவுரிமையை மீண்டும் பெற்றுக்கொடுத்தற்கும் கேர் சுரெட்சிமன் விரும்பினன். பயமுறுத்தும் செயல்களாலல்லாமல் நல்லெண்ணச் செயல்களாலான சூழ்நிலையொன்றை உண்டுபண்ணுவதன் மூலம் தனது நோக்கத்தை அடைவதற்கு அவன் முயற்சித்தான். இதற்குப் பிரான்சுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது இன்றியமையாததாக விருந்தது. 1925 ஆம் ஆண்டில் சேர்மனி, பெல்சியம், பிரான்சு, பெரிய பிரித்தானியா, இத்தாலி ஆகிய நாடுகளுக்கிடையே செய்துகொள்ளப்பட்ட உலொக்காணோப் பொருத்தனை, 1918 முதல் 1939 வரையுள்ள அமைதியான ஆண்டுகளில் சாதிக்கப்பட்ட மாபெரும் சூழியற் சாதனைக்கு எடுத்துக்காட்டாயிற்று. இந்த ஒப்பந்தத்தின் விளைவாக, வேர்சைப் பொருத்தனையில் விதிக்கப்பட்டபடி பிரான்சுடனும் பெல்சியத்துடனும் தன் மேற்கத்திய எல்லைப்புறங்களை நிரந்தரமாக ஏற்றுக்கொள்வதாகச் சேர்மனி ஒப்புக்கொண்டது. அதாவது அல்சேசு—உலொரேன் மீது தனக்கிருந்த உரிமைகளை அது கைவிட்டது. இரைனிலாந்தைப் படையொழித்த வலயமாக வைத்துக் கொள்ளவும் அது ஒப்புக்கொண்டது. சேர்மனி, பிரான்சு ஆகிய இரண்டும் ஒன்றுக்கெதிராக மற்றது போர் தொடுப்பதில்லையென ஒப்புக்கொண்டன; தூண்டப்படாமலே தாக்குதல் ஏற்படின் பொருத்தனை செய்துள்ள மற்ற நாடுகளினுடைய படை உதவியைக் கோர ஒவ்வொன்றுக்கும் உரிமையிருந்தது. உலொக்காணோப் பொருத்தனையானது, ஏமத்தைத் தன்னுடைய பூட்கையின் இலக்காகக் கொண்டிருந்த பிரான்சுக்கு அவ்வேமத்தையும், நாடுகளின் கேண்மைக்குழுவில் சேர்மனியை அனுமதிப்பதற்குத் தேவையாயிருந்த தகுதியைச் சேர்மனிக்கும் அளித்தது. அடுத்தவாண்டில் (1926) நாட்டுக் கூட்டவையில் உறுப்புரிமையும், அதன் கழகத்தில் நிரந்தர உறுப்புரிமையும் சேர்மனிக்கு அளிக்கப்பட்டது. வேர்சைப் பொருத்தனையால் விதிக்கப்பட்டிருந்த காலத்துக்கு ஐந்தாண்டுகளுக்கு முன்னரே பல சேர்மானிய நகரங்களிலிருந்து பிற நாட்டுப்படைகள் அகற்றப்பட்டதையடுத்து (1930) அந்நாடுகளால் கைப்பற்றப்பட்டிருந்த முழு ஆள்புலத்திலிருந்தும் பதியெழல் நடைபெற்றது. அதே சமயத்தில் இணக்கப்பேச்சு, ஒத்துநடத்தல் ஆகிய முறைகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாண்டு, இழப்பீடுகள் சார்ந்த பிரச்சினைக்குத் தீர்வுகாண வழி செய்யப்பட்டது. அதன் விளைவே 1932 ஆம் ஆண்டு ஏற்பட்ட உலாவுசேன் உடன்பாடாகும். அதன் பின்னர், ஐரோப்பிய நாடுகள் படைக்கலந் துறத்தல் என்ற மிக முக்கிய பிரச்சினையொன்றிருந்தது. அண்மைக்கால "உறுதியீடு சம்பந்தமான பொருத்தனை" காரணமாகவும், வேர்சைப் பொருத்தனையின்படி சேர்மனி தன்படைக்கலந் துறத்தல் சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றிவிட்டமையால் உறவுநாடுகளுக்கிடையேயுள்ள படைக்கட்டுப்பாட்டு ஆணைக்குழுவை அது நிராகரித்தது காரணமாகவும் அப்பிரச்சினை பிற்போட முடியாததாக விருந்தது. எவ்வாறு நாட்டுக் கூட்டவையால் ஒரு படைக்கலந் துறத்தற்கான மாநாடு கூட்டப்பட்டது என்பதை நாம் முன்னரே கண்டுள்ளோம்; அது எந்தவித உடன்பாட்டையும் அடைய முடியாது போயினும், சேர்மனிக்குச் சமமான மதிப்பு நிலைமையைப் பெற்றுக் கொடுத்தது (1932); இதனால் சேர்மனிக்கு மீண்டும் படைக்கலந் தாங்கும் உரிமையுண்டென்பது ஒப்புக்கொள்ளப்பட்டமை தெளிவாயிற்று. இந்நேரத்தில் ஐரோப்பாவில் உணர்ச்சியைத் தூண்டுமொரு திடீர் மாற்றம் நிகழ்ந்தது.

ஐரோப்பாவின் துயர் நிலை.

வழக்கம்போல் வல்லரசுகள் ஒன்றுசேர்ந்து செயலாற்றத் தவறியமை, 1939 இல் ஐரோப்பாவில் மற்றுமொரு பெரும் போரை ஏற்படுத்த உதவிய துயர நிகழ்ச்சிகளிலொன்றாகும். பிரித்தானிய, பிரான்சு அரசாங்கங்களின் நோக்கு எவ்வளவிற்கு அதிக இணக்க முள்ளதாயிற்றோ, அவ்வளவிற்குச் சேர்மானிய அரசாங்கத்தின் நோக்கு கடுமையாயிற்றென்பது காணக்கூடியதாயிற்று. முக்கியமாக, மூன்று வல்லரசுகளின் நோக்கங்களிலும் ஒத்த உறவுநிலையின்மைக்குக் காரணம், உள்நாட்டு அரசியலில் உடனடியாகத் தோன்றிய தீமைகளாகும். இதன் விளைவாக அதிக மாறுபாடான கொள்கைகளையுடைய அமைச்சரவைகளை அந்நாடுகள் ஆட்சியில் அமர்த்தவேண்டியதாயிற்று. இதன் அவப்பேறான விளைவு என்னவென்றால் ஒரு நாடு கட்டுப்பாட்டை மீறுமாயின், அச்செயல் மற்றநாடுகள் ஒரு பொதுவான கேண்மை முயற்சியில் ஈடுபடுவதை மட்டுப்படுத்தப் போதுமானதாயிருந்தது. வீமாக் குடியரசின் அரசறிஞர்கள் பின்பற்றிய நட்புண்டாக்கும் பூட்கையால் ஏற்பட்ட பயன்கள், சேர்மனியில் தகுந்த மதிப்பைப் பெறுதுபோயின. மேலும், சேர்மனி தான் போருக்குப் பின்னர் பெற்ற குறிப்பிடத்தக்க பொருளாதார மீட்சி பற்றிப் போதுமான அளவுக்கு உயர்வாக எண்ணவில்லை. ஏனெனில் அக்காலம் முழுவதும் அங்கு அர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியல் நிலைமை சீர்கேடுற்றுக் கொண்டிருந்தது. ஒரு புதிய அரசியற் கட்சியினர் அதிகாரத்திற்கு வந்தமை, சேர்மானிய சட்டசபையின் எதிர்காலப் பூட்கை எவ்வழியைப் பற்றிச் செல்லு மென்பதற்கான முன்னறிகுறிகளைக் காட்டிற்று. ஏறக்குறைய எழுநூறு இலட்சம் மக்களைக் கொண்ட ஒரு நாட்டின் எதிர் காலத்தைத் தம்மிடம் ஒப்படைக்கப் பெற்றிருந்த இவ்வரசி யற் கட்சியினர், தேசியச் சமவுடைமைச் சேர்மானியத் தொழி லாளர் கட்சி என்னும் பெயரைத் தம் கட்சிக்கு வழங்குவாரா யினர்.

அடோல்பு இற்லர்

வீமார் யாப்பமைப்பில் குறிப்பிடப்பட்டிருந்த தனி மனித உரிமைகள், குடிமை உரிமைகள் ஆகியவை புறக்கணிக்கப் பட்டிருந்தும், அதற்காகச் சேர்மானிய மக்கள் எவ்வித எதிர்ப் பும் காட்டாது எளிதிற் பணிந்து போனதன் காரணத்தை விளக் குவதற்கு வரலாற்றுசிரியர்கள் வருங்காலத்தில் இடர்ப்படக் கூடும். எனெனில் தேசியச் சமூகவுடைமை இயக்கத்தின் முரண் யாதெனில், அது தோல்வியடைந்ததாகத் தோன்றிய காலத்திற் றனே வெற்றியடையலாயிற்று என்பதாம். பிறப்பில் ஒசுற்றி யனாகவும் தொழிலில் கட்டடவேலைத் தொழிலாளியாகவுமிருந்த அடோல்பு இற்லர் (யார் யார் என்னும் நூலில் அவன் தன்னை அவ்வாறு வருணிக்கின்றான்) என்னும் அவ்வியக்கத் தலைவன், போருக்குப் பின் ஓர் அரசியற் கிளர்ச்சிக்காரனாகத் தன் வாழ் க்கையைத் தொடங்கினான். அவனுடைய கல்வியறிவு மிகவும் குறைவு. அவன் சேர்மானிய மொழியை இலக்கண முறைப்படி எழுத முடியாதவனாக விருந்தான். ("மெயின் காம்பில்" அவன் தனது பள்ளிப் படிப்பின்மை பற்றிக் குறிப்பிடுகின்றான்). அவன் தனது வாழ்க்கைத் துறையில் ("மெயின் காம்பில்" கூறியவாறு) தனது கருத்து நிறைந்த உறுதிமொழிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினான். அவ்வுறுதி மொழி என்னவெனில், "படுமோசமான நிகழ்ச்சிகள் விரைந்து நடை பெறுமாயின் அவை வீழ்ச்சியேற்படும் காலத்தைக் குறிப்ப தாகும்" என்பதாம். 1923 ஆம் ஆண்டில், அவசரப்பட்டுச் செய்யப்பட்ட ஆட்சிப்புரட்டின்போது அவன் அதிகாரிகளுடன் மோதவேண்டியிருந்தது. இதனால் அவன் ஒரு சிறைக்கோட் டையில் கைதியாக வைக்கப்பட்டான். அங்கிருந்துதான், 1925 ஆம் ஆண்டில் வெளிவந்த "மெயின் காம்பை" அவன் எழுதினான். தப்பெண்ணங்களால் வெறிபிடித்து நிலை தவறிய, ஆனால் வலிமை நிறைந்த மனத்தினனாகிய இற்லர் பெரும்பான்மையினரின் ஆட்சி என்ற பாராளுமன்ற முறையை இந்நூலில் மறுத்தெழுதினான். அதற்குப் பதிலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கபபடும் தலைவனைக் கொண்ட உண்மையான சேர்மானியக் குடியாட்சி " என்ற கருத்தை எடுத்துக் கூறினன் ; தனிப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, பெரும்பாலோரின் சம்மதம் பெறுவதென்பது இக்குடியரசில் இடையாது ; தனிப்பட்டவர் ஆட்சி மட்டுமே உண்டு. சேர்மனியின் ஆள்புலம் சம்பந்தமான பேரவாபற்றிய எதிர்கால நிகழ்ச்சிகள் சம்பந்தமாயும் அவன் அறிவித்தான். மக்கள் சுயநிர்ணயத் தத்துவத்தைக் கைக்கொள்ள வேண்டுமென அவன் வேண்டிக்கொண்டு " சேர்மானியக் குடியரசு ஓர் அரசு என்ற முறையில் சேர்மானியரனைவரையும் கொண்டதாக விருக்கவேண்டும் " என விதித்தான். இருந்தபோதிலும், சேர்மானிய மொழி பேசுகின்ற சிறுபான்மையோர் அனைவரையும் குடியரசில் சேர்த்துக்கொள்ளும் பிரச்சினை எழும்போது இத்தத்துவம் கைக்கொள்ளப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தாலும், சேர்மானிய ருக்குரியதல்லாத ஆள்புலத்தைச் சேர்த்துக் கொள்ளும் பிரச்சினை வரும்போது நடைமுறையினின்றும் இத்தத்துவம் ஒதுக்கப்பட்டது. ஏனெனில் " ஊழூழிக்குமுள்ள நீதி சம்பந்தமான எல்லைப் புறங்களை அரசியல் சம்பந்தமான எல்லைப்புறங்கள் மறைத்துவிட நாம் அனுமதிக்கலாகாது " என அவன் கூறினன். " ஊழூழிக்குமுள்ள நீதி சம்பந்தமான எல்லைப்புறங்கள் ", உறையுமிடம்என்ற தெளிவற்ற தொரு தத்துவத்தால் நிர்ணயிக்கப்படவேண்டும். " சேர்மானிய மக்கள் வசிப்பதற்காக விரிவான இடத்தை அம்மக்களுக்குப் பெற்றுத்தரத் தக்கதாக தேசியச் சமவுடைமையின் நோக்கம் இருக்க வேண்டும். " சேர்மனி விரிவடைவதால் ஏற்படும் பிரச்சினைக்கான தீர்வு கிழக்கில்தானிருந்தது—" இன்று ஐரோப்பாவில் புதிய ஆள்புலத்தைப் பற்றிப் பேசுகிறேமென்றால், நாம் முக்கியமாக இரசியாவையும் எல்லைப் புறநாடுகளையும் பற்றி மாத்திரமே நினைக்க முடியும் ". இரசிய நாடு வீழ்ச்சி யடையும் நிலையில் இருந்ததென்ற திடநம்பிக்கை, திகைப்பைத் தரும் வாய்ப்புக்களை இற்லருக்குக் கொடுத்தது. 1936 ஆம் ஆண்டில், தனது நியூரம்பேக்குப் பேச்சில் அவன் இவைபற்றி எடுத்துரைத்தான் ; " அளவற்ற மூலப் பொருட் செல்வத்துடன் விளங்கும் யூரல் பிரதேசங்கள், செழிப்பான வனங்களுடன் விளங்கும் சைபீரியா, எல்லையற்ற தானிய வயல்களையுடைய யூக்கிரேன் ஆகியவை சேர்மனிக்குள் இருக்குமானால், தேசியச் சமவுடைமைத் தலைமையிலுள்ள இந்நாடு, செல்வச் செழிப்பு மிக்கதாகும். ஒவ்வொரு சேர்மானியனுக்கும் அவன் வாழ்க்கைத் தேவைக்கதிகமாக நாம் உற்பத்தி செய்வோம் ". ஏனெனில் " பிரான்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்காலத்திலுமே சேர்மானிய நாட்டின் பரம வைரி" என்று கூறி, "மெயின் காம்பில்" இற்லர் தனது ஆழ்ந்து படிந்த பகைமையுணர்ச்சியை வெளிப்படுத்தினன்.

தேசியச் சமவுடமைக் கட்சிப்பிரசாரம்

வலுவந்தத்தைக் கையாண்டு கொலை செய்வதற்கும் அஞ்சாதிருந்த அரசியற் கட்சியொன்றின் சார்பாக சேர்மானிய அரசாங்கம் கண்டிப்பற்ற முறையில் நடந்துகொண்டமை, அவ்வரசாங்கத்தின் விளக்க முடியாத கண்மூடித்தனத்தை அல்லது அது கடமையிற்றவறியதைப் புலப்படுத்தியது[1]. கலகமூட்டும் போர் நடவடிக்கை காரணமாகச் சேர்மனியெங்கும் குழப்பநிலையொன்று ஏற்பட்டிருந்தது. அந்தப் போர்நடவடிக்கை ஒரு சிறிய குடிப்போரைத் தூண்டிவிடுவதற்காக, "எதிரிக்கு" வேண்டுமென்றே ஆத்திரமூட்டும் நோக்கமுடையதாக இருந்தது. தேசியச் சமவுடைமையாளர் தங்களுடைய எதிரிகளை அச்சுறுத்துவதுடன் நின்றுவிடாது, எல்லாருக்கும் எல்லாவற்றையும் வாக்களிப்பதாகிய ஒரு விரிவான பிரசாரத்தையும், உணர்ச்சியைத்தூண்டும் சொற்பொழிவைச் சிந்தனை செய்யாமலே ஏற்றுக்கொள்ளுமாறு கேட்போரை வசியப்படுத்தக்கூடியதொரு விளம்பரத்தையும் மேற்கொண்டனர். முதலில் தேசியச் சமவுடைமையாளர், மற்ற அரசியற் கட்சிகளின் கூட்டங்களைக் கலைப்பதிலும், தூய சேர்மானியரல்லாத ஒன்றுமறியாத வழிப்போக்கர்களைத் துன்புறுத்துவதற்காக இரவில் தெருத்தெருவாக அலைவதிலும் வெற்றிபெற்ற போதிலும், அவர்கள் அதிகதூரம் முன்னேற்றங் காணவில்லை. "வேர்சைப் பொருத்தனையைக் குறைகூறுவதற்காகக் கிடைத்த முதற் சந்தர்ப்பத்தின் போதே, அப்பொருத்தனையின் வாசகத்தைக் கேட்டோர், 'பிரற்றுசிலிட்டோவுசுக்கு' என்று அடிக்கடி குரலெழுப்பிக் குறுக்கிட்டனர்" என்று இற்லர் தானே "மெயின் காம்பில்" குறிப்பிட்டுள்ளான். குடியாட்சிக்கு ஒரு வெற்றியாகவும், பழிவாங்குதற்கு ஒரு கருவியாகவும் அவர்கள் அப்பொருத்தனையைக் கருதினர்கள். எனவே பிறர் தங்கள் மனத்தில் அந்தப் பொருத்தனைக்கு எதிரிகளாகத் தங்களைக் கருதிக் கொள்ளும்படி செய்ய வேண்டியது அவசியமாயிற்று. இரு பொருத்தனைகளையும் வேறுபடுத்தி, "ஒன்றின் அளவற்ற இரக்கத் தன்மையையும், மற்றதன் மனிதத் தன்மையற்ற கொடுமையையும் எடுத்துக் காட்டினேன்" என்று

---

[1] 1923 இல் இக்கட்சி கலைக்கப்பட்டு, இதற்குத் தடையும் விதிக்கப்பட்டது. "இன்று (இற்லர் 1926 இல் எழுதினன்) அது திரும்பவும் சுதந்திரமாக விருக்கின்றது, மேலும் அது முன்னரிலும் அதிக பலமுள்ளதாகவும் அதிக உறுதியுள்ளதாகவுமிருக்கின்றது".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்லர் விவரிக்கின்ருன். இவ்வாருகச் சொல்வன்மையுடன் பல முயற்சிகள் செய்யப்பட்ட போதிலும், சேர்மனியின் போர்ப் படை வீழ்ச்சியால் மனக்கசப்புற்றிருந்த தானேத் தலைவர்களாகிய அரசியல்வாதிகளே முதன்மையானவர்களாகக் கொண்டிருந்த கட்சி உறுப்பினரது தொகை, சில ஆண்டுகளாக மிக மெதுவாகவே அதிகரித்து வந்தது; கட்சியின் முன்றிட்டம் ஒழுங்கு படுத்திக் கூறப்பட்டபோது, அது மக்கள் கவனத்தை ஈர்க்கத் தவறியது. அந்த முன்றிட்டம் இருபத்தைந்து முக்கிய அம்சங்களைக் கொண்டிருந்தது. சுயநிர்ணயத் தத்துவத்தின் அடிப்படையில் சேர்மானியரனைவரும் ஐக்கியப்படக்கூடிய முழு சேர்மானிய டொன்றை அமைக்க வேண்டுமென்பது முதலாவது உரிமைக் கோரிக்கை. வேர்சை, சென் சேர்மன் ஆகிய பொருத்தனைகளை நிராகரிப்பதென்பது இரண்டாவது உரிமைக்கோரிக்கை; "எம் மக்களைக் காப்பாற்றவும், எமது அதிகப்படியான குடித் தொகையைக் குடியேற்றுதற்கு வகை செய்யவும்" வேண்டுமென்ற நோக்கத்துடன், "குடியேற்றங்களின் தேவை" பற்றி மூன்றுவது கோரிக்கை சுட்டிக்காட்டியது. கூலிப்படைக்குப் பதில் தேசியப் படையொன்றை ஏற்படுத்துதல்; "நாட்டில் பலம் வாய்ந்த ஒரு மத்திய அரசாங்கத்தை" அமைத்தல்; உழைப்பால் ஈட்டாத வருமானங்களனைத்தையும் ஒழித்தல்; இன்னும் சமவுடைமை சம்பந்தமான பல திட்டங்களிடுதல் (இவை புத்திசாலித்தனமாகப் பிற்போடப்பட்டன) ஆகியவை ஏனைய கோரிக்கைகளாகும். யூதர் பற்றிய இனவிரோதம் அத் திட்டத்தில் முக்கியமான இடம் வகித்தது. அது அரசாங்கத் திலுள்ள யூத சமூகக் குடிகளைக் குடிமையுரிமைகளினின்றும், தொழில் முறைமூலம் வாழ்க்கை நடத்துமுரிமைகளினின்றும் ஒதுக்குவ தென்று முன்னறிவிப்புச் செய்தது.

தேசியச் சமவுடைமைக் கட்சியின் பலம், 1930 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது உலகிற்கு முதலாவதாகத் தெரிய வந்தது. அப்போதிருந்த 576 உறுப்பினர்களையுடைய பாராளு மன்றத்தில் அதன் பிரதியாளர் 12 இல் இருந்து 107 ஆக அதிகரித்தனர். இவ்வாறு 95 தானங்களைக் கூடுதலாக அது பெறுவதற்குத் தேசிய வாதிகள் எனப்பட்ட வலதுசாரியினரின் தோல்வியே காரணமாகும். பொதுவுடைமையாளர் 23 இருக்கைகளில் வெற்றிபெற்று, மொத்தத்தில் தமது தானங்களை 77 ஆக உயர்த்திக் கொண்டனர். 143 தானங்களையுடைய சமவுடைமைக் குடியாட்சியாளர் மிகப்பெரிய கட்சியாக விளங்கினர்; ஆனல் சேர்மானியப் பாராளுமன்றத்தில் தேசியச் சமவுடைமைக் கட்சி இப்போது இரண்டாவது பெரிய கட்சியாக

தேசியச் சமவுடைமையின் வளர்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தது. "இந்தப் போராட்டத்தில் தலைகள் உருளும்" என்ற சொற்களால் இற்லர் தான் பெற்ற வெற்றிபற்றி ஆர்ப்பரித் தான்—அவனது இம்முன்னறிவிப்பு வெறும் வாய்ப்பேச்சாக இருக்கவில்லையென்பது, பின்னர் அவனது எதிர்ப்பாளர் கொடு மையாகக் கொல்லப்பட்டமை மூலம் தெளிவாயிற்று. அடுத்த பலப்பரீட்சை 1932 இல் வந்துற்றது. கேர் இபெட்டு இறந்த பின், 1925 இல், 77 ஆம் வயதில் குடிப்பதியாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட மாசல் வொன் கின்டன்பக்கு, ஏழாண்டுகாலப் பதவிக்கு இரண்டாவது முறையாகப் போட்டியிட்டான். அவன் 53 சதவிகித வாக்குகள் பெற்றான். இற்லர் 37 சதவிகிதமும், பொதுவுடைமைக் கட்சியாளனொருவன் 10 சதவிகிதமும் பெற் றனர். அதே ஆண்டில் மற்றொரு பொதுத்தேர்தல் நடை பெற்றது; 608 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் தேசியச் சமவுடைமைக் கட்சியினர் 230 இடங்களையும், பொது வுடைமைக் கட்சியினர் 89 இடங்களையும் பெற்றனர். ஒரு புதிய தேர்தலை நடாத்த அரசாங்கம் உத்தரவிட்டது; 584 உறுப் பினர்களையுடைய ஒரு பாராளுமன்றத்தில் 117½ இலட்சம் வாக் குகள் பெற்று 196 தேசியச் சமவுடைமைக் கட்சியினரும், 72½ இலட்சம் வாக்குகள் பெற்று 121 சமவுடைமைக் குடியாட்சிக் கட்சியினரும், 60 இலட்சம் வாக்குகள் பெற்று 100 பொது வுடைமைக் கட்சியினரும் இடம் பெற்றனர். 20 இலட்சம் வாக்குகளுக்கு மேல் இழந்துவிட்ட தேசியச் சமவுடைமை இயக் கம் முதன்முறையாகச் சிறிது நலிவுற்றது; பொதுவுடைமைக் கட்சியினரோ படிப்படியாக முன்னேற்றங் காண்பித்தனர். தேசியச் சமவுடைமைக் கட்சியினர் தமக்குப் பின்னிடைவு ஏற்பட்டிருந்த போதும், பாராளுமன்றத்தில் முக்கியமான கட்சி யினராகவே வீற்றிருந்தனர்; அவர்களின் தலைவன் மண்டில நாயகனுக்குமாறு குடிப்பதியால் அழைக்கப்பட்டான். அவன் தனது கட்சிக்குச் சட்டசபையில் பெரும்பான்மையாதரவில்லாதி ருந்தமையால், அவ்வாறானதொரு சட்டசபை யின்றி ஆட்சி புரிய உதவியாயிருக்குமாறு அடக்குமுறையதிகாரங்கள் தனக் குக் கொடுக்கவேண்டுமெனக் கேட்டனன். அப்போது 85 வயதி னையிருந்த குடிப்பதி, சேர்மானிய யாப்பமைப்பைப் பாதுகாப்ப தாகத் தான் செய்த உறுதிமொழியை மனத்துட் கொண்டு, "தேசியச் சமவுடைமைக் கட்சியின் தனித்தன்மையை மட்டும் பன்முறை அழுத்தமாகக் கூறிவந்த அக்கட்சியின் தலைவனுக் குக் குடிப்பதியின் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டால், நான் சேர் மானிய மக்களுக்கு என் கடமையை ஆற்றியவனாக மாட்டேன்; மேலும் அது ஒரு கட்சியின் வல்லாட்சிக்கு நிச்சயமாக வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுக்கும்; அதைத் தொடர்ந்து சேர்மானிய மக்களிடையே மனக்கசப்பை உண்டாக்கும் சச்சரவுகள் அதிகரிக்கலாம்" என்று பதிலளித்தான்.

சேர்மானியப் பாராளுமன்றத்துக்குத் தீ வைத்தல்.

இற்லர் வெளிப்படையாகக் காட்டியதை விட, அதிகாரம் பெற வேண்டுமென்ற பேராசை அவனிடம் அதிகமிருந்தது; 1933 தைத் திங்களில், தேசிய வாதிகளையும் (அதாவது பழமைபேணுவோர்), தேசியச் சமவுடைமை வாதிகளையும் கொண்ட கூட்டிணைப்பமைச்சின் தலைவனாக அவன் மண்டில நாயகன் பதவியை ஏற்றான். உயர்பதவியிலேற்படும் பொறுப்பினால் தேசியச் சமவுடைமைத் தலைவர்கள் மிதமான செல்வாக்கையே கொண்டிருப்பர்; அல்லது வேறு வழியாக நோக்கின், அவர்களது அரசியலனுபவமின்மை காரணமாக அவர்களது முக்கியத்துவம், அமைச்சரவையிலுள்ள அறிவுக் கூர்மையுள்ள சகாக்களால் முற்றிலும் பங்கமடைந்து விடும் என்று சேர்மானியக் குடிப்பதியின் ஆலோசகர்கள் எதிர்பார்த்தனர். இவ்வெண்ணங்கள் பிழைத்துவிட்டன; சிங்கத்துடன் படுத்திருந்த செம்மறி ஆட்டைப் பற்றிய நீதிக்கதையில் சொல்லப்பட்டவகையில் நிகழ்ச்சிகளின்போக்கு அமைந்திருந்தது. பாராளுமன்றத்துக்குப் புதிய தேர்தல்கள் நடாத்த உத்தரவிடப்பட்டது. தேர்தல்களுக்கு முன்னர், பாராளுமன்றத்தின் கட்டிடத்திற்குத் தக்கவமயத்தில் தீ வைக்கப்பட்டது. ஆட்சிக் கெதிரான எழுச்சிக்குப் பீடிகையாகப் பொதுவுடைமைக்கட்சியினர் தீயை மூட்டினர் என்று அவர்களைத் தேசியச் சமவுடைமைக் கட்சியினர் குற்றஞ்சாட்டினர். சேர்மானியரது சுதந்திரங்கள் சம்பந்தமான யாப்புறுதியீடுகளைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும் அவசரகாலக் கட்டளையைப் பிறப்பிக்கக் குடிப்பதி சம்மதித்தான். "தனிப்பட்டவனின் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், சங்கங்கள், கூட்டங்கள் கூடும் சுதந்திரம் ஆகிய வற்றைக் கட்டுப்படுத்தும் உரிமையும், சொத்துப் பறிமுதல், தனிநபர் இல்லங்களைச் சோதனையிடும் உரிமை ஆகியவைகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன" என்று அக்கட்டளை கூறியது. அன்றிலிருந்து யாப்புறுதியீடுகள் நிறுத்திவைக்கப்பட்டன. குடிப்பதியின் கட்டளையால் அனுமதிக்கப்பட்ட சுயேச்சையான அதிகாரங்களைப் பெற்ற அரசாங்கம், பொதுவுடைமைக் கட்சியைச் சட்ட விரோதமானது எனத் தடை செய்தது. பிரசியாவில் சமவுடைமைக் குடியாட்சியினர் கூட தங்களுடைய செய்தித்தாள்களை வெளியிடுவதற்கோ, தேர்தற் பிரசாரம் செய்வதற்கோ தடைவிதிக்கப்பட்டனர். பாராளுமன்றக் கட்டடத்தை எரிக்கும் சதியில் பங்கு கொண்டவர்களெனத் தலைமையான பொதுவுடைமையாளர் குற்றஞ்சாட்டப்பட்டனர். ஆனால் வழக்கு விசாரணையின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் குற்றவாளிகளல்லரெனக் காணப்பட்டமையால் விடுவிக்கப்பட்டனர். பொதுவுடைமைக் கட்சிக் கெதிராக எதனையும் மெய்ப்பிக்க முடியவில்லை ; தேசியச் சமவுடைமையாளரே நெருப்புக்குப் பொறுப்பாளிகளென்றும், அது அவர்களுடைய அரசியல் எதிரிகளை மடக்குவதற்குச் செய்த ஒரு தேர்தல் தந்திரந்தான் என்றும் சில அத்தாட்சிகள் மூலந் தெரிந்தது. சேர்மானிய மக்கள் பீதியால் பதைபதைத்துக் கொண்டிருந்த இவ்வேளையில் தேசியச் சமவுடைமையாளர் 170 இலட்சம் வாக்குகளையும் அல்லது மொத்தத்தில் 44 சதவிகிதம் வாக்குகளையும், தேசியக் கட்சியினர் 8 சதவிகிதம் வாக்குகளையும் பெற்றனர். எனவே கூட்டிணைப்பு அரசாங்கத்தில் மற்றக் கட்சிகளைவிடத் தேசியச் சமவுடைமைக் கட்சிக்கே பெரும்பான்மைப் பலமிருந்தது. 1933 யூலை மாதத்தில், கூட்டிணைப்பரசாங்கம் கலைக்கப்பட்டது ; தேசியச் சமவுடைமையாளர் தங்கள் வசத்தில் ஆட்சியதிகாரத்தை வைத்துக்கொண்டனர். சேர்மனியில் தங்கள் கட்சியைத் தவிர்த்து வேறெந்த அரசியற் கட்சியையும் ஒழிக்க அவர்கள் உடனே முன்வந்தனர். புதுத் தேர்தல்கள் நடைபெற்றன ; அவற்றின் போது தேசியச் சமவுடைமையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே அபேட்சகர்களாக நிற்க அனுமதிக்கப்பட்டார்கள். இவ்வாறுகப் பாசிச இத்தாலியால் காண்பிக்கப்பட்ட முன்மாதிரியைச் சேர்மனி பின்பற்றி, ஒரேயொரு அரசியற் கட்சியை மட்டுங் கொண்ட ஒரு நாடாயிற்று ; அதாவது ஒரு தனியாதிக்க நாடாயிற்று. குடிப்பதியான வொன் கின்டன்பக்கு 1934 ஓகத்தில் இறந்தான் ; இப்போது குடிப்பதி, மண்டிலநாயகன் ஆகிய இருபதவிகளும் ஒன்றுக்கப்பட்டன. இற்லர், தலைவனும் மண்டிலநாயகனுமானான்.

தேசியச் சமவுடைமையின் எழுச்சிக்குக் காரணங்கள் :
(1) வேர்சைப் பொருத்தனை.

தேசியச் சமவுடைமையின் எழுச்சிக்கு, வேர்சைப் பொருத்தனையால் சேர்மனிமீது சுமத்தப்பட்ட நியதிகளின் கடுமை மூல காரணமாகுமென அடிக்கடி சுட்டிக் காட்டப்படுகிறது. பொருத்தனையின் ஏற்பாடு சுமத்திய அவமதிப்புண்டாக்கும் நிபந்தனைகள், சேர்மானிய மக்களின் தன்மதிப்பை அழித்துவிட்டன என்றும் சொல்லப்படுகிறது. அந்நிபந்தனைகள் தேசத்திற்கே பெரும் அவமானத்தை விளைவித்ததுடன், அவர்களை வெற்றிகொண்ட எதிரிகளின்மீது பகைமையுணர்ச்சியையும் வளர்த்தன. மனச்சான்றுக்குக் கட்டுப்படாது, கொடிய வேலைகளைத் தம்மீது சுமத்திய ஆட்சியாளர்களை எதிர்த்து, எதிர்க்கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவனை, ஊக்கமிழந்த அம்மக்கள் கண்மூடித்தனமாகப் பின்பற்றினர்கள். இந்தக் கருத்து வெளித்தோற்றத்தில் சரியெனப் பட்டாலும், பொருத்தமற்றதொன்றுயிருந்தது. இது சிலவுண்மைகளைப் புறக்கணிக்கின்றது—முதலாவதாக, வேர்சைப் பொருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனை ஏற்பட்டதற்கும், தேசியச் சமவுடைமையாளர் பதவி பெற்ற தற்கும் இடையே பதினைன்காண்டுகள் கடந்துவிட்டன ; இரண்டாவதாக, 1914–18 ஆம் ஆண்டுப் போருக்குப் பின்னருள்ள காலத்தில், தொடக்கத்தில் சேர்மனியின் தன்மதிப்பு மிகத் தாழ்ந்த நிலையிலிருந்தபோது, தேசியச் சமவுடைமையாளரின் இயக்கம் தடைப்பட்டிருந்தது ; மூன்றாவதாக, உலொக்கார்னோப் பொருத்தனை மூலமும், நாட்டுக் கூட்டவையில் சேர்மனி உறுப்புரிமை பெற்றதின் மூலமும் தெளிவாகக் காட்டப்பட்டதுபோல், சேர்மனி தானிழந்த நிலையைத் தேசியச் சமவுடைமைக் கட்சியினரால் மீண்டும் அடைந்தபின், ஏறக்குறையப் பத்தாண்டுகள் கடந்தபின்னரே அத்தேசியச் சமவுடைமையாளர் ஆட்சிக்கு வந்தனர். கடைசியாக, கைப்பற்றப்பட்ட ஆள்புலத்திலிருந்து 1930 இல் தான் பதியெழல் முற்றுக நடைபெற்று முடிவுற்றது. இழப்பீடுகள் வழங்குதலும் 1931 இல்தான் உண்மையில் முடிவுற்றது ; படைக்கலங்கள் சம்பந்தமாக மற்ற வல்லரசுகளுடன் சேர்மனிக்குச் சமவுரிமை உண்டென்பது 1932 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சேர்மனி தன் தளைகளிற் கடைசியானதைத் தளர்த்திக் கொண்டிருந்த சமயத்திற்றான் தேசியச் சமவுடைமையாளர் ஆட்சியைக் கைப்பற்றினர் ; அதற்காக அவர்கள் நெடுங்காலமாகக் கொடிய தந்திரங்களையும், அரசியலில் அச்சத்தை விளைக்கும் முறைகளையும் எதிர்த்துப் போராடியிருந்தனர். வேர்சைப் பொருத்தனை தேசியச் சமவுடைமையாளரின் வெற்றிக்கு ஒரு துணைக்காரணமாக இருந்தது. தாங்கள் மிகுந்த நாட்டுப்பற்றுடையோரென அவர்கள் நடிப்பதற்கும், மேற்கத்திய வல்லரசுகளுடன் இணக்கமாகப் பழகும் முறையால் மக்கள் குறைபாடுகளை அகற்ற முயன்ற ஒவ்வொரு சேர்மானிய அரசாங்கத்தையும் சேர்மானிய நாட்டின் துரோகியென ஒறுத்துரைப்பதற்கும் அப்பொருத்தனை அவர்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தது. குறிப்பாக, தேசியச் சமவுடைமையாளர் பொருத்தனையின்படி இழப்பீடுகள் கொடுக்கப்படுவதை ஒப்புக்கொள்ளவில்லை ; ஒரு சேர்மானிய மண்டிலநாயகன், பாராளுமன்றம் இழப்பீடுகள் கொடுத்தலை ஒருபோதும் மீண்டும் தொடங்கப்போவதில்லை என 1932 இல் அறிவித்திருந்தான் ; அப்படியிருந்தும் அவனது உறுதியான அறிவிப்பால் அவனது அமைச்சரவை வீழ்ச்சியடைவதைத் தடுக்க முடியவில்லை.

(ii) பொதுவுடைமையின் வளர்ச்சி.

சேர்மனியில் பொதுவுடைமை வளர்ந்தமை சிக்கலான நிலைமையில் காணப்பட்டதொரு முக்கியமான அம்சமாகும். பொதுவுடைமையாளரது முன்னேற்றம் அவ்வளவு துலக்கமாக இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாமலிருக்கையில், இடதுசாரியினரிடையிருந்த தீவிரவாதிகளும் வலதுசாரியினரிடையிருந்த தீவிரவாதிகளும் ஒரே மாதிரி முன்னேறினர். பாராளுமன்றத்தில் பொதுவுடைமையாளருடைய பிரதியாளர்தொகை 1930 இல் 77 ஆக இருந்ததிலிருந்து, 1932 ஆம் ஆண்டில் நடந்தேறிய முதல் தேர்தலில் 89 ஆக உயர்ந்தது. அதே ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது தேர்தலில், தேசியச் சமவுடைமையாளர் தோல்வியடைந்தபோது, பொதுவுடைமையாளர் 100 இடங்களைப் பெற்றனர். பொதுவுடைமையாளரின் வெற்றிகள் சமவுடைமைக் குடியரசினரின் தோல்வி காரணமாகவே பெறப்பெற்றன; எனெனில் அரசியலில் தீவிரவாதம் விரும்பப்படும்போது மிதவாதக் கட்சிகள் ஒதுக்கப்படுகின்றன. பொதுவுடைமையாளரது பலம் அதிகரித்தமையால், போல்சிவிக்குக் கொள்கையின் போக்கில் உண்மையில் சேர்மனி சென்று கொண்டிருந்ததென்று எண்ணக் காரணங் கிடையாது. தேசியச் சமவுடைமையாளரைப் பொதுவுடைமையாளர் கடுமையாக எதிர்த்தமையால், மற்ற அரசியற் கட்சிகளைவிடப் பொதுவுடைமைக் கட்சியை அநேகர் அதிகமாக விரும்பி ஆதரித்தார்கள் என்பது உண்மையாக விருக்கலாம். சேர்மானிய மக்கள் தாங்கள் வீண் பெருமை பேசக் காரணமாகவிருந்த தம் போர்ப்படைச் சாதனம் முறிந்தும், பரம்பரையாக வந்த தங்கள் ஆட்சியாளர்கள் ஓட்டமெடுத்து மிருந்ததொரு இக்கட்டான காலத்தில் போல்சிவிக்குக் கொள்கையைத் தீர்க்கமாகத் தள்ளிவிட்டனரென்றல், இரசியப் புரட்சியின் பகட்டு மற்ற நாடுகளிலுள்ள தொழிலாளர் மனங்களில் அதன் மாயசத்தியைச் செலுத்தாதிருந்ததொரு காலத்தில் அச்சேர்மானிய மக்கள் போல்சிவிக்குக் கொள்கையை ஏற்றிருக்கமாட்டார்கள். இருந்தபோதிலும் பொதுவுடைமைப் புரட்சி வந்துகொண்டிருக்கின்ற தென்று எங்கும் பீதி பரவியதால், தேசியச் சமவுடைமையாளர் தங்களது பேச்சு மேடைக்கு மிகப் பயனுறுதி தரத்தக்க வாய்ப்பொன்றைப் பெற்றனர். அதாவது "தேசியச் சமவுடைமைக் கட்சி வீழ்ச்சியுற்றால், சேர்மனியில் இன்னும் நூறு இலட்சம் பொதுவுடைமையாளர் இருப்பர்" என்று கட்சிப் போர்க்குரல் எழுப்பமுடிந்தமையே அவ்வாய்ப்பென்க. அது அவர்களுக்குப் பொருள் வளமளித்தது; அப்பொருள் வளமின்றி அவர்கள் அதிக செலவான தங்களின் போர் நடவடிக்கைக்கான பணத்தைப் பெற்றிருக்க முடியாது. இன்னும், சமவுடைமைக் கட்சியின் முன்றிட்ட மொன்றையேற்று, "உழைப்பாளர் கட்சி" என்று சொல்லிப் புறப்பகட்டாக விருந்த ஓர் இயக்கத்துக்கு, பெரிய தொழிற்சாலை முதலாளிகள் நிதி வழங்கினர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் படக் காட்சி, அச்சகம் ஆகியவற்றின் சொந்தக்கார ரான தீவிர வலதுசாரிக் கட்சியைச் சேர்ந்த பெரும் முத லாளிகள் வாயிலாக, பிரசாரத்துக்கான அளவற்ற வசதிகள் செய்யப்பட்டன. அதிகாரத்தைத் தாங்கள் கைப்பற்றிய பின் னரும், தேசியச் சமவுடைமையாளர் நாட்டில் பரவிக் கொண் டிருந்த பொதுவுடைமைப் பீதியைப் பயன்படுத்தியும், உலக மளாவிய புரட்சிக்கு எதிராகத் தங்களாட்சியொரு பாதுகாப்பு என நடித்தும் வந்தனர். அச்சுப் பிரசுரத்திலும், மேடைப் பேச்சிலும் மூர்க்கத்தனமாக வசை மாரி பொழிந்து, இரசி யாவின் மீது தங்களுக்கிருந்த தீவிரமான பகைமையைத் தேசியச் சமவுடைமையாளர் வெளிப்படுத்தியமை, தியூதோ னியர், சிலாவியர் ஆகிய இரு இனத்தவரிடையே நில விய வரலாறு கண்ட சச்சரவுக்கு உயிர் கொடுப்பதாகவிருந் தது. அச் செயலுக்கு, யூக்கிரேனிலுள்ள இயற்கை மூலவளங் கள்மீது சேர்மனி ஆதிக்கஞ் செலுத்தவேண்டுமென்ற அவா வலிமையூட்டியது; ஆனல் அது இலட்சியங்களுக்கிடையே யுள்ள வேறுபாடு என்ற மாற்றுருவில் மறைக்கப்பட்டது. சேர் மனிக்கும் யப்பானுக்குமிடையே 1936 இல் செய்யப்பட்ட பொது வுடைமையாளருக்கெதிரான ஒப்பந்தம்,—இத்தாலியும் எனைய நாடுகளும் பின்னர் இதற்கு இணங்கின—பொதுவுடைமைக் கொள்கைக்கு இணங்காத எல்லோரையும் தங்கள் உதவிக் காக ஒன்று சேர்ப்பதன் மூலம், உள்நாட்டிலும் வெளிநாட் டிலும் தனியாதிக்க நாடுகளுடைய நிலையைப் பலப்படுத்தும் எண்ணங் கொண்டதாயிருந்தது. இதனல் தீவிரமான இரு கொள்கைகளில் எதாவதொன்றை மட்டுமே அரசியல் நல்ல றிவாளர் தெரிவு செய்ய வேண்டுமெனத் தோன்றியது. பாராளு மன்றத்துக்கு உள்ளேயும் புறத்தேயும் நடுநிலையான கருத்துக் கொண்டிருந்த பலர், தேசியச் சமவுடைமையாளர் சேர்மனி யைப் பொதுவுடைமையினின்றும் காப்பாற்றி விட்டார்கள்; ஐரோப்பாவை அதினின்றும் காப்பாற்றுவதற்குப் போரிடுவார் கள் என்பதை நம்புமாறு செய்யவேண்டுமென்று அவ்வொப் பந்தம் கொண்டிருந்த நோக்கம் சந்தேகமற நிறைவேறியது. தேசியச் சமவுடைமையாளர் மாத்திரமே "எதிரி"யை முறி யடிக்கும் பலம் பெற்றிருந்தார்கள் என்ற நம்பிக்கை, அவர் கள் வல்லாட்சிக்குரிய அதிகாரங்களை நெடுங்காலம் பெற்றி ருந்தமைக்குப் பெரிதும் காரணமாக விருந்தது.

(iii) பொருளா தார அமைதி யின்மை.

தேசியச் சமவுடைமையாளருடைய வெற்றிற்கு மற்றக் காரணி களும் உதவியாயிருந்தன; ஏனெனில் அவர்களியக்கம், போருக்குப் பின்னர் சேர்மனி கொண்டிருந்த பல அம்சங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் பளிங்குபோல் எடுத்துக்காட்டியது. மனநிறைவின்மை காரணமாக எற்பட்ட அமைதியின்மையின்பாற்பட்ட பல்வேறு சத்திகளை, குறிப்பிடத்தக்க வெற்றியுடன் அவர்கள் பயன் படுத்திக் கொண்டனர். அவர்கள் உழவர்களையும் சிறு வியா பாரிகளையும் கொண்ட கீழ்நிலை மத்திய வகுப்பினருடைய முதலாண்மைக் கெதிரான உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, அவர்களுக்கு அளவுகடந்த வாக்குறுதிகளையும் கொடுத்தனர்; நகர்ப்புற மக்களுக்கிருந்த குறைவான கொள்வனவுச் சத்தியின் காரணமாக, சேர்மானிய நாட்டின் வேளாண்மை குன்றிப் போயிருந்தது; கூடிய விலைவாசிகளிருந்த காலத்தில் கடன் பளுவில் மிகவும் அழுந்தியிருந்த உழவர்கள், தங்களின் பளுவை நீக்குவதற்கு ஏராளமான பொதுப் பணம் வழங்கப்படும் என்று உறுதி கூறப்பட்டிருந்தனர். சிறு கடை வியாபாரிகள் பெரிய பண்டசாலைகளின் போட்டியினால் இடருற்றனர்; தேசியச் சமவுடைமையாளரின் முன்றிட்டத்திலடங்கிய இருபத்தைந்து அம்சங்களிலொன்று, பெரிய பண்டசாலைகள் "உடனே சமூகத் திற்குச் சொந்தமானவையாக்கப்படும்" என்ற உத்தர வாதத்தைக் கொண்டிருந்தது. பணவீக்கத்தை யொட்டிய நாணயம் வெளியிடப்பட்டமையால் பாதிக்கப்பட்டவர்களையும் தேசியச் சமவுடைமையாளர் தங்கள் பக்கமாகச் சேர்த்துக் கொண்டனர்; அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களது வருமானங் கள், மாக்கினுடைய நாணய மதிப்பிறக்கத்தால் முற்றுகக் குறைந்துவிட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக, வேலையற்ற கூட்டத்தினரையும் அவர்கள் தங்களுக்குச் சார்பாகச் சேர்த்துக் கொண்டனர்; வேலையற்றிருந்தோர் தொகை 1930 இல் இரு மடங்காகி, அவ்வாண்டினிறுதியில் எறக்குறைய ஐம்பது இலட் சமாகப் பெருகியிருந்தது. இப்போது உலகத்தை அதன் நாசப் பிடியில் வைத்திருந்த "பொருளாதார நெருக்கடி" கார ணமாகச் சேர்மனியிலும் வேலையின்மை எற்பட்டிருந்தது; அது இப்போது அளவுகடந்து பெருகியமையால் அதுவே அப்போதைய நிலையில் முக்கியமாக எதனையும் தீர்மானிக்கும் மூலமாக இருந்தது; அதே ஆண்டில் தேசியச் சமவுடைமைக் கட்சி முதன் முறையாகப் பெரும் வளர்ச்சி பெற்றது. பொரு ளாதார மந்தமே, ஐக்கிய நாடுகளிலே எற்பட்ட அரசியல் எழுச்சியொன்றுக்கும், பெரிய பிரித்தானியாவின் வாரியம் பற்றியதும் நாணயம் பற்றியதுமான பூட்கைகள் சம்பந்த மாய்ப் பெரும் விளைவுகளை ஏற்படுத்துதற்கும் காரணமாகவிருந் ததென்று நாம் நினைவிலிருத்திக்கொண்டால், அதுவே சேர் மனியில் உறுதியற்ற ஆட்சித் தூண்களை அசைத்து, அவை வீழ்ச்சியுறக் காரணமாயிருந்தது என்று கருதுவதில் ஆச்சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமில்லை. ஒவ்வொரு பொருளாதார நோய்க்கும் ஒரு மருந்து உண்டு என்று அண்மையில் தோன்றியதும் நம்பகமானதுமான கட்சி யொன்று கூறியபோது, அதற்குப் பழைய அரசியற் கட்சிகள் வழிவிட வேண்டியதாயிற்று. தேசியச் சமவுடைமையாளர் உலகமளாவிய பொருளாதார மீட்புக்குச் சற்று முன்னர் அதிகாரத்திற்கு வந்தமை அவர்களுடைய நற்பேறுகும். அவர்கள் பதவிக்கு அழைக்கப்படச் சில மாதங்கள் தாமதப்பட்டிருக்குமென்றால், 1932 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் அவர்களுக்குக் கிடைத்த அளவினதாகிய பொதுமக்களாதரவு ஒருவேளை இன்னும் அதிகமாகக் குறைந்து போயிருக்கலாம்.

(iv) மற்றக் காரணிகள்.

போலிப் பகட்டான தொரு பொருளாதார முன்றிட்டத்தைத் தேசியச் சமவுடைமையாளர் வகுத்து, யூத இனத்தவருக்கெதிரான ஒரு பூட்கையைக் கொண்டனர்—"அப்பூட்கை ஒரு நாட்டு மக்களின் ஒழுக்கம் சம்பந்தமான மன நிலையைக் காட்டும் கருவியாகும்". சேர்மனிக்கு வந்துள்ள எல்லாத் துன்பங்களுக்கும் தங்கள் நாட்டில் வாழும் யூத மதத்தைச் சேர்ந்தவர்களே காரணமெனப் பழிசுமத்திய சேர்மானியரனைவரும் அப்பூட்கைக்கு ஆதரவுகொடுத்தனர். மேலும் (தேசியப் படைச் சேவையில் இதற்கு மேல் கட்டாயமாகச் சேர்க்கப்படாத) சேர்மானிய இளைஞர்களுக்கெனச் சொந்தமாக ஆயுதந் தாங்கிய படையொன்றைத் தேசியச் சமவுடைமைக் கட்சியினர் நிறுவினர். இச் சேர்மானிய இளைஞர்கள், 15 ஆம் நூற்றாண்டில் பெரிய ஆங்கிலக் குடும்பங்களிலுள்ள உரிமை ஏவலாட்கள் போல், தாங்கள் பற்றுக்கொண்டிருந்த கட்சிகளுடைய அடையாள உடைப்பட்டியை அணிந்திருந்தனர்; இவ்வாறுக ஓர் அரசுக்குள்ளே மற்றொரு அரசை இவர்கள் நிறுவிக் கொண்டனர். ஒன்றன்பின் ஒன்றுக வந்த சேர்மானிய அரசாங்கங்கள் தனிப்பட்ட படையொன்று வளர்ச்சியடைவதை அனுமதித்ததின் மூலம் அவைகள் தங்கள் மேலாண்மையைத் துறக்க வேண்டியதாயிருந்தன. கடைசியாக, இத்தாலியில் நடந்ததுபோல, குடிப்போர் அல்லது சரணடைதல் ஆகிய இரண்டிலொன்று ஏற்படக்கூடிய நிலை உண்டாகுமட்டும் இவ்வாறு நடைபெற்றது. சேர்மானியர் சந்தேகமறத் தங்களின் போர்ப்படையொட்டிய மரபுகளின் காரணமாகவே தங்களுடைய வரலாற்றுக்காலம் முழுவதிலும் ஒரு தனிநபரின் அதிகாரத்திற்குப் பணிந்து நடக்கும் பழக்க முடையோராக இருந்தனரென்பதையும், அவர்களிடையே ஆழமாக வேரூன்ற முடியாத மிகக் குறுகிய கால அளவிற்கே சேர்மனியில் யாப்பு முறையிலமைந்த ஆட்சியிருந்த தென்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், பாராளுமன்றத்திற் பல கட்சிகள் இருந்தமை பாராளுமன்ற நெருக்கடிகளை ஏற்படுத்தி மக்கள் சம்மதத்தால் நடைபெற்ற அரசாங்க முறைமையை இகழ்ச்சிக்குள்ளாக்கிய தென்பதையும், 1930 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் இருபத்துநான்குக்குக் குறையாத கட்சிகள் தங்கள் சார்பாளர்களைப் போட்டிக்கு நிறுத்தியதென்பதையும் நாம் மீண்டும் மனதிற் பதித்துக் கொள்ள வேண்டும். தேசியச் சமவுடைமையாளருடைய வெற்றிற்கு மேலும் விளக்கம் கொடுக்கு முகமாக அமைந்த மற்றொரு உண்மை, அவர்கள் தங்களது அரசியல் எதிரிகளை அச்சுறுத்தவும் அவர்களுக்கு வாய்ப்பூட்டுப் போடுவதற்குமாக, பலவாறான கொலைகளுக்குக் காரணமாயமைந்த பீதிதரும் தந்திரங்களைக் கைக்கொண்டமையாகும். பொதுவாக அவர்களுடைய பாதகங்கள் தண்டிக்கப்படாது போயின ; அவர்களுடைய அளவுமீறிய செயல்களை அதிகாரிகள் கண்டிக்கத் தவறியமையால் அச்செயல் புரிந்தவர்கள் தாங்கள் பாதிக்கப்படமாட்டார்களென்ற உணர்ச்சி பெற்றனர். மேலும் அதனால் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டியோர் ஊக்கங் குறைந்திருந்தனர் ; குற்றங்களைச் செய்தவரோ அதிக மனத்துணிவைப் பெற்றனர். அதே சமயத்தில் பொதுமக்களின் ஆதரவைப்பெறுவதற்காகத் தேசியச் சமவுடைமையாளர் மேற்கொண்ட தொடரிகலின்போது, உணர்ச்சியை மிகுதிப்படுத்தக் கூடியதும் தீமை செய்யத் தூண்டுவதற்குத் தயங்காததுமான பிரசாரத்தில் அவர்கள் ஈடுபட்டனர். அப்பிரசாரம் அறிவுக் குரியதாயிருக்காமல், மக்களுடைய ஆழ்ந்த உணர்ச்சிகள், விருப்பு வெறுப்புக்கள், கீழ்த்தரமான ஆவல்கள் ஆகியவற்றுக்கு ஏற்றதாகவிருந்தது ; அத்துடன், அது கேட்போரை வசப்படுத்தும் சத்தியையுடைய உணர்ச்சிமிக்கதொரு வெளி விளம்பரமாகவுமிருந்தது. "மெயின் காம்பில்" எதிரியின் போர்ப் பிரசாரத்தைப் பற்றி இற்லர் கொடுத்துள்ள வருணனை அவனுடைய சொந்த நடைமுறைகளை உண்மையாகப் பிரதிபலிப்பதாக இருந்தது. "அப்பிரசாரத்திலடங்கிய உறுதிக் கூற்றுக்களில் அடங்கியிருந்த ஆணவத் தன்மையால் அது தொடக்கத்தில் அறிவுக்குப் பொருந்தாததாகத் தோன்றியது ; பின்னர் அது வெறுப்புத்தருவதாயிற்று. இறுதியில் அது நம்பப்படக்கூடியதாயிற்று". தேசியச் சமவுடைமைப் பிரசாரத் துறையின் பண்பு அதன் தலைவனாலேயே புகழ்பெற்ற வொரு பகுதியில் விளக்கப்பட்டது. புத்திக் கூர்மை மிகக் குறைவானவர்களின் சத்திக்கு ஏற்றப்போல் எந்தப் பிரசாரத்தின் அறிவாற்றல் நிலையும் அமைவதாயிருக்க வேண்டும். மக்கட்திரளின் உணர்ச்சிகளை அது எந்த அளவுக்கு ஊக்குவிக்கின்றதோ, அவ்வளவுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிகமாக அதன் வெற்றி தெற்றெனப் புலப்படும். சில முக்கிய அம்சங்கள் மீது ஆழ்ந்த கவனம் செலுத்தி, நம்பிக் கையுடனும் உறுதியுடனும் வற்புறுத்திக் கூறவேண்டுவன வற்றை அப்பிரசாரம் ஓயாது திருப்பிக் கூறிக் கொண்டேயிருக்க வேண்டும்." இந்தப் பிரசாரத்தினால் ஏற்பட்ட வன்மையான கவர்ச்சியாற்றல், அண்டை நாடொன்று குடியாட்சி மரபினின்று பிரிந்து செல்வதில் காண்பித்திருந்த உதாரணத்தாற் பலப் படுத்தப்பட்டது. தேசியச் சமவுடைமையாளரின் ஒரு வெற்றி யைத் தொடர்ந்து குருதிவெறியுடைய சச்சரவொன்று ஏற்படு மென்ற பயத்தை இத்தாலியில் எளிதாக நடைபெற்று முடிந்த பாசிசப் புரட்சி நீக்கியது. இறுதியாக, தேசியச் சமவுடைமைக் கொள்கையை எதிர்த்தவர்கள் பொது நோக்கங்களை அடைவ தில் தங்களிடையே ஒற்றுமைக் குறைவுள்ளவர்களாயிருந்த மையால், கூதிர்க் காலத்தில் காற்றினூலே இலைகள் சிதறடிக் கப்படுவதுபோன்று, தம் இலட்சியத்தை அடைய முடியாது சிதறுண்டு போயினர். அப்போதிருந்த அரசியல் அமைப்பு வீழ்ச்சியுற்றால் தாங்கள் வெற்றியுடன் அதிகாரத்தைக் கைப் பற்றுவதற்கு வழிபிறக்குமென்று பொதுவுடைமையாளர் கரு தினர். மேலும் தேசியச் சமவுடைமைக் கொள்கையின் வெற் றிப் போக்கைத் தங்கள் சொந்த நலனுக்காக்கிக் கொள்ளலா மென்றும் அவர்கள் எண்ணங்கொண்டிருந்தனர். சமதர்மக் குடியாட்சியினரும், மற்றக் கட்சியினரும் எதிர்ப்புச் சிறிதுமின் றிச் சரணடைந்தனர். வீமாக் குடியரசிலிருந்த ஊக்கமிழந்த கட்சிகளை ஒதுக்கிவிட்டு, ஒரு படைத்துறைப் பணியாளன் தலைமை யில் அமைந்த செருக்குமிக்கதும் மிருகத்தனமானதுமான வலிமையுடைய ஒரு புதுக்கட்சி மூன்றாவது சேர்மானியப் பாராளுமன்றத்தின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண் டது.

சேர்மனியில் எற்பட்ட எதிர்ப்பு.

முற்போக்குக் கொள்கை, சருவதேசியம் என்பவை சம்பந்த மான தத்துவங்கள் உருப்பட்டு நிலைப்பதற்கு, நீண்ட காலமாக நடைபெறும் ஒரு போர் வழக்கமாகப் பாதகமாக விருக்கின் றது. போரை நடத்துவதற்காக அரசாங்கத்திடம் எல்லாக் கருமங்களையும் ஒப்படைப்பது, தனிப்பட்டவருடைய சுதந்திரத் தைக் காப்பதற்கு உதவுவதாக இருக்காது; சச்சரவினால் தூண்டப்பட்ட பகைமை உணர்ச்சிகள் சருவதேசிய நல்லெண் ணைச் சூழ்நிலையைச் சீர்கேடாக்கிவிடும். இது சம்பந்தமாக, ஒரு நூற்றாண்டிற்கு முன் நடைபெற்ற நெப்போலியனது போர் களைத் தொடர்ந்து உண்டான விளைவுகள் போன்றே, 1914–18 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற போரும் பல விளைவுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியது ; அச்சமயம் ஐரோப்பாவின் பெரும்பகுதியிற் பிற்போக்குச் சத்திகள் பரவின. மேலும் ஐரோப்பா வெங் கணும் தேசிய உணர்ச்சி மூனைப்பாகவிருந்தது. வரலாற்று நிகழ்ச்சிகள் " அதே முறையில் மீண்டும் நடைபெறுவதில்லை " என்பது போன்று சிறிதுகாலத்திற்குத் தோன்றியது. பத்தாண்டு கள் வரை அதிகமாக, உருத்திரிந்த தேசியத்தின்பாற்பட்ட வரம்பு மீறிய செயல்களை ஒரு முற்போக்குச் சேர்மனி தவிர்க்கக் கூடியதாயிருந்தது ; எனினும் அந்நாட்டில் அத்தகைய தேசிய உணர்ச்சிக்கான அறிகுறிகள் தோன்றியமையால் அந் நாடு அந்நோய்க்கு உட்பட வேண்டியதாயிற்று. புதிய சேர் மனியில் (மூன்றுவது குடியரசு) முற்போக்குக் கொள்கை சம்பந்தமான சத்திகள் அடக்கப்பட்டன ; தேசியம் அதன் மிகத் தீவிரமான நிலையில் அங்கு தடையின்றிப் பரவியது. தனியா திக்கமும், இன ஒதுக்கலும் தேசியச் சமவுடைமையாளர் ஆட்சி யின் இரட்டைத் தூண்களாக விளங்கின.

தனியாதிக்க அரசு.

முதலாவதாக நாம் முற்போக்குக் கொள்கையின் அழிவைப் பற்றிப் பார்ப்போம். பாசிச, சோவியத்து அரசாங்கங்களைப் போன்று தேசியச் சமதர்ம அரசாங்கம் தனியாதிக்க அரசு என்று சொல் லப்படுகின்ற ஒன்றை ஏற்படுத்தியது—இது வரலாற்றுக்குப் புதி தான தனிச்சிறப்புக்குரியதொரு நிகழ்ச்சியாகும். குடியாட்சி நாட்டிலிருந்து தனியாதிக்க நாடு வேறுபாடுடையதாகும் ; எனெனில் பின்னையது அரசாங்கத்தை ஆதரிக்கின்ற கட்சியைத் தவிர வேறு அரசியற் கட்சிகளனைத்தையும் தடைசெய்கின்றது. இற்லர் முதன் முதற் பிறப்பித்த கட்டளைகளில் ஒன்று " சேர் மனியில் ஒரேயொரு அரசியற் கட்சிதான் உண்டு, அதுதான் தேசியச் சமவுடைமைச் சேர்மானியத் தொழிலாளர் கட்சியாகும்" என்று கூறியது. அரசியலிலோ, பொருளாதாரத்திலோ, கலா சாரத்திலோ, வேறு எவ்வாழ்க்கைத் துறையிலோ அக்கட்சியின் ஆதிக்கம் எங்கும் பரவி நிறைந்திருந்தது. மூன்றுவது குடியரசு பத்திரிகைகளிலோ, மேடைகளிலோ பாலனம் பற்றி எவ்வித கட்டுப்பாடுமற்ற விமரிசனங்களை அனுமதிக்கவில்லை. அக்குடி யரசு அச்சகம், வானொலி, பல்கலைக்கழகம், வித்தியாசாலைகள், நாடகமேடைகள், திரைப்படங்கள் ஆகியவற்றின் சுதந்திரத்தை ஒழித்தது ; அது கருத்து வேற்றுமையை வெளியிடுதலையும், சமுதாய, பொருளாதார சம்பந்தமான செயல்களையும் உறுதி யாகக் கட்டுப்படுத்தியது. தனிநபர் உரிமைகளையோ, தனிப்பட்ட வர்களின் பாதுகாப்பையோ அது ஏற்றுக்கொள்ளவில்லை ; தனிப் பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு, விசாரணை செய்யப்படாமலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையிலடைக்கப்படக்கூடும்; தொழிற்சங்கங்கள் சுதந்திரமாக இயங்குவதையும் அது சகித்துக்கொள்ளாது. ஒரு வல்லாட்சியாளனிடம் நாட்டின் அரசாங்கம் ஒப்படைக்கப்பட்டது. அவன் கட்டளைகளைப் பிறப்பித்து அவற்றின் மூலம் அதிகாரத்தைச் செலுத்தி வந்தான். பாராளுமன்ற (இறெயிசுதாக்கு) உறுப்புரிமை, ஒரு கட்சியின் உறுப்பினர்களுக்கு மட்டும் உரியதெனக் கட்டுப்படுத்தப் பட்டது; அச்சபை மிக அரிதாகவே கூட்டப்பெற்றது; அவ்வாறு கூட்டப்பெற்றது தலைவனுடைய பேச்சைக் கேட்பதற்காகவேயன்றி, சிந்தித்து, விமரிசனம் செய்வதற்காக வன்று; அதன்பின்னர் அது கலைக்கப்பட்டது. இவ்வாருகச் சேர்மானிய மக்கள் தங்களுடைய ஆட்சியாளர்களின் கருமங்களை ஆமோதித்து, குடியொப்பம் மூலம் தங்கள் சம்மதத்தைத் தெரிவிப்பதற்காக வேளா வேளைகளில் பெயரளவில் அழைக்கப் பட்டிருந்தபோதிலும், தேசியச் சமவுடைமை அரசாங்கம் மக்கள் சம்மதம் பெற்ற அரசாங்கமாயிருக்காது, வலுவந்தத்தின் மூலம் நடைபெற்ற அரசாங்கமாகவேயிருந்தது. குடிமக்களைப் பயமுறுத்த, "அடர்த்து பாசறைகள்" ஏற்படுத்தப்பட்டன; அங்கு கைதிகள், சிறைக்காவலர்களுடைய தனிப்பட்ட விருப்பைப் பொறுத்து, சட்ட ஒப்பனைகளின் பிரகாரம் நடத்தல் என்ற பாவனை கூட இல்லாமல், ஒரு சில காலத்திற்குச் சிறை வைக்கப்பட்டிருந்தனர். இந்தப் பாசறைகளில் சிறைப்படுத்தப்பட்டவர்கள் கொடூரமாக நடத்தப்பட்டமை, தேசியச்சமவுடைமைக் கொள்கை எவ்வளவு கொடுமைவாய்ந்தது என்பதை எடுத்துக் காட்டுவதாயிற்று. சேர்மானிய எழுத்தாளனை இலியோன் பியூட்வாங்கர் என்பவன் "முப்பதாண்டுப் போருக்குப் பின் சேர்மனி கண்டிராத மிலேச்சத்தனம் நாடு முழுவதும் பரவிக் கொண்டிருந்தது" என்று 1933 இல் கூறினன். தேசியச் சமவுடைமையாளர் "நாகரிக உலகத்தின் நியமங்களைக் காற்றில் பறக்கவிட்டனர்" என்று மேலும் அவன் எழுதினன். தேசியச் சமவுடைமையாளர்களுடைய பாதகங்கள் பொதுவாக இரகசியமாக இருந்தன; ஆனல் இற்லர் தனது சொந்தக் கட்சிக்குள்ளேயே தனக்கெதிராயிருந்தவர்களைப் படுகொலை செய்தமை பொதுமக்களிடமிருந்து மறைக்கமுடியாத தொன்றாயிற்று. 1934 இல் கட்சியின் இடதுசாரியினரில் 77 உறுப்பினர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டனரென்று உத்தியோகபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டது; என்றாலும் உண்மையில் அந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே இருந்தது என்று சொல்லலாம்; தனது சொந்த இல்லத்தில் முன்னாள் மண்டில நாயகன் ஒருவன் தன் மனைவியுடன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியச் சமவுடைமையாளர்கள் தங்களை எதிர்த்தவர்களுக்கு தடைகள் விதித்ததின் மூலம், தங்களுடைய நோக்கங்களிலி ருந்து மாறுபட்டவர்களுடைய பேச்சுச் சுதந்திரத்தை அழித் தனர். செய்தித்துறையின் ஒவ்வொரு கருவியையும் கட்டுப்படுத் தியதன் மூலம் அவர்கள் சேர்மானிய மக்களின் சிந்தனைகளைத் தடைசெய்தனர்; மேலும் அவர்கள் கல்வி முறையைச் சூழ்ச்சித் திறமையுடன் கையாண்டு, இன வெறியை, வளரும் சந்ததி களின் மனங்களிற் பதியவைத்தனர்.

இன வெறி. இங்கிலாந்தினுடைய வலிமைக்கு, அங்கு குடியேறிய பல் வேறு இனத்தவர்களே பெரிதும் காரணமாவர். மற்ற மக் களின் தேவைகள், ஆசைகள் ஆகியவற்றை ஆங்கில மக் கள் உணரச் செய்வதற்குப் பல்வேறு இனத்தவர்கள் முயன் றதன் மூலம், ஒரு பேரரசை உருவாக்குவதற்கான திறமையை அப்பல்வேறு இனத்தவர் அந்நாட்டிற்குக் கொடுத்திருக் கின்றனர்; பல நோக்குடையவர்கள் ஒன்று கூடிக் கலப் பதினின்றும் எழுகின்றதான பரந்து நோக்கும் ஆற்றலையும் அந்நாட்டிற்கு அவர்கள் கொடுத்துள்ளனர்; அன்றியும் பல் வேறு கருத்து வேற்றுமைகளை இணைப்பதிலல் வருகின்ற சமரச நோக்கையும் அவர்கள் அதற்குக் கொடுத்துள்ளனர். தீவிர மான போக்குகளை விலக்கி, முடிவில்லாமல் மாற்றமடைந்து கொண்டிருக்கும் ஒரு சமூகத்தின் தேவைகளுக்கேற்ப எளி தாக மாற்றியமைத்துக் கொள்ள இடந்தருவதும், அடிப்படைக் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதுமான ஆங்கில யாப்பமைப்பு, ஆங்கிலேயரது குணவமைப்பின் அடிப்படையான பண்புகளைப் பிரதிபலிக்கின்றது: ஆங்கிலேயரது குணவமைப்பு பல அம்சங் கள் விரவியது. எந்தப் பெரிய சிந்தனையாளர்களையும் தோற்று விக்காததும், தெளிவுந் திட்பமு மற்ற அரைகுறையான சித் தாந்தங்களை யுடையதுமானதோர் இயக்கத்தைத் தேசியச் சம வுடைமைத் தத்துவம் என்று வழங்குவோமாலல், அது ஆங் கில மரபிற்கு முரண்பாடாக விருந்த ஒரு தத்துவத்தைச் சார்ந்ததெனலாம். அத்தத்துவம் இனத்தூய்மை மட்டுமே நாட்டினத்தை மதிப்பிட உதவுவது என்ற கருத்தை ஏற்படுத் தியது. ஆரிய இனத்தின் அடிப்படையினின்று வந்ததாகக் கொள்ளப்பட்ட சேர்மானிய இனத்தைச் சேர்ந்தவர்கள் தாங்கள் மட்டுமே என்று அவர்கள் கருதும்படி அத்தத்துவம் அமைந் தது; சேர்மானிய மண்மீது பிறந்து வளர்ந்து, சேர்மானிய மொழி பேசி, சேர்மானிய வித்தியாசாலைகளில் கல்வி கற்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்மானிய வாழ்க்கையின் நோக்கத்தையே தம் நோக்கமாகக் கொண்டு, சேர்மானியத் தாய்நாட்டுக்காகச் சண்டையிட்டு, தேவையாலல், உயிரையுமிழக்கத் தயாரான மக்களுக்கு—அவர்களது நரம்புகளில் "ஆரியரல்லாதாரின் இரத்தம்" ஓடியிருக்குமாலல்— குடிமை உரிமைகள் மறுக்கப்பட்டன. இனக்கோட்பாடு பற்றி மனத்தில் நிறைந்திருக்கும் இந்தத் தவருன கொள்கை, ஒருபுறம் குடிமைசார்ந்த மதிப்பு, குறிப்பிட்ட வாழ்க்கை முறையைக் கைக்கொள்ளல் ஆகியவற்றைக் குறிப்பதாகிய தேசியத்திற்கும், மறுபுறம் மனித இனத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டால் எழுந்ததாகும். மேலும் அரசியற் பண்புகளை உருவாக்கும் பல மூலக் கூறுகளில் இக்கொள்கையும் ஒன்றுகும் என்க. மனிதனின் சகோதரத் தன்மையை எதிர்த்து, இணைக்க முடியாத விதமாகப் பிளவை ஏற்படுத்திய இந்த இனக்கோட்பாட்டு வெறி, உலகமளாவிய எதிர்ப்பைத் தூண்டியதில் ஆச்சரியமில்லை. சேர்மனியிலும் இது கருத்து வேறுபாட்டை உண்டுபண்ணியது. கத்தோலிக்க மேற்றிராணிமார்கள் கூடி, திருச்சபையின்பேரில் கடிதமொன்றை வெளியிட்டனர். அதில், ஒரு நாட்டிலுள்ளவர்களை இனம், இரத்தம் என்பவற்றின் அடிப்படையில் மட்டுமே அந்நாட்டு உறுப்பினர்களாக மதிப்பதை "அநீதி இழைப்பதாகத்தான் கொள்ளவேண்டும்" என்று அவர்கள் கூறினர்.

"ஆரியரல்லாதோர்" துன்புறுத்தப் படல்.

இனவொதுக்கற் கோட்பாடு, மூன்றுவது சேர்மானியக் குடியரசுக்குரிய யூதக் குடிகளை மட்டுமன்றி, "ஆரியரல்லாத" கிறித்துவரனைவரையும் பாதிக்கும் வண்ணம் கையாளப்பட்டது. அவர்களுடைய வாக்குரிமை உள்ளிட்ட குடிமை உரிமைகளை, அரசாங்கத்தால் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட சட்டமுறைகள் பறித்தன; அரசாங்க அலுவலகங்களிலும் சட்டம், மருத்துவம், கல்விபயிற்றல், ஆட்சித்துறைச் சேவை ஆகிய பரந்த நோக்குடைய தொழில்களிலும் அவர்களுக்கு இடமளிப்பதை அச்சட்டங்கள் தடைசெய்தன; அவை சமூகத்தின் கலாசார வாழ்க்கையினின்றும் அவர்களை ஒதுக்கின; அவர்களது சொத்தைப் பறித்தும் அவர்களது பிழைப்புக்கான வழிகளைத் தடுத்தும், அவர்களை நாட்டிலிருந்து விரட்டியோட்டுவதாகிய திட்டத்தை நிறைவேற்றவும் துணிந்தன. அகதிகளின் உயர் ஆணையாளர் 1935 ஆம் ஆண்டில் தம் அறிக்கையில் பின்வருமாறு கூறினர்: "ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்டவரான யூதமக்கள் 'நோதிக்கு' இனத்தவராகக் கருதப்படும் தகைமையுடையவராயிருக்கவில்லை என்பது தவிர, தேசியச் சமவுடைமையாளர் அவர்கள்மீது வேறு எந்தக் குற்றச் சாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையும் சுமத்த முடியாது; அத்தகைமையில்லையென்பதற்காகவே அவர்கள் நசுக்கப்படுகின்றனர். இன்றும் அம்மக்கள் தங்களது நீடிய, வீரம் செறிந்த துயரமான வரலாற்றிலே அரசியல் பற்றியதும் கட்சிப்பிரிவு பற்றியதுமான நோக்கங்களுக்காக வீண்பழி சுமத்தப்பட்டுள்ளனர். தேசியச் சமவுடையாளர் மிகவும் கொடிய, ஏற்றுக்கொள்ளக் கூடாத குற்றச்சாட்டுக்களை அவர்களுக்கெதிராகக் கொண்டு வருகின்றனர்; யூதர்கள் சேர்மனியிடம் இடைவிடாது காட்டிவந்துள்ள பற்றுறுதி சம்பந்தமான உண்மைகளைக் கூட தேசியச் சமவுடைமை ஆட்சியாளர் புறக்கணிக்கின்றனர்; எடுத்துக்காட்டாக, பேரரசு நிலவியபோது சேர்மனியை ஒன்று படுத்தவும், பின்னர் பலப்படுத்தவும் யூதர்கள் உதவினர்; யூத இளைஞர்கள் 1914–18 ஆம் ஆண்டுப் போரின்போது தங்களுடைய தாய்நாட்டுக்காக, அரசிலுள்ள வேறு எந்த மதக் கூட்டத்தினரையும் போல, அதிக தொகையில் தங்கள் உயிர்களைத் தியாகஞ் செய்தனர்; அப்போர்க் காலத்தில் யூத விஞ்ஞானிகளும், உயர் அலுவலர்களும் போராட்டத்தை நீடிக்கச் செய்யக் குறிப்பிடத்தக்க விதத்தில் துணை செய்துள்ளனர்; மேலும் குடியாட்சி நிலவிய காலத்தில் யூதத் தலைவர்கள் தோல்வியின் மிக மோசமான விளைவுகளிலிருந்து சேர்மனியைக் காப்பாற்ற உதவினர். இவ்வுதவிகளுக்குப் பதிலாக, 1914–18 ஆம் போரின் இறுதியாண்டுகளிலும், அதன் பின்னருள்ள பத்து ஆண்டுகளிலும் சேர்மானிய மக்கள் அனுபவித்த துன்பத்திற்கும் இன்னல்களுக்குமான காரணப் பொறுப்பை யூதர்கள்மீது சுமத்துவதால், ஆட்சியாளர் தமக்கு நன்மை விளையுமெனக் கருதுகின்றனர். மொத்தக் குடித்தொகையில் நூற்றில் ஒரு பங்குக்கும் குறைவாகவே யூதர்கள் இருந்தபோதிலும், சேர்மானிய மக்கள் அனுபவிக்கவேண்டியிருந்த துன்பத்திற்கெல்லாம் யூதர்களே பொறுப்பாளிகளாக்கப்படுகின்றனர். கொள்ளை நோய்க்குக் காரணம் அவர்கள் தான் என்பதாக அவர்களைக் கொன்றும், அவர்களைச் சேர்மானிய நாடுகளிலிருந்து வெளியேற்றியும் துன்புறுத்திய மத்தியகாலத்தைப் போலவே, இன்றும் அவர்கள் சேர்மனியின் பொருளாதார, கலாசார வாழ்க்கையிலிருந்து ஒதுக்கப்பட்டு, சேர்மானியருடைய அவமானத்திற்குக் காரணம் அவர்கள்தான் என்று குற்றஞ் சுமத்தப்பட்டு இழிவுபடுத்தப்படுகின்றனர். போர் நினைவுக் கூடங்களில் போரிலிறந்துபட்ட யூதர்களின் பெயர்கள் கூட இனிமேற் பொறிக்கப்படலாகாது என்று உத்தரவிடக்கூடிய அளவுக்கு இந்த வெறுப்புப் பரவியுள்ளது." உலகமெங்கும் யூத இனத்தவருக் கெதிராகச் சேர்மானியர் செய்த வரம்பு மீறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்கள் நாகரிகத்திற்கு ஒரு பேரவமதிப்பாகக் கருதப்பட்டன. ஒரு நாட்டு நாகரிக மக்கள் மிலேச்சத்தன முடையவர்களாக மீண்டும் மாறுதலால் மனித இனத்தின் மனச்சாட்சி தூண்டப்பட்டிருக்குமானால், அதற்குக் காரணம் சட்டத்திற்கமைந்த தொரு சமுதாயத்தை ஒழித்துக் கட்டுவதற்காக வேண்டுமென்றே செய்யப்பட்ட இவ்வாறான முயற்சிதான் என்க. இச் சமுதாயம் வேறொரு இனத்தைச் சார்ந்திருந்ததுவே இதன்மீது சுமத்தப்பட்ட ஒரேயொரு குற்றமாகும். இத் திட்டமிடப்பட்ட முயற்சி தார்மீக நெறியின் ஆணிவேரையே அசைத்துத் தாக்கி, எந்நாட்டவருடைய ஏமத்துக்கும் பாதகமாயமைந்தது. அநீதியொன்று நடைபெறுங்கால் அது பற்றி நாம் அக்கறையின்றி இருப்பதாகக் காட்டிக்கொண்டால், நமது சொந்தப் பாதுகாப்புக்கே நாம் இடர் விளைத்துக் கொள்கிறோம் என்பது உறுதி.

சமயத் துன்புறுத்தல்.

இம்சை இம்சைக்கேதுவாகிறது; ஏனெனில் மனித உணர்ச்சியைச் சுற்றி சமரசம் எழுப்புகின்ற பாதுகாப்பரண்களில் உடைப்பொன்று ஏற்படுமானால், தீய உணர்ச்சிகளென்னும் வெள்ளம் அதனூடே கட்டுப்படுத்தவியலாத வேகத்துடன் பெருக்கெடுத்தோடும். இனவெறியால் தூண்டப்பட்ட தேசியச் சமவுடைமையாளர், யூதர்கள், ஆரியரல்லாத கிறித்துவர்கள் ஆகியோரை வருத்தியபின், உரோமன் கத்தோலிக்கர்கள் புரட்டெசுத்தாந்தர்கள் ஆகியோரை வருத்துவதையே அடுத்தபடியாக மேற்கொள்வாராயினர்; ஏனெனில் அவர்களும் அரசுபற்றித் தேசியச் சமவுடைமையாளர் கொண்டிருந்த எண்ணங்களுக்கு இணங்க முடியாதவராயிருந்தனர். இனம், கல்வி என்பவை சம்பந்தமான தேசியச் சமவுடைமைக் கொள்கைகள், உரோமன் கத்தோலிக்க மதத்தினுடைய போதனைகளுடன் பொருந்தமுடியாதவையாகவிருந்தன. 1931 ஆம் ஆண்டிலேயே, சேர்மானிய கத்தோலிக்க மேற்றிராணிமார்கள், தேசியச் சமவுடைமைக் கொள்கையைக் கண்டனம் செய்தனர். அப்போது அவர்கள், "அரசியல், கல்வி ஆகியவை பற்றித் தேசியச் சமவுடைமைக் கட்சி கத்தோலிக்கக் கோட்பாடுகளுக்கெதிரான நோக்கங்களைக் கொண்டிருக்கும்வரை, கத்தோலிக்கக் கிறித்துவன், எவனும் அக்கட்சியின் உறுப்பினனாக இருக்கலாகாது" என்று அழுத்தமாகக் கூறினர். அத்துடன், தேசியச் சமவுடைமையாளரால் கிறித்து மதம் எனக் கூறப்படுவது, "கிறித்துவின் கிறித்து மத மல்ல" என்ற அறிவிப்பையும் அவர்கள் வெளியிட்டனர். கத்தோலிக்க மதத்தைத் தேசியச் சமவுடைமையாளர் தாக்கியமையையும், கத்தோலிக்கக் குருமாரை அவர்கள் சிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தமையையும் கண்டு, சேர்மனியில் கத்தோலிக்கருக்குக் கொடுமை ஒன்று நடைபெற்றிருந்தது என போப்பாண்டவர் வெளிப்படையாகக் கூறும்படியாயிற்று. கிறித்து மதத்தை "அந்நிய கருத்தியல்" என்று குறிப்பிட்ட தேசியச் சமவுடைமையாளரின் அஞ்ஞானக் கோட்பாடுகளுக்கும், தங்கள் கொள்கைகளுக்கும் மூரண்பாடிருப்பதாக புரட்டெசுத்தாந்தர்கள் கண்டனர். இனவணக்கங் கொண்ட புதிய அஞ்ஞானத்திற் கெதிராக, பரம்பரையாக வந்துள்ள கிறித்துவ மதக் கோட்பாடுகளை ஆதரித்துப் பேசிய சமய ஆர்வலர், "விவிலியத்திற்குச் சார்பாகவும், ஒரு புதிய அஞ்ஞானத்திற்கு (புறச்சமயத்திற்கு)" எதிராகவும் தாங்கள் இருந்ததாகக் கூறினர்.[1] மேலும் இனமும் தேசியமும் சம்பந்தமான வாழ்க்கையின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த தேசியச் சமவுடைமைக் கொள்கை "ஒரு பேராபத்தாக" விருந்தது என்று அவர்கள் கூறினர். புரட்டெசுத்தாந்த மதக்குருமார் அடர்த்து பாசறைகளுக்கு அனுப்பப்பட்டனர்; ஆனல் வைதிகக் குருமாரின் மனநிலையோ மாறுதிருந்தது; இவர்கள், அவமானமாகச் சரணுகதியடைந்த அரசியல் வாதிகள் போன்றிராது, துணிவு மிக்கவராக விளங்கினர். இவ்வாறுகத் தேசியச் சமவுடைமைக் கொள்கை, இனவணக்கத்தைக் கொண்ட புதிய அஞ்ஞான வளர்ச்சியின் விளைவாகக் கடவுளை மறுத்தது; இதனல் அக்கொள்கை மேற்கத்திய உலகத்தின் மூன்று பெரும் மதங்களாலும் எதிர்க்கப்பட்டது.

வெளிநாட்டுப் பூட்கை.

தேசியச் சமவுடைமையாளர், உள்நாட்டுக் கருமம் சம்பந்தமாகத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக மேற்கொண்ட முறைகளை, அதே அளவு வெற்றியுடன் வெளிநாட்டரசியற்றுறையிலும் பயன்படுத்தினர். இப்படிப்பட்ட முறைகளின் அடிப்படை நோக்கம் இணக்கத்துக்கு வழிதேடாது, வலுவந்தத்தின் மீது நம்பிக்கை கொள்ளலாகும். ஆட்சிக்குவந்த புதிய அரசாங்கமானது ஒன்றை நயந்து பெறுவதைவிட, வலுவில் எடுத்துக் கொள்வதையே விரும்பியது; நட்பு முறையான இணக்கப் பேச்சுக்கள் மூலம் பொருத்தனைகளை மாற்றுவதை விட, அவற்றின் கட்டுப்பாடுகளை ஒருதலைப்பட்சமாக நிராகரிப்பதன் மூலம் அவைகளை அழிப்பதையே அவ்வரசாங்கம் அதிகம் விரும்பியது; எவ்வித எச்சரிக்கையுமின்றி உலகின் மீது

---

[1] மத நம்பிக்கையற்ற கோட்பாடுகளை ஆதரித்தமையினலும், இற்லரையே உண்மையில் தெய்வத் தன்மையுடையவனெனப் போற்றியமையாலும் தேசியச் சமவுடைமைக்கொள்கையானது சமய உண்மைகளை ஒப்புக்கொள்வோர் இயக்கத்தால் கண்டிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் நடவடிக்கைகளைத் திடீரெனத் தீவிரத்தல், நெருக்கடியான சூழ்நிலையை எற்படுத்தி ஐரோப்பாவைத் தவிக்க வைத்தல் ஆகியவற்றையே அவ்வரசாங்கம் அதிகம் விரும்பியது. தேசியச் சமவுடைமையாளருக்கு உள் நாட்டில் நற்பேறு இருந்தது போலவே வெளிநாடுகளிலும் இருந்தது; எவ்வாறெனில் அவர் களுடைய எதிரிகளின் பாசறையில் தடுமாற்றநிலை மேலோங்கி யிருந்தமையால், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேசியச் சம வுடைமையாளர் பயன்பெற முடிந்தது. குடியாட்சி நாடுகளில் கருத்துவேற்றுமைகளும் திடமற்ற பூட்கையும் காணப்பட்டமை யால் இவர்கள் தங்களுக்குச் சிறந்த நட்பாளரை அவர்களிடையே பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருந்தது. இவர்கள் தங்களுடைய சதித்திட்டங்களை மறைப்பதற்காகப் பிறரைத் தாக்கும் நோக்க மெதுவும் தங்களுக்கில்லை எனக் கூறினர்; ஆனால் இவ்வாறு அவர்கள் கூறியமை போருக்காகச் செய்யப்படும் விரிவான ஆயத்தங்களினின்றும் தாங்கள் தடை செய்யப்படக் கூடாது என்பதற்காகவே. சேர்மனி மீண்டும் படைக்கலந் தாங்கி ஐரோப்பாவிலுள்ள ஏனைய நாடுகளைத் தாக்கக்கூடிய ஆற்றலைப் பெறுமானால் அதற்கு முக்கிய காரணம் எளிதான முறையில் பிறரைத் தாக்கும் ஆற்றல் பெற்றிருந்த ஏனைய நாடுகள், சேர்மனியின் தாக்குதலைத் தடுக்கத் தவறியமையே யன்றி, சேர்மனியின் சொந்தத் தன்னியல்பான வலிமை யன்று. வலுவந்தங் காரணமாக மேலும் மேலும் சலுகைகள் வழங்கப்பட்டமை மேலும் புதுப்புதுக் கோரிக்கைகளைச் செய்யு மாறு மூன்றாவது குடியரசை உற்சாகப் படுத்தியது.

வேர்சைப் பொருத்தனையிலிருந்து பின்வாங்குதல்.

சேர்மனி, ஒன்றன்பின் ஒன்றாக விரைந்து எடுத்த நடவடிக் கைகள் மூலம், வேர்சைப் பொருத்தனையின் மூலம் தனக்கு எற்பட்டிருந்த கடப்பாடுகளை அகற்றியதுடன், வெற்றியடைந்த தனது எதிரிகளால் தன்மீது சுமத்தப்பட்ட ஆள்புலம் பற்றிய ஒப்பந்தங்களை ஒழிக்க உறுதியாகத் தீர்மானித்துவிட்டதாகவும் உலகுக்கு அறிவித்தது. கையொப்பமிட்ட ஏனைய வல்லரசுகள் வேர்சைப் பொருத்தனையை மீறத் தொடங்கின. இது வரலாற் றிலே குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இதனையொட்டிப் பல எதிர்ப்புக்கள் எழுந்தன. இவற்றுள் எதுவும் பயனளிக்கவில்லை. முதல் முயற்சி 1933, ஒற்றோபரில் செய்யப்பட்டது; அப்போது சேர்மனி செயற் சுதந்திரம் பெறுவதற்காகவும், உடன்படிக்கை யால் தன்மீது சுமத்தப்பட்ட தடைகளிலிருந்து தன்னை விடு வித்துக் கொள்வதற்காகவும் நாட்டுக் கூட்டவையிலிருந்து தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகிக் கொள்வதாக அறிவித்தது. 1935, மாச்சில், போர்ப் படைக்குக் கட்டாய ஆட்சேர்ப்புச் செய்யச் சேர்மனிக்கு உரிமையுண்டென்பது சம்பந்தமாக ஓரறிக்கை வெளியிடப்பட்டது. "சேர்மானிய அரசாங்கம், போருக்குரிய தாக்குதலுக்காக எந்தக் கருவியையும் உற்பத்தியாக்கும் நோக்கத்துடன் சேர்மனியை மீண்டும் படைக் கோலம் பூணச் செய்ய விரும்புகிறதில்லை யெனவும், ஆனால் அதற்கு மாறுக, பாதுகாப்புக்காகவும், அதன்மூலம் அமைதியை நிலைநிறுத்துவதற்காகவும் மட்டுமே அது அவ்வாறு செய்கிற தெனவும், அது தான் செய்த வாக்குறுதியைச் சேர்மானிய மக்கள் முன்னிலையிலும் உலக மக்கள் முன்னிலையிலும் புதுப்பித்துக் கொள்கிறது" என்று அவ்வறிக்கை கூறியது. அடுத்த சில ஆண்டுகளில், "பாதுகாப்புக்கு மட்டுமே" ஏற்படுத்தப்பட்ட ஒரு கருவி அண்மையிலிருந்த மூன்று நாடுகளின் சுதந்திரத்தைப் பறிக்க உபயோகிக்கப்பட்டபோது இந்த வாக்குறுதியின் உண்மை சோதனைக்குட்படுத்தப்படுவதாயிற்று. பிரான்சும் பெரிய பிரித்தானியாவும் இத்தாலியும் இதனையொட்டி எதிர்ப்புக்கள் தெரிவித்தன. இவற்றுள் இத்தாலிய நாடு, "சருவதேசங்களுக்கான பொறுப்புக்கள் புறக்கணிக்கப்படுதற்குக் காரணமாகிய ஒரு தலையான தீர்மானத்தால் நிருணயிக்கப்படும் நிலைமைகளை, தான் உண்மையான நிகழ்ச்சிக்குரிய நிலைமைகள் என வெறுமனே ஒத்துக்கொள்ள முடியாது" என்று கூறியது. மிகக் குறுகிய காலத்திற்குள், சேர்மானிய நிலமண்டில நாயகனின் மாளிகைச் சுவர்களில் ஒட்டப்பட்ட எதிர்ப்புத் தெரிவிக்கும் காகிதங்கள் வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படாது போயினும், அவைகள் யாரால் உருவாக்கப்பட்டனவோ அவர்களுடைய வலுவின்மையை வெளிப்படுத்துவனவாக விருந்தன. ஓராண்டிற்குப் பின் (1936), அபிசீனியா சம்பந்தமாகப் பெரிய பிரித்தானியாவும் பிரான்சும், இத்தாலியுடன் பிணக்குற்றிருந்ததைச் சேர்மனி தனக்கு நன்மையாகக் கருதி, உலொக்காணைப் பொருத்தனையை உதாசீனஞ்செய்ய இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியது; இப்பொருத்தனையை, இருவயினைத்த உதவி கருதிச் செய்யப்பட்ட பிரான்சிய-சோவியத்துப் பொருத்தனை மீறியதாலேயே, சேர்மனி தான் அவ்வாறு உதாசீனஞ்செய்ததாக அதற்கொரு காரணங் கூறியது; இரைன் நதியின் இடக்கரையில் தனக்குரிய ஆள்புலத்தில் படைகளை நிறுத்தி வைக்கவும் சேர்மனி முற்பட்டது. இரைனிலாந்தினுடைய படையொழிக்கப்பட்ட வலயத்தைச் சேர்மனி தனது போர்ப்படைக்குரிய உறைவிடமாக்கியமை, புதிய எதிர்ப்புக்களைக் கிளப்பியது; ஆனால் சேர்மானியப் பூட்கையின் வெளிப்படையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குகளுக்கெதிராக உறுதிவாய்ந்ததொரு நிலையை ஏற் படுத்துவதற்கான வாய்ப்பு, தேசியச் சமவுடைமையாளரின் ஆட்சி இன்னும் வலிமை குன்றியிருந்த காரணத்தால் நழுவவிடப் பட்டது.

அரசுவலுச் சமநிலை புதுப்பிக்கப் படல்.

வீமாக் குடியரசின் கீழ் எவ்வாறு ஒன்றன்பின் ஒன்றுக வந்த சேர்மானிய அரசாங்கங்கள் மேற்கத்திய நாடுகளுடன் ஒத்துழைப்புப் பூட்கையைப் பின்பற்றின வென்றும், வேர் சைப் பொருத்தனையில் கையெழுத்திட்ட மற்ற நாடுகளால் தாராளமாகக் கொடுக்கப்பட்ட பல சலுகைகள் சம்பந்தமாக அவ்வரசாங்கங்களின் இணக்க மனப்போக்கு எவ்வாறு பய னளித்ததென்றும் நாம் அறிந்துள்ளோம். இவ்வாறு 1914-18 ஆம் ஆண்டுப் போரினால் விளைந்த பல பிரச்சினைகள் கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந் தன; ஐரோப்பிய ஐக்கிய அரசுகள் என்ற கருத்துணர்வு, ஐரோப்பிய அரசறிஞர்களுள் மிகத் தீர்க்கதரிசனமுடைய ஒரு வரால் தொடக்குவிக்கப்பெற்று, மற்றெல்லா ஐரோப்பிய அர சாங்கங்களாலும் மரியாதையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டபோது, அது எவ்வகையிலும் ஒரு கனவாகத தோற்றமளித்திலது. எனினும் சேர்மனியில் புதிய ஆட்சியாளர் ஆட்சிப் பீடத் தமர்ந்த போது ஐரோப்பிய ஐக்கிய அரசுகளென்ற அம் மாயை, சின்னபின்னமாக்கப்பட்டு நொருங்குண்டது; சேர்மன் "பலாத்காரக் கொள்கையின் கம்பீரமான தொனி, கண்டத்தின் ஒவ்வொரு மண்டில நாயக மன்றத்திலும் மீண்டும் ஒலித்தது. எவ்வித இணக்கத்தையும் சகிக்காததும், தன் அந்தரங்க நோக்கங்களை வெளியிட மறுத்ததும், மீண்டும் போர்க் கோலம் பூணுதலை விரைவாக மேற் கொண்டதுமான சேர்மானியப் புதிய ஆட்சியுடன் ஐரோப்பிய நாடுகள் ஒத்துழைப்பது முடி யாதுபோலத் தோன்றியது. இதனால் ஐரோப்பாவில் புதியதும், பேரிடர் தருவதுமான நிலைமை யொன்று ஏற்படுத்தப்பட்டது; அதனால் உண்டான தவிர்க்க முடியாத, ஆனால் வருந்தத் தக்க விளைவு, அரசுவலுச் சமநிலை என்ற இகழ்ச்சிக்குரிய முறைக்கு ஐரோப்பா மீண்டும் திரும்பியமை என்க. சேர்மனி யால் ஏற்படக்கூடிய ஆபத்தை நீக்க, பிரான்சு நட்பாளர்களைத் தேடியது; தேசியச் சமவுடைமைக் கட்சித் தலைவர்களின் வன் மம் நிறைந்த பேச்சாலும் எழுத்தாலும் தனிப்பட்டதொரு முறையில் கடுமையாகத் தாக்கப்பட்ட இரசியா, தான் தனிப் படுத்தப்படுதலைத் தவிர்ப்பதற்காகப் பிரான்சைப் போன்று நோக்கம் கொண்டிருந்தது; அவ்விரு நாடுகளும் (1935, மே) ஒன்றுக்கொன்று உதவுவதற்கான பொருத்தனையைச் செய்து கொண்டன. "சமவுடைமை இரசியச் சோவியத்துக்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கியமோ, பிரான்சோ தக்க காரணமின்றியே ஏதாவதொரு ஐரோப்பிய நாட்டின் தாக்குதலுக்கு இலக்காகு மென்றால், பிரான்சும், சோவியத்துச் சமவுடைமை ஐக்கிய அரசாங்கமும் உடனே ஒன்றுக்கொன்று உதவியும் ஆதரவும் கொடுக்க வேண்டும்" என்று அந்தப் பொருத்தனை விதித்தது. இரு நாடுகளுக்குமிடையே முன்னரிருந்து வந்த நட்புறவுக்கு இவ் வொப்பந்தம் மீண்டும் உயிரளித்தது; அத்துடன் தான் "வீழ்த் துக்கொள்ளப்படலாம்" என்ற சேர்மனியின் முறையீட்டுக்கு இத னால் மீண்டும் இடமேற்பட்டது. மேன்மேலும் ஐரோப்பாவின் அரசியல் நிலை இந்த ஊழியிலே தன்னுடைய மரபுரிமையான கோலங் கொள்ளத் தொடங்கிவிட்டதாகக் காணப்பட்டது. இதே ஆண்டில் இருவயினைத்த உதவிக்கென மற்றொரு பொருத் தனை இரசியாவுக்கும், செக்கோசிலவாக்கியாவுக்கு மிடையே செய்யப்பட்டது. இதன் பிரகாரம், தாக்குதலுக்குட்பட்ட ஒரு நாடு பிரான்சின் உதவியைப் பெறுவதாயிருந்தால், அந்நாடு காரணமில்லாமலே தாக்கப்படும் வேளையில், இரசியா, செக் கோசிலவாக்கியா ஆகிய இவ்விரு நாடுகளுள் ஒன்று மற் றொன்றிற்கு உதவி செய்யும் கடப்பாடுடையதாகு மென்றிரு யது.

படைக் குறைப்புக் குரிய அறிகுறிகள்.

சேர்மானிய நாடு விட்டுக்கொடுக்காத ஒரு பூட்கையைப் பின் பற்றியதன் காரணமாகத் தான் ஆபத்து நிறைந்த வழியில் தனித்து நிற்க ஏற்பட்டமையினால் உருவான நிலைமையை, பெரிய பிரித்தானியாவுடனும் போலந்துடனும் தானும் படைக் கலந்துறந்ததாகக் காட்டுவதன்மூலம் நீக்கிக்கொள்ள முயற் சித்தது. அது பெரிய பிரித்தானியாவுடன் கடற்படைக் கூட்டணி யொன்றில் (1935) கையெழுத்திட்டது. அதன்படி தனது கடற்படையின் எண்ணிக்கை பிரித்தானியக் கடற்படை எண்ணிக் கையில் 35 சதவிகிதத்திற்கும் அதிகமிருக்கலாகாது என்பதைச் சேர்மனி ஒப்புக்கொண்டது. கடற்படை சம்பந்தமான படைக் கலங்களைப் பெருக்குவதில் சேர்மனி மற்றொரு பந்தய ஓட்டத்தை ஆரம்பித்து விடலாம் என்று பிரித்தானியா கொண்டி ருந்த ஐயங்களை நீக்குவதே இக்கூட்டணியின் நோக்கமாக விருந்தது; தரைப்படை வலிமை கொண்ட சேர்மானிய நாடு கண்டத்திலே சுதந்திரமாகக் கருமமாற்றுவதற்கு அனுமதி யளிக்கப் பிரித்தானிய நாட்டைத் தூண்டுதற்கு இவ்வ ழியே சிறந்தது என நம்பப்பட்டது. அண்மையிலுள்ள போலந்துடன் சேர்மனி ஒரு பொருத்தனையைச் (1934) செய்து கொண்டது. "பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எக்காரணத்தைக் கொண்டும் வலுவந்தத்தை நாடலாகாது" என்பதாகச் செய்யப்பட்ட அந்தப் பொருத்தனை பத்தாண்டுகளுக்கு அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரு நாடுகளையும் கட்டுப்படுத்தியது. பொருத்தனையின் வாசகங்கள், பத்தாண்டுக் காலத்திற்குச் சேர்மனியானது, "போலந்து இடைவழி" உட்பட தன் கிழக்கு எல்லைகளை வலோற்காரமாகத் திருத்தி அமைக்க முயற்சி செய்யாது என்ற உட்கருத்துடையனவாயிருந்தன. "போலந்து இடைவழி" பற்றிச் சேர்மனி மனக்கசப்புடன் இடித்துப் பேசியிருந்ததென்க. 1936 இல், அது இரசியாவுக் கெதிராக கொமிந்தன் எதிர் ஒப்பந்தமொன்றை யப்பானுடன் செய்து கொண்டது. அதனுடைய வெளிநாட்டுத் தொடர்புகளில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றம், இத்தாலியுடன் அது செய்து கொண்ட நட்புறவு முயற்சியாகும். இத்தாலி, சேர்மனி ஆகிய இரு நாடுகளும் அனைத்தாண்மை நாடுகளாக விருந்தனவாயினும், ஒரேவித கருத்துக்கள் கொண்டனவாயினும், முசோலினி கூறியவாறு, "சமகாலத்துக்குரிய பண்பாடு சம்பந்தமான கருத்துக்கள் எல்லாவற்றுக்கும் எதிர்ப்புக் காட்டியனவாயினும்," அவை ஒசுற்றியாவின் கதி சம்பந்தமான பிரச்சினையில் கருத்துவேற்றுமை கொண்டு விலகியே இருந்துவந்துள்ளன; ஒசுற்றியாவின் சுதந்திரத்திற்கு இத்தாலி தன்னைத் தானே பாதுகாவலனாக ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அபிசீனியாவை இத்தாலி கைப்பற்றியதால், அது குடியாட்சி நாடுகளின் எதிர்ப்புக்குள்ளாகி, அவற்றுடன் மனவேறுபாடு கொண்டிருந்தபோது, சேர்மனியின் பக்கமாக அது சேர்ந்துகொண்டது. இவ்வாறுக, வேர்சைப் பொருத்தனையில் கையொப்பமிட்டவர்களிடையே பிளவு ஒன்றை ஏற்படுத்து முகமாக, ஒரு நட்பாளனைப் பெறும் வாய்ப்பைச் சேர்மனி வரவேற்றது. 1936 இல் முசோலினி, "உரோம்–பேளின் அச்சு" உருவாக்கப்பட்டதை அறிவித்தான். அவ்வச்சு இரு வல்லாட்சிகள் ஒன்றுக இணைக்கப்பட்டதன் அடையாளமாக விளங்கிற்று.

சேர்மனியின் நோக்கங்கள்.

சூழியல் சம்பந்தமான இவ்வெற்றிகளுக்குச் சிகரம் வைத்தாற்போல், அரசியலில் துணிகரமான வாழ்வுடைய ஒருவன் தொடக்க காலத்தில் அநேகமாகப் பெறுகின்ற நற்பேறு போன்று, சேர்மானியத் தலைவனும் பெறுவானாயினன். அபிசீனியக் கோளாறு காரணமாக நாட்டுக் கூட்டவையின் அதிகாரம் தகர்ந்தது; முக்கியத்துவம் வாய்ந்த இந் நிகழ்ச்சி ஐரோப்பிய வரலாற்றில் ஒரு திருப்பத்தைக் குறிப்பதாக விருந்தது. கூட்டேமத்தின் அமைப்பு சின்னபின்னமாக்கப் பட்டிருந்தது; எனெனில் அதன் வெளிப்படையான ஆதரவாளர்கள் "சமாதானம் பகுக்கப்படமுடியாதது", "தாக்குதல் தாக்குதலை உண்டுபண்ணும்" என்ற கூற்றுக்களின் உண்மையைக் கண்டு கொள்ளத் தவறிவிட்டனர். அதன் விளைவாக, ஐக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பா தன்னை இதற்கு மேலும் எதிர்த்து நிற்காதெனக் கண்ட சேர்மனி, "கிழக்கு நோக்கிச் செல்லல்" என்ற தனது பரம்பரையான குறிக்கோளை அடைவதன் பொருட்டு, மத்திய, தென்கிழக்கு ஐரோப்பாவின் அரசியல், பொருளாதாரக் கூட்டுத் தலைமைக்காகப் பாரதூரமான விளைவுகளைத் தருவதாகிய ஒரு முன்றிட்டத்தைச் செயற்படுத்தக் கூடியதாயிருந்தது. சேர்மனி கைக்கொண்ட நடைமுறை, ஓர் எதிரிக்குப் பின் மற்றொரு எதிரியைத் தீர்த்துக் கட்டுவதில் பிசுமாக்கு மேற் கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மூன்மாதிரி யைப் பின்பற்றுவதாயிற்று; ஆனால் இதற்கிடையில், மற்றப் பகுதிகளை எவ்விதமான தாக்குதலுக்குட்படுத்தும் எண்ணங் களும் தனக்குக் கிடையாதெனச் சேர்மனி கூறியது. இவ் வாறு ஒசுற்றியாவுக்கு அதன் சுதந்திரம் வலோற்காரமா கப் பறிக்கப்படமாட்டாதென்றும், செக்கோசிலவாக்கியாவுக்கு அதன் முழுமை காப்பாற்றப்படுமென்றும், பிரான்சுக்கு அதன் எல்லைகள் பாதுகாக்கப்படுமென்றும் சேர்மனி வாக்களித்தது. ஒசுற்றியா, செக்கோசிலவாக்கியா ஆகியவற்றுக்கு நேர்ந்த கதி, மூன்றுவது சேர்மானியக் குடியரசால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளின் தன்மை எத்தகைய தென்பதைச் சீக்கிரமே வெளிப்படுத்தியது; போலந்தில் நிகழ்ந்த படையெடுப்பு, சேர் மனியின் பேரவாக்கள் நிறைவேறவில்லை யென்பதைக் காட்டிற்று. சேர்மனியின் தாக்குதலுக்கு முதன்முதல் இரை யானது ஒசுற்றியக் குடியரசென்க.

ஒசுற்றியக் குடியரசு.

1914–18 ஆம் ஆண்டுப் போருக்குப் பின் ஒசுற்றியப் பேரரசு கிதைக்கப்பட்டு, 60 இலட்சம் மக்களுள்ள ஒரு சிறிய குடியரசாகக் குறைக்கப்பட்டது. அந்நாட்டு மக்களில் மூன்றி லொரு பங்கினர் வீயன்னாவில் வதிந்தனர். 1916 இல் பிரான் சிசு யோசேப்புக்குப் பின் அரியணை ஏறிய பேரரசன் கார்ள் என் பவன், 1918 நவெம்பரில் "அரசாங்க அலுவல்களில் தனக் குள்ள பங்கனைத்தையும்" நீத்தான். "ஒசுற்றிய—அங்கேரியி னல் செருக்குடன் தூண்டிவிடப்பட்டிருந்த போரின் முடிவு இது தான்; இதுவே படைசார்ந்த முடியாட்சியின் முடிவாகும்" என்று வீயன்னாப் புதினத்தாளொன்று எழுதிற்று. அதுவே சேர்மனியின் போர்ப்படை சார்ந்த முடியாட்சியின் முடிவுமா கும். இருநாடுகளிலும் ஒரு சுதந்திர ஆட்சி ஏற்பட்டமை, அவற்றுக்கிடையிலுள்ள உறவுப் பிணைப்புக்களைப் பலப்படுத்தி, அவைகள் ஐக்கியமடைவதற்கான கோரிக்கைக்கு வழி செய்தது. 1919 சனவரியில், ஒசுற்றிய தேசிய மன்றம், சேர்மானிய ஒசுற் றியாவானது சேர்மானியக் குடியரசின் ஒரு பகுதி என்பதாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானித்தது. இந்த அறிவிப்பு "வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெளிப்பகர்ப்பு" எனச் சேர்மானியக் குடியரசின் முதல்வனால் வரவேற்கப்பட்டது; "அவர்கள் நமக்குச் சொந்தமானவர்கள், நாம் அவர்களைச் சேர்ந்தவர்கள்" என அவன் மேலும் கூறினான். என்றாலும் வெற்றியடைந்த நாடுகள் அந்த ஐக்கியத்தை அங்கீகரிக்கத் திடமாக மறுத்தன; ஏனெனில் அந்நாடுகளின் நோக்கம், தோற்கடிக்கப்பட்ட எதிரியைப் பலவீனப்படுத்துவதேயன்றி, பலப்படுத்துவதன்று. ஆகையால் இருபதாண்டுகளாக ஒசுற்றியா ஒரு சுயேச்சை நாடாக விருந்தது. குடியாட்சியின் தொடக்க காலங்களில் அதன் முக்கிய பிரச்சினை, நாட்டின் மாறுபட்ட நிலைமைக்குத் தகுந்தவாறு பொருளாதாரத் திட்டத்தைத் திருத்தி அமைப்பதாக விருந்தது; ஆனால் நாட்டுக் கூட்டவையின் ஆதரவில் கொடுக்கப்பட்ட பொருளுதவியால், அது தனக்குற்ற இன்னல்கள் பலவற்றைப் படிப்படியாகத் தீர்க்கக் கூடியதாயிற்று. வேலையின்மை, பொருளாதார நெருக்கடி ஆகியவை அதிகரித்துக் கொண்டிருந்தசமயம் சேர்மனியில் தேசியச் சமவுடைமையாளர் அதிகாரம் பெற்றபோது ஒரு புதிய நிலை ஏற்பட்டது. அவர்களுடைய வெற்றியினால் ஒசுற்றியாவில் உடனடியான ஒரு விளைவு உண்டாயிற்று. அங்கே இப்பொழுது படுகொலை, வெடிகுண்டு வீச்சு ஆகியவை தொடர்பான பீதி தரும் முறைகளைக் கடைப்பிடிக்கக்கூடிய பலம் வாய்ந்த ஒரு தேசியச் சமவுடைமைக் கட்சி இருந்தது. இளர்ச்சியை அடக்குவதற்காக அதிகாரிகள் அக்கட்சிக்குத் தடையுத்தரவு விதித்தனர். அக்கட்சி உறுப்பினரில் பலர் சேர்மனிக்கு ஓடிச்சென்று, ஒசுற்றியப் படைகளின் ஒரு பகுதியாகத் தங்களை அமைத்துக்கொண்டனர். அங்கிருந்து கொண்டு எல்லைகளை அடிக்கடி தாக்கி, குடிமக்களை அமைதியற்ற தொரு நிலையில் வைத்தனர்.

ஒசுற்றியாவில் உள்நாட்டுக் குழப்பங்கள்.

சேர்மானியக் குடியரசு ஒசுற்றியக் குடியரசை ஒழிக்கும் நம்பிக்கையில் அங்கிருந்த புரட்சிச் சத்திகளை வெளிப்படையாகத் தூண்டியபோது, சேர்மனியுடன் ஐக்கியப்படவேண்டுமென்பதற்காக மற்ற ஒசுற்றியக் கட்சிகள் இதுவரை காட்டி வந்திருந்த உற்சாகம் குறைந்தது. இந்தச் சூழ்நிலைகளில், ஒரு பிற்போக்கான சேர்மனியால் ஒசுற்றிய நாடு தன்னைப் படுத்தப்படுவதை எதிர்த்த எல்லாச் சத்திகளையும் ஒன்று சேர்ப்பது ஒசுற்றிய அரசாங்கத்தினது கடமையாக விருந்தது. அதற்குப் பதிலாக, இத்தாலியச் செல்வாக்கிற்குட்பட்டிருந்த ஒசுற்றிய மண்டலநாயகனை கலாநிதி இடோல்பசு என்பவன் யாப்பமைப்பை நிறுத்தி வைத்து (1933) ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஞ்ஞை மூலம், பாராளுமன்றமில்லாமல், வல்லாட்சியாளனாக அரசோச்சினான். ஆட்சிப் பாலன, பொருளாதாரக் கருமங்களைக் கவனிப்பதற்காக "தொகுப்பகங்களை அடிப்படையாக"க் கொண்ட அதிகார வலிமையுடைய அரசொன்றை ஏற்படுத்துவதன்மூலம் "ஒரு தொகுப்பரசை" அமைக்கும் தனது நோக்கத்தை அவன் வற்புறுத்திக் கூறினான்; அத்தொகுப்பரசு "கைப்பற்றியாளும் முறைகளை" யொட்டி அமைக்கப்பட்டது. தனது முன்றிட்டத்தின் ஓர் அம்சமாக, ஒரு பாசிச நாட்டின் தத்துவங்களுடன் ஒத்தியங்க முடியாததும், ஒசுற்றியாவின் மிகப் பெரிய கட்சியானதுமான சமவுடைமைக் குடியாட்சிக் கட்சியை அவன் அடக்கி வைத்தான். வீயன்னா மாநகர சபை, மூன்றிலிரு பங்கு நகர மக்களால் ஆட்சிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சமவுடைமைக் குடியாட்சியினர் கையிலிருந்தது. தலைநகரை அவர்களது கட்டுப்பாட்டினின்றும் விலக்கி, அவர்களை விரட்டுவதற்காக, 1934 பெப்புருவரியில், மாநகர சபையின் முதல் வரைத் தொகுப்பரசு கைதுசெய்தது; அது சமவுடைமைத் தொழிலாளர்களின் வசிப்பிடங்கள்மீது கொடிய பீரங்கிப் படைத் தாக்குதலொன்றைச் செய்வித்தது; சமவுடைமைக் குடியாட்சியாளர் பலரை அடர்த்து பாசறையில் அடைத்தது; இறுதியில் சமவுடைமைக் கட்சியையும் கலைத்தது. இவ்வாறுக, நாட்டினச் சுதந்திரத்தை நிலை நிறுத்துவதென்ற குடியாட்சி அரசாங்கத்தின் வெளிப்படையான பூட்கைக்கு முக்கிய ஆதாரமாகவிருந்தவற்றை யெல்லாம் அத்தொகுப்பரசு ஒதுக்கித் தள்ளியது. யூலையில், ஒசுற்றிய தேசியச் சமவுடைமையாளர், அநேகமாகச் சேர்மானியரின் தூண்டுதலினால் ஒரு புரட்சி செய்ய முயற்சித்தனர்; அம்முயற்சியில் மண்டில நாயகனை அவர்கள் கொலை செய்தனர்; ஆனால் தங்களை ஆட்சியில் அமர்த்திக்கொள்வதில் தோல்வியுற்றனர். தான் ஒசுற்றிய சுதந்திரத்தின் காப்பாளன் என்ற முறையில் இத்தாலிய தேசம் தனக்கு எதிரியான சேர்மனி ஒசுற்றியாவுட் புகுவதனால் விளையும் அபாயத்தை விலக்கும் நோக்கத்துடன் ஒசுற்றியாவின் எல்லைப்புறத்திற் படைகளைத் திரட்டியது; ஒசுற்றியா சேர்மனியுடன் ஐக்கியப்படுவதை அது எதிர்த்தது. எனெனில் சேர்மானியக் குடியரசின் ஆள்புலம், பிறென்னர் கணவாயில் தன் எல்லைவரை விரிவாக்கப்படுவதை இத்தாலி விரும்பவில்லை.

ஒசுற்றிய சுதந்திரத்தின் இறுதி.

புதிய மண்டிலநாயகனாகிய கலாநிதி சுச்சினிக்கு என்பவன் பொதுமக்களாதர வில்லாத ஓராட்சியைக் கைக்கொள்வதில் தனக்கு முந்தியவனின் பூட்கையையே பின்பற்றினான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒசுற்றியா தனித்து நிற்கும் நிலைமையைத் தடுப்பதற்காக, ஆப்சுபக்கு அரசமரபை மீண்டும் உயிர்ப்பிப்பதை அனும் ஆதரித்தான். 1914–18 ஆம் ஆண்டுப் போரில் இத்தாலிக்கும் அதன் நட்பாளர்களுக்குமிடையே ஏற்பட்ட பிளவுக்குப் பின்னர், ஒசுற்றியாவை வலிந்திணைப்பதைக் கைவிடுவதன் மூலம் தான் சேர்மனியுடன் புதிதாக ஏற்படுத்திய நட்புறவுக்கு இத்தாலி மதிப்புக் கொடுப்பதாயிற்று. ஒசுற்றியா உள்நாட்டுக் குழப்பங்களுக்கு இரையாகி யிருந்தது. அதன் குடித்தொகையில் ஒரு பகுதியினர் (தேசியச் சமவுடைமையாளர்) சேர்மனியுடன் ஐக்கியப்படுவதற்காக முயல்பவராயும் மற்றொரு பகுதியினர் (சமவுடைமையாளர்) அதன் காரணமாக இழிவாக நடத்தப்பட்டமையால் மனக்கசப்படைந்தவராயு மிருந்தனர்; மேலும் அந்நாடு தன்னுடைய காப்பாளனை இத்தாலியின் துணையின்றியு மிருந்தது; இன்னும், ஒசுற்றிய சுதந்திரத்தை நிலைநிறுத்துவதில் தங்களுக்கு அக்கறை உண்டு என்று ஒப்புக்காக அறிக்கைகள் விடுவதுடன் மட்டுமே மேற்கத்திய அரசுகள் மனநிறைவு கொண்டிருந்தமையால், ஒசுற்றியா தனது விதியைத் தானே நிர்ணயித்துக் கொள்ள வேண்டியிருந்தது. இக்காரணங்களால் அக்குடியரசு நீடித்து வாழ முடியாது போயிற்று. வலோற்காரச் செயலுக்கு வழங்கப்படும் வழக்கமான பீடிகை போன்று, ஒசுற்றியாவின் "முழு இறைமை"யைச் சேர்மனி உறுதிப்படுத்துவதாக, 1936 இல் இற்லர் தன்னுடைய டடைக்கலந் துறத்தல் சம்பந்தமான வாக்குறுதிகளொன்றில் குறிப்பிட்டான்; ஒசுற்றியாவில் தேசியச் சமவுடைமைப் பிரசாரத்திற்கு ஊக்கமளிப்பதில்லையென்றும் அவன் வாக்குறுதி அளித்தான். உண்மையில் செயலளவில் தேசியச் சமவுடைமைக் கட்சியின் கருமங்கள் அதிக மூனைப்புடன் செய்யப்பட்டன; 1938 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் நிலைமை உச்சக் கட்டத்தையடைந்தது. சேர்மனி, ஒசுற்றியா ஆகிய நாடுகளின் மண்டிலநாயகர்கள் சந்தித்தனர். அப்போது, ஒசுற்றியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதிலிருந்து சேர்மனி விலகிக் கொள்வதாகச் சேர்மனியின் மண்டிலநாயகன் தான் முன்னர் கொடுத்திருந்த வாக்குறுதியைப் புதுப்பித்தான். ஆனால் தன்னால் நியமிகக்பபடடவனே உண்ணாட்டு விவகார அமைச்சனாக இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தான். சில காலத்திற்குப் பின்னர், ஒசுற்றியாவின் சுதந்திரம் பற்றிக் குடியொப்பமொன்று நடத்துவிக்கப் போவதாகக் கலாநிதி சுச்சினிக்கு அறிவித்தான். இருநாட்களுக்குப் பின் அவனைற்றிய அவனது பிரியாவிடைப் பேச்சில் அதன் விளைவு விவரிக்கப்பட்டுள்ளது. "சேர்மானிய அரசாங்கத்தால் தெரியப்பட்ட ஒருவரை மண்டிலநாயகனாக நியமிக்கவும், அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரசாங்கத்தின் கட்டளைப்படி ஒசுற்றிய அரசாங்கத்தினரை நிய மனஞ் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளதென்றும், அவ்வாறு செய்யத் தவறினால் சேர்மானியப் படைகள் ஒசுற்றியாவுக்குள் படையெடுத்துச் செல்லுமென்றும் ஒசுற்றியக் குடிப்பதிக்கு இன்று சேர்மானிய அரசாங்கம் இறுதிக் கூற்றொன்றை விடுத்துள்ளது. தொழிலாளர்களிடை ஒழுங்கீனங்களிருப்பது பற்றியும், அதன் விளைவாய் இத்தம் பெருக்கெடுத்தோடுவது பற்றியும், ஒசுற்றிய அரசாங்கத்தில் கட்டுப்பாட்டுக்கு மீறிய ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பது பற்றியும் சேர்மனியில் வெளியானவை ஆதிமுதல் அந்தம்வரை பொய்களாகும் என்று நான் உலகறியக் கூறுகின்றேன். வலோற்காரத்திற்கு மட்டுமே தான் பணிந்திருப்பதாக ஒசுற்றிய மக்களுக்குச் சொல்லுமாறு உங்கள் முதல்வர் என்னைக் கேட்டுக்கொண்டுள்ளார்." எவ்வித எதிர்ப்புமின்றிச் சேர்மானியப் படைகள் ஒசுற்றிய நாட்டுக்குட் புகுந்தன; "ஒசுற்றியா சேர்மானியக் குடியரசின் ஒரு நிலப்பகுதி" என்று கூறும் ஒரு சேர்மானிய அறிக்கையால் ஒசுற்றியக் குடியாட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஏமாற்றம், வலோற்காரம் என்பவை கலந்து செயற்பட்டமையினால் இகழ்ச்சிக்குரிய முடிவுக்காலத்தைப் பெற்ற ஒசுற்றியா தனது பண்டைப் பெருமை மிக்க நாட்களில் தான் பெற்றிருந்த "மகிழ்ச்சி நாடு" எனும் பெருமையை இத்தகைய சூழ்நிலையில் பொய்யாக்கி விட்ட தென்க.

செக்கோசிலவாக்கியா.

சேர்மனியின் தாக்குதலால் அடுத்ததாக வீழ்ச்சியுற்ற நாடு செக்கோசிலவாக்கியாவாகும். செக்கோசிலவாக்கியாவின் தோற்றத்தைப் பற்றியும், அந்நாட்டுக் குடித்தொகையின் இனவாரிப் பரப்பு விகிதத்தைப் பற்றியும் வேறோரிடத்தில் நாம் விவரித்துள்ளோம். முன்னேற்றமான பல சமூக சீர்திருத்தங்களுடன் கூடிய மக்களாட்சியை யொட்டிய குடியாட்சிக்கு ஒரு முன் மாதிரியாக அது அநேக அம்சங்களில் மிக விரைவிலேயே விளங்கிற்று. வெளிநாடுகளில் அதன் புகழ் மிகவும் உயர்ந்தது. வெளிநாட்டுப் பூட்கை சம்பந்தமாக, அது தன் அண்டை நாடுகளான உரூமேனியாவுடனும், யூகோசிலேவியாவுடனும் நெருங்கிய உறவுகள் வைத்துக் கொள்ளும் கொள்கையைப் பின்பற்றியது. அது அந்நாடுகளுடன் சிறிய உடன் பாட்டு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டது. ஆபிசுபேக்கு அரச மரபை மீண்டும் புதுப்பித்தல் அங்கேரியின் இழந்த ஆள் புலங்களை மீண்டும் பெறுவதற்கான கிளர்ச்சியைத் தூண்டக் கூடியதாக விருந்தது; அப்பிரச்சினைபற்றி இம்மூன்று நாடுகளுமே அச்சங்கொண்டு, அந்நிகழ்ச்சியில் அக்கறை கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்தன. செக்கோசிலவாக்கியாவின் முக்கிய உள்நாட்டுப் பிரச்சினை, ஏறக்குறைய 37½ இலட்சம் எண்ணிக்கையுள்ள சேர்மானியச் சிறுபான்மையினரின் இணக்கமற்ற போக்குப்பற்றியதாகும். சேர்மானியரின் நிலைமை, மற்ற நாடுகளிலிருந்த சிறுபான்மையரின் நிலைமையோடு ஒப்பிடுகையில் உயர்வுடையதாகவே யிருந்தது. அவர்கள் தங்களுக்குச் சொந்தமாகப் பல்கலைக்கழகங்களும், வித்தியா நிலையங்களும் வைத்திருந்தனர்; கூட்டமைச்சுக்களில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர். என்றாலும் புதிய குடியாட்சியில் ஆதிக்கமுடைய இனத்தார் செக்கியராக விருந்தனர்; சேர்மானியர் தாங்கள் ஒருகாலத்தில் ஆட்சிபுரிந்த ஆள்புலத்தில் இப்போது இரண்டாந் தரத்தவராக வாழ்வது பற்றி வெறுப்புக்கொண்டனர். அலுவலாளராகக் கடமையாற்றுவது சம்பந்தமாகவும், அரசாங்கப் பொது வேலைகள் பகிர்ந்தளிக்கப்படுவது சம்பந்தமாகவும் அவர்களடைந்த துயரங்களுக்கு வெளிப்படையான காரணங்களிருந்தன; அவர்களுடைய உரிமைக்கோரிக்கைகள் அதிக மனத்தாராளத்துடன் கவனிக்கப்படுவதன் மூலம் அவர்களது பகைமையைத் தீர்த்திருந்திருக்கலாம். அவ்வாறுயின், பல்வேறு இன வேறுபாடுடைய தொகுதி மக்களிடையே இசைவுடைய கூட்டுறவை அடிப்படையாகக் கொண்டுள்ள சுவிற்சலாந்தைப்போல, ஒருசேர அமைக்கப்பட்ட ஒரு நாடாகச் செக்கோசிலவாக்கியா இறுதியில் மாறியிருந்திருச்கலாம். இவ்வாறு நிலைமையில் அபிவிருத்தி ஏற்படுவதற்குச் சார்பாக விருந்த வாய்ப்பு, எல்லைப்புறத்துக்கப்பாலிருந்த சேர்மானியரிடையே தேசிய உணர்ச்சியையும், பிரிப்புளங் கொண்ட செயல்களையும் தூண்டிவிட்ட சேர்மானியத் தேசியச் சமவுடைமைக் கொள்கையின் எழுச்சியால் சிதறடிக்கப்பட்டது. செக்கோசிலவாக்கியாவிலிருந்த தேசியச் சமவுடைமைக் கட்சி, சேர்மனியுடன் தொடர்புகள் கொண்டிருந்ததன் காரணமாக, 1933 இல் கலைக்கப்பட்டது; ஆனால் 1934 இல் அதன் இடத்தைச் சுடேற்றன் சேர்மானியக் கட்சி கைப்பற்றியது. 1935 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில், சுடேற்றன் சேர்மானியக் கட்சி, பாராளுமன்றத்தில் இரண்டாவது மிகப்பெரிய கட்சியாயிற்று. 1937 இல் அக்கட்சியினுடைய குறைபாடுகளை நிவர்த்தி செய்யக் கையாளப்பட்ட நடவடிக்கைகளின் பயனாக மற்றச் சேர்மானியக் கட்சிகள் இணக்கப்படுத்தப்பட்டன; அப்போது அரசாங்கம் "வீதப்பங்குமுறை" என்றதொரு பூட்கையை அறிவித்தது. உத்தியோகபூர்வமான பதவிகள், பொது மராபத்து வேலைகள், நிவாரண நிதிகள், கலாசார நிறுவகங்களுக்கான அரசாங்க உதவி ஆகியவற்றில் வீதப்பங்குமுறைப்படி செக்கிய நாட்டிலிருந்த சேர்மானியருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்களை வழங்குவதையும், அரசாங்க ஆவணங்களில் சேர்மானிய மொழிக்கு உரிய இடமளிப்படையும் அது ஏற்றுக் கொண்டது. இந்தச் சலுகைகள் சுடேற்றன் சேர்மானியக் கட்சிக்கு மனநிறைவளிக்கவில்லை. இற்லரின் கட்டளைகளைப் பின்பற்றி, "காள்சுபாட்டின் எட்டு அம்சங்கள்" அடிப்படையில் அக்கட்சி பூரணமான தன்னுரிமை கோரியது; எனினும் குடியாட்சி தகர்க்கப்படுவதைத் தான் விரும்பவில்லை என அது கூறிற்று.

மியூனிக்கு உடன்பாடு.

மூன்றாவது சேர்மானியக் குடியரசில் ஒசுற்றியாவைச் சேர்த்துக் கொண்டமை, செக்கோசிலவாக்கியாவின் நிலைமையை உடனடியாகப் பாதித்தது. ஏனெனில் சேர்மானியத் தலைவன் தனது விருப்பங்களில் முதலாவதை எளிதாக நிறைவேற்றிக் கொள்ள முடிந்தமையால் அவனது பேரவாக்கள் இப்போது மேலும் பெருகின. அச்சுலகின் வாயிலாகச் செக்கோசிலவாக்கியாவுக் கெதிரான ஒரு பெருங் கிளர்ச்சியைச் சேர்மனி ஆரம்பித்தது; இரண்டு நாடுகளுக்கு மிடையிலிருந்த உறவுகள் சீர்குலைந்தன; ஐரோப்பா ஒரு புதிய சருவதேச நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. பிரித்தானிய அரசாங்கம் செக்கோசிலவாக்கியா மீது எவ்வித பொருத்தனைக் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டிராது போயினும், செக்கியருக்கும் சுடேற்றன் சேர்மானியருக்கு மிடையிலான தகராற்றைத் தீர்த்துவைக்க 1938 இல் நடுவரொருவரைத் தூதனுப்பியது. அவரது அறிக்கை இருசாராரி மீதும் குற்றஞ்சுமத்தியது. "கடைசி இருபதாண்டுகளில் சுடேற்றன் பகுதிகளில் செக்கோசிலவாக்கியரின் ஆட்சி உண்மையில் கொடுமையுடையதாக இருந்திராவிடினும், அது திறனற்றதாகவும் பிறரைப் புரிந்துகொள்ளும் தன்மையற்றதாகவும், சிறிய கொள்கை வேறுபாட்டைக்கூடக் காணப்பொறுத்ததாகவும், ஓர வஞ்சகமானதாகவும் இருந்திருக்கின்றது." 1930 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இருந்துள்ள பொருளாதார மந்தத்தாலும், வேலையின்மையாலும் அரசியல் சம்பந்தமான மனநிறைவின்மை அதிகமாகவிருந்தது. அதே சமயத்தில், அரசாங்கத்தின் மிக அண்மைக் காலத்துக்குரிய பிரேரணைகள், "காள்சுபாட்டின் எட்டு அம்சங்களிலடங்கிய கோரிக்கைகள் அனைத்தையும் அநேகமாக உள்ளடக்கியிருந்தன;" "அதிக மிதவாதக் கொள்கையுடைய சுடேற்றன் தலைவர்கள் செக்கோசிலவாக்கிய நாட்டின் எல்லைப்புறப் பிரதேசங்களிடையே ஓர் இணக்கத்தை விரும்பினர்கள்;" ஆனால் சுடேற்றனிலிருந்த தீவிரவாதிகள், சேர்மனியின் தூண்டுதலால், இப்போது சுய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணயம் பற்றிய உரிமைகளை வற்புறுத்தினர்கள். 1938 செத் தெம்பரில், செக்கோசிலவாக்கியாவில் ஒரு சேர்மானியப் படை யெடுப்பு ஏற்படுமென்பது நிச்சயமாயிற்று. செக்கோசிலவாக் கியாவுக்கு உதவி செய்வதற்குப் பிரான்சும் இரசியாவும் கடமைப்பட்டிருந்தபடியாலும், பிரான்சுக்குப் போரில் உதவி செய் தற்காகப் பெரிய பிரித்தானியா ஒருவேளை ஈடுபடவேண்டியிருக் கும் என்றபடியாலும், இதனால் பரவலான ஒரு பெரும் போர்த் தீ மூண்டிருக்கவேண்டும். இவ்விடரைத் தடுப்பதற்குப் பிரித்தானிய முதலமைச்சர் சேர்மானிய மண்டிலநாயகனைச் சந்தித்தார். சேர்மானிய மண்டிலநாயகனே உலகப் போரொன் றுக்குத் தான் தயாராக விருப்பதாகக் கூறினன். இவ் வச்சுறுத்தல் காரணமாக, செக்கோசிலவாக்கிய அரசாங் கத்திற்கு ஆங்கில – பிரான்சிய கடிதமொன்று கொடுக்கப்படு வதாயிற்று ; அக்கடிதம் "செக்கோசிலவாக்கியாவின் முக்கிய மான தனிநலன்கள் பாதுகாக்கப்படுவதும் அந்நாட்டில் சமா தானம் நிலைநாட்டப்படுவதும், சுடேற்றன் சேர்மானியர் முக்கிய மாக வதியும் பிரதேசங்கள் சேர்மானியக் குடியரசுக்கு மாற் றப்பட்டாலன்றி, உண்மையில் நிகழக்கூடியவையன்றென்றும்" "செக்கோசிலவாக்கிய நாட்டினுடைய புதிய எல்லைகள் கார ணமற்ற தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டால் அது பற்றிச் செய்யப்படும் சருவதேச உறுதியீட்டில் பெரிய பிரித்தானியா சேருவதற்குத் தயாராகவிருக்கிறதென்றும்" கூறியது. சுடே ற்றன் பகுதி ஒப்படைக்கப்பட வேண்டுமென்று இற்லர் செய்த கோரிக்கையைக் கொள்கையளவில் செக்கோசிலவாக்கியா ஏற்றுக் கொண்டது ; அதனைத் தொடர்ந்து, அப்பகுதி "ஒற்றோபர் முதலாம் நாள் சேர்மனியிடம் ஒப்படைக்கப்படவேண்டும்" என்று இற்லர் இறுதியறிவிப்பு விடுத்தான். திகைப்பைத் தரும் இவ்வாறுனதொரு முன்றிட்டத்தில் அடங்கியுள்ள அழிவுக்குரிய விளைவுகளைச் செக்கோசிலவாக்கிய அரசாங்கம் சுட்டிக்காட்டியது. "எங்களுடைய தேசிய வாழ்க்கைக்கான ஒவ்வொரு பாதுகாப்பையும் எங்களிடமிருந்து அது பறித்து விடுகின்றது. கவனமாகத் தயாரிக்கப்பட்ட எங்களுடைய பாது காப்பு ஏற்பாடுகளில் பெரும்பகுதிகளை அதனால் நாங்கள் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கின்றது ; நாட்டின் பாதுகாப்புக்காக எந்தவித முன்னேற்பாடுகளும் செய்வதற்கு முன்னர், எங்கள் நாட்டிற்குள்ளே மிகத் தூரத்துக்குச் சேர்மானியப்படைகள் செல் வதை அனுமதிக்க வேண்டியிருக்கின்றது. இதனால் எங்களது தேசிய, பொருளாதார சுதந்திரங்கள் தாமாகவே மறைந்துவிடும்; குடிமக்களை இடம்பெயர்ப்பதான எச்செயல்முறையும் சேர் மானியத் தேசியச் சமவுடைமையாளர் ஆட்சியை ஏற்றுக்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாத மக்களிடையே பீதியையும் குழப்பத்தையும் கொண்டு வரவிருக்கின்றது" என்று செக்கிய அரசாங்கம் பதில் கொடுத்தது. இப்பதில் பிரான்சு, சேர்மனி, பெரிய பிரித்தானியா, இத்தாலி ஆகிய நாடுகளால் கையெழுத்திடப்பட்ட (1938, செத்தெம்பர் 29) மியூனிக்கு இணக்கத்தால் ஏற்படவிருந்த விளைவுகளை முன்னறிந்து கூறிய ஒரு சரியான முன்னறிவிப்பாகக் காணப்பட்டது. அவ்வினக்கம், சுடேற்றன் பகுதியினின்று "ஒற்றேபர் முதல் நாளன்று குடிப்பதியெழல் ஆரம்பித்து, ஒற்றேபர் பத்தாம் நாளுடன் முடிவடையும்" என்று விதித்தது. விரைவில் செக்கோசிலவாக்கியா, போலந்துக்குத் தெச்சன் மாவட்டத்தைக் கொடுத்தது; சிலவாக்கியர் முழுத்தன்ணமை பெற்றனர். பெரிய பிரித்தானியாவும், பிரான்சும் ஒரு சருவதேச உறுதியீடளிப்பதில் ஒருபோதுந்தவறு" வென்றும், சேர்மனியும் இத்தாலியும் "போலந்து, அங்கேரி ஆகிய நாடுகளுக்குரிய சிறுபான்மையோர் பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்னரே செக்கோசிலவாக்கியாவுக்குத் தங்கள் சார்பில் உறுதியீடொன்றை அளிக்கு" மென்றும் ஓர் உறுதியறிவிப்பை மியூனிக்கு உடன்பாட்டில் சேர்த்துக்கொண்டபின், அதனை ஏற்றுக்கொள்வதற்குச் செக்கோசிலவாக்கியா தூண்டப்பட்டது.[1]

இற்லரின்வாக்குறுதிகள்.

சேர்மனியிலிருந்து இரண்டாம் முறையாகப் பிரித்தானிய முதலமைச்சரொருவர் சமாதான ஒப்பந்தத்தை எடுத்துக்கொண்டு திரும்பியிருந்தார்—ஆனால் இம்முறை அது விருதில்லாத சமாதான ஒப்பந்தமாக விருந்தது[2]. மியூனிக்கு இணக்கம் பிரித்தானிய மக்களுக்குச் சிறிதும் விருப்பமற்றதாக இருந்தது; அம்மக்கள் செக்கோசிலவாக்கியாவுக்கு எவ்விதத்திலும் கட்டுப்பட்டிருக்கவில்லையாயினும், வலோற்காரத்துக்கு

---

[1] சேர்மனியின் ஆள்புலமும் குடித்தொகையும் விரிவடைந்தவிதம் பின்வருமாறு: வேர்சைப் பொருத்தனை ஆள்புலத்தை 2,09,000 சதுர மைல்களிலிருந்து 1,82,000 சதுர மைல்களாகக் குறைத்தது; அதன் முந்திய ஆள்புலத்தில் அதன் குடித்தொகை 650 இலட்சங்களாக விருந்தது (1910). இப்போதைய குறைக்கப்பட்ட ஆள்புலத்தில் 635 இலட்சங்களாகக் குறைந்தது (1925). ஒசுற்றியாவையும் சுடேற்றனிலாந்தையும் சேர்மனி சேர்த்துக்கொண்டபின், அதன் ஆள்புலம் 2,25,000 சதுர மைல்களாகவும், மொத்தக் குடித்தொகை 800 இலட்சங்களாகவும் உயர்ந்தன.

[2] சேர்மானிய மண்டிலநாயகனும், பிரித்தானிய முதலமைச்சரும் கையெழுத்திடப்பட்ட ஒரு கூட்டறிக்கையில் அவர்கள் "இருநாடுகளிலுமுள்ள மக்கள் ஒருவரோடொருவர் போரிட இனி ஒருபோதும் விரும்பார்" என்பதைத் தாங்கள் உறுதிப்படுத்துவதாகத் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அடிபணிந்துவிட்டதாக ஒருவித அவமான உணர்ச்சி எங்கும் நிலவியிருந்தது. ஒரு காரியம் மாத்திரம், மக்களாட்சி சம்பந்தமான வல்லரசுகள் சரணடைந்ததை ஓரளவில் பொதுமக் களபிப்பிராயத்திற்குப் பொருந்தச் செய்தது. இற்லர் பிரித் தானிய மூதலமைச்சரைச் சந்தித்து, ஐரோப்பாவில் இதற்கு மேலும் எவ்வித ஆள்புலம் பற்றிய கோரிக்கைகளும் சேர்மனிக்குக் கிடையா வென்று ஒரு தெளிவான உறுதி மொழி யைக் கொடுத்தான். "ஐரோப்பாவில் தனது ஆள்புலம் பற்றிய பேரவாக்களில் இது கடைசியான தென்றும், சேர்மானியர் தவிர மற்ற இன மக்களைக் குடியரசிற் சேர்க்கத் தான் உண்மை யில் விரும்பவில்லையென்றும் தான் முன்னர் கூறியிருந்த தையே இற்லர் தனது பேச்சில் மீண்டும் குறிப்பிட்டான். கெர் இற்லர் தான் ஆற்றிய ஒரு சொற்பொழிவில் அந்தச் சந்திப்புப் பற்றிய இந்த விவரத்தை உறுதிப்படுத்தினன். அப்போது அவன், "நான் ஐரோப்பாவில் செய்ய விருக்கின்ற கடைசியான ஆள்புல உரிமைக் கோரிக்கை இதுவே. சேர்மனிக்கு ஐரோப் பாவில் இதற்குமேல் ஆள்புலம் பற்றிய பிரச்சினை யெதுவும் கிடையாது. செக்கிய நாட்டைத் தாக்குவது பற்றி நான் இதற்கு மேல் ஆர்வம் காட்டப்போவதில்லை. நான் இதை உறுதியாகச் சொல்ல முடியும்" என்று கூறினன். இவ்விதமான வாக்கு றுதிகள் இற்லரால் கடந்த காலத்தில் மீண்டும் மீண்டும் கொடுக்கப்பட்டு, திரும்பத் திரும்ப மீறப்பட்டு வந்திருக்கின்றன என்பதை நினைவில் வைத்திருந்தவர்கள், அவ்வுறுதியீடுபற்றிச் சந்தேகங் கொண்டபோதிலும், பிரித்தானிய அரசாங்கம் "தனிப்பூட்கை" யொன்றைப் பின்பற்றுவதற்கான போக்குக்கு நியாயமிருந்ததென்று இந்த வாக்குறுதி தோன்றச் செய்தது.

மியூனிக்கு உடன்பாட்டினால் ஐரோப்பா மிகக் குறுகிய காலம் மாத்திரமே ஓய்வு பெற்றிருந்தது. அவ்வுடன்பாட்டில் கையெழுத்திட்டவரில் ஒருவராலேயே அது ஆறுமாதங்களுக்குள் கிழித்தெறியப்பட்டது; இவ்வாறுக மற்றொரு மனப்பூர்வமான வாக்குறுதி சேர்மனியால் "ஒரு காகிதத் துண்டாகக்" கருதப் பட்ட தென்க; அத்துடன் செக்கோசிலவாக்கியக் குடியரசு மூடிவுக்கு வந்தது. இந்நிகழ்ச்சி திடீரென நிகழ்ந்தது; ஏனெனில் உலகத்திலே முன்னறிவுப்பெதுவுமின்றிக் "கசப் பான திடீர் நடவடிக்கைகளை" எதிர்பாராத நிலையில் மேற் கொள்ளுதல் தேசியச் சமவுடைமையாளருடைய அரசியல் திறமுறையின் வழக்கமாகும். சேர்மனியினது தீவிரமான தூண்டுதலின் விளைவாக, செக்கோசிலவாக்கியாவின் உறுப்புக்க

செக்கோசில வாக்கியாவின் இறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லில் ஒன்றான சிலவாக்கியா பிரிந்தது முதல், செக்கோசிலவாக்கியாவின் இறுதிச் சிதைவு தொடக்கமாகியது. நாட்டின் பிளவைப் பயன்படுத்திய ஒரு பிரிவினை இயக்கத்தில் ஈடுபட்டதற்காகவோ, அதற்கு உடந்தையாக இருந்ததற்காகவோ பிரேக்கிலுள்ள மத்திய அதிகாரக் குழுவினரால் 1939 பங்குனி மாதத்தில் சிலவாக்கிய அமைச்சரவை கூலைக்கப்பட்டது. பதவி இழந்த முதன்மந்திரி சேர்மானியத் தலைவனுக்கு முறையீடு செய்துகொண்டான். அத்தலைவனே சிலவாக்கியாவில் பிரிவினைச் செயல்களைத் தூண்டிவிட்டிருந்தான்; அவனுடைய வற்புறுத்தலின்பேரில் சிலவாக்கியப் பாராளுமன்றம் கூட்டப்பட்டு, செக்கியருடன் சிலவாக்கியர் ஒன்றுபட்டிருந்ததற்குக் காரணமாகவிருந்த பிணைப்புக்களைத் துண்டிக்கும்படி தூண்டப்பட்டது. செக்கியக் குடியரசின் முதல்வர் பேளினுக்கு விரைந்து சென்றார். அங்கு, செக்கிய நாடு தன் சுதந்திரத்தைக் கைவிடவேண்டும் என்று அவரிடம் கோரிக்கை செய்யப்பட்டது. எல்லைப்புறத்தை நோக்கிச் சேர்மானியப் போர்ப்படைகள் ஏற்கனவே நகர்ந்து கொண்டிருந்தன; "சேர்மானியக் குடியரசின் தலைவரிடம் செக்கிய மக்களுடைய விதியையும், நாட்டினுடைய விதியையும் நம்பிக்கையுடன் தான் ஒப்படைத்ததாக" ஒரு பிரகடனத்தில் கையெழுத்திடுமாறு அம்முதல்வர் நிர்ப்பந்திக்கப்பட்டார். பொகீமியா, மொரூவியா ஆகிய மாகாணங்களைச் சேர்மானியப் படைகள் கைப்பற்றி எவ்வித எதிர்ப்புமின்றித் தலைநகருக்குள் (பிரேக்கு) நுழைந்தன. செக்கியர்களுடைய "முரட்டுத்தனமான வரம்பு மீறிய செயல்களுக்கு" அவ்விடங்களில் வாழ்ந்த சேர்மானியர் ஆளாயினர் என்பதற்காக, சேர்மனியைச் சேராத அந்நாட்டின்மீது சேர்மானியப்படைகள் படையெடுத்து, அந்நாட்டினரை அடிமையாக்கியதாக, சேர்மானிய அரசாங்கம் இணக்கமுறையானதும் உத்தியோகபூர்வமானதுமான விளக்கம் கொடுத்தது. அச்சந்தரும் முரட்டுச் செயல் என்ற பொருத்தமற்ற இக்குற்றச்சாட்டை உறுதிப்படுத்த எச்சிறு சான்றும் காண்பிக்கப்படவில்லை. சேர்மானியரின் செயலுக்குக் காரணமாகவிருந்த உள்ளெண்ணங்களை, செக்கியரின் முரட்டுச் செயல் என்ற போலிச் சாக்குப்போக்கு மறைத்தது. செக்கியநாட்டு மக்கள் பெற்ற புத்துணர்ச்சியை நசுக்கி, அந்நாட்டுப் படைகளை ஒழித்து, அந்நாட்டு வளங்களைக் கைப்பற்றி, சேர்மனி "கிழக்கு நோக்கிச் செல்வதற்கு" தடையாக விருந்த இடையூறொன்றை அகற்றி, கடைசியாகக் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள சிறிய நாடுகளுக்கு "ஒருபாடம்" கற்பிக்கவும் வேண்டுமென்ற ஆவலால் சேர்மனியின் படையெடுப்பு சந்தேகத்துக்கிடமின்றித் தூண்டப்பட்டிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. பொகீமியா, மொருவியா ஆகிய செக்கிய நாடுகள் சார்ந்த ஆள்புலங்களின் நிலை, சட்ட மொன்றின் மூலம் வரையறுத்துக் கூறப்பட்டது ; ஓராயிரம் ஆண்டுகளாக அவ்விரு மாகாணங்களும் சேர்மானியக் குடியரசின் பகுதிகளாக இருந்தனவென்றும், புரப்பகமாக "அகண்ட சேர்மனி"யுடன் இப்போது அவை இணைக்கப்பட்டனவென்றும் அது கூறியது. அவற்றிற்குத் தன்னுட்சியுரிமை வாக்களிக்கப்பட்டது ; ஆனால் அவ்வாட்சி சம்பந்தமாக விதிக்கப்பட்ட வரையறைகளால் அந்த வாக் குறுதியின் மதிப்பு எத்தகையதென்பது தெளிவாயிற்று. வெளிநாட்டுத் தொடர்புகள், வணிக வரிகள், போர்ப்படை சம்பந்தமான நிறுவகங்கள் ஆகியவற்றின் பொறுப்பைச் சேர்மா னியக் குடியரசு ஏற்றுக்கொண்டது; அத்துடன் செக்கிய அதிகா ரிகளுடைய எவ்வுத்தரவையும் நிராகரிக்கவும், அதற்குப் பதிலாகத் தனது சொந்த உத்தரவுகளைப் பிறப்பிக்கவும் சேர்மா னியக் குடியரசைச் சேர்ந்த ஒரு "புரவலனு"க்கு அதிகாரமளிக் கப்பட்டது. கலைக்கப்பட்ட குடியரசின் மத்திய வட்டாரமாகிய சிலவாக்கியா எலவே தன் சுதந்திரத்தை வற்புறுத்திக் கூறியிருந்தது. "சிலவாக்கியா தான் ஒரு பின்னிணைப்பரசாக இருப்பதை இனிமேலும் பொறுத்துக்கொண்டிராது ; ஆனால் தனது சொந்த நாட்டின் எப்பகுதியிலும் பூரண ஆதிக்கமுடைய தாகவே விளங்குகின்றது" என்று அதன் முதலமைச்சர் அறிவித் தார். இரண்டு நாட்களுள், இற்லர் தானே "சிலவாக்கியா நாட் டின் பாதுகாப்பை ஏற்றுக்கொண்டதாக" அறிக்கையிட்டபோது, இதுகாறும் "பொறுத்துக்கொண்டிருந்த அந்தப் பின்னிணைப் பரசின்" நிலைமைமாறியது. தனது நிலைமை மோசமாகிவிட்டதா கச் சிலவாக்கியா உணர்ந்தது. முக்கூட்டான குடியரசில் கிழக்கிலிருந்த மிகச் சிறிய காபதோ-யூக்கிரேன் (உருத்தேனியா) பகுதியும் அதினின்று விலகி விட்டது ; ஆனால் அங்கேரி அப்பகுதியின்மீது படையெடுத்து அதனைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டது. இதுவே இருபது ஆண்டுக் குடியாட்சியின் முடிவாயிற்று. ஒசுற்றியாவில் ஏற்பட்டதுபோன்று, இக்குடியர சிலும் வலிமைவாய்ந்ததும் தீமை செய்யத் தயங்காததுமான ஓர் அண்டை நாடு தலையிட்டு உள்நாட்டுக் குழப்பங்களைத் தூண்டிவிட்டு இக்குடியரசை நாசத்துக்குள்ளாக்கியது. செக்கோ சிலவாக்கியா ஒசுற்றியா ஆகியவற்றின் வீழ்ச்சி எடுத்துக்காட் டிய படிப்பினை பற்றிச் சுவிசு நாட்டுச் செய்தித்தாளொன்று குறிப்பிடும்போது, நாட்டிற்குள்ளேயிருந்த மனநிறைவற்ற சத்திகள், "திரேய் நகர மரக்குதிரை" போன்றிருந்து கருமமாற்றியமையால் அந்நாடுகள் எளிதில் அழிவுற்றன என்று கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அபிப்பிராயம்.

சேர்மனி செக்கோசிலவாக்கியாவைத் தாக்கி, அதை நிர்மூலமாக்கியபோது, மேற்கத்திய குடியாட்சி நாடுகள் அச்செயலைத் தடுக்கத் தலையிட்டுக் கருமமாற்றவில்லை. சுடேற்நுனிலாந்தைக் கைவிடும்படியும், அதன் பலப்படுத்தப்பட்ட எல்லைகளை விட்டுக் கொடுக்கும்படியும் செக்கோசிலவாக்கிய அரசாங்கத்தைச் சருவதேச நாடுகள் உறுதியீடு வழங்குவதின் மூலம் தூண்டின. செக்கோசிலவாக்கியாவின் முழுமைக்கும் பாதுகாப்புக்குமாகச் சருவதேச உறுதியீடு அளிக்கப்படவேண்டும் என்றிருந்த திட்டம், இனிமேற் சருவதேசங்களைக் கட்டுப்படுத்தாது எனக் கருதப்பட்டது; காரணம், சிலவாக்கியா தான் சுதந்திரமுள்ளதாக அறிவித்தபோது, பெரிய பிரித்தானியாவும் பிரான்சும் எந்தநாட்டுக்கு உறுதியீடளிக்க முன்வந்திருந்தனவோ அந்நாடு இப்போது மறைந்துபோய்விட்டதென்க. எனினும் சேர்மனியினது செயலின் நோக்கத்தை மக்கள் உணர்ந்தபோதுண்டான உலக அபிப்பிராயம், சேர்மனி பெல்சியத்தின்மீது படையெடுத்தபோது எற்பட்ட உலகக் கருத்தையொத்திருந்தது. ஒருபுறம், மத்திய ஐரோப்பாவில் அதிக சுதந்திரமுடையதும், குடியாட்சியில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்ததுமான ஓர் அரசு அழிந்தது. அதன் ஆள்புலம் முழுவதும் இனத் தொடர்பான சட்டங்கள் பிறப்பித்தல், அரசியற் பொலிசு நிறுவுதல், முக்கிய குடிமக்கள் அனைவரையும் கைதுசெய்தல், ஒரு கட்டுப்படுத்தப்பட்ட அச்சகத்தை அமைத்தல் ஆகியவற்றைச் செயற்கருவிகளாகவுடைய சேர்மானிய கூட்டுத் தலைமையின் கீழ் இப்பொழுது கொண்டுவரப்பட்டது. "இதுவே மத்திய ஐரோப்பாவில் காணப்பட்ட சுதந்திரத்தின் இறுதிக் கட்டம்" என்று முக்கிய அமெரிக்கப் பத்திரிகையொன்று (நியூயோக்கு இரைம்சு) எழுதியது. மற்றொருபுறம், இச்செயல் மூலம் சேர்மனி தான் மிக அண்மையிற் கைப்பற்றிய நாடுகளிலிருந்த இயற்கையானதும் தொழில்துறை பற்றியதுமான மூலவளங்களனைத்தையும் தன் அதிகாரத்தின் கீழ்க் கொணர்ந்தது. பொகீமியாவும், மொரவியாவும் சேர்மனிக்கு 18,000 சதுர மைல்களுக் கதிகமான நிலப் பரப்பையும், ஏறக்குறைய 70 இலட்சம் குடிமக்களையும், படைக்கலங்களுக்குரிய பெரிய இயந்திரங்களையும், தேசிய வங்கிக்கு நிதிகளையும் வழங்கின; அதே சமயம் சிலவாக்கியா 25 இலட்சம் குடிமக்களைக் கொண்ட ஏறத்தாழ 15,000 சதுர மைல் நிலப்பரப்பைச் சேர்மனிக்கு வழங்கியது. (அங்கேரியாற் சேர்த்துக் கொள்ளப்பட்ட காபதோ—யூக்கிரேன் 4,200 சதுரமைல்களையும், 5 இலட்சம் மக்களையும் கொண்டது). எல்லாவற்றுக்கும் மேலாக, மூன்றுவது சேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானியக் குடியரசு, சேர்மானியரல்லாத மக்களை இணைத்துக் கொண்டதன் மூலம் தன் ஆற்றலைப் பெருக்கிக் கொண்டமையி னால் இப்போது முற்றிலும் ஒரு புதுமையான நிலை ஏற்பட்டது. இதுவரை சேர்மானிய இனத்தவராற் கைப்பற்றிக் கொள்ளப்பட்ட அண்டை நாடுகளைத் தன்னுடன் இணைப்பதற்குத் தனக்குள்ள உரிமையைக் கோரி, அதற்கு ஆதரவாகத் தன்னுறுதிக் கோட் பாட்டைச் சேர்மனி ஆர்வத்துடன் வற்புறுத்தி வந்திருந்தது. இதற்காகச் சேர்மனி பின்பற்றிய முறைகள் கொடூரமானவை யாகவும், வீரப்பானவையாகவு மிருந்தபோதிலும், அவற்றில் ஓரளவு நியாய மிருந்ததெனப் பலர் கருதினர். என்றாலும், செக்கியர்களின் நிலப்பரப்பைச் சேர்மனி கைப்பற்றியதற்கு எவ்வித நியாயமும் காட்ட முடியாது; தன்னுறுதிக் கோட்பாடு தன் நோக்கத்தை நிறைவேற்றிய பின்னர், பயனற்றதெனத் தள்ளப்பட்டது. இற்லர் சேர்மானியப் பேரரசில், அந்நிய நாட்டினத்துக்குரிய பல நூறாயிரம் மக்களை அவர்களது விருப் பத்திற்கு மாறாகவும், முக்கியமான ஒரு வாக்குறுதியை மீறி யும் சேர்த்துக்கொண்டு, தான் மேற்கொண்ட கருமத்திற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமுகமாக உறுதியான தீர்மானத் தைச் செய்துகொண்டான். பிரெசுத்து—இலிற்ரோவிசுக்கு, பியூக்கரெசு ஆகிய பொருத்தனைகள் செய்யப்படுவதற்குக் கார ணமாயிருந்த சேர்மானியக் குடியரசின் உண்மையான மரபுரி மையாக மூன்றாவது சேர்மானியக் குடியரசு விளங்கலாயிற்று.[1]

பெரியபிரித் தானியாவின் பூட்கை.

பல வல்லரசுகள் செக்கோசிலவாக்கியா அழிக்கப்பட்டதைக் கண்டித்து, அது சட்டப்படியான செயலென்பதை ஏற்றுக் கொள்ள மறுத்தன. ஒரு நாட்டிலுள்ள எந்தத் தலைவனுக்கும் அவனுடைய குடிமக்களின் சம்மதமின்றி, அது ஒரு சுதந்திர நாடாக விருப்பதை ஒழிப்பதற்கான உரிமை கிடையாது; ஆதலால் செக்கோசிலவாக்கிய குடிப்பதியின் செயல், சட்ட முறைப்படி ஒழுங்கானதன்று என்று இரசியா உறுதியாகக் கூறியது. ஐரோப்பா "நேரே ஆட்சியறவு நோக்கிச் சென்றுகொண்டிருந் தது" என்ற உணர்ச்சி ஒவ்வொரு நாட்டிலும் பரவியது. பெரிய பிரித்தானியா, "அமைதிப்படுத்தும்" பண்புகளில் நம் பிக்கை வைப்பதை நிறுத்திக் கொண்டது; எனெனில் சேர் மனியின் தேசியச் சமவுடைமை ஆட்சியாளரிடமிருந்து வந்த எந்தப் புதிய வாக்குறுதியிலும் தான் நம்பிக்கைவைக்க முடியாது என்பது அதற்குத் தெளிவாயிற்று. அவ்வாறு செய் வதற்குப் பதிலாக அது தன் வெளிநாட்டுப் பூட்கையில் ஒரு

[1] வலுக்கட்டாயமான அச்சுறுத்தலின் பேரில் இலிதுவேனியா சேர்மனிக்கு விளைவாக மெமலைக் கொடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான மாறுதலைச் செய்யத் துணிந்தது ; இதனால் ஐரோப்பாக் கண்டத்துடன் தான் கொண்டிருந்த தொடர்புகள் சம்பந்தமாக ஒரு புதிய ஊழியை அது தோற்றுவித்தது. உண்மையில் இவ்வாறு ஏற்பட்ட மாற்றம், பெரிய பிரித்தானியாவின் எல்லை இரைன் பிரதேசம் வரை இனிமேலும் நின்றுவிடாது, ஐரோப்பாக் கண்டத்தில் தாக்குதலுக்குள்ளாகுமென்று கருதப்பட்ட எப்பாகம்வரைக்கும் விரியும் என்னும் பொருளைக் கொடுத்தது ; மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலிருந்து பிரித்தானியாவை ஒதுக்கி வைத்திருந்த 'தனிப்படுத்தல்' என்ற பழங்கால மரபு, இப்போது காற்றில் பறக்க விடப்பட்டது. புதிய பூட்கையைப் பற்றிய பிரகடனத்தையுடைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கைகள், "பெரிய பிரித்தானியா விளைவு எதுவாயிருந்த போதிலும், தனது நிலையைத் தெளிவாகவும், சந்தேகத்துக்கிடமில்லாமலும் இப்போது வெளிப்படுத்தவேண்டும் என்ற ஒரு திடநம்பிக்கையில் ஒன்றுபட்டுள்ளது ; ஒரு நாட்டின் உள்நாட்டு அரசியல் முறை எதுவாக இருந்தபோதிலும், அந்நாட்டின் ஒத்துழைப்பைப் போருக்கான கருமங்களிலல்லாது போரையெதிர்ப் பதற்கான கருமங்களில் பிரித்தானியா வரவேற்கின்றது" என்று கூறின. இப்பூட்கையின் முதல் விளைவுகளாக, கிரீசுக்கும், உரூமேனியாவுக்கும் உறுதியீடுகள் அளிக்கப்பட்டன—போலந்துடனும், துருக்கியுடனும் நட்புறவுகள் ஏற்படுத்தப்பட்டன—"இந்நாடுகளின் சுதந்திரத்துக்குப் பாதகமான எந்நடவடிக்கையாவது எடுக்கப்படுமானால், இந்நாடுகளின் அரசாங்கங்கள் தங்களுடைய தேசியப் படைகளால் அதனை எதிர்ப்பது இன்றியமையாதது எனக் கருதுமானால், மாட்சிமை தங்கிய பிரித்தானிய மன்னரின் அரசாங்கம் உடனடியாகத் தனது அதிகாரத்திலடங்கிய எல்லா உதவிகளையும் கொடுத்துதவக் கடமைப்பட்டுள்ளதாகக் கருதும்" என்று அந்நட்புடன்படிக்கைகள் எடுத்துக் கூறின.[1] கண்டத்தின் மீது ஒரு சேர்மானிய கூட்டுத் தலைமையை ஏற்படுத்துவதற்கான எந்த முயற்சியையும் பெரிய பிரித்தானிய மக்களும், பிரான்சிய மக்களும் திடமாக எதிர்த்து நின்றார்கள். சிறிய நாடுகள் கீழ்ப்படுத்தப்படுதலையும் அகண்ட சேர்மனியால் அவை உண்மையில் தன்னகப்படுத்தப்படுதலையும் தடுப்பதில்தான், தங்களின் சொந்த நலன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்ததென்பதை அவ்விருநாட்டு மக்களும் உணர்ந்தார்கள். இன உரிமைக் கோரிக்கை காரணமாகச் சேர்மானியரனைவரும் சேர்மானியக் குடியரசின் கீழ்க் கொண்டுவரப்படலாம் அல்லது சேர்மானியத் தேசியப் பொருளாதார உரிமைக் கோரிக்கை

---

1 பிரான்சு இது போன்ற நடவடிக்கை எடுத்துக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக[1] சேர்மானியரல்லாதார் வாழும் பகுதிகளும் அக்குடியரசால் இணைக்கப்படவோ கட்டுப்படுத்தப்படவோ கூடும் என்று அச்சங் கொள்ளாத நாடு எதுவுமே ஐரோப்பாவில் இருக்கவில்லை. பெரிய பிரித்தானியாவின் "பெரும் நட்புறவோ", "அமைதி முன்னணியோ" அந்நாட்டின் "சுற்றி வளைத்துக் கொள்வதன் பாற்பட்ட பூட்கை"யாகும் எனத் தான் கருதுவதாகச் சேர்மானிய அரசாங்கம் வெளிப்படையாகக் கூறிய போதிலும், பெரிய பிரித்தானியாவின் அவ்வொப்பந்தங்கள், உண்மையில் பிறர் தாக்குதலுக் கெதிராக அது கூட்டுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான பூட்கையின்பாற்பட்டவையாக விளங்கின. "அமைதி பிரிக்கப்பட முடியாதது" என்ற தத்துவம் இவ்வாறு காலங் கடந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படை அதிக வரையறைக்குட்பட்டதாக விருந்ததால் நாட்டுக் கூட்டவையின் இலட்சியத்தை இதனால் அடைய முடியவில்லை; அன்றி ஒப்பந்தம் செய்து கொண்ட நாட்டினருள் ஒருவர் மற்றொருவருக்கு உதவுவதை இது கட்டுப்படுத்தவு மில்லை. என்றாலும் கூட்டவையிடம் காணப்பட்ட குறைகளாகிய தடைநிறைந்த நடைமுறை காரணமாக அதிக தாமதமேற்படுதல், நடவடிக்கை எடுக்கப்படுவதற்குமுன் பூரண சம்மதம் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தல், போர்ப்படை சம்பந்தமான நடவடிக்கைகளை நாடுகள் தம் விருப்பான தன்மையில் செய்தல் ஆகியவை பிரித்தானியா பின்பற்றிய பூட்கையிற் காணப்படவில்லை. மத்திய வல்லரசால் அச்சுறுத்தப்பட்ட எந்த நாட்டுக்கும் "உடனே உதவியளிக்க" இந்தப் புதிய முறை மேற்கத்திய வல்லரசுகளைக் கட்டாயப்படுத்தியது. இந்த உறுதியான நிலையைக்கண்டு பின்வாங்காத மத்திய வல்லரசு, போலந்தின்மீது தனக்குள்ள கோரிக்கைகளை அடுத்தடுத்துக் கூறியது. இற்லரின் வாழ்க்கையில் அவனடைந்த இரத்தம் சிந்தாத பல வெற்றிகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகப் படைக்கலந்தாங்கி எதிர்த்தநாடு போலந்து என்க. 1939 இல் ஒரு ஐரோப்பியப் போருண்டாவதற்கு இது அறிகுறியாயிற்று. அவ்வமயம் பெரிய பிரித்தானியாவும் பிரான்சும் (பிரித்தானிய முதலமைச்சர் கூறியவாறு) "ஐரோப்பாவில் சேர்மானியரது தாக்குதலினால் ஓயாது மீண்டும் மீண்டும் எற்பட்டுக் கொண்டிருக்கும்

---

[1] குடித்தொகைப் பெருக்கத்தை விருத்தி செய்யுமுகமாகப் பருவமடையு முன்னரே மக்கள் மணமுடிக்குமாறு தூண்டப்பட்டமையும், இத்தாலியர் திரளாகச் சேர்மனிக்கு வருவிக்கப்பட்டமையும், சேர்மனியில் குடித்தொகை அளவுமீறியிருந்த தென்னுங் கருத்துக்கு இடந் தருவனவாயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்தைப்போக்கவும், ஐரோப்பிய மக்கள் தங்களது உரிமைகளையும், சுதந்திரங்களையும் பாதுகாக்குமாறு உதவவும்" தாங்கள் முன்வருவதாகத் தங்களுடைய மனவுறுதிகளை அழுத்தமாகத் தெரிவித்தன.

தேசியச் சமவுடைமையின் கதி.

1914–1918 ஆம் ஆண்டு நடைபெற்ற போரின்போது ஐக்கிய நாடுகளின் குடிப்பதி, கீழ்ச் சபையில் ஆற்றிய ஒரு சொற்பொழிவில் "சேர்மனியின் தலைவர்கள் நமக்குக் காட்டிய தேசியச் சமவுடைமை என்னும் அருவருப்பான தோற்றமுடைய சகித்தற்கரிய இப் பொருள், சூழ்ச்சியும் வலுவந்தமும் சேர்ந்து நாம் இப்போது தெளிவாகக் காணும்படி உருவாகியுள்ள சேர்மானிய வல்லரசு என்னும் இந்தப் பேரிடர், மனச்சாட்சியோ, மதிப்போ, அல்லது தான் செய்துகொண்ட பொருத்தனைகளைக் காப்பதற்கான தகுதியோ யில்லாத இப்பொருள் நசுக்கப்படவேண்டும்" என்று கூறினன். இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் "சகித்தற்கரிய பொருள்" திரும்பவும் தலை தூக்கியது தேசியச் சமவுடைமைக் கொள்கையின் இறுதி ஊழ்ப்பயன், சேர்மானிய வரலாற்றுசிரியரொருவரால் பின்வருமாறு முன்னறிவிக்கப்பட்டது: "தேசியச் சமவுடைமைக் கொள்கை பிறநாட்டு மக்களைச் சேர்மானியரைப் போன்றே கருதுகின்றபடியால் அது விரைவில் அழிந்து விடும்."[1]

---

1. K. Heiden, "A History of National Socialism."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(VI)

பாசிச இத்தாலி

1914–18 ஆம் ஆண்டுப் போரையடுத்த ஆண்டுகளில், இத்தாலியின் நிலைமை பற்றி மாறுபட்ட வரலாறுகள் காணப்படுகின்றன. பாசிச ஆதரவாளர் பின்னோக்கிப்பார்த்துக் கூறிய கருத்துரை பின்வருமாறு நூற்பகுதியொன்றில் காணக்கிடக்கின்றது : "இத்தாலியின் நிலை பற்றிப் பேசுவதற்கு நாவன்மை வேண்டும் என்ற அவசியமில்லை. 1919 இல் அங்கு காணப்பட்ட நிலைமை பற்றி உளச்சாய்வற்ற முறையில் அறிந்துள்ள எவனும், அந்நாடு அரசியற் சார்பான நிலையால் பிளவுபட்டிருந்ததென்றும், உட்பகை சம்பந்தமான பூசலால் தீங்குக் குட்பட்டிருந்ததென்றும், ஒரு நீதியற்ற அமைதிப் பொருத்தனையால் ஊக்கமிழந்திருந்ததென்றும், வளமற்றிருந்ததென்றும், முற்றும் ஒழுங்கமைவற்ற ஒரு பொருளாதார முறையைக் கொண்டிருந்ததென்றும், பூரண ஆட்சியறவுப் பாதையில் மிக வேகத்துடன் சென்று கொண்டிருந்ததென்றும் அறிவான்." இந்தக் கருத்தின்படி, போருக்குப் பின்னர் ஏற்பட்டிருந்த ஆட்சியறவிலிருந்து இத்தாலி விடுவிக்கப்பட்டு, "ஒழுங்கு, உறுதிப்பாடு ஆகியவற்றுக்காக எல்லா வகுப்பினரும் கொண்டிருந்த விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கு"க் காரணமாகவிருந்த பாசிச இயக்கத்தின் விளைவாகப் புத்துயிர்பெற்ற தேசிய வாழ்க்கைப் பாதையில் சென்றுகொண்டிருந்தது. பாசிசக் கட்சி தவிர்ந்த மற்றக் கட்சிகளில் எதுவும் "இத்தாலிக்கு அவசியமான சீர்திருத்தத்தை ஊக்கத்துடன் கையாளவில்லை"; இத்தாலியை அழிவினின்றும் காப்பாற்றும் நோக்குடன் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்த ஒரு முன்றிட்டம் பாசிசக் கட்சியினரிடம்மட்டுமே இருந்தது. "இத்தாலியைச் சீராக்கி, அரிதாகக் கிடைக்கக்கூடிய அமைதியைக் கொண்ட ஓர் எதிர்காலத்தை நோக்கி மக்களை வழிநடத்திச் செல்லும் பொறுப்பான கடப்பாட்டை ஏற்று நடத்தக்கூடியதான அரசியல், சமுதாயம் என்பவை சம்பந்தமான ஒரு புதிய ஒழுங்கமைப்பை ஏற்படுத்துவதே அக்கட்சியினரின் நோக்கமாகவிருந்தது". பாசிச இயக்கத்தை நிறுவியவன், பிரித்தானிய மக்களுக்கு அனுப்பிய ஒரு செய்தியில் (1924), "அரசாங்க அதிகாரத்தைச் சிதையச் செய்து, நாட்டின் முன்னேற்றத்தைத் தடைசெய்யும் நிலையிலிருந்த வலுவற்றனவும் திறனற்றனவுமான அரசாங்கங்களுக்கெதிராக இத்தாலிய பாசிசம் ஓர் அரசியற் சார்பான எதிர்க்கிளர்ச்சியாக இருந்தது மட்டுமன்றி, மதம், கோட்பாடு,

1919 இல் இத்தாலியின் நிலைமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு என்பவற்றின் புனிதத்துவங்களை உழுத்துப்போகச் செய்திருந்த பழைமைக் கருத்துக்களுக்கெதிரான ஓர் ஆன்மீக எதிர்க்கிளர்ச்சியாகவும் இருந்து வந்துள்ளது" எனக் கூறினன்.

இத்தாலியின் நிலைமைபற்றி மற்றொரு கருத்து.

ஒரு நாடு ஆட்சியறவுக் குள்ளாகும் காட்சியைக் கட்டுக் கதை எனப் புகழ்வாய்ந்த இத்தாலிய வரலாற்றுசிரியரொருவர்[1] விவரிக்கின்றார். இத்தாலி ஏனைய நாடுகள் ஒவ்வொன்றையும் போல, "போருக்குப் பின் ஏற்பட்ட தளர்ச்சி"யால் இடருற்றது. "குழப்பங்கள், தொழினிறுத்தங்கள், கலவரங்கள் ஆகியவை அங்கு ஏற்பட்டன—ஆனால் நாட்டின் பொருளாதார அமைப்பு ஒரு போதும் சீர்குலையவில்லை". அதற்கு மாறாக 1919–22 ஆம் ஆண்டுகளில் கூட்டுப் பங்குத்தொகுதிச் சங்கங்களின் எண்ணிக்கையும், அவற்றின் உடைமைகளும், நிதியகங்களில் சேமித்து வைக்கப்பட்ட தொகைகளும், அரசாங்க வருவாயும் படிப்படியாக அதிகரித்தன. 1921 ஆம் ஆண்டினிறுதியில் இத்தாலியப் பொருளாதார நிபுணரொருவர் "நிச்சயமாக இத்தாலியின் நிலைமை முன்னேற்றமடைந்திருக்கின்றது; நமது பொருளாதார வாழ்க்கையின் அடிப்படையான பயிர்த்தொழில், ஒழுங்கான நிலைக்கு மீளும் என்பது தெளிவாகத் தோன்றுகிறது; போரின் விளைவுலேற்பட்ட பெரும் மந்தம் நீங்கிவிட்டது" என்று எழுதினர். மேலும் "தொழிலின் நிலையான தன்மை, திறமை, வெளிநாட்டு வியாபாரத்தின் முன்னேற்றம்" ஆகியவை பற்றியும் அவர் குறிப்பிட்டார். பாசிச அமைச்சரவை ஏற்படுவதற்கு முன்னிருந்த கடைசி அரசாங்கத்தைச் சேர்ந்த நிதியமைச்சர், "உலகிலுள்ள மிக முக்கியமான நிதி வட்டாரங்கள் நமது நிதி, பொருளாதாரம் என்பவை சம்பந்தமான நிலைமைபற்றி நம்பிக்கை மனப்பான்மையுடனிருக்கின்றன; மிக முக்கியமான ஆங்கில அமெரிக்க நிதியக முதலாளிகள் நமக்குக் கடன்கள் வழங்க விரும்புவதாக அடிக்கடி அறிவிக்கின்றனர் என்ற உண்மை இதனை மெய்ப்பிக்கின்றது" என்று 1922 இல் கூறினர். முசோலினி தானே தனது செய்தி இதழில் (1920, திசெம்பர்), "கடந்த மூன்று மாதங்களில் இத்தாலியில் தொழிலாளி வர்க்கத்தவரின் உளப்பாங்கு முற்றுக மாறி இருக்கின்றது என்று சொல்வது முழு உண்மை; நெசவு, இரசாயனப்பொருள்கள் ஆகியவை சம்பந்தமான முக்கிய தொழில்களில் அமைதியான இணக்கப் பேச்சுக்களுக்குப் பின் அண்மைக் காலத்தில் உடன்பாடுகள் எளிதாக ஏற்படுத்திக் கொள்ள முடிந்தமை

[1] G. Salvemini.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய மனோநிலையின் ஒரு தெளிவான அறிகுறியாகும்" என்று ஒப்புக்கொண்டுள்ளான். பின்னர் (1921, யூலை), "இன்னும் இத்தாலியில் ஒரு போல்சிவிக்கு ஆபத்து இருக்கின்ற தென்பது, உண்மைக்கு மாறாய், ஒருசார்பான நோக்கங்களுக் காக, அச்சத்தை ஏற்படுத்துவதற்காகச் சொல்லப்படுமொன்றா கும். போல்சிவிக்குவாதம் தோல்வி கண்டுவிட்டது" என்று அவன் மேலும் எழுதினான்.[1] இந்த மேற்கோள்களிலிருந்து, போருக்குப் பின் இத்தாலியின் பொருளாதார அமைப்பு முற்றுகச் சீர்குலைந்திருக்கவில்லை யென்பதும், இதற்கு மாறாய், வெளிநாடுகளில் நிதி சம்பந்தமான வட்டாரங்களில் நம்பிக் கையை ஊட்டக்கூடிய அளவுக்குச் சாதகமான நிலைமைகளைப் பெறுவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க முயற்சி செய்யப்பட்ட தென்பதும் தெளிவாகின்றன. பொதுவுடைமைக் கொள்கை யால் ஏற்படக்கூடிய தீங்கு, உண்மையில் மிகச் சிறிதளவாக விருந்தது; தொழினிறுத்தங்கள், ஒழுங்கீனங்கள், தொழிற்சாலை களை ஆக்கிரமித்தல் ஆகியவற்றின் மூலம் சாதாரண மக்கள் தங்களது மனக் கொதிப்பை வெளிப்படுத்தி வந்த முறைமை படிப்படியாகக் குறைந்தது. இருந்தபோதிலும் 1914–18 ஆம் ஆண்டுப் போரில் இத்தாலி பெற்ற இலாபம் அதன் நட்பாளர்கள் பெற்ற இலாபத்திற்குச் சமமானதல்ல என்ற எண்ணத்தின் காரணமாக மக்கள் கொண்ட சினம் நாடெங்கும் பரவி, இத்தாலிய அரசாங்கத்தின் நிலையை அதிகமான அளவிற் பலவீனப்படுத்தியது.[2] யூகோசிலேவியாவால் உரிமை கோரப்பட்ட பியூம், விவாதத்திற்குரிய ஒரு பிரச்சினையாக விருந்தது; இத்தாலிய அரசாங்கம் பியூம் நகரை விட்டுச் செல்லுமாறு தன் போர்ப்படைகளுக்கு உத்தரவிட்டபோது, புலவன் தன்னுசியோ அந்நகரை வலோற்காரமாகக் கைப்பற்றினான் (1919); பல மாதங் களாக அவன் அதனைத் தன் ஆட்சியில் வைத்திருந்த பின்னரே

---

[1] பாசிசக் கொள்கையினர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு 15 மாதங்க ளுக்குமுன் செய்யப்பட்ட இந்த ஒப்புதல் "போல்சிவிசத்திலிருந்து இத்தாலியைக் கரப்பாற்றுவதில் பாசிசம் வெற்றிபெற்றது" என்று இற்லர் செய்த உறுதிக் கூற்றை (சனவரி, 1939) மறுக்கின்றது. 1921 ஆம் ஆண்டுத் தேர்தல்களில் வெற்றிபெற்ற 535 பேர்களில் 16 பேர் மட்டுமே பொதுவுடைமையாளரா யிருந்தனர்.

[2] இலண்டன் இரகசியப் பொருத்தனையின்படி (1915), ஆபிரிக்காவில் இத்தாலிக்குரிய நிலப்பகுதிகள் சிறிதளவே அதிகரித்தன; ஆனால் ஐரோப் பாவில் அது பரந்த அளவினதான இடங்களை, அதாவது திரென்றினோ, பிறென்னர்கணவாய் வரையிருந்த தென் தைரோலின் மிகுதியான பகுதி, திரியெட்டு, கோறீசியா, இசுத்திரியா, பியூம் நீங்கலான வட தல்மேசியா, அதிரியாட்டிக்குத் தீவுகள், ஆகிய இன்னோரன்னவற்றைக் கைப்பற்றிக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே துரத்தப்பட்டான்.[1] இந்த நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட விளைவின் காரணமாக, பாசிசக் கட்சி போர்த் தேர்ச்சி பெற்றவர்களில் தன் கொள்கைகளை ஆதரிப்போர் பலரைப் புதிதாகச் சேர்த்துக்கொள்ளக் கூடியதாயிற்று. பாசிசக் கட்சியினர் இந்த ஆதரவாளர்கள் பெற்ற வெற்றியை அரசாங்கம் "சிதைத்து" விட்டதென அவர்கள் நம்பும்படி செய்தனர். இவ்வாறுக, சேர்மனியிலிருந்ததுபோல், இத்தாலியில் புரட்சி இயக்கம் தோன்றுவதற்குப் போர்ப்படை சார்ந்த அரசியலாளரிடையே நிலவிய வெறுப்பு மூலகாரணங்களிலொன்றுகும்." அவர்கள் இத்தாலியில் வெற்றியின் பலன்களால் ஏமாற்றமடைந்தும் சேர்மனியில் தோல்வியின் பலன்களால் துன்புறுத்தப்பட்டுமிருந்தனர். எனினும், நடைமுறையிலிருந்த ஆட்சியை நீக்கி, ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிக் கொள்வதைத் தன் திட நோக்கமாகக் கொண்டவனும், விரைந்து செயலாற்றும் ஆற்றலுடையவனுமான ஒருவன் அப்போது தோன்றியிராது போனுல் சமுதாயத் தொடர்பான மனக்கொதிப்புப் போன்று அரசியற் றொடர்பான மனநிறைவின்மையும் இறுதியாக அற்றுப் போயிருக்கும்.

பெனிற்றே முசோலினி.

பெனிற்றே முசோலினி தனது வாழ்க்கையின் ஆரம்பத்தில் பலதரப்பட்ட வாழ்க்கைத் துறைகளில் ஈடுபட்டான். அவன் ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியனுக விருந்தான். (ஒரு பாசிச வெளியீட்டின் அழகு மொழிகளை எடுத்தாள்வோமானுல்) "கனமான சிமெந்துச் சுமைகளைத் தனது தோள்களிற் சுமந்த" ஒரு கொத்தனுகவும், "அடைகல்லின்மீது இரும்புப் பாளங்களை வைத்து வளைத்த" ஒரு கருமானுகவும், "மண்வெட்டியால் கனமான மண்கட்டிகளைப் புரட்டிய" ஒரு கமத்தொழிலாளனுகவும் வாழ்க்கை நடத்தினன். சமவுடைமைப் பிரசாரம் செய்ததற்காகச் சுவிற்சலாந்துக்கு நாடு கடத்தப்பட்ட இவன், 1914–18 இல் நடைபெற்ற போரில் இத்தாலியின் தலையீட்டை ஆர்வத்துடன் ஆதரிப்பவனுனன்; இந்நோக்கத்திற்காகப் பொப்போலோ இத்தாலியா என்ற செய்தித் தாளொன்றை நடத்துவித்தான். இத்தாலி போரில் ஈடுபட்டமை, இத்தாலிய மக்கள் புரட்சி மனப்பான்மையுடையவர்களென்பதற்கு முதல் அறிகுறியாக அவனுக்குப் புலப்பட்டது—ஒசுற்றிய ஆள்புலத்தின் ஒரு பகுதியை இணைத்துக்கொள்ள இத்தாலிக்கிருந்த வகைதுறையை

[1] 1920 இல் இத்தாலி யூகோசிலேவியாவுக்கு தல்மேசியாவைக் கொடுத்தது; ஆனுல் சாராவைப் பெற்றது; பியூம் சுதந்திர நாடாயிற்று. 1924 இல் பியூம் இத்தாலியுடன் இணைக்கப்பட்டது; அதையடுத்த மாவட்டங்கள் யூகோசிலேவியாவுக்குக் கொடுக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் அது குறித்ததாக அவன் எண்ணவில்லை. "போர் நடைபெறுகின்றது, அது மக்களுடைய போராகும். இன்றைய போர் நாளைய புரட்சியாக இருக்கும்" என்று அவன் எழுதினான். போருக்குப் பின் அமைதி மீண்டும் ஏற்பட்டபோது, அவன் "வலதுசாரியினரின் பழமைபேணும் வாதம், இடதுசாரியினரின் அழிக்கும் தன்மை ஆகிய இரு ஆபத்துக்களையும் எதிர்த்து நிற்க", 1919 இல், சண்டை செய்பவர்களைக் கொண்ட பாசிச அமைப்புக்களை ஏற்படுத்தினான். இந்த அமையத்தை ஏற்படுத்துவதனால் மட்டுமே "காலம் வரும்போது நாம் செயலாற்ற முடியும்" என்று அவன் கூறினான். "இந்தப் பாசிச அமையம் ஒரு கட்சியாயிருக்கவுமில்லை, அவ்வாறுவதற்கு விரும்பவுமில்லை, அவ்வாறுகவும் முடியாது" என்று அவன் வெளிப்படையாகக் கூறினான். பாசிசம் "ஒரு கட்சியன்று, ஆனால் கட்சிகளை எதிர்க்கும் இயக்கம்" என்று அவன் வற்புறுத்தியமை, பழைய கட்சிகளிடமிருந்து புறம்பாக்கப்பட்டவர்களைத் தனது பக்கமாகச் சேர்த்துக்கொள்ளும் அவனது நோக்கம் கைகூடுவதற்குச் சந்தேகமற உதவியது. அமைச்சர் பதவியைப் பெறுவதற்கான போராட்டத்தில் அக்கட்சிகள் ஈடுபட்டிருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு அவை அவமதிப்புக்குள்ளாயிருந்தன; ஒன்றன்பின் ஒன்றுகத் தொடர்ந்து அடிக்கடி அமைச்சரவை ஏற்பட்டமை இதற்குச் சான்று பகரும். மேலும், குழப்பமான தன்மையினதாகிய பாசிசக் கட்சியின் முன்றிட்டமானது, எதனையும் பொதுப்படையாகக் கூறும் முறை மூலம், மனோவசியஞ் செய்யும் சத்திக்குத் தடையின்றி அடிமையாகக் கூடியவர்களைத் தனக்கு ஆதரவாளர்களாகப் பெற்றுக்கொள்ளவும் முடிந்தது. இவ்வாறுகப் "பொருளாதாரம், ஆன்மீகம் சம்பந்தமான சத்திகளின் ஒரு பெருந் திரட்சியே பாசிசமாகும். அதன் குறிக்கோள் யாது? நாட்டையாளும் நோக்கத்தையே அது தனது குறிக்கோளாகவுடையது என்று உண்மையில் நாம் கூறுகின்றோம். இத்தாலிய மக்களுடைய ஒழுக்கம், பொருளாதாரம் ஆகியவை பற்றிய பெருமையை உறுதிப்படுத்தத் தேவையான வற்றை அம் முன்றிட்டம் கொண்டுள்ளது"—இவ்வாறு முசோலினி 1921 இல் எழுதினான். பாசிச அமையங்களுக்கான குறிப்பிட்ட கோட்பாடு எதும் இல்லாத நிலையில், ஒரு பாசிச அமைப்புக்கு, "நடைமுறையிலுள்ள சில பிரச்சினைகளின் பொருட்டுச் செய்யப்படும் சில தீர்வுகளை ஏற்கின்ற எல்லோரையும் கொண்டுள்ள தற்காலிகமான அமையம்" என வரைவிலக்கணம் செய்யப்பட்டது. "எங்களாற் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்" என்று முசோலினி கூறினான். பாசிச இயக்க கர்த்தாவான முசோலினி ஒரு நிலையான முன்றிட்டத்தை முறைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திக் கூறவில்லையெனினும், ஆரம்பத்திலிருந்து அவனது குறிக்கோள்களில் இரண்டு வெளிப்படையாகவும் இயக்கத்தின் தனிப்பட்ட சிறப்புக் கூறுகளாகவும் அமைந்தன. ஒன்று அரசின் அதிகாரத்தை வலுப்படுத்தும் அவசியம்; மற்றது நாட்டினத் தொடர்பான "சிந்திக்கலிசம்"—அதாவது தொழிலாளர் ஆட்சி முறைமையை ஏற்படுத்துவதாகும். அவனது அபிப்பிராயத்தில் இவ்விரு குறிக்கோள்களும் "மற்றெல்லாவற்றிலிருந்தும் வேறுபடுகின்ற ஓர் அரசியற் கோட்பாட்டின் தரத்துக்குப்" பாசிசத்தை உயர்த்தும் தகுதிவாய்ந்த அடிப்படைகளாக இருந்தன. பாசிசக் கொள்கையின் இந்த இரட்டை முற்கோள்கள் பற்றி இப்போது சில வார்த்தைகள் கூறுவோம்.

பாசிசத்தின் வளர்ச்சி.

முதற் பாசிச அமைப்பு, மிலானில் 1919 மாச்சில் ஏற்படுத்தப் பட்டது. பாசிச இயக்கம் விரைவில் மற்றப் பட்டணங்களுக்கும் பரவி, பின்னர் கிராமங்களிலும் விரைந்து பரவிற்று. அது ஒரு போர் விருப்பமுள்ள தன்மையை ஏற்று, போரில் ஈடுபட்டிருப்போரிலிருந்தும், பொதுவாகப் பாசிசக் குடிப்படையால் கவரப்பட்ட மாணவர்கள், மத்திய வகுப்பைச் சேர்ந்த இளைஞர் ஆகியவர்களிலிருந்தும் தனக்கு ஆதரவாளர்களைச் சேர்த்தது. அதன் உறுப்பினர்கள் தங்களை நாட்டுக்குப் புத்துயிர் அளிக்கும் வீரர்களாகக் கருதினர்கள்; கருஞ்சட்டையாலான ஒரே விதமான உடை அணிந்திருந்தனர். அவர்களைக் கொண்டு போர்ப்படை முறையிற் "செயலாற்றும் படைத் தொகுதிகள்" அமைக்கப்பட்டன; அவர்கள் ஒற்றுமை, அதிகாரம் ஆகியவற்றின் சின்னமாகப் பண்டைக்கால உரோமானிய வீரர்கள் தூக்கிச்சென்ற தடிக் கட்டைத் தங்களது அடையாளமாகக் கொண்டிருந்தனர். நன்கு பயிற்சியளிக்கப்பெற்ற அதிக தொகையான படைகள் இருந்தமையே, பாசிசத்தை வெல்ல முடியாத ஓரியக்கமாகச் செய்து "இத்தாலியில் இரு அரசாங்கங்கள் இருக்கின்றன" என்று ஆரம்ப நாட்களில் பாசிசத் தலைவன் பெருமையோடு கூறிக்கொள்ளவும் உதவியாயிருந்தது. இப்போது மிகச் சிறிய குடிப் போர் ஒன்று ஏற்பட்டது; அதில் கருஞ்சட்டையினர் சமவுடைமையாளரைத் தாக்கினர்; யாப்பமைப்பின்படி ஆட்சிப்பீடத்திலிருந்த அதிகாரிகள் நடுநிலைமை வகிப்பதாக வெளிப்படையாகக் கூறினர். பாசிசக் கட்சியினர் தொழினிறுத்தங்களில் தலையிட்டு, அவைகளைத் தகர்த்த பெருமை தங்களுடையதாகுமெனக் கூறினர்; அவர்கள் தங்களது எதிரிகளை அச்சுறுத்துவதற்காகத் "தண்டிக்கும் படையெடுப்பு"க்களிற் கூடத் தாராளமாக ஈடுபட்டனர். "இத்தாலியில் அநேகவிடங்களில் முறையானதும் நியாயமானதுமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவந்தச் செயல்கள் பாசிசத்துக்கு வெற்றியைத் தருகின்றன" என்று பாசிச வரலாற்றுசிரியனொருவன் கூறுகின்றான். அரசாங்கம் பாசிசக் கட்சியினரின் சட்டமறுப்பு நிலையைச் சமாளிக்க ஆற்றலற்றதாகவோ விருப்பமற்றதாகவோ தன்னைக் காட்டிக் கொண்டது. ஆனால் 1919 இல் நடைபெற்ற தேர்தல்களில் "முறையானதும் நியாயமானதுமான வலுவந்தச் செயல்களால்" பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பது தெளிவாயிற்று; எவ்வாறெனில் அத்தேர்தலில் பாசிசக் கட்சியினர் சமவுடைமைக் கட்சியினராலும், ஒருவகைக் கிறித்துவக் குடியாட்சிக் கொள்கையைக் கைக்கொண்டு மாவட்டத்தையொட்டிய நாட்டுப்புறங்களில் ஆதரவுபெற்ற "மக்கள் கட்சி" யினராலும் முற்றுகத் தோற்கடிக்கப்பட்டனர். இருந்தபோதிலும் பாசிசக் கட்சியினர் எண்ணிக்கையில் விரைவாக அதிகரித்தனர். முசோலினி, தொழிலாளர் செயலாட்சிக் கழகங்களை (சிந்திக்கேட்டுகளை) ஏற்படுத்தி, சமவுடைமைக் கொள்கைச் சார்பினரைத் தன் வசமாக்க முயற்சித்தான். 1919 இல் சிந்திக்கேட்டுகளின் நோக்கங்களை அவனே வகுத்தான். தங்களைத் தகுதியுள்ளவர்கள் எனக் காட்டிக் கொண்ட தொழிலாளர் செயலாட்சிக் கழகங்களால் தொழில்கள் கண்காணிக்கப்படல், நாளொன்றுக்கு எட்டு மணி நேரம் உழைத்தல், மூலதனம்மீது வரி அறவிடுதல், மரபுரிமைச் சொத்தின்மீது வரி அறவிடுதல், வாழ்க்கைத் தொழில் சம்பந்தப்பட்ட குழுக்களால் தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரக் கழகங்களுக்குச் சட்டமியற்றும் அதிகாரம் வழங்கல் ஆகியவை அந்நோக்கங்களுட் சில வாகும். தொழிற்சாலைகளை விட்டு வெளிச் செல்லத் தொழிலாளர்கள் மறுத்து, 1922 ஆம் ஆண்டில் அவர்கள் நடத்துவித்த தொழிற்சாலை "உள்ளிருப்பு" இயக்கத்தைக் கூட முசோலினி ஆதரித்தான்.[1] 1919 இல் கூட்டப்பட்ட முதல் பாசிச மாநாட்டில் 17,000 உறுப்பினர்களைக் கொண்ட 22 பாசிச அமைப்புக்கள் இடம் பெற்றிருந்தன; இரண்டாவது மாநாட்டில் (1920) 30,000 உறுப்பினர்களைக் கொண்ட 118 அமைப்புக்களும், மூன்றுவதில் (1921) 3,00,000 உறுப்பினர்களைக் கொண்ட 2,200 அமைப்புக்களும் இடம்பெற்றிருந்தன. "இத்தாலிய மக்கள் தாங்களாகவே ஏற்படுத்திக்கொண்ட" அரசாங்கம், "உரோமில்" இருந்த அரசாங்கத்திற்குச் சவால் விடுவதற்குத் தயாராகவிருந்தகாலம் விரைவில் நெருங்கிக் கொண்டிருந்தது. 1922 ஒற்றேபரில் பாசிசத் தொழிலாளர் அமைப்புக்களைப் படையிற் சேர்க்குமாறு

---

[1] தொழிற்சாலைகளினுள் இருத்தல் போல்சிவிக்குக் கொள்கையின்பாற்பட்டதாகும் என்பதை அவன் மறுத்தான். H. W. Schneider, "Making the Fascist State."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவிடப்பட்டது. கருஞ்சட்டைப் படை, உரோமை நோக்கித் தனது புகழ்பெற்ற அணிவகுப்பை நடத்தியது. பாசிசத் தலைவர்களால் வெளியிடப்பட்ட ஓர் அறிவிப்பு, "இத்தாலியரின் வாழ்க்கையைச் சிக்கலாக்கி, மக்களை மனச்சோர்வடையச் செய்யும் மிகச் சிக்கலான பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பாசிசம் வாளெடுத்துப் போர் செய்யத் தயாராகின்றது" என்று தெரிவித்தது. ஒரு குடிப் போரைத் தவிர்க்க, முசோலினியை மன்னன் தலைநகருக்கு அழைத்து அமைச்சரவை யொன்றை அமைப்பதற்கு அதிகாரம் வழங்கினன். தான் கலைக்கப்படலாம் என்ற ஓர் அச்சுறுத்தலின் காரணமாகப் பேராளர் மன்றம் அமைச்சரவைக்கு அதிகாரத்தை வழங்கியது.

தனியாதிக்க அரசு.

பாசிசத்தின் முதலாவது குறிக்கோள் நிறைவேற்றப்பட்டு விட்டது. போரினால் உருப்பெற்ற புதிய சத்திகள் அதிகாரத்தில் அமர்த்தப்பட்டன. ஆட்சிக்கு வந்தவர்கள் நாட்டினுடைய அரசியல் நிறுவகங்களை முற்றுகப் புதுப்பிப்பதை உடனே கவனிக்கத் தொடங்கினர். இதன் உண்மையான பொருள் என்ன வென்றால் இத்தாலியில் பொறுப்பாட்சி முறை நிராகரிக்கப்படுதலும், அவ்வாட்சிக்குப் பதில் பாசிசத் தலைவரிடத்தில் அதிகாரவாண்மை அரசாங்கம் ஒப்படைக்கப்படுதலுமாம். பாசிச அரசாங்கத்தின் அரசியலமைப்பை விளக்க ஒரு சுருக்கமான வருணனை மட்டுமே போதுமானது. "பாசிசத் தலைவன்" அனைத்தாண்மை ஆட்சியில் முக்கியமானதோர் உருவாக விளங்குகிறான். இத்தாலியப் பூட்கையைப் பூரணமாக இயக்குமதிகாரம் அவனிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நாட்டின் அரசியல், போர்ப்படை, பொருளாதாரம் ஆகியவை சம்பந்தப்பட்ட நிறுவகங்களை அவன் அடக்கி யாளுகின்றான்; பாசிசக் குடிப்படையின் எவுநன் அவனே; பாசிசக் கட்சியின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதைக் குறியாகக் கொண்டிருக்கின்ற பாசிசத்தின் தலைமைக் கழகத்திற்கு அவன் தலைமை தாங்குகின்றான். எனெனில் ஆட்சி புரியும் உறுப்பினர் குழுவின் அமைப்பு, அக்குழுவினுடைய பூட்கையின் செயலெல்லை ஆகிய இரண்டுக்குமான முழுப் பொறுப்பும் அக்கழகத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. தலைவனுக்கிருக்கும் அதிகாரம், அவனால் தாபிக்கப்பட்டதும் நிபந்தனையின்றி அவனது கட்டளைகளுக்குப் பணிகின்றதுமான கட்சியை அவன் எவுவதிலேயே உண்மையில் தங்கியிருக்கின்றது. பாசிசக் கட்சி பாசிச ஆட்சியினுடைய அரசியற் கருவியாகவும், அதன் குடிப்படைமூலம் – அவ்வாட்சியில் எதனையும் வலுக்கட்டாயப்படுத்தும் கருவியாகவும் இருக்கின்றது. நாட்டின மக்களின் வாழ்க்கையில் அக்கட்சியின் குறுக்கீடு மிகுந்த விளைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவதாக விருக்கின்றது. எனெனில் அதிகார முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு அமையத்திலும் அது நேரடியாகப் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கின்றது. அது அரசாங்க நிருவாகத்தை இயக்கும் மூலப்பொருளாக விருக்கின்றது; சமுதாயத்தின் அரசியல், பொருளாதார, கலாசார நடவடிக்கைகளனைத்தையும் தன் வரம்புக்குள்ளும் தன் அதிகாரத்தின் கீழும் அது கொண்டு வருகின்றது. பாசிச நாட்டில் அரசியல் சுதந்திரமும், அதன் அடிப்படையான பேச்சு, செயல் என்பவை சம்பந்தமான சுதந்திரமும் இடையா. சுதந்திரமாக அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதை அடக்கக் கூடியதொரு சத்தியுள்ள கருவியாக ஒற்றர்குழு நாடெங்கும் பரவியுள்ளது. அச்சுலகின் மீது பூரண கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது; கட்சிச் சார்பில்லாத செய்தித்தாள்கள் ஒழிக்கப்பட்டுவிடும், அல்லது அவற்றின் தலையங்கங்கள் சம்பந்தமாகவும் அச்சுலகு நிருவாக உரிமை சம்பந்தமாகவும் மாற்றங்களுக்குக் கட்டுபடுமாறு கட்டாயப்படுத்தப்படும். அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் சங்கங்களும் பாசிசக் கட்சியின் மேற்பார்வையின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும்; "பாசிசத்தின் கருத்தைக் கொள்கையிலும் செயலிலும் ஏற்றுக்கொள்ளுமாறு" அவைகள் கேட்டுக் கொள்ளப்படும். பேராளர் மன்றத்துக்கான குடியாட்சி முறைத் தேர்தல் நடைபெறுகிறதில்லை; உள்ளூர் ஆட்சியில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரி (பொடெசுற்ரு), நகராதிபதிக்குப் பதிலாக நியமிக்கப்பட்டிருக்கின்ருன்; சட்ட மன்றுகளில் நடுவர் முறைமை ஒழிக்கப்பட்டிருக்கின்றது; வித்தியாசாலைகளில் பாசிசத்தின் தோற்றம், இலட்சியங்கள், நிறுவகங்கள் ஆகியவற்றைப்பற்றி விளக்கும் பாடநூலொன்று கட்டாயமாக உபயோகிக்கப்படுகிறது; எனெனில் பாசிசத் தத்துவங்கள் வருங்கால மக்களின் மனத்தில் பதியும்படி செய்யப்பட வேண்டியது அவசியமெனக் கருதப்படுகிறது.

குடியாட்சி பற்றிய பாசிசக் கருத்து.

பாசிசம் அரசை வெற்றி கொண்டதுமல்லாமல், ஓர் "ஆட்சி" முறையாகவும் ஆகிவிட்டது. ஒரு கோட்பாட்டை உருவாக்குவதற்கு இப்போது அதற்கு அழைப்பு விடப்பட்டது, எனெனில் ஒவ்வொரு மதத்துக்கும் ஒரு கோட்பாடு வேண்டும். "பாசிசம் ஒரு மதம்—பெருமை பெற்ற மக்களுடைய வரலாற்றைப் புதுப்பிக்கின்ற ஆன்மீகச் சத்திகளில் ஒன்று" என முசோலினி கூறினன். இக் கூற்று பகட்டாக இருந்தபோதிலும், பாசிசத்தின் முக்கிய கருத்துக்களை நோக்கின், இது பல மறுப்புக் கொள்கைகளைக் கொண்ட ஒரு கோவையாக அமைந்திருக்கின்றது; அது தனி நபருக்கெதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரானது; குடியாட்சிக் கெதிரானது; சமவுடைமைக் கெதிரானது; கட்டுப்பாடற்ற தற்போக்குக் கொள்கைக் கெதிரானது; அமைதியியக்கத்துக்கு மெதிரானது. பாசிசத்தின் தன்மை பற்றி நாம் ஆராய்வதாயின், அவ்வாராய்ச்சியின் தொடக்க அம்சமாக, குடியாட்சி பற்றிய பாசிசக் கருத்தொன்றைநாம் முதலாவதாகக் கவனிக்கலாம்[1]. பிரான்சியப் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட குடியாட்சி நாட்டின் தன்மை, "முதுசொ" நாடு சார்ந்ததும் "பொலிசு" நாடு சார்ந்ததுமாகிய தன்னெண்ணப்படியான தன்மைகளினின்றும் ஓர் உண்மையான முன்னேற்றத்தைக் குறிப்பதாகும் என்பதைப் பாசிசம் ஒப்புக்கொள்கின்றது. அது "நடு நிலை அரசு" என்ற புதிய தத்துவத்தை உண்டாக்கிற்று—அதாவது சுதந்திரம், சமத்துவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதோர் அரசு அதுவாகும். அவ்வரசில் குடிமகனெருவனது உரிமைகள் கொள்கையளவில் அழிக்கப்படமுடியாத, தெளிவான உறுதியீடுகளையுடையனவாக விளங்குகின்றன. அக் குடியாட்சி நாடு தனது ஆரம்பநாட்களில் ஒரு நன்மை பயக்கும் கருமத்தைச் செய்தது; ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கட்சிப் பிரிவுகளின் வரம்பு மீறிய செயல்களாலும், வர்க்கப் போராட்டம் பற்றிய மனவெறுப்புக்களாலும் எழுந்த அரசியல், சமுதாயக் குழப்பங்கள் காரணமாக, அக்குடியாட்சி நாட்டில் சீர்கேடடைவதற்கான தொரு போக்குத் தோன்றியது. மனிதனுடைய சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பறைசாற்றிய குடியாட்சிநாடு, ஒரு நடுத்தர வகுப்பரசு என்பதாகத் தன் உண்மை உருவத்தை இப்போது வெளிப்படுத்யது. மத்திய வகுப்பாரின் நோக்கங்களை அது நிறைவேற்றி வைத்ததுடன், கைத்தொழில், நிதியகம், முதலாளித்துவ வேளாண்மை ஆகிய துறைகளில் பாட்டாளிமக்கள் சுரண்டப்படுதற்கும் அது வழிவிட்டது. ஆதலால் குடியாட்சி நிறுவகங்களைச் சீர்குலையச் செய்துகொண்டிருந்த ஒரு சச்சரவு இளம் பிற்று—அரசாங்கத்திற்கும் தொழிலாளி இனத்தவருக்கு மிடையேயான சச்சரவே அஃதென்க. தொழிலாளர் தங்களுக்கான அரசியற் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதில் ஒரு சாதாரணப் பங்கு பெறுவதுடன் மனநிறைவு கொண்டவரல்லர்; "பாட்டாளிகளின் வல்லாட்சி" யென்ற ஆட்சி வலுவை நிறுவும் வழிநோக்கி அவர்கள் தட்டுத்தடுமாறிச் சென்றுகொண்டிருந்தனர். அரசினரோ, "எப்போதும் நடுத்தர வகுப்பினருக்குச் சார்பாக இருந்தமையால்" அவர்களின் நன்மை கருதித் தொழிலாளர்மீது அடக்குமுறையைப் பிரயோகிக்குமாறு கட்டாயப்படுத்

[1] எ. சோல்மி, பாசிச அமைச்சரவையில் நீதியமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பட்டனர். அதாவது, குடியாட்சிமுறையரசின் அடிப்படையாக அமைந்திருந்த சுதந்திரத்தை அரசினர் கட்டுப்படுத்தினர். மாற்றீடாக, சருவ வாக்குரிமை வழங்குதல் போன்ற ஏற்பாடுகளால் பொதுமக்கள் நயக்கும் இயக்கத்தை அமைதிப்படுத்த அவர்கள் வீண் முயற்சிகள் செய்தனர்; ஆனால் இந்த ஏற்பாடுகள் மக்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டி, பாராளுமன்ற முறையைச் சீர்கேடடையச் செய்தன. மிக முக்கியமாக, நிருவாகத்துக்கிருந்த அதிகாரத்தை இவ்வேற்பாடுகள் பாழ்படுத்தின. இதனால், "பொதுப் பாலனத்துக்கு அப்பாற்பட்ட எக்கருமத்தையும் நிருவாகம் திறமையாகச் செய்ய முடியாத படி ஆயிற்று".

மேற்கூறப்பட்ட விவரங்களிலிருந்து, செல்வத்தாலும், ஆழமாக வேரூன்றியிருந்த அரசியல் மரபுகளாலும் வலுப்பெற்றிருந்த நாடுகளிலே குடியாட்சி யரசு, இடையூறுகளிருந்த போதும் அசையவில்லை என்ற முடிவுக்கு நாம் வரக்கூடியதாயிருக்கின்றது; ஆனால் இவ்வாறான உறுதிநிலையை யுண்டாக்கக்கூடிய செல்வம், அரசியல் மரபு ஆகியவைகளில்லாத ஏனைய நாடுகளில் (இரசியாவில் ஏற்பட்டது போன்று) பொதுவுடைமைப் புரட்சியோ, (இசுப்பெயினில் நிகழ்ந்தது போன்று) குடிப்போரோ உண்டாவதற்கு அவ்வரசு வழிவகுத்தது. "பாதுகாப்புக்கான பாதையை மற்றுமொருமுறை உரோமிலிருந்தே சுட்டிக்காட்ட வேண்டியிருந்தது." அரசாங்கத்தின் அதிகாரத்தையும் நாட்டின் சத்திகளனைத்தினது ஐக்கியத்தையும் ஒரேசமயத்தில் வெளிப்படுத்துகின்றனவாய் அமைந்த அதிகாரிகளுக்குரிய 'தடிக்கட்டு' அவ்வரசின் அடையாளமாக விருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டானது, குடியாட்சி, கட்டுப்பாடற்ற தற்போக்குக் கொள்கை ஆகியவை வளர்ச்சியுற்ற நூற்றாண்டாக விருந்தது போன்று, இருபதாம் நூற்றாண்டானது மேலாண்மை வளர்ச்சியுற்ற நூற்றாண்டாகவும், "உண்மைவழிக்கு இட்டுச் செல்லும் ஒரு நூற்றாண்டாகவும், பாசிச வளர்ச்சிக்குரிய ஒரு நூற்றாண்டாகவும்" இருக்கின்றது. இது முசோலினியின் கூற்றாகும்; ஏனெனில் "அவன் தானே தனது கட்டளையின்படி அமைக்கப்பட்ட கோட்பாட்டை விளக்கியிருக்கிறான்[1]. "ஒவ்வோர் ஊழியும் தனக்குரிய சொந்தக் கோட்பாட்டைக் கொண்டிருக்கின்றதென்று கொள்வோமானால், பாசிசம் எமது ஊழிக்குரிய கோட்பாடாக அமைந்திருக்கின்றது என்பதைக்

பாசிச ஊழி.

[1] பாசிசக் கோட்பாட்டைப்பற்றி இங்கு கொடுக்கப்பட்ட விவரம் முசோலினியின் வாசகங்களை ஆதாரமாகக் கொண்டது: The Political and Social Doctrine of Fascism, The Corporate State, and My Autobiography.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கில்லாத சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன"; எனெனில் "இப்போதிருப்பது போன்று இதற்குமுன் ஒருபோதாவது மேலாண்மை புரியவும், மக்களை இயக்குவிக்கவும், ஒழுங்கை நிலைநாட்டவும் நாடுகள் எங்கியிருந்ததில்லை." "பாசிச ஐரோப்பா, பாசிசத்தின் கோட்பாடு, செயல்முறை ஆகியவற்றிலிருந்து தன்னுடைய நிறுவகங்களைக் கொண்டு நடத்துவதற்கான ஊக்கத்தைப் பெறவிருக்கின்றதென்பது பற்றி" அவன் முன்பே அறிந்துரைத்தான். பிறிதோரிடத்தில் "ஐரோப்பாவில் எமது நூற்றுண்டுக்குரிய பண்பாட்டின் நியமமாதிரியாகப் பாசிசம் வரத்தான் போகின்றது; அது ஐரோப்பிய மறுமலர்ச்சியின் முன்னோடி" என்ற தனது நம்பிக்கையை அவன் மீண்டும் வற்புறுத்தியுள்ளான்.

பாசிசம் (i) தனியுரிமைக்கோட்பாட்டுக் கெதிரானது.

மக்களின் உணர்ச்சி, விருப்பம் ஆகியவற்றின் வெளிப்பாடாக அரசு விளங்கவேண்டுமென்ற எண்ணக் கருவிற்றான் பாசிசக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்து தங்கியுள்ளது என்று அக்கோட்பாட்டைப் பிறப்பித்தவன் விளக்குகின்றான். அரசு அனைத்தாற்றலுடையது; அனைத்தையும் உட்கொண்டுள்ளது; "அதற்கு வெளியே மனிதப் பண்பு அல்லது ஆன்மீகப் பண்பு சம்பந்தமான பெறுமானம் எதுவும் இருக்கலாகாது." அக் கோட்பாட்டின்படி "எல்லாம் அரசினுள்ளே; எதுவும் அரசுக்கு வெளியிலன்று; எதுவும் அரசுக்கு விரோதமாகவுமன்று" என முசோலினியின் கருத்து நிறைந்த சிறு வாக்கியமொன்று எடுத்துரைக்கின்றது. பாசிசமானது தனிப்பட்டோருக்கோ, குழுக்களுக்கோ சுதந்திரமான செயல் வாய்ப்பை விட்டு வைக்காத, எங்கும் பரவிநிறையுமொரு தன்மையை ஒரு நாட்டிற்கு உரித்தாக்குகிறது. அரசாங்கத்தின் நலன்களுடன் தனிப்பட்டவனின் நலன்கள் பொருந்துமளவிலும், அரசாங்கத்துடனைத்து அவன் செயற்படுமளவிலும்மட்டுமே ஒருவன் மதிக்கப்படுகின்றான்; ஆனால் அரசியல் அல்லது பொருளாதாரம் பற்றிய எக்குழுக்களுக்கும் அரசாங்கத்திற்குப் புறம்பாகச் செயற்பட இடங் கொடுக்கப்படுவதில்லை. சுருங்கக் கூறின், கடந்த காலம் தனிப்பட்டவனின் காலமாக விருந்தது போன்று, இந்தக் காலம் அரசாங்கத்தினுடையதாக விருக்கின்றது. ஒரு தனிப்பட்ட முழுமையாட்சியாளன் கீழ் அனைத்தாற்றலுடைய ஆட்சி நிலவியிருந்ததுண்டு என்பதற்குப் பல எடுத்துக்காட்டுக்கள் வரலாற்றில் காணப்படுகின்றன. ஒரேயொரு அரசியற் கட்சிமட்டும் ஆதிக்கம் பெற்றுள்ளதாக ஒரு தனியாதிக்க நாடிருப்பது பாசிச அரசாங்கத்தின் ஒரு தனிப்பட்ட அம்சமாகும். சோவியத்து இரசியாவிலும், தேசியச் சமவுடைமைச் சேர்மனியிலுமுள்ள தனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதிக்க வரசுகளையொத்துப் பாசிச அரசாங்கமும் அமைந்துள்ளது. பாசிசக் கட்சியினுடைய கட்டுப்பாடு பாசிச ஆட்சித் திட்டங்களை இணைந்து இயங்கச்செய்யு மொன்றுகும். தனது தனி உரிமைக் கோரிக்கைகளை மட்டும் ஆதரித்துப் பேசுகின்ற ஒரே யொரு அரசியற் கட்சியுடன், மக்களுடைய சத்திகள், நலன்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு தனியாதிக்க நாட்டை இணைப்பதே பாசிசத்தின் சாரமாக அமைந்துள்ளது.

(ii) குடியாட்சிக் கெதிரானது.

பாசிசமானது ஓர் அதிகாரவாண்மையுடைய ஆட்சியென்ற முறையில், அது குடியாட்சிக்கு முரணுக விருக்கின்றது. குடியாட்சி நிலவிய நூற்றுண்டு "எண்ணிக்கையைக் கருதும் நூற்றுண்டாகவும், பெரும்பான்மையினரைக் கருதும் நூற்றுண்டாகவும், அளவுகளைக் கருதும் நூற்றுண்டாகவும் இருந்தது; ஆனல் "நாம் உலகில் ஒரு புதிய தத்துவத்தினை ஆதரித்து நிற்கின்றேம்—குடியாட்சி உலகிற்கு, 1789 இல் வகுக்கப்பட்ட அடிப்படைத் தத்துவங்களை இன்னும் மதிக்கின்ற உலகிற்கு, நேர் எதிராக நாம் இருக்கின்றேம்." பாசிசம் பற்றிய அரசியற்றத்துவம், ஆட்சிபுரிதற்குப் பெரும்பான்மையோர் சம்மதம் அவசியம் என்ற குடியாட்சி அரசாங்கத்தின் அடிப்படைத் தத்துவத்தை மறுக்கின்றது. "எண்ணிக்கைகளையும் 'மக்கள்' என்று அழைக்கப்படுகின்ற அறிவுக்கெட்டாத தெய்வீகத்தையும் உயர்வுபடுத்துதற்குப்" பதிலாக, வல்லாட்சியாளன் என்பதற்குரிய காதுக்கினிமையான 'தலைவன்' என்ற சொல்லைக் காட்டி இப்பாசிசக் கோட்பாடு மக்கள் முன் தோற்றுகிறது. இப்பாசிசத் தத்துவம் குடியாட்சியின் மிகப் புனிதமான முறை என்று கூறப்படுகின்றது; எனெனில் இத்தத்துவம் எண்ணிக்கைக்குப்பதில் பண்புக்கு இடமளிப்பதின்மூலம், ஒரே கருத்தால் ஒன்று சேர்க்கப்பட்டதும், தனக்கே உரித்தான பண்பில் தோய்ந்ததுமான மக்கட் சமுதாயத்தினுடைய உள்ளார்ந்த மன விருப்பை நன்கு பிரதிபலித்தது. குடியாட்சியில் ஆட்சி நிருவாகம், தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்களாலான ஒரு சாதாரண கருவியாக்கப்பட்டிருந்தது. ஆனல் பாசிசமோ "அந்நிருவாகத்தைக் கட்சிப் பூசல், கட்சி பற்றிய தனிநலம், வர்க்கத்தினர் கொண்டிருந்த தானென்ற எண்ணம் ஆகியவற்றினின்று விடுவித்து" நாட்டினுடைய தனிப்பண்பைக் குறிப்பதாகவிளங்கும் நிருவாகத்துக்குரிய மதிப்பை அதற்கு மீண்டும் அளித்தது.

(iii) சமவுடைமை ஆட்சிக் கெதிரானது.

குடியாட்சித்தொடர்பான நிறுவகங்கள் மீது பாசிசம் காட்டிய வெறுப்பு, மாக்சினுடைய கூட்டுடைமைவாதக் கொள்கைகள் மீது அது காட்டிய வெறுப்புக்கு எவ்வகையினும் குறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்று என்று கூறலாம். முதலாவதாக மனித இனத்தின் மலர்ச்சியை முற்றுகப் பொருளாதார முன்னேற்றம் என்ற கண்கொண்டு விளக்குகின்றதாகிய வரலாறு சம்பந்தமான உலோகாயதத்தை (அதாவது, வரலாற்றின் பொருளாதார ரீதியான விளக்கத்தை) பாசிசம் மறுத்தது. பொருளாதாரக் காரணிகளன்றி, அரசியற் காரணிகளே வரலாற்றை ஆக்குகின்றன; "அவைதான் கூட்டுவாழ்க்கை பற்றிய எல்லா வெளிப்பாடுகளுக்கும் உயிர் கொடுக்கின்றன" என அது கூறுகின்றது. இந்தக் கோட்பாட்டை, இந்த உருவில் நோக்கும்போது இதற்கு எதிரான சமவுடைமைக் கோட்பாட்டைவிட இது அதிக தவருனதாக இருக்கின்றது என்று கூறலாம். இரண்டாவதாக, "வரலாற்றைப் பொருளாதார முறையிற் கருதுவதின் இயற்கையான விளைவாக ஏற்படும்" வகுப்புப் போராட்டம்பற்றிய கோட்பாட்டைப் பாசிசம் மறுக்கின்றது. குறிப்பாக, சமுதாயம் சம்பந்தமான மாறுதல்களை ஏற்படுத்துவதற்கு வகுப்புப் போராட்டம் முதன்மையான செயற்கருவியாகும் என்பதை அது மறுக்கின்றது. "ஒழுக்கம் பற்றியதும், பொருளாதாரம் பற்றியதுமான தனித்தவொரு சமுதாயமாக" எல்லா வகுப்பினரையும் இணைக்க வேண்டும் என அது விரும்புகின்றது. பல்வேறு நலன்களும் ஒருமுகப்படுத்தப்பட்டு இணைக்கப்பெறுகின்ற பாசிசக் கூட்டரசாங்கத்தின் ஐக்கியத்தினுள் இவ்வகுப்பினரை இணைக்க முடியுமென்று அது கருதுகின்றது. இவ்வாறு "பாசிசம் சமவுடைமைக் கோட்பாடுகளிலடங்கிய இரு முக்கிய அம்சங்களையும் நிராகரித்த பின்னர், அதில் மிகுந்திருப்பதெல்லாம் தாழ்ந்தோரின் துன்பங்கள், துயரங்கள் ஆகியவை தணிக்கப்படுவதின் மூலம் சமூக உறவுகள் சீராக்கப்படும் என்ற உணர்ச்சியின் பாற்பட்ட அவாவே என்க. இவ்வாருன அவா, மனித சமுதாயம் தோன்றிய காலந்தொட்டே இருந்து வருவதொன்று. ஆனால் சமுதாய மலர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் சமவுடைமைக் கோட்பாட்டின் மூலம் இன்பம் அடைய முடியும் என்ற பொருளாதார விளக்கத்தையும் அந்த மலர்ச்சியின்போது எல்லோருக்கும் உயர்ந்த வாழ்க்கைக்கான வாய்ப்பு அளிக்கப்படும் என்பதையும் பாசிசம் இங்கு மீண்டும் மறுக்கின்றது.

(iv) கட்டுப்பாடற்ற தற்போக்குக் கெதிரானது.

மாக்சினுடைய கூட்டுடைமை வாதத்தைப் பாசிசம் மறுதலிக்கும்போது, பாசிசச் சொற்றொகுதியில் கட்டுப்பாடற்ற தற்போக்குக் கொள்கை என்று பொருள்படுகின்ற "முற்போக்குக் கோட்பாடுகளை அது முழுமையாகவும் உறுதியாகவும் எதிர்க்கின்றது." பாசிசத்திற்கு விளக்கங் கூறுவோர், கட்டுப்பாடற்ற தற்போக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையின் காலம் ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருக்கின்றதென்று சரியாக வாதிக்கின்றனர். "தாராளக் கொள்கையினர் பொருளாதாரத்துறையிற் காட்டிய ஐயப்பாட்டால் சலிப்படைந்த மக்கள் அவர்களை விட்டுவிலகினர்." கட்டுப்பாடற்ற தற்போக்குக் கொள்கையைப் பாசிசம் மறுப்பது எந்தவொரு நாட்டிலும் அரசு குறுக்கிட்டுக் கருமமாற்றுவதாகிய தற்காலப் போக்கை ஒத்திருக்கின்றது; ஏனெனில் தற்காலப் பொருளாதார வாழ்க்கையின் சிக்கலும், பொருளாதார மந்தத்தால் ஏற்படுகின்ற பலதரப்பட்ட சமூகப் பிரச்சினைகளும் சேர்ந்து, அரசு தலையிடுவதற்கான அவசியத்தை எல்லா நாடுகளிலும் ஏற்படுத்திவிட்டிருந்தன. சமவுடைமைக் கோட்பாடு ஓர் உறுதியான ஒழுங்குமுறை என்பதைவிட, ஒரு கருத்தின் போக்கைக் குறிக்கின்றமையால், எல்லா நாடுகளும் (அவற்றின் ஆட்சி முறை எதுவாக விருந்தபோதிலும்) சமவுடைமைக் கோட்பாட்டின் போக்கில் பொருளாதார முறையை மேன்மேலும் கட்டுப்படுத்துவதான நோக்குடன் சென்றுகொண்டிருக்கின்றன.

(v) அமைதிக் கோட்பாட்டுக் கெதிரானது.

பாசிசம் தனியாண்மை, குடியாட்சி, மாக்சின் கூட்டுடைமை வாதம், கட்டுப்பாடற்ற தற்போக்குக் கொள்கை ஆகியவற்றுக் கெதிராகவிருப்பதுடன் அமைதிக்கோட்பாட்டுக் கெதிராகவுமிருக்கின்றது. பெரும்பாலும் முழுவைரோப்பாவுக்கும் மிக முக்கிய மாகவிருக்கிற அம்சக் கூறு இதிலேதான் தங்கியிருக்கின்றது. நாட்டுக் கூட்டவையில், போரினால் களைப்புற்ற உலக நாடுகளால் உருவாக்கப்பட்டிருந்த உலக அமைதியென்ற கருத்துக்குச் சவால் விடுப்பதாக இக்கூறு அமைந்தது. பாசிசம் அரசியலில் "யதார்த்த" நோக்கங் கொண்டிருப்பதாக வெளிப்படையாகக் கூறுகின்றது; மேலும் கடந்தகால அனுபவமும், "விரைவாக மாறுபட்டுக்கொண்டிருக்கும் இயல்புடைய நிகழ்காலத்தின் சார்புகளும்" அமைதியை நாடிச் செல்லும் போக்குக்கு நேர் மாறுனவையென்று அது அழுத்தமாகக் கூறுகின்றது. அமைதிக்குப் பதிலாக அது போருக்கு உயர்வளிக்கின்றது; ஏனெனில் போர் மட்டுமே மனிதனின் எல்லா ஆற்றல்களையும் அவற்றின் மிக உயர்ந்த நிலையில் வைத்திருப்பதாகுமென அது போதித்து, அவ்வாறுன போரை எதிர்த்து நிற்கத் தைரியமுடைய நாடுகளே பெருந்தன்மையுடையவை என்று போற்றுகின்றது. "அரசியற் சம்பந்தமான குறிப்பிடத்தக்க நிலைமைகளைச் சமாளிப்பதில் சருவதேசம் அல்லது கூட்டவை சார்ந்த அமையங்களால் ஏற்படும் பயனைப் பாசிசம் ஏற்றுக்கொண்ட போதிலும், அவ்வமையங்கள் பாசிசத்தின் மன நிலைக்குப் புறம்பானவையாகும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு நன்கு மெய்ப்பிப்பதுபோன்று, நாடுகளிலுள்ள மக்கள் உணர்ச்சி வசமானதும், இலட்சிய வகையினதான அல்லது செயல் வகையினதானதுமான சிந்தனைகளால் பெரிதுந் தூண்டப்படும் போதெல்லாம், சருவதேசம் அல்லது கூட்டவை சார்ந்த அவ்வமைப்புக்கள் வீழ்ச்சியுறுகின்றன. "அமைதிக் கோட்பாட்டை எதிர்க்குமியக்கம், அதிகாரத்தைப் பெறுவதற்கான விருப்பம்" என்று பொருள்படும்போது, அது ஒரு கட்சிக் கோட்பாட்டை உருவாக்குகின்றது. அதன் காரணமாகத்தான், பாசிசக் கோட்பாடு படர்ச்சிக்கான ஆவலுடையதாயிருப்பதால், அது ஒரு பேரரசுவாத உணர்ச்சியால் உந்தப்படுகின்றது. "பல நூற்றுண்டுகளாக அந்நியரின் கீழ், அடிமைத்தனத்தில் பயனற்று வீழ்ந்து கிடந்த பின்னர் உலகத்தில் தம்மைத் தாமே இப்போது திரும்பவும் முன்னிலைக்குக் கொணர்ந்து கொண்டிருக்கின்ற" இத்தாலியர் வாழும் நாடு போன்றதொரு நாட்டுக்கு இந்தக் கோட்பாடு மிகப் பொருத்தமானது என்று கருதப்படுகின்றது. இத்தாலிய மக்களுடைய பேரரசுக் கோட்பாடு பற்றிய வாழ்க்கைக் குறிக்கோளில் நம்பிக்கை கொள்வோர் ஒழுக்கம், கடமையுணர்ச்சி, தன்மறுப்பு ஆகிய ஆன்மிகப் பெறுமானங்கள் அக்குறிக்கோளிலடங்கியிருப்பதை மனத்திற் பதிய வைப்பது அவசியம். "பாசிசக் கொள்கையினராகிய நாங்கள் சொகுசான வாழ்வை விரும்புவரல்லர்" என்பதுவே பாசிசத் தத்துவத்தின் அடிப்படையாகும். பாசிசக் கொள்கையினருக்கு வாழ்க்கை "ஒரு தொடர்ச்சியான முடிவற்ற போராட்டம்" என்க. பாசிசப் பிரசாரம், "உறுதியான இலட்சிய உணர்ச்சிமிகுதி" என்ற ஒரு சூழ்நிலையை எற்படுத்தி, தாங்கள் "முன்னேறிக் கொண்டிருக்கின்ற" ஒரு நாட்டினர் என்ற உறுதியான எண்ணத்தை இத்தாலியரின் மனத்திற் பதியச் செய்யும் திட்டத்துடன் ஆரம்பித்தது. இத்தாலியப் பாசிசக் கொள்கையினன் ஒருவனது உரிமைக்குரல் "ஆபத்தில் வாழ்வது" என்பதாம்—அவன் எவ்வித தியாகஞ் செய்வதற்கும், எவ்வித ஆபத்திற்குட்படுவதற்கும் தயாராக இருக்கவேண்டும் என்று எச்சரிக்கப்படுகிறான். இளைஞர்கள் கூடக் குழந்தைப் பருவந்தொட்டு, பாசிசப் போக்குக்கேற்பத் தங்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள சிறப்புப் பயிற்சி பெறுகின்றார்கள். போர்ப்படையை யொட்டிய முறைகளில் நடாத்தப்பட்டு, இத்தாலியை "ஒரு போர்ப்படை சார்ந்த நாடாக்குவதை"த் தெளிவான நோக்கமாகக் கொண்ட அமையங்களில், தொடக்கத்திலிருந்தே இவ்விளைஞர்கள் சேர்க்கப்படுகின்றார்கள். "நாட்டின் இளைஞர்களைக் குழந்தைப் பருவத்திலிருந்து முதுமைக் காலம்வரை முற்றும் தனக்குரியவர்களாக்கிக் கொள்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பதற்காகவும், இதெல்லாம் ஒரு கட்சியினுடையவும் ஓர் ஆட்சியினுடையவும் தனிப்பட்ட நலனுக்காகச் செய்யப்படுகிற தென்பதற்காகவும், இவ்விதக் கொள்கையின் விளைவாக உண்மையில் அவ்வினைஞர் மத நம்பிக்கையற்று அரசை வணக்கஞ் செய்யும் நிலை ஏற்பட்டுவிடுகின்ற தென்பதற்காகவும்" பதினோராம் பயசு போப்பாண்டவர் பாசிச அரசாங்கத்தைக் கண்டனஞ் செய்தார்.

பாசிசத்தின் பிழையான வாதங்கள்.

பாசிசக் கோட்பாட்டைப் புறக்கணிக்கவோ வெறுப்புடன் தள்ளிவிடவோ முடியாது; ஏனெனில் ஐரோப்பாவின் ஒரு பெரும்பகுதி அதனுடைய வஞ்சகமான போதனைகளுக்குப் பணிந்துள்ளது. ஆனால் திரிபுரைகளையும் பொய்களையும் கொண்ட இந்தப் பாசிசமென்னும் கதம்பத்தின் பிழையான வாதங்களை எடுத்துக் காண்பிக்க நீண்ட விளக்கங்கள் தேவையில்லை. எனினும் அதற்கு விளக்கங் கூறுவோர் நம்புவது போன்று, அது அப்படியொன்றும் நூதனமானதன்று என்று நாம் கூறலாம். அரசைப் புகழ்வது சம்பந்தப்பட்ட மட்டில், கிரேக்க தத்துவஞானிகளைச் சிந்தனையிலாழ்த்தி, சோபோக்கிளீசின் "அந்திக் கோனே" யில் ஓர் இலக்கிய உதாரணமாக அமைக்கப்பட்ட ஒரு பிரச்சினையை அக்கோட்பாடு மக்களுக்கு அளித்தது. போரைப் புகழ்வது சம்பந்தமாக, மானங் கெட்ட ஒரு சேர்மானியக் கோட்பாட்டுக்கு அது மீண்டும் உயிர் கொடுத்தது. இனத்தை உயர்த்திக் கூறுவதிலும்[1] யூதருக்கெதிரான கோட்பாட்டைத் தழுவுவதிலும் தேசியச் சமவுடைமைக் கோட்பாட்டைப் பாசிசக் கோட்பாடு இழிவான முறையில் பின்பற்றுகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக, நன்கு பழக்கப்பட்ட ஒரு பாதையைப் பின்பற்றியே அது குடியாட்சி பற்றிக் கண்டனம் செய்கின்றது. தேசிய நலன்களைப் பிரதிபலிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மன்றத்தை விடப் பொறுப்பற்ற ஆட்சியாளன் உண்மையில் அதிகத் தகுதிவாய்ந்தவனாக இருக்கலாம் என்ற கொள்கை, ஒரு சிறு கூட்டத்தினருக்குப் பழக்கமானதொன்றே. 17 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற முதலாம் சார்ளின் நேரடியான ஆட்சியின் போது சூராபோடு, இலாடு என்போர் கொண்டிருந்த கருத்தை அது மீண்டும் புதுப்பிக்கின்றது. இக்கருத்துப்பற்றி மிக்க அண்மைக் காலத்து வரலாற்றிலிருந்து விளக்கங் கோரின்,

---

1. "இனம்—அது ஓர் உணர்ச்சியேயன்றி வேறென்றுமன்று; 95 சதவிகிதம் மும் அது உணர்ச்சியேதான்" என்று 1932 இல் முசோலினி கூறினன். இற்ல ருடைய சேர்மனி சென்ற வழியிலேயே இத்தாலியையும் அமைப்பதற்காக அவன் 1938 இல் பல அடக்குமுறை நடவடிக்கைகளைத் தொடக்குவிக்கும் வரை யூதருக் கெதிரான கோட்பாட்டைத் தொடர்ந்து மறுத்து வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 ஆம் நூற்றுண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் இரசியப் பேரரசர் காலத்தில் விரித்துரைக்கப்பட்ட கோட்பாடுகளை நாம் நோக்கலாம்; மூசோலினி, பொபேடொனசுடெவ்வின் ஆன்மீக மரபுரிமைக்குரியவன். குடியாட்சிநாட்டினது குறைபாடுகள் எவையாயினும்—"குடியாட்சி அநேக மன்னர்களாலே துன்பத்திற்குள்ளான, அரசனற்ற ஒருவகை ஆட்சியாக விருக்கின்றது" என்ற கூற்றில் எந்த அளவு உண்மை இருந்த போதிலும்—அது மனிதனுடைய நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காக விருக்கின்றது; சுதந்திரமானதும் ஒழுங்கானதுமான வளர்ச்சிக்குரிய தொரு வாய்ப்பை அதற்குக் கொடுப்பதால், தனி மனிதப் பண்பை அதனால் வளப்படுத்த முடியும். தனக்கென எவ்வித விருப்பு வெறுப்பு மில்லாத ஒரு இயந்திரமாக்கக் குடியாட்சி ஒருவனை மாற்றுகிறதில்லை; ஆனால் வேறெருவருக்கும் மாற்றமுடியாத அவனது உரிமைகளை அது மதிக்கின்றது. பேச்சுச் சுதந்திரம், அச்சுலகுச் சுதந்திரம், கூட்டங் கூடும் சுதந்திரம், அரசியல், சமூகம் சம்பந்தமான அமையத்திற்கான சுதந்திரம், மனம்போனபடி சிறைசெய்யப்படுதலினின்று பாதுகாப்பு ஆகியவற்றை அது தடுப்பதில்லை. (பாசிச அரசை உருவாக்கிய சிற்பி கூறியவாறு) "பயனற்ற அல்லது தீங்கு விளைவிக்கக் கூடிய சுதந்திரங்களின்" வகையினுள் அடங்கும் இச் சுதந்திரங்களைப் பாசிச அரசு "மட்டுப்படுத்தியுள்ளது." பாசிசம் தன்னைப்பற்றிப் பெருமையாகப் பேசுவதற்குக் காரணமாகிய "வகுப்புக்களை ஐக்கிய மாக்கும்" ஓர் இலட்சியம, குடியாட்சி யரசினால் அடைய முடியாததொன்று. தங்களுடைய சுதந்திரங்கள் ஒழிக்கப்படுவதை எதிர்க்கின்றவர்களிடம் கடுமையான கண்டிப்புடனிருப்பதின்மூலம் பெறக்கூடிய இவ்விலட்சியத்தையைக் குடியாட்சியரசு அடைவதில்லை. போர்வெறி என்ற உணவூட்டி வளர்க்கப்பட்ட இளைஞர்கள், உயர்ந்த ஒழுக்கத்திற்கான உறுதி, நாட்டுப்பற்று சம்பந்தமான பெருமகிழ்ச்சி, பெரும் தேசியப் புகழை எதிர்காலத்தில் ஈட்டுவதற்கான ஆவல் ஆகிய பண்புகளைப் பெறுவதற்கான நிலையில் அவர்களை வழிநடத்திச் செல்வதை அது குறிக்கோளாகக் கொள்ளுகிறதில்லை. போரை அது உயர்த்திப் பேசுவதில்லை; அன்றி பாளையங்களிற் காணப்படும் ஒழுக்காறு, மனோநிலை ஆகியவற்றுடன் கூடிய ஒரு போர்ப்படையையுடைய பாசறையாக அது நாட்டை மாற்றுகிறதுமில்லை. அச்சுறுத்துகின்ற சைகைகளைக் காட்டியும், "ஒளிவீசுகின்ற வாளை"க் காட்டியும் தான் அந்நிய நாட்டில் பெருமையும் மதிப்பும் பெறுவதை அது விரும்புகிறதில்லை. சமாதானம், போர் ஆகிய முதன்மையான பிரச்சினைகள் பற்றிய விடயங்கள் தனிப்பட்ட ஒருவனுடைய இச்சையைப் பொறுத்து நடைபெறுவதற்கு அது வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதில்லை. குடியாட்சிகள், வல்லாட்சிகள் ஆகிய இருவகை ஆட்சிகளுக்கிடையே எவை சிறப்பானவையென்று தெரியவேண்டு மாயின், அதற்காக உபயோகிக்கப்பட வேண்டிய சரியான பரிசோதனைகள் இவைகளேயல்லாது, "நன்கு அமைக்கப்பட்ட, ஒரு முகப்படுத்தப்பட்ட, ஐக்கியப்படுத்தப்பட்ட" ஓர் அரசுக்குரிய போலிப்பகட்டான தகைமைகளல்ல. உலகத்தின் ஒரு பாதி, வரையறையில்லாது சுதந்திரமாக நீடித்து நிற்கும் என்பதும், மற்றப்பாதி பிற்போக்கான அரசியற் றத்துவத்திற்கு அடிமை யாகிக்கிடக்கும் என்பதும் நிகழ்தற்கரிய தொன்றாகும்.

பாசிச அரசின் பொருளாதார அமைப்பு.

நாம் இப்போது பாசிச அரசின் பொருளாதார அமைப்பைப்பற்றி விவரிப்போம். இத்தாலியத் தொழிலாளர் இயக்கத் தினரால் கைக்கொள்ளப்பட்ட தொழிலாளர் ஆட்சிமுறைமைக் கொள்கை களிலிருந்து பெறப்பெற்ற பொருளாதார அமைப்பின் அடிப்படை யான கருத்துக்கள், பாசிசத்தின் அரசியற் கருத்துக்களை விட அதிகம் நீடித்து நிலைக்கக் கூடியனவாகக் காணப்படலாம்[1].

அடிப்படைக் கருத்துக்கள்.

இத்தாலியில் அரசியல் முற்போக்குத் தன்மையை ஒழிப் பதற்குக் காரணமாயிருந்த ஆட்சிமுறை சம்பந்தமான புரட் சியைத் தொடர்ந்து, பொருளாதார முற்போக்குத் தன்மையை அழிப்பதற்குக் காரணமான தொரு சமூகப் புரட்சி எழுந்தது. அரசியல் முற்போக்குத் தன்மையானது அதன் உட்கிடை யில், அரசியற் சுதந்திரத்தைக் குறிக்கின்றது. ஆனால் பொருளாதார முற்போக்குத் தன்மையானது (கட்டுப்பாடற்ற தற்போக்குக் கொள்கை என இது சாதாரணமாகக் கூறப்படு கின்றது) பொருளாதாரச் சுதந்திரத்தைக் குறிக்கின்றது. இரண் டிற்குமிடையே எவ்வித வரலாறு சம்பந்தமான அல்லது கொள்கை சம்பந்தமான தொடர்பும் கிடையாது; ஏனெனில் அரசியற் சுதந்திரம், பொருளாதாரத் தாராண்மை பற்றிய சுதந்திரத்தின் மீது நியாயமான தடைகள் விதிப்பதை அனு மதிப்பது மாத்திரமன்றி பொதுவாக அத்தடைகளைப் பொறுத் ததாகவுமிருக்கின்றது. பெரிய பிரித்தானியாவைப் போன்ற ஒரு குடியாட்சி நாடு கட்டுப்பாடற்ற தற்போக்குக் கோட்பாட்டைக் கொள்கையளவில் மட்டுமன்றி, மிகப் பெரிதளவுக்குச் செயலள விலுங்கூட முன்னரே கைவிட்டிருக்கின்றது; ஆதலால், கட்டுப் பாடற்ற ஒரு முதலாளித்துவப் பொருளாதாரத்தை மறுதலிப் பதில் பாசிசம் அப்போது நிலவிய போக்குகளோடு ஒத்திருந் தது. எனினும் அது அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் தேசியப் பொருளாதாரமனைத்தையும் அமைக்க முனைகிறதில்லை. பொரு

[1] முசோலினி தொழிலாளர் ஆட்சிமுறைமைக் கொள்கையினருடன் சேர்ந்து அவர்களது கோட்பாடுகளைப் பாசிசத்துடன் இணைத்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாதார வாழ்க்கையின் சில துறைகளில் தனியார் தாராண்மையைப் பாசிசம் ஏற்றுக்கொள்கின்றது. ஆனால் மற்றத் துறைகளில் அது அரசாங்கக் கட்டுப்பாட்டையோ அரசாங்க முகாமையையோ கட்டாயப்படுத்துகின்றது. தொழிற்பட்டயம் (1927) "உற்பத்தியரங்கிலே தனியார் தாராண்மையானது மிகப் பயனுடைய கருவியாகவும் தேசிய நலன்களுடன் மிக அதிகமாக ஒத்தியங்கக் கூடியதாகவும் இருக்கின்றது" என்று குறிப்பிடுகின்றது. இருந்தாலும் "பொருளாதாரக் கருமங்களில் தனியார் முனைப்பு இல்லாமல் அல்லது போதாமல் இருக்கும்போது அல்லது நாட்டின் அரசியல் நலன்களை அக்கருமங்கள் உள்ளடக்கி இருக்கும்போது அரசாங்கத் தலையீடு அவசியமாகின்றது" என்றும் அப்பட்டயம் கூறுகின்றது. பின்னைய வாசகம், அரசாங்கத் தலையீட்டிற்கு மிகுந்த அளவில் வாய்ப்பளிக்கின்றது. இவ்வாறான தலையீடு, சமவுடைமைக் கோட்பாடாகுமென்று கொள்ளப்படவில்லையென்றால், அதற்குப் பெரிதும் அனுகூலமானதெனச் சாதிக்கக்கூடிய தொன்றுகவாவது இருக்கின்றது என்று சொல்லலாம். இவ்வாறுக நிதியகங்களும், வெளிநாட்டு வியாபாரமும் அரசாங்கத்தின் நேரடியான கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்படுகின்றன. மேலும் "தேசியப் பாதுகாப்புக்கு அவசியமான" தொழில்கள் யாவும், அரசாங்கம் பொறுப்பேற்றுச் செய்யும் தொழிலெல்லைக்குள் கொண்டுவரப்படுகின்றன; அத்தொழில்கள் சம்பந்தப்பட்ட கையிருப்புப் பொருள்கள் பெரும்பாலும் அரசாங்கத்தின் பொறுப்பில் விடப்பட்டிருக்கின்றன. பாசிசம் தனியார் தாராண்மைக் கொள்கையை ஏற்றுக்கொள்கின்ற வேளாண்மைத் தொழிலிலும், சிற்றளவுத் தொழிலிலும், உள்நாட்டு வியாபாரத்திலும் இரண்டு குறிப்பிடத்தக்க முற்கோள்கள் பயன்படுத்தப்படுகின்றன. முதலாவது, தொழிலை இயக்குதற்கு முதலாளிகள் பொறுப்பாளிகளாகவிருக்கின்றனர்; ஆனால் தொழிலாளி அம்முதலாளிகளுடன் உண்மையாகச் சேர்ந்து உழைக்கின்றவனுவான். இவ்வாறுக "உற்பத்திச் சத்திகளிடையே காணப்படும் இந்த ஒன்றுபட்ட இயக்கம், ஒருவர் மாட்டு மற்றவருக்குள்ள கடமைகளையும் உரிமைகளையும் ஏற்படுத்துகின்றது" என்பதாம். இரண்டாவது, உற்பத்தியைப் பெருக்குதற்காக ஏற்பட்டுள்ள தனியார் அமையம், "தேசிய நலனுக்குரிய தொரு கருவியாக" விருக்கின்றது என்பதாம். பொருளாதார வமைப்பின் ஒவ்வொரு பகுதியிலும் இந்த இரு முற்கோள்களைச் செயற்படுத்த ஒரு விரிவான சாதனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையேயுள்ள தொடர்புகளைத் தெளிவுபடுத்தி, ஒரு முகப்படுத்துவதன்பொருட்டு இத்தாலிய மக்கள் தொழிலடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையில் செயலாட்சிக் கழகங்களாகத் தங்களை அமைத்துள்ளனர். தேசிய நலன்கள் சம்பந்தப்பட்ட அளவில் உற்பத்தியின் தன்மையையும் அளவையும் ஒழுங்குபடுத்துவதன் பொருட்டு உற்பத்திச் சத்திகளெல்லாம் தொகுப்பகங்கள் என்று சொல்லப்படும் நிறுவகங்களில் ஒன்றுகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. செயலாட்சிக் கழகங்களும் தொகுப்பகங்களுமாகச் சேர்ந்து, அரசியற் பொருளாதாரத் துறைகளில் பாசிசத்தின் மிகக் குறிப்பிடத் தக்க பணியைக் குறிக்கின்ற தொகுதியரசுக்கான வேலைத் திட்டத்தை அமைத்தளிக்கின்றன.

செயலாட்சிக் கழகங்கள்.

பாசிசக் கட்சியினது பரந்த கருமங்கள் அரசியலரங்கில் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதைப் போன்று, இத்தாலியரின் பொருளாதார வாழ்க்கையை யொட்டிய தொழிலாளரது செயலாட்சிக் கழகம் பொருளாதார அரங்கில் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான திட்டத்தையுடையது. "சம அளவில் பாதுகாப்புப் பெறுகின்ற எல்லாச் சமுதாய வகுப்புக்களினது நலன்களையும் தொழிலாளரது செயலாட்சிக் கழகங்கள் ஒன்றுபடுத்துகின்ற" முறையில், அவை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முதலாளிகள், தொழிலாளிகள் ஆகியோரின் கூட்டு நலன்களை எவ்வாறு மேம்படச் செய்கின்றன என்பதை உத்தியோகபூர்வமான அறிக்கை விளக்குகின்றது. முதல், தொழில் ஆகியவை தொடர்பான நன்கமைக்கப்பட்ட சத்திகளிடையே தோன்றும் ஒரு போராட்டமாகிய தனியுரிமைக் கோட்பாடு என்னும் முறையால் இந்நோக்கம் கைகூடப் பெறுவதில்லை ; அல்லது பணித்துறைக்குழுவின் கட்டுப்பாட்டைத் திணிக்கிறதாகிய அரசுச் சமவுடைமைக் கோட்பாட்டு முறையால் இந்நோக்கம் கைகூடப்பெறுவதுமில்லை; ஆனால், ஒன்றித்த உடன்பாட்டால் செயலாற்றும் உற்பத்தியாளர்களின் தன்னுறுதிக் கோட்பாடாகிய தொகுதியரசு முறைமூலம் இந்நோக்கம் கைகூடப் பெறுகின்றது. வேறு விதமாகக் கூறுவோமானால், இத்தாலியத் தொழிலாளர் ஆட்சிமுறைக் கோட்பாட்டின் வெளிப்படையான நோக்கம், மாறுபட்ட நலன்களைப் பொருந்தச் செய்தலை அடிப்படையாகக் கொண்ட உழைப்பாளர், தொழிலாளர் ஆகியவர்களுடைய இணக்கமான கூட்டுறவால் அவர்களுக்கிடையிலுள்ள வகுப்புப் போராட்டத்தை நீக்குவதேயாகும். இந்தப் பொதுவான கருத்தின்படி, செயலாட்சிக் கழகங்கள் என்று சொல்லப்பட்ட தொழில் சம்பந்தமான ஐக்கியங்களில் எல்லா வகையான பொருளாதாரத் துறைகளும் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு 1926 ஆம் ஆண்டுச் சட்டமொன்று வழி செய்கின்றது. அடுத்தவாண்டிற் பிறப்பிக்கப்பட்டதொரு தொழிலாளர் பட்டயம், தொகுதியரசினுடைய போக்கை வரையறுத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளி, தொழிலாளி உறவுகளை இனிமேல் முறைப்படுத்து வனவான தத்துவங்களைத் தெளிவுபடக் கூறியது. ஒவ்வொரு தொழிலிலும் முதலாளிகளுக்கென ஒன்றும் தொழிலா ளர்களுக்கென ஒன்றுமாக இரண்டு செயலாட்சிக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; ஆனல் நுண்கலைத் தொழில் களிலும், கட்டுப்பாடற்ற வாழ்க்கைத் தொழில்களிலும் உழைப் பாளிகள், தொழிலாளிகள் என்பவர்களுக்கிடையே எவ்வித வேறுபாடும் காட்டப்படுவதில்லை. செயலாட்சிக் கழகங்களில் உறுப்புரிமை பெற வேண்டுமென்பது கட்டாய மல்ல; ஒரு குறிப்பிட்ட தொழிலில் இடம் பெறுதற்கு அவ்வாறு உறுப்பு ரிமை பெற்றிருக்க வேண்டுமென்றும் கட்டாயமில்லை. தொழிற் சங்கங்கள் தங்களின் உறுப்பினர்களுக்குப் பெற்றுக் கொடுக் கின்ற சாதகமான நிபந்தனைகள், உறுப்பினரல்லாதாருக்கும் பரவலாக வழங்கப்படுகின்றன; அதன் காரணமாக உறுப் பினரல்லாதோர் செயலாட்சிக் கழகங்களுக்கான கட்டணங் களைக் கொடுக்கும்படியாகக் கோரப்படுகின்றனர். ஒவ்வொரு தொழிலிலும் உழைப்பாளர்களுடைய அல்லது தொழிலாளர் களுடைய ஒரேயொரு செயலாட்சிக் கழகத்திற்கு மட்டும் உத்தி யோகபூர்வமான மதிப்பு அளிக்கப்படுகின்றது; மொத்தத் தொழி லாளர்களில் பத்திலொரு பகுதியினர் மட்டுமே அத்தொழிலில் ஈடுபட்டிருந்தாலுங்கூட அவ்வாறன மதிப்பளிக்கப்படுகிறது. "தொகுதியரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளாதார அமையங்களனைத்தும் பாசிசத்தின் எல்லைக்குள் நிலைத்திருக் கின்றன" என்ற முசோலினியின் கோட்பாட்டுக்கேற்றவாறு, அதிகாரம் பெற்றுள்ள செயலாட்சிக் கழகம் பாசிசக் கட்சியின் நேரடியான கட்டுப்பாட்டில் வைக்கப்படுகின்றது. செயலாட்சிக் கழகங்களின் முக்கிய அலுவல், அது மாநகரசபையையோ, மாநிலத்தையோ அல்லது நாடு முழுவதையுமோ சம்பந்தப்பட்ட தாயினும், கூட்டுப்பேரம் செய்தலாகும். முதலையும் தொழிலை யும் குறிக்கின்ற ஒவ்வொரு தொழிலிலுமுள்ள முதலாளிகள், தொழிலாளிகள் ஆகியோருக்குரிய இரு செயலாட்சிக்கழகங்க ளும், ஒரு கூட்டுத் தொழிலொப்பந்தத்தின் மூலம் தங்களுடைய மாறுபட்ட நலன்களைப் பேணுதற்கு வழி செய்திருக்கும்போது, அவ்விருசாராரையும்—அவர்கள் செயலாட்சிக் கழகங்களின் உறுப்பினர்களாயினும் அல்லராயினும்—இந்த ஒப்பந்தம் கட் டுப்படுத்துவதாகும். இந்தக் கூட்டொப்பந்தம், கூலிவிகிதங்கள், வேலை நேரங்கள், வாராந்த ஓய்வு நாள், சம்பளத்துடன் ஆண் டொன்றுக்கான விடுதலை, வேலைநீக்கம் காரணமான இழப்பீடு கள், ஒழுங்கு நடவடிக்கை விடயங்கள் ஆகியன போன்ற தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் சம்பந்தமான எல்லாவம்சங்கள் பற்றியும் தெளிவான விதிகளை விதிக்கின்றது.

தொகுதியரசு "நம் காலத்து மிகப்பெரிய சமூகப் பிரச்சினை தொகுதியரசு.
களைத் தீர்க்கு முகமாக, முசோலினியின் இத்தாலியால் வழங் கப்பட்ட அருங்கொடையாக விளங்குகின்றது. வகுப்புப் போராட் டத்தால் சிதைக்கப்பட்டு, பத்தொன்பதாம் நூற்றுண்டுக்குரிய தனியுரிமைக் கோட்பாட்டாலும் மாக்சின் கூட்டுடைமைக் கோட் பாட்டாலும் பிளவுபடுத்தப்பட்ட ஓர் உலகத்திற்கு, வகுப்புக்க ளுக்கிடையே ஒன்றுக்கொன்று மாறுபட்ட நலன்களினுல் ஏற்படும் பிணக்கை நீக்க இக்கால உலகினுல் முடியுமென்பதைத் தொகு தியரசு எடுத்துக் காண்பிக்கின்றது" என்று பாசிச எழுத்தாளர் கள் கருதுகின்றார்கள். "ஒரு வகுப்பை அகற்றுவதன் மூலம் அதிகாரத்தைப் பெறுதல்" என்று புரட்சிகரமாகப் பொருள் கொள்ளப்பட்ட வகுப்புப் போராட்டம் ஒன்று எற்ப டாது, சட்டப்படியான வழிவகைகள் வாயிலாக, செயலாட்சிக் கழகங்களின் அடிப்படையில், வகுப்புக்கள் இணைந்து கருமமாற் றுவதன் மூலம் தடுக்கப்பட்டிருக்கின்றது. உழைப்பாளி களுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே சச்சரவுகள் எழலாம்; ஆனுல், "பூரண சமத்துவம் என்ற கொள்கையடிப்படையில்" கலந்துபேசும் முறையால் அவைகள் தீர்த்துவைக்கப்படுகின்றன. எனினும் முதலாளிகள், தொழிலாளர்கள் ஆகியோருக்கிடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள வேற்றுமையையொட்டி உற்பத்தியாள ருக்குரிய செயலாட்சிக் கழகங்கள் தொகுக்கப்பட்டுள்ள முறை யானது, பொருளாதாரம் சம்பந்தமான வெவ்வேருன துறை களில் இரட்டைச் சங்கங்கள் ஏற்படுவதற்கு வழிசெய்கின்றது. முதலாளி, தொழிலாளி ஆகியோருக்குரிய தனிப்பட்டதும், பெரும்பாலும் வேறுபட்டதுமான நலன்களை எடுத்துக்கூறுகின்ற குழுக்களாகச் செயலாட்சிக் கழகங்கள் இருக்கின்றன; அவை இயைபுபடுத்தப்படுவதும் நன்கமைக்கப்படுவதும் அவசியமாகும். பாசிசத் தொடர்பான சமுதாய ஆட்சிக்கு உச்சநிலையாக அமைந்த புதிய பாலனத்துக்குரிய அமைப்புக்களால் இவ்விரு வேறுபட்ட நலன்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக 1934 இல் மற்றெரு முயற்சி செய்யப்பட்டது. இவ்வாறு ஒன்றுசேர்க் கும் தொடர்புகள் யாவையெனில், உழைப்பாளர்களையும், தொழி லாளர்களையும் அதே சங்கத்தில் சமத்துவநிலையில் ஒத்துழைப் பதற்கு ஒன்றுகச் சேர்கின்றவையாகிய தொகுப்பகங்களாகும்.

தொகுப்பகங்கள், அரசாங்கத்தின் அமையங்கள் என வரை தொகுப்பகங் யறுக்கப்படுகின்றன. அவற்றில் முதல், தொழில் என்பவை கள்.
சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள், சமமான எண்ணிக்கையில், பாசிசக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியின் பிரதிநிதிகளோடு ஒருங்கமர்ந்து, தனியார் தாராண்மை அச்சொந்தக்காரரின் தனிப்பட்ட நலனுக்காக மட்டுமன்றிப் பொது நலனுக்கும் உதவவேண்டு மென்பதை உறுதிப்படுத் தும் வகையில், உற்பத்தித் தொழில்களை நடத்துவதற்காகச் சேர்ந்து கருமமாற்றுகின்றார்கள். தொகுப்பகங்கள், இத்தாலி யின் தலையாய பொருளாதார அமையங்களாக இருக்கின்றன. ஒவ்வொரு தொகுப்பகத்திலும் ஒரு குறிப்பிட்ட உற்பத்தியில் ஈடுபட்டுள்ள எல்லாப் பகுதியினரும் சேர்ந்துள்ளனர். அதா வது மூலப்பொருள்களை உற்பத்திசெய்வோர், படிமுறையான தொழில்களிலீடுபட்டோர், உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வோர், தொழினுட்பம், அறிவியல் என்பவை சம்பந்தப்பட்ட திறமையாளர் ஆகியோர் அப்பகுதியினர் என்க.[1] ஒவ்வொரு தொகுப்பகத்திற்கும் அதற்குரிய சொந்தக் கழகம் உண்டு. இவ்வாறான கூட்டவைக் கழகங்கள் சேர்ந்த தொகுதி, உற்பத்தி யில் ஈடுபட்டுள்ள எல்லாத் துறையினரது நலன்களையும் பிரதி பலிக்கின்ற தொகுப்பகங்களை யொட்டிய தேசியக் கழகமாக அமைந்திருக்கின்றது.[2] தொகுப்பகங்களின் அலுவல்கள் முக்கிய மாக ஆலோசனை கூறுவதாகும்; "தேசியத் தேவைகளை அடை வதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள வழிகள் மூலம், நாட்டின முயற்சியை ஒருமுகப்படுத்தி வழிகாட்டிச் செல்லும்" ஒரு திட்ட மிடப்பட்ட பொருளாதாரத்தை அடைவதைத் தொகுப்பகங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன. "உற்பத்தியை ஒழுங்குபடுத்த வேண்டியது தொகுப்பகங்களின் கடமை; ஏனெனில் நாம் எதையும், எப்படியோ செய்து கொண்டிருக்கலாகாது; இது மடமையானது மட்டுமன்றி, அழிவுக்கு இட்டுச்செல்வதுமாகும்" என்று முசோலினி கூறினன். தொகுப்பகங்கள் மூலம், "அறி வுக்கொத்தபடி அமைக்கப்பெற்ற ஒரு முறைமையைப் பின் பற்றிக்" கடந்த காலத்திற்குரியதாயிருந்த கட்டுப்பாடற்ற தற் போக்குக் கொள்கைக்குரிய பொருளாதாரமொன்றை மாற் றியமைக்க இத்தாலி முயற்சிக்கின்றது. "அம்முறைமையால் கூட்டு நலன்களை முன்னிட்டுத் தனியார் தாராண்மை அதிக இலாபத்துடன் இயங்கக்கூடிய வழிவகைகள் காண்பிக்கப்படு கின்றன." உற்பத்தி, பங்கீடு, நாணயமாற்று ஆகிய துறைகள்

---

[1] 22 தொகுப்பகங்கள்— வேளாண்மைக்குரிய உற்பத்திப் பெருக்கங்களுக் காக எட்டும், தொழில், வணிகம் என்பவற்றுக்காக எட்டும், ஊதியத் தொழில் கள், போக்குவரத்துக்கள் போன்ற துறைகளுக்காக ஆறும்—எற்படுத்தப்பட்டுள் ளன.

[2] மத்திய தொகுப்பமைப்புக் குழுக்கள் மூலம் தொகுப்பகங்களின் பொது நிருவாகம் ஒருமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இக்குழுக்கள் நாட்டிலுள்ள உற் பத்தி சம்பந்தமான சத்திகளனைத்தையும் ஒருமுகப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும்பற்றிய பொருளாதாரச் சட்டவாக்கத்தில், தொகுப் பகங்கள் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதுடன், அவை விலைகளையும் கூலிகளையும் நிர்ணயிக்கின்றன ; மேலும் அவை புதிய தொழில்கள் தொடங்குவதற்கு அதிகாரமளிக்கின்றன அல்லது அவற்றைத் தடைசெய்கின்றன ; தொழில் கற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகளை அவை வரையறை செய்கின் றன ; தொழிலாளர் சச்சரவுகளில் தலையிடுகின்றன ; மற் றும் கருமங்களிலும் அவை நாட்டின் பொருளாதார வாழ்க்கை யைக் கட்டுப்படுத்துகின்றன. தொகுதியகங்கள் பொருளாதாரம் சம்பந்தமான கட்டுப்பாடற்ற தற்போக்குக் கொள்கையை அகற்றி விட்டு, அதனிடத்தைக் கைப்பற்றிக் கொண்டபோதிலும், பொரு ளாதாரத்தைப் பணிக்குழுவமைப்பு நிருவகித்தல் என்ற பொருள் படுவதாகிய அரசாங்கச் சமவுடைமையை, அத்தொகுப்பகங்கள் ஏற்படுத்துவனவல்ல என்று "தொகுதியமைப்புக்" கொள்கை யினர் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார்கள். தொகுப்பகங்கள் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட அதாவது கட்டுப்பாடு செய்யப்பட்ட பொரு ளாதாரத்தைக் கொண்டுள்ளன ; பொருளாதாரத் தொழிலெல் லையில் ஒழுங்கைப் புகுத்துகின்றன. ஆனால் அவைகள் பணிக்குழு வமைப்பின் உறுப்புக்களல்ல. இத்தாலியப் பொருளாதார வாழ்க்கையைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தும் கருமம், பொருளா தார நடவடிக்கை சம்பந்தமான ஒவ்வொரு கிளையினதும் பிரதி யாளர்கள் பங்கு பற்றுவதாகிய தொகுப்பகங்கள் வாயிலாக, உற்பத்தியாளர்களிடமே பெரும்பாலும் ஒப்படைக்கப்பட்டிருக் கின்றது. அரசாங்க நிறுவனங்கள் தன்னுரிமையுடையனவும் தன்னுட்சியுடையனவுமான தொகுப்பகங்களின் உருவில் அமைக் கப்பட்டிருக்கின்றனவே யன்றி, பணிக்குழுவமைப்பிலன்று ; அர சாங்க நிறுவனங்கள் பற்றிய இக்கருத்து, வேறெந்த நாட்டி லும் பொருளாதாரம் பற்றிய முழுத்துறையையும் தழுவிய தொன்றாய் இருக்கவில்லையாயினும், – பெரிய பிரித்தானியா வின் மாதிரி எடுத்துக் காட்டுவதுபோன்று—பாசிசத்திற்கு மட்டுமுரிய சிறப்புத் தன்மையன்று. இருந்தபோதிலும், பாசி சத் தொகுதியமைப்பரசில், தொகுப்பகங்கள் அனுபவிக்கும் தன்னுட்சியுரிமையின் அளவு, பின்வரும் காரணங்களால் பெரிதளவு பாதிக்கப்பட்டிருக்கின்றது : அத்தொகுப்பகங்களுக்கு அரசாங்க அமைச்சர் ஒருவர் தலைமை வகிக்கின்றார் ; அவற் றின் உறுப்பினர்களாகப் பாசிசக் கட்சியின் பிரதியாளர்களும் உள்ளனர். தொகுப்பகங்களின் தீர்மானங்கள் அரசாங்கத் தால் ஆதரிக்கப்பட்டனவாயிருத்தல் வேண்டும். இவைகளே அக்காரணங்களாம். சூழ்நிலைக்கேற்பக் கருமமாற்ற முடியாத பாராளுமன்றத்தை அக்கருமங்களிலிருந்து விடுவிக்கக்கூடியதாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும்படி ஒரு தேசியப் பொருளாதாரக் கழகத்தை ஏற்படுத்துதல் என்ற அடிப்படைக்கருத்து மற்றைய நாடுகள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்றெனினும் பாசிச அமைப்புக்கள் சுதந்திரமான குடியாட்சி நிறுவகங்களுடன் ஒத்துப்போகக் கூடியனவல்ல என்பது தெளிவு.

தொழின் முறைப் பிரதி நிதித்துவம்.

தொகுதியரசினுடைய பொருளாதார அமையம் தன்னளவி லேயே ஒரு சாதனமாகவிராது ஒரு குறிக்கோளை அடைவதற்கான ஒரு சாதனமாக விருப்பதாகக் கருதப்படுகின்றது. "பெரும்பான் மையோரது ஆட்சியினடிப்படையிலல்லாது தகுதி வாய்ந்தோரது ஆட்சியின் அடிப்படையில்" அமைவதான தற்காலக் குடியர சொன்றின் அரசியல் அமையத்தை அது முன்னறிகுறியாகக் காட்டுகின்றது. அவ்வாறான குடியாட்சி தனக்குரிய ஆலோசனை மன்றத்தில், "பிரதேச முறையான பிரதிநிதித்துவத்திற்குப் பதிலாகத் தொழின்முறையான பிரதிநிதித்துவத்தை வற்புறுத் துகின்றது". தொழின்முறையான பிரதிநிதித்துவம் என்றால், தொழிலுக்குத் தக்கவாறு தேரகம் அமைக்கப்பட்டிருக்கின்ற தென்றும், அவ்வித ஒரு நோக்கத்தையடைவதற்காகத் தொழி லாளர் செயலாட்சிக்கழகவமைப்பானது அவசியமான வழிவகை செய்கின்றதென்றும் பொருளாகும். தொழின்முறைப் பிரதி நிதித்துவ அடிப்படையிலமைந்த முதற் பேராளர் மன்றம் 1929 இல் தெரிவுசெய்யப்பட்டது. பத்தாண்டிற்குப் பின்னர் அதற்குப் பதிலாக பாசிசக் குழுக்களையும் தொகுப்பகங்களையும் கொண்ட ஒரு மன்றம் அமைக்கப்பட்டது. முசோலினி பாசிச இயக்கத்தின் ஆரம்ப நாட்களில், யாப்பமைப்புச் சார்ந்த தன் சீர்திருத்தத்தின் முன்றிட்டம் பற்றி எலவே கூறியிருந்தான்; அப்போது அவன் "இக்கால வாழ்க்கை, தவிர்க்க முடி யாத சிக்கல்களுடையது; நமது அரசியல் முறைமைக்குரிய அத்தியாவசிய நிறுவனங்கள் அத்தகைய வாழ்க்கைத் தேவை களுக்குப் போதுமானவையாகா. அரசியற் பிரதிநிதித்துவம் சம்பந்தமான இப்போதைய அமைப்புக்களால் எம்மை மன நிறைவுபடுத்த முடியாது; தனிநலன்கள் அனைத்துக்குமான நேர் பிரதிநிதித்துவம் எங்களுக்கு வேண்டும். வர்த்தகம், ஊதியத் தொழில், கலாசாரம் என்பவை சம்பந்தப்பட்ட அமை யங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசியத் தொழினுட்பக் கழகங் களை ஏற்படுத்தி அவற்றின்மூலம் அரசாங்கப் பாலனமுறையை மாற்றியமைக்க வேண்டும்" எனக் கூறினான். எவ்வாறெனி னும், "ஒரு தனி அரசியற் கட்சியை மாத்திரமே ஏற்றுக்கொள் கின்ற அனைத்தாண்மை நாடொன்றில், சேர்மானிய மக்கள் சபையைப் போன்று இத்தாலியப் பேராளர் மன்றம் இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய காரணமில்லாது போய், காலத்துக்கு ஒவ்வாததாகி விட்டது" என்று அவன் கூறியபோது, அவன் கொள்கை முரண் பாடில்லாதவனுகக் காணப்பட்டான். "பாசிசக் கொள்கையினர் என்ற முறையில் நமது மனப்போக்குக்கும், நமது கொள்கைக் கும் புறம்பான ஒரு நிறுவகம் இத்தாலியப் பேராளர் மன்ற மாகும்"; ஏனெனில் "நாம் தொலைத்துவிட்ட ஒருலகம் இன் னும் இருப்பதாக அது எண்ணுகின்றது" என்று அவன் கூறி னன். பல கட்சிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிறுவகம், "வரலாற்றின் கழிந்துபோன ஒரு பருவத்திற்கு உரியது" என்று பாசிசக் கொள்கையினர் கூறியதற்குத் தகுந்த காரணமிருந்ததா என்பதை வருங்காலத்திற்றுன். அறியமுடியும். எனினும், தொகுதியரசு தொடர்ந்து நிலைத்தால், தொழிலுக்குரிய கூட்ட கக் குழுக்களால் கட்டுப்பாடு செய்யப்பட்டு வழிகாட்டப்பட்ட ஒரு தேசியப் பொருளாதாரம் பற்றிய தொகுதியரசுக்குரிய அடிப் படைத் தத்துவமானது, குடியாட்சிச் சமுதாயங்களின் அரசியல், பொருளாதார மலர்ச்சியின்மீது அதிக செல்வாக்கைச் செலுத் தக்கூடும்.

குடியேற்றங் களைக் கொண்ட இத்தாலியப் பேரரசு.

வல்லாட்சிக்குரிய தனிச்சிறப்பான அம்சங்களாகிய அமைதி யற்ற மனநிலை, செயல்புரிவதற்கான பேராவல், ஒருவன் தனது ஆற்றலால் நிகழ்ச்சிகளை வழிப்படுத்தத் துடித்தல் ஆகியவை பாசிச வெளிநாட்டுக் கொள்கையின் சிறப்பு அம்சங் களாயிருக்கின்றன என்பதில் வியப்பில்லை. "செயலையே நான் எப்பொழுதும் விரும்புகிறேன்" என்று ஒருதரம் முசோலினி கூறினன்; அவனது பேரவாக்கள், சருவதேச உறவுகளை யொட்டிய துறையில் தொல்லையொன்றை விளக்குங் காரணியாக இருக்கப் போவதை எண்பித்தன. இத்தாலி தேசம் அபிசீ னியாமீது படையெடுத்தது பற்றியும், ஐரோப்பிய நிலைமையில் அதனல் ஏற்பட்ட எதிர் விளைவுகள் பற்றியதுமான வரலாற்றை நாம் எலவே கூறியுள்ளோம்; அந்நிகழ்ச்சிக்கு முதன்மையான காரணம் அரசியல் நோக்கமாகும்; அதாவது இத்தாலியின் தன்மதிப்பை உயர்த்தும் ஆசையே அஃதென்க. "இறுதியாக இத்தாலி அதன் பேரரசைப் பெற்றிருக்கின்றது" என்று முசோ லினி பெருமையாகப் பேசினன்—ஆனல் "இத்தாலிய நாட்டின் 430 இலட்சம் மக்கள் அதன் குறுகிய எல்லைகளுக்குள் திக்குமுக்காடினர்" என்ற ஒரு பொருளாதாரச் சாக்குப் போக் கைக் கூறி, அவன் தன் பேராசையை மறைக்க முயன்றன். "அயல்நாடுகளில் அகக்குடியேறுநர் சம்பந்தமாக விதிக்கப் பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக இத்தாலியர் வெளிநாடு களுக்குக் குடிபோக இனிமேலும் முடியாதிருந்தமையாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறுயிரக்கணக்கான இத்தாலிய மக்கள் தம் தாய் நாட்டில் வேலையின்றித் தவித்தமையாலும் அவர்களுக்கு " ஒரு போக்கிடத்துக்கு வழிசெய்ய இத்தாலிக்குக் குடியேற்றங்கள் தேவையாக இருந்தனவென்று சொல்லப்பட்டது. பழைய உலகத்தில் மிகுதியாகவிருந்த மக்களுக்குப் புதிய உலகம் வழிதிறந்து கொடுக்க முடியாதுபோய் விட்டதென்பது உண்மை ; ஆதலின் இச்சூழ்நிலை இக்கால ஐரோப்பாவின் பொருளாதார இக்கட்டுக்களை அதிகப்படுத்துவதாயிற்று. எனினும் இத்தாலிய அரசாங்கம் மிகையூதியங்கள் கொடுப்பதன்மூலம் குடும்பங்களைப் பெருப்பிப்பதற்கு மிகுந்த உற்சாகத்துடன் ஊக்கமளித்ததனாலும், வெளிநாடுகளிலிருந்த இத்தாலியர்களைத் தாய்நாட்டுக்குத் திரும்புமாறு செய்ய நடவடிக்கை எடுத்ததனாலும், இத்தாலி தேசம் மக்கட்டொகை மிகுதியால் இன்னலடைந்து கொண்டிருந்ததென்ற வாதம் பொய்யாயிற்று. இத்தாலியில் மிகுதியாகவிருந்த மக்களுக்குத் தேவையான காணி அந்நாட்டிலேயே இருந்தது என்பது " வரவிருக்கும் நூறுயிரக் கணக்கான இத்தாலியர்களுக்குக் காணியும் உணவும் கொடுக்கலாம் " என்ற உண்மையை வெளிப்படுத்திய அரசாங்கத்தினது காணிகள் சீர்படுத்தும் திட்டங்களிலிருந்து (1925 இல் முசோலினியால் இவை வகுக்கப்பட்டன) வெளியாயிற்று. சதுப்புநிலங்கள் சீராக்கப்பட்டன ; கடலோரப் பரப்புக்கள் சீர்திருத்தப்பட்டன ; காடுகளை மீண்டும் வளர்ப்பதன் மூலம் மலைப்பகுதிகள் நில அரிப்பினின்றும் பாதுகாக்கப்பட்டன. இவ்வாறுக, அமெரிக்காவில் பெரிய அளவிலான புறக்குடியேற்றம் தடைசெய்யப்பட்டமையால், இத்தாலியில் உள்நாடு சம்பந்தப்பட்ட அகக் குடியேற்றம் நடைபெற்றது. எவ்வாறெனில், இத்தாலியக் குடும்பங்கள் மக்கள் நெருக்கமுடைய மாவட்டங்களிலிருந்து இத்தாலியின் மற்றப்பகுதிகளுக்கு அல்லது வட ஆபிரிக்காவிலுள்ள இத்தாலியக் குடியேற்றங்களுக்கு மாற்றப்பட்டன. இவ்வாறேற்பட்ட அகக் குடியேற்றங்கள், இத்தாலியில் அதிகரிக்கின்ற மக்கட்டொகைக்கு ஒரு போக்கிடம் வேண்டும், அந்நாட்டிற்கு அதிகமான குடியேற்றநாடுகள் தேவைப்படுகின்றன என்பதான வாதத்தின் வலிமையைக் குறைத்தன. எனினும் சருவதேச வணிகம் குறைந்தமையும், இத்தாலி பொருளாதாரத் தன்னிறைவைப் பெறவேண்டுமென்ற கருத்தும் இத்தாலியர் தம் நாட்டின் தொழில்களுக்கான மூலப்பொருள்களை நிச்சயமாகப் பெறவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தின. இந்த வாதம் முந்திய வாதத்திற்கு அனுசரணையாயிருந்தது. தொழில்களுக்கான மூலப் பொருள்களைப் பெறுவதென்பது " ஒரு நாட்டின் வாழ்வுக்கோ தாழ்வுக்கோ முக்கியமான பிரச்சினை "யாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முறைப்படி, இத்தாலிக்குப் போதிய குடியேற்றங்கள் இருக்கவில்லை என்று கருதப்பட்டது. குடியேற்றங்களை அமைக்கும் அரங்கில் இத்தாலி பின்னரே நுழைந்தது. ஏனெனில் பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் ஒரு தேசிய அரசை உருவாக்கும் கருமத்தில் அது தன் முழுக் கவனத்தையும் செலுத்தியிருந்தது. என்ரூலும் செங்கடலில் எரீற்றியாவையும், இந்துமகாசமுத்திரத்தில் சோமாலியாவையும் அது பெற்றது. 1911 இல் துருக்கியுடன் செய்த போரின் விளைவாய் வட ஆபிரிக்காவில் அது இலிபியாவைப் பெற்றது. ஆபிரிக்காவில் சேர்மனிக்கு முன்னிலையிலிருந்த ஆள்புலங்களை வெற்றியடைந்த வல்லரசுகள் தங்களிடையே பகிர்ந்து கொண்டபின், 1919 இல் ஆபிரிக்காவில் இத்தாலிக்குக் கிடைத்த குடியேற்றங்கள் சிறியனவாயிருந்தன; இத்தாலியில் ஒருசாரார்,—எத்திரியாற்றிக்கில் இத்தாலிக்குக் கிடைத்த மிகுதியான இலாபங்களை மனத்திற் கொள்ளாது—வெற்றியின் நற்பேறுகளால் தம்நாடு பயன்பெறவில்லையென்று கருதினர். அதன் விளைவாக இத்தாலி தன்னை எந்த அமைதி ஏற்பாட்டாலும், "மனநிறைவு கொள்ளாத" நாடுகளிலொன்றாகக் கருதியது. உறுதியாக முன்னறிந்து தெரிவித்த பிரகாரம் இத்தாலி அபிசீனியாவை வெற்றிகொண்டமையால், ஏற்பட்டுள்ள விளைவு "இத்தாலியின் விரைவாக வளர்ந்து கொண்டிருந்த மக்கட்டொகையின் எல்லையற்ற ஆற்றல்களுக்கு ஒரு நம்பிக்கையூட்டும் போக்கிடத்தைக் கொடுக்குமா என்பதையும், "தங்கள் இரத்தம் சிந்தப்பட்டுள்ள" நாட்டை "தங்களுடைய உழைப்பால் செழுமைப் படுத்துவதில்" இத்தாலியர் மகிழ்ச்சியார்வம் காட்டுவார்களா என்பதையும் இனித் தான் காணவேண்டும்.

கூட்டவையுடன் இத்தாலி முரண்படல்.

இத்தாலிக்கும் அபிசீனியாவுக்குமிடையே ஏற்பட்ட போரின் விளைவு ஒரு பண்டைக்கால ஆபிரிக்கப் பேரரசின் அழிவுமட்டுமேயாயின், குடியேற்றநாடுகளை விரிவுபடுத்தல், கொள்ளையிடல் ஆகியவைபற்றிய வரலாறு மேலும் சிறிது நீண்டிருக்கும். ஆனால் அவ்விளைவு ஐரோப்பாவில் அரசியற் சத்திகளின் சமநிலையை முக்கியமாகப் பாதித்திருக்காது. ஆபிரிக்காவுக்கு மிக அப்பாலும் இந்தச் சச்சரவின் எதிர்விளைவுகள் காணப்பட்டன; ஏனெனில் இச்சச்சரவு நாட்டுக்கூட்டவையின் அதிகாரத்தையும் தன்மதிப்பையும் பாதிக்கும் விளைவுகளை ஏற்படுத்துவதாயிருந்ததென்க. செனீவாவில் கூடியிருந்த நாடுகள் ஒருமனமாக இத்தாலியே தாக்கும் நாடென அறிவித்ததுடன், "ஐம்பத்திரண்டு நாடுகளால் இத்தாலிக்கு எதிராகத் தீர்மானிக்கப்பட்ட பொருளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார முற்றுகைக்கு அந்நாடு ஆட்படவேண்டுமெனவும் முடிவு செய்தன. ஒரேயொரு அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டு, இம் முற்றுகை தன்மீது சுமத்தப்பட்டதாக இத்தாலி கருதியது[1]. இம் "முற்றுகை", இத்தாலி வேண்டுமென்றே தாக்குதல் செய்ததை யெதிர்க்குமுகமாகச் செய்யப்படவில்லை யென்றும், இத்தாலியருக்கிருந்த குடியேற்றம் சம்பந்தமான நியாயமான பேரவாக்களை அடக்குவதற்காகவே செய்யப்பட்டதென்றும் கருது மாறு இத்தாலிய மக்கள் அறிவுறுத்தப்பட்டனர். "பழமையான வையும் மனநிறைவு பெற்றவையுமான குடியேற்ற வல்லரசு களின்" கீழ்த்தர ஆவல் அல்லது பாசிசப் புரட்சிக்கு அஞ்சிய முதலாளித்துவ நாடுகளின் பகைமையுணர்ச்சி அம்முற்றுகைக் குக் காரணமாகும் என்றும் பலவாறு கருதப்பட்டது; ஏனெனில் பாசிசப் புரட்சியால் ஏற்பட்ட புதிய சமுதாய அமைப்பு, "மேலான சமுதாய நீதி" உண்டாவதற்கான ஆவலைக் குறிப்பதா யிருந்தது. எவ்வாறுயினும் நாம் ஏலவே கூறியதுபோன்று, கூட்டவையாற் செய்யப்பட்ட அரைகுறையான ஏற்பாடுகள், வலுக் கட்டாயம் செய்வதான அடையாளத்தைவிட ஒருவித எதிர்ப்பைக் காட்டுவனவாக அமைந்தன; அவ்வேற்பாடுகளின் ஒரே விளைவு, கூட்டு நடவடிக்கையின் பயனற்ற தன்மையை வெளிப் படுத்துவதாயும், "உரோம்–பேளின் அச்சு" நாடுகளிடையே உடன்பாட்டை உருவாக்குவதாயுமிருந்தது. தனக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட "நடவடிக்கைகளால்" பகைமைகொண்ட பாசிச அரசாங்கம், சேர்மனியும் யப்பானும் செய்துகொண்ட கொமிந்தனுக்கு எதிரான ஒப்பந்தத்திற்குத் தான் சார்பாக இருப்பதாக 1937 இல் அறிவித்ததுடன், கூட்டவையினின்று வில கியும் கொண்டது. இவ்வாறுக இத்தாலி எச்சரிக்கைகளைச் செய் திருந்தும், அபிசீனியாவை அது இணைத்துக்கொண்ட பின்னர், இனிமேல் உலகில் அமைதியையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத் தும் ஒரு காரணியாகத் தானிருக்க ஆவலுற்றிருப்பதாக அது காட் டிக்கொண்டது. மூன்றுண்டுகள் முடியுமுன்னரே, தனக்கண் மையிலிருந்த பிரான்சு நாட்டுக்குரிய பிரதேசங்களின்மீது இத் தாலி தனது பேராசைக் கண்களைச் செலுத்தத் தொடங்கிற்று. மேலும் இத்தாலியப் பேராளர் மன்றத்திலும், அச்சுலகிலும் பாசிச அரசாங்கம் கடுமையான கோரிக்கைகளைச் செய்தது. தனது பேரவாக்களை நிறைவேற்றுவதற்கு முதற்படியாக, இத்தாலி 1935 இல் பிரான்சுடன் செய்திருந்த பொருத்தனையை 1938 இல் மறு

---

[1] 1938 இல் ஏற்பட்ட ஆங்கிலேய–இத்தாலிய உடன்பாடொன்றினால் அவ்விரு நாடுகளிடையே உறவுகள் வளர்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலித்தது[1]. பிரான்சிய அரசாங்கத்தின் உறுதிவாய்ந்த நிலை யால் பின்வாங்கியிருந்த இத்தாலி சிறிதுகாலத்திற்குனே (1939) அல்பேனியாவைத் தாக்கி, அதனை இணைத்துக்கொண்டது. இத் தாலி இவ்வாறு செய்ததற்கு மத்திய ஐரோப்பாவில் சேர்மனி பெற்ற இலாபங்களுக்குக் கைம்மாறுகத் தான் ஈடுசெய்து கொள் ளும் நோக்கத்துடனிருந்தது ஓரளவிலும், ஐரோப்பியப் போரொ ன்று நிகழுமாயின் அப்போது எத்திரியாற்றிக்கில் தனது நிலை மையைப் பாதுகாக்கும் நோக்கத்துடனிருந்தது ஓரளவிலும் காரணமாயிருந்திருக்கலாம்.

வத்திக்கன் பொருத்தனை.

பாசிச ஆட்சி சாதித்த சாதனைகளுக்கு எவ்வாருன கதி ஏற் பட்ட போதிலும், அவற்றுள் ஒன்று மட்டும் நீடித்த பயன் தருவதாகும்; இத்தாலிய அரசுக்கும் போப்பாண்டவருக்குமி டையே ஏற்பட்ட பொருத்தனையே அதுவாகும். வரலாற்றுப் புகழ் பெற்ற இப்பொருத்தனையால் "வத்திக்கன் நகரம் தனிச் சிறப்பான ஒழுங்கு விதிகளுக்கமைய, போப்பாண்டவர் ஆட்சிக் குட்பட்டதாயும், அவருக்கு முழுச் சொந்தமான உடைமை யாயும், முற்றுக அவரது தன்னியல்பான அதிகாரத்திற்கும் இறைமை பற்றிய ஆட்சி எல்லைக்கும் உட்பட்டதாயும்" விளங்கு வதாயிற்று. இத்தாலிய அரசாங்கத்தால் போப்பாண்டவருக் குரிய உரோம அரசு இணைக்கப்பட்டதிலை 1870 இல் எழுந்த உரோமப் பிரச்சினை, இப்பொருத்தனைமூலம் "முடிவாகவும் மாற்றியமைக்க முடியாதபடியும்" தீர்த்துவைக்கப்பட்டது.

---

[1] இப்பொருத்தனையின்படி பிரான்சு தேசம் ஆபிரிக்காவில் தனக்கிருந்த ஆள்புலத்தையும், திபூற்றியிலிருந்து அதிசு அபாபா வரையிலுள்ள இருப்புப் பாதையில் ஒரு பகுதியையும் இத்தாலிக்கு விட்டுக்கொடுத்தது; துனிசியாவி லிருந்த இத்தாலியர் இத்தாலிய நாட்டின் உரிமையையும், இத்தாலியப் பாடசாலைகளையும் பிறவற்றையும் தமக்குரியனவாக்கிக் கொள்ள அனுமதிக்கப் பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(VII)

ஏனைய ஐரோப்பிய அரசுகள்

சோவியத்து இரசியாவையும், தேசியச் சமவுடைமைக் கொள்கைச் சேர்மனியையும், பாசிச இத்தாலியையும் நடுங் கச்செய்த அரசியல் சம்பந்தமான எழுச்சிகளைப் பற்றி முன்னர் கூறியுள்ளோம். ஏனைய ஐரோப்பிய அரசுகளில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்ச்சிகளை இங்கே ஆராய்வோம்.

பிரான்சு.

1918 இல் சேர்மனி வீழ்ச்சியடைந்த பின்னர், பிரான்சே ஐரோப்பாக் கண்டத்திலுள்ள மாபெரும் வல்லரசெனத் திகழ லாயிற்று. ஐரோப்பாவிற் புது நாடுகள் திடீர் வளர்ச்சி பெற்றமை, கட்மசு என்பான் வேதாளத்தின் பற்களை விதைத்த நிலத்திலிருந்து படைக்கலமணிந்த வீரர்களைக் கொண்ட படை யொன்றை முளைத்தெழச் செய்த தன்மையை நினைவூட்டியது ; இயற்கையாகவே, இந்நாடுகள் பிரான்சே தம்மைக் காக்கும் நாடெனக் கொண்டன; மேலும் பிரான்சும் அரசியல், நிதி சம்பந்த மான துறைகளில் இந்நாடுகளுக்கு உதவியளிப்பதன்மூலம் அவற் றைப் பிணைத்து, அவைகளைத் தன்னோடு நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்தது. மத்திய ஐரோப்பாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலுமுள்ள சிறிய வல்லரசுகளுடன் பிரான்சு தேசம் தொடர்பான நேச உடன்படிக்கைகள் ஏற்படுத்தியமை, சேர் மனியை மீண்டும் கூட்டுத்தலைமை வகிக்க விடாவண்ணம், அத்தேசம் தடை செய்வதற்கென எழுப்பிய மூன்று பாதுகாப்பரண்களில் முதலாவதாகும். பிரான்சின் இரண் டாவது பாதுகாப்பரண் நாட்டுக்கூட்டவையாகும். தீர்க்கதரிசன முடைய பிரான்சிய அரசறிஞர்கள், கூட்டுநடவடிக்கையின் மூலம் நாட்டேமத்தைத் தேடுதற்கு இது ஒரு சத்தி வாய்ந்த சாதனமென ஒப்புக்கொண்டனர். இரண்டு மேற்கத்திய குடியாட்சி நாடுகளாகிய பிரான்சும் பெரிய பிரித்தானியாவும் போர்வெறிகொண்ட சேர்மனிக்கெதிராகத் தங்களை இணைப்ப தாகக் கருதிய பொதுநலவொருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட உணர்ச்சியே பிரான்சின் மூன்றுவது பாதுகாப்பரண் கும். பிரான்சின் வெளிநாட்டுப் பூட்கையினது இம்முக்கியத்துவ மான நோக்கங்களிற் பொருத்தமின்மை எதுவேனும் ஏற்பட வில்லை ; அதற்குமாறாய் அந்நோக்கங்கள் ஒன்றையொன்று தழு வியிருந்தன. சிறிய நாடுகள் கூட்டவையைத் தங்களது தனி யாட்சி யுரிமைக்கும், பாதுகாப்பிற்கும் ஏற்பட்டுள்ளதோர் அரண் கக் கருதின ; அது போன்று பெரிய பிரித்தானியாவும், போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மையுடன் ஏற்படுத்தப்படுகின்ற போர்ப்படை பற்றிய நேச உடன்படிக்கைகளை விடக் கூட்டவையே நிலைத்த அமைதியை நிலவச் செய்யக்கூடியதொரு கருவியெனக் கருதியது. பிரான்சிய மக்கள் இக்கட்டானதோர் அமயத்தில் கூட்டவைக்குத் தமது மனப்பூர்வமான உதவியை அளிக்கத் தவறினமையும், அபிசீனியா தாக்கப்பட்டமைபற்றி யெழுந்த அதிமுக்கியமானதொரு பிரச்சினையின்போது, "அவர்கள் கருத்து வேற்றுமை கொண்டு செயலாற்றத் தவறினமையும்" அவர்களிழைத்த மாபெருந் தவறுகளாகும். அக்காலத்திய பிரான்சிய அமைச்சானது வரம்பில் ஒரு காலும், வயலில் ஒரு காலும் வைத்திருந்தமையினால், கூட்டவை இத்தாலியத் தாக்குதலுக்கெதிராக எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போயின. அதன் விளைவாக, சேர்மானியத் தாக்குதலுக்கெதிராக உலகநாடுகளின் பலத்தை ஒன்றுகத் திரட்டக்கூடிய நிலையிலிருந்த ஒரே நிறுவகமாகிய கூட்டவைகூட வலுவிழந்த நிலையிலிருந்தது; சிறியநாடுகள் அரசியல் உண்மைகளின் விளக்கத்தினால் மயக்கந் தெளிந்து, நடுநிலைமைப் பூட்கையொன்றைக் கைக்கொள்வதன் மூலம் தங்கள் ஏமத்தைப் பெறும் நம்பிக்கையுடனிருந்தன; பிரான்சும் தான் 1914–18 ஆம் ஆண்டுப் போருக்குப் பின்னர் பத்தாண்டுகள் வரை அனுபவித்து வந்திருந்த அடக்கியாளும் உரிமை நிலையை இழந்திருந்தது.

உண்ணாட்டுப் பிரச்சினைகள்.

எனினும், இந்நிகழ்ச்சிகளெல்லாம் காலத்தின் கருப்பத்தில் மறைந்து கிடந்தன. அழிவடைந்திருந்த தங்களது பிரதேசங்களை அவற்றின் பழைய நிலைக்குக் கொண்டுவருவதே பிரான்சிய மக்களின் உடனடியான பிரச்சினையாக விருந்தது. நாட்டின் வடபகுதியிலும், வட கிழக்குப் பகுதியிலும் எதிரிகள் நாட்டைக் கைப்பற்றியமை (1914–18) காரணமாகப் பாழ்பட்டிருந்த பகுதிகளில் வாழ்ந்த மக்கள் ஆழ்ந்த துயரங்களுக்காளாயிருந்தனர்; இத் துயரங்களில் ஒருசில அப்பகுதிகள் போர்க்களங்களாக்கப் பட்டிருந்தமையினால் தவிர்க்கப்பட முடியாதனவாயிருந்திருப்பினும், அவை பிரான்சு நாட்டின் கைத்தொழில் வளங்களை அழித்துவிட வேண்டுமென்ற நோக்குடன் வேண்டுமென்றே இழைக்கப்பெற்றவையாகக் காணப்பட்டன. கைப்பற்றப்பட்ட விடங்களில் வாழ்ந்த குடித்தொகை $47\frac{1}{2}$ இலட்சத்திலிருந்து 20 இலட்சத்திற்குக் குறைந்தது; மேலும் வீடுகள், பொதுக் கட்டடங்கள், கைத்தொழிற்சாலைகள், பண்ணைக் கட்டடங்கள் ஆகியனவற்றின் மூன்றிலொரு பாகம் அழிக்கப்பட்டது; நிலக்கரிச் சுரங்கங்கள், இரும்புச் சுரங்கங்கள் ஆகியவாவும் நாசமாக்கப்பட்டன; பயிர் செய்யப்பட்டிருந்த நிலத்திற் பெரும்பாகம் பாழ்படுத்தப்பட்டது; மேய்ச்சல் நிலங்கள் கால்நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின்றி முற்றிலும் வெற்றியிருந்தன. முன்பு வளமுற்றி ருந்த பிரான்சியப் பகுதிகளில் இப்போதுண்டான அழிவு நிலை யைக் கண்ணுற்றோர், வெற்றிபெற்ற நாடுகள் தாங்கள் அடைந்த நட்டங்களுக்குத் தக்க இழப்பீடுகளைப் பெறுவதற்கும், மீண்டும் அத்தகைய பேரிடர் ஏற்படாதவாறு தீவிர நடவடிக்கை கள் எடுப்பதற்கும் உறுதியுடனிருந்தமைக்குக் காரணமென்ன வென்று கண்டுகொள்வர். போரில் முறியடிக்கப்பட்ட நாடுகள் கடுமையான நிபந்தனைகளுக்குட்படுத்தப்பட்டன வென்பதை மாத்திரம் நினைவிற் கொள்வோர், இந்நிலையைப்பற்றி மறந்து விடுவது இயல்பே. இது ஒரு புறமிருக்க, பிரான்சில் அரசாங்கங் களின் நிலையற்ற தன்மையினாலேற்பட்ட யாப்பு சம்பந்தமான பிரச்சினையாலும் அந்நாடு தொந்தரவுக்குட்பட்டது. 1920—30 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பத்தாண்டுகளில் எறத்தாழ இருபது அமைச்சுக்கள் அங்கு தோன்றி அழிந்தன. தனியாதிக் கம் எனும் கேட்டுக்குப் பதிலாக, ஓர் குடியாட்சி நாடு என்கிற முறையில் பிரான்சில் ஏற்பட்ட குறைபாடு, அதாவது எண்ணி றந்த கட்சிகள் உண்டாகிப் பிரான்சுப் பாராளுமன்றத்தைச் சீர் குலைத்தமையே இந்நிலைக்குக் காரணமெனலாம். உண்மை யாகவே ஐரோப்பிய நாடுகளில் அநேகம், அரசியற் கட்சிகள் மிக அதிகமாகவோ, மிகக் குறைவாகவோ பெற்றிருப்பதாலுண் டாகும் தீங்குகளுக் குட்பட்டிருந்தன. பல அரசியற் கட்சிகள் இருந்தமை, அரசாங்கத்தை நிலையின்மைக் குட்படுத்திப் பாரா ளுமன்ற ஆட்சிமுறைக்கே இகழ்ச்சியை உண்டாக்கியது; மிகச் சில அரசியற் கட்சிகள் இருந்தமை ஆட்சியிலிருக்கும் அரசாங்கத் திற்குத் தடையுண்டாக்கவோ, அரசாங்கத்திற்குப் பதிலாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கவோ எதிர்க்கட்சி யொன்றில்லாமற் செய்தது. பிரான்சில் அமைச்சரவை அமைவது, அரசாங்கத் திற்கு ஆதரவளிக்கும் பல்வேறு கட்சியினரது கொள்கைப் பேதங்களுக்கிடையே இணக்கம் ஏற்படுவதைப் பொறுத்திருந் தது; இதன் விளைவாக அரசாங்கம் பொதுவாக வலுவற்றி ருந்ததுமல்லாமல், நெருக்கடியான காலந் தவிர மற்றக் காலங்களில் உறுதியானதும், நிலையானதுமான ஒரு போட் கையை உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ கையாள முடியா மலுமிருந்தது. பிரான்சில் வேகமாக மாறிக்கொண்டிருந்த அமைச்சுக்களால் பொதுமக்களது வெறுப்பு அதிகரித்தது; பாசிசக் கட்சியினருக்கும் அரச கட்சியை ஆதரிப்பவருக்கும் தத்தம் கொள்கைகளைப் பிரசாரஞ் செய்தற்கு வேண்டிய போலிப்பகட்டான சாதனங்களுங் கிடைத்தன. 1914–18 ஆம் ஆண் டுப் போரின் இறுதிக் கட்டத்தில் பிரான்சிய அரசாங்கம் மிகத் திறமையுள்ள ஒருவனின் தலைமையிலிருந்தது. போரை வெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிகரமான முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்னும் திடசித்தங் கொண்ட திரு. கிளமென்சு என்பவன் முதலமைச்சராயிருந்தான். அவனே பாரிசு அமைதி மாநாட்டுக்குத் (1919) தலைமை தாங்கினன். அங்கு அவன், தனது நாடு தாக்கப்படின் சிறிதும் தாக்குதலுக்கு அசையாதிருக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் செயலாற்ற முனைந்தான். எனினும் அவன், வீழ்ச்சியுற்ற எதிரியைப் பெருந்தன்மையாக நடத்துவதால் இரு அண்டைநாடுகளுக்கிடையிலுமுள்ள பிளவு நீங்குமென்பதையும், அதனால் பிரான்சினது எதிர்கால ஏமத்தை அது வலியுறச் செய்யுமே தவிரப் பாதிக்காதென்பதையும் உணரத் தவறிவிட்டான். திரு. கிளமென்சு பிரான்சை ஊக்கத்துடன் ஆண்டு வந்தான். எனினும் அவனின் ஆட்சிக்கு எதிர்ப்பிருந்ததென்பது, 1920 ஆம் ஆண்டில் திரு. பொயின்கேயருக்குப் பின் அவன் குடிப்பதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் அடைந்த தோல்வியால் நன்கு தெளிவாயிற்று. அவனுக்குப் பதிலாக திரு. மில்லெரந்து தெரிவுசெய்யப் பெற்றான்; இவன் தனது பதவிக்குரிய அதிகாரங்களை விரிவாக்குவதும் படுமோசமான நிலைக்குட்பட்டிருந்த வெளிநாட்டுப் பிரச்சினைகளைத் தானே நேரில் கவனிப்பதுமான தனது விருப்பத்தை வெளியிட்டான்.

வெளிநாட்டுப் பூட்கை.

சேர்மனியை எவ்வாறு நடத்தவேண்டுமென்ற பிரச்சினையின் காரணமாகக் கருத்து வேறுபாடு வளர்ந்தமை, பிரான்சுக்கும் பெரிய பிரித்தானியாவுக்குமிடையில் நிலவியிருந்த நட்புறவில் பெரும் பிளவை யுண்டாக்கியது. பிரித்தானியா மத்திய வல்லரசுகளுடன் இணக்கமானதொரு போக்கைக் கையாண்டது. பகைமை ஏற்படுவதற்குமுன், சேர்மனி தனக்கு முக்கியமான எதிரியாயிருந்தபொழுதிலும், அதேசமயத்தில் அதுவே தனது முக்கியமான வாடிக்கைக்கார நாடாகவுமிருந்தமையால், 1914–18 ஆம் ஆண்டுப்போரை விரைவில் முடித்துவிட்டு மீண்டும் சேர்மானிய மக்கள் தங்களது முன்னைய பொருளாதார பலத்தைப் பெற வேண்டுமென்று பெரிய பிரித்தானியா விரும்பியது. எனினும், சேர்மனியினது பொருளாதார வீழ்ச்சி பிரான்சை எவ்விதத்திலும் பாதிக்காதென்பதால், அந்நாடு இந்நிலையை அரசியற் கண்கொண்டு நோக்கியது; பிரான்சின் கவனமெல்லாம் தன் ஏமம்பற்றியதாகும்; எனவே அது தனது வல்லமை வாய்ந்த அண்டைநாடு மீண்டும் முன்னேறுவதைக் கண்டு பீதியுற்றது. பிரான்சில் நிலவியிருந்த கருத்து, வலுவந்தமான பூட்கையொன்றை அது பின்பற்றவேண்டு மென்பதை ஆதரித்தது. திரு. பிறியண்டு அக்கருத்தை வெளிப்படையாக நிராகரித்தான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அவன், சேர்மனி மீண்டும் ஐரோப்பிய அரசமைப்புக் குட் சேர்க்கப்படுவதற்கான முயற்சியில் பெரிய பிரித்தானியா வோடு ஒத்துழைத்தான். பிரித்தானியருடைய கருத்திற்கு அவ னளித்த ஆதரவு பிரான்சிய அரசமன்றத்தில் எதிர்க்கப் படவே, அவனும் தனது தலைமையமைச்சுப் பதவியை 1922 இலே துறந்தான். அவனுக்குப் பின் திரு. பொயின்கேயர் தலைமை அமைச்சனானன்; இவன் முன்னர் குடிப்பதியாகக் கடமையாற்றியவன். வலோற்காரத்தையும் "பழைய சூழியல் முறைமை"யையும் ஆதரிப்பவனையும், இணக்க முறையையும் அரசறிஞர்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்வதும், மாநாடு கூடுவதுமான "புதிய சூழியல் முறையை"யும் நிரா கரிப்பவனையுமிருந்தான். சேர்மனியிடமிருந்து இழப்பீடுகளுக் கான முழுப் பெறுமதியையும் பெற்றுவிட வேண்டுமென்று இவன் கொண்டிருந்த உறுதியே, பிரித்தானிய மக்களின் எதிர்ப்பையும் கவனியாது பிரான்சு தேசம் 1923 இல் உரூர் பிரதேசத்தைக் கைப்பற்றச் செய்தது. அத்துடன் தனது பாது காப்பிற்கு மேற்கிலுள்ள அயல்நாட்டின் உதவியைப் பெறக் கூடிய "ஏம" நாடொன்றை அமைக்கும் நம்பிக்கையுடன், இவன் இரைனிலாந்து பிரதேசத்தில் தனியான இயக்க மொன்று நிறுவப்படுதற்கு உற்சாகமளித்தான். நாம் முன் அத்தியாயமொன்றிற் கூறியவாறு, பல நூற்றுண்டுகளாக ஒரு பொழுதேனும் தீர்க்கப்படமுடியாத பகைமைகளால் துண்டிக்கப் பட்ட சாளிமேனரசின் இரு பாதிகளுக்கு மிடையில் ஒரு "மத்திய அரசு" அமைக்கப்படவேண்டு மென்ற நோக்கம், இடைக் காலத்து மரபுரிமைகளில் ஒன்றுகும். பதினைந்தாம் நூற்றுண்டில், சாள்சு "தி போல்டு" என்பவனால் நிறுவப் பட்டுச் சிறிது காலமாக நிலவிய பேகண்டியன் அரசு இருந்த அவ்வமயம் மாத்திரமே அந்நோக்கம் பூர்த்தியானது. அவனது மரணத்திற்குப் பின், அவ்வரசு சின்னபின்னமடைந் தது; பிரான்சும், சேர்மனியும் அந்நாளிலிருந்து போரில் ஈடுபட்டோ, படைக்கலந் தாங்கிய அமைதி நிலையிலிருந்தோ வந்திருக்கின்றன.

இணக்கக் காலம்.

திரு. பொயின்கேயர் கடைப்பிடித்து வந்த இணக்கமற்ற பூட்கை தோல்வியுற்றது. முன்னர் ஏற்பட்டிருந்த தனிக் கொள்கை இயக்கம் இரைனிலாந்தில் செல்வாக்குள்ள ஆதரவைப் பெறத் தவறியதால் இகழ்ச்சிக்கிடமாயது; அத்துடன் சேர்மனியும் இழப்பீடுகளுக்குப் பணம் கொடுப்பதை முற்றுக நிறுத்திவிட் டது. பிரான்சிய மக்கள், எதை அழிக்க வேண்டு மென்று 1914–18 ஆம் ஆண்டுப் போரில் ஈடுபட்டனரோ அதே "வல்லாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக் கொள்கை "யை நினைவூட்டும் வழிமுறைகளை இப்போது எதிர்த்தனர்; 1924 இல் "பிளொக்கு நேசனல்" என்ற வலது சாரிக்கட்சிகளைக் கொண்ட தேசியக் குழுவொன்றை, பருமாற்றக் கொள்கையினரும் சமூகவுடைமையாளரும் சேர்ந்த "பிளொக்கு தெசு கவுச்செசு" என்ற குழு தோல்வியுறச் செய்தது; திரு. பொயின்கேயர் பதவி துறந்தான்; குடிப்பதியும் (திரு. மில்லெருந்து) தனது பதவிக்கேற்பக் கட்சிச் சார்பற்ற முறையில் செயலாற்றவில்லை என்ற குற்றச்சாட்டுக்குட்பட்டுப் பதவியைத் துறக்க வேண்டியதாயிற்று. புதிதாய் அமைக்கப்பெற்ற அமைச்சு அதன் முற்பதவியாளர் கொண்டிருந்த வெளிநாட்டுப் பூட்கையினை மாற்றியமைத்தது. சேர்மனியை உளக்கனிவுடன் நடத்துவதைக் குறிப்பாகக் கொண்டுள்ள பெரிய பிரித்தானியாவுடன் நல்லுறவை மீண்டும் ஏற்படுத்துவதும், ஒருதலைப்பட்ட செயல்முறையை விடுத்து அதற்குப் பதிலாகக் கூட்டுச் செயல்முறையைக் கைக் கொள்வதும் புதிய வெளிநாட்டுப் பூட்கையின் நோக்கமாக விருந்தது. "பிளொக்கு தெசு கவுச்செசு"க் குழுவினருக் கேற்ப அரசியற்றுறையில் அனுதாபம் காண்பிக்கக்கூடியதாகிய தொழிற்கட்சி யொன்று பிரித்தானியாவில் இவ்வமயம் உருவானமை, பெரிய பிரித்தானியாவோடு பிரான்சு ஒத்துழைப்பதற்கு வாய்ப்பளித்தது. இவ்விரு தேசங்களுக்குமிடையே மனத்தாங்கல் இருந்தமை இவ்விரு தேசங்களும் பிரிந்திருந்தமைக்குக் காரணமாயிருந்தது; அவை மீண்டும் ஒன்று கூடியமையால் "குறைகள் தீரும்" ஊழியொன்று தொடக்குவிக்கப்பட்டது; இழப்பீடுகள் பற்றிய சிக்கலைத் தீர்த்தமை, உரூர் பிரதேசத்தில் குடிகள் பதியெழுந்தமை, அதைத் தொடர்ந்து சேர்மானிய ஆள்புலத்திலிருந்து நேசநாட்டுப்படைகள் முற்றுகத் திருப்பி அழைக்கப்பட்டமை, உலொக்காணோப் பொருத்தனை, சேர்மனிக்கு நாட்டுக்கூட்டவையில் உறுப்புரிமை அளிக்கப்பட்டமை, பிறியண்டு—கெல்லோக்கு ஒப்பந்தம் ஆகிய இவையாவும் அவ்வூழியின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும். நட்புண்டாக்கும் பூட்கையை ஏற்படுத்துவதில் அடுத்தடுத்த மந்திரசபைகளில் ஏழாண்டுக்காலம் (1925–32) வெளிநாட்டமைச்சகப் பதவியேற்றிருந்த திரு. பிறியண்டு குறிப்பிடத்தக்க முறையில் பணியாற்றியுள்ளான். இப்பூட்கையினாலாய பயன்களைப் பற்றி நாம் வேறிடத்தில் கூறியுள்ளோம். திரு. பிறியண்டு தொடர்ச்சியாகப் பதவியிலிருந்தமை, அவன் பின்பற்றிய நட்புண்டாக்கும் பூட்கையைக் குறுகிய கால வாழ்வுடைய பிரான்சிய மந்திரிசபை யொன்று நிராகரித்துவிடலாமென்ற ஆபத்தை நீக்கியது. 1927 இல் பிரான்சில் கட்டாயப் போர்ப் பயிற்சிச் சேவைக்கான காலம், ஓராண்டாகக் குறைக்கப்படவேண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெனச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமை, ஐரோப்பாவில் இப்போது ஏற்பட்ட புதிய மனநிலைக்கு ஒரு முக்கிய எடுத்துக் காட்டாகும்.

பிரான்சிய வெள்ளிக்காசு பற்றிய நெருக்கடி.

வெளிநாட்டுக் கருமங்கள் உறுதியாக முன்னேறிக் கொண்டு வர, பொருளாதார நெருக்கடி என்ற முகில்கள் உள்நாட்டுக் குரிய அடிவானத்தை மூடிக்கொண்டன; இதன் விளைவுகள் அரசியல் வட்டாரத்தையும் பாதிக்கலாயின. 1914–18 இல் ஏற்பட்ட போரில் அதிக செலவு உண்டானதாலும், அழிவுற்ற பிரதேசங்களைப் புனரமைப்புச் செய்ததாலும் ஏற்பட்ட பண முடை ஒரு புறமும், அதிகமாக அறவிடப்பட்ட வரிகளைப் பிரான்சிய மக்கள் செலுத்த விருப்பற்றிருந்தமை மறு புறமுமாகச் சேர்ந்து, பிரான்சு தனது பாதீட்டைச் சமாளிப்பதற்கு இடையூறுக விருந்தன. செலாவணி பற்றிய உறுதிப்பாட்டில் நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டது; பிரான்சிய மூலதனம் நாட்டிலிருந்து வெளியேறத் தொடங்கிற்று. பிரான்சிய வெள்ளிக்காசு வெளியேறத் தொடங்கியதால் உண்டான பீதி "பிராங்கின்" பணமாற்றுப் பெறுமதியை அரைவாசியாக்கியது. அமைச்சுக்கள் ஒன்றன் பின் னொன்றுக ஆட்சிக்கு வந்தும் அவை நெருக்கடியான நிலை யைத் தவிர்க்கத் தவறின. 1926 இல் திரு. பொயின்கேயர், முன்னர் முதலமைச்சர்களாயிருந்த அறுவரைக் கொண்ட "தேசிய ஐக்கிய அரசாங்கம்" என்னும் ஒரு கூட்டரசுக்குத் தலைவனாகப் பதவியேற்றான். "பிரான்சிய வெள்ளிக் காசு நெருக்கடி"யைத் தீர்ப்பதற்கு அவன் செய்த முயற்சிகள் வெற்றிபெற்றன; இப்போது "பிராங்கு" அதன் முன்னைய பெறுமதியைப் பெற்றது; மூன்றுண்டுகளுக்குப்பின் இதர நாடு களில் உண்டான மாபெரும் பொருளாதாரமுடை விளைத்த தீங்குகளினால் அந்நாடுகளுடன் முக்கியமாகப் பிரான்சும் பாதிக் கப்படலாயிற்று. இப்பொருளாதாரமுடை சேர்மனியில் தேசியச் சமூகவுடைமையாளருக்கு அதிகாரத்தைக் கைப்பற்றப் பெரிதும் உதவியது; இதன் காரணமாகப் பிரான்சு, இரசியாவோடு நேச உடன்படிக்கை செய்யவும், போர்ப்படை ஊழியத்தை ஈராண்டு களுக்கு நீடிக்கச் செய்யவும் வேண்டிய கட்டாயத்துக்குட்பட்டது. இப்பொருளாதாரமுடையே பெரிய பிரித்தானியாவில் பவுணின் விலை நியமம் கைவிடப்படுவதற்குக் காரணமாயிருந்தது; அதன் விளைவாக உலகச் செலாவணிகளும் நிலைகுலைந்து, பிராங்கினது உறுதிப்பாடும் பாதிக்கப்பட்டது. இப்போது "பிராங்கு பற்றிய போராட்டத்தை" மீண்டும் நடத்த வேண்டியதாயிற்று. ஆனால் இப்பொழுதோ அதுவொரு தோல்வியுறும் போராட்ட மாகியது. பிரான்சிய அரசாங்கம் பவுணின் விலை நியமத்தை மாற்றாது வைத்துக்கொள்ள முயற்சித்தது; ஏனெனில் ஏலவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறயன் (1862–1932)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக் குறைவாகக் கணிக்கப்பெற்ற செலாவணி மீண்டும் புதிதாகக் குறைக்கப்படுவதனால், நிலையான வருமானத்துடன் வாழ்பவர் பெரிதுமிடர்ப்படுவர் என்பதால் பிராங்கின் மதிப்பைக் குறைப்பதற்கான பூட்கையை அரசாங்கம் கைக்கொள்ள முயற்சித்தது ; அம்முயற்சி கூலிகளையும் வேதனங்களையும் விலைகளையும் குறைப்பதன்பாற்பட்டதாகும். ஆனால் மக்கள் இப்பூட்கையை விரும்பாததனால் அதன் நோக்கம் பூர்த்தியாகாது தடைப்பட்டது. அடுத்தடுத்து அமைக்கப்பெற்ற அமைச்சுகள் இப்பொருளாதாரமுடையைத் தீர்ப்பதற்கான திறமையற்றிருந்தமையும், அவை நாட்டினது வரவு செலவுகளைச் சமாளிக்கத் தவறியமையும் அரசமைப்பின்மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையைப் பாதித்தன ; அதனாலேற்பட்ட அமைதியின்மை, நாளடைவிற் பிரான்சியக் குடியரசையே அபாயத்துக்குட்படுத்தக் கூடிய அளவினதாக வளர்ந்து வெளிப்படுவதாயிற்று. சிறிது காலமாக மனத்துள்ளே வெதும்பிக்கொண்டிருந்த இக் கோபக் கனல், தலைமையான அரசியல்வாதிகள்மீது பழிசுமத்திய சுருவிசுக்கி பற்றிய அவதூறு வெளிப்படுத்தப்பட்டபோது கொழுந்துவிட்டெரியலாயிற்று. சுருவிசுக்கி என்பவன் நிதிசம்பந்தமான கருமங்களில் மக்களைத் துணிந்து ஏமாற்றியவன் ; அவன் தனது மோசடிக்கு உதவியாயிருக்குமாறு உயர்தர அலுவலர்களுக்குக் கைக்கூலி கொடுத்து, பயனற்ற காசுப்பத்திரங்களைப் புதிதாகத் தொடக்குவித்து, பிரான்சிலிருந்த முதலீடு செய்பவர்கள் பலரை ஏமாற்றினான். பொது மக்கள் தங்களது பொறுமையை இழந்தனர். பாரிசு நகரத்திலும், மற்ற மாகாணங்களிலும் குழப்பம் ஏற்படும் நிலை ஏற்பட்டது. 1934 ஆம் ஆண்டு, மாசி மாதம் அழிவுக்கான பல கலகங்கள் மூண்டன. பிரான்சியக் குடியரசு இகழ்ச்சிக்குள்ளாயிருந்ததை வலதுசாரிக் கட்சியைச் சேர்ந்த தீவிரவாதிகள் பயன்படுத்திப் பாசிச வல்லாட்சியொன்றை நிறுவி விடுவரென்ற அச்சம் மக்களிடை குடிகொண்டது. இவ்வபாயத்தைத் தவிர்க்க, தொழிற் கட்சியின் பொதுக் கூட்டவை ஒரு நாட் பொதுத் தொழினிறுத்தஞ் செய்து குடியரசைக் கவிழ்க்க எடுக்கப்படும் முயற்சிக்கு விரோதமாகத் தனது வெறுப்பைக் காட்டியது. முன்னாள் குடிப்பதியான திரு. டூமெர்கு முதலமைச்சனென்ற முறையில் நெருக்கடியைச் சமாளிக்கவும், பொதுமக்கள் இழந்த நம்பிக்கையைப் புதுப்பிக்கவும் அழைக்கப்பட்டான். அவன் யாப்பமைப்பில் மாற்றங்களைச் செய்வதற்கான புதுத் திட்டங்களைக் கொண்டுவந்தான். அத்திட்டங்கள் அரச நிருவாகத் துறைக்கு உறுதியைக் கொடுக்கும் நோக்குடையனவாயிருந்தன. ஆனால் நாட்டில் ஏற்படும் அவசரகாலந் தவிர மற்றக் காலங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருவாகத் துறையினருக்குப் புதிய அதிகாரங்கள் அளிக்கப்படக் கூடாதென்று பிரான்சிய மக்கள் எண்ணங்கொண்டிருந்தமையால் அவனுடைய கருத்துக்களுக்கு ஆதரவு கிடைக்கவில்லை.

மக்கள் விரும்பிய முன்னணி.

பிரான்சு வெற்றிகரமாக நெருக்கடியைச் சமாளித்த தெனினும், பாசிசக் கட்சியினரதும் முடியரசு வாதிகளினதும் நடவடிக்கைகள், குடியரசினது பாதுகாப்பு அபாயத்துக்குட்பட்டிருந்ததென இடது சாரிக்கட்சியினருக்கு ஓர் எச்சரிக்கை செய்வனவாயின. பொதுவுணர்ச்சி யொன்றிலுலிணைக்கப் பெற்று, பருமாற்றக் கொள்கைச் சமூகவுடைமையாளரும், பொதுவுடைமையாளரும் சேர்ந்து " பிரான்சிய மக்களது சுதந்திரங்கள் பாசிசக் கட்சியினரால் பறிக்கப்படாவண்ணம் " பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நோக்குடன், " மக்கள் விரும்பும் முன்னணி " யொன்றை ஏற்படுத்தினர். 1936 ஆம் ஆண்டுத் தேர்தலில் முன்னணியைச் சேர்ந்த கட்சிகள் ஒன்றுக்கொன்று உதவியமையால், அவை ஐந்தில் மூன்று தானங்களைக் கைப்பற்றி அரசமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் பெற்றன. சமூகவுடைமைக் கட்சியின் தலைவனான திரு. புலூம் என்பவன் விரிவான சமூகச் சீர்திருத்தங்களடங்கிய திட்டங்களைக் கைக்கொள்ள வாக்குறுதியளித்து, அமைச்சவைக்குத் தலைவனானன். தொழிலாளி வகுப்பினர், தங்களது குறிக்கோள் பெற்ற வெற்றியை வரவேற்கும் முகமாகக் காட்டிய உணர்ச்சிப் பெருக்கு, விளக்க முடியாத மக்களியக்கமொன்றைப் பிறப்பித்தது ; இவ்வாறான இயக்கங்கள் பொதுவாகத் திறமையுடனும் கரும நோக்குடனும் நடத்தப்படாவிட்டால் மாத்திரமே தீங்கிழைக்கக் கூடியனவாகும். " தொழிற்சாலையினுள் இருந்துகொண்டு தொழினிறுத்தம் " செய்வதான இயக்கம் மின்னல் வேகத்தில் நாடு முழுவதும் பரவியது ; அப்போது தொழிலாளர் வலுவந்தஞ் செய்யாமலும் அழிவு விளைக்காமலும், தொழிற் சாலைகளிலும் பண்டசாலைகளிலும் புகுந்து, உயர்ந்த வேதனங்களும் திருந்திய தொழிற் சூழ்நிலைகளும் தங்களுக்கு வேண்டுமென்ற கோரிக்கை நிறைவேற்றப்படுமளவும் தாங்கள் அங்கேயே தங்கும் நோக்கங் கொண்டிருப்பதாகத் தெரிவித்தனர். குறித்த வோரமயத்தில் பத்து இலட்சம் தொழிலாளர் அவ்வாறான தொழினிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனரெனக் கணக்கிடப்பட்டுள்ளது. தலைமை யமைச்சன் இணக்கப்படுத்துபவன் என்ற தோரணையில் உடன்பாடொன்றுக்கு ஏற்பாடு செய்தான். அதன் பிரகாரம் தொழினிறுத்தம் செய்தோர் வேலைக்குத் திரும்புவதற்கு இணங்கினர். வேதன உயர்வு, வாரமொன்றுக்கு நாற்பது மணி நேரவேலை, ஒவ்வோராண்டிலும் சம்பளத்துடன் இருவார ஓய்வு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சில குறிப்பிட்ட தொழில்களில்) கூட்டுத்தொழில் ஒப்பந்தங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு வேலை கொடுப்பவர் உடன் பட்டனர். வாரமொன்றுக்கு நாற்பது மணி நேரவேலை, சம்பளத் துடன் விடுமுறை, கூட்டுப்பேரம் பேசுவதற்கான உரிமை ஆகிய வற்றுக்கான சட்டம் இயற்றப்படவே, தொழினிறுத்தக் கிளர்ச்சி யும் தணிந்தது. "மக்கள் விரும்பும் முன்னணி" யினரைக் கொண்ட அமைச்சவை செய்வித்த வாரியத்துக்குரிய மாற்றங் கள் முக்கியத்துவத்தில் குறைந்தனவல்ல. பாதீட்டுக் குறை பாடுகள், உல்லாசப் பிரயாணஞ் செய்பவரிடமிருந்து கிடைக்கும் வருமானத்தில் குறைவு, எற்றுமதி வியாபாரத்தில் வீழ்ச்சி, வேலை யில்லாதோரின் பெருக்கம், "பிராங்கு" நாணயத்தின் வெளி யேற்றம் ஆகியனவெல்லாம் ஒன்று சேர்ந்து, பாலன முறையின் மீது தாங்கமுடியாத பாரத்தை ஏற்றுவனவாயின. அதோடு, 1936 இல் பவுண் நியமம் கட்டாயமாகக் கைவிடப்பட்டு, "பிராங்கி" னது மதிப்பும் குறைக்கப்படுவதாயிற்று. பிரான்சு வங்கி, நிதித்துறை சார்ந்த கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக் கப்பட்டுத் தேசியவுடைமையாக்கப்பட்டது மற்றொரு முக்கிய நிகழ்ச்சியாகும். பொருளகத்தில் மிக அதிகமான பங்கு களை வாங்கியிருந்த இருநூறு பங்காளிகளால் பொருளக ஆட்சிக் குழுவினர் தெரிவு செய்யப்படும் வழக்கம் இப்போது நிறுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக, அரசாங்கம் அமர்த்திய பன்னிரண்டு உறுப்பினரையும், கைத்தொழில், வணிகம், பயிர்த் தொழில், நுகர்வோர் சங்கம் ஆகியவற்றின் பிரதியாளர் குழுக்கள் அரசாங்கத்துடன் பரிந்து பேசி நியமனஞ் செய்த ஒன்பது உறுப்பினரையும், பங்குப் பத்திரங்கள் வாங்கியோரால் தெரிவுசெய்யப்பெற்ற இரு உறுப்பினரையுங் கொண்ட சபை யொன்று ஏற்படுத்தப்பட்டது. மூதவை திரு. புலூம் என்ப வனுக்குச் சட்டமுறைப்படி கட்டளை பிறப்பித்துப் "பொது நிதியை மீண்டும் சீராக்குவதற்கான" அதிகாரங்களை வழங்க மறுத்துவிட்டதால், அவன் பதின்மூன்று மாதங்கள் கடமை யாற்றிய பின், 1937 ஆம் ஆண்டில் நிதிமுடை காரணமாகத் தன் பதவியைத் துறந்தான். மீண்டும் போர்முகில்கள் பிரான் சிய அடிவானத்திலே திரண்டபொழுது (1939) திரு. கலடியர் என்பவனின் தலைமையிலே திறமையான நிருவாகம் ஏற்படும் வரை, அதிக காலம் நீடித்திராத பல அமைச்சவைகள் பிரான்சில் தோன்றி மறைந்தன. பிரான்சிய மக்கள், தமது எல்லைகளுக் கப்பால் அபாயம் வளர்ந்து கொண்டு வந்தபோது தமது நாட்டேமம் பற்றிய மகா முக்கியத்துவமான பிரச்சினையின் பொருட்டுத் தமது கட்சிப் போராட்டங்களைக் கைவிடக்கூடிய சத்தி தமக்குண்டெனக் காட்டிக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சிய-இத்தாலிய உறவுகள்.

மீண்டும் ஒருமுறை சருவதேச நாடகம், உள்நாட்டுப் பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை முற்றுக மறைத்தது. சேர்மனி மீண்டும் போர்ப்படை சார்ந்ததொரு வல்லரசாக உருவாகிக் கொண்டிருந்ததினாலும், உள்நாட்டில் கொடுமையான கலகங்கள் ஏற்பட்டதினாலும், அபிசீனியா சம்பந்தமான நிகழ்ச்சியை நேர்மையான முறையில் நடத்துவிக்காததினாலும் பதினைந்தாண்டுகளாகப் (1918–33) பிரான்சு ஐரோப்பாவிற் பெற்றிருந்த ஆதிக்க நிலை முப்பது ஆண்டுகளிலேயே அழிக்கப்படலாயிற்று. பிரான்சுக்கு வெளியே சிக்கலான நிலைமை உண்டானதற்குக் காரணம், பிரான்சுக்கும் இத்தாலிக்கு மிடையிலேற்பட்ட மனத்தாங்கல் ஆகும். இத்தாலி, திபூற்றி யென்ற பிரான்சியச் சோமாலிலாந்தின் செங்கடற் துறைமுகப்பட்டினத்தைத் தனக்குரியதென உரிமை கொண்டாடியது; துனீசியாவிற் குடியேறிய இத்தாலிய மக்களுக்கு, அவர்கள் தம் தாய் நாட்டோடு கொண்டுள்ள அரசியற் றொடர்பை விடாமல் வைத்துக் கொள்வதற்கான தனிப்பட்ட மதிப்புக் கொடுக்கப் படவேண்டுமென்றும் இத்தாலி கூறியது; 1789 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பிரான்சியப் புரட்சி மதிப்புடன் பேணிவந்த கோட்பாடுகளுக்குப் பாசிச ஆட்சி முரணுயிருந்ததால், இவ் வாறுன குடியேற்ற நாட்டுத் தகராறுகள், முரண்பாடான கொள்கைகளின் மோதுதலினால் மேலும் கேடு விளைவிப்பன வாயின. இரு இலத்தீன் நாடுகளுக்கு மிடையிலிருந்த பிணக்கு இத்தாலியைச் சேர்மனியோடு நட்பாக்கிற்று. எனவே நாட்டினச் சமூகவுடைமை வாதம் வலுப் பெற்றதும், ஒரு பொதுக் கூட்டுக் கொள்கையின் அடிப்படையில் ஓர் இத்தாலிய–சேர்மானிய நட்புறவு ஏற்படலாமென எதிர்பார்க்கப்பட்டது. இத்தாலியை மீண்டும் தனது கட்சியிற் சேர்க்கும் நோக்கத்துடன் பிரான்சு "ஆபிரிக்காவில் தன்னுடைய நலன்களும் இத்தாலியுடைய நலன்களும் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கூடியதான" ஓர் இணக்கமுறையை 1935 இல் ஏற்பாடு செய்தது. அதன்மூலம் இத்தாலி ஆபிரிக்காவில் தனக்குரிய எல்லைப்புற மாற்றங்கள், ஆள்புல ஒப்படைப்பு உரிமைகள், பொருளாதாரச் சலுகைகள் ஆகியவற்றைப் பெற்றது; பிரான்சோ, துனீசியாவிலுள்ள இத்தாலிய மக்களின் நிலை படிப்படியாக உயர்வதற்கான வழிவகைகளை மேற்கொண்டது. பிரான்சினது அற ஆர்வங்கொண்ட நடுநிலைமையை முசோலினி நம்பி, தான் ஓர் இத்தாலியப் பேரரசை உருவாக்க வேண்டுமென்ற தனது பேரவாவை விரைவிலே வெளிப்படுத்தினன். அபிசீனியா தாக்கப்பட்டமையினால் நாட்டுக் கூட்டவையில் ஒரு சச்சரவு ஏற்படுவதாயிற்று. இச்சச்சரவின்போது பிரான்சிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சவையானது ஒன்றுக்கொன்று முரணான தனது கேண்மைகள் காரணமாக, இத்தாலியுடன் தான் செய்திருந்த ஒப்பந்தத்திற்கோ பெரிய பிரித்தானியாவுடன் தான் கொண்டிருந்த நட்புக்கோ பாதகம் விளைக்காவண்ணம் இரு நாடுகளுடனும் நல்லுறவு கொண்டிருக்க முயற்சித்தது. இந்நடவடிக்கைகள் ஆங்கில-பிரான்சிய உறவுகளில் நெருக்கடியான நிலையைத் தோற்றுவித்ததுமன்றி, பிரான்சு நம்பிக்கை வைத்திருந்த மூன்று பாதுகாப்பு அரண்களிலொன்றுகிய கூட்டேமம் பற்றிய ஒழுங்கைத் தகர்த்தெறியவும் செய்தன. இதைத் தொடர்ந்து பிரான்சின் மற்றொரு அரணும், அதாவது, அது சிறிய அரசுகளோடு செய்திருந்த நேச உடன்படிக்கையும் அழிவுற்றது. மேலும் சேர்மனி, 1936 இல் இரைன் பிரதேசத்தைப் படைத்தாக்கு தலுக்குட்படுத்தியதைத் தொடர்ந்து—அதுவும் கூட்டவைய டைந்த ஏமாற்றத்தின் நேரடியான விளைவுதான்—சீகுபிரீடு அரண்வரிசைகளைக் கட்டியெழுப்பியது; இவை பிரான்சு தன் எல்லைப்புறம் முழுவதிலும் கட்டியெழுப்பியிருந்த மாகினொட்டு அரண் வரிசைகளையொக்கும். மத்திய வல்லரசானது, தனக்குக் கிழக்குப் பகுதியிலுள்ள அண்டைநாடுகளை அடிமைப்படுத்தும் பொழுது, மேற்கிலிருந்து தனக்கு ஏற்படக் கூடிய எவ்வித எதிர்ப்பையும் தடுத்து முறியடிக்கக் கூடிய ஆற்றலுடையதாயிருந்தமையால், பிரான்சு தன் சொந்த நிலையையன்றி, வேர்சைப் பொருத்தனையின்படி தான் ஐரோப்பாவில் வகித்த நடைமுறை நிலையையும் இனிமேல் பெற முடியாதெனக் கண்டது. போர் வெறி கொண்ட சேர்மனி தனது அண்டை நாடுகளெல்லாவற்றையும் தன் கட்டுக்கடங்காத பேராசைகளின் பயனுய் ஆபத்துக்குட்படுத்தியதைக் கண்ட பிரான்சு, தான் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் கண்டறிந்திருந்ததுபோல, தான் பிரித்தானியாவோடு மிக நெருங்கிச் செயலாற்றுவதிலேயே தனது பாதுகாப்புத் தங்கியுள்ளது என்பதை உணர்ந்தது. 1914-18 ஆம் ஆண்டுப் போரில் நடந்ததுபோல், 1939 ஆம் ஆண்டில் மீண்டும் இரு மேலைக் குடியாட்சி நாடுகளும் ஒன்றுக்கொன்றுதவின.

இசுப்பெயின். இசுப்பெயின் 1914-18 ஆம் ஆண்டுப் போரிற் கலந்து கொள்ளவில்லை; ஆனல் அதனுழ், போரைவிடப் பெரும் அச்சந் தருகிற உள்நாட்டுச் சண்டையொன்றில் அதனையீடுபடுத்திற்று. படைத்துறை, குடிமைத்துறை ஆகிய இருதுறைகளையும் சார்ந்த அலுவலர்களுக்கிடையில் தொன்று தொட்டு நிலவி வந்த பகைமையுணர்ச்சியே இம் மாபெருந் தீங்கை விளைவித்த பல நிகழ்ச்சிகளுக்குக் காரணமாயிருந்தது. படையலுவலர் "பாதுகாப்புக் குழுக்கள்" என்று வழங்கப்பட்ட குழுக்களாக அமைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தனர்; ஒவ்வொரு காலாட்படை அலுவலனும் ஒரு படைக்குழுவைச் சேர்ந்திருக்க வேண்டும். இப்படைத்துறைக் குழுக்கள் அல்லது "சுன்ருசுக்கள்" இசுப்பெயினில் உண்மையில் ஆட்சி செய்துவந்தன; ஏனெனில் அவை அரசாங்கத்தில் தலையிட்டு "அரசாங்கத்திற்குள் ஓரரசாங்க"மாக விருந்தன. அவற்றின் "புரேனன் சியாமியன்ரேசுக்கள்" அல்லது கொள்கை அறிவிப்புக்கள் நாட்டை அமைதியின்மைக்குட்படுத்தி, ஒழுங்கானதும் யாப்புமுறையானதுமான முன்னேற்றத்திற்கு ஒவ்வாததொரு புரட்சிமனநிலையை நாட்டில் உண்டாக்கின. நாளடைவில் பிறிமோதி இறிவேரு என்னும் படைத்தளபதி முசோலினியினது முன்மாதிரியால் ஊக்குவிக்கப் பெற்று, இசுப்பானிய அமைச்சவை அகற்றப்படவேண்டுமென்னும் தன் கொள்கை அறிவிப்பை 1923 இல் வெளியிட்டான். அல்போன்சோ அரசன் படை இயக்குநர் குழுவொன்றினுக்கு அவனைத் தலைவனாக நியமித்தான்; இக்குழு குடியியற் பாலனத்தைக் கவிழ்த்து விட்டு, பாராளுமன்றமின்றி ஆட்சி செய்தது. இப்படைசார்ந்த வல்லாட்சி ஏழாண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது; அவ்வாண்டுகளில் போர்ப்படையே நாட்டையாண்டது. 1930 ஆம் ஆண்டில் அரசன் வல்லாட்சித் தலைவனைப் பதவியிலிருந்து நீக்கினன்; எனினும், அரசனது குடிகள் யாப்பமைப்பு செயற்படாது ஒதுக்கப்பட்டதின் காரணமாக வெறுப்புற்றிருந்தமையால், அடுத்தவாண்டு நடைபெற்ற மாநகரசபைத் தேர்தலில், மாகாணத் தலைநகரங்களிலிருந்து குடியரசுக் கட்சியினரையே பெரும்பான்மையினராகத் தெரிந்தெடுத்தனர். அரசன் குடிகளின் அத்தீர்ப்புக்கிணங்கி, இசுப்பெயினிலிருந்து வெளியேறினன். முடியாட்சி ஒழிக்கப்பட்டது. "இசுப்பெயின் ஒரு சனநாயகக் குடியரசெனவும்", "இசுப்பானிய அரசைப் பொறுத்த மட்டிலே சமயமென்று ஒன்று கிடையாதெனவும்", "போரை நாட்டினப் பூட்கையினொரு கருவியாகக் கொள்வதை இசுப்பெயின் நிராகரிக்கிறதெனவும்" புதிய யாப்பமைப்பிற் கூறப்பட்டது.

உண்ணாட்டில் எற்பட்ட கலவரங்கள்.

இப்புதிய குடியரசு ஒருபுறம் புரட்சி பற்றியதும் மறுபுறம் பிற்போக்கு பற்றியதுமான இரு போரிடும் சத்திகளுக்கிடையிற் துன்பம் நிறைந்த பாதையிற் சென்றது. இப்போர்ச் சத்திகளுக்கிடையிருந்த பகைமை நாளுக்கு நாள் பெருகியது. பாசலோனாவிலிருந்த தனி இயக்கக் கொள்கையினர் கற்றலோனியாவிற் சுதந்திர ஆட்சியைப் (1934) பிரகடனஞ் செய்தனர்; எனினும் அவ்வியக்கம் வீழ்ச்சியுற்றது; தீவிரக் கொள்கையுடைய தொழிற்கட்சிகள் ஒரு பொதுத் தொழினிறுத்தத்தை ஆரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தன; குருமாருக்கெதிரானவர்கள் திருச்சபையைத் தாக்கினர். எனினும் இசுப்பானிய மக்களது மனோநிலை முற்றிலும் மிதவாத நோக்குடையதாகவேயிருந்தது; பொதுவாக, அரசியற் புரட்சியைத் தொடர்ந்து, குமிழிட்டுப் பொங்குகின்ற மன உணர்ச்சி விரைவிற் குறைந்து விடுமெனக் கருதுவதற்கிடமிருந்தது. 1936 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் "மக்கள் நயக்கின்ற முன்னணி"க் கட்சிகளுக்கு வெற்றி கிடைத்ததெனினும், சமூகவுடைமையாளரல்லாதவரைக் கொண்ட ஓர் அரசாங்கமே பதவியைப் பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது. சமூகவுடைமைக் கட்சியினரும் பொதுவுடைமைக் கட்சியிற் சிலரும் சேர்ந்த தொகையை விடக் கூடிய தொகையினராக இடதுசாரிக் குடியரசுக் கட்சியினர் இருந்தமையால், அக்கட்சியினரே புதிதாய் அமைக்கப்பெற்ற அமைச்சவையிற் கூடுதலாயிருந்தனர். வலது சாரிக் கட்சித் தலைவருட் சிலர் வாக்காளரது தீர்ப்பினால் ஏமாற்றமுற்று, தங்களது அரசியல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தினால் தங்கள் செல்வாக்குக் குறைந்து விடுமெனப் பீதியுற்றிருந்த படைத்தலைவர்களுடன் சேர்ந்து, போர்ப்படை சார்ந்த புரட்சி செய்யச் சதித்திட்டமிட்டனர்; அது பொதுமக்களுக்கிடையில் கலவரங்களை உண்டுபண்ணியது. நாட்டிற் பல பாகங்களில், கோயில்களைத் தீக்கிரையாக்குதல் போன்ற மானக் கேடான செயல்கள் நடைபெற்றன; இவ்வாறு ஏற்பட்ட ஒழுங்கீனங்கள், அரசாங்கத் தொடர்புடைய ஒருவன் கொலை செய்யப்பட்டதாலும், அதனையடுத்து அதற்குப் பழிவாங்குமுகமாக வலதுசாரிக் கட்சித் தலைவருள் ஒருவன் கொலைசெய்யப்பட்டதாலும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. நாட்டிலுண்டான கிளர்ச்சியிற் பங்குபற்றியதற்காக, போர்ப்படைக் குழுவின் முதன்மையாளர் என்ற பதவியிலிருந்து நீக்கப் பெற்ற படைத்தளபதி பிரங்கோ, இசுப்பானிய மொரோக்கோ நாட்டுக்குத் தப்பியோடி, அங்கு 1936 ஆம் ஆண்டு யூலை மாதம் எழுந்த போர்ப்படை சார்ந்த புரட்சிக்குத் தலைவனானன். பெருந்தீங்கு விளைத்த இந்நிகழ்ச்சிக்கு யாரைப் பொறுப்பாளியாக்குவது என்பதுபற்றிக் கூறுகையில், இசுப்பானிய வரலாற்றாசிரியனொருவன்[1], "வலது சாரியினர் இடதுசாரியினர் ஆகிய இருவருமே வெறுப்பூட்டும் போக்கையைப் பின்பற்றினர். ஒய்வின்றிப் பழிச்செயல்கள் நடைபெற்றன. மாக்சிசக் கொள்கையுடைய கொலையாளரும் பாசிசக் கொள்கையுடைய கொலையாளரும் ஆட்சியறவுக் கொள்கையுடைய கலகக்காரரும் அமைதியின்மையைப் பரப்பிப் பகைமையை வளர்த்தனர்" என்று எழுதினன். கிளர்ச்சியைத்

[1].A. Mendizabal, "The Martyrdom of Spain."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்குவதற்குக் காலாயுள்ளவர்களிடமே இப்பெருந்தீங்குக் கான பொறுப்புத் தங்கியுள்ளது என்பது அவன் கருத் தாகும். "குடிப்போரினால் உண்டான அருவருப்பான விளைவு களைப் பொதுமக்களுக்கும் பொருள்களுக்கும் எற்பட்ட சேதங் களுடன் ஒப்பிட்டால் பின்னையவை ஒரு பொருட்டாகக் கொள்ளக் கூடியனவல்ல."

குடிப் போர்.

இசுப்பானியக் குடிப் போர், உடன் பிறப்பாளர் செய்யுங் கலகத்தில் குறிப்பாகக் காணப்படும் கொடுமையைப் போன்ற தொரு கொடிய கோரத்துடன் நடந்தேறியது. சட்டப்படி யமைந்த அரசாங்கம் மதிரித்திலும், பாசலோனாவிலும் அப்போர் இயக்கத்தை அடக்கியது; ஆனால் அரசாங்கத்தின் எதிரிகள் பூகோசில் தங்களது சொந்தப் பாலனத்தை அமைத்துக் கொண்டனர். மத்திய வகுப்பையும் வேளாளர் வகுப்பையும் சேர்ந்த முற்போக்காளரும், கைத்தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளரும் பற்றுறுதிக் கோட்பாட்டாளரை ஆதரித்தனர். கிளர்ச்சிக்காரர் சார்பில் (அதிகப்படியாக) போர்ப்படையினரும், பாசிசக் கொள்கையினரும், முடியாட்சிக் கொள்கையினரும், நிலச் சொந்தக்காரரான உயர்குடியினரும், கத்தோலிக்கத் திருச்சபையின் உயர் மன்றத்தினரும், இன்னும் பழமைபேணும் பலரும் இருந்தனர். பாசுக்கு நாட்டினவாதிகள், பழமை பேணுபவராகவும் கத்தோலிக்கராகவுமிருந்தாலும், தங்களது சனநாயக மரபினாலும், பிரதேசத் தன்னுட்சி உரிமையில் தாங் கள் கொண்டுள்ள ஆர்வத்தினாலும் அரசாங்கத்தின்மீது பற் றுறுதி கொண்டிருந்தனர். பாசுக்குக் கப்பல் சொந்தக்காரரும், இரும்பு உருக்கு ஆகியவற்றை உற்பத்தி செய்வோரும் அரசாங் கத்தைச் சார்ந்திருந்தமை, இக்குடிப் போராட்டம் பாசிசக் கட்சியினருக்கும் பொதுவுடைமைக் கட்சியினருக்கு மிடையில் எற்பட்டதென்ற கருத்து தவறென்பதைக் காட்டிற்று. உண்மை யில், இசுப்பெயினிலிருந்த பொதுவுடைமைக் கட்சியினரது முழு எண்ணிக்கை ஐம்பதினாயிரமேயெனக் கணக்கிடப்பட்டுள்ளது. குடிப் போரிலீடுபட்ட இரு கட்சியினரும் தத்தம் எதிரிகளை இரக்கமற்ற விதத்தில் நடத்தினமை, அதன் வருந்தத்தக்க அம்சங்களிலொன்றாகும். கைதிகளென மிகக் குறைந்த எண்ணிக்கையினரே கொல்லப்பட்டனரெனக் குறிப்பிடப்பட் டுள்ளது. அரசியல் எதிரிகள் எல்லோரும் கொல்லப்பட்டமை, பிரான்சியப் புரட்சிக் காலத்தில் எற்பட்ட கிலிதரும் ஆட்சியின் போது ஒழுக்க வரம்புகடந்த படுமோசமான செயல்கள் நடை பெற்றமையை நினைவூட்டியது. நாகரிகத்தின் வெளிப்பகட் டான போர்வையில் அநாகரிக ஆட்சிக்குரிய கொடுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் இரக்கமின்மையும் இவ்விருபதாம் நூற்றாண்டிலும் தாண்டவமாடுவதாகத் தோன்றிற்று. நிலைமை சட்டமுறையிலமைந்த அரசாங்கத்திற்கு மிகுதியும் பிரதிகூலமாகவேயிருந்தது. சமநிலையிலில்லாத இருசாராரிடையே எற்பட்டதொரு போரில் அவ்வரசாங்கம் வலுவானதோர் எதிர்ப்பை எங்ஙனம் காட்டக்கூடியதாயிருந்ததென்பது வியப்புக்குரியது. இளர்ச்சிக்காரர் இத்தாலியரிடமிருந்தும், சேர்மானியரிடமிருந்தும் படைகளையும், பீரங்கிகளையும், போர்த்தளபாடங்களையும், வானூர்திகளையும், தொழினுட்ப வல்லுனர்களையும் பெற்று வலுவுற்றிருந்தனர். அரசாங்கத்திடம் பற்றுறுதி வைத்திருந்தவர்கள் இரசியாவிலிருந்து உதவிபெற்றனர்; எனினும் அவர்களிடமிருந்த வானூர்திகளும் போர்த்தளபாடங்களும் தரங்குறைந்தனவாகவே இருந்தன. மேலும் அவர்களது கடற்றுறைகள் முற்றுகைக்குட்பட்டிருந்தமையாலும் அவர்களுக்குத் தடங்கலேற்பட்டது. இவ்வாறு, முப்பதாண்டுப் போரில் சேர்மனியிருந்ததுபோன்று, இசுப்பெயின் தேசம், ஐரோப்பாக் கண்டத்தைச் சச்சரவுக்குட்படுத்திய முரண்பட்ட கோட்பாடுகளுக்குரிய ஒரு போர்க்களமாகியது; எனினும் இவ்விரு போர்களுக்குமிடையில் குறிப்பிடத்தக்கதொரு வித்தியாசமிருந்தது. பதினேழாம் நூற்றாண்டில் உண்டான போர் இரு சமய அமைப்புக்களின் காரணமாக மூண்டது; ஆனால் இசுப்பானியப் போர் இரு அரசாங்க முறைமைகளின் காரணமாக—குடியாட்சி முறைமைக்கும் தனியாதிக்க முறைமைக்கு மிடையில்—மூண்டது. குடிப் போரினது இவ்வம்சம், இதர நாடுகளும் போர்க்களமென்னும் ஆற்றின் சுழிக்குள் இழுக்கப்பெற்று, போர் செய்யக்கூடிய எல்லை விரிவுபடுத்தப்படலாமென்ற பீதியை ஐரோப்பாவில் இளப்பிற்று. இவ்வபாயத்தைத் தடுக்க ஐரோப்பாவைச் சேர்ந்த ஏறத்தாழ முப்பது அரசாங்கங்களுக்கிடையில் தலையிடா உடன்பாடொன்று செய்யப்பட்டது. இவ்வுடன்பாட்டின்படி இசுப்பானியத் தகராற்றில் ஈடுபட்டுள்ள இரு கட்சிகளுக்கும் தாம் எவ்வித உதவியையும் அளிப்பதில்லையென அவை உறுதி செய்தன. எனினும் எவ்விதமான சருவதேச ஒப்பந்தமும் தனியாதிக்க நாடுகளைக் கட்டுப்படுத்தவில்லை; அவை ஏற்கனவே "உடன்படிக்கையை மீறும் பாதையில்" அதிக தூரஞ் சென்றுவிட்டன; தலையிடா உடன்பாடு வெளிப்படையாகத் தொடக்கத்திலிருந்தே பலவிதத்திலும் மறுதலிக்கப்பெற்றது; இதனால் அவ்வுடன்பாடு "எளனத்துக்கும் தோல்விக்கும்" இடமாயது. இத்தாலியிலிருந்தும் சேர்மனியிலிருந்தும் ஏரர்ளமாகப் படைக்குரிய பொருள்களைத் தருவித்துக் கொண்டிருந்த இளர்ச்சித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனுக்கு, அவ்வுடன்பாடு தோல்வியடைந்தமை உதவியாயிற்று; ஆனால் சட்ட முறையிலமைந்த அரசாங்கத்திற்கோ, உடன்பாட்டின்படி செயலாற்றிய நாடுகளிலிருந்து படைக்கலங்களும் போர்த்தளபாடங்களும் தருவிக்கப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. கலகக்காரர், 1939 சனவரி மாதம், பாசலோனாவைக் கைப்பற்றினர்; அதைத் தொடர்ந்து இரு மாதங்களில், 1936 நவெம்பர் மாதத்திலிருந்து முற்றுகை செய்யப்பட்டிருந்த மதிரித்து சரணடைந்தது. இத்துடன், ஏறக்குறைய மூன்றாண்டுகளாக நடைபெற்றதும் நூறாயிரம் உயிர்களை அழித்ததுமான இசுப்பானியக் குடிப் போர் முடிவுற்றது.

துருக்கி.

1914–18 ஆம் ஆண்டுப் போரினது எதிர்பாராததொரு விளைவு துருக்கியின் மறு பிறப்பாகும். ஒரு நூற்றாண்டாகத் துருக்கி "ஐரோப்பாவின் நோயாளி" யாகும் நலிவுறும் நிலையிலிருந்து கொண்டே வந்திருந்தது; பெரும் வல்லரசுகளுக்கிடையே நிலவிய போட்டிகளும் பொறாமைகளுமே, ஒற்றோமன் பேரரசு வீழ்ச்சியுறுவதினின்றும் அதனைத் தடுத்திருந்தன. கிரேக்க சிமேலை கைப்பற்றப்பட்டமையும் (1919), செவசுப் பொருத்தனை செய்யப்பட்டமையும் (1920) துருக்கிக்கு அளித்த அதிர்ச்சியே அதனது மறுபிறப்புக்குக் காரணமாயிற்று. துருக்கியர் தம் வசமிருந்த திரசு முழுவதையும் இழந்தனர்; அதோடு வரலாற்றுப் புகழ்வாய்ந்த கொன்சுதாந்திநோப்பிள் நகரமும் தற்காலிகமாகச் சருவதேசக் கட்டுப்பாட்டுக் குட்பட்டது. துருக்கிய அரசாங்கம் பொருத்தனையின் கட்டுப்பாடுகளுக்கு இணங்கியது; ஆனால் தேசியக் கட்சித் தலைவனை முசுத்தபா கமால் என்பவன் அவற்றை ஏற்காது விடுத்து, போட்டியரசாங்கமொன்றைச் சின்ன ஆசியாவிலுள்ள அங்கோராவில் நிறுவினன். துருக்கியர் கிரேக்கரைப் போரில் முறியடித்து மாபெரும் வெற்றி யீட்டியமையால், போர் நிலையில் முற்றுக மாற்றமேற்பட்டதுடன், அவர்கள் நட்புறவு நாடுகளிடமிருந்து உலாவுசேன் பொருத்தனையின்படி (1923) தமக்குச் சாதகமான நிபந்தனைக் கட்டுப்பாடுகளை அதிகம் பெறக் கூடியவராயுமிருந்தனர். அவர்கள் மொத்தம் 160 இலட்சம் குடித்தொகையினர் வாழும் பகுதிகளாகிய ஐரோப்பாவின் கொன்சுதாந்திநோப்பிளையும், கிழக்குத் திரசையும், சின்ன ஆசியாவில் அனத்தோலியாவையும் (சிமேலை உட்பட) வைத்திருக்க அனுமதிக்கப்பட்டனர். எனினும் பல நூற்றாண்டுகளாகத் தாங்கள் ஆட்சி செய்துவந்த பலத்தீனம், சீரியா, மெசப்பொத்தேமியா, அரேபியா ஆகிய மாகாணங்களை அவர்கள் கைவிட வேண்டியவராயினர்; ஆனால் முசுத்தபா கமால் நாட்டினம் சார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அரசை யமைக்க விரும்பினமையால், ஒற்றுமென் பேரரசு சிதைவுறுதலே எதிர்த்திலன்.

துருக்கிப் புரட்சி.

ஐரோப்பியருடைய கொள்கைகளைத் துருக்கியர் பின்பற்றுமாறு செய்வதற்கேற்றவாறு துருக்கியினது அரசியல், சமுதாய, பொருளாதார அமைப்புக்களை மாற்றியமைப்பதற்கான துருக்கியப் புரட்சியொன்று எற்படுவதற்கேற்றவழி இப்போது வகுக்கப்பட்டது. அதன் சிற்பியாக விளங்கியவன் நாட்டின் பாதுகாவலனை முசுத்தபா கமால். அவன் இப்போது கமால் அற்றுத் துருக்கி (துருக்கியர் தலைவன்) என்ற பெயரைச் சூட்டிக்கொண்டான். கிரேக்கருக்கெதிராக அவனடைந்த மிகப்பெரும் வெற்றியின் பின்னர், இடைக்காலத்துக்குரிய மதச் சார்பாட்சியின் கீழ் பாழடைந்துபோயிருந்த ஒரு நாட்டைத் தற்காலத்துக்குரிய நாடாக உருவாக்குங் கருமத்தைக் கவனிக்கலானான். அவனது திட்டம் "கமாலிசம்" என்ற ஆறு கோட்பாடுகளைக் கொண்டிருந்தது ; அந்த ஆறு நெறிகளும் "மக்கள் கட்சியினது" கொடியிலுள்ள சிவப்பு அடித்தளத்தில் ஆறு வெண்ணிற அம்புவடிவங்களால் குறிக்கப் பெற்றிருந்தன. முதலம்பு குடியரசுக் கொள்கையைக் குறித்தது. முடியாட்சி ஒழிக்கப்பட்டு, துருக்கியானது கமால் அற்றுத் துருக்கியைத் தலைவனைக் கொண்ட ஒரு குடியரசெனப் பிரகடனஞ் செய்யப்பட்டது. இரண்டாவதம்பு நாட்டினக் கொள்கையைக் குறித்தது. ஒருவன் துருக்கியக் குடிமகன் எனக் கொள்ளப்படுவதற்கு, அவன் நாட்டின் எல்லைக்குள் வசித்து, துருக்கிய மொழியைப் பேசி, துருக்கியக் கலவியைப் பயின்று "நாட்டினஞ் சார்ந்த இலட்சியத்தைத் தனதெனக் கொண்டிருக்க" வேண்டும். மூன்றுவதம்பு "மக்கள் நயத்தலாகும்." "தலைமையுரிமை பொதுமக்களிடமிருந்து தோன்றுகின்றது" என்னும் சொற்களால் இச்சொற்றொடருக்கு வரைவிலக்கணஞ் செய்யப்பட்டது. நான்காவதம்பு "எற்றுறிசம்" அல்லது தொழில் மயமாக்குந் திட்டமாகும். நாட்டினது பொருளாதார முன்னேற்றத்திற்காக, போக்குவரத்துக்கள், சுரங்கங்கள், பொதுப்பயனுக்குரிய பொருள்கள், கைத்தொழில்கள் ஆகியவற்றில் தனி மனிதருடைய முயற்சிகள் (அரசாங்கம் செய்ய மேற்கொண்டவைகளின் ஆதரவு பெற்று) அரசாங்கத்தினது கட்டுப்பாட்டுக்குள் அமைக்கப்பெற்றன. பஞ்சாலைகள், கம்பளி செயற்கைப்பட்டு ஆகியவற்றின் உற்பத்திக்கான தொழிற்சாலைகள், உருக்குத் தொழில் நிலையங்கள் ஆகியவற்றுக்கான அரசாங்க நிறுவகங்களை அமைத்தலே தொழிற்றிட்டத்தின் அடிப்படையாயிருந்து கொண்டிருந்தது. ஐந்தாவது, "செக்குலறிசம்" அல்லது "சமயச் சார்பற்றமையைக் குறித்த அம்பாகும்." காலிபு சார்ந்த பதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிக்கப்பட்டதால், துருக்கியநாடு தான் பெற்றிருந்த ஓரளவின தான சமயச் சார்பாட்சி முறைமையை நீக்கிக் கொண்டது. முடி யாட்சியின் கீழ் சுல்த்தான் இம்மைக்குரிய முடிமன்னனும் சமயத்தலைவனுமாயிருந்தான் (காலிபு) திகழ்ந்தான்; ஆனால் துருக்கியக் குடியரசு உத்தியோக பூர்வமானதொரு சமயத்தைக் கொள் ளாது, சமயப்பற்றற்ற தன்மையுடையதாயிருந்தது. ஆறுவது, "புரட்சிக் கொள்கையைக்" குறித்த அம்பாகும். மக்கள் கட்சி தனது திட்டத்தில், "அரசகருமபாலனத் துறையில், இக்கட்சி படிப்படியான முன்னேற்றத்துக்கான அல்லது படிமுறை வளர்ச்சிக்கான கோட்பாடுகளைக் கையாள வேண்டுமென்று பொறுப்பேற்பதில்லை" எனத் தெளிவாகக் கூறியுள்ளது. இறு தியாகக் கூறிய கோட்பாட்டுக் கேற்ப, கீழ் நாட்டு மக்களை மேலைட்டிலிருப்பவரைப் போன்றுக்குவதற்கான முறையில் மிகப்பரந்த மாறுதல்கள் செய்யப்பட்டன. "ஒரு பேனை தாருங்கள். உலகையே புதிதாக உருவாக்கித் தருகிறேன்" என்று சிகில்லா கூறியதற்கிணங்க, துருக்கியில் வல்லா ளன் ஒருவன் தனது எழுதுகோல் மூலம் இம்மாற்றங்களைச் செய்வதற்காக விடாமுயற்சியுடன் எடுத்த நடவடிக்கைகள், பதி னெட்டாம் நூற்றாண்டுக்குரிய "நன்மை விரும்பும் வல்லா ளரது" சீர்திருத்த ஆவலை நினைவூட்டுவதாயின. மக்கள் சிறிதளவாவது சமய முக்கியத்துவத்தைக் குறிக்கும் குல்லாய், தலைப்பாகை ஆகியவற்றை அணிவதினின்றும் தடுக்கப்பட்ட னர்; துருக்கியர் தாங்கள் மேலைட்டைச் சேர்ந்தவரெனவும் கீழ் நாட்டுக்குரியவரல்லரெனவும் காட்டுதற்காக ஐரோப்பியருக் குரிய தலையணிகளை அணிந்தனர். "மேல் நாட்டு மயமாக்கும்" செயல்முறையை வெளிப்படையாகக் காட்டக் கூடிய மற்றொரு செயல், முசுலிம்கள் வழக்கமாகத் தங்கள் ஓய்வுநாளாக இருந்து வந்த வெள்ளிக்கிழமைக்குப் பதிலாக, ஞாயிற்றுக்கிழமையைத் தங்களின் வார ஓய்வு நாளாக்கியதாகும். மேலும், பலதார மண முறை நிறுத்தப்பட்டது; பெண்களுக்கு விடுதலை வழங்கப் பட்டது; அவர்கள் முகமூடிகளணிவதைக் கைவிட்டனர்; மேலும் அவர்களுக்கு அரசியல், சமுதாயத்துறைகளில் ஆண்களுடன் சமவுரிமை வழங்கப்பட்டது. இன்னும், 1934 இல் அவர்களுக்கு வாக்குரிமையும் வழங்கப்பட்டது; அடுத்த ஆண்டில் நடை பெற்ற பொதுத் தேர்தலிற் பன்னிரண்டு பெண்கள் பேரவைக் குப் பிரதியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். அராபிய எழுத்துக்களுக்குப் பதில் இலத்தீன் எழுத்துக்களிலமைக்கப் பெற்ற ஒரு புதிய துருக்கிய நெடுங்கணக்கு அந்நாட்டிற் கட்டாய மாகப் புகுத்தப்பட்டமை, பாரதூரமான தொரு சீர்திருத்த மாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கெமால் அததேக்கு (1881-1938)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருக்கியிலேற்பட்ட மறுமலர்ச்சிக்கு அதனை ஆட்சிசெய்த வனது தனிப் பண்பே பெரிதும் காரணமாயிருந்தது. பிரித் தானிய தூதமைச்சருக்கு அவ்வாட்சியாளன், "நான் இறப் பினும், எனக்குப் பதிலாகத் தொண்டாற்ற ஓராயிரம் துருக்கி யர் உளர்" என்று கூறியபோது, அத்தூதர் "மாட்சிமைக் குரியவரே, தாங்கள் ஓராயிரம் மடங்கு மிகைபடக் கூறுகின் றீர்கள்" எனப் பதிலுரைத்தார். துருக்கியரசனது தலைமை யில் அந்நாடு அதிகார வாண்மையுடைய நாடாயமைக்கப் பெற்று, ஒருகட்சி முறை அடிப்படையிலமைந்த அரசாங்கத்தாற் பாலனஞ் செய்யப்பட்டது. அங்கே "பொதுமக்கள் கட்சி" யென்ற ஒரு கட்சி மட்டுமே செயலாற்றுமுரிமை பெற்றிருந்தது. எனி னும் அந்நாட்டில் கல்வி, கலாசாரம், சமுதாயம் ஆகியவை சம் பந்தமான பல துறைகளில் ஈடுபட மக்களுக்கு அனுமதி அளிக்கப் பட்டிருந்தமையினால், இத்தாலி, சேர்மனி, சோவியத்து இரசியா ஆகிய நாடுகளைப் போன்று துருக்கியைத் தனியாதிக்கக்கொள்கை நாடெனக் கொள்ளுதல் தவறெனக் கூறப்பட்டது. எவ்வகை யிலும், துருக்கி இதர நாடுகளுடன் கொண்ட தொடர்புகளில் வலிந்து தாக்கும் மனப்பான்மையுடனிருப்பதைத் தவிர்த்தே வந்திருந்தது. அது, உலாவுசேன் பொருத்தனையின் ஒரு பகுதி யைத் திருத்தியமைக்க வேண்டுமென மாநாடு வாயிலாக அமை திக் கோட்பாட்டுப்படியும் சட்டமுறைப்படியும் வல்லரசுகளுக்கு விடுத்த வேண்டுகோளுக்கும், சேர்மனி ஒருதலைச் சார்புடன் அப்பொருத்தனையை நிராகரித்தமைக்கு மிடையே குறிப்பிடத் தக்க வேறுபாடிருந்தது. உலாவுசேனிற் கூடிய "தொடுகடல் கள் பற்றிய கூட்டம்" (1923), தொடுகடல்கள் வட்டாரத்தைப் (பொசுப்பரசுவையும், தாதனெலீசையும்) படைவலி ஆட்சியிலி ருந்து விடுவித்து அக்கருமத்தை நிறைவேற்றுவதற்காகச் சருவ தேசச் சிறப்பாணைக் குழுவொன்றை நியமித்தது. அமைதிக் கோட்பாடுடைய பேரச் செயல்களின் விளைவாக, மொந்துறூ கூட்டம் (1936) உலாவுசேன் பொருத்தனையை நிராகரித்தது; துருக்கிக்குத் தொடுகடல்களின் அரண்களை வலுப்படுத்தும் உரிமை மீண்டும் வழங்கப்பட்டது; சருவதேசச் சிறப்பாணைக் குழு ஒழிக்கப்பட்டமையால் இது நிகழ்ந்தது. துருக்கி போரில் ஈடுபட்டிருக்கும் பொழுதேனும் அல்லது பிறரால் தாக்கப்படும் அபாயத்துக்குட்பட்டிருக்கும் பொழுதேனும் பிறநாட்டுப் போர்க் கலங்கள் தொடுகடல்கள் வழியாகச் செல்வதைத் தடுக்க அந் நாட்டுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. போர்க்காலத்தில் போரி லீடுபட்டிருக்கும் நாடுகளது போர்க்கலங்கள், நாட்டுக் கூட்டவை யினது ஆணைப்படியோ, துருக்கி செய்துள்ள ஒரு பிரதேசவொப் பந்தப்படியோ அன்றி, வேறெக்காரணத்திற்காகவோ தொடு

வெளிநாட்டுப் பூட்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்களுக் கூடாகச் செல்வது தடுக்கப்பட்டன. வியாபாரக் கலங்கள் அமைதியான காலத்திலும் போர்க் காலத்திலும் சுதந்திரமாக வியாபாரப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தன. முடிவாக, ஒரு புறம் துருக்கிக்கும் கிரீசுக்குமிடையில் மிக நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதும், மறுபுறம் இசுலாமியரது ஒற்றுமையுணர்ச்சியை ஆதரிப்பதும், அராபியா—இந்தியா ஆகிய நாடுகளின் அரசியற் குழப்பங்களில் ஆழந் தெரியாமல் காலை விடுவதுமாகிய பழைய துருக்கியப் பூட்கை கூரறிவுடன் கைவிடப்பட்டதினால், பெரிய பிரித்தானியாவின் ஆதரவு துருக்கிக்குக் கிடைத்ததென்றுங் கூறலாம். 1939 இல் புதுப்பிக்கப்பெற்ற ஆங்கிலேய-துருக்கிய உறவு, மரபொழுங்கு பற்றியதொரு நேச உடன்படிக்கையால் உறுதிப்படுத்தப்பட்டது.

கிரீசு.

சென்ற காலத்தையும் இக்காலத்தையும் சேர்ந்த கிரீசு நாட்டுக் குடிகளுக்கிடையில் எவ்விதமான இனச்சார்பு இருந்த பொழுதிலும், கலகமிடுவதில் இரு காலத்தினரும் தம்மிடையே ஒரு பொது மரபைக் கொண்டுள்ளன ரென்பது தெளிவு. பண்டைய கெல்லாசினரது அழிவுக்குப் பெரிதுங் காரணமாயிருந்த உள்நாட்டுச் சச்சரவுகள், இன்றைய கெல்லாசினரையும் பாதிப்பவையாயிருக்கின்றன. கிரேக்க மக்களுக்கிடையிலிருந்த கட்சி சம்பந்தமான கலவரங்கள், அரசாங்கத்தை நிருவகித்த கட்சியினர் மாற்றப்படுவதற்குக் காரணமாக விருந்ததுடன் அரசாங்கத்தையே மாற்றியமைப்பதாயுமிருந்தன. நாம் பின்னர் காணக்கூடியதுபோல், கிரீசில் முடியரசும் குடியரசும் மாறி மாறி ஏற்பட்டிருந்தன ; இவ்வாறு அந்நாடு அமைதி யற்றிருந்த படியால் அதன் வரலாற்றில் பல அரசியற் றவறுகள் நேர்ந்தன ; இதன் விளைவாய் நாடு எப்பொழுதுமே குழப்ப நிலையிலிருந்தது. தாங்கள் நாட்டம் வைத்திருந்த கொன்சுதாந்திநோப்பிள் தங்களுக்குக் கிடைத்ததும், பண்டைப் புகழ் மிக்க தங்களது பைசாந்தியப் பேரரசை மீண்டும் உயிர்ப்பித்து, "மாபெருங் கிரீசு" ஒன்றை அமைக்கவேண்டுமென்று கிரேக்க மக்கள் ஒருசமயம் நினைத்தனர். மேற்கத்திய வல்லரசுகளின் ஆதரவைப் பெற்றிருந்த வெனிசுலாசு என்பவன் ஒரு சிறந்த அரசறிஞன் எனக் கருதப்பட்டான். அவன் தனது ஆள்புலம் பற்றிய பேரவாவை அடையும் பொருட்டு 1914-18 ஆம் ஆண்டுப் போரில் மேற்கு வல்லரசுகளுக்கு ஆதரவளித்தான் ; எனினும் நேச நாட்டவரோடு சேர்ந்து செயலாற்றத்துணிவதான அவனது பூட்கை, நடுநிலை வகிக்க விருப்புற்றிருந்த கொன்சுதாந்தைன் மன்னனின் கருத்துடன் மோதிற்று. முடிவாக, 1917 இல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்சுதாந்தைன் தனது அரசுரிமையைத் துறக்க வேண்டு மெனக் கேண்மைவல்லரசுகள் அவனை வற்புறுத்தின. அவனது இரண்டாவது மகனை அலெச்சாந்தர் தந்தைக்குப்பின் அரசு ரிமையேற்று, வெனிசுலாசுவை மந்திரசபையொன்றை அமைக்கு மாறு பணித்தான். கிரீசு நாடு நேசநாடுகளுடன் சேர்ந்து, போரின் இறுதிக் கட்டத்தில் பல்கேரியாவைத் தாக்குவதில் அந் நாடுகளுக்கு உதவியதினால், பல்கேரியா போர் நிறுத்தம் செய்ய வேண்டிய அவசிய மேற்பட்டது. வெனிசுலாசும் சுவரெசுப் பொருத்தனையின்படி ஏராளமான சலுகைகளைப் பெற்றான்; எனினும் அவன் பெற்ற வெற்றி நெடுங்காலம் நீடிக்கவில்லை. அதே ஆண்டில் (1920) அலெச்சாந்தர் மன்னன் இறக்க, நாட்டு மக்கள் குடியொப்ப முறைமூலம் அவன் தந்தையை மன்னர்பதவிக்கு மீண்டுமழைக்க முடிவுசெய்தனர். அரசு ரிமையை மீண்டும் பெற்ற மன்னனுக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டன; அவன் நாடுகடத்தப்பட்டுத் தனது இறுதி நாட்களைக் கழிக்கவேண்டியதாயிற்று. துருக்கியருக்கும் கிரேக்க ருக்குமிடையில் பல மாதங்களாக நடந்து கொண்டிருந்த போர், துருக்கியர் சிமேனுவைக் கைப்பற்றி, எதிரியைக் கடலை நோக்கி யோடச் செய்ததுடன் முடிவுற்றது. அத்துடன் கெலனிக் குப் பேராசை நிறுவும் கனவு சிறிதும் நனவாகாதவாறு சிதைவுற்றது. கிரேக்கர் சின்ன ஆசியாவிலும் கிழக்குத் திர சிலுமிருந்து குடியெழுமாறு வற்புறுத்தப்பட்டதுடன், அனைத்துக் கும் மேலாக, கொன்சுதாந்திநோப்பிளைப் பெறலாமென்றிருந்த வாய்ப்பையும் அறவே இழந்தனர். ஒற்றோமன் ஆள்புலங்களில் வதிந்த கிரேக்க மக்கள், கிரீசு நாட்டிலிருந்த துருக்கிய மக்களுக்குப் பதிலாக இடமாற்றஞ் செய்யப்பட்டனர். கிரீசில், பரந்த அடிப்படையிலமைந்ததொரு காணிமுறை, நாட்டுக்கூட் டவையினது நிதி உதவியுடன் நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டது.

அரசியல் மாற்றங்கள்.

தங்களுக்குற்ற கடுந்துன்பத்திற்குத் தங்களரசனே காரண மெனக்கருதிய கிரீசுநாட்டு மக்களும் படையினரும் அவன் மீது சீற்றங்கொண்டனர். 1922 இல் அவன் மீண்டும் அரசு துறந்தான்—இத்தறுவாயில் அவனது மூத்தமகன் இரண்டாம் யோச்சு அரியணையேறி, அடுத்தவாண்டே நாடு துறந்தான். அதன் பின்னர், எம்முறையான யாப்பமைப்பை நிறுவவேண்டு மெனத் தீர்மானிக்குமாறு கிரீசில் குடியொப்பமொன்று நடாத் தப்பட்டது; அதில் பெரும்பான்மையோர் குடியரசை ஆதரித்து (1924) வாக்களித்தனர். இதனையடுத்துப் பங்லோசு என்னும் படைத்தலைவன் போர்ப்படைசார்ந்த ஒரு வல்லாட்சியை (1926)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவ முயன்றான்; ஆனால் அவனது திடீர்ப் புரட்சி வெற்றி பெறவில்லை. 1928 இல் வெனிசுலாசு மீண்டும் முதலமைச்சுப் பதவியையேற்று நான்காண்டுக் காலஞ் செயலாற்றினான். பொதுமக்களது தீர்ப்பை ஏற்றுக்கொள்ள மறுத்த முடியாட்சி வாதிகள் அவனை எதிர்த்து நின்றனர்; அவ்வெதிர்ப்பை அவன் சமாளிக்க வேண்டியவனாயிருந்தான்; இறுதியில் முடியாட்சிக்கு ஆதரவான கட்சிகளிலொன்று பதவியேற்றது; முடியரசு மீண்டும் தானிழந்தவுரிமையை உடனடியாகப் பெறப்போகின்ற தென்ற பீதியால், போர்ப்படையையுங் கடற்படையையுஞ் சார்ந்த வர்கள் ஆட்சிக் கெதிராக 1935 இல் கிளர்ச்சியொன்றைச் செய்தனர். வெனிசுலாசு அவ்வியக்கத்திற்குத் தலைமை வகித்தான்; அவனுக்குச் செல்வாக்கிருந்தும், அக்கிளர்ச்சி துரிதமாக வீழ்ச்சியுற்றது. குடியரசின் கதியைத் தீர்மானிக்க இன்னுமொரு குடியொப்பம் நடாத்தப்பட்டு, அது முடியாட்சி யின் சார்பாகத் தீர்ப்பளித்தது. இரண்டாவது யோச்சு மன்னன் மீண்டும் கிரீசுக்கு அழைக்கப்பட்டான்; சிறிது காலத் திற்குள், கிரேக்க நாடகத்தில் முக்கியமானவர்களாகத் திகழ்ந்த இருவர்—குடியரசுக்கட்சித் தலைவனும் அரசனைத் திருப்பியழைப்பதற்கு உடன்பட்டவனுமான வெனிசுலாசு என்பவன் ஒருவன்; மற்றவன் அரசனை யாக்குபவனும், அரசனைத் திரும்ப அழைப்பதற்கு முழுப் பொறுப்பேற்றவனும் அழைக்கப்பெற்ற மன்னனைத் தன் பூட்கையைக் கையாளும்படி கட்டாயப்படுத்த வேண்டுமென்று எண்ணியிருந்து ஏமாற்ற முற்றவனுமான படைத்தலைவன் கோண்டிலிசு என்பவன்—இறந்தனர். 1936 இல், எண்ணிக்கையில் அதிகரித்துக்கொண்டு வந்த வல்லாட்சி நாடுகளில் கிரீசும் ஒன்றானது. இது நிகழ்ந்தது எப்போதெனின், படைத்தலைவனனை மெற்றச்சசு முதலமைச்சனாகி, அரசியற் கட்சிகளைக் கலைத்துவிட்டு, அதிகாரம் பெற்ற அரசொன்றை நிறுவி, நாட்டைப் பாராளுமன்றமின்றி ஆட்சிசெய்த காலத்தில் என்க. கைத்தொழிற்றுறையில் நாளொன்றுக்கு எட்டுமணி நேர வேலை, சம்பள உயர்வு, தொழிற் பிணக்குகளைத் தீர்க்கக் கட்டாய நடுத்தீர்ப்பு முறை, தொழினிறுத்தங்களுக்கும் புறத்தடைப்புக்களுக்கும் தடை விதிக்கப்படல் போன்ற பல சமுதாயச் சீர்திருத்தங்கள் ஏற்படுத் தப்பட்டமைக்கு அவனது பாலனம் குறிப்பிடத்தக்கதாகும். கிரேக்கர் "உறுதியான" ஓர் அரசாங்கம் ஏற்படுவதற்காகத் தங்களது உரிமைகளை நிலையாக இழந்து விட உடன்படுவரோ வென்பதை எதிர்காலமே சொல்லக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1918 இல் போலந்து மீண்டும் பிழைத்தெழுந்தமை, அதனை அதனண்டைநாடுகள் பதினெட்டாம் நூற்றாண்டில் தமக்குள் பங்கிட்டுக்கொண்டமையின் விளைவாக அது அடைந்த இழப்புக்கு ஈடுசெய்வதாயமைந்தது. போலந்து புத்துயிர் பெற்ற முதற் சிலவாண்டுகளுக்குள், புதிய போலந்து தனக்கு முன்னிருந்த பழைய போலந்து மாய்ந்தமைக்குப் பெரும்பாலும் காரணமாயிருந்த கொந்தளிப்பான பாரம்பரியங்களையே, தானும் மரபுரிமையாய்ப் பெற்றுள்ளதாகக் காட்டியது. அது ஒவ்வொரு பக்கத்திலும் சச்சரவுக்குட்பட்டது—சேர்மனியோடு மேல் சைலீசியாவுக்காகவும், செக்கோசிலவாக்கியாவோடு கோமகன் ஆட்சிப் பகுதியான தெசுகனுக்காகவும், இலிதுவேனியாவோடு வில்லினுவிற்காகவும், இரசியாவோடு யூக்கிரேனுக்காகவும் அது சச்சரவில் ஈடுபட்டிருந்தது. முடிவாக, மேல் சைலீசியா சம்பந்தப்பட்ட பிரச்சினை ஒரு குடியொப்பம் மூலம் முடிவுசெய்யப் பட்டது; தெசுகன் நகரம் போலந்துக்கு உரியதாக்கப்பட்டது; கோமகனது ஆட்சிப் பகுதியிலிருந்த நிலக்கரிச் சுரங்கங்களும் புகையிரதப் பாதையும் செக்கோசிலவாக்கியாவிற்குக் கொடுக்கப்பட்டன; போலந்து வில்லினுவைக் கைப்பற்றிக் கொண்டது; இரசியரும் போலந்து மக்களைத் தோற்கடித்து அவர்களை உவாசோவின் கடைசியெல்லைவரை விரட்டிவிட்டு, மீண்டு வந்து எல்லைகள் சம்பந்தமாய்ப் பாரிசு அமைதி மாநாடு (1918) வழங்கிய சலுகையைவிட அதிகமானதை, இரீகா பொருத்தனையின்படி (1920) போலந்துக்கு அளித்தனர். போலந்து தானிழந்த நிலையைத் திரும்பவும் பெறுவதற்காக, தன் நாட்டிலுள்ள சிறுபான்மையோருக்குத் தான் உரிமைகள் வழங்குவதாக உறுதியளித்திருந்தது. எனினும் அவ்வுறுதிமொழிகளை அது இப்போது மறுத்தமை, நாட்டின் ஒற்றுமையைப் பெரிதும் பாதித்தது. போலந்து மக்கள் தமது உள்நாட்டு அரசியற் முறையிலும் அமைதியைக் கண்டாரல்லர். தங்களது நாட்டிலிருந்த சனநாயக ஆட்சிமுறையை வெற்றியுறச் செய்வதில் அவர்கள் தவறிவிட்டனர். எனவே 1926 இல் நாட்டின வீரனும் முன்னாட் குடிப்பதியுமான படைத்துறைத் தலைவன் பில்சுடுசுக்கி, போலந்தின் சனநாயகவரசைக் கவிழ்த்து, குடிப்பதியையும் அமைச்சவையையும் பதவி துறக்குமாறு கட்டாயப்படுத்தி, உண்மையான சருவாதிகாரியானான். பில்சுடுசுக்கி அரசாங்கத்தின் தலைமைப் பதவியை வகிக்காமலேதான் இறக்குமளவும் (1935) தானே போலந்தின் உண்மையான ஆட்சியாளனாகவும், உத்தியோகபூர்வமாகக் கருதப்படாத சருவாதிகாரியாகவும் இருந்தான். சட்டசபையினது அதிகாரத்தைக் குறைத்து, நிருவாகத்துறையினது

போலந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தை மிகுவிக்க அவன் கொண்டு வந்த பிரேரணைகள், பாராளுமன்றத்தின் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மை யினரது ஆதரவை 1935 ஆம் ஆண்டுவரை பெறுதிருந்தன. அவ்வாண்டில் கடந்த ஒன்பதாண்டுகளாகச் செயற்பட்டு வந்த புது யாப்பமைப்புத் திட்டம், சட்டப்படி அமுலாக்கப்படுவதா யிற்று. அன்றியும் மாநகர சபைகள், வணிக மன்றங்கள், ஊதியப் பணியாளர் அமையங்கள், தொழிற்சங்கங்கள் ஆகிய வைகளால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளடங்கிய தேர்தற் கழகங்களால் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் படுவரென்ற புதிய ஒழுங்கு, பழைய பாராளுமன்றப் பிரதியாளர் முறைக்குப் பதிலாகப் புகுத்தப்பட்டது. "தேசிய ஒற்றுமைக் கட்சி" யெனும் பெயரினதாகிய ஒரு கட்சி, நாட்டிலுள்ள ஒரே அரசியற் கட்சியாகத் திகழவேண்டுமென்ற நோக்கத்துடன் தோற்றுவிக்கப்பட்டமை, பாசிசக் கொள்கையாட்சி போன்ற அதிகாரவாண்மை ஆட்சி யொன்று போலந்தில் நிறுவப் படுவதற்கு அறிகுறியாயிற்று. அக்கட்சி கட்டாயப் "போலந்து மயமாக்கல்" என்னும் பூட்கையை ஆதரித்தமை, அநேக சிறு பான்மையினரது பீதியைக் கிளப்பியது. இவ்விதமாக, போலந் தில் புத்தமைப்பு நடைபெற்ற கொந்தளிப்பான இருபதாண் டுக் காலத்தில், 1914–18 ஆம் ஆண்டுப் போரில் அழிவுற்ற பேரரசுகளின் சிதைவுகளிலிருந்து உருவாக்கப்பட்ட ஏனைய நாடுகளைப் போல், போலந்து நாடும் பேரரசுகள் கொண்டிருந்த பேரவாக்களினாலும், சனநாயகத்திற்கெதிரான எழுச்சிகளி னாலும், இனம் சம்பந்தப்பட்ட பழம் பகைகளினாலும் இன்னல் களுக்குட்பட்டது. போலந்தின் உள்நாட்டு நிலை நாளுக்கு நாள் சீர்குலைந்தும் கலவரமுற்றும் இருந்தது; இறுதியில் சேர்மனியினுற் போலந்தினது தன்னுரிமைக்கும் ஆள்புலம் சார்ந்த முழுமைக்கும் அபாயம் ஏற்படுமெனத் தோன்றிய போது அந்நிலை மறைவதாயிற்று.

வெளிநாட்டுப் பூட்கை.

பல நூற்றாண்டுகளாகக் கிழக்கைரோப்பாவில் தியூதோனிக்கு இனத்தவருக்கும் சிலவோனிக்கு இனத்தவருக்குமிடையில் ஓர் "ஏம" நாடாகத் தொண்டாற்றுவதையே போலந்து தனது வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. அது வலியுடையதாயிருந்த காலமுழுவதும் இக்குறிக்கோளை நிறை வேற்றி வந்தது; எனினும், அது நலிவுற்ற காலத்தில் அதனது அண்டை நாடுகள் அதை அழிக்க ஒன்று சேர்ந்தன: தனதுரிமை தன் கைக்கு மீண்டும் கிடைத்ததுமே, போலந்து தனது வரலாற்றுப் புகழ்பெற்ற கருமத்தையாற்றத் தலைப் பட்டது. எனினும் அதனாலாய புகழ், அதனோடு சேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுக்கண்களால் மட்டுப்படுத்தப்பட்டது. வெவ்வேறான காரணங்களுக்காகப் போலந்து, இரசியாவுடனும் சேர்மனியுடனும் பகைமை கொண்டிருந்தது—போல்சிவிக்குக் கொள்கையெனும் நோய் தன் மக்களைப் பீடித்துவிடும் என்பதற்காக முன்னைய நாட்டுடனும், கிழக்குப் பிரசியாவைச் சேர்மனியின் ஏனைய பகுதிகளிலிருந்து பிரித்து வைத்த "போலந்து இடைவழி", தான்சிக்குத் துறைமுகம் ஆகியவற்றின் காரணமாய்ப் பின்னைய நாட்டுடனும் போலந்து பகைமைகொண்டிருந்ததென்க. எனவே, அதற்குப் பிரான்சே இயற்கையான நேச நாடாயிருந்தது. போல்சிவிக்குக் கொள்கை பரவியமையாலும், சேர்மனி மீண்டும் வலிமையடைந்தமையாலும் பீதியுற்ற பிரான்சு, எப்பொழுதுமே போலந்து தன்னுரிமையையடைய வேண்டுமென்பதற்காக ஆர்வங் கொண்டு முயற்சித்தது. இதற்கிசைய இரு நாடுகளும், காரணமின்றித் தம்முள் ஒன்று தாக்கப்பட்டால் ஒன்றுக் கொன்று உதவி செய்ய வேண்டுமென உடன்பட்டு, 1921 இல் தங்களுக்கிடையில் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டன. மேலும் படைத்துறை சம்பந்தமான நோக்கங்களுக்காகப் பிரான்சு போலந்துக்குக் கடன்களும் கொடுத்தது. சேர்மனி பெற்ற நலப்பேறு, போலந்தின் நிலைமையை மிகவும் இக்கட்டானதாகச் செய்வதாயிற்று. படைத்துறைக்குரிய கூட்டுறவுகளுடனும் முரண்பட்ட இலட்சியக் கோட்பாடுகளுடனும் யாதொரு தொடர்பு மற்றிருக்கவும், தாக்காட்டு பூட்கையைப் பின்பற்றவும், தனக்கு அண்மையிலுள்ள வலுமிக்க நாடு எதனுடனும் எதுவித ஒப்பந்தமும் செய்யாதிருக்கவும் போலந்து முயற்சித்தது. போலந்தும் இரசியாவும் ஒன்றையொன்று தாக்குவதில்லையெனவும், மற்றுமொரு நாடு அவற்றிலொன்றைத் தாக்கும்பொழுது அந்நாட்டிற்கு உதவியளிப்பதில்லை யெனவும் ஒப்புக்கொண்டு, மீச்செல்லாமை சார்ந்த பொருத்தனை யொன்றை 1932 இல் இவ்விரு நாடுகளும் செய்துகொண்டன. ஈராண்டுகளுக்குப் பின் போலந்தும் சேர்மனியும் போரில் ஈடுபடுவதில்லை யெனத் தீர்மானித்து, பத்தாண்டுக்கால மீச் செல்லாமை ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டன. இவ் வொப்பந்தங் காரணமாக, சேர்மனியில் அதிக உணர்ச்சியைக் கிளப்பிய "போலந்து இடைவழி"ப் பிரச்சினை இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிற்போடப்படுமென நம்பப்பட்டது. அதுவு மன்றி போலந்து இரசியாவுடன் செய்திருந்த பொருத்தனையோடு, இவ்வொப்பந்தமும் சேர்ந்து போலந்தை வருத்திவந்த கொடிய ஆபத்தான நிலையிலிருந்து அதனைக் காப்பாற்றுமெனத் தோற்றியது; அந்த ஆபத்து நிலை யாதெனில், தன் ஆள்புலம் மீண்டும் ஐரோப்பாவின் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களமாகலாம் என்று போலந்து கொண்டிருந்த பீதியென்க. எனினும் தேசியச் சமூகவுடைமை நாடுகளால் செய்து கொள்ளப்பட்ட பொருத்தனைகள், ஒருபுறத்தில் நிலைமையைச் சமாளிப்பதற்கு ஆவன செய்யப்படுவதற்காகவும் மறுபுறத்தில் அபாயத்தைத் தடுப்பதற்காகவும் பயன்பட்டன வென்பதை நடைபெற்ற நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டின. ஒசுற்றியாவும், செக்கோசிலவாக்கியாவும், மெமலும் கைப்பற் றப்பட்டபின், சேர்மனி தனது அண்டை நாடான போலந்தி னிடம் கோரிக்கைகள் செய்வதற்குத் தலைப்பட்டது; போலந்து அக்கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்தது. இவ்வாறுகப் போலந்து, மூன்றுந்தடவையாக அமைக்கப்பட்ட சேர்மானியக் குடியரசின் தாக்குதலை எதிர்த்த முதல் நாடாகும் பெருமை பெற்றது. 1939 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் பெரிய பிரித்தா னியாவும் பிரான்சும் அளித்த பாதுகாப்பு நட்புறவைப் போலந்து ஏற்றுக்கொண்டது; 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் முதற் திகதியன்று சேர்மனி, போலந்தின் ஆள்புலத்துக்குட் புகுந்தது. இரண்டு நாட்களுக்குப் பின் மேற்கத்திய வல்லரசு கள், தாங்கள் போலந்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளுக் கிணங்க, மீச்செலவு செய்த நாடாகிய சேர்மனியோடு போர் தொடுத்தன.

பெல்சியம்.

பெல்சியம் தனது நடுநிலையைப் பாதிக்க எழுந்த வலுவந் தத்தை வீராவேசத்துடன் எதிர்த்தமையினால், 1914-18 ஆம் ஆண்டுப் போர், நாட்டினப் பேரவாக்களும் பொருளாதாரப் போட்டிகளும் சம்பந்தப்பட்ட மோதுதல்களால் மூண்டதெனக் கொள்ளப்படும் நிலையிலிருந்து, சருவதேச உடன்பாடுகளின் புனிதத் தன்மையையும் சிறிய நாடுகளின் உரிமைகளையும் நிலைநாட்டுவதற்காகச் செய்யப்பட்ட அறப்போரெனக் கொள்ளப் படும் நிலையையடைந்தது. தான் எதிரியிடமிருந்து கைப்பற்றிய நாடுகளைச் சேர்மனி நடத்தியமுறை, அது போரில் வெற்றியடைந் தால் நிலைமை எவ்வாறிருக்குமென்பதைக் காட்டக் கூடியதொரு படிப்பினையாக விருந்தது. "பெல்சிய மக்களின் உணர்ச்சியை அடக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் வலுவந்தமாகச் சேர் மானியர் அந்நாட்டில் நுழைந்து தோற்றுவித்த கொடுமை யியக்கம், தற்காலப் போரினது கருத்தையும் நோக்கத்தையும் பலகாலத்துக்குக் குறிக்கும் அடையாளமாகும். போர் செய்தலை ஈவிரக்கமற்ற கருமமாகக் கருதிய போர் மறவர், வல்லாட்சி யாளரிட்ட கட்டளையை ஏற்று, வீடுகளைக் கொள்ளையடித்தும் தீக்கிரையாக்கியும் குடியாட்களை நாடுகடத்தியும் தாறுமாறுகக் கொன்று குவித்தும் வந்தனர்". போர் நடவடிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தவுடனே போரினால் அழிவுற்றவற்றைச் சீர்ப்படுத்துவதில் நாட்டின் சத்திகள் ஈடுபடுத்தப்பட்டன; பொருளாதார மறு சீரமைப்பு வேகமாய் நடத்துவிக்கப்பெற்றது. இப்போது பெல் சியத்துக்கு இரு முக்கிய பிரச்சினைகள் இருந்தன. அவற்று ளொன்று மொழி சம்பந்தமான பிரச்சினையாகும். மொழி சம்பந்தமாகப் பெல்சியம் சீரானதாக இருக்கவில்லை—தெற்கி லுள்ளதும் நாட்டின் அரைப்பங்கு குடித்தொகையினரைக் கொண்டதுமான உவாலூன் மாகாணங்களில் பிரான்சிய மொழி பேசப்படுகிறது; வடக்கில் பிலெமிசு மாகாணங்களில் பிலெமிசு மொழி பேசப்படுகிறது. சேர்மானியர் பெல்சியத் தில் வலுவந்தமாகப் புகுந்திருந்த காலத்தில், இன வேறு பாடுடைய இரு சாதியினர் ஒன்று சேர்ந்து வாழ்ந்து வந்த அந்நாட்டிலிருந்து பிலாந்தேசுவைப் பிரித்து, அவ்விரு சாதி யினரின் ஒற்றுமையைக் கெடுக்க வேண்டுமென்ற சூழ்ச்சியுடன் தனியானதோர் இயக்கத்தை அவர்கள் ஊக்கினர்; இவ்வியக் கம் சித்திபெறவில்லை யெனினும், உவாலூன் மக்களுக்கும் பிலெமிசு மக்களுக்குமிடையில் ஒரு பிளவை உருவாக்கிற்று. பிலெமிசு மொழிக்கும் பிரான்சிய மொழிக்கும் சம உரிமை அளிக்கப்பட வேண்டுமெனச் செய்யப்பட்ட கிளர்ச்சி, அரசியற் றுறையில் பிரதிபலித்தது மட்டுமன்றிப் பல அமைச்சவைகளின் வீழ்ச்சிக்கும் காரணமாயிருந்தது. இப்பூசலைத் தீர்க்க, தொடர் பான சலுகைகள் அளிக்கப்பட்டதுடன், பிலெமிசு மொழி பேசும் மக்கள் வாழ்ந்த மாகாணங்களில் பிலெமிசு மொழியே பால னம், சட்டமன்றம், கல்வி ஆகிய துறைகளில் அரசகரும மொழி யாகவும் ஆக்கப்பட்டது. பெல்சியத்துக்கிருந்த இன்னொரு பிரச் சினை அந்நாட்டின் சருவதேச மதிப்பு நிலையைப் பொறுத் தெழுந்ததாகும். தனது நடுநிலைமையை ஆதரித்து அளிக்கப் பட்ட சர்வதேச உறுதியீடு கவைக்குதவாக் கடதாசித் துண்டாகக் கருதப்பட்டதன் காரணமாக, பெல்சியம் தனது பாதுகாப்புக் காக நேசநட்புறவுகளை ஏற்படுத்தத் தனக்கு உரிமை வேண்டு மென விரும்பியது; இதனால் 1918 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெல்சியத்தின் நடுநிலைமை மாற்றத்துக்குட்பட்டது. இதற் கிணங்க, பெல்சியத்தின் நடுநிலைமையை யொட்டிச் செய்யப்பட்ட பொருத்தனைகள் நிராகரிக்கப்பட்டன; பெல்சியம் பிரான் சுடன் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டது. எனினும், சேர்மனி மீண்டும் வலியுற்றமையும் நாட்டுக் கூட்டவை நலி வுற்றமையும், பெல்சியம் இதர சிறிய நாடுகளைப் போல், வலிமைவாய்ந்த தன் அண்டை நாட்டினது கோபாக் கினிக்கு இலக்காகாது இருக்குமாறும் மற்ற நாடுகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது எவ்விதமான ஒப்பந்தங்களுக்கும் உட்படாதிருக்குமாறும் செய்து, பெல்சியத்தின் பாதுகாப்பை வேறு வழியிற் பெறத் தூண்டின. எனவே பெல்சியம் மீண்டும் தான் நடுநிலைமையுடனிருக்க வகை தேடியது. 1937 இல் பெரிய பிரித்தானியாவும், பிரான்சும் உலொக்கார்னோப் பொருத்தனையின்படி ஏற்பட்டிருந்த கடப்பாடுகளிலிருந்தும் பெல்சியத்தை விடுவித்தன; அதே சமயம், அவை பெல்சியத்திற்குரிய ஆள்புல முழுமையை ஆதரித்து அளித்திருந்த உறுதியீடுகள் எவ்விதமும் பாதிக்கப்படமாட்டாவெனவும் கூறின. இதன் விளைவாக, சேர்மனியும் பெல்சியத்தின் முழுவுரிமைத் தத்துவத்தை மதிப்பதாக வாக்குறுதி கொடுத்தது; எனவே பெல்சியம் தான் 1914 ஆம் ஆண்டுவரை பெற்றிருந்த சருவதேச நிலை மதிப்பைக் கிட்டத்தட்ட அடைவதாயிற்று.

அங்கேரி. அங்கேரி 1914–18 ஆம் ஆண்டுப் போரின் விளைவாகத் தனது முன்னைய நிலையின் சாயையாகவே வெளித்தோன்றுவதாயிற்று. திரியனன் பொருத்தனையின்படி (1920) அது தனது ஆள்புலத்தில் மூன்றில் இரு பாகங்களை இழந்தது; அங்கேரி செல்வாக்குடன் திகழ்ந்த காலத்தில் அதனுல் இகழப்பட்ட பல நாட்டினர், மரபுரிமையாக அதற்கிருந்த இடங்களில் இப்பொழுது புகுந்தனர். திரான்சில்வேனியாவை உரூமேனியாவுக்கும், குரோசியாவை யூகோசிலாவியாவுக்கும், சிலோவாக்கியாவைச் செக்கோசிலவாக்கியாவுக்கும் கையளிக்க வேண்டியதாயிற்று. 210 இலட்சமாகவிருந்த அங்கேரியக் குடிமக்கள் இப்போது 75 இலட்சமாகக் குறைக்கப்பட்டனர். இவர்களில் $62\frac{1}{2}$ இலட்சம் மக்கள் மகியார் இனத்தவராவர். 30 இலட்சம் மகியார் அயலார் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தனர். அங்கேரி ஒசுற்றியாவுடன் கொண்டிருந்த ஐக்கியம் கலைக்கப்பட்டது. "சென் சிதீபன் என்பவரது புனித முடியை" அணிய வேண்டிய அங்கேரி மன்னன், "வழிக் கொள்ளல் நாடுகளின்" எதிர்ப்பினுல் அரசுரிமையைப் பெறமுடியாதிருந்தான். அங்கேரியச் சிங்காசனத்தில் அரசனில்லாவிட்டாலும், அது ஓர் இராச்சியமாகவே விளங்கியது. கடற்படைத் தலைவனை அகோதி என்பவன், முன்னுள் அரசன் கார்ள் என்பவனது பதவியிலமர்ந்திருந்தான். அவனுக்குப் "பதிலாளி" என்ற பட்டமும் வழங்கப்பட்டிருந்தது. கார்ள் மன்னன் 1921 இல் தனதாட்சியைக் கைப்பற்ற இருதடவைகள் முயற்சித்தான். எனினும் நேச உடன்படிக்கை செய்திருந்த நாடுகள், மகியச் சாதியார் மீண்டும் அங்கேரிய நாட்டுடன் இணையும் வழியை உண்டுபண்ணக்கூடிய முடியரசுக் கொள்கைக்கு இடங்கொடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்து எதிர்ப்புக் காட்டியமையால், அவனுடைய முயற்சிகள் தோல்வியுற்றன. அங்கேரி சிறிது காலத்திற்கு, இரசியரது முன்மாதிரியைப் பின்பற்றி ஒரு சோவியத்துக் குடியரசெனப் பிரகடனஞ் செய்யப்பெற்றது. இது 1919 ஆம் ஆண்டில் பெலாகுன் என்பவன் அதிகாரத்தைக் கைப்பற்றி; பொதுவுடைமை ஆட்சி யொன்றை நிறுவிய காலத்தில் நடந்தது. நாட்டைத் தனித்தனியாகப் பிரிக்க அவன் எடுத்த முயற்சிகள் அவனை "புதிதாக உண்டான நாடுகளுடன்" முரண்படச் செய்தன; உரூமேனியப்படைகள் அங்கேரிய நாட்டின் ஆள்புலத்திற்குள் புகுந்து தலைநகரைக் கைப்பற்றின. அங்கேரியில் அமைக்கப்பட்டிருந்த சோவியத்துக்குரிய ஆட்சிமுறை சில மாதங்களுக்கு மாத்திரமே நிலைத்துப் பின் வீழ்ச்சியடைந்தது; பழமை பேணும் கொள்கையினர் இப்போது அங்கேரியில் அதிகாரத்தைக் கைப்பற்றினர். எதிரிடையான இரு பாசிச இயக்கங்கள்—ஒன்று அங்கேரியிற் குடியேறியிருந்த சேர்மானியரிடையிலும், இன்னொன்று மகியாரிடையிலும் உண்டாயின. எனவே ஆப்சுபக்கு அரசமரபை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவரவேண்டுமென்பதற்காகச் சட்டமுறைக் கொள்கையினர் செய்த இளர்ச்சிக்கு அதிக ஆதரவு அளிக்கப்பட்டது. இவ்வாதரவு பாசிச வல்லாட்சிக்குப் பதிலாக யாப்பமைப்புச் சார்ந்த முடியரசை விரும்பியவர்களால் வழங்கப்பட்டது. திரியனன் பொருத்தனை திருத்தி அமைக்கப்படவேண்டுமென்று அங்கேரிநாடு விடாப்பிடியாகவும் மனந்தளராமலும் கோரியபொழுதிலும், போருக்கு முன் தான் பெற்றிருந்த எல்லைப்புறங்கள் தனக்குத் திரும்பவும் கிடைக்குமென்ற நம்பிக்கையை அந்நாடு இழந்தது. எனினும் செக்கோசிலவாக்கியா துண்டாடப்பட்டமையால், காபதோ-யூக்கிரேனையும், சிலோவாக்கியாவின் ஒரு பகுதியையும் கைப்பற்றுவதற்கான வாய்ப்பு (1938) அங்கேரிக்குக் கிடைத்தது.

சேபியாவினது நிலையை ஒசுற்றியாவினது நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தல், தனி மனிதனொருவனைச் சூழ்நிலை எவ்வாறு பாதிக்கிறதோ அவ்வாறே நாடுகளினது நிலையையும் அது பாதிக்கிறதென்ற உண்மைக்குக் குறிப்பிடத்தக்க எடுத்துக் காட்டு கிடைக்கும். சேபியாவை ஒசுற்றியா போருக்கு அறை கூவிய பொழுது—இதுவே 1914-18 ஆம் ஆண்டுப் போருக்கு உடனடியான காரணமாயிருந்தது — ஒசுற்றியா ஒரு பேரரசாக விளங்கியது. அப்பேரரசில் அடிமைப்படுத்தப்பட்டிருந்த பல நாட்டினங்கள், ஒசுற்றியாவில் ஆதிக்க நிலையிலிருந்த இனத்தின் கூட்டுத் தலைமையை ஏற்றுக்கொண்டிருந்தன. யூகோசிலாவியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு முற்றும் மாறுக சேபியா, தன்னை ஆட்சி செய்த குடும்பங்களிடையே நிகழ்ந்த கலவரங்களினால் பாதிக்கப்பட்டு வலிமை குன்றிய ஒரு சிறிய பின்தங்கிய நாடாகவிருந்தது. வீயன்னாவிலிருந்து பறந்த தீப்பொறியினால் ஐரோப்பாவில் மூண்ட பெருந்தீ எரிந்து தணிந்த பின், சேபியாவுக்கு விரிந்த ஆள்புலமும் அதிக குடித்தொகையுங் கிடைத்தன; ஆனால் ஒசுற்றியாவோ தனது பெரும் பேரரசைப் பறிகொடுத்திருந்தது. சேபியா, குரோசியா, மொன்றெநீகிரோ, சுலொவேனியா, தலுமேசியா, பொசினியா, எசேகோவினா ஆகிய நாடுகள் ஒன்று சேர்க்கப்பெற்று, யூகோசிலாவியா என்ற நாடாக 135 இலட்சம் குடிமக்களோடு உருவாக்கப்பட்டது. தென் சிலாவிய (யூகோசிலாவியர்) இனத்தவரை ஒன்றுகச் சேர்க்குமுகமாக, இனவேறுபாடுடைய முற்கூறிய நாடுகளிலிருந்த மக்களை இணைக்கும் அடிப்படையில் அவ்வினைப்பு ஆக்கப்பெற்றது. போரின் விளைவினால் ஏற்படுத்தப்படுகிற ஒரு புதிய நாடு—சேபியா விரிவாக்கப்பட்டமையால் யூகோசிலாவியா ஒரு புது நாடாக உண்மையில் உருவாக்கப்பட்டது—தனது முழுமையையும், தான் நீடித்து நிற்பதையும் பேணுவதென்பது அதனை ஆள்வோரின் அரசறிவைப் பொறுத்ததாகும்; பல்வேறு குழுக்கள் அரசியலில் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டியிருந்தமையினால், அவற்றிடையே தடுக்க முடியாதவிதமாக எழும் பிணக்குகளைச் சமாளிப்பதற்காக, ஆட்சிசெய்யும் அவ்வரசறிஞர்கள் கொண்டிருக்கும் தகைமையையும் அது பொறுத்ததாகும். யூகோசிலாவியாவிலே ஒன்றுபட்டதும் ஒருமுகப்படுத்தப்பட்டதுமான அதிகாரங்களைக் கொண்ட முடியாட்சிமுறை சார்ந்த அமைப்பையா, குரோசியருக்குப் பிரதேசத் தன்னாட்சி உரிமையை அளிப்பதும் கூட்டாட்சி முறையைத் தழுவியதுமான கட்டுக்கோப்பற்ற அமைப்பையுடைய ஆட்சிமுறையையா ஏற்படுத்துவது என்னும் முக்கியமான பிரச்சினை பற்றிக் கடுமையான வாதம் எழுந்தது. கத்தோலிக்கரான குரோசியரும் சிலோவனியரும், வைதிகக் கொள்கையினராகிய சேபியர் தங்கள்மீது ஆதிக்கஞ் செலுத்துவதை விரும்பவில்லை; பன்முகப்படுத்தப்பட்டதும், தன்னாட்சி உரிமை பெற்ற சமுதாயங்களையுடையதுமான கூட்டாட்சி முறை தங்களுக்கு வேண்டுமென அவர்கள் பிடிவாதமாயிருந்தனர். இதனால் ஒரு குரோசியப் பாராளுமன்றமும், தனியானதொரு பாலன முறையும் ஏற்படவேண்டுமென்றுயிற்று. குரோசியருக்கு மொழிவாளராகவிருந்த ஒருவன், "வெளிநாட்டுப் பூட்கையைப் பொறுத்த பொதுக் கருமங்களில் மட்டும் நாங்கள் சேபியரோடு சேர்வதைத் தவிர்த்து மற்றெல்லாத் துறைகளிலும் அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டவமைப்புத் துறையிலும் நிருவாகத் துறையிலும் நிறை வான தன்னுரிமை கோருகிறேம்" எனக் கூறினன். 1928 இல் குரோசியரது தலைவர்கள் பாராளுமன்றத்திற் கொலை செய்யப்பட்டபோது இப்பிரச்சினையின் முக்கியத்துவம் உச்ச நிலையடைந்தது. குரோசியர் தாம் எதிர்ப்புக் காட்டுமுக மாக, சட்டசபையைப் புறக்கணித்தனர். அடுத்த ஆண்டில், கூட்டாட்சியை வெறுத்த அலெச்சாந்தர் மன்னன், யூகோ சிலாவிய நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்படுவதைத் தடுத்து ஐக்கிய நாடொன்றை உருவாக்கும் நோக்கங்கொண்டு தன் முழு வலிமையையும் பயன்படுத்தி ஒரு வல்லாட்சியை ஏற்படுத்தினன். யூகோசிலாவிய அரசுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சட்டமுறையான பட்டமாகிய "சேபியரதும் குரோசியரதும் சிலோவனியரதுமான அரசு" என்னும் பெயர் நீக்கப்பட்டு, "யூகோசிலாவியரது அரசு" என்னும் பெயர் ஒற்றுமையின் அடையாளமாகக் கொடுக்கப்பட்டது. அங்கு யாப்பமைப்புச் செயற்படாது தடுத்து வைக்கப்பட்டது; குடியாட்சி நிறுவனங்கள் ஒதுக்கி வைக் கப்பட்டன; அரசியற் கட்சிகள் கலைக்கப்பட்டன; கண்டிப்பான அச்சுலகுத் தணிக்கையும் அமுலாக்கப்பட்டது. அலெச் சாந்தர் மன்னன் பிரான்சுக்குச் சென்றிருந்த சமயம் கொலை செய்யப்பட்டான். அவன் 1934 இல் கொலை செய்யப்படும் வரை அவனே இவ்வதிகாரங்களைச் செலுத்தியிருந்தான். உள்நாட்டு ஒற்றுமைக் கேட்டினுல் அழிவுக்குள்ளாகியிருந்த செக்கோசிலவாக்கியாவிற்கு வந்துற்ற கதி, யூகோசிலாவியா விற்குத் தக்கவமயத்திற் கொடுக்கப்பட்டதோர் எச்சரிக்கையா கியது. 1934 இல் குரோசியரால் விடுக்கப்பட்ட தன்னுட்சிக் கோரிக்கைகள் வழங்கப்பட்டன. யூகோசிலாவியாவின் வெளி நாட்டுத் தொடர்புகள் சம்பந்தமாக, 1937 இல் அது இத்தா லியுடன் செய்துகொண்ட பொருத்தனை மிக முக்கியமானதொரு நிகழ்ச்சியாகும்; இப்பொருத்தனை, எத்திரியாற்றிக்குக் கடல் சார்ந்த அவ்விரு அண்டை நாடுகளுக்குமிடையில் நிகழ்ந்த கல வரங்களைச் சிறிது காலத்துக்கு மட்டுப்படுத்தி வைத்திருக்கவும், அவ்விருநாடுகளும் ஒன்று மற்றொன்றின் எல்லைப்புறங்களை மதிப்பதற்கு உறுதியளிக்கவும் உதவியது.

உரூமேனியா நட்புறவு நாடுகளோடு சேர்ந்து 1914–18 ஆம் ஆண்டுப் போரில் ஈடுபட்டமையினுல் அதற்கு அதிக நன்மை எற்பட்டது. ஏனெனில் அமைதியையொட்டிய ஒழுங்கேற்பாட்டி னுல் அதன் ஆள்புலம் இருமடங்காக்கப்பட்டதோடு, அதன் குடித்தொகையும் 160 இலட்சத்திற்கு அதிகமாக்கப்பட்டது. அது இரசியாவிடமிருந்து கைப்பற்றியிருந்த பெசரேபியாவைத் உரூமேனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடம் வைத்துக்கொண்டது. அத்துடன் அதற்குத் திரான்சில் வேனியாவில் முழுப்பாகமும், புக்கோவினாவில் பெரும்பாகமும், தெமெசுவாரில் பாதியும், தொபுரூசாவும் கொடுக்கப்பட்டன. இவ் வாறு விரிவாக்கப்பட்ட உரூமேனிய நாட்டின் தொடக்க வர லாறு, அரசியற் பிரச்சினைகளைச் சமாளிப்பது சம்பந்தமாய்ப் போலந்தின் வரலாற்றையே ஒத்திருந்தது. உரூமேனியா அரசி யற் பிரச்சினைகளைச் சமாளிப்பதில் தன்மீது திணிக்கப்பெற்ற பெருமைக் கொப்ப நடக்கத் தவறிவிட்டது. பேடினந்து அர சனது (அவன் 1927 இல் இறந்தான்) ஆட்சிக்காலத்தில் உரூ மேனிய அரசியற்றுறையில் மிக்க ஆதிக்கமுற்று விளங்கியவன் யோன் பிரற்றியானு என்பவன். இவன் தாராளக் கட்சித் தலைவனுகவும், நாட்டின் உண்மையான வல்லாட்சியாள னுகவு மிருந்தான். இவனது கட்சி பரந்த நோக்கமுடைய பெயரைக் கொண்டிருந்தும் பழமைபேணுவதாகவேயிருந்தது. அது வணிகம், நிதி ஆகிய துறைகள் சார்ந்த அக்கறை யுடையதாயிருந்தது. பிரற்றியானு தேர்தல்களைச் சூழ்ச்சித் திறத்துடன் நடாத்தி, தனது பதவியைக் காப்பாற்றினன். 1927 இல் அவன் இறந்த பின்னரே, தேர்தல்கள் தடையின்றி நடைபெற்றன. அவற்றின் விளைவாக "குருதி சிந்தாப் புரட்சி" யொன்று ஏற்பட்டதாகக் கருதப்பட்டது. ஏனெனில் சனநாயக ஆட்சிமுறை, தங்குதடையற்ற தேர்தல் ஆகியவைகளை விரும் புவதையும், அச்சுலகுத் தணிக்கையை ஒழிப்பதையும், சிறு பான்மையோர் உரிமைகளை ஒப்புக்கொள்வதையும், வெளிநாட்டு மூலதனத்தை முன்னரிலும் மேலதிகமாக விழைவதையும் ஆதரித்த தாராளப் பூட்கையையுடைய "தேசிய உழவர்" கட்சி அப் "புரட்சி" காரணமாகப் பெருமிதத்துடன் ஆட்சிக்கு வந்தது (1928). இரண்டாம் கரோல் மன்னன்—அவன் அரசு ரிமையிலிருந்து நீக்கப்பட்டவன் – தனது மகனுக்குப் பதிலாக 1930 இல் அரசனுக வமைந்து அரசியற் போக்கைத் தானே நேரில் உருவாக்கத் தலைப்பட்டான். இதர ஐரோப்பிய நாடுகளைப் போலவே உரூமேனியாவிலும் பாசிசக் கொள்கை பரவின மையால் அந்நாடு பாதிக்கப்பட்டது. பாசிச அமையங்களில் மிக வலுவந்தமுடையதும் இகழ்ச்சிக்குரியதுமான (அயன் கார்ட்) "இரும்புக் காவலர்" சங்கம், தனது எதிரிகளை அச்சு றுத்துவதற்குக் கொடுஞ்செயல் பற்றிய வழிமுறைகளைக் கைக் கொண்டது. உரூமேனியாவில் ஏலவே பரவியிருந்த குழப்பம், யூதருக்கு எதிரான இயக்கத்தாற் பெருகுவதாயிற்று. திரான் சில்வேனியாவிலுள்ள சிறுபான்மையோர் தங்களுக்கிழைக்கப் பட்ட கொடுமைகளைக் குறித்து முறையிடலாயினர். புதிதாக உருவாக்கப்பட்ட யாப்பமைப்பின் விளைவாக நாளடைவில் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார வர்க்க ஆட்சியொன்று ஏற்படலாயிற்று. இவ்வாட்சி முறையில் அரசனுக்கு வல்லாட்சிக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன; அரசியற் கட்சிகள் அடக்கி வைக்கப்பட்டன; பாராளுமன்றமுறை தொழிற்றுறைப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பெற்றது. 1939 இல் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் இரு சபைகளிலுமிருந்த உறுப்பினர்கள், பயிர்த்தொழில், கைத்தொழில், வணிகத்தொழில், வாழ்க்கை ஊதியத்தொழில், உடலுழைப்புத் தொழில் ஆகிய வற்றில் ஈடுபட்டிருந்தவரது பிரதிநிதிகளாயிருந்தனர். இவ்விதமாக உரூமேனியா தனது அரசைப் பாசிச முறைமாதிரியைப் பின்பற்றித் திருத்தியமைத்தது. தனது ஆள்புலம் சம்பந்தமான நடைமுறை நிலைமையைக் காப்பாற்றவும், ஒசுற்றியாவில் அல்லது அங்கேரியில் ஆப்சுபக்கு பரம்பரை அரசுரிமை பெறுவதைத் தடுப்பதற்குமான முறையில் உரூமேனியா தனது வெளிநாட்டுப் பூட்கையை அமைத்தது; இப்பூட்கை யூகோசிலாவியாவோடும், செக்கோசிலவாக்கியாவோடும் அது செய்து கொண்ட 'சிறிய நேச உடன்பாட்டை' (1920–21) அடிப்படையாகக் கொண்டிருந்தது. 1934 இல் செய்யப்பட்ட போல்கன் ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்ட நான்கு நாடுகளில் உரூமேனியாவும் ஒன்றாகும். மற்ற மூன்று நாடுகள் யூகோசிலாவியா, கிரீசு, துருக்கி ஆகியனவாகும். அவ்வொப்பந்தப்படி ஒன்றினுடைய முழு ஆள்புலமும் ஏதாவதொரு போல்கன் நாட்டினால் தாக்கப்படுமானால் அதற்கெதிராக ஒப்பந்தஞ் செய்த நாடுகள் ஒவ்வொன்றும் பாதுகாப்பளிப்பதாக உறுதியீடளித்தது; பெரும் வல்லரசுகள் போல்கன் நாடுகளில் ஒன்றை யொன்று விரோதிக்குமாறு தூண்டப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் இவ்வொப்பந்தம் செய்யப்பட்டது.

பல்கேரியா மற்ற ஐரோப்பிய நாடுகளைப்போன்றே உள்நாட்டுச் சச்சரவுகளுக்குட்பட்டிருந்தது. பேடினந்து அரசன் தான் தோல்வியுற்றதன் காரணமாக, தனது சிங்காதனத்தை மூன்றாம் போரிசு என்பவனிடம் ஒப்படைத்தான் (1918). சுற்றும் புலிசுக்கி என்பவனின் தலைமையில் வேளாண்மை மரபுக்குரிய அமைச்சவை யொன்று அமைக்கப்பட்டது; ஆனால் பல்கேரியாவில் திடீர்ப் புரட்சியேற்பட்டு அரசாங்கம் கவிழ்க்கப்பட்டபின், 1923 இல் அவன் கொலைசெய்யப்பட்டான். ஏறத்தாழப் பன்னிரண்டாண்டுகளுக்குப் பின் (1934), பல்கேரியப்படைத்துறை அலுவலர்கள், பாராளுமன்றத்தைக் கலைத்தும் அரசியற் கட்சிகளுக்குத் தடையுத்தரவு விதித்தும் சனநாயக யாப்பமைப்பை நிராகரித்து விட்டு, அதற்குப் பதிலாக ஓர் அதிகார பல்கேரியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாண்மை ஆட்சி முறையை நிறுவிக் கருமமாற்றினர். அடுத் தவாண்டில் அரசன் படையாதிக்கத்தை நீக்கிவிட்டுத் தானே வல்லாட்சியாளனானன் ; 1938 இல் ஒரு பாராளுமன்றம் கூட்டு விக்கப்பட்டிருந்தும் இவ்வாறு நடைபெற்றதென்க. யூகோசி லாவியா, கிரீசு, பல்கேரியா ஆகியவற்றுக்கிடையே மசிடோ னியா பிரித்துக் கொடுக்கப்பட்டமையினால் விளைந்த துயரளிக் கும் பிரச்சினையினால், பல்கேரியாவுக்கும் அதன் அண்டை நாடுகளுக்கு மிடையிலான தொடர்புகளில் பொருத்தமின்மை யுண்டாவதாயிற்று. மசிடோனியர் தங்களிடமிருந்து பிரிக் கப்பட்டிருந்த நாடுகளை இணைத்து ஒரு தன்னுரிமையாட்சி நாடாக்கும் நோக்கங் கொண்டு, பல்கேரியாவிலிருந்து இயக்கு விக்கப் பெறுவனவும், பயங்கரமான முறைகளைக் கைக்கொள் வனவுமான இரகசிய சங்கங்களை அமைத்தனர். எல்லைகளுக் கூடாக இச்சங்கத்தினர் தாக்கியமையின், பல்கேரியாவுக்கும் யூகோசிலாவியாவுக்கு மிடையே நட்புறவுகள் ஏற்படுவது தடைப் பட்டது ; " நிலையான அமைதிக்கும் நட்புக்கும் " இவ்விரு நாடு களையும் கட்டுப்படுத்துவதான பொருத்தனை யொன்று 1937 இல் செய்யப்படுமளவும் இவ்வாறே நடைபெற்றது.

போத்துக்கல். 1910 இல் மனுவேல் மன்னன் போத்துக்கல் நாட்டிலிருந்து துரத்தப்பட்டபொழுது அந்நாடு ஒரு குடியரசாகியது. அவ் வாறனபின் நிகழ்ந்துள்ள அதனது வரலாற்றில், அர சியல் சம்பந்தமாக உறுதியற்ற நிலைமையும், புரட்சிகரமான அமளி நிலைமையும் இருந்து வந்துள்ளன. குடிப்பதிகளும் அமைச்சரவையினரும் ஒருவருக்குப்பின் ஒருவராக விரைந்து மாறிமாறி வந்து ஆட்சி செலுத்தியிருந்தனர். 1910–1926 ஆம் ஆண்டுகளுக்கிடையில் இருபதுக்குக் குறையாத புரட்சிகளும் நாற்பது அமைச்சவைகளுந் தோன்றி மறைந்தன. பின் னைய வாண்டில் காமோனா என்னும் படைத்தலைவன் ஆட்சி யைக் கைப்பற்றி, பாராளுமன்ற ஆட்சியை ஒதுக்கிவிட்டு, போர் சார்ந்த வல்லாட்சியை நிறுவினன். 1933 இல் உருவாக் கப்பட்ட புதிய யாப்பமைப்பின்படி, பாராளுமன்றத்துக்குப் பொறுப்பற்றதும், குடிப்பதியினால் தெரிவு செய்யப்படவும் நீக் கப்படவும் கூடியதுமான ஓர் அமைச்சவை ஏற்பட்டது. சட்ட சபையானது, " கல்விப்பயிற்சியுடைய குடும்பத்தலைவர்களால் " தெரிவு செய்யப்பெற்ற உறுப்பினர்களையும், பொருளாதாரக் குழுக்களால் நியமனம் பெற்ற உறுப்பினர்களையும் பப்பாதி யாகக் கொண்ட ஒரேயொரு மன்றத்தையுடையதாயிருந்தது. 1926 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதற் றடவையாக ஈராண்டு களுக்குப் பின் கூட்டப்பெற்ற பாராளுமன்றம் இப்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாற்றியது ; எனினும் எதிர்க்கட்சிகள் தேர்தலிற் பங்கு பற்றவில்லை. பாசிச அமைப்பு மாதிரியான ஒரு தொகுதியரசு, நாட்டின் பொருளாதார வாழ்க்கையைக் கட்டுப்படுத்துமாறு உருவாக்கப்பட்ட தொகுப்பகங்களைக் கொண்டு போத்துக்கலில் நிறுவப்பட்டது.

போற்றிக்கு நாடுகள்.

1914–18 ஆம் ஆண்டுப் போருக்குப் பின்னர், வடகீழ் ஐரோப்பாவில், முன்னைய இரசியப் பேரரசிலிருந்து பிரித் தெடுக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து பல போற்றிக்கு நாடு கள் உருவாக்கப்பட்டன. இவற்றின் மொத்தக் குடித்தொகை 90 இலட்சமேயாகும். இந்தப் போற்றிக்கு நாடுகள் தங் களுக்கு அண்மையிலுள்ள நாடுகளாகிய இரசியா, சேர்மனி, போலந்து ஆகியவற்றுல் சுற்றி வளைக்கப்பெற்றிருந்தன. மேலும் "புதிதாக உண்டான நாடுகள்" எனக் கருதப்பட்ட இப் போற்றிக்கு நாடுகள் இடையூறு ஏற்படக்கூடியதும், அமைதி யிழக்கக் கூடியதுமான நிலையிலிருந்தன. பினிலாந்து மாத் திரமே தனது சனநாயகமுறை யாப்பமைப்பையும், பொறுப் பாட்சிக் கோட்பாடுகளையும் காப்பாற்றக் கூடியதாயிருந்தது. மீதி யானவை, ஒரு சிற்றண்டம் போல், தங்களைச் சுற்றியுள்ள நாடு களில் நிலவிய மாறுபட்ட இலட்சியக் கோட்பாடுகளைப் பிர திபலித்தன. இலிதுவேனியாவில் தேசிய ஐக்கியக் கொள்கை யினர் என்னும் பாசிசக் கொள்கையினர் 1926 இல் ஆட்சியுரி மையைக் கைப்பற்றினர். அங்கே பத்தாண்டுகளாகப் (1936) பாராளுமன்றமே கூட்டப்பெறவில்லை. இக்காலமுடிவில் கூட்டப் பெற்ற பாராளுமன்றத்திற்கு ஓர் அரசியற் கட்சியிலிருந்து மாத்திரமே தேர்தல் அபேட்சகர் நியமிக்கப்பட்டனர். இலிது வேனியாவில் பாசிச முறையிலே தொகுதிக் குழுக்களமைக் கப்பட்டமை, தொகுதியரசு பற்றிய எண்ணம் மத்தியதரைக் கடலோரப் பிரதேசங்களிலிருந்து போற்றிக்குக் கரையோரப் பிர தேசங்களுக்குப் பரவிவிட்டதென்பதைக் காட்டுவதாயிற்று. இலா த்துவியா 1934 இல் சனநாயக நிறுவகங்களை அகற்றிவிட்டது. அதற்குப் பதிலாகப் பாராளுமன்ற முறையமைப்பை ஒதுக்கித் தள்ளும் ஒரு வல்லாட்சியை அந்நாடு ஏற்றுக்கொண்டது ; மேலும் தனது நாட்டினப் பொருளாதாரப் பூட்கை யின் செயற்கருவியாக அது தொகுதிக்குழுக்களை நிறுவிக் கொண்டது. "மீட்சியளிப்போர்" (ஒரு பாசிச அமையம்) என் னும் கட்சியாளரின் பிரசாரத்தினுற் கவரப் பெற்ற எசுத் தோனியா, 1934 இல் ஓர் அதிகாரக் குழு வரசாங்கத்தை ஏற்றுக் கொண்டது ; ஆனல் குடிப்பதி பாசிசக் கட்சியைக் கலைத்தும், தன்னைத் தனிமுதல்வனுக்கிக் கொண்டும் பாசிச அரசாட் சியை முன்கூட்டியே நிறுவிக் கொண்டான் ; மூன்றுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குப் பின் பொறுப்பாட்சி மீண்டும் அங்கு நிறுவப்பட்டது. இலிதுவேனியநாடு, வில்லிஞபற்றிய பிரச்சினையின் பொருட்டுப் போலந்துடனும், மெமல்பற்றிய பிரச்சினையின் பொருட்டுச் சேர்மனியுடனும் முரண்பட்டிருந்தமையால், அந்நாடே ஐரோப்பிய அரசியல் அரங்கில் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. இலிதுவேனியா, வில்லிஞவைத் தனது தலைநகரென உரிமை கொண்டாடியது; ஆனல் 1922 இல், வில்லிஞவை இலிதுவேனியாவிடமிருந்து போலந்து வலுவந்தமாகப் பறித்துக் கொண்டது; அதேசமயம் இலிதுவேனியாவுக்குக் கடற் பாதையாகவிருந்த மெமலை, 1939 இல் சேர்மனி கைப்பற்றிக் கொண்டது. போல்கன் நேச உடன்படிக்கை முறைகளைப் பின் பற்றி, இலிதுவேனியா, இலாத்துவியா, எசுத்தோனியா ஆகிய நாடுகள் ஒன்றுக்கொன்ருன தங்களது பொதுநலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன், போற்றிக்கு நேச உடன்படிக்கையொன்றை 1934 இல் செய்துகொண்டன.

சுவிற்சலந்து நெதலந்து கந்திநேவியா.

இருபதாம் நூற்ருண்டில் இருபதாம், முப்பதாமாண்டுகளில், சிறிய ஐரோப்பிய நாடுகளனைத்துமே சருவதேசப் பாசிசத்துக்குச் சரணடையவில்லை. இவ்வாறு சரணடையாத நாடுகளாகிய பெல்சியம், பினிலாந்து ஆகியவற்றுடன் சுவிற்சலந்து நெதலந்து, கந்திநேவியா (தென்மாக்கு, சுவீடின், நோவே) ஆகிய நாடுகளையுஞ் சேர்த்துக் கொள்ளலாம். இச் சனநாயக நாடுகள், நாட்டுக் கூட்டவைக்கு மிகுந்த ஆதரவளித்தன; கூட்டவையின் வீழ்ச்சி, இந்நாடுகளைத் தங்களது குறைந்த கைவளத்தையே நம்பியிருக்கும் முன்னைய நிலைக்குள்ளாக்கியது. இந்நாடுகளனைத்தும், ஐரோப்பாவைப் போருக்கு ஆயத்தஞ் செய்யும் இரு பாசறைகளெனப் பிரிப்பதற்குக் காரணமாகிய படைத்துறை சம்பந்தப்பட்ட பல நட்புறவு உடன்படிக்கைகளிற் சேர்ந்துகொள்வதைத் தவிர்க்கப் பெரிதும் விரும்பின. "தனது நாட்டின் சுயாதீனத்தை எவ்வகையிலும் மறுக்க முடியாதெனவும், அது ஏதாவதொரு பொருத்தனைக் குரிய பொருளாயிருக்காதெனவும்" 1937 இல் ஒல்லாந்து வெளிநாட்டமைச்சர் கூறியதற்கேற்ப நெதலந்தின் நிலையிருந்தது. சுவிற்சலந்தோ, இன்னெரு போர் நிகழுங்கால், பெல்சியத்திற் குற்ற நிலை தனக்குறுமென அச்சமுற்றிருந்தது. இவ்வச்சம் அதனது சுவிசு–சேர்மானிய எல்லைப்புற அரண்களை வலுப்படுத்தவும், நாட்டினப் பாதுகாப்பை வலுப்படுத்தவும் அந்நாட்டைத் தூண்டியது. குடியொப்பத்தினல் தென்மாக்கிற்கு மீண்டும் அளிக்கப்பட்ட (1919) வட செல்சுவிக்கில் வதிந்த சிறுபான்மையினரான சேர்மானிய மக்கள், தாங்கள் மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்மனியோடிணைக்கப்பட விருப்பங்கொண்டிருந்தனர்; இதனால், தென்மாக்கு சேர்மனியினால் தாக்கப்படும் நிலையிலிருந்தது. சுவீடினும், நோவேயும் தங்களது நடுநிலைமையைப் பாதுகாப்பதற்கு எடுத்த முயற்சிகளில் தென்மாக்குடன் சேர்ந்து கூட்டாக அக்கறை காட்டின; காலா காலங்களிற் கூடிய மாநாடுகளின் மூலம் இம்மூன்று கந்திநேவிய நாடுகளும் தாங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிற் கூட்டாகக் கருமமாற்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(VIII)

பொருளாதார நாட்டினவாதம்

அரசியலும் பொருளாதாரமும் ஒன்றையொன்று பாதித்தல்.

கடந்த கால் நூற்றுண்டுக்கால (1914–39) ஐரோப்பிய வரலாற்றை உருவாக்குதற்குக் காரணமாயிருந்தவை, பொருளாதாரக் காரணிகளிலிருந்து பிரிக்கப்பட முடியாதனவாக இருக்கின்றன. அரசியற்றுறை, பொருளாதாரத்துறை ஆகியவை சம்பந்தப்பட்ட சத்திகள் புரியமுடியாததும் சிக்கலானதுமான முறையில் ஒன்றோடொன்று தொடர்புடையனவாயிருந்தன. எனவே காரணமும் விளைவும் ஒன்று மற்றொன்றை விடாது தொடர்ந்து எதிர்த்துச் செயலாற்றியமையினால் உண்டான சிக்கலான பின்னலைப் பிரிப்பது சிரமமாயிற்று. படைக்கலந் துறத்தலையும், நாடுகளுக்கிடையில் நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்தலையும் தடுத்த அரசியல் சம்பந்தமான நிலையற்ற தன்மைதான் பொதுவான பொருளாதாரப் பிணிக்குக் காரணமா, அன்றி அப்பிணிதான் அந்நாடுகளைப் பிரித்து வைப்பதற்குக் காரணமாயிருந்த இன்னல் விளைவிக்கும் அம்சமா என்பதைத் தீர்மானிப்பது முடியாததாயிருந்தது. எனவே ஐரோப்பிய அரசறிஞர், அரசியற் கருமங்களா, பொருளாதாரக் கருமங்களா முதலிடம் பெறவேண்டுமென்ற முக்கியமான பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் ஒற்றுமை காணமுடியாதிருந்தனர். திரு. பிறியண்டு என்பவன், ஐக்கிய ஐரோப்பிய நாடுகளைப் பற்றிய தனது புகழ் பெற்ற மனுவில் (1930), "பொருளாதார ஒற்றுமைக்கான முன்னேற்றமுண்டாவது எமம் பற்றிய பிரச்சினையை முற்றும் பொறுத்திருப்பதால், அரசியற்றுறையிலேயே ஆக்கச் சார்பான முயற்சிகள் முதலாவதாக எடுக்கப்பட வேண்டு" மெனக் கூறியுள்ளான். அவனிற் குற்றம் காண்போர், "போர் பற்றிய படைக்கலங்களைக் குறைப்பதினாலுண்டாகும் இயற்கையான விளைவாக, வணிகப்பூட்கை பற்றிய துறையில் அதிக நன்மை பயப்பதும் அதிக நட்பு மனப்பான்மையை வளர்ப்பதுமான உறவுகள் ஏற்படு" மெனச் சாதித்தனர். இச்சச்சரவுக்கான ஆண்டுகளில் பொருளாதார வட்டாரத்தில் முதன்மை பெற்றிருந்த அம்சம் யாதெனில், பொருளாதார நாட்டினப் பற்று நோக்கிச் சென்ற போக்கென்க. இது 1914–18 ஆம் ஆண்டுப் போரிறுதி பொங்கியெழுந்ததும் அளவு கடந்து தூண்டப்பெற்றதுமான அரசியல் நாட்டினப் பற்றின் காரண காரிய விளைவாகவும் அதனையொத்த பகுதியாகவுமிருந்தது. அதன் போக்கில் பொருளாதார நாட்டினப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்று அரசியற் றுறையில் எதிர்விளைவுகளைப் பிறப்பிப்பதா யிற்று. எனெனில், இது ஐரோப்பாவில் 1939 இல் இன் னொரு போரை விளைத்த பொதுவான நிலையற்ற தன் மைக்கு ஒரு கூறுயுதவிய காரணமாயிருந்தது. ஐரோப்பாவின் மறுசீரமைப்பு, அக்கண்டத்தில் அரசியல் சம்பந்தமான அமை தியை ஏற்படுத்துவதற்கானதோர் இன்றியமையாத நிபந்தனையா கச் சந்தேகத்துக்கிடமின்றியிருந்தது. எனினும், மக்கள் அரசி யற் பகைமைகளால் அறிவு குழம்பியும், அரசியற் கவலைகளால் தொந்தரவுக்குட்பட்டும் இருக்குமளவும், பொருளாதார அபி விருத்தியைப் போதுமான அளவு ஏற்படுத்த முடியாதிருந்தது. இதுவே ஐரோப்பாவின் " சிக்கல் மிக்க நிலை " யென்க.

பொருளாதாரம் சார்ந்த நாட்டின வுணர்ச்சி உருத்திரிந்த ஓர் அரசிற்குரிய நாட்டின் வுணர்ச்சியின் விளைவாயிருக்க, அதன் வளர்ச்சியோ, சருவதேசப் பொருளாதார ஒத்துழைப்பின் பாதையில் ஏற்பட்ட பல தடங்கல்கள் காரணமாக ஊக்கு விக்கப்பெற்றது. பிறநாட்டுப் பொருளுக்கு உயர்ந்த தீர்வைகள் விதிக்கப்பட்டமையும் " அனுமதிப் பங்குமுறை " நிறுவப்பட்ட மையும் பொருள்களின் புழக்கத்திற்குத் தடையாயிருந்தன ; அகக் குடியேற்றம் சம்பந்தமாய் விதிக்கப்பட்ட தடைகள், மக்கள் எங்கும் பரவுவதைத் தடுத்தன ; பிறநாட்டுக் கடன்கள் குறைந்து போனமை மூலதனம் பரவலாகப் புழங்குவதற்குத் தடை யாயிருந்தது ; நாணயக் கட்டுப்பாடுகள் சம்பந்தமான விதிகள், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்கு வணிகத்துக்குரிய கட்டணஞ் செலுத்துவதற்கு இடைஞ்சலா யிருந்தன ; தங்க நாணயத்தின் நியமம் கைவிடப்பட்டமை யும், அதோடு பீதியினாலும் அவநம்பிக்கையினாலும் பிறந்த " விரைவில் மாறுகிறதும் ", " வலுவற்றதுமான " பணநிலையும் சேர்ந்து, நாணயமாற்றங்கள் நிலைப்படுத்தப்படுவதைத் தடுப்பன வாயின ; இழப்பீடுகளுக்காகவும் நேசநாடுகள் ஒன்றுக்கொன்று கொடுக்க வேண்டிய கடன்களுக்காகவும் அரசியல் சம்பந்தமான கடன்கள் கடுமையாக அறவிடப்பட்டமையும், அத்துடன் சருவதே சச் சூழ்நிலையிற் காணப்பட்ட உறுதியற்ற தன்மையும் சேர்ந்து, நிதிபற்றிய நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்துவதற்குத் தடங்க லாயிருந்தன. நான்காண்டுகளாய் நிலைத்திருந்து கடுந்துன் பங் கொடுத்ததான பொருளாதார மந்தம், நாடுகளைப் பொரு ளாதார நன்னிலைக்குக் கொண்டு வருவதைவிட்டு அதற் கெதிராகப் பொருளாதார நாட்டினப் பற்றுக்கு ஊக்க மளிப்பதாயிற்று. எனெனில், அது கட்டில்லா வியா

பொருளாதாரம் சார்ந்த நாட்டின வுணர்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத்தைத் தழுவிய ஒரு பெரிய நாட்டை மட்டும் விலக்கி விட்டு, உலக நாணயங்களெல்லாவற்றையுமே நிலைகுலையச் செய்தது. இப்பெரும் மந்தத்தை, 1918–39 ஆம் ஆண்டு களுக்கிடைப்பட்ட ஐரோப்பியப் பொருளாதார வரலாற்றை இரு காலப் பகுதிகளாகப் பிரிக்கும் எல்லையாகக் கொள்ளலாம். முதற் பகுதியில், அரசியற் கடன், மிகக் கூடுதலான இறை முறைகள், புறக்குடியேற்றம் ஆகியவை முக்கியமான பிரச் சினைகளாயிருந்தன. இரண்டாவது பகுதியில், அரசியற் கடன் களைப் பற்றிய பிரச்சினை உண்மையில் பின்போடப்பட்டது. ஆனால் இறைமுறைத் தடைகள் நிலைத்திருந்தமையோடு, அனுமதிப் பங்குகள் அமுலிலிருத்தல், பண்டமாற்று ஒழுங்கு கைக்கொள் ளப்படல், நாணயம் நாணயக்கையிருப்பு என்பவை சம்பந்த மான கட்டுப்பாடுகள் செய்தல் ஆகியவை போன்ற சருவதேச வணிகத்திற் கெதிரான தடங்கல்களும் வலிந்து புகுத்தப்பட்டன. இது தவிர, தங்கநாணய நியமம் வீழ்ச்சியுற்றமையால், நாணய மாற்றத்திலேற்பட்ட நிலைகுலையச் செய்யும் விளைவுகளும் "அவற் றுற்கி"யை அல்லது பொருளாதாரத் தன்னிறவை நோக்கிச் சென்று கொண்டிருந்த போக்கும் புதிய சிக்கல்களைப் புகுத் தின. ஐரோப்பாவினது பொருளாதார-அரசியற் சூழ்நிலை யைப் பாதித்த பல்வேறு இயக்கங்களைப் பற்றி நாம் முறையே கூறுவோம்.

இழப்பீடுகள். 1914–18 ஆம் ஆண்டுப் போரின் விளைவாக ஏற்பட்ட நிலைகுலையச் செய்யும் பிரச்சினைகள் பலவற்றுள் ஒன்று, தோல்வி யுற்ற நாடுகளிடமிருந்து இழப்பீடுகள் வலிந்து பெறப் பட்டதையும், வெற்றி பெற்ற நாடுகளால் போர் சம்பந்தமான கடன்கள் தீர்க்கப்பட்டதையும் ஒட்டியதாகும். மிகப் பெரியனவும் நிர்ணயிக்கப்பட முடியாதனவுமான கடப்பாடுகளின் விளைவால் ஏற்பட்ட குழப்பம், ஐரோப்பா மீட்சி அடைவதைத் தடுப்பதில் முக்கிய பங்கு பெற்றது. அரசுகளுக்கிடையிலுள்ள கடன் களைத் தீர்ப்பதினால் நாட்டினம் பற்றிய நாணயமுறை யமைப்பும், உலகக் கடன் வழங்குவது பற்றிய அமைப்பும் அதிகமாகப் பாதிக்கப்பட்டமை ஒருபுறமிருக்க, அக்கடன்கள், கடன் வழங்கிய நாடுகளுக்கும் கடன்பட்ட நாடுகளுக்குமிடை யிலுள்ள அரசியற் றொடர்புகளில் வேற்றுமையை யுண்டாக்கு வதன் மூலை நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியனவா யிருந்தமையினால், சருவதேச ஒற்றுமை பங்கப்படுவதற் கான சூழ்நிலையையும் அவை உண்டாக்கின. இவற்றால் தீங்கு விளையுமெனவுணர்ந்த பிரித்தானியா—தான் ஐக்கிய நாடு களிலிருந்து கொண்ட கடனிலும் இருமடங்களவு கடன்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நேசநாடுகளுக்குக் கொடுத்திருந்தது—நேசநாடுகளுக் கிடையிலிருந்த கடன்களைக் குறைக்கவோ தள்ளி விடவோ வேண்டுமென வற்புறுத்தியது. இத்திட்டம் மறுக்கப்பட்டமை, எதிரிகளான நாடுகள் தாங்கள் ஏற்றுக்கொண்ட கடப்பாடு களைக் கட்டாயமாகச் செய்து முடிக்க வேண்டுமென்று ஒப்புக் கொண்டிருந்தும், எதிரிகளை அவர்களது கடன்பொறுப்பி லிருந்து நேசநாடுகள் விடுவிக்குமென்ற நம்பிக்கைக்கு இட மில்லாமற் செய்துவிட்டது. சேர்மனிக்குரிய கடன் செலுத்து வது சம்பந்தமாய் ஆரம்பத்திற் செய்யப்பட்ட மதிப்பீடுகள் நம்பத் தகாதவைகளா யிருந்தபோதிலும், அவ்விடயம் அர சியற் சூழலிலிருந்து பொருளாதாரச் சூழலுக்குக் கொண்டு வரப்பட்ட பின், அம்மதிப்பீடுகள் ஒப்புக்கொள்ளத் தக்கவளவுக் குக் குறைக்கப்பட்டன. இழப்பீடுகளைக் கணிப்பதற் கமைக்கப் பெற்ற ஆணைக்குழு மொத்தக்கடன் தொகையை 66,000 இலட் சம் பவுணைனத்[1] தீர்மானித்தது; இவ்வாணைக்குழு இத் தொகையை உறுதிப் பத்திரங்களை எழுதிக் கொடுப்பதன் மூலம் தீர்த்துவிட வேண்டுமென்றது. பத்திரங்கள் மீட்கப்படுமளவும், சேர்மனி ஆண்டொன்றுக்கு 1,000 இலட்சம் பவுண்களையும், தனது ஏற்றுமதிப் பொருள்களின் விலையில் 26 சதவிகிதத் தையுங் கொடுக்க வேண்டுமென்றுகியது. அடுத்தபடியாக, 1924 இல், சருவதேச வல்லுநர் குழுவொன்று "தாசுத் திட்டம்" என்றொரு திட்டத்தை வகுத்தது. இத்திட்டப் பிரகாரம் சேர்மனி ஆண்டு தோறும் கொடுக்க வேண்டிய கட்டணம் அந்நாட்டின் பொருளாதார நிலைமைக்கேற்ப மாற்ற மடைந்தது. அதேசமயம் அதன் நாணயம் நிலைகுலைவதைத் தடுக்கும் நோக்கமாக, அது வெளிநாட்டுக்கனுப்புந் தொகை, அது தனது பிறநாட்டு வியாபாரத்திலுற் பெற்ற தொகையி லுங் கூடுதலாயிருக்கக் கூடாதெனவுந் தீர்மானிக்கப்பட்டது. ஐந்தாண்டுகளுக்குப் பின், இழப்பீடுகளின் தொகை ஏறத்தாழ 20,000 இலட்சம் பவுண் என "யங்கு திட்டம்" மதிப்பிட்டது. அத்தொகை ஏறத்தாழ அமெரிக்க ஐக்கிய நாடுகள் தங்களது நட்பு நாடுகளுக்கு முன்பணமாகக் கொடுத்த தொகைக்குச் சம மாயிருந்தது; சேர்மனியால் செலுத்தப்படவேண்டிய தொகை, ஆண்டொன்றுக்குச் சராசரி 1,000 இலட்சம் பவுண் வீதம் பெறுமானமுள்ள உடைமைகள் வாயிலாக, ஐம்பத்தொன்பது ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கப்படவேண்டியதாகும். இங் ஙனமாக, ஒரு சிலவாண்டுகளில் சேர்மனியின் மொத்தக் கடன்,

[1]இத்தொகையில் மூன்றிலொரு பங்கு பொருள் நட்டத்திற்காகவும், எஞ்சியது ஒய்வூதியத்திற்காகவும், பிரிவுப் படிக்காகவும் ஒதுக்கப்பட்டது. போர்ச் செலவுகள் இதிற் சேர்க்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றிலொன்றிற்கும் குறைந்த தொகைக்குக் கொண்டுவரப பட்டது. நேசநாடுகளும், ஐக்கிய நாடுகளுக்குத் தாங்கள் கொடுக்க வேண்டிய தொகைக்குச் சம மதிப்புள்ள தொகையே தங்களுக்கு வேண்டுமென உரிமையுடன் கேட்டன. எனினும், இழப்பீடு சம்பந்தமாய் எழுந்த சிக்கலுக்கு முடிவு காண் பதில்—நியாயமான முடிவு செய்வதற்கான அடிப்படையமைக் கப்பட வேண்டுமெனத் தோற்றியதால்—தாமதம் ஏற்பட்டமை, ஓரளவு வெற்றிபெற விருந்த வாய்ப்புக்கும் ஆபத்தை யுண் டாக்குவதாயிற்று. "யங்கு திட்டம்" தொகுக்கப்பட்ட அதே யாண்டில் முன்னிகழ்ந்திராத கடுமையான பொருளாதாரப் புயலொன்று எழுந்தது; அப்புயல் நான்காண்டுகளாக வீசி யது. அது உலக முழுவதிலும் வீசியடித்தபோது, அதன் பாதையில் தருக்களைப் போல் நின்ற நிதித்துறை நிறுவகங் களை அது வேரறுத்து விட்டமையால், முற்றுக மாறுபட்ட காட்சியொன்று தோன்றுவதாயிற்று. முக்கியமான தங்க நாணயங்கள் பாதிக்கப்பட்டன; சருவதேச வியாபாரம் அதன் முன்னைய அளவில் அரைப் பகுதிக்குக் குறைந்தது; கட்டில்லா வியாபாரத்தின் அரண் வீழ்ச்சியுற்றது; இழப்பீடுகளையும் போர்க் கடன்களையும் கொண்ட மாபெரும் அமைப்பு, புயலிழைத்த அழிவுக்குட் புதையுண்டது.

இடமாற்றப் பிரச்சினை.

ஒழுங்கான காலங்களிலுங் கூட, அரசுகளுக்கிடையிலுள்ள கடன்கள் தீர்க்கப்படும் பொழுது சீர்படுத்த முடியாத பொருள் இடமாற்றப் பிரச்சினை எழுந்ததுண்டு. ஒரு நாடு பிற நாட்டுக்குத் தங்கத்தையோ, பொருள்களையோ, வேலை செய்வோரையோ ஏற்றுமதி செய்து அல்லது பிறநாட்டுப் பிணைப்பத்திரங் களை விற்பனை செய்து தனது கடனைத் தீர்த்துக் கொள்ளக் கூடும். சேர்மனியைப் பொறுத்தவளவில், அது தனது இழப் பீடுகளைச் செலுத்துவதற்கு முதன்முதலாகத் தனது ஏற்று மதியை மிகுவிக்க வேண்டும்; எனினும் அதற்குக் கடன் கொடுத்தவர்களே வணிகத்துறையில் போட்டியாக விருந் தனர். எனவே அவர்கள் தமது பொருள்கள் தம் நாட் டிலோ நடுநிலைமை நாட்டிலோ உள்ள சந்தைகளில் குறைந்த விலைக்கு விற்கப்படுவதைத் தம் நலனுக்கெனக் கொள்ளார். தங்களது கைத்தொழில்களைக் காப்பாற்றுவ தற்கெனக் கடன் கொடுத்த எல்லா நாடுகளும் கட்டிக் கொண்ட இறைமுறைச் சுவர்கள், கடனாளியான நாடுகள் தங் களது கடப்பாடுகளைத் தீர்க்கும் பொழுது அடையும் பல இடுக் கண்களை மேலும் மிகுவிப்பனவாயின. சுருங்கக் கூறின் ஒவ்வொரு நாடும் தனக்கு உரிமையானவை தனக்குக் கொடுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படவேண்டுமென வற்புறுத்தியது ; ஆனல் கடனுளியான நாடுகளாற் றனக்குச் செலுத்தப்படவேண்டிய பணத்தை வசதியான முறையிற் பெற்றுக் கொள்ள ஒவ்வொரு நாடும் விரும்பாதிருந்தது. வேடிக்கையானதும் முரண்பாடானதுமான இந்நிலைமையை, அதன் உண்மைத் தோற்றத்தில், அக்காலம் எற்பட்ட பெரிய பொருளாதார மந்தம் எடுத்துக்காட்டிற்று. இந்நிலை அப்பொருளாதார மந்தத்திற்கு முழுக் காரணமாகவில்லை யென்றலும், அதற்கொரு துணைக் காரணமாகவிருந்தது என்பது உண்மை. சேர்மனிக்குரிய ஆண்டு வருவாய் தரும் உடைமைகளைத் திரட்ட எத்தனிப்பது, உலகம் முழுவதையும் பாதிக்கக் கூடிய விளைவுகளை யுண்டாக்கக்கூடிய நிதிசம்பந்தமான பெருங் கேட்டை உள்ளடக்கியதாகுமெனத் தெரிய வந்தது. எனவே, சேர்மனிக்குக் கடன் கொடுத்த நாடுகள், தங்களுக்கு வரவேண்டிய கடன்களைச் சேர்மனியிடமிருந்து கேட்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தால், அந்நாடுகள் தங்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன்கள் தீர்க்கப்படவேண்டுமென்று கேட்பதைத் தாங்களும் நிறுத்திக் கொள்வதாக ஐக்கிய மாகாணங்கள் வாக்களித்தன. இழப்பீடுகளையும் போர்க் கடன்களையும் ஓராண்டுக் (1931–32) காலந் தாழ்த்திக் கொடுக்கலாமென்று செய்யப்பட்ட ஒழுங்கு, அந்நேரத்திற்கு மாத்திரமே நிலைமையைச் சமாளிப்பதாயிற்று. பொருள் இடமாற்றப் பிரச்சினை பற்றிய கேட்டின் மூலகாரணங்கள் நிலைத்து நின்று பொருளாதார ஒழுங்கமைப்பு முழுவதையுமே அழிவுறச் செய்யலாயின ; நோயினது அறிகுறிகளைக் கண்டு குணப்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட மருந்துகள், நோயை முன்னிலும் பெருக்குவது போன்ற நிலையை ஏற்படுத்தின ; இறைமுறைச் சுவர்கள் மேலும் உயர்ந்தன ; அனுமதிப் பங்குகள் அதிகரித்தன ; பெரிய பிரித்தானியா தனது மரபுரிமையான கட்டில்லா வியாபாரப் பூட்கையினைக் கைவிட்டது. சருவதேச வியாபாரத்தை நிலைகுலையச் செய்த இச் செய்கைகளின் விளைவால் சேர்மனிக்குரிய பிறநாட்டுச் சந்தைகள் குறைந்து கொண்டே போயின. 1932 இல் சேர்மானிய மண்டிலநாயகன், சேர்மனி தனது கடன்களைத் தீர்க்கக் கூடிய நிலையை எய்துதல் சாத்தியப்படாதெனக் கூறினன். பத்தாண்டுகளாக ஐரோப்பாவின் அமைதிக் குலைவுக்குக் காரணமாயிருந்து வந்த இழப்பீட்டுப் பிரச்சினை உண்மையில் தானுகவே தீர்ந்துவிடுவதற்கு முடிவு கட்டப்பட்டதென உணருமாறு மேற்கத்திய வல்லரசுகள் வற்புறுத்தப்பட்டன. தாங்கள் சேர்மனியை மீண்டும் பணஞ் செலுத்த வேண்டுமெனக் கட்டாயப்படுத்தினுல், நிதிக்குழப்ப மேற்படுமென அஞ்சி அவை சேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனியோடு ஓர் ஒழுங்கைச் செய்தன. அவ்வொழுங்கினுக் கிணங்க, சேர்மனி தனது இழப்பீட்டுக் கடன்களின் இறுதிக் கட்டணமாக 1500 இலட்சம் பவுணைக் கொடுக்க உறுதியளித் தது. "உலாவுசேன் உடன்பாடு (1932) என்றழைக்கப்பட்ட இவ்வுடன்படிக்கை, சேர்மனிக்குக் கடன்கொடுத்த நாடுகளுக்கும் அந்நாடுகளுக்குக் கடன் கொடுத்த நாடாகிய ஐக்கிய மாகாணங் களுக்குமிடையில் மன நிறைவு அளிக்குமோர் ஏற்பாடு" உரு வாகுமளவும் செயற்படுத்தப்படுவதில்லை யென்று ஒப்புக்கொள் ளப்பட்டது. உண்மையில் தோல்வியுற்ற எல்லா நாடுகளிலு மிருந்து இழப்பீடுகளை வலிந்து பெறும் வழக்கத்திற்கு இது முற்றுப்புள்ளி வைத்தது.

அமெரிக்கக் கடன்.

ஐரோப்பா இப்பொழுது அமெரிக்கக் கடன் பிரச்சினையை எதிர்த்து நிற்க வேண்டியதாயிற்று. 1914–18 ஆம் ஆண்டுப் போர் நடந்து கொண்டிருந்தபொழுதும் அதற்குப் பின்பும், ஐக்கிய மாகாணங்கள் ஏறத்தாழ 20,550 இலட்சம் பவுணையும், பெரிய பிரித்தானியா 16,000 இலட்சம் பவுணையும், பிரான்சு 5,000 இலட்சம் பவுணையும் நேசநாடுகளுக்குக் கடன் கொடுத் திருந்தன. நேசநாடுகளுக்குத் தாம் கொடுத்த கடன்களில் பெரும்பாலானவை படைத்தகைவு ஏற்படுதற்கு முன்னர் (1918) வழங்கப்பட்டவை யென்றும், அதன் பின்பு வழங்கப்பட்ட கடன்களில் மிகப் பெரும்பாலானவை அழிப்புச் செயலுக்காகக் கொடுக்கப்பட்டவையல்ல வென்றும், அவை உணவு, புகையிலை, பஞ்சு ஆகிய பொருள்களை வாங்குவதற்காகக் கொடுக்கப்பட் டவை யென்றும், இக்காரணங்களினால் கடன்கள் தமக்குச் செலுத்தப்பட வேண்டு மென்றும் ஐக்கிய மாகாணங்கள் உரி மையுடன் கோரின. கடன்களைத் தீர்ப்பதில் தங்களுக்குப் பல இக்கட்டுக்கள் இருப்பதாக ஐரோப்பிய நாடுகள் கூறியபோது, ஐக்கிய மாகாணங்கள் அவற்றுக்கு மறுமொழியாக, சுற்றுப் பிரயாணஞ் செய்த அமெரிக்க மக்கள் பிறநாடுகளிற் செலவு செய்த பணம் (1924–30), ஐக்கிய மாகாணங்களுக்கு இறுக்கப் பெற்ற கடன் பணத்திலும் இருமடங்கானதென்றும், அகக்குடி யேற்றஞ் செய்த மக்கள் ஐரோப்பாவுக்கு அனுப்பிய பணம், ஏறத் தாழ அதே காலத்திலே தாங்கள் பெற்ற பணத்திற்குக் கிட்டத் தட்டச் சமமாயிருந்ததென்றும் கூறின. "மீண்டும் பொருள் மாற்றப் பிரச்சினைபற்றிக் கணக்கிடும்போது, ஐக்கிய மாகாணங் களோடு நேரடியாக நடத்தப்பட்ட வியாபாரத்தை மட்டுமன்றி, முழுச் சருவதேச நடவடிக்கைகளையுங் கணக்கிட்டுப்பார்க்க வேண் டும். தங்களது கடனாளிகளுக்கும் தங்களுக்குமிடையில் நடை பெற்ற சருவதேசத் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில், மொத்தமாகத் தாங்கள் பெற்ற தொகைகளையும் தாங்கள் வெளியே அனுப்பிய பணங்களையும் கணக்கிடும்போது, தாங்கள் ஐரோப்பிய நாடுகளிடமிருந்து கடனை இறுக்குமுகமாகப் பெற்றது ஒரு சிறிதளவேயாகும்." கடனைத் தீர்ப்பதால் தங்களது பவுண் மூலவொதுக்கங்கள் குன்றிப் போயினவென்று கடனாளி நாடுகள் செய்த வாதம் அமெரிக்கரால் மறுக்கப் பட்டது; ஏனெனில், ஐக்கிய மாகாணங்களினது தங்கக் கையிருப்பு, (பிறநாட்டு வங்கியாளரால் தற்காலிகமாக வைப்புத் தொகைகளாக வைக்கப் பெற்றவை தவிர) 8 சத விகிதமே கூடியிருந்தது. அதேசமயம் பெரிய பிரித்தானியா அமெரிக் காவிலிருந்து தான்பெற்ற கடன்களைத் தீர்க்கப் பெரிதும் முயற்சி செய்ததென்பதும் வெளிப்படையாக விளங்கியது. அது ஏறத் தாழ 8,500 இலட்சம் பவுணைக் கடனை வாங்கியிருந்தது. அத்தொகையில் கிட்டத்தட்ட மூன்றிலொரு பாகம் ஐக்கிய மாகாணங்களிற்றானே போர்ச் செலவுக்கெனச் செலவிடப்பட்டது. அத்துடன் அது 50 சத விகிதமான கடன் தொகையைத் திருப்பிக் கொடுத்தும் விட்டது. ஆனால் இதர ஐரோப்பிய நாடுகளுக்கு ஐக்கிய மாகாணங்கள் முன்பணமாகக் கொடுத்த தொகை 11,500 இலட்சம் பவுனுக்கு மேலாக விருந்தது. அத்தொகையில் 12 சத விகிதக் கடன்களையே அந்நாடுகள் தீர்த்திருந்தன. இன்னும், பெரிய பிரித்தானியா, சேர்மனியால் தனக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகையை வேண்டாமென்று கைவிட்டதுமன்றி, தனது நேச நாடுகள் தனக்குச் செலுத்த வேண்டியிருந்த கடன்தொகையாகிய 16,000 இலட்சம் பவுணையுந் தியாகஞ் செய்தது. வெற்றியடைந்தோர் தங்களுக்கான போர்க் கடன்களைத் தீர்ப்பதற்கு— அவர்கள் கூரறிவற்றுத் தாங்கள் கொடுக்க வேண்டிய பணத்தைச் செலுத்துவதைப் பிற்போட்டிருந்த போதிலும்— கடப்பாடுடையவரா யிருந்ததையும், தோல்வியடைந்தோர் தாங்கள் கொடுக்க வேண்டிய கடன்தொகை மிகக் குறைவாக விருந்தும், கடன்கள் சம்பந்தமாய் இறுதியாகச் செய்யப்பட்ட தீர்ப்பின்படி தாங்கள் கொடுத்து முடிப்பதாக உறுதியளித் திருந்த பணத்தைக்கூடக் கட்ட மறுத்ததையும் உற்று நோக்குகையில், இது விசித்திரமான தொன்றுகும் என்பது தெளிவு. மனச் சான்றில்லாது கடன் சுமத்துவோரால் துன்புறுத்தப்பெற்ற சேர்மானியருக்கு ஏற்பட்ட அல்லல்,—அவர்கள் வட பிரான்சியக் கைத்தொழிற் பகுதிகளில் திட்டமிட்டு வேண்டுமென்றே இழைத்த அழிவுக்கு ஈடு செய்வதற்காகக் கொடுத்த பொருள்கள் தவிர சேர்மனி கொடுக்க வேண்டிய இழப்பீடுகள் நேசநாடுகளிலுலும் அவற்றைச் சேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லரசுகளாலும் கொடுக்கப்பட்டன என்பதால் குறைக்கப் படலாயிற்று. சேர்மானிய மாக்கு நாணயத்தில் பிற நாடு கள் முதலீடு செய்து இழந்திருந்த பணம், சேர்மானிய அரசாங்கம் கைப்பணமாகச் செலுத்திய மொத்தக் கடன் தொகைக்குச் சமமானதாக இருந்ததென 1924 இல் மக்கீனி வல்லுநர் குழு அறிவித்தது. 1924 – 1927 ஆம் ஆண்டு களுக்கிடைப்பட்ட காலத்தில், சேர்மனியின் உயர்ந்த வட்டி விகிதத்தால் கவரப்பட்டு அந்நாட்டினுள் நுழைந்த மூலதனம் "தாசுத் திட்டத்தின்"படி பிறநாடுகளுக்கு மாற்றஞ் செய்யப்பட்ட தொகைகளிலும் கூடுதலாகவிருந்தது. இழப்பீடுகளைப் பொறுத் தவளவில், "தோல்வியுற்றார் துயர்" என்ற முதுமொழியின் பிரகாரம் ஏற்படவிருந்த திகில்கள் அகற்றப்பட்டன. அத்துடன் எதிர்காலத்திற் பிறருக்கு ஏற்படக்கூடிய போரார்வத்தைக் குறைக்கும் ஆற்றலும் அவற்றுக்கு இல்லாது போயிற்று என்ற முடிவுக்கு வர வேண்டியதாயிற்று.

இறைமுறை கள்.

1918 இல் அமைதி ஏற்படுத்தப்பட்ட பின், ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார உலைவுநிலைக்கான முக்கிய கார ணம், பாதுகாப்புக்காக நிறுவப்பெற்ற உயர்ந்த தீர்வை களேயெனக் கூறப்பட்டது. நாட்டின விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக வேர்சை, சென் சேர்மெயின், திரியனன் ஆகிய பொருத்தனைகளின் பிரகாரம் புதிய எல்லைகள் அமைக்கப்பட்டன; இவ்வெல்லைகளால் அப்பொழுதிருந்த தீர்வை எல்லைக் கோடுகள் பன்னீராயிரம் கல் தொலைக்கு மேல் அதிகரித்தன. புதிதாய் அமைக்கப்பெற்ற அரசுகள், பழைய அரசுகளை ஒன்றுசேர விடாமல் வெற்றிகரமாகத் தடுப்ப தற்குக் காரணமாகவிருந்த பொருளாதாரப் பூட்கையை இப் போது போட்டி மனப்பான்மையுடன் கையாண்டு, தம்முள் ஒன்றையொன்று எதிர்க்கலாயின. இம்முக்கியமான ஆண்டு களில் (1918–39), ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தி செய்யப் பட்ட பொருள்களின் பெரும்பகுதியைப் பல்வேறுநாடுகள் தத் தமக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும், கைத்தொழில் சம் பந்தமான செய்முறைகளை மேம்படச் செய்வதற்கும், மிகு பொருளாக்கமும் தொழிலின்மையும் உண்டாவதைத் தடுப்ப தற்கான உறுதியீடுகளை ஏற்படுத்துவதற்குமாக, பொருளாதா ரச் சந்தைகளைப் பெருப்பிக்கச் செய்வதே உலகத்தின் மிக முக்கிய தேவையாயிருந்தது. பகுத்தறிவுக் கோட்பாட்டுக்கியைந்த தும், வெவ்வேறு நாடுகளினது நிலைமைக்கேற்றதுமான தொழிற் பகுப்பே, பயிர்த் தொழிலும் கைத்தொழிலும் சம்பந்தப் பட்ட ஆற்றல்கள் சிதறுண்டு கிடப்பதைத் தவிர்க்கக் கூடியதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையென நெடிதுகாண் ஆற்றலுடையோர் விரைவில் உணர்ந் தனர்; இவ்வாற்றற் சிதைவே ஐரோப்பாவின் பொருளாதார வாழ்வைப் பாதித்துவந்தது. திரு. பிறியண்டு என்பவன் தனது மனுவில், தனது மனக்கண்களாற் றெளிவாய்க் கண்ட ஐரோப்பியப் பொருளாதார ஒத்துழைப்பின் இலட்சியம் பற்றிக் குறித்துள்ளான். "ஒரு பொதுச் சந்தையை நிறு வுதல், ஐரோப்பிய சமுதாயம் வாழும் ஆள்புலங்களனைத்தி லும் சமுதாய நல அபிவிருத்தியை மிகக் கூடியவளவு உயர்த்து தல்" ஆகியவற்றை அடையுமுகத்தால் ஐரோப்பியப் பொரு ளாதார அமையத்தை உருவாக்குவதே அவன் கண்ட கனவென்க. பொருள்களும், மூலதனமும், மக்களும் தாராள மாகப் புழங்குவதாகிய முன்னேற்றமான அடிப்படையில் உற்பத்தி, பரிமாற்றம் என்பவை சம்பந்தமான பகுத்தறிவுத் திட்டத்தை இது குறித்தது. மனு அனுப்பப் பெற்ற அரசுகள், அதனைப் பற்றிச் செய்த விளக்கக் குறிப்புக்களில், "சுங்கத் தீர்வைகளமைக்கும் பூட்கையினடியாக மேற்கொள்ளப்படும் படைக்கலங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சி, தரைப்படைகளையும் கடற்படைகளையும் குறைக்கும் முயற்சியைப்போல் முக்கியத்துவம் வாய்ந்தது" என வரைந்தன. இவ்வாறு வாதாடிய போதி லும், இருந்ததை விட வாய்ப்பானதோர் இறைமுறை சார்ந்த பூட்கையைக் கைக்கொள்ளுவதற்குச் சூழ்நிலைகள் ஏற்றனவா யிருக்கவில்லை; தங்களது இறைமுறைக் கட்டுப்பாடுகளைப் பெருக் குவதே ஐரோப்பிய வல்லரசுகளின் போக்காக விருந்தது. மேலும் மேலும் வளர்ந்துகொண்டிருந்த இறைமுறைகளால், தனது கட்டில்லா வியாபார முறையொழுங்கு முழுவதுமே இடுக் கணுறுமென்று பெரிய பிரித்தானியா கண்டது. அது கூறிய கார ணங்களுக்கு அவ்வல்லரசுகள் செவிசாய்க்கவில்லை; அதற்குப் பதி லாக அவை ஐக்கிய மாகாணங்கள் காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றலாயின; அந்நியரைத் தம் நாட்டினுள் நுழையவிடாது சீனர் முன்னொரு காலத்தில் தம் துறைமுகங்களை அடைத் துக்கொண்டதுபோல், அமெரிக்கர் இப்போது தம்முடன் வணி கஞ் செய்தவருக்கெதிராக ஒரு "சீனச் சுவரை" எழுப்பியிருந் தனர். மட்டுமீறிய இறைமுறையினால் பொருளாதார வட்டா ரத்தில் மட்டும் கேடு விளையவில்லை; அரசியல் வட்டாரத்திலும் சச்சரவுகள் ஏற்படுவதற்கு இது பெரிதும் ஏதுவாகவிருந்தது.

மேலதிகமான குடித்தொகை.

பண்டங்களின் பரிமாற்றத்தைத் தடைசெய்வனவாக இறை முறைகள் அமைந்ததைப்போன்று, மக்களின் இடப்பெயர்ச்சி யைப் பாதிப்பனவாக அகக் குடியேற்றத் தடைகள் அமைந்தன. ஒரு நாட்டிற்கு அதன் தேவைக்கு மிகுதியான மக்களை வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேற்றுவதற்கான போக்கிடங்களும் அவசியமாகும். ஒவ்வொரு சமுதாயத்துக்கும் எதாவதொரு காலத்தில், மேலதிகமான குடித்தொகையைப் பெறுதல் என்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியைக் காணும் அனுபவம் ஏற்படும். இது முக்கியமாக, ஒவ்வோரமயத்தில் ஒரு நாட்டினது பொருளாதார வமைப்பானது அந்நாட்டில் வதியும் தொழிலாளிகள் எல்லோருக்கும் தொழில் கொடுக்க முடியாமலிருக்கும்பொழுது ஏற்படுகிற ஒரு பொருளாதார நிகழ்ச்சியேயாகும். இது பெரும்பாலும் தற்காலிகமானதாயும், பொருளாதாரம் தன்னிலைக்கு மீளும் ஆற்றல் பெற்றுச் சீரடைந்து, புதிதாய் எழுகிற பிரச்சினைகளைச் சமாளிக்கக் கூடியவளவு பெருகும்போது மறைந்து போவதாயுமிருக்கும். இப்படியாக மேலதிகமான குடித்தொகைப் பிரச்சினை ஒரு நாட்டினது ஆள்புலத்தைப் பொறுத்ததாகவில்லாமல், அதன் பொருளாதாரம் தவருக அமைக்கப்பட்டுள்ளதைப் பொறுத்ததாகவிருக்கும். பதினேழாவது நூற்றுண்டின் முற்பகுதியில் இங்கிலாந்தும் மேலதிகமான குடித்தொகையைக் கொண்டிருந்ததெனக் கருதப்பட்டது. எனினும் அது இப்பொழுது முன்னைய தொகையிலும் ஏழு மடங்கு அதிகமான மக்களைக் கொண்டிருக்கின்றது. எப்பொழுதேனும் ஒரு நாட்டினது பொருளாதார வமைப்புச் சிறிது காலத்திற்கு இறுக்கமாக இருக்கும் பொழுது, அந்நாடு கவனஞ்செலுத்த முடியாத அளவுக்கு அதிகப்படியான குடித்தொகை இருத்தலினால் உள்நாட்டில் இடுக்கண்கள் ஏற்படுகின்றன. அங்கு உற்பத்தி செய்யாதவர்களது சுமையை உற்பத்தி செய்வோர் சுமக்க வேண்டிய திறமையுடையவராயிருக்கவேண்டியிருக்கின்றது ; தொழிலில்லாதோர் கூட்டம் தொழில் அமைதியின்மையை வளர்க்கின்றது ; அக் கூட்டம் தொழிலாளர் சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்துக்குப் பேரிடர் தரும் அறிகுறியாக விருக்கின்றது ; பொருளாதாரச் சமநிலைக் குறையினடியாகப் பிறக்கும் உளப்பாங்கு சம்பந்தமான விளைவுகள், அரசியல் அமைதியின்மையை ஏற்படுத்துகின்றன ; பெருவாரியான மக்களுக்குத் தொழிலின்மையினாலுண்டாகிற இடர்களை விளக்கும் துலக்கமான எடுத்துக் காட்டாகச் சேர்மனி விளங்குகிறது ; ஏனெனில், சமுதாயத்திலே மலைபோன்று எழுந்த துன்ப அலைகள் சேர்மனியில் தேசியச் சமூகவுடைமைக் கட்சியினரை அதிகாரத்திற்கு இட்டுச் சென்றன. எனவே மக்கள் இடப் பெயர்ச்சிப் பிரச்சினை, பண்டங்களின் பரிமாற்றப் பிரச்சினைக்கு அடுத்தபடியான முக்கியத்துவம் வாய்ந்ததாக விருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகக் குடியேற்றத் தடைகள்.

1914–18 ஆம் ஆண்டுப் போருக்கு முன் ஐரோப்பாவிலிருந்து புறக்குடியேற்றம் பெரிதளவில் நடந்தேறியது. ஏறத்தாழ ஆண்டுதோறும் சராசரி 1,60,000 மக்கள் பெரிய பிரித்தானியாவிலிருந்து வெளியேறினர். ஆனல் இருபதாவது முப்பதாவது ஆண்டுகளில் இத்தொகை பாதியாகக் குறைந்தது; பிற நாட்டு வாழ்க்கையைத் தேடும் மக்களுடைய ஆர்வத்தைக் குறைத்தனவென்று கருதப்பட்ட சமூக சேவைகளே, இப்பிற நாட்டுக் குடியேற்றம் குறைவதற்குக் காரணமாயிருந்தனவென்று பொதுவாகக் கருதப்பட்டது; உண்மையில், எல்லா நாடுகளிலுமே பொதுவாகப் பிறநாட்டுக் குடியேற்றம் தடைப்பட்டது. 1914 ஆம் ஆண்டுக்கு முன் பிறநாட்டுக்குச் சென்ற இத்தாலியரது சராசரித்தொகை ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ஐந்து இலட்சமாயிருந்தது. அவர்கள் தாய்நாட்டுக்கு அனுப்பிய பணத்தொகை, இத்தாலியர் சருவதேசக் கடனுக்குச் செலுத்தியது போக எஞ்சிய பணத்தில் ஒரு முக்கிய பகுதியாக விருந்தது; ஆனல் மறுபுறம், தாராண்மையுள்ள இத்தாலியர் தொழிலில் நட்டமடைந்து இழந்துபோன பணத்தையுங் கணக்கிட வேண்டும். அடுத்தபடியாக, இதர ஐரோப்பிய நாடுகளைப் பாதித்த காரணங்களினலும் இத்தாலியரது புறக்குடியேற்றம் குறைந்தது: அதாவது ஐக்கிய மாகாணங்கள், பிரித்தானியப் பேரரசு, தென் அமெரிக்கா ஆகியவை தத்தம் நாடுகளில் அந்நியர் குடியேறுவதற்குத் தடைகள் விதித்தமையே அவ்வாறு புறக்குடியேற்றம் குறைந்தமைக்குக் காரணமாகியது. இவற்றுள், ஐக்கிய மாகாணங்களே ஐரோப்பியருக்கு மிக முக்கிய போக்கிடமாயிருந்தன. இசுருயேல் சாங்குவுயில் என்பவன், "அமெரிக்கா புடமிடும் இடம்போன்றது; அங்கு ஐரோப்பிய இனங்களனைத்தும் சீர்திருத்த மடைகின்றன" என்று எழுதினன். 1901–10 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட பத்தாண்டுகளில் 90 இலட்சம் இத்தாலிய மக்கள் ஐக்கிய மாகாணங்களிற் குடிபுகுந்தனர்; போர் நடந்த நான்காண்டுகளையும் சேர்த்த அடுத்த பத்தாண்டுகளில், ஏறத்தாழ 60 இலட்சம் பேர் அங்கு குடிபுகுந்தனர்[1]. இந்த அளவு வீதத்தில் மக்கள் குடியேறுவதைத் தடுக்க "அனுமதிச் சட்டங்கள்" பிறப்பிக்கப்பட்டன. (1921 ஆம் ஆண்டிலும் பின்னரும்) இச்சட்டங்கள் மேற்றிசை உலகின் ஒரு பாதியில் வெளியிலிருந்து குடியேறியோரது தொகையை ஆண்டொன்றுக்கு 1,50,000 ஆகக் குறைத்தன. இக்கட்டுப்பாடு

[1].அ. ஐ. மா. லிருந்து புறக்குடியேற்றம் நடைபெற்றமையால், அங்கு குடித்தொகையின் மொத்த அதிகரிப்பு இதைவிட அதிகம் குறைவாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாளப்பட்டிருந்த பத்தாண்டுக் காலத்திற்றானே ஐக்கிய மாகாணங்கள் மாபெரும் வியாபார மந்தத்துக்குட்பட்டமை, தற்செயலாக ஏற்பட்டதன்று. ஐக்கிய மாகாணம் ஒரே திட்டப் படி அமைந்த பொருள்களை மிகப் பெரிதளவில் உற்பத்தி செய்வதனடிப்படையிலே தனது கைத்தொழில் சம்பந்தப் பட்ட அமைப்பைக் கொண்டிருந்தது. இதனால் அதன் சந்தையில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும் நிலை ஏற்படாதபடி தவிர்க்க, அதிகரித்துக்கொண்டிருக்கும் குடித்தொகை அதற்கு இக்காலத்திலே தேவையாயிருந்தது. இச்சமயம், புதிய உலகம் பழைய உலகத்திலிருந்து கட்டுப்பாடில்லாத புறக்குடியேற் றத்துக்கு ஊக்கமளிக்காமையால், சிக்கலான பிரச்சினையொன் றுண்டாகியது. குடித் தொகைப் பெருக்கத்தினால் ஐரோப்பா வில் இரு குறிப்பிடத்தக்க விளைவுகள் ஏற்பட்டன. முதலாவ தாக அப்பெருக்கம் உலக வணிகத்தை வீழ்ச்சியுறச்செய்து, பொருளாதாரத்தில் தன்னிறைவையடையும் போக்கிற்கு ஊக்க மளிப்பதாயிற்று; ஏனெனில் ஒரு நாடு தனது உள்நாட்டு உற்பத்திப் பொருள்களைப் பிறநாட்டுப் பொருள்களுக்காக மாற் றக்கூடாத நிலைமையேற்படும் பொழுது, அல்லது அதனது தேவைக்கதிகமாயிருக்கும் மக்களைப் பிறநாடுகளுக்கனுப்பியிருக் கும் பொழுது, அது தனது பொருளாதார முறையைக் கட்டாய மாகத் திருத்தியமைக்க வேண்டிய தேவை ஏற்படும். இரண் டாவதாக, அப்பெருக்கம் குடியேற்றநாடுகளின் அவசியத்தை வலியுறுத்தியது. ஏனெனில் தாய் நாட்டிற்குரிய பொருள் களையுஞ் சேவைகளையும் நேரடியாகப் பரிமாற்றஞ் செய்து, அத்தாய்நாட்டுக்கான உணவுப் பொருள்களையும் தொழில் மூலப் பொருள்களையும் பெற்றுக் கொள்வதற்கான போக்கிடங் களாகவும் குடியேற்றநாடுகள் இருக்கவேண்டுமென்றாகியது.

வணிகத்திற் பெரிய மந்தம்.

அண்மைக் கால ஐரோப்பாவின் பொருளாதார வர லாற்றிலே (1918–39) நடைபெற்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி, 1929 ஆம் ஆண்டின் கூதிர்ப்பருவந் தொடங்கி, 1933 ஆம் ஆண்டு வரை நீடித்திருந்த மாபெரும் மந்தமேயாகும். இத னால் பொருளாதார வட்டாரத்திலும் அரசியல் வட்டாரத்திலும் முக்கியத்துவம் வாய்ந்த விளைவுகள் ஏற்பட்டன. அது பெரிய பிரித்தானியாவைத் தனது நாட்டின நாணயத்தைத் தங்கத் தோடுள்ள தொடர்பிலிருந்து பிரிக்கவும்—இம் முன்மாதிரியை முழு உலகமும் பின்பற்றியது—கட்டில்லா வியாபாரமுறையைக் கைவிடுவதன்மூலம் அந்நாடு தனது மரபு வழியான வாரியத் துக்குரிய பூட்கையினை மாற்றியமைக்கவும் காரணமாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெரும் மந்தம், ஐரோப்பாவிலே மறைந்து போய்க்கொண்டிருந்த கட்டுப்பாடற்ற தற்போக்குக் கொள்கைக்குக் கடைசிப் புகலிடமாயிருந்த ஐக்கிய மாகாணங்களிலே, அவைகளால் போற்றப்பட்டுவந்திருந்த பொருளாதாரக் கோட்பாடுகளைக் காற்றில் பறக்கவிடச் செய்வித்து, அவைதம் பொருளாதாரத் தாளாண்மைகளை வழக்கமில்லாதவளவில் உத்தியோகபூர்வமாக இயங்குமாறும் செய்வித்தது. இன்னும் அம்மந்தம், சேர்மனியிடமிருந்து நேசநாடுகள் பெறவிருந்த இழப்பீடு சம்பந்தமான உரிமைகளை அந்நாடுகள் கைவிடும்படி செய்யவும் காரணமாயிருந்தது. மேலும் அது, வீமார் யாப்பமைப்பின்படி சேர்மனியில் ஏற்பட்டிருந்த அரசியல் ஒழுங்கை அந்நாடு புறக்கணித்து விட்டு, அதற்குப் பதிலாக அதிகார அரச வொழுங்கை அங்கு நிறுவிக்கொள்ளவும் செய்வித்தது. கடைசியாக, பொருளாதாரத் தன்னிறைவு இயக்கத்திற்கு அளவுகடந்த தூண்டுதலாகவும் அப்பெருமந்தம் விளங்கியது.

மந்தத்திற்குக் காரணங்கள்.

இப் பொருளாதார மந்தத்துக்கான காரணங்களைக் குறித்துப் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பொதுவாக இப்படியானதொரு மந்தம், எமது பொருளுற்பத்தித் துறைகளில், தவறுத ஒழுங்கு முறையுடன், திடீர் விலையேற்றங்களும் விலையிறக்கங்களும் ஒன்றையொன்று தொடர்ந்து உண்டாகுங்கால் ஏற்படுகிறது. இக்குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி குறைந்தவளவில் முன்னூறு ஆண்டுகளாவது நடைபெற்று வருவதாகும்; எனெனில் 1720–24 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில், இங்கிலாந்து இத்தகையதொரு வியாபார முடைக்குட்பட்டிருந்தது; இதன் விளைவாக அதற்குப் பிறநாட்டில் சந்தைகள் குறைந்தன; உள்நாட்டில் தொழிலின்மை ஏற்பட்டது; இதுபற்றி விசாரணை செய்ய ஒரு வேத்தியல் ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டது. அக்குழு அம் முடைக்குக் காரணங்களெனச் சொன்னவற்றை ஆராய்ந்ததில், 1929–33 ஆம் ஆண்டுக் காலத்திற் றேன்றிய முடையினது காரணங்களென (நாணயமதிப்பு மிகுதியாக்கப் பட்டிருந்ததும் ஒரு காரணமாகும்) விரித்துரைக்கப்பெற்றவற்றை முன் கூட்டியே அக்குழு குறிப்பிடத்தக்கவிதமாகக் கூறியுள்ளதென்பது தெளிவாகின்றது. வியாபாரச் "சகடவோட்ட"[1]ப் புதிர் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியை ஒதுக்கி வைத்து விட்டு, இப்பொருளாதாரப் புயலினது கொடுமைக்குக் காரணமாயிருந்த சில துணைக்காரணங்களை இங்கு கவனிப்போம். 1914–18 ஆம் ஆண்டுப்

[1]இதுபற்றி இதே நூலாசிரியன் எழுதிய "அதிகப்படியான உற்பத்தி" என்ற நூலிலுள்ள வாதங்களைக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரானது போரிலீடுபட்டிருந்த நாடுகளினது மூலவளங்களின் மீது பெரும் கடன் பளுவைச் சுமத்தி விட்டுச் சென்றது. செல்வம் ஒப்புமையில்லாதவளவுக்கு அழிக்கப்பட்டிருந்ததற்கு ஏற்ப முன்னெக் காலமும் ஏற்படாதிருந்தவளவுக்குத் தேசியக் கடன்பளுவும் இருந்தது. இதுவன்றி, அமைதிக்காலப் பொருளாதாரத்திற்குப் பதிலாகப் போர்க்காலப் பொருளாதார முறை கையாளப்பட்டமையால், சாதாரண காலத்தில் நிலவிய பொருளாதாரச் சமநிலை குழம்பியிருந்தது. மனநிறைவு அளிக்க முடியாத போர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நிலக்கரிச் சுரங்கத் தொழில், பொறியியல் நுட்பத் தொழில், நாவாய் கட்டுந் தொழில் ஆகியவை பெருப்பிக்கப் பெற்றன; இத்தேவைகள் நிறைவெய்திய பின்னர் "இன்னலுக்குட்பட்ட பிரதேசங்கள்" சம்பந்தமான பெரும் பிரச்சினையொன்று தோன்றியது. மேலும், போர்க்காலத்தில் அரசாங்கங்களும் தனிமனிதரும் மட்டுக்கு மிஞ்சிச் செலவு செய்தமையும், போருக்குப் பின்தோன்றிய தலைமுறையினரது உள்ளங்கள் பிற்போக்கு மனவெழுச்சியினால் நிலை தடுமாறியமையும், வங்கிகளில் எஞ்சியிருந்த பணங்கள் நாணய மதிப்பின் ஏற்ற இறக்கங்களால் ஒரே நாளில் ஒழிந்தமையும், உயர்ந்தவரி விகிதத்தினால் சேமிப்பதில் ஊக்கங் குன்றிப்போனமையும், தொழிலில் படிப்படியாக ஈட்டிய ஆதாயங்கள் சருவதேச வியாபாரத்தில் வேகமாக ஏற்பட்ட மாறுபடுநிலையால் திடீரென அழிவுறக் கூடியனவாயிருந்தமையும், கடன்மூலதனப் பங்குகள் பரிமாற்றஞ் செய்யப்படுஞ் சந்தைகளில் வணிகச் சூதாட்டம் நடைபெற்றமையும் ஆகிய இந்நிகழ்ச்சிகளெல்லாம் சேர்ந்து இருபதாமாண்டுகளில் மக்களுள்ளத்தில் ஒருவித நிலையை உண்டுபண்ணின. இவ்வாண்டுகளில் மட்டுக்கு மீறி வீண் செலவு செய்யும் வழக்கம் சாதாரணமான தொன்றுயிருந்தது. பொருளாதாரச் சமநிலையின்மைக்குரிய அறிகுறிகள் நாட்டுக்கு நாடு வேறுபட்டிருந்த போதிலும், வணிகத்திற்குரிய பெரிய மந்தத்தினால் வெளிப்படையாகத் தெரியவந்த பொருளாதார அமைப்புப்பற்றிய குறைபாடுகளால் இவ்வெல்லா நாடுகளுமே ஒரேவிதமாகப் பாதிக்கப்பட்டன.

மந்தத்தின் போக்கு.

வரவிருக்கும் புயலின் முன்னறிவிப்பாக, உணவுப் பொருள்களினதும் தொழில் மூலப் பொருள்களினதும் விலைகள் பெருமளவிற் குறைந்தன. 1914–18 ஆம் ஆண்டுப் போரின் போதும் அதன் பின்னரும் ஏற்பட்டிருந்த விலையுயர்வு குறைவது தவிர்க்க முடியாததே—உலக நாணயங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பு அவ்விலைகளுக்குப் பொருந்தத்தக்கவாறு அமைக்கப் படாமையால் இவ்வாறு நிகழும்;- எனினும் விலைகளில் அதிக இறக்கம் ஏற்பட்டதற்கு மிகு பொருளாக்கமே காரண மாகும். கைத்தொழிலுக்குப் பின்னரே பயிர்த் தொழில் இயந்திர மயமாக்கப் பெற்றது; இதுவும் பெரிதளவிற் போரினது விளைவாகவே நடைபெற்றது; ஏனெனில், போரே பொருளுற்பத்தியிலும் போக்குவரத்திலும் இயந்திர முறைகள் கையாளப்படுவதை ஊக்குவித்தது. கைத்தொழிலில் கைகளா லான செய்முறைகளுக்குப் பதிலாக இயந்திர முறை பயன் படுத்தப்பட்ட பொழுது எவ்விளைவுக ளுண்டாயினவோ அவ் விளைவுகளே பயிர்த்தொழிலிலும் உண்டாயின; அவ்விளைவுகள் யாவையெனில் மிகு பொருளாக்கமும் விலைகளின் இறக்க முமாகும்; இவ்விளைவு போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளினது செலவிடும் சக்தியைக் குறைத்தது. கைத்தொழிற் பொருள் களில் ஏற்பட்ட விலை இறக்கம், பண்ணைப் பொருள்களினது விலை இறக்கத்துக்கு மிகப் பின்னரே ஏற்பட்டது. இவ்வாறு கைத்தொழிற் பொருள்களில் விலை இறக்கம் மிகப் பின்னரே ஏற்பட்டதற்குக் காரணம், கையிருப்பில் பொருள்கள் இருந்து வந்தமையும் மூலப் பொருள்களுக்கான செலவு அநேகமாக உற்பத்திச் செலவில் மிகவும் குறைந்த அளவினதாயிருந்தமை யுமாகும். இதன் விளைவாக, மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் பயிர்த்தொழில் நாடுகள், கைத்தொழில் நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வாங்குவதற்கு முடியா தவளவு ஏழ்மையுற்றுக் கொண்டே சென்றன. இதனால் கைத்தொழில் நாடுகள், மிகுபொருளாக்கத்தினாலும், அதன் விளைவான தொழிலின்மையாலும் துன்புறுவனவாயின. இவ் வாறுகச் சருவதேச வணிகத்திலே தடையேற்பட்டு, மந்தம் உண்டாவது தவிர்க்கப்பட முடியாததாயிற்று. நெருக்கடியின் அறிகுறி ஐக்கிய மாகாணங்களிலிருந்தே தோன்றிற்று. முன்னெருபோதுமிருந்திராத செல்வ வள நிலையைத் தொட ர்ந்து, முன்னெருபோதுமிருந்திராத பொருளாதாரப் பின் னிடைவு வருவதாகும் என்பதற்கு அம்மாகாணங்கள் ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கின. 1914-18 ஆம் ஆண்டுப் போருக் குப் பின்னர் சிலவாண்டுகளில் அவை வறுமையைப் போக்கு வதில் வெற்றியடைந்துள்ளன வென்றும், பொருளாதாரச் சட் டங்கள் அவற்றிற்கு ஆதரவாயிருந்தனவென்றும் நம்பப்பட்டது. ஐரோப்பா அவற்றினது வெற்றியின் இரகசியத்தை அறிந்து வரத் தூதுவரையனுப்பியது. எனினும் 1929 ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் வர்த்தக உலகில் திடீர் டாற்றங்கள் ஏற்பட் டன. பின் நிகழ்ந்த நடவடிக்கைகளினது போக்கு, சருவதேசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார விவகாரங்களில் ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளினது உதவியைப் பெறவேண்டுமென்ற உண்மையை விளக்குவதாயிற்று. வியாபார வீழ்ச்சி விரைவில் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவிற்குப் பரவியது. அடுத்தவாண்டின் முற்பகுதியில் அவ்வீழ்ச்சியினது தீங்கு தரும் விளைவு உலகு முழுவதும் பரவுவதாயிற்று. அதைத்தொடர்ந்து பொருளாதாரத்துறையிலும் நிதித்துறையிலும் ஏற்பட்ட குழப்பம் மேல்வரும் உண்மைகளாற் புலப்பட்டது. 1933 இல் இக்குழப்பம் முடிவடையுமுன், கைத்தொழில் மூலப் பொருள்களினது விலைகள் 50 சதவிகிதம் குறைந்தன ; மொத்த விற்பனைப் பொருள்களின் விலைகள் 30 சதவிகிதம் குறைந்தன ; இவைதவிர, சருவதேச வியாபாரம் 60 சத விகிதங் குறைந்தது. விரைந்து ஏற்பட்ட விலைக்குறைவுகளினடியாக மிகக் கேடான நிலை, தொழிலின்மை பற்றிய புள்ளிவிவரங்களினால் நன்கு விளக்கப் பெற்றுள்ளது. சருவதேசத் தொழிலகத்துடன் தொடர்புடைய பதிறு முக்கியமான கைத்தொழில் நாடுகளுக்குரிய தொழிலின்மை பற்றிய அட்டவணையின்படி, 1932 இல் நிலவிய தொழிலின்மை, 1929 இல் நிலவிய தொழிலின்மையிலும் மூன்று மடங்கு பெருகியிருந்ததென்பது தெரிகின்றது.

உலகப் பொருளாதார மாநாடு.

பொருளாதார மந்தத்தைப் போக்குவதற்குப் பொருத்தமான வழிவகைகள் பற்றித் திட்டம் வகுக்க உலக நாணய-பொருளாதார மாநாடொன்று இலண்டனில், யூன் 1933 இல் கூடியது ; அறுபத்து நான்கு நாடுகள் அம்மாநாட்டிற் பங்குபற்றின. அவப் பேறுக, சருவதேச நடவடிக்கையை எப்போதுமே தடைசெய்வதாகிய காலங் கடத்துங் கொள்கை, இம்மாநாட்டுக்கான அழைப்பைப் பிற்போடச் செய்தது. அதற்கு முன், எளிதில் மாறுகின்றதும் அதிக வேகத்தில் நடைபெறுகின்றதுமான நிகழ்ச்சிகள், சிக்கலானதும் மந்தகதியுடையதுமான உலக மாநாடொன்றின் ஒழுங்குமுறையான இயக்கத்திலும் அதிக தூரம் முன்னேறிச் சென்றுவிட்டன. பொருளாதாரப் புயல் உச்சநிலையிலிருந்தபோது அம்மாநாடு கூடியிருக்குமாயின், அரசாங்கங்கள், அடிப்படையான முன்னேற்றத்திற்குத் தேவையான தியாகங்களைச் செய்ய-இறைமுறைத் தடைகளைத் தணிக்கவும், மற்றுஞ் சருவதேச வணிகத்தில் ஏற்பட்டிருந்த தடைகளை நீக்கவும்-உடன்பட்டிருக்கும். எனினும் 1933 ஆம் ஆண்டின் நடுப்பகுதியளவில் பொருளாதாரச் சீரமைப்பு ஏற்படுவதற்கான இயற்கைக் காரணிகள், மீண்டும் செயற்படத் தொடங்கியமை பொருளாதாரப் புயலினது வேகத்தைக் குறைத்தது-பெருகிப் போயிருந்த வணிகப் பொருள்கள் உபயோகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்டன ; வணிகம் மீண்டும் விருத்தியடைந்தது ; தொழிலின்மை குறைவுற்றது ; தமது பாதங்களுக்கடியில் வாய் பிளந்து கொண்டுவந்த படுகுழியைக் கணநேரங் கண்ணுற்ற பொருளாதார நாட்டின வாதிகள், தமது தன்னம்பிக்கையை மீண்டும் பெறுவாராயினர். மாநாடு கூடியதுமே, கவலைக்கிடமான கருத்துவேற்றுமை தலைதூக்கிற்று. ஒருபுறம், ஐரோப்பிய நாடுகள், மற்றெல்லாப் பிரச்சினைகளுக்கும் முன்னதாக நாணய மதிப்பை நிலைக்கச் செய்வது சம்பந்தமான பிரச்சினைக்கே முடிவுகாண வேண்டுமென்றும், ஏனெனில் அசாதாரணமான பணமதிப்பின் ஏற்றத்தாழ்வுப் பிரச்சினைக்கு முடிவுகாணுமளவும் இறைமுறைகளைக் குறைப்பது எளிதல்லவென்றும் பிடிவாதமாகக் கூறின. மறுபுறம், ஐக்கிய நாடுகள், தொலர் நாணயத்தினது பெறுமதியைக் குறைத்து, அதன் மூலம் வணிகப் பொருள்களினது விலைமட்டத்தைக் குறைக்கக்கூடிய ஒரு புத்தாக்கத் திட்டத்தைக் (புதிய வணிக முறை) கையாள்வது பற்றிக் கருதிக் கொண்டிருந்தன. நாணய மதிப்பை நிலைக்கச் செய்வதென்ற முக்கியமான பிரச்சினையில் உடன்பாடு ஏற்படாமையால், அம் மாநாடு, பொருளாதார நாட்டினப்பற்றின் போக்கைத் தடுத்து, நாடுகளை மீண்டும் பொருளாதார நன்னிலைக்குத் திருப்ப முடியாத நிலையிலிருந்தது. மாநாடு தனது முக்கியமான குறிக்கோள்களை அடைவதில் முற்றுகத் தவறியது ; மாநாட்டு அலுவல்களை ஒத்திவைப்பதாகிய ஒரே யொரு காரியத்தை மாத்திரமே அது சாதித்தது. இவ்வாறுக, பொருளாதாரத்துறையிலும் அரசியற்றுறையிலிருந்ததைப் போன்றே, அக்காலத்துக்குரிய இன்றியமையாத பிரச்சினைகளைக் குறித்துப் போதுமான அளவில் சருவதேச ஒத்துழைப்பைப் பெறுவது முடியாத காரியமெனத் தெரிய வந்தது.

மந்தத்தினாலாய விளைவுகள்.

வணிகப் பெரும் மந்தத்தினடியாகத் தொழிலின்மை ஏற்பட்டமையாலும் மக்கள் பணத்தை முற்றுமிழந்தமையாலும், அம்மந்தம் மக்களுக்கு துன்பங்களை உண்டுபண்ணியதுமட்டுமன்றி அம்மந்தம் மற்றொரு முக்கியமான விளைவையு முண்டு பண்ணியது. அது உலக நாணயங்களின் நிலையைச் சீர்குலையச் செய்தது. மேலும் பிறநாட்டுப் பொருள்களுக்கு வரிவிதிப்பதை ஆதரிக்கும் கோட்பாடுடைய நாடுகளின் எண்ணிக்கையை அது மிகுவித்தது. பாரதூரமான இவ்விளைவுகள், பெரிய பிரித்தானியா காட்டிய பொருளாதார அரசியற் சூழ்ச்சிக்குரிய புதிய பாதையைப் பின்தொடர்ந்து எழுந்தன. பிரித்தானியா, தனது நாணயத்துறைக்குரியதும், வாரியத்துறைக்குரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதுமான பூட்கைகளை மாற்றியமைத்ததின் பயனாய் ஐரோப்பாவில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றது. இவ்விளைவுகளிலொன்று, உலகம் பொன் நியமத்தை மறுக்கப்போகின்றதென்பதற்கு அறிகுறியாயிற்று; மற்றொன்று, கட்டற்ற வியாபார இயக்கத்தினது முக்கிய அரணைத் தகர்த்தெறிந்தது.

பொன். நியமம்

பெரிய பிரித்தானியா 1914–18 ஆம் ஆண்டுப் போரில் பொன் நியமத்தைத் தடுத்து வைத்திருந்தது; ஆனால் முன்னிருந்தது போல், அந்நாட்டு நாணயம் பொன்னாகவே கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதும், அது 1925 இல் பொன் நியமத்தை மீண்டும் நிறுவியது. ஆறாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் அது பொன் நியமத்தைத் தடுத்து வைத்தது; ஆனால் தன்னால் உண்டாக்கப்படாத ஒரு நிலைமை காரணமாகவே அது அங்ஙனம் செய்தது. போருக்குப்பின் வந்த காலத்துக்குரிய (1918–39) சருவதேச நிதித்துறை சம்பந்தமான குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளிலொன்று, விரைவாகக் கைமாறும் பணமென்று குறிக்கப்பெற்ற இருப்புமுதல், இசைவான ஆதனங்களாக ஏராளமானவளவில் குவிந்தமையாகும். இத்தகைய "பரளும்" சொத்துக்கள் உயர்ந்த வட்டியினால் கவரப்பட்டதாலோ, அரசியல் அல்லது நிதி சம்பந்தமான பாதுகாப்பின்மை காரணமாகவோ, ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு நெடுங்கால முதலீடாகவன்றி, குறைந்தகாலக் கடன்களாகக் கடத்திச் செல்லப்பட்டன. இலண்டனிலிருந்த நிதிச் சந்தைகள், இவ்விதமாய் வந்து குவிந்த உறுதியற்றதும் இடம் விட்டு இடம் செல்வதுமான ஒப்படைப்புப் பணங்களைத் தடை செய்வதற்குப் பதிலாக, அவற்றைச் சேர்மானியப் பொருளகங்களுக்குக் கடனாகக் கொடுக்கப் பயன்படுத்தின. "முற்று விக்கப்பெறுத" ஓர் ஒப்பந்தத்தின்படி, சேர்மனியிடமிருந்து தனக்கு வரவேண்டிய பணங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையாலும், பிறநாடுகளில் தனக்குரிய ஏராளமான நிதிகள் முடக்கப்பட்டிருந்தமையாலும் 1931 ஆம் ஆண்டின் முற்பகுதியில் தனது கருவூலங்கள் பெரும் முடைக்கு உள்ளாகியிருந்ததைப் பிரித்தானியா உணர்ந்தது. அதேசமயம் பிரித்தானியப் பாதீட்டில், பெரிதளவு பற்றுக்குறை ஏற்படுமென முன் கூட்டித் தெரியவந்தது. பெரிய பிரித்தானியா செலுத்த வேண்டிய சருவதேசக் கட்டணங்களில் பாதக நிலுவையிருந்தமையும் அந்நாட்டின்மீதிருந்த நம்பிக்கையை இழக்கச் செய்தது. இதுகாறும் பிரித்தானியா பெருமையுடன் பேசுவதற்குக் காரணமாயிருந்து வந்த அதன் கொடுகடன் மீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பிறநாட்டு முதலீடுகளிலிருந்து வந்த வருவாய் குறைந்தமையால், இப்போது அதனுடைய கடன் வகைக்குக் குறிக்கப்படுந் தொகையாக மாறிற்று (1931). இத்தகைய பல்வேறு காரணங்கள் சேர்ந்து, பிறநாடுகளில் பிரித்தானியாவின் உயர்ந்த நிதிநிலைமீதிருந்த நம்பிக்கையைக் குறைக்கவும், நிதித்துறையில் பண வீக்கம் ஏற்பட்டதென்ற பீதிகளை உண்டுபண்ணவும் செய்தன. பணமுதலீடு செய்வோர் எளிதில் அஞ்சுவது என்றும் நடைபெறுவதொன்றே. அவர்கள் மட்டுக்கு மிஞ்சித் தம்முதலீட்டில் அக்கறை கொண்டிருப்பது, அவர்களிடம் எப்பொழுதுமே பேரச்சத்தை உண்டுபண்ணுவதாகும். கடன் கொடுத்த பிறநாட்டவர் பாதுகாப்பின்பொருட்டு தங்கள் பணங்களை இலண்டனிலிருந்து வேறுநிதித் தலங்களுக்கு மாற்றினர். பவுண்நாணயம் வெளிச் செல்வதைத் தடுப்பதற் கெனக் கையாளப்பட்ட முறைகளெல்லாம் பயனற்றுப் போன பின், பிரித்தானிய அரசாங்கம், தனது குறைந்த அளவினதான பொன் கையிருப்புக் குறைந்து போவதைத் தடுப்பதற்காகப் பொன் ஏற்றுமதியை நிறுத்தி வைத்தது (செத்தெம்பர், 1931). அவ்வரசாங்கம் தன் விருப்பமில்லாமலே பொன் நியமத்தை நிராகரித்தமை, தேசிய முக்கியத்துவத்தைக் குறிப்பதினும் மிகப் பெரியதொரு நிகழ்ச்சியாகியது ; ஏனெனில் இது உலகம் முழுவதிலுமே, நாணய ஒழுங்கு முறை சம்பந்தமாக மிகுந்த அதிர்ச்சியொன்றைக் கொடுத்தது. ஓராண்டுக் காலத்திற்குள் நாற்பதுக்கு மேலதிகமான நாடுகள், பெரிய பிரித்தானியாவின் மாதிரியைப் பின்பற்றின[1]. உலகப் பொருளாதாரத் துறையில் பிரித்தானியாவின் நிலை, மற்ற வல்லரசுகளை அவற்றினது நாணயப் பூட்கை சம்பந்தமாகத் தன்னோடு சேர்ந்து நிற்குமாறு அநேகமாகக் கட்டாயப்படுத்துவதாயும், அதன் விளைவாக "பொற்காசு நடைமுறையிலிருக்கும் வட்டாரம்" விரிவடையக் கூடியதாயும் செய்தமை ஒருபுறமிருக்க, மறுபுறம் நாடுகளிடையே பொன் ஏற்றத்தாழ்வாகப் பங்கிடப்பட்டிருந்தமையால் பொன் நியமம் பொதுவாகக் கையாளப்பட முடியாமலுமிருந்தது. வழங்கப்பட்ட மொத்தப் பொன்மதிப்பு ஏறத்தாழ 23,000 இலட்சம் பவுனென 1931 இல் கணக்கிடப்பட்டது. இத் தொகையில் ஐக்கிய மாகாணங்கள் 9,000 இலட்சமும், பிரான்சு 5,400 இலட்சமும், பெரிய பிரித்தானியா 1,180 இலட்சமும், பெற்றிருந்தன[2]. இவ்வாறுக முதல் இரண்டு நாடுகளும் மொத்தப் பொன் கையிருப்பில் பாதிக்குமேல் வைத்திருந்தன.

[1] ஐக்கிய மாகாணங்கள் 1933 இல் ; பிரான்சும், ஒல்லாந்தும், சுவிற்சலந்தும் 1936 இல்.

[2] The New International Year Book (1931).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டில்லா வணிகம்.

பொன் நியமம் நிறுத்திவைக்கப் பெற்றதைத் தொடர்ந்து பெரிய பிரித்தானியாவில் கட்டில்லா வணிகம் கைவிடப்பட்டது. பிறநாடுகளின் நாணய மதிப்பிறக்கங் காரணமாக அந்நாடுகளுக்குரிய வெளிநாட்டு வர்த்தகம் இயற்கையான முறையில் ஊக்குவிக்கப் பெறுதிருந்தது. அந்நாடுகளிலிருந்து செய்யப்பட்ட இறக்குமதிகளினின்றும் பிரித்தானியக் கைத்தொழில்களைப் பாதுகாக்கும் நோக்கமாக, 1921 ஆம் ஆண்டிலேயே கைத்தொழிற் பாதுகாப்புச் சட்டமொன்று பிறப்பிக்கப்பட்டது. சாதாரண சூழ் நிலைகளில் போட்டியிருக்குமென்பதையேற்றுக் கொள்கின்ற கட்டில்லா வணிகத்தினுடைய அடிப்படையான கொள்கையை இச்சட்டம் பாதிக்கவில்லை. நாணய மதிப்பிறக்கம் அல்லது ஏற்றுமதி செய்வோருக்கான பண உதவிகள் போன்ற பொது நிலையை மீறிய காரணிகளால் அசாதாரண நிலைமைகள் உண்டாகின்றன. இந்நிலைமைகளைப் பிரித்தானிய நாட்டுக்குரிய கைத்தொழிலாளர் எதிர்த்து நின்று சமாளிப்பார்களென்று எதிர்பார்த்தமை நியாயமன்று. எனினும், அரணின் மதில்களிற் பிளவு உண்டாக்கப்பட்டிருந்தது ; இதற்கான காரணம் எவ்வளவோ நியாயமானதாக இருந்திருக்கலாம் ; இதனால் முற்றுகையிட்ட சத்திகளிடம், அந்நாடு நாளடைவிற் சரணாகதியடைவது எளிதாயிற்று. தனது மரபுரிமையான வாரியத்துக்குரிய கருமங்களில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைச் செய்து கொள்வதற்குப் பிரித்தானியா பழக்கப்பட்டிருந்தது ; அதோடு, அதிக தீவிரமான மாற்றங்களை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளவும் அது விருப்பமுடையதாயிருந்தது ; இதற்கான ஆயத்தமும் அந்நாட்டில் எலவே செய்யப்பட்டிருந்ததென்க. எனினும், வணிகப் பாதுகாப்புப் பூட்கையை ஆதரித்து, 1923 இல் தேர்தலிற் போட்டியிட்ட பழமைபேண் கட்சி தோல்வியுற்றமை, உண்மையில் நாடு கட்டில்லா வணிகத்தையே மனமார விரும்பியிருந்ததென்பதைக் காட்டியது. வணிகப் பாதுகாப்புப் பூட்கை உண்மையாகவே கைக்கொள்ளப்பட்டபோது, அது பீதியாற் பிறந்ததும், ஆத்திரமான அமயத்திற்கேற்ப அமைந்ததுமானதோர் திட்டமாகவேயிருந்தது. கட்டில்லா வணிகம், வணிகவியல்பின் இறுதி அரண்களைத் தகர்ப்பதற்குத் 'தானியச் சட்டங்களை அள்ளிச் சென்ற வெள்ளம்' உதவியதுபோல, பிரித்தானியா வியாபாரத் துறையிற் பெற்ற மதிப்புக்குக் காரணமாய் விளங்கிய தேளிங்குப் பவுணின் வீழ்ச்சி, தேசம் அவசரமவசரமாக வணிகப் பாதுகாப்புப் பூட்கையைக் கைக்கொள்வதற்கு ஏதுவாயிற்று. ஆங்கிலப் பொற்காசு சேர்மானிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாக்கு" நாணயம் சென்ற பாதையிற்றான் செல்லுமோ என்று பீதியுற்றிருந்த பிரித்தானிய மக்கள், கட்டில்லா அதிகாரம் வேண்டுமென்று கோரிய "தேசிய அரசாங்கத்திற்கு" அதனைத் தாராளமாகக் கொடுத்தனர். பொதுத் தேர்தலுக்குப் பின்னர் (1931) அதே தேசிய அரசாங்கம் அக்கட்டில்லா அதிகாரத்தைக் கொண்டு, "வணிகப் பாதுகாப்புப்" பூட்கையைப் புகுத்தியது. இறக்குமதிகளின் அளவைக் குறைப்பதற்கும், "1931 இன் நிலைமைக்கு முக்கிய காரணங்களுளொன்றுகவிருந்த பாதகமான உயர்ந்த வர்த்தக நிலுவையைச் சீர்ப்படுத்துதற்கும்", வணிகப் பாதுகாப்புத் தீர்வைகள் அவசியமானவையென விளக்கப் படுத்தப்பட்டது. எனினும், இவ்வாதம் போதிய அளவு பாதுகாப்பை யளிப்பதற்குக் காரணமாயிருந்த நாணயத்தின் மதிப்புக் குறைக்கப்பட்டமையால் பயனற்றதாயது. 1932 இல் பிறப்பிக்கப்பட்ட இறக்குமதித் தீர்வைச் சட்டம், ஒவ்வொரு தொழிலும் தனது சொந்தப் பாதுகாப்புத் தீர்வைக்காக, இறக்குமதித் தீர்வைகளுக்கான அறிவுரைக் குழு என்று குறிப்பிடப் பெற்றதொரு குழுவுக்கு விண்ணப்பிக்க வேண்டுமெனக் கூறியது. இப்பொறுப்பைத் தொழினுட்ப ஆணைக்குழுவொன்றிடம் நம்பகமாக ஒப்படைப்பதனால், இதர நாடுகளில் இறைமுறைப்பட்டோலைகளைச் சூழ்ச்சித்திறத்துடன் கையாளும்பொருட்டு, நிருவாகத்தில் அரசியற் செல்வாக்கைப் புகுத்துவதான இகழ்ச்சிக்குரிய பழக்கங்கள் ஒழிக்கப்பட்டு விடுமென எதிர்பார்க்கப்பட்டது.

கட்டில்லா வணிகத்துக்குப் பெரிய பிரித்தானியாவின் கடப்பாடு.

பிரித்தானிய வாரியத்துக்குரிய பூட்கையிற் செய்யப்பட்ட புகழ் பெற்ற இம்மாற்றத்தினடியான முடிவான விளைவுகள், ஒரு தலைமுறையிற் செயல்பட முடியாதவையாக விருக்கக் கூடும். அவ்விளைவுகள், இதுவரையிருந்ததுபோல் மாறெதிரான செல்வாக்குகளால் மூடிமறைக்கப்பெற்று, ஒருவேளை இனி வரவிருக்கும் பல ஆண்டுகளுக்கு அவ்வாறே தொடர்ந்திருந்து வரலாம். இருந்தபோதிலும், பலவாண்டுகள் கடந்து, பொருளாதார நிலை உலகமுழுவதுமே சாதாரண நிலையையெய்திய போது, கட்டில்லா வணிகம் கைவிடப்பட்டமையின் விளைவாகப் பெரிய பிரித்தானியாவிற் பாரதூரமான பல விளைவுகள் உண்டாகியிருக்க வேண்டும். பெரிய பிரித்தானியாவே கட்டில்லா வணிகத்திற்கு முன்னோடியாகவிருந்தது. பெரிய பிரித்தானியா தனது பொருளாதார நிபுணர்களின் போதனைகளாலும், அரசறிஞர்களது செயல்களிலுலும் சருவதேசத்துக்குமுரிய தொழிற் பங்கீடு பற்றிய கொள்கைகளுக்கு வழிகாட்டியது; அதோடு சருவதேசத்துக்குமுரிய வணிகத்திலுல் மக்களுக்கு உண்டாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மைகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகவும் அது விளங்கியது. நிலக் கோளத்திலே அந்நாடே தலைசிறந்த வணிகத் தொழிலையுடையதாகவும், மிகப்பெரிய வணிகக் கப்பல்களையுடையதாகவும், உலகத்தின் வங்கியாகவும், தரகு முகவராகவும் திகழ்ந்தது. அதன் குடிமக்கள் ஐரோப்பாவின் எந்தவொரு நாட்டு மக்களையும் விட மிக உயர்ந்த வாழ்க்கை நியமத்தைப் பெற்று அனுபவித்தனர். பிரித்தானியாவின் தேவைக்கு வேண்டியது போக எஞ்சியிருந்த செல்வமே, நில உலகத்திற் பயனற்றுக் கிடந்த விடங்களை வளமுறச் செய்து, பிற்போக்கடைந்திருந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிக்கக் காரணமாயிருந்தது. தனக்கு அவசியமேற்பட்டவமயத்தில், அந்நாடு தான் கைக்கொண்ட நெடிதுகாண் ஆற்றலுடைய பொருளாதாரப் பூட்கையின் பலனைப் பூரணமாக அனுபவித்தது. 1914–18 ஆம் ஆண்டுப் போர் நடந்த காலத்தில், அது தனக்குரிய மிகப் பளுவான நிதிப்பாரங்களைச் சுமந்ததுமன்றி, தான் பிறநாடுகளிலிருந்து பெற்ற கடன்களைப் பார்க்கிலும் ஏறத்தாழ இருமடங்கு தொகையைத் தன் நேசநாடுகளுக்கு முன்பணமாகவுங் கொடுத்தது. போருக்குப்பின், முன்னெப்போதுமில்லாத அளவினதாகிய வரிச்சுமையையும், சமுதாய சேவைகளிலேற்பட்ட செலவுகளையும் அது தாங்கியது; இதனால் அது தனக்குதவிய நாட்டினரைப் பொருளாதார இடுக்கண்களால் உண்டாகும் மிகத் தீமையான விளைவுகளினின்றும் பாதுகாத்தது. இவற்றையெல்லாம் அது, தனது மக்களுடைய ஊக்கத்தினாலும், தனது அரசியல் நிறுவகங்களுடைய இணக்கத்தினாலும், கட்டில்லாப் பண்டமாற்று முறையினாலும் செய்யக்கூடியதாயிருந்தது. பெரிய பிரித்தானியாவின் புதிய வாரியத்துக்குரிய பூட்கையானது, அந்நாட்டினது வணிகப் பெருக்கத்தையும், அதன் ஏற்றுமதி சம்பந்தமான வியாபாரத்தின் அளவையும், அதன் பொருளகம், காப்புறுதி ஆகியவை சம்பந்தமான சேவைகளின் வலிமையையும், அதன் தற்போதைய வாழ்க்கை நியமம் பேணப்படுந்தன்மையையும் பழுதுறுவண்ணம் பாதுகாக்குமோ வென்பதை வருங்காலத்திற்றான் காணவேண்டும்.

பிறநாடுகளில் எற்பட்ட எதிர் விளைவுகள்.

பெரிய பிரித்தானியா கட்டில்லா வணிகத்தைக் கைவிட்டமையினால், பிறநாடுகளில் ஏற்பட்ட எதிர்விளைவுகளை எலவே அளவிடக்கூடியதாயிருக்கின்றது. முதலில் அது சருவதேச வியாபாரத்தைக் குன்றச் செய்து, பொருளாதார நாட்டினவாதத்தை ஐரோப்பாவில் மிகுக்க உதவியது. மேலும் அது குறிப்பிடத்தக்க அளவில் மக்களது மனோநிலையையும் மாற்றியது. அது காரணமாய், பிரித்தானியாவை முன் மாதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகக் கொண்டு ஊக்குவிக்கப் பெற்று, சருவதேச வணிகக் கூட்டுறவுக்கு முட்டுக்கட்டைகளாகயிருந்த எல்லாவற்றையும் பெயர்த்தெறிய முன்வந்த பிறநாட்டுச் சத்திகளை அது பெரி தளவில் தடைசெய்தது. பெரிய பிரித்தானியா தான் நூருண்டு களாகக் கையாண்டு வந்த பூட்கையையே பின்பற்றிக் கொண்டி ருந்த வரையும், சருவதேச இறைமுறைகள் குறைக்கப்படவோ அகற்றப்படவோ வேண்டுமென்னும் வாதத்திற்கு அதுவே தலை சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது ; ஆனால் மிகப்பெரிய தொரு நெருக்கடியின்போது அந்நாடு தனது பூட்கையை விடாப் பிடியாகப் பின்பற்றத் தவறியமையால், உலக வரலாறு ஒரு நூற்றுண்டுக் காலத்துக்குப் பின்தங்க வேண்டியதாயிற்று ; அன்றியும், பிரித்தானியா தனது வணிகச் செயல் முறைகளை மாற்றியமைத்தமையால், தொழிலுக்கான மூலப்பொருள்களைப் பெறுவதாகிய மிகச் சிக்கலான பிரச்சினை கவனிக்கப்பட வேண் டியதொன்றுயிற்று. பெரிய பிரித்தானியா பிறநாட்டு இறக்கு மதிகளை எற்றுக்கொள்வதில் தடையெதுவுமில்லாத கொள் கையொன்றைப் பின்பற்றியது ; இதர நாடுகளோ, தங் களுடைய உற்பத்திப் பொருள்களைத் தாய்நாட்டுக்கு விற்று விட்டு, பிரித்தானியப் பேரரசின் எப்பாகத்திலும் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டன ; இவ்வாறு மற்றைய நாடுகளினது வணிகத்திற்கு யாதொரு இடைஞ்சலுமில்லா திருந்தமையினால், பிரித்தானியர், உலகத் தின் பெரும்பாகத்தில் கைத்தொழில் மூலப்பொருள்களையும், உணவுப் பொருள்களையும் பெறுவதில் தனி உரிமை பெற் றிருந்தமையை எதிர்க்கும் மனநிலை குறைவாகவே காணப் பட்டது. கடைசியாக, பிரித்தானியா கடல் கடந்த நாடுகளில் பல பதினாயிரம் இலட்சம் பவுணுக்கு மேலாக முதலீடு செய் திருந்தது ; இத்தொகைக்காகக் கொடுக்கப்பட்ட வட்டியும், இத் தொகையைத் திருப்பிக் கொடுக்கு முகமாகச் செலுத்தப்பட்ட பணமும் பொருள்களாகவே கொடுக்கப்பட்டன. இப்படியாக, நிலைமையை நெடிதுகாணுற்றலுடன் கவனிக்கும்பொழுது, பெரிய பிரித்தானியாவின் வாரியத்திற்குரிய பூட்கை, அதன் அடிப்படையான நலன்களைக் கருதிய பெரும் போக்கில் அமைக் கப்பட வேண்டியிருந்தது. உலக வணிகத்துறையில் அதற் கிருந்த உயரிய நிலை, பொருளகம், முதலீடு, காப்புறுதி, வணிகக் கப்பல்கள் முதலிய துறைகளில் சருவதேசத்துக்கும் அது ஆற்றும் சேவைகளிலிருந்து பெற்ற ஊதியத்தின் பாரிய தன்மை, இன்னும், பிரித்தானியப் பேரரசில் உற்பத்தி செய் யப்பட்ட கைத்தொழிலுக்கான மூலப் பொருள்கள் பிறநாடு களுக்கு எளிதிற் கிடைக்க வசதி செய்யவேண்டுமென்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கிருந்த நேர்மையான கடப்பாடு ஆகியவையே அந்நலன்களாகும்.

அவுற்றுறுதி.

1929–33 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெரும் மந்தத்தின் பின்னர், நாட்டினப் பொருளாதாரத்தினது போக்கு தீவிரமாயிற்று. இப்பொழுது அப்போக்கின் காரணமாக, "அவுற்றுறுதி" அல்லது நாட்டினப் பொருளாதாரத் தன்னிறைவு என்ற ஒழுங்கு நிச்சயமாகக் கைக்கொள்ளப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வலிமைபெற்றிருந்த வைதீகமான கொள்கைகளிலிருந்து விலகி, முக்கியத்துவம் வாய்ந்த இவ்வொழுங்கு ஏற்படுதவற்குக் காரணமாக விருந்த பொருளாதாரம், அரசியல் ஆகியவை சம்பந்தமான சூழ்நிலைகளை நாம் ஆராய்வோம்.

சருவதேச வணிகத்துக்கிருந்த தடைகள்.

சருவதேச வணிகத்திற்கு இடையூறுகளிருந்த பொருளாதாரக் கூறுகளை ஒன்பது தலைப்புக்களுக்குக் குறையாத பிரிவுகளாக அமைக்கலாம். இவற்றுள் மிக முக்கியமானது இறைமுறைத் தடைகள் புகுத்தப்பட்டமை; இத்தடைகள் புதிய குடியரசுகள் நிறுவப்பட்டமையால் அதிகமாயின. இரண்டாவதாக, நாணயப் பெறுமதி குறைந்த வெளிநாடுகளிலிருந்து விலை குறைந்த பொருள்களைக் கொண்டு ஒரு நாட்டின் உள்நாட்டுச் சந்தையை நிரப்புவதைத் தடுப்பதற்காக வகுக்கப்பட்ட திட்டம்—அதுதான் "அனுமதிப்பங்குகள்" அமைக்கப்பட்டமை. இதனால் ஒருநாடு இன்னொரு நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு வரையறை செய்யப்பட்டது. மூன்றுவதாக, பரிமாற்றல் ஒழுங்கு முறை அமைக்கப்பட்டமை. இம்முறைப்பிரகாரம், ஏற்றுமதி செய்யும் நாடு ஒரு குறித்த அளவு பெறுமதியான பொருள்களை, இறக்குமதி செய்யும் நாட்டிலிருந்து வாங்க ஒப்புக்கொண்டது. ஒரு குறித்த ஆள்புலத்துடன் ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையுஞ் சமனைக்கும் முறை அமைக்கப்பட்டதன் விளைவாக, ஒரு நாடு இன்னொரு நாட்டிலிருந்து பொருள்களை வாங்கி, வேறொரு நாட்டுக்கு விற்று, அதனால் எல்லா நாடுகளுமே தங்களது தேவைகளுக்கிசைந்த சிறந்த சந்தைகளைத் தெரிந்தெடுக்க உதவியாயிருந்த மும்முகநோக்குடைய சருவதேச வணிகம் தடைப்பட்டது. இவ்வாறு வர்த்தகத் துறையின் இயற்கையான செயலோட்டம் மாற்றியமைக்கப்பட்டமை தனது நெகிழ்ச்சியால் — தனது நெகிழ்ச்சிக்குத் தடையான எவ்வித சத்திக்கும் மூற்றுக உட்படாதிருக்கும் தன்மையால் — செயற்படும் சர்வதேச வர்த்தகத்தின் விருத்தியைத் தடைப்படுத்துவதாயிற்று. நாலாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக, மூன்றுவதின் காரண காரியத் தொடர்புடைய பண்ட மாற்று முறை ஏற்பட்டமை யென்க. இதுதான் பொருள் களைக் கொடுத்துப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதாம். உலகத்திலுள்ள முன்னேற்றமடைந்த சில நாட்டு மக்கள், இவ்விருபதாம் நூற்றாண்டிலும் ஆதிகாலத்தில் நிலவிவந்த பண்டமாற்று முறையைக் கைக்கொண்டிருந்தனர். அம்மக் கள் பொருள்களை மாற்றுதல், புதுத்திட்டம் அமைத்தல் ஆகியவற்றைக் கைக்கொண்டதிலிருந்து அவர்கள் இவ்வாறு பழைய முறைக்குத் திரும்பிவிட்டமை வெளிப்படுவதாயிருந் தது. ஐந்தாவதாக, பல நாடுகள் பணத்தை வெளி நாட்டுக்கு அனுப்புவதற்குத் தடைகளை ஏற்படுத்தியமை. இது, வியா பாரிகள் இறக்குமதி செய்த பொருள்களுக்கு விலை கொடுப் பதற்காக அவர்கள் வெளிநாட்டு நாணயத்தைப் பெறு முன்னர், அதற்கென வேண்டிய உரிமையுத்தரவைப் பெற மனுச்செய்யும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தியது ; வணிகஞ் சம்பந்தமாகப் பணஞ் செலுத்துவதைப் பொறுத்த எல்லா வெளி நாட்டு நடவடிக்கைகளும், உத்தியோகத்தரின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவேண்டு மென்பதே இதன் உண்மை நோக்க மாகும். தரவு, தேவை ஆகியவற்றுக்குரிய ஆற்றல்களின் தொடர்பினால் உருவாக்கப்படும் வணிகத்துறையின் சாதா ரணப் போக்கு இதனால் பாதிக்கப்பட்டது. ஆறுவது, தங் களது நாடுகளிலிருந்து பணம் வெளிச் செல்வதைத் தடை செய்யாத நாடுகளுடைய நாணய மாற்றுப் பெறுமதிகளில் தாறுமாறான ஏற்ற இறக்கம் ஏற்பட்டமை. தாள் நாண யங்கள் பொன்னினால் ஈடுசெய்யப்படாமல் இருந்தபொழுது அவை ஒன்றோடொன்று கொண்ட தொடர்புகள் (உத்தி யோக பூர்வமான கட்டுப்பாடின்மையால்), முக்கியமாக அந்நாண யங்கள் வெளிநாடுகளில் பெறக்கூடிய நம்பிக்கையைப் பொறுத் திருப்பனவாயின. எலவே கூறப்பட்டுள்ள காரணங்களின் விளை வாக, மறைமுகமாயுள்ள அல்லது " உறுதியற்ற " பணம் அசா தாரணமாகப் புழங்கிவந்தது. இதன் காரணமாக, நாணயமாற்று விகிதங்களில் ஒழுங்கற்ற ஏற்றத்தாழ்வுகள் காணப்படலாயின. நாணயம் சம்பந்தமாக உண்டான குழப்பநிலை, ஒரு நாட்டி னது நாணயச் செல்வாக்குக்குத் தீங்கிழைத்து, அதன் பிற நாட்டு வணிகத்தில் உறுதியற்ற நிலைமையை ஏற்படுத்தியது. எவ்வாறெனில், இவ்வாறான நிலைமைகளால் வியாபாரத்தின் அளவும், இலாபமும் பாதிக்கப்படலாயின. ஏழாவது, சரு தேச அளவில் பணங் கொடுத்துதவுவது, அதாவது செல்வ மிக்க நாடுகளினின்று ஏழ்மையான நாடுகளுக்குப் பணஞ் செல்வது, குறைந்தமை. புதிய சந்தைகளைத் திறந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது எற்றுமதி வியாபாரத்தைப் பெருப்பிக்கும் நோக்கத்துடன் பெரிய பிரித்தானியா பிறநாடுகளில் முதலீடு செய்யும் வழக்கத்தை எப்போதுமே கையாண்டு வந்திருந்தது. சேர்மனியில் ஏராளமான பணம் முடக்கப்பட்டிருந்தமையாலும், சருவதேசத்துக்குரிய பணஞ் செலுத்தப்படுவதில் பாதக நிலுவை ஏற்பட்டிருந்தமையாலும், பொன் நியமம் கைவிடப்பட்டிருந்தமையாலும் இலண்டன் சந்தை தனது பூட்கையை மாற்றியமைக்க நேரிட்டது. இதுபோன்று, பங்கு மாற்று நிலையம் குலைந்தமையாலும், அதனைத் தொடர்ந்து சருவதேச நிலைமை சீர்குலைந்திருந்தமையாலும் அமெரிக்கா பிறநாடுகளுக்களித்துவந்த நிதியுதவியை மிகக் குறைத்துவிட்டது. அதுவரை ஐக்கிய மாகாணங்கள் ஏராளமான பணத்தை—அதில் மூன்றில் ஒரு பங்கு ஐரோப்பாவிற்குச் சென்றது—பிற நாடுகளுக்கு முன்பணமாகக் கொடுத்திருந்தன. வெளிநாட்டுக் கடன்கள் பெறமுடிந்தமை கடன் பெறுபவருக்கிருந்த வசதிகளைக் குறிப்பதாகும்; கடன் பெற்ற நாடுகள் பொருள்களை வாங்குவதற்காகவே அக்கடன் தொகையைப் பயன்படுத்தின. எனவே இப்போது சருவதேச நிதியுதவி குறைக்கப்பட்டமை, சருவதேச வணிகத்திற்கு ஏற்பட்ட தடைகளில் ஒன்றுகக் கருதப்படவேண்டும். எட்டாவது, பாதுகாப்பின்மை சம்பந்தமான உணர்ச்சி ஏற்பட்டமை. இவ்வுணர்ச்சி நம்பிக்கைக்குறைவையுண்டாக்கி, வணிகமும் நிதியும் தழைப்பதற்குத் தடைசெய்தது. ஒன்பதாவது, நாட்டின் கைவளங்கள் சாதாரணத் தேவைகளுக்காக உபயோகப்படுத்தப்படாமல் இப்போது பாரித்த அளவில் நடைபெற்ற படைக்கலத்தொகுதி சம்பந்தப்பட்ட அபரிமிதமான செலவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டமை. நாடுகள் ஒன்றுக்கொன்று எதிராகப் படைக்கலந் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தமையால், அவை தங்களுக்குத் தேவையான மூலப்பொருள்களையும் உற்பத்திப் பொருள்களையும் வெளிநாடுகளிலிருந்து தருவித்துக் கொள்வதற்கு அதிகமாகச் செலவிடவேண்டியிருக்கவில்லை.

அரசியற் போக்கு.

முன் கூறப்பட்ட தடைகளெல்லாவற்றினதும் திரண்ட பயனால் சருவதேசப் பொருளாதார ஒத்துழைப்பின் எல்லை வரையறுக்கப்படவும், நாடுகள் தத்தமது கைவளங்களையே நம்பியிருக்கவும் நேரிட்டது. இத்தகைய போக்குக்கு அரசியல் சம்பந்தமான மூலக் கூறொன்று—தனியாதிக்க நாடுகளினது எழுச்சி-மிகுந்த வலியூட்டியது. தனது மக்களின் வாழ்க்கை சம்பந்தமான அரசியல், பொருளாதாரம், பண்பாடுபற்றிய ஆற்றல்கள் எல்லாவற்றையும் ஒன்றுகத் திரட்டி, அவற்றை ஆதிக்கமுற்ற ஒரு கட்சியினது உறுதியான கட்டுப்பாட்டுக்குட்படுத்த வேண்டுமென விரும்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தனியாதிக்க நாடு, தனது மக்களின் பொருளாதார வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களுக்காகப் பிறநாடுகளை நம்பியிருப்பது முறைகேடானது என உணர்ந்தது. ஐரோப்பிய வல்லரசுகள், போர் மூண்ட காலங்களில் தங்களது பொருளாதார நிலைக்குற்ற தீங்குகளைப் பட்டறிந்திருந்தன. 1914-18 ஆம் ஆண்டுப் போரில் சேர்மனியின் வீழ்ச்சியைக் கடற்படை முற்றுகை துரிதப்படுத்தியபோது, அந்நாட்டு மக்கள் அரைப்பட்டினியாக இருக்க நேரிட்டது. அபிசீனியப் போர் ஏற்பட்ட போது இத்தாலியின் மீது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதிற் காலதாமதமேற்பட்டதால், எதிர் பார்த்த பயன் விளையாவிட்டாலும், அந்நாட்டினது பொருளாதார நிலை எவ்வளவு வலுவற்றிருந்த தென்பதைக் குறிப்பிடத்தக்க விதமாய் அது நினைவூட்ட உதவியது. சோவியத்து ஐக்கியம் முதலாளித்துவ உலகத்தில் நிலைத்து நிற்கவேண்டுமாயின், அது துரிதமாக இயந்திரத் தொழிலில் ஈடுபடவேண்டியது இன்றியமையாததென்பதை, போல்சிவிக்குப் புரட்சியின் எதிரிகளுக்குக் கிடைத்த வெளிநாட்டு ஆதரவு இரசிய ஆட்சியாளருக்கு மெய்ப்பித்தது. இப்படியாக, பொருளாதாரத்தினதும் அரசியலினதும் கூட்டான ஆற்றல்கள், ஐரோப்பாவின் பெரும் பகுதியில், பொருளாதார நாட்டினப் பற்றும், அரசியல் நாட்டினப் பற்றும் ஒருங்கமைய வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தின. இரசியா, தான் முதலாளித்துவ வல்லரசுகளைச் சார்ந்திருப்பதிலிருந்து தன்னை விடுவிக்கும் நோக்குடன் தன் தொழிற்றுறையை இயந்திர மயமாக்கிக் கொண்டதைப்பற்றி மற்றோரிடத்தில் கூறியுள்ளோம். இங்கு சேர்மனியும் இத்தாலியும் தங்களது நாட்டினப் பாதுகாப்பை மேம்படச் செய்வதும், தங்களது சுருங்கிய வெளிநாட்டு வணிகத்திற்குப் பதிலாக மற்றொன்றைத் தேடிக் கொள்வதுமாகிய இரு நோக்கங்களுடன், தங்களது பொருளாதாரத் தன்னிறைவைப் (அவுற்ருற்கி) பெறுவதற்கு எடுத்த முயற்சிகளைப்பற்றிக் கூறுவோம்.

சேர்மனியின் பொருளாதாரப் பூட்கை.

மூன்ருவது சேர்மானியக் குடியரசின் பொருளாதாரப் பூட்கை, 1936 இல் "நான்காண்டுத்திட்டம்" நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பொழுது முறையான உருவத்தையும் பொருளையும் பெற்றது. "உணவுக்குப் பதிலாகத் துப்பாக்கிகள்" என்று கட்சிப் போர்க்குரல் எழுப்பியமை, அத் திட்டத்தின் நோக்கத்தை வெளிப்படுத்துவதாயிற்று. இப்போர்க் குரல், ஒரு சொற்ருெடரில், தேசியச் சமவுடைமைக் கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினரின் பொருளாதாரத் திட்டத்தைச் சுருக்கிக் கூறிற்று. பிற நாடுகளில் பொதுமக்களது உணர்ச்சியைச் சேர்மனியின் புதிய ஆட்சியாளரது பூட்கை எவ்வாறு பாதிக்குமென்ற கவலை சிறிது மேயின்றி, அப்பூட்கையை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அவ்வாட்சியாளர் கையாளக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கமாக இது அமைக்கப்பெற்றது. இப்பூட்கையின் விளைவாக, அமைதியான காலத்தில் பொருளாதார நடவடிக்கைபற்றிய பயமுறுத்தல்களைப் புறக்கணிக்கவும், போர் ஏற்படுங்கால், "மூப்ப தாண்டுகளுக்கு"க் கூட நீடிக்கக் கூடிய கடற்படை சார்ந்த முற்று கையை எதிர்த்து நிற்கவும் (இவ்வாறு வீண்பெருமை பேசப் பட்டது) அவர்களால் இயலக்கூடியதாயிருந்தது. நாட்டிற்கு வேண் டிய மூலப்பொருள்களை உற்பத்தி செய்வதே பொருளாதாரத் தன் னிறைவு சம்பந்தமான மிகச் சிக்கலான பிரச்சினையாகவிருந்தது. இதுகாறும் பிறநாடுகளிலிருந்து பெறப்பட்ட மூலப்பொருள் களுக்குப் பதிலாக இப்போது தொகுக்கப்பெற்ற கம்பளி, றப்பர் போன்ற செயற்கைப் பொருள்கள் கண்டுபிடிக்கப் பட்டன; குறைந்த தரமான இரும்புக்கனி உலோகக் கலவை களும் உபயோகிக்கப்பட்டன; திரவ எரிபொருள், நிலக்கரி யிலிருந்து உற்பத்திசெய்யப்பட்டது; தானிய இறக்குமதிகளைக் குறைப்பதற்காக, பயிரிடத்தகுந்த நிலங்களை முன்னரிலும் ஒருமுகமுனைப்பான விதத்தில் பயிரிடுவதற்கு ஊக்கமளிக்கப் பட்டது; உருளைக் கிழங்கு, சருக்கரைக் கிழங்கு ஆகியன அதிகமாகப் பயிரிடப்பட்டன. இவற்றின் பொது விளைவாக வாழ்க்கை நியமம் குறைந்தது; எனெனில் இப்போது பொருள்கள் விலையேறி யிருந்தது மாத்திரமன்றி, தரங் குறைந்திருந்ததையும் நுகர்வோர் கண்டனர். இதுமட்டுமன்றி, மாவும், மற்ற உணவுப் பொருள்களும் கலப்படஞ் செய்யப்பட்டு மிருந்தன. எனினும் இவ்விளைவு, மற்றக் காரணிகளோடு சேர்ந்து, தற்காலிக மாகத் தொழிலின்மையைக் குறைக்க உதவியது. அவ்வாறான மற்றக் காரணிகள் எவையெனில், படைத்துறைக்குரிய கருவி களுக்காகவும் பொதுவேலைகளுக்காகவும் (நிலஞ்சீர்ப்படுத்தல் உட்பட) மிகத் தாராளமாகப் பணஞ் செலவிடப்பட்டமை, படைக்குக் கட்டாய ஆட்சேர்ப்புச் செய்வதை மீண்டும் ஏற்படுத்தி யமை, தொழிலாளர்களுக்காக முகாங்கள் அமைக்கப்பட்டமை, தங்களது உண்மையான தேவைக்கதிகமாகப் பணியாளர்களை வேலைக்கமர்த்துமாறு தொழில் நடத்துவோர் கட்டாயப்படுத்தப் பட்டமை, பெண் தொழிலாளர் வேலைக்கு அமர்த்தப்படும் முறைக்கு ஊக்கமளிக்கப்படாமை, குறைந்த நேர வேலையும் அதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்ப குறைந்த ஊதியமும் கொடுக்கப்பட்டமை, கடைசியாக, போர்க்காலங்களிற் செய்வதுபோல, நாட்டின் பொருளாதார அமைப்பை முற்றுகக் கட்டுப்படுத்தியமை என்பனவாம்[1].

இத்தாலியின் பொருளாதாரப் பூட்கை.

சேர்மனியில் இருந்ததுபோன்று இத்தாலியிலும் கைவளங்கள் குறைவாகவும், தேசிய உணர்ச்சி மிகுதியாகவுமிருந்தமையால் சேர்மனியிலிருந்த நிலைமையை யொத்த ஓர் நிலைமை இத்தாலியிலும் உண்டானது. 1936 ஆம் ஆண்டின் முற்பகுதியில், அபிசீனியப் போர் நடத்துகொண்டிருக்கையில், முசோலினி கூறியதாவது: "அரசியற் சுதந்திரம், அதாவது சுதந்திரமான பிறநாட்டுப் பூட்கையைப் பின்பற்றுவதென்பது, அதனை யொத்த சுதந்திரமான பொருளாதாரப் பூட்கையைக் கைக்கொள்ளாமல் நடைபெறக் கூடியதொன்று என்பது நடக்காத காரியமாகும். பொருளாதாரம் சம்பந்தப்பட்ட போர், அதாவது சனீவா இத்தாலிக் கெதிராக முதற்றடவையாகத் தொடுத்த வெளிப்படையாகத் தெரியாத அப்போர், நாளடைவில் வீரர்கள் நிறைந்து விளங்குமொரு நாட்டையும் புறங்காணச் செய்து விடும்." இத்தாலிய நாடு எண்ணெய், இறப்பர், உயர்தரமான நிலக்கரி போன்ற சில மூலப்பொருள்களின்றியிருந்தது; அதேசமயம் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட கம்பளி அந்நாட்டினது தேவைக்கே போதாமலிருந்தது. தனது

---

[1] சேர்மனியின் பொருளாதார முறையிற் புகுத்தப்பட்ட அதீதகட்டுப்பாடு அதனைத் தொகுதியரசுக் கொள்கைக்கிணங்க (இத்தாலியிலிருந்தது போல்) அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆக்க முயற்சிகளின் விளைவாகவன்றி நாட்டினது படைத்துறை சம்பந்தமான ஆயத்தத்திலொரு பாகமாகக் கைத்தொழிலையும் பயிர்த்தொழிலையும் போர் நிலைமைக்கேற்றவையாக்கச் செய்யப்படும் தற்காலிகமான ஒழுங்கமைப்பின் விளைவுபோலத் தோன்றியது. உணவுப் பொருள்களின் உற்பத்தி, ஆக்கம், விற்பனை ஆகியவற்றில் ஈடுபட்டிருந்த அனைவரையும் உறுப்பினராகக்கொண்ட பயிர்த்தொழில் பற்றிய ஒரு தொகுதியகம் அமைக்கப் பெற்று, உத்தியோகபூர்வமான பூட்கைக்கிசைய நிறுவப்பட்ட முறைப்படி பயிர்த்தொழிலை நடத்தப் பணிக்கப்பெற்றிருந்தது. இத்தொகுதியகம் விலைகளைக் கட்டுப்பாடு செய்யவும், சந்தைக்கு அனுப்ப வேண்டிய உற்பத்திப் பொருள்களின் அளவை நிருணயிக்கவும் கடமைப் பட்டிருந்தது. ஒரு பொருளாதாரத் தொகுதியகத்தின் வாயிலாகக் கைத்தொழில், வணிகம், பொருளகம் ஆகியவற்றின்மீது அரசாங்கம் முழு அதிகாரத்தைச் செலுத்தியது. எடுத்துக்காட்டாக, கைத்தொழிலியந்திரங்களைப் பெருப்பிப்பதை அல்லது சில்லறைக் கடைகள் திறக்கப்படுவதை அது தடைசெய்ய உரிமை பெற்றிருந்தது; மேலும் தேவைக்கதிகமாயிருந்த பணத்தொகைகளைப் பொதுக் கடன்களில் முதலீடு செய்து, பங்கூதியத்தைக் குறைக்கவும் அதற்கு உரிமையிருந்தது. தொழில் கொடுப்போர், கட்டுப்பாட்டை மீறுபவராயின், அவர் தொழில நடத்துவதினின்றும் விலக்கப்பட்டனர்; மேலும், தொழில் சம்பந்தமான சங்கங்கள் தங்களது சுதந்திரத்தை இழந்தன. வெளிநாட்டு வணிகமும், வெளிநாட்டுப் பணமும் மாற்றுவதற்கான நிலையங்களும் உண்மையில் நாட்டுடைமையாக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் தேவையைப் பூர்த்தி செய்ய, அது தொகுப்புக் கம்பளி, தொகுப்பு வாசனைத் திரவியங்கள், தொகுப்பு நைதரசன் வளி முதலியவற்றைத் தயாரிக்க முயற்சி செய்தது; பயிர்த் தொழிலுக்கு வேண்டிய வெடியுப்பு வகைகளுக்கும் ஏனைய செயற்கை உரங்களுக்கும் பதிலாக அவ்வாறான வேறு உரங்களைத் தேட அது முயற்சித்தது; பழுப்பு நிலக்கரியிலிருந்து திரவ எரிபொருள்களைப் பெறவும், பருத்திக்குப் பதிலாக உள்நாட்டிலிருந்த நார்வகைகளைப் பயன்படுத்தவும் அது முயன்றது. மூலப்பொருள் சம்பந்தமாய்த் தனக்கிருந்த குறையை அது அறிவியல் சம்பந்தமான கண்டுபிடிப்புக்களைப்பயன் படுத்துவதன்மூலம் தீர்க்கத் தலைப்பட்டது. உணவுப் பொருள்களைப் பொறுத்த வளவில் "இத்தாலிய மக்களை உணவுப் பொருள் சம்பந்தமாகப் பிறநாட்டுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த நிலையிலிருந்து விடுவிப்பதற்கான" நம்பிக்கையுடன் அது தனது கோதுமைப்பயிர் விளைவை மிகுவித்தது.

மூலப்பொருட் பிரச்சினை.

இருபதாம் நூற்றுண்டுக்குரிய அறிவியல் முன்னேற்றம், நாடுகளைப் பொருளாதாரத் தன்னிறைவு என்ற மிகச் சிறந்த இலட்சியத்தை அடைவதில், முன்னிருந்ததைவிட அதிக நம்பிக்கை கொள்ளும்படியாகச் செய்து வருகிறது. வளங்களைக் குறைந்த வளவில் கொண்டுள்ள நாடுகள், புதிதாகப் பகரப் பொருள்களைக் கண்டுபிடிப்பதன் வாயிலாகத் தம் நாட்டினப் பொருளாதாரத்தைப் புதுக்கியமைப்பதற்கான வாய்ப்புக்களை எதிர்பார்த்துள்ளன. இவ்வாறான வாய்ப்புக்கள், வளங் குறைந்த நாடுகளுக்கும் இயற்கை வளங்களை ஏகபோக உடைமையாகக் கொண்டுள்ள நாடுகளுக்கும் இடையேயுள்ள வளங்கள் சம்பந்தமான குறையை நிறைவுபடுத்தக்கூடும். இது மனிதன் இயற்கையைத் தன் வசப்படுத்தியதைக் குறிப்பதாகிய முன்னேற்றத்தின் ஒரு கட்டமாகும். இதனிடையில் நாட்டினப் பொருளாதாரத் தன்னிறைவை (அவுற்ருற்கி) நோக்கிச் செல்லும் போக்கு, ஓரளவு அரசியலையும் ஓரளவு பொருளாதாரத்தையும் பொறுத்த பயன்களை விளைத்துள்ளது. ஒருபுறம், சருவதேசத் தொழிற்பிரிவை அடிப்படையாகக் கொண்ட உலகப் பொருளாதாரத்திற்குப் பலவிடங்களில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பு நிலையானதென வற்புறுத்திக்காட்டுவதற்கு இப்போக்குத் துணைபுரிகிறது; உண்மையில் இந்நிகழ்ச்சி தற்காலிகமானதொன்று என்க. மற்றொரு புறம், சொந்த நாட்டில் அல்லது ஒரு நாட்டுக்குரிய குடியேற்ற நாடுகளில், புதிதாகத் திட்டமிடப்பட்டதொரு பொருளாதாரத்தின் கீழ் அமைக்கப்பட்ட புனரமைப்புத் திட்டங்களை நிறைவேற்றுதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகத் தொழிலாளர்கள் அதிகமாகத் தேவைப்பட்டமையால், மக்கள் புறக் குடியேறுநராகச் செல்வதை இப்போக்கு ஓரளவு குறைக்கக் கூடியதாயிருக்கலாம். இவ்வித முறை, உற்பத்தித் தொழிலாளர் ஒரு நாட்டின் செல்வம் போல் விளங்குவதால், அவர்களை அந்நாட்டிலேயே வைத்திருக்க வேண்டுமென்ற வணிகக் கோட்பாட்டுக் கிசைவுடையதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டினப் பொருளாதாரத் தன்னிறைவு (அவுற் ருற்கி) என்பது ஐரோப்பிய அரசியற் செயல் விளைவுகளை மிக அதிகமாகப் பாதிக்கக்கூடியதான பிரச்சினையைத் தோற்று வித்துள்ளது. மூலப் பொருள்கள் சமமற்ற முறையில் பகிர்ந் தளிக்கப்பட்டமையே அதுவென்க. ஒரு நாடு பொருள்களை வாங்குவதற்கு வேண்டிய பணத்தைத் தன் பொருள்களை வெளியிடங்களில் விற்பதன்மூலம் பெறமுடியாத நிலையிலிருக் கும்போது, எந்தவொரு நாடும் தனக்கு வேண்டிய மூலப் பொருள்களை எங்கிருந்தேனும் வாங்குவதற்குத் தடையில்லை என்ற பொதுப்படையான வாதம் பொருத்தமற்றதாகின் றது. தவிர, நாட்டினப் பொருளாதாரத் தன்னிறைவு (அவுற்ருற்கி) பற்றிய ஒழுங்கு மற்றொரு பயனற்ற அம்ச மொன்றினாலும் செயல்படமுடியாததாக விருக்கின்றது ; எவ் வாறெனில் ஒரு நாடு மூலப் பொருள்களைப் பெறுவதில் பிறநாடுகளின் அனுமதியைப் பெறவேண்டு மென்றிருக் குமளவும், பொருளாதாரச் சட்டவரிமைகள் காரணமாக மற்ற நாடுகள் அம்மூலப் பொருள்களை அந்நாட்டுக்குக் கொடுக்காமல் வைத்துக் கொள்ளவுங் கூடும். மேலும் மக்கட்டொகை சம்பந்தமான புள்ளிவிவரங்களைப் பொறுத்த அம்சமும் கவனிக்கற்பாலது. ஒரு நாட்டில் அகக்குடி யேற்றத்துக்குரிய வழிவகைகள் ஒவ்வொன்றுக அடைபட, கூடுதலான குடித்தொகைக்கு இடமளிக்க முடியாத நாடு களிலுள்ள ஆள்புலங்கள், தங்களது இடர் நீங்குதற்காகக் குடியேற்ற நாடுகளைப் பெற முனையும். ஐரோப்பிய நாடு களுக்கிடையே எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தொடர்புகளை நிருணயஞ் செய்வதில் குடியேற்ற நாட்டுப் பிரச்சினை ஒரு முக்கியமான இடத்தைப் பெறுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. எனினும், ஐரோப்பிய அரசவொழுங்கினை யொட்டிய ஏனைய பெரும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுமல் இப்பிரச்சினைக்குத் தனியாக முடிவுகாண இயலாது. அமைதிக் காலத்திலுங் கூட மூற்றுகப் படைக்கலந் தரித்திருக்கும் உலகத்தில், தலைக்கு மேலே தொங்குகிற வாள்போன்று போர்ப்பீதி நிலவும் உலகத் தில், மூலப்பொருள்களை மீண்டும் பங்கீடு செய்வதானது, வலிந்து தாக்கும் நோக்கங் கொண்ட வல்லரசுகளினது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரார்வத்தைத் தூண்டுதற்கும், போர்க்கருவிகளைச் சேமித்துள்ள நாடுகளிலிருந்து வலிமை குறைந்த நாடுகளை அப்புறப்படுத்தற்குமே உதவும்; அதனினும் மேலாக, அரசியற் றொடர்புகளில் தீங்கான விளைவுகளைப் பிறப்பிக்கக்கூடிய நாட்டினப் பொருளாதாரப் போக்குக்கு, மூலப்பொருள்களைப் பங்கீடு செய்வதாகிய செயல் வலியூட்டும். எனினும் ஐரோப்பா சீரான மனநிலையில், அமைதியான முறைகளினால் பிற நாடுகளின் மனநிலையைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்யும்பொழுது, ஒரு பொதுவான ஏற்பாட்டின் ஓரம்சமாக, மூலப் பொருள்கள்பற்றிய பிரச்சினையை நியாயமாகத் தீர்ப்பதற்கான நிலைமையை ஏற்படுத்துவது, அரசறிஞரது திறமைக்கு அப்பாற் பட்ட கருமமாக இருக்க மாட்டாது.

புதிய வணிகவியல்.

புதிய வணிகவியல் என்று நாம் சொல்லக்கூடிய இக் காலத்துப் பொருளாதார அரசுபாயமும், பதினேழாவது நூற்றாண்டில்[1] ஏற்பட்டிருந்த வணிகவியலும் குறிப்பிடத்தக்க அளவு ஒரேமாதிரியானவையா யிருக்கின்றன. அரசியற் சுதந்திரத்தின் விளைவான பொருளாதாரத் தன்னிறைவை அடைதல் என்ற அடிப்படையான நோக்கத்துடனேயே இவ்விரண்டும் ஊக்குவிக்கப் பெற்றன. இரண்டுமே, தங்கள் நோக்கத்தை அடைவதில் ஒரேவிதமான வழிவகைகளைக் கடைப்பிடித்தன. இறக்குமதிகளைக் குறைத்தல், குறிப்பிட்ட ஒவ்வொரு நாட்டுடனும் சமநிலையில் வணிகஞ் செய்யும் பூட்கையுடனிருத்தல், பொன் ஏற்றுமதியைத் தடுத்து நிறுத்தல், நாணயங்களைப் புத்திசாதுரியமாகக் கையாளுதல், பிரதானமான கைத்தொழில்கள் பெருகச் செய்தல், சமுதாயத்தினது உற்பத்தியாற்றல்களைத் தகுந்த வழிகளிற் செலுத்துதற்காகப் பொருளாதார வாழ்க்கையில் கட்டுப்பாடு விதித்தல் ஆகியவை அவ் வழிகளென்க. பதினேழாவது நூற்றாண்டிலிருந்த பொருளியல் அறிஞர்கள் நம்கால ஐரோப்பாவிற்கு மீண்டும் வருவாராயின், தமக்கு முன்பு பழக்கப்பட்டிருந்த தொரு சூழ்நிலையையே இன்று காணக்கூடியவராயிருப்பர்; ஆதம் சிமித்து மீண்டும் இங்கு வருவாராஞல், "தேசங்களின் செல்வம்" என்ற தமது நூலைத் தாம் எழுதியது வீணைனக் கருதுவர். இப்படியாக, மாறுதலடைந்த சூழ்நிலைகளிடையே, உலகம் ஒருபொழுதுமே தனக்கு வேண்டாமென்று தான் கைவிட்டிருந்த அதே பொருளாதார ஒழுங்கை மீண்டும்

[1] E. Lipson, "The Economic History of England," Vols. ii and iii ("The Age of Mercantilism").

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஐரோப்பா
பெல்ஜியம்
ஜெர்மனி
போலந்து
ஆஸ்திரியா
ஹங்கேரி
சுவிட்சர்லாந்து
இத்தாலி
பல்கேரியா
துருக்கி
கிரீஸ்
அல்பேனியா
மத்தியதரைக் கடல்
கருங்கடல்
வட கடல்
பால்டிக் கடல்
ஐரிஷ் கடல்
ஆங்கிலக் கால்வாய்
பிஸ்கே வளைகுடா
ஜெனிவா ஏரி
கான்ஸ்டான்டிநோபிள்
ரோம்
ஏதன்ஸ்
ஜெனிவா
பெர்ன்
ஆம்ஸ்டர்டாம்
ஹேக்
பிரஸ்ஸல்ஸ்
ஆண்ட்வர்ப்
ஆன்ட்வர்ப்
ஆன்ட்வர்ப்
ஆன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாள வேண்டியதாயிற்று. இக்காலத்துக்குரிய வரலாற்றுசிரியன், திருச்சபையைச் சார்ந்தோர் கூறுமாப்போன்று "புதியதான ஒருபொருள் பகலவனுக்குக் கீழ் இல்லவே இல்லை" என்று இந்நிலைபற்றி விதந்துரைக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org